கொற்றவை

ஜெயமோகன்



பஃறுளியாறும் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள...

கொற்றவை

உண்ணும் அனைத்தையும் விண்ணுக்குக் கொண்டுசெல்லும் ஓயாப்பெருநடனமே காப்பியம் என்க. மண்ணில் அதற்கு உணவாகாத எதுவும் இல்லை. தீண்டும் அனைத்திலும் தாவி ஏறி உண்டு தன்னைப் பெருக்கிக் கோடிகோடி இதழ்விரித்து எங்கும் நிறையும் முடிவற்ற நாக்கு அது. துடிதுடித்தும் தவிதவித்தும் உரையாடிக் கொண்டிருக்கிறது ஊழியூழிக் காலங்களாய். அது கூறுவது அழியாத ஒற்றைச் சொல்லையே என்றறிந்தனர் மண்ணை மீறி விண்ணில் உளம் எழுந்த அறவோர். திசையழிந்த வெளியெங்கும் நிரம்பிய ஒளியே மண்ணில் தீ என உறைகிறது என்று உணர்ந்தனர்.

தீ தொட்டபின் எதுவும் அழுக்கு அல்ல. எதுவும் இழுக்கும் அல்ல. ஊன்வாய் திறந்து மண்ணில் விழும் உடல் உண்டு உயிர்த்து கண்டு கற்று அடையும் அழுக்குகளை யெல்லாம் தீயுண்ணக் கொடுத்தபின்னரே அதனுள் சிறையுண்ட சீவம் தன்னிலை இழந்து சிவமாகும் என்றனர். தீயுண்ணும் அனைத்தும் தீய்மை எனப்பட்டது. தீயுண்ணவே தூய்மை என்றாயிற்று. தீ எனும் ஒலியே தீங்குக்கும் தீஞ்சுவைக்கும் சொல்லாயிற்று. தீ உறையாத பரு ஏதும் இல்லையென்றனர் அறிவர். பச்சைப்பசுங்குருத்திலும் மென்மலர் இதழிலும் குளிர்ச்சுனை நீரிலும் தாய்முலைப்பாலிலும் தீ உறைகிறது என்றனர்.

ஒவ்வொன்றிலும் உறையும் தீயை அப்பொருளின் ஆணவம் அணைகட்டி அணைத்து நிறுத்துகிறது. அணை மீறுகையில் அது எரியும் எரியாகிறது என்றறிந்தனர். சொல்லில் உறையும் தீ தன் சிறை மீறுதலே காப்பியம் என்றனர் கற்றோர். காப்பியங்களுக்கு அவியாகி அவிதற்பொருட்டே மண்ணில் மாந்தர் பிறந்திறப்பதாகச் சொன்னது மண் மறைந்த பேரிலக்கண நூல் ஒன்று.

கனன்றெரிந்து கரியாகி உப்பாகி மண்ணில் மறைவர் மாந்தக் கோடிகள். மாசற்று ஒளிபெற்று மீள்பவர் சிலரே. அவர்களை எரிமலரிதழ் நடுவே இலங்கும் இறைவடிவென்பர் கற்றோர். ஆம், அவ்வாறே ஆகுக!

கொற்றவை

புதுக்காப்பியம்

ஜெயமோகன்

தமிழினி

கெ. பி. விசாலாட்சியம்மாவுக்கு
நினைவில் வணங்கி...

அன்னையின் திருமுன்னில்...

*1987*ல் இப்படைப்பின் கரு என்னில் முகிழ்த்தது என இப்போது எண்ணுகிறேன். கவிஞர் ஆற்றூர் ரவிவர்மாவின் நண்பரான மறைந்த உண்ணிராஜா என்னும் கவிஞர் சிலப்பதிகாரக் கதையை மலையாளத்தில் கதகளிக்குரிய 'ஆட்டக்கதை' வடிவில் எழுதினார். அது கள்ளிக்கோட்டைப் பல்கலையில் பாடமாகியது. மாணவர் நலம் கருதிச் சிலம்பைப்பற்றிய விரிவான ஓர் அணிந் துரையை அவர் கோரினார். அந்த நூலைவிடப் பெரிதாக நான் எழுதிய அவ்வுரை அமைந்தது. அதில் கேரளப் பண்பாட்டுக்கும் சிலம்புக்கும் இடையேயான உறவையும் கண்ணகி மதுரைக்கு எரியிட்டது குறித்த என் நோக்கையும் விரித்தெழுதியிருந்தேன். அப்போது எனக்கு இருபத்தைந்து வயது. சிலம்பை நாடகவடிவில் எழுதவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. பல வடிவங்களில் பல காலமாக எழுதிக் கைவிட்டபின் இப்போதைய வடிவம் அமைந்தது. இதை எழுதி முடிக்க நான்கு ஆண்டுகள் ஆயின.

இந்நூல் உருவாவதற்கு உதவிய நூலாசிரியர் பலர். அனை வரையும் குறிப்பிடுதல் புனைகதையின் எல்லைகளுக்கு அப்பாற் பட்டது. எனினும் எஸ்.வையாபுரிப்பிள்ளை, புலவர் ஆ.பழநி ஆகிய இருவரையும் வணக்கத்துடன் குறிப்பிட விழைகிறேன்.

இக்கருவை நான் முதலில் சொன்னது 'நிகழ்' ஞானியிடம். பல கோணங்களில் விவாதித்து பெரிதும் ஊக்கமளித்தார். ஆனால் பதினைந்து ஆண்டுகள் கழித்து இப்போதுதான் எழுத இயன் றுள்ளது. இந்நூலாக்கத்திற்குத் தன் விரிவான தனியுரையாடல்கள் மூலம் நேரடியாக வழிகாட்டி உதவியவர் 'குமரிமைந்தன்' அவர்கள். அவரது நண்பன் வெள்ளுவனுடன் இணைந்து அவர் செய்த ஆய்வு களைப் பலவாறு இதில் பயன்படுத்தியுள்ளேன். திரு.சோதிப்

பிரகாசம் அவர்களின் உரையாடல்களும் 'திராவிடர் வரலாறு' 'ஆரியர் வரலாறு' ஆகிய இரு நூல்களும் பெரிதும் பயன்பட்டன. தனித்தமிழாக்கம் மற்றும் குமரிக்கண்டம் குறித்த இவர்களின் நோக்குகள் எனக்கு அளித்த ஊக்கம் இந்நூலில் தொழில் பட்டுள்ளது. தேவைப்படும்போதெல்லாம் தகவல்களையும் நூல் களையும் அளித்து உதவிய முனைவர் அ.கா.பெருமாள் அவர்களை யும் நன்றியுடன் எண்ணிக்கொள்கிறேன்.

கேரள ஆய்வாளர்களான 'எஸ்.எஸ்.சந்தேரா' வடகேரள கண்ணகி ஆலயங்கள்பற்றி எழுதிய 'கண்ணகியும் சீர்மக்காவும்' என்ற நூலும் முனைவர் வி.ஆர்.சந்திரன் வஞ்சிநகர் கண்ணகி ஆலயம் குறித்து எழுதிய 'ஸ்ரீகொடுங்கல்லூரம்ம சரித்திரமும் ஆசார அனுஷ்டானங்களும்' என்ற நூலும் சேலநாட்டு அச்சுதமேனன் எழுதிய 'கேரளத்தில் காளிசேவை' என்ற நூலும் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டவை. வி.ஆர்.சந்திரன் எழுதிய நூலை நான் 'கொடுங்கோளூர் கண்ணகி' என்ற பேரில் தமிழாக்கம் செய்து தமிழினி வெளியீடாக வந்துள்ளது. இவ்வாக்கத்துடன் சேர்த்து படிக்கவேண்டிய நூல் அது.

சிறப்புற வெளியிடும் வசந்தகுமாருக்கும் இனிய துணையாக இவ்வாக்கத்துடன் வந்த அருண்மொழிநங்கைக்கும் நன்றி.

இதை என் அம்மா 'காளிவளாகத்துவீட்டில் பத்மாவதியம்மா விசாலாட்சியம்மா'வுக்குப் படைக்கிறேன். அதற்குத் தகுதியான நூல் இதுவெனும் பெருமிதத்துடன்.

-ஜெயமோகன்

பகுதி ஒன்று

நீர்

பஃறுளியாறும் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள...

பழம்பாடல் சொன்னது

அறியமுடியாமையின் நிறம் நீலம் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். நீலத்தின் எல்லையின்மை வானம். நீலத்தின் அலைகளே கடல். நீலம் ஒரு புன்னகை. கருமைக்குள் ஒளி பரவுவதன் வண்ணம் அது. கருமையோ வெளியை முழுக்கத் தன்னுள் அடக்கிக் கொண்ட பெருவெளி. கருமையில் இருந்தே ஒவ்வொன்றும் பரு திரட்டி வருகின்றன. கருமையை அஞ்சினார்கள். அதன் முடிவற்ற வல்லமையை வணங்கவும் செய்தார்கள். ஆகவே அவர்களுக்கு நீலமே உகந்த நிறமாயிற்று. புன்னகைக்கும் கருமையே நீலம்.

நீலம் கொண்டவள் குமரி அன்னை. அழியாத கதைகளின் வழியாக அவர்கள் அறிந்த முழுமுதல் தெய்வம். தென்திசையில் குமுறும் கடலுக்கும் வடதிசையில் ஓங்கிநின்ற மலையடுக்குகளுக்கும் இடையே அவள் ஆளுகையில் காட்டுப்பசுமை அலையடித்துத் ததும்பும் அம்மண்ணைக் குமரி நிலம் என்றார்கள். ஓங்கி வடபுலமாக நின்ற மலையைக் குமரிக்கோடு என்றார்கள். அலை நுரைகளைக் கரும்பாறைக் கால்களால் அளைந்தபடி நிற்கும் மலை உச்சியில் காலவெளிக்கு அப்பால் எப்போதோ மழை செதுக்கிய கல்லிருக்கை ஒன்றின்மீது யாரோ மூதாதை அவள் பாதத் தடத்தைக் கண்டான். நீலப்பெருவெளி மண்ணைத் தொட்ட அம் முழுமுதற் கணத்தை அவன் அன்னையென அறிந்தான். முதிராச் சிறுமியின் அம்மலர்ப்பாதத் தடத்தைப் பூவும் நீரும் பூசையிட்டு வணங்கினர் குமரியினர்.

அன்னையரால் வழிநடத்தப்பட்ட குடிகள் அவை. அக்குடிகள் வேட்டைக்கென இடம் பெயர்கையில் வயிற்றைத் தாண்டி வற்றிய முலைகள் தொங்கும் முதுமூதன்னையர் இளையோரின் வலுத்த தோள்கள்மீது ஏறியமர்ந்து முன்னால் வழிநடத்திச் சென்றார்கள். ஒவ்வொரு குடியும் தாங்கள் அடைந்தவற்றை முழுக்க அன்னையருக்குக் காணிக்கையாக்கி வணங்கியது. கல்மழுவேந்தி குடியைக் காவல் செய்த ஆண்கள் எந்நிலையிலும் அன்னையருக்கு

மைந்தர்களாகவே இருந்தனர். கன்னியரிலும் குழந்தைகளிலும்கூட அவர்கள் அன்னையைக் கண்டார்கள். அவ்வன்னையைப் பின்பு அவர்கள் வழிகாட்டும் ஒற்றைக் கொம்புள்ள கலைமான்மீது ஏற்றித் தங்கள் குடி நடக்கும் பாதையின் முகப்பில் நடக்கவிட்டனர். கலை மான்மீது உடல்வற்றிய அன்னை மட்டுமே ஏற இயலும்.

அ,இ,உ என்ற மூன்று அடிப்படை ஒலிகளை மட்டுமே மொழியாகக் கொண்டிருந்த அம்மக்களுக்கு தலைமுறைகள் தோறும் கைமாறிச்செல்லவேண்டிய பெரும் செல்வமென ஒரு சொல் மட்டும் இருந்தது. அம்மா என்ற அச்சொல்லை அவர்கள் குடி பாலூட்டும் விலங்கொன்றிலிருந்து கற்றுக்கொண்டது. மின் னலில் இருந்து தீயை அடைந்ததுபோல. மூன்று ஒலிகள் கூடிய அடுப்பினுள் அச்சொல் அணையாது எரிந்துகொண்டிருந்தது. பின்பு அழகுக்கும் சிறப்புக்கும் அதுவே சொல்லாயிற்று. அவர் களுக்கு உடை இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் ஒருவர் பிறரென உணரவில்லை. எனவே வேறு ஒரு சொல்லுக்கு அவர்கள் உள்ளம் தாவவும் இல்லை.

முழுநிலவு நாள்களில் ஒன்றில் ஏதோ ஆழத்து ஆணை ஒன்று தென்கடலில் இருந்து ஏறி வந்ததுபோல அவர்களில் ஒரு சிறுமி சன்னதம் கொண்டெழுந்து கைகளை விரித்து வெறிக் குரலெழுப்பி ஆடும்போது அவள் வாயிலிருந்து அதுவரை கேட்டிராத எண்ணற்ற சொற்களைக் கேட்டு அவர்கள் அஞ்சி மண்ணில் குப்புற விழுந்து பணிவார்கள். அவள் அலறியபடி மலைச்சரிவில் தாவியேறி அந்த உச்சிப்பாறை மேலேறி அப்பாதத்தடத்தில் இடப்பாதம் பதித்து தென்திசை நோக்கி ஒற்றைக்காலில் நின்றபடி, ஆர்ப்பரிக்கும் கரிய முடிவின்மையைச் சிவந்த அகன்ற விழிகளால் பார்ப்பாள். அடிவயிறு குலுங்கி எழும் விம்மல்களால் அவள் உடல் நடுங்கும். கண்ணீர் இளமுலைகள்மீது கொட்டியபடியே இருக்கும். அலை களுக்கும் அவளுக்கும் இடையே ஓர் உரையாடல் நடந்து கொண்டிருப்பதுபோல. தென்கடலாழத்தில் இருந்து எவரெவரோ அவளுடன் அறியா மொழியொன்றால் உரையாடுதல்போல.

பின்பு அவள் அப்படியே சரிந்து விழுந்து மயக்கம் கொண்டு சொற்சுவடேயில்லாமல் விழித்தெழுவாள். தென்கடலின் அலை விரைவு கூடிக்கூடி வருவதுபோல உளமயக்கு ஏற்படும் அப்போது.

ஆ

இடியொலித்து வல்லிரைச்சலுடன் வானாறுகள் மண்ணில் விழுந்தன. பேருருவ அன்னையும் தந்தையும் கூடி முயங்கும் உயிர் நாடகத்தைக் குமரிக்கோட்டின் பன்மலை அடுக்கத்துக் குகை வாயில் ஒன்றில் அமர்ந்து பார்த்திருந்தான் ஒருவன். புலித்தோலாடை அணிந்து, குளிருக்கு யானைத்தோல் உரியைப் போர்த்தியிருந்தான். ஒரு கையில் தன் ஆயுதமான கல்மழுவும் மறு கையில் குடி அடையாளமான மான்குறியும் வைத்திருந்தான். ஒளி கண்ட இடம் நோக்கி பருப்புகையெனப் படையெடுக்கும் பூச்சிகளில் இருந்து தப்ப உடம்பெங்கும் சாம்பல் பூசியிருந்தான். அவனது கனத்த சடைமயிர் தோளில் விழுந்து கிடந்தது. கருநிற இமைகளும் வெண்ணிறப் படலத்தில் நீல மையவிழியுமாக வரையப்பட்ட ஒரு பொய்விழி நெற்றியில். அது அப்பழங்குடியின் தொன்மையான வேட்டை உத்தி. பிறகு அது வழக்கமும் அடையாளமும் ஆயிற்று.

அவனது எதிரிகள் மனிதர்களாயினும் விலங்குகளாயினும் அவன் தூங்குவதேயில்லை என்று எண்ணினார்கள். அவர்களின் உடல் தூங்கும்போதெல்லாம் அந்த வரைகண்கள் உலகை உறுத்துப் பார்த்துக் காவலிருந்தன. தூங்கிய பிறகு வேறு ஒரு உலகம் விழித்துக் கொள்வதை அக்கண்மூலம் அவர்கள் கண்டார்கள். அவ்வுலகில் தங்கள் போலிவடிவங்களும் மூதாதையர்களும் விலங்குகளும் எண்ணற்ற அறியா உயிர்களும் வடிவங்களும் தெரிந்த மொழியில் தெரிந்துகொள்ள முடியாதவற்றைச் செய்து வாழ்ந்தன. மண்ணில் தாங்கள் வாழும் உலகத்துக்கு அடியிலும் மேலேயும் உலகங்கள் நிரம்பியிருக்கின்றன என்று அவர்கள் அறிந்தது அப்படித்தான். ஒளி நிரம்பிய உலகங்கள், இருள் நிரம்பிய உலகங்கள். அவற்றில் இருந்துதான் இவ்வுலகைக் கட்டுப்படுத்தும் நெறிகள் கசிந்திறங்கிப் பரவின. மூன்றாம் விழி கொண்ட குடி குமரிக்கோட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்துவந்த எல்லாக் குடிகளுக்கும் வழிகாட்டியாகவும் தலைமை கொள்வதாகவும் இருந்தது. அதன் தலைவன் அவன்.

மலையரத்துக்குள் அவனது குருதிச்சுற்றம் சமைத்துக் கொண்டிருந்தது. நெருப்புச்சுடர் நா விரித்துத் துவண்டு நடமிட குகையின் பாறைச்சுவர்கள் நெளிந்தன. பன்றி இறைச்சி ஊன்நெய் பொசுங்கிப் படபடத்து நெரிந்து கொண்டிருந்தது. சடைமுடியும் மூன்றாம் விழியும் மான்தோலாடையும் அணிந்த அவனது குழந்தைகள் ஊன் உண்ணப் பசியுடன் காத்து நின்றன. அவனது மனைவி பன்றியைத் திருப்பித் திருப்பித் தீயில் காட்டினாள். வானிலிருந்து கீழ் நோக்கி விழும் பேராறுகளை அவன் எண்ணச்சுமையுடன் உற்றுநோக்கிக் கொண்டிருந்தான். சென்ற கோடையில் குமரிக் கோட்டின் எல்லா ஊற்றுகளும் கனிவு மறந்தன. பசித்து தாகம் முற்றிய விலங்குகள் முதலில் மலைவிட்டிறங்கி மறைந்தன. பின்பு ஒவ்வொரு குடியாக மலையிறங்கி வடதிசையில் குமரியாற்றுக்குச் சென்றது. கரைகள் அகன்ற ஆற்றிலும் மணலே பெரும்பகுதி விரிந்து கிடந்தது. வெண்ணிற மணற்பரப்பெங்கும் விடாய் கொண்ட எண்ணற்ற விலங்குகளின் காலடித்தடங்கள் பரவியிருந்தன. மாமதங்களின் பரந்த அடிகள். கூர் உகிர்கள் ஆழப்பதிந்த யாளிகளின் பாதத்தடங்கள். காப்பற்ற அப்பரந்த வெளியில் தொல் குடிகள் தங்கின. பசித்த சடையரிகளும் வேங்கைகளும் அவர்களை வேட்டையாடின.

பின்னிரவொன்றில் பெரும் உறுமலுடன் வந்த விலங்குகள் அவர்களைத் தாக்கின. அலறி அலைக்கழிந்த பெண்களும் குழந்தைகளும் அவற்றின் பசிக்கு இரையாயினர். அன்று காலை சிதறிய சதைத்துணுக்குகளும் கூடிக் கலந்த காலடித்தடங்களும் பரவிய மணற்பரப்பில் அமர்ந்து தன் உடலே உடைந்து விடுமளவு வெம்மையுடன் தன்னுள் எழுந்த அந்த வினாவினை எதிர் கொண்டான். பசித்து மெலிந்து பாலையில் அலையும்போதும் பின்பு முதல் மழை கண்டு மலைக்குத் திரும்பியபோதும் ஒலியாக மாறாத அவ்வினா அவனுள் குமுறியபடியே இருந்தது. காதல் வெறி கொண்ட அன்னையின் முத்தமழைபோலப் பொழியும் இந்த வானத்து ஆறுகளை அதே பெருவினாவுடன் பார்த்துக் கொண்டிருந்தான். நீர்வெளிக்கு அப்பாலிருந்து எவரோ அவனை அழைப்பதுபோல உணர்ந்தான். அவ்வழைப்புக்குச் செவிசாய்த்தவன்போல ஒரு கணத்தில் மழையில் இறங்கி நடந்தான்.

பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு கரிய பெரும்பாறைகளின் வான்பயணம் போன்று எழுந்து சென்றுகொண்டிருந்தது. நீர்வழியும் மாசற்ற கரும் உடற்பரப்புகள் சிலிர்த்துக்கொண்டன. கோடிகோடி அகவை ஏறிய முகடுகள் பல தாண்டி வானம் நோக்கி

எழுந்துகொண்டிருந்தான். அவனறிந்த, விரும்பிய, வெறுத்த ஒவ்வொன்றும் சிறுமை பெற்று மண்ணிலமிழ்ந்தன. அவன் காற்கீழே பலநூறு மலைக்குகைகளில் ஊன் சமைத்து உண்டும், தொல் மக்களோடு தழுவி உறங்கியும், அவன் குடி மழையை அஞ்சி ஒடுங்கிக் கிடந்தது. நிகரின்றி நின்ற கொடுமுடியொன்றின் மேல் ஏறி அவன் வாழ்வில் முதன்முறையாக முழுத்தனிமையில் நின்றான். ஆனால் அந்தத் தனிமையை எல்லா உறவும் ஒக்க இருக்கையிலும் அறிந்ததுண்டு என்றும் ஒவ்வொரு இயல்பு நிலையிலும் அத்தனிமையிலேயே இருந்திருக்கிறான் என்றும் அப்போது அறிந்தான். அவனெதிரே மாற்றில்லாக் கருமையென ஒன்றாகி நின்றன கடலும் வானமும் நிலமும். கருமை குளிர்ந்தது. கூவியலறியது. அதன் கோலம் கண்டு அஞ்சி ஓடாது அதை நேர் நின்று பார்த்த முதல் மனிதன் அவன். கருமையின் எல்லையற்ற எடை மத்தகங்களால் அவன் மார்பில் முட்டியது. இரு கைகளையும் இடையில் ஊன்றி மூச்சை மார்புக்குவைக்குள் நிரப்பி உடலை முன்னோக்கி உந்தி அவன் நின்றான். பெருவல்லமைகள் ஆர்ப்பரித்து நகைத்தன. ஆயிரம் காட்டுவிலங்குகளின் ஓசைகளில் முழக்கமிட்டன. சூழ்ந்து நீர்த்திரை அமைத்துக் கரைத்துண்ண முயன்றன.

பின்பு அவற்றின் அகத்தில் ஒரு முறுவல் விரிந்தது. அவை தணிந்து பின்வாங்கின. அவன்மீது ஓர் இளம் காற்று வழிந்து சென்றது. சாரலின் மெல்லிய விரல் நுனிகள் அவன் தோலை வருடின. தாயும் தந்தையும் தலைசேர்த்துக் குனிந்து புன்னகையுடன் பார்த்தனர். வான்வெளியில் வகுக்கப்பட்ட அக்கணம் ஒரு பெரும் மின்னலாக வெடித்தது. முடிவற்ற ஒளிக்கணம் ஒன்றில் மலைகளையும் காடுகளையும் கடல்களையும் வானத்தையும் மக்கள் கூட்டங்களையும் முக்காலத்தையும் காலம் சென்று சுருண்ட வெறுமையையும் கண்டான். அவை இணைந்து உருகித் தகதகத்து அணைந்தபோது வீறிட்டபடி கண்களை மூடிக்கொண்டான். பின்பு தன்னிலை மீண்டபோது தன் விழிகள் ஒளியிழந்துவிட்டதை அறிந்தான். ஆனால் அவனது மூன்றாவது விழி திறந்து விட்டிருந்தது.

மறுநாள் காலை இளவெயில் பரவிய மலைச்சரிவில் மான்குடி தங்கள் கல்மழுக்களும் மான் இலச்சினைகளும் சடைமுடிக்கற்றையும் சாம்பற்பூச்சுமாகத் திரண்டு காவல் தெய்வங்களுக்குப் படையல் இட்டுக் கொண்டிருந்தபோது மலையிறங்கும் வெள்ளெருது ஒன்றின்மீது ஏறி அவன் வந்தான். அவனது விழிகளின் வாயில் மூடியிருந்தபோதிலும் அறிய முடியாத ஏதோ ஒரு பார்வையால் அவன் அனைவரையும் பார்ப்பதை அவர்கள்

அறிந்தனர். அப்பார்வை அவர்கள் உடல் கடந்து உளம் கடந்து மறுபுறம் செல்வதைக் கண்டனர். தொல்குடி அவன் முன் விழுந்து வணங்கியது. குடித்தெய்வங்களின் இருக்கையில் அவனை அமர வைத்தனர். அதில் ஏறி அமர்ந்தபோது தாயும் தந்தையுமெனச் சுட்டுவிரலும் கட்டைவிரலும் தொட்டு இணைந்தன. தன்னிலை யழிந்து நீண்ட ஊழ்கத்தில் ஆழ்ந்தான். விழித்தெழுந்தபோது அதுவரை பெருவியப்பில் உறைந்தது போலிருந்த அவன் முகம் நெகிழ்ந்து அதில் இனிய புன்னகை ஒன்று மலர்ந்திருந்தது. அவ்னுக்கு என்ன ஆயிற்று என்று குடி மூத்தோர் வினவினர். அக் கேள்வியில் ஒரு கணம் அதிர்ந்து பின்பு ஏதோ சொல்ல முயன் றான். சொல்லின்மையில் சில கணங்கள் ததும்பி பிறகு அவ்விருக் கையில் ஏறித் துள்ளி இடக்கால் தூக்கி சடைக்கொடிகள் சுழன்றாட புலித்தோலாடை பறக்க, கைகள் வீசி வெளியை அளைய, விரல்கள் காற்றில் வடிவங்களை சமைத்துச் சமைத்து அழிக்க, சுழற்காற்று போலச் சுற்றி நடமிட்டு தான் கண்டதென்ன என்று அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினான்.

ᘓ

பழம்பாடல் சொன்னது

நிரம்பியிருந்தமையாலும் நிரந்திருந்தமையாலும் நீர் என்றும், கடந்தமையால் கடல் என்றும் சொல்லப்பட்ட ஓய்வறியாப் பெருவெளியிலிருந்து காலத்தின் முதல் விளிம்பிலிருந்தே தொடர்ந்து வரும் அந்தச் சொல் மீண்டும் மீண்டும் பிறந்து வந்தபடியே இருந்தது. வெறியுடனும் சினஎழுச்சியுடனும் அடங்கிய வல்லமையுடனும் அச்சொல்லை அது சொன்னது. கடலின் நாக்குகள் விரியும் வெண்மணல் வெளியில் காட்டு மனிதர்கள் எவரும் வருவதில்லை. தவறுதலாக அங்கு வந்தவர்கள் அச்சொல்லின் வெறியெழுச்சியில் தங்கள் அகக் கூச்சல் அழிந்து உறைந்து காலமின்றிச் சமைந்து பின்பு மீண்டு துணுக்குற்று காட்டின் கனிந்த கைகளை நோக்கிப் பாய்ந்து மீண்டனர். பின்பு தங்கள் தனிமையின் கணங்களிலெல்லாம் அச்சொல் எழுந்துவரக் கேட்டனர். அச்சொல்லால் ஆனதே தங்கள் அகம். அகம் உணரும் தன் புறமே ஆகம். புறத்தே நிகழ்தலே ஆகுதல். ஆகிநின்றவை விண்ணகமும் மண்ணகமும். நீர் நிரம்பிய திசைகளுக்கு நடுவே உலர்ந்து மிஞ்சிய அகமே உலகம். எதிலுமிருந்தது அகம். ஒவ்வொன்றும் முளைவிட நிலமாக அமைந்த ஒன்றுமின்மை.

முன்பு ஒரு மூதாதை கடலின் சொல்லைப் புரிந்துகொண்டான். எல்லா வேர்களையும் அறுத்துவந்து கடலின் கடுமையை நோக்கி நின்றவன். மார்பில் மோதும் தென்திசையின் எடையைத் தாங்கியவன். ஆ என்று காலப்பசிகொண்டு வாய்திறந்து வரும் அலை நா மடக்கி பெருவெளியில் ஒரு மிடறை விழுங்கித் திரும்பியது. அதை அவன் 'ஆ - ழம்' என்றறிந்தான். ஆழமேயான ஆழி அலைகளால் தன்னை மறைத்த பேரமைதி. அதன் விளிம்புகள் ஊழி எனப் பெயர் கொண்டன. ஊழிவரை நீள்வது ஊழின் அந்நடனம். கடல் கண்டவனே வானைக் கண்டவன். தன்னைச் சிறுதுளியெனச் சிறுத்தறிந்து குள்ளனான முதல் மூதாதை பின்பு அகஎழுச்சி பெருகிப் பேருருக் கொண்டு கால் தூக்கினான். ஒரு காலால் கடலையும் மறுகாலால் வானையும் அவன் அளந்தான் என்றன

பாடல்கள். பரந்த ஆழமெனப் பாழ் இரு பெருவெளியையும் ஒரு துளியெனத் தன்னிலடக்கி நின்றது. பாழ் கண்டவன் விசும்பே உடலென விரிந்தகன்றான். அவன் கடலிறங்கிச் சென்று கடலானான் என்றனர். கடல்வண்ணன் என்றும் ஆழியான் என்றும் அவனைப் பாடல்கள் போற்றின.

கடலின் கருமையைப் பரதவர் மால் என்றனர். கருமை திரண்டு கீழ்த்திசையிலிருந்து வரும் காற்றும் பின்பு மால் எனப் பட்டது. மால்நிற எழுச்சிகள் மலை ஆயின. மலைவேடர்கள் மாலர் எனப்பட்டனர். மலை மீது குவிந்த மேகங்கள் மால் எனப்பட்டன. கடல்வண்ணனும் பின்பு குடிப்பாடல்களில் மால் என்றும் பெயர் கொண்டான். பரதவர் பாடல்களில் கரிய கடல்களை ஆளும் பெரும் ஆள் என்று வடிவெடுத்துப் பள்ளி கொண்டான். மலைவேடர் குன்றுகளில் அவர்கள் கல்படை ஏந்திக் குன்றுமீது ஓங்கி, நின்றசீர் நெடுமால் என்று புகழ் கொண்டான். பாடல்கள் அவனை முடிவற்ற பெயர்களால் வாழ்த்தின. பின்பொரு நாள் ஒருவன் தன் அகத்தை கடல் மறுகரை தேடும் புள்ளெனப் பறக்கவிட்டு அந்த இடத்துக்கு வந்தான். மண்ணில் உள்ள எல்லாப் பெயர்களும் பெயரற்றவனின் பெயர்களே என்றறிந்துகொண்டான்.

ஃ

அமைதியற்ற கடலுக்கும் அசைவற்ற பெருமலையடுக்குகளுக்கும் நடுவே பரந்து கிடந்த அந்த நிலத்தில் கரும்பாறைக் கூட்டங்களின் ஊடாக ஓங்கிய மரங்களும் அடர்ந்த புதர்களும் எழுந்து பரவிய பசுமையின்மீது வெயில் பற்றியெரிந்து கொண்டிருந்தது. காடதிரச் செல்லும் சுழற்காற்றுபோலப் பெரும் யாளிகள் நடமாடின.அவற்றுக்குப் பின்னால் கழுதைப் புலிகளும் காட்டு நாய்களும் மூக்கு நீட்டி முகர்ந்தபடி செவிகளை விடைத்து கால் பரத்தி மெல்ல நடந்தன. சிறகடித்துக் கேவி எழும் யாளிகள் பாறைகளில் தாவித்தாவி வேட்டையாடின. அவை விட்டுச் சென்ற வெள்ளெலும்புகள் வெயிலில் சிரித்துக் கிடந்தன. குமரிநிலம் இறப்பின் தெய்வம் தாண்டவமாடும் நிலப்பரப்பாக இருந்தது. அங்கு பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயான வெறும் இடைவெளியாக வாழ்க்கையைக் கண்டபடி வாழ்ந்தனர் தொல்குடி மக்கள்.

காடு பருக்கொண்ட உயிர்வெளி. அதன் செறிவிற்குள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றுக்கும் அளந்தமைத்த இடம் இருந்தது. அதில் மீதமின்றிப் பொருந்தி நிறைத்துக்கொள்ள முடிந்தது. அப்போது உடலிலும் உள்ளத்திலும் உணர நேரும் தன்னிலையை நிறை என்றனர். காடு ஓர் அரவணைப்பு. அதனுள் இருக்கையில் அவர்களின் உள்ளிருப்பவை முழுக்கக் கிளைகளாகவும் வேர்களாகவும் கொடிகளாகவும் கிளம்பி விரிந்தன. காட்டுக்குள் தனிமையே இல்லை. கட்டுவதனால் அது காடு. கடுமை கொண்டதனால் அது காடு. அங்கே இன்னும் கண்டடையப்படாத கோடிகோடிச் சொற்கள் இலைநுனிகளில் துடிதுடித்தன. ஒய்வே அறியாத உறவுகள் கொடித்தளிர்களில் தவித்தன. காட்டுக்கு அடியில் வேர்களின் தலைகீழ்க் காடு மண்ணின் ஈரம் நோக்கிச் சென்றது. வான் ததும்பிப் பெய்த ஒளி இறங்கிச்சென்று அதன் நுனிகளில் மிளிர்ந்தது. காட்டு உயிர்கள் அனைத்துமே முதல்மனிதனின் உடல் விட்டுப் பிரிந்தவையே. அவர்களின் கனிவே பசுவாகியது. வன்மை கனத்துக் காடதிரும் யானையாகியது. சினமே சிங்கம். எழுச்சியோ காற்றைத்

தாண்டும் மான். ஓயாத தேடலே குரங்கு. விடுதலை பறவை. ஒலியின்மை மீன்கள். துயரம் புழுக்கள். கட்டின்மை விட்டில்கள்.

நெருப்பு காட்டை உண்டு எரிந்து வானை நோக்கிச் சென்றதைக் கண்டனர். காடு மண்ணை உண்டு வானெழும் பசுந் தழல். காட்டின் உயிர்களெல்லாம் கதிர்கள். பருப்பொருட்களை நுண்மையாக்கி வானுக்கனுப்புவதே தழலின் பணி. மண்ணின் அமுதுகளை உண்ண மரங்களின்மீது வானம் வந்திறங்குகிறது. மனிதனின் தலைமீது வானத்து வல்லமைகள் அவனுக்கு அரண மைத்தபடி பின்தொடர்கின்றன. காட்டில் அவர்கள் விட்டுவந்த தடங்கள் மந்தண நுண்சொல் வடிவில் தேங்கி நின்றன. சன்னதம் கொண்ட குடி மூத்தோர் அவற்றைத் தொட்டு மின்னல் துளிபட்ட பசுமரம்போலத் துடித்து நுனிபொசுங்கிக் கண்டடைந்தனர். காலமற்ற வெளியில் உலவும் நுண்மொழி வழியாக முதல்குமரியும் முக்கண்ணனும் ஆழிவண்ணனும் அவர்களை வந்தடைந்தனர். சன்னதத்தின் ஆழத்தில் அவர்கள் அரண் சூழ்ந்த பெருநகரங்களைக் கண்டனர். அங்கே மகுடம் எழுந்த மாடங்களும் வண்ணம் பொலியும் மக்களும் வாழக் கண்டு வேலர்கள் சொன்னதைக் கேட்ட மக்கள் வியத்தகு கதைகளாக மாற்றிக் கொண்டனர்.

உண்பதும் உண்ணப்படுவதும் என இருநிலைகொண்டு கண் முன் விரிந்த அம்மண்ணில் இருந்து ஒலிகளைப் பெற்றுக் கொண் டார்கள். 'அ, இ, உ' என்ற மூன்று ஒலிகளால் உரையாடாத தருணங்களில் 'ம்' என்ற அமைதியைக் கேட்டார்கள். ஒலியும் ஒலியின்மையும் கலந்த வானையும் மண்ணையும் கடலையும் சுட்டுவதற்காக அந்நான்கையும் கலந்து 'ஓம்' என்ற ஒலியை அடைந் தார்கள். அச்சத்திலும் மகிழ்விலும் துக்கத்திலும் அப்பெரும் வல்லமைகளை அவ்வொலி சுட்டியது. அவ்வொலி அவர்களுடன் இருந்தது, கனிந்த முதுமூதாதையின் அருள்போல. உள்ளம் கொள்ளா அச்சத்துடனும் அடங்காத துயரத்தின் வெறியுடனும் அவ் வெளிகளை நோக்கி உருப்பெறாத கேள்விகளை அவர்கள் எய்த போது அவை ஓம் ஓம் என்று பதிலிறுத்தன. ஒவ்வொன்றிலும் உறையும் இருப்பின் ஒலி அது என அறிந்தபோது அவ்வொலி ஆமோதிப்பின் ஒலியாக மாறியது.

தன்னை ஆமோதிக்கும் பெருவெளிமுன் அன்னை மடியில் கைக்குழந்தை எனத் தவழ்ந்து விளையாட முடிந்தது. ஒவ்வொன் றையும் ஆமோதித்துத் தங்களுக்குத் துணைசேர்க்க முடிந்தது. அவர்களுடைய பண்டைய அன்னைத் தெய்வங்களெல்லாம் அச்சொல்லில் குடியேறின.

தன் மூன்றாம் விழியால் மறைந்துள்ள உலகங்களைப் பார்க்கத் தெரிந்த அம்முன்னோடி தன் குமுகத்துடன் பின்பு இணைய வில்லை. அவனது ஏராளமான குழந்தைகளில் எஞ்சியவை இரண்டு. இறப்பின் பெருவல்லமைகளைக் குழப்பும்பொருட்டு பிறக்கும் குழந்தைகள் அனைவரும் தங்களுக்குரிய முகமூடியை அணியவேண்டும் என்ற அக்குடி வழக்கப்படி அவர்களில் மூத்தவன் மென்மரத்தாலான யானை முகமூடியையும் இளையவன் இறந்துபோன தன் ஐந்து உடன்பிறந்தாரின் முகங்களையும் இணைத்து ஆறுமுக முகமூடியையும் அணிந்திருந்தான். அக் குழந்தைகளுடன் மலைமகளான அவன் இல்லாள் வந்து அவனைத் தங்கள் குடிசைக்கு அழைத்தாள். இறந்தவர்களும் வாழ்பவர்களும் பிறப்புக்கு காத்திருப்பவர்களுமான எல்லையற்ற முகக்கடல் அலைகளிருந்து அவனால் அவர்களைத் தனித்தறிய முடியவில்லை. எங்கும் இருந்துகொண்டிருந்ததனால் எந்தக் குகையிலும் தங்க முடியவில்லை. ஏழாம் நாள் தன் எருதின் மீதேறி அந்த மலை முகடுக்கே திரும்பிச் சென்றான். பின்பு மலையிறங்கவேயில்லை.

மூன்றாம் விழியின் வழியாக புடவியைக் காலமற்ற வடிவில் கண்டான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு துளியிலும் உறைந்திருந்தன என்று அவன் அறிந்தான். பாயும் சுடரில் கடல் நீலமும், சுழிக்கும் நீரில் அனல் ஒளியும், மலைப்பாறைகளில் காற்றின் விரைவும் கலந் திருப்பதாகக் கண்டான். ஐந்து பெரும்பருக்களும் ஐந்து புலன் களால் அறியப்பட்டன. புலனறிதலின் அடையாளங்களை ஒவ்வொரு கணமும் மனிதனிடமிருந்து வாங்கி அவை அணிந்து கொண்டன. பருப்பொருளின் ஒவ்வொரு துளியிலும் ஒலிமயமான வானம் இருந்தது. ஒவ்வொரு பொருளிலும் அவன் அதைக் கேட்டான். ஒவ்வொன்றுக்கும் அதன் ஒலியடையாளத்தைச் சூட்டினான். அவற்றை அவன் சொற்கள் என்று அழைத்தான். அவை ஒவ்வொன்றும் தன்னுள் இருக்கும் அமைதிக்குளத்தில் அலைஎழும் வடிவுகள் மட்டுமே என்று அறிந்தான். அவ்வடிவு களினாலான ஒரு மாற்றுலகத்தை தன்னுள் படைத்தெடுத்தான். தூங்கும்போது விழித்தெழும் மூன்றாம் கண்ணால் மட்டும் அவன் கண்ட உலகங்கள்கூட மெல்ல அம்மாற்றுலகில் வந்து படிவதை உணர்ந்தான். அந்த நுட்பத்தைத் தன் மக்களுக்குக் கற்பித்தான்.

எல்லைகளுக்கு அப்பால் அச்சம் தரும் பேருருக்களாக விலகி இருந்த ஒவ்வொன்றும் அவ்வாறு அடையாளங்களாயின. பெயர் பெற்ற மறுகணமே அவற்றின் கடுமை தணிந்தது. அறிமுகத்தின் ஒளி அவற்றின் விழிகளில் தெளியத் தொடங்கிற்று. பழகிய

பெருவிலங்குகள்போல அவை மத்தகம் தாழ்த்திப் பணிந்தன. அப்பருப்பொருட்களின் பருவின்மையால் கட்டப்பட்ட அந்த ஆழத்து உலகில் மேலும் இடம் இருப்பதை மகிழ்வுடன் கண்டடைந்தார்கள். அங்கு அறியமுடியாமையின் அச்சம் தரும் திரை இல்லை. ஒவ்வொன்றும் எதிர்பாராதபடித் தங்களை வெளிப்படுத்தி திகைப்புத் தரும் முனைப்பை இழந்து விளையாட்டுப் பாவைகள் போல எளிதாக இருந்தன. ஒவ்வொரு கணத்திலும் அவை தங்கள் புதிய இயங்குநெறி ஒன்றைத் திறந்து காட்டி மகிழ்வித்துச் சிரித்தன. அங்கு கண்டடையப்பட்ட, நெய்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நெறியும் புறத்தே விரிந்த பருவுலகையும் கட்டுப்படுத்துவதைக் கரையற்ற வியப்புடன் அறிந்தார்கள். அந்தப் பதில்உலகு அவர்களை மீறி அவர்களினூடாக விரிந்து விரிந்து சென்றது. ஒரு கணத்தில் அதன் பெரும் நெசவில் தங்களைச் சிறுகண்ணிகளாகக் கண்டடைய நேரிட்டது. ஒவ்வொன்றிலிருந்தும் உயிர்ச்சாற்றை உறிஞ்சி உறிஞ்சி வளரும் அந்த மாயப்பெருவெளியை அவர்கள் வழிபட்டனர். தம்மை இமிழும் அதற்குத் தமிழ் என்று பெயரிட்டனர்.

பறவைகள் உண்டு பறவைகள் விதைத்து காட்டை நிறைக்கும் கூலமணிபோலத் தமிழ் அவர்களினூடாக வளர்ந்து சென்றது. பறவை மண்ணைத் தொட்டுத் தொட்டு மொள்ளும் உறுப்பை அலகு என்றனர். ஆகவே அளப்பது அலகு என்றாயிற்று. அளவைக்கு உட்படுதல் இலகுதல். இலகுவதன் தொகை உலகு. காண்பதிலெல்லாம் உறையும் மெய்யைத் தமிழ் அவர்களுக்குக் காட்டியது. அம்மெய்யே தங்கள் உடலென்று அறிந்தனர். மெய்யே தங்களைச் சுற்றிலும் பலவகையான வடிவங்களில் வாழ்வதாகக் கண்டதும் அந்நாள் வரை அவர்களை ஆண்டுகொண்டிருந்த அச்சம் அகன்றது. தங்களை உள்ளிட்ட அந்தத் தொகுதியை சீவம் என்றனர். அச்சீவங்களின் தலைவனான அவனைச் சிவம் என்றனர்.

அவன் குடியினர் முழுநிலவு நாட்களில் மலைக்குகைக்குச் சென்று அவனுக்கு ஊனும் பழங்களும் படைத்து வணங்கத் தலைப்பட்டனர். தன் மூன்றாம் கண்ணால் கடலின் கரிய திரையால் மூடப்பட்டு மறைந்த அவர்களுடைய மூதாதையரின் மண்ணைக் கண்டான். அதன் வடிவங்களை அவன் வரைந்து வைத்தான். யாளிகள், பறக்கும் விலங்குகள், பனைமரம் போன்ற பாம்புகள்... நடுவே ஓங்கி நிற்கும் மலைஉச்சிமீது கூந்தல் பறக்கும் ஒரு பெண். அவள் காலடியில் பாறைக் கூட்டங்கள்மீது சிதறும் அலைகள். அத்தனை அன்னைத் தெய்வங்களும் அவள் முகத்தோற்றத்தையே கொண்டிருந்தன. அனைத்துமாகி நின்ற அவளை ஆதி என்றனர். ஆதியின்

துணை ஆதன். அவள் மைந்தனான முக்கண்முதல்வன் அத்தன் என்று அழைக்கப்பட்டான். அவளுடைய நிறம் நீலம் என்று பெயர் கொண்டபோது அவள் நீலி என்றானாள். நீலியால் ஆளப்பட்டது நிலம். நிலத்தின் இயல்பு நிலை. அவர்கள் மொழி விரிந்து சென்று விண்ணையும் மண்ணையும் மூடியது.

அவன் மைந்தர்களின் தலைமையில் குமரிமக்கள் வளர்ந்து பரவினர். யானைமுகன் குடியின் அறிவுக்குத் தலைவனாக இருந் தான். ஆறுமுகன் வெல்லற்கரிய தளபதியாகவும். தலைமுறைகள் மடிய மடிய தூக்கமற்ற நுதல்விழியுடன் அவன் மட்டும் மலைமீது வாழ்ந்தான். இருண்ட வானில் அவன் வாழும் கயிலை எனும் வெண்மலையின் உச்சிப்பாறையில் நிற்கையில் கூனலிளம் பிறை அவன் சடைமுடிமீது வந்தமரக் கண்டார்கள். வறண்ட கோடையில் விடாய்நீர் தேடிச் சீவங்கள் காட்டுக்குள் அலைமோதும்போது அவன் தன் மலைப்பாறைமீது ஏறி நிற்க கருஞ்சடைக் கற்றைகள் விரிந்து வானில் பரந்து கறுத்து கனத்து இடிபிளிறி பிளந்து வழிவிட வானின் திரைக்கு அப்பால் அணையுண்டு கிடந்து அலைமோதும் வான்பேராறுகள் மண் நோக்கிப் பொழிவதைக் கண்டார்கள். புயலில் காடுகள் கொந்தளிக்கையில் தன் மலையுச்சி மேடை மீது அவன் ஆடும் அந்தக் கூத்தைக் காண அவர்கள் கூடுவதுண்டு. அவனது தூக்கிய பாதத்துக்குக் கீழே குமரிநிலம் வாழ்ந்தது.

தலைமுறைகள் தொடர்கையில் அவனைக் கண்டவர்கள் இல்லாமலாயினர். கதைச் சொற்களில் பேருருக் கொண்டான். அம்மலையையே அவர்கள் அவனாக வணங்கினர். அதன்மீது எரிந்த காட்டுநெருப்பை அவன் வண்ணம் என்றனர். அங்கே அழி வற்ற ஆதி அன்னையுடன் இணைந்து அவன் வாழ்வதாகச் சொன் னார்கள். மலையுச்சியின் ஊழி வெறுமையில் அன்னையும் அவனும் ஆடும் கூத்து தொடரும் கதைகளைச் சொல்லிக் குழந்தை களை வளர்த்தனர். எடுத்த பொற்பாதம் நிலம் தொடும் கணம் காட்டிலும் கடலிலும் நெஞ்சங்களிலும் எல்லா அசைவுகளும் இல்லாமல் ஆகிவிடும் என்றும் அது வானோக்கி உயரும் கணம் அம்மலை உச்சியின் நுனியில் அப்பாதமுனையை அச்சாகக் கொண்டு மண்ணும் விண்ணும் சுழன்று உச்சவெறி கொண்டு வடிவங்களழிந்து இன்மையாகி ஒடுங்கும் என்றும் சொல்லப் பட்டது .

ᘓ

குமரிக்கோட்டின் வடபால் விரிந்த அடர்காட்டில் வாழ்ந்தனர் பெரும்பற்கள் கொண்ட கரிய நிற மக்கள். பிறர் அவர்களை எயினர் என்றழைத்தனர். தங்கள் தொல்குடி குறித்த பெருமிதமும் பிற குடிகள் குறித்த அச்சமும் அவர்களைப் பிற மக்களிடம் சேராமல் தடுத்தன. ஆகவே அவர்கள் மொழி அவர்களிடம் மட்டுமே சுழித்தது. அவர்கள் எவருக்கும் அஞ்சாதவர்கள் ஆதலால் அவர்களை எந்த அரசும் ஆள முடியவில்லை. ஒற்றைக்கொம்புள்ள கலைமான்மீது உலவும் குடிமூத்த அன்னையே அவர்களுக்குத் தலைவியாக இருந்தாள். குடியில் ஒருவரைக் கொல்ல ஆணையிடும் உரிமை அவளுக்கு மட்டுமே இருந்தது. ஏனெனில் ஈன்ற அன்னையே கொல்லும் தகைமை கொண்டவள் என்றது குடிச்சொல்.

மூதன்னையரை ஈனும் பேரன்னை ஒருத்தி தங்கள் தலைகளுக்கு மேல் எழுந்து விண்ணில் நிற்கும் குமரிமுகட்டின் உச்சிப் பாறையில் ஒற்றைப்பாதம் ஊன்றி நின்று தவம் செய்வதாக அவர்களின் தொல்கதைகள் சொல்லின. அவளது கருங்கூந்தல் விண்ணில் பரவி மழையாயிற்று. அவளது கண்களின் சுடர் பகல் ஒளியாயிற்று. அவள் கனிவின் தண்மையே நிலவொளியாயிற்று. கலைமான்கள் மட்டுமே மலையேறி அன்னையின் பாதத்தடம் வரை செல்ல இயலும் என்றறிந்தனர். குகைச்சுவர்களில் கலைமான் பாதங்களைப் பொறித்து அவ்வரிசையின் இறுதிப்புள்ளியில் செஞ்சுடர் வடிவாக அன்னை இருப்பதாக எண்ணி அவர்கள் வணங்கினர்.

கொல்தொழில் அன்னையை கொற்றொழிலாள் என்றனர் எயினர். கொல்தவம் செய்யும் அவளை வணங்கி கொற்றவை என்ற சொல்லை தங்கள் குடிக்கு அரசி என்று வகுத்துக் கொண்டனர். யானைத்தோல் போர்த்தி, செஞ்சடை விரிய கையில் மழுவும் சூலமுமாக அமர்ந்த வெறிக்கோலமாக அவளை குகைச்சுவர்களில் வரைந்து மலரும் நீரும் ஊனும் தூபமும் படைத்து வழிபட்டனர். கொற்றவை ஆட்சியில் எயினர் குடி பெருகியபோது மூதன்னையர் எண்ணிக்கை மிகவே அன்னையர் கூடும் அவை ஒன்று செய்தபின்

அவர்களுடைய அடையாளமாக சிறுமியொருத்தியை கலைமான் மீதேற்றி பேரன்னையாக வணங்கினர். அவளுக்கு முன் படைய லிட்டனர். கொற்றவக் குமரியின் மக்கள் நாங்களென்று காட்டுக்குள் கூத்திட்டனர் எயினர்.

ஓ

தென்கடல் மீண்டும் மீண்டும் கடுஞ்சினம் கொண்டு வீங்கி வந்தது. குமரிமக்கள் வாழ்ந்த காடுகளை அது தன் நுரை நாக்குகளை நீட்டி உண்டது. கரிய பாறை எடுப்புகள் நீராட இறங்கும் யானைக்கூட்டங்கள்போல மெல்ல நீரிலிறங்கி மூழ்கி மறைந்தன. தென் திசையிலிருந்து நீலநீர் வலை தங்களை நோக்கிச் சுருங்கி அணைவதை அறிந்தார்கள். காடுகள் மறைந்தபோது அவர்கள் குடி குடியாக வடதிசை நோக்கி நகர்ந்தனர். பொருள்வடிவங்களெல்லாம் கடலில் மூழ்கி மறைய அவற்றின் கருவடிவங்கள் மட்டும் நிழல்கள்போல ஆடும் ஓர் அறியாச் சுமையாக அவர்களுடன் வந்தது தமிழ். கதைகள் முழுக்கக் கடல் கொண்ட மூதாதையர் நிலம்பற்றிய நினைவுகளால் நிரம்பியிருந்தன. குமரி அன்னையின் கால்பாதம் படிந்த முதற்கொடுமுடி. முக்கண் முதல்வன் கோயில் கொண்ட கயிலை மலை. அன்னையர் ஆண்ட காலத்திலிருந்து ஆறுமுகன் ஆண்ட வெற்றியும் சிறப்பும்மிக்க காலம்வரையிலான ஆயிரம் குறிஞ்சிப் பருவங்கள். வந்த இடங்களில் எல்லாம் தாங்கள் இழந்ததையே கண்டுகொண்டார்கள். அங்கும் குமரிக் கோடும் கயிலைமலையும் அவர்களுக்குக் காட்சி அளித்தன. கயிலையின் வடிவொன்றைக் கல்லில் செதுக்கி எடுத்து வந்து அதைப் பாறைகள்மீது நிறுவி வழிபட்டார்கள்.

மலைக்கு அப்பால் கண்டடைந்த புதியநிலம் அடர்வற்ற காடுகளுடன் திசையெல்லைகள்வரை விரிந்த புல்வெளிகளுடன் இருந்தது. அங்கு பெரிய யாளிகள் உணவின்றி அலைந்து மடிந்திருந்தன. இறந்த பெரும் விலங்குகளின் வெள்ளெலும்புகள் புல்வெளிகளில் சிதறிக்கிடக்க அவை புதிய தலைமுறைகளுக்கு படைக்கலங்களாயின. தொலைவு நிரம்பிப் பரந்து நிற்கும் புல்வெளிகளில் மழுக்களின் ஆற்றல் குறைவு என அறிந்தபோது வேல்களைக் கண்டடைந்தனர். வேல்கள் பறக்கும் தோள்களே என்றறிந்த பின் ஒருவன் மரங்களின் வலிமையைப் பறக்க வைக்க எண்ணினான். முற்றிய மூங்கிலின் வலிமையைக் கொத்தும் அலகுள்ள புட்களாக்கி

கொற்றவை

வில்லம்பைக் கண்டடைந்தான். எண்ணம் சென்று தொட்ட இடத்தில் அம்புகள் சென்று தொடக் கண்டனர். எண்ணங்களை எய்யும் வில்லொன்று தங்கள் உள்ளிருப்பதை அறிந்தனர்.

தங்களை மூன்று குடிகளாகப் பிரித்துக்கொண்டு குமரியை நிரப்பினர் தமிழ் மக்கள். பாடல்கள் அக்கதைகளைச் சொல்லின. மலைமீது வாழ்ந்த ஆறுமுகக் குடியின் இலச்சினை உச்சிப் பாறைகளில் உலவும் மயில். தென்திசையின் அடிவாரத்து ஆனைமுகக் குடியின் இலச்சினையாக மண்ணுள் வாழும் எலி. மலைமக்கள் வேட்டையாடினார்கள். மண்மக்கள் வேளாண்மை செய்தார்கள். கடல்மீன்களிலெல்லாம் விழிதுலங்கும் குமரிஅன்னையை அன்றி எவரையுமே வணங்கத் தலைப்படாத பரதவர் என்றுமே அலை கொந்தளிக்கும் கடற்கரைகளில் வாழ்ந்தார்கள். குமரிநில மக்களிலேயே அவர்களே பழமை வாய்ந்தவர்கள் என்பதனால் அவர்கள் பண்டையோர் என்றும் பெயர் பெற்றிருந்தனர்.

துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று தொல்குடித் தொகை விரிந்தது. ஒவ்வொரு குடியும் தங்கள் தொழிலைச் செய்தன. புதிய தொழில் கண்டடையப்பட்டதும் புதிய குடி பிறந்தது. மீன்பிடிக்கும் பரதவரும் வேட்டையாடும் வேட்டுவரும் வலிமை கொண்ட குடிகளாக இருந்தார்கள். உப்பு உமணரை உருவாக்கியது. சங்கு கீரரை உருவாக்கியது. ஆனால் புதிய சமநிலத்தில் மெல்ல வேளாண் மக்கள் பெருகித் திரண்டு அவர்கள் குடியின் மையப் பெரும் வல்லமையானார்கள். அவர்கள் தேடிச்செல்லவில்லை, உணவின் வடிவில் கடவுளர் அவர்களைத் தேடி வந்தனர்.

கூலமணிகளை அவர்கள் வணங்கினார்கள். அவை ஒவ்வொன்றும் ஒரு சீவம். அச்சீவங்களின் உலகம் மண்ணுக்கு அடியில் இருந்தது. மேலிருந்து திரும்ப அனுப்பப்படும் ஒன்று தன் உடன் பிறந்தாரை அழைத்தபடி திரும்ப வந்தது. மண்ணுக்கு அடியிலும் விண்ணுக்கு அப்பாலும் நீர் நிரம்பிய பேருலகங்கள் உள்ளன. நடுவில் அவர்கள் உலகம் செருகப்பட்டிருந்தது. அவ்விரு காணா உலகங்களையும் இணைப்பவை மழையும் பயிர்களும். அவை ஒரு வினாவும் விடையும்போல. மழை கீழ் நோக்கியும் பயிர் மேல் நோக்கியும் வளர்ந்து செல்பவை. இரவில் தாவரங்கள் மழைச் சரங்கள்போல நீண்டு வானைத்தொட்டு காலையில் ஈர மணிகள் சூடி நிற்பதைக் காணாதவர் யார்? விண்ணையும் மண்ணையும் இணைப்பதே தங்கள் பணியென்றும் அதன் பொருட்டு அவ்வுலகங்கள் தங்களுக்கு உணவூட்டும் என்றும் அறிந்து விட்டிருந்தார்கள்.

விளைநிலம் கன்னியின் உடல். அதன் தென்மேற்குமூலையை மட்டும் கொழுமுனை படாமல் காலடி தொடாமல் காத்தார்கள். அங்கே விளையும் நெல் கன்னிநெல் எனப்பட்டது. அதைக் கன்னிப் பெண்களின் கைகளாலேயே உதிர்த்து பானைகளில் சேமித்து தங்கள் இல்லங்களின் தென்மேற்கு மூலையில் நிறுவப்பட்டிருந்த கன்னிபாதத் தடத்துக்கு முன்னால் கட்டித் தொங்கவிட்டனர். அங்கே காமம் அறியாக் குழந்தைகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். மழை ஆடி அடங்கும் ஆடி மாதம் கழித்து ஆவணியின் இளவேனில் உச்சத்தை முடியும்போது வரும் மாதம் கன்னிமாதம் எனப்பட்டது. அன்று அவர்கள் பெருங்குமுகங்களாகத் திரண்டு மலை ஏறி புது மலர்களும் மலைச்சுனை நீரும் கொண்டு பூசனை செய்தார்கள். கால்படாது குற்றி, மண்படாது உலர்த்தியெடுத்த புதுநெல்லை அன்னைக்கு பொங்கலிட்டனர். கன்னித்தெய்வம் தென்மேற்கு மூலைகளிலெல்லாம் குடியிருந்தது. விளைந்து விளைந்து தாயாகி அவர்கள் மண் கனிந்தபோதுகூட அதன் ஒரு மூலை கன்னியாகவே இருந்துகொண்டிருந்தது. உணவு அவர்களைப் பெருக வைத்தது.

குகைகளும் குடிசைகளும் போதாமல் ஆனபோது கல்லடுக்கி வீடுகள் கட்டிக்கொண்டனர். வீடுகள் இணைந்து ஊர்கள் உருவாயின. ஊர்களின் மையம் வளர்ந்து நகரமாயிற்று. படரும் கொடிகள்போல அதன் தெருக்கள் நீண்டன. எறும்புப்புற்றுகள் போல அதன் மாடங்கள் எழுந்தன.

ஆழ்கடலுக்குள் இருந்து மூதாதையர் கரையேறி இரவின் இருளுக்குள் நகரில் நடமாடுவதைப் பூசகர்கள் சொன்னார்கள். தூங்கும் குழந்தைகள் முதுபாட்டியரைக் கண்டு புன்னகைத்தன. அவற்றின் முன்னெற்றி மென்மயிர் முப்பாட்டன்களின் முத்தங்களின் மூச்சுக்காற்று பட்டு அசைந்தன. மூதாதையர் அருட்சொற்கள் நகர்மீது காற்றாக உலவுதற்பொருட்டு நகரம் கடலோரமாகவே அமைக்கப்பட்டது. கடலைகளின் கொந்தளிப்பிலிருந்து நகரைக் காக்க குமரிக்கோடு பெயர்த்தெடுத்து களிறுகளால் நகர்த்திக் கொணரப்பட்ட பெரும் பாறைகளை அடுக்கி மதில்கள் எழுப்பப் பட்டன. பெருமதிலுக்குள் சிறுமதிலும் அதற்குள் குறுமதிலுமென மூன்று அரண்களுக்குள் இருந்தது நகரம். அது 'மதில்நிரை' என்றழைக்கப்பட்டது. குழந்தைகள் அதை 'மதுரை' என்றாக்கின. அடங்காத மதயானை போன்றிருந்த தமிழ் சிறுகுழந்தைகள் முன் மட்டும் மத்தகம் தாழ்த்தி கால்மடக்கி அவர்களை ஏற்றிக் கொண்டது. அவர்களுக்கு கீழே சிட்டுகளைத் தூக்கிச்செல்லும் தென்றல் போன்றிருந்தது அது. எல்லைமீது கடலலைகள் பரவியதனால்

அந்நகரம் அலைவாய் என்று அழைக்கப்பட்டது.

ஆயினும் குமரி நில மக்களின் கனவுகளில் நுரை உமிழும் கரியபேரலைகளின் சித்திரங்களே அடர்ந்திருந்தன. கடலை அவர்கள் அஞ்சினார்கள். கண்ணுக்குத் தெரியாத கட்டுக்களில் சிக்கியிருக்கும் பெரும் பூதம் ஒன்று தன் கரங்களை நீட்டிப் பிளிறியபடி அவர்களைப் பிடிக்கவருவதுபோல் எண்ணிக் கொண்டார்கள். கடலை அஞ்சிக் கரைநோக்கிப் பின்வாங்கிக் குமரிக்கோட்டின் அடுக்குகளுக்குள் வாழ்ந்தவர்களையும் அலைகள் விடவில்லை. கடலையே காணாத குழந்தைகளின் கனவுகளில்கூட அலைகள் கொந்தளித்தன. கடும்சுரம் வந்து இறப்பு நினைவுக்குமேல் மூட்டம் போடுகையில் அவர்களின் கனவுகளில் அலைகளுக்கு அடியில் நீரின் கனத்த ஆழத்தில் மூழ்கிக்கிடக்கும் பெரும் நகரம் ஒன்றின் இடிபாடுகள் விரிந்தன. கடலடியில் துயிலும் தங்கள் பெருநகர் குறித்து அவர்கள் கதைகளை நெய்தனர். அதையும் அவர்கள் மதுரை என்றே சொன்னார்கள்.

ஆழ்நகரத்தின் நீர் நிரம்பிய அகலச் சாலைகளுக்கு இருபக்கமும் இடிந்த கல்மதில்களின் எச்சங்கள் பசுநாரம் படர்ந்து சிப்பிகள் அடர்ந்து கிடக்க அவற்றினூடாகச் சிறகுகளை அசைத்தபடி மீன்கள் பறந்து சென்ற காட்சிகள் அனைவர் கண்களுக்குள்ளும் பிறப்பிலேயே எழுதப்பட்டிருந்தன. கடல்மீது வெயில் பரவுகையில் இடிபாடுகள்மீது ஒளியலைகள் தளதளத்தன. மீன்நிழல்கள் வளைந்து சென்றன. இறப்பின் துடிப்பில் அந்த மாபெரும் நகரைக் கண்டு உயிர்பிழைத்த சிலர் அதைப்பற்றிச் சொன்னபோது பிறர் நம்பவில்லை. சிலர் அது விண்ணில் எங்கோ இருக்கும் பொய்நகர் என்றார்கள். ஏனெனில் முன்பு அவர்கள் மாநகர் என எதையுமே கண்டதில்லை.

ஒருநாள் மீன்தேடி வலையெறிந்த மீனவன் ஒருவன் விழித்த கண்களுடன் புன்முறுவலுடன் தன் வலையேறி வந்த சிறுசிலை ஒன்றைக் கண்டான். அதன் இடப்பக்கம் நீலமாகவும் வலப்பக்கம் பொன்னிறமாகவும் சுடர்விட்டது. தோள் மீது விரிந்த சடைக் கற்றைகளும் கொண்டைமீது சூடிய கூன்பிறையும் வீரப்பற்கள் எழுந்த சிரிப்பும் கொண்டிருந்தது அச்சிலை. அவள் தன் இடக்கையில் தாமரையும் வலக்கையில் கொலைவாளும் வலக்காலில் கழலும் இடக்காலில் சிலம்பும் கொண்டிருந்தாள்.

சன்னதம் கொண்டெழுந்த முதிராமுலைக்கன்னி, அவளை மதுரைகளைக் காக்கும் மதுராபதி அன்னை என்று அறிவித்தாள். மதுரை நகரின் பெருவாயில் என்றும் கிழக்குநோக்கியே திறந்திருக்க

வேண்டும் என்றும் அங்கே தெற்குநோக்கி அவளை நிறுவி வழிபட வேண்டும் என்றும் சொன்னாள். அவள் துயிலா விழிகளுக்கு எந் நேரமும் புதுமலரும் நன்னீரும்கொண்டு பூசெய்கை வேண்டுமென் றாள். அன்னையின் சிறுகோயில் கீழ்த்திசை வாயிலில் எழுந்தது. பின் ஒருபோதும் அவளுக்கு பூசெய்கை நின்றதில்லை.

தோற்றம் தெரியாத நினைவின் ஆழத்திலிருந்து கதைகளின் வழியாக அவர்களிடம் வந்துசேர்ந்த அந்த முக்கண்மூதாதை ஒரு மழைநாள் காலையில் மலையிறங்கி வந்தமர்ந்த கற்பாறைமீது அவன் உருவைத் தென்திசைநோக்கி கண்மூடி அமர்ந்த கோலத்தில் செதுக்கி வைத்தார்கள். அவனைத் தென்புலத்தெய்வம் என்றனர். நீலம் விரிந்த தெற்குதான் சாவின் திசை என அவர்களுடைய மரபின் மெய்யறிவு கற்பித்திருந்தது . எனவே மூதாதையரின் திசை தெற்கே என்றார்கள் குடிப்பூசாரிகள். காலம்கொண்ட மூதாதையர் தென் புலத்தோர் எனப்பட்டனர். வடக்கு விண்நோக்கி எழும் எதிர் காலம். தெற்கு அடியற்ற ஆழம் கொண்ட இறந்தகாலம்.

மதுரை கிளைபரப்பி வேர்செலுத்தி படர்ந்து பெருநகர மாயிற்று. தங்களை அறியாமலேயே தாங்கள் கனவில் கண்டறிந்த ஆழ்நகரை மீண்டும் உருவாக்கியிருப்பதை அவர்கள் அறிய வில்லை. ஏனெனில் சன்னதம் கொண்ட வேலவர்களின் கட்டளைப் படி உருவானவை அந்நகரின் தெருக்களும் தெருக்களை இணைக் கும் சதுக்கங்களும் ஈயத்தை உருக்கி ஊற்றி இணைக்கப்பட்ட கருங்கற்களால் ஆன பெரும் மதில்களும் வெண்சுதை மாடங்கள் வானிலெழுந்த அரண்மனைகளும் அனைத்தும். கணித்தல் தேர்ந்த அவர் குடியின் கணியறிவர் கண்களிலும் சிற்பிகளின் கைகளிலும் அவர்களை அறியாமலே அந்நகரம் குடியிருந்தது. வெறியாட்டில் செஞ்சடைசூடிய வேலவன் மீது ஏறிவந்த மூதாதையர் சொன் னார்கள் அந்நகரம் முன்பு என்றோ மூதாதையர் கட்டி கடல் உண்ட அந்த ஆழ்நகரின் மறுவடிவமே என. அந்தக் கடலாழத்து மாநகரோ வேறொரு நகரின் மறுவடிவம்.

இறங்கும் மலைப்படிக்கட்டுகள்போல எண்ணற்ற மாநகர்கள் இறங்கிக் கடலின் அடியிலா இருளில் அமிழ்ந்துகொண்டே யிருந்தன. தேனீக்கள் அறியாமல் அவற்றின் கால்களில் வாழும் கூடு போல தமிழ்க்குடிகளின் கனவில் இருந்தது அந்நகரம். அதற்கு மதுரை என்ற பெயரே என்றும் இருந்தது என்றது சன்னதம் மூலம் கடலாழத்திலிருந்து வந்த குரல். மதுரை என்பது நகர்களை மணி களாகக் கட்டிய ஓர் ஆரம்.

கதைகளின்படி, மதுரை நீரை அஞ்சிப் பின்வாங்கிய ஒரு பெருவிலங்கு. அதன் வன்மையான பின்னங்கால் உகிர்கள் போலப் பாறைகளை அள்ளிப் பற்றியபடி அதன் அடிக்கட்டுகள் குமரிகோட்டின் சரிவில் ஆழப்பதிந்திருந்தன. அதன் முகம் கடலை அஞ்சி வடக்குநோக்கித் திரும்பியிருந்தது. கீழ்த்திசை வாயிலில் அமர்ந்த யானையெனத் தெரிந்த மதுராபதியன்னையின் கல்லாலயத்திலிருந்து துதிக்கைபோல நெடும்பாதை பிரிந்து நீண்டு சென்றது. எச்சரிக்கை கொண்ட விழிகள்போலக் காவல்மாடங்கள் எப்போதும் எரியும் விளக்குகளும் காவலர்களுமாக நீர்மட்டத்தைக் கண்காணித்தன. நகர் நடுவே முதற்பூதம் கையில் நெறி நூலுடன் கருங்கற்சிலையாக நின்று நூல்நெறி வழுவாது நகர் காத்தது. பின்னால் கையில் வாளுடன் அரைசப்பூதம். வலப்பக்கம் வாணிபப் பூதம் கையில் துலாக்கோலுடன். நிறைகதிர் ஏந்திய வேளாண்பூதம் இடப்பக்கம். பூதங்களின் நோக்கு நகரில் எங்கு நின்றாலும் தெரிந்தது. பல்தொழில் மாந்தர் தத்தமக்குரிய பூதங்களை வணங்கிச் சென்றனர்.

மதுரைப் பெருநகரம் கடல் மீதெழுந்த கற்பாறைகள்மீது குமரியாறு கொண்டுகுவித்த மென்வண்டல்மீது கட்டப்பட்டது. அதனருகே குமரியாற்றின் நன்னீர் நுரைத்துப் பாறைகள் நடுவே சீறிக் கடலில் விழுந்தது. நகரின் ஓங்கிய கரிய கற்சுவர்களில் ஆற்று நீர்த்திவலைகள் வியர்த்து வழிந்துகொண்டிருந்தன. இரவின் அமைதியில் ஆற்றின் ஒலியும் கடலின் ஒலியும் நகரை இருபுறங்களிலும் சூழ்ந்து அணைத்துக் கொண்டிருந்தன. வெண்கலமே அவர்களது மாழை. மலையின்மீது செம்பழுப்புப் பாறைகளாகச் செம்பும் ஈயமும் நிரம்பியிருந்தன, அனலில் சுட்டு அதைப் பிரித்தெடுத்துக் கலந்து வெண்கலம் செய்யும் கம்மாளர்கள் குடிகள் தோறும். எருமையும் எருதுகளும் அவர்களுக்கு பழகிவிட்டிருந்தன. கிளிஞ்சலும் சங்கும் சுட்டு எடுத்த சுண்ணமும் மணலும் கூட்டி அரைக்கப்பட்ட வெண்சுதையால் கட்டப்பட்ட வீடுகளின் நிரையா

லானது மதுரை. அதைச் சுற்றி அரண்கள் இருந்தன. கோடுகளெனை உயர்ந்த அவை கோட்டை என்று பெயர்பெற்றன.

வெயிலில் அவற்றின் வெண்கலப்பூச்சு கடல் நீராட இறங்கிய ஏதோ பேருருவ அன்னை கழற்றிவைத்து மறந்து சென்ற மாபெரும் பொற்சிலம்புபோல ஒளிவிட்டது. வெண்கல வாசற்கதவில் கடலின் கண்களான முத்துக்களும் மலையின் கண்களான வைரங்களும் பதிக்கப்பட்டிருந்தமையால் அது பார்வைகளினாலான காவல் போன்றிருந்தது. சுதையும் கற்களும் பாவப்பட்ட பாதை உள்ளே நீண்டு சென்று கடைவீதியாயிற்று. கிளைபிரிந்து தெருக்களாயிற்று. அதன்மீது வெண்கலச் சகடங்களுடன் எருமைக்கடாக்கள் இழுத்த தேர்கள் உருண்டோடின.

கடைவீதிகளில் உலர்ந்தமீன்களும் சிப்பிகளும் சங்குக் கிளிஞ்சல் நகைகளும் பொன்னகைகளும் செம்பு வெண்கலப் பாத்திரங்களும் எனப் பொருட்கள் குவிக்கப்பட்டுக் கூவி விற்கப்பட்டன. மரப்பட்டைகளை உப்பு நீரில் ஊறப்போட்டு பிரித்தெடுக்கப்பட்ட மென்மையான மரவுரி நார்களைப் பின்னி நெய்த ஆடைகள் அணிந்த பெண்களும், பலவிதமான தோலாடைகளணிந்த ஆண்களும், யானைத்தோலாடையும் வெண்கல அரணமும் செம்பு உடைவாளும் அணிந்த படைவீரர்களும் அங்கு நெரிந்தனர். முத்துப் பதித்து முத்திரையிட்ட பண்டங்கள் குவிந்த வணிக நகரில் எங்கும் வணிகக் கூக்குரல்களும் கேளிக்கை ஓசைகளும் நிரம்பியிருந்தன. கடலலை தழுவும் தூரத்தில் கரைப்பாறைகளைச் செதுக்கிக் கட்டப்பட்ட ஆழிமணிவண்ணன் ஆலயம் இருந்தது. மறுபக்கம் உயர்ந்த அடித்தளம் மீது கற்களை அடுக்கியெழுப்பப்பட்ட மேடை எழுந்து வானைத் தொட்டு உயர்ந்து நிற்கும் செந்தழல் மேனி அண்ணலின் கோயில்.

நகரின் கன்னிமூலையில் குமரி அன்னைக்குக் கருங்கல்லால் செதுக்கப்பட்ட கோயில். உள்ளே தெற்கு நோக்கித் திரும்பிய கோலத்தில் முதிரா இளமுலைகளும் சிறுசேவடிகளும் கொண்டு கன்னித்தெய்வம் நின்றிருந்தது. சிற்றாடை அணிந்து சிறு மூக்கில் மணிமூக்குத்தி சுடர குமிண் சிரிப்புடன் கருவறைக்குள் இருந்து நகர் நடுவே பெரிய வெண்கலக் கதவுகள் விரியத்திறந்து கவச வீரர்களால் காக்கப்பட்ட பாண்டியன் சடையன் பெருவழுதியின் அரண்மனையை அவள் பார்த்தாள். ஆலய முகடுமீது பறந்த கொடியில் மீன் காற்றில் துள்ளியது. அரண்மனையின் தென்மேற்கு மூலையில் சிறுகோயில்கொண்ட மீன்வடிவ விழி பதிக்கப்பட்ட குமரித் தெய்வத்தின் சிலையே மன்னனின் குடித்தெய்வம். தென்குமரிக்

பெருநிலத்தில் மீன்பிடித்து வாழ்ந்த பழங்குடியின் உதிரத்தொடரில் ஒரு மணியே பாண்டியன்.

கடல் கொண்ட குமரிக்கோட்டுக்குத் தெற்கே வாழ்ந்த பழங்குடிங்களில் எஞ்சியவை சிலவே. தென்மக்கள் கடலின் ஓயாத படைகளிடமிருந்து தப்பி வடக்கேறியது அவர்களிடம் குடிப்பாடல் களாக, கதைகளாகத் தொடர்ந்து வந்தது. ஏறி வந்த ஒவ்வொரு படியிலும் அவர்கள் ஒரு குடியைக் காவு கொடுத்தார்கள். தலை கொடுக்கத் துணிந்த முதற்குடிகளை வணிகனிடம் காய்தேரும் இல்லாள்போலக் கடல் கவர்ந்துண்டது. குடிகள் கலந்தன, புதிதாகப் பிறந்தன. மூத்த முதற்குடியாக மிஞ்சியது மீன்குடி அதன் தலைவனே அம்மக்களுக்கு மன்னன் ஆனான். கரிய உடல் கொண்டவர்கள் அவர்கள். போரில் பின்வாங்கிய வரலாறே இல்லாதவர்கள். அத்துடன் தங்கள் குடிப்பெண்டிரை உடல் உயிரை யெனக் காப்பவர்கள். தோரணியின் தொன்மை காரணமாகப் பழையோன் என்றும் பண்டையோன் என்றும் அழைக்கப் பட்டனர். அது மருவிப் பாண்டியன் என்றாயிற்று.

ஆ

பழம்பாடல் சொன்னது

கடல் எப்போதும் நிறைவின்மையுடன் இருந்தது. அடங்காத பசியோ தீராத கடுஞ்சினமோ அதில் இருந்து எழுந்து கரைகளை மோதியபடியே இருந்தது. ஒவ்வொரு நாளும் அது தன் எல்லைகளை அழித்து அமைத்தது. முத்துக் குளிப்பவர்களும் சங்கு பொறுக்குபவர்களும் தங்கள் மூதாதையர் வாழ்ந்த இல்லங்களை மூழ்கிச் சென்று கண்டனர். அவற்றின் சுதைச் சுவர்கள்மீது நீரின் ஒளியும் கடல்நாரப் பசுமையும் படர்ந்திருக்க அவற்றின்மீது கடலின் கண்காணிக்கும் விழிகளின் ஒளி அலையலையாகப் பரவியது. சிப்பிகளும் சங்குகளும் சுவர்களைக் கவ்வியபடி ஒட்டியிருந்தன. கரை மீண்டு அவர்கள் தங்கள் மைந்தர் மகிழ்ந்தாடும் ஊர்களுக்கு மீண்டதும் அதிர்ச்சிக்கு ஆளானார்கள். அவற்றின்மீதும் நீலம் மிக மெல்ல அப்போதே பரவத் தொடங்கியதைக் காண அவர்களால் முடிந்தது. இரவில் கனவில் தங்கள் இல்லங்களின் அறைகள் தோறும் சிறகசைத்துப் பறக்கும் பெரிய மீன்களையும் அவற்றின் இமையா விழிகளையும் கண்டார்கள்.

தினமும் கடல் விளிம்பில் அவர்கள் தங்கள் குடித் தெய்வங்களை நிலைநிறுத்தி அவற்றுக்கு ஆமை ஓட்டில் அகல் விளக்கு ஏற்றி அணையாமலிருக்கச் சிப்பித் தகடுகளை அடுத்து வைத்து மீண்டனர். மறுநாள் தெய்வங்கள் கடலில் இறங்கி மறைந்திருப்பதைக் கண்டனர். மூழ்கிய தெய்வங்கள் கடலாழத்தில் தெய்வங்களைப் பெற்று தெய்வங்களை உண்டு வாழும் பெருந்தெய்வமொன்றைக் கண்டு அதனருகே செல்வதையும் அது புன்னகையுடன் அவர்களைக் கை நீட்டி அழைப்பதையும் கண்டதாக வேலேந்தி வெறியாடும் குடிக் கிழவன் கூவிச்சொன்னான்.

ஆழத்தின் புலன்வடிவச் சித்திரம் நீர். தண்மையின் அலை, சுவையின்மையின் நீலம். பெருவெளியின் அகமே ஆழம். நீர்வடிவில் ஆழம் உடலில் தாவரங்களில் மண்ணில் நிரம்பியிருந்தது. இருண்ட ஊற்றுகளுக்குள் அது கண் மின்னப் புன்னகை புரிந்தது. உடலுக்குள் இருந்து எப்போதும் ஆழம் ஆழம் என ஏதோ

ஒன்று தவிப்பதைக் கண்டார்கள் சான்றோர். தன் அகம் என்று அதைக் கண்டு அதற்கு தாகம் என்று சொல் கொண்டனர். நீரை உண்டு உண்டு அது தன்னை நிரப்பிக்கொண்டது. சில தருணங்களில் வெறுமை விரிந்த வானையே மொண்டு மொண்டு பருகித் தாகம் தீர்த்தது. ஒருபோதும் நிரம்பாமலிருந்தது. நிரம்பாமை என்பதே ஆழம். நீர் வற்றித் தக்கையான மரங்கள் ஆழமிழந்து மிதந்தெழுந்தன. உயிர் நிரம்பிய உடலை நீர்நிலைகளின் ஆழம் அருவமான கரங்களால் இழுத்தது. எது விடாய் கொள்கிறதோ அது அவ்வாழத்தில் கரைந்த பிறகு உடலம் மேலெழுந்து வந்தது. கடல் உடல்களை எப்போதும் திருப்பியளித்தது. உடலுக்குள் வாழ்ந்தவை மட்டும் ஆழங்களை அடைந்தன. ஆழத்தில் கோடிகோடி உயிர்களின் எடையும் முடிவேயில்லாத காலத்தின் செறிவும் நிரம்பி இருண்டிருந்தன.

தென்மக்கள் நீரை அஞ்சினார்கள். அந்த அச்சம் அவர்கள் எண்ணங்களில் படர்ந்து ஒவ்வொரு சொல்லிலும் கசிந்து பரவியது. தென்திசையை நோக்குவதையே தவிர்த்தார்கள். வீடுகளைக் கிழக்கு நோக்கி கட்டிக்கொண்டார்கள். அவர்களுடைய குடியிருப்புகள் மெல்ல வடதிசைக்கு நகர்ந்தபடியே இருந்தன. ஊர்வதனால் ஊர் என்றும், நகர்வதனால் நகர், புரத்தலினால் புரம் என்றும் அவை சொல் கொண்டன. வடதிசையில் எக்கடல் பொங்கினும் மூழ்காத பெரும் உயர்வுகள் சில தலைதூக்கி நிற்பதாக அவர்கள் அறிந்தனர். பின்பு அவர்கள் முக்கண்முதல்வனின் இருப்பிடமே அதுதான் என்றும் கயிலையே வடதிசையின் உச்சம் என்றும் கதைகள் பிறந்தன. காலங்களின் எத்தனையோ மடிப்புகளுக்கு முன் தென் குமரி நீங்கி பல முன்னோடிக் குடிகள் கயிலைமலையைச் சிலையாக எடுத்துக்கொண்டு, குமரி நீரை மரக் கமண்டலத்தில் சேர்த்துக் கொண்டு வடதிசைக்கு சென்றது என்றும் தென்திசையைக் காக்க அவர்களில் மீண்டு ஒருவன் வரக்கூடும் என்றும் உரைத்தது சன்னதச் சொல். அவர்கள் தலைமுறைகள் தோறும் அக்கனவு முளைத்துக் கிளைத்தது.

காற்றுவெளியில் கனவுகள் விளைந்து பருவடிவு கொண்டதுபோலப் பின்பு ஒருவன் தென்திசை நோக்கிவந்தான். மூன்றடி உயரமே இருந்தான். காலமடிப்புகள் தோறும் தென் குமரியை விட்டு நீங்கியபடியே இருந்த எண்ணற்ற குடிகளில் ஒன்று அவன் வேர். அவர்கள் குமரிமலையின் ஒரு கல்லைத் தங்கள் மண்ணின் இலச்சினையாகக் கொண்டுசென்றார்கள். அது பின்பு அவர்கள் இறைவடிவமாக மாறிற்று. அதைக் குறி என்று

பொருள்வர லிங்கம் என்றனர். லிங்கத்தை வழிபட்ட குடிகளெல்லாம் தென்திசையை மூதாதைகளின் இருப்பிடமென நம்பியவர்கள். அவன் குடி உடலைக் குறுக்கி உணவை முப்பதிலொரு பங்காக மட்டுப்படுத்தி ஆயுளை மும்மடங்கு ஆக்கிக் கொள்ளும் கலையைக் கற்றுத் தேர்ந்திருந்தது. உணவையெல்லாம் குளிகைகளாக மாற்றிக் கொண்டவர்கள் அவர்கள். குலமெய்யோன் அவன். அறிவு குவிந்த குவைகளாக இருந்தனர் அம்மக்கள். உணவாசை இல்லாமையினால் அவர்கள் கொல்லாமையை அடைந்தார்கள். கொல்லாததனால் அகம் கனிந்து எவ்வுயிர்க்கும் செந்தண்மை கொண்டொழுகினார்கள். காட்டுவிலங்குகளும் நச்சரவங்களும் அவர்கள் அன்பைப் புரிந்துகொண்டன.

ஆனால் போர் வல்லமை இல்லாத அவர்களை வடக்கில் இருந்து கீழ்நோக்கிப் பரவிய செந்நெருப்பின் நிறமும் வெம்மைக் குணமும் உள்ள மக்கள் வென்று அவர்கள் குடிகளை முற்றாக அழித்தனர். நிரைநிரையாகச் செந்நிறப் புரவிகள் மீதேறி காட்டுத்தீ போல அவர்கள் வந்தபடியே இருந்தனர் அவர்களை அஞ்சிக் குறுமக்கள் தங்கள் குலக்கதைகள் சொன்ன மூதாதையர் மண்ணைத் தேடிக் கூட்டம் கூட்டமாகத் தென்புலம் நோக்கி வந்தனர். துரத்தி வந்த தாக்குதல்களினால் அக்குடி முழுக்க அழிந்தது. எஞ்சிய அவன் மட்டும் தன்னந்தனியனாகத் தென்திசை நோக்கி வந்தான். அங்குள்ள மக்கள் கரும்பாறைபோன்றவர்கள் என்று அறிந்தான். காட்டுத்தீயைக் கரும்பாறையே தடுக்க இயலும் என எண்ணி அவர்களைத் தேடிவந்தான்.

குறுமுனி மார்பில் விழுந்து இடைவரை வந்த தாடியும், வலக்கையில் மரக் கமண்டலமும், இடக்கையில் கரிய மாழையாலான தவக்கோலுமாக வந்து மதுரை மூதூரின் வெண்கலப் பெருவாயில் முன் நின்றான். அவனை வினவிய காவலனுக்கு காட்டின் அகத்தில் இருந்து வந்தவன் என்று பதிலிறுத்தான். காவலனின் நீட்டிய வாளை அவன் தன் தவக்கோலால் தடுத்தபோது வாள் சிதைந்து வளைந்தது.

வடதிசையில் இருந்து வந்த முனிவன் அவனே என்று நகரம் பரபரப்படைந்தது. கோட்டைமீது பெருமுரசங்கள் இடியோசை எழுப்பின. களியுவகை கொண்ட மக்கள் தெருக்களில் வாழ்த்தொலிகளுடன் குவிந்தனர். மங்கலக் கருவிகளும் பரிசில்களுமாகப் பாண்டியன் சடையன் பெருவழுதி கோட்டை வாயிலுக்கு வந்து அவனை வரவேற்றான். வெண்கலத் தேரில் அவனை ஏற்றி நகரவீதிகளில் வலம் வந்தனர். அங்கு நிலைக்குமாறு அவர்கள்

பணிந்தேத்தியதை குறுமுனி ஏற்றுக்கொண்டான். அகத்திலிருந்து வந்த அவனை அகத்தவன் என்று அழைத்தனர், அது அகத்தியன் என மருவும்வரை.

குறுமுனி தாங்கள் வாழ்ந்த நிலத்தின் விரிவைப்பற்றி அவர்களுக்குச் சொன்னான். வடக்கே வெள்ளிப்பனிமலைவரை நீர் கரைபுரளும் பேராறுகளும் பாலைகளும் காடுகளுமாக விரிந்து கிடக்கும் நால்திசை வலம் வரும் அந்நிலத்துக்கு நாவலம் தீவு என்று பெயர். அகன்று வறண்ட வெளியில் வாழும் நச்சு நிரம்பிய உடல் கொண்ட நாகர்களைப்பற்றியும், ஓங்கிய கரிய உடலும் மதமெழும் வெறியும் கொண்ட இடவாகையர் குடிமக்கள் குறித்தும் சொன்னான். அவர்களனைவருக்குமே லிங்க வடிவில் தென்றிசை மண்ணே தெய்வமாக உடனிருந்தது.

அவர்கள் குடிக்கதைகளில் தென்திசைக்கு என்றோ ஒருநாள் திரும்புவது குறித்து மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டிருந்தது. மாண்ட மூதாதையரின் எச்சங்கள் என்றாவது தென்கடலில் கலக்கப்பட்டாகவேண்டும் என்று குலநெறி. வடநிலத்துக் காடுகளுக்குள் வேர்பரவிய மண்ணுக்கு அடியில் வெள்ளெலும்புகளாகப் பூத்துப் பல்லாயிரம் தாய்தந்தையர் தென்திசை நோக்கி முடிவற்ற தவத்திலிருந்தனர். தென்நிலக் கன்னியின் சிலையுடன் வடதிசை போன குடிகள் ஒவ்வொன்றும் குலக்குறி இணைத்து அன்னையைத் தங்களுக்கு மட்டுமே உரிய தெய்வமாக்கிக் கொண்டனர். குடிகள் ஏழாகப் பிரிந்தபோது அவள் ஏழு முகம் கொண்டாள். பிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி என்று அவள் பெயர்கள் பெருகின. முக்கண் கொண்ட திரயம்பகைகள், ஊன்பலி கேட்கும் துர்க்கைகள், சாவுமுகம் கொண்ட சாமுண்டிகள்... அடர் காடுகளுக்குள் நூற்றாண்டுகளாக அன்னை பல்கிப்பெருகியபடியே இருந்தாள்.

குறுமுனியின் கைக்கோல் கரியபாறைகளின் சாற்றைப் பிழிந்து செய்யப்பட்டது. பாறைகளைப் பிழிந்து அதை எடுக்கும் முறையை அவன் கற்றுத் தந்தான். இரும் பொருள் என்பதால் அதை இரும்பு என்றார்கள். இரும்பு முதுமரத்தின் வைரத்தையும் வெட்டியது. யானைமத்தகங்கள் முட்டினாலும் நெகிழாத வேலியாகியது. வளையாத வாட்களாகியது. அவர்கள் காட்டையும் அதன் அத்தனை சீவங்களையும் வெற்றிகொண்டனர். மதுரை நகரின் வெண்கல வாயிலின் கோட்டைக்கு அப்பால் இரும்பாலான நுழைவாய் கொண்ட உள் எயில் எழுந்தது. காலம்போலக் கட்டற்ற பஃறுளியின் குறுக்காக மரங்களையும் பாறைகளையும் போட்டு

முதல் அணையைக் கட்டினர். வடிகால்களினூடாக பாய்ந்த நீர் வறண்ட நிலங்களைக் குளிரவைத்தது. நெல்லும் கனிகளும் விளைந்து செழிக்க தென்னவர் குடிகள் தழைத்தன.

ஐம்புலன்கள் அறியும் ஐம்பருக்களின் அடிப்படையில் குறுமுனி ஐந்நிலங்களைப் பகுத்தான். ஒலிவடிவான வானம் குறிஞ்சியாயிற்று. மணம் மிக்க காற்று முல்லையாயிற்று. சுவை வடிவான மண் மருதமாயிற்று. குளிர் நீர் நெய்தலாயிற்று. ஒளிர் நெருப்பு பாலையாயிற்று. குறிஞ்சிக்கு துடிதாளமும் முல்லைக்கு துளைக்குழலும் மருதத்துக்கு நரம்பு யாழும் பாலைக்கு தோல் முரசும் நெய்தலுக்கு மிடற்று மொழியும் இசைக்கருவிகளாக வகுக்கப்பட்டன. முதல்முடிவற்ற காலத்தையும் ஐந்திரக் கணிதத்துக்குள் கட்டுப்படச்செய்தான் குறுமுனி. கிழமை, பிறை, நாண்மீன், ஓகம், கரணம் என ஐந்து களங்களில் காலத்தின் அலகிலா ஆட்டத்தைத் தொகுத்தான். பன்னிரு ஓரைகள் இணைந்து ஒற்றைப்பெரும் இயக்கமாவதை அவன் அமைந்த ஓரைத் திகிரி சொன்னது. விண்கோள்களை அது திசைகளில் அடக்கியது. மொழியின் ஒலிகளைப் பொருளில் வகுத்தது. இசையின் அறுபடா ஒழுக்கை அது வடிவங்களாக்கியது.

ஐந்நிலங்களிலும் சென்று மக்களின் கண்ணீரையும் புன்னகையையும் துளித்துளியாகச் சேர்க்கும் தும்பிகள்போலப் பாணர் குடிகள் அலைந்தன. ஆடலும் பாடலுமாகத் தென் னிலத்தார் களித்தனர். அவர்கள் மொழியில் பூக்கள் மண்டின. கனிகள் பழுத்து விதைகள் செழித்த மண்ணில் பரவின. பாணரும் பாவலரும் கூடும் அவை ஒன்றைக் குறுமுனி கூட்டினான். குடிகள் கூடக் கூவியழைக்கும் வலம்புரி வெண்சங்கத்தின் ஒலியே தமிழ்ச் சங்கத்தையும் அறைவித்தது. அங்கே முக்கண் முதல்வனே முதல் புலவனாகச் சிறுகயிலைக் குறியில் வந்து கோயில் கொண்டருளி னான். அவையின் முதல்பாடலை அவன் குரல் சன்னதம் கொண்ட முதியவன் வாயிலிருந்து பெருகிவந்து அளித்தது. என்றுமுள்ள தென்தமிழுக்கு கரைகள் வகுக்கப்பட்டன, கால்கள் திருத்தப் பட்டன. நூறாண்டு வாழ்ந்து அகத்தியன் செய்த நூல் 'அகத்தியம்' அது தமிழின் அகத்தைப் புறத்தும் புறத்தை அகத்தும் விரித்து எல்லை யின்மையை அதன் மடிப்புகளுக்குள் அடக்கியது. அகத்தியன் முதல் ஆயிரம் புலவர் அமர்ந்து தமிழ் சொல்லும் பாண்டியன் அவையே மெய்யறிவின் மையமாயிற்று.

ஆயினும் கண்ணெதிரே நீரின் அச்சுறுத்தும் எல்லையின்மை இருந்தபடியே இருந்தது. துயிலும்போது கடல் பொங்கிவரக்கூடும்

என்ற பயந்த தொல்குடிகள், சிலரை மாழ்கிலாது விழித்திருக்கச் செய்தனர். அவர்கள் இரவின் கரிய மறைவெளியில் நீரின் ஏவலர்களென ஆழத்து தெய்வங்கள் வந்து வேவு பார்த்துச் சென்றதைக் கண்டார்கள். காலையில் தெளிந்த மணல் பரப்பில் அறியாத பாதத்தடங்கள் காலையின் மென்மையில் எஞ்சின. அச்சம் அவர்களைத் துயிலிலும் கனவிலும் தொடர்ந்தது. நாவலந்தீவின் காடுகளெங்கும் எண்ணற்ற வடிவங்களில் குடியிருந்த தெய்வங்களின் அன்னையான குமரித்தெய்வம் கடலோரம் தென் திசை நோக்கி ஓங்கி நின்றிருந்த ஒற்றைப்பாறைமலைக்குள் ஒடுங்கியிருப்பதைக் குறுமுனி கண்டு சொன்னான். பாண்டியன் கடுங்கோன் நெடுவழுதியின் ஆணைப்படிப் பல்லாயிரம் சிற்பிகள் அதன்மீது சாரம் கட்டி ஏறி மரம் கொத்திக் கூட்டம்போலக் கொத்தத் தொடங்கினர். மதுரைமீது எப்போதும் பறவைக்கூட்டத்தின் ஒலி போல உளியோசை கேட்டபடியிருந்தது. தலைமுறைகள் பிறந்திறக்க சிலை மெல்ல மெல்லக் கல்திரை நீக்கி வெளிப்பட்டது. இறப்பற்றவனாகக் குறுமுனி அதை வழிநடத்தினான்.

குமரி அன்னையின் உடலே தமிழ்க்குடி என்று வகுத்தான் குறுமுனி. வலதுபாதத்துக்குப் பூசை செய்யும் உரிமை மறக்குடிக்கு அளிக்கப்பட்டது. வலச்சிலம்பு மறவர் குடிமுத்திரை ஆயிற்று. இடது பாதங்களுக்கு வணிகர்கள். இடச்சிலம்பை அவர்கள் குடிப் பெண்டிர் மங்கலச் சொத்தெனக் கொண்டனர். வலதுகால் நீள்விரல் மணி உழவர்களுக்கும் இடதுகால் நீள்விரல்மணி பரதவர்களுக்கும் உரிமையாயிற்று. இடச்சிறுவிரல் மணி மலைவேடர்களுக்கும் வலச்சிறுவிரல் மணி இடையர் குடிகளுக்கும் உரியவை. அன்னையின் பேருடலைத் தாங்குபவர்களாக அக்குடிகள் தங்களை உணர்ந்தன. இளவேனில் மாதத்தில் உழவர்களும் முதுவேனிலில் மறவர்குடியும் கார்காலத்தில் வணிகர்களும் முன்பனிக்காலத்தில் பரதவர்களும் பின்பனியில் காவலர்களும் கூதிர்காலத்தில் பூசகர்களும் அன்னைக்குப் பலியும் பூசையும் கொடுத்து வழிபட்டார்கள். குடி இலச்சினைகளைத் தங்கள் இல்லங்களில் பொறித்து வழிபட்டனர். நகைகளில் முத்தால் பொறித்து உடலுக்குத் துணையாக்கினர்.

விரிந்த கூந்தல் இடைவரை புரள அலைபாயும் ஆடையுடன் பேரன்னை கடல் நோக்கி நின்றாள். அவள் கால்களில் சிலம்பும் இடையில் மேகலையும் மார்பில் மணியாரங்களும் அணிசெய்தன. வலது கையால் அஞ்சேல் தோற்றமும் இடதுகையால் அருளல் தோற்றமும் காட்டி விரிந்த கண்களும் குறுஞ்சிரிப்புமாக அவள்

நின்றாள். அவளது கைகளின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு கடல் தன் நீலத்தை உள்ளொடுக்கித் திரையெறிந்து நின்றது. பாறைகளின் உள்ளே எரிந்த சுடர் ஒன்று கண்டெடுக்கப்பட்டுக் குமரியின் மூக்கில் பதிக்கப்பட்டது. பகலில் அந்தச் செம்மணி ஒரு மலரிதழ்போலத் தெரியும். மாலை சரியும்போது அதன் ஒளி ஏறி ஏறி இரவில் அது செஞ்சுடராக எரியும். மதுரை மக்கள் அதன்பின் அஞ்சவேயில்லை. துயிலில் அவர்கள் கண்ணுக்குள் எரியும் தீவிழிகளின் பார்வை சுடர்ந்து நின்றது. இரவிலும் பகலிலும் அப்பார்வை அவர்கள் தலைக்கு மேல் விண்மீன்போல இருந்துகொண்டே இருந்தது. அப் பார்வையின் எல்லையே தென்னாடு என்றும் அதை மீறிச்செல்லத் தென்னவருக்கு உரிமையில்லை என்றும் கூறப்பட்டது. பெருங் கலம் கொண்டுபோகும் மீயான்கள்கூட அப்பார்வை தெரியும் எல்லைவரை மட்டுமே செல்வது வழக்கம். புயல் சுழன்று வந்தாலும் அப்பார்வை அவர்களை வழிகாட்டி அழைத்து மடிமீது தூக்கிக் கொள்ளும். கன்னியின் ஆட்சியில் வாழ்ந்தது தென்னிலம்.

ஆ

இள்ளிரவின் ஆழத்திலிருந்து ஓர் ஓசை எழுந்து வலுத்து வருவதை விழித்திருந்த மதுரை மக்கள் கேட்டனர். துயின்றவர்களின் கனவுக்குள் கடலாழத்து நகர்வீதியில் அவர்கள் மீன்களுடன் மிதந்து செல்கையில் வானிலுயர்ந்த பெரும்பாறைக்கூட்டங்கள் இடிந்து விழுவதாகத் தெரிந்தது. கேட்டவர்கள் தங்கள் உள்ளிருந்தே அவ்வொலி பெருகிப் பெருகி எழுவதாக உணர்ந்தனர். ஒரு கணத்தில் நிலம் கவிழ்ந்து வானமாவதுபோல அவ்வொலி புறஒலியாக மாறிப் பல்லாயிரம் கோடி மத்தக எடையுடன் பெருநகர் மதில்களை மோதிச் சிதறடித்தது. தென்திசையே கரியநீராக மாறிப் பொங்கிவந்து சில கணங்களுக்குள் மதுரையை விழுங்கி அடிவயிற்றில் அடக்கிக்கொண்டது.

துயின்றவர்கள் கனவுக்குள்ளே விழுந்து ஆழங்களில் விரிந்த மேலும் பெரிய கனவொன்றுக்குள் சென்றார்கள். முடிவடையாத கனவு. எல்லையின்மையின் அழுத்தத்தால் ஒவ்வொரு துளியும் பல்லாயிரம் மடங்கு செறிவாகி விட்டிருந்த கனவு. குமரிக்கோட்டின் அடியில் நீர் எழுச்சி இடிகள் என மோதி அதன் முகடுகளை அதிர்ந்து பிளந்து சரிய வைத்தது. தென்மலையின்மீது நின்ற அன்னையின் காலிருந்த கரியமலை அதிர்ந்து முனகிப் பிளந்து விழுந்தது. அன்னை ஏதோ எண்ணியவள்போல ஒரு கணம் உடல் குலுங்கிப் பின்பு இடப்பக்கம் சரிந்து நீருள் விழுந்தாள். அவள் புன்னகை முகம் கருமைக்குள் இறங்கிச்சென்றது. மதுராபதி அன்னையின் கோயிலுக்குள் நீர் குமிழிகள் வெடிக்க நிறைந்தது. புன்னகை விரிந்த கண்களுடன் அன்னை மீண்டும் இருண்ட அலைவடிவாக தனைச் சூழ்ந்த காலத்தில் அமிழ்ந்தாள்.

குமரிக்கோட்டின் உச்சியில் காவல்மாடங்களில் இருந்த வீரர்களும் வேட்டைக்கு மலையேறியவர்களும் அவ்வொலியை ஊழிமுடிவின் ஒலியெனக் கேட்டனர். அவ்வொலியை ஊழியிறுதிகளுக்கு முன்பே எங்கோ கேட்டதை அப்போது ஒவ்வொருவரும் உணர்ந்தனர். தெற்கே கடலின் கரியவெளியில் ஒரு பெரும்

செந்நெருப்புத்தூண் எழுந்திருந்தது. அதன் தழற்கதிர்கள் கிளை விட்டு விரித்து ஆடின. காற்றில் எரிந்த மண்ணின் கடும் நெடி நிறைந்து மூச்சுத் திணறச் செய்தது. மறுநாள் புலரவேயில்லை. கரிய புகைத்திரையால் வானம் முழுமையாக மூடப்பட்டிருந்தது. ஏழு நாட்கள் எங்கும் கருமையன்றி வேறெதுவும் தென்படவில்லை

புகைத்திரை மெலிந்து வெய்யோன் கதிர்கள் ஊடுருவி வந்த போது அவர்கள் தங்கள் காலடிகள் தொடும் உயரத்துக்கு குமரிக் கடல் எழுந்திருப்பதைக் கண்டு அலறினார்கள். பேரலையை வென்று கட்டுமரத்தில் ஏறிக் குமரிக்கொடுமுடிகளில் தொற்றித் தப்பிய சில பரதவர்கள் தவிர மதுரையிலிருந்து எதுவுமே மீள வில்லை. சிப்பிகளையும் மலைத்தாவரங்களையும் பச்சையாக உண்டு நீரிடைவெளிகளில் நீந்தி மலையுச்சிகளிலிருந்து உச்சி களுக்குப் போய் அவர்கள் வடதிசை நோக்கிச் சென்றனர். பல நாட் களுக்குப் பின்பு மண்ணை அடைந்து குப்புறவிழுந்து அங்கே பெருகியோடிய ஆற்று நீரைப் பசித்த குழந்தை முலைக்காம்பை யென உறிஞ்சுகையில் அவர்களுடைய துயர்கள் அனைத்துமே அகத்தின் ஆழத்து இருளுக்குள் சென்றுவிட்டிருந்தன.

ஆனால் வழித்துணையாக அவர்களுடன் வந்த தமிழ் அவர் களுடன் இருந்தது. ஆயிரமாயிரம் ஆண்டு நினைவுகளும் அகத் தோற்றங்களும் சேர்ந்து பேரழுத்தம் கொண்டு ஒவ்வொரு துளியிலும் பலமடங்கு எடை கூடிய மொழி. ஒவ்வொரு சிற்றயரை யும் குமரிமலையின் நெஞ்சுடையும் பெருந்துயராக மாற்றியது. ஒவ்வொரு சிறு மகிழ்வையும் குமரிக்காடுகளை மெல்லிறகு வெளியாக மாற்றும் கொண்டாட்டமாக்கியது. அதன் சொற்களின் ஆழங்களை அவர்கள் அறியவில்லை. ஏனெனில் அவர்களில் எவருமே கற்றவர்களாக இருக்கவில்லை. மணிக் கற்களை எறிந்து விளையாடும் குரங்குக்குட்டிகள்போல அச்சொற்களைப் பயன்படுத் தினர். ஆனால் அந்த எளிமையே அவர்களைக் காப்பாற்றியது. களங்கமில்லாக் குழந்தைகள்போல மீண்டும் குமரிக் காட்டின் மடியில் வாழ அவர்களால் முடிந்தது.

பயன்படுத்தாத சொற்களையெல்லாம் அவர்கள் மெல்ல மெல்ல மறந்தனர். சிலநூறு அடிப்படைச் சொற்களுக்குள் அடங்கும் எளிய நீரோடையாக மாறியது தமிழ். காடு எப்போதும் புதுத் தளிர் களுடன் அவர்களுக்காகக் காத்து நின்றது. ஆனால் நோய்க் கனவிலும், சன்னத வெறியிலும் அதன் ஆழங்கள் கலங்கி மேலெழு நிலத்தடிச் சுனைகள்போலச் சொற்கள் பீரிட்டுப் பெருகி வந்தன. அவை கதைகளையும் ஓவியங்களையும் அவர்களுக்கு அளித்தன.

குவிந்த கல்வடிவில் முக்கண் முதல்வன். ஒற்றைப்பாதத் தடமாக குமரி. ஓங்கார ஒலியாகத் தொல் மந்தணச் சொற்கள். பலநூறு வருடம் கழித்து வெறியாடிய பெண்ணொருத்தியின் சொற்கள் வழியாக அகத்தியன் மீண்டெழுந்து வந்தான். அவனது நூறு மாணாக்கர்களின் பெயர்கள் வரிசையாக வெளிவந்தன. அப்பெண் சொல்லச் சொல்ல பேரகத்திய நூலின் நூறு பாடல்களைக் குலப் பாடகன் ஒருவன் ஏதும் புரியாமலேயே உளப்பதிவு செய்து கொண்டான். அவற்றைச் சடங்குகளின்போது மாண்டவர்களுக்கு கடன்செய்யும் நுண்சொல்லாகக் கொண்டனர்.

தங்கள் மொழியை அவர்கள் அஞ்சினார்கள். அது தங்களை அறியாத ஆழங்களுடன் இணைக்கும் மாயச்சரடு என்று அவர்கள் அகம் அறிந்திருந்தது. எப்போதாவது தாங்கள் புழங்கும் சொல் லொன்றின் திறப்புப் பொறிமீது உள்ளம் தட்டுப்பட நேர்ந்தவர்கள் அவ்வாயில் மேலும் எண்ணற்ற வாயில்களை மட்டுமே காட்டுவதைக் கண்டார்கள். நில மையம் நோக்கிச் செல்லும் பிளவு போல அது திறந்து கொண்டது. அங்கே மூழ்கிய பெருநகரங்கள் கடற்தாவரங்கள் மூடிக் கிடந்தன. மறைந்த ஓராயிரம் குடிகளின் கோடானுகோடி மூதாதையரின் கண்கள் மீன்களாக இமை இறகசைத்து மிதந்தலைந்தன. சென்ற காலங்களை ஆண்ட தெய்வங்கள் அமைதிமிக்க மலைமுகடுகள்போல மூழ்கிக் கிடந்தன. அவர்கள் திரும்பிவந்தபோது கண்ணில்பட்ட அனைத்துமே நகையுளவாக்கின. அவர்கள் பிறருக்கு நகைவடிவானார்கள். அறிவு போன வழியே செல்பவர்களாகி அறிவர்கள் என்று பெயர் கொண்டார்கள்.

நூற்றாண்டுகள் கழித்து மொழியின் விதைகள் முளைத்து அனைத்தும் மீண்டும் வளர்ந்தெழுந்தன. புதிய பெருங்குடிகள், புதிய ஊர்கள், நகரங்கள். அதன் நடுப்புள்ளியாக மீண்டும் அம்மா நகர். அதனருகே குமரிக்கோட்டின் ஆயிரம் பாறையிடுக்குகள் வழியாக சொட்டி இணைந்து வருவதனால் பஃறுளி என்று பெயர் பெற்ற ஆறு ஓடியது. அகத்தியனின் மெய்யறிவைத் தவம்மூலம் சென்று தொட்ட நற்றத்தன் என்ற மாணவன் அந்நகரை வடிவமைத் தான். அது இம்முறை கடலோரம் அமைக்கப்படவில்லை. குமரிக் கோட்டின் அருகே மேட்டுநிலம் ஒன்றின்மீது எழுப்பப்பட்டது. தன் ஆழ்நிறைக் கனவொன்றில் நீர்வெளிக்குள் கண்ட இருநிறப் பெண்தெய்வச்சிலையொன்றை நற்றத்தன் அந்நகர் வாயிலில் நிறுவினான். அதைத் தன் பாடல்எழுச்சியில் தொட்டறிந்த கவிஞன் ஒருவன் மதுராபதியன்னை என்று பெயரிட்டழைத்தான்.

நற்றத்தன் அமைத்த அப்பெருநகரம் வடக்கு நோக்கி வாயில் திறந்து தென்திசையைத் தடித்த பெரும்சுவர்களால் முற்றாக மூடிக் கொண்டிருந்தது. அந்நகரின் அனைத்து மக்களும் ஒரேசமயம் வெளியேறக் கூடியதாக அதன் முகவாயில் அமைக்கப்பட்டது. ஏழு வருடம் ஏழாயிரம் கற்றச்சர்கள் கூடிச் செதுக்கிய அந்தப் பெரு வாயிலின் அருகே எக்கணமும் பயணம் கொள்ள அணியமாகச் சகடங்கள் நின்றிருந்தன. கோட்டைமீது படகுகள் நிறுத்தப் பட்டிருந்தன. அவ்வாயில் காரணமாக அந்நகரம் பெருவாயிலூர் என்றழைக்கப்பட்டது. திசைவணிகர்கள் கபாடபுரம் என்றார்கள். பிறகு வந்த வடபுலக் கவிஞர்கள் துவாரகை என்றனர்.

ᘓ

பெருவாயிற்புரத்தின்மீது தலையெடுத்து நின்ற குமரி முகடு ஒன்றின் உச்சியில் கன்னி பாதத்தடம் ஒன்றை கொடுமுடித் தனிமையில் வாழ்ந்த அறிவன் ஒருவன் கண்டு சொன்னான். அங்கே அன்னையின் சிறுகற்சிலை ஒன்று அமைக்கப்பட்டது. தெற்கு நோக்கிக் குமிண்சிரிப்புடன் அன்னை நின்றாள். அவள் சிலையை வடித்த சிற்பி தன் கொடுங்கனவொன்றில் நீரின் கரிய ஆழத்தில் பேருருவ அன்னைச்சிலை ஒன்று மென்சிரிப்பு முகிழ்த்த உதடு களுடன் கண்மூடித் துயில்வதைக் கண்டான்.

தோரண வாயிலுக்குள் புகுந்து மதுராபதி அன்னையை வணங்கி மறுபக்கம் செல்லும் செந்நிறப்பாதை கிளைகளாகப் பிரிந்து பிரிந்து வலையெனப் பரவிக் கபாடபுரத்தை நிரப்பியது. நகர் நடுவே பாண்டியனின் வெண்சுதை மாடத்தின்மீது மீன்கொடி துவண்டது. வலப்பக்கம் அவன் தொல்குலத்தெய்வமான மீன்விழி அன்னையின் கருங்கல் கோவில். இடப்பக்கம் மேரு வடிவில் முக்கண்முதல்வனின் ஆலயம். வலப்பக்கம் கடல் வண்ண மேனி கொண்ட நெடுமாலின் ஆலயம். அப்பால் விரியும் அரசவீதியில் ஆட்சிப்பூதத்தின் நிழலில் ஆட்சிக்குடியும் பெருவாணிப வீதியில் வணிகர் பெருங்குடிகளும் வாழ்ந்தனர். கடைவீதிகளில் அகிலும் சந்தனமும் முத்தும் பவளமும் குவிந்து கிடந்தன. கூலவணிகர் தெருக்களில் நெற்குவைகள்மீது பறவைகளின் சிறகுகள் படபடத்தன. இடப்பக்கம் விரிந்த வீதியில் மறவர் குடிகளும் பெருநிலக்கிழார்களும் வாழ்ந்தனர். செதுக்கியெடுத்த கருங்கல் பாளங்கள் பதிக்கப்பட்ட சாலைகளில் சகடங்கள் ஓடின. பட்டுத் திரை நெளியச் சிவிகைகள் மனிதத்தோள்கள்மீது மிதந்து சென்றன. கடைவீதிகளில் பெருநிலத்தின் நாகர்களும் மலைநாடர்களும் தங்கள் எடை மிக்க மொழியைப் பேசி நடமாடினார்கள். வடக்கே குளிர்ந்த நாடுகளிலிருந்து செந்நிற வணிகர்கள் முத்தும் வலம்புரிச் சங்கும் கொள்ளப் பொற்கட்டிகளுடன் வந்தனர்.

வணிகர்கள் அன்றிப் பிற பெருவாயிற்புர மக்கள் இடம் பெயர்வதில்லை. ஆனால் பெருநிலச் செய்திகள் அவர்களிடம் வந்த படியே இருந்தன. வடபுலத்தை வெற்றிகொண்டு மலைமக்களை அழித்துக் கொண்டிருக்கும் காட்டுத்தீ போன்ற மக்களைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்டார்கள். அவர்கள் ஓயாத போர் வெறி கொண்டவர்கள். நெருப்புக் கதிர்போலப் பிடரியும் வாலும் பறக்க முன்பாய்ந்து செல்லும் குதிரைகளில் பயணம் செய்பவர்கள். வான்மின்னல் போன்ற வெள்ளி ஆயுதம் ஏந்தி யானைமீது ஏறி அவர்களை வழிநடத்தும் தலைவன் பெயர் இந்திரன். இந்திரர்களின் குடிநிரை இருநூறு தலைமுறைக்குப் பின்பு ஏராளமான மன்னர் குடிகளாகப் பிரிந்து பரவியது. நாகர்களை அவர்கள் வென்று அழித்தார்கள். வெல்லப்பட்டவர்களைத் தங்களுக்குள் சேர்த்துக் கொள்வதனால் அவர்கள் இனம் பல்கிப் பெருகிக்கொண்டே இருந்தது. அவர்களை வென்ற இடவாகைக் குடி மன்னன் இராவண்ணன் தன் குடியின் போர் வழக்கப்படி அம்மக்களின் அரசி சீதையைச் சிறையெடுத்த ஞான்று நடந்த பெரும்போர் குறித்துக் கேட்டபோது தென்நிலமக்கள் சினமும் அருவருப்பும் கொண்டார் கள். குடிகளை முழுக்க அழிக்கும் போர்களை அவர்கள் அறிந்திருக்க வேயில்லை. அதைவிட குரு குலத்து மன்னர்கள் தங்கள் சொந்தக் குடியையே போரில் அழித்துக்கொண்ட கதை அவர்களை அதிரச் செய்தது. நெறியின்மை ஓர் உதிரயாளிபோலக் காடதிர நடந் தலையும் ஒரு நிலப்பரப்பு அவர்கள் கண்ணில் விரிந்தது.

பெருவாயிற்புரம் வணிகத்தால் வளர்ந்து விரிந்தது. கடலே அவர்களின் களஞ்சியம். உமணர் உப்புக்கு நெல் பெற்று நகருக்கு உணவூட்டினர். முத்தும் பவளமும் மீனும் சங்கும் அள்ளிவந்த பரதவர்களிடமிருந்து அவற்றைப் பெற்று வடதிசை வணிகர்களுக்கு அளித்தனர். அவர்கள் வாழ்ந்த ஊர் விரிந்து உவரிப்பட்டன மாகியது. பெண்களின் மேனிகளில் சிப்பிகளின் மென்மை குடி யேறியது. குழந்தைகளின் கண்களில் முத்துக்களின் ஒளி. குடித் தலைவர் குரல்களில் அலைகளின் முழக்கம் ஒலித்தது. அவர்களைத் தேடி மக்கள் குமரி மலையிறங்கி வந்தபடியே இருந்தனர். வடக்கே அத்தினபுரியில் அவர்கள் விற்ற முத்தும் பவளமுமே நிரம்பி யிருந்தன. அவர்களுடைய கவிஞர்கள் முத்தும் பவளமும் கொண்டு கட்டப்பட்ட மாயபுரி என்று அந்நகரை தங்கள் புராணங்களில் குறிப் பிட்டனர். கடற்செல்வம் அந்த மாபெரும் வாயில் வழியாகத்தான் நகருக்குள் குவிவதாக நம்பினார்கள். ஆகவே கடலோர நகரங்களி லெல்லாம் பெரிய தோரண வாயில்கள் அமைக்கப்பட்டன.

வடக்கே கடற்கரையில் மேய்ச்சல் வளம் பெருகி வலிமை கொண்டு உருவான ஆயர் அரசு ஒன்றின் இளைய மன்னன் கபாட புரம் என்ற பேரிலேயே ஒரு நகரை உருவாக்கியதாக அவர்கள் அறிந்தனர். அவன் நிறம் கருமை என்று அறிந்த மக்கள் அவனுக்கு எருமை விழியளவு பெரிய கருமுத்து ஒன்றைப் பரிசாக அளித்தனர். அவனுடைய மணிமுடியில் அது வீற்றிருப்பதாக அறிந்து அவனைக் கண்ணன் என்று சொல்லித் தங்களவனாக எண்ணிக் கொண்டனர். அவனையும் வெண்ணிறம் கொண்ட அவன் தமையனையும் குறித்த கதைகள் வணிகரின் வாய்வழிச் செய்திகளாக வந்தன. அவனுடைய குழல்திறம் குறித்தும் தன் இளமையில் இடைச்சியர் சூழ அவன் ஆடிய காதல் குறித்தும் இடையர்குடிக் கவிஞர்கள் பாடிய பாடல் களை அங்காடிகளில் வடவணிகர் பாட அவற்றைத் தென்புலப் பாணர் தமிழில் பாடினர். அவனைக் காணாமலேயே தென்நில மக்கள் அவனை விரும்பினர். ஆயர்கள் தங்கள் குடியின் முத்து என எண்ணி அவனை வழிபட்டனர்.

வெண்வலம்புரி முழங்க மீண்டும் ஒரு தமிழ்ச்சங்கம் பெருவாயிற்புரத்தில் பிறந்தது. சான்றோர் அவை கூடி அகத்தியத்தின் நூறு பாடல்களின் சொற்களை ஆராய்ந்து பகுத் தெடுத்தனர். ஆயிரம் ஆண்டுகள் உலர்ந்திருந்த விதைநெல் நீர் பெற்றதும் முளைப்பதுபோல அகத்தியத்தின் சொற்கள் பெருகின. குமரிமலையடுக்கத்துக்கு வடக்கே நாகர் நிலத்திலிருந்து வந்த அதங்கோட்டாசானும் நெல்வேலியின் பனை மண்டிய சிற்றூரில் பிறந்த பனம்பாரனும் வேளிர்நிலத்துச் சான்றோன் கழாரம்பனும் தொடங்கி ஆயிரம் புலவர் கூடித் தமிழ் வகுத்தனர். அகத்தியனின் உருவாக மேடை மேலமர்ந்த நீர் நிறைந்த செப்புக் குடம் பேராசிரி யனாகியது. அதன் முன் பணிந்து அந்த ஆயிரம் புலவர்களும் அகத்தியனுக்கு மாணாக்கராயினர். அகத்திய மெய்யறிவை சங்கத்தின் முதல் புலவன் குமுதகன் பெருநூலாக்கினான். அதன் இலக்கணப்படி ஆறாயிரம் நூல்களை ஆராய்ந்து ஆயிரம் நூல் களைச் சங்க நூல்களாகத் தேர்ந்தான். அவற்றைக் கற்க மாணவர் கூடும் சாலைகள் கபாடபுரத்தில் அமைந்தன.

நாகர் நிலத்திலிருந்தும், நெல்வேலியிலிருந்தும் அப்பால் சோழ நிலத்திலிருந்தும் மாணாக்கர் தமிழ் தேடிப் பெருவாயிற்புரம் வந்தனர். கபாடபுரத்திலிருந்து தமிழ் பெருநிலமெங்கும் பரவியது. வடக்கே காடுகளுக்குள் வாழ்ந்த குடிகளின் முதிரா மொழிகள்கூட தமிழை, அன்னையைச் சேய்கள் என அடையாளம் கண்டன. பேராற்றில் சிற்றோடைகள்போல இணைந்து கொண்டன.

குமுதகன் புகழ் காற்றிலேறிச் சென்று நாவலந்தீவை நிறைத்தது. வடநில மக்கள் அவன் பெயரைத் தங்கள் மொழிப்படுத்தி திருணதூமாக்கினி என்றனர். அவன் சொற்கள் அவர்கள் மொழியில் மந்திரங்களாயின. வடக்கே மேய்ச்சல் வெளிகளிலும் காவிரியாறு பரவிய நெற்சதுப்புகளிலும் உருவாகி வந்த புதிய குடிகள் தொல்நூல் யாத்த அவனை தொல்காப்பியன் என்றன. அவனது நூல் தொல்காப்பியம் எனப்பட்டது.

பெருவாயிற்புரம் எல்லைகளை விரித்தபடியே இருந்தது. வாளேந்திய மறவர்கள் மலைமடிப்புகளை ஏறிக் கடந்து மலைக் குடிகளை அடக்கித் திறை கொண்டனர். பாண்டியனின் வட எல்லை மலைகளுக்கு அப்பால் எப்போதும் மழைபெய்யும் கொடுமுடி களில் பிறந்து செந்நீர் சுழித்தோடும் பேராறொன்றின் கரைவரை விரிந்தது. அதைச் செம்பெருநீர் என்றனர். பேச்சில் அது செம் பொருநை என்றாயிற்று. அதன் கரையில் தங்கி ஓய்வெடுக்கும் வடபுல வணிகர் அதை தாமிரவருணி என்றனர். ஆற்றங்கரையில் பாண்டியனின் பெரிய கோட்டை எழுந்தது. அதனருகே காவல் வீரர் குடியிருப்புகள் உருவாயின. அங்கே கீழ்த்திசை உழவர்களிடமிருந்து வந்த நெல்வண்டிகள் நிறுத்தப்பட்டு வரி கொள்ளப்பட்டது. அங்கு உருவான ஊர் நெல்வேலி என்று பெயர் கொண்டது. பாண்டிய மன்னன் தன் குடிப்பெண்டுடன் வந்து அங்கே நுதல்விழி அண்ண லுக்கு ஓர் ஆலயம் நிறுவினான்.

மீன் கொள்ளச் சென்ற பரதவர் கடல் உறுமுவதாக வந்து சொன்னார்கள். நிமித்திகர் வரைந்த பன்னிருதளத் திகிரியில் தென் திசையில் இருள் பரவும் குறி தெரிந்தது. நாளும் கோளும் தெரிந்த சான்றோர் சொல்லிழந்து பெருமூச்செறிந்தனர். ஆனால் கபாட புரம் எதையுமே உள்வாங்க முடியாத உயர்விரைவுச் சுழற்சியில் இருந்தது. அதன் ஒவ்வொரு கூறும் ஒன்றையொன்று வெல்லத் துடித்தன. உமணர் வணிகர்களுடன் போட்டியிட்டனர். வணிகர் களும் மறவர்களும் முரண்பட்டனர். செல்வம் கொழித்துச் சுழித்து இன்பமாக மாறிக்கொண்டிருந்தது. நகரம் ஒரு கணமேனும் நின்று தன்னை பார்த்துக்கொள்ள வல்லதாக இல்லை. ஒருகணம் நின்றால் கூட தன் உச்சவிரைவால் அது சிதறித் தெறித்துவிடுமென்று தோன்றியது. அதன் தோரணவாயிலின் பெரும் கதவுகள் மண்ணில் புதைந்துவிட்டிருந்தன. படகுகள் கற்கோவில்களாக மாறிவிட்டிருந் தன. சகடங்கள் கருங்கல் தளங்கள் கொண்டிருந்தன. ஒரு நாள் பரதவர் வலையில் அறியாப் பேருயிர் ஒன்று சிக்கியது. பலவித மான கால்களைப் பரப்பியபடி செத்த விழிகளால் அது நகரைப்

பார்த்தது. ஏதோ பேருருவ மொழி ஒன்றின் புதிரான சொல்போல அது கிடந்தது. அது ஓர் இறுதி எச்சரிக்கை என்றனர் நிமித்திகர்.

பெருவாயிற்புரத்திலிருந்து அதன் குடிகள் படிப்படியாக இடம் பெயரத் தொடங்கினர். முதலில் ஏழு வணிகர் குடிகள் மரக்கலம் ஏறிப் பாய்விரித்து தாங்கள் ஏற்கனவே அறிந்த கிழக்குக் கடற்கரை நிலங்களுக்குச் சென்றனர். அங்கே காவிரிக்கரைச் சதுப்பில் நெல்வயல்கள் உருவாகிக் கொண்டிருந்தன. வேளிர்குடிகள் இணைந்து அங்கே கோழிநாடு என்று புதிய அரசு உருவாயிற்று. அவர்கள் மன்னன் கோழியோன் சொல்வழங்கிச் சோழியன் எனப் பட்டான். அங்கே கடல்கொண்ட நகர் காகந்தியின் மீதெழுந்த அலைகளின் விளிம்பில் செந்நெல் கொள்ள வந்த மரக்கலங்கள் அணையும் துறைமுகம் ஒன்று பெருகி விரிந்து நகரமாகிக் கொண்டிருந்தது. பரதவர் வாழும் சிற்றூராக இருந்த பூம்புனற்கரை மரக்கல வணிகர் மொழியில் பூம்புகார் என்று அழைக்கப்பட்டது.

பெருவாயிற்புரத்து வேளாண் குடிகள் குமரிமலை ஏறி மறுபக்கம் நாகர் நிலத்தில் பஃறுளியின் கரையில் குடியேறி மண் திருத்தி வயல் கண்டன. ஆழச்சேறு நிரம்பிய அம்மண்ணில் எருமைகள் இழுக்கும் நீளம் மிகுந்த உழுகலம் உருவாகிவந்தது. அக்கலப்பையாலேயே அது நாஞ்சில்நாடு என்றழைக்கப்பட்டது.

பெருவாயில்புரத்தின் உயர்ந்த மதில்களை அலைகள் விழுங்கி, எண்குடிகளும் இடம் பெயர்ந்தபின் பாண்டியன் குடியும் நகர் நீங்கத் தலைப்பட்டது. பாண்டியனின் கனவில் வந்த மீன்விழி அன்னை வடக்கே புதுநகரொன்று சமைத்து அங்கே தனக்கு ஆலயம் அமைக்கும்படிச் சொன்னாள். மத்தகம் உயர்ந்த மதயானைமீது மதுராபதியன்னையின் சிறு கற்சிலையை ஏற்றிக் கொண்டு மன்னர் குடி நெல்வேலி தாண்டிப் பெரும் பாலை நிலங்களைக் கடந்து சென்றது. இனி அலையோசையே கேட்கலாகாது என்று அவர்கள் எண்ணினார்கள். வடதிசையில் வெயிலில் கொதித்துக் கிடந்த மண் வழியாகச் சென்ற பேராறு ஒன்றின் கரையில் தங்கினர். எப்போதும் வெம்மைகொண்ட நீர் ஓடும் அவ்வாற்றை வெய்யை என்றழைத்தனர். அவ்வாற்றங்கரையில் மதுராபதியன்னையை கீழ்த்திசை நோக்கியமைத்த கற்பீடம்மீது பதித்து மதுரையை நாட்டினர். மதுரை வேர்விட்டுக் கிளைபரப்பி வளர்ந்து பெருநகராயிற்று. அதன் நடுவே மீன்விழியன்னையும் நுதல்விழி அப்பனும் குடிகொள்ளும் ஆலயம் எழுந்தது.

பெருவாயிற்புரமும் அலைகளால் அழிந்தது. அலைகள் எல்லை மீறி வருவதை எதிர்பார்த்து ஒழிந்த தெருக்களுடனும்

பொடி படிந்த மாடங்களுடனும் அந்நகரம் காத்து நின்றது. நகரை இரை விழுங்கும் மலைப்பாம்புபோலக் கடல் மெல்லமெல்ல விழுங்கி நொறுக்கி உண்டது. ஆழிவண்ணனையும் அனல் வண்ணனையும் ஆழங்களில் வாழும் அவர்களின் பேரன்னை புன்னகை விரிந்த இதழ்களுடன் அள்ளி மார்போடணைத்துக் கொண்டாள். நீர் பொங்கிக் குமரிமலை முகடுகள் மறைந்தன. அலையடிக்கையில் அப்பகுதியில் எழும் மெல்லிய சுழி வளையங்களே அங்கே ஒரு பெருநகர் இருந்தது என்று சொல்லின. ஆழ்கடல் மீனவர்கள் அங்கே செல்கையில் நீளமிலாக் கயிறு இறக்கி ஆழத்து மாடமுகடுகளில் கட்டி தோணிகளை நிலைக்கச்செய்து சுறாமீன் வேட்டையாடுதல் வழக்கமாயிற்று. கைகளுக்குப் பதில் சிறகுகள் கொண்ட பொன்னிற மீன்மாந்தர் நீருள் வாழும் மாயநகர் அது என்று அவர்கள் மொழியில் முதுபரதவர் கதைகள் சொன்னார்கள். முழு நிலவெழும் நாட்களில் நீரின் பளிங்குப் பெருங்கதவுகள் விரியத் திறக்க அந்நகரம் வெளிப்படுமென்றும், அதன் படிகளில் இறங்கிச் சென்று நீலமணிக்கற்களால் கட்டப்பட்ட அந்த விந்தை நகரின் தெருக்களில் அலைய இயலும் என்றும் கதை கேட்டு துயிலா விழி திறந்து கிடந்த பரதவக் குழந்தைகள் சிறு நெஞ்சு விம்ம பெருமூச்சு விட்டன.

நூற்றாண்டுகளுக்குப் பின்பு கடலில் மீன் பிடிக்கச்சென்ற பரதவர் சிலர் உடைந்த கட்டுமரத்துடன் அவர்கள் ஒதுங்கிய கடற்பாறை ஒன்றின்மீது கன்னியின் ஒற்றைப்பாதத் தடத்தைக் கண்டனர். செய்தி கேட்டுத் தன் எண்படைகளுடன் பாண்டியன் வந்தான். நீரில் மூழ்கி அப்பாறையருகே ஆழத்திலிருந்து அன்னையின் கற்சிலையைக் கண்டெடுத்தனர். இனிக் கடல் எல்லை மீறாதென்றும் அன்னையின் பாதமே அதன் வேலி என்றும் நிமித்திகன் சொன்னான். அன்னைக்குக் கடல் முனையில் ஆலயம் ஒன்றை அமைத்தான் நிலம்திருவென்ற பாண்டியன். நீலவெளிக்கரையில் சிற்றாடை உடுத்து மாணிக்க மூக்குத்தி ஒளி சுடர கனிவு கொண்ட விழிகளுடன் அன்னை நின்றாள். ஊழிகள் தோறும் பொங்கிய பெருஞ்சினம் தணிந்து குளிர்ந்த அலைகள் அவளுக்கு வாழ்த்துப் பாடின.

ஓ

மேற்கே அடர்ந்திருந்த பெருங்கானகம் முலை கனிந்து சுரந்த நீர் காட்டின் தாவர இருளுக்குள் நூற்றாண்டுகளாக ஓடிக் கொண்டிருந்தது. அதை வானம் பார்த்ததே இல்லை. வேர்நுனிகள் மட்டுமே அதன் தண்மையையும் சுவையும் அறிந்திருந்தன. மேற்கு மலையுச்சியில் ஏறி நின்று பார்க்கையில் கானகப் பசுமையின் நடுவே ஒரு பசும் வரி என அது தெரிந்ததனால் பாடல்களில் அது கான்வரி என்று பெயர் கொண்டது. சொல்லுக்குள் ஓடும் மறை பொருள்போல அது காட்டுக்குள் சென்றது. அருந்தவம் செய்யும் படிவர் மட்டுமே அதைக் காண முடிந்தது.

அன்னம் என்ற தெய்வம் நெல்மணி வடிவில் அவர்களிடம் வந்த பிறகு அதற்குரிய நிலம் தேடி மலைக்குடிகள் மெல்லக் காட்டி லிருந்து பரவி வெளிநிலங்களில் வாழத் தலைப்பட்டனர். மழை நிரப்பிய நீர்நிலைகளுக்கு அருகே அவர்கள் நிலங்களும் ஊர்களும் அமைந்தன. அன்னமிடும் அந்தத் தெய்வத்தை அன்னை என்றனர். அன்னத்தால் அமைந்த ஊர்களில் குறவர் பெருங்குலங்கள் பெருகின. அவர்களில் தலைமைக்குடி தங்கள் குடிச்சின்னமாகிய கோழியையே கொடியாக்கி ஆளத் தலைப்பட்டது. அவர்களின் தலைநகராக மலைக்கொற்றம் அமைந்தது. அப்பால் நாகத்தை வழிபடும் நாகர்களின் நாகநாடும் அதன் தலைநகரமாக நாக நகரியும் இருந்தன. இரு பெருங்குடிகளும் போரிட்டும் கூடியும் வாழ்ந்தனர். மலைக்கொற்றம் நாகநாட்டுக்களித்த பொருட்களை அவர்கள் பெரும்புணைகளில் ஏற்றிக் கடலுக்குள் வந்து நின்ற யவனர் கலங்களுக்கு அளித்தனர். செல்வம் வந்து சேரும்தோறும் நகரங்கள் விரிந்தன.

பின்பு தலைமுறைகள் கழித்தும்கூட பாடல்கள் கண்ணீருடன் மட்டுமே குறிப்பிடும் பெரும் பஞ்சம் ஒன்று வந்தது. அவர்கள் வயல்களை வெடித்துத் திறந்தபடி அன்னைத் தெய்வம் விண்ணுக்கு மீண்டது. வெளுத்து எரிந்த வானை நோக்கி மக்கள் தவம் செய்தனர். இறந்த கன்றுகளையும் மண்ணுக்குள் புதைந்திருந்த கிழங்கு

களையும் உண்டு உயிரை அணையாது காத்துக் கொண்டார்கள். மழைத்தெய்வம் இரங்கவில்லை என்று கண்ட இரு குடிகளின் மூத்தோர் குழு ஒன்று காடுகளைக் கடந்து மலை ஏறிச்சென்று காட்டின் அகத்தில் வாழும் குறுமுனியைக் கண்டது. அவன் என்றோ அழிந்துபோன குற்றுடல் குடி ஒன்றிலிருந்து இறப்பை வென்று எஞ்சியிருந்த முதியவன். குடமலையின் உச்சியில் ஒரு குகையில் குளிகைகளை உண்டு சொல்லும் செயலும் அணைந்து மலைத்தெய்வம்போல வாழ்ந்துவந்தான். அவனைக் கண்டு தாள் பணிந்து கண்ணீருடன் மன்றாடினர்.

குறுமுனி உளம் கனிந்தான். தன் கமண்டல நீரைத் தரைப் புழுதியில் கொட்டினான். அதை விரலால் வரைந்து திசைமாற்றி அவர்களில் மூத்தவனை நோக்கி புன்னகைத்தான். அம்முதியவன் குறுமுனியின் கால்களில் விழுந்து வணங்கி அவன் பாதத் தூளை எடுத்துத் தலையிலணிந்தான். கான்வரி ஓடும் திசைக்கு நடுவே நின்ற பெரும்பாறை ஒன்று உடைத்து அகற்றப்பட்டது. ஆறு வெகுண்ட நாகம்போல உடல் சுழற்றித் திரும்பிச் சீறித் தென் மண்ணில் பாய்ந்தது. நெடுங்கால வெம்மை தணிந்து நிலம் பெரு மூச்சு விட்டது. பாறைகளில் நுரைத்தும் செம்மண்ணில் சிவந்தும் கருமண்ணில் கறுத்தும் நீர் கடலை அடைந்தது. அதன் கரைகளில் வயல்வெளிகளில் நீர் நிரம்பியபோது வானம் இறங்கி ஒளிவிட்டது. அந்நிலத்தில் அன்னம் பிறகெப்போதுமே குறைந்ததில்லை. மலைக்கொற்ற நகரைத் தழுவிச் சென்றது கான்விரி. குறுமுனியின் கமண்டலத்தையே தெய்வமாக்கி மலைக்கொற்ற நகர் நடுவே ஓர் ஆலயமெழுந்தது. குடவூர் என்று மலைக்கொற்றம் கவிச்சொல் கொண்டது. அது கோழியோன் குடியின் முதல் தலைநகரமாயிற்று.

கான்வரியே அவர்கள் குலக்கொடி என்றன பழம்பாடல்கள். பேராற்றின் கனிவு ஐந்து விரல்கள் விரித்து அள்ளிக் கொடையளித்த மண்ணில் அன்னமே அரசாண்டது. அது மூவகை அறங்களாகியது. ஐவகை உணர்வுகளாகியது. குடிகள் செழித்தோங்கும் ஊர்களா கியது. அதன் புனல் சென்று கடலில் இறங்கிய இடத்தில் பூம்புனல் கரை என்ற நகர் முளைத்து வந்தது. கோழியோன் குடி மற்ற குடி களைத் தன் கைகால்களாகக் கொண்டு செழித்தோங்கி அதன் தலைமை கொண்டது. கோழிய வளநாடு தென்னாட்டுக்கே சோறூட்டியது. மருவி சோழிய நாடு என்றானது. சோழம் என்றால் உணவு என்றும் தொல்மொழியில் பொருள் செறிந்தது.

காவிரி கடலைப் புணரும் நுனியில் இருந்தது புகார். ஆற்றின் நடை தளர்ந்து சிற்றலைகள் பூக்கும் விரிநிலமாக மாறிய இடம். இளநீலத்தில் கருநீலம் கலந்தபடியே நெளியும் எல்லைக் கோட்டுக்கு அப்பால் கடல் கொந்தளித்தது. ஆற்றின் இரு கரைகளிலும் நாணல்புதர்களும் குட்டைமரங்களும் அடர்ந்த சதுப்புக் காடுகள். மரிமான்கள் சேற்றுப்படுகையின் அலைவடிவங்கள்மீது குளம்புத்தடம் புதைய நடந்து, நீரோட்டத்தில் சுறாமுதுகுகள் போலெழுந்த சேற்றுமேடுகள் மீதேறி காதுகள் அடித்து உடல் சிலிர்த்து, தழை கடித்தன. மிதக்கும் கட்டைகள்போல முதலைகள் நீர் நலுங்காமல் நீந்திவந்து விண்ணில் வகுக்கப்பட்ட அந்தக் கணத்தில் மான்கால்களைக் கவ்வி நீர் தெறிக்க வால்சுழற்றி அலை கிளப்பி உள்ளே அழுந்திக் கொண்டன. மானினங்கள் பிறந்து பிறந்து முதலையினங்களுக்கு உணவாக ஆக ஆறு விரிநிலத்தின் உப்புகளோடு பெருகி வந்தபடியே இருந்தது.

சேறு படிந்து விரிந்த அழிமுகத்தில் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன பரதவர் ஊர்கள். பேராமை ஓடுகள் போல கூரை கவிழ்ந்த சிறுகுரம்பைகளில் சிப்பி அகல்களில் சுறாநெய் விளக்குகள் சுடர்ந்தன. மரப்பட்டை நாரில் பின்னப்பட்ட வலைகள் உலரும் பந்தல்களுக்கு அருகே முதுபரதவர் கடலை நோக்கி அமர்ந்து வலைச் சிடுக்கு எடுத்தும் தூண்டில் மாட்டியும் பேசிக் கொண்டிருந்தனர். வெயில் பொறிபறந்த மணல்மீது காயும் மீன்களின் ஊன்நெடி. கண்டல் மென்மரங்களைப் பிணைத்துச் செய்யப்பட்ட கட்டு மரங்கள் கடலின் மீது எழுந்து விழுந்தன. ஏழு பரதவர் ஊர்களைச் சேர்த்து ஆண்ட பரதவர் குடித்தலைவன் கடல்சேர்ப்பன் என்றழைக்கப்பட்டான். பரதவர்குடிக் கதைகளின்படி அவர்களில் மூத்தவன் பெயர் கந்தன். அவன் பெயரால் அப்பகுதி காகந்தி என்றழைக்கப் பட்டது.

காகந்தர் பேசிய மொழியில் தமிழ் பேசிய கரைமக்கள் அறியாத சொற்கள் மண்டிக்கிடந்தன. அச்சொற்களை காகந்தரும்

அறியவில்லை. அவர்கள் அறியாது வாய் அதைப் பேசியது. சிப்பி களையும் முத்துகளையும் அளிக்கும் கடலாழமே சொற்களையும் தங்களுக்கு அளிப்பதாக பரதவர் சொல்வதுண்டு. கடலின் இருண்ட ஆழத்துக்குள் சொற்களைப் பிறப்பிக்கும் அவர்கள் குடித்தெய்வம் வாழ்கிறது. அதை அவர்கள் கன்னி என்றனர். கரை நிலத்தில் நாணயமாக சிப்பிகளும் முத்துக்களும் பவளமுமே இருந்தன. அவர் களிடம் இருந்த ஒவ்வொரு பொருளையும் அவையே மதிப்பிட்டன. அவர்களிடமிருந்த சொற்களும் பரதவர்களிடமிருந்து பெறப் பட்டவையே. அவை அவர்கள் அகத்தின் நாணயங்களாகப் புழங்கின.

வடக்கே பெருநிலத்து வயல்களில் கூல வகை ஊறிப் பெருகி ஓடைகளாகிப் பெருக்கெடுத்தது. தென்திசைக்குச் சென்ற நெடும் பாதையில் சகடங்களின் ஒழுக்கு இரவும்பகலும் அறுபடா மலிருந்தது. கூலம் கொள்ளத் தென்பாண்டி நாட்டிலிருந்து மிதக்கும் கோட்டைகள்போல நாவாய்கள் வந்தன. அவற்றின் திறந்த வாயை நிரப்பக் காவிரியில் தெப்பங்களில் நெல்மூட்டைகள் வந்தன. பரதவர் குடிகளில் பல தெப்பக்காரர்களாயினர். காவிரிக்கரைக் காடுகளில் வணிகர் இல்லங்கள் எழுந்தன. சேற்று நிலம்மீது வைரம் ஓடிய மரங்களை ஆழ நட்டு மேலே மரக் கூரையிட்டுக் கொள்நிலைகளும் அங்காடிகளும் எழுந்தன.

கடலுள் நின்ற மணல்மேடுகளை இணைத்து மரங்களை நட்டு உருவாக்கப்பட்ட துறைமுக முகப்பு ஆழ்கடல் வங்கங்களைச் சென்று தொட்டது. மரக்கலங்களிலிருந்து நேரடியாகவே சகடங் களுக்குச் சரக்குகள் இறங்கின. புகார் விரிந்தகன்று பெருநகர மாயிற்று. காட்டில் வாழ்ந்த மான்களும் நீரில் வாழ்ந்த முதலை களும் மறைந்தன. காகந்தர் குடி பெருவளநாட்டுக் கோழியோன் குடியுடன் இணைந்து சோழர்பெருங்குடி என்றானது. கோழியர் கோன் கொடி பறக்கும் பெருமாளிகை நகர் நடுவே ஓங்கியது. குடநகரும் நாகநாடும் பொலிவிழந்து பின்னகர, புகார் பெருநகர மாக எழுந்துவந்தது. பின்பு அதுவே சோழன் தலைநகரமாயிற்று.

கடற்பறவைகள் சிறகுகளால் மூடிய கரையோரப் பெருமரம் போலிருந்தது புகார். இரவில் மின்மினிகள் செறிந்து ஒளிவிட்டது போலிருந்தது. நில நகருக்கு அருகே நீரில் அசையும் கலநகரம் ஒன்றும் இருந்தது என்றனர் பாடகர். கடலலை நுரைத்துத் தழுவும் மரக்கால்கள்மீது எழுந்த மாடங்கள் கொண்ட மருவூர்ப்பாக்கம் யவனரும் சோனகரும் காப்பிரிகளும் செறிந்து வாழ்ந்த பகுதி. பெருநில மக்களும் வணிகரும் வாழும் பட்டினப்பாக்கம் அதன்

நடுவே வெண்மாடங்கள் எழுந்த அரசவீதி. அவைமுந்தையோர் வாழும் ஆவண்வீதி. காவல்குடிகளின் கொடித்தேர் வீதி. அப்பால் நெளிந்துசென்ற சாலையில் எந்நேரமும் சகடங்கள் ஓடும் ஒலி எழுந்தது. அதிலிருந்து பிரிந்து சென்ற வீதிகளில் உழவரும் கைவலரும் வாழ்ந்த குடித்தொகைகள் இருந்தன. இரு பாக்கங் களுக்கும் நடுவே கடல்படு பொருளும் நிலம்பெறு பொருளும் தங்கள் மதிப்பறிந்து மாறு கொள்ளும் மாபெரும் அங்காடிகள். நாளங்காடிகளில் யவனரும் அல்லங்காடிகளில் சோனகரும் ஆடகப்பொற்குவைகளுடன் வணிகம் செய்தனர். ஆயச்சாலைகள் புலிக்கொடி துவள இரவும் பகலும் துயிலாது கலம் நிரப்பிக் கொண்டிருந்தன.வணிகமே புகாரின் மூச்சும் சித்தமும் முடிவும்.

ஆனால் காகந்தர் குடி தங்கள் மொழியால் கட்டப்பட்டிருந் தது. தெய்வங்களின் எடை ஏறிய மொழியை பொன்னுக்கு ஈடு வைக்க முடியவில்லை. எந்த அங்காடியிலும் எடைபோட முடியாத சொற்கள் சில அவர்கள் மடிச்சீலைகளில் குலுங்கின. அங்காடி மழைக்கால ஏரிபோல உடல் வீங்கி விரிந்து வர காகந்தர் ஊர்கள் விலகிச்சென்றன. ஆமைமுதுகுக் குடில்களும் சிப்பி விளக்குகளும் அவர்களிடம் அப்போதுமிருந்தன. மரக்கலங்களின் பாதைகளுக்கு அப்பால் தங்கள் சிறுமரங்களிலேறிப் பரதவர் கடல் அள்ளினர். செந்நிறம் பழுத்த வானம் அலைவிளிம்பில் உருகிவழியும் நேரத்தில் வலைகளைச் சுருட்டியபடி மீன்களுடன் கரை வந்தனர். வலையை விரித்தபோது அவர்களில் ஒருவன் அதிலிருந்து பசும்களிம்பேறிய கங்கணம் ஒன்றை எடுத்தான். பரதவர் கூட்டம் குழுமி குரல்கள் ஓங்கின. மணலில் உரசி நீரில் கழுவிய போது கிளிச்சிறைப் பசும் பொன் சுடர் காட்டியது. அதைக் கையில் வைத்திருந்தவன் மெய் நடுங்கினான்.

குடிமூத்த பரதவன் தன் கொள்ளுப்பேரர் தோள்பற்றி வந்தான். முகச்சுருக்கங்கள் இழுபடும் வலையென அசைய, நடுங்கும் விரல்களில் அதை ஏந்தி கண்ணெதிரே கொண்டுசென்று ஆராய்ந்தான். அருகே நின்ற சேர்ப்பனிடம் அதிலிருந்த ஒற்றைக் கால்தடச்சின்னத்தைச் சுட்டி ''கன்னி'' என்றான். பெண்கள் குரல் எழுப்பிக் குலவையிட்டனர். கரையிலிருந்து தென்கிழக்கே ஏழு காதம் ஏழுமுழம் ஏழடி தள்ளி அதைக் கடலில் போட்டுவிட்டுச் சென்றா னான். ஒருபோதும் காகந்தர் குடிக்கு வெளியே அச்செய்தி சென்று விடலாகாது என்றான். சேர்ப்பன் உடன் வர கட்டுமரத்திலேறி தென்மேற்கே சென்றனர்.

காகந்தர் குடி நெறியின்படி மீன் கொள்ளச் செல்பவர் ஆ

போதும் அத்திசைக்குச் செல்வதில்லை. சுடர் கனிந்த மென்மாலைக் கதிரவன் நீர்மீது விரித்த பாதை தொடுவான் வரை சென்றது. ஏழுகாதம் அப்பால் இருண்டு எழுந்தன மூன்று பாறைகள். கடல் அலை நிலைத்து முழு மௌனம் கொண்டிருந்தது. அந்தப் பாறைகளுக்கருகே அம்பிகள் சென்று நின்றபோது கடல் முழுதடங்கி ஆழத்து வானில் பரிதிவட்டம் சுடரக் கிடந்தது. சேர்ப்பன் வியப்பொலி எழுப்பியபோது பிறர் இறுகிய மூச்சின் வலியில் மார்பைப் பற்றிக்கொண்டனர். கீழே தலைகீழ்ப் பெருநகர் ஒன்று சரிந்த கோபுர முகடுகளுடனும் இடிந்து சரிந்த மாடங்களுடனும் தெருக்களுடனும் விரிந்துகிடந்தது. கனவு என்று எண்ணிய அவர்தம் அகத்தின் அசைவு நீரில் தொட்டு அலைகளாக மாற, மரம் திடுக்கிட்டு எழுந்தசைய கடல் உயிர்கொண்டது.

அன்றிரவு சுறா நெய் சேர்ந்து எரியும் கடல்விறகருகே தழல் சிவப்பு அலைபாயும் முகங்களுடன் தன் முன் கூடி அமர்ந்திருந்த தன்குடிச் சிறார்களுக்கு கிழவன் கேட்டறிந்த அந்த அழிவற்ற கதையைச் சொன்னான். கடல் உண்ட அந்நகரின் பெயர் சம்பாபுரம். ஏழு பெரும் குவைமாடங்கள் நடுவே லாட வடிவம் கொண்ட பெரும் சதுக்கமும் அரைவட்ட வடிவத் தெருக்களும் கல்மாடங்களும் கொண்ட அந்நகரம் சாம்பவர்கள் வாழ்ந்த இடம். அந்நகரத்துக்கு வந்த மரக்கல மாந்தரால் அந்நகரின் ஆளுகைக்குக் கீழிருந்த பெருநிலமும் சம்புத்தீவு எனப்பட்டது. சென்ற காலத்தின் கிழவர்கள் சாம்பவர்களே. நகரின் பேரழகினைக் கண்ட கடலாழத்து தெய்வமான நீலக்கன்னி தன் கூந்தலை அவிழ்த்து அலைகளாக்கி ஏவி அதை அழித்தாள். உயிர் பிழைத்த சாம்பவர்கள் பன்னிரு குழுக்களாகச் சிதறி பெருநிலத்தில் பரவினர். காலத்தில் மருவிச் சிதைந்து மலைவேடர்களாயினர். மலை விட்டிறங்கி நிலத்துக்கு வந்து நாடோடிகளாயினர். சாம்பவர்குலக் கதைகளில் ஏழ்மாட நகரம் அழியா நினைவாக என்றுமிருந்தது.

சம்பாபுரியின் பரதவர்குடி காகந்தர். அதில் ஏழு குடிகள் மட்டும் கடலாமை ஓடுகளைப் புணையாக்கி கரையொதுங்கின. அவர்களை அழைத்துவந்தவன் முதல் சேர்ப்பன் கந்தன்.

உதிரம் படிந்த சிப்பிபோன்ற கண்களை விழித்து முதுகா கந்தன் சொன்னான். அறிக! மாநகரங்கள் இந்தப் பெருமரத்தில் விளைந்து உதிர்ந்து நெற்றுகளாகும் கனிகள்!

நீருக்கடியிலிருந்தன சாம்பவர்களின் குல தெய்வங்கள். காவிரியின் நீர்க்கயங்களின் அருகே ஓங்கிய சம்பு மரங்களின் வேர்களுக்கிடையில் கிடைக்கல் வைத்து நிலைக்கல் நாட்டி தங்கள் தெய்வங்களைப் பதிட்டை செய்தனர். அத்தெய்வங்களின் உடல்களையெல்லாம் காலம் கரைத்துண்ட பின்பு காட்டின் தனிமையிலும் துயிலின் ஆழத்திலும் அவர்களை இடைவிடாது பார்க்கும் கண்களாக மட்டுமே அவை எஞ்சின. காட்டு மஞ்சள் கிழங்கை அரைத்து கல்மேனியில் பூசி அதன்மீது விழிக்கும் கரிய கண்களை வரைந்து வைத்தனர். நீருள் தெரியும் அவற்றின் வடிவங்களையே தங்கள் தெய்வமென வழிபட்டனர். நீருக்குள் தெய்வங்கள் தத்தளித்துக் கொண்டிருந்தன. கரியவிழிகள் தலைக்குமேல் ததும்பிய புதிய காலத்தை பதைபதைப்புடன் பார்த்தன.

கதைகளில் அவர்கள் தெய்வங்களின் ஆலயங்கள் தங்கள் கற்றூண்களுடனும் குவைமாடங்களுடனும் மதில்களுடனும் நெளிந்தாடின. சூழ்நிரைதெய்வங்களும் பூதகணங்களும் நடனமிட்டன. தெய்வங்களுக்குப் பூசைமலர்களை நீரிலிட்டு வணங்குகையில் அவற்றிலிருந்து பிரிந்த நிழல் மலர்கள் ஆழத்து தெய்வவடிவங்களை தொட்டு எழுப்புவதைக் கண்டனர். தெய்வங்களின் தெய்வமான சம்பாபதி அன்னை ஆழத்தில் சேற்றுப்படுகையில் நிழல்வடிவமாக விரிந்து கிடந்தாள். ஆழத்துப் படுகையில் நீந்தி மேலெழுந்து "சம்பா!" என்று குரல் கொடுத்துச் செல்லும் கழுத்து நீண்ட கரிய பறவை சம்பங்கோழி அவள் விண்ணிலேறும் ஊர்தி.

சம்பங்கோழிபோலச் சாம்பவர்களும் புதர்க்காடுகளுக்குள் புதர்களால் கூடமைத்து வாழ்ந்தனர். காடுமீறி வந்து மேயும் மரைகள் மண்டிய மரைக்காடு முதல் மறுமுனையில் மயில்கள் குறுங்காடு விட்டு ஆமைமுட்டை உண்ண அலைமணல்கரைக்கு வரும் மயில்துறை வரை அவர்கள் வாழும் நிலம். காவேரி வழியாக வடமேற்கிலிருந்து வந்த பெரும்புணைகளின் நெல்மூட்டைகள் கடற்கரைக்கு செல்வதைக் கண்டார்கள். பின்பு புணைகளில் வந்த

வேளிர்குடிகள் கரையோரச் சதுப்புகளையும் குற்றிக்காடுகளையும் அரணிட்டு கைக்கொண்டு காடுவெட்டித் திருத்தத் துவங்கினர். காடு வெளித்து வெயில் தேங்கிய வயல்கள் பரவி விரிந்தன. அவற்றில் தளிர்நெல்நுனிகள் பசும்மென்மை கொண்டு எழுந்து முதிர்ந்து மண்ணின் மந்தணம் ஒன்றை உள்கொண்டு கனத்துத் தலைகுனிந்து சிலுசிலுத்தன.

நெல், வேளிர் குடிகளைப் பெருகச்செய்தது. காவிரிக் கரை யெங்கும் ஊர்கள் அடர்ந்தன. ஊர்களை அணைத்துச் செல்லும் பாதைகளின் வலை விரிந்தது. பூசணியும் பீர்க்கும் பூத்த கூரைகளில் ஏறி நின்ற சேவல் சிறகடித்து கழுத்து சொடுக்கி அவர்கள் வெற்றியைத் தினமும் காலையில் அறிவித்தது. கோழியே அவர்கள் குலக்குறி. சேவல்கொடியேந்திய வேல்வீரன் அவர்கள் தெய்வம். வேளிர்களின் தெய்வங்கள் ஊர் நடுவே கல்கோட்டைகளில் புரிமாட நிழலில் வாழ்ந்தன. ஓங்கிய வெண்கலமணியோசையாக அவர்களின் ஆட்சி காற்றில் பரவுகையில் நீர் சிலிர்த்து சாம்பவர் தெய்வங்கள் நெடுமூச்செறிந்தன.

சாம்பவர்களின் காடுகள் அழிந்து வயலானபோது அவர்கள் வயல்வெளி வாவிகளின் அருகே எஞ்சிய மரநிழல்களில் தங்கள் தெய்வங்கள் கிடைக்கல்மீது நிலைக்கல்லாகக் கூசி நிற்கக் கண்டனர். சாம்பவர் குடிப்பெண்டிர் வயல்களில் நாற்றுநட்டும் களை கொய்தும் உழைக்க சாம்பவர் உழுதனர். குழந்தைகள் கன்று மேய்த்தன. தங்கள் தெய்வங்களுக்கருகே புதர்க்குடிசைகளில் மண்ணில் அவர்கள் வாழ்ந்தனர். மண்ணில் உழைத்தாலும் அவர் களால் மண்ணை உரிமைகொள்ள முடியவில்லை. மண் அவர் களுக்கு அயலாகவே இருந்தது. நீரின் திரை ஒருநாள் விலகும் என்றும் அன்று அனைத்தையும் கைவிட்டு திரும்பிச்செல்பவர்கள் தாங்கள் என்றும் நம்பினர். நீருக்குள் அவர்கள் தெய்வங்கள் ஒரு போதும் தங்கள் இருக்கைகளில் நிலைகொள்ளவில்லை.

நிலம் கால்வாங்கி நிலம். மண்ணை, அதன் உயிர்க்குடிகளைக் கடல் அறியும். அலைகளின் ஓயாத சொல் மீண்டும் மீண்டும் முழங்கிக் கொண்டிருக்கிறது. கரை நண்டுகள் மென்மணலின் ஈரத்தில் அதை வரைகின்றன. சங்கின் வளை சுழலில் செல்லும் போது காற்று அச்சொல்லைக் கண்டடைகிறது. ஆழத்து முள்மீன் அச்சொல்லெனச் சிலிர்த்துக் கொள்கிறது. மீன்விழிகள் அனைத்திலுமே அச்சொல் உறைந்து நின்றிருக்கிறது. காலகாலங்களாக அச்சொல்லின் கடற்கரையில்தான் மானுட அறிவு ஓயாது சென்றறைந்து நுரைத்து உடைபட்டுத் திரும்பிக்கொண்டிருக்கிறது.

பழம்பாடல் சொன்னது, ஒவ்வொரு அலையிலும் ஓர் எண் குறிக்கப்பட்டுள்ளது. எண்கள் பெருகிப்பெருகிச் செல்கின்ற மறுஎல்லையில், அந்த அப்பால், அந்த எண் இலா இறுதி அலை உள்ளது. தொல்மண்சுவர்களில் நீர்தொடாமையால் முடிவிலாது உறங்கும் பல்லாயிரம் விதைகளைப்போல பழம்பாடலில் சொற்களுடன் கலந்துள்ளன சொல் அல்லாமைகள். பழம்பாடல் கடலலை போன்றது. மாமலைகளின் அசைவின்மையாலும் முகில்களின் நிலையின்மையாலும்கூட அவற்றை முழுக்கக் கேட்டு விடலாகாது. கேட்பவரை உணராமல் சொல்வதைத் தாமறியாமல் சொல்லிக்கொண்டேயிருக்கின்றன அவை.

சொன்னது பழம்பாடல், அந்த இறுதி அலையில் முழுக் கடலே ஓர் அலையாகும். காலமேயான தன் அலைபாய்தலை அப்போதுதான் கடல் இழக்கும்.

தென்கடற்கரை நுனியில் கன்னி தன்னந்தனிமையில் காத்திருப்பது அதற்காகவே.

ஃ

பகுதி இரண்டு

காற்று

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்னும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்னும்...

தெய்வங்கள் அறிக! பாணர் பாடல்கள் காற்றில் பொறிக்கப்படுபவை. அழிவேயற்ற நுண்திரையில். உயிர்ப்பின் சரடென ஒவ்வொருவரிலும் ஊடுருவி அகநுண்மைகளைச் சேர்த்துக் கோர்ப்பவை அவை. சொற்களைப் பொருளுள்ளவை யாக்கும் தெய்வங்கள் வான் துழாவும் ஒளிச்சிறகுகளுடன் பறந் தலையும் வெளியே காற்று. காற்றை வணங்குவோம். காற்றே வலிமை. பெருங்கடல்களைக் கொந்தளிக்கச்செய்யும் செல்நினைவு கள். கரும்பாறைகளைக் கரைத்தழிக்கும் நிலைத்துயரம். புல் நுனிகளை மெல்ல வருடிச்செல்லும் பெருங்கருணை. காற்றை வணங்குக. காற்றே குரலும் மொழியும். காலமே கால் ஆயிற் றென்று அறிக. காற்றே நெல்லின் உமிக்கூம்புகளுக்குள் பால் நிறைக்கும் பரிவு. மலர்முகைகளுக்குள் ஊறும் மணம். வளங்க ளெல்லாம் அதுவே. ஆகவே அது வளி. அமைவதனால் அது அமையம், சமைவதனால் சமயம்.

ஐந்நிலங்களிலும் விதைகளைக் கொண்டுசெல்வது காற்று. ஐந்நிலங்களில் இருந்தும் எழும் நறுமணங்களின் தொகை. குறிஞ் சியில் கூதல், நெய்தலில் வாடை, மருதத்தில் மாருதம், பாலையில் புயல், முல்லையில் தென்றல். ஆயினும் அனைத்து நிலங்களுக்கும் உரியது காற்று. நிலத்திலோடும் நிலையின்மை.

பாணர் பாடும் பாடல்களைக் காற்றே அறியும். ஏனெனில் நேற்றையும் இன்றையும் நாளையும் இணைத்துக்கொண்டு ஓயாது ஓடும் காலத்தின் மூச்சல்லவா அது?

'தென்கடற்கரை நுனியில் கன்னி தன்னந்தனிமையில் காத்திருப்பது அதற்காகவே. ஆம், கன்னி காத்திருப்பது அதற்காகவே. ஆம், காத்திருப்பதெல்லாம் அதற்காகவே...'

பழம்பாடல் அலைகளடங்கி ஓய, பாணன் மகரயாழ்மீது செம்பட்டு மூடி வைத்து, குனிந்து தன் சொல்லின் தெய்வத்தை வணங்கி எழுந்தான். ஓவியத்தூண் செறிந்த கூடத்தில் சிற்பங்களின் விழிகளும், ஊடே நின்றவர் விழிகளும் இறகசைவை நிறுத்தி நீலநீராழத்தில் கூடிய மீன்கூட்டமெனத் திகைத்து நிற்க, நிமித்திகர் நெடுஞ்சாத்தனார் முதலில் தன்னியல்பு கொண்டு தலைகுனித்து பாணன் வடிவில் எழுந்தருளிய மூதாதையர் சொற்களை வணங்கினார். பெருவணிகன் மாநாய்கன் தன் புலித்தோல் இருக்கையில் ஒரு கணம் அசைந்து பின் கனவை உதறிப் பாணனுக்கு வாழ்த்துத் தெரிவித்துத் தன் கழுத்திலணிந்த முத்தாரத்தைக் கழற்றி அவனுக்கு அணிவித்து நெஞ்சோடு ஆரத்தழுவினான். பெண்டிர் வளைக்கரங்கள் குலுங்க அசைவுகொண்டு நெடுமூச்சுவிட்டு எழுந்தனர். பறவைச்சிறகுகள் அசைவதுபோன்ற ஒலியில் ஒருவரோடொருவர் உரையாடிக் கொண்டனர். அன்று மாநாய்கன் மாளிகையில் மங்கலம் பெருகி நின்றது. அவன் குலம் செழிக்க ஒரு பெண்மகவு பிறந்து இருபத்தெட்டு நாள் நிறைந்திருந்தது. அன்று முதற் பொன்னணி பூட்டிப் பெயர் சூட்டும் நன்னாள்.

மாநாய்கன் முன்பு கடலோடித் தென்திசை சென்ற நாட்களில் கலத்தட்டு பழுதாக கரை தேடிச் சென்றபோது துடுப்பு உந்திய கிழ மரக்கலக்காரர் அப்பகுதியில் ஒரு தீவுத்துறை இருப்பதைச் சொன்னார். ஏடுகளிலெங்கும் அதைப்பற்றிய குறிப்புகளிருக்க வில்லை. ஆயினும் வேறுவழியின்றி கலத்தைக் கரைக்கு அடுக்கச் செய்தபோது எதிர்பார்த்ததற்கு மாறாக அங்கே பெரும் துறைமுக வாயில் ஒன்று இருப்பதைப் பெருவணிகன் காண நேர்ந்தது. நூற்றாண்டுகள் முன்பு எப்போதோ கைவிடப்பட்ட மாபெரும் துறைமுகமொன்றின் இடிந்துசரிந்த கல்வாயிலின் ஒருபகுதி அது.

கிழமீயான் அது சென்றஊழியில் விஞ்சையரால் கட்டப்பட்டுப் பின் கைவிடப்பட்ட துறைமுகம் என்றான். கலம் கரைக்கடுத்தபோது மணல்மேடுகளில் சில பரதவர் குடில்கள் தெரிந்தன. அவர் களுடைய குழந்தைகள் மரக்கலத்தை நோக்கி ஓடிவந்தன. பரதவர் அவர்களை அன்புடன் வரவேற்று மீன்ஊன் சேர்த்துச் சமைத்த சோற்றை அளித்து உபசரித்தனர். தங்கள் குடில்களில் மரக்கலக்காரர் களைத் தங்கவைத்தார்கள்.

அன்றிரவு மீன்நெய் விட்டுச் சிப்பிஓட்டில் ஏற்றப்பட்ட அகல் விளக்கின் சுடரருகே அப்பரதவர் சூழ அமர்ந்து அவர்களுடைய மூத்தகுலப் பாணன் மீனின் ஓட்டுக்குமேல் ஆமை அடிவயிற்றுத் தோலுரித்து முறுக்கிச்செய்த நரம்புகளை இழுத்துக்கட்டிய பண்டைப் பேரியாழை இசைத்துப் பாடிய பழம்பாடலை மாநாய்கன் பெருவணிகன் கேட்டான். அது அவன் இமைகளுக்கு அடியில் நீலம்பரந்த பெரும்கடலொன்றை விரியச்செய்தது. இமையா மீன்விழிகள் கொண்ட மூதாதையர் இறகசைத்துப் பறந் தலையும் ஆழம். காலம் கருநீலப் பெருவெளியாக நுரைத்த எல்லை யின்மை. அக்கணமே அப்பாணனைத் தன் புகார் மாநகரத்துச் சபையில் பாடவைப்பதென அவன் எண்ணிக் கொண்டான். அதற் கேற்ப அவன் முதுபாணனுடன் இல்லம் மீண்டபோது அவன் இல் லாளின் வயிற்றில் அவன் குலம் முளை விட்டெழுந்துவிட்டிருந்தது.

முதுபாணன் பாடிய கதைப்பாடலைப் புகார் பெருநகர் வணிகர்கள் எவருமே கேட்டிருக்கவில்லை. ஆனால் அது ஒலிக்கத் தொடங்கிய கணம் முதல் ஒவ்வொருவரும் அதை முன்பே அறிந் திருப்பதை அறிந்தனர். சன்னதம் கொண்ட பெண்டிர் வாயிலிருந்து வந்து எவருக்குமே புரியாமல் தலைமுறைகள் தாண்டிவந்த சொற்கள் பல அந்தக் கதைகளில் சென்று தங்களிடங்களில் பொருந் தியமரக் கண்டனர். கனவுகளின் ஆழங்களில் கணநேர மின்ன லெனக் கண்ட காட்சிகள் பல அக்கதையில் முழுமைத் தோற்றம் கொண்டு எழுந்து வந்தன. ஒரு உளமயக்குக் கணத்தில் அந்தக் கனவுவெளி தங்கள் தலைக்குமேல் வாழும் மண்ணாக மாற தாங்கள் ஆழத்துக்குள் நிழலுருக்களாக அலைவதாக உணர முடிந்தது.

நாய்கன் ஒரு கனவு கண்டான். அதில் இமைக்காத இரு விழிகள் நீலநீராழத்தில் திறந்திருந்தன. தூங்கும் குழந்தையைப் பார்த்திருக்கும் அன்னையின் கண்கள் அவை. கனிவே ஒளியாகச் சுடர்பவை.

பெருவணிகர் குலத்துக்கு முதலிறையென புகாரில் கோயில் கொண்டிருந்தாள் கண்ணையன்னை. அவள் பெயரே மாநாய்கன் மனைவியின் பெயராக இருந்தது. நக்கண்ணை. அன்னையின் ஒரு காலில் மட்டுமே சிலம்பிருந்தது. உடலில் எங்குமே எவ்வித இழைகளும் இல்லை. அதற்கான ஏதுவென எத்தனையோ பழங்கதைகளை அவர்கள் சொன்னார்கள். ஆழ்நீலக்கடலுக்குள் வாழும் பேரன்னையின் ஏழு புதல்விகளில் ஒருத்தி கண்ணை. அன்னையின் கருவிலிருந்து ஏழு பொன்மீன்களாக அவர்கள் எழுந்து கரைநோக்கி நீந்திவந்து தென்குமரிப் பாறைமீது ஏறினர். பேரன்னை தன் அணிகளை அவர்களுக்கு அளித்து மண்ணுக்கு அனுப்பினாள். தென்முனைமீது தவக்கோலம்கொண்ட முதல் கன்னி அன்னையின் மூக்குத்தியை அணிந்து அவள் முகமானாள். ஆறு கன்னியர் அவள் ஆறு நகைகளை அணிந்தனர். கனல் அலையும் பெரும்பாலைகளை ஆளும் கருங்கண் கொற்றவை வலச் சிலம்பை. புகாரின் கண்ணை இடச்சிலம்பை.

பெருவணிகர் குலங்களுக்குக் காவலாக நின்ற கண்ணையன்னை புகார்நகர் மருவூர்ப்பாக்கத்தில் அலைகள் அளாவிய கடற்கரையில் கடலுக்குள் நீட்டிய கரும்பாறைமீது கோயில் கொண்டிருந்தாள். கருங்கல் சுவர்மீது கடலலை மோதும் வெண்துமிகள் அவளுக்கு வெண்மலர் தூவின. அன்று இரவில் பெருவணிகர் குடிகள் காய்கனிகளும் மலர்களும் ஆடகப்பொன் அணிகளும் பட்டாடைகளும் ஏந்திய தாலங்களுடன் அன்னையின் ஆலயத்து முகமண்டபத்துக்கு வந்தனர். வெண்கல மணியோசை முழங்க ஆலயம் பொலிவுற்றது. கருவறைக்குள் கைகூப்பி நின்ற அகல்ச்சுடர்கள் நடுவே கோமேதகம் பதிக்கப்பட்ட கண்கள் சுடர அன்னையின் கருங்கற்சிலை ஓங்கி நின்றிருந்தது. பூசகர் சார்த்திய மலர்மாலைக்குவைக்கு மேல் தூபப்புகை படர்ந்து மேலேறியது. அன்னையின் வலக்காலில் கழலும் இடக்காலில் சிலம்பும் அணிசெய்தன.

மாநாய்கன் தன் பிஞ்சு மகவைப் பலிக்கல்மீது வைத்தான். அது சிறு கைகளை உதைத்துச் செவ்வாய் கோணி வீரிட்டழுதபோது அதன் அன்னை கைகொட்டி உதடு குவித்துக் கூவி அதை ஆறுதல் படுத்தினாள். மாநாய்கன் கைகூப்பி கண்களில் கசிந்துவழியும் நீருடன் அசைவின்றி நின்றான். பூசகர் மணியோசை முழங்க அணி சுடர் காட்டியபோது இரு இளையோர் வலம்புரிச்சங்கு ஊதினர். அலைகடலின் ஆழத்துஒலி அங்கே நிறைந்தது. அருள்மலருடன் பூசகர் வெளியே வந்து மகவருகே குனிய அன்னைமீது சூட்டப்பட்ட

பெரிய மலர்மாலை சரிந்து அவள் காலடியில் குவிந்தது. பெண்கள் வியப்பொலி எழுப்ப பூசகர் கைகூப்பி "அன்னையே உன் ஆணை" என்றார். உள்ளே சென்று அம்மலர்மாலையை எடுத்துவந்து குழந்தையின்மீது வைத்தார். மலர்க்குளுமையில் அழுகையை நிறுத்தி மெல்ல கைகளை ஆட்டியது அது. மலருக்குள் மலர்நீட்சி யென அதன் கால்கள் மட்டுமே தெரிந்தன.

''குலப்புகழ் சேர்க்கும் திருமாபத்தினி இவள்'' என்றார் பூசகர்.

"அன்னையின் பெயரன்றி எப்பெயருமே இவளுக்கு உகக்காது. கண்ணையின் அருள் நகை பெற்ற இவள் பெயர் கண்ணகை.''

மதுரை மூதூர் நடுவே மறவர் குலம் புரக்கும் அன்னையாக நின்றிருந்தாள் மீன்விழியாள். பொன்மாடங்கள் ஒன்றில் பிறிது எதிரொளிக்கும் பெருஞ்செல்வம் கொண்ட மாநகர் அது என்று பாவலர் அதைப் பாடினர். அச்செல்வம் உதிரம் உலராத வாட்களால் வேலியிடப்பட்டிருந்தது. அச்செல்வம் ஊறிப்பெருகும் ஊற்றுக்கண் என்று அன்னை மீன்விழி அறியப்பட்டாள். அவள் ஆலயநெடுவாயில் ஒருபோதும் அடைவது இல்ல. அலைவாய் அழகனும் அன்னையும் நாளும் இரவும் எந்நேரமும் போற்றுவோர் குரல்களாலும் பூசிப்போர் மலர்களாலும் வழிபடப்பட்டனர்.

அலைவாய் மாநகருக்கு வெளியே சுடுமணல் தடத்துக்கு நடுவே இளம்சூடுள்ள நீர் சுழிக்கும் வையை ஆறு ஓடியது. மணல்வெளியில் புலத்தியர் துணிமடங்கள் பல நிறங்களில் காற்றில் உப்பியும் அமுந்தியும், மூச்சுவிடும் பெருவிலங்குகள்போல் நின்றன. அவற்றுள் புலத்தியர் மகவுகள் துணிமூட்டைகள்மீது துயின்றன. சிறார் ஓடிவிளையாடினர். தங்கள் கொழுநர்களுடன் சிரித்துப் பேசியபடி புலத்தியர் மூங்கில்கூட்டம் வழியாக காற்று சீறும் ஒலி எழுப்பி துணிகளைத் துவைத்தனர். உலரவைத்த ஆடைகள் பலநிறப் பெரும்பரப்பாக விரிந்துகிடந்தன. அவற்றின்மீது காகங்கள் வந்தமர்ந்து எழுந்து பறந்தன.

வேனில் காலம் ஆனதனால் வெய்யையைக் கடப்பது எளிது. சகடத்தடம் அழுந்திய பாதைகள் ஆற்றில் இறங்கி கரும்பனைத் தடிகளை மணலில் ஆழ ஊன்றி எழுப்பப்பட்ட பாலத்தின் மீதேறி மறுகரை சென்று மணலில் சகடங்கள் சரசரக்க புதைந்து உழுது சென்று மேடேறிக் கோட்டைமுகப்பை அடைந்தன. பட்டுத் திரையிடப்பட்ட எண்பது மாட்டுவண்டிகள் நிரம்ப மறக்குலப் பெண்டிர். வண்டிகளைச் சுற்றி வேலேந்திய கழலணிந்த மறவர். கூண்டுக்கொடிகள் காற்றில் தவழ்ந்தன. மறவர் கூவிய ஒலியில் வையை மணலில் பறவைகள் எழுந்து சிறகடிக்க புலத்தியரும் பிறரும் தலைதூக்கி கண்கள்மீது கைவைத்துப் பார்த்தனர். கோட்டை

வாசலில் வண்டிகள் தேங்க, குடிக்கிழான் முன்சென்று இலச்சினை முத்தைக் காட்டித் தங்களை அறிமுகம் செய்துகொண்டான்.

மதுரைத் தெருக்களில் மறவர் குடி சென்றபோது நகர்மக்கள் வாசலுக்கு வந்து ஆர்வமுடன் பார்த்தனர். மூத்தகுடிப்பெண்டிர் வெல்லமும் அரிசிமாவும் சேர்த்து அவித்த அப்பங்களையும் பழங்களையும் மலர்களையும் வாழையிலையில் வைத்து அவர்களுக்கு அளித்து மோகூர் கிழவன் பழையன் குட்டுவனுக்குப் பெண்மகவு பிறந்திருக்கும் நற்செய்தியை அறிவித்தனர். நகர்ப்பெண்டிர் மங்கலக் குரவையிட்டும் மஞ்சளரிசியிட்டும் அவர்களை வாழ்த்தினர். கூட்டம், தங்கள் குலதெய்வம் கருங்கண் கொற்றவையின் பேராலய முகப்பில் கடம்பமரங்கள் அடர்ந்த விரிமுற்றத்தில் வண்டிகளை அவிழ்த்துவிட்டு ஓய்வுகொண்டபின் ஆலயத்துக்குள் சென்றபோது அவர்களை வரவேற்கும் முகமாக மணியோசைகளும் சங்கொலியும் எழுந்தன.

கருங்கண் கொற்றவை ஆலய முகப்பில் குருதி உலராத பெரும் பலிபீடம் சிவந்த மலர்போல நின்றது. சடைத்தலை விரித்த வெறியாடும் வேலர்கள் வேலேந்தி நின்றனர். கரிய கருவறைக்குள் எட்டுக்கைகளும் வலக்காலில் ஒளிரும் சிலம்புமாக பவளக்கண்கள் செஞ்சுடரென எரிய அன்னை ஓங்கி நின்றாள். அவள் முன் ஏழு நெய்ப்பந்தங்களின் நெருப்புமலர்கள் நெளிந்தாடின. அவ்வொளியில் அன்னை தன் பீடம்மீது நின்றாடுபவள் போலிருந்தாள். குடிமுறைகள் வரிசைகொண்டதும் மறக்கிழான் ஆணையிட வேலர்கள் ஆடுகளைக் கொண்டுவந்தனர். ஈரமயிர்கள் சிலிர்த்த கொழுத்த ஆடுகள் கனவுநடை நடந்து வந்து பீடத்துக்குமேல் தலை நீட்டின. அன்னையின் செந்நாக்குபோல பலிவாள் ஓங்கி விழுந்து அவற்றைத் துண்டித்து உதிரத்தில் திளைத்தது. தெறித்த உதிரம் மறவர்கள் உடலை நனைக்க அவர்கள் அன்னையைக் கைகூப்பி வணங்கி மெய்க்கூச்செறிந்து நின்றனர். நூற்றியெட்டு ஆடுகளை அன்னையின் கூர்மை ஒளிர்ந்த நாக்கு சுவை கொண்டது. ஆலயக் கல் தரையெங்கும் சூடான உதிரம் வழிந்தது. உதிரம் பரவிய பலிபீடம்மீது மறவர் குலத்தலைவன் தன் குழந்தையைப் படுக்க வைத்தான். கன்னங்கரிய குழந்தை சிவந்தபீடம்மீது கருமுத்துப் போலிருந்தது. கைகளை அசைத்து அது வாயில் விரல்வைக்க உதடுகளில் பச்சை உதிரம் பட்டது. சிறு குமிழ் இதழ்கள் சப்பி அது அச்சுவையை ருசித்தது. பெண்டிர் கூவி மகிழ்ந்தனர்.

அன்னைக்கு நெய்ப்பந்தம் காட்டிப் பலியேற்க வைத்து பெருவேலன் கருவறைவாசலில் இருந்து வெளிவந்ததும் மறவர்

கூட்டத்திலிருந்து ஒரு முதுமறவன் வீரிட்ட குரலுடன் முறுகித் தெறித்த உடலுடன் ஓடிப் பலிபீடம் நோக்கிவந்தான். "அம்மா தாயே" என்று பெண்டிர் அலறினர். வெட்டுண்ட விலங்குபோல உடல் துடிக்க முதுமறவன் நின்று கைகளைத் தூக்கினான் "இவள் மதுரையெனும் அகல் மீது ஏற்றிய சுடர். சுடு நெருப்பு. காக்கும் ஒளி..." என்று கூவினான். அவன் உடைவாள் மின்னலென வெளிப் பட்டுக் கைகளுக்கு வந்தது. தன் கழுத்தில் அவன் வாளை வைத்ததைக் கண்டனர். வாள்கொண்ட கை உதிரம் சொட்ட விலகித் துடிதுடிக்க தலையற்ற உடல் தள்ளாடி அன்னையின் கருவறை நோக்கி நடந்து குப்புற விழுந்து கால்களை உதைத்துக் கொண்டது. குடுமித்தலை பலிபீடம்மீது விழுந்து கண்விழித்து செந்நாக்கு நீட்டிக் கிடந்தது. குழந்தையை செங்குமிழிகள் உடைந்த சூடான உதிரம் மூழ்கடித்தது.

அன்னையின் உதிரச்செவ்வேல் என அவள் விழி திகழ்வதாக என வாழ்த்தி மும்முறை நீர் தெளித்து மலர் தூவி வேல்நெடுங் கண்ணி என்று பெயர் சூட்டினர் பூசகர். பழையன் குட்டுவன் தன் குலம் தெளியவந்த கருஞ்சுடர்த்துளியை வலத்தொடைமீது வைத்து இடக்கையின் வேலால் மீசையைக் கோதிப் புன்னகை புரிந்தான். அப்போது அவன் பங்காளி மறவர்கள் குறுமுழவோசைபோலக் குரல் எழுப்பி நகைத்தனர்.

அன்று இரவில் வையைக்கரையில் தலைகொடுத்தானுக்கு நடுகல் நாட்டிப் பலி தந்து பூசைகளை முடித்துவிட்டு மறக்குடி மணல் விரிவில் தங்கியது. அப்போது கோடைகாலத்து எழுநிலவு. காற்றில் வையையின் நீரில் அலைகள் எழ அதில் நிலவொளி ததும்பிக் கொண்டிருந்தது. மணலில் அடுப்பு மூட்டி ஊன் உணவு சமைத்து உண்டபின் நாட்டி வைத்த பந்தமருகே குடிப்பெண்டிரும் சிறாரும் இளையோரும் கூடியமர்ந்தனர். தோள்மீது தவழ்ந்த காதுகளும் பிடரிமீது செழித்த குழல்கட்டும் கொண்ட கரிய கனத்த மூதன்னை அப்பந்தமருகே அமர்ந்து தங்கள் பாணர் பாடல்களைச் சொன்னாள். கடலாழத்தில் துயிலும் பேராச்சியின் உறங்காத் கண்களைப்பற்றி. அவளுடைய நகைகளை அணிந்துகொண்டு கரை நோக்கிவந்த ஏழு மீன்களைப்பற்றி. வலச்சிலம்பணிந்த கொற்றவை யைப் பற்றி. அவள் காலடியில் தலைகொடுத்த மூதாதையரின் பெயர்கள் அவள் சொற்களிலிருந்து முடிவின்றி வந்தபடியே இருந்தன.

பெருவணிகர் குடி முதுபுலவர் பெருஞ்சாத்தனாரின் மடியிலமர்ந்து கண்ணகை கரியபலகைமீது சுண்ணத்தால் எழுதப் பட்ட முதல் எழுத்தைக் கற்றாள். தென்கடலை ஆளும் அன்னையின் ஒற்றைப் பாதத்தடம் அவள் கரும்பலகைமீது பதிந்தது. தன் கரங் களினூடாக ஒரு வடிவம் ஓர் ஒலி ஒரு பொருள் உருவாகிவரும் விந்தைமுன் வியந்து நின்று பின்பு எழுந்து கைகொட்டிச் சிரித்து ஆர்ப்பரித்தது குழந்தை. பின் மாநாய்கனின் மாளிகை எங்கும் அந்த எழுத்தை வரைந்துவைத்தது. பலநூறு பாதத் தடங்கள் பதிந்த சுவர்கள் காற்றை ஒளியை மலர்மணத்தை அக்குழந்தையின் குதூ கலிப்பை ஓம் ஓம் என ஆமோதித்தன.

நண்பகல் அமைதியில் தன்னருகே கண்மயங்கும் குழந் தையை அணைத்துப் போட்டுக்கொண்டு பெருஞ்சாத்தனார் கடல் திசைகளை அளந்த புகார் வணிகர்களின் பாணர் பாடல்கள் சொன் னார். அவள் குலமூதாதை பெரும்புலவர் செங்கணார் இயற்றிய பாடல்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் முக்கண் முதல்வனை முதற் பாவலனாக மூவாயிரவர் வழிப்பாவலர்களாக நின்று தொகுத்த நூல்தொகைகளில் காவிரிப்பூம்பட்டினத்து செங்கணார் என்ற பேரில் இணைந்து கல் கரைந்தழியினும் அழியாப் பெரும் புகழை அவர்களுக்கு அளித்தன. அப்பாடல்களைப் பெருஞ்சாத்தனார் தன் நடுங்கும் குரலால் பாடிக் காட்டினார். நெல் கொள்ளச் சென்று அவியன் என்ற மலைமன்னனின் நண்பராகி மலைச்சியை மணந்து அங்கேயே மறைந்த செங்கண்ணனார் இளமையில் வெண்நாரை போலச் சிறகுவிரித்த நாவாய் ஓட்டிக் கடல்களைப் பலமுறை கடந்து சென்றவர். அவரது கடற்கதைகள் புகார் வணிகர்கள் சொற்களின் வழியாக நுரைத்து அலையடித்துக் கொண்டிருந்தன.

தங்கள் கண்களின் ஒளியாலேயே இருளிலும் வேட்டை யாடும் நாகர்களும், நீருள் இறங்குகையில் உடல் மீனாக மாறிவிடும் இயக்கர்களும் வாழும் தீவுகள். கைகளுக்கு நடுவே விரியும் தோல் சிறகசைத்து மரங்களிலிருந்து மரங்களுக்குப் பறக்கும் கின்னரர்

களின் நாடுகள். கடலுக்குள் வெய்யோன் ஒளி இறங்கும்போது ஆழங்களைத் தீப்பற்றி எரியவைக்கும் மணிக்கல் மலைகள். உடல் முழுக்கக் கண்கள் திறந்திருக்கும் மீன்கள். ஆறு மாதம் கடற் பாறையாக மாறித் தூங்கிவிட்டு விழித்தெழுந்து நாவாய்களையே நாநீட்டிச் சுருட்டி உண்ணும் கடலாமைகள். ஆழமற்ற கடலின் அடி மணலில் சிறு சிறு மின்னல்களால் எவராலோ அழித்தழித்து எழுதப் படும் வியத்தகு நுண்சொற்கள். அலை ஓய்ந்த கடல்வெளியில் தொடுவானின் ஒளிக்கோட்டுக்கு அப்பாலிருந்து எழுந்துவரும் வானத்து மொழியினாலான பெருங்குரல் ஒன்று சொல்லும் மாறாத ஒற்றைச்சொல். புயலிருண்டு கருத்து சூழ்ந்து வானமும் நீரும் ஒன்றே யாகும் தருணத்தில் திசைகள் அலைகளாக மாறிச் சுருட்டி எழுந்து வருகையில் அந்தக் கரிய பரப்பில் இதுநாள்வரை கடல் உண்ட அனைத்து மனித முகங்களும் தெரிந்து மறையும் பேரச்சம்.

கண்ணகை கடல்கொண்ட நகரங்களைப் பற்றிக் கேட்டாள். நீருள் விழுந்து கிடக்கும் மாபெரும் மணிவாயிலின் ஒளி உச்சி வெயிலில் தொலைவில் கடல்மீது ஒரு பொன்னாடைபோல் விரிந்து நெளிவதை செங்கணார் கண்டதுண்டு. ஆழத்திலிருந்து எழுந்துவந்த செஞ்சிறகு மீன் ஒன்று பொற்கங்கணம் ஒன்றைக் கவ்விச் சென்றதையும் மீன்களை உண்டு கழித்த பறவை எச்சங் களில் செரிக்கப்படாத மணிகள் சுடர்வதையும் கரையோரப் பாறை களை மரக்கலங்கள் தாண்டிச்செல்லும்போது காண நேரும். அக் கடல் விரிவில் சிதறிக்கிடக்கும் தனித்த தீவுகளில் மணிமுடிகளில் உணவு சமைக்கிற, ஒளிரும் பட்டுச்சீலைகளால் குடில்களுக்கு கூரை வேய்ந்த, ஒள்மணி பதித்த இழைகளை மீன்களைக் கவரும் தூண்டில் ஒளியாகப் போட்டுக் காத்திருக்கக் கூடிய கரிய பழங்குடி மக்களைக் கண்டதுண்டு.

அன்றொருநாள் தென்முனைக்கும் தெற்கே அவரது மரக் கலம் முழுநிலவு பூத்த அலையற்ற கடல்மீது துடுப்பசைவின்றி இளங் காற்றில் வழுக்கிச் செல்லும்போது, மரக்கலத்தில் அனைவருமே தூங்கிவிட்டிருக்க அவர்மட்டும் புகார் நகரில் மணிமாடத்தில் தன்னந்தனிமையில் விழிகளில் நீருடன் முழுநிலவைப் பார்த்து நின்ற தன் துணைவியை எண்ணித் துயரம் மிகும் நெஞ்சுடன், பாய்க் கொடிமரத்து உச்சியில் கயிறுகளைப் பற்றியபடி, கடல்நாரை இறகு போல ஆடை பறக்க வானில் ஆடியபடி நின்றிருக்கையில், அப்பால் ஆழமற்ற கடலின் அடியில் ஒரு மூழ்கிய மலையுச்சிப்பாறையின் மீது பதிந்த ஒற்றைப்பாதத் தடத்தைப் பார்த்தார். அக்கனவின் உச்சத்திலிருந்து அவர் விழிப்பதற்குள் மரக்கலம் கரும்பாறைமீது

முட்டி நிலைகுலைந்தது. மரக்கலக்காரர்கள் கூவி எழுந்து அதைத் திசை மாற்றி பாய்களை விரித்து மறுபக்கமாகச் செலுத்திவிட்டனர்.

பின்பு செங்கண்ணனார் குமரித்துறை அணைந்து அலைகள் பாதம் தழுவ நின்ற கன்னியின் சிற்றாலயத்தைக் கண்டு அவள் தாள் பணிந்தார். சிறு கருவறைக்குள் மூக்குத்தி சுடரக் கண்கள் இமைப் பின்றி விழித்து தென்றிசை நோக்க அன்னை நின்றாள். மணற் குன்றுகள் எழுந்த கரையோரம் அவர் தன் மூதாதையருக்கு அன்னமும் நீரும் இறைத்துக் கடன் செய்தார். கடல்கொண்ட நிலத் தின் கோடிகோடிக் கண்கள் அன்னம் உண்ணும் மீன்களாக வந்து மொய்ப்பதைக் கண்டார்.

கண்ணையம்மனின் ஆலய முற்றத்தில் துமி தெறிக்கும் கற் படிகளில் கண்ணகை நிற்கையில் கதைகளில் இருந்து கடல் அலைகள் அவள் முன் ஓயாது அறைபட்டுச் சிதறி மணியுமிழ்ந்தன. சிற்றாடை பறக்க கூந்தல் சுழல நின்ற கண்ணகையை நோக்கி அவை 'கன்னி' 'கன்னி' என்று ஓமொலியெழுப்பின. அவள் பாதங் களுக்கு நுரை வெண்மலர் தூவின.

ᘓ

பன்னிரு அகவை பொலிந்தபின் கன்னியருக்குப் பொற்சிலம்பணி விழா நடத்துவது பெரும்புகார் நகரத்தார் குலத்து மரபு. பொற்றாலம் நிரம்ப மணியும் பட்டாடைகளும் பழங்களும் பூக்களுமாக மாநாய்கன் குலமூத்தார் கோழியன் அவைக்குச் சென்று அவனை வணங்கிச் சிலம்பணி விழாவுக்கு ஆணை கொண்டனர்.

மங்கல மாலையில் மணிவண்ணன் கோட்டத்திலும் ஆடவல்லான் ஆலயத்திலும் மணியோசை எழுந்து பூசனை முடிந்த பிறகு கண்ணையம்மனின் ஆலயத்தில் சிலம்பணிவிழாவுக்கு உறவையும் ஊரையும் அழைக்கும் எழுநிரைப் பெருமுரசம் இசைமணியோடும் நான்முழவோடும் ஒலித்தது. பொன்னகை அணிந்தும் புத்தாடை புனைந்தும் பெருவணிகர் குலப்பெண்டிர் அம்மனின் ஆலயக் கல் முற்றத்தில் திசை கடந்து வந்த வண்ணப் பறவைக்கூட்டமெனக் குழுமினர்.

கண்ணையம்மனின் ஆலயம் சூழ்ந்த கடலில் அன்று மூன்று திசைகளிலும் அலைகள் வெண்புரவிக்கூட்டங்கள்போல எழுந்து சீறி வந்து மோதிச் சிதறின. நான்காம் திசையில் மாடமுகடுகளிலும் கோட்டை அரண்நிலைகளிலும் நிறைந்த வண்ணக்கொடிகளில் காற்று கொந்தளித்தது. காற்று மட்டுமே உணர்ந்திருந்த மந்தணம் ஒன்றிருந்தது.

முரசு முழங்க முதுபாணர் முறைகூவ சோழன் தேரில் வந்து இறங்கி மதம்வழியும் கரும்பாறைகள் சூழ்ந்த கண்ணையம்மனின் ஆலயப்பாதையில் வெண்கலக் குறடு ஒலிக்க நடந்தான். மாநாய்கன் மன்னனை எதிர்கொண்டு வணங்கி முகமன் சொல்லி வரவேற்று அழைத்துச்சென்றான். பல்லியம் கறங்க பன்முரசு விம்ம பூசனைக்கான ஆணையை மன்னன் அளித்தான். கண்ணையின் கருவறைக்குள் காற்று சுழன்றடிக்க அகல்சுடர்கள் எழுந்து படபடக்க அவள் கண்களில் ஒரு சொல் துடிதுடித்தது. பூசகர் தூபமும் அணிசுடும் மலரும் நீரும் காட்டிப் பூசையிட்டுத் தொழ பெண்டிரின் குரவைகள்மீது கடலின் ஓலம் எழுந்து மூடியது.

கண்ணையன்னையின் இடக்கால் சிலம்பில் அச்செடுத்து வடித்து அரிமணி பெய்த ஆடகப்பொற்சிலம்பு பூசனைத்தாலத்தில் இருந்தது. பின் குலமூத்த அன்னை ஒருத்தி குலவையொலி சூழ அச் சிலம்பை எடுத்துப் பொற்றாலத்தில் வைத்து மங்கலப்பெண்டிர் மலரும் நீரும் மஞ்சளரிசியுமாய் வாழ்த்த கொண்டுவந்து அவைமுன் வைத்தாள். மன்னனும் மறவரும் மூத்தோரும் முதலோரும் மலர் தொட்டு வாழ்த்த அது அன்னை கைதொட்டுக் கண்ணகையின் பாதங்களுக்கு அணிவிக்கப்பட்டது.

அன்னையின் பாதங்களில் வைத்த மலர்மாலை சூடிக் கன்னி அவள் முன் நின்று கைகூப்பினாள். அப்போது மெல்லென அலை யடங்கிக் கடல் அமைதி கொண்டது. கற்கோவிலின் முகட்டிலிருந்து உப்புத்துளிகள் வியர்த்துச் சொட்டிய மெல்லோசை மட்டும் வேண்டுதல்களின் தாளம்போலக் கேட்டுக்கொண்டிருந்தது.

அதன் பின் சங்கம் ஒலிக்க, மங்கலப்பெண்டிர் மலர்த்தால மேந்தி முன்செல்ல, மணிச்சிலம்பு மெல் மெல் என ஒலிக்க கண்ணகை நடந்தாள். அவர்கள் தங்கள் இல்லத்துக்குச் செல்லும் வழியெங்கும் இல்ல முகப்புகளில் சுடர்விளக்குகளேற்றி வைத்து நகரம் அவளை வாழ்த்தியது. சுடரகல்கள் பூத்த தெருக்களில் பொன்னகைகளில் செவ்வொளி சிதற கண்ணகை தன் இல்லம் சென்றடைந்தாள்.

அப்போது கடலுக்குள் அலை ஓய்ந்த ஆழத்தில் கண்கள் ஒளிரப் பல்லாயிரம் மீன்கள் அசைவற்று நிற்பதை மீன்கொள்ளச் சென்ற பரதவர் கண்டனர். ஆழம் அறிந்த ஒன்றை, காற்று சொல்லிக் கொண்டிருந்த ஒன்றை அவர்களுடைய சொல்லின்மையும் கண்ட றிந்தது. துடுப்புகள் ஓய அவர்களின் தோணிகளும் அசைவிழந்து நின்றன.

ஆ

பொருநுரைப் புகாரில் கரை கண்டு, பின் மண்காய்ந்த மதுரை நிலம்மீது பறந்து, தென்குமரி செல்லும் வெண்கால் செவ்வலகு விரிசிறை வலசைப் பறவையொன்று அன்றே மீண்டும் ஒரு கன்னிக்குச் சிலம்பணிவிக்கும் குலவிழா நடப்பதைக் கண்டது. வெம்பாலை வேகும் மணம் சுமந்த காற்று சுழன்று மோதிய சுவர்கள் கொண்ட கருங்கண் கொற்றவை ஆலயத்து முகமண்டபத்தில் கருநிறமும் செங்கண்களும் கொண்ட மறவரும் சங்கு வளையிட்ட கருங்கரங்களும் தாள்தோயும் நீள்கூந்தலும் கொண்ட மறப் பெண்டிரும் கூடியிருந்தனர். தென்மறக் குலங்களில் பழையவன் ஆதலால் பழையன் என்றே குலப்பெயர் கொண்ட பழையன் குட்டுவன் தன் இடக்கையில் நீங்காத வேலுடன் நின்றிருந்தான்.

மீன்விழி ஆலயத்தில் மணிகள் ஓய்ந்ததும் சுடரெழும் பந்தங்கள் பொலிய பாண்டியன் சடையன் நெடுவழுதி முகபடாமிட்ட யானை முன்வர வெண்குடை ஒளிர்ந்த பொன்னிறத்தேரில் வந்திறங்கினான். சங்கங்கள் பிளிற பறையொலி அதிர அவன் இறங்கியபோது பழையன் குட்டுவன் முன் சென்று முகமன் சொல்லி அழைத்து வந்து அமரச்செய்தான். உலராப் பலிபீடத்திலிருந்து செம்மையைத் தொட்டுத் தன் நெற்றியிலணிந்து கொண்டான். கருவறைக்குள் எழுந்த மாபெரும் கொற்றவைச் சிலையின் செம்மணிக்கண்கள் சுடர்ந்தன. அவள் இடக்காலில் கழலும் வலக்காலில் சிலம்பும் விழிதெளிந்து தெரிந்தன.

தலைநம்பி பூசைமுறைகள் ஆற்ற குலவையிட்டபடிப் பெண்கள் கைகூப்பினர். அவ்வலக்காற்சிலம்பில் தேன்மெழுகொற்றி அச்செடுத்துக் குறுக்கிக் கிளிச்சிறைச் செம்பொன் உருக்கி ஊற்றிச் செய்த சிறு மென்சிலம்பு செம்மலர்த்தாலம்மீது வைக்கப்பட்டிருந்தது. பன்னிரு மறக்குலம் வாழ மொழி சொல்லி பன்னிரு ஒளிர்முத்து அரிசேர்த்து அதை வணங்கினான் தலைநம்பி. அதில் கருங்கழல் கொற்றவையின் தொல்சிலம்பில் பொறித்திருந்த அறியா எழுத்துகள் தெரிந்தன. ஆழ்கடலுள் உறங்கும் பேரன்னையின்

மொழிவரி அது என அவர்கள் அறிந்திருந்தனர். அன்னையின் அருள் பொலிக எனக் குரவையிட்டு மூத்தபெண்டிர் மூவர் சேர்த் தெடுக்க பாண்டியன் தொட்டளிக்க தாய்மாமன்கள் இருவர் அதைப் பழையன்மாறன் குலம் பெருகவந்த கன்னியின் கால் களுக்கு அணிவித்தனர்.

பின் வைகையின் நெடுமணல் வெளியில் அவர்கள் ஊன்பெய் கொழுஞ்சோறுண்டு மகிழ்ந்தாடியபோது வானில் ஒரு கூவலுடன் சென்ற வலசைப்பறவையை அஞ்சி வேல்நெடுங்கண்ணி தன் அன்னைமீது சேர்ந்துகொண்டாள். பேரன்னையே நீலமாக விரிந்த தென்குமரியாடச் செல்லும் வடகோட்டுப் பெரும்பறவை அது என்றாள் அவள் மூதன்னை.

வலசைப்பறவை அன்றிரவில் பாலைவெளியின் ஐந்திசைத் திறப்பில் சிறுபாறைமீது முடிவின்றிப் பறக்கும் கருங்கூந்தலும் ஒற்றைமுலையும் எரியும் விழிகளுமாக நின்ற கொடுங்கால் கொற்றவையைக் கண்டு மீண்டும் ஒருமுறை 'ஆம்' என்று கூவியது. பின்பு விடியும் மென்னொளியில் தென்கடல் முனையில் அலை தழுவும் பாறையில் ஒற்றைப்பாதத் தடமருகே இறங்கி அமர்ந்து தென்கடல்விரிவு நோக்கிக் கழுத்து திருப்பிச் செம்மணிக்கண்களை உருட்டி 'ஆம்' என்றது.

கன்னியரைக் காலம் கருவுறுவதற்கு முன்னரே அவர்கள் கணவர்கள் மண்ணில் பிறக்கின்றனர். ஆடகப்பொன் உலையில் உருகி ஒளிர்ந்தெழுகையில் தென்கடலில் முத்துடைச் சிப்பி ஒன்று நீர்மேலெழ முடிவெடுக்கிறது. கண்ணகையின் கைக்கொள்ளும் தோள்களைப் பெருவணிகன் மாசாத்துவாள் பெற்றுத் தன் மடிமீதும் தோள்மீதும் இருத்தி வளர்த்துக் கொண்டிருந்தான். செவ்வேள் என அன்னையர் மகிழ்ந்த அவன் பெயர் கோவலன்.

பொற்குப்பையை நெற்கலம் கொண்டளக்கும் பெருவணிகன் என்று பாவலர் புகழ்ந்த மாசாத்துவானின் மகன் எதையுமே எண்ணாமல் வாழ்ந்தவன். கைவிரல் குவித்துக் கொடுப்பதன்றி விரித்து பெற்றுப் பழகாதவன். இதழ்விரியாச் செந்தாமரை மொட்டுப் போன்றவை அவன் கைகள் என்றனர் பாவலர். ஐந்து அகவையை அடைந்தபோது அவன் குலத்தின் நல்லாசிரியர் கண்ணனார் வந்து, எண்ணித் துணிக கருமம் என்று கல்வியைத் தொடங்கினார். கைவிரல்களால் அறியப்படுவதே உலகம் என அவனுக்குக் கற்பிக்கப்பட்டது. எண்ணிலிருந்து தொடங்கியவையே எண்ணங்கள் என்றார் கண்ணனார். ஆற்றுநீரும் கடலலையும் முகில்முயக்கமும் எண்ணப்படுபவையே என்றார். எண்ணுவதன் முதல் சொல் கட்டைவிரலாகிய அது. அடுத்த சொல் சுட்டு விரலாகிய நான். பின்புள்ளவை எல்லாம் அவை இரண்டும் ஊடி முயங்கியாடும் எண்குணத்து இறைமைகளினால் ஆன இயற்கை எண்திசைகளாக நிரம்பிய வானம். முதலிரண்டையும் அகற்றி எட்டில் தொடங்கி எண்ணுபவர் என்பதனால் வணிகர் எட்டியர் என்ற பேர் பெற்றனர்.

அன்று மாலை தன் மாளிகை மலர்த்தோட்டத்தின் மண்டபத்தில் வானுக்குக் கீழே தான் மட்டுமாக அமர்ந்திருக்கையில் கோவலன் அவ்வெண்களை எண்ணிக்கொண்டான். நீலவான் நிறைத்து வலசை செல்லும் வெண்பறவைகள் வான் உருகி

உருப்பெற்று பின் நுரைபோலத் துமித்து மறைவதைக் கண்டிருக்கையில் என்றும் அவன் வானையும் மண்ணையும் தன்னையும் தவிர எதையுமே உள்ளூர எண்ணியது இல்லை என்றறிந்தான். தன் கைவிரல்களை விரித்து நோக்கி அகம் பெருகி நெடுமூச்செறிந்தான். நான் என்றது அவனது சுட்டுவிரல். என்னால் சுட்டப்படுவதொன்றாலேயே இவ்வுலகு இங்கே உள்ளது. சுட்டுவிரலை வளைத்துக் கட்டைவிரலைத் தொட்டான். அப்போது பிற எண்விரல்களும் பொருளிழந்து விறைத்து நிற்க விண்ணும் மண்ணுமென இரு பெரும் வல்லமைகள் ஒன்றானதை உணர்ந்தான்.

நெடுநேரம் கழித்து மானல் மாய்ந்து மறுநினைவெழுந்து அவன் தன்னை உணர்ந்தபோது விண்ணும் காற்றும் சிவந்திருந்தன. வலசைப் பறவைகளின் வரிசை மெலிந்திருந்தது. கடற்காற்றில் அவன் மலர்த்தோட்டத்துக் கொடிகள் மெல்ல அசைந்தன. அங்கே எதுவோ நிகழ்ந்து முடிந்திருப்பதை அவனறிந்தான். அக்கொடிகள் அதை அறிந்திருந்தன. மண்டபத்துக் கற்றரை அறிந்திருந்தது. ஆனால் அதைச் சொல்லவோ கொள்ளவோ முடியவில்லை. அன்று மாலை தெருவிலிறங்கி ஓடித் தென்திசை இறைவனின் ஆலயத்துக்குள் சென்று கருவறையில் மெல்லிருளில் அமர்ந்திருந்த பிறைசூடிப் பித்தன் தன் கட்டை விரலையும் சுட்டுவிரலையும் சேர்த்திருப்பதைக் கண்டான். நெடுநேரம் அங்கேயே நின்றிருந்தான். மாளிகைக் காவலர் அவனைத் தேடிக் கண்டடைந்தனர்.

பின்பு ஒருபோதும் கோவலனுக்கு எண் பொருந்தியதில்லை. ஒவ்வொரு முறையும் அவனது எண்களினூடாக எண்களில் சிக்காத ஏதோ சில வந்து சேர்ந்துகொண்டன. எண்களாக மாய்மை காட்டிச் சேர்ந்து நின்றன. அல்லது எண்களில் சிலவற்றைக் கொண்டு சென்றன. கண்ணனார் எண்களின் நெறிகளை அவனுக்குச் சொன்னார். எண்கள் முடிவற்றவை. ஆனால் ஒவ்வொரு எண்ணும் முற்றிலும் முடிவுள்ளது. இந்த மண்மீது மிச்சமின்றிப் புணரவும் எச்சமின்றிப் பிரியவும் கூடுபவை எண்கள் மட்டுமே. இப்புவியிலும் விண்ணிலும் எங்கும் இன்மையென ஏதுமில்லை. அனைத்து இன்மைகளையும் நிரப்பும் ஒன்று எங்குமுள்ளது. எண்களில் மட்டுமே எதனாலும் நிரப்பப்படமுடியாத இன்மை உள்ளது. அது தன் இன்மையாலேயே முழுமைகொண்டது. தன்னில் தான் சுழிந்து தன்னைத்தான் கண்டுகொண்டதனால் சுழி என்று பெயர் பெற்றது. எண்களில் மட்டுமே எண்ணுவதெல்லாம் எண்ணியாங்கு முடியும். ஆகவே எண்களை எண்ணுக.

கண்ணனார் சொன்னார், கண் காண்பதனால் உருவா

கின்றன அனைத்தும். கண்ணிமைத்துக் கணம். கணம் கீறிச்செல்லும் கணை. இவ்வுலகம் கண்களினாலான கண்ணிகளின் விரிவு. காணாதவை ஊடுருவும் வலை அது. அறிக, கண்கள் அறியும் கணங்களின் அடுக்கு குலையாத ஓர் உலகம் கணக்கு மட்டுமே. கண்களை அறிதல் மட்டுமல்ல, கண்களுக்கு அப்பால் ஏதும் அறியாமலிருத்தலே கணித்தல் எனப்படும். ஆனால் கண் கணிக்கும் எண்களை எல்லாம் குலைக்கும் மனக்கண்ணிகளால் அலைக் கழிப்புற்றான் கோவலன். ஒவ்வொரு நாளும் எண்ணி எண்ணிச் செல்லும் ஓராயிரம் பொருட்களின் வழியாக எண்ணி எண்ணிச் சென்றடைய முடியாத ஒன்றே அவனை அழைத்தது. கட்டைவிரலும் சுட்டுவிரலும் மற்ற விரல்களுக்கு நிகரான வெறும் விரல்களே என்று அவனுக்கு ஓயாமல் சொல்லின வணிகப் பொருட்கள் அனைத்தும். எண்ணி எண்ணிக் களைத்த அவன் விரல்களே முளைத்து நிரம்பிக் கிடந்தன பண்டகசாலையிலும் களஞ்சியத்திலும் பொன்னறையிலும்.

மாலையின் மயக்கத்திலும் இரவின் அமைதியிலும் பின் அவன் வானத்தைப் பார்த்தபோதெல்லாம் மெல்லமெல்ல அதன் விரிவை தன் அகம் பிரதிபலிக்க மறுப்பதை உணர ஆரம்பித்தான். ஆனாலும் கனவில் மலர் காட்டும் இறைபோலப் புன்னகையுடன் அவனருகே எட்டவும் கிட்டவுமாக வந்து அது அலைக்கழித்தது. ஒருநாள் வலசைப் பறவைகளின் வரிசைகளுக்குக் கீழே அமர்ந்து தன் கட்டைவிரலைச் சுட்டுவிரலில் பொருத்தி வானைப் பார்த்து அமர்ந்திருந்தபோது வானம் வெறும் முகில்வெளியாக மட்டுமே தெரிந்ததை உணர்ந்தான். காலத்தில் பின்னகர்ந்து போய்விட்ட அந்த நாளின் அந்தக் கணத்தை மீண்டும் மீண்டும் பற்றிக்கொள்ளத் தாவி வெறுமையில் சரிந்தான். கண்ணீர் வர உதடு கடித்து ஏங்கி மல்லாந்தபோது அறிந்தான் வலசைப்பறவைகளின் எண்ணிக்கை தனக்குத் தெரியுமென. எண்ணாமல் அவற்றைத் தன்னால் பார்த்த இயலாதென. எண்ணுவது வரை எண்களாகவே அவை இருக்கும் என.

அதன்பின் எண்களிலிருந்து அவன் தப்பியோட ஆரம்பித்தான். அங்காடியிலும் நாவாய்க் கரையிலும் பண்டகசாலையிலும் அவன் எண்கள் மிரண்ட புரவிக்கூட்டங்கள்போல சிதறிக் கலைந்து துள்ளின. அவனது கைபட்டதும் எறும்புவரிசைபோல எண்களின் அடுக்குகள் சிதறின. அவன் சென்ற வழிகளெல்லாம் செல்வம் கரைந்தழிந்த வெற்றிடம் விழுந்தது. பின்பு அவனை மாசாத்துவான் தன் அனைத்து வணிகங்களிலிருந்தும் விடுவித்தான். எண்களை

ஊடுருவும் நுண்மையைத் தேடிக் கோவலன் மலர்க்காடுகளிலும் மதுவரங்குகளிலும் கணிகையர் இல்லங்களிலும் அலைந்தான்.

அந்நாளில் ஒருமுறை கணிகையொருத்தியின் இல்லத்தில் மதுவுண்டு களித்து யாழின்மீது சரிந்தபோது அது மெல்ல விம்மியதைக் கேட்டு அவன் அகம் விழித்துக் கொண்டது. அம்மெல்லொலி ஓய்ந்த வெறுமையில் அவனறிந்த அமைதியை அதற்குமுன் ஒருமுறையே அறிந்திருந்தான். அதைத் தன்மீது எடுத்துவைத்துக் கொண்டு வாசிக்க முயன்றான். கணிகை நகைத்தபோது அவன் அதை மீண்டும் மீண்டும் வருடி ஒரு கணத்தில் தன் உள்ளத்தில் உயர்ந்த விரைவை விரல்களுக்குக் கொண்டுவந்துவிட்டான். யாழின் ஒலியலைகளில் இருந்து நீர்மீது துள்ளியெழும் வெள்ளிமீன்போல இசைத்துளியொன்று எழுந்தமர்ந்தது.

அறைக்குள் சந்தனம் அரைத்துக்கொண்டிருந்த மூத்த கணிகை ஒருத்தி வியந்து அருகே வந்து அவன் கரங்களைப்பற்றி விரல்களை வருடி அவை யாழுக்காகவே பிறந்தவை என்றாள். அவன் கரங்களைப்பற்றி செங்கோட்டுயாழின் ஏழ் நரம்புகளில் வைத்தாள். அன்றிரவே அவன் பண்ணலும் பரிவேட்டனையும் என யாழில் எண்தொழில்களையும் கற்றுத் தைவரல் கூட்டி ஆளத்தியால் அறையை நிரப்பினான். யாழின் இறைவி மாதங்கி கோயில் கொண்ட கணிகையின் இல்லத்துச் சிற்றாலயத்தில் அன்று புலரியில் யாழை முன்வைத்து நெற்றியும் மார்பும் நிலம் சேர்த்து வணங்கினான்.

யாழின் தந்திகளில் தன் விரல்கள் அதுவரை எண்ணி எண்ணிப் பெற்றதையெல்லாம் மெல்லமெல்ல இழப்பதை அவன் கண்டான். எண்ணித் துணிய முடியாத ஏழிசை அதிலிருந்து எழுந்து பரவியது. தன் விரல்கள் கரைந்தழிய கரங்கள் சிறகுகள் போலாகித் துழாவி நீந்தும் ஒள்வான்வெளியாக இசை. பிறகு அவன் அங்கிருந்து மீளவேயில்லை.

ஃ

கேளுங்கள் இதை. கல்லில் ஓரிழையெடுத்து காற்றில் மற்றிழையெடுத்து ஒருமுறை காலம் ஒரு முடி போட்டது. காலத்தை வணங்குக. அதன் விருப்பங்கள் வானறியாதவை. மண்ணறியாதவை. இறையும் திகைத்தொழிபவை.

மங்கலம் கூடிய நன்னாளில் மாசாத்துவான் பெருங்குலம் மலரும் கனியும் தேனும் கூலமும் பொன்னும் முத்தும் மஞ்சள்நீர்க் குடமுமாக மாநாய்கன் மாளிகைக்குள் நுழைந்து, முகமன் கேட்டு மகிழ்ந்து அமர்ந்து, கண்ணகையைத் தங்கள் புதல்வனுக்குப் பெண் கேட்டனர். மறுகணமே அம்மாளிகை எங்கும் மகிழ்வொலிகள் எழுந்தன. பூத்தவாகை எனப் பூவன்றி வேறற்று நின்றாள் நக்கண்ணை. மாநாய்கன் தன் குலதெய்வத்தை வணங்கி "என் குலம் வாழ்த்து கொண்டது" என்று பதில் சொன்னான்.

தாலங்கள் குலப்பெண்டிர் கைமாற தளிர்வெற்றிலை குலமூத்தார் கைமாற பேராறுகளிரண்டு ஒன்றானதுபோல இரு பெருங்குலங்களும் ஒன்றாயின. பின் தங்கள் குலவழக்கப்படி இரு பெருங்குரவரும் தென்மேற்கு கன்னிமூலையில் மலரும் கனியும் படைத்து அன்னையைப் பூசித்தனர். தென்மதுரை நடுவே கண்கள் ஒளிர நிற்கும் மீன்விழியையும் தென்கடல்நுனியில் மூக்குத்தி சுடர் நிற்கும் குமரியையும் அப்பால் நீர்வெளியாக நெடுமுகம் கொண்டு விரிந்த பேராச்சியையும் வாழ்த்தும் பாடலைக் குலப்பூசகர் நெடுஞ் சாத்தனார் சொல்ல அனைவர் கரங்களும் குவிய, மூடிய கண்களுக்குள் நெளிந்தது நீலம்.

அன்றிரவு தன் தனித்த படுக்கையில் துயில் மறந்த கண்ணகை எழுந்து கிழக்குத்திசை உப்பரிகைமாடத்தில் நின்று அலையடிக்கும் கடலைப் பார்த்தாள். ஓங்கி அமிழ்ந்தும் மீண்டும் வந்தும் கடல் சொல்லும் ஓயாத சொல்லை இரவெல்லாம் கேட்டு நின்றாள். மொழியறிந்த நாள் முதல் கேட்டுவரும் உருத்திரளாத முதற்பெரும் சொல் அது. அத்தருணத்தில் அது கடற்சுழியெனத் தன்னைச் சூழ்ந்து கொள்வதைக் கேட்டாள்.

ஆனால் அன்றிரவு தன் யாழை மார்புடன் அணைத்துக் கொண்டு கோவலன் மலர்ச்சோலையிலிருந்து வானை நிமிர்ந்து பார்த்தான். இசைக்கையில் யாழ் நிரப்பி எழும் கையூழ் அலை களாக என்றுமிருக்கும் வானம். அவன் நரம்புகளில் மெல்ல உருட்டியபோது யாழ் மென்குரல் கொண்டு சிணுங்கி அவள் பெயரைச் சொன்னது. அதை அவன் மீண்டும் மீண்டும் வருடி அவள் பெயரைச் சொல்லவைத்தான். அது கண்ணகி என்றது. அவன் புன்னகையுடன் நிமிர்ந்து வானைப் பார்த்தான். விளை யாட்டென யாழ் ஒலித்தபோது அவள் பெயரே இசையாயிற்று. பின் அதுவே வானமாயிற்று.

பின் மருப்பெழுந்த மதங்கம்மேல் மணியணி மகளிர் ஏறி மாநகர்க்கு மணச்செய்தி விடுத்தனர். முரசம் அதிர்ந்த தெருக்களில் பின்பு அவர்கள் இருவர் பெயர்களே மீண்டும் மீண்டும் உரைக்கப் பட்டன. மன்னன் அவை ஏகிப் பொன்னும் மணியும் காணிக்கை தந்து மணமுறி கொண்டனர். நீலக்கூரை கொண்ட நித்திலப்பந்தல் அமைந்தது. கோலமயில் மகளிர் கூடி மாக்கோலமும் மணிக் கோலமும் இட்டு மாளிகையை மங்கலம் பொலியச் செய்தனர். வணிகர் பெருவீதியெங்கும் நறுமணம் நிரம்பியது.

வான் ஊர் மதியம் சகடு அணையும் நன்னாளில் மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட இருகுலம் மகிழ பெருங்கல வணிகர் குலம் சேர்ந்து வாழ்த்த மணிமுடி சூடிய கோழியன் செங்கோல் காவல் நிற்க கோவலன் கண்ணகியைக் கைப்பற்றினான். முரசுகள் அதிர்ந்தன. மங்கல நல்லிசை மழைத்தது. பொன்னணியும் புன்ன கையும் ஒளிர பெண்டிர் மலர் தூவினர். நகரமெங்கும் வாழிய மண மக்கள் என்ற வாழ்த்து எழுந்தது.

அன்று மாலை முழவும் கொம்பும் ஒலிக்க இசைஞர் வழி காட் டிச் செல்ல, மலர்த்தட்டும் நறுஞ்சுண்ணமும் அகிலும் ஏந்திய கோதையர் ஒசிந்து முன்நடக்க, உரற்பாதம் மெல்லத்தூக்கி முகப டாம் அலுங்க அணியானை பின்செல்ல ஊர்கோலம் புகார்த் தெருக் களில் சென்றது. முளைப்பாலிகையும் நிறைகுடமும் சுடர் விளக்கு களும் ஏந்திய மங்கல மடந்தையர் நடுவே மலர்மாலையணிந்த கண்ணகியும் பொற்றலைப்பாகை அணிந்த கோவலனும் நடந்தனர். வணிகர் பெருங்குலங்கள் பின்தொடர்ந்தன. கண்ணையம்மனின் கல்லாலயத்தில் கடற்காற்றில் மலர்மாலைகள் சுழன்றன. கருவறையில் பந்தங்கள் நாத்துடித்தன. அன்னைமுன் அவர்கள் கைகூப்பி நின்றனர். பூசகர் அன்னையின் பாதங்களிலிருந்து எடுத்த மலர்த்தூவிகளை அவர்கள் தலைமீது சொரிந்து வாழ்த்தினார்.

பெருங்குல வணிகர் மரபுப்படிக் கோவலன் தன் கைகளால் அவள் பாதங்களைத் தொட்டுச் சிறு பலிபீடம்மீது வைத்துப் பொற் சிலம்புக்குப் பூவணிவித்துப் பூசை செய்தான். அப்போது அவள் கண்கள் வடவானில் முளைத்த செந்நிறக் கன்னி மீனைப் பார்த்தன. அன்னையின் ஆலயத்தில் கண்டாமணிகள் 'ஓம்' 'ஓம்' என்று முழங்கின.

ஃ

அறியுங்கள் இதை. கரும்பாறைமீது காலமெல்லாம் கர்தலுடன் தழுவிச்சென்றாலும் காற்று அதில் இணைவதில்லை. குளிர்பாறைக்குள் கனலுறங்குவதென்பது ஆன்றோர் சொல்வாக்கு.

அன்றிரவில் படங்கும் அலுங்கும், பாடகமும் சூடகமும், விரிசிகையும் அரிமணியும், கைவளையும் தோள்வளையும், தாள் செறியும் வாள்முறியும், தொய்யகமும் புல்லகமும் அணிந்து, தலை கவிழ்ந்து, செவ்வரிக்கண்கள் தழைந்து, தன்னருகே வந்த கண்ண கியைக் கோவலன் நடுங்கும் விரல்களால் தொட்டான். நாணமும் கோபமும் மெல்ல மெல்ல அகற்றி சொல்லும் சிரிப்பும் அவள் சூட வைத்தான். யாழறிந்த செவ்விரல்களால் பின்பு அணிகளையும் ஆடைகளையும் அகற்றி அழகொன்றையே அணிய வைத்தான். அப்போது அவன் உள்ளத்துக்குள் ஒரு மென்நரம்பதிர அவளை அதற்கு முன்பே கண்டதை அறிந்தான். ஒரு கணம் கடலலை தாள் தழுவும் கண்ணையின் கல்முகமே அவன்முன் வந்து சென்றது.

அவளுடலில் தன் உடல் தீண்டியபோது கடற்பாறையின் தண்மையை உணர்ந்தான். கோடு கனத்து ஆணி இறுகி யாழ் ஒலியின்மை கொண்டிருந்தது. அவன் விரல்களுக்கப்பால் அதன் உள்ளிசை பெய்யாக் காரெனக் கனத்துக் கீழ்வான் நோக்கிச் சென்றது. பின்பு அவன் தன் சொற்களால் அவ்வமைதியைக் கலைக்க முற்பட்டான். கற்ற பாணர் பாடல்களின் அணிக ளெல்லாம் அவன் மொழிமீதேறிக் கடலோரக் கரும்பாறைமீது ஓங்கியடித்து நுரைசிதறிப் பின்வாங்கிக் கொண்டிருந்தன. சொற்கள் ஓய்ந்த அமைதி வெளியில் அவன் 'கண்ணகி! கண்ணகி!' என்று விம்மிக்கொண்டிருந்தான்.

அன்றிரவில் கருக்கல் புள் குரலெழுப்பிய பின்பு அவனது தூங்கும் கையை மெல்ல எடுத்து மலர்மஞ்சம்மீது வைத்து துகிலள்ளிச் சுற்றி மங்கல அணி எடுத்துக் கண்களில் ஒற்றியபடி அவள் சாளர வாசலைத் திறந்தபோது கடற்காற்றின் பேரலை வந்து அவள்மீது அறைந்தது. அக்கணம் அக்காற்றில் நிற்பவள் மறுபிறவி

கொண்டெழுந்தவள் என்றும் அவள் பெயர் கண்ணகி என்றும் அறிந்தாள்.

புகாரின் பாறைக்கரைக்கு அப்பால் கொடிகளசையும் நாவாய்களைச் சுமந்தமடி விம்மி அலையும் பெருங்கடல் சொன்ன சொல்லை அவள் கண்மூடிக் கேட்டிருந்தாள் 'கன்னி! கன்னி!' என்றது அது.

ஃ

குலவேம்பு தளிர் விரித்த குளிர் நிழலில் மோகூர்ப் பழையன் குட்டுவன் இல்ல முகப்பில் பாண்டியனின் பேரமைச்சரும் கைக்கோள் படையும் வந்த தேரும் வண்டியும் புரவிகளும் நின்றன. வாசலில் நின்று அமைச்சர் முகமன் கூறியதைப் பழையன் ஏற்கவில்லை. கைவேல் நுதிகொண்டு நெற்றிவியர்வை துடைத்து கண்வேல்களால் நோக்கி நின்றான். அமைச்சரின் பின் பாண்டியனின் அவைமங்கல வரிசைகளை ஏந்தி நின்ற கணிகையர் கால் கடுத்து ஒசிந்தனர்.

"உன் குலமகள் பாண்டியனின் கோப்பெருந்தேவியாவாள்" என்றார் அமைச்சர்.

"அவள் கருங்கண் கொற்றவையின் சுடர். என் குலக் கொழுந்து. என் குலமோ கடுவெயில் படுக்கும் சுடுநிலம் புரக்கும் கொற்றவையுடன் தோன்றிய மூத்தபெருங்குடி. ஆதலால் என் பெயர் பழையன். மீனெறிந்த முதுகுலத்தானுக்குச் சொல் தர ஒப்பேன்'' என்றான்.

''மலர் கொண்டுவந்து மணம்பேசுவது மீனவன் மரபு . மண மறுப்பெனின் மீன்கொடியுடன் எரிகொணர்ந்து மணம் பேசக் கூடும்'' என்றார் அமைச்சர்.

"தலைகொடுக்கும் படை இங்கும் உள்ளது" என்றான் பழையன்.

மோகூர்க் குல மூத்தவர் குழுமினர். மறவர் உறைவாளை உருவ விற்களில் நாண்கள் விம்ம சொற்கள் மோதி நின்றன. எரி வெயில் ஏறிவர வேம்பு பூவுதிர்த்தது. முதுமறவர் ஒருவர் குலமூப்பு குறிக்க ஒரு வேலன் வெறியாட்டு எழுவதே மரபென்று சொல்ல அனைவரும் அதை ஏற்றனர்.

அன்றிரவு கருங்கால் வேங்கையின் வேர்மேல் எழுந்த செங்கண் கொற்றவையின் சிற்றாலயத்துப் பலிபீடத்தில் ஊன்பலி தந்து தீப்பந்தம் கொளுத்தி கையறைந்து வணங்குகையில் பேரால்

எனச் சடை பரப்பிய வெறிவேலன் சன்னதம் கொண்டான். சடை சுழலத் துள்ளி வெறியோலமிட்டு கொற்றவையின் பள்ளிவாள் எடுத்து மணி குலுங்கக் கூத்தாடினான். வாளால் தன் நெற்றியிலும் தலையிலும் வெட்டி வெட்டி உதிரம் சிதற வெறிமுகம் சிவந்தெரியக் கூவினான். கொற்றவையின் தொல்குரல் காலங்களுக்கு அப்பா லிருந்து அவன் உதிரச் செந்நா வழியாக எழுந்தது.

நீலம் நிரந்த தென்வெளியின் ஆழத்தில் பேராச்சியின் மடியில் உறங்கும் நகரங்களின் பாசி படர்ந்த பழஞ்சுவர்களில் நீரொளி நெளியும் அலைகளினூடாக நிழல் துவள நீந்தும் இமையாவிழி மீன்கள் மட்டுமே அறிந்த தொல்மொழியின் சொற்கள் வேலனின் நாவினூடாகத் தெறித்தன. அச்சொற்களைக் கேட்ட மறக்குலம் மண்ணில் முகம் தொடத் தலைதாழ்த்தி வணங்கியது. மெல்ல வேலனின் குரல்மீது கடற்கரும்பாறைமீது வெண்பறவைபோல தமிழ் சிறகு மடக்கி வந்தமர, அவன் கூவினான். ''மீன்விழியும் மீன் கொடியுமாக குமரிக் கோடேறி வந்த முதற்குலமே பண்டை நிலம் புரந்த பாண்டியர். வட வெள்ளாறும் மேலைப்பெருவழியும் கடல் கிழக்கும் குமரித்துறை தெற்குமெனச் செழியன் நிலம்புரக்கும் செங் கோல் அது வாழ்க! பழையன் குலம் புரக்கும் தொல்பழையோன் பெயர் வாழ்க!''

அன்னை உத்தரவு பெற்றதும் பழையன் குலம் பாண்டியன் தூதர்களைத் தலைவணங்கி அழைத்து இருக்கைமீது அமர்த்தி வரிசைகளை வாங்கியது. ஊனுணவும் நிறைகள்ளும் அளித்துப் புரந்தது. பொன்னாலான கங்கணத்தைப் பழையன் மகள் வேல் நெடுங்கண்ணியின் கைகளில் மூத்தகணிகை கட்டியதும் வெளியே முரசுகள் ஆர்த்தன. வேல்களை மோதி வீரர்கள் கூவினர்.

''இக்கணமே இவள் பாண்டியப் பெருமகள். தென்னவனின் கோப்பெருந்தேவி'' என்று அமைச்சர் சொன்னார். ''வெற்றியும் புகழும் வாழ்வும் செல்வமும் வளர்கவென இவள் சிலம்பு எம் குலத்துக்கு அருள்க.''

வான்புகழ் புகாரில் விண்ணவர்கோனுக்குப் புனல் நீராட்டும் இந்திரவிழா தொடங்கியது. முதல் நாள் தீவுகளின் அன்னையாகிய சம்பாபதிக்குப் பலியும் அவியும் அளித்து அமைதி செய்யும் தீவகப்பலி. காவிரி கடல்காணும் தென்திசை முகப்பில் கரையோரம் ஓங்கிய நாவல் மரத்தடியில் செங்கற்றளியில் கோயில் கொண்டிருந்த சம்பாபதி அன்னைக்குக் கால்கோள்பூசை இட ஏழ்பத்து காதம் நீண்ட சோழியன் கடற்கரையிலிருந்து இருள்பிரியா அதிகாலையில் காகந்தர் எனப் பெயர் கொண்ட பரதவப் பெருங்குலமக்கள் காணிக்கைகளுடன் வந்தனர். ஆமையோடு களில் சோறும் மலரும் புதுமுத்துக்களும் வலம்புரிச்சங்கும் படைத்து சிப்பித்தகடுகளில் மீன்நெய் விட்டேற்றிய அகல்விளக்கு களுடன் தங்கள் மைந்தரும் மகளிரும் கூடிநிற்க மூதன்னையைக் கைதொழுதனர். செம்பவளத்தில் செதுக்கப்பட்ட அம்மையின் ஆறடிச்சிலை விரித்த செஞ்சடையும் அஞ்சேல் என அகன்ற திருக் கரமும் கொண்டு மூதாட்டி வடிவில் எழுந்தருளியது.

காகந்தர் சென்றபின் கணிகையர் குலங்கள் தங்கள் அகில் மணக்கும் தெருக்களிலிருந்து முகிலாடையும் முத்தொளியுமாகத் திரண்டு வந்தனர். வட்டுடையும் கச்சும் மென்துகிலும் அணி செய்ய நிரைநிரையாக நடந்தனர். அன்னைக்கு இரண்டாவது பூசனை அவர்களுக்கு உரிமை. தங்கள் இல்லங்களுக்கருகே குடிவைத்திருந்த யாழின்இறைவி மாதங்கியின் சிறுபடிமங்களை வெண்கலத்தாலங் களில் வெண்மலர்களும் அகிற்சந்தனமும் சுடர்சிற்றகலும் சேர்த்துத் தூக்கி தலையில் சுமந்து அன்னையருகே கொண்டுவந்தனர். பூசைக் காகத் தங்கள் நிலவறைகளில் சேர்த்துவைத்த சித்திரத்தொழில்சேர் ஆமையோட்டிலும் சுறாமுள்ளிலும் செய்த தொல்யாழ்களைச் சுமந்துவந்தனர் சிலர். சம்பாபதி அன்னைமுன் தங்கள் நறுமணம் நிறைந்த சாயல் நிலத்தில் விழ விழுந்து பணிந்தனர்.

அன்னை ஆலய முற்றத்தில் முதுகணிகையர் பேராமை யோட்டில் மீன்தோல் நரம்புகட்டிய யாழ்களை மெல்ல

மீட்டுகையில் ஆழத்தால் மட்டுமே அறியமுடியும் இசையொன்று எழுந்துவந்தது. பேரலைகள் பொங்கி விழுங்கிய சம்பாபுரியெனும் தீவகத்தின் மூழ்கிய பெருமாளிகைகளில் கடல்திரைகள் மோதும் விம்மல் அது. அது கேட்டு இளம்கணிகை ஒருத்தியின் கால்கட்டை விரல் கரைவந்த கெண்டைபோல துடிக்கத் தொடங்கியது. அத் துடிப்பு மெல்ல அவள் கால்களுக்கு, இடைக்கு, மார்புகளுக்கு கைகளுக்கெனப் பரவி அவள் கூந்தல் கொடுங்காற்றில் இளங் கமுகின் ஓலைகள்போலச் சுழன்றது. கனவுகளில் மட்டுமே அவர்கள் கேட்டிருந்த சொற்கள் அவள் உதடுகளிலிருந்து எழுந்தன. அலறி நெளிந்து ஆலயத்து கருவறைக்குள் ஓடிச் சென்று அன்னை யின் காலடியில் தலை எழுந்து நின்றாள். அவள் முன் கணிகையர் குலம் பணிந்தது. "முக்குலம் பெருகுக. முதற்குலங்கள் பெருகுக!" என்று அன்னையின் அருட்சொல் எழுந்தது.

அன்று நண்பகல் காவிரிக்கரையின் குளிர்சோலையில் ஓடைகள் சுழிக்கும் ஒலி நிரம்பிய பெருமரத்து வேர்களில் அமர்ந்து மூத்த கணிகை சொல்லில் இருந்து சொல்லெடுத்து நீண்டு தன்னை வந்தடைந்த தங்கள் பழங்குடிப் பாடலை இளம் கணிகையருக்குச் சொன்னாள். தென்கிழக்கே கடல்நடுவே நாற்புறமும் கலங்கள் அணையும் பெருநகரம் ஒன்றிருந்தது. ஊழிகள் ஏழுக்கு முன்பு எழு கடல் உண்ட அந்நகரின் பெயர் சம்பாபுரி. ஏழு பெரும் பெருங் குலை மாடங்களுக்கு நடுவே இலாட வடிவம் கொண்ட பெரும் சதுக்கமும் அரைவட்ட வடிவத் தெருக்களும் கல்மாடங்களும் கொண்ட அப்பெருநகரத்து எழில் கண்டு கடலாழத்து இறைவி நீலப் பேராச்சி அதைத் தன் மடியில் சேர்க்க எண்ணினாள். தன் நீலக் கூந்தலை அவிழ்த்து அலைகளாக்கி ஏவி அதை அழித்தாள். உயிர் பிழைத்த சாம்பவர்கள் பன்னிரு குழுக்களாகச் சிதறிப் பெருநிலத் தில் பரவினர். சம்பாபுரியின் பரதவர்குலம் காகந்தர். அதில் ஏழு குடும்பங்கள் மட்டும் கடலாமை ஓடுகளைப் புணையாக்கி கரை யொதுங்கின.

சம்பாபுரியின் இலாடவடிவச் சதுக்கத்தைச் சுற்றி ஏழு வீதிகளில் வாழ்ந்த எண்ணூறு குடியினரான பூசனைப் பாவையரே அன்று சம்பாபதி அன்னையை உரிமை கொண்டிருந்தனர். சம்பா புரியின் மன்னனும் அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டவனே. முழுநிலவு நாட்களில் பாவையர் கூடிப் பாவிசைத்து அன்னையின் சிலையை கடல்நீராட்டி கோயில் சேர்த்து தூமணி விளக்கெரிய நித்திலப்பூம்பந்தற்கீழ் நிலைநாட்டி வணங்குவதுண்டு. அவர்கள் அன்னையரானாலும் அழியாக் கன்னிமை கொண்டவர்கள்.

எண்களெல்லாம் அவர்களுக்கு உரிமையாக இருந்தன. கணித்தமையால் அவர்கள் கணிகையர் எனப்பட்டனர். சம்பாபுரி கடல் கொண்டபோது தங்கள் குல யாழ்களுடன் சிறுகலமேறித் தப்பி வந்த ஏழு கணிகையர் குலம் கடற்கரையில் பரவியது. காகந்தரும் சாம்பவரும் அவர்களைப் பூசனைப்பாவையராக்கி வணங்கினர்.

காவிரி புதுப்புனல் பெருகிக் காகந்திக்கு வந்தபோது அன்னையின் சுடர்களை சிப்பிஓடுகளில் ஏந்தி பூசனைப்பாவையர் அதை வழிமறித்தனர். தங்கள் கன்னிமையின் வல்லமையால் எட்டுத் திங்கள் பெருகும் புனலைக் கட்டி வைத்தனர். புதர்க்காட்டின் ஆழங் களுக்குள் காவிரி நிலை சுழன்றலைந்தது. கரைநிலக் கோமான் காந்தமன் வந்து பாவையரைப் பணிந்து புகல் கேட்டான். குறுமுனி வருக என்றனர் பாவையர். காகந்தர் கண்ணீருடன் கோர குறுமுனி ஓலை தந்தனுப்பினான். சம்பாபதி அன்னைக்கு என்றும் இளைய மகளே காவிரி என்றான் குறுமுனி. அங்கு முளைக்கும் நகரங்கள் தழைக்கும் குலங்கள் அனைத்துக்கும் முதற்கடவுள் முதுகன்னி யாகிய சம்பாபதியே என்று வாக்களித்தான். பாவையர் வழிகாட்ட காந்தமன் இரு பெரும் மணற்குவைகளை அகற்றியபோது காவிரி கடல் சேர்ந்தது.

காவிரி கடல் சேர்ந்ததும் கடலைச் சூழ்ந்த நாற்றிசையும் காவிரியில் இணைந்தன. சோழியன் வளநாடும் சோறும் சொல்லும் செழிக்க வளர்ந்தது. பாவையர் குலம் பெருகிக் கலைகளும் இசையும் கைகொள்ளும் ஏழாயிரம் குலங்களாகப் பெருகியது. பாவையருக்கு மங்கலநாண் மட்டும் சம்பாபதி அன்னையால் விலக்கப்பட்டிருந்தது. மன்னரும் தாள்பணியும் மங்காப் பெருங் கலைகள் அவர்களுக்கு ஏவல் புரிந்தன. பரந்தமையால் காகந்தர் பரதவர் எனப்பட்டனர். அவர்களைப் பரப்பியமையால் பாவையர் பரத்தையர் ஆயினர். கோழியன் செம்பளிங்குக் கல் செதுக்கிச் சம்பாபதிக்கு இத்தொல்கோட்டத்தை அமைத்தான். பின்பு சோழன் நலங்கிள்ளி நகர் நடுவே அனைத்து மக்களும் வணங்கும் நால் நிலைக்கோட்டத்தை எழுப்பினான்.

ஆனால் சம்பாபதி அன்னையின் முதல் ஆலயம் கிழக்கே கடல் நீருக்குள் நின்று நெளிந்துகொண்டிருக்கிறது இன்னும் என்றாள் முதுகணிகை. இந்நகரமும் நான்மாடவீதிகளும் மக்களும் மன்னனும் எல்லாம் அந்த விதைமுளைத்த கொழுந்துகளே. தன் வயிற்றைத் தொட்டுக்காட்டி இங்கே நம் கருவறை ஆழத்தில் குடி கொள்வதும் அந்நகரமே என்றாள். நாம் பூசனை உரிமையை இழந்து விட்டோம். கணிதமும் கருதல் அறிவும் அகன்றுவிட்டன.

எனினும் இம்மண்ணில் எங்கு சென்றாலும் நம்மிலிருந்து சம்பாபதியின் பாவையர் பெருங்குலம் முளைக்கும் என்றாள். கண்ணீர் கனத்த விழிகளுடன் இளம் கணிகையர் கேட்டிருந்தனர்.

தொலைவில் தோற்பெரும்பறை முன்முழங்க அந்திமுதற் கள்ளும் அயிரைமீன்கறியும் சேர்த்துண்டு மயங்கிய சாம்பவர் குறுமுழவுத் தாளம்சேர்த்து நடனமிட்டு அன்னையின் மூன்றாம் வரிசைப் பூசனைக்கு வந்துகொண்டிருப்பதைக் கணிகையர் கண்டனர். ஆராசனை கொண்டெழுந்த இளம்கணிகையினூடாக அன்னை சொன்ன சொற்களை அவர்களில் பலர் கூறிக் கொண்டனர். "முக்குலம் பெருகுக. முதற்குலங்கள் பெருகுக!" முதுகணிகை ஒருத்தி மெல்ல எழுந்தபடி "ஆம் அவ்வாறே ஆகுக" என்றாள்.

ᘓ

பட்டினப்பாக்கத்துக்கும் மருவூர்ப்பாக்கத்துக்கும் நடுவே இருந்தது நாளங்காடி. கடல் சேராது திரும்பிய காவிரிநீர் ஊறித் தேங்கிச் சதுப்பான தாழ்நிலத்தில் வேங்கையும் மருதும், கோங்கும் கொன்றையும், மண்ணள்ளி முற்றிய வேர்களும் திண்ணென் றெழுந்த தடிகளுமாக நெருங்கியடர்ந்து நின்ற மரங்களுக்குக் குறுக்கே தடிநீட்டி பலகை வேய்ந்தெழுப்பி புற்கூரையும் ஓலைக் கூரையும் வேய்ந்த பீடிகைகளினாலான நாளங்காடி வீதி சுருட்டிய தலைப்பாகை நிலத்தில் அவிழ்ந்து விழுந்து சுற்றவிழ்ந்து நீண்டது போன்றிருந்தது. மேல்நுனி புலிகோடிபாறும் பட்டினப்பாக்கத்துப் பெருவாயிலில் தொடங்கியது. கீழ்நுனி, தொங்கும் வானெழினிமீது கடலெழினி அலைக்கும் பெருந்திறப்பாகிய மருவூர்ப்பாக்கத்தில் சென்றுசேர்ந்தது. கற்பாறைகளும் தடித்த மரப்பலகைகளும் அடுக்கிய சாலையில் தசை நுறித்த காளைகளும் பிடரி சிலிர்த்த புரவிகளும் குளம்புகள் ஊன்றி மூச்சு சீறிச்செல்ல தொடர் சகடங் கள் அதிர்ந்தும் முரண்டும் சென்றன. கொள்வோர் ஓசையும் கொடுப்போர் ஓசையும் ஓங்கின. பொற்கலமும் நெற்குவையும் விற்போர் கட்டிய கொடிகள் காற்றிலாட மரங்களெங்கும் பறவை களின் சிலம்பலும் பூசலும் எழுந்தபடியே இருந்தது.

பறவைகள் கூடணைய வருகையில் அங்காடிமுன் திரைச் சீலைகள் தொங்கவிட்டு வணிகர் தங்கள் இல்லங்களுக்குச் சென்று நீராடிப் புத்தாடையும் வண்ணத்தலைப்பாகையும் அணிகளும் பூண்டு மறுகுதொறும் பெருகி நாளங்காடி நடுவே சதுக்கத்தில் எழுந்த பூதத்துக்குப் பூசனைசெய்ய வந்து குழுமினர். பட்டினப் பாக்கப் பெருவாயில்மீது ஏற்றப்பட்ட கவின்முரசம் விம்மியதிர்ந்த போது வணிகர் மகளிரும் ஏவல் மகளிரும் சாயல் மயில்களென வண்ணப்புத்தாடை பொலிய வந்து குழுமினர். செம்பு நிற யவனரும் இரும்பு நிறக் காப்பிரிகளும் கொம்பு நிறச் சோனகரும் சங்கு நிறச் சீனரும் தங்கள் மொழிகளில் கூவியும் குழறியும்

முழங்கியும் மூளியும் பேசியபடி வந்தணைந்தனர். மரக்கலங்களின் பாய்த்தட்டுகளில் மீன்நெய் விட்ட பந்தங்கள் எரியத் தொடங்கிய போது கீழ்த்திசையெங்கும் செவ்விண்மீன்கள் ஆயிரம் முளைத்து அதிர்த்தன.

நாளங்காடிப் பெரும்பூதம் நான்கு திசையும் நீர் சூழ்ந்த சதுப்புக்கு நடுவே ஓங்கிய சம்பு மரங்களின் நிழலில் கிடைக்கல் மீதெழுந்த நெடுங்கல்லாக நின்றிருந்தது. செங்குழம்பும் மஞ்சளும் பூசப்பட்ட அதன் கல்லுடலின் தலைப்பகுதியில் இரு கருவிழிகளும் பசித்த பெருவாயும் தீட்டப்பட்டிருந்தன. முறைப்பூசகன் முது சாம்பான் நரைத்தாடியும் திரைச்சடையுமாக நின்று அதற்கு குளிர் நீர்மலர்களால் அணி செய்தான். தாழையும் தாமரையும் வாழையும் வளரியும் சூடி நின்று பூதம் திறந்த விழிகளால் தன் முன் விரிந்த நாளங்காடியின் செஞ்சுடர்ப் பந்தங்களையும் மென்னொளிச் சிதர் விரியும் பொன்னகைகளையும் மருண்டு நோக்கியது.

முதுசாம்பான் அந்த மருட்சியை நன்கறிவான். எத்தனையோ தலைமுறையாக அவனுடைய குலமக்களின் விழிகளில் தேங்கி மெல்லமெல்ல அவர்கள் விழியாகவே ஆகிவிட்ட உணர்வு அது. பிறந்த குழந்தையே அம்மருண்ட கண்களுடன்தான் வெளிவரும் என அவன் கண்டதுண்டு. கண்ணும் எண்ணும் காணாக் காலங் களுக்கு அப்பால் அந்தச் சதுப்புவெளியில் அவனது தந்தை சம்பங் கோழியொன்று சம்பா என்று கூவி மேலெழுந்த புதரை வெட்டி நீக்கி அங்கே அவருக்கு மட்டுமாக பதிட்டை செய்த சம்புகத் தெய்வம் அது. சாம்பர் குலத் தெய்வங்களின் குறுங்காடுகளையெல்லாம் புகார் கைவிரித்து அணைத்து உடலாக ஆக்கிக்கொண்டதை அவன் குலம் செய்வதறியாது கண்டுநின்றது. சம்புகத் தெய்வங்களெல்லாம் புகாரின் சதுக்கப்பூதங்களும் சாரணப்பூதங்களும் அணுக்கப் பூதங்களும் அரண்காவல் பூதங்களுமாக மாறிப் புகார் முழுக்க பதைத்த விழிகளும் பசித்த வாய்களுமாக அமர்ந்திருந்தன. அத் தெய்வங்கள் யாரென்றே அறியாத அயலவர் அவை கண்டு அஞ்சி, நடுங்கும் அவிகளையும் பலிகளையும் அவற்றுக்கு வழங்கினர். பட்டினப்பாக்கத்தில் தேனும் தினைமாவும் வாழை இலைமீது பூவும் புதுக்கனியும் வைத்துக் கணிகையர் வணங்கினர். பொன்னும் மணியும் வைத்து வணிக வீதியில் கைகூப்பினர். மருவூர்ப்பாக்கத்துப் பூதத்துக்கு யவன வீரர்கள் அவர்களின் விழாநாளில் நீலச்சிமிழ் நிறைக்கும் நறுமதுவும், இளங்கன்று சுட்ட தொடைக்கறியும் படைத்து வழிபட்டனர். பூதங்கள் எதையும் மறுக்கவில்லை. எதையும் ஏற்கவுமில்லை. அவற்றின் கண்கள் உள்முகமாகத்

திரும்பிக் கடல் மூடிய பெருநகரத் தெருக்களின் பேரமைதியை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தன.

முதுசாம்பான் மணியோசை எழுப்பியதும் பூசை தொடங்கியது. பெருமுரசங்கள் ஒன்று கேட்டு மற்றொன்று என முழங்கத் தொடங்கி ஒன்று பிறிதொன்றுடன் இணைந்து நிலத்தெழுந்த இடிகளென எண்டிசை நிறைத்தன. மருவூர்ப்பாக்கத்திலிருந்து காவல் மறவரும் பட்டினப் பாக்கத்திலிருந்து படைகொள் திறவரும் தங்கள் ஒள்வாள் தோள்வில் வெள்வேல் ஏந்தி வந்து குழுமினர். இருசார் மறவரும் காவிரிநீரும் கடல்நீரும்போல ஒன்றாகியும் ஒன்றாமல் இருபெரும் ஒழுக்குகள்போல "வெற்றி வேந்தன் கொற்றம் வெல்க!'' என்று விளிகளெழுப்பி நடந்தனர். தோள் கொட்டியும் தொடைதட்டியும் வாள்சுற்றியும் நாண்முழக்கியும் வீரர்கள் நடமிட்டு வந்தனர். குடுமித்தலைகள் கடல்மீன் கூட்டங்கள்போலப் பலிபீடிகைக்குச் சுற்றும் சூழ்ந்து அலைத்தன. பலிபீடத்துக்கு முன் விரித்த வாழையிலைகளில் புழுக்கல் சோறும் பூவும் எள்ளும் விழுக்குடை உணவும் விளங்கும் புகையும் பொங்கலும் இனிப்பும் மிரியல் ஊனும் முரிபுளிச்சாறும் குவையெனச் சொரிந்து கைகூப்பி நின்றனர். முதுசாம்பான் மணியோசை முழக்க மீன்நெய்ப்பந்தம் மும்முறை சுழற்றி பூதத்துக்கு நெருப்பாடல் செய்ததும் முரசுகள் நின்றன. பூதம் உண்ட தீதறுபண்டம் அனைவருக்கும் பகிரப்பட்டது. முதற்பெரும்பங்கு சாம்பவர் குலத்துக்கு. பின் ஒருபங்கு கோழியன் குலத்துக்கு. எஞ்சிய சோற்றை கணிகையரும் பரதவரும் மறவரும் உழவரும் குறவரும் மள்ளரும் வணிகரும் உமணரும் முறைப்படி பகுத்துக் கொண்டனர்.

ஊன்சோறு உண்ணும்போது புகார்ப் பெருங்குலங்களெல்லாம் பூதத்தின் குரல் கேட்கச் செவிகூர்ந்தன. முரசங்கள் கடற்காற்றில் விம்மி விம்மி நின்றன. கூட்டத்தில் எங்கிருந்தோ சீறிஎழும் அரிமாபோலப் பூதப்பெருங்குரல் எழுந்தது. தோள் கனத்த வாள்சுழற்றி இளமறவன் ஒருவன் அலறியெழுந்து பலிபீடம் நோக்கி ஓடினான். முரசுகள் வெறிகொண்ட யானைகள்போலக் குமுறியெழுந்தன. வாளேந்திப் பீடம் கொண்டவன் வாயிலிருந்து முதுசாம்பான் மட்டும் தன் கனவில் கேட்டு மறந்த பொருள்மறைந்த சொற்கள் எழுந்தன. சுழன்ற வாள் கழுத்தைத் துணிக்க தன் தலையைக் கையில் ஏந்தி நின்று குறையுடல் குழைந்தாடியது. முரசுகள் இடிமுழக்க குரவைகள் பெருக்கெடுக்க மறவர் முட்டி மோதி பலிபீடம்மீது ஏறினர். தலைகள் உருண்ட மண்ணில் பச்சை உதிரம் வெம்மை பரப்பி வழிந்தது. பூதம் விழித்த கண்களுடன்

பார்த்திருக்க கடல்கொண்ட சம்பாபுரியின் மூழ்கிய பேராலயங்களில் சரிந்தும் சிதைந்தும் கிடந்த சிற்பங்களில் ஒன்றின் கண்களில் மட்டுமே சிரிப்பொன்று மிளிர்வதை வால்சுழற்றித் திரும்பிய வாளைமீன் கண்டு சிறகுகளை விரித்து அசைவற்று விழிவிரிய நின்றது.

ᘓ

கொற்றவை

விண்ணவர்கோன் வீற்றிருக்கும் வச்சிரக்கோட்டத்தின் முரசை பொன்னணிந்த யானை மருப்பின்மீது ஏற்றி , மங்கல நெடுங்கொடி ஏந்திய கொடிகாப்போன் பின்னிருக்க நிமித்திகன் முன்னமர்ந்து மருவூர்ப்பாக்கத்தும் பட்டினப்பாக்கத்தும் இந்திரன் விழாவுக்கு எழும் செய்தியை அறைந்தனர். 'மழைவளம் காக்கும் இடியுடை வேந்தன் மன்னுயிர் ஓம்பும் விண்ணவர் கோமான் வாழிய நீடு ! வாழிய செங்கோல்!' என்று தெருக்களெங்கும் பேரொலி எழுந்தது.

வெண்கொற்றக்குடைமீது அரதனமாலை அசைந்து ஒளிர் விடும் பொற்றேர் மீதேறிக் கோழியன் கோப்பெருஞ்சோழன் இந்திரக்கோட்டத்துக்கு எழுந்தருளினான். மணிக்குண்டலங்களும் பொற்றலைப்பாகையுமணிந்த அமைச்சர் குழுவும், மங்கல நறும் பொருட்களேந்திய பூசகரும், வாளும் கேடயமும் ஏந்திய படைத் தலைவரும் சாரணரும் என ஐம்பெருங்குழுவும் அவனைச் சூழ்ந்து வந்தன. அவன் நடந்த தெருக்களில் எண்பேராயமும் கூடி வாழ்த் தொலி எழுப்பினர். படைப்புரவிகள் கழுகுப்பூ வாலுதறி, சரப்பிடரி சிதறி, பொய்நடையும் விரைநடையுமாகச் செல்ல முகபடாமும் முத்துமணியும் அணிந்த பட்டத்துயானை புலிக்கொடி பட்டொளிர பொதியெனப் பூவெனக் காலெடுத்து வைத்து உடற்கருமையில் இருள்நெளியப் பின்சென்றது. சங்கங்கள் கூவ, கொம்புகள் பிளிற, முழவுகள் உறும, சேங்கிலைகள் சிலம்ப, மங்கலப் பெருநடைக் கோலம், வண்ணக்குருவிச்சிறகுகள் எனப் படபடக்கும் தோரணங் களும் முகில்கீற்றுகள் என நெளியும் கொடிகளும் நிறைந்த நகரத் தெருக்களில் சென்றது.

அரண்மனை வலப்புறத்துச் சிற்றாலயத்தே நிறைந்தெழுந்த வலம்புரிக்கையும் நலம்புரிக்கையும், ஒற்றைக் கொம்பும் பற்றறு அப்பமும் கொண்ட ஆனைமுகத்து அழகன் ஆலயத்தில் முதல் வணக்கம் செய்தும் அறுமுகவேலன் நறுஞ்சுனைக் கோட்டத்தில்

தலை தாழ்த்தி மலர்நீர் கொண்டும் சோழனும் சுற்றமும் சென்றனர். விண்தொட்டு மண்மேவிய செவ்வொளிக் கதிரென அண்ணாமலை தோன்றிய அரனுறையும் ஆலயத்தில் மன்னன் நகர்வலம் வந்து நிற்க கவரியும் நிறைகுடமும் கொண்டு சைவக்குரவர் நூற்றுவர் எதிர் கொண்டனர். கற்றளிக்கோவிலின் கோபுர முகப்பில் முரசம் அதிர கொம்புகள் ஆர்க்க சோழன் நுழைந்து கருவறையில் எழுந்த பெருவுருவை வணங்கி நீறும் வில்வமும் கொண்டான்.

மணிவண்ணன் கோட்டத்துப் பெருவாயில் முகப்பில் மன்னனின் அணிபெரும்படை நின்றதும் கோட்டை மீதிருந்து காவற்பெருமுரசு ஒலிக்க விண்ணளந்தோன் ஆலயத்துப் பூசகர் எழுவர் நிறைகும்பமும் மங்கல மலர்க்குவையும் நறு நெல் மணிகளும் கொண்டுவந்து மன்னனை வாழ்த்தி எதிர்கொண்டனர். மால்கொண்ட மால் என விரிந்த நின்றசீர் நெடுமாலின் அரங்கில் விண்ணவநெறி காக்கும் வைணவர் குலம் கூடி ஆழியான் கொண்ட ஆயிரம் பெயர் பாடக் கேட்டு ஆழி மட்டுமே அறிந்த அழியாப் பெயர் ஒன்றை உணர்ந்து முடி தாழ்த்தினான்.

நால்வகைத் தேவரும் பதினெண் கணமும் பால்வகை தெரிந்து பதிட்டைசெய்த ஆலயம்தோறும் பணிந்தும் வணங்கியும் வேள்வியும் கேள்வியும் வகைமுறை தெளிந்த வேதியர் தெருக் களில் மலரும் நீரும் மாண்புறக் கொண்டும், சோழன் கொற்றக் குடை சென்றது. அறவோர் கூடும் சமணர்பள்ளியும் துறவோர் கருதும் பசிப்பிணிச் சாலையும் சாக்கையர் இல்லமும் நீக்கியோர் விடுதியும் சென்று வாழ்த்தும் வரிசையும் கொண்டு சோழன் வெண் குடை விண்ணவர்வேந்தனின் வச்சிரக்கோட்டத்தை அடைந்தது.

நெடுநாள் முன்பு குறுமுனி கமண்டலத்திலிருந்து காவிரி பிறந்தநாள் முதலாக கோழியன் குலம் காக்கும் விண்மன்னனுக்கு விழாவெடுக்கும் நாள் தொடங்கியது என்பது பாணர் பாடல். காவிரி வரும்வழியில் அவுணரும் இயக்கரும் நீர்த்தடை இயற்றிய போதெல்லாம் இந்திரனின் வச்சிரமே அவளுக்குக் காவலாயிற்று. கருங்கொண்டல் மண்ணிறங்கும் குடகு முதல் நீலக்கடல் திசைவிரிக்கும் புகார்வரை காவிரி சுருளவிழ்ந்த வழியெங்கும் அகல்விசும்புளார் கோமானுக்கு ஆயிரம் ஆலயங்கள் எழுந்தன. சித்திரையின் முழுநிலவு நாளில் எங்கும் அவனுக்கு இளவேனிற் பெருவிழா எடுக்கப்பட்டது. மலைக்குடிகளும் மன்னர்பெரும் படைகளும் அவனை நிலையெடுத்து நீராட்டி மலர் கொடுத்து வணங்கினர். மேகங்கள் கனிந்து ஆடவை முதல் மடங்கல் திங்கள் வரை பெருமழையாக மண்ணில் கனிந்திறங்குமாறு வாழ்த்துவர்

கூவினர். இந்திரனின் அருளே தமிழுலகெங்கும் அமுதமும் ஞானமுமாயிற்று என்றனர் மூத்தவர்.

சோழன் வருகை கண்டு இந்திரக்கோட்டத்து வெண்கலப் பெருமணி இன்னொலி எழுப்பியது. மங்கலமுரசுகள் ஆர்த்தன. பல்லியங்கள் கறங்க பல்லோர் வாழ்த்தொலி முழங்க விண்ணவர் கோன் முன்னிலையில் மண்ணவர்கோன் வந்து இறங்கி மணி முடியும் திருநுதலும் மார்பும் இடையும் பொற்கழலும் உடைவாளும் மண்ணில்பட விழுந்து வணங்கினான். வேள்வி நறும்புகை மேவிய ஆலயத்தில் மூன்று நெருப்பும் நான்கு வேதமும் ஐவகைத் தொழிலும் அறுவகை நெறிநூலும் அறிந்த அந்தணர் அவைகூடி அரிசியும் மலரும் தூவி 'கொற்றவன் கோல் வாழ்க! மாமழை யோன் அருள் பொலிக! நிலமெங்கும் அமுதெழுக! வேதச்சொல் வளர்க!' என்று வாழ்த்தினர்.

பொற்பீடத்தில் புலிக்கொடி நீழலில் சோழன் பெருவளத்தான் அமர்ந்ததும் ஆயிரத்தெட்டு அந்தணர் கூடிப் பொற்குடங்களில் பொன்னியின் நன்னீர் முகந்து இந்திரனை நீராட்டினர். நூற்றொரு வகை நறுமலர்களால் அவன் உடலை மூடினர். அகிலும் சந்தனமும் மணக்க ஆரத்தி எடுத்தனர். மாமறைச்சொல் கொண்டு விண் ணெட்டத் துதித்தனர். காணும் திசையெலாம் சோழன் குடிமக்கள் கைகூப்பிக் கண்மலர்ந்து நின்றிருக்க விண்ணவர் கோமானுக்குப் பொற்பட்டும் புதுமணியும் அணிவித்துச் சுடர்நிரை காட்டினர். வான்புரப்போன் அருள மண்புரப்போன் வணங்கி ஏற்க வச்சிரக் கோட்டத்துக்குமேல் வேள்விப் புகையெழுந்து விண்புகையுடன் ஒன்றாகியது.

அன்று மாலை வானம் இருண்டு கார் திரண்டு புகார்மீது பெருமழை பொழிந்தது. சந்தனமும் குங்குமமும் சேறாகிக் கலங்கிய நீரில் மலரும் நறுங்கூலமணிகளும் மிதக்க செம்பளிங்கு நீரோடை கள் துள்ளிச் சுழன்று கடலுக்குச் சென்று கலந்தன.

ஓ

கடற்பறவைகள் சிறகுகளால் மூடிய கரையோரப் பெருமரம் போலிருந்தது புகார். நிலநகரும், நீர்மேல் அலைத்த கலநகரும், மின்னொளி சுடரும் மாடநகரும், இன்னிசை ஓயாக் கூடநகரும் எனத் தன்னையே ஆடிகளில் மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தது. மண்ணிறங்கிய விண்மீன்தொகைகள் என எரிசுடர்களும் உடுக்கூட்டங்களெனப் பந்தங்களும் பொலிந்த பெருவிரிவில் காற்று சுழன்று சென்ற பாதையைச் சுடரசைவாகவே காண முடிந்தது.

காற்றைக் கோவலன் நன்கறிவான். யாழின் குடத்துக்குள் ஒளிந்திருக்கும் மெல்லிய காற்றுடன்தான் அவன் விரல்கள் ஓயாது பேசின. யாழின் உடல் அக்காற்றின் கலமன்றி வேறல்ல. நரம்புகள் சென்று தொடுவது அதன் காணா நுண்மையையே. மெல்விரல் மீட்டல்களினூடாக அவன் மீண்டும் மீண்டும் வினவுவதெல்லாம் அதனிடம்தான். இசையென்பது அந்தக் காற்றின் அமைதியின் கரு முளைக்கும் தளிர். விரல்களில் இல்லை இசை. விரல்நுனிகளைத் துடிதுடிக்கச் செய்யும் அகத்தின் தாகத்திலும் இல்லை அது. கலங் களுக்குள் எல்லாம் தன்னை நிரப்பிக்கொள்ளும் வானத்தில் உள்ளது இசை. கலத்தில் அள்ளும் வானமே இசையா? தன் விரல் களை அவன் பார்ப்பதுண்டு. அவை ஒருகணம்கூட ஓயாமல் மீட்டிக் கொண்டிருக்கின்றன. யாழில்லாதபோது காற்றின் கற்றைகளை அல்லது வானின் விளிம்புகளை ஓயாது மீட்டி இவ்விரல்கள் எழுப்பும் முடிவற்ற வினாக்களின் தொகையா அவன் அகம்? அவ்வினாக்கள் சென்று மோதிப் பின்வாங்கும் விடையின்மையா அவன்?

இந்திரவிழாவின் இரண்டாம் நாள் நகரம் கள்வெறியும் கலி வெறியும் கொண்டு, ஆடலும் பாடலும் தேடலும் கூடலும் கொண்டு, நான் நான் என்றும் இங்கே இங்கே என்றும் வாலை நோக்கி அறைகூவும் பல்லாயிரம் உயிர்களின் தொகையாக மாறும் தன் விரல்நுனிகள் காற்று தொட்ட தளிரிலைநுனிகள் போல்

வானம் வானம் என்று தவிப்பதை கோவலன் உணர்ந்தான். ஆனால் கண்ணகியிடம் அவன் சொற்களெல்லாம் சொற்களாகவே வடிவம் கொள்கின்றன. அவன் அசைவுகளெல்லாம் அசைவுகளாகவே எஞ்சுகின்றன. எத்தனை அர்த்தமற்றது சொல்லாக நிற்கும் சொல்! எத்தனை இழிவானது அசைவாகவே எஞ்சும் அசைவு! அக்கணங்களில் சொல்மூலமும் அசைவுமூலமும் வெளிப்படத் துடிக்கும் அது கூசிச் சிறுக்கிறது. தன்னைச் சிறுமைப்படுத்தியமைக்காக சீறிச் சினக்கிறது.

என்ன உணர்கிறாய் நீ? இச்சொற்களும் இவ்வசைவுகளும் நானல்ல என்றாவது நீ அறிவாயா? என்னை உள்நின்று நிரப்பி எழும் எழுச்சி மட்டுமல்ல நான். அவ்வெழுச்சியை உள்நின்று நிரப்பும் உணர்வு மட்டுமல்ல. அவ்வுணர்வை உள்நின்று நிரப்பும் நானறியா நான் வேறு என நீ அறிவாயா? காமம் கண்ணற்ற மூக்கு கூர்த்த விலங்கு. காதலோ அஞ்சிக் கிளையிலைக் கொத்துகளுக்குள் பதுங்கி இருந்து கூவும் இளவேனில் பறவை. குளிர்ந்த கற்பாறைமீது காற்று பொறிக்கும் தடம் என்ன? குளிர்ந்த பாறைமீது மல ருதிர்க்கும் செடி அறிவதென்ன? குளிர்ந்த பாறைமீது தலை யுடைக்கும் கடலலை சொல்வதென்ன?

காற்று செல்கிறது, சுடர்களை நடுங்க வைத்து தழல்களை சினக்க வைத்து, திரைகளை நெளியவைத்து, மலர்களை உதிர வைத்து, இலைகளைச் சீறவைத்து, மரக்கலப் பாய்களை விம்ம வைத்து, கடலலைகளை ஆர்ப்பரிக்கவைத்து... காற்று பட்டினப் பாக்கமும் மருவூர்ப்பாக்கமும் கொந்தளிப்பதைக் கண்டு செல் கிறது. அரசவீதியும் ஆவண வீதியும் கொடித்தேர் வீதியும் கோவியர் வீதியும் அல்லங்காடியும் நாளங்காடியும் கடந்து செல்கிறது. வேயா முகடும் வியன்கல இருக்கையும் கொண்ட மாளிகைகளையும் மான்கண் சாளரங்களில் செவ்வொளி எழுந்து கைபல நீட்டி இருள் வான் தூழாவும் மாடங்களையும் தாண்டி ஆயிரம் கண்ணோன் விண்ணவர் கோமான்போல ஆயிரம் சுடரேந்தி ஆடும் மரக் கலங்கள் அணிவகுத்த மருவூர்ப்பாக்கத்து யவனர் புலங்களைத் தாண்டிச் செல்கிறது.

காற்று தனித்தலைவது. காற்று தணியாத் தாகம் கொண்டது. திறந்துவைத்த மதுக்கிண்ணங்களில் அலையெழுப்புவது. சிரித்து விரிந்த செவ்விதழ்களை முத்தமிட்டு உலரச்செய்வது. கன்னியர் நெகிழ்க்கும் அணிபட்டு ஆடைகளில் நுழைந்தேறுவது. அவர் சிணுங்கி மூட சிரித்துச் சுழன்று செல்வது. கன்னங்களில் சுடர் தெறிக்கும் பொன்மணிக் காதணிகளுடன் தானும் ஆடுவது.

கூந்தல்கற்றைகளை அள்ளியும் கோதியும் விளையாடுவது. அகில் மணமும் சந்தன மணமும் முகர்ந்து சுமந்து அலைவது. பொற் சதங்கை மணியொலியும் மேகலை மென்னொலியும் வாங்கிச் சிரிப்பது. காற்று கன்னியரையும் மலர்களையும் ஒருபோதும் தவற விடுதில்லை. காதலியர் கண்கள்போல வெட்கும், பொய்க்கோபம் கொள்ளும், ஒளிர்ந்து சீறும் சுடர்கள் மட்டுமே காற்றை அறியும்.

தழுவுதலெனும் செயலே காற்றென ஆயிற்று . மண்ணையும் விண்ணையும் நீரையும் நெருப்பையும் தழுவுகையில் மட்டுமே காற்று தன்னை அறிகிறது. ஒருகணமும் ஓயாது தழுவிக்கொண்டே இருக்கிறது அது. மலர்களையும் சருகுகளையும் மதவேழ மத்தகங் களையும் மீளமீளத் தழுவியும் அதன் விரைவு அடங்குவதில்லை. ஆனாலும் காற்றும் நெருப்புமே ஒன்றுக்கென பிறிது உருவானவை. தழுவுகையில் தாளமும் இசையும்போல, சொல்லும் பொருளும் போல, அத்தனும் அம்மையும் போலத் தழுவ அவற்றால் மட்டுமே இயலும். காற்று நெருப்பை ஓயாது தேடிக்கொண்டிருக்கிறது. காற்று வந்து தீண்டும்வரை கனன்று கனன்று காத்திருக்கிறது நெருப்பு.

ꕥ

காமம் முடிவேயற்ற விழா. விழாவில் எதுவுமே ஒருமையில் இல்லை. விழாவில் எவருக்குமே முகம் இல்லை. விழாவில் அனைவர் குரலும் அனைவரையும் அழைக்கிறது. விழாவில் அனைவருமே தனித்தவர்களும்கூட விழா அனைத்தையும் சுமந்து சுழலும் காற்று. இந்திரவிழாவில் இருளிலும் ஒளியிலும் கள்ளிலும் கன்னியர் வரிசையிலும் மூழ்கித்துழாவுகையில் கோவலன் தன் உடலை ஒரு எடையற்ற தக்கையாக உணர்ந்தான். உள்ளே எடையின்மை தேங்கி விண்ணைநோக்கி அவனைத் தூக்கியது.

காமம் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டு உடலை நம்ப வைத்துக் கொள்ளும் ஒரு பொய்யா? மெல்லப் பற்றுகையில் விரல் நுனியில் தன் வண்ணங்களை விட்டுவிட்டு மடியும் பூத்தும்பியா? எய்தவே முடியாத பண்ணை நினைவூட்டி இப்பால் நின்று துடிக்கும் யாழ் நரம்பா?

பரத்தையர் உடல்கள். பெண் உடல்களை அவன் வெறுப்பதை மீண்டும் மீண்டும் அவற்றில் சரிகையில் உணர்ந்தான். முதற் கணத்து மன எழுச்சிக்குமேல் பெண்ணுடல் எப்பொருளும் தர முடியாதபோது, காமமையங்களாக உடலைச் சுருக்கிக் கொள்ளாமல் மீண்டும் மீண்டும் பெண்ணுடல்களைப் பார்ப்பது ஆணால் இயலாது. பெண்ணை வெறுக்காமல் காமவெறி இல்லை. இப் பரத்தையர் இறுகப்பற்றிய கரவுக் கைச்சுருட்டுக் கொண்டவர்கள். அவர்களை வென்று அந்த விரல்களை விரித்து அவர்கள் வைத்திருக்கும் வெறுமையை உணர்வதுவரைதான் அவர்கள் பெண்கள். மீண்டும் மீண்டும். தங்கள் கைக்கோடுகளால் வியர்வையின் ஈரத்தால் பொத்தப்பட்ட வெறுமை. மீண்டும் மீண்டும். ஆனால் ஒரு முறைகூட அதைத் தவிர்க்க இயல்வதில்லை. ஒருத்தி வைத்திருக்கக் கூடும் ஏதோ ஒன்றை. அவனை ஒரு வெண்பருந்தாக வானிலேற்றும் அருள். அவனை ஒரு கரும்பன்றியாகச் சேற்றிலுழற்றும் இருள்.

திறக்கமுடியாத வாசல் முன் நிற்பதே அயர். திறக்கத்தயங்காத

வாசல்கள் வழியாக அதை மீண்டும் மீண்டும் உணர்வதோ பேரயர் அமைதியாக எரியும் தீ எத்தனை அச்சத்தையூட்டுகிறது. தீயெனில் அது சுடர்ந்தெழவேண்டும். படபடக்க நிறைவு நாநீட்டி மண் ணையும் விண்ணையும் உண்ணத் தவிக்கவேண்டும். நிறை கொள்ளா வெப்பம் மட்டுமேயான தீயோ மண்ணின் ஆழத்தில் உள்ளது. கல்லெரியும் கனல். பல்லாயிரம் காதம் ஆழத்தில் வெறும் அழுத்தம் மட்டுமாக உள்ளது அதன் வெம்மை. செங்குன்றம் மீதேறிச் சுடரக்கூடுமெனில் அது புரங்களையெரிக்கும் பெருந் தழலாகுமோ? உன்னும் ஊசலாடும் தயங்கும் தவிக்கும் என் ஓராயிரம் சொற்களைச் சொல்லின்மையே பெற்றுக்கொள்கையில் சிலவேளை மிக ஆழத்தில் தற்செயலென ஒரு பதில்சொல் எதிர் கொள்வதைக் கேட்கிறேன். அமைதியை அச்சம் மிக்கதாக ஆக்கி விடுகிறது அது. சொற்களெல்லாம் நாணொலி கேட்ட பறவைகள் என விலக வெறும்வெளியில் கைநீட்டி நிற்கிறேன்.

காமத்தை வென்றவரில்லை. காமனை எரித்த பின் காமிமுள் ஒடுங்கியவர்களே உண்டு. முப்புரம் எரிக்கலாம். திருமுற்றெரிக் கலாம். காமமோ எரிவது. எரியை எரித்தழிக்க எவரால் இயலும்? காமத்தைக் காணாதவர்களுக்கே அது அருள். காமத்தை காணும் நுதல்விழி திறந்தபின் மலர்க்கணை ஏற்கும்போதும் ஆழத்தில் ஒன்று தன்னிழிவு கொள்கிறது. காமத்தை அணைக்க காமத்தால் முயல்கிறேன். உடல்களைக் கொட்டி இவ்வேள்வியை இங்கே நிகழ்த்துகிறேன். ஆம், இவ்விழா உடல்களின் எரிதழல்...

பாடுக பாணர்! பரத்தையர் ஆடுக! ஆடியும் பாடியும் அகச் சொல் அவிக ! பொற்குவை கவிழ்த்துச் சொற்குவை கொள்க பேடியர் சூழ்க! சேடியர் சேர்க! ஆடை அகற்றி அம்மணம் கொள்க! அறிந்தவை அகற்றி வெற்றகம் கொள்க! இன்னரு நறுங்கள் இயல் வரை அருந்துக! மின்னிடை மாதர் முலைநிழல் துயில்க! அல்குல் அருமணம் உயிர்மூச்சாகுக! மூத்தார்கிளவி, நீத்தார் அருள்மொழி யாத்தார் வரைமொழி யாதும் இகழ்க! அறம் பொருள் யாவும் அறிவிலி கொள்க! காமம் ஒன்றே நெறியென்றாகுக! இது இந்திரன் விழவு. வான்விதையாகும் மாமழை முதல்வன் கோன்குடி வாழக் கோல்கொளும் திருநாள்! ஆடுக காமம்! பாடுக காமம்! காமம் ஒன்றே அகமென்றாகுக! காமம் ஒன்றே புறமென்றாகுக!

வச்சிரநன்னாட்டு மன்னன் கொடுத்த வரிமணிப்பந்தலும் மாகதன் அளித்த மாமணிமண்டபமும் அவந்தியரசன் அணிதிகழ் வாயிலும் சேர்த்து மங்காப்பெரும்புகழ்த் திருமாவளவன் சமைத்த ஓவிய மண்டபத்தின் முகமுற்றத்தில் கணிகையர் கூத்தும் பாணர்

பாட்டும் நுகரப் புகார்நகர மக்கள் குவிந்த அவையில் பண்யாழ் புலவர் பாடிய செம்பாலை கேட்டு கோவலன் நின்றான். மார்பில் தொய்யில் சாந்தும் குங்கும விழுதும் மலர்ப்பொடி மணமும் மணி நிறை ஆரமும் அணிந்து கள்சூழ் களியில் பாணர் சூழ பரத்தையர் தழுவ பட்டிமண்டப படிக்கட்டில் அமர்ந்தான்.

அரங்கில் ஒருத்தி ஏறக் கண்டான். அவள் பெயர் மாதவி என்றும் தலைக்கோலி சித்திராபதி பெற்ற மகளென்றும் பரத்தையர் சொல்லினர். நூபுரம் ஒலிக்க பாடகம் சலிக்க மேகலை குலுங்க அரியகம் அலுங்க அவள் ஆடுவதை அவன் கண்டிருந்தான். அரங் கெனும் அரக்கில் செந்தழற் கொழுந்தென ஏறிச் செஞ்சுடர் விரித்துக் கருங்குழல் சுழற்றி அவள் ஆடக் கண்டான். தேசிக்கூத்தும் மார்க்கக் கூத்தும் கொண்டு எழுந்தாடியது தழல்.

மன்னன் மகிழ்ந்து அளித்த தலைக்கோல் பட்டமும் ஆயிரங் கழஞ்சு பொன்னும் தளிரொளி சிதறும் பச்சைமாலையும் பெற்று மாதவி வணங்கினாள். மறவரும் வணிகரும் கூடிக் கூவிய தெருவில் கூனிப்பரத்தை ஒருத்தி அப்பச்சைமாலையை விலைகூவி நின்றாள். அக்கணமே அதை வாங்கி கோவலன் மாதவி இல்லத்துக்குச் சென்றான்.

அறிக, காற்று நெருப்பைக் கண்டுகொள்ளும் தருணத்தில் அனைத்தும் மீண்டும் தொடங்குகின்றன.

ᘓ

கணிகையரைக் கூடுகையில் கடலாழத்தைக் கூடுவதாக உணராத வணிகன் யார்? திருநிறைக் கலமும் தீராப்பெருங்கனவுகளும் ஒருகணத்தில் சுருண்டொடுங்கும் கடலாழத்தை வணிகனே அறிவான். அக்கடலாழத்தில் மூழ்கிய கலங்கள் அமைதிமிக்க மெல்லசைவுகளுடன் ஆடிநிற்பதை அவன் காணக்கூடும். மூதாதையரின் எலும்புக்கூடுகள் சிரித்து வெறித்து மல்லாந்து கிடக்கும் சேற்றுப்படுகைகளைக் காணக்கூடும்.

"உன் கடலாழம் என்னை அச்சுறுத்துகிறது'' என்று மாதவியிடம் கோவலன் சொன்னபோது அவள் சினந்து மென் மலர்ச்செண்டால் அவனை அடித்தாள். ஊடிப் பின்திரும்பி மான் கண் சாளரம் நோக்கி நின்றாள். அவளைப் பின்னால் நெருங்கி பெரு மருப்பும் மெல்லிடையும் சேர்த்தணைத்து ''உன் ஆழமே என் கலங்களை இழுக்கிறது...'' என்றான். காமியர் ஊடல்போக்கும் கலையறிந்தவன் கோவலன். யாழ் நரம்பறிந்த கரங்களால் அவளை மீட்டியபோது அவள் கனிந்து அவன்மீது இலைத்தளிர்ச் சுருள்வீசிப் படர்ந்து முத்தமிட்டுச் சொன்னாள். ''எங்கள் குலம் சம்பாபுரியில் வேர்கொண்டதென்பதை எவரும் மறப்பதில்லை.''

"அது உண்மை எனில் ஏன் மறக்க வேண்டும்?'' என்றான் கோவலன்.

"நான் மறக்க விழைகிறேன். சம்பாபுரியின் பெண்கள் கடற் செடிகள்போல. அவர்களின் வேர் அலைகளில் ஆடுவது என்பார்கள். அலைகள் எனக்கு அச்சமூட்டுகின்றன. நான் பிறந்த நாள் முதலாக அலைகளையே கண்டுவந்தவள். ஆழவேரூன்றி விழுது பரப்பும் பேராலமரம்போல என் குலம் வாழ விழைகிறேன்'' என்று கண்ணீருடன் சொன்னாள். "பதியெழுவறியாப் பழங்குடி கொண்ட உங்கள் உதிரம் என்னுள் முளைக்கவேண்டும்.''

கோவலன் அவள் நறுநுதலை முத்தமிட்டு அக்கணத்தில் எங்கும் ஆண்மகன்கள் சொல்வதைச் சொன்னான். "நான்

வேரோடி விரிவேன்''என்றாள் அவள் கண்ணீரும் கண்மையும் கலங்கிச் செஞ்சாந்து கூடிய சிறுமுலைமேல் வழிய.

''மீதமின்றித் தம்மைப் பகுக்கும் விதைகளே முளைக்க முடியும் என்பர் நூலோர்'' என்றான் அவன். ''அன்னையாகும் போது பெண் தன் அனைத்து ஆழங்களையும் இழந்து விட வேண்டும். குயில்களைப் போன்றவர் சம்பாபதிப் பெண்டிர். அவர்கள் கருவுற்றாலும் அன்னையாவதில்லை.''

''நான் என்னை இழப்பேன். என் அனைத்து ஆழங்களையும் மண்ணில் மட்கவிட்டு முளைப்பேன்'' என்றாள் அவள். ஆமென்று சொல்லி அவளை முத்தமிட்டான் அவன். இவளுடன் சேர்ந்து நகைப்பதனால் நகைகள். ஆடுவதனால் ஆடை . இழைவதனால் இழை. இவற்றில் மறைந்த இவள் எந்த ஆலயத்து மாயத்தெய்வம்? அவள் உடலை அணி அகற்றி, ஆடை அகற்றி, என்பும் தோலுமகற்றி, இச்சை மட்டுமாக மீட்டு எரிந்தெழச்செய்தான். அவளுடலின் ஆழங்களுக்குள் அடங்கா மதக்குதிரை மீதேறி விரைந்தான். எதிரொலிகள் கேட்கும் குகைகள். அமைதியேயான மலைமுகடுகள். கண்களே ஆன விலங்குகள். சிறகேயான பெரும்பறவைகள். பின் அவன் நின்ற கற்பாறை பிளக்க கடலாழத்தை அறிந்தான். சம்பாபுரி தன் மத்தக மதில்களுடனும் மணிச்சுடர் மாடங்களுடனும் எழுந்துவந்தது. கண்கள் திறந்த குளிர்ச்சிலைகள் மெல்லக் கடந்து சென்றன. ஆலயங்களுக்குள் நிறைவடிவம் கொண்ட தெய்வங்கள் கண்ணொளிர உகிரொளிர அமர்ந்திருந்தன. அப்பால் எழுந்த பேராலயத்துக் கருவறை இருளுக்குள் இருளே உருவாகித் திரண்டெழுந்த பேருருவாக அவளைக் கண்டான். உதிரம் தேடி அவள் கோட்டெயிற்றுக் கூர்நா விரிவதைக் கண்டான்.

''உன் காமத்தை நீ ஒளிப்பதில்லை . அதுவே உன் அழகு'' என்று கோவலன் சொன்னான். ''பரத்தையர் காமத்தை வெளிப்படுத்தக் கற்றவர்கள் என்பார்கள்.''

அவள் புன்னகையுடன் அவனைத் தழுவி ''வெளிப்படுத்துவதே காமம் என நம்பவைக்கக் கற்றவர்கள்'' என்றாள். மறைப்பதற்குச் சிறந்த வழி வெளிப்பாடே என்று தன் அன்னையர் சொன்னதை நினைவுகூர்ந்தாள்.

''உன் விழைவு இருமுனை கூர்த்த வாள் என மின்னுகிறது. அதன் நுனியில் நடக்கும் கலையில்தான் என் புலன்களெல்லாம் ஒன்றாகின்றன . விழைவைத் தீட்டவே இசையும் கலையும் கள்ளும் காப்பியமும் என்பர்'' என்றான்.

''இல்லை. விழைவை மருப்பு தாழச்செய்து நாம் அதன்மீது அமரும் பொருட்டே அவை'' என்றாள் அவள். கடிவாளமிடப்பட்ட காமத்தின் வல்லமைகளை அவளுக்குக் கற்பித்தவள் அவள் அன்னை.

''வேட்டையின்போது மட்டுமே கண் கண்ணாகிறது. செவி செவியாகிறது. உளம் உளத்தால் மறைக்கப்படாதிருக்கிறது. முடிவற்ற வேட்டையே முழுமை''என்றான் அவன்.

''வேட்டையாடப்படுகையில் மேலும் முழுமை நிகழாதா?'' என்றாள் அவள். வேடன் பாதையை வேட்டைவிலங்கு வகுப்பதை அறிவதே கணிகைத்தொழிலின் முதற் கல்வி என்றறிந்தவள் அவள். வேட்டலும் வேட்கையுமே வேட்டையாயின.

கூடலில் சிக்கி மணிபிணைந்து அவள் மார்பில் நெளிந்த முத்துமாலையை வாங்கி அவன் சீர் செய்யத் தொடங்கினான். எந்நிலையிலும் கோர்க்கப்படாமல் ஒரு மணி மட்டும் மிஞ்சியது. மீண்டும் மீண்டும். ''அது சம்பாபுரியில் விளைந்த கடல்முத்து. உங்களால் ஒருபோதும் முற்றிலும் அதை சரி செய்துவிட முடியாது'' என்றாள் அவள். அன்றிரவெல்லாம் அதைத் தன் யாழ் பயில் மெல் விரல்களால் மீட்டி மீட்டி ஓய்ந்தான். அவன் சோர்ந்து அமர்ந் திருக்கையில் அதைத் தன் கழுத்தில் அணிந்து மீண்டும் அவனை இழுத்து ஒரு கடற்கோள் என அலைதிகழ் பெருங்கூடலை அளித்துப் பின் சிரித்து அம்மாலையை எடுத்துக் காட்டினாள். முத்து திகைந்து மாலை நகைத்தது. அவன் அஞ்சி அவள் உடலில் முகம் புதைத்தான்.

வழி தவறிய திருவிழா முடிவதேயில்லை. கோவலன் வழி தவறிய இந்திரவிழாவில் தெய்வங்கள் ஒவ்வொரு நாளும் புதுப் புனலாடின. காமத்தின் முடிவின்மையைக் காண விஞ்சையரும் விண்ணவரும் மண்ணிறங்கி வந்தனர். காமத்தின் கணங்களில் அதைக் காதலென்றும், காதலின் கணங்களில் காமமென்றும் உணரப்பழகியவனுக்கு உடல்களின் ஆட்டம் முடிவறியாது நீள்கிறது.

ஆம், காமத்தை அவியாக்கிக் காமம் வளர்ப்பது ஒரு கலை. ஒருபோதும் நிறைவு கொள்ளாத ஒரு முனை துளிநெருப்பென இருந்துகொண்டிருக்கவேண்டும். ஒவ்வொரு கூடலும் வானெழுந்து சுடர்ந்து வீழ்கையில் அங்கேதான் மீளவேண்டும். காமம் நண்டுக் கால்களில் நாற்றிசையும் விரையும் பெரும்புரவி. கெடுநாற்றத்தை நறுமணமாக்கி, அழகைக் கோரமாக்கி, கோரத்தில் அழகுருவாக்கி

ஓயாது தன்னுடன் தான் ஒளிந்து விளையாட அங்கே இடமிருக்க வேண்டும். காமம் ஊசல். பின்விரைவதெல்லாம் முன்னெழவே. முன்னெழுவதெல்லாம் பின்வரவே. காமம் ஆயிரம் பல்லாயிரம் ஆடிகளில் தன்னைப் பெருக்கிக் கொள்கையிலும் ஒருபோதும் ஆடியிலன்றித் தன்னை அது பார்க்கலாகாது. காமம் ஒவ்வொன்றையும் பொய்யாக ஆக்கும் மாயத்தெய்வமொன்று நாச்சுழற்றி அலையும் பெருவெளி. பொய்யே உண்மையின் அனைத்துச் செயல்களையும் ஆற்றும் இடம். நிலைபெரு நீர்க்கோல நகரம் அது.

ஏனெனில் காமம் தனக்கெனத் தன்னை நிகழ்த்த முடியாத வசை கொண்டது. பிறிதொன்றுக்காகவே அது நிகழ முடியும். அந்த நிலப்பரப்பில் தப்பியோடுகையிலேயே முன்னால் விரையமுடியும். ஒன்றைச் சுட்டப் பிறிதொன்றையே அங்கு சொல்ல முடியும். ஒன்றைப் பெறப் பிறிதொன்றையே கோர முடியும். அங்கே அடையப்படுபவையெல்லாம் எங்கோ இழக்கப்பட்டவையே. அங்கே விரும்பப்படுபவள் வெறுக்கப்படுபவளின் மறுபாதி. வெறுக்கப்படுபவள் விரும்பப்படுபவளின் மறுபாதி. அதன் துலாமுள் நிலைகொள்வதேயில்லை.

கேளுங்கள், விடைவராத கணக்குகளை விட்டு எவர் விலக இயலும்?

மீனாசாத்துவான் இல்லத்தில் கண்ணகி ஆற்றியிருந்தாள். இந்திர விழாவில் எழுந்தமர்ந்து சுழிக்கும் மனித அலைகளுக்கு அப்பால் மரக்கலங்கள் ஆடும் பெருங்கடலின் அலைகளே அவள் விழிகளைக் கவர்ந்தன. உப்பரிகை மாடத்தில் அமர்ந்தவளாக இரவும் பகலும் அலைகளைக் கண்டிருந்தாள். அலைவும் தொலைவும் குலைவும் கூடலுமான நெடுவெளி. அதன்மேல் மரக்கலங்கள் சிறகு விரித்தன. அவற்றைக் காற்றெனும் கண்காணாக் கைகளால் கடலே சுழற்றி விளையாடியது. ஆழியின் ஆழத்தில் நீலப் பெருமுகம் நிமிர திசைவெளி நிறைத்துக் கிடந்தாள் பேரன்னை. அவள் இல்லத்தில் சாளரக்கதவுகளில், காலதர்த் துளைகளில், மரங்கள் சுழற்றும் பசுங்கிளைகளில், அன்னையின் அழைப்புக்குரலே ஒலித்துக்கொண்டிருந்தது. சிறுவயது முதலே அவளறிந்த சொல்.

நீலமன்றி ஏதும் நிறமல்ல என்று அவள் எண்ணிய முதற் கணம் எது என்று எண்ணி எண்ணிப் பார்த்ததுண்டு. கண்ணையன்னை கால்களைக் கழுவும் அலைதிகழ் பெருவெளி அருகே தனிமையில் நின்ற ஏதோ இளம்பருவத்து நாள் ஒன்றில். பிறகு ஒவ்வொன்றையும் இது அல்ல என்று மெல்லமெல்ல ஒதுக்கித் தன்னுள் மீண்டபடியே இருந்த நாட்களில்தான் அது அவளுக்கே தெளிவாயிற்று. நீலமொன்றே நிறம். பிறிதெல்லாம் தெறிப்புகள். சுழல்கள். அலைகள். ஆழம் நீலம். முடிவின்மையின் நிறம் நீலம். நீலத்தில் மொண்டு எடுத்து கால் கீழ் பரப்பிக்கொண்ட சிறுமையே நிலம். நீல ஆழத்தில் மண்ணின் ஒளியும் மழையும் ஒலிகளும் எதுவும் சென்று சேர்வது இல்லை. ஆனால் தன் எடையைத் தாளே உணரும் அனைத்துமே ஒலியின்றி அங்குதான் சென்றுகொண்டிருக்கின்றன.

மணமேடையில் அவள் கோவலனைப் பார்த்தாள். வியர்வை நனைத்த மென்கரம் மெல்ல நடுங்கும் செவ்வண்ணச் சிறுவன் போல. கணந்தோறும் இக்கணம் உதிர்வேன் என்று புன்னகைக்கும் மெல்லிய மலர் போன்றவன். அவன்மீது உளக்கனிவு கொண்டு தன் கொற்றலை

உதடுகளுக்குள் புன்னகை புரிந்துகொண்டாள். மணிப்பட மருப்பில் அணிதிகழ் சேர்ப்பில் அமர்ந்து அவனுடன் நகர்வலம் வருகையில் ஒரு பக்க அசைவில் கடல்நீலம் கண்டு துணுக்குற்றாள். ஈதென்ன என்று அவள் ஆழம் வீறிட்டது. அவ்விழா ஓசைகளும் அசைவுகளும் நறுமணங்களுமெல்லாம் அவள் முன் கண்தெரியாக் காற்றொன்று எழுப்பும் அலைகளெனப்பட்டன . அன்றிரவு அவன் அவளைப் பார்வையாலும் சொற்களாலும் விரல்களாலும் பின்பு காமத்தாலும் இறுதியில் தன் வெறுமையாலும் தீண்டியபோது அவனைத் தன் இருண்ட கருவறைக்குள் இருந்து கனிவுடன் நோக்கிக் கொண்டிருந்தாள். அவனைத் தூக்கிச் செலுத்தும் சுழற்காற்று மட்டுமே அவள் கண்களுக்குப் பட்டது. பின்பு எழுந்து இருண்ட உப்பரிகையில் இறங்கி கூந்தல் பறக்க நின்று பூசல்நீர்ப் புகாரின் புதுமணற் கரைக்கு அப்பால் கன்னிப் பெருங்கடல் சொன்ன சொல்லைக் கேட்டிருந்தபோது செய்யவேண்டுவதும் செய்யக்கூடுவதும் என்ன என்று அவளுக்குத் தெரிந்தது.

குலமகளில் கணிகையைத் தேடியவன் கணிகையில் குலமகளைத் தேடுவதை அவள் அறிந்திருந்தாள். மலர்ச்சேறு மண் கலக்கும் மருதமென மூதாதையர் வகுத்த நெறி. குமுதமும் நீலமும் குவளையும் அல்லியும் நீரொடும் சேறொடும் கலக்கியுண்ணும் எருமை. தண்மலர்த் தாது பூசித் தன்னிலையழியும் வண்டு.

ஆற்றியிருப்பதன் ஆயிரம் உளநிலைகளை அவளுக்கும் பாணர் பாடல்கள் கற்பித்திருந்தன. வெவ்விழிநீர் செவ்விளமுலை மேல் சொரிய மெல்லிருங்கூந்தல் புல்லென்றாக இருவேளை உணவொழித்து ஒருபொழுதுறங்கி நான்கு காலங்களையும் கடந்தாள். பெரும்புயலுக்கு முன் அசைவிழந்து துவளும் கொடிக் கூரையெனக் கடலாழம் நோக்கிக் காத்திருந்தாள்.

வேனில்காலத்து வெயில்பயில் காலையில் தேவந்தி வந்தாள். மெய்யெங்கும் நீறுபூசி கருள்சடை சேர்த்துக் கட்டி கையில் கழியும் தோளில் கிழியும் ஏந்தி துறந்தோர்க் கோலத்தில் மாளிகை முன் தோன்றி 'இவ்வில்லத்தில் ஆற்றியிருக்கும் அருந்தவச்செல்வியைக் காண வந்தேன்' என்றாள். கண்ணகி அவளை முகமன்கூறி வரவேற்றுத் தன் புற இல்லத் திண்ணையில் அமரச்செய்து உணவும் நீரும் கொடுத்து நல்விருந்து ஓம்பிப் பகலெல்லாம் உரையாடினாள். துறக்கப்பட்டோர் துறக்கப்பட்டோரைக் காண்கையிலேயே பேச்சு எழ முடியும் என்றாள் தேவந்தி. பாட்டும் பொருளும் சொல்வி ஆற்றியிருப்பவர்க்கு அருந்துணையாவதே தன் தொழில் என்றாள்.

காவிரிக்கரைச் சிற்றூர்களில் தோன்றி நகரங்களில் அலைந்து

சொல் அளித்து நெல்கொண்டு வாழும் பாணர் குலத்தவள் தேவந்தி. முன்பொரு காலத்தில் தமிழும் இசையும் அவர்களின் குலத்துக் குரியனவாக இருந்தன. நால்வகை வணிகரும் மால்கொள் கலங் களும் பெருங்கடலோடிப் பெருக்கிய செல்வம் அகமாகவும் புறமாக வும் நிறைந்து இசையோர் திறமும் குழலோர் முறையும் நன்னூற் புலவரும் தண்ணுமை முதல்வரும் தழைத்தெழுந்த நகரங்களில் பாணர் பாடிய தொல்கதைகளுக்கும் மூதிசைக்கும் அரங்கும் செவியும் இல்லாமற் போயின. பாணர், அங்காடிகளில் நண்பகல் சோர்வில் வணிகர்களுக்கு மருதமும் குறிஞ்சியும் பாடிச் சிறு செல்வம் சேர்த்தனர். பாணினியர் பெருவணிகர் வீடுகளுக்குச் சென்று அங்கே ஆற்றியிருக்கும் பெண்டிருக்கு நெய்தலின் அலையும் குறிஞ்சியின் மழையும் சொல்லிச் சிறுபரிசில் பெற்றனர்.

பாசண்டசாத்தனாக வந்து தன்னை மணந்து கைவிட்டுச் சென்ற கணவனைத் தேடிக்கொண்டு நகரங்கள்தோறும் அலை பவள் என்று தேவந்தி தன் கதையைச் சொன்னாள். என் கொழுநன் மூவா முனியா இளநலம் கொண்டவன், முன்வரும் இளையோரி லெல்லாம் தன் முகம் காட்டும் தலைவன் என்று சொல்லி நகைத்தாள். கண்ணகி அவள் மென்கரங்களைப் பற்றி கண்களுக்குள் சென்று நோக்கி 'உன் கணவன் எங்குள்ளான்' என்று கேட்டபோது மெல்ல விழிதாழ்த்தி இதழ்களில் நகையும் முகத்தில் துயருமாக "மூப்பிலா இளமையெனில் அது முத்தமிழில்தானே முடியும்?" என்று தேவந்தி சொன்னாள். "ஏன்?" என்று பதறிக் கேட்ட கண்ணகியிடம் பாணினிப் பெண்கள் தங்கள் நெறியைப் பேண அப்படிக் கதைகளுக்குள் நுழைந்துவிட வேண்டியுள்ளது என்றாள். தன் குலத்து முதுபாணினி ஔவையே அதற்கு வழிகாட்டியதாகச் சொன்னாள். இளமைநலம் தொலைத்து முதுமையைச் செல் வேளிடம் பேறெனப் பெற்று நால்வகை நிலமும் நகரமும் ஊரும் திரிந்து கவி பாடிய ஔவையின் குலக்கண்ணி தான் என்றாள்.

"பாடுக தமிழ்" என்று கண்ணகி கேட்க தேவந்தி தன் சிறுதுடி எடுத்துச் செவ்விரல்களால் மெல்ல மீட்டிக் கிளையிலமரும் சிறு பறவையின் சிறகடிப்பொலியை எழுப்ப காட்டருவியொலிபோல அவள் குரலெழுந்தது.

" கல்லெனக் கவின் பெற்ற விழவாற்றுப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்பு கொண்டமைவாளோ!
ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்
பாழ்பட்ட முகத்தோடு பைதல் கொண்டமைவாளோ!
ஓரிரா வைகலும் தாமரைப் பொய்கையுள்

நீர் நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ!''

மண்கொண்ட காலங்களின் இசையும் துயரமும் பண் கொண்ட சொற்களினூடாக எழுந்து வந்தன. மெல்ல தேவந்தியின் சடைக்கற்றைகள் விரிந்து தோளில் விழுந்தன. செவ்வாடை நெகிழ்ந்து காற்றாடியது. விரிகண்களில் வரிசெம்மை கூடியது. அவள் குரல் துள்ளியும் அகவியும் தூங்கியும் அறைந்தும் ஒலிக்க, துடியும் கிணையும் முழவும் துணைசேர்ந்தன. அவள் உடல் மீது சொற்கள் ததும்பி அலைத்து வெறிகொண்டன. மாளிகையெங்கும் அக்குரல்கள் எதிரொலிக்க கோவலனின் அன்னையும் ஏவற் பெண்டிரும் குழுமினர்.

"என்பெயர் ஆதிமந்தி. நான் சோழன் பெருவளவன் பெற்ற திருமகள். சேரன் ஆட்டன் அத்தியின் குலமகளானேன்'' என்றாள் தேவந்தி. ''நீ கோழியர் குலக்கொடி. பாவை நோன்பில் பெண்டிர் வணங்கும் பொற்பின்செல்வி. உன்னை வணங்குகிறோம். என் குலம் தழைக்க அருள்க'' என்றாள் அன்னை. "என் பேரியாற்றுச் சுழலில் முடிவின்றிச் சென்றுகொண்டிருக்கிறேன். முளைக்காத அழியாத கல்விதை நான். மண்ணில் புதைந்த சொல்லாக் கதை களின் தொல்விதை நான்'' ஆதிமந்தியின் குரல் தழைந்து கண்ணீர் கோர்த்தது. பின்பு அழுகையும் கேவலுமாக உடல் துடித்தது. கண்ணீர் முலைகள்மீது கொட்டியது. "அழியாப் பெருந்துயரம் வாழ்வெடுத்து வாழாதுபோனவளின் துயரமே. நான் மணந்தவன் ஆட்டன். மள்ளர் குழுமிய விழவிலும் பாணர் கூடிய அரங்கிலும் மீண்டும் மீண்டும் என் ஆடுகளமகனைத் தேடினேன். அவனைத் தேடி, அடைந்து, இழந்து, தேடி யானுமொரு ஆடுகள மகளானேன். ஆட்டும் பாட்டும் பெருகிக் கரைமீறி அவனைக் கொண்டுசென்றன. கரைநிலங்கள்தோறும் கால்கள் சோர, கண்கள் கலுழ, அவனைத் தேடியலைந்தேன்... தேடியலைந்து தேடியலைந்து வாழ்வை இழந்தேன். அறியாக் கரைநிலத்தில் காட்டுப் பறவைபோல இறந்து கிடந்தேன். என்னை கல்நாட்டிச் சொல்மூட்டி இறைவியாக்கினர்...''

தேவந்தியின் வெறிக்குரலெழுந்து சுவர்களை மோதியது. "நான் தேடியது அவனையல்ல. ஆட்டனையல்ல. வாள் ஏந்திய வீரனைத் தேடினேன். தோள்திரண்ட மறவனைத் தேடினேன். ஆனால் நான் தேடுவதையெல்லாம் அவ்வாட்டனிலேயே அடைய வெண்டுமென்றனர் அறவோர். விழவிலும் புனலிலும் அவனை நான் சுமந்தலைந்தேன். அவன் எடை அழுத்தியபோது அவனைக் காவிரியில் விட்டேன். கரைமீறிய பெரும்புனல் காவிரி அவனைக் கொண்டாள். கடலாழத்துக் கன்னியன்னை அவனை உண்டாள்...

என் மறவன் என்றுமே முளைத்தெழவில்லை. நான் கல்லாய் குளிர்ந்து செங்கழுநீர்க்கண்கள் கண்ணீருடன் பூத்த வயல்வெளி ஓரம் பெருநீர் செல்லும் வழியில் முடிவின்றிக் காத்திருக்கிறேன்..."

சுழன்றெழுந்த தேவந்தியின் உடலில் இருந்து புதிய பெண் குரல் எழுந்தது "என் பெயர் நக்கண்ணை. நான் என் தோள்வண் மறவனைத் தொடாமலேயே அழிந்தேன். புகார் வணிகன் பெருங் கோழிநாய்கன் மகளாகப் பிறந்தேன். பட்டினப்பாக்கத்து அரச வீதியில் ஆலயத்திலமர்ந்தேன்'' என்றாள் பாணினி. "ஆம் நீ எங்கள் குலதெய்வப் பெயர் கொண்ட காவற்கன்னி'' என்றாள் கோவலனின் அன்னை. "நான் கற்பெனுஞ் சிறையில் கண்ணீருடன் வாழ்ந்தழிந்தவள்'' என்றாள் நக்கண்ணை. "உறையூர் வீரை வெண்மான் வேளியன் தித்தன் மகன் போர்வை கோப்பெருநற் கிள்ளி என் கருத்தழித்தவன். திண்தோள் வலியும் துடியிடை வலியும் மண்மாண் வினைவலியும் உளவலியும் கொண்டவன். அவனை எண்ணி என் கைவளை கழிந்தது. மெய்சோர்ந்தழிந்தது. தாயை அஞ்சி, அவையை அஞ்சி, பெருங்காம நோயை அஞ்சி, ஊரலர் அஞ்சி, உள்ளறைக்குள் வாழ்ந்தேன். புறஞ்சிறை இருந்து பசலை கொண்டு மெலிந்தேன். என் காதலன் ஊர் இது அல்ல. அவன் குலமும் என்னதல்ல. அவனிடம் ஒரு சொல்லும் நான் சொல்ல வில்லை. அவனைப்பற்றி எவரிடமும் பேசவில்லை. குன்றாப் பெருங்காமம் எரிந்து எரிந்து என் உடலழிந்தது. நானிருந்த இடத்திலென் காமம் மட்டுமே எஞ்சியது. அங்கென்னை முளைக் கொழுந்தெரிந்த முல்லைப்பீடத்தருகே அமர்த்தினர். எரிந்தெரிந்து இதுகாறும் காத்திருந்தேன் .."

கண்ணீர் பொழியக் கூந்தல் சிதற மண்ணில் விழுந்தும் எழுந்தும் கதறிய தேவந்தியில் ஊறிவந்து தொல்குரலாக மாறிப்பித் சொன்னாள். "மால்கொண்டு பெரும்பித்தியாகி நீர் வடிவெடுத்த வள் நான். கனியாத பாறைகளிலும் இருண்ட காடுகளிலும் என்னைக் கைவிட்டுச் சென்றவனைத் தேடி முட்டியும் சிதறியும் அலையவள். என்னைப் பிணித்த சொல்வலை வேட்டுவன் தில்லை இலை எனப் புல்லென்றாகிய சடையுடன் சொல்லழியும் பேரறிவைத் தேடி காடு சென்றான். அவன் சுவடுகளில் முளைத்த புல்நுனிகளிலெல்லாம் என் கண்ணீர் ஒளிர்ந்து நின்றது. என் துயரம் அவன் வாழும் காடெங்கும் இலைநுனிகளிலிருந்து சொட்டியது. சிற்றோடை நரம்புகளாகப் பரவியது. ஆறாகத் திரண்டு சுழித்தது. கடலாக அலைத்தது. நான் அவனுக்காகச் சேர்த்த சொற்களெல்லாம் பழுத்து உதிர்ந்தன. பின்பு ஒருபோதும் நான்

தளிர்விடவில்லை. பின்பு என்னை குளிநீர்ச் சுனையருகே கொன்றைமரத்தடியில் அமர்த்தி இறைவியாக்கினர்.''

பெருங்கிணை விம்மும் குரலெனத் தேவந்தியில் எழுந்தாள் பேய்மகள் இளவெயினி. ''நான் பாடினி. என் அகம்கொண்ட மன்னன் சொல்லறிந்தவன். சொல்லில் உறையும் மண்ணும் மனமும் அறிந்தவன். பாலையின் பெருந்துயர் பாடிய பெரும் பாவலன். தண்பேராற்றுப் புனல் பாயும் அவன் நிலத்தையும் விண் பொருபுகழ் விறல்வஞ்சி மாநகரையும் எக்கணமும் எண்ணிக் கொண்டிருந்த என் துயரை மட்டுமே அவனறியவில்லை. அவனை நாடிச்சென்ற அனைவருமே பொன் பரிசில் பெற்றனர். என் பரிசிலை நான் பெறவில்லை. என் கிணைப்பறை காற்றுபட்டாலும் அவன் பெயரையே விம்மியது. ஓயாதொலிக்கும் பறையுடன் ஐவகை நிலங்களிலும் பேயுருக்கொண்டலைந்தேன். என்னைக் காற்று சுழலும் கடல்வெளியருகே மணல்மேடுமீது ஒரு தாழை மரத்தடியில் அமர்த்தி இறைவியாக்கினர்.''

தன் துடியெடுத்து ஒலித்து தேவந்தி அலறி அழுதாள். கண்ணீர் நனைத்த மார்பின்மீது ஓங்கி அறைந்து கதறினாள். ''ஐவகை நிலமும் எங்கள் பெருந்துயர் வெளியே. மூவகைத் தமிழும் எங்கள் கடுந் துயர் மொழியே'' என்றாள்.

ஒவ்வொரு சொல்லாக அவளிலிருந்து உதிர்ந்தழிய அடங்கி மெல்லிய விசும்பல்களாக வெகுநேரம் ஒலித்து கருக்குழந்தை போல சுருண்டு கிடந்தாள் பாணினி. புறவீடெங்கும் கண்ணீர் உலர்ந்த முகத்துடன் பெண்கள் தங்கள் அகச்சொற்களை அளைந்தபடி சுவர் சாய்ந்தும் தூண்சேர்ந்தும் அமர்ந்திருந்தனர்.

ஓ

மதுரை முதுநகரில் தன் அரண்மனை அகச்சிறையில் பாண்டியன் பெருந்தேவியும் ஆற்றியிருந்தாள். ஆனால் அணிகளும் ஆடையும் மணிமுடியும் மலரும் சூடி. மதுரை மாநகரில் மறவர் வேல் மறக்க, விறலியர் விழி சிவந்த காலம் அது என்றனர் பாவலர். வில் நாணொலி ஒழிந்து யாழ் நாணொலி எழுந்த காலம். தமிழ் நிலம் மூன்றிலிருந்தும் பாணரும் பாவலரும் பாண்டியன் அவைக்கு வந்துகொண்டிருந்தனர். நகர்த்தெருக்களில் அவர்கள் பாடிச் செல்லும் ஒலியே எந்நேரமும் எழுந்தது. யவனர் அளித்த பொற் குவையெல்லாம் மகளிர் கொண்டு புத்தணியாக்க பொன்செய் கொல்லர் பெருங்குலமாயினர். பொன் சிவந்து அணியாக சொல் மலர்ந்து அணிகொள்ள மதுரை போர் மறந்தது. சொல் முளைத்துச் சொல் நிறைத்த தொல்மரபிழந்தது.

கோப்பெருந்தேவி அனைத்துமறிந்தாள். ஆனால் அகச் சிறைக்கு வரும் மன்னன் அவள் சொல்வதையெல்லாம் அக்கணமே ஏற்றான். அவள் ஊடியபோதெல்லாம் பணிந்தான். அவள் சுட்டியதையெல்லாம் கொண்டுவந்து சேர்த்தான். அவனை மேலும் மேலும் வெல்வதொன்றே அவள் செய்யக்கூடுவதாக இருந்தது. அவனோ அவளால் வெல்லப்படுவதனூடாக விலகிச் சென்று கொண்டிருந்தான். அவனைத் தன் மூடிய கதவுகளுக்கு வெளியே நிற்கச் செய்தாள். தன் சிலம்புங்களைச் சென்னியில் சூட வைத்தாள். முடியணி தலை தணித்து அவன் தன் முன் அடிபணியச் செய்தாள். அனைத்துக்கும் பிறகும் அவளுக்கு அவள் வஞ்சம் எஞ்சியிருந்தது. எதிர்க்காத ஒருவனை வெல்ல இயலாது என அவளறிந்திருந்தும் அதுவன்றி வேறெதுவும் அவள் செய்வதற்கிருக்கவில்லை. ஊடலில் தோற்பதே பெண்ணுக்கு வழி என்றன நூல்கள். ஊடலில் தோற்றவர் வென்றார் என வகுத்தன. 'ஐவகைத் திணையிலும் மைவிழியர் வெல்லும் வழியொன்றில்லை' என்றாள் கிணைப்பறை கொட்டிய பணைமுலைப் பாணினி.

தன்னைச் சூழ்ந்திருந்த அனைத்துடனும் ஊடித் தன்னுள்

நோக்கித் திரும்பி நின்றாள். காற்றும் ஒளியும் தோள்தொட்டுக் கொஞ்சி நகை பேசித் தழுவி அவளை இழுக்கையிலேயே அவற்றை அறிந்தாள். நகர் நடுவே வீற்றிருந்த அங்கயற்கண்ணியுடனும் ஆலவாயழகனுடனும் அவள் ஊடினாள். அமைச்சரும் சேடியரும் அவள் ஊடல் தீர்க்க எந்நேரமும் முயன்றனர். நன்னூற் புலவரும் இன்னிசை வாணரும் அவள் ஊடலையே மீட்டினர். மெல்ல ஊடலே அவள் முகமாயிற்று. அரண்மனை மாடமுகட்டுக் கொடி போன்றவள் அவள் என்றனர் தோழியர். தென்காற்றும் வட காற்றும் எந்நேரமும் வீசிக்கொண்டிருக்கவேண்டும் அவளுக்கு. அத் தென்றலும் புயலும்தான் அவளது சொல்லையும் செயலையும் ஆக்கின.

ஓ

கோவலன் மாத்வி கூடலினூடாக தென்மாரியும் வட மாரியும் வந்து சென்றன. தென்மாரி மென்சாரலாகத் தொடங்கி, மெல்ல வலுப்பதறியாமல் வலுத்து, இலைக்கொத்துகள் அடங்கித் தொய்ய, சொல்லறாது பெய்யும் ஓமொலி. வடமாரி வான்மதகு களை உடைத்துத் திறந்து, மின் சிதறி, இடி அதிர்ந்து, மண்ணை அறையும் வெறியாட்டம். தலைசுழற்றிப் பித்தாடும் மரங்களும் பதறித் துடிக்கும் சாளரக்கதவுகளுமாக எங்கும் பரவிய ஓலங்கள் நடுவே எழும் நீரின் உச்சப்பேரொலி. தென்மாரி ஓய்ந்தபின் மாடத் தளங்கள் கரைகளாகத் தெருக்களில் செம்மழைநீர் சுழித்துக் கரைநக்கி நிறைந்தொழுகும். வடமாரி ஓய்ந்தபின் ஒடிந்த கிளை களும் குவிந்துருண்ட இலைகளுமாகத் தெருக்களில் காட்டாறுகள் மோதிச் சுழலும். தென்மாரி விண்ணின் காமம். வடமாரி மண்ணின் விடாய்.

மாரி பெய்யும் காலங்களில் மாரியன்றி வேறெதுவுமே நிகழ் வதில்லை. நீராடிய வெண்மாடமுகடுகளின் இடுக்குகளில் சாம்பற் புறாக்கள் சிறகு தொய்ய அமர்ந்து மெல்லக் குறுகின. இலாயங் களில் சாரல் பனித்த நீர்த்துளிகள் உருளும் பொருட்டு புரவிகள் தோலசைத்துக் குளம்பு மாற்றிக்கொண்டன. மழையில் கட்டப்பட்ட யானைகள் மலைப்பாறைகள்போலக் கருமையும் குளுமையும் கொண்டு செவியசையாமல் நின்றன. பட்டினப்பாக்கத்திலிருந்து பல நூறு சிற்றாறுகள் சுழித்துக் கிளம்பி அங்காடிகளில் நிரம்பின. மரங்கள் பிணைத்துக் கட்டிய கடைகளின் தளங்களை வணிகர் தினமும் மேலேற்றினர். நிரம்பிய நீர்வழியாகச் சிறுதோணிகளிலும் புணைகளிலும் வந்து நகர மக்கள் வணிகம் செய்தனர். அங்காடி மறிந்த நீர் மருவூர்ப்பாக்கத்து மணல்மேடுகள் மீது எழுந்து மடிந்து கடலுடன் கலந்தது. யவனர் கலங்களிலிருந்து கிளம்பி அங்காடித் துறை முகப்புவரை வரும் பொருள்தோணிகள் அப்போதெல்லாம் அங்காடித்தெருக்களில் மிதந்து கடைகளுக்குப் பின்புறம்வரை வந்து சேர்ந்து நின்றன. கோல்கொண்டு தள்ளிய யவன மாலுமிகள்

எதி[illegible]ம் சிறுதோணிகளை விலகும்படிச் சொல்லிக் கூவும் ஒலியே [illegible]காடிகளில் ஓங்கி எழுந்தது.

சிறுபுணை ஏறித் தன் கடைக்கு வந்த கோவலன் மழை முழக்கும் ஒலி கேட்டு தன் இருக்கையில் அமர்ந்து பொருள்கனத்த சிறுநாவாய்கள் தன் கடையைச் சற்றும் பொருட்படுத்தாமல் கடந்துசெல்வதைக் கண்டிருந்தான். கலங்கள் குவிக்கும் பலவகைப் பொருட்கள் தன் கடையெங்கும் நிறைந்திருந்த நாட்களை நினைவு கூர்ந்தான். மழையினூடாகப் பரவிப் பயனற்ற சொற்களாகத் தன் நினைவுகள் ஓடத் திடுக்கிட்டு விழித்தெழுந்து ஓர் உறுதிக்கு வந்தான். சுவடிகளை எடுத்து கணக்குகளைப் பார்க்கத் தொடங்கினான். கணக்கர் மூவர் அவனைச் சூழ்ந்து நின்று அவனுக்குச் சென்றழிந்த பெரும்பொருள் வகையென்னவெனச் சொல்ல ஆரம்பித்தனர். ஆனால் எண்களை மீட்டத் தன் விரல்கள் மறந்து விட்டிருப்பதை அவனறிந்தான். அவை யாழ்நரம்புகளின் நுண்மைகளையே தேடின. பின்பு கண்களை மூடித் தலைகுனிந்து அமர்ந்திருந்தபோது மழையின் பெருங்குரலழைப்பு அவன் சித்தத்தை நிரப்பியது. வெறி கொண்டெழுந்து புணைமீது பாய்ந்து எதிர்நீர் ஒழுக்கில் கைசலிக்கத் துழாவி மாதவி இல்லத்தை அடைந்தான். அவளை அள்ளி மாரிநீர்த்துளிகள் போல முத்தங்களிட்டு மண்மீது பொழியும் விண்போலப் புணர்ந்தான். சூழநின்று கூவும் பெருமழைக்கு நடுவே மரப்பொந்தில் சிக்கிய இரு கிளிகள் எனத் தன்னையும் அவளையும் உணர்ந்தான்.

மாரிகள் ஓய நீர் வடிந்து அங்காடி எங்கும் புதுமணல் நிறைந்தது. நீர்சென்ற பாதையில் மென்கதுப்புப்போலவும், இளங்கன்னியரின் கன்னத்திலோடிய நீலமென்கூந்தல் போலவும், அழகிய அடிவயிற்று நீலநரம்புகள் போலவும், கூடலில் சிவந்த விழிகளில் ஓடிய செவ்வரி போலவும், அல்குல் மயிர்ப்பரவல் போலவும் மணல்தீற்றல்கள் பட்டினப்பாக்கத்திலும் மருவூர்ப்பாக்கத்திலும் அங்காடித் தெருக்களிலும் நிறைந்தன. மென்மணலில் பெருமழை பொறித்துச் சென்ற மந்தணச்சொற்களைப் படித்துப் புத்தாண்டுப் பலன்கள் சொல்ல நிமித்திகர் வந்தனர். நிலம் செழித்து வளம் கொழிக்கும் செய்தியைக் கற்றுச் சொல்லினர்.

அங்காடிப் பூதத்துக்குப் பூசனையிட்டுப் கொண்டாடினர் புதுமணல் வருகையை. வணிகர் கடைமுகப்புகளில் புதியகொடிகள் பறந்தன. புதிய பாய்களாலும் துணிகளாலும் அங்காடிக்கடைகள் அழகுற்றன. நிமித்திகர் மாரி எழுதிய மந்தணச்சொற்களைச் சிப்பிகளில் பொறித்து அளிக்க அவற்றைக் கடைகளில்

தொங்கவிட்டனர். எஞ்சிய பழம்பொருட்களை அள்ளிப் பரதவருக்கு அளித்தனர். பொரியும் வெல்லமும் தேங்காயும் சேர்த்த உணவை வழிப்போக்கருக்கெல்லாம் வாரி வழங்கினர். முரசறைந்து சங்கு முழக்கி நாளங்காடிப்பூதத்தின் பெருவயிறு நிறைந்த செய்தியை உலகுக்கு அறிவித்தனர். மருவூர்ப்பாக்கத்தில் யவனர் தங்கள் தெண் மதுவுடன் தென்னகத்து வெண்மீன் சேர்த்து உண்டாடி மகிழ்ந்தனர்.

அந்தப் புதுமணல் வருகைக் காலத்தில் கோவலனின் கடை திறக்கப்படவேயில்லை. கொடிகள் வெளிறிப் பண்டகக்கூடு ஒழிந்து பாயும் ஓலையும் தாழ்ந்து, இறந்த முதுபறவை எனக் கடை சரிந்து கிடந்தது. கணக்கரும் ஏவலரும் புதிய கடைகள் தேடிச்சென்றார்கள். மாசாத்துவான் மாலைதோறும் தன் கடைவிட்டுவந்து அக்கடைமுன் நின்று நெடுமூச்செறிந்து மீள்வதுண்டு. ஒருநாள் மாலையில் அகம் பொறாது அவர் தனியே நடந்து பட்டினப்பாக்கத்துக் கணிகையர் வீதியில் யாழ்ப்பெரும் இறைவி மாதங்கி கோயில் கொண்ட ஆலயத்துக்கு வடக்கே தலைக்கோல்கொடி பாறிய பெருமாளிகை முகப்புவரை வந்தார். கல்பாவிய முற்றத்தில் சிவிகைகளும் வையங்களும் நின்றன. பாணரும் பாவலரும் வீணரும் பேடியரும் திண்ணைகளில் நிரந்திருந்து சொற்கொண்டாடி மகிழ்ந்தனர். மத்தளம் ஒலிக்க அறைகளுக்குள் சதங்கையும் மேகலையும் குலுங்க ஆடல் நிகழ்வது தெரிந்தது. தெரு இருள்வதுவரை அங்கேயே நின்று நெடுமூச்செறிந்துவிட்டு தூக்கமில்லா இரவுக்காகத் தன் இல்லம் திரும்பினார் பெருவணிகர்.

ஞ

அரக்கு எரிந்து எழும் மென்தழல்போலச் செந்தளிர் நுனி விட்டு கொன்றைகள் இளவேனிலின் வருகையை அறிவித்தன. தழல் மெல்லப் பற்றி எரிந்து எங்கும் பரவியது. மாமரங்கள் செந்தழலாயின. புங்கமும் வேங்கையும் பொற்சுடர் பூண்டன. புகார் நகரெங்கும் காலை வெயிலருந்திய தளிரும் பூவும் கண்கூசும்படி ஒளிர்ந்தன. சித்திரையின் வரவுக்கு நகரம் அணிகொண்டது. தளிர் மாவிலைகளும் பொன்னெற்கதிர்க் குலைகளும் கமுகிளம்பூவும் சேர்த்து இல்லமுகப்புகளில் கட்டினர். ஆழிவண்ணன் கோட்டத்திலும் ஊழிமுதல்வன் ஆலயத்திலும் இளவேனிற் பூசனைகள் நிகழ்ந்தன. தளிர்மாலையும் மலர்முடியும் அணிந்து சோழன் தன் அவை முதல்வர்களுடன் ஆலயங்களுக்குச் சென்று வயல் செழித்து வளம் சிறக்கும் பொருட்டு வணங்கினான்.

மங்கல மஞ்சள் மலர்களாகப் பொலிந்த விடியலில் சித்திரை பொற்பாதம் எடுத்துவைத்து புகாரில் நுழைந்தது. அன்று காவிரியில் சந்தனக் கலங்கல்போலப் பொன்னிறப் புதுப்புனல் வந்தது. அதிகாலையில் கரிச்சான் 'சித்-திரை சித்-திரை' என்று குரலெழுப்ப குலமகளிர் கண்விழித்தெழுந்து வாசலைத் திறந்தபோது இள மழைத்தூறலில் வாசற்படிகள் நனைந்து சிலிர்த்திருக்கக் கண்டனர். இலைகள் மென்மையாகச் சொட்டிக்கொண்டிருந்த குளிர் காலையில் இல்லங்கள்தோறும் மணியொலித்து பெண்டிரை எழுப்பும் முதுபாணன் மறுகுதொறும் நனைந்த குரலில் சித்திரையைப் போற்றும் பாடல் சொல்லிச் சென்றான். 'நீராட எழுமின் நீள்விழியீர்' என்று துணை சென்ற பாணினியின் குரல் எழுந்தது. குழுச்சேர்ந்த பெண்டிர் வாழுடை அணிந்து வாடிய மலர்களைந்து பொன்னொளிர் குடங்களுடன் நனைந்த தெருக்களில் சிரித்தும் பூசலிட்டும் சென்றனர். நன்னீர் நறுங்காவிரியில் தலை முழுகி நீராடிப் பண்ணிசைத்துக் குலக்கொடியின் புகழ்பாடிப் போந்தனர். அப்போது மஞ்சள் ஒளி வானில் மடலவிழ மங்கல இளமழை பொன் தூவியது.

தங்கள் இல்லத்து முன்னரங்கில் செம்புத்தாலங்களில் கொன்றைப் பொன்மலரும், பொற்குடத்து முழுநீரும், செம்பழுக் காய் வெற்றிலையும், பசுமஞ்சள் வேரும், முக்கனியும் நறுங்காயும் சுடர் விளக்கு ஒளிசூழ, நிலையாடி நலம் கா[illegible] கூட்டிவைத்து இடர் தீர்க்கும் தெய்வங்களைச் சொல்லெடுத்துத் பணிந்தேத்தினர். பின் புத்தாடை அணிந்து பொலநறுங்கலம் சாத்தி புன்னகை இதழ் விரிய கொழுநர் துயிலெழுப்பி கண்பொத்திக் கூட்டிவந்து மங்கலச்சுடர் நடுவே ஆடிப்பாவை காட்டி வணங்கவைத்தனர். வேம்பின் தளிர் கூட்டிச் செய்த இன்கடும்அப்பமும் பழங்களும் உண்டனர். முற்றங் களெங்கும் கொன்றையும் பொன்மலரும் வேம்பின் பொற்பழமும் கலந்து இறைந்து கிடக்க அவற்றுக்குமேல் காலையிளம் பொன் மழை தூவியது.

முக்கண் முதல்வன் ஆலயத்தில் ஆதிரை நாளில் நிறைவுறும் இளவேனிற் பெருவிழா தொடங்கும் முழவும் மணியும் ஒலித்தன. கமுகம் தளிர்ப்பாளையில் 'சிவம்பணி' எனும் ஐந்தெழுத்தெழுதி பசுமூங்கில் மரம்மீது கொடியாக ஏற்றி வண்முரசொலித்து ஆதிரை வரவை அறிவித்தனர். மலர்மாலைகளணிந்த பெண்டிர் இடை தழைத்து கைகள் கொட்டி மங்கலப்பொற்பூக்குவையாய்ச் சுழன்று வந்து செம்பாலைப் பண்ணிசைத்து ஆதிரைநடனம் ஆடினர். சைவர் இல்லங்களில் கன்னிப்பசுஞ்சாணம் மெழுகிய களமுற்றத்தில் இளங்கமுகுக்குலை நாட்டி தெற்றியும் அலரியும் மலர் பெய்து ஐந்தெழுத்தைத் துதித்தனர். கதலி வாழைப்பழமும் வெல்லமும் பச்சரிசி மாவில் பிசைந்து நறுநெய்யில் வறுத்து அப்பம் செய்தனர்.

வான்நீலவண்ணன் கோட்டத்தில் திருவோண நாளில் நிறைவுறும் இளவேனிற் பெருவிழா தொடங்கும் ஆழிவெண்சங்கும் அலைஇமிழ் முழவும் ஒலித்தன. ஆயிரம் வைணவர் தேவ பாணியில் ஆழியானைத் துதித்தனர். விண்ணவ மதத்தினர் இல்லங் களில் முற்றத்தில் மாமலர்க்கோலங்கள் விரிந்தன. காலையி லெழுந்து குளித்து மலர்க்கூடையேந்திய குழந்தைகள் சிரித்து ஒடிப் பூக்கொய்துகொண்டார்த்தன. அன்னையர் ஈரநறுங்கூந்தலில் இருந்து தோளில் நீர் சொட்ட இளமழையிலமர்ந்து நறுஞ்சுண்ணம் கொண்டு எழுதிய கோலத்தின்மீது வண்ண மலரிதழ்களால் கோல மிட்டு விண்ணளந்தோனின் புகழ்பாடினர். புதுநெய் மணக்கும் அக்கார அடிசில் செய்து குலம்கூடி உண்டனர்.

புகார் நகரத்து மையத்திலிருந்த சாக்கையர் மாடத்தில் இந்திரன் கட்டிய ஏழரங்குகளிலும் துறவோர் கூடி ஒளி விளக் கேற்றினர். செவ்வொளியில் சுடர்ந்த அறிவனின் பாதங்களில்

சாக்கை மதத்துப் பெண்டிரும் ஆண்களும் கூடித் தூவெண்மலர்கள் பெய்து சரணவிளி எழுப்பினர். மாடத்து முகடுகள் உருகி வழிவன போன்று காலைஒளியில் பெய்தது தூவெண்மழை.

கடலாடுகரையில் கலமலைக்கும் காற்று சூழ்ந்த சமணர் பள்ளியில் அருகனுக்கும் அறவோருக்கும் அன்று பெருநோன்பு. சொல்லவிந்த துறவோர் தங்கள் மண்பீடங்களில் அமர்ந்திருக்க சமண மாந்தர் கூடி அவர்கள் பாதங்களை சென்னியிலணிந்து வணங்கினர்.

காலை கழிய நண்பகல் எழுந்தபோது பொன்னுருகி வெள்ளியாயிற்று. ஆடிச்சிதறல்களெனச் சாலைகளெங்கும் நீர்க்குளங்கள் நெளிய அவற்றில் ஆயிரம் பல்லாயிரமென அழலவர் எழுந்தனர். அவ்வொளியின் அலைகள் வெண்மாடச்சுவர்களிலும் சாளரங்கள் வழியாக உள்ளரங்குகளிலும் தளதளத்தன. யவனர் ஆடைகளில் இழைத்த வெள்ளிச்சரடுகள்போல் மென்மழை அப்போதும் வீழ்ந்தது. ஈரம் பரவிய இலைப்பரப்புகள் ஒளித்தகடுகளாகத் திரும்பி காற்றில் உதறிக்கொண்டன.

இளவேனில் நகரத்தின் அனைத்துப் பீடங்களிலும் அமர்ந்திருந்தது. காலங்களை முகத்தோற்றங்களாகக் கொண்ட புவியின் புன்னகை அது.

ᘓ

பூதவி விடிகாலையிலொரு கனவு கண்டாள். இரவெலாம் பாடலும் ஆடலும் கூடலும் நிகழ்ந்த கணிகையர் வீதி காலையில் ஆழ்ந்துறங்கிக் கொண்டிருக்க செவ்வாடை அணிந்த கருங்குழல் பாணினி தன் சிறுமுழவடித்து தொல்தமிழ் பாடியவளாக அவ்வீதியில் சென்றாள். அவள் குரலை அப்போது வேறு எவருமே கேட்கவில்லை. அது அவளை நீராட அழைத்தது. சதங்கை மணி யொலிக்க அவள் வாசலுக்கு ஓடி, ஓசையே இன்றி, நானா என்னையா என்றாள். ஆமாம் உன்னைத்தான் என்றாள் பாணினி. இது கணிகையர் வீதி. கணிகையருக்குக் காலைப் புனலாடும் உரிமை இல்லை என்றாள் அவள். உனக்காகவே இக்கணிகை வீதிக்கு வந்தேன், உன்னை மட்டுமே அழைக்கிறேன் என்றாள்.

துள்ளி உள்ளே ஓடி மாந்தளிர் நிறச் செம்புக்குடமெடுத்து தெருவில் இறங்கினாள். பாணினி காவிரிக்குப் போகும் வழியில் போகவில்லை. எதிரே சாக்கையர் மடமிருக்கும் திசை நோக்கிச் சென்றாள். அங்கே பெருமணியோசை முழங்கியது. இருமருங்கும் மரங்கள் எழுந்த செம்மண் வீதியில் எதையோ எதிர்பார்ப்பவள் போல அவள் நின்றாள். மீண்டுமொரு மணியோசை. மூன்றாம் மணியோசையில் தெருவளைவைத் தாண்டி வந்தது காவிரித் தன் செம்புனல் பெருக்கு. அவளை வீழ்த்தி அவளுடல் மேலேறி மூழ்கடித்துச் சென்றது வெள்ளம். தலைக்குமேல் புதுமலர்களும் தளிர்களும் ஒளிவிட்டுச் சுழன்று செல்வதைக் கண்டாள். அவளுடலே அடித்தளத்துச் செங்கதுப்புச் சேறாகியது. அவள் உடல் வரிகள்மீது நீரொளி அலையடித்தது. தன் குடத்துக்குள் ஓர் அசைவை அறிந்து அதை மெல்ல உடலோடணைத்துக் கொண் டாள். குடம் உயிர்கொண்டதுபோல அதிர்ந்தது. வெளியே கண்டா மணி மேலும் ஒலித்தது.

எழுந்தமர்ந்து மஞ்சத்தைச் சுற்றிச் சுழன்றடித்த ஈரக்காற்றில் வியர்வையின் குளிரை உணர்ந்து தன்னிலை மீண்டு கூந்தல் சுழற்றிமுடிந்துச் சாளரம் வழியாக வெளியே நோக்கினாள்.

இளமழைக் கொழுந்துகள் தொங்கியாடிய மென்னொளிவெளியில் நெடுந்தொலைவிலிருந்து கசிந்தவைபோல மங்கலநீராடும் குலப் பெண்டிர் குரல்களும் மணியோசைகளும் முழவோசைகளும் கேட்டன. அக்கனவையே துழாவிய அவள் அகம் மெல்ல அதன் மையத்தை அறிந்துகொண்டதும் அவள் மைவிழி நிரப்பிய வெய்ய நீர்த் துளிகள் விம்மும் முலைகள்மீது ஓசையின்றிச் சொட்டத் தொடங்கின.

கோவலன் எழுந்து அவளருகே வந்து மெல்ல அணைத்து அவள் துயில் ஏன் கலைந்ததென்று கேட்டான். இது புதுப்புனல் நாளல்லவா என்றாள் அவள். அவன் அவள் மாந்தளிர்த் தோள் களைத் தழுவி முத்தாடி நகரமெங்கும் பரவிய புதுமணல் வரிகளை அவள் உடலிலும் காண்பதாகச் சொன்னான். புதுப்புனல் பெருகிய ஆறுபோல அவளிருப்பதாக அவன் சொன்னதும் அவள் எழுச்சி கொண்டு அவனைப் பற்றி கண்ணீர் மழைபெய்து முத்தமிடத் தொடங்கினாள். அக்கூடலின் முடிவில் மறுநாள் காலை கடலாடு விழாவிற்கு அவனுடன் செல்லவேண்டுமென்றாள் அவள். கூத்தரும் விறலியரும் பாங்கரும் பாடினியரும் உடன்வர வேண்டுமென்றாள்.

அவன் அமைதியாகத் தன்னுள்ளே ஒருகணம் ஆழ்ந்து அவள் தன்னை உலுக்கியதும் ஆம் என்றான். அங்காடிக்கடை அழிந்த பிறகு மெல்லமெல்ல வறியவனாகி மாதவி இல்லத்தைவிட்டு வெளியே செல்லக்கூடப் பொருளில்லாதவனாக மாறிவிட்டிருந்தான். சித்திரா பதியின் கண்களும் பேடியர் சொற்களும் அவனை எள்ளத் தொடங் கியிருந்தன. பாணர் கேட்கையில் ஒழிந்த மடிச்சீலையுடன் கண்கள் தாழ்த்திக் காதுகள் மூடிச் செல்லவேண்டியிருந்தது. அன்று நண் பகல் தலைக்கூறை கொண்டு முகம் மறைத்துப் புதுப்புனல்விழா பொங்கிய தெருக்களில் தன்னந்தனியனாகக் கடைக்கணக்கர்களைத் தேடிச்சென்றான். மாலையிலேயே எஞ்சிய அனைத்தையும் யவனர்க்கு விற்றுப் பொன்னும் புத்தாடையும் கொண்டு மீண்டான். சித்திராபதியின் இல்லத்தில் யாழ்கள் உறை மீண்டன. பாணர் விரல் களும் விறலியர் குரல்களும் உயிர்கொண்டன.

கடலாடு நன்னாள் காலை விடியத் தொடங்கியதும் கணிகையர் தெருக்களில் யவனர் நறுந்தேறற் சிமிழ்கள் உடைபட்டு நுரைத்தெழுந்தன. கணிகையர் நகைப்பொலிகளும் நன்மணி மேகலை ஒலிகளும் சேர்ந்தெழுந்தன. வெண்பட்டும் செம்பட்டு மாய்ச் சீலைகள் பறக்கும் பொன்தட்டுச் சிவிகைகள் ஊர்ந்து வணிகர் வந்து கணிகையரை ஏற்றிச் சென்றனர். பட்டினப்பாக்கத்து தெருக்களில் பல்வண்ண ஆறென அவை ஓடி மருவூர்ப்பாக்கத்தை

நோக்கிச்சென்றன. விண்தோய் வெண்மாடங்கள் எழுந்த வணிகர் தெருவிலும், பீடிகைத் தெருவிலும், கொள்வதும் கொடுப்பதும் முழங்கிய அங்காடித் தெருக்களிலும் எழுந்த மக்களின் குரல்கள் மருவூர்ப்பாக்கத்து அலைக்குரலை வென்றன.

வைகறையிலேயே மாதவி அழகுசெய்தலைத் தொடங்கி விட்டாள். பத்துவகை நறும்பட்டைகளும் ஐவகை வாசனை வேர்களும் சேர்த்த நீரில் ஆடினாள். ஐம்பால் வகுத்த மையிருங் கூந்தலில் மான்மதச் சேறும் மலர்த்தாதும் சேர்த்தாள். தாமரைச் சிற்றடியில் செம்பஞ்சு சேர்த்து, மெல்விரல் முகைகளில் நல் அணி செறிந்து, பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை அரியகம் காலுக்கு அமைவுற அணிந்தாள். மலர்ச்செம்மை எழுந்த மென்துகில்மீது செறியணியும் மேகலையும் சேர்த்தாள். மணிநிரை தோள்வளையும் ஒளிவிரி கண்டிகையும் சூடினாள். சித்திரச் சூடகம் செம்பொன் கைவளை முத்தணி வால்வளை பவளப்பல்வளை எனக் கைக்கு அணி சேர்த்தாள். செய்திறன் ஓங்கிய செம்மணிமாலையும் கைவினை சேர்ந்த அரதன ஆரமும் பதக்கமும் கோவையும் தோளுக்கணிந்தாள். தோடும் தொங்கலும் தொய்யகமும் புல்லகமும் தலையணியும் குழலணியும் அமைத்துக்கொண்டாள். ஓவியத்தூண் விட்டெழுந்த சிலை போலிருந்தாள்.

இசைமுழக்கும் பாணரும் வரிசை சுமந்த பேடியரும் சூழ்ந்த சிவிகைக்குள் மாதவி தோழி வயந்தமாலையுடன் சென்றாள். மணியோசை குலுங்க தலையசைத்துச்சென்ற அத்திரி மீதேறிக் கோவலன் தொடர்ந்தான். பட்டினப்பாக்கத்து நகர்ச்சோலையில் மயில்கள் மரக்கிளைகள் மீதேறி அகவின. சிறார்க்கூட்டங்கள் ஊடே ஓடிக் கூவி விளையாடின. குலக்குறிக் கொடிகள் அலையடித்த குவை மாட நிரை கொண்ட வணிகர் வீதியில் மறுநாட்டு வணிகர்கள் பெருவணிகர்களுக்கு வரிசைகளும் பரிசில்களுமாக வந்து முற்றங்களில் காத்து நின்றனர். அவர்கள் வந்த வண்டிகளும் சிவிகைகளும் புரவிகளும் தெரு மறித்து நின்றன. அரச பீடிகையும் அருக பீடிகையும் அருகருகே அமர்ந்த பீடிகைத்தெருவில் கைவளை குலுங்க ஏவற்கணிகையர் வெண்மலரும் செம்மலரும் அடுக்கிச் செய்த மலர்க்கோலத்தின்மீது குவைநெல்லும் மணிவிளக்கும் மங்கலப்பொருட்களும் வைத்து வழிபட்டனர். காவல் மாடங்களில் கொலைவேல் மறவர் நின்ற மதிற்சுவர்களுக்கு அப்பால் நாளங் காடியின் நிழல்மரச்சோலை. கடைகளெல்லாம் பலநிறத் திரைச் சீலைகள் தொங்க விழிமூடிப் புன்னகைத்தன. அவ்லங்காடியில் யவன வணிகர்கள் சகடங்களில் வந்த சுமைகளை இறக்கிச்

கொண்டிருந்தனர். கூலக்கடைவீதியில் பலநூறு கொடிகள் துவள வணிகர் வண்டிகள் நின்றன.

செம்மணல் நிறம் மாறி வெண்மணல் வரியெழுந்து, சாலை மேலேறியபோது கடலோசையும் அலைவாடையும் எழுந்துவந்து செவிகளை அறைந்தன. அலைகள் அள்ளிவீசிய நீரொளி எழுந்து சிவிகைத் திரைச்சீலைகள் சுடர மாதவி செம்மேகத்தை விலக்கும் செஞ்சுடர்க் கதிர்கள்போலச் செம்பஞ்சு விரல்களால் திரைச் சீலையை விலக்கி கடலின் முடிவற்ற நிலையின்மையை நோக்கினாள். கடற்சாலையின் இருமருங்கும் அலைவாயிருப்பில் யவனத் தச்சர் மரத்திலெழுப்பிய மாடங்கள் மண்ணிலூன்றிய மரக்கால்கள்மீது நின்றன. அவற்றில் மென்திரைச் சீலைகள் செம்புகைப் படலம்போல அசைந்தன. புகைச்சுருட்குழலும் காந்தள் நிறமும் கொண்ட யவனர்கூட்டம் தங்கள் இல்லத்து முகப்பு களில் நின்று கடலாடச் செல்லும் மக்களைப் பார்த்து மகிழ்ந்தது. அப்பால் தாழைமடல் மணம் எழும் காற்று வந்தபோது மாதவி மூச்சிழுத்து முகம் மலர்ந்தாள். புன்னை மலர்கள் பூத்துக் குலைத்தும் உதிர்ந்து விரிந்தும் பொன்னிறம் கொண்ட சாலையில் சிவிகைகள் சென்றபோது அவையும் பொன்னால் மூடின. மீன்செதில் போலவும் குருவி உகிர் போலவும் முள்ளெழுந்த தாழைமடல்களின் வாள்படைவரிசைகள் ஏந்தி நின்ற நெய்தலங்கானலில் அவர்கள் நுழைந்தனர்.

முற்பகற்பொழுதிலும் இளங்குளிர் பரவிய கானலம் பெருந்துறை நெடுநிழற் சோலையில் அரசரும் அமைச்சரும் வணிகரும் மறவரும் தங்கள் உரிமை மகளிரும் , வரிசை மகளிரும் , ஆயப்பெண்டிரும் , ஏவல் பெண்டிரும் புடைசூழ நிறைந் திருந்தனர். அவர்கள் தங்கள் பெண்களுடன் காமம் கொண்டாடும் பொருட்டு கட்டப்பட்ட பலநிறத் திரைச்சுற்று மாடங்கள் திசை முனைவரை கடற்காற்றில் வண்ணக்கடலலைகள்போல எழுந்த மர்ந்தன. முழவு தேர்ந்தும் யாழ்ச்சுவை கூர்ந்தும் பாடல் மக்கள் எங்கும் குழுமியிருந்தனர். சதங்கைகள் குலுங்க மேகலை அசைய ஆடல் மகளிரும் பாணினிப் பெண்டிரும் தோகைமயில்கள்போல நடந்தனர். கடலோசையே சுதியாக முழவும் யாழும் திசையெங்கும் இசை நிரப்பின. ஊடே வண்ணமும் சுண்ணமும் சாந்தும் தேறலும் அப்பமும் நறவும் விற்கும் பரதவரும் சாம்பவரும் திரிந்தனர்.

கோவலனும் காதலியும் தங்கும்பொருட்டு பேடியரும் வினைவலரும் சேர்ந்து பொற்பூப் புன்னைப் புதுமணல் நிழலில் தாழை மரங்களில் ஓவிய எழினி சூழச்சுற்றித் திரைமாடம் கட்டினர்.

அதனுள் வெண்குறுங்கால் கட்டிலை விரித்து அதன்மீது முள்நீக்கிய தாழைமலர் மடல் மேவிய குளிர்த்தளிர்ப் பாய் பரப்பி மாதவி அமர கோவலன் அவள் கூந்தல் அகிர் மணமும் இதழ் நறுமணமும் மதநீர் வெறிமணமும் தாழைமணத்துடன் ஊடுகலப்பதை அறிந்தான். பின்பு ஒவ்வொரு முறையும் தாழைமணமே அவனை கிளர்ந்தெழச் செய்தது. நெய்தலங்கானலின் மென்மணலும் மாதவியின் பொன்னுடலும் ஒன்றாகி அவன் உள்ளத்தில் நிறைந்தன.

அணிகலன்களை ஒவ்வொன்றாகக் கழற்றிவிட்டு மாந்தளிர் மேனி மாதவியை பெருங்கடலாமை ஓட்டில் நறுஞ்சாந்தும் எண்ணெய்யும் சேர்த்துக் குழைத்த விழுக்கில் அமரச்செய்து நறும்பூச்சுச் செய்தனர் சேடியர். பின்பு சுண்ணமும் சாந்தும் பூசிய கோவலனும் அவளும் கடலலைகளில் ஏறி நீந்தியும் துழாவியும் முழுகியும் எழுந்தும் சிரித்தும் கூவியும் காமநீராடினர். தீரா அலைகளே கடல் என்றறிந்தனர். கரைசேர்ந்து மென்நறவம் துணை சேர்த்த அப்பமும் இன்கடுங்கள்ளும் இருவரும் அருந்திக் களியேறிக் களித்தனர். சேடியர் தொடுத்த தழையாடை அணிந்து மலர்க்கோதை புனைந்து வெண்மணல் வெளியில் கூவியும் களித்தும் செவ்விழி சிவக்க கள்வெறி கொண்டும் ஆடினர். மீண்டும் கடலாடி மீண்டும் கரைசேர்ந்து மீண்டும் தாழைமடல் மஞ்சம் சேர்ந்து மீண்டும் நீராடி மண்ணில் மானுடர்க்கு விண்ணவர் அளித்தவற்றையெல்லாம் அறிந்தனர்.

நெய்தற்சோலை நிழல்களிலிருந்து இரவு எழுந்து கடல்நீர் ஒளிமீது கவிந்து விரிந்தது. வானில் விண்மீன்கள் நடுவே சித்திரைச் செந்நிலா சுடர் விரித்தெழுந்தது. மண்ணில் சோழனின் பேராயம் மூட்டிய பெருநெருப்பு நிலவாகச் சுற்றிலும் செஞ்சுடர்விளக்குகள் எல்லையழிந்து எழுந்தன. வண்ணமும் கூறையும் விற்கும் வணிகர் கொளுத்திய புன்னைநெய் விளக்குகளும் நறுஞ்சாந்தும் மலரும் சுண்ணமும் பிட்டும் பணியாரங்களும் விற்கும் சாம்பவர்கள் ஏற்றிய தென்னைநெய் விளக்குகளும் பரதவர் ஏற்றிய மீன்நெய் விளக்கு களும் கலங்களில் யவனர் ஏற்றிய ஊன்நெய் விளக்குகளும் செவ் விண்மீன் தொகையென இமைத்து இமைத்து இரவை நிறைத்தன.

திரைமாடத்துள் கோவலனுடன் அமர்ந்த மாதவி இன்கள் கவையில் தன்னிலையழிந்தாள். காமம் கரையழிந்து கடல் சேர்ந்த பின்பு இசையன்றி ஏதும் எஞ்சியிருக்கவுமில்லை. வெண்ணிலா தன் சுடர் வட்டத்துடன் வானிலெழுந்தபோது மணற்பரப்பெங்கும் நீலநிழல்கள் நீண்டன. தாழை மரத்து நிழல்களின் நீலநீர்ப் பாம்புகள் நெளிந்தன. இசையன்றி எதற்கும் இடமில்லாத வேளை

கொற்றவை

என்று கோவலன் உணர்ந்தான். வயந்தமாலை தன் கையிலிருந்த மகரயாழை மாதவியின் கையில் கொடுத்தாள். ஓவியக்கோலமிட்ட செவ்வண்ண உறையை அகற்றியபோது மலரிதழ் நடுவிலிருந்து பொன்வண்டு எழுவதுபோல யாழ் வெளியே வந்தது. அவள் விரல்கள் தொட்டதுமே உள்ளிருந்து எழுந்த இசையை வாங்கி யாழ் மெல்லிய மீட்டலைத் தொடங்கியது. ஆணியை முறுக்கி நரம்பை இறுக்கி யாழையும் தன் நெஞ்சையும் ஒரே இசைவில் நிறுத்த முயன்றாள். மெல்ல மெல்ல யாழும் அவளும் ஒருடல் கொண்டனர். அவள் உணர்வுகள் யாழ்நரம்புகளில் ஓட யாழதிர்வுகள் அவள் நரம்புகளில் பரவின.

மலரல்லிகளில் மெல்ல அமர்ந்தெழுந்து சிறகடிக்கும் பூத்தும்பிபோல மாதவியின் விரல்கள் சென்றன. அவள் குரலில் நெஞ்சின் ஆழத்தில் அவள் சுமந்த மென்மை வெளிவந்தது. அவள் குரலை யாழும் யாழை அவள் குரலும் உள்வாங்கின. நெடு நாட்களுக்கு முன்பு முதலில் யாழை அறிந்த அன்று இரவில் தன் முன் வெளித்த ஒலியிலா விரிவானைக் கோவலன் நினைவு கூர்ந்தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் அதை நோக்கியே அவன் ஓடிக்கொண்டிருப்பதை அறிந்தான். ஆனால் அந்த வானமோ தேடுபவர்களைத் துறக்கும் மாயப்பெருவெளி. தன்னுள் தான் நுழைந்து தனித்திருப்பவர்களைச் சூழும் கனவு. மாதவி கை யாழை வாங்கிக் கோவலன் அதன் ஆணியை முறுக்கினான். அவள் கொண்ட இசை அத்தனை புரிகடை இளகியிருப்பது குறித்து வியந்தான். ஆணி முனக அழுத்தி இறுக்கியபோதும் அவன் அகத்தின் இசையை யாழ் அடையவில்லை. பின் ஒருகணத்தில் நரம்பு ஒன்று விம்மி உடைந்த மணியொலி எழுப்பியபோது தன் நரம்புகளின் இசையை அவனறிந்து விரல்களால் வாள்நுனிபோலக் கூர்ந்து ஒளிர்ந்த நரம்பை வருடித் தன் இசையை எழுப்பினான்.

முதல்சொல்லைப் பாடிய பின்பே தான் பாடியது காவிரியை என்று அவனறிந்தான். கரையறிந்து ஒழுகும் குளிர்நீர்க் காவிரியின் ஓவியம் அவன் உள்ளத்திலெழுந்தபோதே கரைநாணல்கள் குலைந்தொலிக்கும் அதன் மென்சிலம்போசையும் அவன் காதில் எழுந்தது. ஒரு கணத்தில் அவன் முன்னிருந்து நிலா விரிந்த வெண் மணல்வெளியும் நிழல்பரவிய தாழைமலர்ச்சோலையும் மாதவியும் மறைந்தனர். சிலம்பொலியே அகத்தாளமாக அவன் சொற்கள் யாழிலூறி வழிந்தன. மகர யாழின் பதினேழு நரம்புகளில் ஒன்று மட்டும் அவன் வாசிக்காத இசையை எழுப்பியது. அதை அவன் மட்டுமே கேட்டான். அவன் விரல்கள் மீதி நரம்புகளில் இசையை

எழுப்பியபோதும் அவன் அந்தத் தனிநரம்பின் மெல்லிய விம்மலை மட்டுமே கேட்டான்.

அவன் சொற்களையும், துணையாக உடன்சென்ற யாழிசை யையும் அவள் செவிகள் கேட்டனவென்றாலும் அவள் அகம் அந்தத் தனிநரம்பின் விம்மலை மட்டுமே அறிந்தது. அதில் எழுந்த சிலம் போசை அவள் புலன்களில் எதிரொலி எழுப்பியது. துயரம் மட்டுமே அளிக்கும் நிறைவுடன் அவன் யாழை அவளிடம் நீட்டிய போது அவள் அகத்தின் இசைக்கும் யாழின் தெறிப்பு பொருந் தியதை அறிந்தாள். மெல்விரல்சதையை நரம்பின் கூர்மை வெட்ட யாழ்க்குடத்தில் செவ்வுதிரத் துளி சொட்ட அவள் தன் இசையைப் பாடினாள். அவள் சொற்கள் அலைகள்மீது நெற்றுகள் போல அலைபாய்ந்தன. பின் ஒரு சொல் இறுகியிருகிக் கல்லாகி நீரில மிழ்ந்தது. ஆழத்தில் நிலவொன்று மிதந்த வானம் நோக்கி இறங் கினாள். சம்பாபதியின் சரிந்த குவைமாடங்களும் சிதைந்த கோட்டைகளும் பரவிய வெளியில் நிலவுபட்ட மீன்கள் பொன் னிறமாகச் செதில்கள் ஒளிவிட மெல்லச்சுழன்று சென்றன. அவளும் ஒரு பொன்வாளை மீனாகி அலையெழுப்பாது நழுவி நீந்திச் சென்றாள். நீரடியில் எழுந்த கருவறைகளுக்குள் பச்சை இருள் கனத்த கருவறைகளின் உள்ளே விழி மின்னும் இறைவிகளின் பசித்த முகங்களைக் கண்டாள். அவற்றில் ஒன்றில் ஒரு சிறுகுழந்தை வீற்றிருந்தது.

அவள் இசை கோவலனைப் புதுப்புனல் என இழுத்துச் சென்றது. வண்டுடன் மலர்களும் தளிர்களும் பொன்மின்னும் சருகுகளும் சுழலும் குளிர்நீர் மண்மணமும் தழைமணமுமாக அவனைத் தழுவி அள்ளிச் சுழற்றியது. ஒரு கணத்தில் காலில் மெல்லிய உடலொன்று உரசிச்செல்வதறிந்து பதறிக் குனிந்து நீருள் பார்வையால் துழாவினான். எங்கும் சுழன்றுசெல்லும் மலர்களும் சருகுகளும் தெரிந்தன. அப்போது மேலே தோள்கள்மீது தொட்டு நழுவிச்சென்றது அவ்வுடல். மூச்சு நெஞ்சுக்குள் சிக்க சுழன்று மேலெழுந்தபோது பின்னகரும் வெளிறிய வானமும் நீர்நுரையும் தான் தெரிந்தன. மீண்டும் கால்களை உரசிச்சென்றது அம்மெல் லுடல். அவன் பாய்ந்து கரைநோக்கி நீந்தியபோது தாமரைத் தண்டுகள்போல இரு கரங்கள் அவன் கால்களைப்பற்றி உள்ளே இழுத்தன. கடலலைகளின் எடையை உடலெங்கும் உணர்ந்தான். நீலநீரில் அவளை இழுத்துச்செல்லும் பெண்ணின் நன்கு பழகிய பின்னழகைக் கண்டான். அவளுடன் அமிழ்ந்து இறங்கிச்சென்று நீருள் விரிந்த மூழ்கிய பெருநகர்ச் சதுக்கத்தையும் சரிந்த மாடங்

களையும் கண்டு கண்டு சென்று திறந்த சிறுகருவறைப் பச்சை யிருளில் கண்சுடர நின்ற அவளை நெஞ்சம் தாங்காப் பேரச் சத்துடன் நேர்கொண்டான்.

இசை நிலைக்கவும் ஒருகணம் தன்னுள் ஆழ்ந்து அமர்ந்து பின்பு எழுந்து 'இரவேறி விட்டது. நாம் மீளவேண்டிய நேரமாகி விட்டது போலும்' என்று அவன் எழுந்தான். அவளும் அவனும் ஒருவருக்கொருவர் ஒரு சொல்கூடச் சொல்வதற்கில்லையென உணர்ந்த சுமையேறிய கணங்களுக்குப் பின் அவன் முன்நடந்து தன் குறும்புரவி மீதேறி இருளில் தன் தலையின் சுமையைத் தானே தாங்காதவனாக நகருக்குச் சென்றான். நாளங்காடியில் காவற் பந்தங்களின் ஒளியில் தன்னை இழந்து சென்றவன் தன் கடையிருந்த வேங்கைப் பெருமரத்தடியில் வந்ததும் குறும்புரவி தரையுதைத்து நின்றதை உணர்ந்தான். தன்னிடம் என்ன மிஞ்சி யுள்ளது என்ற வினாவே அக்கணத்தில் அவனிடம் எழுந்தது.

பொழுது வான் சேர்ந்த புகார்நகரத்து வீதிகளில் தன் நெஞ்சின் குரலையே மீண்டும் மீண்டும் கேட்டபடி நடக்கும் அவன் பெயர் கோவலன் என்று பின்னிரவில் மலர்விரியும் முதல்மணம் கொள்ளத் துயிலெழுந்து உலவும் இயக்கரும் மாலரும் அறிந்தனர். அவன் நிழல்மட்டுமே அவனை ஒலியின்றித் தொடர்வதைக் கண்டு அவர்கள் அவனை நோக்கி வருந்திப் புன்னகை புரிந்தனர். நான்கு நாட்களாக அவன் விண்ணவன் கோட்டத்து முகப்பிலும் பெண் ணொருபக்கன் ஆலயத்து மண்டபத்திலும் சாக்கியன் கோட்டத்துச் சாவடியிலும் நீக்கியோர் மடத்து வாசலிலும் அறம்கேட்டு அருந்தும் வறியவன்போல அமர்ந்து தன்னுள் ஊறிய புன்கணீரெல்லாம் மார்பில் சொட்ட விம்மியழுவதை அவர்கள் கண்டிருந்தனர். கூகை போல அவன் பகலொளியை அஞ்சி ஒளிந்து இரவில் எழுந்து நகரத்துத் தெருக்களில் சுழன்றலைந்தான். அவன் விரல்கள் காற்றி லெழுதிக் காற்றிலெழுதித் தவித்தன.

இரவெழுந்ததும் மேலாடை பறக்க சுமை தூக்கும் சாம்பவர் கள்ளுண்டு மயங்கும் புறவணிகர் வீதிகளிலும் பரதவர் பூசல் செய்யும் மருவூர்ப்பாக்கத்து மணல்விரி கரையிலும் தன்னிலை அழிந்து சொன்ன சொல் கேளாது அலைந்தான். யவனர் தெருக் களிலும் குயவர் முன்றிலிலும் விழுந்து கிடந்தான். பின்பு பாய்ந் தெழுந்து மேலாடை வரிந்து சுற்றி மூச்சிரைக்க கணிகையர் வீதியில் மாதங்கி ஆலயம்வரை சென்று மாடச்சாளரத்தில் எரிந்த விடி விளக்கைப் பார்த்துச் சற்றே நின்றான். மீண்டும் திரும்பி இரவு நிறைத்த தெருக்களில் அலைந்தான். காற்றேயில்லாத இளவேனில் இரவில் கொடிகள் உயிரிழந்து தொங்கிய மாடங்களின் நிழல்களில் தேங்கிய இருளில் தன்னை மீண்டும் மீண்டும் ஒளித்துக்கொண்டு அலைந்தான்.

நாளங்காடித் தெருக்களில் நுழைந்து மீண்டும் தன் கடை யிருந்த வேங்கை மரத்தடிக்கு வந்தான். ஒவ்வொரு முறை சுழன்று அங்கு வருகையிலும் ஏதோ அங்கே நிகழ்ந்திருக்கும் என எண்ணி

ஏங்கியது அவனுள் உறைந்த சிறுவன் அகம். சதுக்கப்பூதமோ பாசண்டசாத்தனோ அகம் கனிந்திருக்கலாம். அவன் கடை மீண்டும் ஓவிய எழினியும் மேவிய துலாவும் பொலஞ்சேர் அறையும் நலஞ் சேர் சாலையுமாக நிறைந்து பொலிந்திருக்கக் கூடுமென எதிர்பார்த் தான். இரவில் தன் சிதைந்த கடை முன் நின்று ஏறிட்டுப்பார்த்த போது ஒரு கணம் அச்சிறுவனின் கனவு பலிபீடத்து விலங்கெனக் கழுத்தறுபட்டுத் துடிக்கத் தொடங்குவதைக் கண்டான். அதைத் தாளாமல் இருளில் நின்று தேம்பி அழுதான்.

நான்காம் நாள் தன் கடைமுன் நின்ற பெரும்புங்க மரத் தடியில் அவனை வயந்தமாலை வந்து தொட்டாள். மாதவி கொடுத்த தாழைமடல் முடங்கலை அவனுக்கு அளித்தாள். தாழை மணம் ஒரு கணத்தில் அவன் உள்ளத்தில் கடலலைகளைக் கிளர்த் தியது. அவ்வலைகளில் ஆடிய அவன் அகக்கலன்களில் பாய்கள் புடைத்தெழுந்தன. கண்ணீருடன் அந்த முடங்கலை மார்புசேர்த் தணைத்துத் துள்ளி ஓடினான். முத்தமிட்டும் கண்ணிலொற்றியும் புலம்பினான். செம்பஞ்சுக் குழம்பு தொட்டு முகைமலரால் எழுதப் பட்ட அச்சொற்களை அவனால் படிக்கவே இயலவில்லை. எழுத்துக்கள் ஒவ்வொன்றும் புதுச்செம்மலர் முகைபோல இதழ் விரித்தன. பின் மெல்ல அடங்கி அதைப் படித்தான். மீண்டும் மீண்டும் படித்து மெல்ல நிலம் தொட்டிறங்கினான். வயந்த மாலையிடம் அவனை அங்கு வந்து தன்னைத் தேடச்சொன்னவள் அவள்தானே என்று கேட்டான். ஆம் என்றாள் அவள்.

அவன் நெஞ்சம் மிரண்ட புரவிபோலத் துள்ளி எழுந்து குதித்துச் சுழன்றது. ஆம், அவள் அவனை உள்ளும் புறமும் அறிவாள். அவன் இந்நான்கு நாட்களில் எண்ணிய அடைந்த ஒவ்வொரு சொல்லும் அவளுக்குத் தெரியும். அம்முடங்கலைக் கண்டதும் அவன் என்ன உணர்வான் என்றும் அவளுக்குத் தெரியும். இந்நேரம் அவள் நறுமணம் சேர்த்து நன்னீராடிக் கூந்தல் வகுத்து பொன்னுடையணிந்து அணிபல இழைத்து புதுமலர் சூடித் தாழை மடல் பரப்பிய மென்மஞ்சத்தில் அவனுக்காகக் காத்திருப்பாள். அவன் தன் உள்ளத்தில் எழுந்த விரைவனைத்தையும் கையில் கொணர்ந்து அம்மடலைக் கிழித்து வீசினான். வெறுப்பு தன்னுள் மூண்டதுமே அவன் ஒன்றை அறிந்தான், அவ்வெறுப்பு அவனை வலிமைகொள்ளச் செய்தது. அக்கணம்வரை அவனை அலைக் கழித்த எடையின்மையை அழித்து இரும்புக் காப்புடைபோல அவனை மண்ணிலிறக்கியது. அந்தக் காப்புடைக்குள் தன் புண்களை மறைத்துக்கொண்டு எந்தக் கூர்வேலையும் எதிர்கொள்ள இயலு

மென்று அவனறிந்தான். அவ்வறிதல் அவனுள் ஆறுதலை நிறைத்தது.

வெறுப்பு தன் கண்களையும் செவிகளையும் காலத்தில் முன்னும் பின்னும் நெடுந்தூரத்துக்கு கூர்மையாக்கி விரித்துவிட்டிருப் பதைக் கண்டான். அவனால் விண்ணில் பறந்தபடி மண்ணிலூரும் எறும்பையும் பார்க்க இயலும். அதன் கால்கள் எழுப்பும் ஒலியையும் கேட்க இயலும். வெறுப்பு ஒரு மாபெரும் ஏவற்பூதம். அப்போது தேவையான அனைத்தையும் அது கொண்டுவந்து முன்னால் பரப்பியது. மாதவியை அப்போதுதான் முதல் முறையாகச் சொல்லணியும் நகையணியும் கண்திரையும் காமத் திரையும் இல்லாமல் பார்த்தான். மரத்தடிக் கல்லை அகற்றுகையில் தெரியும் மென்வேர்ப்படலம்போல அவள் அகத்தின் அத்தனை நரம்புகளையும் அவனால் காண முடிந்தது. அதில் எங்கு தொட்டால் அவள் வலியால் துடிப்பாள், எங்கு அடித்தால் அவள் எலும்புகள் முறியும் என்று அறிந்தான். கடும்வெறுப்பை முகத்தில் தேக்கி அச்சொற்களைச் சொன்னான்.

நாடகக் கணிகை நடிப்புகளை நான் அறிவேன். நான் இப்போது பெருவணிகனல்ல. ஒழிந்த பொற்சீலையும் கழிந்த நற்காலமும் கொண்ட வீணன். அவள் வீட்டுத் தாழைமடல் மஞ்சம் இனி வேறு வணிகர்களைத் தேடட்டும்.

வயந்தமாலையின் கண்களைக் கண்டதும் அவள் அவனை வெறுப்பதன் மெய்யான காரணம் நச்சுமுள்ளில் கைபட்டதுபோல அவனுக்குப் புரிந்தது. அவனை மாதவி விரும்புவதை, அவன் முன் அவள் கணிகையல்ல என்பதை வயந்தமாலை அறிவாள். அவ்வள் பையே சரடாக்கி அவளை அவன் கட்டிப்போட முடியுமென்றும், சிறுவிரல் தொடுகையால் அவள் சிறகுகளை அவன் முறித்துப் போடக்கூடும் என்றும் அவள் உணர்ந்திருந்தாள்.

அவன் அகம் இரண்டாகப் பிரிந்து ஒரு பாதியில் இருந்து உதிரம் கொட்ட ஆரம்பித்தது. ஆனால் மறுபாதி அறியமுடியாத பேருவகை ஒன்றை அடைந்தது. பொன்வண்டைப் பிய்த்துப் போட்டு அது துடிப்பதைக் காண்கையிலெழும் உவகை அது. அச்சொற்களை மேலும் வெறுப்புடன் மேலும் வெறியுடன் அவன் சொன்னான். வயந்தமாலை அவற்றை அப்படியே மாதவியிடம் சொல்வாள் என்பதை அவள் கண்களில் தெரிந்த நிறைவின் ஒளி காட்டியது.

வயந்தமாலை சென்றதும் அவன் நெடுமூச்சுடன் நிமிர்ந்து

பார்த்தான். வைகறைக் கடற்காற்றில் கொடிகள் அசைந்தெழ ஆரம்பித்தன. அவன் பட்டினப்பாக்கத்தை அடைந்தபோது தலைக்குமேல் பறவைக்கூட்டங்களின் சிறகடிப்புபோலக் கொடிகள் துடிப்பதைக் கேட்டான்.

ᘓ

இருள் பிரியா இளங்காலையில் கோவலன் வீடு திரும்பினான். அந்நேரத்தில் மாளிகை முகப்பில் சேடியொருத்தி மலர் கொய்து நின்றிருந்தாள். இருபதாண்டுக்காலம் தான் வாழ்ந்த இல்லத்தின் படித்தளம்மீது கால்வைக்கத் தயங்கிக் கோவலன் நின்றான். இருமுறை தூக்கியும் கால்களை அவனால் வைக்க இயல வில்லை. அவன் அசைவு கண்ட சேடிப்பெண் 'கள்வன்!' என்று கூவி, அஞ்சிப் படிகளில் ஏறி நின்று அவனை அடையாளம் கண்டு வியந்து வாய்பொத்தினாள். கோவலன் முகத்தில் அப்போது விரிந்த உணர்வுநிலையை அவள் பின்பு தன் உள்ளத்தில் பல்லாயிரம் முறை மீண்டும் மீண்டும் எழுப்பிக்கொண்டாள். ஒரு கணம் திகைத்து நின்று பின்பு உள்ளே ஓடிக் கண்ணகி படுத்திருந்த பள்ளியறைக்குள் நுழைந்து ''கள்வர்போல ஒருவர் வந்தார். அவர் நம் தலைவர் கோவலர் என்று கண்டேன்!'' என்று கூவினாள்.

அக்கணத்தில் என்ன செய்வதென்றறியாமல் கண்ணகி திகைத்து எழுந்தாள். அவன் நோயுற்றுக் கண்ணீர் வார அவளிடம் மீளவேண்டுமென்பதே பாணர் பாடல் சொல்லும் விதி. அப்போது அவள் பத்தினிகளுக்குரிய அருளும் விழிகளும் சொற்களுமாக அவனை ஆரத்தழுவ வேண்டும். ஆனால் அப்போது அவள் அகம் எண்ணங்களில்லாமல் காலையில் காவிரி மணற்பரப்புபோலக் காற்று சென்ற வரித்தடங்கள் மட்டுமே கொண்டதாக இருந்தது. மீண்டும் அமர்ந்துகொண்டபோது அவள் தன் கண்களில் இருந்து வெய்யநீர் முலைகள்மீது விழுவதை அறிந்தாள். அவன் காலடி யோசையைக் கேட்டபோது தன்னுள் எழுந்த வெறுப்பை உணர்ந்து தன்னையே அஞ்சி மென்பஞ்சுச் சேக்கையில் முகம் புதைத்துக் கொண்டாள்.

கோவலன் பஞ்சணையின் விளிம்பில் அமர்ந்து அவள் சென்னியின் கலைந்த நறுங்கூந்தலை மெல்ல ஒதுக்கினான். அவள் உதிரவண்டு கொட்டிய புரவியெனத் துடித்து அவன் தொடுகையை உதறி எழுந்தமர்ந்தாள். அவன் கண்கள் அவள் விழிகளைத் தொட

இயலாது சரிந்தன. அவன் உடலெங்கும் பரவிய சிறுமையின் கூச்சத்தைக் கண்டாள். தன்னுள் சிறு உவகையின் ஊற்றை உணர்ந்தாள். வென்றுவிட்டோம் என்று அவளுக்குப் பட்டது. அவள் இதழ்களில் குறுநகை மென்னொளி கொண்டது. அவன் தோள்களில் தன் கரங்களை வைத்தாள். அவள் தொடுகையில் அவன் உடல் அதிர்ந்து கண்கள் கரைந்தழிய அவள் மடிமீது சரிந்தான். அப்போது சேற்றிலாடி அழுக்குடலுடன் தன்னிடம் மீண்ட மகன் என அவனை உணர்ந்தாள். அவன் குழல்கற்றைகளை மெல்ல வருடி ''தீவினையாவும் முடிந்து விட்டன'' என்றாள். அச்சொற்களை அவள் பல்லாயிரம் முறை தன்னுள் சொல்லியிருந்தாள். அவை ஒலிக்கக் கேட்கையில் வெற்றொலிகளே அவை என்றறிந்தது அவள் அகம்.

அவள் குரலில் இருந்த மென்மையும் கருணையும் அவன்மீது இளந்தென்றல் எனத் தழுவிச்சென்றபோதும்கூட அதற்குள் தொலைதூரத்தில் பசுமை கருகிய புகைமணம் என ஒன்றை அவனால் உணர முடிந்தது. அவள் கண்களைப் பார்த்தான். அவை கற்கோயில் கருவறைக்குள் சிலைத்த கண்ணகையம்மனின் கருணைவிழிகள் போலிருந்தன. அவன் உணர்வலைகள் ஒடுங்கித் தனிமையும், அதிலிருந்து வெறுப்பும், அவ்வெறுப்பு மட்டுமே அவனில் உருவாக்கும் வலிமையும் எழுந்தன. ''உன்னைத் தீண்டவும் உன் சொற்களைக் கேட்கவும் எனக்குத் தகுதியில்லை. மங்கலமிழந்த பொருள்போலக் கைவிடப்படுவதற்கே தகுதியானவன்'' என்றான். ''உங்கள் காலடியொலிக்காக நான் இத்தனை நாள் ஒவ்வொரு கணமும் செவிகூர்ந்திருந்தேன்'' என்றாள் கண்ணகி கண்ணீருடன்.

''என்னிடம் எதுவுமே மிஞ்சவில்லை என நீ அறிவாயா? என் முன்னோர் குவித்த பொருளெல்லாம் அந்நாடகக் கணிகையும் அவள் பேடிச்சுற்றமும் கவர்ந்தனர் . இன்று நான் ஊரும் அத்திரியும் நானும் இணையானவர்கள்'' என்றான் அவன். ''என் மங்கல நாண் ஒன்றே என் செல்வம்'' என அவள் சொன்ன பதிலை முன்னரே அறிந்திருந்தான். அதுவன்றி எதையும் அவள் சொல்ல முடியாது. கற்பரசியர் ஒழுகும் கரைகள் பல்லாயிரம் காலங்களுக்கு முன்னரே வகுக்கப்பட்டுவிட்டன. அவர்கள் சொற்கள் முன்னரே எழுதப்பட்டுவிட்டன. அவள் மடியில் தலைசேர்த்து அப்போது சொல்லவேண்டிய அனைத்தையும் சொல்லி அந்தத் தருணத்தை முழுமை செய்தான். அது முடிந்து அவன் நீராடவும் அவள் புறக்கோட்டத்துக்கும் சென்றபோது இருவருமே அழுத்தும் சுமையொன்றை இறக்கியவர்கள்போல, கருவறை ஒழிந்த கோயி

லொன்றில் ஆயிரம் முறை வலம் வந்தவர்கள்போலக் களைத் திருந்தார்கள்.

அன்று பகலெல்லாம் அவன் தன் அறைகளையும் நூல்களை யும் மீண்டும் மீண்டும் நோக்கிக்கொண்டிருந்தான். யாழ் மீட்டித் தளர்ந்த தன் விரல்களால் கணக்குகளை மீட்டி மீட்டிச் சலித்து அவற்றின் மேலேயே படுத்துறங்கினான். மறுநாள் அவளைக் கண்ணகி தழுவி எழுப்பியபோது சிவந்த கண்களால் அவளை நோக்கி ''விற்பதற்கு இவ்வுடலன்றி என்னிடம் ஏதுமில்லை என்றான். ''ஆனால் நான் வணிகம் செய்தாகவேண்டும். அனைத் தையும் மறந்துவிட்டாலும் இன்னும் நான் என் தந்தைக்கும் தாய்க்கும் மகன் என்பதை மறக்கவில்லை. இழந்தவற்றில் சிறிதேனும் ஈட்டி அவர்களுக்கு நான் செய்ய வேண்டியவற்றைச் செய்தாக வேண்டும். நான் மதுரைக்குச் செல்கிறேன். அங்கே என் குலவணிகர் பலர் உண்டு. அவர்களிடம் உதவி கேட்பேன். அங்கு நான் ஆவணிவீதியிலும் மாசிவீதியிலும் அமர்ந்து கூலவணிகம் செய் யலாம். சங்கும் உப்பும் கூட விற்கலாம். என் குலஅடையாளம் எதுவும் அங்கு எனக்குச் சுமையாகாது'' என்றான்.

கண்ணகி தன் காற்சிலம்புகளைக் கழற்றி அவனருகே வைத்தாள். ''மாணிக்க அரிபெய்த சிலம்புகள் இவை. இவை நீங்கள் மீண்டும் வணிகத்தைத் தொடங்க அடிமுதலாகும்'' என்றாள். ''அவை உன் குலத்து அடையாளங்கள் அல்லவா?'' என்றான். ''ஆம். ஆனால் வணிகர்கள் சிலம்புக்குள் மாணிக்கம் பெய்வதே அனைத்தையும் இழந்தபின் எஞ்சும் செல்வமாக அது இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்'' என்றாள் கண்ணகி. ''சிலம்புடைத் தவன் நலம்பெறுவான் என்று ஆன்றோர் சொல்வதுண்டு. சிலம்பின் செல்வத்தால் வணிகம் செய்யும் ஒருவர் ஒருபோதும் பிழைசெய்யமாட்டார்'' என்றாள். ''இச்சிலம்பில் அல்லவா கண்ணையன்னையின் மந்தணச்சொற்களைப் பொறித்து உன் குலம் உனக்கணிவித்தது'' என்று கோவலன் கேட்க ''ஆம், ஆனால் அது இடச்சிலம்பில் மட்டுமே. வலச்சிலம்பில் உள்ளது மந்தணச் சொற்கள் அல்ல, சொற்களைப்போன்ற கோலங்களே'' என்றாள் கண்ணகி.

அவன் சிலம்புகளையே நோக்கி அமர்ந்திருந்தான். மெல்ல முறுவல் கோட்டி ''இவற்றின் வடிவத்தை இப்போதுதான் பார்க் கிறேன். வளைந்து தலையால் வால்தொடும் வாளை போன்றிருக் கின்றன...'' என்றான். அவளும் அதை அப்போதுதான் கூர்ந்தறிந் தாள். ''பொங்குங்கடலோடிப் பொலங்கொளும் நகரத்தார் மீச் கொறுவ

வடிவில் ஏன் நகை செய்யவேண்டும்? அந்தப் பொற்கொல்லனைக் கேட்க வேண்டும்'' என்றான். ''கடலாடும் கண்ணையம்மனின் கால்களைப் பார்த்துச் செய்யும் சிலம்புகள் இவை'' என்றாள் கண்ணகி. ''இதை அணிந்து நீயும் ஒரு மீனவப்பெண்ணாகி விட்டாய்'' என்று அவன் நகைமொழி சொன்னான். ''நாம் மீனவன் நாடு செல்கிறோம். இச்சிலம்பில் வளையும் வாளையே அவன் கொடியில் வாய் திறந்து துள்ளுகிறது...'' என அவன் சிரித்தபடி அவளைத் தழுவிக் கொண்டான். ''இன்றிரவே நாம் இந்த நகரை நீங்குவோம்.'' என்று அவன் சொல்ல அவள் ''ஆம்'' என்றாள்.

ᘓ

பெண்மகளறியா வண்ணச்சீரடிப் பெண்ணிற் பெருமகள் கண்ணகி தொடரக் கோவலன் நடந்தான். விடிகாலை இருளுக்குள் இளமையில் உலவிய கால்களே வழிகாட்ட உளமே ஒளியாக ஊரவர் உறவோர் யாவரும் அறியாது தெருக்களைக் கடந்து சென்றனர். ஒவ்வொரு வீட்டிலும் துயிலும் உறவினர் முறையினர் அனைவரையும் உள்ளத்தால் வணங்கி விடைபெற்று முன் நடந்தனர்.

ஆழியோன் ஆலயத்து அணிதிகழ் வாசலின் நாழிகை விளக்கில் நற்சுடர் தொழுதனர். ஊழி முதல்வன் அருளெழும் பெயர்களை வாழிய சொல்லி வணங்கிச் சென்றனர். புத்த பீடிகையும் அருகர் அடிகளும் உள்ளம் அடக்கி பணிந்து நடந்தனர். பெருநகர் புகாரின் பேரெயில் வாயிலை இருள்செறி காலையில் இருவரும் கடந்தனர்.

கருவறைத் தனிமையில் இருந்த தாய்த்தெய்வமொன்று தன் நாடும் காடும் குடியும் தொடியும் பாலையும் காண எழுந்தது. அதன் ஆழ்கடல் விழிகளுக்கு முன் விரிந்தது தமிழை உயிர்த்துத் தொல் குடிகள் வாழ்ந்த ஐவகைப் பெருநிலம்.

பகுதி மூன்று

நிலம்

இவளோ கொங்கர் செல்வி குடமலையாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து...

குலக்கதை சொன்னது

அடி கனத்தும், கிளை பிரிந்தும், இலை தழைத்தும், மலர் குலைத்தும் பைது படர்ந்து பசுப்பு ஒளிர்ந்து வான் தொட உன்னி நிற்கும் இவ்வனைத்துமே குலக்கதைகளிலிருந்து முளைத்தவை என்றறிக. உதிர்பவையும் சரிபவையும் ஆன ஒவ்வொன்றும் குலக் கதைகளில்தான் விழுந்து அமிழ்கின்றன. அங்கே அனைத்தையும் செரிக்கும் நெருப்பு உள்ளது. கருவுள்ள அனைத்தையும் முளைக்க வைக்கும் ஈரம் உள்ளது. வேர்கள் விரல் பிணைத்தும் நரம்புகள் பின்னி வலைத்தும் உறிஞ்சி உண்ணும் முடிவற்ற உப்பு உறங்குகிறது அங்கே. அவ்வுப்பே உடலாக உதிரமாக கண்ணீராக காய்ச் சுவையாக கனிச்சுவையாக எங்கும் நிறைந்துள்ளது. குலக்கதை களைச் சூழ்ந்து உப்பின் பெருவெளி அலையடிக்கிறது. குலக்கதை களில் உதிர்வதெல்லாம் உப்பாகிப் பரவுகின்றன. செழித்தும் வறண்டும் குலக்கதைகள் ஐவகைத் தோற்றம் கொள்கின்றன. குலக் கதைகளின்மீது வீடுகட்டி வாழ்கிறார்கள் மாந்தர்கள். குலக்கதை களை உழுகிறார்கள். விதைத்துக் கொய்கிறார்கள். குலக்கதைகள் மீது உடலமைத்துப் படுக்கும்போதே மனிதன் அவன் யாரென்று அறிகிறான். குலக்கதைகள்மீது வானம் கனிந்து பொழிந்தபடியே இருக்கிறது, காலந்தோறும்.

ஓ

கண்ணகியும் கோவலனும் புகார் நகரத்தைவிட்டு வெளியே வந்து இருள் கனத்த பெரும்பாதையில் இலவந்திகைப் பள்ளியின் பெருமதில்சுவரை ஒட்டி நடந்து கழிமுகக் காவிரிநீர் ஏறிப்பரந்தமையால் சதுப்பாக மாறிய புன்னைச்சோலையைத் தாண்டிச் சென்றபோது புலர்காலைக் கருக்கிருட்டில் நிலம் படர் கொடி ஒன்றில் கால்சிக்கித் தளர்ந்து கண்ணகி இமைப்பொழுது நின்றாள். கோவலன் சற்று முன்னே சென்று அவள் பின் தொடராமையை உணர்ந்து திரும்பினான். அவள் கால்களில் சிக்கிய கொடியை எடுக்கக் குனிந்தபோது சோலையின் இருட்டுக் குள் சுனைநீர் மின்னுவதுபோல இரு கண்களைக் கண்டாள். அஞ்சியவளாக ஓடிச்சென்று தன் கணவனைச் சேர்ந்து அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள். அவன் என்ன என்ன என்று கேட்டபோது அவளால் சொல்ல முடியவில்லை. அவன் தேற்றத் தேற்ற நெஞ்சின் முரசொலி ஓய்ந்து மெல்ல அவள் கண்டதைச் சொன்னாள். அவன் சிரித்து அது ஆந்தை என்று விளக்கினான். ஆனால் அப்பார்வை தன் கண்களுடன் ஓர் இமைப்பு இணைந்து கொண்டதையும் அதைத் தான் உணர்ந்ததுபோலவே தன்னை அது உணர்ந்ததையும் கண்ணகி அறிந்தாள். அவனிடம் அதைச் சொன்னால் அவன் நம்புவான் என்று அவள் எண்ணவில்லை.

அதன்பின் காவிரிக்கரை வழியாக நடந்தபோது தன்னை நிழலன்றி வேறு ஒன்றும் மென்மையாகப் பின்தொடர்வதை அறிந் தாள். பிடரி ஒரு புலனாக மாறி அதைக் கண்டது. தன் காலடி ஓசை யுடன் சேர்ந்தே அக்காலடியும் ஒலிப்பதைச் சற்று கழித்து உணர் தாள். கனவோ செவிமயக்கோ என ஐயுற்றுத் துவண்டாள். பின்பு காலெடுத்து வைக்க உன்னி வைக்காமல் தயங்கிய கணத்தில் அக் காலடியோசை கேட்டது. உடல் வியர்த்து கால்கள் தளர்ந்து நின்று பின்பு கோவலன் கைகளை இறுகப் பற்றிக்கொண்டாள்.

காவிரிக்கரைக் குளிர்ச்சோலைகளின் உள்ளே சாக்கையர் விடுதிகளும் சாரணர் உறைகளும் இருந்தன. புலர்காலையில்

அங்கிருந்து மெல்லிய குரலில் சரணப் பெருவிளி எழுந்து கொண்டிருந்தது. அக்குரல்களில் ஒன்று பறவைக்கூட்டத்துப் பறவை யொன்று தனித்தெழுந்ததுபோல அவள் காதருகே ஒலித்தது "அஞ்சற்க."

கண்ணகி அக்குரலைக் கேட்டதுமே அச்சத்தை விட்டாள். அது மிக அண்மையும் மிக இனிமையும் கொண்ட பெண்குரல். அவர்கள் சாரணர் சோலையை அடைந்தபோது புலரிப் பொன்னொளி எழுந்து பறவைச்சிறகுகளுடன் சேர்ந்து வானெங்கும் அலைத்தது. மென்சிறகுப் பூச்சிகள் சுழல சிறுதளிர்கள் தழல் சுடரும் சோலை களுக்குள் இருந்து சங்குகளும் முழவுகளும் ஒலியெழுப்பின. நீலம் வெளுத்து மென்பச்சை கொண்ட நீர்ப்பரப்புகளில் தன் நிழலும் தலைவன் நிழலும் தவிர இன்னொரு நிழலும் நகர்வதைக் கண்டாள். பூத்த மாமரம்போலச் செம்மை பொலிந்த நிழல்.

கோவலனும் கண்ணகியும் சாரணர் சோலைக்குள் சென்று அங்கே துறவியற்றிய கவுந்தியடிகளைக் கண்டனர். பொறிகள் ஐந்தையும் அடக்கிப் பொறையுடைமையே உருவாகி அமர்ந்திருந்த அன்னையை அடிபணிந்தனர்.

தன் வாயில் கட்டிய வெண்திரை நீக்கி மலைச்சுனையில் ஊறும் புதுநன்னீர் போன்ற சொற்களால் கவுந்தி அவர்கள் செல்லும் பாதையைப் பற்றிச் சொன்னாள். செண்பக மலர்கள் உதிர்ந்து நிரம்பிய வள்ளிக்கிழங்கைத் தோண்டியெடுத்த குழிகளில் உங்கள் கால்கள் இடறக்கூடும். மணம் கொண்ட முதுபலாப்பழத்து முள் தலையில் இடிக்கக்கூடும். நீர்நாய் கவ்விய வாளைமீன் பாதை யின் குறுக்காகப் பாய்ந்து அச்சுறுத்தும். கூடு சிதைந்த கொம்புத்தேன் கலந்த ஓடைநீர் போதையேற்றக்கூடும். வினையும் விளைவும் துறந்த அவள் சொற்களின் உள்ளே பொதிந்த நுண்பொருள் உணர்ந்து கோவலன் மீண்டும் வணங்கி ''இனி ஒருபோதும் மென்மலரும், துள்ளும் மீனும், களித்தேனும் என்னை வழிதவறச் செய்யாது'' என்றான். கவுந்தி அவனுக்கு அருள் வழங்கினாள்.

அதன்பின் கண்ணகியை மூத்த புன்னையின் பொன்மலர் பரவிய நீர்சுழிக்கும் வேர்களினாலான படித்துறையில் அமரச் செய்து கோவலன் பயணிகளுக்கு சாரணர்ச் சோலையில் கிடைக் கும் உணவையும் பழங்களையும் பெற்று வருவதற்குச் சென்றான். நீரில் தெரியும் தன்னுருவைப் பார்த்து அமர்ந்திருந்த கண்ணகி தன்னருகே ஒரு பெண் வந்தமர்ந்ததை நீரில் கண்டு தன் அருகே காணாது எழ முயன்றாள். "அஞ்சற்க" என்ற அப்பெண் ''நீ விரும் பினால் நான் உன்னுடன் வழித்துணையாக வருவேன். ஐந்தாம்

யாமத்து ஐந்தாம் பருவத்தில் வான்முறை வகுத்தபடி நான் கண் திறந்த கணம் நீ என்னைப் பார்த்தாய். ஆகவே நீ என் காவலுக் குரியவள்'' என்றாள். நடுவயதுள்ள அழகிய இடைச்சி போலிருந் தாள். மாந்தளிர் நிறமும் தூக்கிச்சுழற்றிக் கட்டிய கனத்த கருங் குழலும் வட்டமுகமும் பரந்த நெற்றியில் சங்குப்பச்சையும் திரண்ட மூங்கில்நிறத்தோள்களில் மலர்ப்பச்சையும் இளமஞ்சள் சேலை மூடிய கனத்த முலைகளும் கொண்டிருந்தாள். கனிந்த கண்களிலும் சிவந்த உதடுகளிலும் மின்னிய மென்நகையுடன் கண்ணகியைப் பார்த்தாள்.

''நீ யார்'' என்று கண்ணகி கேட்க ''நான் புகார் நகரத்துப் பெரு வாயிலை ஒட்டிய புன்னைச்சோலையில் இருப்பவள். ஆதலால் என் பெயர் புன்னைக்காட்டு நீலி என்பர். என் பெயரும் தோற்று வாயும் நானே அறியாதவை. எங்கிருந்து வந்தோம் ஏன் அங்கே அமர்ந்தோமென அறியாமல் இந்த நானிலங்களிலும் நாங்கள் பல்லாயிரம் தெய்வப்பெண்டிர் பரந்து வாழ்கிறோம். நாங்கள் இருக்குமிடத்தால், எங்களுக்கு ஊரார் இட்ட பெயரால் அறியப் படுகிறோம். எங்களை ஊரார் கண்ட வடிவை எங்கள் வடிவாகக் கொள்கிறோம். எங்களிடம் கோருபவற்றைச் செயலாகக் கொள் கிறோம். குறுங்காட்டில் மேய வந்த கருங்கண் பசு ஒன்று வட்டக் கருங்கல் வடிவில் என்னை முதலில் கண்டுகொண்டது. என்மீது பால்சொரிந்து புரந்தது. பின்பு இடையர் என்னைக் கண்டடைந் தனர். இன்று புகார் நகரில் பாலும் மோரும் விற்க வரும் இடைச் சியர் வணங்கும் தெய்வம் நான்'' என்றாள் புன்னைநீலி. ''நீ இருகை கூப்பி என்னை அழைத்தால் நான் இவ்வுருவம்கொண்டு உன்னுடன் வருவேன்...''

''ஆனால் என் தலைவர் உன்னை அறியமாட்டாரே?'' என்றாள் கண்ணகி. ''அவர் கண்களை நான் வெல்வேன். என்னை அவர் கண்கள் உங்களுக்கு வழித்துணையாக உடன்வந்த கவுந்தியடி களாகவே காணும். கதைகளும் காப்பியமும்கூட அப்படியே அறியும். வழித்துணையாக வந்த வடிவிலாத் தெய்வமென்பதை நீ மட்டுமே அறிவாய்'' என்றாள் புன்னைநீலி. கண்ணகி கைகூப்பித் தொழுதழைக்க நீரிலிருந்து புன்னையாள் எழுந்துவந்து நகைத்தபடி அவள் கைகளைப் பற்றிக்கொண்டாள். ''நீ வழித்துயர் அறியாம லிருக்க நான் உனக்குக் கதைகள் சொல்வேன். என் கண்கள் எந்தக் கல்லிலும் சருகிலும் கதையிருந்தால் தொட்டெழுப்பும் வல்லமை கொண்டவை'' என்றாள்.

கோவலன் உணவுடன் திரும்பிவந்ததும் கவுந்தியடிகளாகத்

தோன்றித் தானும் துணைவருவதாகச் சொல்லிப் பீலியும் உறியும் பிச்சைக்கலமும் கொண்டு எழுந்தாள் நீலி. மூவரும் மேற்கே திரும்பி மதுரை செல்லும் பாதை தெரிந்தனர்.

ஓ

கோவலன் முன் நடக்க நீலியுடன் உரையாடிக் களித்துக் கண்ணகி நடந்தாள். நான்கு சுவர்களுக்குள் அடைபட்ட வானமும் நிலமும் மட்டுமே கண்டு வளர்ந்த கண்ணகிக்கு நீலியின் எல்லையற்ற மாய்மைகளின் உலகம் அச்சமும் அயர்வும் உவகையும் ஊக்கமும் அளித்து ஆட்கொண்டது. நீலி அவள் உருவத்தால், அவ்வுருவம் அமைந்த வெளியால், அதை நிரப்பிய எண்ணங்களால் எதனாலும் கட்டுப்படுத்தப்படாதவளாக இருந்தாள். அவளிடம் பேச ஒலியும் மொழியும் தேவையில்லை என்று கண்ணகி அறிந்தாள். எண்ணங்கள் மூலமே உரையாடிச் சிரித்துக் களித்துக் கூவி ஆர்த்துக் குலவ முடியும். நீலியுடன் இருக்கையில் தன் உடல் தன் எண்ணங்கள்மீது எடையேற்றி அமர்ந்திருக்கவில்லை என்று கண்டாள்.

நீலி அவளுக்கு வேங்கையும் தும்பையும் பூத்த சிறுமலர்களில் முகிழ்த்த முதல் தேன்துளியைக் கொண்டு வந்தளித்தாள். நீர்க்கரை நாணலின் அடிநுனியில் உறையும் மெல்லிய இனிமையை நாவுக்குக் காட்டினாள். தொடும் விரலில் படியும் வண்ணத்துப்பூச்சி இறகுகளின் நிறங்களை அவள் உடைகளின்மீது ஏற்றி வியக்கச் செய்தாள். மலைப்பாறைக் கருமைமீது நின்று பெருநகரங்களைக் காலடியில் விரியச்செய்து காட்டினாள். காட்டருவிகளை முலைகள்மீது வாங்கி அண்ணாந்து கூவிச் சிரிக்கச் செய்தாள். காட்டுப்புரவி மீதேறி உருளைக்கல் சரிவுகளில் மேலாடை பறக்கப் பாய்ந்திறங்கச் செய்தாள். வேங்கைவேர்போன்று ஓடைநீருக்குள் அமிழ்ந்த கழலணிந்த கருங்கால்களில் மீனாகச் சென்று முத்தமிட்டு மீளச் செய்தாள். புரவித் தொடைபோலப் புரளும் தோள்தசைப்பரப்பில் செடிக்காம்பாகச் சென்று சிறுவிரலழுத்தி விரல்வளையும் வலியில் மலர் உதிர்த்து மகிழ வைத்தாள்...

''என் இளமையில் எங்கள் இல்லத்து மகிழமரத்தடியில் சிறுமேடையில் அமர்ந்து நான் எண்ணிக் கொள்வதுண்டு, இப்படிக் காற்றுபோலக் கட்டற்று அலைவதைப்பற்றி. சிட்டுக்குருவிகளைப்

போல பூத்தும்பிகளைப்போலப் பறப்பதைப்பற்றி...'' கண்ணகி சொன்னாள். ''எங்கள் இல்லத்து உப்பரிகையில் நின்றால் கீழ்க் கடல் அலைகளைக் காணலாம். அலைகளில் திசைமறந்து அலையும் ஒரு நாவாயில் ஏறி தொடுவானுக்கு அப்பால் பவளம் செறிந்த தீவுகளையும் செஞ்சுடர் ஒளிரும் கண்கள் கொண்ட நாகர்களையும் வெள்ளிச்செதில்கள் மின்னும் விஞ்சையரையும் கண்டபடி சென்றுகொண்டே இருக்கவேண்டும் எனக் கனவு காண்பேன். இறப்புவரை ஒருகணம்கூட நில்லாமல் செல்லவேண்டும். சென்று கொண்டே இருப்பவளுக்கு இறப்பு எப்படி வரும்? இறப்பு ஓர் அசைவின்மையல்லவா? இந்த நாற்சதுர வாழ்க்கைக்குள் சலித் தொடுங்கும் உயிர்களுக்கு மட்டுமே உரிய நோய் முதுமை. அவர்கள் சென்றொடுங்கும் இறுதியே சாக்காடு. நோவற்ற சாவற்ற முடிவற்ற பயணம். அதைத்தான் நான் ஓயாது கனவு கண்டேன்.

''பின்பு நான் அறிந்தேன் நான் ஒரு பெண் என்று. இற் செறிக்கவும் இல்சமைக்கவும் அன்னையாக அடங்கி அழியவுமே நான் ஆக்கப்பட்டுள்ளேன் என்று. என் முகத்தை இறுக்கக் கற்றுக் கொண்டேன். என் சிரிப்பை ஒரு மென்புன்னகையாக்கினேன். என் துள்ளலைத் துவள்மென் நடையாக்கினேன். என் எண்ணங்களைச் சிறுசொற்களாக்கினேன். என்னை அன்னையர் கதைகளிலும் முன்னையோர் நெறிகளிலும் பிணைத்து மெல்லத் தீட்டித் தீட்டிப் பெண்குலத்துப் பெருமகளாக ஆக்கிக்கொண்டேன். ஆனால் எனக்குள் நான் அலைகளை எப்போதும் கேட்டுக்கொண்டிருந் தேன். அவற்றின் மீதேறி என் தனித்த நாவாய் சென்றபடியே இருந்தது. என் உள்ளத்தை நான் எவரிடமும் காட்டியதில்லை. மனிதர்களுக்கு அளிக்கப்பட்ட பெரும்பேறு அவர்கள் தங்கள் உள்ளத்தைத் தங்களுக்குள்ளே ஒளிக்கமுடியும் என்பது.'' கண்ணகி சொன்னாள் ''மண்புழுபோல் மாந்தருக்கும் உண்டதெல்லாம் உடல்மீறித் தெரியும் என்றால் அறிவர்கள் உண்டா, கற்பரசிகள் உண்டா, சான்றோர்தான் உண்டா?''

''ஆனால் தெய்வங்கள் உள்ளங்களை அறியும்'' என்றாள் நீலி. ''ஆகவேதான் மாந்தர் எங்களை அஞ்சுகிறார்கள். அச்சமளிக் கும் ஆளுருவங்களாக எங்களைப் பொறித்துவைக்கிறார்கள். படையலும் பூசையும் அளிக்கிறார்கள்.'' நீலி சிரித்தாள். ''நீயும் என்னை அஞ்சுகிறாய். என்னுடன் உரையாடி அவ்வச்சத்தை வெல்ல எண்ணுகிறாய்.''

''ஆம், நான் உன் கட்டின்மையை அஞ்சுகிறேன். நீ காற்று போலிருக்கிறாய்'' என்றாள் கண்ணகி. ''நான் பெண். எனக்குக்

கரைகளே வழிகாட்ட முடியும். அவற்றை மீறுகையில் மெல்ல நாள் பெண்ணல்லாமலாகிறேன்...''

''இல்லை. நான் இதை மறுக்கவெண்டுமென்றே சொல் கிறாய். மீறுகையிலேயே நீ உன்னைப் பெண்ணென்று உணர்கிறாய். உன் ஆழத்தில் நீ எங்குமே நில்லாதவள். எதையுமே அணியாதவள். காட்டுக்குள் எவருமே காணாது கொட்டிக் கொண்டிருக்கும் பேரருவிபோல நீ உனக்கு மட்டுமே தெரிந்த பேராற்றல் கொண்ட வள். அவ்வருவிக்கரைவரை பறந்துவர வல்லூறுகளால் ஒருவேளை முடியலாம். யாழ் தழுவும் இந்த வணிகன் ஒரு சிறகுமெலிந்த வெண்புறா.''

கண்ணகி கோபம்கொண்டு ஓடி கோவலன் கைகளைப் பிடித் தாள். மூச்சுவாங்கியபடி ''நான் உங்களுடனேயே வருகிறேன்'' என்றாள். ''ஏன்?'' என்றான் கோவலன் திரும்பி. கவுந்தி மென்ன கையுடன் கூறினாள், ''யாக்கை என்பது நாய்நரி உண்ணும் என்புத் தோலும் என்றேன்.''

''அன்னையே, அவள் சிறுபெண். அவள் கால்கள் மண் ணையே இப்போதுதான் அறிகின்றன.''

''ஆம். மண்ணைத்தொட்டு நிற்கும்படி அவளிடம் சொன் னேன்.''

கண்ணகி அவன் தோள் பற்றி நின்று வெம்மைகொண்ட கண்ணீர்த்துளிகளை உதிர்த்தாள். ''அஞ்சாதே. என் தோள்களைப் பற்றி உடன் வா'' என்றான் கோவலன்.

மீண்டும் நடந்து நள்வெயிலில் நிழலடியில் அமர்கையில் நீலி மெல்ல அவள் அருகே வந்தாள். ''நீ அஞ்சுவது என்னையல்ல'' என்று மெல்லிய கள்ளக்குரலில் சொல்லிச் சிரித்தாள். ''நான் உன் ஆடிப்பிம்பம் அல்லவா?''

''நீ என்னை எங்கோ இட்டுச்செல்வதற்காக வந்திருக்கும் பேய்'' என்று கண்ணகி கோபத்துடன் சொன்னாள். ''உன்னை வெறுக்கிறேன். உன்னுடன் உரையாடவே அஞ்சுகிறேன். என்னை விட்டு இக்கணமே நீங்கு.''

நீலியின் கண்கள் திருப்பப்பட்ட வேல்நுதிபோல சுடர் கொண்டணைந்தன. ''நீ விலகச் சொன்னால் நான் விலகியாக வேண்டும் என்பதே நெறி. ஆனால் அதை உன் உதடுகள் சொல்ல லாகாது. உன் ஆழம் சொல்லவேண்டும்.''

கண்ணகி அவள் முகத்தைப் பாராமல் அழுத்தமாக ''ஆம். நீ விலகிச்செல்'' என்றாள்.

''உன் சொற்களில் ஆழமில்லை'' என்றாள் நீலி.

கண்ணகி கோபத்துடன் திரும்பி ''இப்போது சொல்கிறேன், நீ என்னை விட்டு நீங்கிச்செல்'' என்றாள். அவள் கண்கள் கலங்கி முகம் சிவந்து தொண்டை இடறியது. முலைக்குமிழ்கள் எழுந்த மர்ந்தன.

''உன் உள்ளாழத்திலிருந்து சொல். என் கட்டற்ற விரைவும் உனக்குத் தேவையில்லையா?'' என்றாள் நீலி.

''இல்லை! இல்லை!'' என்று கண்ணகி வீறிட்டாள்.

பெருஞ்சிரிப்புடன் நீலி எழுந்தாள். அவள் தலையில் மயிர்க் கற்றைகள் பனைமரச் சிலாவட்டைகள்போலப் பிடரியெங்கும் சிலும்பி எழுந்தன. அரிமாவாய் திறந்து கோரைப்பற்கள் ஒளிர்ந்தன. கண்கள் எரிகொள்ளிக் கனல்களாகச் சுடர்விட்டன. கூருகிர்க் கைகளை வௌவால் சிறகுகளாக விரித்து ''இனி நீ சொல்ல வேண்டியது ஒரே ஒரு சொல் மட்டுமே. அக்கணமே நான் விடை கொள்வேன்'' என்று ஓநாயின் குரலில் சொன்னாள். "ஆனால் நன்கு நினைத்து அச்சொல்லைக் கூறு. நான் மீண்டும் ஒருபோதும் வரமாட்டேன். நீ இந்த ஒரு நாளில் பெற்ற விடுதலையையும் உவகையையும் எப்போதுமே மீண்டும் பெறமாட்டாய்."

கண்ணகி தன் கரங்களினால் முகத்தைப் பொத்தி விரலிடுக்கு களினூடாக கண்ணீர் சொட்ட அழுதாள்.

'சொல்' என்று நீலி உறுமினாள். சிறகுகளை அடித்து மெல்லக் காற்றிலெழுந்தாள்.

கண்ணகி மெல்லிய குரலில் ''என்னால் அச்சொல்லை ஒரு போதும் சொல்லமுடியாது'' என்றாள்.

அவள் காதருகே இனிய பெண்குரல் நகைத்தது. கண்களைத் திறந்ததும் இடைச்சிக் கோலத்தில் நீலியைக் கண்டாள். வெட்கி அவளும் நகைத்தாள்.

"அது என்ன வெறிக்கோலம்? கண்களால் ஏறிட்டே பார்க்க இயலவில்லையே?"

"அது என் பேய்க்கோலம். இது பெண்கோலம். என்னை அக் கோலத்தில் ஆய்ச்சியர் வணங்குவதுண்டு. உதிரப் படையல் கொண்டு உறங்காத சினத்துடன் நான் அப்போது பீடமேறியிருப் பேன். என் காலடி உதிரத்தை ஆடவர் தொட்டுத் தொடுகுறி யணிவர்...'' நீலி கன்னம் குழிய நகைத்தாள். ''தெய்வங்கள் மனிதர்களையே நடிக்கின்றன...''

"நீ என்னுடன் இரு. உன் சொற்கள் என்னைச் சிறுமைப படுத்துகின்றன. என் எண்ணங்கள்மீது சகதியை உமிழ்கின்றன. ஆனாலும் நீயே என்னை நிறைக்கிறாய். நீ விலகிய இடத்தில் வைப்பதற்கு என்னிடம் ஏதுமில்லை.''

''ஆம், உன்னுடன் இருக்கிறேன். இந்த நெடும்பயணத் திலேயே சிறுமியாக இருந்த நீ பெண்ணாகப்போகிறாய். உன்னை பெண்ணாக்கும் தெய்வம் நான்'' நீலி நகைத்தாள்.

ᘓ

1

நெய்தல்

குலக்கதை சொன்னது

கடல் உமிழ்ந்த ஞாலத்தில் முதல் நிலமே நெய்தல். நிலைகொண்டவற்றை எல்லாம் அல்ல அல்ல என்று மறுப்பதனால் அலை என்றான முடிவின்மையின் ஓசை அறாத இடம். பரந்தகன்ற பரையின் மக்களான பரதவர் வாழும் பூமி.

கோவலனும் கண்ணகியும் நீலியினால் வழிகாட்டப்பட்டு அலைகடல் துமி தெறிக்கும் நெய்தல் விழி மலர்ந்த சதுப்புகளி னூடாகச் சென்றனர். கடல் விரிவைக் கண்ட கண்ணகி தன் விழி நீலம் பூத்து அதைக் கண்டுநின்றாள். அவள் காதருகே நீலி சிரித்து ''கடல் காண மானுடக்கண் போதாது பெண்ணே'' என்றாள். ''நீ காண்பதெல்லாம் அலைகளை மட்டும்தான். கடலென்பது அலை யின்மை அல்லவா?''

''நான் கடல் காண விழைகிறேன்'' என்றாள் கண்ணகி.

''எனில் உனக்குத் தேவை சுறாவின் விழிகள். மீன்விழிகள் இமைப்பதில்லை. இமையா விழிகளே கடலைக் காணமுடியும். சுறா நீந்துவதை நிறுத்துவதேல்லை. நீந்தும்போது மட்டுமே ஆழத்தை உணர முடியும்'' என்றாள் நீலி.

கடலாழத்தைக் கொழுமுனையென உழுதுசென்ற சுறா ஒன்றின் கண்களில் அவள் கண்கள் பொருந்திய அக்கணமே கடல் என்பது உயிர்களின் பெருவிரிவெனக் கண்ணகி அறிந்தாள். ஓயாது பிறக்கும் ஒன்றையொன்று உண்ணும் மீன்களின் வெளியைக் கண்டு கண்டு அலைந்தாள். அவற்றின்மீது அலைவெளி ஒரு மாபெரும் திரையெனப் படர்ந்து அனைத்தையும் மறைக்கிறதென உணர்ந்தாள்.

பெருங்கடற்சேர்ப்பன் இளஞ்சென்னி முதுகந்தனின் ஆளுகைக்கு உட்பட்ட அப்பெருமணல் உலகில் பரவரும் நுளை யரும் அளவரும் கெழுமிய சிறுகுடில்கள் பரந்து வெண்ணிப்பாக்கம் என்று பெயர் கொண்டன. மென்பால் நிலத்தில் இரவின் பனிப் படலம் குளிர்ந்து காலைத்தழுவிய வெண்மணல் பாதையில் நடந்து மூவரும் ஊருக்குள் வந்தனர். கண்டலும் ஞாழலும் வீழில்தாழை

யும் நிழல் பரப்பிய கடலோரத்தில் கோட்பறை மீட்டி இளம்பரதவர் செவ்வழிப் பண் சேர்த்துக் கடற்பாடல் இசைத்து அமர்ந்திருந்தனர்.

அவர்களைக் கண்ட பரதவர் பெண்கள் தங்கள் இல்லவாசல்களில் கூடி 'வாழைப்பூ நிறமும் கருமீன் விழிகளும் கொண்ட இவள் யார்?' என்று தங்களுக்குள் கேட்டுக்கொண்டனர். 'அவள் கணவனோ உருவத்தால் பெருவணிகன் போலிருக்கிறான்' என்று சிலர் சொன்னார்கள்.

முதுபரதவன் ஒருவன் முன்வந்து அவர்களைப்பற்றி உசாவினான். கோவலன் மதுரை செல்லும் வணிகன் எனத் தன்னைச் சொல்லித் தன் இல்லத்தியையும் சுட்டிக் காட்டினான். உடன்வந்த அறிவனருள் பெற்ற நெறியாட்டியை அவர்கள் பணிந்து வணங்கினர். தங்கள் இல்லத் திண்ணையில் அமரச்செய்து குளிர்ந்த நீரும் அப்பமும் அளித்து விருந்தோம்பினர். கண்ணகியின் மெல்லிய ஆடையையும் மலரிதழ்க் கன்னங்களையும் குளிர்ந்த மலர்முகை விரல்களையும் தொட்டு மீனவப் பெண்டிர் மகிழ்ந்தனர்.

அன்று காலை கடலோடிய தோணிகளெல்லாம் ஒற்றை வெண்சிறகு தாழ்த்திக் கரையணைந்து பெருமீன்கூட்டங்கள்போல உடலுரசி அலையழிய நின்றன. மன்றப் பெருஞ்சங்கம் ஒங்கி ஊதியதும் மூவகை மக்களும் வண்ண அருக்கப் பெருந்தொகை போலக் கலைந்து ஒலியெழுப்பி மணல்மீது கூடினர். அன்று மன்றுநீதி கொள்ளும் முறைநாள் என்றனர் மீனவர்.

பெருங்கடற்சேர்ப்பன் இளஞ்சென்னி முதுகந்தனின் சிவிகை மணற்கரை மீதெழுந்து வந்தது. மீனெறிதூண்டில் ஏந்திய காவலர் எழுவர் உடன்வந்தனர். கடற்காற்றில் சிவிகையின் பகட்டெழினிகள் செந்நவரை மீன்சிறகுபோலத் துடித்தன. கூட்டத்தில் ஆண்மக்கள் வாழ்த்தொலி எழுப்பியும் பெண்டிர் குரவையொலி எழுப்பியும் அவனை வரவேற்றனர். கொக்குச்சிறையெனத் தலை நரைத்த கடற்சேர்ப்பன் சிவிகைக்கீழ்க் குனிந்து புறம்காட்டிய காவலன்மீது குறடு பதித்து இறங்கினான். வாழ்த்தொலிகள் நின்றன. ஊர்ப்பெரு மக்களும் முக்குலத்து முதுமீனவரும் சென்று சேர்ப்பனை வணங்கி முகமன் சொன்னார்கள். முத்தும் சிப்பியும் நெய்விழுக்கு கொண்ட மீனும் காணிக்கை வைத்து வணங்கினர்.

மென்மணல் மலையெனக் குவிந்த வன்பால் கடல்நிலம் நோக்கிச் சேர்ப்பன் முன்செல்ல முக்குலமும் பின்செல்ல அவர்கள் நிரை வகுத்தனர். கடலோரம் எழுந்த கரியபெருங்குன்றின்மீது யானைமுதுகில் அம்பாரிபோலச் சிறு கருங்கல் ஆலயம் தெரிந்தது.

அங்கு போகப் பாறையில் சிறுபடிகள் வெட்டப்பட்டிருந்தன. சேர்ப்பனும் சுற்றமும் அப்பாறைப்படிகளின் முதற்படியில் செதுக்கப்பட்டிருந்த சிறு சிற்பத்துக்கு மலரும் நீரும் செஞ்சுண்ணமும் கொண்டு பூசனை செய்தனர். அச்சிற்பம் படிகளில் சிறு புடைப்பாகச் செதுக்கப்பட்டிருந்தது. இடதுகால் சிறு விரலில் விரல்வளைச் சிறுமணி மட்டுமணிந்த இரு சிறு பெண்பாதங்கள். பெண்கள் அந்தப் பாதங்களைத் தொட்டு வணங்கி அதன் மீதிருந்து குங்குமம் தொட்டுத் தங்கள் தாலிகளில் வைத்துக்கொண்டார்கள். படிகளின் மேல் ஒரு பாறை வெடிப்பிலிருந்து எழுந்த வேம்புமரம் ஒன்று பச்சிலை தழைத்துக் குலுங்கிப் பழங்களும் மஞ்சள்சருகுகளும் உதிர்த்து நின்றது. யானைமத்தகம்போலப் பாறை தெரிந்தது.

கண்ணகியிடம் அது கன்னியம்மனின் கோயில் என்றாள் ஒரு மூதாட்டி. பரதவர் குலம் தோன்றுமுன்பே அக்கோயில் அங்கிருந்தது என்று மூதாதையர் சொல்லி அவர்களறிந்திருந்தனர். அந்த ஆலயக் கருவறைக்குள் ஒரு சிறு கருங்கல் அம்மன் சிலை அணிகளேதும் இன்றி இருப்பதாகச் சொன்னாள். அவள் இடதுகால் சிறுவிரலில் மட்டும் நீலமணி ஒன்று இருந்தது. கருவறைக்குள் சுடரேற்றியதும் மெதுவாக குவளைமுகிழ் நீரில் எழுவதுபோல அது ஒளிவிட்டு எழும். முன்பனிக்காலத்தில் முதல் திங்கள் முதல் நாள் கன்னியன்னைக்கு ஏழு குலங்களாகப் பிரிந்து கடலோரமெங்கும் சிதறிக்கிடக்கும் பரதவர்கள் அனைவரும் கூடிப் பொங்கலும் படையலும் இட்டுப் பூசை செய்வார்கள். பெண்குழந்தைகளுக்கு பிறந்தமுடி களைந்து மொட்டையிட்டுக் காதுகுத்திச் சங்கில் செதுக்கிய சிறுதோடணிவார்கள். ஊனுணவும் கள்ளும் உண்டு சுற்றமும் மற்றவரும் சூழ மகிழ்வார்கள்.

பரதவர் குலதெய்வமென விளங்கும் அவளைக் கடல்பரந்த ஆழியானும் வான்புரக்கும் இந்திரனும் அறியார். குலமூத்தார் முதுபாடகர் எவருக்கும் அவள் எந்த அம்மன் எங்கிருந்து வந்தவள் என எதுவும் தெரியாது. குலவழக்கமென மட்டுமே மூத்தவர் சொல்லி அறிந்திருந்தனர். பெருங்கொடை நாளிலன்றி எவரும் அக்குன்றேறிச் செல்வதில்லை என்றாள் மூதாட்டி. அக்கோயில் முன் நின்று தன் நெற்றிமீது கைசேர்த்துக் கண்ணகி நோக்கினாள். அதன் உச்சியின் சிற்றாலயக் கருவறை இருளுக்குள் இரு விழிகள் திறந்திருப்பதை அவள் உணர்ந்தாள். அப்பார்வை தன் உடலைத் தொட்டு நீள்வதை அறிந்தாள்.

மணல்மலைகள் வெண்கடல் அலைகள்போல எழுந்த படுபட்டினத்தில் முரசு முழங்க சங்கு ஒலிக்க ஏறிச்சென்று அலைகடல்

ஒலி நடுவே நின்றனர். சேர்ப்பன் கையசைத்ததும் ஏழு பரதவர் அவன் கைசுட்டிய இடத்தில் மணலை நீக்க ஆரம்பித்தனர். மெல்ல அங்கே ஒரு கருங்கல் பீடம் எழுந்துவந்தது. அதன்மீது ஓவியமோ எழுத்துக்களோ என்றறிய ஒண்ணாத நுண்வடிவங்கள் செறிந் திருந்தன, கடல் கருக்கொள்கையில் கூட்டம்கூட்டமாக வரும் நுண் பரல் மீன்வரிசைகள்போல. அதன்மீது இரு சிறு பாதத்தடங்கள்.

சேர்ப்பன் கொண்டுவந்திருந்த செம்பட்டுப்பெட்டியைச் சேவகர் திறந்தனர். உள்ளே யானைத்தந்தம்போலப் பழுப்பேறிய இரு பழம்பெரும் வலம்புரிச்சங்குகள் இருந்தன. பூசகரான முது பரதவர் அவற்றை அப்பீடத்தில் அருகருகே வைத்தபோது பெண்டிர் குரவை எழுப்பினர். சங்குமீது மணிவடமும் முத்துவடமும் மலர் வடமும் அணிவிக்கப்பட்டன. சிறு செம்புக்கலத்தில் கொண்டுவந்த பசும்பாலைச் சங்குகளில் நிறைந்துவழிய ஊற்றி வைத்தார் பூசகர். முப்பெரும் குலமும் மூத்தசேர்ப்பனும் பணிந்து வணங்கினார்கள். மணல்மீது விரிக்கப்பட்ட வெண்பாயில் கடல்சேர்ப்பன் அமர பிற அலைபாய்ந்த மணல்மேடுகள்மீது அமர்ந்துகொள்ள முறைமன்றம் தொடங்கியது.

மீன்கொள்ளுதலில் தோணிகள் செல்லும் வழிகுறித்து மூன்று குலப் பரதவரும் கொண்ட நெறிகள் மீண்டும் வகுக்கப்பட்டன. நெறி மீறியவர்கள் மூன்று வேளை உணவு விலக்கும் மூன்று நாள் கடல்விலக்கும் அளித்துத் தண்டிக்கப்பட்டனர். இறுதி வழக்காக ஒரு படகுக்குரிய எண்மர் எழுந்து இளம்பரதவன் ஒருவனின் வழக்கைக் கேட்கவேண்டும் என்றனர். அவன் புதுமனையாட்டியின் நெறி மீது தங்களுக்கு ஐயமிருப்பதாகச் சொன்னார்கள். அவன் செல்லும் எந்தத் தோணியிலும் மீன் படுவதில்லை. குல வழக்கப்படி ஏழு நாள் ஒரு தோணி என மும்முறை மாற்றிப் பார்த்துவிட்டுத்தான் மன்றுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் .

இளம்பரதவன் தோள்களில் தசைகள் புடைக்க கழுத்தில் நரம் புகள் அசைய கைகட்டித் தலைகுனித்து நின்றான். அவன் தாடையில் நரம்புகள் நீலம் கொண்டிருந்தன. அவன் மனைவி முதிராத் தோள்களும் முகிழா இளமுலையும் கொண்ட சிப்பிநிற இளம் பெண். சுடர் விளக்கும் மலருமாக வெண்கலத் தட்டிலெடுத்து ஜன காட்டி நீராட்டக் கொண்டுசெல்லப்படும் செம்புச்சிலைத் தெய்வம் போல இருந்தாள். அவள் கூந்தல் இழைகள் மட்டும் கடற்காற்றில் பறந்தன. தலைகுனிந்து அமர்ந்திருந்த அவள் இமைகள்கூட சற்றும் அசையவில்லை. "நீரர மகளிர் நீந்திவந்து அவள் குடிவருமே கரையேறியதைக் கண்டவர் உண்டு" என்றாள் ஒரு பெண். "யார்

கண்டது அதை?'' என்றார் சேர்ப்பன்.

''நான் கண்டேன். முழுநிலவு நாளில் ஒருமுறை பின்னிரவின் குளிரில் ஏதோ ஒலி கேட்டு எழுந்துவந்து வெளியே பார்த்தேன். என் கணவன் செங்கள் அருந்தச் சென்றவன் அன்று மீளவில்லை யாதலால் நான் துயிலிழந்து அவனுக்காகக் காத்திருந்தேன். நிலவில் கடலலைகள் பாலாக மாறுமென்பதையும் அப்போது நீரரமகளிர் நெடிய உடலில் ஆடையின்றி வந்து நீராடுவர் என்பதையும் அறிவேன். ஆகவே நான் கடலைப் பார்க்கவில்லை. எதிரே தெரிந்த நீள்வழியையே பார்த்தேன். அப்போது இவள் குடிலை நோக்கி நீளும் நீல நிழலுடன் நீரர மகள் ஒருத்தி நடந்து செல்வதைக் கண்டேன். அவள் உடலில் ஆடையில்லை. அவள் சென்ற பாதை யில் கால்தடம் பதியவில்லை. அஞ்சி என் குடிலுக்குள் புகுந்து கதவை மூடிக்கொண்டேன்...'' என்று ஒருத்தி சொன்னாள்.

''நீரரமகள் உன் இல்லம் வந்தது உண்மையா?'' என்றான் சேர்ப்பன். அவ்விளம்பெண் ஒன்றும் சொல்லவில்லை. அவள் உடல் அசையவேயில்லை. ''நீரரமகளிர் கரையில் ஆற்றியிருக்கும் இளம்பெண்களைக் கவர்ந்துசென்று விஞ்சையருடன் கூடச்செய்வர் என்பதை நாம் அறிவோம். உன் கற்பு பிழைபட்டது என்று இந்த மன்றம் எண்ணுகின்றது.'' மூச்சடக்கி நின்ற கூட்டம் அவள் முகத் தையே உற்றுப் பார்த்தது. ''ஆகவே நீ மென்மணல் காக்கும் தென் கடலன்னையை உனக்குத் துணை கோரலாம். இம்மன்று உன் கற்புக்குக் கண்நிலை நிற்கட்டும்.''

அப்பெண் அசைவின்றி அப்படியே அமர்ந்திருந்தாள். அத்தனை கூட்டமும் அவளையே நோக்கிக்கொண்டிருந்தது. அப் பார்வைகளால் தீண்டப்பட்டு அவள் மெல்ல அசைந்தாள். அவ் வசைவில் அவள் கணவன் துடித்துணர்ந்து ''செல்லி... வேண்டாம். உன் கற்புக்கு நானே ஆணை'' என்று கூவினான். அவளை நோக்கி ஓட முயன்ற அவனை மூவர் பிடித்து மடக்கிச் சுழற்றி மணலில் அமர்த்தினர். அவள் முகம் தூக்கி அவனைப் பார்த்தாள். கண்களில் நீர் எழுந்து கரிய கன்னங்களில் உருண்டது. சிறுமுலைமுகைகள் எழுந்தடங்க செவ்விதழ்கள் துடித்தன. நாண் விடுபட்ட வில்போல எழுந்து கூந்தலெழுந்து பறக்க கடல் நோக்கி ஓடி மென்மணல் குவை மீதிருந்து அப்பால் குதித்தாள். கூட்டம் ஒரு பெருங்குரலால் அவளை அழைத்து பின்பு கலைந்து பின்னால் ஓடியது. கதறல்களும் அலறல்களும் எழுந்து கடலோசையை அழுத்தின. அவள் கணவன் நினைவிழந்து மணல்மீது குப்புற விழுந்தான்.

மெல்லிய வெண்துகில் சுழித்ததுபோலக் கிடந்த இழுமணல்

மீது குதித்த அவள் மீன்தசையில் தைத்த தூண்டிலம்புபோல ஆழ்ந்து சென்றுவிட்டிருந்தாள். அவள் தலையும் கூப்பிய கரங்களும் மட்டுமே சில இமைப் பொழுதுக்குத் தெரிந்தன. கண்ணகி மயங்கிக் கோவலன் தோளில் விழுந்தாள். அப்பெண் சென்ற இடத்தில் மணலின் வெளிறிய உதடுகள் மூடிக்கொண்டன. ஒரு சொல் ஒலி யின்றிச் சொல்லப்பட்டதுபோல பின்பு மென்மணல் அங்கே சற்றே சுழித்துக்கொண்டிருந்தது.

பரதவர்குடி தாண்டி மதுரை முதுவழியில் தாழைக் குளிர்சோலைகளில் ஒலிக்கும் காற்றைக் கேட்டவாறு நடக்கையில் கண்ணீர் வழியத் தலைகுனிந்து வந்த கண்ணகியை மெல்ல அணைத்துக் கோவலன் "அவள் கற்பின் செல்வி. அவர்கள் குல வழக்கப்படி மூன்றாம் நாள் வெண்மணலின் அன்னையாகிய வெண்ணி அவளை மீட்டுக்கொண்டு வருவாள். அலைக் கரையில் குலம் காக்கும் தெய்வமாக அவள் கோவில் கொள்வாள்" என்றான். "அவள் குலம் அவளை உதறிவிட்டபின் அவள் வாழ்ந்து என்ன செய்ய இயலும்? இதோ இப்போது காலம்தோறும் அவள் பெயர் மலரும் அல்லவா?" என்று வாதிட்டான்.

வெயிலேறியதும் அவர்கள் அமர்ந்த பெருமர நிழலில் கோவலன் மெல்லத் துயின்றபின் நீலி கண்ணகியை நோக்கி "மணலின் ஆழத்தில் அவள் மூழ்கிச்செல்லும்போது நான் சென்று அவளைக் கண்டேன்" என்றாள். "அவள் மூக்குக்குள் மணல் சென்றது. உடலெங்கும் மணல் நிரம்பியது. எண்ணத்தில் மணல் நிரம்பியதும் அவள் கண்களும் மணலாக மாறக் கண்டேன். எடைமிக்கு நிறைகொண்டு, மணலில் அமிழ்ந்து அடித்தளத்தில் மல்லாந்து கிடக்கும் மணலுடல் ஒன்றை நோக்கிச்சென்றாள். மணல் விழிகளால் நோக்கி மணல் உதடுகளால் புன்னகைத்து அவள் வரவேற்றாள். அங்கே மேலும் பல மணலுடல்களைக் கண்டேன். மணலால் ஆன உறைந்த அமைதி அங்கே இருந்தது." நீலியைத் திரும்பிப் பார்த்த கண்ணகி தீத்தழலில் நீலச்சுடர் தோன்றி மறைவதுபோல அவள்மீது ஒருகணம் அப்பேயுருவம் மின்னிச் செல்வதைக் கண்டு உளம் நடுங்கினாள்.

"அவள் செய்த பிழை என்ன?" என்றாள் கண்ணகி.

"நீரரமகளிரின் குரலுக்குச் செவிகொடுத்தாள்" என்றாள் நீலி. "இக்கடற்கரையெங்கும் நிலவு பரக்கும் இரவுகளில் நீரர மகளிரின் குரல்கள்தான் அலையுடன் நுரைக்கின்றன. கற்புடைப் பெண்டிர் காதுகளை மூடிக் கணவரை ஆரத்தழுவித் தங்கள் இருள்

நிரம்பிய அறைகளுக்குள் ஒடுங்கிக் கொள்கிறார்கள். ஆற்றியிருக்கும் பெண்கள் தங்கள் கொழுநர் பெயரையும் கற்புடைத்தேவியர் பெயர்களையும் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் வார்த்து முடங்கிக் கொள்கிறார்கள். கண்ணீர் ஒரு பெருங்காப்பு என்றறிக. இவள் சிறுமியாதலால் இரவொன்றில் ஆவல் மேலிட்டு குடிலின் பாய்ப்படலைத் திறந்து கடலை நோக்கினாள். நீரரமகளிர் அவளைக் கண்டனர்.

அவள் அக்கணமே தன் வாசலை மூடிவிட்டாள். ஆனால் அவளால் பிறகு தன் உள்ளத்தை அடக்க முடியவில்லை. மீன்குலம் பெருகுவதுபோல ஒன்று நூறு பல்லாயிரம் பல கோடியென அவள் எண்ணங்கள் பெருகின. வேட்கை ஆயிரம் கண்களாக அலத்தி சுழலென இருளை நிரப்பியது அவள் உள்ளம் சமநிலையிழந்தது. அவள் சொற்களில் அந்த கட்டுவிட்ட எண்ணங்கள் நீர்த்தளம் விட்டுக் குதித்தெழும் வெள்ளிமீன்பரல்கள்போலத் துள்ளிவந்தன. அவள் தோழிகள் அவளை பிச்சி என்றனர். குலமூத்த பரதவர் வந்து வெண்ணி அன்னையின் மணல் மூடிய பீடத்துக்குக் கொண்டு சென்று மணல் அள்ளி ஆடைநுனியில் முடிந்து காப்புக் கட்டினர். அவள் தன் அகத்து அலைகளையெல்லாம் அறிந்த சொற்களாலும் செறிந்த குலநெறிகளாலும் அடக்கிவிட முயன்றாள். மூன்று முழு நிலவுகளை அவள் தாண்டியதே வியப்புதான். மும்முறையும் அலைகளில் ஆடிய அவள் தோணி தாம்பு அறுக்கும் நிலையில் மீண்டது. நான்காம் முழுநிலவில் அது தன் பாதையைக் கண்டது. நீரரமகளிர் ஆடிய நிலவெழுந்த கடலில் அவளும் ஆடினாள்.

பின்பு அவளில் அறியப்படமுடியாத ஆழமொன்று குடியேறியதை அவள் கணவன் அறிந்தான். முன்பு அவனுக்கு அவள் கணுக்கால் அளவுக்கு நீர் ஓடும் தெளிந்த சுனை போன்றிருந்தாள். அதன் பின்பு ஆழ்கடல் நீலம் அவளில் தெளிந்தது. அவளில் இறங்க அவன் அஞ்சினான். ஆனால் மழைவெள்ளம் பெருகிவரும் மலையோடை போல அவள் அவனை அள்ளிச் சுருட்டித் தன்னுடன் கொண்டு சென்றாள். புதிய உப்பு வெயில் பட்டதுபோல ஓர் ஒளியிலை அவன் தோழர்கள் அவன் கண்களில் கண்டனர். அவன் உடைகள் அவன்மீது காற்று இல்லாதபோதே எழுந்து பறந்தன. அவன் நடந்து போகும்போது வெண்மணல் விரிவில் வண்ண நிழல்கள் விழுந்து நீண்டன. அவனைக் கண்டதும் வெண் கடற்பறவைகள் சிறகு வீசின. அவனுடன் மீன் பிடிக்கச் சென்றபோது உணவாகும் பெரு மீன்களுக்குப் பதிலாக அழகிய சிறிய வண்ணமீன்கள் ஆயிரம் பல்லாயிரம் என நிரைகொண்டு வந்து படகை மொய்த்தன. அவன் தோழர்கள் அவனை அஞ்சினர். அவன் இல்லாள் நீரரமகளிருடன்

நீராடி வந்தமையால் அது நிகழ்ந்தது என்றாள் முதுகன்னியான ஊர்மன்றாட்டி.

இந்தக் கடற்கரையில் தலைமுறைகள்தோறும் ஒருத்தியை மணலுண்கிறது. முதலில் மணலுண்டவள் அங்கே வன்பால் வெளியில் வெண்ணி அன்னை என்று வற்றாத வெண்முலைகளாக அமர்ந்திருக்கிறாள். அவள் முலைகளே மணற்குன்றுகள். அவள் அல்குல் ஆழமே சுழிமணல். அவள் கூந்தலே மணற்புயல். அவள் குரலே மணலோசை. மணலுண்டவள் மணலில் முளைத் தெழுவாள். மண்ணில் புதைபவை அழிவதேயில்லை.

ஓ

கடல் உண்ட சம்பாபுரியில் ஏழு குலங்கள் இருந்தன. அவற்றில் அரசனும் சுற்றமும் அமைந்த குலம் தங்கள் குல தெய்வமான சம்புவுடன் பெரும்புணைகளேறி வடக்காகச் சென்று வங்க நாட்டில் கரையேறி நீள்நிலத்தில் பரவி, மேன்மேலே சென்றது. அவர்கள் சென்ற இடங்களெல்லாம் சம்பு மரத்தடியில் கண்மூடி அமர்ந்த சாம்பனை நிறுவி வழிபட்டதனால் அவர்கள் சம்புகர் என்றும்; அவர்கள் நகரம் சம்புபுரி என்றும், சம்பை என்றும் அழைக்கப்பட்டது. அவர்கள் மன்னன் சம்பன் கங்கைக் கரையை ஆண்டான் சம்பர்களின் வம்சம் கங்கையின் கழிமுகம் முதல் காசிவரை பரந்து விரிந்தது. சிறுபடகுகளிலேறிக் கரை தேடிய பரதவர் காவிரிக்கரைச் சதுப்பில் குடியேறிக் காகந்தியெனும் மீன் நகரை நிறுவினர். சம்பாபதிக்குப் பூசை செய்த நறும்பாவையர் நாற்பது குலங்கள் நாகர்களின் நாகபுரியில் நாகதெய்வத்தின் பூசனை மகளிராயினர். பின்பு நாகநாடு அழிந்தபோது காகந்தியில் குடியேறிக் கலை வளர்த்தனர்.

மிஞ்சிய மூன்று குலங்கள் தங்கள் குழந்தைகளும் தெய்வங்களும் கொண்டு தோணிகளேறிக் கடல் விரிவில் சென்றனர். பிறகு அவர்களைப்பற்றி எவரும் அறியவில்லை. அவர்களில் ஒரு குலம் நீள்கடல் திரை மறிந்து மேற்கே சென்று பெரும்பாலை நிலமொன்றில் இறங்கி நாடோடிகளாயினர் என்று சன்னதம் வந்த தெய்வங்கள் சொல்லின. இன்னொரு குலம் கடலோடிக் கிழக்கே சென்று மாந்தர் வாழாப் பெருந்தீவகம் ஒன்றில் இறங்கிப் பரவியது. தீவுகள் தோறும் அவர்கள் பரவிச்சென்றபோது ஆழ்கடல் வளைத்த உள்தீவுகளில் மான்தோல் ஆடையும் மழுவும் முக்கண்குலக் குறியும் கொண்ட முதுகுல மக்களைக் கண்டனர். அவர்கள் மொழியும் குறிகளும் வேறு என்றாலும் அம்புபட்டுச் சரியும்போது அவர்களில் ஒருவன் 'அம்மா' என்று அலறியதைக் கேட்டு அவன் தங்களவன் என்று அறிந்தனர். பரந்த கல்மீது உருளைக்கல் நாட்டிவைத்து அமைக்கப்பட்ட தங்கள் தெய்வத்தை அம்மக்கள் சிவம் என்றனர்.

தங்களைச் சீவங்கள் என்றும் தங்கள் நிலம் தென்கடலில் கடல் கொண்டழிந்தது என்று அவர்கள் குலப்பாடகன் தன் பெரும்பறை முழக்கி பாடிச் சொன்னான். அவர்கள் உதிரங்கள் ஒன்றாகி வளர்ந்தன.

ஏழு சிறுபடகுகளில் கடலோடிய ஏழாம் குலத்தில் ஆண்களெல்லாரும் அழிந்த பிறகு ஏழு பெண்டிரும் ஏழு பெண் குழந்தைகளும் மட்டும் மரமோ செடியோ இல்லாத வெறும்பாறைத்தீவு ஒன்றில் இறங்கினர். குடிக்கவும் நீர் இல்லாமல் வெய்யோனொளியில் அவர்கள் கண்ணீர் விட்டு அழுதனர். தங்கள் குல தெய்வங்களை வணங்கி வேண்டி அங்கேயே கிடந்தனர். கடலிருண்டு நிலவெழுந்தபோது தங்கள் தீவு மெல்ல ஒளிவிட தொடங்குவதைக் கண்டனர். காதலின் புன்னகைபோலப் பாறைகளின் ஆழத்திலிருந்து ஊறிய மெல்லிய நீல ஒளி காற்றில் எழுந்து அலைகள்மீது பரவியபோது அவர்கள் தங்கள் உடலும் நீலமாகி விட்டிருப்பதைக் கண்டனர். சற்றுநேரம் கழித்தே அவ்வொளி அவர்களை முழுமையாக அம்மணமாக்கியிருப்பதை அறிந்தனர்.

நீலநீரலைகளுக்கு அப்பால் இனிமையான மெல்லிய குரலொன்று எழுந்தது. சங்கு முழங்கும் ஒலியில் எவரோ பாடுவது போல. பின்பு நீர்மீது தலைகள் தெரிந்தன. நீளக்கூந்தல் அலைகளில் மிதந்து நெளிய நீண்ட கடற்பாம்புகள் போன்ற கரங்களைச் சுழற்றி சற்றும் துமி தெறிக்காமல் சிற்றலையும் எழாமல் இருகன்னியர் நீந்தி அருகே வந்தனர். அஞ்சிய குழந்தைகளை உடல் சேர்த்தணைத்து அன்னையர் தீவின் பாறைகளில் ஒடுங்கினர். கரையணைந்த கன்னியர் பாறைகளில் ஏறியபோது அவர்கள் இடைக்குக் கீழே மென்நீலத்தில் மின்னிய மீனுடல் தெரிந்தது. சிறகுத்துடுப்புவாலை பாறைகளில் விசிறி எம்பி எம்பிக் கரையேறிய அவர்கள் அப்பாறையைக் கைகளால் உடைத்து உண்ணத் தொடங்கினர். நீரில் இருந்து மீனுடல் கன்னியர் ஏறிவந்தபடியே இருந்தனர். சங்கொலிக் குரலில் பேசியபடி அவர்கள் அந்நிலத்தை உண்டனர்.

அவர்கள் மீண்டும் நீரில் இறங்கி மறைந்தபிறகு பசியும் விடாயும் கொண்ட குழந்தை ஒன்று பாய்ந்து தரையில் விழுந்து நக்கி முகம் மலர்ந்து "அம்மா தேன்! தேன்!" என்று கூவியது. அந்நிலம் உறைந்த தேன்கட்டி போலிருந்தது. அதை உண்டதுமே அவர்கள் பசியும் விடாயும் மறைந்து உடலெங்கும் வலிமையும் உளமெங்கும் உவகையும் பெருகின. பெண்டிர் தங்கள் உடலெங்கும் பாயும் வெம்மையை அறிந்து ஒருவரை ஒருவர் பார்க்கக் கூசித் தனித்து

ஒதுங்கினர். முலைக்கண்கள் தெறிக்க உதடுகள் சிவக்க உடலே விம்மி அதிர அதுபோன்ற நிலையை அவர்கள் அறிந்ததேயில்லை. குழந்தைகள் துள்ளிக் குதித்தன. அவற்றில் ஒன்று அலைதிளைக்கும் கடல்மீது வாளைமீன்போலத் துள்ளிக் குதித்தது. தொடர்ந்து பிற குழந்தைகளும் குதித்தன. நீரில் அவை கூவி ஆர்த்து மூழ்கித் திளைத்து ஆடின. அன்னையரும் நீரில் குதித்தனர். நிலவொளிர்ந்த இரவு முழுக்க அவர்கள் நீரிலாடினர். களைப்போ உளச்சலிப்போ ஏற்படவில்லை. உவகையின் படபடக்கும் கொடி இமைப்பொழுது கூடத் தளரவில்லை.

நிலா இறங்கி ஒளியெழுந்தபின் அவர்கள் அப்பாறைக்கு மீண்டு அதன் சிறுபொந்துகளுக்குள் புகுந்து மென்மையான துயிலில் ஆழ்ந்தனர். மீண்டும் நிலவெழுந்து நீலம் விரிந்ததும் நீரில் குதித்து ஆடினர். ஆழங்களுக்கு மூழ்கிச்சென்று அங்கே செம்பளிங்கு மலைகளின் மந்தண மெல்லொளி பரவிய அலையற்ற நீரில் கண்களே உடலான பல்லாயிரம் மீன்கள் இமைத்தும் துடித்தும் அலைவதைக் கண்டனர். பறக்கும் உடைவாள்கள், குறுவாள் கூட்டங்கள், வெள்ளிப்படகுகள், நீலமின்மினிச் சுழல்கள். கடலின் அலைகளையும் ஆழங்களையும் அவர்கள் உதிரம் அறிந்தது.

அடுத்த முழுநிலவு நாளில் மீன்மகளிர் மீண்டும் வந்தபோது சற்றே தயங்கியபின்பு குழந்தைகள் அவர்களுடன் நீரிலாடின. பின்பு பெண்களும் நீரில் இறங்கித் தங்களையும் நீரையும் நீர்க்களி யாட்டத்தையும் மறந்து விளையாடினர். அவர்களில் ஒருத்தி தன்னை மீட்டுக் கொண்டபோது மீன்மகளிர் ஆடும் நீர்நடனத்தின் புதுமையை உணர்ந்தாள். இருமீன் மகளிர் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளும்போது இரு உடல்களும் ஒன்றோடொன்று ஒட்டி இறுகி உராய்ந்து பின் உருகி ஒன்றாயின. ஓர் உடலும் இரு தலைகளும் கொண்டு நீரில் சுழன்று சுழன்று சென்று அடித்தளம் நோக்கி இறங்கி இறங்கி நீலம் செறிந்து இருண்ட வெளிக்குள் மறைந்தனர். மீண்டெழுந்தபோது இருவராக வந்தனர். அவள் அஞ்சி நீந்தித் தன் நடுங்கும் கரங்களால் பாறையைப்பற்றி ஏறி அமர்ந்துகொண்டாள். அவளைக் காணாத பிற பெண்டிரும் அவளைத் தொடர்ந்து ஏறி வந்தமர்ந்தனர். அவர்கள் ஒருவரோடு ஒருவர் தாங்கள் கண்டவற்றைச் சொல்லிக்கொண்டு அஞ்சியும் கிளர்ந்தும் விடியும்வரை அமர்ந்திருந்தனர். ஆயின், அந்தப் புணர்தலை ஒவ்வொருவரும் தங்கள் கனவின் ஆழத்திலெங்கோ அறிந்திருந்த விந்தையே அவர்களை ஆட்கொண்டிருந்தது.

மீன்மகளிருடன் நீராடுதல் தகாதென அவர்கள் குழந்தை

களை விலக்கினர். தங்களுக்குள் ஆணையிட்டுக் கொண்டனர். ஆனால் நிலவு தேய்வதுபோல அவ்வுறுதி தேய்ந்தது. புது நிலவு வளர்வதுபோல இச்சை வளர்ந்தது. அடுத்த முழுமதிய இரவில் அலைகளுக்கு அப்பால் சங்கொலிக் குரல்கள் எழுந்தபோது அவர்கள் முலைக்கண்களில் உதிரம் முனைகூர்த்து நின்றது. நீரில் பாய்ந்திறங்கி மீன்மகளிரை ஆரத்தழுவிக் கொண்டனர். தங்கள் உடலெங்கும் கண்கள் திறந்து காட்சிகளின் பெருவெள்ளம் உள்ளே பொங்கி வருவதைக் கண்டனர். அதுவரை கண்டது நீரையே என்று அப்போது கடலைக் கண்டபோதே அறிந்தனர். 'இது புதிது, ஆனால் நான் இதை முன்னரே அறிவேன்' என அவர்கள் அகம் அவர்களுக்குச் சொல்லியது. அதன் பின் அவர்களிடம் கரை திரும்பும் எண்ணங்களே இருக்கவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் தங்கள் வயிறு பெருத்து வருவதைக் கண்டனர். மீன்மகளிர் நீர்ப்பாவையரைக் கூடிப் பிறந்த குழந்தைகள் யாவும் பெண்களே. அவர்களுக்கு மீன்போல ஒளி விடும் உடலும் இரு கால்களிலும் சிறகுத்தூவிகள் போல துடுப்பு களும் இருந்தன. பிறந்ததுமே அவை நீரை நோக்கிப் பாய்ந்தன. நிலவில் கூடிக்களித்துப் பெற்றுப் பெருகின. கீழ்க்கடலின் தேன் பாறைகளில் அவர்கள் குலம் பெருகியது. கடலோடும் மாலுமிகள் சிலர் அவர்களில் சிலரைக் கண்டனர். அவர்களை நீரரமகளிர் என்றழைத்தனர். அவர்கள் பேசுவது தமிழ் என்று கலமுடைந்து கடலில் அலைந்து மீண்டவர்கள் சொன்னார்கள். கரையில் அவர் களைப்பற்றிய கதைகள் செழித்தன.

பின்பு அவர்களில் ஒருத்தி கரை நோக்கிச் சென்ற கலம் ஒன்றைப் பின்தொடர்ந்து கரையருகே வந்தாள். நிலவு பொழிந்த இரவொன்றில் அவள் புகார் நகரத்து ஒளிவிளக்குகள் நீரிலாடு வதையும் பாய்புடைத்த கலங்களில் செவ்விழிகள்போலச் சுடரும் பளிங்குசூழ் விளக்குகளையும் விரிந்த விழிகளுடன் கண்டாள். கரையோரமாக நீந்தி வந்தபோது அவள் நெஞ்சை அள்ளும் நறு மணம் ஒன்று காற்றில் வந்தது. அது அவளை இழுக்க பரதவர் வாழும் குடில்களுக்கு அருகே வந்து மணல் மீதேறி நடந்தாள். அவள் சிறகுக்கால்கள் மென்பட்டுச்சேலையின் நொறிகள் காற்றில் உலையும் ஒலி எழுப்பின. தாழை மலர்கள் சுரியவிழ்ந்த நறுமணத் தில் காற்றிலாடும் புகைச்சுருள்போல அவள் அலைந்து தன் மென் குரலால் பாடி நடனமிட்டாள். அப்போது அப்பால் இன்னொரு மென்குரலில் எழுந்த பாடலைக் கேட்டாள்.

நிலவொளி பரந்த மணல்வெளியில் கரியகுவைகளாக

மாடங்கள் நிரைத்திருந்தன. மெல்ல நடந்த அவள் வாடைக்காற்றில் திறந்த சிறுசாளரப்படல் வழியாக உள்ளே எட்டிப்பார்த்தபோது தன் குழந்தைக்கு முலையூட்டியபடி அதன் வயிற்றின்மீது மலர் உதிர்வது போன்று தட்டிக்கொண்டிருந்த இளம்பெண்ணைப் பார்த்து அப்படியே நின்றாள். முலையூட்டிப் பாடியவள் பெயர் வெண்ணி. அவள் கணவன் சுறா வேட்டைக்காகப் பெருங்கலமேறி நெடுங்கடல் தாண்டிச் சென்றிருந்தான். ஆற்றியிருக்கும் நோன்புகளையெல்லாம் செய்தாலும் கூரை துளைத்துவந்து தன் தாழைப் பாயருகே விழுந்த நிலவின் வெள்ளிவட்டங்கள் அவள் துயிலை முற்றாகப் பறித்து விட்டன. தாலாட்டை அவள் தூங்கிவிட்ட குழந்தைக்காகப் பாட வில்லை. தூங்காத தன் உள்ளத்துக்காகவே பாடினாள்.

சற்றே முகம் திருப்பியபோது அவள் ஒரு கனவு கண்டாள். கனவல்ல என்று உடனே உணர்ந்து அஞ்சி வாய்திறந்து எழுந்து அசைவிழந்து அமர்ந்தாள். சாளரத்திறப்பில் அவளைப் பார்த்து நின்ற செம்மணிவிழிகளும் வெள்ளிமின்னும் முகமும் கொண்ட பெண்ணுருவமும் அசைவிழந்திருந்தது. அவள் கண்கள் அவ் விழிகளைத் தொட்டன. பிறகு அவள் அலறியபடி எழுந்து மறுபக்கம் வாசலை நோக்கிச் சென்றாள். உள்ளிருந்து அவள் மாமியும் மாமனும் எழுந்துவந்தபோது அவள் நடுங்கி சொல்லிழந்து சுட்டி நின்றாள். வெள்ளிப்பட்டு நொறிகளை அலைத்தலைத்து நீரில் செல்லும் மீன்போல அப்பெண்ணுருவம் கடலில் பாய்ந்து மறை வதைக் கண்டாள். அவள் சொன்னதை அனைவரும் கனவென்று எண்ணினர். குலதெய்வத்தின் பெயர்களைச் சொல்லி துயிலும்படிச் சொல்லி மீண்டனர்.

ஒவ்வொரு கண மாத்திரையிலும் அவளை நினைத்தபடி நாளெண்ணி நாளெண்ணி மீண்டும் முழுநிலவு நாளை அடைந் தாள். அன்று அவள் கணவன் மீண்டுவந்து அவளுடன் இருந்தான். ஆற்றியிருந்து பழகிய அவள் மனத்துக்கு அவன் கூடவே கூடி இருக்கையிலும் ஆற்றியிருப்பதாகவே தோன்றுவது வழக்கம். பின்னிரவுவரை அவள் செவிகூர்ந்திருந்தாள். பின்பு மெல்ல எழுந்து மென்படலைத் திறந்து குளிர்ந்த மணலில் கால் வைத்து நிலவும் நீரும் சேர்ந்து சமைத்த ஒளியலைவெளியை நோக்கிச் சென்றாள். அங்கே எவருமே இல்லை. நீலநீர் நெளிவை நோக்கியபடி நின்ற போது அவள் மெல்ல உள்ளம் கரைந்து கண்ணீர்விட ஆரம்பித்தாள். கண்ணீர் வழியும்தோறும் அவள் உள்ளம் எடைகளை இழந்து மிதக்கத் தொடங்கியது. அப்போது நீரில் ஒளி பிளந்து விலக நனைந்த கூந்தல் விரிந்த வெள்ளித் தோள்களில் படர்ந்து

ஒட்டியிருக்க நீரரமகள் எழுந்தாள். அச்சத்தை வென்ற ஆவலுடன் அவள் பார்த்திருக்க, வெள்ளிவாலை நீரில் அடித்து அவள் ஏறிவந்து நின்றாள்.

''நீ யார்?'' என்று வெண்ணி கேட்டாள். அந்த மொழி தனக்குத் தெரிந்திருப்பதை அப்போதுதான் உணர்ந்தவளாக நீர்மகள் முழந்தாளிட்டு அருகே வந்து வெள்ளிப்புன்னகை பூத்தாள். ''நான்'' என்று தன்னைத்தொட்டு ''வெண்ணி'' என்ற அவள் நீர்மகள் மார்புகளைத்தொட்டு ''நீ?'' என்று கேட்டாள். தன் உள்ள மெல்லாம் உலவிய ஒரு மின்னலுக்குப் பின் நீர்மகள் ''கன்னி'' என்றாள். அவள் சிரித்தபோது வெண்ணியும் சிரித்தாள். தங்களுக்கு இடையே ஒளிர்ந்த தமிழில் அவர்கள் ஒருவரை ஒருவர் மெல்ல மெல்ல உருவாக்கிக் கொண்டனர். அவள் வெண்ணியை நீருக்குள் அழைத்தாள். இருவரும் குளிர்விரிந்த கடலுக்குள் ஒருவரை ஒருவர் தழுவியபடி சென்றபோது வெண்ணி தன் உடலின் மிக ஆழத்தில் ஓர் ஊற்று திறப்பதை உணர்ந்தாள். அலை என்பது ஆழத்திற்குச் செல்லும் பாதை என்றறிந்தாள். பிறகு அவள் நிலாநாட்களி லெல்லாம் கடலாடினாள். அது அவள் கணவனுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. அவனோ அவள் இடையிலமர்ந்து முடிவில்லாமல் முலையருந்தும் மைந்தனின் உளநிலையில் இருந்தான்.

நீர்மகளுடன் ஆடுகையில் நீரின் ஆழத்தில் பச்சைப் பாறையில் ஒட்டியிருந்த சிப்பிகள் அனைத்தும் செவ்வாய் திறந்து நிலவொளியமுதை உண்ணுவதை அவள் கண்டாள். அவற்றின் சதைமென்மைமீது பிறந்த குழந்தையின் தளிர்ச்சுட்டுவிரல் நுனி போன்ற சிறு செம்முத்து ஒன்றைத் தன் விரல்களால் விரித்து எடுத்தாள். அன்று அதைத் தன்னுடன் எடுத்துவந்து தன் உடலில் பிறிதெவரும் காணமுடியாதபடி ஒளித்துக்கொண்டாள். தன் தனிமையில் அதைத் தீண்டும்போதே அலைக்கொந்தளிப்பையும் கடலாழத்தின் குளிரையும் காலமின்மையின் அழுத்தத்தையும் அறிந்தாள். தன் நெருங்கிய தோழிக்கு அவள் அம்முத்தைக் காட்டி னாள். அவள் கோரியதற்கேற்ப முத்து ஒன்றைக் கடலாழத்திலிருந்து எடுத்துவந்து அளித்தாள். மெல்ல அக்கடல்புறத்து இளம்பெண்க ளெல்லாம் பிறரறியாமல் முத்துக்களை அணிந்தனர். அவர்தம் கணவர்கள் மட்டுமே அதை அறிந்தனர். அறிந்தவர்கள் பிறரிடம் கூறவில்லை. முத்து அணிந்த பெண்களுடன் கூடுகையில் அறைச் சுவர்களில் நீலக்கடலலைகள் கொந்தளிப்பதை அடியற்ற ஆழத்தின் மூச்சிறுக்கும் அழுத்தம் உள்ளிழுப்பதை அவர்கள் உணர்ந்து அச்ச மூட்டும் பேருவகை கொண்டனர்.

முத்துக்கள் மும்மாடங்கள் மண்டிய பெருநகர்ப் புகாரின் அகச் சிறைகளுக்குள் சென்று சேர்ந்தன. அங்கிருந்து நாடெங்கும் கொண்டு செல்லப்பட்டன. முத்துக்குளிக்கும் பெண்டிருக்குச் செல்வம் சேர்ந்தபோது அவர்தம் கணவர்களும் அதை ஆதரித்தனர். அவர்களுக்காக நீரரமகளிர் கூட்டம் கூட்டமாக நிலாநாளில் கரை யணைந்தனர். முத்து மென்மையான ஒரு மந்தணமாக நாடெங்கும் பரந்தது. நால்வகை நிலமும் நலம் கொண்டு மருவி குளிர்மழைக் கூதல் குறிஞ்சியாக ஆன விந்தையை நகரத்துப் பாணர் கிணை 'யிசைத்துப் பாடினர். படைவலி காட்டவும் மறப்படையல் ஆகவும் ஆடவர் வராதாயினர். அருவியொலியெனப் பெருமுரசியம்பிய சாலைகளில் பூத்தும்பியென அதிரும் யாழ்வகைகள் நிரம்பின. வாள்மறந்த கைகளால் இளையோர் குழலிசைத்தனர். நிமித்திகர் எழுவரைக் கூட்டிச் சோழன் செல்குறியும் நிலைகுறியும் கண்டு வருகுறி வகுக்கக் கேட்டான். நிமித்திகர் தங்கள் சிறுமணி முழக்கிச் சொற்களை அதிரச்செய்து மொழியின் ஆழத்துக்குச் சென்று நீரரமகளிர் நிலத்துக்கு வரும் செய்தியை அறிந்து சொல்லினர். நீரரமகளிர் சேரும் இடங்களில் ஆடவர் ஆண்மையும் ஆள்வோர் கோன்மையும் கரைந்தழியும் என்றனர்.

போர் முரசொலிக்க யானை மீதேறிச் சோழனும் சுற்றமும் பரதவர் குடிக்கு வந்தனர். நிமித்திகர் சொன்ன குறி தேர்ந்து வெண்ணியைப் பற்றிக் கட்டி இழுத்துவந்தனர். மகனுக்குப் பன்னிரு வயதாகியும் வெண்ணியின் முலைகளின் ஊற்று வற்றவில்லை என்பதை மருத்துவப்பெண்டிர் மூவர் ஆய்ந்து சொன்னார்கள். சோழன் முன்னிலையில் கடல்சேர்ப்பன் அவளைக் குறி வினவித் தண்டனை விதித்தான். புதைமணல் தோண்டி குலதெய்வத்தின் படையல் பீடத்தை வெளியே எடுத்து அதற்கு முறைப்படி பூசலை செய்தனர். முலைப்பால் அருந்திய அவள் கணவனுக்கும் மகனுக்கும் கடலாழும் கொலைத்தண்டனை அளிக்கப்பட்டது. பெண்கொலை செய்தல் மன்னருக்கு இழுக்கு என்பதனால் அவள் முலைகளை அரிந்து குலதெய்வத்துப் பீடத்தில் வைக்க சேர்ப்பன் ஆணையிட்டான். வெண்ணியின் முலைகள் உதிரத்துடன் வெட்டப் பட்டு படையல்பீடத்தில் வைக்கப்பட்டன. அவளை வன்பால் மணல்வெளிமீது கைவிட்டுவிட்டு அனைவரும் மீண்டனர்.

அன்றிரவு எழுந்த சுழற்காற்றில் வெண்ணியை மணல்மேடு வாய்குவித்து உறிஞ்சி உண்டது. மறுநாள் காலை அவளைத் தேடி வந்தவர்கள் மென்மணல் இதழ்சுழித்து ஒலிக்காத சொல்லொன் றைப் பலுக்கிக் கொண்டிருப்பதையே கண்டனர். பீடம்மீது

வைக்கப்பட்ட முலைகளில் இருந்து பால் சுரந்து ஒழுகியதைக் கண்டு பரதவர் அஞ்சி சேர்ப்பனுக்குச் சொன்னார்கள். அவன் தன் சுற்றம் குலம் சூழ வந்து தன் முடியும் குண்டலமும் களைந்து வைத்து வணங்கிப் பெரும்பிழை சொன்னான். வெண்ணியைத் தெய்வ மாக்கி முக்குலங்களும் கூடி முழுநிலவில் பூசையிட்டு வணங்கு வதாக வஞ்சினம் சொன்னான். வெண்ணி வெண்மணல்களை ஆளும் தெய்வமானாள்.

சோழ நாட்டில் செம்முத்தெடுத்தல் தடை செய்யப்பட்டது. கன்னியர் கடல் நீராடுதல் கடும் தண்டனைக்குரியதாக அறிவிக்கப் பட்டது. சோழ வளநாடெங்கும் செம்முத்துக்கள் வைத்திருக்கும் பெண்களைத் தேடிச் சோழன் அனுப்பிய ஒற்றறி மகளிர் பாடினிய ராகவும் மருத்துவராகவும் உருமாறி அலைந்தனர். இல்லத்து முதுபெண்கள் இளம்பெண்களை உளவறிந்து சொன்னார்கள். சேடியர் தலைவியரைக் கண்டு சொன்னார்கள். பெண்கள் அவற்றை நீரிலும் புதரிலும் வீசி எறிந்தனர். எறியாது மறைத்து வைத்தவர்கள் கண்டடையப்பட்டு முலை அரியப்பட்டு நீர்நிலை களில் வீசப்பட்டனர். நகர்தோறும் ஊர்தோறும் பல நூறு பெண்கள் முலையிழந்து இறந்தனர். அப்பெண்களை அவர்கள் குலங்கள் தெய்வங்களாக்கித் தங்கள் மீதான வஞ்சத்திலிருந்து காத்துக் கொண்டனர். அந்தத் தெய்வங்கள் அனைத்துமே முத்தாரம்மன்கள் எனப்பட்டன.

பெண்களின் உடலில் அச்செம்முத்துக்கள் அவர்கள் கனவு களிலிருந்து முளைத்து உருக்கொண்டிருப்பதாக மருத்துவர் சொல்லினர். முத்து பெண் மட்டுமே அறிந்த மந்தணம். பெண்ணே அஞ்சும் உலகின் பூட்டிய கதவத்தின் மந்தணத் திறவுகோல். அவள் பொருள்கொள்ள விழையும் ஓர் இசைமொழியின் அகரம். பின்பொரு காலத்தில் புகார் நகரத்துப் பெண்ணொருத்தி உடல் மண்ணில் புதைந்தபோது முத்து முளைவிட்டு மரமாகியது. அம்மரம் கிளைவிட்டுத் தழைத்துப் பூத்துக் காய்த்தபோது செம் முத்துக்களாகச் சொரிந்தது. முத்தம்மன்கள் குடியிருத்தப்பட்ட மேடைகளுக்குப் பின்பக்கம் மஞ்சாடி மரக்கன்று நடும் வழக்கம் உருவாயிற்று. ஆண்டுக்கு ஒருமுறை முழுநிலா நாளில் அம்மன் இடையில் மஞ்சாடி முத்துக் கோர்த்த மாலையணிவித்துப் பூசனை செய்யும் சடங்கும் பிறந்தது. ஆனாலும் முத்துக்கள் எவருமே அறியாமல் மாற்றார் விடுத்த கரவுசெயல் நாணயங்கள்போலப் புழங்கியபடித்தான் இருந்தன.

ஜ

அலைகடல் உயிர்க்கும் மணல்வெளி நீங்கிக் கவுந்தி துணையுடன் கண்ணகியும் கோவலனும் நடந்தனர். பின்பக்கம் நீர்முழக்கத்தை நீண்டநேரம் கண்ணகி கேட்டுக்கொண்டிருந்தாள். அவளிடம் நீலி ''ஏன் அமைதி கொண்டிருக்கிறாய்?'' என்றாள். "கடலோசையைக் கேட்கிறேன்'' என்றாள் அவள். ''அது அலைகளின் ஓசை. கடலுக்கு ஒலியே இல்லை'' என்றாள் நீலி.

2

மருதம்

குலக்கதை சொன்னது

உயிரென்பதன் பொருட்டுப் பிறவெல்லாம் களையப் படும் மண்ணை மருதமென்றனர் மூதாதையர். பச்சை பொலிந்து தலைகுனிக்கும் ஒவ்வொரு செடிக்கும் இறந்த களைகளின் உதிரமே உணவு.

மதுரைப் பெருவழியில் தாழையும் புன்னையும் பின்வாங்கி மறையத் தொடங்கின. கோவலனும் கண்ணகியும் நாணல்கூட்டங் கள் விளிம்புகட்ட நீர் சுழித்துச் சென்ற வாய்க்கால்களின் கரை வழியாக மெல்ல நடந்தனர். தவளைகள் குறுக்காகத் துள்ளிக் குதிக்கையிலும் வளைநண்டுகள் சீறிக் கரங்கள் தூக்குகையிலும் கண்ணகி அஞ்சிக் கணவன் கைகளைப் பற்றிக் கொண்டாள். நீர்க் கால்கள் சென்றணைந்த வயல் விரிவுகளில் நீர் பரவி ஆம்பலும் நீலமும் விரிந்து கிடந்தன. கரையில் நின்று நீரில் துள்ளி விழும் மீன்கள் எழுப்பும் வளையங்களை அவர்கள் நோக்கினர். நீர்க் கோலி ஒன்று சாட்டைபோல நெளிநெளிந்து சென்ற வழியில் அலைகள் வளைய மாலையொளி நடனமிட்டது.

''இது மருதநிலம். மள்ளர் ஊர்கள் வரக்கூடும். முதல் ஊரின் ஊரன் பெயரென்ன என்று கேட்போம்'' என்றான் கோவலன். வயல்வரப்புகளின் வழியாக நடந்து சென்றபோது நீரில் முழந்தாள் அழுந்திக் குனிந்து நிற்கும் பெண்டிரைக் கண்டனர். ''அவர்கள் கடைசியர், புலையர் குலத்துப் பெண்டிர். சாம்பவர் குலத்துச் சிறு குடியினர்'' என்றாள் நீலி. உண்பதும் உழைப்பதுமன்றி இவர்கள் ஏதுமறியாதவர்கள். அறுவடை முடிந்தபிறகு பாலடைத்து விளையும் நெல்மணிகள் அவர்களுக்குரியவை. நீரில் ஆமையும் நத்தையும் பொறுக்கிச் சேர்ப்பார்கள். இது அறுவடை முடிந்த காலம். இவர் களுக்கு வேலை என ஏதும் இருப்பதில்லை. ஆகவே ஊதியமும் இல்லை. இவர்கள் இரவுமட்டும் நெற்பொரியும் ஆமையூனும் சேர்த்துண்டு வாழ்வார்கள்.''

''இவர்கள் கணவர்கள் எங்கே?'' என்றாள் கண்ணகி. ''இவர்கள் குலத்தில் உணவு தேடும் இழிவான வேலைகளைப்

பெண்களே செய்ய வேண்டும். ஆண்கள் வயல்களில் உழைப்பார்
கள். அவர்கள் ஊர் மள்ளருக்கு உரிமைச்சுற்றமாக இருப்பார்கள்
அவர்களில் ஏழு கழஞ்சு பெறுமானம் உடைய வலிமை மிக்கவர்
களும் உண்டு. அவர்களுக்குக் குலமள்ளன் உணவளித்துப் பேணு
வான். அவர்கள் பெண்டிர் மள்ளர்களுக்கு உரிமையானவர்கள்
என்பது மருதநிலத் தெய்வம் விண்ணவன் வகுத்த நெறி. இவர்கள்
உண்ணுவது இழிந்த உணவென்றும் பேசுவது சின்மொழி என்றும்
இவர்களே மக்களுள் கடைஞர் என்றும் உன் மரபு வகுக்கிறது.''

''எந்த மரபு?'' என்றாள் கண்ணகி சீற்றத்துடன்.

''கற்பும் களவும் என நெறி வகுத்த மரபு. எது சொல்லால்
சிறை அமைக்கிறதோ அம்மரபு. சிறையைவிட மேலான சிறை என
நிறையை வகுத்த மரபு.'' நீலி உரக்கச்சிரித்தாள். ஒருகணம் அவளில்
அந்தக் கரிய பேய்த்தோற்றம் வந்து மறைந்தது.

மாலை சிவந்து இருளத் தொடங்கியபோது அவர்கள் குளிர்ந்த
அலைகள் நிரம்பிய ஏரியின் கரையை அடைந்தனர். வழியெங்கும்
கடைஞர்குலப் பெண்கள் சேற்றிலும் ஓடைகளிலும் மீன்
பிடித்தனர். சதுப்புப் புதர்களில் பறவைகளைக் கவணிட்டுப் பிடிக்க
அமர்ந்திருந்தனர். முற்றாவரப்புகளைக் கொட்டிக்கிழங்குகளுக்
காகச் சிலர் தோண்டிக்கொண்டிருந்தனர். ஏரி நீரில் சிலர் தூண்டில்
போட்டனர். ஏரிமீது அந்தி அடங்குவதை கண்ணகி கண்டாள். ''ஏரி
நிரம்பியிருக்கிறது. இவ்வாண்டு இவர்களுக்கு விளைச்சலுக்குக்
குறைவிருக்காது'' என்றான் கோவலன். ''தாளடிக்குற்றிகள்
பெருத்து நிற்கின்றன. அறுவடையும் குறைவில்லை'' என்றாள் நீலி.

ஏரியில் கிழக்குக் கரையில் மள்ளர் வாழ்ந்த மூதூர் இருந்தது
ஊர் நடுவே நுதல்விழி முதல்வனுடைய கோயிலின் கல்விமானம்
ஓங்கி நின்றது. அதில் புறாக்கள் சிறகடித்து அடையும் அசைவுகளால்
வானம் கலைந்தது. ஊரால மரத்தடியில் குளிர்ந்த கற்பீடம்
கொண்ட சாவடி. ஆலயத்தைச் சுற்றி ஏழு திசைகளில் விரிந்த
தெருக்களில் பூசணியும் பாகலும் பச்சையிலை படர்ந்த கூரை
கொண்ட கல்வீடுகளின்மீது சமையற்புகை தவழ்ந்தது. வீட்டுமுற்றங்
களில் சிறு கற்றிண்ணையில் விளக்கேற்றிவைத்து முதியவர் அமர்ந்
திருக்க தெருக்களில் சிறுவர்கள் கூவி விளையாடினர். வீடுகளுக்கு
வலப்பக்கம் களவிரிவில் ஆநிலைகளில் கன்றுகாலிகளின் வால்கள்
சுழன்றன. பொற்குவைபோல எழுந்த புது வைக்கோற்போர்களின்
மீது கூடணைய மறுக்கும் கோழிகள் சில அமர்ந்திருந்தன.

கோவலனும் கண்ணகியும் ஆலயத்துக்குள் சென்றனர்.

கவுந்தி மன்றத் திண்ணையில் காலோய்ந்து அமர்ந்தாள். ஆலயத் துக்குள் தென்மேற்கு மூலையில் கன்னிக்குச் சிற்றாலயம் இருந்தது. மருதநிலத்துக் கன்னியம்மனுக்கு வலதுகால் நீள்விரல் மணி மட்டுமே நகையாக இருக்கும் என்பது தொல்நெறி என்றார் அங்கிருந்த பண்டாரம். இளவேனிற் காலத்தில் வேளாண்மக்கள் கன்னியம்மனுக்குக் குலம் கூடிப் பொங்கலிட்டு மஞ்சளும் மா விலையும் மலர்க்குவையும் படைத்துப் பூசை செய்வார்கள் என்றார். அத்தனை தெய்வங்களுக்கும் ஆயிரம் கதைகள் இருக்க கன்னியம் மனுக்கு மட்டும் கதையும் சடங்கும் ஏதுமில்லை. காலங்களாக அவர்கள் மூதாதையர் கையில் ஏதோ நாட்டின் அறியா நாணயம் போல அத்தெய்வம் இருந்துகொண்டே இருந்தது.

கன்னியம்மன் ஆலயத்துக்குள் சிற்றகல் எரிய அம்மனின் கண்களைக் கண்ணகி நோக்கினாள். பெயரறியாத, கதையறியாத அத்தொல்பழந்தெய்வம் ஐந்து நிலங்களிலும் உருமாறி நிலைமாறிப் பெருகி நிறைந்து கோயில் கொண்டிருக்கிறது. அதன் கல்விழிகளில் கடலாழத்தின் பேரழுத்தம். அதன் கல்லுதடுகளில் கடலாழத்து ஓசையின்மை. யார் நீ என்று அவள் உள்ளம் கன்னியிடம் கேட்டது. மீண்டும் மீண்டும் உன்னைக் காண்கிறேன். பெருமூச்சுடன் வணங்கி மீண்டாள். அவளுக்குப் பின்னால் கன்னியின் எவருக் குமே கேளாத தொல்மொழிச் சொல் ஒலித்து அவளை அழைத்தது போல உணர்ந்தாள். ஒரு கணம் அசைவற்றுச் சிலிர்த்து நின்றாள்.

வில்வமரங்கள் செறிந்த நிழலுக்குள் தனித்த சிறுமண்டப மாகக் கருவறை இருந்தது. ஆவுடைமீது எழுந்தருளிய சிவம் தூங்காச்சுடர் ஒளியில் தெச்சியும் அலரியும் சூடி அமர்ந்திருந்தது. சிவப்பண்டாரம் வில்வநீரும் நறுநீறும் அளித்தார். மும்முறை வலம் வந்து வணங்கி இருவரும் கவுந்தியடிகள் அமர்ந்த மன்றமேடைக்கு வந்தனர்.

அவர்கள் வந்த செய்தி கேட்டு முதுஊரன் தன் தளர்ந்த கரங் களில் கோலேந்தி நடுங்கி நடந்துவந்து முகமன் சொன்னான். தன் இல்லத்துக்கு வந்து உணவுண்டு ஓய்வெடுத்து மறுநாள் பயணத்தைத் தொடருமாறு வேண்டிக்கொண்டான். கோவலனும் கண்ணகியும் கவுந்தியும் அவருடன் சென்று தாழ்ந்த புற்கூரையும் சாணி மெழுகிய பெரிய திண்ணைகளும் கொண்ட அவரது அகன்ற இல்லத்தில் தங்கினர். கவுந்தி சமணர் மரபுப்படி கூரைக்கீழ்த் தங்குவதில்லை என்பதனால் முற்றத்துப் பலாமரத்தடியைத் தூய்மை செய்து மென் சருகு பரப்பி அளித்தனர். கண்ணகி உள்ளறைக்குச் சென்றாள்.

அவ்வூரின் பெயர் வெண்ணைப்பெருவூர் என்றும் வில்வக்

காட்டில் அமர்ந்த இறைவன் பெயரால் வில்வாரணி என்றும் சொல்லப்படுவதுண்டு என்றார் முது ஊரன். ''அது வடமொழிப் பெயரல்லவா ?'' என்று கோவலன் கேட்டான். ''ஆம்'' என்றார் ஊரன். மருதநிலத்து ஊர்களில் இப்போது வடமொழி அறிந்தவர்கள் உள்ளனர். காவிரி வழியாக வரும் பெரும்படகுகளில் வடவணிகர் நெல் கொள்ள வருவதுண்டு. புகாரிலிருந்தும் கோழியூரிலுருந்தும் மரைக்காட்டிலிருந்தும் மயில்துறையிலிருந்தும் பார்ப்பனர்கள் ஊர்களுக்கு வந்து வயல் ஒருக்கி விதைபரப்பும் முன்பும் அறுவடைக்குப் பின்பும் ஆலயங்களில் வேள்விகள் செய்வதுண்டு. ''வேள்விகள் மூலம் விளை பெருகுவதனால் இப்போதெல்லாம் எங்கும் அவற்றைச் செய்கிறோம். பார்ப்பனர்களையும் சாரணர்களையும் சாக்கையர்களையும் பேணுவதனால் எங்கள் குலம் தழைக்கிறது'' என்றார் ஊரன்.

அன்றிரவு கொழுநெய்விட்டுச் சமைத்த புதுநெற்சோறும் பூசணிப்புளிக்கறியும் சேர்த்துக் கோவலனுக்கு உணவிட்டனர். காய்ச்சில் கிழங்குப் பிட்டும் பாகற்காய் விழுக்கீடும், வெண்டைக் காய்க் கூட்டும் புளிக்காத மோரும் சேர்த்தனர். கவுந்தியடிகளுக்கு அவளது பிச்சைப் பாத்திரத்தில் ஐந்து கைப்பிடி உப்பில்லாத அன்னமும் வெந்த காய்கறிகளும் மட்டும் முறைப்படி வழங்கினர். சருகுமீது படுத்துச் சாரணி அப்போதே துயில் கொண்டாள். திண்ணைமீது கோரைப்பாயை விரித்துக் கோவலன் படுத்தான். புகார் நகரத்துச் சேதிகள் கேட்க ஊர் உழவர் தங்கள் பாய்களைச் சுருட்டிக்கொண்டு வந்தனர். அவற்றைச் சாணிமெழுகிய முற்றத்தில் அரைநிலவின் ஒளியில் விரித்துப் படுத்துக்கொண்டு அவனிடம் இந்திர விழாவைப்பற்றியும் சோழனின் அரசவைப் பெருமைகள் பற்றியும் சொல்லும்படிக் கோரினர்.

கோவலன் அவர்களுக்கு மெல்ல ஐந்தவித்தான் பெருமையையும் அவன் அடியாரான சாரணர் புகழையும் சொன்னான். கொல்லாமை எனும் பெருங்கருணை எவ்வாறு பூமியில் ஒவ்வொரு கணமும் நிகழ்ந்தபடியிருக்கும் பெரும் வன்முறையிலிருந்து உயிரை விடுவித்து அருகனடி நோக்கிக் கொண்டு செல்கிறது என்றான். அருகன் புகழ் பாடுக என்று ஒருவன் கேட்டான். யாழ் ஒன்று தேவை என்றான் கோவலன். அவன் ஓடிச் சென்று தன் இல்லத்திலிருந்து சிறு செங்கோட்டு யாழ் ஒன்றை எடுத்துவந்தான். அதன் ஆணியை முறுக்கி நரம்புகளை இறுகச் செய்தபடி கோவலன் அதன் மீதிருந்த கோலங்களைப் பார்த்தான். அவை எழுத்துக்கள்போல் இருந்தன. அவை என்ன என்று கேட்டான் .

''எங்கள் குலம் தொல்குடிகளில் ஒன்று'' என்றார் ஊரன். "எங்கள் முதுமூதாதையர் தென்நிலப்பகுதியில் எங்கோ வாழ்ந்தவர்கள். அதைப் பொதிகைமலை என்பார்கள். அங்கே நாங்கள் அடந்த காடுகளுக்குள் தினை மட்டுமே விளைவித்து வாழ்ந்தோம். மலையில் எடுத்த தேனுடன் தினை சேர்த்து உண்போம். அப்போது எங்கள் மகளிருக்கு எவ்விதத் தீட்டும் இருந்தது இல்லை. எங்கள் முதுஅன்னையரே குலத்தை வழிநடத்தினர். தினை விதைப்பதும் காப்பதும் அறுப்பதும் அவர்களே. ஆண்கள் மலைகளில் தேனெடுத்து வாழ்ந்தனர். அதுவே எங்கள் குலத்தில் இன்பமும் தூய்மையும் நிறைந்திருந்த நாள்.'' ஊரன் சொன்னார்.

"பிறகு தெற்கே பரந்திருந்த கருங்கடலுக்குள் வாழும் பேராச்சி தன் குழந்தைகள்மீது சினந்தாள். தன் உடைகளை உதறி அவர்களைச் சிதறடித்தாள். அவர்கள் நீராழத்திலிருந்து கரையேறி நிலத்தில் வாழ ஆரம்பித்தனர். அவர்கள் உடல்களில் எங்கும் வெள்ளிச்செதில்கள் நிறைந்திருந்தன. அவர்கள் விலாக்களில் மீன் சிறகுகளும் கால்களில் துடுப்புகளும் இருந்தன. தொடக்கத்தில் அவர்கள் நீர்நிலைகளில் மீன்களை உண்டு வாழ்ந்தனர். சிறகுகளை வீசி மரங்களில் இருந்து மரங்களுக்கு அவர்களால் பறக்க முடியும். அவர்கள் எழுப்பும் இன்னிசையில் எவருமே மெய்ம்மறந்து போவார்கள். அவர்கள் உணவு தேடிக் காட்டுக்குள் பரவினர். காட்டுக்குள் வாழ்ந்த குலங்களை வென்று பெண்களைக் கவர்ந்து சென்றனர். அப்பெண்களின் கருவில் மீண்டும் மீண்டும் பிறந்தனர். அவ்வாறாக அவர்கள் நிலத்தில் பிறந்த பிற மக்களைப்போன்ற வடிவம் பெற்றனர். ஆனால் அவர்கள் உடலில் மீன்நாற்றம் இருந்து கொண்டேதான் இருந்தது.''

"அவர்களை அஞ்சி நாங்கள் எங்கள் விதைநெல்லையும் பெண்களையும் பாதுகாத்துக்கொண்டு கிழக்கே வந்தோம். இங்கே கான்விரி ஓடிய சதுப்புகளில் நிலம் திருத்திப் பயிர் செய்தோம். தினை இங்கே விளையவில்லை. ஆகவே நெல் பயிரிட்டோம். இப்போதும் நாங்கள் எங்கள் வயல்களின் தென்மூலையில் தினை சிறிதேனும் விதைப்பதுண்டு. பங்குனி பத்தாம் நாள் தேனும் தினையும் சேர்த்து உண்போம். அன்று மருதம் புரக்கும் விண்ணவனுக்குப் பொங்கலிட்டுப் பூசைசெய்து வழிபடுவோம். இவ்வெழுத்துக்கள் எங்கள் மலையில் நாங்களிருந்த காலத்தில் உள்ளவை. அன்று இவற்றைச் சாணி மெழுகிய மண்தரைமீது எழுதுவோம். அம்மொழியை நாங்கள் இழந்தோம். எங்கள் பெண்களின் விரல்களில் மட்டும் அவை கோலங்களாக எஞ்சின. அவர்கள்

பொங்கல்பானைகளிலும் பொங்கல்தளத்திலும் அவற்றை அலங்
காரமாக எழுதினர். மங்கலக்குறிகளாக அவற்றை யாழிலும்
பொறிக்கிறோம்'' என்றார்.

கோவலன் யாழின் எழுத்துக்களைப் பார்த்தபோது அவற்றை
முன்னரே பார்த்த உணர்வை அடைந்தான். அவர்கள் கோரிய
தனால் யாழ் மீட்டி மருதப்பண் ஒன்றை இசைத்தான். அவர்கள்
விண்ணில் நிரம்பிய நிலவொளி தங்கள் உள்ளிலும் பெருகுவதாக
உணர்ந்தனர். மீண்டும் மீண்டும் பாடச்சொன்னார்கள். இரவு
மிகவும் குளிர்வதுவரை கோவலன் பாடிக்கொண்டிருந்தான். ஒவ்
வொருவராக உறங்கிய பின் யாழை மெதுவாக வைத்துவிட்டுத் தன்
பாயில் படுத்தான். பின்பு தூக்கத்திலிருந்து விழித்தபோது நிலவின்
ஒளி சரிந்து யாழ்மீது விழுந்திருந்தது. அவ்வெழுத்துக்களைப் பார்த்த
அக்கணமே அவனுக்கு படிப்படியாக நினைவுகள் அவிழ்ந்தன.
கடலோடிச் சோனகதேசம் சென்று அறுபது வருடம் கழித்து
வடதிசை வழியாக வந்த அவனது முதுபாட்டன் கோழிச்சாத்தன்
கொண்டுவந்த வெண்மட்கலம் ஒன்றிலிருந்த எழுத்துக்கள் அவை.

நெல் கொண்டு சோனகம் போன வழியில் கடலெழுந்து கலம்
உடைந்து வன்பாலை நிலமொன்றில் ஒதுங்கிய பெருவணிகனை
அவ்வழியே சென்ற பாலைமக்கள் கண்டு உயிர்மீட்டனர். அவனை
அருகே இருந்த நகரமொன்றில் அடிமையாக விற்றனர். அடிமை
வாழ்விலிருந்து தப்பி ஓடிய அவனை அவர்கள் துரத்தி வந்தபோது
பாலையில் ஊரின்றி அலையும் நாடோடி மக்கள் சிலர் கண்டு
அடைக்கலம் அளித்தனர். அவர்களுடன் பாலைகளைக் கடந்து பல
நாடுகளைச் சுற்றினான். அடைக்கலம் கோரி அவன் கூவிய சொல்
தங்கள் குலத்தின் மந்தணச்சொற்களில் ஒன்றாக இருப்பதனா
லேயே அவனை மீட்டதாக அவர்கள் பிறகு சொன்னார்கள்.
அவர்களின் அகமொழியிலும் தாயும் தந்தையும் உதிரமும் உவக்கை
யும் இருப்பதைச் சாத்தன் கண்டறிந்து வியந்தான்.

அவன் வந்த வழியை அவர்கள் மீண்டும் மீண்டும் கேட்டனர்.
அது அவர்களுக்குத் தங்கள் குலக்கதையை நினைவூட்டியது. அவர்
களுடைய குலப்பழங்கதைகளில் தென்கடலுக்குள் நீருக்கடியில்
உள்ள பொன்னகரம் ஒன்றிலிருந்து அவர்கள் வந்ததாகச் சொல்லப்
பட்டிருந்தது. அந்நகரில் பொன்னிற மீனுருவம் கொண்டவர்களாக
அவர்கள் வாழ்ந்தனர். அவர்கள் மன்னன் மீனவன் என்று
சொல்லப்பட்டான். மீனம்மையின் ஆலயம் அங்கிருந்தது. மீன்கள்
செறிந்த மூழ்கிய நகரம் அவர்கள் கனவுகளில் மீண்டும் மீண்டும்
வருவதாக இருந்தது. ஒருமுறை கடலுக்கு அடியிலிருந்து மாபெரும்

நீலநிறப் பெண்மீன் ஒன்று எழுந்து வந்தது. அவர்களின் பொன் னகரத்தை அது ஓர் அணிகலனாகக் கண்டது. அதை எடுத்து அணிய முயன்றது. அந்நகரம் நீர் மேலெழுந்து துண்டுகளாக உடைந்தது. அவர்கள் இருந்த துண்டு நீரில் மிதந்து அலைகளில் அலைந்து பாலைநிலத்தை வந்தடைந்தது. அவர்கள் குலப்பெண்கள் இப் போதும் மீன்சிறகுபோலக் கைகளும் மீன்துடுப்புபோலக் கால் களுக்குப் பின்னால் அலையும் பாவாடையும் அணிவது அதனா லேயே. தங்களை அம்மக்கள் சம்புகள் என்றனர். ஊரார் அவர் களை சம்பிகள் என்றும் சிப்சிகள் என்றும் சொன்னார்கள்.

அவனை அம்மக்கள் தங்கள் மொழித்துணையாகக் கொண் டனர். அவர்கள் செல்லும் ஊர்களில் பேசிய எல்லா மொழியையும் சாத்தன் எளிதில் கற்றான். அம்மொழி மக்களுடன் உரையாடி அவர் களுடைய அரிய பொருட்களை வேறுபொருள் மாறுகொண்டு வாங்கிப் பிறிதோரிடத்தில் விற்க அவன் உதவினான். அவர்கள் அவனிடம் எல்லா மொழிகளையும் அறியும் வழி என்ன என்பதை மீண்டும் மீண்டும் கேட்டார்கள். அம்மொழிகள் அனைத்துமே ஆடித்தோற்றங்களே என்றும் ஆடி நடுவே அமர்ந்திருக்கும் ஒரு முதல்மொழி தன்னுள் இருப்பதாகவும் அவன் சொன்னான். ஆனால் ஏதேனும் ஓர் ஆடித்தோற்றம் வழியாக மட்டுமே அதைக் காணமுடியும். அத்தோற்றம் வழியாக அதன் முதல்வடிவை அகஆழம் உய்த்தறிந்து விட்டால் எந்த ஆடியில் எப்படி வளைந்து தெரிந்தாலும் அதை அறிய இயலும். அக்கலையை அவர்களுக்குக் கற்றுத்தந்தான். எம்மொழிச் சொல்லைக் கேட்டாலும் அதன் இடம் தருணம் அனைத்தையும் உதறி அச்சொல் தன்னுள் உள்ள சொல் வெளியில் எச்சொல்லைத் தீண்டி எழுப்புகிறதென்று மட்டுமே நோக்குவது அம்முறை. நெடுநாள் முன் ஆதம் என்று ஒரு பாலைச் சுனைக்கரைச் சிறுகுலம் சொன்னதுமே அவன் ஆதன் என்றும் அத்தன் என்றும் பொருள் கொண்டான். ஈவா என்று அவர்கள் சொன்னதுமே ஈன்றவள், ஈபவள் என்று அவன் புரிந்து கொண் டான். அதன் பின் அவர்களுக்கு மொழியெனும் தடையே இருக்க வில்லை.

வெகுநாள் கழித்துச் சிப்சிகள் குலத்துடன் தான் வந்தடைந்த இடத்தில் பேசப்பட்ட மொழியில் தன்மொழிச் சொற்கள் மேலும் இருப்பதை பெருவணிகன் கேட்க நேர்ந்தது. அரிசி என்ற சொல் காதில் விழுந்ததும் கண்ணீருடன் ஓடிச்சென்று சிவந்த தாடியும் உயர்ந்த உடலும் கொண்ட அம்மனிதனைக் கட்டிப்பிடித்துக் கதறி அழுதான். ஆனால் அவனுக்கு வேறு சொற்கள் சிலவே தெரிந்தன.

பல நூறு சொற்களை அவன் வேறு வடிவுக்கு மாற்றிச்சொன்னான். கடவுள் என்ற சொல்லை அவன் 'குதா உல்' என்றான். அவன் முன்னோர் கிழக்கே சிந்து என்ற பேராறு ஓடும் நிலத்திலிருந்து அச்சொற்களைக் கற்றதாகவும், அவர்கள் சிந்துவின் கோதுமையைப் பாலை நில மக்களுக்கு விற்கும் வணிகர்குலம் என்றும் சொன்னான். அவனுடன் சேர்ந்து சிந்துவுக்கு வந்த சாத்தன் அவ்வாறாக ஊர் திரும்பும் பாதையை அடையாளம் கண்டான். தன் மொழியின் சொற்கள் வழியாக மெல்லமெல்லப் பற்றி ஏறத் தொடங்கினான்.

முன்செல்லுந்தோறும் தன் மொழிச் சொற்கள் பெருகிவரக் கண்டான். சிந்துவின் கரைகளில் சிதறி விரிந்த பல்லாயிரம் ஊர்களில், இமில் பெருத்த காளைகள் நின்றும் படுத்தும் கிடந்த கல்செதுக்கிய ஆலயங்களில், தென்றிசைத் தெய்வமே கண்மூடித் தன்னுள் தான் நோக்கி அமர்ந்திருக்கக் கண்டான். அதன் பெயர் பசுபதி என்றறிந்தான். பசுவின் கொம்புகளிலிருந்து அவர்கள் முதலெழுத்து உருவாகியிருந்தது. நுதல்விழி முதல்வனை அவர்கள் உருக்கொண்ட உருத்திரன் என்றனர். அவர்கள் இல்லங்களில் தென்மேற்குமூலை கன்னித்தெய்வத்திற்குரியதாகக் கருதப்பட்டது. அவர்கள் பொங்கலிட்ட பானையொன்றில் வரைந்திருந்த எழுத்துக்களை எங்கோ கண்டிருப்பதாக உணர்ந்து ஒரு பானையை அவன் தன்னுடன் வைத்துக்கொண்டான். தனித்திருக்கும் இரவுகளில் அந்த எழுத்துக்களை மீண்டும் மீண்டும் வாசித்தறிய முயன்றான். விழிப்பின் தருணங்களில் அவை வெறும் ஓவியக் கோலங்களாக இருந்தன. ஆனால் கனவுமயக்கில் அவன் அவ்வெழுத்துக்களை அன்னையிடம் மீண்ட மகவின் பேருவகையுடன் வாசித்தான். எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அவனைப் புன்னகையுடன் அடையாளம் கண்டன. விழித்ததும் அவன் அறிந்தவையெல்லாம் நீர்க் கோலங்கள்போல மறைந்தன.

சிந்து வழியாக கங்கை வழியாக விந்தியத்தைக் கடந்து தெற்கணம் தாண்டி அவன் மீண்டும் புகாருக்கு வந்துசேர்ந்தான். அவன் தலை நரைத்து உடல் கூன்விழுந்து கண்கள் பஞ்சடைந்து கைகால்கள் நடுநடுங்கிக் கொண்டிருந்தன. அவனைப் பித்தன் என்று சிலர் சொல்ல பேரறிவாளன் என்று பிறர் சொன்னார்கள். அவன் மொழி களைமூடிப் பயிர் மறைந்த வயல்போலக் காடு கொண்டிருந்தது. அவன் சொல்லும் சொற்களில் பெரும்பகுதி தமிழல்ல என்றனர் சிலர். மொழியறிஞரோ அவை உடைமாற்றியோ உதிரம் மாற்றியோ பிறிதாக ஆன தமிழே என்றனர். அவன் சொல்வதை எவருமே உணர முடியவில்லை. ஆனால் அவன் சொன்னவை சில

தருணங்களில் நினைவில் மீளும்போது கடலாழம்போல அச்சமும் உவகையும் ஊட்டின. அவனோ புகாரில் வாழ்ந்த நாளெல்லாம் அந்தக் கலத்தில் உள்ள எழுத்துக்களை மீண்டும் மீண்டும் படித்தும் மாற்றி எழுதியும் வாழ்ந்தான். அவனுக்கும் பிறருக்குமான உறவு களே குறைந்து போயின.

தன் முதுமையின் இறுதி எல்லையில் தன்னுள் மூழ்கிப் பிறி தொன்றறியாமல் அவன் வாழ்ந்த நாட்களில் ஒருநாள் அதிகாலை யில் தெருவில் சித்திரமுழவணி நாளில் புதுநெல் கொண்டு கணி நலம் கூறவந்த பெருங்கணியன் முப்பாணன் தன் குலப்பாட லொன்றைப் பாடி அவ்வழிச் சென்றான். சிறுமுழவு துணைசேர்க்க முழக்கம் கொண்ட முது குரலில் ''யாதும் ஊரே! யாவரும் கேளிர்!'' என்று அவன் பாடக் கேட்ட முதுவணிகன் சாத்தன் தன் சுண்ணம் மடிந்த எலும்புகளில் காட்டருவியின் விரைவு பொங்க ஓடிப் படிகளில் தாவியிறங்கி கண்ணீர் சிதறக் கைகூப்பியபடிக் கணியன் பாதங்களில் சரிந்து புழுதியில் விழுந்தான். அன்று மாலையே அவன் உயிர் துறந்தான். கருவறைப் பெருந்தெய்வங்களின் முகங் களில் மட்டுமே காணும் பேரருள் கொண்ட புன்னகை ஒன்று அவன் முகத்தில் இருந்ததாக அவன் சுற்றம் சொன்னது. ஆகவே அவனை கடற்கரைப் பாறைமீது கல்லகல் வடிவில் நிறுத்தி தெய்வ மாக்கினர்.

நிலவில் சுடர்ந்த யாழின் மந்தண ஓவிய எழுத்துக்களை நோக்கிக் கோவலன் பெருமூச்செறிந்தான். கைகூப்பி இன்னதை என்றிலாமல் எல்லாவற்றையும் தொழுது மீண்டும் துயில் கொண்டான்.

ஓ

இருண்ட பாயல்குளம் தன் நீர் வாயில்களைத் திறந்து உள்ளே இழுத்துக் கொள்வதைப்போலக் கண்ணகியை அந்தத் தொல்பெரும் இல்லத்தின் அகத்தளங்கள் அணைத்துக்கொண்டன. காப்புத்தெய்வம் செதுக்கிய மரக்கதவுக்கு அப்பால் மெல்லிருளில் நின்ற ஓங்கிய முகமும் ஒளிவிடும் வெண்விழிகளும் கொண்ட கரிய மூதன்னை அவளைக் கனத்த கரங்களை நீட்டித் தன் திரண்ட முலைகள் சேர்த்து அணைத்துக்கொண்டு ''சித்திரை மாந்தளிர் போலிருக்கிறாய்'' என்றாள். அவளுக்குப் பின்னால் நீரில் மூழ்கி கண்களும் வாயும் மட்டும் காட்டும் மீன்கள்போல அவள் குமரியரும் மருகியரும் நின்று அவளை எதிர்கொண்டு சிரித்தனர். அகத்தளத்து இருளுக்குச் சற்றே கண் பழகியதும் கண்ணகி அவ்வீட்டின் அமைப்பை வியந்து பார்த்தாள். தேனடைபோன்ற சிற்றறைகளில் குழந்தைகளும் அன்னையரும் நிறைந்திருந்தனர். நடுவே ஒரு பெருமுற்றத்தில் சற்றே ஒளிகாட்டும் கல்லகல் ஆமணக்கெண்ணெய் மணக்க எரிந்தது. அப்பால் அடுமனைக்குச் செல்லும் வாசல். அடுத்து வளைப்பும் துணையில்லங்களும்.

உணவருந்தியதும் கண்ணகியை அன்னை தன்னருகே படுக்க வைத்து முற்றத்து நிலவொளியில் பெண்டிர் சூழப் படுத்தாள். கண்ணகியின் கதை கேட்டுச் சிறுமியர் கண்ணீர் உகுத்தனர். அன்னையர் நெடுமூச்செறிந்தனர். ஓர் இளம்மருகி இருளில் சற்றே புரண்டு படுத்து ''ஆனால் உனக்கு இது நல்லூழ் என்றே சொல்வேன். அகத்தளம் விட்டிறங்கி நாடும் காடும் காண உனக்கு வாய்த்ததே'' என்றாள்.

''நாட்டில் மகிழ்நரும் காட்டில் செந்நாய்களும் உண்டு'' என்றாள் மூத்தவள் ஒருத்தி. ''ஆம். ஆனால் இறப்பதானாலும் வாழ் வெடுத்த பயன்பெற்றுப் பின் இறப்பதல்லவா மேல்?'' என்றாள் அப்பெண். எவரும் எதுவும் சொல்லவில்லை. ''பறவைக்குச் சிறகுகளை அளித்தவனே மண்புழுவுக்கு கண்களையும் அளித்த

வில்லை. மள்ளர் குலப்பெண்டிருக்கு இருட்டே முதுநெறி'' என்றாள் மூதன்னை.

ஏனென்று கண்ணகி கேட்டாள். மூதன்னை ''எனக்கு என்ன தெரியும்? எல்லாம் குலக்கதைகள். இந்த இருட்டில் குலக்கதைகள் மீன்கள் முட்டையிட்டுப் பெருகுவதுபோல நிறைகின்றன. இங்கே நாங்கள் உண்பதும் உயிர்ப்பதும் உமிழ்வதும் கதைகளையே'' என்றாள்.

''கதை சொல்லு பாட்டீ'' என்று குழந்தைகள் கால்களைத் தூக்கி அவள்மீது போட்டன.

''இந்த மூக்குத்தியைப் பார்த்தீர்களா?'' என்று மூதன்னை கதையைத் தொடங்கினாள்.

''ஆம் மூவிதழ்ப்பூ போலிருக்கிறது'' என்றனர் குழந்தைகள்.

''இந்த மாலை ?''

''தெச்சிமலர்த்தொகை போலிருக்கிறது.''

''ஆம். மலர்களினால் ஆனதனால்தான் அதை மாலை என்றனர்'' என்றாள் அன்னை ''இந்த வளையல்கள்?''

''கொடிச்சுருள்கள்.''

''நம் மூத்த முதுபாட்டியர் ஒரு காலத்தில் உடலெங்கும் மலர் களையே அணிந்திருந்தனர்'' என்றாள் மூதன்னை. ''அன்று நாம் பொதிகைமலைமீது வாழ்ந்தோம். மலைச்சாரலில் தினை விதைத் தும், ஆலோலம் பாடிக் கிளி கடிந்தும், தினையறுத்து மணிதொகுத்து மாவிடித்தும் வாழ்ந்தோம். காலைமுதல் மாலைவரை வாழ்வே ஒரு விழாவாக இருந்தது. தினை கொள்ளவரும் குருவிகள்போல தினைப்பூ தேரும் தும்பிகள்போல பெண்டிரும் கட்டுகளற்று மலை யெங்கும் அலைந்த காலம் அது. மலர்களால் விதவிதமாக அழகு செய்துகொண்ட நம் குலப் பெண்டிர் நீராடவே அறிந்திருக்க வில்லை. ஏனெனில் நீரோடைகளும் சிற்றருவிகளும் சேடியர்போல அவர்களை நீராட்டின. ஊசல் கட்ட அறிந்திருக்கவில்லை. மலைக் கொடிகளே ஊசல்களாயின. பாடவும் ஆடவும் அறிந்திருக்க வில்லை. அவர்கள் மகிழ்ந்திருந்தபோது பேசியதெல்லாம் இசை யாயிற்று. அசைந்ததெல்லாம் நடனமாயிற்று.

பின்பொரு நாள் தென்திசை மன்னன் ஒருவன் பொதிகை மலையின் மட்டற்ற மலர்க்குவைகளைப்பற்றிய கதை கேட்டுக் குன்றேறி வந்தான். தென்கடலுக்கு அப்பால் ஏதோ தாழ்நிலத்தில் பிறந்து பெருநிலத்தில் பரந்த மன்னர் குலமொன்றின் கண்ணி

அவன். அவன் குலம் வேலேந்திப் போராடுவதில் விறல் மிக்கது. ஆகவே அவர்கள் வேலர்கள் என்றழைக்கப்பட்டனர். சேவற்கொடியும் மயில் சின்னமும் கொண்டவர்கள். ஆறு திசைகளையும் ஆள்பவர்கள் என்பதனால் அவர்கள் அறுமுகர்கள் என்றழைக்கப்பட்டனர். அறுமுக அழகன் கண்ணில் ஆலோலம் பாடிக் கிளி கடிந்த நம் குலத்துக் கன்னி பட்டாள். அவள் பெயர் வள்ளி. தென்திசையின் பொன்னகரங்களின் கதை சொல்லி அவள் உள்ளத்தைக் கவர்ந்தான். அவளை அவன் கவர்ந்து சென்றான். நம் குலம் அவனுடன் போருக்குச் சென்றது. மூன்று ஆண்டுக்கு அப்போர் நிகழ்ந்தது. அறுமுகன் தமையன் ஆனைமுகனும் அவன் படைகளும் அவனுடன் சேர்ந்துகொண்டன. வீரம் மிக்க நம் குலம்கூட அவர்களை வெல்ல முடியவில்லை. அவர்கள் நம் பெண்டிர் பலரைக் கவர்ந்து சென்றனர்.

பொதிகைமலை விட்டு நாம் கீழ்த்திசைக்கு வந்தோம். வரும் வழியெங்கும் பிற குலங்களுடன் போர் புரிந்தோம். பெண்டிரைப் பிறர் காணாது சிறை வைக்கும் வழக்கம் அவ்வாறு தோன்றியது தான். இந்த நீர்மலிந்த மண்ணில் நாம் வேரூன்றி ஊராகி நகராகிச் சிறந்த பின்பும் அவ்வழக்கம் போகவில்லை. தினம் காலையில் மலர் கொய்து அணிகொள்ளும் குலவழக்கம் கொண்டவர் நம் பெண்டிர். அவர்கள் அகச்சிறைப் பட்டபோது அதே மலர்களைப் பொன்னில் செய்து பூட்டும் வழக்கம் பிறந்தது.''

மூதன்னை மேல் கால் வைத்து அணைத்து ஒரு சிறுமி அவள் தாலியை இழுத்து "இது எப்படி வந்தது பாட்டி ?" என்றாள்.

"நம் பழங்குலத்தின் வாழ்வும் முறையும் மாறினாலும் மாறாதது நம் தொல்மொழி'' என்றாள் அன்னை. ''நாம் தேடுவதையெல்லாம் மொழியிலேயே தேடவேண்டும். இதன் பெயரென்ன?"

"தாலி'' என்றது குழந்தை.

"தாலம் என்றால் என்ன ?"

"பூசனைக்கும் உண்பதற்கும் வைக்கும் தட்டு."

"தலம் என்றால்?''

"இலை."

"பார்த்தாயா? அவ்விரு சொற்களுமே தலம் என்ற பொதுச் சொல்லில் இருந்துவந்தவை. இந்தத் தாலியைப் பார்த்தால் அரசிலை போன்றிருக்கிறது அல்லவா? நம் குலம் பொதிகையில் இருந்தபோது அரசிலையைக் காட்டுக்கொடியில் கோர்த்து ஆடவர்

பெண்டிருக்கு அணிவித்தால் மணம் நிகழ்ந்துவிட்டதாகப் பொருள் கொள்வர். புதல்விக்கு இடையில் அரைமுதல்தாலியும் புதல் வனுக்குத் தோளில் ஐவகை இலைகளால் ஐம்படைத்தாலியும் அணி விப்பார்கள். இவையெல்லாம் இன்று பொன்னிலைகளால் செய்யப்படுகின்றன. சரி துயிலுங்கள். பாட்டியும் துயிலவேண்டும்.''

குழந்தைகளின் மூச்சொலி எழுந்தபின் கண்ணகி மென் குரலில் ''அம்மா'' என்றாள்.

''சொல் கண்ணே'' என்றாள் மூதன்னை.

''வாடும் பொருளிலா தாலிசெய்தார்கள் அன்று?''

அன்னை சற்றுநேரம் அமைதிகொண்டு ''அன்பு ஒவ்வொரு நாளும் புதுத்தளிரும் பூவும் விட்டு என்றும் இருக்க முடியுமே அம்மா ?'' என்றாள்.

''ஆம், அன்பு இருக்க இயலும்.'' என்றாள் கண்ணகி ''அன்பு மட்டுமே இருக்க இயலும்.''

இருளில் இருந்து மருகியின் குரல் ''கற்பு இருக்க இயலாது. பொறை இருக்க இயலாது'' என்றது.

புலர்காலையின் முதற்சேவல் சிறகடித்தெழுந்து பாகற் கொடி படர்ந்த கூரை மீதேறி முரசறைந்து எக்காள ஒலியெழுப் பியதும் ஊரெங்கும் சேவல்கள் ஆர்த்தன. அவ்வொலியில் எல்லா இல்லங்களிலும் பெண்டிர் 'சிவா' என்ற ஒலியுடன் துயிலெழுந்து தாங்கள் இரவு அணிந்த ஆடைகளுடன் நீராடும்பொருட்டு நீர்த் துறைகளுக்குச் சென்றனர். ஊருக்குப் பின்னால் மருதி அம்மன் ஆலயத்தருகே பெண்டிர் நீராடும் நீராழியில் இருண்ட குளிர்ந்த நீர் புன்னைமரப்பூக்கள் படர்ந்து சிற்றலைகள் விரியக் கிடந்தது. தங்களுக்குள் உரையாடியபடி கூட்டம்கூட்டமாகப் பெண்டிர் வந்து குளிர்ந்த பாசிபடிந்த கற்படிகளில் கால்வைத்து இறங்கி 'பணிக சிவம்' என்று மூச்செழுப்பி நீருள் மூழ்கி நீராடினர். ஆண்கள் கூட்டம் கூட்டமாக வேம்புக்குச்சி ஒடித்துப் பல் துலக்கியவாறு சிவா லயத்துப் பெருங்குளத்துக்குச் சென்றனர்.

கண்ணகி மூதன்னையும் அவள் குலப்பெண்களும் துணை வர நீராழிக்குச் சென்று குளிர்நீராடினாள். புன்னைமலர்கள் ஒட்டி யிருந்த அவள் கூந்தலை ஓர் இளம்மருமகள் துவட்டி விட்டாள். மருதி அம்மன் செவ்வாடை அணிந்த சிறுகல்லுருவமாக ஓங்கிய பேராலின்கீழ் அமர்ந்திருந்தாள். முதலில் நீராடிய ஒரு முதியவள் கல்லகலில் எண்ணையிட்டுச் சுடரேற்றினாள். மற்ற பெண்டிர் கை கூப்பி வணங்கி அன்னையின் பாதங்களில் இருந்து நறுமஞ்சள் துள் தொட்டு நெற்றியிலிட்டுக் கொண்டனர். ஆலமரத்தின் இலைகளின் வழியாக ஆறுபோல ஒலித்துக் காற்று சென்றபோது கண்ணகி குளிர் கொண்டு உடலை இறுக்கிக்கொண்டாள். அது மருதியின் குரல் என்றாள் மருமகள் கோதை.

குலப்பெண்டிர் தங்கள் மூதன்னையர் துணையின்றி நீராட வரும் வழக்கமில்லை. முன்பொரு நாள் தனியாக நீராடும் பொருட்டு அன்னையர் அறியாமல் ஒரு கன்னி நீராழிக்கு வந்து நீராடினாள். அவளை ஆலமரத்து உச்சியிலிருந்து விஞ்சையன் ஒருவன் கண்டான். நீரில் ஒரு தவளையாக ஆகி அவள் உடலைத் கொற்றவை

தழுவினான். அவள் இல்லம் திரும்பியபிறகு ஆரிய இளையோன் வடிவெடுத்து அவள் வீட்டுக்குச் சென்று அவள் தந்தையும் தமையர்களும் இருக்கையில் அவளைப் பெண் கேட்டான். தங்கள் தொன்னூல் வகுத்த எண்வகை மணங்களில் காந்தருவ முறைப்படி தங்கள் மணம் நிகழ்ந்துவிட்டதென்று சொன்னான். அதற்குச் சான்றாக அவள் உடலில் கணவனும் நீரும் மட்டுமே காணும் அடையாளங்களைத் தான் சொல்லமுடியுமென்று வாதிட்டான். மன்று கூடி அவன் கூற்றைக் கேட்குமென்று அவள் குலத்தோர் சொன்னார்கள்.

தன் நெறிக்குப் பழி வந்ததை அறிந்து அவள் அழுதாள். அன்னையர் கேட்டபோதெல்லாம் தான் ஒன்றும் அறியவில்லை என்றே சொன்னாள். இரவெல்லாம் அழுதுவிட்டு மன்றம் கூடும் நாள் புலர்காலைக்கு முன்னரே எழுந்து எவரும் அறியாமல் நீராழியில் விழுந்து உயிர் துறக்கும்பொருட்டு சென்றாள். அது முதல் மலரில் முதல் இதழ் அவிழும் பருவம். மருதநிலத்தை ஆளும் ஏழு மாருதர்களில் ஒருவன் அவளைக் கண்டான். இனிய சிறுவனாக அவள்முன் தோன்றி அவள் கோரும் அருளென்ன என்றான். மன்றச் சோதனையில் தன் உடல் அடையாளங்கள் மறைய வேண்டும் என்று கோரினாள். அவ்வண்ணமே ஆகுக என்று அவன் சொன்னான்.

மன்றச்சோதனையில் மூதன்னையர் எழுவர் முற்றும் மூடிக் கொண்டுவரப்பட்ட அவளைத் தனியறைக்குக் கொண்டுசென்று அவள் ஆடைகளைக் களைந்தனர். அங்கே அவள் உடல் தடமேதும் இல்லை. வெறும் காற்றே இருந்தது. அன்னையர் அஞ்சி வந்து கூவ விஞ்சையன் அக்கணமே மறைந்தான். விஞ்சையன் தீண்டிய உடலை மீண்டும் பெற மருதி விரும்பவில்லை. மாருத வடிவெடுத்து நீராழிக்கரைப் பேராலில் குடியேறினாள். இரவின் அமைதியிலும் பகலின் மயக்கத்திலும் ஆலமரத்து இலைகளில் அவள் குரலை ஊரார் கேட்டனர். ஆலமரத்தடியில் அவளைத் தெய்வமாக அமர்த்திப் பூசனை செய்தனர். மள்ளர்குலப் பெண்டிருக்கு விஞ்சையரிடமிருந்தும் விண்ணவர்களிடமிருந்தும் அவளே காப்பு என்று வணங்கினர்.

கதை சொன்ன கோதை காற்று சுழன்ற கிளைகளை ஏறிட்டு நோக்கி "எங்கள் குலத்தில் எல்லாப் பெண்களும் விரும்புவது காற்றாக மாறி விடுவதைத்தான். இந்த உடல்தான் எத்தனை சுமை. எத்தனை அழுக்கு. ஒவ்வொரு மாத்திரைதோறும் இதன் எடை ஏறி வருகிறது. இது பட்ட இடமெல்லாம் தீட்டாகிறது. இதைத் தொட்டவை எல்லாம் தீட்டாகின்றன. எண்ணங்களிலும் இதைச்

சுமந்தலைய வேண்டியிருக்கிறது'' என்றாள். ''மாதவிடாய் கொண்டு என் உடல் அழுக்குறும்போது அதற்கான புறமாடத்தில் தனிமையில் அமர்ந்து சிறிய இடைவெளி வழியாக இலைகளைத் தழுவிச்செல்லும் காற்றையே நோக்கியிருப்பேன். காற்று எங்கும் செல்லலாம். எதையும் தழுவலாம். நீரும் நெருப்பும் மண்ணும் விண்ணும் அதற்கு ஒன்றுதான்... அதற்குத் தடைபோடச் சிறையே இல்லை.''

அன்று காலை ஆலயம் தொழுது கோவலன் வந்தபின் மள்ளர்குல மூத்தாரிடம் விடைபெற்று மூவரும் ஏரிக்கரை மீதேறி மறுபக்கம் சென்றனர். ஏரியின் மறுபக்கம் நிறைந்தொழுகிய ஓடைக் கரை வழியாக நடந்தபோது களமர்களின் மண்ணோடு சேர்ந்து அமைந்த கருகிய புதர்க்குவைபோன்ற புற்குடிசைகளைக் கண்ணகி கண்டாள். அங்கே மண்ணும் புண்ணும் படிந்த உடல்கொண்ட குழந் தைகள் சேற்றில் மீன்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன. சில குடில்கள் முன்னால் பெண்கள் அமர்ந்து சருகு குவித்துக் கிழங்கு களைச் சுட்டுக் கொண்டிருந்தார்கள். குழந்தைகள் கூடி நின்று கூவிச் சண்டையிட்டன.

வானம் மெல்லக் கருமைகொண்டு திரண்டு எழுந்தபோது கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் ஒரு நீர்மருதத்தின் அடியில் ஒதுங்கினார்கள். ''மருதத்தில் மழை ஒய்வதில்லை. முதுசேம்பின் இலைகொண்டு குடைபிடித்துச் செல்லவேண்டியதுதான்'' என்றாள் கவுந்தி. கோவலன் வயலில் இறங்கி சேற்றுச்சதுப்பில் காட்டு யானையின் செவிகள்போல ஆடிநின்ற முதுசேம்பின் இலைகளைத் தண்டுடன் பறித்துவந்தான். அவற்றை குடையெனச் சூடி அவர்கள் சற்றே நடப்பதற்குள் வெகுதொலைவில் பெரும்பறவைக் கூட்டம் ஒன்று வருவதுபோல மழை வந்து அவர்கள்மீது நடந்து தாண்டிச் சென்றது. சாரலுக்கு ஏற்ப இலையைப் பிடிக்கும் முறையைக் கோவலன் கண்ணகிக்குக் கற்றுக் கொடுத்தான். மழையின் பெருந் துளிகளில் சேற்றில் சிற்றகல் சுடர்கள்போலச் செந்நிறத்தில் நீர் துள்ளுவதைக் கண்ணகி கண்டாள். பாதையின் குறுக்கே நீர்க்கோலி நெளிந்தோடியது. வயல்களுக்கு மேல் மழையெழினி சரிந்தாடக் கொட்டும் மழையில் வானம் எப்படியிருக்குமென முதல்முறை யாகப் பார்த்தாள். சாம்பல் நிறக்கூரைபோல.

நீலி அவள் கரங்களைப் பற்றி ''நீ காணும் முதல் மருத மழை இது'' என்றாள். ''மருதத்தில் வானமும் ஒரு சேற்றுவயலாகிறது என்று சொல்வதுண்டு. உனக்கு மழையைப் பார்க்கும் ஒரு விழியை அளிக்கிறேன் . எந்த விழி தேவை என்று சொல்.''

"எத்தனை நாள் எப்படிக் கொட்டினாலும் மழையை ஒருகணம்கூட வெறுக்காத ஓர் உயிரின் கண்'' என்றாள் கண்ணகி.

"நீ கேட்பது தவளையின் பார்வை'' என்று நீலி சிரித்தாள். கோரை படர்ந்த பாதி விளிம்பில் இருந்த பெரிய தவளை ஒன்றின் துறித்த கண்களைச் சுட்டி "இனி உன் விழியில் அதன் நோக்கு'' என்றாள்.

கண்ணகி மறுகணமே மழை ஒரு பெரும் உருளையாகத் தன்னைச் சூழ்ந்துகொள்ளக் கண்டாள். அந்நீர் உருளையைச் சற்றும் தலைதிருப்பாமல் முழுக்க காணமுடிந்தது. மண்புழுக்கள் நீர்புகுந்த துளைகளில் இருந்து நெளிந்து வெளிவருவதை, நாணல் நுனிகளில் விழித்த கண்களுடன் பச்சைப்பூச்சிகள் ஒவ்வொரு துளிக்கும் ஊசலாடுவதை, புல் பூங்கொத்துகளில் வெண்மணிகள் செறிந்து சொட்டுவதை, இலைநுனிகள் தாழ்ந்து தாழ்ந்து எழுந்து உதிர்ப்பதை, சிறகுகளை உடலோடு ஒடுக்கி கழுத்திறுக்கி அமர்ந்திருந்த பறவைகளை, மரங்களின் இன்னும் நனையாத மறுபக்கங்களை, கரையாத எறும்புப் புற்றுகளைக் கண்டாள்.

வாழையிலைகள் பளபளத்து அசைய, தென்னையோலைகள் ஓடும் புரவி வாலெனச் சுழல, மழைக்காற்று சுழன்று சென்றது. செம்மண்ணும் கருமண்ணும் கலந்த நீரோட்டங்கள் இழைபிரிந்து மெல்லக்கலந்த ஓடைகளில் உதிர்ந்த மலர்கள் முட்டி, இணைந்து, ஒதுங்கிப் புல்வலைகளில் தேங்கி, பெருகி, பின் விடுபட்டு, மிதந்து சென்று, மீண்டும் புல்லில் முட்டி, பிரிந்து, பரவி, சுழித்துச் சென்றன. சீனச் செந்துகில் நொறிபோல ஓடைநீர் வளைந்து நுரைத்துக் கொட்டியது. சேற்று நுரைமீது மணிகளெனச் செறிந்த குமிழிகள் நீர்த்துளி பட்டு உடைந்தன. ஏரியில் ஓடைநீர் உரத்துக் கூவியபடி விழுந்தது.

சொட்டி அடங்கிய பின்பு நீலி மெல்லத் தொட்ட பிறகே கண்ணகி மீண்டாள். அவள் கன்னங்களிலும் மேலுதட்டிலும் மென் கூந்தலிழைச் சிலிர்ப்புகளிலும் நீர்முத்துக்களைக் கண்ட நீலி தன் முந்தானையால் அவளை மெல்லத் துடைத்துவிட்டாள். மழையின் கனவு கண்ணகியில் இருந்து வெகுநேரம் மறையவில்லை.

மழை துளிவிட்ட பிறகு அவர்கள் மள்ளர் ஊர்களுக்கு அப்பால் சென்றுவிட்டனர். தொலைவில் ஒரு நாளங்காடி இருப்பதான அரவம் கேட்டுக்கொண்டிருந்தது. "அது கன்றும் காலியும் விற்கும் அங்காடி என்று எண்ணுகிறேன்'' என்றான் கோவலன். சேற்றுப்பரப்பில் குளம்புகள் மிதித்துப் புற்கள் நைந்து கூழாக எடைநடை செல்லும் எருமைகளைக் கொண்டுசென்றனர். மழை

கழுவிய கரிய தோல்பரப்பு மின்ன அவை பெரிய கொம்புகளை மெல்லச்சரித்து கரியவைரம் மின்னும் கண்களால் அவர்களை நோக்கின. கரிய உடலில் இரும்பு வளையங்களை நகைகளாக அணிந்த சாம்பவர்கள் இரு மள்ளர்கள் சூழத் தங்களுக்குள் சிறு குரலில் பேசியபடிச் சென்றனர்.

ஈரமுதிர்க்கும் மருதும் வேம்பும் கோங்கும் மாவும் அடர்ந்த சிறு தோப்பாக இருந்தது காலிச்சந்தை. உள்ளே சென்று ஒரு படுபரி வாங்கினால் அதிலேறி இனிவரும் பாலையைக் கடக்கலாம் என்றான் கோவலன். உயிர்கள்மீது தான் ஏறுவதில்லை என்றாள் கவுந்தி. குளிர்மழை மருதத்திலேயே கால் தளரும் கண்ணகி எப்படிப் பாலையைத் தாண்ட முடியும் என்று கோவலன் கேட்டான். சந்தைக்குள் தான் வருவது சிறப்பல்ல என்று கவுந்தி முகப்பில் நின்ற மாமரத்தடியில் வேர்மீது அமர்ந்துகொண்டாள். நீயும் இங்கே ஓய்வெடு என்று கண்ணகியிடம் கோவலன் சொன்னான். இப் பிறவியில் காண்பதும் கேட்பதும் எதுவுமே ஒழிக்க விரும்பவில்லை என்றாள் கண்ணகி.

கண்ணகியுடன் கோவலன் உள்ளே சென்றான். மரங்களின் வேர்களில் கட்டப்பட்ட கரிய எருமைகளின் திரளால் அப்பகுதியே மழைக்கார் வானம்போலத் தெரிந்தது. ஊடே வெள்ளுடை அணிந்த மள்ளர்களும் இளஞ்செவ்வாடை அணிந்த வணிகர்களும் கூடி மழைபோல ஒலித்துப் பேசினர். சற்று நேரம் கழித்துத்தான் அங்கே சாம்பவர்களையும் விலை கூறி விற்கிறார்கள் என்பது கோவலன் எண்ணத்தில் பட்டது. பரத கண்டமெங்கும் உரிமை மாக்களை விற்பதும் வாங்குவதும் தொல்வழக்கமெனக் கோவலன் அறிந்திருந்தான். கருந்தோல் கடுந்தொழில் உரிமை மாக்களை வடநாட்டு வணிகருக்கு விற்று அனல்நிறம் கொண்ட வடநாட்டு உரிமை மகளிரைப் பெற்றுக் கொண்டுவந்து மன்னர்களுக்கும் தலைவர்களுக்கும் தென்னாட்டு வணிகர் விற்பதும் நெடுநாள் மரபு. ஆயினும் கூலவணிகர் குலமான அவர்களுக்கு அது இழிதொழிலாகவே இருந்தது. எந்நிலையிலும் மாசாத்துவான் பெருங்குலம் அதைச் செய்ததோ எண்ணியதோ இல்லை. கோவலன் ஓர் உரிமை வணிகத்தைக் காண்பதும் அப்போதே.

மழையருவி விழும் மலைமரங்கள்போல உள்ளம் அதிரக் கோவலன் உரிமைச்சந்தையைச் சுற்றிவந்தான். கொடுமரவேர்களில் அமர்ந்த சாம்பவர்கள் வெள்விழிகள் மின்ன எதையுமே அறியாமல் அமர்ந்திருந்தனர். உயர்ந்த தலைப்பாகையும் நொறிமடிப்புகள் பரவிய மெய்ப்பையும் கச்சும் அணிந்த வணிகர்கள் அவர்களை

எழச்சொல்லி மார்புகளையும் கைகளையும் சரிநோக்கி விலை கூறினர். விற்கப்பட்ட சாம்பவர்களை இடையில் இரும்புப் பட்டை கட்டிச் சங்கிலிகளில் பிணைத்துக் கூட்டம் கூட்டமாகக் கொண்டு சென்றனர். அவர்களைக் காவிரிக்குக் கொண்டுசென்று படகுகள் மூலம் நாகப்பட்டினத்திற்குச் செல்வார்கள் எனக் கோவலன் அறிந் திருந்தான். நீண்ட நெடுங்காலமாகவே நாகப்பட்டினமே உரிமை வணிகத்துக்குரிய மையமாக இருந்தது. கங்கைக்கரையில் காடழித்து வயலாக்கப்படும் இடங்களில் உழைக்கச் சேற்றுநிலத்தின் சுவடுகள் அறிந்த மக்கள் மிகவும் தேவைப்பட்டனர்.

சாரணர் பள்ளிகள் பெருகுந்தோறும் புகாரிலும் கோழி யூரிலும் கும்பநகரியிலும் மரைக்காட்டிலும் மயில்துறையிலும் உரிமைவணிகம் ஒழிந்தது. ஆனால் மள்ளர் ஊர்களில் வேளாண் மைக்கு உரிமைச்சுற்றம் இன்றியமையாததாக இருந்தது. அதை விலக்கி நல்லுரை சொல்லும் சாரணரையும் துறவோரையும் மருத நிலமக்கள் தங்கள் ஊர்களுக்குள் விடவில்லை. கோழியன் கோப் பெருஞ்சோழன் ஆட்சியில் உரிமை வணிகத்தைத் தடைசெய்து அரசமுரசம் அறிவித்தபோது மருதநிலங்களில் மள்ளர்குலத் தலைவர்கள் கூடி மன்னனை எதிர்த்துத் தங்கள் குலக்கொடிகளைக் கோயில்களில் ஏற்றினார்கள். எண்ணூறு வேளிர்குலங்கள் கோழியன் ஆந்தை என்பவன் தலைமையில் மரைக்காட்டில் கூடிச் சோழன் அளித்த அரசஇலச்சினைகளைத் துறந்தார்கள். பின்னர் மரைக்காட்டு அந்தணர் வழியாகக் கோப்பெருஞ்சோழன் முறை நெறி பேசினான். அதன்படி வருடத்தில் ஒருமாதம் மட்டும் அறு வடை முடிந்தபிறகு தனிச்சந்தைகளில் குழந்தைகள் பெண்டிர் தவிர்த்து இழிசினர் மக்களை மட்டும் உரிமை மக்களாக விற்கலா மென சோழன் ஆணையிட்டான்.

காரான்களன்றிச் சந்தையில் வேறு எந்த விலங்கும் விற்கப் படவில்லை. புறவணிகர் இருவர் கோவலன் ஆடைநுனியைப் பற்றி இழுத்து எருமையை வெல்லும் திறன்கொண்ட சாம்பவர்மக்கள் இருப்பதாகவும் இரு கழஞ்சு விலை குறைத்தே தருவதாகவும் சொன்னார்கள். கோவலன் கைவீசி அவர்களைக் கடிந்து கண்ண கியைத் தன்னுடன் சேர்த்து வெளியேறினான். அவனுடல் நடுங்கு வதைக் கண்ணகி உணர்ந்தாள். வெளியே வந்ததும் கவுந்தி எழுந்து அவர்களை வரவேற்றாள்.

கோவலன் கண்களில் நீர் வரக் கூறினான். ''அன்னையே, அறச் சாரணர் நெறிகள் இன்னமும் நம் நான்கு நிலங்களையும் தீண்டவில்லை போலும். மன்னர் திறம் கொண்டு நம் அறம்

நகரங்களிலேயே நின்றுவிட்டது.''

''அறம் நீரோட்டம்போல. நாம் அதைக் கொண்டு செல்ல வில்லை. நம்மை அது இழுத்துச் செல்கிறது'' என்றாள் கவுந்தி.

கோவலன் உரத்தகுரலில் ''அறத்தின் நெறி இவ்வேழை களைத் தீண்டவில்லையென்றால் அதனால் என்ன பயன்?" என்றான்.

கவுந்தி ''அருகனின் பாதம் சில இடங்களில் மெல்ல நடக் கலாம். ஆனால் இங்கும் அது ஒருநாள் வரும்'' என்றாள்.

கோவலன் பெருமூச்சுகள் விட்டபடி விரைவாக நடந்தான். உடன் நடந்த கண்ணகியிடம் ''உன்னை நான் அவ்விடத்துக்குக் கொண்டு சென்றிருக்கலாகாது. உன் மெல்லிய உள்ளம் அக்காட்சி களை எப்படித் தாங்கும்?'' என்றான்

கண்ணகி குனிந்தபடி ''அவை எனக்கு பெரிதாகப் பொருள் படவில்லை'' என்றாள்.

கோவலன் நின்று "ஏன்?'' என்றான். அவன் விரல்கள் நடுநடுங்கின.

"நான் அக்களமர் குலப்பெண்டிரை எண்ணிச் சற்றே ஆறுதல் கொண்டிருந்தேன். அவர்கள் தங்கள் ஆண்களை நம்பி வாழ வில்லை. ஆகவே இவர்கள் விற்கப்படினும் அவர்கள் இழப்பதும் ஏதுமில்லை'' என்றாள் கண்ணகி .

கோவலன் ஓர் இமையிடை நின்றான். மூச்செழ ஏதோ சொல்லவந்து பின் முன்னே நடந்தான். கண்ணகி திரும்பியபோது நீலியின் கண்களின் புன்னகை கூர்வாள் நுதியென அவள் கண்களைத் தொட்டு மீண்டது.

ஞ

கோவலன் முன்நடக்க கண்ணகியும் நீலியும் பின்நடக்க மாலை அணைவதுவரை ஓய்வறியாது சென்றனர். தெளிநீர் ஓடைகளில் நீர் அருந்தியும் குறுங்காடுகளில் சிறுபழங்கள் பறித்து உண்டும் களைப்பாறினர். மள்ளர் ஊர்களும் கள்ளர் சேரிகளும் இடையிடை கலந்துவந்தன. மேலைச்சரிவில் பரிதிவட்டம் சிவந்த போது தொலைவில் பெருமுரசம் ஒலிக்கக் கேட்டான் கோவலன். அவன் முகத்தில் மெல்லிய புன்னகை மலர்ந்தது. "விழவறையும் ஒலி. இளவேனில் காலம் என்றால் மள்ளர் ஊர்களில் கள்ளொழுகும் என்பர்" என்றான்.

ஒரு நொடிநேரத்திற்குள் அவன் உள்ளத்தில் புதைந்துகிடந்த மகிழ்நன் முளைத்துக் கிளைத்து பசுமைகொண்டு விட்டதைக் கண்ணகி உணர்ந்தாள். அவள் உள்ளம் சற்றே அமைதி கொண்டது. கோவலன் தன் களிமுகத்தைக் கைவிட்டது முதல் முகமேயற்றவனாக இருந்தான். துறவோரைக் காண்கையில் பணிவும், தனிமையில் அச்சமும், இல்லத்தார் முன்னிலையில் முதிர்வும் என அவன் மாறிக்கொண்டே இருந்தான். அவனது அசைவுகள் நாடகம் போலவும் பேச்சுகள் நூலுரைகள்போலவும் இருந்தன.

"மள்ளர் விழவைக் கண்டு செல்வோமே" என்றாள் கண்ணகி.

"அறநெறி அன்னை உடனிருக்க அங்கே செல்லலாகாது" என்றான் கோவலன்.

"எங்கும் அறிவனின் நற்சொல்லைச் சொல்ல இயலுமே" என்றாள் கவுந்தி.

விழவுக்களம் அணுகும்தோறும் அத்திசை நோக்கி மார்பிலும் தலையிலும் மலர்மாலைகளும் தளிராடையும் அணிந்த மள்ளர் கள்ளுண்ட களியில் ஆடியும் பாடியும் கூடிச்சென்றதைக் கண்டனர். இளம்பரத்தையர் இருவருடன் நடனமிட்டுச்சென்ற களிமகன் ஒருவன் கண்ணகியை நோக்கி வெண்பல் காட்டி நகைத்தான். பரத்தையரை இழுத்துக்கொண்டு அவர்களிடம் வந்து "அன்னையே

இவர்கள் யார்? முன்னைநாள் அயோத்தி நகராண்ட இராமனும் சீதையும் போலிருக்கின்றனரே?'' என்றான்.

கவுந்தி "என் மக்கள் இவர்கள்'' என்றாள்.

களிமகன் உரக்கச் சிரித்து பரத்தையரை ஆரத்தழுவி "உம் மக்கள் என்றால் உடன்பிறந்தார்கள் அல்லவா? உடன்பிறந்தார் உறவுகொள்ளும் முறையுள்ள குலம் எது ?'' என்றான் .

அவனருகே நின்ற பரத்தை சிரித்து "அவள் நல்ல பரத்தை. நீ முதுபரத்தையோ?'' என்றாள்.

கவுந்தி எழுந்தாள். கண்ணகி அவளையே நோக்கித் தனக்குள் மென்முறுவல் கொண்டாள். கோவலன் "அன்னையே இவர் களுடன் உரையாடுதல் தகாது. நாம் செல்வோம்'' என்றான்.

அவர்கள் சற்றே சென்றதும் பின்னால் சிரித்து நின்ற களி மக்களை நோக்கி நீலி மெல்லத் திரும்பினாள். அப்போது அவள் தோற்றத்தைக் கண்ட களிமக்கள் மூவரும் அச்சத்தில் குளிர்ந்து வாய் திறந்து சிலைபோல நின்றனர். பரத்தை ஒருத்தி நெஞ்சு கிழிபடும்படி அலறித் தளர்ந்து விழுந்தாள். களிமகன் நரிபோல ஊளையிட்ட வனாக முள்காடுகளைத் தாண்டி ஓட பிறிதொரு பரத்தை அவனைத் தொடர்ந்து அலறியோடினாள்.

கோவலன் கைகூப்பி "அன்னையே எங்கள் பொருட்டு இப்பெரும் தண்டனையை அவர்களுக்கு நீங்கள் அளித்திருக் கலாகாது'' என்றான்.

"நீங்கள் என் மக்கள் அல்லவா?'' என்றாள் கவுந்தி.

நாற்சதுக்கம் ஒன்றில் பெரும்பந்தங்கள் எரிந்தன. அங்கே ஊர் மள்ளர் குழுக்களும் உப்பு விற்க வந்த உமணர் குழுக்களும் சந்தைக்கு வந்த வடவணிகர் குழுக்களும் அவர்களைத் தேடிவந்த பரத்தையரும் ஊனுணவு விற்பவர்களும் அகிலும் சந்தனமும் நறுஞ் சுண்ணமும் மிரியலும் தேனும் விற்பவர்களும் நிறைந்திருந்தனர். அப்பால் இருள் பரவிய மரத்தடிகளில் மரம் குடைத்த பெருங் குடுவைகளில் நுரைத்த கள்ளுடன் படுவர் மகிழ்நரைக் கூவி அழைத் தனர். சுற்றியுள்ள வயல்வெளிகளிலிருந்து வரும் பூச்சிகளைத் தடுக்க நறைவிரை எரித்து நறும்புகை போடப்பட்டதனால் முகில் நடுவே விஞ்சையரும் கந்தருவரும் நடமாடுதல் போலிருந்தது அக் காட்சி.

சதுக்க நடுவே கல்மேடைமீது துணங்கியன்னையின் தலை மட்டுமே கொண்ட கற்சிலை கண்விழித்து நின்றது. கோவலனும் கவுந்தியும் கண்ணகியும் அதனருகே சென்று வணங்கினர். அதற்குப்

கொற்றவை

பூசை செய்த பண்டாரம் துணங்கியன்னையின் பூசைக்கு ஆடுகள மகளிர் அன்றி எவரும் வரும் வழக்கமில்லை என்றார். ''இவர்கள் அறிவனின் நெறி சேர்ந்தவர்கள். என் மக்கள்'' என்றாள் கவுந்தி. அவள் குரலைக் கேட்டு அவளை ஏறிட்ட பண்டாரத்தின் முகத்தில் பேரச்சம் சூழ்ந்தது. அவர் கையின் தாலம் நடுங்க நீறு விரிசலிட்டு இரண்டாகியது.

இன்னியரும் இயவரும் துணைவர பெரும்பறைகள் முழங்க துணங்கையாடும் கூத்தர் குழுவினர் நிரையாக வந்தனர். பதினெட்டு ஆண்களும் பதினெட்டுப் பெண்களும் உடலெங்கும் கரிபூசி உதடுகளுக்கும் கண்ணுக்கும் செந்நிறமளித்துக் குருத்தோலையையும் செவ்வரளி மலர்களையும் மட்டுமே ஆடையாக அணிந்து காலிலும் கைகளிலும் சலங்கை அணிந்து அசைந்தாடி வந்தனர். முரசுகள் ஓய முழவுகள் விளம்ப தாளம் கொள்ள அவர்கள் தங்கள் கைகளை மடித்து இடைகளில் சேர்த்து கால்களைப் பின்னால் தட்டி இளங் காற்றிலாடும் புதர்கள் போலச் சுற்றிவந்து ஆடினர். பல்லியத் தாளம் மேல்விளக்கம் கொள்வதறியாமல் மேலெழ மேலெழ உடல் களின் அசைவுகள் புயல்பட்ட காடுபோலவும் அருவி வீழும் மரம் போலவும் துடித்தாடின. கைகளைத் தாளத்துக்கேற்ப உடலில் தட்டியபடி சுழன்றாடிய கூத்தர்கள் ஒற்றைப்பேருடலாக, ஒரே அசைவாக மாறினர். பின் அவர்களைக் காண்பவரும் ஆடுவதறி யாமல் ஆடினர். அப்பகுதியெங்கும் தாளம் எழுப்புபவரும் ஆடுபவரும் பார்ப்பவரும் பந்தங்களின் சுடர்களும் நிழல்களும் இணைந்து உருவான தழுவணிப் பெருஞ்சுழல் மட்டுமே இருந்தது.

முரசதிர முதல் கூத்து முடிந்ததும் கூத்தர்கள் அரியல் தேடிக் கூவியபடி ஓடினர். கள்வெறியைத் தாளத்தில் இழந்த களிமகன்கள் கூடச்சேர்ந்து ஓடினர். பரத்தையரின் உரத்த நகைப்புகளும் சலங்கை ஒலிகளும் இருளெங்கும் கேட்டன. மீண்டும் முரசெழ இரண்டா வது துணங்கையாட்டத்துக்கான கூத்தர் பச்சைத் தழையாடை அணிந்து நீலவண்ணம் பூசி வந்து ஏழு பேர் வீதம் வரிசையாக ஒருவர் பின் ஒருவராக நின்றனர். தோல் வாரிட்ட உறுமியும் அதிரும் பெரும்பம்பையும் மெல்லிய குரலெழுப்பத் தொடங்கின. தொலை தூரக் கடலோசைபோல. பாறைகளில் அறைந்து தலை உடைத்து மீளும் அலைகள்போல. கூத்தர் கரங்களைத் தலைமீது தூக்கி உடலையும் கையையும் அலையலையாக நெளித்து மெல்ல ஆடினர். உறுமியின் ஓசை பொங்கொலி கொண்டெழுந்தது. அலை கள் குமுறியெழுந்து பாறைகளில் மோதின. நீலம் கொந்தளித்து புதுநுரை பொங்கி எழுந்தது.

கண்ணெதிரே நுரைகக்கிப் புரண்டெழுந்துவரும் நீலப்பெருங் கடல் அலைவெளியைக் கண்ணகி கண்டாள். வெண்குஞ்சி பாறப் பாயும் புரவிகள், வெண்தந்த மத்தகத்துடன் துதிக்கை தூக்கும் வேழங்கள், அவற்றுக்குமேல் சிறகடிக்கும் பல்லாயிரம் வல்லூறுகள். உறுமியும் பம்பையும் ஒன்றாக ஓங்கிக் கூவ கூத்தர் உடல்கள் துள்ளி விழுந்து துள்ளி விழுந்து அலை கொந்தளிக்க கண்ணகி காற்றில் பறக்கும் கூந்தலுடன் விழித்த கருவிழிமலர்களுடன் நோக்கி நின்றாள். பின்பு ஓசை மெல்ல அடங்க அலைகள் பின்னகர்ந்து தரையில் படிந்தன. மண்ணோடு முகம் சேர்த்து விழுந்த கூத்தர்களின் நீல முதுகுகளின் நிலைத்த சிற்றலைகள் நடுவே அஞ்சலும் அருளும் காட்டிக் குறுநகை பூத்து ஒரு கூத்தரிளம்பெண் மட்டும் நின்றாள். அவள் கூந்தல் காற்றில் அலைபாய்ந்தது, கண்கள் மலர்ந்திருந்தன.

மீண்டும் முரசுகள் முழங்க கூத்தர்கள் கூவியபடி கள்ளுண்ண ஓடினர். பரத்தையர் புதிய காதலர்களைத் தேடி மை கலைந்த கண்களுடனும் தோள்நழுவிய கச்சுகளுடனும் கள்வெறி கொண்ட கண்களுடனும் அலைந்தனர். கோவலன் ''இரவு ஏறிவருகிறது. நாம் போகலாம்'' என்றான். அவர்கள் சதுக்கம் விட்டு வெளியே வந்து பெரும்பாதையை அடைந்தனர். ''இன்றிரவு நாம் ஏதாவது மரத்தடியில் துயில்வதே சிறந்தது'' என்றான் கோவலன். ''விழா நாளன்று மள்ளர் இல்லங்களில் முதியவரும் பெண்டிரும் மட்டுமே இருப்பர். அவர்கள் அயலவரை ஏற்கத் தயங்கக்கூடும்.''

அப்பாதையில் ஓரமாக நின்ற பேராால மரத்தின் வேர்களின் மீது அவர்கள் அமர்ந்தனர். கோவலன் இலைகள் கொய்து கண்ணகிக்கு சேக்கை அமைத்தான். வெறுந்தரையில் கவுந்தி படுத்தாள். கோவலன் சற்றுத்தள்ளி அமர்ந்து வானையே நோக்கினான். நெடுமூச்சுடன் எழுந்து சுற்றியலைந்தான். ஒரு மூங்கிலை ஒடித்துக் காட்டுக்கொடியில் உரித்த நாரை இழுத்துக் கட்டி மெல்ல விரல்களால் மீட்டத் தொடங்கினான். பாலையில் நீர் கண்ட விலங்கு போல அவன் விரல்கள் யாழில் திளைத்தன. அது மீட்டிய இசை அவன் உள்ளத்துக்குள் மட்டும் அலையடித்துச் சுழன்றது. செம்பாலையின் சரிவுகளிலூடே சென்று எப்போதும் யாழ் அவனைக் கொண்டுசெல்லும் இனிய பாழை அடைந்தான். அவன் கண்களில் வழிந்த நீர் உடைகள்மீது உருண்டு சொட்டியது. அப்படியே மல்லாந்து கண்மூடித் துயின்றான்.

கண்ணகியின் காதுக்குள் துணங்கையின் தாளமே ஒலித்துக் கொண்டிருந்தது. கண்களை மூடினால் நீல அலை பெருகிவந்து

கரைப்பாறைமீது அறைந்தது. புரண்டு படுத்தபோது நீலியின் கண்களைக் கண்டாள். ''நீ துயில்வதில்லையா?'' என்றாள். செவ்வரிக் கண்களுடன் நீலி புன்னகைத்தாள்.

கண்ணகி எழுந்தமர்ந்தாள். அம்மரத்தடியில் சற்று அப்பால் வேர்களுக்கு நடுவே சிறு கற்பீடத்தின்மீது நாகங்கள் பதிட்டை செய்யப்பட்டிருந்தன. மஞ்சள்சாந்து பூசப்பட்ட அவற்றின் பெரும் படங்களின்மீது விழித்த கண்களுடன் தலைகள் வாய் திறந்திருந்தன. எண்ணைக்கரி படிந்த கல்லகல்களுக்கு அருகே பால் ஊற்றப்பட்டு உலர்ந்து நெய்விழுக்கு ஏறிய கல்தகடுகள். கண்ணகியின் பார்வையைக் கண்ட நீலி ''அவை நாகர்களுக்கான பூசனைகள். இந்த மண்ணில் அவை பல்வேறு வடிவில் நிறைந்திருக்கின்றன. நாகம் துணையில்லாத தெய்வமே இப்போது எங்கும் இல்லை'' என்றாள்.

கண்ணகி நெடுமூச்செறிந்து ''அவற்றின் பார்வையை நான் நன்கறிவேன் என்று தோன்றுகிறது'' என்றாள்.

''ஆம். மண்ணில் ஒவ்வொருவரும் நாகங்களின் பார்வையை அறிவார்கள். குன்றாப்பெரு விழைவின் வடிவான நாகங்கள் மனிதர்கள் வாழும் மண்ணுக்கு அடியில் இருண்ட வளைகளினாலான உலகில் நிறைந்து பரந்திருக்கின்றன'' என்றாள் நீலி. ''நீ நாகனைப் பார்க்க விரும்பினால் உன் கைவிரல்களிலேயே காணலாம்'' என்றாள்.

கண்ணகி கோபத்துடன் ''நீ என்னுடன் விளையாடுகிறாய்'' என்றாள்.

நீலி ''ஒவ்வொரு உயிரின் உடலிலும் நாகங்கள் உண்டு. செடிகளில் தண்டு. மலர்களில் காம்பு. மரங்களில் விழுது. மிருகங்களில் வால். மனிதர்களில் பாம்புவிரல்... பாம்பைக் கனவு காணாத உயிர்கள் ஏதுமில்லை. கண்ணொளிர ஓசையின்றி ஊர்ந்து இரவை நிறைப்பவை அவை.''

''இல்லை. என் கனவில் அவை வருவதில்லை'' என்றாள் கண்ணகி வேறுபக்கம் திரும்பி.

''நாகர்கள் வேர்களினாலான தலைகீழ்க் காட்டில் வாழ்பவர்கள். மண்ணில் உள்ள ஒவ்வொன்றும் நாகருலகில் தலைகீழாக உள்ளன. உங்கள் பொய்யே அவர்கள் மெய். உங்கள் காதல் அவர்கள் வெறுப்பு. உங்கள் வெறுப்பு அவர்கள் விருப்பு. உங்கள் இருளே அவர்கள் ஒளி'' அவள் கண்கள் மின்னின ''உங்கள் கற்பு அவர்கள் பரத்தமை.''

ஞ

கடல்விரிந்த தென்திசையில் பாய்விரித்து பயணம் செய்த சம்பாபுரியின் பெருங்கலம் ஒன்று உடைந்து எழுவர் ஒரு தீவில் கரையேறினர். காடுகள் அடர்ந்த அந்தத் தீவின் கடற்கரையில் அவர்கள் கண்விழித்துப் பார்த்தபோது பாம்புகளின் சீறல் ஒலிகள் ஓங்கிச் சுழலுவதைக் கண்டனர். அஞ்சி எழுந்தமர்ந்து எங்கும் நோக்கியபோது பாம்புகள் கண்ணில் படவில்லை. எழுந்து காடுகளைநோக்கிச் சென்று உண்பதற்கு ஏதும் கிடைக்குமா அன்று நோக்கினர். அப்போது அவர்களில் ஒருவன் அச்சத்துடன் கூவிச் சொன்னதை பிறரும் நோக்கினர். அத்தீவின் மரங்களெல்லாம் பெரும் பாம்புகள் போல வளைந்து ஒன்றோடொன்று தழுவிப் பிணைந்து சீறிக்கொண்டிருந்தன. அங்கிருந்த செடிகளும் கொடிகளு மெல்லாம் பாம்புகள்போல நெளிவதைக் கண்ட அவர்கள் மீண்டும் கடற்கரைக்கே ஓடிவந்தனர். அஞ்சிக் கடலில் குதித்தபோது சீறிய அலைகளால் மீண்டும் கரைக்கே கொண்டுவரப்பட்டனர்.

ஒருவரை ஒருவர் தழுவி மணலில் குறுகியமர்ந்து மரங் களைப் பார்த்திருந்தபோது தொலைவில் இரு கரிய பெரும்பாம்பு கள் பிணைந்து நெளிவதை ஒருவன் கண்டான். அச்சம் சற்றே அடங்கியபின் எழுந்து நோக்கிய அவர்கள் அது ஓர் ஆணும் பெண்ணும் என்று கண்டனர். அவர்கள் இருவரும் வெற்றுடல் களுடன் தழுவியும் பிணைந்தும் முத்தமிட்டுச் சீறி மணலில் புரண்டு எழுந்து விழுந்தனர். பின் அலைகளில் ஏறி நீர்விளையாடினர். அவர்கள் உடல் நாகங்களுக்குரிய வழவழப்பும் கருமையும் கொண் டிருந்தது. அவர்கள் கைகளும் கால்களும் எலும்பிலாது தனிப்பாம்பு களாக நெளிந்தன. தழுவிக் கொண்டபோது அவை ஒவ்வொன்றும் முறுக்கிப் புணர்ந்தன. கால்நுனி நீள்விரல்கள் இரு பாம்புவால்கள் போல் கூர்மைகொண்டிருந்தன. காமத்தில் அவை துடிதுடித்து முறுகின.

மூவரில் இளைய கடலோடியான மலையன்கொற்றன் அச்சத்தைப் பொருளற்றதாக்கும் உளநிலையை அதற்குள் அடைந்து

விட்டிருந்தமையால் எழுந்து நடந்து அவர்கள் அருகே சென்றான். அவர்கள் அலையாடி மீண்டு பாறையில் தழுவிக்கிடந்தபோது அவன் நிழல் அவர்கள்மீது விழுந்தது. சீறிச் சினந்தெழுந்த அப் பெண்ணின் இடக்கரம் சீறி எழ இரு விரல்களும் பிளவுண்ட நாக்கு களாக மாறி அவனைத் தீண்ட நீண்டன. மலையன் தன் இரு கைகளையும் கூப்பி மணலில் அப்பெண்ணின் அருகே விழுந்து வணங்கினான். அவள் சீற்றம் தணிந்து முகத்தில் வியப்பு பரவியது. அவள் வியப்பொலி எழுப்ப அவள் துணைவன் விழித்தெழுந்து அவனிடம் சீறும் ஒலியில் ஏதோ கேட்டான். அம்மொழி மலை யனுக்குப் புரியவில்லை. அவன் கைகளைக் கூப்பியபடி மீண்டும் மீண்டும் 'நாவாய் உடைந்து வந்தவர்கள். எளியவர்கள். பெரு நிலத்து வணிகர்கள்' என்று சொன்னான்.

சற்றே கழித்து அவன் ஒன்று அறிந்தான், அம்மக்களுக்கு அவன் மொழி புரியவில்லையெனினும் கைகூப்புவது மட்டும் புரிந்தது என்று. அவன் தன் குலத்தின் தொல்நடனங்களின் பிற உடலசைவுகளை ஒவ்வொன்றாய் நினைவுகூர்ந்து காட்டினான். அஞ்சலும் அருளலும் சுட்டலும் தடையலும் அவர்களுக்குப் புரிந்தன. அவர்கள் அதே செய்கைகளை மேலும் அழகாகக் காட்டு வதைக் கண்டான். அவ்வசைவுகள் அவர்களுடைய கைகளுக்கு மேலும் உரியதாக இருந்தன. அந்தப் பாம்பு மனிதன் தன்னைத் தொட்டு 'நாக' என்றான். அச்சொல்லைக் கேட்டதும் தன்னுள் தோன்றிய எண்ணத்தால் உந்தப்பட்டு மலையன் தன் நாவை நீட்டி 'நா' என்றான். நாகன் முகம் மலர்ந்தது. அவர்கள் மொழியிலும் அது நாவே. மார்பைத் தொட்டு மலையன் 'நான்' என்றான். நாகனின் பாம்புவிழி மின்னியது. அவன் மனித மொழியின் முதல் சொல்லைப் புரிந்துகொண்டான். மிக ஆழத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் அடையாளம்கண்டுகொண்டனர். மலையனின் தோளைத் தொட்ட நாகன் 'நாம்' என்றான்.

மலையனையும் நண்பர்களையும் நாகனும் நாகினியும் தங்கள் காடுகளுக்குள் அழைத்துச்சென்றனர். அங்கே செம்மண்ணாலான பெரிய சதுக்கம்போன்ற திறப்பில் மேலும் பல நாகர்கள் இருந் தனர். ஆடையற்ற அவர்கள் ஒற்றைக்காலில் நின்று தலைமீது இரு கைகளையும் கூப்பி இடையை மெல்ல அசைத்து நெளிந்து ஒருவரை ஒருவர் வணங்கியபோது மலையன் அவ்வசைவே தன் தொல்லா லயங்களின் படிவர்களின் வணக்கமுறையாக மீண்டும் மீண்டும் பொறிக்கப்பட்டிருப்பதை நினைவு கூர்ந்தான். அவர்களை நாகங்கள் சூழ்ந்து உற்று நோக்கிச் சீறி மகிழ்ந்தன. அவர்கள்

கைகால்களால் மரங்களையும் கொடிகளையும் சுற்றிப்பற்றியபடி காடுகளில் தலைகீழாகவும் ஊசலாடியும் நகர்வதை அவர்கள் கண்டனர். அவர்களின் குழந்தைகள் ஒரு மரத்திலிருந்து சாட்டைகள்போல பிறிதுக்குத் தாவி விளையாடின. அவர்கள் மரங்களில் பழுத்துத் தொங்கிய பழங்களைப் பறித்து அளித்தனர். ஓய்வெடுக்க சருகுச்சேக்கை அளித்துத் தந்தனர். அங்கே அவர்கள் நான்காண்டுகள் தங்கினர். நாகர் மொழியும் முறையும் கற்றுத் தேர்ந்தனர்.

நாகர்களின் குலநினைவுகளில் அவர்கள் கடல்சூழ்ந்த பெருந் தென்நிலத்தின் ஓரத்தில் வாழ்ந்தவர்கள் என்றிருந்தது. அந் நிலத்தைப்பற்றிய ஆயிரம் காட்சிகளை அவர்கள் தங்கள் கனவு களில் கண்டு வந்தனர். ஒற்றைக்கொம்பும் மானுடலும் கொண்ட மாந்தர்கள். பல்லியென மரங்களில் ஒட்டியிருந்து வாய்திறந்து சீறும் மாந்தர்கள். கடலில் இருந்து கரையோரமாக எழுந்து வந்து அமர்ந்து சிறுவிலங்குகளை உண்ணும் மீனுடல் மாந்தர்கள். கருமுடி நிரந்த உடலுடன் தரைதோயும் கைகளுடன் சிறுகருவிழி விழித்து நோக்கி உறுமும் குரங்குமாந்தர்கள். மாந்தர்களின் பலநூறு வடிவங்கள். குறிய மரங்களும் புதர்களும் நடுவே எழுந்த குன்றுகளும் நிறைந்த வெளிநடுவே ஓங்கிய கற்பாறைமீது ஒரு கால் ஊன்றிப் பதிந்த தடமொன்றிருந்தது. முழுநிலவெழும் நன்னாளில் அதன் அருகே நெருப்பிட்டுக் குரங்குமாந்தர் சுற்றி நின்று மார்பில் அறைந்து குரலெழுப்பி சுற்றிவந்து நடமிட்டனர். ஊனும் கனியும் நெருப்பி லிட்டுப் படைத்து வணங்கினர். பிற மாந்தர் வடிவினர் பாறை களிலும் மரங்களிலும் அமர்ந்து அவர்களை வியந்து நோக்கினர். அந்நிலம் நீர் பெருகி அழிந்தது என்றார் முதுநாகர் ஒருவர். ஆகவே கடலில் அலையெழுகையிலெல்லாம் நாகர் உள்காட்டுக்குள் சென்று ஓங்கிய கருங்கோடுமீதேறி அங்கே பாறைப்பரப்பில் இருந்த கன்னியின் கால்தடத்தை வணங்கி நிற்றல் வழக்கமாயிற்று.

கடல்நீரில் இறங்கி மீன்பிடித்து உண்டது போக மீதி நே மெல்லாம் நாகர்கள் இடைவிடாது புணர்ந்துகொண்டே இரு பதை கடல் தாண்டி வந்த கரைமாந்தர் கண்டனர். இரவில் தங்கள் வாயைத் திறந்து உடலுக்குள் இருந்து நீல ஒளிவீசும் நாகமணியை எடுத்துப் பாறைமீது வைத்து நிழலற்ற அவ்வொளியில் புணர்ந்தனர். அவர்களின் உடல் புணர்வதற்கென்றே உருவானது. புணர்கையில் ஒன்று பிறிதின்றி ஆவதற்கென்றேயான உடல். முத்தமிடுவதற் கென்றே நுதிவாய். உடல்தீண்டி மகிழ்வதற்கென்றே அழல்நா ஓயாது பார்ப்பதற்கென்றே மூடா விழி. இன்பத்தில் சீறுவதற்

கென்றே குரல். உச்சத்தில் துடிதுடிப்பதற்கென்றே வால்நுனி. காமமே வாழ்வாக நாகர் காலத்தைக் கடந்துசெல்வதைக் கண்டனர். அந்நிலத்தில் மெல்லமெல்ல மனம் பழகி நாகினிப்பெண்களை மலையனும் சுற்றமும் புணர்ந்தனர். காமமென்பது நஞ்சின் ஒளி யிலேயே முழுமைகொள்ள இயலுமென்றறிந்தனர்.

நாகினிகளில் மலையனும் சுற்றமும் பெற்ற குழந்தைகள் நாகவிழிகளும் தழல்நாக்கும் நெளியும் உடலும்கொண்ட மனித வடிவிலேயே இருந்தனர். மலையனின் சொற்களின் வழியாக அவர்கள் விட்டுவந்த தென்னிலம் நாகர் நினைவில் வாழ்ந்தது. தன் இறப்பின் நாட்களில் உதிரவழி வந்த மைந்தரிடம் என்றேனும் ஒருநாள் தங்கள் நாடுசென்று குலமுறை கிளத்தவேண்டுமென்று கோரினான் மலையன். அவர்களுக்குக் கலம் செய்யும் விதமும் வழியும் நெறியும் கற்பித்தான். அவன் மைந்தர்நிரையில் பத்தாம் தலைமுறைக் குழுவினர் எண்பதின்மர் தங்கள் தந்தையரின் நிலம் நோக்கிக் கலம்கொண்டு வந்தனர். காற்றில் உலைந்த கலங்கள் பாறைகளில் மோதி உடைய நீரில் எண்பது காதம் நீந்திக் கீழ்ப் பெருங்கரைக் காடுகளருகே எழுந்தனர். காடுகளில் கனிகளை உண்டு தங்கி மாந்தர்க்காகத் தேடியிருந்தனர். மலைத்தேனெடுக்க வந்த குறத்தியரைக் கண்டு அருகணைந்தனர். அஞ்சி ஓலமிட்டு அவர் கள் ஓட மரக்கிளைகளினூடாக காற்றுபோலப் பாய்ந்து துரத்தி பெரும் மலர்மாலையென அவர்கள் கழுத்தில் விழுந்து முறுகிச் சுற்றிப் புணர்ந்தனர் நாகர். நாகர்களின் குன்றாப்பெருங்காமம் பெண்டிரை வென்றது.

மலைக்குறத்தியர் மட்டுமே அறிந்த மந்தணம் அப்பெண் களின் கருவில் பிறந்து வந்தது. மின்னும் நீலவிழிகளும் பொன் னுடலும் கொண்ட மகவுகளை அவர்கள் ஈன்றனர். வடவைத்தீ போல எரிந்தெழும் பெருவிழைவே அவர்களின் வலிமையாக இருந்தது. நாகபடம் அவர்களின் பொதுக்குறியாயிற்று. கமுகின் பாளையால் செய்து நீலவண்ணம் பூசப்பட்ட நாகபட முடியை அவர்கள் தங்கள் தலைகளில் சூடினர். தலைமுறைகள் தொடர நாகர்களின் காடுகள் ஊர்களும் நகரமும் ஆயின. அது நாகநாடு என்றும் அந்நகரம் நாகபுரி என்றும் அழைக்கப்படலாயிற்று. வெல்லவொண்ணா நாகர்கள் கடலோடி தென்மதுரையுடன் வணிகம் செய்தனர். சம்பாபுரியை வணிகத்தில் வென்றனர். பெருஞ் செல்வம் குவிந்த நாகர்பட்டினத்தை விண்ணுலகுக்கு ஒப்பிடுவது அன்று தொடங்கி பின்புவரை புலவர்களின் வழக்கமாக இருந்தது. அங்கே பொன்னொளிர் மாடங்களும் கொடி பறக்கும்

விமானங்களும் விரிந்த பேராறுபோன்ற சாலைகளும் பெருங் கலங்கள் அணையும் துறையும் இருந்தன. அம்மக்களின் ஒடுங்காத காம விழைவைப்பற்றி கவிஞர்கள் பாடினர். இளையோரும் வளையோரும் இரவெல்லாம் நீரிலும் நிலத்திலும் தழுவி முயங்கிக் கூடினர். அவர்கள் புலன்களின் வலிமை எல்லையற்றது. காண்பதும் கேட்ட'தும் அவர்களுக்கு ஒன்றே. கேட்பதையெல்லாம் காணவும் காண்பதையெல்லாம் கேட்கவும் கூடிய கட்செவிகள் அவர்களுக்கு. அம்புபோலச் சீறி நச்சும் கக்கும் நாக்குகள். அவர்களை வெல்லச் சம்பாபுரியால் இயலவில்லை. யவனராலும் சோனகராலும் இயலவில்லை. நிலந்திருவென்றபாண்டியனின் பெருங் கலங்கள்கூட அவர்கள் வலிமையின் முன் தோற்றுப் பின்வாங்கின.

சம்பாபுரியைக் கடல் கொண்ட பின்னர் நாகர்களுக்குக் கீழ்த் திசையில் எதிரிகளே இருக்கவில்லை. ஆகவே அவர்கள் தென் திசைக்குப் பரவி மெல்லத் தென்னாட்டையே வென்றனர். தென் நிலத்து மலைக்குலங்களெல்லாம் நாகர்குடிகளாக மாறின. அவர்களின் குலதெய்வங்களெல்லாம் நாகமுடிகொண்டு பூசெய் பெற்றன. நாகர்களை வெல்ல இயலாத தென்நிலமாண்ட பாண்டியன் நாகர்களைப் பணிந்து நாகர்குலக்கன்னியை மணந்தான். தென்நிலத்துப் பெருங்குலங்களிலெல்லாம் நாகர்கள் மணம் கொண்டனர். அவர்கள் தெய்வங்களுக்கெல்லாம் நாகம் அணியாயிற்று. வேலன் அதைத் தன் மயிலின்மீது அணியாக்கினான். வேழமுகன் அதைத் தன் இடைவடமாக அணிந்தான். செம்பொன் மேனியன் அதைத் தன் கழுத்தில் ஆரமாக்கினான். மணிவண்ணனோ அதில் பள்ளிகொண்டான். காலம் செல்கையில் நாகர்களின் நகரம் பொலிவிழந்தது. எனினும் ஒரு பெருந்துறையாக நெடுநாள் இருந்தது. பின்பு அதைக் கோழியர் கைப்பற்றினர். சோழர்களின் துறைமுகமாக அது மாறியது.

அறிக, நாகத்தின் நச்சில்லாத தமிழ் உதிரம் இல்லை. நாகங்கள் மாந்தர் உடலில் உறைகின்றன. விரல்களில் அவர்களின் கடும்நச்சுப் பற்கள் உள்ளன. நாகங்களுக்குரிய மறைவேளையில் ஒளிந்துள்ள நச்சு எழுகிறதென்பார் மருந்தறிந்தோர். தன்னிலையழிந்து புணரும் போது தன்னுடல் நாகமாவதை அறியாத இளையோர் இல்லை. விழைவே உடலாகி நெளியும் கணத்தில் ஊனுடலின் திரைவிலக்கி இமையாக் கண்களுடன் எழுகிறது நாகம். நிலத்தடிப்பாதைகளூடாக ஓசையிலாது வழிந்து எங்கும் உலவுகிறது. இருளில் மின்னும் மணிக்கண்களுடனும் துடிதுடிக்கும் தழல்நாக்குடனும் படம்விரித்தெழுகிறது. நாகர்களை ஆலயங்களின் புறச்சிறை

களிலும் வயல்வெளிகளிலும் காட்டின் பெருமரத்தடியிலும் வைத்துப் பூசை செய்கின்றனர் தென்நில மக்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் தங்களில் உறையும் நாகத்தை அஞ்சுகிறார்கள்.

ஃ

அரசமரத்தடியில் இருள்பிரியா விடிகாலையில் எழுந்து கவுந்தி அறிவனைப் போற்றும் குரல் கேட்டுக் கண்ணகியும் கோவலனும் துயிலெழுந்தார்கள். காலைக்கடன்கள் முடித்து அறிவன் புகழ்பாடி ஏத்திச் சாலையில் நடந்தனர். ஓங்கிய மருதமரங்களின் நடுவே சென்ற செம்மண் பரவிய பாதையில் சகடங்கள் ஓடிய சேற்றுத்தடத்தில் மழைநீர் ஊறிய நொதியில் கால் பதித்து வைத்துக் கண்ணகி நடந்தாள். பின்னாலிருந்து சாட்டை ஒலிக்க ஒரு கவிகை வையம் உருண்டு வரும் ஒலி கேட்டதும் அவர்கள் ஓரம் நகர்ந்தனர். சகடம் அவர்களை நெருங்கி மெல்ல நின்றதும் உள்ளிருந்து பொன் னிறத் தலைப்பாகை அணிந்த வடவணிகன் இறங்கி கவுந்தியை வணங்கி ''அன்னையே தாங்களுக்கு நான் செய்யக்கூடுவது யாது?" என்றான்.

"அருகன் புகழ் உன் நாவில் எந்நேரமும் விளங்குவதாக" என்றாள் கவுந்தி.

''தாங்கள் உயிர்கள் இழுக்கும் சகடங்களில் ஏறமாட்டீர்கள். இவ்வழித்துணையோர் என் வையத்தில் ஏறட்டுமே'' என்றான் வணிகன். ''பாதையோ மிகவும் சேறாக உள்ளது.''

''என் இல்லாள் ஏறட்டும். நான் அன்னையுடன் சேர்ந்து நடக்கிறேன்'' என்றான் கோவலன்.

"அவ்வாறே ஆகுக. நானும் தங்களுடன் சேர்ந்து நடப்பேன்" என்றான் வணிகன்.

கண்ணகி வண்டியில் ஏறிக்கொண்டாள். வணிகன் தன் பெயர் பாகுகன் என்றான். தென்நிலத்து மலைத்தேன் வாங்கிக் கலங்கள் வழியாக வடநாட்டுக்குக் கொண்டுசென்று விற்பதும் வட நாட்டுப் பட்டாடைகளைத் தென்னாட்டில் விற்பதும் அவன் தொழில். அவன் சாக்கிய நெறி கொண்டவன். சாக்கியப் புத்தர் மெய்ந்நெறி கண்ட அரசமரம் நிழல் விரித்த கயையே அவன் நகரம். அங்கிருந்து பெரும்புனல் கங்கை வழியாக வங்கம் வந்து கடல்

அடைந்து தென்னாட்டுக்கு வந்து செல்பவன்.

வணிகன் தன் வடநிலத்தைப்பற்றிச் சொன்னான். அவன் நாடு முன்பு அங்கநாடு எனப்பட்டது. அதன் தலைநகர் சம்பாபுரி. சம்பாபுரி மக்கள் சம்பர்கள். அவர்கள் ஏழு கன்னித் தெய்வங்களை வணங்கினர். ஒளியின் தெய்வமான தங்கையும், இருளின் தெய்வமான தமக்கையும் அவர்களில் முதன்மையானவர்கள். தங்கள் குலத்து இளங்கன்னியரில் எழுவரைத் தெரிவுசெய்து அவர்களையே கன்னித்தெய்வங்களாக வழிபடுவது அவர்கள் மரபு.

அவர்கள் குலக்கதைகளின்படி சம்பாபுரி தென்கடலின் ஆழத்தில் மூழ்கிக்கிடந்த பொன்னாலான மாயநகரம். அங்கே எவருமே பிறப்பதில்லை, எவருமே இறப்பதுமில்லை. ஆகவே உண்பதோ நோயுறுவதோ சம்பாபுரியில் இல்லை. இடைவிடாத காமமே அங்கே இருந்தது. அவர்களுக்குக் கன்னித்தெய்வங்கள் விதித்த நெறி ஒன்றுதான், கன்னித்தெய்வங்கள் தங்கள் தூய பொன்னுடல் நிலவில் ஒளிர கடல் நீராட இறங்கும் மேழமாத முழுநிலா அன்று மட்டும் அவர்கள் தங்கள் இன்பங்களைக் கைவிட்டு இல்லங்களுக்குள்ளேயே இருக்கவேண்டும். தெருக்களில் எவருமே நடமாடக் கூடாது. அன்று கன்னியருக்கு தங்கள் இல்லங்களில் பூசனையிட்டு வழிபட வேண்டும். ஆனால் ஒருமுறை காமம் நிலைமீறிய சம்பன் ஒருவன் தன் இல்லத்தைவிட்டு வெளியே வந்து ஏழு கன்னியரைக் கண்டான். அவன் கண்கள் அக்கணமே பார்வையை இழந்தன.

அதன் பிறகு சம்பாபுரியின் தூய்மை மறைந்தது. கூடலுக்குப் பின் சம்பாபுரி மக்கள் கருவுறத் தொடங்கினர். குழந்தைகள் பிறந்து சம்பாநகரின் எடை கூடியது. எடை தாளாமல் அது நான்காகப் பிளந்தது. சம்பர்கள் அன்னையரைக் கூவி அழைத்துக் கதறினர். அன்னையர் ஏழு பொன்மீன்களாக மாறி நகரை தள்ளித் தள்ளிக் கங்கைக் கரையில் சேர்த்து அவர்களைக் காத்தனர். தங்கள் பொன் மாடங்களுடனும் மலைபுரைமாடங்களுடனும் சம்பாபுரி கங்கை கரைச் சதுப்பில் வந்தமர்ந்தது. அப்பகுதியை வென்று தலைமை கொண்டது. அதன் முதல் மன்னன் சம்பன்.

அங்கே சம்பர்களின் எட்டுத் தலைமுறையினர் மன்னர்களாக ஆண்டனர். உலோமாபதன் என்ற மன்னன் ஆண்டபோது மாரி பொய்த்துப் பெரும்பஞ்சம் ஏற்பட்டது. மன்னன் மாபெரும் வேள்விகள் இயற்றி விண்ணவர்கோமானின் அருளை வேண்டினான். விண்ணகம் கனியவில்லை. வங்கத்திலும் கலிங்கத்திலும் இருந்துவந்த நிமித்திகர் கூடி விண்வினாக் கூட்டி விடை தேடினர்.

அவர்கள் அங்கத்தின் அகத்தைக் கண்டு சொன்னார்கள்.

சம்பர்கள் வருவதற்கு முன்னர் அங்கநாடு நுதிநுதல் கலை மான் வாழும் தூய மண்ணாக இருந்தது. நெருப்பில் விழுந்த பிரம் மனின் உதிரத்தால் உருவான விலங்கு அது. மண்ணில் வாழும் உயிர் நெருப்பு. செந்நிற உடலும் கரிய நிறப் பிடரியும் வெண்ணிறக் கால் களும் கொண்டது. அதன் நெற்றியில் கூரிய ஒற்றைக்கொம்பு உண்டு. ஓடும்போது தன் எண்ணங்களில் ஏறி மண்ணில் கால் தொடாது ஓடும் அதை எந்த விலங்கும் பிடிக்க இயலாது. எந்த அம்பும் தீண்ட இயலாது. அதன்மீது பறவைகளோ பூச்சிகளோகூட அமர்வ தில்லை. விண்ணில் வாழும் தெய்வங்கள் காற்றாக மாறி வந்து அமர் வதற்குரியது அதன் முதுகு. நாடொறும் காலையில் அது கங்கையில் நீராடும். புல்தளிர்களை மட்டுமே உண்ணும். மலைமுடி முளையில் இரவில் துயிலும்.

அங்கநாட்டை ஆண்ட சம்பன் வேட்டையாடச் செல்லும் போது நுதிநுதல் கலைமானைக் கண்டான். அதை நோக்கி அவன் விட்ட அம்புகள் அனைத்துமே வீணாயின. அவனால் தோல்வியைத் தாள இயலவில்லை. அவ்வெண்ணமே இரவும் பகலும் அவனைத் துரத்தியது. அதன் பின் அவன் காட்டிலேயே அலைந்தான். மேலும் மேலும் கூரிய மெல்லிய அம்புகளை உருவாக்கிக்கொண்டு முயன் றான். அவனால் அம்மான்களை நெருங்க இயலவில்லை. அப் போது மலைமுதியவன் ஒருவன் அது தெய்வவிலங்கு என்றும் அதைத் தொட இயலாது என்றும் சொன்னான். அது தூய கன்னி யரைக் கண்டால் அருகே நெருங்கி தன் தலையை அவர்கள் மடிமீது வைத்து தன்னை வழங்கும். வேறு மானுடர் அதைத் தீண்டியதே யில்லை.

அதைக் கேட்ட மன்னன் கன்னி நோன்பிருந்த ஏழு கன்னியரையும் காட்டுக்கு அனுப்பினான். அவர்கள் கன்னித் தூய்மையைக் கண்ட நுதிநுதல் அருகே வந்து தலை சரித்தபோது மரங்களில் மறைந்திருந்த மன்னன் அம்பு செலுத்தி அதைக் கொன்றான். தரையில் விழுந்த அது கால்களை உதைத்தபோது பொறிகிளம்பி எரிந்து சாம்பலாகியது. மன்னன் தன் புகழ்பதிவில் நுதிநுதலைக் கொன்ற முதல் மன்னன் என்ற விருதைப் பொறித்துக் கொண்டான். வெருண்ட நுதிநுதல்கள் அங்கநாட்டை விட்டு இமையத்துக்குச் சென்றுவிட்டன. அதன்பிறகு அங்கநாட்டில் மழை மிகவும் குறைந்தது. நாடு வறிதாகி மக்கள் பசியே வாழ்க்கையாகக் கொண்டனர். ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை பெரும்பஞ்சம் வந்து மக்கள் அழிந்தனர்.

நிமித்திகர் கண்டு சொன்னதன்படி மீண்டும் நுதிநுதல் ஒன்று அம்மண்ணில் கால் வைக்கும்போதே விண்ணகம் அங்கநாட்டுக்குக் கனியும் என்று தெரிந்து உலோமாபதன் நான்கு திசைகளிலும் தன் ஆட்களை அனுப்பினான். அப்போது இமையமலைச்சாரலில் விபாண்டகன் என்ற முனிவன் நுதிநுதல் மகன் ஒருவனை வளர்த்து வருவதாகச் செய்தி கிடைத்தது . அவன் நுதிநுதல் ஒன்றின் வயிற்றில் பிறந்தவன். வெண்ணிறமான கால்களும் செந்நிற உடலும் நெற்றியில் சிறு கொம்பும் கொண்டவன். அவன் பெயர் இருடியசிருங்கன். அவனைப் பெண்களே அணுகாதவாறு விபாண்டகன் பேணி வந்தான். போர்களாலோ வேண்டுதல்களாலோ அவனைக் கொண்டுவர இயலாது என்றனர் அமைச்சர்கள். ஆகவே உலோமாபதன் கன்னி நோன்பிருந்த எழுவரையும் அனுப்பினான். அவர்கள் தடை கடந்து சென்று இருடியசிருங்கனைக் கண்டதும் அவன் அவர்கள் அருகே வந்தான். அவனைக் கூட்டிவந்து அங்கநாடு சேர்ந்தனர். அவன் கால்கள் அம்மண்ணில் பட்டதும் பெருமழை கொட்டியது.

அவன் உலோமாபதன் மகளை மணம் புரிந்து அங்கநாட்டை ஆண்டான். அங்கநாட்டில் நுதிநுதல் கலைமானே தெய்வமாயிற்று. கலைமானின் உதிரத்தில் உதித்தவர்களே அந்நாட்டை ஆண்டனர். பின்பு பெருங்கொடையாளன் என்று புகழ்கொண்ட கருணனுக்கு அந்நாட்டைக் குருகுல மன்னன் துரியோதனன் அளித்தான். அங்க நாடு செல்வத்திலும் புகழிலும் சிறந்தது. அங்கே பெருவணிகர் குலங்கள் தோன்றின. அவர்கள் கங்கை வழியாகக் கடலோடி வணிகம் செய்தனர். பூம்புகாரிலும் நாகர்பட்டினத்திலும் வந்து சேரும் கலங்களில் பாதி சம்பர்களின் கலங்களே என்றான் வடவணிகன்.

"இங்கே உரிமை மக்களை வாங்கிச்செல்வதும் நீங்கள் தானோ ?'' என்றான் கோவலன்.

"இல்லை. நாங்கள் சாக்கியர்கள். எங்கள் நெறி மனிதர்களை விற்பதையும் வாங்குவதையும் பிழை என்கிறது. நாங்கள் கலைமானை வழிபடுவதை விட்டு சாக்கிய முனியின் தென்திசைக் கோலத்தை வணங்குகிறோம். சம்பர்களில் ஒருசாரார் இன்று வங்க நாட்டை அடுத்த சதுப்பு நிலங்கள் மண்டிய நிலத்துக்குப் பரவியுள்ளனர். அவர்கள் அங்கே நிலம் திருத்திப் பயிர் செய்கிறார்கள். இந்த உரிமைமக்களை அதற்குத்தான் கொண்டு செல்கிறார்கள். அம்மண்ணில் ஆண்டு முழுக்க மழை பெய்தபடியே இருக்கும். எருமை அன்றி எவ்வுயிரும் வாழமுடியாது. உரிமைமக்கள் கொடுந்துயர் உற்று மழைக்கால ஈசல்கள்போல இறக்கிறார்கள். ஆகவே புதிய

மரக்கலங்களில் மேலும் உரிமை மக்களைக் கொண்டுவந்து இறக்க வேண்டியிருக்கிறது. அங்குள்ள சம்பர்கள் இச்சாம்பர்களைத் தூய்மையற்றவர்கள் என்று எண்ணுவதனால் இவர்களைத் தீண்டுவ தேயில்லை'' என்றான் வடவணிகன்.

"புகார் நகருக்கு அப்பால் கடல்கொண்ட சம்பாபுரி ஒன்று உண்டு என்று கதைகள் கூறும்'' என்றான் கோவலன்.

அப்போது ஒரு மெல்லிய வஞ்சச் சிரிப்பொலி அவனருகே கேட்டது. அவன் திரும்பி கவுந்தியைப் பார்த்தான். அவள் தன் பீலியால் பாதையை அரித்தபடி கண்ணகியிடம் மெல்ல பேசியபடி நடந்துகொண்டிருந்தாள். அச்சிரிப்பொலி அவளிடமிருந்துதான் கேட்டது என்று கோவலனின் ஆழம் சொல்லியது. அதை அலைகள் மறைத்தன.

கலம் ஏறி நிலம் சேர்ந்த சம்பாபுரியினர் கங்கைச் சதுப்பில் தங்கள் குடியிருப்புகளை அமைத்தனர். அவர்களுக்கு அடர்காடுகளில் வாழ்ந்து பழக்கம் இல்லை. வேட்டையாடுவதோ வேளாண்மை செய்வதோ அவர்கள் கற்றவையுமல்ல. மென்சதுப்பில் மரங்களை அமைத்து வீடுகள் கட்டும் நுட்பம் அவர்கள் அறிந்தது. மரம் தேர்ந்து மரக்கலம் கட்டவும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள் மெல்ல வணிகர்களாக உருவானார்கள். உட்காடுகளுக்குச் சென்று அங்கே வாழ்ந்த பல திறப்பட்ட மக்களிடம் பொருள் கொண்டு கடல் வழியாக கீழ்த்திசைக்குக் கொண்டு சென்று வணிகம் செய்வதை அவர்கள் முறைமையாக்கினர். அதற்கு அவர்களுக்கு உதவியது அவர்கள் பேசிய மொழி. உட்காடுகளில் பலவாறாகச் சிதறிப்பரந்து கிடந்த அனைத்து மொழிகளிலும் உள்ள சொற்களின் வேர்களால் ஆனது தங்கள் மொழி என்று சம்பர்கள் அறிந்தனர்.

காடுகள் வழியாகப் பயணம் செய்து சம்பர்கள் சென்று சேர்ந்த ஊர்கள் ஒன்றுக்கு கீழே ஒன்றாக அடுக்கப்பட்டவை போலிருந்தன. வேளாண்மை செழித்த முதல் அடுக்கு ஊர்கள். வேட்டையும் உழவுமாக அடுத்த கட்ட ஊர்கள். அடர்காடுகளுக்குள் சிறு சதுப்புகளில் வாழ்ந்த உள்ளடுக்குகள். முதலடுக்குகளில் உள்ள மக்களின் ஆலயங்களில் தாங்கள் அறிந்த முக்கண் முதல்வனே அமர்ந்திருக்கக் கண்டனர். சில ஊர்களில் அவன் தென்திசை நோக்கித் தவம் செய்யும் அமர்ந்தகோலத்தில் ஓங்கிய கல்லால மரத்தடியில் அமர்ந்திருந்தான். சில ஊர்களில் விண்ணளந்த பெருமாள் பள்ளிகொண்டிருந்தார். சில ஊர்களில் ஆனைமுகன் விரிந்த செவிகளுடன் அமர்ந்திருந்தார். அடுத்த அடுக்கு மக்கள் முக்கண் கொற்றவையை வழிபட்டார்கள். எருமை மீதேறிய அத்தெய்வம் வேலும் வெறிவிழியுமாகக் காடுகளின் எல்லைகள் தோறும் அமர்ந்திருந்தது. மூன்றாம் அடுக்கில் மக்கள் கன்னியின் காலடியை வரைந்து அதை வணங்கினர். அவ்வடிவைக் கடலும் புயலும் சேர்ந்து எழுப்பும் மாபெரும் ஓமெனும் ஒலியாக கூவிக்காட்டினர்.

அம்மக்கள் அனைவரிடமும் ஒரே கதையே இருந்தது. அவர்கள் வாழ்ந்த தென்னகத்துத் தொல்நிலம் கடலெழுந்து நீரில் மூழ்க அவர்களுடைய தெய்வங்கள் அவர்களைச் சுமந்து அங்கே கொண்டு வந்து சேர்த்தன என்றனர். தெற்கு என்றும் தெக்கணம் என்றும் தெட்சிணமென்றும் பலவாறாக அவர்கள் தங்கள் பழந் திசையைச் சொன்னார்கள். அவர்கள் அனைவருக்குமே தென்திசை அச்சு மூட்டும் இறப்பின் திசையாகவும் இறந்த மூதாதையரின் வெளியாகவும் இருந்தது. அவர்கள் தங்கள் தெய்வங்களை அமர்த்த வரைந்த களங்களில் தென்திசையைக் கருமையால் மெழுகி அதற்குரிய திசைத்தெய்வமாகக் காலதேவனைக் கரித்துண்டாலோ கரியகல்லாலோ பதிட்டை செய்தனர். எருமையும் தென்திசையிலிருந்து வந்தது என்றும் அதன் கருமையும் உறுதியும் தென்திசையில் வாழ்ந்த தங்கள் மூதாதையருக்குரியது என்றும் அவர்கள் நம்பினார்கள். தென்கடலில் எழும் கரிய அலைகள் போன்றது எருமை என்றது ஒரு குலப்பாடல். சில குலக்கோயில்களில் காலதேவன் அருகில் எருமையும் பதிட்டை செய்யப்பட்டிருந்தது. சில ஆலயங்களில் காலதேவனே கருமாமீது அமர்ந்திருந்தான்.

அம்மக்கள் தென்மண்ணிலிருந்து வந்தபோது அப்பகுதியின் நிலம் நீர் நிறைந்து சதுப்பு நிறைந்ததாக இருந்தது. அதில் மையால் மூலமே பயணம் செய்யவும் உழுது பயிரிடவும் முடிந்தது. ஆகவே காடுகளுக்குள் வாழ்ந்த குலங்களுக்கு அதுவே குலதெய்வமாக இருந்தது. அவர்களுடன் போரிட்ட அடுத்த அடுக்கின் மக்களுக்கு அவர்கள் இறைவி ஏறும் ஊர்தியாக இருந்தது எருமை. சில ஆலயங்களில் எருமையை அவள் வெல்வதுபோலச் சிலைகள் இருந்தன. அக்குலங்களுக்கு இடையே ஓயாத போர்கள் நடந்தபடியே இருந்தன. ஒரு குலம் இன்னொன்றைக் காடுகளுக்குள் தள்ளியபடியே இருந்தது. காடுகள் எங்கும் உதிரம் ஒழுகியது.

அக்காலத்தில் ஒருநாள் சம்பாபுரி வணிகர் சிலர் கலிங்கத்திலிருந்து பொருள்கொண்டு திரும்பியபோது கங்கைக்கரையில் ஓங்கிநின்ற அரசமரத்தடியில் ஒரு மனிதனைப் பார்த்தனர். அது மேழ மாதம் முழுநிலவுநாள். அந்த அரசமரம் வெள்ளிக்காசுகள் குவிந்து குலுங்குவது போலிருந்தது. அதனடியில் அமர்ந்திருந்தவன் கந்தலாடை அணிந்து மெலிந்த உடல் கொண்டிருந்தாலும் அவன் மீது பொழிந்த நிலவில் வெண்சுடர் எழுப்பும் பளிங்குச்சிலை போலச் சுடர்ந்தான். ஒரு கணம் வணிகர் அப்படியே சிலைத்து நின்றனர். பெருங்கடலி அலை ஒன்று எழுந்து தங்கள் அகத்தைக் குளிருடன் ஓங்கி அறைவதாக உணர்ந்தனர். அக்காட்சியை அவ்வுருவைப்

பலமுறை தம் அகத்தே கண்டதாக அறிந்தனர்.

பிறகு ஊர் திரும்பிப் பிறரிடம் பேசுகையில்தான் அவர்கள் எண்ணித் தெளிவடைந்தனர்; அக்காட்சி அவர்களால் என்றோ காணப்பட்ட ஒன்றுதான். ஆனால் கண்டது அவர்களல்லர், அவர்கள் முதுமூதாதையர். அவர்கள் மனத்தில் மூதாதையர் அக் காட்சியைச் சொற்கள் மூலம் தலைமுறைகள்தோறும் நிலைநாட்டி யிருந்தனர். அவனுக்கு ஆலமர்செல்வன் என்று பெயர்.

வணிகர் ஓடிச்சென்று ஆலமர்செல்வனாகிய தென்திசை முதல்வனின் அகமறி கோலத்தில் அமர்ந்திருந்த அம்மனிதனின் பாதங்களை வணங்கினர். அவன் தன் கண்களைத் திறந்து அவர் களை நோக்கிப் புன்னகை செய்தான். அவர்கள் காடுகளில் சிந்திய உதிரத்தைக் கண்டு உள்ளம் கலங்கி வந்திருந்தார்கள். அவர்கள் சொல்வதற்கு முன்னரே அவன் அவர்கள் உள்ளத்தை அறிந்து கொண்டான். தன்னைப் பற்றியும் தான் கண்டதைப் பற்றியும் அவர்களுக்குச் சொன்னான்.

அவன் மலைகளுக்குள் வாழும் சிறுகுடியாகிய சாக்கிய குலத்தைச் சேர்ந்தவன் என்றதுமே வணிகர்கள் அவனை அடை யாளம் கண்டனர். சாக்கியகுல மன்னன் சுத்தோதனனின் அழகிய மகன், அரசு மனைவி மகன் அனைத்தையும் துறந்து சென்றது காடுகள் எங்கும் பேசப்பட்ட செய்தி. மலைக்குலங்களுக்கு இடை யேயான தலைமுறைகள் தோறும் தொடரும் போர் அவனை நீண்டநாட்களாகவே அமைதியிழக்கச் செய்திருந்தது. தன் மெய்ம் மையின் சிறகுகளை விரித்து அமைதி தவழும் ஒரு வெளியைக் காண முயன்றான். அவன் பெயர் சித்தார்த்தன் என்றனர். கங்கைக் கரையிலும் இமையச்சாரலிலும் பல்வேறு ஆசிரியர்களின் கீழ் அமர்ந்து அவன் மெய்ம்மையைக் கற்பதாகச் சொன்னார்கள். பிறகு அவையனைத்தையும் உதறி அவன் எங்கோ காட்டில் மறைந்ததாகக் கேள்விப்பட்டார்கள். அவனே இவன் என்றறிந்த வணிகர்கள் அவன் கண்டதென்ன என்றறிய ஆர்வு கொண்டனர்.

தன் இறுதி ஆசிரியரிடம் சித்தார்த்தன் இரு பெரும் போர்க் கதைகளையும் அவற்றின் மையமாகத் திரண்டுவந்த வீரத்தையுமே கற்றறிந்தான். ஆனால் பெருநூல்கள் என்றுமே ஏமாற்றுபவை. அவற்றின் சொல்லாயிரங்களில் மெய்ம்மை ஒரே ஒரு சொல்லில் தான் உள்ளது. மீதி அத்தனை சொற்களும் அந்த மெய்ம்மையை மறைப்பதற்கு உரியவையே. அச்சொல்லைக் கண்டறியாதவரை சொற்களின் வெளியில் திசையிழந்து அலையவேண்டும். சித்தார்த்தன் ஒருநாள் உளப்பதிவு செய்த வரிகளில் இருந்து அச்

சொல்லைக் கண்டுகொண்டான். 'அச்சம்' என்று தன்னுள் பல்லாயிரம் முறை சொல்லிக்கொண்டான். மீண்டும் மீண்டும் சொல்லப்படும் எந்தச் சொல்லுமே மாபெரும் வினாவாக மாறிவிடும் என்பது மொழியின் நெறி. அவ்வினாவுக்குக் கல்விச் சாலைகளோ முதிர்ந்து கனிந்த ஆசிரியர்களோ அவர்கள் கொண்ட அத்தனை நூல்களும் சேர்ந்தோ விடை சொல்லப்போவதில்லை என்று அவன் அறிந்தான். அவ்வினாவுடன் காட்டில் இறங்கி நடந்தான்.

நடந்து தளர்ந்து கங்கையில் நீர் அருந்திவிட்டு கரையில் நின்ற அந்த மாபெரும் அரசமரத்தடியில் நின்றான். ஆலமர்செல்வன் தென்திசை நோக்கி அமர்ந்த கோலம் அவன் நெஞ்சில் எழுந்தது. அவன் பெற்ற மெய்யறிவைத் தானும் பெறுக என்று எண்ணியவனாக அம்மரத்தடியில் தாமரை இதழ்கள்போலக் கால் மடக்கி கைகளை முழுமைக்குறி கூட்டி கண்மூடி அமர்ந்தான். அவன் உள்ளே இருந்து அச்சொல் முளைத்துப் பெருமரமாகிக் கிளை விரித்துப் பல்லாயிரம் இலைபரப்பி நிழலிட்டு நின்றது. இலைகள் உதிர்ந்தன. இலைகள் முளைத்தன. இலைகள்மீது காற்று ஓடிச் சென்றது. இரவும் பகலும் ஊடுருவி மறைந்தன. அத்தனை இலைகளையும் சருகுகளாக உதிர்த்துவிட்டு மரம் ஒழிந்து நின்றது. அவன் தன்னை இழந்திருந்த கணத்தில் கடலே அலையாக மாறித் தன்மீது வந்து அறைந்ததுபோல அந்தப் பதில் சொல்லைக் கண்டடைந்தான். 'விழைவு.' கண் திறந்து மரத்தின்மீது நோக்கியபோது மரமெங்கும் அச்சொல்லே நிறைந்திருக்கக் கண்டான். திருட்டினை என்று தன் மொழியில் அதைச் சொன்னான்.

தன்மீது உதிர்ந்த ஆலமர இலை ஒன்றை எடுத்துக் காட்டி சித்தார்த்தன் சொன்னான். அதன் நரம்புகளின் மெல்லிய வலையின் ஒவ்வொரு கிளைநரம்பும் ஓர் ஆலமரம். அவ்விலை ஆலமரங்களினாலான ஆலமரம். இலை முளைத்து இலைசெறிந்து இலை உதிர்த்து நிற்கும் ஆலமரமோ காடு என்னும் மாபெரும் ஆலமரத்தின் இலை. காடு பூமியெனும் மரத்தின் இலை. ஆகவே அறிக இப்பூமி நாமறியா ஆலமரமொன்றில் முளைத்த ஓர் இலை மட்டுமே. உணர்க, ஆலமரங்கள் அனைத்துமே பிறிதொரு ஆலமரத்தின் இலைகளே.

மரமென உணரப்படுவதே இங்குள்ளது. பிறிதொன்றும் இல்லை. அதை உணர்கையில் மட்டுமே அனைத்தும் இருப்பதை நீ காண இயலும். அவனது சொற்கள் புல்விதைகள் மழைநீரில் பரவுவதுபோலப் பரவின.

வடவணிகன் துணைவரக் கவுந்தியும் கண்ணகியும் கோவலனும் சாலையோரத்து போதிமண்டபம் ஒன்றை மாலையில் சென்றணைந்தனர். நீள்வழிப் பயணிகள் தங்கும் அங்கு சமைத்தளித்து சேவையாற்றும் மகதி என்ற முதுபார்ப்பனப் பெண் அவர்களை அன்புடன் வரவேற்றாள். அருகேயிருந்த குளிர்சுனைச் சோலைக்குள் சென்று கவுந்தி ஆலமரத்தடியில் வேர்ப்புடைப்பில் தலைசாய்த்துப் படுத்தாள். வண்டிக்காரன் களைத்த காளைகளை நீர்காட்டிப் புல்மேய விட்டான். கோவலனும் வடவணிகனும் வெளித்திண்ணையில் அமர்ந்தனர். அவர்களிடம் கேட்டபின் மகதி முக்கல் கூட்டிய அடுப்பில் அழலேற்றி அடுதொழிலைத் தொடங்கினாள்.

போதிநிலையின் கற்சுவர்மீது சிலைப்புடைப்பாக எழுந்த அறிவனின் ஆழ்தவக்கோலம் கண்டு கண்ணகி அமர்ந்திருந்தாள். மகதி வறுமுலை ஆட மூச்சுத் தளர அடுப்பூதுவதைக் கண்டு அருகே சென்று அன்னையே விலகுக நான் செய்வேன் என்றாள். மகதி சிரித்து உன்னைக் கண்டால் அகல்சுடரை ஊதிஅணைத்தாலும் மூச்சு குறையும் மெல்லியளாகத் தெரிகிறாய். அருகே அமர்க. நான் இத்தொழில் தொடங்கி எழுபது ஆண்டுகள் ஆகின்றன என்றாள். தன் கதையைச் சொல்லிய கண்ணகி அவள் கதையைக் கேட்டாள்.

தான் பாரத்துவாச குலத்துதித்த மறையோன் மகள் என்றாள் மகதி. கணக்கில்லாத் தலைமுறையாக முச்சுடர் வளர்த்து மறையொலி எழுப்பி வான்தெய்வங்களை வணங்கும் மரபினள். ஏழு வயதில் அவளைத் தென்சுடர் நோக்க வான்சுடர் கண்டு மங்கல நாண் அணிவித்து மாமறையோன் குல இளையோன் சோமதேவன் என்பவனுக்கு நீர்தெளித்துக் கையளித்தனர். ஒன்பது வயதில் அவள் கணவன் குலத்தினர் ஏழு பந்தர் பண்டிகளில் வந்து அவளுக்கு முறைசெய்து அழைத்துச்சென்றனர்.

அப்போதி சாலைக்கு அவர்கள் மாலை மயங்கியதும் வந்து சேர்ந்தனர். அங்கே வண்டிகளை அவிழ்த்து மாடுகளை இளைப்

பாற்றினர். மறையோர் சுனையில் நீராடிச் சுடர் வளர்த்து அந்தி வேள்வி இயற்ற பெண்டிர் சமையல் செய்தனர். அன்றிரவு கல் தரையில் படுக்கையில் மகதி ஒரு கொடும்கனவு கண்டாள். ஒரு கரிய பாறையிலிருந்து துளித்துளியாக நீர் ஊறிச் சொட்டுவதையும் அது மெல்ல விசும்புவதையும். அஞ்சி விழித்தபோது அகத்தளத்தில் அகல்சுடர் ஒளியில் அறிவனின் கற்பெருமுகம் மெல்ல அசைந்ததைக் கண்டாள். அது சொல்லொணா உணர்ச்சிகளால் துயருறுவதுபோலப் பட்டது. அதன் முன் அவள் ஒருபோதும் நேர்நோக்கியிராத, ஆனால் அவள் இளநெஞ்சம் ஒருபோதும் மறவாத அவ் விளைஞன் முகத்தைக் கண்டாள். கண்ணீர் வழியும் முகத்துடன் அவன் அச்சிலையை நோக்கி அமர்ந்திருந்தான். அது ஒரு கனவென எண்ணியதே அவள் இறுதியாக அறிந்தது.

காலை ஒலிகள் கேட்டு அவள் எழுகையில் அவன் சென்று விட்டிருப்பதை அறிந்தாள். தன் உடைகள் நகைகள் அனைத்தையும் துறந்து அருகே தான் களைந்த முடியையும் வைத்து அவன் சென்றிருந்தான். அவன் இரவன் ஆகிவிட்டான் என்பதற்கான தடயம் அது. அன்று தென்னாட்டில் அத்தனை அன்னையரும் மனைவியரும் அஞ்சியது அதைத்தான். இளைஞர்களை ஒவ்வொரு மூத்தவிழியும் அஞ்சியும் துயருற்றும் நோக்கிவந்தது. நீரோடைகள் வளைந்தும் நெளிந்தும் தேடி நெடும்புனல் சேர்வதுபோல இளைஞர்கள் சாக்கியமுனியின் பாதையைத் தேர்வுசெய்தார்கள்.

அவன் குலம் தலையடித்து அலறி அழுகையில் அவள் சற்றும் அதை உணராமலிருந்தாள். ஏனெனில் அதன்மூலம் அவள் இழந்தது ஏதுமில்லை. அவள் இழந்தது குழந்தைப்பருவத்தின் கட்டின்மையை மட்டுமே. அதை இழந்ததுமே இனி அடைய ஏதுமில்லை என்று அவள் அறிந்துவிட்டிருந்தாள். மங்கலநாண் பூட்டப்படும் பெண் உயிருடன் தாழியில் புதைக்கப்படுகிறாள் என்றார்கள் மூதன்னையர்.

குலமூத்தார் கூடி என்ன செய்வதென எண்ணி முடிந்தனர். இரவனாகச் சென்றவன் சாகவில்லை. அவள் கைவிடப்படலமில்லை. அவன் மெய்ம்மை தேடிச்சென்றான். அவள் அவனது வெற்றிக்காக நோற்றிருக்க வேண்டியவள். அவன் மீள்வானாகில் அவனுக்கு ஆட்படவேண்டியவள். ஆகவே அவன் அவளை விட்டுச் சென்ற இடத்திலேயே அவள் இருக்கவேண்டும். அவளை அங்கேயே விட்டுவிட்டு அக்குலம் தன் வழிச்சென்றது.

காடு சூழ்ந்த சோலையில் காய்கனிகளை உண்டவளாக அஞ்சியும் அழுதும் அவள் அங்கிருந்தாள். அவள் பார்ப்பனப்

பெண் ஆதலால் வழிதேரும் கள்வரும் அவளைத் தீண்டவில்லை. வழிப்போக்கர் அவளிடம் உணவு செய்து தரச்சொல்ல அதுவே அவள் அறமாயிற்று. அவ்வறச்சாலை ஒரு படித்துறையாக அதன் வழியாகப் பெரும்புனல்போல அலைத்தும் சுழித்தும் முகங்களாகச் சென்றது அமையம்.

வரகரிசிச் சோறும் மோர் சேர்த்த புளிக்கறியும் உண்டபின் மகதியின் வற்றிய மென்முலை சேர்ந்து கிடக்கையில் கண்ணகி கேட்டாள். ''பிறகு உங்கள் கணவனைக் கண்டீர்களா?''

''ஆம்'' என்றாள் மகதி. ''அவன் மூதிரவன் ஆகித் துவராடையும் கப்பரையுமாக இவ்வழி ஒருநாள் வந்தான். வரகரிசிச் சோற்றைப் பிச்சையாக ஏற்று இரவில் படுத்தான். அன்றிரவு நான் படுத்த கற்படுக்கையருகே மறுநாள் மென்பூழிமீது அவன் பாதம் வந்து நின்று மீண்ட தடம் தெரிந்தது'' என்றாள் மகதி.

''அவனிடம் நீங்கள் ஏன் பேசவில்லை'' என்றாள் கண்ணகி. ''துறப்பதற்கு வீடு விட்டிறங்க வேண்டியதில்லையே'' என்றாள் முதுபார்ப்பனி.

ᘓ

வடமலையருகே தொல்முனிவன் கபிலன் பெயரா லமைந்த நகரத்தில் கோலியர் குலத்து அஞ்சனர் என்ற மன்னனுக்கு மகளாகப் பிறந்தாள் மாயை. அவள் சாக்கிய குலத்துச் சுத்தோ தனனுக்கு மனைவியானாள். மணமுடித்த நாளில் அவள் அறிந்தாள் தன் மணிவயிறு தன் ஆழகத்தைவிட முக்கியமானது என்று. மாதங்கள் செல்லச்செல்ல அரண்மனை மாந்தரும் சுற்றமும் நாட் டாரும் தன் வயிற்றையே நோக்குவதைக் கண்டாள். இரங்காத தெய்வம்போல அமைதிகொண்டிருந்தது அவள் வயிறு. பேராறு களை உள்ளிழுத்தும் நிறையாத கடல் போன்றிருந்தது. இரவுகளில் அதில் கைவைத்து கண்ணீர் உகுத்தபடி அவள் விண்ணில் நிறைந்த மீன்களைக் கண்டு ஏங்கினாள். அவள் வயிறு திறக்காதபோது சுத்தோதனன் அவள் தமக்கை பிரசாபதியையும் மணந்தான். அவள் வயிறும் அமைதியே கொண்டிருந்தது.

அவ்வாண்டு இளவேனில் திருவிழா வந்தபோது அவள் தன் வாழ்க்கையைக்குறித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். இளவயதில் புதுவெள்ளத்தில் நீந்தியும் மலைச்சரிவில் மலர் கொய்தும் ஆடிய விழவாட்டங்களின் நினைவை அந்த ஏழு நாட்களும் அவள் கொண்டாடினாள். ஏழாம் நாள் இரவு தன் வாழ்வை மலர் நஞ்சு கொண்டு முடித்துக் கொள்வதாக எண்ணியிருந்தாள். ஆறாம் நாள் இரவில் அல்லிமாடத்தில் துயில்கையில் அவள் ஒரு கனவு கண் டாள். வறண்டு கிடந்த சுனை ஒன்றில் விண்ணிலிருந்து நுரைஎழும் அருவியொன்று பொங்கி விழுந்தது. விழித்துக்கொண்டு உடல் நடுங்க ஓடித் தன் கணவனை அணுகி அக்கனவைச் சொன்னாள். அவன் நிமித்திகரை அழைத்துக் கனாக்குறி கேட்டான். அவர்கள் குலம் தழைக்கும் செல்வனின் வரவை அறிவித்தார்கள். ஆனால் மாயை விழித்தபின் அக்கனவை நினைவுகூர்ந்தபோது தெரிந்த ஒன்றை எவரிடமும் சொல்லவில்லை; அப்பேரருவி விழுந்த பின்னும் சுனை நிரம்பவில்லை.

பத்து மாதம் முழுமையானபோது மாயை தன் தாய்வீடு

செல்லும் வழியில் லும்பினிக் காட்டில் ஓர் ஆண் மகவை ஈன்றாள். அம்மகனின் அழகிலும் சொற்களின் ஒளியிலும் அவள் தன் உள்ளம் குளிர்வதை உணர்ந்தாளென்றாலும் அவளுக்குள் அச்சுனையின் நினைவு இருந்தபடியே இருந்தது. மைந்தன் பிறந்த மறுவருடம் அவள் நோயுற்றுச் சாகக் கிடக்கையில் தன் தமக்கையிடம் அக் கனவைச் சொன்னாள். அவள் கனவில் என்றேனும் அச்சுனை நிரம் பக் காணில் அன்று தன் உள்ளமும் குளிர்ந்ததாக எண்ணுமாறு சொல்லி உயிர் துறந்தாள்.

அக்கனவுக்காகப் பிரசாபதி காத்திருந்தாள். ஆனால் நிறை 'யாத சுனையொன்றைத் தங்கை தனக்களித்துப் போனதையே அவளறிந்தாள். சித்தார்த்தன் என்று பெயர் கொண்ட அம்மைந்தன் வளர்ந்தான். சாக்கியகுலத்து ஒளிவிளக்கென அவனை ஊரார் கொண்டாடினர். வீரமும் கல்வியும் கனிவும் ஒன்று சேர்ந்தவன் என்று அவனை அறிஞர் போற்றினர். ஆனால் அவன் கண்களில் அழியாப் பெருந்துயர் ஒன்றையே அவன் அன்னை பிரசாபதி கௌதமி கண்டாள். அதை அவனிடம் கேட்டாள். காட்டில் தான் கண்ட ஒரு சுனையைப்பற்றி அவன் சொன்னான். அது எவ்வளவு ஊறியும் எத்தனை வான்மழை கொண்டும் நிரம்பாமலிருந்தது.

கௌதமி அவனுக்கு மணநாள் தேரும்படி தன் மன்னனிடம் சொன்னாள். சாக்கிய மன்னன் தண்டபாணியின் மகள் இளவரசி யசோதரை அவனுக்கு மனைவியானாள். ஆனால் மைந்தன் பிறந்த பின்பும்கூட அவன் கண்களில் அந்தத் துயரம் கூடிவருவதையே அவள் கண்டாள். ஒரு நாள் பிரசாபதி கௌதமி அவனுக்குத் தேவைப்படுவது என்ன என்று அவனிடம் கேட்டாள். அந்தச் சுனைமீது பேராறு ஒன்று விழுவதாகவும் ஆயினும் அது நிறைவ தில்லை என்றும் அவன் சொன்னான். அவன் ஒருநாள் சென்று விடுவான் என்பதை அவளறிந்தாள். அதைப்போலவே ஒரு நள்ளிரவில் மனைவியும் மைந்தனும் ஆழத் துயில்கையில் சித்தார்த்தன் தன் நகைகளையும் ஆடைகளையும் இலச்சினை களையும் துறந்து எழுந்து நடந்தான். அறைவாசல் தாழின்மீது கைவைத்தபின் தன் மகன் முகம் பார்க்க அவன் ஒரு கணம் நின்றான்.

காலங்களுக்குப் பிறகு கப்பரையும் துவராடையுமாகப் புத்தன் அவ்வரண்மனைக்கு வந்தான். அவன் பாதங்கள் பட்ட மண்ணை மக்கள் திரள் கூடி வணங்கியது. அரண்மனை முற்றத்தில் நின்று அவன் தன் கப்பரையை நீட்டிப் பிச்சை கேட்டான். கண்ணீருடன் கௌதமி தன் உள்ளம் பொங்கிய கண்ணீர் வற்றிய மார்பில்

சொட்ட அவன் முன் வந்து அப்பாத்திரத்தில் உணவிட்டாள். ''மகனே உன் சுனை நிரம்பியதா?'' என்று கேட்டாள். ''அடியற்ற ஆழத்தை வெறுமையே நிரப்ப முடியும்'' என்றான் புத்தன்.

தன் முற்கால மனைவியைக் காண அவன் விழைந்தபோதி லும் அவள் அவன் முன்வர மறுத்து தன் சேக்கையறையிலேயே இருந்தாள். சேடியிடம் ''அவர் புத்தர் என்றால் என்னைக் காண அவரே வருக'' என்று சொல்லியனுப்பினாள். ''அவளது விழிநீர் பலநூறு புத்தர்களாலும் விளக்க இயலாதது'' என்று சொன்னபடி சித்தார்த்தன் அவள் படுக்கையறை நோக்கி நடந்தான். அதன் மூடிய கதவில் கைவைத்த கணம் அக்கதவுக்கு அப்பால் சித்தார்த்தன் அந் தாழை இன்னும் விலக்காமல், அக்கணமே அழிவிலாக் காலமாக மாறி ஓட, நின்றுகொண்டிருப்பதை உணர்ந்தான்.

சாக்கிய மெய்யறம் நாடுகளை விழுங்கியது. மாமன்னர் பிம்பிசாரர் அதைத் தன் முடியெனச் சூட்டிக்கொண்டார். நாவிதன் உபாலிக்கும் இழிதகை சோபாக்குக்கும், சுப்பிலாவுக்கும் அது மீட்பாகியது. பெருநோயாளி சுப்பிரபுத்தனுக்கு அது அருமருந் தாகியது. ஆனால் பெண்களுக்கு மட்டும் அந்த வாசல் திறக்கவே யில்லை. தன் வயது முதிர்ந்து கொண்டிருப்பதையும் நாள் செல்லச் செல்லத் தன் தோட்டத்துச் சுனையின் ஆழம் கூடிவருவதையும் கண்ட பிரசாபதி கௌதமி தன்னையும் இரவிணியாக்கும்படி புத்தனிடம் கோரினாள். பெண்களுக்குத் துறவே இல்லை என்று சொல்லி அவன் அதை மும்முறை மறுத்தான். அவள் சாக்கிய மாணவன் ஆனந்தன் பாதங்களில் விழுந்து மன்றாடினாள். அவளுக் காக ஆனந்தன் தன் ஆசிரியனிடம் கோரியபோதும் மும்முறை மறுப்பே எழுந்தது.

கண்ணீருடன் உணவின்றி அவன் அறவாயில் முன் கௌதமி நின்றாள். காலம் பெண்களுடன் ஓயாத கொடிய ஆட்டமொன்றை ஆடுகிறதென அறிந்தாள். அது அவள் கைகளுக்கு குழந்தையை அளிக்கிறது, அவள் கையும் நெஞ்சும் நிறையும்போது அதை எடுத்துக்கொண்டு அங்கு வெறுமையை விட்டுவிடுகிறது. எட் நாட்கள் அவன் வாழ்ந்த குகை வாசலில் அன்னை தவமிருந்தாள். அதன் பின் அவன் வெளிவந்து அவளுக்காகக் கனிந்தான். இரவல் களுக்குரிய எட்டுநெறிகளை நீ உன் நெஞ்சு முழுக்க நிறைத்து வா நாள் முழுக்க கடைப்பிடிப்பாயென்றால் உனக்கு நான் தீக்ஷை அளிக்கிறேன் என்றான். அவள் அவனை அடைக்கலம் புகுந்தாள்.

அவன் எண்பது வயதுவரை வாழ்ந்தான். அவள் அவனுக் அன்னையாக அவனுக்குப் பணி செய்தபடி அவன் இறுதிநாள்வரை

இருந்தாள். அவன் தன் நெடிய உடலை நீட்டி ஓகத்துயிலில் ஆழ்ந்த போது அவன் பாதங்களை மெல்ல வருடியபடி அவள் தன் அகக் கனிவையே முலையாக்கி அவனுக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள். அவன் ஆழ்துயில் கனவில் அவளைக் கண்டான். அவள் ''மகனே உன் ஆழம் இப்போதும் பெரும்பாழால்தான் நிறையப் பெற் றுள்ளதா?'' என்றாள். ''ஆம் அன்னையே அது ஒன்றே இயல்வது'' என்றான். ''மகனே அடியின்மையையும் எல்லையின்மையையும் ஒளியும் நிரப்ப முடியும் என்று நீ உணரவில்லையா?'' என்று அவள் கேட்டாள். அவன் கண்ணீருடன் ''ஆம் ஆம் ஆம்'' என்றான். அவன் மும்முறை ஆமோதித்ததை மட்டுமே ஆனந்தனும் சீடர்களும் கேட்டனர். தாங்கள் அறிந்ததையே அவன் ஆதரிப்பதாக அவர்கள் ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டனர்.

ᘓ

விடவணிகன் வடதிசை நோக்கி விடைபெற்றுச் செல்ல தென்திசை வயல் வழியில் கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் பிரிந்து நடந்தனர். இருமருங்கும் பச்சை அலையடித்த மங்கல மருதத்தில் கண்நட்டுக் கோவலன் செல்ல, தன் கால்களில் கண் ஊன்றிக் கண்ணகி நடக்க, பின்னால் கவுந்தி கண்ணகிமீது கருத் தூன்றி நடந்தாள். பூம்புகார் விட்டுக் கிளம்புகையில் அவளிடமிருந்த துள்ளலும் துடிப்பும் விலகிவிட்டிருப்பதைக் கோவலன் கண்டான். ''வரும் மதுரையில் நாம் அடைவதென்ன என்ற அச்சமா உனக்கு?'' என்று அவன் அவளிடம் கேட்டான். ''இல்லை, சென்ற புகாரில் நாம் இழந்தவை குறித்த துயரமா?'' அவள் ஒன்றும் சொல்லாமல் ஒரு துளிக் கண்ணீர் உகுத்தாள். அவள் கண்ணீர் அவனை நிலை யிழக்கச் செய்தது போலும். அவளைத் தோள்தொட்டுத் திருப்பி மீண்டும் மீண்டும் என்ன என்ன என்றான். அவளுக்கே அக்கண் ணீரின் பொருள் தெரிந்திருக்கவில்லை. பின்னால் வந்த கவுந்தி ''மலையிறங்கும் பேராற்றின் துள்ளலை நிலம்நிரப்பி ஒழுகு கையில் எதிர்நோக்கலாகுமா?'' என்று வினவியபோது கோவலன் நெடுமூச்சுடன் விலகினான்.

வயல்வெளி ஒடுங்கி மலையெழுந்த தென்திசை முகப்பில் நீர் சுழித்தோடும் சிற்றருவி ஒன்றை அவர்கள் கண்டார்கள். அவ்வருவி இழிந்திறங்கிய குன்றின்மீது சிறுபொழில் நடுவே ஒரு கல்லாலய முகடு தெரிந்தது. அங்கே இளைப்பாறிப் படையலமுது உண்டு அருள்பெற்றுச் செல்லலாம் என்றான் கோவலன். கண்ணகி ஒன்றும் சொல்லவில்லை. அவ்வாலயத்தின் சிறிய விமான முகப் பில் கவுந்தி நின்றுகொள்ள அவர்கள் படி தொழுது உள்ளே நுழைந்தனர். அங்கே பெரும்பண்டாரம் மட்டுமே அவ்வேளையி லிருந்தார். வெயில் ஏறிவிட்டபின்பு அங்கு எவருமே வருவதில்லை என்று அவர்களை வரவேற்றபடி சொன்னார். அவ்வாலயமும் சோலையும் மிகப்பழையவை என்றும் மருதநில மாந்தரின் ஊர்கள் மிகவும் கீழே மட்டுமே உள்ளன என்றும் சொன்னார். அச்சோலை

செறிந்து கானகமாகி மேலேறிச் செல்வதாக அவர்கள் அறிந்தனர். கருவறை சென்று அருள்நலக் கோலத்திலமர்ந்த இறைவிக்கு அகல் தூண்டி மலர்நீர் காட்டினார். மலர்கொண்டு வந்தளித்தவரிடம் அது எந்த அன்னை என்றான் கோவலன். அவள் சோழர்குலக் கொழுந்து கரிகால் வளவன் மகள் ஆதிமந்தி மாதேவி என்றார் பெரும் பண்டாரம். அவள் நினைவாகக் கரிகால் வளவன் கட்டிய எண்பது ஆலயங்களில் ஒன்று இது என்றும் அதற்கு இறையிலி நிலங்கள் உள்ளன என்றும் சொன்னார். எட்டுத் தலைமுறையாகத் தாங்களே அவ்வாலயத்துக்கு பொறுப்பு என்றார்.

பின்பு உப்பில்லாது அட்ட படையலமுது உண்கையில் அன்னையின் கதையை அவர் பாடலாகச் சொன்னார். மூவுலகையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட மாமன்னனுக்கு மகளாகப் பிறந்த ஆதிமந்திக்குக் கலைஞனான ஆட்டன் அத்தி என்ற வடசேர இளவல்மீது காதலெழுந்தது. அத்தி கரிகாலனின் வெண்குடைக்கு அடங்கிய சேரமண்ணின் மன்னனாக ஆனான். உள்ளம் கவர்ந்த ஆண்மகன் மீது பெண்ணுக்கு ஏற்படும் பித்து ஆதிமந்திக்கு அவன்மீது இருந்தது. ஆனால் அவன் மனத்தில் எப்போதும் அவள் மாமன்னனின் செல்வ மகள் என்ற எண்ணமே ஓங்கி நின்றது. நாள் செல்லச்செல்ல அது மேழெழுந்தது. அவளது சொல்லும் செயலும் அனைத்தும் அவனைச் சிறுமைப்படுத்துவதாகவே அவன் உணர்ந்தான். அவளுடைய கண்களில் பெருகிய காதலும் இதழ்களின் இனியசொற்களும் அவன் எண்ணத்தில் ஏறவில்லை.

புதுப்புனல் விழவுக்காக அவர்கள் புகாருக்கு வந்தபோது விழவு முறைப்படி அவர்கள் சேடியர் பாங்கர் புடைசூழக் காட்டுக்குச் சென்று தழையாடை அணிந்து மலர்கள் சூடிக் கள்ளும் ஊனுணவும் உண்டு மகிழ்ந்திருந்தனர். குடகில் பிறந்து எட்டு மன்னர்களின் மண்ணில் பரந்தொழுகி வந்தாலும் காவிரிக்கு சிறையும் கரையும் கண்டவன் கரிகாலனே என்றாள் ஆதிமந்தி. அச்சொல் அம்புபோலத் தைத்ததாக உணர்ந்த அத்தி தன் மலை நிலத்தில் அடங்காத பெருங்காட்டாறுகள் ஏராளம் என்றும் அவற்றை மூங்கில்வேலி சார்த்தியே உழவர்கள் தடுப்பார்கள் என்றும் சொன்னான். காவிரியைச் சொன்னது பொறாமல் ஆதிமந்தி காவிரி உங்கள் கைகளுக்கு அடங்காது என்றாள். அடக்கிக் காட்டுவேன் என்று அவன் உடைவரிந்து எழுந்தான். மலைச்சுனை யருகே அவர்கள் அமர்ந்திருந்தனர். சினத்துடன் எழுந்த அத்தி என் கைகளுக்குக் கங்கையும் கொடியே என்றபடி சுனைச் சிற்றோடையைத் தாண்டிக்குதித்தான். கால்தடுக்கி அச்சிற்றோடையில்

விழுந்தான். அவனது அவச்சொல் ஆறுகளின் அன்னையாகிய 'கங்கையின் காதுகளில் விழுந்தது. தன் அனைத்து வல்லமை களையும் அச்சிற்றோடையில் நிறுத்திய அன்னை அவனை மலைப்பாம்பென அப்படியே அள்ளிச்சுருட்டிக் கீழே கொண்டு சென்றாள். அலறியபடி ஆதிமந்தி பின்னால் ஓடினாள். அத்தி பின்பு மீளவில்லை.

தன் சொல் நுனியில் குடியேறிய துளி நஞ்சே அவனைக் கொன்றது என்றறிந்து நெஞ்சு கலங்கிய அன்னை பின் நீரிருக்கும் இடமெல்லாம் நெஞ்சுடைந்து அலைந்து திரிந்தாள். அலைகளி டமும் சுழிகளிடமும் அருவிகளிடமும் தன் கொழுநனை அளித்து விடும்படி மன்றாடினாள். அவள் சென்றமர்ந்த படித்துறைகளிலெல் லாம் ஆலயங்கள் எழுந்தன. அவள் நீர் வழியே கடலை அடைந் தாள். கடலின் விரிவெங்கும் தன் காதலன் நிறைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து கூவியபடி கடலேறி மறைந்தாள். பின்பு சோழன் அவளுக்காக ஐம்பொன்னில் சிலை செய்து கடலோரம் ஆலயம் அமைத்தான். கணவனைப் பிரியாதிருக்கப் பெண்டிர் அங்கே திங்கள்நோன்பு நோற்று உப்பில்லா அப்பம் படைத்து வணங்கும் வழக்கம் ஏற்பட்டது.

அச்சோலையின் பெயர் சிறுவேலங்காடு என்று முது பண்டாரம் தன் சிறுமுழவை முழக்கிச் சொன்னார். அந்த சிற் றோடை ஒருகாலத்தில் மேலும் வன்மை கொண்டதாக இருந்தது. ஆதிமந்தி தன் காதற்கணவனை இழந்த இடம் அதுவே. அவ் வாலயத்துக்குரிய மரம் சிறுவேலம். நுனிகூர்த்த சிறுமுட்கள் பரவிய உயரமற்ற அம்மரத்தைக் காட்டிப் பண்டாரம் சொன்னார். "இம்முள் மிகமெல்லியது. ஆகவே இது நம்மைத் தீண்டுகையில் வலியிருக்காது. தீண்டியவிரைவில் இதன் நுனி உடைந்து குருதியில் கலந்துவிடும். உள்ளே இது வெம்பிச் சீழ்த்து உயிரை மெல்லமெல்ல உண்ணும்." கண்ணகி இயல்பான விரைவுடன் அதைத் தீண்டப் போனபோது கோவலன் அவளைப் பற்றி பின்னால் இழுத்தான். "ஆதிமந்தி அன்னையின் அச்சொற்கள் மண்ணில் முளைத்து இம்மரம் உருவானதாகக் கதைகள் சொல்கின்றன" என்றார் பண்டாரம்.

ஆதிமந்தி வாழ்ந்த சிறுவேலங்காட்டுச் செம்பொழில் தாண்டி மூவரும் மலைமடக்குகளில் ஏறத் தொடங்கினர். சிறுவேல மரத்தடியில் நின்று கண்ணகி கீழே பார்த்தாள். பச்சைப் பெருங்கடல் போல அலையடித்து விரிந்து கிடந்தது மருதம். அவள் பார்வையைக் கண்டு நீலி வந்து காதருகே சொன்னாள். ''ஆம், எல்லா நிறமும் உதிர நிறம் உருமாறி ஆனதே.'' கண்ணகி பெருமூச்சுவிட்டாள்.

ஓ

3

குறிஞ்சி

குலக்கதை சொன்னது

விதைகளெல்லாம் முளைக்கும் ஈரமே குறிஞ்சி. வேர் முதல் இலைநுனிவரை மரம் அறிந்த அனைத்து இனிமைகளும் மலரின் ஆழத்துக்குள் தேனாக ஊறும் இடம். கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் ஏறிச்சென்ற மலைப்பாதை மேயச் செல்லும் கன்றுகாலிகளின் குளம்புத் தடமளவே அகலமானது. அதன்மீது கொடிச்சுருளில் எறும்புகள் ஏறுவதுபோலச் சென்று அவர்கள் மலைமீது ஏற ஏற மெல்லக் குளிரும் ஈரமும் காற்றின் கூதலும் காட்டின் ஓதையும் அவர்களைச் சூழ்ந்துகொண்டன. நெடுந் தொலைவில் குயில்கள் சில சேர்ந்து குரலெழுப்பின. அப்பால் குறுமுழவு கூகையொலிபோலக் குமுறுவதைக் கேட்டனர். மலை விளிம்பில் நின்று பச்சை மடிப்புக்கு அப்பால் நோக்கியபோது அம் மலையின் மேகச்சிதறுகள் பரவிய செங்குத்துக் காட்டின் உள்ளே இருந்து வெண்புகை பட்டு மேலாடைபோல வான்நோக்கி எழுந்ததைக் கண்டனர். குறுமுழவொலி கேட்டு அஞ்சிய சிறுசெங் குருவிகள் வீசப்பட்ட செப்புநாணயங்களெனக் காற்றில் சிதறி யெழுந்தன. பின் குன்றக் குறமகளின் இனியகுரலில் பாடல் எழுந்தது.

கண்ணகி தன்னுள் ஏதோ மெல்லிய வலி ஒன்று முளைப்பதை உணர்ந்தாள். ஏதுவற்ற ஏக்கத்தில் நெஞ்சு விம்ம கண்களின் ஈரம் வேல்நுனி உதிரமெனத் துளித்து உலர காலடிகள் விழும் நிலம் நோக்கி நடந்தாள். அவள் காதருகே நெருங்கிய நீலி மெல்ல நகைத்து ''இந்தக் காட்டை நீ நோக்க விழைகிறாயா?'' என்றாள். திடுக்கிட்டு விழித்து கண்ணகி ''இல்லை இல்லை'' என்றாள். மேலும் சிரிப்ப எழ ''ஏன் ?'' என்றாள் நீலி. ''இல்லை. நான் சோர்ந்துவிட்டேன்...'' என்றாள் கண்ணகி. ''உன் விழிகள் தூண்டில் கெண்டைகளெனத் துள்ளுகின்றனவே... உன் பாதங்கள் பயந்த முயல்களெனப் பதுங்கவும் செய்கின்றன. உன் நெஞ்சுக்குள் அடக்கமுடியா வல்லமையுடன் புரிசுருள் ஒன்று விசைகொள்கிறதல்லவா?'' என்றாள் நீலி. ''சீ மாயக்காரி. பசப்பாதே... போ'' என்றாள்

கண்ணகி. ''குறிஞ்சியில் எல்லா மலர்களும் மலர்கின்றன....'' என்று நீலி சிரித்தாள். ''நீ விழைந்தால் உன்னை இக்குரங்கின் கண்களுக்கு அனுப்புவேன். மலைகளைக் காண அதுவே உகந்த பார்வை.''

கண்ணகி ஒன்றும் சொல்லாமல் நடந்தாள். அவள் அருகே புன்னகை ஒளிரும் முகத்துடன் நீலி. கோவலன் திரும்பி ''இரு மருங்கும் கைநீட்டுகின்றன துடலிமுட்கள். உன் மென்தோலை அவை வீறிவிடக்கூடும். நோக்கி நட'' என்றான். மென்மையான புன்னகையுடன் அவனை ஏற்றபோது அவள் நெஞ்சில் ஒரு முள் முனை கொண்டது. என் நெஞ்சில் வீறும் முட்களை இவன் என்றுமே கண்டதில்லை. என் மென்தோலே இவனறிந்த நான். நானோ என் மாமைநிறத் தோலுக்குள் என்னை மறைத்துக் கொண்டவள். அவள் புன்னகை புரிந்தாள். நீலியிடம் திரும்பி ''அன்னையே, நான் குரங்குவிழிகளைக் கோருகிறேன்'' என்றாள்.

மலை நிகழ்குறிஞ்சியில் தாவித்தாவிச் சென்ற குட்டிக்குரங்கில் அமர்ந்தபோது கண்ணகிக்கு மரங்கள் என்பவை ஒரு பெரிய ஆற்றின் நீரோட்டத்து அலைகள் மட்டுமே என்று பட்டது. காடு ஒரு மாபெரும் ஓட்டம். மலை அதன்மீது மிதக்கும் அசைவு. பூத்த மரங்கள் நுரைத்த காடெங்கும் இன்கள் நிரம்பியிருந்தது. தளிர்களிலிருந்து அதை மான்கள் உண்டன. கனிகளிலிருந்து குரங்குகள் உண்டன. மலர்களிலிருந்து தேன்சிட்டுகள் உண்டன. கள் மீண்டும் மீண்டும் ஒன்றையே உணர்த்துகிறது, மனமும் உடலும் பிறிதொரு வரால் களி நிரப்பப்படவேண்டிய கலங்கள். ஒருபோதும் முழுக்க நிறைந்துவிடாதவை. காட்டைக் காமத்தால் காண வேண்டும் என்றறிந்தாள் கண்ணகி. பசுமைப் பேரலைகளின் உறைவுமீது அவள் நீந்திச் சென்றாள். மலர்களின் ஒளியில் தன் உடல் தங்கநிறம் கொள்வதைக் கண்டாள்.

தென்திசை முகில்கள் ஒன்றை ஒன்று முட்டி மேலேற்றி நிரப்ப வானம் மெல்லக் கருமை கொண்டது. காட்டில் பல நூறு வகையான புதிய சூரல்கள் எழுந்து அவ்விளம் குளிரை வரவேற்றன. காற்று வீசியபோது மரக்கிளைகள் உறுமி உரச இலைத்தழைப்புகள் அருவியெனத் தழங்கின. கொடிகள் ஆட்டின் காதுகள்போலச் சடசடவென்று அடித்துக்கொண்டன. வேங்கை மலர்க்கொத்துகள் உலைந்து மலர்மழை கொட்டியது. இருண்ட காட்டுக்குள் ஒளிரும் மலைச்சுனை ஓடைபோல நாகங்கள், சருகுகள் அசையாது நெளிந்தோடின. மலையுச்சிக் கரும்பாறைகள் மென்தோல் சிலிர்க்க அவற்றின் விரிசல்களில் மதநீர் ஊற்றுக்கு மேல் சிறுமணிவிழிகள்

திறந்தன. பின் மெல்ல மேகவாசல் ஒன்று திறக்க உருகும் பொன் ஓர் ஓடையாக, உருகும் செம்பு பிறிதோர் ஓடையாக மண்ணில் இறங்கின. வேங்கைபூத்த பொன்வெளிமீது அவ்வருவிகள் பரவக் காடெங்கும் நாணயங்கள் சிதறிப் பரவிக் குலுங்கின. முகில்களின் கீழ்நுனி கிழிந்து பொன்துருவல்கள் பெய்தன. காட்டுயானைகள் மீது மண்பூச்சு கரைந்துருகி வழிந்தது. பூம்பொடி பரவிய புதரிலைகள் கழுவப்பெற்றன. சிறுகாற்று தன் பூந்துடைப்பம் சுழற்றிவந்து மழையை அள்ளி மேற்காக ஒதுக்கியது. காடு அடங்கியபோது இலைநுனிகள் சொட்டும் மென்மையான நரம்புத்துடிப்பில் அது கூடல் முடிந்த தலைவிபோல மயங்கிக்கிடந்தது

உச்சிமலையின் பெரும்பாறையின் ஒருபக்கம் மட்டும் கருமையாக நீர் வழிந்திருக்க அதன்மீது சாமரச்சிறகுகள் கூடுவதை ஒரு பேராலமரத்தின் உச்சிக்கிளையிலமர்ந்து கண்டாள் கண்ணகி. தடையற்ற வெட்டவெளி ஒன்றில் ஓடும்போது தன் ஆடைகள் அவிழ்ந்து பறப்பதுபோல உணர்ந்தாள். தன் உடலை வயமா வழங்கும் காட்டின் ஆயிரம் பல்லாயிரம் கைகள் தீண்டி வருடி எழுப்புவதை அறிந்தாள். உள்ளம் எதுவரை என்றறிந்தாள். உடலென்பது என்னவென்றும். அப்போது அவள் அகம் ஒளிவிழி முகங்களால் திண்தோள்களால் விரிமார்புகளால் ஆனதாக இருந்தது.

ஓ

கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் மலைச்சரிவில் நடந்து மலைக்குறவர் வாழும் சிற்றூரை அடைந்தனர். கருமுகத்துப் புன்னகைபோல வெள்ளருவி நுரைத்து வழியும் சரிவில் புல் வேய்ந்த குரம்பைகளினாலான மலைக்குடிகளின் கூடு. கூரைகள் மீது வேங்கையும் கோங்கும் மலர்மழை பெய்த மஞ்சள்பரப்புமீது இளமழை ஊறி முற்றத்தில் நறுமணப்பன்னீர்த் துளி சொட்டும் குடில்கள் முன் முதுகுறமகளிர் அமர்ந்து கூடைகள் முடைந்து கொண்டிருந்தனர். சுரைக்காய்க் குடுக்கையில் மலைத்தவளை தோல் வாங்கிக்கட்டிய சிறுபறைகள் முழக்கிக் குறச்சிறார் கூவி ஆர்ப் பரித்து விளையாடினர். கானகக்களிறும் கருமாவும் கடியும் பொருட்டு மரங்கள்மீது கட்டப்பட்டிருந்த முழவுகளில் காற்றில் சுழலும் குறுந்தடி அடித்து எழுப்பும் ஒலி அவர்களை அச்சுறுத்து மாறு வரவேற்றது. பின்பு வேட்டைநாய்கள் சினம்கொண்டு குரைத்துத் தாவின. ஒலி கேட்டு வந்த முதுகுறத்தி அவற்றை விரட்டி அவர்களை இரு கைகளையும் நீட்டிப் புன்னகையுடன் வர வேற்றாள்.

அவர்களைச்சுற்றி முதுபெண்டிரும் சிறாரும் கூடினர். அவர்கள் காட்டுப்பட்டைகளை ஊறப்போட்டு நீவிப் பின்னி நெய்த உடைகளும் கருங்கொண்டைகளில் பலவித மலர்களும் கழுத்தில் விதைகளினாலான கருகமணி செம்மணி மாலைகளும் அணிந்திருந் தனர். அவர்கள் பற்கள் வெண்முத்துக்கள்போலப் பெரிதாக ஒளி யுடன் இருப்பதைக் கண்ணகி கண்டாள். தேன் தந்து அவர்கள் விருந் தோம்பியபோது அருகநோன்பு கொண்ட கவுந்தி அதை மறுக்க கோவலனும் மறுத்தான். பின்பு தீம்பலாச்சுளையும் தேன் மாவிழுதும் அவர்களுக்குத் தேக்கிலையில் பரிமாற அவர்கள் உண்டனர். கவுந்தி பெரும்பலா மரத்தடியில் அமர்ந்து ஓய்வு கொள்ள கண்ணகி புற்குடிலுக்கு உள்ளே தருவைப்புல் மெத்தை மீது படுத்தாள்.

இரவு வரும் முன்னரே இருளும் குளிரும் வந்தன. தொலை

தூரத்து நீல மலையடுக்குகளில் இருந்து அவை இறங்கி வருகின்றன என்றாள் முதுகுறத்தி. இலைகள் குளிர்ந்து சொட்டுமொலி கேட்க பறவைகள் கூடணையும் ஆரவாரம் எழுந்தது. காட்டுக்குள் இருந்து மலைக்குறவர் கூட்டங்கள் ஒவ்வொன்றாக வந்தன. தேனும் கிழங்குகளும் காய்கனிகளுமாகப் பெண்கள் வந்தனர். வேட்டைப் பொருள்களுடன் ஆண்கள். குறமுதியவள் எழுந்து சென்று கவுந்தி வந்திருக்கும் செய்தியைச் சொன்னாள். கொன்று சுமந்துவந்த மானை அவர்கள் பின்புறம் அடர்காட்டுக்குக் கொண்டுசென்று தோலுரித்தனர். வேகாச் சிற்றுணவை முடித்து இருளுக்குமுன் உறங்கும் சமணமரபுப்படி கவுந்தி முன்னரே துயில் கொண்டாள். குறவர் ஊர் முற்றத்தில் விறகுகள் அடுக்கித் தீயிட்டனர். சமைத்த மானைக் கொண்டுவந்து அங்கே தொங்கவிட்டனர். இடித்த தினை மாவில் தேன்விரவி மரக்குடுவைகளில் வைத்தனர். சுட்டகிழங்கு களும் கனிகளும் பரப்பப்பட்டன. குறவர் குழாம் சுற்றி அமர்ந்து உண்டது. களிச்சொற்களும் கனிந்த மொழிகளுமாக மகிழ்ந்தது. குறப்பாடகன் ஒருவன் ஏழு மூங்கில்குழல்களைச் சேர்த்து அமைத்த சீனத்தைச் சிறுகோலால் இசை வரிசைப்படி தட்டி மீட்டினான். ஊன்நாண் இழுத்துக் கட்டிய சுரைக்குடுவை யாழை ஓர் இளைய வன் வாசித்தான். அதிராத தாளமும் மெல்லிய இசையும் தேன் தினைபோலக் கலந்து விம்மின.

கோவலன் அவர்களுடன் அமர்ந்துகொண்டான். அவர் களுடன் உண்டான். அந்தச் சிறுயாழை வாங்கி அதன் அதிர் வரிசையை விரல்களால் தொட்டுத் தொட்டு அறிந்தான். பின்பு அவர்கள் மகிழ கடலின் இசைப் பாடலொன்றை வாசித்தான். அவ்விசையின் அலைகள் ஏன் விரைவாக உள்ளன என்று அவர்களில் ஒருவன் கேட்டான். சுழன்றடிக்கும் அலைகளினா லான நிலையற்ற நிலமே கடல் என்றான் கோவலன். அவர்களறிந்த மலையலைகள் காலங்களை உண்டு நிலைத்தவை. கடலோ கணமே யுகமாகக் கொந்தளிப்பது. அந்த மாபெரும் உளக்காட்சியை உள்ளம் தாளாமல் குறவர் அமைதி கொண்டனர். அவர்களின் மலைமீது ஓங்கி உலகளக்க நிற்கும் நெடுமாலே அந்தக் கடல்கள்மீது விரிந்து திசைநிறைக்கும் பெருமாள் என்றான் கோவலன். அவர்களில் முதுகுறவர் கைகூப்பி கண்ணீர் மல்கி மலைநின்ற மாலின் புகழ் பாடினர்.

பின்பு புதைக்கப்பட்டிருந்த அரியல்கலயங்களைக் கொண்டு வந்து திறந்தனர். அரியலுக்குரிய மலைத்தெய்வத்தை வணங்கிச் சிறிது அள்ளி நெருப்பில் விட தெய்வத்தின் சுடர்நா துடித்து அதை

நக்கி உண்டது. மணம் மிக்க அரியல் கொழுப்பை மூங்கில் கோப்பைகளில் விட்டு அருந்தி ஆணும் பெண்ணும் களிவெறி கொண்டனர். இரு இளையோர் எழுந்து மலர்கொண்ட மரக்கிளை கள்போலக் கைகளைச் சுழற்றி ஆட பிறர் கைதட்டிச் சிரித்தனர். மேலும் மேலும் குறவர் எழுந்து கைகள் பிணைத்து காற்றுபட்ட இளங்கானக மரக்கூட்டங்கள்போல அசைந்தாடினர். ஆண்களும் பெண்களும் உடல்தழுவி ஆட கோவலன் அவர்களுக்குக் காமம் ஒளிரும் பாடல்கள் சிலவற்றைப் பாடிக்காண்பித்தான்.

''உங்கள் நாட்டில் இதைப்போலக் குடிமகிழ்வு கொண்டாடு வீர்களா?'' என்றான் முதுகுறவன். ''ஆம், அதன் பெயர் உண்டாட்டு. எதிரிகளை வெல்லும்போது நாங்கள் அதைக் கொண் டாடுவோம்'' என்றான் கோவலன். ''நாடொறும் எதிரிகளை வெல்வீர்களா?'' என்றான் முதுகுறவன். ''இல்லை எப்போதாவது தான்'' என்றான் கோவலன். ''வென்று வென்று பின் எதிரிகள் எஞ்சவில்லையென்றால் நீங்கள் மகிழவே இயலாதே'' என்று ஒரு சிறுவன் கேட்க முதுகுறவன் ''அவர்களுக்கு எதிரிகள் முடிவடைய லாகாது என்று அவர்கள் தெய்வங்கள் வாக்களித்துள்ளன போலும்'' என்றான். கோவலன் நெருப்பின் நடனத்தையே நோக்கி அமர்ந்திருந்தான். எரிப்பதனால் மட்டுமே தானிருக்கும், எரிந்தவை அழிந்தால் தானுமழியும் எரி.

பின்பு ஆடவரும் பெண்டிரும் அயர்ந்து நெருப்பைச் சுற்றிக் கூட முதுகுறவன் தன் சிறுமுழவை மீட்டிக் கோவலன் கேட்கத் தன் தொல்கதைப் பாடலைப் பாடினான். தொலைதூரத்துத் தென்திசை யில் இருந்தது ஒரு பெரும்குன்றம். அதன்மீது ஒற்றைப்பாதம் நாட்டி கண்விரிய வானம் நோக்கி தவம் செய்திருந்தது ஒரு தெய்வம். அதன் பெயர் குமரி. அத்தெய்வத்தின் நிழலில் வாழ்ந்த மக்களில் உருவத் தால் குறியவர் அவர்கள். ஆதலால் அவர்கள் குறவர் என்றழைக்கப் பட்டனர்.

குறவர்குலம் மலையின் ஊனெலாம் உண்ண அனுமதிக்கப் பட்டிருந்தது, அன்னையின் சாயல்அழகைத் தங்கள் தோகை களாகக் கொண்ட மயில்களைத் தவிர. மலைக்குறவன் ஒருவன் வேட்டையாடியபோது கூட்டிலிருந்து விழுந்த இளமயில் ஒன்றைப் பிடித்துச் சுட்டு உண்டான். மரம்மீதிருந்து அன்னைமயில் அம்மா என்று குரல் கொடுத்தது. அன்னையின் கண்ணின் ஒளி இரவில் ஒரு நீலவிண்மீன் போலச் சுடர்ந்து அவர்கள் கூரைகள்மீது விழுந்து நஞ்சாயிற்று. நஞ்சு நிலத்தில் பூக்களில் கனிகளில் பரவியது. அவர்கள் குலப்பெண்டிரும் குழந்தைகளும் அதன் வெம்மையில்

சுருண்டுவிழுந்து உயிர் துறந்தனர். குலப்பூசகர் வெறியாடி அகநாவால் சொல் தேர்ந்து அன்னையின் கோபத்தைச் சொன்னார். அன்னையின் கோபம் பெற்ற குலம் அவள் காலடி நிழலில் வாழ லாகாது என்று வசைகொண்டது. அவர்கள் ஏழுமலையும் ஏழு பாலையும் ஏழு பேராறும் கடந்து வந்தபோது மாமழை சூடிப் பசுமை பொலிந்து நின்ற அக்குன்றத்தைக் கண்டனர். அதை பிறக் குன்றம் என்று அவர்கள் அழைத்தனர். அங்கே வேட்டையாடி வாழ்ந்தனர்.

அவர்கள் குலத்தை ஆண்ட வேடுவமன்னன் மனைவி ஒரு நாள் கிழங்கு தேடச் சென்று வள்ளிக்கொடி அகழ்கையில் மான் ஒன்றைக் கண்டாள். அதன் விழிகளின் மருளழகு கண்டு மையல் கொண்டாள். அன்றிரவில் அவள் கனவில் ஒளிமிக்க கண்களுடன் வந்த அந்த மான் 'உன்னில் பிறப்பேன்' என்றது. மனைவி கரு வுற்றாள். அக்கனவைக் கேட்ட குலப்பூசகர் மானாக வந்தவள் குமரி அன்னையே என்று சொல்லப் பிறந்த குழந்தைக்கு வள்ளி என்று பெயரிட்டனர். மலைகளில் மலர்ந்த மலர்களின் அழகெல்லாம் கொண்டு வள்ளி வளர்ந்து கன்னியானாள்.

வள்ளி தினைப்புனம் காக்கையில் அங்கே வேட்டையாட வந்தான் ஆறுமுகக் குலத்து அழகன் ஒருவன். தென்திசை ஆழத்தில் இருந்து வந்து வேலோடு விரிநிலத்தில் பரவிய அறுமுகக் குலம் அன்று அனைவரும் அஞ்சும் வல்லமையுடன் இருந்தது. அவர்கள் இலச்சினை சேவல். அக்குலத்து மன்னனாகிய அவன் பெயர் குமரன். அவன் வடபுல மன்னன் மகளொருத்தியை மணந்து தென் நாடெங்கும் கோலோச்சி வந்தான். வேட்டையாட வந்தவன் குறவர் குலப் பேரழகியைக் கண்டு காதலுற்றான். அவன் கொண்ட காதல் வேங்கைமரம் பூத்ததுபோல இலையெல்லாம் மலராகிக் கிளை செறிந்து தழை நிறைந்தது.

குமரன் குறமங்கைமுன் ஒரு முதியவனாக வேடமிட்டு வந்து அடைக்கலம் கோரினான். வேட்டுவர் தலைவன் அவனையே தன் மகளுக்குக் காவலனாக்கினான். முதியவனின் சொல்வன்மையில் தன்னை இழந்தாள் குன்றக்குறமகள். ஏனல்வயல் காக்கையில் மதவேழம் ஒன்று செவி சிலிர்த்துப் பிளிறிவர அஞ்சி அவள் அவன் மார்பில் சாய்ந்தாள். அவன் அவளை முலை நெகிழ அணைக் கையில் அவை முதியவனல்ல என்று அறிந்தாள். வேழம் பொருத வேங்கைமரம்போல அவன் ஆனான்.

குறமங்கையுடன் அவன் மலையிறங்கிச் சென்றான். அவளைக் காணாத வேட்டுவகுலம் தேடிச்சென்றது. அவள் கொற்றவை

படைகளுடன் பொருதி வேட்டுவர் நூறு பேர் மறைந்தனர். போர்க் களத்தில் அவனை நேருக்குநேர் கண்ட வேட்டுவ மன்னன் குமரன் ஏறிவந்த தேரில் மயில்தோகையைக் கண்டு செயலற்றான். மயிலேறி வருபவன் தன் குலநினைவுகளில் நிறைந்திருக்கும் குமரி நிலத்தை சேர்ந்தவன் என்று தெளிந்தான். அவனிடம் தன் வேலைத் தாழ்த்தி அடங்கினான். குமரவேந்தனுக்கு உரியதாக ஆயிற்று பிறக்குன்றம்.

திருப்பிறக்குன்றம் அமர்ந்து கோலோச்சும் குமரவேந்தனே தங்கள் குலமூதாதை என்று பாடினான் குறப்பாடகன். மாமதுரை வரை விரிந்துகிடக்கும் பசுங்குன்றங்களில் வாழும் பல்லாயிரம் குறமக்களுக்கு அவன் வேலே காப்பு. குறப்பாடகன் பாடல் முடியும் போது அக்குலத்துக் குறமக்கள் எரியும் தீயருகே ஆங்காங்கே சுருண்டு துயில் கொண்டனர்.

சுரைக்குடுவை யாழை மெல்ல அருகே வைத்துவிட்டு எழுந்து திண்ணையில் படுத்த கோவலன் பெருமூச்சுடன் எண்ணிக் கொண்டான், அவனைப் புகாரின் பெண்கள் செவ்வேள் என்று ஏத்துவதுண்டு என. காட்டின் உள்ளே மரங்களை நாண்களாக்கி மாபெரும் யாழிசை ஒன்று எழுந்துகொண்டிருந்தது. அதன் எண் கணக்கைத் தொட்டு அள்ள அவன் தேர்ந்த யாழ்தேர் அகமும் இயலாது ஓய்ந்தது. ஏமாப்பு எழுந்து நெஞ்சு கூத்தாடியது.

ஃ

மன்மருள்விழிக் குறமகள் வள்ளி வேட்டுவர் தலைவனின் ஒரே மகள். போர்க்குணம் ஓங்கிய வேட்டுவர் குலத்தை அஞ்சிய வேளிர்குலத் தலைவரும் ஆயர்குலத் தலைவர்களும் அவளைப் பெண்சிறை கொள்ள விழைந்தனர். கொண்ட பெண்ணை மீட்க இயலாது போனால் வேட்டுவர் குலம் உதிர உறவை ஏற்றாகவேண்டும் என்பது மலைகளையும் நிலத்தையும் கடலையும் பிணைக்கும் நெறி. வேட்டுவர் குலத்துடன் உதிரத் தொடர்பு கொண்ட நிலத்தவர் குலம் வெல்லமுடியா வாள் வல்லமை கொள்ளுமென்பதை அனைவரும் அறிந்திருந்தனர். ஆகவே அனைவரும் அவளைச் சிறைகொள்ள விழைந்தனர். பல் முளைத்துச் சொல் முளைக்கா நாள் முதல் வள்ளி காவலுக்குள் வாழ்ந்தாள். வாளேந்திய மறவர்கள் காவல் சூழும் வேட்டுவன் இல்லத்து இருள் நிறைந்த அறைகளில் அவள் மீண்டும் மீண்டும் அன்னையரையும் தோழியரையும் கண்டு வளர்ந்தாள்.

தன் முற்றத்தில் வந்திறங்கிய ஒரு கிள்ளையின் அழகில் மயங்கிய அவள் தன் தந்தையிடம் மலையழகைக் காண விரும்புவதை அழுது மன்றாடிச் சொன்னாள். அவள் அழுகையைக் கண்டு உள்ளம் கனிந்த தந்தை தன் தினைப்புனங்களில் ஒன்றைப் பெருங் காவல் சூழச்செய்து அதற்குள் காட்டுக்கிளி கடிய அவளைத் தோழியர் சூழ அனுப்பினான். வள்ளி பூத்த மலர்க்கிளை ஏந்தி மரக் கிளைகள் மீது கட்டிய மலர்மாடத்தில் அமர்ந்து ஆலோலம் பாடிப் புள் விரட்டி விளையாடினாள்.

கன்னி இல்லம் நீங்கிய சேதி ஒற்றர்மூலம் மண்ணில் பரந்தது. மன்னர் பலரும் அவளைக் கவர எண்ணி வந்து காவல் கண்டு அஞ்சி மீண்டனர். தென்நிலத்தை ஆண்ட ஆறுமுகக்குலத்து மன்னன் குமரனிடம் அவன் அமைச்சர்கள் சென்று அதுவே தருணமென்று அறிவுறுத்தினர். மலைகளை ஆளும் வேட்டுவர் குலங்கள் ஆண்டுக்கு மும்முறை போர்க் கோலமேந்தி நிலமிறங்கி ஊர்களை வளைத்துக் கொள்ளையிட்டுக் கன்று கவர்ந்தும் விளை கொண்டும்

செல்வது வழக்கம். எட்டுத் தலைமுறையாக ஆறுமுகக்குல மன்னர்கள் போராடியும் மலைவேட்டுவர்களை வெல்ல இயல வில்லை. மலையேறிப் போர் செய்வது மறவர் அறியாக் கலை. வேட்டுவர் மலையிறங்கும் நாளும் இடமும் நிமித்திகரும் தேராத மந்தணம். மலைவள்ளியை மன்னன் சிறையெடுத்தால் வேட்டுவ குலம் தலைவணங்கியாக வேண்டும் என்றார்கள் அமைச்சர்கள். கவர்மணமும் கடிமணமும் மன்னருக்கு நெறியாகும் என்றனர்.

வேல்திறல்வீரன் குமரன் முதியோன் வேடமிட்டு மலையேறி வந்தான். பிச்சை ஏற்க விழைபவனாக நடித்து வேட்டுவர் தலைவன் இல்லத்துக்குச் சென்று உள்ளம் கவர்ந்தான். நூலறிந்தவனாகிய முதியோன் தன் மகளுக்கு நற்றுணையாவான் என வேட்டுவன் அவனைத் தன் மகளுக்கு ஆசிரியனாக்கினான். ஏனல்விளை காக்கும் கன்னியுடன் பைம்பொழில் சென்று சொல் விளையாடியும் நகையாடியும் முதியவன் அவளுக்கு வெளியுலகைக் கற்பித்தான். அவள் நெஞ்சில் அறியா உலகங்களின் கனவை நட்டு வளர்த்தான்.

ஒளிமிக்க கொடி பறக்கும் பொன் வேய்ந்த மகுடங்கள் கொண்ட மாளிகைகள் அணிவகுக்கும் பெருநகர்களைப்பற்றி முதியவன் சொன்னான். அவற்றில் நீரோட்டம்போலச் சுழிக்கும் மக்கள் வெள்ளம். கொள்ளக் கொள்ளக் குறையாத ஆடைகளும் அணிகளும் நறுமணங்களும் இனிமைகளும் நிரம்பிய கடைவீதிகள். மருப்பில் பொன்மாடங்களேந்திய மதயானைகள். அம்மாடங் களில் பட்டாடை பறக்கச் சிரித்து மகிழ்ந்து நாடு காணச் செல்லும் மகளிர். அந்நகரை ஆளும் அறுமுகக்குல வேந்தன் குமரனின் அழகிய தோற்றம். வான் மண் சேர்த்து ஆறுதிசையையும் காணும் ஆறுமுகங்கள் கொண்டவனாக அவனை எண்ணினர் அவன் குடிகள். அவனுக்கு ஆறு படைவீடுகள். ஆறு அமைச்சர் குழுக்கள். பேரெழில் கொண்டவனாதலால் அவனை முருகன் என்று கொண் டாடினர் கன்னியர். குமரன் புகழ் கேட்டு வள்ளி அவன்மேல் மையலானாள். ஒருநாள் தினைப்புனத்துக்குள் வந்த மதயானையை வேலேந்தி விரட்டியபோது முதியவனே குமரன் என்று அறிந்தாள். அவனுடன் ஒன்றானாள். அவன் கைப்பற்றி மலையிறங்கி அவன் நகரை அடைந்தாள்.

அங்கு சென்றபின்பே அவனுக்குப் பட்டத்து அரசி ஒருத்தி முன்னரே இருப்பதை அறிந்தாள். மறக்குலத்து இளவரசி தெய்வ யானை அவளை எதிர்கொண்டழைக்கையில் புன்னகை இல்லா முகம் காட்டி அவள் இடம் அங்கு என்ன என்பதைச் சொன்னாள். தனக்கென அளிக்கப்பட்ட வெண்மாளிகையில் சேடியரும்

தாதியரும் சூழச் சிறையிருப்பதாக உணர்ந்தாள் வள்ளி. பொன் வேய்ந்த மாளிகையில் விரும்புவதெல்லாம் வந்துசேரும் சூழலில் விரும்புவது ஒன்று தவிர வேறெல்லாம் முன்னாலிருக்க அவள் சிறையிருந்தாள். இரவணைந்தபிறகு தெய்வயானை அறியாது வரும் குமரனின் சொற்களிலேயே அவள் விரியுலகைக் கண்டாள். அவன் குலம் பெருகி வந்து குமரனின் படைகளுடன் பொருது மாண்டதையும் ஆயுதங்கள் அடக்கித் தலைதாழ்த்தி அவள் தந்தை மீண்டதையும் கேட்டாள். தன் குலத்தின் தோல்வி அந்நகரில் பாணரின் யாழொலியுடன் இயைந்து இசையாவதைக் கேட்டாள். இரவின் தனிமையில் பஞ்சணையில் முகம் புதைத்துக் குமுறி அழுதாள். வெறுஞ்சொற்கள்கூட ஆசை கொண்ட மனத்தைப் பித்தாக்குகின்ற மாயமொழியாகும் விந்தையை அப்போது அறிந்தாள். எண்ணி எண்ணி வியந்தும் நொந்தும் கிடந்தாள்.

தன் உலகின் ஆறு திசைகளும் கரிய கல்லால் மூடப்பட்டு விட்டதை அவள் கண்டாள். அதில் மெல்லிய தாழ்விரிசலாக அவன் கண்டது குமரனின் காதற்கணங்களை மட்டுமே. தன் கனவுகளையும் எண்ணங்களையும் தன்னுணர்வையும் மெல்ல மெல்ல இல்லாமலாக்கித் தன்னை ஓர் உடலாக ஆக்குவதனூடாகவே அவனை மேலும் மேலும் அணுகமுடியுமென அவள் கண்டாள். அவன் விரும்பும் உடலாகத் தன்னை உருமாற்றிக் கொள்வதே அவள் வாழ்வென ஆயிற்று. அவளது வெற்றி தெய்வயானையை எப்படிச் சென்றடைகிறது என்று அவள் வியந்தாள். ஒவ்வொரு நாளும் தெய்வயானையின் கோபமும் அதன் விளைவாக அவள் காட்டும் அவமதிப்பும் ஏறி ஏறி வந்தது. ஒவ்வொரு கணமும் அவள் ஒரு மலைக்குறத்தி என்பது அவளுக்கு நினைவூட்டப்பட்டது அதை நினைவுறும் ஒவ்வொரு கணமும் இழந்தவற்றால் ஆன துயரம் மிகும் வெளியாக ஆயிற்று அவள் உள்ளம். நெடுமூச்செறிந்து எழுகையில் அவளுக்குள் கனலும் நெருப்பு மேலும் வெம்மை கொண்டு மூளும்.

தெய்வயானையை வெல்வது மட்டுமே தன் வாழ்வின் நிறைவாக ஆனதெப்படி என்று அவள் தனக்குள் எண்ணி வியந்தாள். அம்மாற்றத்தை அவள் அஞ்சினாலும் அது அவளை இழுத்துச் சென்றது. காமம் கொண்ட கணவனைத் தன் காலடியில் வீழ்வைப்பதெப்படி என்பதை அவள் மெல்ல மெல்லக் கண்டுகொண்டாள். நாடொறும் அவன் காண்பதெல்லாம் அணிகள் அணிந்த மக்களை மட்டுமே. அணிகள் சுமந்த மொழிகளையும் அந்நகரமே அணிகள் சூழ்ந்தது. அந்நகரே ஓர் அணிகலன் அவன் ஆழ்

அணிகளற்ற கணங்களுக்காக ஏங்குவதை அவளறிந்தாள். அவன் அணையும்போது மலரணிந்த குழலும் வெறும்தோளும் கொண்டு மலைக்குறமகளாக அவன் முன் நின்றாள். அவளுடலில் அப்போது குடியேறிய மலைப்பாறைகளின் கரியதிடமும் மலைவேங்கை மலர்களின் மணமும் மலைச்சுனைகளின் விரைவும் அவனை அவளுடைய தாள் பணியச் செய்தன.

அணி களைந்த குறமகள் வள்ளி குமரனை வெல்லும்தோறும் தெய்வயானை தன்னை அணிகளால் மறைத்து அவனிடமிருந்து விலகிச் சென்றாள். அவனைக் கவரும்பொருட்டு தான் அணிவது ஒவ்வொன்றும் தனக்கும் அவனுக்கும் இடையேயான சுவரே என அவள் உணர்ந்தாள். ஒருகணத்தில் சினம்கொண்டு அவள் தன் தலையிலணிந்த முத்துமாலையை அவன்மீது கழற்றி வீசியபடி உன் உதிரத்தில் உள்ளதல்லவா அது, மலைமகள் மைந்தனல்லவா நீயென்று சீறினாள். அக்கணமே அது உண்மையென்றும் உணர்ந்து அழுதாள். அப்போது அவன் மனத்தில் பண்டைப்பெருங்கடல் ஒன்றுக்குள் அவன் மூத்தபெருங்குலம் வாழ்ந்த மலைக்குகையின் உள்ளே ஓர் இருண்ட மீன் நீந்திச் சென்றது.

குமரனை வென்ற பின் வள்ளி அறிந்தாள் குமரனை வெல்வது எளிது, குலத்தை வெல்வது அரிது என. அந்நகரும் அதன் மக்களும் அமைச்சர்குழாமும் அவளை அரசியாக ஏற்கவே போவதில்லை என்று. அந்நகரில் என்றுமே அப்படித்தான் நிகழ்ந்து வந்துள்ளது என்று அவளுக்குத் தெரிந்தது. அணிகளை அணிபவள் அனைத்தையும் அடைகிறாள், கணவனைத்தவிர. கணவனை அடைபவளோ அவனையன்றி வேறெதையும் அடைவதேயில்லை. அடையாதவற்றால் ஆனதே வெளியுலகம். அடைந்தவற்றினால் சிறையுண்டவர்கள் மகளிர். அந்நகரில் பெண்கள் அனைவரும் சிறையிருந்தனர். அதை நிறை என்று சொல்லியது நூல்மரபு.

ᘓ

கோவலனும் கண்ணகியும் மறுநாள் காலையில் துயிலெழுந்து முதுகுறமகளிரிடம் விடைபெற்று கிழங்கு தேடச் சென்ற இளம் குறமகளிருடன் சேர்ந்து நடந்தனர். மலைக்காடுகளின் ஊடாக தையல் ஊசியைத் தொடரும் நூல்போலக் காட்சியைத் தொடர்ந்து சென்றது சிற்றிசும்பு. அதில் காட்டுக் கொடிகள்போல மலைப்பாம்புகள் கிடக்கக்கூடும் என்றார்கள் குறமகளிர். புற்கூட்டங்களுக்குள் சிப்பிவிழிகளும் உதிரச் செவ்வாயுமாக சிறுத்தை காத்துக் கிடக்கக்கூடும். இருண்ட இலை அடர்வுக்குள் நிற்கும் கரும்பாறை சினம் கொண்ட அல்லியனாக இருக்கக்கூடும். காடுதேர் குறமகளிருக்கு இடையிலிருக்கும் குழந்தைபோலச் சாவு கூடவே உள்ளது என்றாள் ஒருத்தி. மண்ணுக்குள் உள்ள தெய்வங்கள் செடிகளில் கிழங்கைச் சேர்க்கின்றன. விண்ணுக்குமேலுள்ள தெய்வங்கள் மரங்களில் தேன் கூட்டுகின்றன. இரு தெய்வங்களையும் ஏமாற்றி அவர்கள் சேர்த்ததைக் கொண்டுவரும் மலைப்பெண்களைத் தெய்வங்கள் எப்போதும் பின்தொடர்கின்றன. கனவுகளில் அவர்களுடன் வந்து அவை உரையாடுகின்றன. அவர்கள் தனித்திருக்கையில் அவர்கள் அருகே ஓசையின்றி வந்து அமர்ந்து எல்லைமீறும் எண்ணங்களை ஊட்டுகின்றன. தெய்வங்கள் ஆடும் மாபெரும் மணிக்கட்ட விளையாட்டில் சிவப்பும் கருப்புமாகப் பெண்கள் மணிகளாக உருள்கின்றனர் என்றாள் ஒரு குறத்தி.

இலைகளையும் கொடிகளையும் விலக்கி முன்னடிமீது பின்னடி வைத்துக் காட்டுக்குள் செல்கையில் கண்ணகி எதிரே மரங்களுக்குள் மறைந்து நின்ற பெரும்கரும்பாறை ஒன்று அதன் விரிசல் தடத்தில் செந்நிறச்சுவடு வழிந்து உலர்ந்திருக்கக் கண்டு வியந்து கேட்டாள். அவர்கள் ஒரே குரலில் அது மலைக்குமரி அன்னையின் பேருருவம் என்றனர். வருடத்தில் ஒருமுறை மழைக் காலம் முடிந்தபின் இளவேனில் வருகை கூடுகையில் பைது பொலிந்து வெற்பெலாம் பொற்பு நிறைந்து அன்னை பூப்படைவது

வழக்கம். அப்போது ஏழுமலைகளிலாகச் சிதறிவாழும் மலைக்குறக் குலங்கள் அன்னைக்குப் படையல்களும் பூசனைப் பொருட் களுமாக வந்து குழுமுவார்கள். பெண்கள் மட்டுமே குன்றேறிச் சென்று அன்னையை வணங்க அனுமதிக்கப்படுவர். ஆண்கள் பாறைக்குக் கீழே காட்டுக்குள் சிறுசுனையருகே கூடியமர்ந்து கொள் வார்கள். இரவெல்லாம் வெறியாட்டும் கொண்டாட்டும் உண் டாட்டும் நிகழும். குலமூத்தாரெல்லாம் கூடுவார்கள். மலைக்குலங் களுக்கு இடையே நிகழ்ந்த பூசல்கள் அங்கு பேசிச் சீர்படுத்தப்படும்.

மலைப்பெண்டிர் துணைவரக் கண்ணகி அந்தப் பாறைமீது வெட்டப்பட்ட சிறு படிகளின் வழியாக மாபெரும் யானை விலாமீது ஏறுபவள்போல ஏறிச்சென்றாள். தன் அருகநெறி பிறதெய்வம் ஏற்காதெனக் கவுந்தி கீழேயே நின்றுவிட்டாள். பெரும்பாறை உச்சி யில் குடையப்பட்ட சிறுகோவிலுக்குள் புடைத்தெழுந்த வடிவில் மலைக்குமரித் தெய்வம் நின்றது. அன்னையின் தலையும் உடலும் கைகளும் திருந்தாத மொண்ணைச் சிற்பமாக இருந்தன. மேலே இரு கருவிழிகள் பச்சிலைக் கரிச்சாறால் எழுதப்பட்டிருந்தன. கீழே இருபாதங்கள் மட்டும் திருத்திச்செதுக்கப்பட்டு இடச்சிறுவிரல்மீது ஒரு சிறு நீலமணி பதிக்கப்பட்டிருந்தது. குகையின் இருளுக்குள் எருமையின் கண்மணி போல அன்னையின் கால்மணி சுடர் விட்டது. கருங்கண் தெய்வம் குடைவரை எழுதிய நல்லியல் பாவையின் நலம்கூறிக் குறமகளிர் கைகூப்பி வணங்கினர். அவள் பாதங்களிலிருந்து பந்தமெரிந்தணைந்த கரித்தடம் தொட்டு நெற்றியி லிட்டுக் கொண்டனர்.

கண்ணகி அக்கண்களைப் பார்த்தபடி நின்றாள். அறியாத ஆழங்களிலிருந்து நீலப்பேரலை ஒன்று எழுந்து அவளைச் சூழ்ந்தது. அக்கண்களில் இருந்து ஒரு சொல் எழுந்து வந்து அவள் நெஞ்சைத் தொட்டது. அவள் எப்போதுமே அறிந்த சொல். ஒரு போதும் மறவாத சொல். அதுவரை அவள் சொல்லியறியாச் சொல்.

ஆ

மலைப்பாதை சரிந்திழியும் வழியில் கணவனும் நீலியும் துணைவர நடக்கையில் கண்ணகி தன்னுள் அச்சொல்லே ஒலிக்கக் கேட்டாள். கோவலன் அவள் முகத்தை மீண்டும் மீண்டும் திரும்பிப் பார்த்து நடந்தான். அவ்வப்போது ஓரிரு சொல் வினவினான். அவள் முகம் புல்நுனியில் திரண்டு கனத்து உதிரத்தயங்கும் நீர்த்துளியின் ஒளியுடனும் அமைதியுடனும் இருந்தது என்று கண்டான். பின்பு அவர்கள் ஒரு குறும்பலா மரத்தடியின் வேர்ப்புடைப்பில் அமர்ந்தபோது அவன் அவள் கைகளை மெல்ல எடுத்துக்கொண்டு அவள் தழைந்த முகத்தை முகவாய்தொட்டுத் தூக்கி ''உன் மனத்தில் நிறைந்திருப்பதென்ன கண்ணகி?'' என்று கேட்டான்.

அவள் விழித்துக்கொண்டு அவனைப் புரியாத விழிகளால் பார்த்தாள். அப்பார்வை துளைக்க அவன் ஒரு கணம் தன்னுள் பல வாசல்கள் திறப்பதை உணர்ந்து அஞ்சி அவள் கைகளை விட்டுவிட்டான். அவள் கண்களில் யாரிவன் என்ற துணுக்குறல் பனித்துளியில் மரக்கிளைபோல அசைந்து மறைந்தது. அவள் மெல்லக் கனிந்து இளமுறுவல் கொண்டு அவன் விரல்களைத் தன் குளிர்ந்த மென் விரல்களால் அள்ளியபடி ''மதுரையை அஞ்சுகிறேன்'' என்றாள்.

அது தனக்கான இன்கூற்று மட்டுமே என்றறிந்தான் என்றாலும் அப்போது அவன் விழைந்தது அதுவே. அவன் முகம் மலர்ந்தது. தன் குரலில் குடியேறிய தன்னம்பிக்கையைத் தானே மகிழ்ந்தபடி அவள் தோள்களை அழுத்தி ''பேதை! மதுரை பெரும் வணிக நகரம். வணிகனுக்கு நகரம் மீனுக்குக் கடல்போல. இந்த வயலும் காடுமே என்னை அச்சுறுத்துகின்றன. மதுரை ஒளிமிக்க மறுகரை போல என்னை அழைக்கிறது'' என்றான். அவள் தலை தாழ்த்தி நெடுவீர்ப்பிட்டு ''உங்கள் பாதங்களை மட்டுமே நான் பார்க்கிறேன். அவை எனக்குத் தெளிவான வழிகாட்டுகின்றன'' என்றாள்.

கோவலன் மனநிறைவுடன் சிரித்தான். மரக்கிளைகளில் வந்தமர்ந்த பெயரறியாப் பறவைகளைக் காட்டி அவளிடம் நகைமொழி சொன்னான். பெண்ணிடம் பேசும் கலையை இளம் வயது முதலே கொற்றவை

கற்றுத் தேறியவன் அவன். பெண்கள் சொல்லும் எதையும் அவன் மறுத்து வாதாடுவதில்லை. அவர்கள் பேசும்போது அவர்கள் விழி களையே நோக்கி உளம்கூர்த்துக் கேட்பான். அவர்கள் பேசும்போது மகவின் மொழி கேட்கும் தந்தைபோன்ற மெய்ப்பாடுகளுடனும் உணர்வுகளுடனும் எதிர்மொழியாடுவான். அது அவர்களை மெல்ல மெல்ல சிறுமிகளாக்கும். பெண்ணாக உணர்ந்த நாள் முதல் சொற்களிலும் உடலிலும் அவர்கள் ஒவ்வொரு கணமும் உணர்ந்த எல்லாத் தளைகளும் மெல்லமெல்ல உதிரும். மகிழ்ச்சியாக இருந்த குழந்தை நாட்களுக்கு மீண்டவர்கள்போல சொற்கள் பெருகிச் செல்ல அவ்வழியில் ஒழுகிச்செல்வார்கள்.

தங்கள் சொற்கள்மூலம் அக்கணமே அவர்கள் ஓர் உலகைச் சமைப்பதை அவன் கண்டதுண்டு. அவ்வுலகம் ஒருநாளும் அவர் கள் அறியாதது என அவனறிவான். ஆனால் அக்கணத்தில் அவர் களுக்கு அவ்வுலகம் உண்மையுலகைவிட உண்மையான ஒன்றாக இருக்கும். அங்கே ஓயாத இளமையின் ஒளி பரவிய புல்வெளிகளில் அவர்கள் சிறுமியராகத் துள்ளித் துள்ளிச் செல்வார்கள். அப்போது உடன் எவரும் இருக்க இயலாது. அவர்களின் சொற்களால் உருவாக்கப்படும் தோழியர் தவிர. அப்போது அவளை நோக்கி யிருப்பது மட்டுமே ஆணுக்கு உரித்தாக்கப்படும்.

பேசும் பெண்ணுக்கு ஆண் ஓர் ஆடி. அவள் அதை நோக்கி நோக்கி அணிகளும் ஆடைகளும் அலங்காரங்களும் பூணுகிறாள். ஆடியை நோக்குகையில் அவள் நோக்குவது அவளை மட்டுமே. புன்னகையுடன் கோவலன் அந்த உளநாடகத்தைக் காத்திருப்பான். அந்தப் பயணத்தின் இறுதி எதுவென அவனறிவான். அது மெல்ல மெல்ல விரைவிழந்து தேங்கும். இனிமையான துயரமாக நெடு மூச்சுகளாக மாறும். மெல்லிய விழிநீர்த் துளிர்ப்பில் உதடுகள் கடிபடும் அழுத்தத்தில் விம்மும். அப்போது அவன் தன் வலிய தோள்களால் அவர்களை அணைத்து மார்புடன் சேர்த்துக் கொள் வான். அக்கணங்களில் அவர்கள் விழையும் அனைத்தையும் சொல் வான். அடைக்கலமளிக்கும் சொற்களை அடிபணிபவனின் பாவனையில் சொல்வது அப்போது மிக வெற்றிகரமானது என அவனறிவான்.

உள்ளங்கள் மெல்ல உரசிக்கொண்டு ஒருவரில் ஒருவர் தாங்கள் விரும்புபவரை உருவாக்கி அவர்களை அறிந்தும் நுகர்ந்தும் உவகை கொள்ளும் அக்கணம் உடலுக்கு நீள்வது ஒருபோதும் தவறு வது இல்லை. நெஞ்சின் முடிச்சுகள் எல்லாம் அவிழ்ந்து கிடக்கும் அந்நேரத்துப் புணர்ச்சியே புணர்ச்சிகளில் உச்சமானது. அப்போது

பெண்ணில் கூடும் விரைவும் காட்டருவிகளில் சுழல்காற்றில் கொந்தளிக்கும் கடல் அலையில் திரளும் பெருவல்லமைக்கு நிகர். அப்போது மட்டுமே புணர்ச்சியில் பெண்ணை ஆட்டுவிப்பவனும் தன்னை ஆட்டுவிக்கும் பெரும் வல்லமை ஒன்றுக்குச் சில கணங்கள் அடிமைப்படுவான். மீளும்போது ஒவ்வொருவரும் அவரவர் முடிச்சுகளை ஒவ்வொன்றாக மீண்டும் போட்டபடி அவரவர் தனிமைக்குள் அவரவர் இருளுக்குள் படுத்திருக்கும் கணங்களும் இனியவையே. எது தான் அல்ல என்று உணர்வதே புணர்தலெனில் எது தான் என்று உணர்தலே பிற்கணங்கள். கூடியபெண்ணை விட்டு அக்கணங்களில் விலகிச்செல்வதைப்போலப் பல்லாயிரம் காதம் விலகிச் செல்லும்போதும் செல்வதில்லை. கூடவைத்தும் விலகவைத்தும் ஆட்டுவிக்கும் மையப்பெருவிசை அப்போது கண்முன் வெளிக்கும் இருளில் கண்காண ஒண்ணாப் பெரும் புன்னகையாக நிற்கும்.

சொற்களை அளைந்தும் வீசியும் கண்ணகியிடம் கோவலன் நகையாடினான். அவள் கன்னங்களைச் சிவக்கச் செய்தாள். அவள் வெட்கித் தன் இளமுகத்தைத் தன் முழங்கால்மீது வைத்து குறுகச் செய்தான். மார்புகள் விம்மப் பொங்கி நகைக்க வைத்தான். அவள் கண்களில் படிந்திருந்த தனிமையின் பனிப்படலம் மெல்ல விலகி வெயிலெழும் காலைபோல அவள் தெளியக் கண்டான். ஆனால் பின்பு அவர்கள் எழுந்து நடக்கும்போது அவனுள் வென்று முன்னகர்ந்தவனின் நிறைவு கூடவில்லை என்பதை உணர்ந்தான். ஒவ்வொரு முறையும் தான் நகையாடுவதும் கூடுவதும் இவள் நிழலுடன்தான் என்று எண்ணிக்கொண்டான். அந்நிழலுக்கு அப்பால் அவனை அறிமுகம் கொள்ளாத தொல்தெய்வக் கண்களுடன் அவள் இருளில் ஊழித்தனிமையில் நின்று கொண்டிருக்கிறாள் என்றறிந்தான்.

மீண்டும் மீண்டும் நெடுமூச்செறிந்தபடி அவன் மாதவியை நினைத்துக்கொண்டான். அவள் இல்லத்தில் மட்டுமே அவன் மிச்சமின்றி உண்டிருக்கிறான் என்று நினைத்தான். அவள் மட்டுமே அவனை முழுமையாகப் பெற்றுக்கொண்டிருக்கிறாள். மாதவி மாதவி என்று தன்னுள் எழுந்த தவிப்பை நெறிமுறையில்லாச் சலனி என்று இன்னொரு நெஞ்சால் வசைபாடி ஆறவைத்தபடி கோவலன் நடந்தான். ஆயினும் தலைக்குமேல் கலைந்து ஒலித்த பல்லாயிரம் பறவைகளின் ஒலிகளுக்குள் ஒரு பறவை மாதவி... மாதவி... என்று கூவிக்கொண்டே இருந்தது.

நீலி சொன்னது

செம்புழுதியாலான முகில்களை வகிர்ந்தபடி காலை நாளவன் என பொற்றேர்கள் ஓடும் புகாரின் கணிகையர் தெருவில் ஓங்கிய வெண்சுதை மாடங்களின் வரிசையில் விண்மீன்கள் மண்ணிறங்கியவையென வண்ண விளக்குகள் சுடர்விரிக்கும் மாலையில் முழவும் யாழும் குழலும் மகளிர் சிரிப்பும் சேர்ந் திசைக்கும் மகிழ்வாடலில் ஒரு மாடம் மட்டும் இருண்டு தனித்துக் கிடந்தது. அதனுள் சிற்றகல் மட்டும் புன்னைஎண்ணெய் மணத் துடன் எரிந்த அறைக்குள் கசங்கிய மஞ்சத்தில் வாடிய மலர்க்கொடி போலக் கிடந்தாள் மாதவி. அவள் மூதன்னை அறைக்குள் எட்டிப் பார்த்து வெகுநேரம் நின்று பின் நெடுமூச்செறிந்து மீண்டாள். கோவலன் பிரிந்தபின் அவள் தெய்வம் பிரிந்துசென்ற ஆலயம் போல ஆனாள் என்றனர் சேடியர்.

மாதவி கோவலனை எண்ணிக்கொண்டிருந்தாள். அவ்வெண் ணத்தைப் பற்றியே அவள் எண்ணி வியந்துகொண்டிருந்தாள். காதலன் பிரிந்த மகளிர் கண்ணீர் விழி உலராமல் ஒவ்வொரு கணமும் ஓயாத அலையோசைபோல அவனையே மீண்டும் மீண் டும் உளம் உரைக்க வாடிக் கொண்டிருப்பார்கள் என்று அவள் காப் பியத்தில் கற்றிருந்தாள். ஆனால் அவள் எண்ணிக்கொண் டிருந்தது அவளைப் பற்றியா கோவலனைப் பற்றியா என்று அவளால் சொல்ல இயலவில்லை. அவளும் கோவலனும் கூடிய நாட்களும் ஊடிய நாட்களும் மட்டுமே அவள் நினைவில் வந்தன. ஒவ்வொரு நினைவிலும் அவளே ஓங்கி நின்றாள். கோவலனில் தொடங்கும் எண்ணங்கள் அவளுடைய உள்ளத்தின் தொலைவொழியாத் திசைகளில் அலைந்து அங்கே மீண்டும் மீண்டும் கோவலனையே கண்டடைந்தன. மீண்டும் மீண்டும் அவளிடமே திரும்பிவந்தன.

அது ஓர் ஓயா நாடகம் என்று அவளறிந்தாள். அவளும் கோவலனும் மட்டும் நடிக்கும் அந்த நாடகத்தில் ஒவ்வொரு அங்கமும் முன்னரே நிகழ்ந்ததன் மறு ஆக்கமே. துயருடனும்

சினத்துடனும் வஞ்சத்துடனும் உள்ளுறைந்த உவகையுடனும் அதை அவள் மீண்டும் மீண்டும் தன் உள அரங்கில் நிகழ்த்திக்கொண்டாள். கோவலனிடம் அவள் தன் தரப்பைச் சொல்லி வாதிட்டாள். தன் அயர்களைச் சொல்லிக் கண்ணீர் விட்டாள். அவனை வெறியுடன் அள்ளிப்பற்றி அவன் மார்பை நகங்களால் கீறி ஓலமிட்டாள். அவனுடன் கூடினாள். பின் அவன் கைவிட்டுப்போக மீண்டும் தன் தனிமையில் விழுந்து அழுதாள். கணம்தோறும் பெருகும் அந் நாடகம் அவளுக்குச் சலித்தாலும், அதை அவள் நிறுத்திக் கொள்ள எண்ணினாலும் அவள் உள்ள ஓட்டம் என்பது அப்போது அது வாகவே ஆகியிருந்தமையால் அது அவளுக்குள் நிகழ்ந்தது. அதற்குள் அவள் இருந்தாள்.

முதல் சில நாட்கள் மலையிறங்கும் பேராறென இருந்தது உள்ளம். பின் சுழித்து அகன்றது. நாள் செல்லச்செல்ல விரைவிழந்து அசைவிழந்து குற்றலை விரியும் பரப்பாகக் கிடந்தது. அப்போது அவளறிந்தாள், அவள் வேண்டுவது என்னவென்று. கோவலன் வந்ததையும் இருந்ததையும்விட அவன் சென்றபோதே தன் அக ஆழம் மகிழ்வுற்றதைக் கண்டுகொண்டாள். அவனுக்காக ஏங்கி நோற்று மெலிந்து சோர்ந்து மறைவதே இப்பிறவியில் தனக்கு மிக உவப்பான செயலாக இருக்குமென அறிந்தாள். அதன் பிறகு அவ ளுக்கு ஏதும் ஐயமிருக்கவில்லை. உண்ணாமல் உடுக்காமல் அணி யாமல் சூடாமல் மகிழாமல் இருண்ட அகத்தளங்களில் ஒடுங்கிக் கொண்டாள். அன்னையும் செவிலியும் சேடியும் வந்து சொன்ன மொழிகளுக்குப் பதிலுரைக்க அவளுக்குரிய சொற்களுடன் மண் மறைந்த கற்பரசியர் பலர் காற்றுத்திரைக்கு அப்பால் நின்றிருந்தனர். அச்சொற்கள் காலம்தோறும் அப்படியே சொல்லப்பட்டு வந்தன என்றும் எப்போதும் அப்படியே சொல்லப்படப் போகின்றவை என்றும் அறிந்தாள்.

இரவின் தனிமையில் ஒரு கணம் அவளுக்குள் மெல்லிய புழுப்போன்ற அசைவுடன் ஒரு வினா உயிர்பெற்று எழுந்துவரும், ஏன் அந்த வேடம் என்று. ஆம், அதைக் கலைத்து மீண்டும் மலர்சூடி அணிகொள்ளும்போது மட்டுமே அவள் அவளுக்குரிய இயல்பான ஒன்றைச் செய்கிறாள். ஆனால் அதை அவள் செய்ய இயலாது. அவள் அப்படிச் செய்வாள் என்ற எண்ணம் கோவலனிடம் உள் ளது. அவ்வெண்ணமே அவன் அவளைத் துறக்கும்போது அவன் வருந்தாமலிருக்கச் செய்தது. அவனை அவள் நினைவுகளிருந்து விடுதலை கொள்ளச்செய்தது. அதை அவனுக்கு அளிக்கவாகாது.

அவனை என்றென்றும் தன் நினைவுகளால் சிறைப்படுத்த வேறு வழியே இல்லை.

என்றுமே காமம் தன்னை எரியவைத்தது இல்லை என்று அவள் அறிந்தாள். காற்றில் பறந்து கூடிக்களிக்கும் சிட்டுகளின் காமத்தைக் கண்டிருப்பாள். அவள் மாளிகையின் பின்பக்கம் தோட்டத்தில் சிறைப்புக்க மான்கள் ஒருபோதும் மகிழ்ந்து காமம் கொள்வதில்லை என்பதையும் கண்டிருந்தாள். விடுதலையிலேயே காமம் கிளைத்தெழ முடியும் என எண்ணிக்கொண்டாள். சிறையுற்றவளின் காமம் நோயுற்றவளின் உணவு போல. கோவலன் அவளிடம் சொல்லும் வேடிக்கை மொழிகளை எண்ணிக் கொண்டாள். அவனுடைய மெல்லிய குரலும் புன்னகை ஒளிவிடும் கண்களும் யாழ்தேர் விரல்களால் அவள் உடலில் அவன் செய்யும் மீட்டல்களும். அவளைச் சொற்களாலும் விரல்களாலும் தொட்டு ஒரு பேதையாக ஆக்க அவன் விழைகிறான் என்பதை அவளறிவாள். ஆகவே அவனுக்கு அவள் அளிக்கும் மிகச்சிறந்த பரிசு என்பது பேதையாதலே என்றும்.

பேதையாகி அவன் மடியில் கிடக்கையில் அவனுள் ஊறும் தன்னம்பிக்கையை அவளுக்குள் ஒளிந்து அவள் புன்னகையுடன் நோக்குவாள். அவன் சொற்களில் எடை கொண்டதுபோல, தோள்களில் வலிமை திரண்டதுபோல. அவள் உடலை அப்போதுதான் அவனால் முற்றாக மீட்ட முடியும் என்பதை அவள் கண்டாள். இறுதியில் வெறும் உடலாகத் தன்னை ஒப்படைக்கும் பெண்களிடமே ஆண்களின் காமம் நிறைவுகொள்கிறது என்று அவளுக்கு குலக்கலைகள் கற்றுத்தந்த முதுபரத்தையர் சொன்னதுண்டு. ஒருபோதும் எவரும் உடல் மட்டுமாக இருக்க இயாலாதென்பதனால் அது ஒரு திறநடிப்பே என்றும். ஆழப்பயின்று தேர்ந்து ஆற்றவேண்டிய நுண்கலை. அவன் விரல்தொட மூண்டெழுந்து எரியும் அவளுடைய தழலுடலுக்குள் வஞ்சம் திகழ் வீரப்பற்களுடன் சம்பாபுரித் தெய்வமொன்று நோக்கியிருக்கும். இரவின் இருண்ட தனிமையில் அத்தெய்வம் தன்னுடன் கூடுகையிலேயே உண்மையான காமத்தின் நெருப்பை மாதவி அறிந்தாள்.

சம்பாபுரிக் குலத்துப் பெண்டிருக்கெல்லாம் அவர்கள் உடலின் ஆழத்தில் அவர்களின் நரம்புகள் அனைத்தும் சந்திக்கும் மையத்தில் நெருப்பின் சிறுதுளியொன்றிருந்தது. அத்துளி ஊதிப் பெருகி அனலாகி அவர்கள் நரம்புகளில் படர்ந்தேறிக் காட்டு நெருப்பாகும் தருணங்களே அவர்களை நோக்கி மன்னரையும்

மறவரையும் வணிகரையும் இழுத்தது. அந்நெருப்பில் குடுண்டு அடங்கியவர்கள் பற்றிய கதைகள் அந்த ஈர்ப்புக்கு ஆழம் சேர்த்தன. கடல்கொண்ட சம்பாபுரியின் பேராலயத்து செக்கச்சிவந்த படையல்பீடமே அது என்றனர் முதுகணிகையர். வஞ்சம் கொண்ட செந்நெருப்பெரியும் தூபபீடம் என்றனர் சிலர். சம்பாபுரித் தெய்வங்கள் கணிகையரின் அகத்தில் புதைந்த ஆலயங்களில் குடிகொள்கின்றன. அத்தெய்வங்களைத் துயில் எழுப்பி அவற்றுக்கு நிறைவளிப்பவனே அவளை அடைய முடியும்.

ஆனால் ஒருபோதும் புகாரின் ஆண்கள் எவரும் அத்தெய்வங்களின் ஆலயமுகப்பைக் கண்டதில்லை. எரியும் பீடத்தருகே வந்து அஞ்சி நிற்பதையே அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அச்சமே அவர்கள் உண்ணும் சுவையென இருந்தது. அதை அவர்கள் அஞ்சியமையால் அது ஒருபோதும் அவர்களால் தவிர்க்க முடியாத ஒன்றாகியது. கீழ்நிலம் நிறைத்து விரிந்த சோழநாட்டின் நெருப்புத்துளியே சம்பாபுரி நகரம் என்றனர் பாவலர். சம்பாபுரியின் தெய்வங்கள் கோயில் கொண்ட சிலை, கயிலை மன்னனின் திருவடையாளம்போல சம்பாபதி அன்னையின் அடையாளம். ஆனால் சம்பாபுரிப்பெண்டிர் அறிவர் ஒருபோதும் ஓர் ஆண் அந் நெருப்பை மூட்டிவிட இயலாது என்று. அதை அவள் மட்டுமே மூட்டிக்கொள்ள இயலும். அப்போது மட்டுமே தழல்முடி பறக்க கடலாழத்திலிருந்து சம்பாபுரித் தெய்வங்கள் எழுந்துவரும்.

இரவில் கண்விழித்துக் கிடக்கையில் ஒருகணம் மாதவி கோவலனை எண்ணிப் புன்னகை புரிந்தாள். அவனுடைய உள்ளத்தில் அப்போது ஓடும் எண்ணங்களை அவள் தன் தோட்டத்து ஊடு பாதைகள்போல அறிந்தாள். அவற்றில் அவன் பாதங்கள் மீண்டும் மீண்டும் பதியும் விதத்தை. அவன் கைபற்றிக் கண்ணகி போகும் காட்சி கண்ணில் எழுந்தபோது வஞ்சத்துடன் நகைத்தபடி அவள் எழுந்துவிட்டாள். பிறைநிலவின் மெல்லொளி பரவிய தோட்டத்தைப் பார்த்து நின்றபோது அவள் உள்ளம் அமைதி கொண்டது. நெடுமூச்சு எறிந்து முலையிணை அசைய மீண்டும் வந்து படுத்துக் கொண்டாள். அப்போது அவளுக்குக் கண்ணகிமீது ஆழ்ந்த இரக்கம் உருவாயிற்று.

கண்களை மூடிக் கண்ணகி நடக்கும் காட்டு வழியைத் தன் கண்முன் கண்டாள். அவளுடன் செல்லும் நீலியை உண்மை வடிவில் தரிசித்தாள். அச்சத்துடன் ''அய்யோ!'' என்று கூவியபடி மார்பை அணைத்துக்கொண்டு எழுந்தாள். அன்னை கதவைத்

தட்டித் திறந்து ''என்ன என்ன?'' என்றாள். ''கண்ணகி! கண்ணகி!'' என்றாள் மாதவி. '' கண்ணகிக்கு என்ன ? அவள்தான் தன் கொழுநனை அடைந்துவிட்டாளே?'' என்றாள் அன்னை. ''இல்லை, அவளை அவர் ஒருபோதும் நாடு காண அழைத்துச் சென்றிருக்கலாகாது'' என்றாள் மாதவி கண்களை நிரப்பிய பேரச்சத்துடன்.

ᘓ

கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் மலைக்குற மகளிரிடம் விடைபெற்று நீர்திகழ் குறிஞ்சியின் நிலைபெறு வெற்புகளின் வழியாக பைதுபரவிய சிறுபாதையில் இறங்கினர். வழியில் அவர்கள் கைவிடப்பட்ட சில மலைச்சிற்றூர்களைக் கண்டனர். புதரடர்ந்த சிற்றூர் ஒன்றுக்குள் நுழைந்த கோவலன் எரிந் தடங்கிய புல்மாடங்கள்மீது காட்டுக்கொடிகள் ஏறி அடர்ந்திருக்கக் கண்டான். முற்றத்தில் புல் படர்ந்து புள் பயின்றது. ஒருவிழி இழந்த நாய் ஒன்று பேரச்சத்துடன் தலைதூக்கி வால் நடுங்க அவர்களை நோக்கியபின் ஊளையிட்டபடி புதர்களுக்குள் ஓடியது. ''எரியுண்ட ஊரோ?'' என்றாள் கண்ணகி. கோவலன் குடில்களின் உள்ளே நோக்கி ''பொருட்களை அப்படியே விட்டு ஓடிச்சென்றிருக்கிறார் கள். எரியெனில் சில பொருட்களாவது மீட்கப்பட்டிருக்கும்'' என்றான்.

ஊரரருகே இருந்த சிற்றோடைக் கரையின் சேற்றுவிளிம் பெங்கும் பெரும் புரவிகளின் இரட்டைக்குளம்புகள் மிதித்துத் துவைத்த தடத்தை கோவலன் குனிந்து பார்த்தான். ''சோனகப் பெரும்பரிகள். இவற்றில் மன்னரும் மறவருமன்றிப் பிறர் ஏற முடியாதே'' என்றான். தரையிலிருந்து மலைக்குற மகளிர் தங்கள் நீள்காதிலணியும் மென்முருக்குமரத்தால் செய்த தக்கைக்குழையை எடுத்துப் பார்த்தான். கவுந்தியிடம் ஏதோ சொல்ல வாயெடுத்த போது அவன் உள்ளம் மின்னியது. அச்சொற்களை அப்படியே விழுங்கி அவன் திரும்பிக் கொண்டான். கண்ணகி ''அது குறமகளிர் அணியும் குழை அல்லவா?'' என்றாள். கோவலன் ஆமென்று சொல்லி முன்னால் நடந்தான்.

கண்ணகியின் காதில் நீலி மெல்லிய குரலில் ''நீ இங்கு நடந்தது என்ன என்று காணவிழைகிறாயா?'' என்றாள். ''ஆம்'' என்றாள் அவள். ''உன் விழிகளை நான் என் கரங்களால் குவளை மலர்களை கொய்வதுபோல இப்போது எடுத்துக் கொள்கிறேன். உனக்கு இப்போது காலத்தின் திரை இல்லை'' என்றாள் நீலி.

கண்ணகி அக்கணமே அங்கு நடந்தவற்றைக் கண்டாள். கடல் அலைகள்போலப் பிடரி மயிர் பறக்கச் சுருண்டு மேலேறி வரும் சோனகப்புரவிகள்மீது ஊர்ந்து ஒரு கையில் கடிவாளமும் மறு கையில் ஒளிரும் வாளுமாக அரசக்குறி சூடி வருபவனைக் கண்டாள். வில்லேந்திய மறவர் வெண்பற்கள் ஒளிரச் சிரித்தபடி அவனைச் சூழ வந்தனர். அவர்கள் கூவியபடி காட்டுக்குள் புகுந்தனர். பதறி ஓடிய மிருகங்களை வில்லாலும் வேலாலும் கொன்று வீழ்த்தினர். மான்களை மட்டும் பின்னால் வந்த சேவகர் எடுத்துக்கொண்டனர். வேங்கை ஒன்று நெஞ்சில் பாய்ந்த அம்புடன் உரத்து முழங்கியபடிக் கரும்பாறைமீது ஏறியது. அதன்மீது புட்கள்போல அம்புகள் வந்தமர்ந்தன. உடலதிர அது நின்று ஆடியது. அமர்ந்து பின் சரிந்து புல்லடுக்குகளுக்குள் வால் சுழலத் துடித்து அடங்கியது. மன்னன் தன் இடையிலிருந்து சிறுவெண் சங்கை எடுத்து வெற்றி ஊத பிறர் அவனுக்கு வாழ்த்துக் கூவினர்.

சென்ற வழியெங்கும் உதிரம் சிதற அவர்கள் மலைச்சுனை வழியாக அச்சிற்றூரை வந்தடைந்தனர். அவர்கள் வந்த ஓசை கேட்டு முன்னரே ஓடிவந்த ஆண்கள் தங்கள் பெண்டிரையும் மகவுகளை யும் குடில்களுக்குள் விட்டுவிட்டு கமுகம் தடி பிளந்து நுனி கூர்க்கச் செய்த வேலும் மூங்கிலம்புகள் பொருந்திய விற்களும் கொண்டு போருக்கு வந்தனர். அவர்களை மறவர் சூழ மன்னன் தாக்கினான். குறவர் அம்புகள் பட்டு மறவர் சிலர் சரிய மறவரின் கூரிய இரும்பு அம்புகள் தைத்துக் குறவர் அலறி விழுந்தனர். குறவர்களின் துடிக்கும் உடல்களைப் புரவிகள் மிதித்துத் தாண்டி ஊருக்குள் புகுந்தன. குடில்களுக்குத் தீவைக்கப்பட்டது. மகளிரும் மகவுகளும் அலறிச் சிதறிப் பரவ அவர்களைத் துரத்திச் சூழ்ந்து பற்றினர் மறவர். முலைதூங்கிய முதுகுற மகளிர் வெட்டிவீழ்த்தப்பட்டனர். பெண்டிரும் குழந்தைகளும் காட்டுக்கொடிகளால் சேர்த்துக் கட்டப் பட்டு குதிரையுடன் பிணைக்கப்பட்டனர். அவர்களை வெற்றி எக்காளத்துடன் இழுத்துச் சென்றது வேட்டைப்படை.

கண்ணகி பெருமூச்சுடன் மீண்டாள். நெடுநேரம் அவள் ஒன்றும் சொல்லவில்லை. நீலி புன்னகையுடன் ''நீ கண்ணீர்விடு வாய் என்று எண்ணினேன்'' என்றாள். கண்ணகியின் கண்கள் அவளை ஒருகணம் வெறித்து நோக்கின. ''அவன் கீழே கீழ்வேளிர் நாட்டை ஆளும் சிறு மன்னன்'' என்றாள் நீலி. ''சிறுமன்னர்கள் என்பவர்கள் தங்கள் நிலத்தையும் மக்களையும் தாங்களே உருவாக்கிக் கொள்பவர்கள். அவனுடைய மூதாதையர் இந்த மலையடிவாரத்துக்கு ஒரு பிடி நெல்விதையுடனும் சில

மழுக்களுடனும் வேலேந்தி வந்தனர். காட்டையும் காட்டுமக்களையும் அழித்துத் தங்கள் வயல்களை உருவாக்கினர். யானைகளையும் எருமைகளையும் பிடித்துப் பழக்கினர். மனிதர்களைப் பிடித்து அடிமையாக்கி நுகத்தில் பூட்டினர். தோல்பிளவை நோயென வயல்கள் காட்டை உண்டு விரிந்தபடியே உள்ளன. அவனுக்கு நிலம் தேவை. உலகையே உழுதாலும் தீராதது மேழியின் விடாய்.''

சேறு நீண்ட வயல்வரப்புகளில் மலைக்குற மக்களின் சிறையுண்ட வரிசைகள் செல்வதை கண்ணகி கண்டாள். மரங்களிலா சமதளத்து உலகில் பெய்த ஒளிக்குக் கண்கூசி முகம் சுருக்கி கால்கள் பின்ன அவர்கள் நடந்தனர். அவர்களைக் காட்டுக் கொடிகளில் கட்டி இழுத்துச்சென்றனர் களமர் குலமக்கள். அவர்கள்மீது உமிழ்ந்தும், கம்புகளால் அடித்தும், பெரிய வெண்பற்கள் காட்டி இழிசொல்லுரைத்து நகைத்தும் கொண்டுசென்றனர். வயல் வரப்பு நடுவே இருந்த மேட்டில் அவர்களை அமரச்செய்து மரங்களோடு பிணைத்துக் கட்டினர். பின் ஒவ்வொருவராக இழுத்துவந்து மேழியில் கட்டிச் சேற்றுவயலில் இறக்கினர். சாட்டையால் அடித்து ஓட்டினர். குறமக்கள் அழுதும் முனகியும் இழுக்க எருக்கிலைகள் கோர்த்த மாலையை அவர்களுக்கு அணிவித்துக் களமர் கொண்டாடினர்.

''குழியில் விழுந்த யானையைப் பழகிய யானை அடிப்படுத்துவதுபோல...'' என்றாள் நீலி. ''களமர்களின் களியாட்ட நாள் இது. இதோ அவர்களைவிடக் கடைஞர்கள் உருவாகிறார்கள். அவர்கள் அடிமைப்படுத்தவும் வேலை வாங்கவும் வேறு சில மக்கள். ஆகவே இவர்கள் கடைஞரிலும் கடைஞர். இவர்களைப் புலைமக்கள் என்கிறது உன் மரபு. இச்சதுப்புக்குள் அவ்வாறு வந்து நுகம் பழகியவர்களின் முதுதலைமுறையினர் குடில் கட்டி வாழ்கிறார்கள். அவர்களின் குழந்தைகள் மலைகளை மறந்துவிட்டார்கள். மேழியன்றி அவர்கள் அறிந்தது ஏதுமில்லை. ஆனால் அவர்கள் தெய்வங்கள் மட்டும் அவர்களை விட்டுப்பிரியாத நாய்கள் போலத் தொடர்ந்து வந்தன. ஏனெனில் மனிதர்கள் தெய்வங்களின்றி வாழலாம், தெய்வங்கள் மனிதர்களின்றி வாழ இயலாது.''

அப்பால் இரவின் இருளுக்குள் குளிரில் உடல் நடுங்கிய புலைமக்கள் சதுப்புநிலத்தில்கூடி ஒரு கல்மீது பிறிதொரு கல் வைத்து சதுப்புமலர் சூட்டி கூடி வணங்குவதைக் கண்ணகி கண்டாள். அவர்களின் குலவை ஒலி அழுகையொலியென ஒலித்தது. பின்பு சேற்றில் பிடித்த பெருச்சாளி ஒன்றை அவர்கள் அத்தெய்வத்துக்குப்

படையல் தந்தனர். அதன் ஊனைச் சிறிதளவு அனைவரும் உண்டனர். கண்ணீருடன் கைகூப்பி நின்றவர்கள் நடுவே குலப் பூசாரி ஒருவன் சன்னதம் கொண்டு துள்ளி எழுந்தான். கைக் கோலை ஓங்கி ஊன்றி அவன் வெறிகொண்டு ஆடினான். அவன் வாயிலிருந்து காட்டுவிலங்குகளின் ஒலிகள் எழுந்தன. அவ்விலங்கு களுடன் பேசி மலைமக்கள் உருவாக்கிய தொல்மொழிச் சொற்கள் எழுந்தன. அவனுடலில் வேங்கையும் நரியும் யானையும் மானும் கூடின. துள்ளி ஓய்ந்து அவன் சரிகையில் ''தெய்வம் மலை யேறியது'' என்று ஒரு முதுபுலையன் சொன்னான். அத்தெய்வம் சென்று சேர்ந்த மலையை அவர்கள் திரும்பி நின்று கைகூப்பி வணங்கினர்.

''அறிக, எங்கும் நுகமின்றி மேழி இல்லை'' என்றாள் நீலி.

கண்ணகி ''ஆம்'' என்றாள்.

ஓ

கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் மலையிறங்கி மள்ளர் குழுமிய சிற்றூர் இரண்டைக் கடந்து சென்றனர். அறுவடை முடிந்து வேனில் தொடங்கிவிட்டதனால் ஊர்களில் மள்ளர்கள் தங்கள் மைந்தருடன் கூடி மகிழ்ந்து கொண்டாடிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய மன்றுகளில் சேவல் சமரையும் திண்ணகப் போரையும் அறிவிக்கும் குறுமுரசுகள் ஊர் முன்றிலில் ஒலித்தன. மடியில் வறுத்த காணத்தையும் பயறுவகைகளையும் கட்டிக் கொண்டு கூந்தலில் மலரும் கொழுந்தும் சூடி மள்ளர் பெண்டிர் இடையில் குழந்தைகளுடன் தங்கள் குலதெய்வக் கோயில்களிலிருந்து ஊர் மீண்டனர். இல்லங்கள் தோறும் புதுநெல்லும் புது மாங்கொழுந்தும் நிறைத்து மங்கல நிறைநாழி முன்றிலில் வைத்திருந்தனர். எங்கும் மாவும் வெல்லமும் சேர்த்து அவித்த அப்பங்களின் இனிய நறுமணம் கவிந்திருந்தது. அப்பால் இழிசினர் குடில்களில் காட்டுக் கிழங்குகள் சுடும் புகை எழுந்தது. கரிய உடல்களில் சாம்பல் பூசிக்கொண்டு அவர்கள் தங்கள் முற்றங்களில் கூடியமர்ந்து தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டனர். சிலர் பறைகளைக் காய்ச்ச, சிலர் துடிகளை வார் இழுத்து இறுக்கினர்.

கண்ணகியும் கோவலனும் ஊர்களைக் கடந்து பெருவழியே சென்றபோது எதிரே மாமுது பார்ப்பான் ஒருவன் வருவதைக் கண்டனர். பின்தலையில் சிறுகுடுமி கட்டி, வளைந்த மேனியில் தருப்பைப்புல்லால் மிடைந்த முப்புரிநூல் அணிந்து கூரிய விழிகளால் அவர்களைப் பார்த்தபடி வந்த மறையவன் ஓங்கிய குரலில் ''தென்னவன் நாட்டுக்குள் நுழையும் மாதவத்தாளுக்கும் மங்கைக்கும் கொழுநனுக்கும் நல்வரவு'' என்றான்.

கோவலன் மறையவனை வணங்கி முகமன் சொன்னான். கவுந்தி ''எங்கிருந்து பாண்டிய எல்லை தொடங்குகிறது?'' என்றாள்.

''இந்த பாதை தெள்ளாறெனும் சிற்றாறைத் தாண்டி மறுபக்கம் செல்லும்போது தொடங்குகிறது மீனவன் பெருநிலம். அது மலைகளையும் பாலைகளையும் விளைநிலங்களையும் இரு பெரும்

ஆறுகளையும் கடந்து குமரி அன்னையின் சிலம்புகளில் சென்று முடிகிறது'' என்றான் மறையவன். ''வெள்ளாறு வடக்கே. மேற்கு சேரன் பெரும்பாதை. கிழக்கே பெருங்கடல். கன்னி தெற்கு. ஐம்பத் தாறுகாதம் விரிந்தது பொலியாப்புகழ்ப் பாண்டிநாடு.''

"தாங்கள் பாண்டியன் அவையில் இருந்து வருகின்றீர் களோ?'' என்றான் கோவலன்.

"ஆம். நான் ஏழாண்டுக்கு முன் எம்பிரான் உலகளந்தான் பாதங்களையெல்லாம் கண்டு வணங்கும் பொருட்டு இல்லம் துறந்து சென்றேன். கன்னியின் பாதத்தருகே திருவாழிமார்பனின் ஆலயத்தை வணங்கிப் பின் தென்திருப்பதிகளை வலம் கொண்டு மதுரை வந்தேன். அழகர்மலை அழகனை வணங்கி, பாண்டியன் அவைக்குச் சென்றேன். அங்கே என்னை அவன் நற்சொற்களாலும் நறும்பூக்களாலும் நால்வகை அணிகளாலும் வணங்கினான். அவனுடன் ஒரு திங்கள் இருந்து தென்தமிழ் நாட்டுச் செய்தி களைச் சொல்லி மகிழ்ந்து இன்று அறிதுயில் கொண்ட அரங்கனை வணங் கும்பொருட்டு வடதிசைச் செல்கிறேன்'' என்றான் மறையவன்.

"இவள் என் மகள்'' என்றாள் கவுந்தி. ''வணிகம் செய்யும் பொருட்டு இவள் கணவன் மதுரைக்குச் செல்கிறான். யான் வழித்துணை தந்தேன். மதுரை செல்லும் நல்வழியைக் கூறியருள்க.''

''கனல் எரியும் கோடையில் வழிநடக்கத் துணிந்துள்ளீர்கள். சோழநாட்டுக் குளிர் நிலமல்ல பாண்டிய நாட்டு வெந்நிலம். நால் வகை நிலமும் நாட்பட நாட்பட நலமழிந்து பாலையென்னும் வடிவம் கொண்ட மண் இது. இத்தெள்ளாற்றுக்கு அப்பால் பாண்டி யப் பெரும்பாலை திறக்கிறது. அப்பால் எம்பிரான் நின்றருளிய அழகர்சோலை வரும்வரை வன்பாலை தொடரும். அதன் பிறகே கன்றுகளின் கழுத்துமணியாலும் ஆயர் குழலோசையாலும் அணி செய்யப்பட்ட முல்லைநிலம் தோன்றும். முல்லைக்கு அப்பால் வையை நனைக்கும் சிறுமருத நிலத்துள் உள்ளது தொல்புகழ் கொண்ட மதுரை'' என்றான் மறையவன்.

"இவர்கள் கொல்லா நலம் கொண்டவர்கள். இவர்களுக்கு எல்லா இறையும் துணை நிற்கும்'' என்றாள் கவுந்தி.

"இங்குள்ள எவ்வழியும் மதுரை செல்வதேயாகும். ஏனெ னில் இங்குள்ள சிறந்தவை அனைத்தும் கடல் தேரும் ஓடையும் ஆறும்போல மதுரை நோக்கியே செல்கின்றன'' என்றான் மறையவன். " நீவிர் கேட்பதால் பிரிந்து செல்லும் மூவகை வழியின் திறம் உரைப்பேன். எவ்வழியும் மூன்றாகப் பிரிவதே என நீவிர்

அறிந்திருப்பீர். இந்தப்பாலை நிலத்துக்கு அப்பால் கொடும் பாழூருக்கும் நெடுங்குளத்துக்கும் இடைப்பட்ட கரையில் இப் பாதை முக்கண்முதல்வன் சூலம்போல மூன்றாகப் பிரிகிறது. வல மாகச் சென்றால் எயினர் வாழும் கொடும்பாலை நிலம். அவ்வழி தென்னவன் சிறுமலைக்கு செல்லும். அதன் பின் மதுரை தோன்றும். இடப்பக்க வழியில் சென்றால் மருதம் காய்ந்த புன் நிலம். அவ்வழி திருமாலிருஞ்சோலை வந்தணையும். நடுவழியே சென்றால் கோடைக்கு உவப்பாகும் தோட்டங்கள் உண்டு. முதல் வழியில் முயற்சியுடையவன் அடையும் வெற்றி உள்ளது. இரண் டாம் வழியில் நல்லூழ் கொண்டவனின் வெற்றி காத்திருக்கிறது. மூன்றில் மதிநுண்மை கொண்டவனுக்குரிய நலம் உள்ளது. வழி தேர்வது அவரவர் விருப்பம். ஒருவர் செல்லும் பாதை அவருக்குள் முன்னரே உள்ளது என்பதல்லவா நூலோர் வகுத்த முறை?''

கோவலன் ''ஆம் மாண்புடையவரே. எவ்வழி தேர்வதென்று என்னால் அறிய முடியவில்லை'' என்றான்.

''உன் ஊழ்வினை உன்னை எங்கு கொண்டுசெல்கிறதென நீ உணர்வதற்கு வழியொன்றுள்ளது'' என்றான் மறையவன். ''இரண் டாவது பாதையில் சென்றால் திருமாலிருஞ்சோலை அருகே மண் பிளந்து இருண்ட வாயென அகன்றிருக்கும் பெரும்பிலம் ஒன்றுள்ளது. அதனுள் இறங்க முன்னோர் செதுக்கிய கற்படிகள் உள்ளன. உள்ளே செல்லும்போது இருள் மெல்ல விலகும். அங் குள்ள வட்டவடிவமான அறையில் இருந்து மூன்று குகைப்பாதை கள் பிரிந்துசெல்கின்றன. அவை புண்ணியசரவணம், பவகாரணம், இட்டசித்தி என்று பெயர்பெற்றுள்ள மூன்று குளிர்நீர்ப் பொய்கை களைச் சென்றடைகின்றன. புண்ணிய சரவணத்தில் நீராடினால் விண்ணவர் கோமான் இயற்றிய முழுமுதல் நூல் கற்ற மேலோர் ஆகலாம். பவகாரணியில் நீராடினால் முன்னைவினையும் வரும் வினையும் அறியலாம். இட்டசித்தியில் நீராடினால் எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம். இது முன்னோர் வகுத்த நெறியாக அங்கே கூறப்படுகிறது. உளத்தூய்மையும் ஒடுங்கா வீரமும் கொண்ட வர்க்கே அதற்குள் இறங்க முடியும். உனக்கு உன்மீது உறுதிப்பாடு இருப்பின் அதுவே உன் பாதையாகுக'' என்றான் மறையவன்.

கோவலன் ''அதுகுறித்து நான் கருதுவேன் மறையவரே'' என்றான்.

கவுந்தி மறையவனை வணங்கி ''முதுமறையவனே, உன் சொற்களுக்குக் கடப்பாடு உடையோம். உன் செலவு இனிதாகுக'' என்றாள். மறையவன் வணங்கி விடைபெற்றான்.

பின்பு அவர்கள் பெருவழியே சென்று தெள்ளிய மென்நீர் சிறிதே ஓடும் தெள்ளாற்றை அதனுள் எருமைக்கூட்டங்கள்போலச் சிதறிக்கிடந்த கரும்பாறைகள்மீது நடந்து கடந்தனர். வழியின் பசுமை மெல்ல மெல்லத் தேய்ந்தறுவதைக் கண்டு கோவலன் ''பாலை தொடங்குகிறது'' என்றான். ''இவளது மென்பாதங்கள் எப்படி இவ்வருத்தத்தைத் தாங்கும் என்று என் உள்ளம் ஐயுறுகிறது அன்னையே.''

கவுந்தி புன்னகை செய்து ''புகார் மாளிகையில் இருந்து படியிறங்கிய பாதங்களல்ல இப்போது அவளுக்கு. அவற்றில் அவள் எண்ணற்ற முட்களை உணர்ந்துவிட்டாள். அவளுக்கு இப்போது பாலையும் சோலையும் ஒன்றே'' என்றாள். கோவலன் பொருள் விளங்கா நோட்டத்துடன் திரும்பி கண்ணகியைப் பார்த்தான். அவள் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள். கோவலன் பெருமூச்சுடன் திரும்பிக்கொண்டதும் நீலியின் விழிகள் கண்ணகியைச் சந்தித்தன. கண்ணகியின் கண்கள் ஒளிவிட்டன.

சிறுநிழல் விரிந்த ஒரு வேலமரத்தடியில் அவர்கள் அமர்ந்தனர். ''அன்னையே இந்த மூன்று பாதைகளில் எவ்வழியே செல்வது என்று என் உள்ளம் தவிக்கிறது'' என்றான் கோவலன். ''அச்சுனைகளிலாடி என் வாழ்வின் முழுமையை அடைந்தாலென்ன என்று என் உள்ளம் ஏங்குகிறது.''

''இப்போது ஓய்வெடுப்போம். உன் துயிலில் அருகர் உனக்கு நல்வழி காட்டுவதாக'' என்றாள் கவுந்தி.

அவர்கள் மரத்தடியில் படுத்துக் கொண்டனர். கோடைக் காற்றுக்கு கோவலன் விரைவிலேயே தூங்கிவிட்டான். நீலி கண்ணகியிடம், ''அந்தப் பெரும்பிலம் மிகமிகத் தொன்மையானது. தென்மலைகள் எழுந்தபோது அவற்றுக்கு இடம்விட்டுத் தாள் நெகிழ்ந்த மண்ணின் மடி அது. முன்னொரு காலத்தில் அதனுள் இருண்ட பல சுனைகள் ஊறி நீர் வெளியே வழிந்து சிலம்பாறு எனும் சிற்றாறு ஒன்று எழுந்து திருமாலிருஞ் சோலையை வளைத்து வையையில் கலந்திருந்தது. மண்ணுக்குள் வாழும் பேரன்னையின் வெள்ளிச் சிலம்பென அது பாவலரால் வாழ்த்தப்பட்டது. காலம் மூத்து முதிர்கையில் அது வற்றிற்று. அதன் ஆழம் பெரும்பங்கு தூர்ந்துவிட்டாலும் இப்போதும் அதனுள் வாவிகள் உள்ளன'' என்றாள். திரும்பி கோவலனை நோக்கியபின் ''அவனை இப்போது நான் சிலம்பாற்றின் மூவகைச் சுனைகளிலாடக் கொண்டுசெல்கிறேன்'' என்றாள்.

இருண்ட பெரும்பிலத்தின் வாசலில் நின்ற கோவலன் இறுதியாகத் தன் உள்ளத்தைத் திரட்டித் துணிவைச் சேர்த்துக் கொண்டு உள்ளே இறங்கினான். செந்நிறமான மண்ணாலான பாதை என்று பார்வைக்குத் தோன்றியது கால் வைத்ததும் உறுதியான பாறையாக இருந்ததை அறிந்து வியந்துகொண்டான். அதில் வெட்டப்பட்ட சிறுபடிகளின் வழியாகத் தன் சிறுயாழை உடலோடு அடக்கிப்பற்றியபடி இறங்கிச் சென்றான். அந்த அகன்ற கூடம் இருண்டிருந்தது. திசை தெரியாமல் திகைத்துச் சற்று நேரம் நின்றான். தொலைவிலிருந்து நீரின் ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. கண் பழகியதும் மெல்லிய நிழல்வடிவமாக மூன்று குகைத் திறப்புகளைக் கண்டான். மறையவன் சொன்ன பாதைகள் அதுவே என்று தெளிந்தான். அப்பாதைகளில் எது தன் வழி எனத் தேரச் சிறிது நேரம் அவன் நின்றான். பின்பு தன் யாழ்நரம்புமீது கண்களை மூடிக் கொண்டு கைவைத்தான். அது முதல் நரம்பென்பதைக் கண்டு முதல் வாசல் நோக்கிச் சென்றான்.

குகைக்குள் மெல்லிய ஒளி பரவுவதைக் கண்டு அவன் நின்ற போது முதல் வாசலுக்கு அப்பால் ஒரு கதவு திறந்ததுபோல மறுபக்கம் தெரிந்தது. குளிர்ந்த சோலை ஒன்றின் காற்றும் ஒலிகளும் மணங்களும் வந்தன. அவன் அவ்வழியாக உள்ளே சென்று ஒளிக்குக் கூசிய கண்களை ஒரு கணம் மறைத்துக்கொண்டு பின் தெளிந்தபோது எதிரே வட்டவடிவமான சிறு நறுஞ்சோலை ஒன்றைக் கண்டான். பூத்த மலர்மரங்கள் கிளைதாழ்த்தி முகம் நோக்கிய ஆடியென அதன் நடுவே ஒரு வட்டவடிவ வாவி நீலம் நெளித்து நின்றது. எல்லாச் செடிகளிலும் கொடிகளும் வண்ண மலர்கள் விரிந்து செறிந்திருப்பதையும் மலர்களில் எழுந்தமர்ந்து சிறகடிக்கும் பூத்தும்பிகள் பறக்கும் மலர்கள்போலக் காற்றை அளைந்ததையும் கண்டான். மரக்கிளைகளில் மருண்ட மங்கையின் இமைகள்போல வண்ணச்சிறை விரித்துப் படபடக்கும் சிறு பறவைகள் கிள்ளை மொழிபேசிக் கூடியிருந்தன.

யாழுடன் அவன் அவ்வாவி நோக்கிச் செல்லுங்காலை எதிரே நின்ற கருங்கோங்க மரம் தன் கிளைகளை அசைத்து உயிர் கொண்டது. அதன் மலர்க்குவைகளுக்குள் ஓர் அசைவைக் கண்டான். அவ்வசைவு மெல்லத் திரண்டு ஓர் இளநங்கையெனத் தோற்றம் கொண்டு முன்னகர்ந்து வந்தது. அவளது நீள்கருங்கூந்தல் அலையலையாகக் கிளம்பி பின்புறம் நீண்டு பறந்தது. தொடிவளையும் தோள்வளையும் மேகலையும் சிலம்பும் அணிந்த சிவந்த மெல்லுடல் கோதைவளைவென ஒசிய வந்து நின்று அவள் புன்னகை செய்தாள்.

''நீ யார்? இங்கு வாழும் அணங்கா?'' என்றான் கோவலன்.

''தென்நிலமென்பது பூக்கும் மலர்களைவிட மேலாக அணங்குகள் வாழும் இடமல்லவா?'' என்றாள் அவள். ''ஆம் நான் இந்த வாவிக்குக் காவல். இதன் பெயர் அறிவருள்வாவி. இதன் காவல் அணங்கான என் பெயர் நலமருள்நங்கை. வடநூல் என்னை வரோத்தமை என்னும். இதைத் தகுதியற்றோரிடமிருந்து காக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.''

''இதில் நீராட நான் செய்யவேண்டியது யாது ?'' என்றான் கோவலன்.

''நூலறிவுகொண்டவன் என்றால் நீ அறிந்திருக்கக்கூடும், இன்று தென்மொழியின் நூல்களில் பெரும்பகுதி எவரால் எங்கு ஆக்கப்பட்டவை என்றும் எப்பொருள் கொண்டவை என்றும் அறிய ஒண்ணாதவையாக உள்ளன. அவை விளைந்த தென்குமரி நிலத்தைக் கடல் கொண்டுவிட்டது. இன்று அந்நூல்கள், அறியாதவை உருவாக்கும் அச்சத்துடன் மன்னர்களின் கலவறைகளில் பேணப்படுகின்றன. தென்குமரி நிலம் வாழ்ந்த முன்னோர் வகுத்த ஏழு மெய்ந்நூல்கள் இந்த வாவியின் ஏழு சுவர்களிலாகப் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வாவியில் நீராடி அவற்றைக் கற்பவன் இந்தத் தமிழ்நிலத்தில் வழங்கும் பிற நூல்களனைத்தையும் ஐயம் அறக் கற்க இயலும். அவனுக்கு மானுட அறிவின் உச்சமாகிய தொல் மொழி அறிவு முழுமையாகக் கிடைக்கும்'' என்றாள் அணங்கு. ''நீ இந்நூல்களைக் கற்கும் தகைமை கொண்டவன்தானா என்பதை நான் நோக்கவேண்டிய நிலையில் உள்ளேன். ஏனெனில் இல்லாத அறிவைக் காட்டிலும் தவறான அறிவு அஞ்சத்தக்கது...''

''ஆம், நீ உன் ஆய்வை நிகழ்த்துக...'' என்றான் கோவலன்.

''என்னுடன் வருக'' என்று கூறி நலமருள்நங்கை முன்னால் நடக்க, கோவலன் அவளைப் பின்தொடர்ந்தான். அவள் உடல்

மெல்ல மெல்லப் பேரழகு கொள்வதைக் கோவலன் கண்டான். அவன் உள்ளம் அவ்வழகைவிட்டு வேறெங்கும் நகரவில்லை. அவள் அந்தச் சுனையின் படிமீது வந்து நின்றாள். அச்சுனையும் அதன் சூழலும் மெல்லிய பொன்னொளியில் மின்னத் தொடங்கின. இளவேனிலில் கள்வெறி கொண்டு இசையாடுபவன்போல கோவலன் உள்ளம் இன்பத்தில் ஆழ்ந்திருந்தது.

''இந்தச் சுனையின் நீர்ப்பரப்பைப் பார். இது மெய்யறிவின் ஆடி எனப்படும். மூன்று படிகள் கொண்டது இந்தச் சுனை. இதன் முதற்படியில் நீ காண்பது அழகும் அருளும் சிறப்பும் பொருந்தியவற்றை. இரண்டாவது படியில் நீ காண்பது அழகின்மையும் மருளும் புன்மையும் நிறைந்தவற்றை. மூன்றாவதில் நீ காண்பது அவ்விரண்டையும் கடந்தவற்றை. அதன் பின்னரே நீ அனைத்துக்கும் ஊற்றாகும் மெய்ம்மையைக் காண்பாய். இவற்றைக் காணும்போது ஒருமுறையேனும் நீ அஞ்சிப் பின்னடி எடுத்துவைத்தால் பிறகெப்போதும் இந்தச் சுனைக்கு நீ வர இயலாது. மெய்யறிவின் ஊற்று பின்வாங்குபவனுக்குரியதல்ல'' என்றாள் நலமருள்நங்கை.

முதற்படியில் கோவலன் கால் வைத்தான். அவன்முன் விரிந்த நீலநீர்ப்பரப்பின் ஆடியில் அவனறிந்த பேரழகுகளின் தோற்றங்கள் அனைத்தும் விரிந்தன. அவை முளைத்துப் படர்ந்து அறியாத பேரழகுகளாக மாறிப் பெருகின. மலர்களும் மகளிரும் நறுமணங்களும் சுவைகளும் கலைகளும் காவியங்களும் ஒன்றான பேரின்பத்தை அவன் உள்ளம் சில கணங்களில் அறிந்தது. அந்நீல ஆடிக்குள் அவன் பிறந்து இறந்து பிறந்து வாழ்ந்து வாழ்ந்து அவற்றைத் துய்த்துத் துய்த்து நிறைந்தான். இன்பங்களில் திளைத்துத் திளைத்து முன்னகர்ந்தான். பேரழகனாகப் பிறந்து அனைவராலும் விரும்பப்பட்டான். அப்போது பிறர் கண்கள் எப்போதுமே தன்மீது படிந்திருப்பதனால் பிறர் பொருட்டு நடித்து அவன் இழந்த அனைத்தையும் மறுபிறப்பில் எவருமே கண்கள் பதிக்காத அழகிலியாகப் பிறந்து அறிந்தான். ஆணாகவும் பெண்ணாகவும் பிறந்து கொண்ட இன்பங்களுக்கு அப்பால் எஞ்சியவற்றை அலியாக மாறிப் பெற்றான். குருடாக மாறிச் செவியின்பத்தையும் செவிட்டுமையாகப் பிறந்து விழியின்பத்தையும் அடைந்தான். சில கணங்களுக்குள் ஏழு பிறவிகளையும் தாண்டிச் சென்றான். அவ்வின்பங்கள் திகட்டத் தொடங்கின. அவற்றை அவன் உள்ளம் தள்ளியது. அவற்றிலிருந்து தப்ப விழைந்தது. அக்கணமே அவை தாங்கமுடியாத பெருந்துன்பங்களாக ஆயின.

அழகுகள் கொடுந்தோற்றம் கொள்ள இனிமைகள் குமட்டல்

கலைகள் சலிப்பூட்ட ஒரு கணம்கூட இனிப் பொறுப்பதில்லை என்று அவன் உள்ளம் சிலைத்து நின்றது. அவன் முன் மேலும் அவன் போகவேண்டிய ஏழாயிரம் பிறப்புகள் எஞ்சியிருந்தன. தன் ஆற்றலையெல்லாம் திரட்டி அவன் முன்னகர்ந்தான். பின்னகர்ந்து விட முடிவெடுக்கும் கணத்துக்கு முந்தைய கணங்களே அவனுடைய காலமாக மாறின. அவ்வின்பங்களில் உளத்தை ஒருகணம்கூட நிலைக்கவிடாமல் அருவிக்கு அடியில் வாழும் கரும்பாறைபோலத் தன்னை ஆக்கிக்கொள்ளுதலே சிறந்த வழி என்று கோவலன் தண்டான். ஐம்புலன்களையும் அவற்றை ஆளும் நுண்புலனாகிய அகத்தையும் முற்றாக அவித்துக்கொண்டு முன்னகர்ந்தான். முடிவே யற்ற கொடிய பாதை முன்னால் கிடந்தது. அதில் தன்னந்தனிமை யில் தன்னைப் பற்றிய உள்ளுணர்வொன்றே துணையாக முன் னேறியபடியே இருந்தான்.

அப்பாதையின் மறுபக்கம் ஓர் ஒளிரும் பொன்வாயிலைக் கண்டான். விடிவெளிச்சம் அணிசெய்த அதன் படிகள் அவன் பாதங் களுக்காக அழகிய மென்மையுடன் நின்றன. அவன் அதனருகே சென்று நின்றதும் கனவிலிருந்து விழிப்பவன்போல அதிர்ந்து மீண்டான். மேலே நலமருள்நங்கையின் மெல்லிய சிரிப்பு கேட்டது. ''அது அடுத்த படி . நீ விரும்பினால் இப்போதுகூட நீ பின் திரும்பலாம். இந்தப் படியை நீ இறங்கியமைக்குப் பரிசாக அப் படியில் இருந்து ஒரு செம்மணிக் கல்லை நீ எடுத்துச் செல்லலாம். அது உன் இன்றைய இன்னல்களை முற்றாக நீக்கும். துணிவிருந் தால் நீ அடுத்த படி மீது இறங்கலாம்....'' என்றாள் அவள்.

கோவலன் அஞ்சியபடி எண்ணங்கள் அசைவிழக்க அப் படியே நின்றான். திரும்பிவிடலாமென்று அவன் உள்ளம் கோரியது. ஆனால் அவனுள் துடித்த ஆழத்து விருப்பின் நரம்பு அவனைப் பின்வாங்க விடவில்லை. இல்லை, நான் பின்வாங்கு கிறேன் பின்வாங்கிக் கொள்கிறேன் என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டு பின்வாங்கும்பொருட்டு காலைத் தூக்குகையில் ஒன்றை உணர்ந்தான். அவன் உள்ளம் அதற்குள் அவ்வாயிலை அடங்கா விருப்புடன் அடைந்து முட்டத் தொடங்கியிருந்தது. பின் வாங்குகிறேன் என்றெண்ணி அவன் எடுத்த பாதம் முன்னால் விழக் கண்டான். அவன் முன்னால் நகர்வதை அவன் பேரச்சத்துடன் கண்டான்.

அவ்வொளிர் வாசலைத் திறந்து உள்ளே நுழைந்தபோது அவன் உள்ளம் முதற்கணம் பேரச்சத்தின் கடுங்குளிரை அறிந்தது. அதன் உலகங்களையே உண்டு விழுங்கும் காமத்தின் விசையை.

அவையிரண்டும் இணைந்த பேரலை தன்னை முற்றாக அள்ளி முன்னெடுத்துச் செல்வதைக் கண்டான். சூழ்ந்திருக்கக் கண்டவை அழகின்மையின் வெளியில் புடைத்தெழுந்த புன்மைகளின் பெருந் தோற்றங்கள். இருளும் மருளும் ஒன்றான அசைவுகள். அவற்றை யெல்லாம் தன் ஆழம் முன்னரே உணர்ந்திருக்கிறதென்று அறிந்து அவன் அஞ்சினான். அவற்றைக் கண்டதும் அவன் அதிர்ந்து நிற்கையில் அவன் உள்ளத்தில் ஒரு பகுதி இடைவிட்டு நழுவியிறங்கி முன்னால் ஓடும் குழவியெனச் சென்று அவற்றுடன் கொஞ்சி விளையாடுவதைக் கண்டான். தொட்டறிந்த மறுகணமே அப் புன்மைகள் அனைத்தும் உள்ளம் கவர்பவையாக மாறின. அவற்றில் முடிவின்றி உள்ளே செல்ல வழிகளிருந்தன.

அந்த தீமைப்பெருங்கடல்வெளியில் உள்ளத்தின் நடுவே நன்னயம் கொண்டவனாகப் பிறந்து குற்றவுணர்வின் தித்திப்பை அறிந்தான் கோவலன். தீமையே உள்ளமானவனாகப் பிறந்து இரண்டற்றுத் திளைக்கும் பேரின்பத்தை அறிந்தான். வதைத்து மகிழ்ந்தான். வதைபட்டு மகிழ்ந்தான். அறிஞனாக அனைத்தையும் தொகுத்தும் பகுத்தும் அறிந்தான். அறிவிலியாக ஏதுமின்மையில் நீந்தினான். அவற்றிலிருந்து தப்பி ஓடித் துரத்தப்படுவதன் பேரின்பத் தையும் அவற்றைத் துரத்தி வேட்டையின் பேரின்பத்தையும் அடைந் தான். பிறந்து பிறந்து அவன் அறிந்த புன்மையின் வெளி தன் விருப் பத்தாலேயே உருவாக்கப்பட்டது என்றும் தன் பகற்கனவுகளால் பெருக்கப்படுவதென்றும் அறிந்தான். ஆகவே அது முடிவின்றி மேலும் பெருகியது.

பிறகு ஒரு கணத்தில் சற்றே தன்னிலை மீண்டபோது அக் கணங்களில் மட்டுமே தன்னை முற்றாக இழந்து பிறிதொன்றாக ஆகும் நிலை கைகூடியிருப்பதை உணர்ந்தான். நெடுங்காலம் ஆகி யிருக்கக் கூடுமென்றாலும் அது ஒரு கணத்தின் துளியினும் துளியா கவே இருந்தது. அங்கு காலம் ஒரு ரசக்குளிகையாக மாறி விட்டி ருந்தது. அதன் துளிப்பரப்பில் திசைவெளியின் எல்லையின்மை பிரதிபலித்தது. அவன் இயல்பாகத் திரும்பிய கணத்தில் ஒன்றை உளம் அதிரக் கண்டுகொண்டான். அவன் மீண்டு சென்று நுழைய வேண்டிய வாயில் அவன் இறங்கிவந்த வாயிலே. அது வெகு தொலைவிலிருந்தது.

அதை நோக்கிச் செல்ல வேண்டுமெனில் நின்று திரும்ப வேண்டும். நிற்க முயன்றாலும் கால்கள் முன்னகர்ந்தபடியே இருந்தன. இதோ நிற்பேன் இதோ இக்கணம் என்றே காலங்கள் சென்றுகொண்டிருந்தன. நின்றாகவேண்டும் இல்லையேல் இது

என்னைப் பேரிருளுக்குக் கொண்டுசென்று சேர்க்கும் என்ற அச்சம் ஒரு கணம் வந்து மறைந்தது. ஏன் நிற்க வேண்டும் இப்பேரின்பத்தின் இக்குன்றாப் பேரழகை வேறு எங்கு நான் அடையமுடியும், இதுவன்றி நான் வாழ்வதற்கு என்ன பொருளிருக்க இயலும் என்று பிறிதொரு உள்ளம் தாவியது. துய்க்கும்தோறும் வளரும் பேரின்பம் என அது ஒன்றே இருக்க இயலுமென்பதையே அப்போதுதான் அறிந்தான். அறுக்க முனையும்தோறும் அதன் இழுவிசைக்கு வலிமை ஏறியது. விட்டுவிட எண்ணிய மறுகணமே எல்லையற்ற இழப்புணர்வு வந்து உள்ளத்தை வெறுமையில் ஆழ்த்தியது.

ஆனால் அப்பயணம் அப்படியே தொடர இயலாது என்றும் நின்று திரும்பியாகவேண்டும் என்றும் அவன் அவ்வப்போது உணர்ந்துகொண்டும் இருந்தான். பின்பு அவனறிந்தான், அந்தப் பின்னழைப்பே, அந்த உளத்துடிப்பே அக்கணங்களுக்குத் திகட்டாத பேரின்பதை அளிக்கிறதென. மீளும் வழி பின்னாலிருப்பதனாலேயே முன் திசையில் அந்த மாபெரும் ஈர்ப்பு உள்ளது என. அக்கணம் முதல் பின்னாலிருந்து அழைக்கும் அந்த மெல்லிய மன்றாடலையும் முன்னகர்தலின் இன்பத்தின் ஒரு பகுதியாக மாற்றிக் கொண்டான் அவன்.

பின்பு ஒரு தருணத்தில் மீள வேண்டுமென்ற எண்ணம் வந்த அக்கணமே மறு நினைப்பு இல்லாமல் கால்களைத் திருப்பிக் கொண்டான். எப்படி அதற்குத் தன் உள்ளம் துணிந்தது என்று அவன் ஆழம் பெருவியப்புடன் எண்ணிக்கொண்டது. முன் தூக்கி வைக்கும் கால்கள் இரும்பாலானவைபோல எடை கொண்டன. பின்னிருந்து அவனைச் சிறு சருகென ஆக்கும் பெருவிசை இழுத்தது. ஆயினும் அவன் கால்களை எடுத்துவைத்து நடந்து கொண்டிருந்தான். அப்போதுதான் அவன் அங்கு அதுவரை அறிந்தவை சிறுதுளியே என்றும் அவ்விருள்வெளியின் பெரும்மடிப்புகள் அவனருகே அவனுக்காகக் காத்து நிற்கின்றன என்றும் அறிந்தான். திரும்பிவிடுவதற்கான எண்ணத்துக்கும் காலெடுக்கும் செயலுக்கும் இடையேயான நுண்ணிய ஊசலாட்டமே அவன் உள்ளமாக இருக்க அவன் நடந்து கொண்டிருந்தான். தன் முழு ஆற்றலாலும் ஒவ்வொரு கணத்தையும் அவன் நிகழ்த்தவேண்டியிருந்தது. உள்நுழைந்த வாசலை அடைந்து அவன் வெளியே வந்த இடம் முற்றிலும் புதிய இடம்

அவன் தன்னைப் படிகளில் கண்டடைந்தபோது நலமருள் நங்கையின் மென்சிரிப்பு ஒலித்தது. ''நீ வென்றுவிட்டாய். நீ விரும்பினால் இப்போதுகூட பின்திரும்பலாம். இப்படியில் இறங்கிய

மைக்குப் பரிசாக நீ ஒரு நீலமணிக் கல்லை எடுத்துக் கொள்ளலாம். அடுத்த படி மேலும் ஆழமானது. அதைக் கடக்க துணிவிருந்தால் முயலலாம்.''

கோவலன் புன்னகை புரிந்தான். ''இவ்விரு படிகளும் வாழ்க்கையின் இரு பக்கங்களையும் எனக்குக் காட்டிவிட்டிருக்கின்றன. இதற்கு அப்பால் நான் அஞ்ச வேண்டுவது என்று ஏதும் இருப்பதாக எண்ணவில்லை'' என்று சொல்லி உறுதியாகப் பாதங்களை எடுத்து முன்வைத்தான். அவன் முன் நிழலால் ஆனது போல ஒரு வாசல் தெரிந்தது. அவன் அதைக் கடந்தபோதே அது இல்லாமலாயிற்று.

அவ்வாசலுக்கு அப்பால் பேரமைதியே திசைகளாகவும் வானாகவும் விரிந்து கிடந்தது. அதில் நுழைந்த முதற்கணம் தன் அகம் அடைந்த முழுமையான விடுதலையை எப்போதும் அறிந்தது இல்லை என்று அவன் உணர்ந்தான். அப்பேரின்பத்தில் திளைத்த படி முன்னகர்ந்தபோது முன்னர் அறிந்த இருளும் ஒளியும் நன்மையும் புன்மையும் ஒருங்கே பொருளற்றவையாகப் பட்டன. சிரித்துக் கூவி ஆர்த்தபடி கைவீசி அவன் அவ்வெறுமை விரிவில் முன்னால் பாய்ந்தோடினான். உள்ளத்தின் வெளியை எதுவும் முற்றாக நிரப்பமுடியாது ஏதுமின்மையின் வெளிதவிர என்று அறிந்தாள். அவ்வெறுமையின் தோற்றம் கணம் கணமாக அவனுள் நிறைய, எண்ணங்கள் விருப்பங்கள் ஏதுமற்றவனாக ஆனான். அடைவதென்று ஏதுமிலாது இருத்தல் மட்டுமே இன்பமாக இருக்க இயல்பாக முன்சென்றுகொண்டிருந்தான்.

வெகுதூரம் வெகுகாலம் ஓடித் தளர்ந்து களைத்துச் சோர்ந்து மெல்ல அமர்ந்தபோது அவனை அதிர வைத்த அறிதல் ஒன்றை அடைந்தான். அது ஒரு கணம் மட்டுமே. அவன் முன் கோடிகோடி கணங்களினாலான பெருங்காலம் விரிந்து கிடந்தது. அவனுள் அச்சம் ஊறத்தொடங்கியது. விரைவாக முன்நோக்கி நடக்க நடக்க ஒரு கணத்தையே முடிவின்றிக் கடந்துகொண்டிருப்பதாக உணர்ந்தான். அவனைச் சுற்றி ஏதுமில்லை. வானம் திசைகள் மண் எல்லாம் முற்றாக நிறமற்ற பருவற்ற இன்மையில் விரிந்துகிடந்தன. பொருட்களின் வழியாகவே காலம் அசைய இயலும் என்பதைக் கண்டான். அசையாத காலத்துக்கு முதல்முடிவில்லை. முதல்முடிவற்ற ஒன்றை அறிய இயலாது.

வெறுமை எடையின்மையின் ஒரு புள்ளியிலிருந்து தொடங்கி ஏறி ஏறி வந்து அவனை அழுத்தியது. அவன் உடலின் நரம்புகள் புடைத்துத் தெறித்தன. இமையசைவை நிகழ்த்தவே

உடலிலும் உள்ளத்திலும் உள்ள அனைத்து ஆற்றல்களும் தேவைப் பட்டன. அணுவணுவாக முன்னகர்ந்து வெகுநேரம் சென்றபின்பு அது ஒரு காலக்கணத்து ஒரு தூரத்துளியே என்று உணர்ந்து நிமிர்ந்து முன்னால் நோக்கினான். முடிவின்மையே விரிந்து கிடந்தது. உள்ளம் உடைந்து கால்கள் தளர்ந்து அப்படியே சரிந்து அமர்ந்து அழுதான். பின் எழுந்து பின்னால் திரும்பி ஓடினான். திரும்பிப் பார்த்தபோது அவன் விட்டுவந்த பாதையின் மறுபக்கம் மென்மை யான பேரொளி ஒன்றைக் கண்டான். ஆனால் ஓடித் தான் உள்ளே இறங்கிய வாசலை அடைந்து தாவி மறுபக்கம் வரவே அவனால் முடிந்தது.

` நலமருள்நங்கை புன்னகையுடன் நின்றாள். ''மூன்றாவது படியை இறங்கி இவ்வாவியில் நீராடியவர்கள் மீண்டதேயில்லை.'' என்றாள். ''மூன்றாம் படியிலிருந்து நீ இந்த நிறமற்ற மணிகளில் ஒன்றை எடுத்துச் செல்லலாம்.''

துயரம் கனத்த நெஞ்சுடன் கோவலன் ஒரு மணிக் கல்லை எடுத்துக்கொண்டான். மறுகணம் அக்குகை வாசலில் அவன் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவன் கையில் இருந்த மாணிக்கத்தை அவனால் உணர மட்டுமே முடிந்தது; அறிய இயலவில்லை.

ஓ

ஊவகாரணம் என்னும் பிறப்பறுவாவிக்குச் செல்லும் பாதையில் கோவலன் வியந்தான். அதற்குள் இறங்குவதா வேண்டாமா என்ற எண்ணம் அவனை எதிர்நின்று தடுக்க அதைத் தாண்டி அப்பாதைக்குள் சென்றான். பாதையை மறித்த பாறைக் கதவின் மீது எழுதப்பட்டிருந்த ஓவியப்பாவையைக் கண்டு நின்றான். அவ்விழிகளை நோக்கி நின்றான். அவ்விழிகள் மெல்ல வெட்கி நகை கொண்டு சரிந்தன. பாவை உடலில் மென்சிலிர்ப்புடன் உயிரசைவு உருவாயிற்று. அவள் எழுந்து அவனை வணங்கி நின்றாள். ''பிறப்பறு வாவிக்கு நல்வழி காட்டும் ஓவியப்பாவை என்னும் அணங்கு நான். என்னுடன் வருக'' என்று அவனை அழைத்துச்சென்றாள்.

பிறப்பறு வாவியின் கரையில் நின்றபின் ஓவியப்பாவை கோவலனிடம் ''இவ்வாவியில் நீர் இறங்கி முதல்முறை மூழ்கும் போது முன்னை வினை அறிவீர். அடுத்தமுறை மூழ்கும்போது பின்னை வினை அறிவீர். மூன்றாம் முறை மூழ்கும்போது நிகழும் வினை அறிவீர். உங்கள் விருப்பம் நிறைவேறுக'' என்று சொல்லி மீண்டாள்.

சோலை நிழல்கள் ஆடும் குளிர்ந்த நீலவாவியின் படிகளில் கோவலன் கால்கள் நடுங்க இறங்கினான். அந்நிழல்களை நோக்கி அஞ்சி இறுதிப்படியில் நின்றான். அந்நிழல்களில் தானறிந்தவையும் அறிந்து மறந்தவையுமானபல்லாயிரம் முகங்கள் கலங்கி அசைவதைக் கண்டான். அஞ்சிப் பின்னகர எண்ணி அதற்கும் துணிவின்றி நீண்ட மூச்சுகளை விட்டான். பின்பு ஒரு கணத்தில் நெஞ்சு துணிந்து நீரில் இறங்கி மூழ்கினான். குளிர் அவன் தலையைக் கவ்வியபோது அஞ்சித் திறந்த கண்களில் நீலஒளியின் அலைகளாக நீர்வெளி தெரிந்தது. அதிலெழுதப்பட்ட ஓவியங்களை நோக்கிய கோவலன் அவை வேறு எங்கோ நிகழ்ந்துகொண்டிருப்பவை என்று அறிந்தான்.

தன்னைப்போன்றே உருவம் கொண்ட ஒருவனை அவன்

கண்டான். அவன் மன்னர்களுக்கு அமைச்சுத்தொழில் செய்யும் குலத்தவன் போல உடையணிந்திருந்தான். அவனுடன் அவன் மனைவியும் இருந்தாள். மழை பெய்துகொண்டிருந்த காலையில் தங்கள் இல்லத்தில் இருந்து கூண்டுவண்டியில் அவர்கள் கிளம்பிக் கொண்டிருந்தனர். அவன் வீட்டுக்குள் இருந்து ஏவலர் பொருட்களைக் கொண்டுவந்து வண்டியில் வைத்தனர். நனைந்த மாடுகள் தலையசைக்க கழுத்துமணியோசை நீரொலிக்குள் எழுந்தது.

சங்கமன் திரும்பிப்பார்த்தபோது மழைத்திரைக்கு அப்பால் எவரோ தன்னை நோக்குவதுபோன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அவ்வுணர்ச்சியை அவனால் தவிர்க்கவே இயல வில்லை. பெருமூச்சுடன் தன் மனைவி நீலியிடம் உள்ளே ஏறி அமரும்படிச் சொன்னான். தன் இல்லத்து முகப்பில் நின்ற ஏவலர்களுக்குப் பொன் நாணயங்களைப் பரிசளித்துவிட்டு துயரம் நிரம்பிய உள்ளத்துடன் வண்டியில் ஏறிக்கொண்டான்.

மென்துகில் நெசவால் செல்வம் கொழித்த கலிங்க நாட்டில் தன் மூதாதையர் நெடுநாள் வாழ்ந்த ஊரில் இனித் தான் வாழ இயலாது என்று சங்கமன் உணர்ந்தான். தன்னைவிட்டு விலகிச் செல்லும் வீட்டையே அவன் நோக்கிக்கொண்டிருந்தான். மன்னர் குலம் இரண்டாகப் பிளவுபட்டிருந்தது. கபிலபுரத்தை ஆண்ட மூத்த புதல்வர் குமாரனும் சிங்கபுரத்தை ஆண்ட இளையவர் வசுவும் ஓயாது போர் புரிய கலிங்க மண்ணில் உதிரமே ஓயாது ஓடியது. குமாரனின் அமைச்சுக்குலத்தைச் சேர்ந்த சங்கமனின் தந்தை நாகமன் போரை நிறுத்துவதே சிறந்தது என்றும் இல்லையேல் கலிங்க மன்னர் குலம் அழியும் என்றும் மன்னருக்கு எடுத்துரைத் தார். மன்னருக்கு அச்சொல் உவக்கவில்லை. அமைச்சனைச் சிறையில் அடைத்தான்.

இனி அந்நாட்டில் வாழ இயலாதென்று சங்கமன் தன் இல்லா ளோடு கிளம்பினான். தென்திசையில் பொன்றாப்புகழ் கொண்ட புகார் என்னும் ஊர் இருப்பதையும் அங்கே குலநெறி வழுவாது ஆளும் கோழியன் கோல்திறம் அழியா அமைதியை உருவாக்கி யிருப்பதையும் கலம் கொண்டுசென்று மீளும் வணிகர் சொல்லி அறிந்திருந்தனர். மரக்கலமேறிப் புகாருக்குச் சென்று புது வாழ்க்கையைத் தொடங்கலாமென எண்ணினான் சங்கமன். குலச் சொத்தான நகைகளைக் கொண்டுசென்று எவருமறியாது சிங்க புரத்தின் கடைவீதியில் விற்று அச்செல்வத்துடன் கலமேறுவதே வழி என்று கண்டான்.

வழியெங்கும் அவனும் துணைவியும் ஏதும் உரை கொள்ள வில்லை. அவள் தன் எண்ணங்களிலேயே தான் அமிழ்ந்து அமர்ந் திருந்தாள். கபிலபுரத்து எல்லையை வண்டி கடந்தபோது நெஞ்சுக் குள் ஒரு தசை உதிரம்வழிய அறுபட்டதுபோல உணர்ந்தான் சங்கமன். விழிகளில் வழிந்த வெய்யநீரை விரல்களால் மெல்ல அழித்துப் பெருமூச்சுவிட்டான். சிங்கபுரத்து தெருக்களும் கபிலபுரம் போலவே பாழைடைந்து அச்சம் பரவி வெறித்துக் கிடப்பதையே கண்டான். சிங்கபுரம் துறைமுகம் என்பதனால் கடைவீதிகளில் அயல்நாட்டு வணிகர்கள் பலவண்ண உடையும் பலகுரல் பேச்சு மாக நடந்தனர். சிவிகைகளும் புரவிகளும் யானைகளும் ஊர்ந்த பெருவீதிகளின் இருமருங்கும் மாடமாளிகைகளில் கொடிகள் கடற்காற்றில் ஆடின.

நீலியை அருக விடுதி ஒன்றில் அமரச்செய்துவிட்டு நகை களுடன் சங்கமன் கடைவீதிக்குச் சென்றான். பொலங்கொள் வணிகரைத் தேடிக் கொடிகளைத் தேர்ந்து நடந்தான். அப்போதும் எவரோ தன்னை நோக்கிக்கொண்டிருக்கும் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. பொலங்கொள் வணிகன் அந்நகைகளைக் கூர்ந்து நோக்கினான். அவன் முகத்தில் ஐயம் படர்ந்தது. ''இவை அரச இலச்சினை உடைய நகைகள் வணிகரே. இவற்றை நான் எப்படி வாங்க இயலும்?'' என்றான். தன் ஏவலரை அழைத்துச் சங்க மனைப் பிடித்து தூணில் கட்டிவைக்கச் சொல்லி அரசபடையினரை அழைத்துவரச் சொன்னான். அரசபடையினர் வந்து சங்கமனைக் கட்டி இழுத்துச்சென்று படைபயில் களத்தில் வாட்பயிற்சி செய்து கொண்டிருந்த வசு மன்னர் முன் நிறுத்தினர்.

சங்கமனை நோக்கியதுமே அவன் கபிலபுரி மன்னர் குமாரரின் அமைச்சர் குலத்தவன் என்று மன்னன் அறிந்துகொண் டான். மன்னன் முகத்தில் மழைக்கார் போலக் குவிந்தேறிய கருமையைச் சங்கமன் கண்டான். அவன் உள்ளத்தில் அச்சம் ஏற்பட்டது. ''நீர் எதற்கு என் நாட்டுக்குள் வந்தீர்? ஒற்றறியவா?'' என்றான் மன்னன். சங்கமன் அழுதபடியே ''இல்லை நான் இந் நாடுவிட்டு ஓடுவதற்காகவே வந்தேன். நகைகளை விற்று அச்செல்வத்தை மரக்கலக்காரர்களுக்குக் கொடுக்க எண்ணினேன். என்னை நம்புங்கள். நான் புகாருக்குச் செல்கிறேன். நான் புகார்... என்று சொற்களை முடிப்பதற்குள் மன்னனின் கைவாள் சங்கமன் தலையைத் துண்டித்தது. வாயில் புகார் என்னும் சொல்லாக சொல்லுடன் சங்கமன் தலை மண்ணில் உருண்டு கிடந்தது.

துயரத்துடன் கோவலன் நீரில் இருந்து மேலெழுந்து வந்தான்

ஈரத்தாலும் எண்ணங்களாலும் நடுங்கியபடி இடைவரை நீரில் நின்றான். நீர்ப்பரப்பில் ஆடும் நிழல்களை நோக்கினான். ''இவை பிறருடைய பிறவிச்செயல்கள். உன் பிறவிச்செயல்கள் இவற்றுடன் பிரிக்க முடியாப் பெரும் வலையென இறுகிக்கிடக்கின்றன'' என்றாள் ஓவியப்பாவை. ''மீண்டும் அமிழ்வதென்றால் அவ்வாறே ஆகுக.''

கோவலன் மீண்டும் நீருள் அமிழ அஞ்சினான். கூப்பிய கைகளுடன் நடுங்கும் உடலுடன் நின்றுகொண்டிருந்தான். ஆனால் அவனால் கரையேறவும் இயலவில்லை. கண்களை மூடிச் சங்கமனை எண்ணிக் கொண்டிருந்தான். பின்பு பெருமூச்சுடன் நீருள் மூழ்கினான். நிரவி விரிந்த நீரோவிய அலைகளுக்கு அப்பால் ஓர் ஆலயம் தெரிந்தது. அதன் செம்புக் கூரைக் கூம்பு வாழைப்பூ நிறத்தில் தென்னைப்பசுமையின்மீது ஓங்கித்தெரிந்தது. அகன்ற மண்சாலை அக்கோயிலின் கடல்மணல் பரப்பப்பட்ட விரிந்த முற்றத்தைச் சென்றடைந்தது. கோயிலின் முகப்பு இருபக்கமும் உயர்ந்த திண்ணைகளுடன், பித்தளைக் குமிழ்கள் பொருத்தப்பட்ட உயர்ந்த கதவுகளுடன் திறந்திருக்க உள்ளே பலவகை முழவுகளும் கொம்பும் சேங்கிலைத் தாளமும் சேர்ந்து எழுப்பும் இசை கேட்டது.

கோயிலுக்குள் கல் பாவப்பட்ட சுற்றுவழியில் மாறுபட்ட உடையணிந்த பெண்களையும் சில ஆண்களையும் கண்டான். அவர்கள் புரியாத மொழியில் பேசியபடி கோயிலைச் சுற்றி வந்தனர். வட்டவடிவமான திருச்சுற்று மண்டபத்தில் பலர் மலர் தொடுத்தும் களபச் சந்தனம் அரைத்தும் வேலைகள் செய்தனர். முக மண்டபத்தில் பெரிய ஏழடுக்குக் குத்துவிளக்கு அனைத்துத் திரிகளிலும் சுடருடன் நின்றது. பெரிய வாழையிலைகளை விரித்து அதன்மீது தாமரை, அலரி, தெச்சி முதலிய மலர்களைக் குவித்திருந்தனர். வட்டவடிவமாக இருந்த கருவறைமீது சுவர்களில் ஒன்றோடொன்று கலந்த நீர்ப்பிம்பங்கள்போல எண்ணெய் வண்ண ஓவியங்கள் நிறைந்திருந்தன. கருவறைக்குள் உள்வாசல் மூடியிருக்க வெளியே இருவரிசைகளிலாக ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கூடி நெருங்கி நின்றனர்.

வெளியே இசைக்கருவிகள் சேர்ந்து உச்சத்தை அடைந்து அவிந்தன. சில கணங்கள் அமைதி நிலவியது. மறையவன் ஒருவன் கை காட்ட ஆலய முகப்பின் பெரும் கண்டாமணி 'டணார்' என்று ஒலியெழுப்பியது. மணியோசைக்குள் சங்கு ஓமொலி எழுப்பியது. உள்ளே சிறுமணியொலிக்க பூசாரி உள்கருவறைக் கதவைத் திறந்தார். கோவலன் அச்சமும் வியப்பும் கலந்த உளஎழுச்சியுடன் நோக்கி நின்றான். கரிய பெருவிழிகள் திறந்து செம்பட்டாடையும்

மலர்மாலைகளும் அணிந்துக் கமுகப்பூக்குலைகளும் தூபப் புகையும் சுடர்விளக்கொளிகளும் சூழ அமர்ந்திருந்தவள் கண்ணகி என்று கண்டான். அக்கண்கள் அவனைக் கூர்ந்து நோக்கின. புகார்க் கடற்கரையில் கோயில் கொண்டருளிய கண்ணையம்மனின் கருவிழிப்பார்வை அதுவென அறிந்தான்.

முதுமறையவன் தன் ஒரு கையில் அடுக்குவிளக்கும் மறு கையில் சிறுமணியும் எடுத்து அவளுக்கு ஒளி ஆலத்தி காட்டினாள். வெளியே கூடியிருந்தவர்கள் ''அம்மே நாராயணீ தேவீ நாராயணீ'' என்று பெருங்குரலில் கூவினர். கைகூப்பி வழிபட்டனர். கண்ணீருடன் வணங்கினர். மூவகைச் சுடர்களைக் காட்டியபின் மலர்க் குவைகளை அள்ளி அவள் பாதங்களில் போட்டு முதுமறையோன் பூசனை முடித்து சுடரை வெளியே கொண்டுவந்தான். செங்குங்குமமும் செம்மலரும் சேர்த்து அள்ளி நீட்டிய கைகளில் அளித்தாள். சுடரைத் தொட்டுத் தொழ அனைவரும் முண்டி முன்னகர்ந்தனர்.

அவர்களில் ஒரு பெண் சுடர் தொட்டதும் பெருங்குரலெடுத்துக் கூவி இரு கைகளையும் விரித்தாள். அவள் கையில் ஒருவர் கமுகப்பூங்குலையை அளித்தார். பிறிதொருவர் அவள் முகம் மீது செங்குழம்பு விழுதை அள்ளி வீசினார். அவள் நீண்ட கருங் குழல் விரிந்து தோளில் விழுந்தது. அவள் கழுத்திலும் முகத்திலும் பச்சை நரம்புகள் புடைத்தன. புயல்பட்ட மரம்போலக் கைகளை விரித்து அவள் துள்ளிச் சுழன்றாடினாள். அலறியபடி ஓடி கோயிலின் தென்மூலைக்குச் சென்றாள். போகும் வழியிலேயே அங்கே நடப்பட்டிருந்த மூவிலைச் சூலத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள். வெறிக்கோலமாக அங்கிருந்த சின்னஞ்சிறு துணைக் கோயில்முன் வந்து நின்று குதித்தாடினாள். அக்கோயிலுக்குள் விழி எழுதிய சின்னஞ்சிறிய உருளைக்கல் வடிவில் கோவலன் அமர்ந்திருந்தான். அவ்விழிகளில் பேரச்சமும் தவிப்பும் ஒளிவிட்டன.

சூலத்தால் அக்கோயில்முன் மண்ணில் மும்முறை குத்தியபின் அப்பெண் தளர்ந்து சரிந்தாள். அவள் உடலெங்கும் வேர்வையில் கரைந்த செஞ்சாந்து உதிரம்போல வழிந்தது. கூந்தல் தரையில் பரவிக் கிடந்தது. அனைவரும் ஓடிவந்து அவளைத் தூக்கினர். அவள் கண் விழித்துப் பதறி ஆடைதிருத்தி எழுந்து சுற்றும்முற்றும் நோக்கித் தன் கணவனைத் தேடினாள். அவன் அஞ்சி ஓடிவிட்டிருந்தான். அவள் தன் மைந்தனை நோக்கிப் புன்னகைத்து அருகே அழைத்தாள். அவன் அஞ்சிப் பின்னகர அவள் கணவன் தயங்கிய புன்னகையுடன் மைந்தனை அழைத்தபடி வெளிமுற்றத்தில் இருந்து முன்னகர்ந்து வந்தான்.

கோவலன் அந்தக் கருவறைச் சுவரோவியங்களைப் பார்த்தான். வண்ணநிழல்கள்போலப் பின்னிப்பிணைந்த அவற்றுக்குள் பூம்புகாரும் மதுரையும் ஐவகை நிலங்களும் தெரிந்தன. பிறப்பறு வாவியும் அதில் இடைவரை நீரில் மூழ்கி நின்ற கோவலனின் அஞ்சிய விழிகளும் வியப்பில் திறந்த வாயும் தெரிந்தன. அவன் நெருங்கி அம்முகத்தைப் பார்த்தான். ஆடிப்பிம்பத்தைப் பார்ப்பதுபோல. எது ஆடிப்பிம்பம் என அறியாமல் இருபக்கமிருந்தும் பார்த்து திகைத்து நின்றான்.

பின் மறுகணம் நீரைப்பிளந்து மேலே வந்தான். விரைவாகப் படிகளில் ஏறி ஈரத்துடன் நின்று நடுங்கினான். ஓவியப்பாவை புன்னகை புரிந்தாள். ''மூன்றாம் முறை மூழ்கினால் நிகழும் வினை அறியலாம்'' என்றாள்.

கோவலன் அவள் சொன்னதைக் கேட்காமல் வெளியே நடந்தான். அவனைப் பின்தொடர்ந்த பாவை ''உங்கள் வாழ்வில் இனிமேல் நிகழப்போவதென்ன என்று இந்த வாவி சொல்லும்'' என்றாள். ''அதை அறிய நான் விழையவில்லை'' என்றான் கோவலன்.

ᘓ

மூன்றாவதாக விருப்பருள் வாவியின் கரையில் வந்து நின்ற கோவலன் மிகவும் களைத்திருந்தான். நடக்க இயலாதபடி அவன் கால்கள் துவண்டன. நெஞ்சில் அதைவிடவும் பெருஞ்சுமை அழுத்தியது. அந்த நீர்ப்பரப்பில் இறங்காமல் திரும்பிவிட எண்ணி அவன் தயங்கியபோது நீருக்குள்ளிருந்து மெல்ல எழுந்த முதிய வனைக் கண்டான். நீண்ட தாடியும் கனிந்த அழகிய விழிகளும் கொண்டவனாக இருந்தான் அவன். அவனை எங்கோ பலமுறை நோக்கிய நினைவு கோவலனை வியப்பில் உறையச்செய்தது. அவனருகே வந்த முதியவனிடம் ''தாங்கள் யார்?'' என்றான்.

''என் பெயர் கோவலன்'' என்றான் முதியவன். ''நான் உன் மூதாதை. உனக்கு ஒன்பது தலைமுறை மூத்தவன். நீ என்னைக் கேள்விப்பட்டிருக்கலாம்.''

கோவலன் அக்கணமே அவரை அறிந்தான். அவன் இல்லத் தில் தொல்பட்டுச்சீலையில் வரையப்பட்ட ஓவியமாகக் காக்கப் பட்டுவரும் முகம் அது. கோவலனின் முதிர்ந்த முகம்போலவே அது இருந்தது. அவரது முகஒப்பு அவனுக்கு இருந்தமையால்தான் அவன் கோவலன் என்று அழைக்கப்பட்டான். இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனின் அவைக்கள வணிகனாக வஞ்சி மாநகரில் வாழ்ந்த பெருவணிகன் கோவலன் தென்கடல்களிலாடிப் பெருஞ் செல்வம் சேர்த்தான். சேர்த்த செல்வத்தினையெல்லாம் மாளிகை களாகவும் மகளிராகவும் பொன்னாகவும் நிலமாகவும் மாற்றி இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் அறிந்தான். பின்பு ஒருநாள் அனைத்தையும் துறந்து அறிவனின் அழியா அடிகளில் தன்னை அவித்தடக்கிக் கொண்டான். தன் அளவிலாத செல்வத்தால் வஞ்சியில் அறிவனுக்குப் பெரும்பீடிகை ஒன்றைக் கட்டினான். கோவலன் சிறுவனாக இருந்தபோது தன் தந்தையுடன் வஞ்சிநகர் சென்று, மரக்கலங்களில் கொண்டுவந்து இறக்கப்பட்ட வெண்கல் லால் செதுக்கப்பட்ட அம்மாபெரும் பீடிகையைக் கண்டதுண்டு.

முதியவர் புன்னகையுடன் ''இந்த நீலநீர்த்திரை வழியாக நீ

வருவதைக் கண்டேன்'' என்றார். ''உன்னிடம் நான் சிலவற்றைச் சொல்ல விரும்பினேன். ஆகவே உன்னைத் தேடி வந்தேன்...''

கோவலன் அவரை வணங்கி நின்றான்.

''இது விருப்பருள்வாவி எனப்படுகிறது. இதில் மூழ்கி ஒருவன் வேண்டுவதை அவன் அடைவான். ஆனால் காலப்பெரு வெளி என்பதும் ஒரு கலம் போன்றதே. இல்லாத ஒன்றை எடுக்க இயலாது. இந்த வாவியில் இருந்து நீ பெறுவதெல்லாம் உன் மூதாதையர் சேர்த்து வைத்தவற்றிலிருந்து பெற்றுக் கொள்வதே யாகும். இந்த வாவியில் நான் சேர்த்துவைத்த செல்வங்கள் உள்ளன. அவை உனக்குரியவை. வருக'' என்றான் முதியவன்

அவனைப் பின்தொடர்ந்து கோவலன் சென்றான். முதிய வன் திடமான குரலில் தொடர்ந்தான் ''ஆனால் ஒன்று உணர்க. இது நீ வாழும் உலகுக்கு ஆடிப்பிம்பம்போன்ற மறு உலகம். அங்கே நீ அடைவனவெல்லாம் இங்கு இழக்கப்படுபவையே. அங்கே நீ துறப்பவற்றையே நீ இங்கே சேர்த்துக்கொள்ள இயலும். நான் வணிகம் செய்து ஈட்டிய அனைத்தையும் இங்கே சேர்த்துக் கொண்டேன். இந்த வாவியில் நீ கொள்வது எதுவானாலும் அதை நான் இழக்கிறேன் என்று உணர்க.''

கோவலன் அந்த நீலநீர்ப்பரப்பை நோக்கி நின்றான். நெஞ்சில் எழும் துயரத்துடன் முதியவனைப் பார்த்தான். ''இது நீ இழந்த வற்றால் ஆன அலைப்பெரும்பரப்பு'' என்றான் முதியவன். கோவலன் அசைய மறுத்த பாதங்களை உயிரால் சுமந்து தூக்கி வைத்து அந்த நீல நீர்ப்பரப்பில் இறங்கினான். மூழ்குவதற்காக உடலைத் தாழ்த்தினான். எதை வேண்டுவதென்று எண்ணியபோது அவன் உள்ளம் குளிர்ந்த கரும்பாறைபோல இறுகி உள் நிரப்பி நின்றது. கழுத்துவரை உடல்தாழ்த்தியபோது கண்ணெட்டும் தொலைவுவரை நெளிந்த சிற்றலைகளைக் கண்டான். பிறந்தது முதல் அவன் இழந்த அனைத்தும் அலையலையாக அவன் மேல் வந்து முட்டின. தூக்கிக்கொள் தூக்கிக்கொள் என்று கைநீட்டும் குழந்தைகள்போல.

நெஞ்சுகீறி எழுந்த அழுகையுடன் கோவலன் படிகளில் ஏறி வெளியே ஓடினான். துயரம் நிறைந்த நோக்குடன் அவன் பின்னால் முதுமூதாதை நின்றான்.

ஓ

கோவலன் கனவிலிருந்து விழித்ததும் ஆழ்ந்த துயருடன் நெடுமூச்செறிந்து ''நாம் கிளம்புவோம். பாலை காத்திருக்கிறதல்லவா நமக்கு?'' என்றான். கண்ணகி ஆமென்று தலையசைத்தாள்.

அவர்கள் எழுந்து நடக்கத் தொடங்கினர். எதிரே கையில் பூசனைப்பொருட்களுடன் இளமறையவன் ஒருவன் வரக்கண்டு கோவலன் அவனை வணங்கி ''ஐயனே, இப்பாலை நிலத்தைக் கடக்க நாங்கள் செய்யவேண்டுவன யாவை?'' என்றான்.

இளமறையவன் ''உங்கள் கரங்களில் நீர் இருக்கவேண்டும். முதுகுமுகம்பாளையைக் கொண்டு நீர்ப்பை ஒன்று செய்துகொள்ளுங்கள். இந்த மலையின் அடியில் சிறந்த வெள்ளரிக்காய்கள் கிடைக்கும். அவற்றைப் பறித்து வைத்துக் கொள்ளுங்கள். விடிகாலையில் தொடங்கி பின்காலை வரையும் இளமாலையில் தொடங்கி அந்திவரையும் மட்டும் நடந்துசெல்லுங்கள். ஆறலைக்கள்வரைக் கண்டால் ஓட முயலவேண்டாம். அங்கேயே அப்படியே நின்றுவிடுங்கள்.'' என்றான். ''இப்பாலையில் பயணம் தொடங்கும் வணிகர்களும் பிறரும் பாலையன்னையின் ஆலயத்தை வலம் வந்து வணங்கி அருள் பெற்றுச்செல்வது வழக்கம்'' என்றான்.

''எங்குள்ளது அவ்வாலயம்?'' என்றான் கோவலன்.

''அருகேதான். நான் அங்கு பூசனைசெய்ய வணிகர்குலங்களால் பணிக்கப்பட்டவன். வருக'' என்றான் மறையவன்.

பாலையன்னையின் ஆலயம் மலையடிவாரத்தில் நின்ற கொன்றைமரங்கள் நடுவே குளிர்ந்து கிடந்த சுனை ஒன்றின் கரையில் நின்ற கரும்பாறை ஒன்றைக் குடைந்து செய்யப்பட்டது. அதன் வெளிப்பக்கம் பாறைபோலவே இருந்தது. உள்ளே சின்னஞ் சிறிய முகமண்டபமும் கருவறையும் படையல் மேடையும் இருந்தன. கண்ணகியும் கோவலனும் உள்ளே நுழைந்தனர். மறையவன் உள்ளே சென்று கல்லகலை நெய்விட்டுக் கொளுத்தினான். மெல்லிய ஒளியில் அன்னையின் சின்னஞ்சிறு புடைப்புச்சிற்பம்

உருப்பெற்று வந்தது. ஒரு கையில் இதழ்விரித்த அழல்மலரும் மறுகையில் ஒருமை செய்கையுமாக அன்னை மூடிய விழிகளுடன் அமர்ந்திருந்தாள். அவள் பாதங்களில் கொன்றைமலர்களைச் சூட்டினான் மறையவன்.

''பாலையின் அன்னையா இவள்?'' என்றான் கோவலன்.

''அணையா நெருப்புகள் அலையும் பாலை செந்தழலையே கூந்தலாகக் கொண்ட கலையமர்செல்வி கொற்றவையால் ஆளப் படுவது. இப்பாலையன்னை குறிஞ்சியின் தெய்வம். முறை திரிந்து பாலையாகும் குறிஞ்சியில் குடிகொள்பவள் இவள்.'' என்றான் மறையவன். ''அன்னையைப்பற்றிய கதைகள் அதை விளக்கு கின்றன. அன்னையின் இயற்பெயர் மாற்பித்தி. தன் காதல் கொண்டபின் உலகு துறந்து காடு சென்றவனை எண்ணி மால் கொண்டு பித்தியானவள். அவளுடைய குன்றாப் பெருங்காமமே அவள் இடக்கை அழல். அவனையன்றிப் பிறிதொருவரை நினை யாத உள்ளத்தைக் காட்டுவது வலக்கை விரல். கொழுநர்ப் பிரியா திருக்கக் குலமகளிர் வணங்கும் அன்னை இவள். கூடலின் எல்லை யில் நின்று கொடும்பாலையை எண்ணுவோர்க்குத் துணையாகும் தெய்வம் இவள் என்பர் ஆன்றோர்.''

கண்ணகி மாற்பித்தியின் கண்களையே நோக்கி நின்றாள். வேகவைத்த தில்லை இலைகளையே அன்னைக்கு படைய லிட்டான் மறையவன். ''துறவியர் உண்ணும் தில்லை இலையையே அன்னையும் உண்டனள். ஆகவே அவளுக்கு அதுவே படையல்'' என்றான் மறையவன். கண்ணகி மாற்பித்தியின் கல்முகத்தில் ஒரு புன்னகையைக் கண்டாள். கோவலன் தரையில் உடல்பட விழுந்து அன்னையை வணங்கினான்.

ஓ

கோவலன் முன்னே செல்லப் பின்னால் கண்ணகியும் நீலியும் நடந்தனர். பாதை சிறு மேடேறி மறுபக்கம் விரிந்த வெம்பாலை விரிவைக் காட்டியது. அனல்காற்றின் அலைகளில் கண்ணகியின் கூந்தல் எழுந்து பறந்தது. அவள் கண்களில் தீட்டப் படும் வாளில் தெறிக்கும் நெருப்புபோலச் சுடரெழுந்தது.

அவள் திரும்பி பின்னால் நீல அடுக்குகளாக அடர்ந்த மலைகளை நோக்கினாள். நீலி அவளருகே குனிந்து ''இக்குறிஞ்சி யின் தண்மையில் ஓங்கிய மலையின் உச்சியிலும் ஒரு பாலை உள்ளது. அங்கேயும் விழிநுதலன்னை கொற்றவையே அமர்ந் திருக்கிறாள்'' என்றாள்.

4

பாலை

குலக்கதை சொன்னது

பூவகைத்தீயும் முறைகொண்டு ஆளும் மண்ணே பாலை. பல்லாயிரம் விதைகள் நெடுதுயில் கொள்ளும் அதன் நில விரிவின் மீது தாவரங்கள் நீர்காத்து உருக உயிர்கள் நெடுமூச்சுவிட்டு அலைய கானல் அலையடிக்கிறது. கானலை உண்டு நிழல்கள் மண்ணில் கிளை பரப்பித் தழைக்கும் காடு அது.

கண்ணகியும் கோவலனும் கவுந்தி தொடரப் பாலையின் சிவந்த மென்மண்பாதையில் நடந்தனர். வெங்காற்று செம்புழுதியை அள்ளிச்சுருட்டிக்கொண்டு முட்களில் கிழிபட்டுச் சருகுகளில் மண்பெய்து வடதிசை நோக்கிச் சென்றபடியே இருந்தது. அவர்கள் உடையால் தலையையும் வாயையும் மூடிக்கொண்டு தலைகுனிந்து நடந்தனர். கீழ்த்திசையில் வெந்த மண்ணாலான வெறும்குன்று களின் அடுக்குகள் வெயிலில் மெல்லப் புகைந்தபடி நின்றன.

''நாம் அமர்வோம்'' என்றான் கோவலன். ''இனிப் பிற் பகலிலேயே நாம் தொடர இயலும்.''

பிளந்த பாறை ஒன்றுக்கு அடியில் விரிந்த நிழலில் அமர்ந்து அவர்கள் வெள்ளரிப்பழங்களை உண்டு நீர் அருந்தினர். கண்ணகி சருகுமீது படுத்துக்கொண்டாள். நீலி அவளருகே அமர்ந்தாள். கண்ணகி துயிலவில்லை. ஒருக்களித்துப் படுத்து வெம்மை சிவந்த விழிகளால் பாலைவெளியையே நோக்கியிருந்தாள்.

கண்ணகியிடம் நீலி ''நீ இப்பாலையை நோக்க விழைய வில்லையா?'' என்றாள். ''ஆம்'' என்றாள் கண்ணகி. ''அதற்கு சிறுசெவிகளும் பசித்தொடுங்கிய வயிறும் கூரிய பற்களும் வெம்மை சுடரும் நோக்கும் கொண்ட செந்நாயின் கண்கள் உனக்குத் தேவை'' என்றாள் நீலி. ''ஆம்'' என்றாள் கண்ணகி.

மறுகணம் அவள் செந்நிலவெளிமீது நீரற்ற சிற்றோடை போல கிளைபிரிந்து பரவிய பாலைவழியில் நிலம் முகர்ந்து செவியசைத்து வால் சுழற்றி ஒரு தனிச் செந்நாயாக ஓடிக்கொண் டிருந்தாள். முட்கிளைகள் விரிந்து பரவிய பெருங்கள்ளிப்

புதர்களையும் சாம்பல் பூத்த வாட்களுடன் நின்ற கற்றாழைகளையும் முள்நிழல்வலையை நிலத்தில் பரப்பி அதன்மீது நின்ற கருவேல மரங்களையும் மண்பொடி மூடிய ஓமைகளையும் பாலைகளையும் கடந்து ஓடிக்கொண்டிருந்தாள். சுட்டுப் பழுத்த பாறைகள் வெடிப்பு களில் மென்புழுதியுடன் நின்றன. பாறைச்சுவர்களருகே குவிந்த சருகுகள் மீது மண் பொழியும் ஒலி மழையென எண்ணச்செய்தது. சருகுகளுக்குள் விரியன் ஒன்று சலசலத்து இடம் மாறியது.

பாறை நடுவே ஓங்கிய கருவேலமரத்தடியில் அதன் பட்டை களை உரித்துத் தின்றபிறகு மந்தையில் பின்தங்கிய தனித்த முது களிறு விலாஎலும்புகளும் கன்னஎலும்புகளும் புடைத்துத் தெரிய மத்தகம் தாழ்த்தி துதிக்கையைத் தந்தங்கள்மீது சுருட்டிவைத்து அசையாது நின்றுகொண்டிருந்தது. அதன்மீது சாவு புழுதியை அள்ளி இறைத்து மண்ணுக்குள் இழுத்துப் புதைக்க முயன்றது. களிற்றின் பழுத்த கண்கள் உறைந்திருக்க அதன் செவிநுனி சற்றே அசைந்தது. அதை நோக்கி அருகே முள்மரக்கொம்புகளில் நீள் வெறும்கழுத்துடன் கழுகுகள் சிறகு தாழ்த்தி அமர்ந்து தங்களுக்குள் அடிக்குரலில் உரையாடின. பாறைகளுக்கு அப்பால் பசித்த கூழைப்புலிகள் கூட்டமாக அமர்ந்திருந்தன. நகைப்பொலி எழுப்பி அவை பற்களைக் காட்டின. நெடுநாள் முன்பு வற்றிய சுனை ஒன்றின் உப்புப் பொரிந்து பரவி வெடித்த மண்குழியில் சில பறவைகள் கால்களால் தோண்டி மண் கிளப்பித் தேடின. பாலைமீது காற்று அனலின் அலைகளாகப் பரவிச்சென்றது. நண்பகல் நிறைந்தபோது நிழல்களையும் இழந்து நின்றெரிந்தது பாலை.

பிற்பகலில் வானிலிருந்து வெக்கை இறங்கத் தொடங்கியது. காற்று முற்றாக நின்று தூசிப்புகை மென்துகில்போல இலைகள்மீது பரவியது. இலைநுனிகளும் அசைவற்றன. வானில் ஒளி மெல்ல மங்க தென்திசையிலிருந்து முகில்கள் சிதறிப்பரந்து வந்து மெல்லக் கூடின. தென்திசையில் வெகுதொலைவில் தெரிந்த மலைகள்மீது அம்முகில்கள் கருமைகொண்டு ஓங்கின. புழுதிமண்ணில் சிறு துளைகள் திறந்து பூச்சிகள் மெல்லிய மூளல் ஒலி எழுப்பின. ஓநாய்கள் சருகுப்புதர்களுக்குள் இருந்து மெல்ல மூக்கு நீட்டிச் செவி கூர்த்து வானைப் பார்த்தன. பறவைகள் கூவியபடி கிழக்காக நகர்ந்து சென்றன. வயப்புள் ஒன்று வானில் வட்டமிட்டது. மெதுவாக வெக்கை ஏறிவர ஓநாய்களின் நாக்குகள் தொங்கிச் சொட்டி ஆடின.

கருமை முதிர்ந்து அசைவின்மை முழுமைகொண்ட ஒரு கணத்தில் சில நீர்த்துளிகள் சிறு அம்புகள்போல மண்ணில் பாய்ந்து வடுவாயின. யாமரத்து இலைகளில் சிறுபறவை எச்சங்கள்போல

விழுந்து தூசிகலந்து வழிந்து சொட்டின. மண்ணிலிருந்து நீராவி எழுந்து இலைகளின் அடிப்பகுதியில் வேர்த்தது. சடசடவென மழைத்துளிகள் எங்கும் உதிரத்தொடங்கின. சருகுபரவிய பாலை ஓலமிட்டது. ஓசை உச்சமடைந்து உடனே அவிந்தது. வானத்து முகில்கள் விரிசலிட்டுப் பிரிய நீர்த்துளிகள் மிஞ்சிய காற்றுவழியாக வெயில் ஒளியுடன் இறங்கியது. பிறந்து உதிரம் மாறாத ஓநாய்க் குட்டியின் தோல்மணம்போல மண்ணின் மணம் எழுந்தது. ஓநாய்கள் நிலையழிந்து உகிர்களால் மண்ணைப் பிறாண்டி வெறி கொண்டு குதித்தன. சுற்றிச்சுற்றி வந்து அமர்ந்து வாய் தூக்கி வானை நோக்கி ஊளையிட்டன.

வெயில் மேலும் மேலும் என வெளுத்து அனல்மழைபோல மீண்டும் பாலையை நிரப்பியது. சிறிது நேரத்தில் மழையின் சிறு தடம்கூட எஞ்சாது பாலை வெம்மையை உமிழத் தொடங்கியது. தென்காற்றில் செம்புழுதி சுருண்டு கிளம்பி வடகிழக்காகச் சென்றது. பாலையின்மீது பறந்த வல்லூறுகள் வெயிலை வாங்கி வெண்கலச்சிறகுகள் கொண்டன. அவற்றின் நிழல் வெடித்த நிலம் மீது வளைந்து நெளிந்து ஊர்ந்து சென்றது. வெகுதொலைவில் ஒரு தனிப்பறவை குறுமுழவுபோலக் குரலெழுப்பிக் கொண்டிருந்தது.

அத்தப்பெருநிலம் நடுவே காய்ந்த காட்டுவேல மரங்களின் ஊடாக இடிந்த கோட்டை ஒன்று தெரிந்தது. அதன் கருங்கற் பாளிகள் நான்குசுற்றும் பெயர்ந்து விழுந்து மண்ணில் புதைந்து கிடந்தன. முட்செடிகள் முளைத்துக் காய்ந்த அதன் முகப்பில் ஓநாய்கள் உள்ளே செல்லும் பாதை மட்டுமே இருந்தது. உள்ளே சரிந்து சிதறிக்கிடந்த கருங்கற்தூண்களுக்கும் பலகைகளுக்கும் நடுவே இடியாத கோயிலின் சிறு பகுதி இருந்தது. தரையெங்கும் கனத்த புழுதிப்பரப்பு. அதன்மீது பலவிதமான பாதத்தடங்கள் இருந்தன. பெரும்படையல்கல்லுக்கு அப்பால் இரு பக்கமும் நின்ற ஏழு திரியுள்ள கல்விளக்குகள். கருவறை இருளில் ஆளுருவப் பாவை ஓவியமாகக் கொற்றவை நின்றிருந்தாள். அவள் முகத்தில் மூன்று விழிகள் பாலையை நோக்கி வெறித்து நிற்க வாயில் வெண்புலிப்பற்கள் விரிந்த கொலைச்சிரிப்பு நிலைகொண்டிருந்தது.

கோவலனும் கண்ணகியும் கவுந்தியும் அதர் அழி அத்தம் கடந்து கொற்றவை ஆலயத்துக்கு வந்து சேரும்போது அந்தி கவிய தொடங்கியிருந்தது. அடர்ந்து படர்ந்த வேங்கைமரத்தின் இலைகள் ஊடாக ஆலய இடிபாடுகளைக் கோவலன் கண்டான். ''அன்னையே, கண்ணகி தன் கால்கள் எரிகின்றன என்று சொல்கிறாள் வெயிலும் அவளை மிக வருத்துகிறது'' என்றான்.

''இப்பகுதியிலேயே இந்த மரம் ஒன்றுதான் பசுமையோடிருக்கிறது. இத்தகைய ஆலயங்கள் பாலைச்சுனையருகே நிறுவப்படுவது மரபு. இங்கு ஒரு சுனை இருக்கக்கூடும்'' என்றாள் கவுந்தி. ''நாம் இங்கே இன்றிரவு ஓய்வெடுப்போம்.''

காய்ந்த சருகுகளுடன் அடர்ந்துகிடந்த புதர்கள் வழியாக அவர்கள் ஐயை ஆலயத்தை அடைந்தார்கள். புழுதியில் ஒரு செந்நாய்ப் பாதத்தடம் கண்டு கோவலன் ''அன்னையே இங்கு செந்நாய் நடமாட்டம் உள்ளது'' என்றான்.

''அப்படியென்றால் இங்கு நீர் உள்ளது என்று பொருள்'' என்றாள் கவுந்தி.

அவர்கள் உள்ளே சென்றபோது சீறும் ஒலியுடன் நாய் ஒன்று எழுந்தது. வெண்பற்கள் தெரியச் சீறியபடி அது தலைதாழ்த்தி கால் பரப்பி நின்றது. ''அது ஈன்றிருக்கிறது. அவ்வழிச் செல்ல வேண்டாம்'' என்றாள் கவுந்தி.

''குட்டிகளை நான் பார்க்கவேண்டும் அன்னையே'' என்று கண்ணகி மன்றாடும் குரலில் சொன்னாள்.

''சற்றுமுன்புதான் குட்டி போட்டிருக்கவேண்டும். ஈரமான உதிர வீச்சம் எழுகிறதே'' என்று கோவலன் சொன்னான்.

''அன்னையே நான் இந்நாயை அவ்வழியாகக் கூட்டிச்செல்கிறேன். நீங்கள் கண்ணகிக்கு நாய்க்குட்டிகளைக் காட்டுங்கள்.''

ஒரு குச்சியைக் காட்டி நாயை அச்சுறுத்தியபடிக் கோவலன் பின்னகர நாய் உறுமியபடி அவனை நோக்கிச் சென்றது. அதன்

அவன் வெளியே இட்டுச்சென்றான். கண்ணகி உள்ளே ஓடி இடிந்து சரிந்த தூண்களுக்கு நடுவே மென்புழுதி பாறிக்கிடந்த மண்டபங்களுக்குள் தேடினாள். ஒரு கல்லுக்கு அடியில் நான்கு சிறுகுட்டிகள் புழுதிக்குள் ஒன்றோடொன்று ஒட்டிக் குவியல்போலக் கிடந்தன. அவற்றின் மென்மயிர் வயிறுகள் மட்டும் மெல்ல அசைந்தன. கண்ணகி அருகே சென்று கண்ணீர் மல்கி மார்பைக் கைகளால் பற்றியபடி நின்றுவிட்டாள்.

அவர்கள் வரும் ஒலிகேட்டு நாய்க்குட்டிகள் விழிப்பு கொண்டு கண்களைத் திறக்காமலேயே முனகியபடி ஒன்றுமேல் இன்னொன்று ஏற முட்டிமோதின. நீலி ஒரு குட்டியை எடுத்துக் கண்ணகியின் கைகளுக்குத் தந்தாள். அவள் தயங்கிப் பின்னடைந்து பின்பு உளப்பெருக்குடன் நடுங்கும் கைகளை நீட்டி அதை வாங்கினாள். அது அவளது சிறுவிரலை நக்கியபடி 'மங் மங்' என்றது. மெல்லிய தளிர்க்காதுகளை அசைத்தபடி வயிற்றை ஒட்டிக்கொண்டு அவள் கைகளில் தவழ்ந்தது. கண்ணகி சிரிப்பும் அழுகையுமாகத் தவித்தாள். அவள் கண்ணீர் அக்குட்டிமீது விழுந்தது. இன்னொரு குட்டி கீழே 'மாங் மாங்' என்று குரலெழுப்ப அதன் அன்னை வெளியே உறுமியது.

நீலி குட்டியை வாங்கித் திரும்ப விட்டுவிட்டுப் பின்னகர்ந்தாள். அன்னை நாய் மடிகுலுங்க ஓடிவந்து குட்டிகளை முகர்ந்து வாயால் கடித்துத் தூக்கிப்போட்டு நக்கியது. நீலி ''வா'' என்று கண்ணகியுடன் வெளியே சென்றாள். கண்ணகி கைகளை முகர்ந்து ''மிக இனிய மணம்'' என்றாள். நீலி புன்னகையுடன் ''கருவறை மணம் அது'' என்றாள். கண்ணகியின் கண்களில் கூரிய நோட்டம் ஒன்று வந்து மறைந்தது.

கோவலன் அருகே வந்து ''அழகிய குட்டிகள். இப்பாலை நிலத்தில் இவை எப்படி வாழப்போகின்றன?'' என்றான்.

''பாலையிலும் எண்ணற்ற உயிர்கள் வாழ்கின்றன. அவை முக்கண் அன்னையின் குழந்தைகள். அவை அவளுடைய அறத்துக்கு மட்டுமே அடங்குபவை'' என்றாள் கவுந்தி.

கோவலன் தன் மேலாடையை மண்ணில் விரித்தான். அதன் மீது கண்ணகியும் அவனும் அமர்ந்தனர். கவுந்தி தூணருகே புழுதியில் அமர்ந்துகொண்டாள். கண்ணகி கண்களை மூடி நெடு மூச்செறிந்து படுத்துக்கொண்டாள். இளைப்பாறிய பின் கோவலன் எழுந்து அக்கோயிலுக்கு மறுபக்கம் சென்றான். அங்கே கருகிய புதர்கள் பரவிய வெளியில் ஒரு சில மரங்கள் மட்டும் பசுமையுடன் நிற்பது கண்டு அருகே சென்றான். மரங்களுக்கு அப்பால்

பாலைச்சுனை ஒன்று தெரிந்தது. அகன்ற குழியின் கரையில் மிக ஆழத்துக்கு செந்நிறச் சேற்றுவளையமே இருந்தது. விளிம்பில் சேறு உலர்ந்து வெடித்துப் புண்ணாக்குப்பட்டைகள்போல உரிந்து எழுந்து நிற்க இறங்கும்தோறும் சேறு ஈரம் கொண்டு இறுதியில் கலங்கிய சிறிய நீர்வட்டத்தைச் சென்றடைந்தது.

சேற்றில் கால் அழுந்த நீரை அணுகிய கோவலன் குனிந்து நெடுமூச்சுடன் நோக்கினான். சருகுகள் மட்கிய நீரில் பச்சைப்பாசி படர்ந்திருந்தது. சிறிய பூச்சிகள் திளைத்து மிதந்தன. ஒருகணம் தயங்கிய பின் கோவலன் அந்நீரைத் தன் நீர்ப்பையில் அள்ளிக் கொண்டு மீண்டு வந்தான்.

கவுந்தியிடம் நீரைக் காட்டி ''இந்த நீரை எப்படி அருந்துவது அன்னையே'' என்றான் கோவலன்.

''இங்கே முருக்குமரம் பட்டு நிற்பதைக் கண்டேன். அதன் கிளை ஒன்றை ஒடித்துத் துண்டு ஒன்று நறுக்கு'' என்றாள் கவுந்தி. தன் கைக்கத்தியின் உதவியுடன் கோவலன் முருக்குமரத் தடியைத் துண்டாக வெட்டிக் கொண்டுவந்தான். அதன் உட்பரப்பு தக்கை போலக் காய்ந்திருந்தது.

''அதன் பித்தியைக் குடைந்து நீரை அதன்வழியாக விடு. ஊறி மறுபக்கம் வரச் சிறிது நேரம் எடுக்கும். ஆனால் மாசு நீங்கி யிருக்கும்'' என்றாள் கவுந்தி.

முருக்கமரத் தடியில் நீர் ஊறி சொட்டுகளாக விழத் தொடங் கியது. விழுந்த நீரில் முருக்கமரத்தின் சிறுமணம் இருந்தாலும் நீர் தெளிந்தும் சுவையாகவும் இருந்தது. அவர்கள் தங்கள் கைகளி லிருந்த காய்களையும் பழங்களையும் உண்டு முடித்துப் படுத்துக் கொண்டனர். இரவு பரவிவிட்டிருந்தது. செடிகளில் இருந்து எழுந்த நுண்பூச்சிகள் அலையலையாக வந்து அவர்கள்மீது படிந்தன. அவற்றைத் தடுப்பது உயிர்க்கொலையாகும் எனக் கவுந்தி அசையா மல் அமர்ந்திருந்தாள். கண்ணகி அவற்றின் கடி தாங்காமல் எழுந்து அமர்ந்துவிட்டாள்.

''அன்னையே, இங்கு உறங்க இயலாதென்று படுகிறதே'' என்றான் கோவலன்.

''ஆம் பாலையில் திறந்த வெளியில் துயில்வது உவப்பல்ல. இன்று மண்மாரி பொழியக்கூடும்'' என்றாள் கவுந்தி.

வெகுதொலைவில் ஒரு முரசின் ஒலி கேட்டது. கவுந்தி எழுந்து ''அவ்வொலி ஆறலைக் கள்வர் எயினரின் ஊருண்மன்று கூடும் ஒலி. அருகே ஒரு பறந்தலைச் சிற்றூர் இருக்கலாம். நாம்

அவர்களைத் தேடிச் செல்வோம்.''

''அவர்கள் வழிப்பறிக்கொள்ளை செய்யும் குலத்தவ ரல்லவா?'' என்றான் கோவலன்.

''ஆம். ஆயினும் அவர்களுக்கு நுதல்விழி ஐயையின் நெறிகள் உண்டு'' என்றாள் கவுந்தி.

''எழுக கண்ணகி'' என்றான் கோவலன்.

கண்ணகி மெல்லியகுரலில் ''இன்றிரவு இனிமேல் என்னால் நடக்க இயலாது'' என்றாள்.

''ஆம், நீ வெகுதொலைவு நடந்துவிட்டாய்'' என்றபடி கோவலன் அமர்ந்தான்.

எயினரின் முரசைக் கேட்டபடி அவன் பெருமூச்சுடன் அமர்ந் திருந்தான். பிறகு கண்ணயர்ந்து துயில்கொண்டான். இருளில் கண்ணகியின் கண்கள் விழித்திருந்தன. பிறகு ஓசையின்றி எழுந்து அவள் ஐயையின் ஆலயத்துக்குள் சென்றாள். கருவறைச்சுவரில் ஒளிரும் வண்ணக்களால் தீட்டப்பட்ட ஆளுயர ஐயை ஓவியம் நின்றி ருந்தது. அவள் வாசலில் நின்றாள். முகில்களைக் கிழித்து நிலவு வெளிவந்தபோது ஓவியம் உயிர்க்களை கொண்டது.

கருநிற மேனியில் வேங்கைமரத்துக் கிளைகள் போலெழுந்த எட்டுக் கரங்களில் மானும் மழுவும் சூலமும் ஊழிநெருப்பும் கொலைச்செவ்வாளும், அவுணன் தலையும், வில்லும் ஏந்தி அருட்கை காட்டி ஐயை நின்றிருந்தாள். இளம்பிறை ஏந்திய பிடர்த் தலையிலிருந்து விழுந்த சடைக்கற்றைகள் பரவிக்கிடந்த தோளில் மண்டையோடுகளால் ஆன மாலை அணிந்திருந்தாள். நஞ்சுண்டு நீலமேறிய கழுத்து. நச்சரவத்தைச் சுற்றிக் கட்டிய இடைக்கச்சை. யானைத்தோல் போர்த்திய மார்பு. புலித்தோலில் இடையாடை. காதுகளில் மண்டைக்குழைகள். கைகளில் எலும்புக் கங்கணங்கள். கான்புலிபோல வெண்கொடும்பற்கள் துலங்கிய வெறிச்சிரிப்பும் அகன்ற சினவிழிகள் நடுவே எரிசுடரெனத் திறந்த நுதல்விழியும் கொண்டு நின்ற அவளைக் கண்ணகி கூர்ந்து நோக்கி நின்றாள். அவள் காலடியில் எருமைத்தலை அவுணன் விழுந்துகிடந்தான். வலப்பக்கம் பாய்கலை அவளை நோக்கித் தலைதூக்கி நின்றது. அவள் வலதுகாலில் சிலம்பும் இடதுகாலில் வீரக்கழலும் அணி செய்தன.

கண்ணகி அந்த வலச்சிலம்பையே நோக்கி நின்றாள். தொலைவில் பாலையின் வெங்காற்றுகளை ஆளும் தெய்வங்கள் குடியிருந்த வெறும்குன்றுகளின் மடிப்புகளில் ஓசையற்ற ஒரு குரல்

எழுந்தது. எழுக! எழுக! காற்று சுழன்று புழுதிசுருட்டிச் சருகு அள்ளி பாலையில் விரைந்தது. காற்றுகள் கலந்து சூறைக் காற்றாயின. சருகுமீது மணல் பெய்யும் பேரோலம் கடல் பொங்கி வருவதுபோல ஒலித்தது. கண்ணகியின் கூந்தல் பாலைவெங் காற்றில் எழுந்து பறந்தது. ஓவியப்பாவை முன் சிலைத்த உயிர்ப் பாவை என நின்றபடியே இருந்தாள்.

உறுமல் ஒலி கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். நாய் தன் குட்டிகளில் ஒன்றை உதிரம் வாயில் வழியக் கிழித்துத் தின்று கொண்டிருந்தது. பிற குட்டிகள் அதன் தழைந்த மடியில் முட்டி முட்டிப் பால் குடிக்க அதன் வால் புழுதியில் அசைந்தது. கண்ணகி திரும்பியபோது நாய் நிமிர்ந்து நோக்கியது. அதன் உதிரம்படிந்த வாயை நோக்கியபோது கண்ணகியின் முகத்தில் கொடும்சிரிப்புப் பரவியது.

ஆ

கருவேலமர முட்களால் உயர்ந்த வேலியிடப்பட்டு வளைக்கப்பட்ட புல் வேய்ந்த சிறுகுடில்களாலான ஆறலைக் கள்வர் எயினரின் குறும்பூர் நடுவே முரசம் ஓய்ந்தது. விரிந்த பாலையில் பல இடங்களில் இருந்து முரசொலி கேட்டு வந்த எயினர் ஊருண்மன்றில் வந்து அமர்ந்தனர். பெண்டிரும் சிறு குழந்தைகளும் ஒருபால் அமர ஆண்கள் ஒருபால் தங்கள் விற்களைச் சாற்றியபடி வந்தமர்ந்தனர். வேட்டைக்குச் சென்றவர் களில் இரு குழுவினர் மட்டுமே உணவைத் தேடமுடிந்திருந்தது. முதுமான் ஒன்றை கொண்டுவந்தவர்கள் அதைத் தூக்குக் கம்பி லிருந்து அவிழ்த்து மன்றில் கிடத்தியபோது எயினர் உரக்கக் குரலெழுப்பி ஆரவாரம் செய்தனர். இரண்டாவது குழுவினர் மேலும் பிந்தி வந்தனர். அவர்கள் இரு மூத்த உடும்புகளைக் கொண்டுவந்தனர்.

ஒருசாரார் மானை அம்புநுனிகளைக் கொண்டு உரிக்கத் தொடங்கினர். இன்னொரு சாரார் உடும்பை மன்றில் இருந்த பாழ்மரக்கட்டையில் அம்பால் அடித்து அறைந்து அதன் தோலை உரித்துச் சதையை நிணம் வழிய வெட்டினர். பாலையில் முற்றிய மூங்கில்காட்டில் பொறுக்கிய மூங்கிலரிசிகளையும் எலிகள் வளை களில் சேர்த்து வைத்த புதர்ச்செடிகளின் விதைகளையும் திரட்டிக் கொணர்ந்திருந்த மகளிர் சிலர் பானையில் நீர் கொதிக்கச்செய்து அதைப் போட்டு நீர்க்கூழ் செய்தனர். அவை வெந்து கொழுவிய திரவம் எழுந்ததும் அதைத் தனியாகப் பிரித்தனர். உடும்பு இறைச் சியைக் கொதிக்கும் நீரிலிட்டு அவித்தும் மானிறைச்சியைச் சுட்டும் சமைத்தனர்.

பின்பு குலமூத்த முதியவன் எழுந்து தன் கைத்தடியைத் தூக்கியதும் அமைதி பரவியது. முக்கண் ஐயையின் புகழ்மொழி களைச் சொல்லி அவன் தன் குலத்தினரை வாழ்த்தினான். உணவை வணங்கி முதல் துணுக்கை அன்னையின் சிலையாக நிலைநாட்டப் பட்டிருந்த சிறு நடுகல்லுக்குப் படைத்தான். அருகே தென்புலம்

ஏகிய மூதன்னையரையும் முதுதந்தையரையும் நிறுத்திய இரு நடுகற்கள் இருந்தன. உணவை அவற்றுக்கும் படைத்தாள். பெண்டிர் குலவையிட்டனர். உணவு நிகரான பல சிறுபகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. சிறுவர்களுக்கு ஒரு பங்கும் பெண்டிருக்கு இரு பங்கும் ஆண்களுக்கு மூன்று பங்கும் அளிக்கப்பட்டது. முலையூட்டும் பெண்டிருக்கு மேலும் ஒரு பங்கு. அப்போது ஒவ்வொருவருக்கும் சிறிதளவு ஊனும் ஒரு குவளைக் இயவைக்கஞ்சியுமே எஞ்சின.

அமைதியாக அமர்ந்து அவர்கள் அப்புன்னுணவை உண்டனர். அவர்கள் பசியோடிருந்தனர். நேற்றிரவின் கூட்டுண வுக்குப் பிறகு அவர்கள் எவரும் எதுவும் உண்டிருக்கவில்லை. அவர்கள் மெல்லும், உறிஞ்சும் ஒலிகள் மட்டுமே கேட்டுக்கொண் டிருந்த சூழலில் திடீரென்று ஓர் உரத்த உறுமல் ஓசை எழுந்தது. அனைவரும் உணவை நிறுத்திப் பார்த்தனர். உண்டுகொண்டிருந்த முதிய தேவராட்டி சாலினியின் கைகள் நடுங்கியதையும் அவள் தோள்கள் சிலிர்த்ததையும் கண்டனர்.

சாலினி கூவியபடி எழுந்தாள். அவளது மெய்ம்மயிர் சிலிர்த் தெழுந்தது. இரு கரங்களையும் வானில் தூக்கி அசைத்துக் கூந்தல் காற்றில் பறக்க நின்று குலுங்கினாள். பின்பு கால்களைத் தூக்கி வைத்துச் சுழன்றுவந்து நடனமிட்டாள். ஆழ்ந்த தெய்வக்குரலில் கூவினாள் ''என் மக்களே, ஊர்களிலெல்லாம் கன்றுகளின் ஒலியும் மேழியின் ஒலியும் கதிர்மணி ஒலியும் சிறக்கையில் உங்கள் ஊர் மட்டும் ஏன் புல்லென்றிருக்கிறது? மலைகளில் கள்ளூறும் காய்கனி களும் மருதத்தில் சிறந்த ஊன்சோறும் மணக்கும்போது உங்கள் ஊரில் மட்டும் புல்மணிகள் வேகும் நாற்றம் எழுவதென்ன? உங்கள் அடுப்புகளில் அனலவிந்து புகை எழுவதென்ன? உங்கள் விற்கள் நாணொலி மறந்தனவா? உங்கள் அம்பு நுனிகளில் உதிரம் பட்டு எத்தனை நாளாயிற்று? மறக்குடியினர் குலமிழந்து அறக்குடி ஆயினரா? சொல்லுங்கள்.''

குலமூத்தவன் வணங்கி ''ஆம், அன்னையே எங்களுக்கு வேட்டை தந்து உணவளிக்கும் வழிகள் அனைத்தும் பாதத்தடம் மறந்து ஓய்ந்து கிடக்கின்றன. எங்களுக்கு நீரளிக்கும் ஊருணிகள் வறண்டு கிடக்கின்றன. ஐயையின் மைந்தர்கள் பசித்து அழிகிறோம். அருள்புரிக'' என்றான்.

''கலையமர்செல்வியின் கடன் அளிக்காமல் சிலைதேர் மறவர் வெற்றிகொள்ள இயலாதென உணர்க! உங்கள் வாழ்வு செழிக்கவேண்டுமெனில் ஐயைக்குப் பலியிடுக!'' என்றாள் சாலினி ''உதிரம்! உதிரவிடாய்! அன்னைக்கு உதிரமளியுங்கள்! அவள் கொற்றவை

விடாயைத் தீருங்கள். அவளருள் உங்களுக்கு உண்டு என் மக்களே.''

குலமுத்தவன் ''அப்படியே ஆகுக!'' என்றான்.

ஓ

கண்ணகியும் கோவலனும் கவுந்தி துணைவர எயினர் வாழும் குறும்பை நெருங்குகையில் அங்கே முழவும் கொம்பும் ஒலிக்கப் பெண்கள் சேர்ந்து குரவையிடுவதைக் கேட்டனர். ''அவர்கள் குலத்தில் ஏதோ விழா நடக்கிறதுபோலும்'' என்றாள் கோவலன்.

மூங்கிலும் கருவேலமுள்ளும் கொண்டு கட்டப்பட்ட வேலியின் அருகே திறந்த கதவுப்படல் சாய்ந்து கையில் வில்லும் எறியீட்டியுமாக ஓர் எயினன் நின்றான். அம்பை நாட்டியபடி ''நில்'' என்றான்.

கோவலன் உரத்த குரலில் ''மறவரே, நாங்கள் வணிகர்களல்லர். மதுரைக்குச் செல்லும் எளியவர். உடனிருப்பது அருந்தவ மூதாட்டி.'' என்றான். மறவன் தன் வில்நாணை மீட்ட அவ்விம் மலோசை கேட்டு உள்ளிருந்து நீண்ட நரைத்த தாடியும் சடைமுடிக் கற்றையும் கொண்ட குலமூத்தவன் ஒருவன் வந்தான். கவுந்தியைக் கண்டதும் வணங்கி ''அன்னையே வருக. எங்கள் சிற்றில்கள் உங்களால் தூய்மைகொள்வதாக'' என்றான்.

அவர்கள் உள்ளே நுழைந்தனர். எயினர் குடிகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டனர். வேட்டைநாய்கள் குரைத்தபோது அவற்றைப் பெண்டிர் பிடித்து விலக்கினர். குழந்தைகள் கண்ணகியின் உடைகளைப் பிடித்து இழுத்தன. அவர்கள் அனைவரும் மரப்பட்டை நார்களினாலான ஆடைகளையே அணிந்திருப்பதைக் கண்ணகி கண்டாள். குலமூத்தவன் மட்டும் பல இடங்களில் உதிரம் கறையாகிய, அவர்கள் கொள்ளையடித்துக் கொன்ற பிணத்திலிருந்து எடுக்கப்பட்ட ஆடையை அணிந்திருந்தான்.

குலமூத்த எயினன் ''எங்கள் மூதூருக்குள் நுழையும் முதல் நகரமாந்தர் நீங்கள்'' என்றான். ''அருந்தவத்தாட்டி துணை வருவதனால் மட்டுமே உங்களை எம்மவராகக் கொண்டோம்.''

அவர்களை வரவேற்று மான்தோல் இருக்கைமீது அமரச்செய்

தார்கள். கவுந்தி மண்ணில் அமர்ந்தாள். ''அன்னையே, தாங்கள் உண்ணும்படி இங்கு உணவேதுமில்லை. புல்லரிசிக் கொழுநீர் மட்டுமே உள்ளது'' என்றான் முதுமறவன்.

''அது எமக்கு அமுதம்'' என்றாள் கவுந்தி.

''இங்குக் குமரியாட்டு நிகழவிருக்கிறது அன்னையே'' என்றான் குலமூத்த எயினன். ''நேற்றிரவு எங்கள் குலத்துத் நேவ ராட்டிமீது ஐயை அருள் கூடிவந்தாள். குமரியன்னைக்கு மல ராட்டும் ஆமிடப் படையலும் அளிக்கும்படிச் சொன்னாள்.''

''நான் அதைப் பார்வையிடலாகாது. ஊருக்கு வெளியே ஓய்வு கொள்கிறேன்'' என்று கவுந்தி விலகிச்சென்றாள்.

மீண்டும் முரசும் முழவும் கொம்பும் குரவையும் எழுந்தன. குடிலுக்குள் இருந்து ஓர் அழகிய எயினச் சிறுமியை ஐயைபோல் அணிசெய்து அழைத்துவந்தனர். அவள் கரிய நிறமும் அகன்ற விழிகளும் கொண்டவள். அவளுக்குப் புலித்தோல் ஆடை அணிவித் திருந்தனர். இடையிலும் தோளிலும் மணிமாலைகள் சூட்டினர். குழல்கற்றைகளைப் பாம்புத்தோலால் சுற்றிக்கட்டிக் குடுமியிட்டு அதில் பன்றியின் வெண்தந்தத்தைப் பிறைநிலவாகச் சூட்டினர். புலிப்பற்களால் கோர்த்த தாலியை எலும்புமாலையாக அவள் கழுத்தில் அணிவித்தனர். நாணேற்றிய வில்லை ஒருகையில் அளித் தனர். மறுகையில் சிறுவாள் கொடுத்தனர். ஒரு மறவன் தன் கையைக்கீறி உதிரம் எடுத்து அவள் நெற்றியில் மூன்றாம்விழியை வரைந்தான். புரிகுழல் கலைமானின் உரித்த தோலை முதுகில் போர்த்திய ஒருவன் அவளைத் தன்மீது ஏற்றிக்கொண்டான். கலைமானாகியவன் தன் நெற்றிமீது ஒரு சுரிகொம்பைப் பொருத்திக்கொண்டான்.

குலமூத்த அன்னையர் இருவர் குடில்களுக்குத் தென்மேற்குக் கன்னிமூலையில் கரும்பாறைக்கல்லால் ஆன பீடத்தில் நாட்டப் பட்ட இரும்புச் சூலங்கள் நடுவே வைக்கப்பட்டிருந்த வலக்கால் ஒற்றைப் பெருஞ்சிலம்பை எடுத்துவந்தனர். அதைப் பார்த்த பெண்டிர் வெறியேறிக் குரவையிட பிறர் ''அம்மா அம்மா'' என்று கைகூப்பித் தொழுதனர். அச்சிலம்பைக் குமரியின் பாதங்களுக்கு அணிவித்தனர் அன்னையர்.

அச்சிறுமி முதலில் வெட்கி உடல் நெளித்தாள். பின்பு கண்ணீர் வழியத் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள். மறக்குலம் அவள் முன் கையில் உருவிய வாள்களும் வில்லுமாக நின்று கொந்தளித்தது. மங்கலமணியும் முழவும் அதிரக் கொள்ளைப்பறையும் சூறைச்

சங்கும் சேர்ந்து ஒலித்தன. அவள் மெல்லமெல்ல நிமிர்ந்து அமர்ந்தாள். அவள் கண்கள் வெறித்து முகம் கனல்ஏற்ற செங்கலம்போலச் சுடர்கொண்டது. பின்பு எயினர் துடித்தாடிய ஆட்டத்தின் தாளத்தை அவள் உடல் காட்டியது. அவளில் ஐயை கூடியதைக் கோவலன் கண்டான். நீல நீராழத்தில் படிந்த பேரன்னையின் இமையாவிழி நோக்கு அது என்று அவன் அறிந்தான்.

குறுமுரசு ஒலிக்கத் தொடங்கியபோது மெல்லமெல்ல எயினர் அடங்கினர். வேட்டுவவரி பாடும் பெண்டிர் குமரியைச் சுற்றி அமர்ந்தனர். நாணேற்றிய வில்லைத் திருப்பிவைத்து அம்பால் அதை மீட்டி இனிய ஒலியெழுப்பி அதன் சுதியுடன் குரலிசையப் பாடத் தொடங்கினர். மெல்ல அப்பாடலுடன் எயினரின் பலவகையான தோல்கருவிகள் வந்து ஒன்றின. அது ஐயை ஆடிய வென்றிக் கூத்து என்று கோவலன் அறிந்தான். அக்கூத்தைக் கற்றுத்தேறிய சில கூத்தரும் விறலியரும் புகாருக்கு வந்து ஆடுவதுண்டு. ஆனால் அதற்கும் இக்கூத்துக்கும் நிரம்ப வேறுபாடுகள் இருந்தன. கூத்தரின் ஆட்டத்தில் தேறிய அசைவுகளின் அழகு இருந்தது. இக்கூத்தில் மெல்ல மெல்ல நெஞ்சிலிருந்து எழும் வெறியின் அச்சமூட்டும் ஒழுங்கும் விரைவும் இருந்தன.

அவ்வசைவுகளில் தொன்மை வாய்ந்த வேட்டைமுறைகள் இருந்ததைக் கோவலன் கண்டான். கற்களைக் கற்களால் அடித்துச் செதுக்கி வேல் நுனி செய்து மரத்தில் பொருத்தி அதை ஏந்தியபடிக் கூட்டம்கூட்டமாகப் போருக்குச் சென்றனர். யானைகளையும் காட்டெருமைகளையும் சூழ்ந்து கொன்றனர். களிவெறியாடியபடி அவற்றைச் சுமந்துவந்து உரித்துச் சுட்டுத் தின்றனர். உணவளிக்கும் காட்டுக்கு உரிமை கொண்டவளாகிய அன்னையை அவர்கள் சேர்ந்து கைகூப்பி வணங்கினர். ஊன்மணம் முகர்ந்து விருப்புடன் ஒற்றைக் கொம்புள்ள கலைமான் மீதேறி வந்த மூதன்னையைச் சூழ்ந்து வணங்கினர். அவளுக்கு ஊனைப் படையலிட்டனர். அவள் அவர்களுடன் சேர்ந்து நடனமிட்டாள். அவர்களுக்கு அருள் புரிந்தாள்.

கலைமான் செங்குத்தான மலைப்பாறைகளில் காலெடுத்து வைத்து ஏறிச்சென்றதைக் கண்டு அவர்கள் கூவிக் குரவையிட்டனர். அன்னைகளுக்கு அன்னையாகிய பேரன்னையின் அடிச்சுவடு அம்மலைமீது உள்ளது என்றும் அவள் என்றும் இளமை நீங்காக் குமரியென்றும் அவர்கள் தங்கள் மூதாதையர் கூறி அறிந்திருந்தனர். குமரியன்னையின் ஒற்றைப் பாதத்தடம் பதிந்த உச்சி உள்ளதென்றும் கலைமான் அல்லாது பிறர் அங்கே சென்றுசேர இயலா

தென்றும் கதைகள் சொல்லின. மலையேறிச்செல்லும் கலை மானைத் தொழுது, மலையுச்சியை நோக்கி மெய்சிலிர்த்துக் குரவை யொலியெழுப்பினர்.

கூத்தின் விரைவு உச்சம் கொண்டது. வேலேந்திய மறவர் கருங் கால்களைத் தூக்கிவைத்து வெறிக்கூத்தாடினர். அவ்வசைவுகளில் கடல் பொங்கி மேலெழுந்ததை வெற்புகள் உடைந்து சரிந்ததை நிலங்கள் பாயெனச் சுருண்டு விரிந்ததைக் கோவலன் கண்டான். உருவிய வாளுடன் இளமறவன் ஒருவன் துடியாட்டமிட்டு முன் வந்தான். பிறர் குரவையொலியெழுப்பித் துள்ள அவன் தன் குடுமியை இடக்கையால் பற்றிக் குமரிக்கொற்றவை முன் மண்டி யிட்டான். ''முதல் படையலிது அன்னாய்'' வலக்கையில் ஏந்திய வாளால் தன் தலையை ஓங்கி வெட்டித் துண்டாக்கி அக்கணமே அதை இடக்கையின் தேர்ந்த அசைவு மூலம் எடுத்து நீட்டியபடி முன்சரிந்து விழுந்தான். அவன் கால்கள் செம்புழுதியில் கொட்டிய உதிரத்தை மிதித்துக் குழப்பின. அவன் தலையில் பீரிட்ட செங்குருதி அவள் வலக்கால் சிலம்பை நனைத்தது.

விழித்த கொலைவிழிகளுடன் கொற்றவை அசையாமல் அமர்ந்திருந்தாள். அவ்வுதிரத்தைக் கண்களால் பருகுபவள்போல. மேலும் ஒரு மறவன் வந்து தன் தலையை ''இரண்டாவது தலையிது தாயே'' என்று கூவி வெட்டிப் படையலிட்டான். மூன்றாமனும் தன் தலையை எண்ணி இட்டபிறகு குலமூத்தவன் வந்து குமரியின் தாள் பணிந்து ''இட்டெண்ணித் தலைப் படையலிட்டோம் அன்னையே. இன்னல் தீர்த்தருள வேண்டும் தாயே'' என்று கூவினான். கொற் றவக்குமரியின் வலக்கால் சிலம்பு குருதியில் மூழ்கி காய்ச்சிய இரும் பெனச் சுடர்ந்தது.

வெறியோசையுடன் தேவராட்டி சாலினி எழுந்தாள். மெலிந்த கருங்கைகளை வானில் தூக்கிக் காட்டுவிலங்குபோல ஊளையிட்டுக் கூத்தாடினாள். ''அன்னையே அன்னையே படைய லேற்றருள்க தாயே'' என்று குலமூத்தவன் கைகூப்பி இறைஞ் சினான். சாலினி துள்ளித் தலைமயிர் சுழற்றி நின்றாள். ''நான் என் அன்னையை நோக்க வந்தேன்! அவள் முன் பணிந்து நிற்கிறேன்! என் பேரன்னை வாழ்க! இமையாவிழிகளுடன் கடல்நிலத்தடியில் உறங்கும் சீரிளம்குமரி வாழ்க!'' என்றாள் சாலினி. கூட்டம் முழுக்க அச்சமும் வியப்பும் பரவியது.

சாலினி தன் கரங்களை நீட்டினாள். கண்ணகியைச் சுட்டிக் காட்டி ''இவள்தான் அவள்! கொங்கர் செல்வியாகக் குன்றேறப் போகும் குமரி. குடமலைச் சேரர்களின் குலதெய்வமாக

அமரவிருக்கும் அன்னை. தென்நிலங்களை ஆளும் கன்னிப்பாவை! உலகுக்கு முதல்மணியாகத் தோன்றிய பேரன்னை. தென் தமிழ்ப் பாவை!'' சாலினியின் கரங்கள் குவிந்தன. கண்களில் கண்ணீர் வடிந்தது. ''தென்தமிழ்ப்பாவை! தென்தமிழ்ப்பாவை !'' என்று வீறிட்டபடி அவள் கவிழ்ந்து கண்ணகியின் முன் மண்ணில் விழுந்தாள்.

பதறி வெட்கிக் கண்ணகி பின்னகர்ந்தாள். கோவலன் அவள் கரங்களைப் பிடித்துக்கொண்டான். ''அஞ்சாதே உனக்கு நல்லூழ் காத்திருக்கிறதென்றே அன்னை சொல்கிறாள்!'' என்றான். அவள் கைகள் நடுங்குவதை அறிந்தான்.

நீலி சொன்னது

வெயில் விரிந்த வெம்பாலையின் மணற்பரப்பில் ஒரு சிறு மேடு உள்ளது. அங்கு கால் புதைய ஏறிச்சென்றால் அப்பரப் பெங்கும் பரவிய சிறுமுட்செடிகளுக்கு நடுவில் விரவிக்கிடக்கும் வெள்ளெலும்புகளையும் தலைமயிர்க் கற்றைகளையும் பற்கள் நிரைத்த மண்டைகளையும் காணலாம். அது குமரிமேடு என்று எயினர்களால் அழைக்கப்படுகிறது. அங்குதான் ஆண்டுதோறும் கடுங்கோடை முடிந்து முதல் மழை மண்ணில் விழுந்த பிறகு கடகத் திங்கள் காரிருள் நாளில் இறந்த அன்னையருக்கு அவர்கள் தென் கடன் தீர்க்கிறார்கள். அன்று சிறந்த ஊனுணவும் கள்ளும் மலர் களும் கொண்டு ஆண்களும் பெண்களும் அம்மேட்டுக்கு வருவார் கள். மணலில் இலை விரித்து அவற்றைப் படைத்து வணங்கி மீள் வார்கள். செந்நாய்கள் வடிவில் வரும் மூதாதையர் கூடி அவ் வுணவை உண்டு கூத்தாடும் ஒலி இரவெல்லாம் கேட்கும்.

குமரிமேட்டில் ஒரு கூன்கிழவி விழுந்துகிடந்தாள். அவள் நரைத் தலைமயிர் மணலில் பரவியிருந்தது. ஒடுங்கிய மார்பில் வற்றிய வறுமுலைகள் செந்நாய்களால் குதறப்பட்டிருந்தன. எனி னும் அவள் இறக்கவில்லை. அவள் கண்களும் உதடுகளும் உயிரால் அசைக்கப்பட்டன. அவள் ஒரு கையில் தன் தடியை இறுகப்பற்றி யிருந்தாள். மறுகையில் மானின் ஊன் சுட்ட பெருந்துண்டத்தின் எஞ்சிய மிச்சத்தை வைத்திருந்தாள். அவை இரண்டின் துணையுடன் அவள் அம்மணல்மேட்டில் எட்டாவது நாளாகத் தன் உயிரை நீட்டித்து வந்தாள்.

அவள் பெயர் குமரியன்னை. அவளுக்கு முன்னர் ஒரு பெயர் இருந்தது. தன் எட்டு வயதில் குமரியன்னையாக அவள் கலைமான் மீது அமர்ந்து பலி கொண்ட கணம் முதல் அப்பெயர் மறைந்து அவள் குமரி ஆனாள். அதன் பிறகு அவள் அன்னையர் அவளைக் கொஞ்சவில்லை. ஆடவர் அவளைக் கண்டதுமே தலைவணங்கிப் பணிந்தனர். குழந்தைகள் அவளை நெருங்கவேயில்லை. குலத்தில் எந்த வேலையும் செய்ய அவள் விடப்படவில்லை. தனக்குரிய கன்னிக்குடிலில் ஆண்டுக்கு ஒருமுறை தலைப்படையல் கொண்டு

தனிமையில் அவள் வாழ்ந்தாள். தனிமையில் அவள் தனக்குள்ளே பேசிச்சிரித்துக் கொள்பவளாக ஆனாள்.

அவள் முதிர்ந்தபோது அடுத்த குமரிக்கன்னி உருவானாள். ஆகவே அவளை எயினர் மறந்தனர். ஊனும் கள்ளும் படைப்பது தவறியது. எனவே பகலில் பிறர் விழித்திருக்கையில் அவள் துயின்றாள். இரவில் தன் சிற்றூர் விட்டு வெளியே சென்று காற்று ஓலமிட்டலையும் பெரும்பாலையில் உலவினாள். கண்கள் சுடர நிரைவகுத்துச் செல்லும் செந்நாய்க்கூட்டங்களையும், பெருங்கால்கள் புதைய சங்கம்விளித்துச் செல்லும் வலசை யானைகளையும், தண்ணீர் தேடி நா துவள நடக்கும் மான்களையும் கண்டு கருவேலமரத்தடியில் நின்றாள். புதர்க்கோழிகள் இட்ட முட்டைகளை எடுத்து உண்டாள். களைத்து மண்ணில் விழுந்த மான்களைக் கொன்று அவற்றின் ஊனைப் புதைத்துவைத்து நாட்கணக்கில் உண்டாள். மனிதமழிந்து அவளுமொரு பாலைநில ஓநாய் ஆனாள்.

அவள் உடலில் புண்கள் அடர்ந்து கூந்தல் சடைகொண்டு கெட்ட ஊன்வாடை வீசியது. அவள் கண்களில் பசித்த ஓநாய்களின் வெறி எப்போதும் குடியேறியது. அவள் மாந்தசொல் மறந்து விலங்குகள்போல உறுமியும் சீறியும் மனிதர்களை விலக்கினாள். எயினர் அவளைச் சிற்றூருக்கு வெளியே புற்குடில் கட்டிக் குடியேற்றினர். அவளை அஞ்சி வழிபட்டனர். உணவில்லாதபோது அவள் பெரும்பாதையோரம் வந்து தடியுடன் நின்றாள். எயினர்க்கு அஞ்சி இரவில் நடக்கும் பயணிகள் அவளைக் கண்டு கொல்நிலப் பாவை என்று அஞ்சிக் கையிலிருந்த உணவை அங்கேயே வீசிப் படையலிட்டு ஓடினர்.

உடல் செதிலரித்துக் கூன்விழுந்து அவள் முதிர்ந்தாள். ஒரு நாள் அவளால் வெளியே வரமுடியவில்லை என்று எயினர் கண்டனர். அவள் தன் குடிலுக்குள் இடைக்குக் கீழ்ப்பகுதியை அசைக்க இயலாது கைகளால் கால்களை இழுத்துத் தவழ்ந்தபடி பசிவெறியில் ஊளையிட்டாள். எயினர் ஊனும் நீரும் கொண்டு வந்து அக்குடிலுக்குள் வீசிவிட்டு ஓடிமறைந்தனர். அவள் குடிலுக்குள் அவளுடைய உடலும் அவ்வுடல் துப்பிய கழிவுகளும் சேர்ந்து அழுகிக் கொடும்நாற்றம் எழுந்தது. பின்பு குலமூத்தார் கூடி நாள் தேர்ந்து அவளைத் தூக்கிக் கொண்டுசென்று கன்னிமேட்டில் வைத்தனர். ஊனும் நீரும் படைத்தனர். அரிய கற்களாலும் கொம்பாலும் செய்த நகைகளையும் பாண்டங்களையும் கொற்றவையின் மண் சிலைகளையும் அவளுக்கு அருகே படைத்து மலர் இட்டு வணங்கி மீண்டனர்.

கையில் ஒரு கழி அகப்பட்டமையால் கொல்ல வரும் ஓநாய்களை வென்று அவள் அந்த மண்மேட்டில் மாழ்கும் விழிப்பு மாய் எட்டுநாள் வாழ்ந்தாள். வலியும் பசியும் விளங்கிக்கொள்ள முடியாத கொடுஞ்சினமுமாக அவள் குரல் அங்கிருந்து இரவெல் லாம் கேட்டது. எயினர் மக்கள் இரவில் அக்குரலை கேட்டுக் கண்களை மூடி வணங்கித் தங்கள் குழந்தைகள்மீது கைகள் போட்டு அணைத்துக்கொண்டனர். தன் தனிமைக் குடிலில் இளைய குமரி கைகளில் முகம் சேர்த்து விழிநீர் உகுத்தாள். எட்டாம் நாள் இரவில் முதுகுமரியில் மொழி மீண்டது. ''அம்மா! அம்மா!'' என்று அவள் கூவினாள். ஓநாய்கள் அவளைக் கிழித்து உண்டபோது ஓர் ஓநாய் அவள் குரல்வளையைக் கிழிப்பதுவரை அதே சொல்லையே கூவிக் கொண்டிருந்தாள்.

மணல்மேட்டின் ஆழத்தில் அமையும் அழிந்த அழுத்தத்தில் தலைமுறைகள் கண்ட கன்னியன்னையரின் வெள்ளெலும்புகள் அமைதியற்றுப் புதைந்திருந்தன. அவள் எலும்பும் அவற்றுடன் இணைந்தது. அவர்களையெல்லாம் அவள் முன்னரே நன்கறிந் திருந்தாள். அவர்கள் ஒருவரை ஒருவர் கண்டு துயரத்துடன் புன்னகை செய்தனர்.

ஆ

எயினர் கூற்றை ஒப்பிக் கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் இரவின் நிலவொளியில் பாலையைக் கடக்கலாமென்று எண்ணினர். வேனில் நிலவில் பாலையில் நடப்பது எளிது என்றும் அது எவ்வுயிர்க்கும் எக்கேடும் நிகழ்த்தாது என்றும் சொன்னான் முதுஎயினன். கண்ணகியும் கோவலனும் எயினரிடம் விடைபெற்று அவர்கள் அளித்த நீரைமட்டும் பெற்றுக்கொண்டு நடந்தனர். ஒரு நாள் பொழுது நடந்தால் பாலை ஓய்ந்து முல்லை தொடங்கும் என்று சொல்லியிருந்தனர். கோவலன் மனம் ஏதும் அறியாமலேயே அமைதியிழந்திருந்தது. அறியாத நிமித்தமொன்றை அவன் கண்டு விட்டிருந்தான்.

இரவு ஏறுகையில் நிலவு முழுவெளிச்சத்துடன் வானில் மேலெழுந்தது. பெரும்பொற்குடம்போலச் செந்நிறத்துடன் மேகங் களற்ற வெளியில் எழுந்து நின்றது. சிறிது சிறிதாகக் கண்ணுக்குப் பாலை பழக வெகுதூரம்வரை பளிங்குக்கல்லாலான அடுக்குகள் என விரிந்த நிலத்தை நோக்கினான். நிலவில் புதர்களின் நிழல் கள்கூட இளஞ்சிவப்பு நிறத்தில் மண்ணில் விழுந்துகிடப்பதைக் கோவலன் கண்டான். காற்று ஓடுகையில் அந்நிழல்கள் பரதவர் வலைபோல மணலில் நெளிந்தன. புதர்களுக்குள் ஊர்வன எழுப் பும் ஒலி பாலை தனக்குள் மெல்லப் பேசிக்கொள்வதுபோல ஒலித்தது. காற்று வாரி வீசிய மணல் சருகுகளில் நீரோடைபோல ஒலியெழுப்பியது. பாலையின் பேரழகைக் கோவலன் அப்போது தான் கண்டான். உள்ளம் நிறைந்த விம்மிதத்தை நெடுமூச்சுகளாக மாற்றி விட்டுக்கொண்டிருந்தான்.

கண்ணகி எந்தப் பேச்சும் இன்றி அமைதியில் நடந்தாள். கோவலன் அவளுடன் பேச விழைந்தான். அந்த நிலவிரிவு தனக் களிக்கும் உள எழுச்சியைச் சொற்பெருக்காக மாற்றி அவள்முன் கொட்டிவிடத் துடித்தான். ஆனால் அவளது ஆழ்ந்த அமைதி அவனைத் தயங்கச்செய்தது. ஓரக்கண்ணால் அவளையே நோக்கியபடி வந்தான். அவள் சுரிகுழல்கள் நிலவொளியை ஏற்றுப்

பொற்சுருள்கள்போலச் சுடர்வதையும் அவற்றின் நிழல் அவளது பொன்நிலவு படர்ந்த தோள்களில் விழுந்து கிடப்பதையும் கண்டான். அவள் கன்னங்களில் இமையின் நிழல். இடைமீது முலைகளின் நிழல். ''ஏன் பேசாமல் வருகிறாய்?'' என்றான் கோவலன். ''ஒன்றுமில்லை'' என்றாள் அவள்.

நிலவைப்பற்றி அவள் ஒரு சொல்லாவது சொல்லவேண்டுமென அவன் எதிர்பார்த்தான். ''இப்போது கால்கள் சுடுகின்றனவா?'' என்றான். ''இல்லை'' என்றாள் அவள். ''களைப்பாக உணர்கிறாயா? அம்மரத்தடியில் சற்று அமர்வோம்'' என்றான். ''இல்லை'' என்றாள் கண்ணகி. ''வெயில் இல்லாமலிருப்பது எவ்வளவு நல்லது, இல்லையா?'' என்றான். ''ஆம்'' என்றாள் அவள்.

கோவலன் நெட்டுயிர்ப்புடன் தன்னைத் திசைமாற்றிக் கொண்டு பாலையை நோக்கினான். அது அலையடிக்கும் கடல் போலிருந்தது. தன்னை அவன் படிப்படியாகத் திரட்டிக் கொண்டான். ஆம், அவளிடம் அவன் பேசியதில்லை. நிலவொளி பரந்த வேனில்மாலைகளை யாழிசையும் பண்ணும் பாடலுமாக அவளுடன் செலவிட்டதில்லை. அவள் அறிந்ததெல்லாம் அகத்தளத்து இருளை மட்டும்தான். அவன் மீண்டும் அவளிடம் ''நிலவொளியை நான் இத்தனை பேரழகுடன் இதுவரை கண்டதில்லை'' என்றான். கண்ணகி ஒன்றும் சொல்லவில்லை. ''ஒரு வேளை நீ என்னுடன் வருவதனால் நிலவு இவ்வழகைக் கொண்டது போலும். இந்நிலத்துக்கு உன்னையும் என்னையும் தெரியுமென்ற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது. நிலவென்பது பாலையின் ஒளிமிக்க புன்னகையல்லவா?'' என்றான்.

கண்ணகி பெருமூச்சுடன் ''நான் அந்தக் குமரியன்னையை எண்ணிக்கொண்டிருந்தேன். தன் காலடியில் ஆடவர் குடுமித் தலைகள் உருளக்கண்ட பெண்ணால் எப்படி இனி மனைவியாக வாழ இயலும்? அவன் குழந்தைகளுக்கு அன்னையாக முடியும் ?''

கோவலன் தன்னுள் கூரிய முனையுடன் அம்பு ஒன்று வந்து தைப்பதுபோல உணர்ந்தான். இருமுறை ஏதோ சொல்ல வாயெடுத்தவன் பேசாமல் நடந்தான். பாலையை வானம் முட்டும் கோடுமீதே விழி நாட்டியிருந்தான். பின்பு சட்டென்று திரும்பிய போது தரையில் கண்ணகி நீலி இருவருடைய நிழல்களைக் கண்டான். பிடர்த்தலை சிலுப்பிய இரு பேருருவங்கள்! கொற்றவையும் அவளது பூதகியும்போல. அஞ்சித் திடுக்கிட்டு அவர்களைப் பார்த்தான். அவர்கள் மெல்லிய குரலில் தங்களுக்குள் உரையாடிய

படி வந்தனர். தன் அகம் ஊதிப் பெருக்கிக் கொள்ளும் அச்சங்களை எண்ணி அவன் புன்னகை செய்துகொண்டான். ஆயினும் அவனுள் சிறு அச்சம் துடித்தபடியேதான் இருந்தது.

ஃ

காட்டுக்கோழிகள் சேர்ந்து கூவிய காலையில் பொடி படிந்த பாதங்களுடன் களைத்துக் கண்கள் துயில்மயங்க அவர்கள் ஒரு சிறுபுறஞ்சேரியை அடைந்தனர். அவ்வூரின் புறத்தேயிருந்த உருத்திரனின் சிறு கோயிலைக் கண்ட கோவலன் சிந்தனையுடன் நின்று ஊரைக் கூர்ந்து நோக்கினான். ''அன்னையே இவ்வூர் நுழை வாயிலில் உருத்திரனின் காவலுடன் பார்ப்பனச்சேரி போலுள்ளது. ஆனால் ஊருக்குள் இக்காலைநேரத்தில் எழுதாக்கிளவியின் ஒலிகள் எழவில்லை. அவிப்புகையும் விண்ணிலெழவில்லை'' என்றான்.

''இது புறக்கொள்கைப் பார்ப்பனர் வாழும் ஊர்'' என்றாள் கவுந்தி. ''இவர்கள் மறைநெறியைப் பழுதென உதறிய பார்ப் பனர்கள். இவர்களுக்கு ஆசிரியன் பிரகற்பதி என்பான். அவன் வழிநின்ற அசித கேசகம்பளன், கணாதன், பரமேட்டி ஆகிய பிறரும் உள்ளனர். இவர்களை மறைநூல் கொள்கையர் சாருவாகர்கள் என் கிறார்கள். இவர்களுடன் அவர்கள் உரையாடுவதோ இவர்களைத் தீண்டுவதோ இல்லை. ஆயினும் பிறப்பால் பார்ப்பனராதலால் இவர்களை அரசன் உதறவும் இயலாது. ஆகையால் இவர்களுக்கு இப்படி புறச்சேரிகள் பணிசெய்து இறையிலி நிலங்களும் அளித்துப் பிறமாந்தர் இவர்களுடன் கலவாமல் நகருக்குத் தொலைவில் பாலைநிலத்தோரம் தங்கச் செய்திருக்கிறான். இவர்கள் இங்கே ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாகத் தனியான ஒரு குமுகமாக வாழ்கிறார்கள்'' என்றாள் கவுந்தி.

''நாம் உள்ளே சென்று அவர்களிடம் உணவும் ஓய்விடமும் கேட்போம்'' என்றான் கோவலன்.

''ஆம். அவர்கள் விருந்தினரை வரவேற்கும் பண்புள்ள வர்கள்'' என்று கவுந்தி சொன்னாள்.

''அன்னையே மறைக்கொள்கையை மறுப்பவர் என்றால் அவர்கள் சாக்கியர்களையும் அருகநெறியினரையும் ஏற்கவேண் டுமே'' என்றான் கோவலன்.

''அவர்களை அருக நெறி ஏற்க இயலாது'' என்றாள் கவுந்தி ''அவர்கள் எம்பெருமான் சொன்ன அறம்பொருளின்பம்வீடு என்ற நாலறங்களில் இன்பமொன்றே மெய் என எண்ணுபவர்கள். உண்பதும், காமத்தில் ஆடுவதும், கலைகளில் மகிழ்வதுமே வாழ்வின் பொருளாகும் என்பவர்கள். இரவும் பகலும் வரிப்பாடல்களைப் பாடி முழவும் யாழும் துணைசேர்த்து மகிழ்ந்தாடுவர். கள்ளும் ஊனும் சுவைத்துண்பர். அவர்களுடைய பெண்டிருக்கு எவ்வகை விலக்குகளும் இல்லை. மலர்மிசை ஏகிய மாணருள் அருகரின் அறம் கூறும் ஐந்தவித்தலையும் கொல்லாமையையும் ஆகூழ் நெறி நிற்கும் அவர்கள் ஏற்பதில்லை. தாங்கள் ஏற்காதன வற்றை எள்ளிநகையாடுவதும் அவர்கள் இயல்பு'' என்றாள் கவுந்தி.

அவர்கள் உள்ளே செல்லும்போது உள்ளிருந்து ஓர் இளம் பார்ப்பனன் வெளியே வந்தான். இளம் தளிர்களால் ஆடையணிந்த ஒரு பெண்ணும் அவனுடன் வந்தாள். அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவியும் முத்தமிட்டும் கொஞ்சிப்பேசியும் வந்தனர். இருவரும் குடிக்களியில் ஆடினர். பார்ப்பனன் அவர்களை நோக்கி ''வருக வருக! தங்களுக்காக இச்சேரி காத்திருக்கிறது. வருக அன்னையே'' என்றான். பார்ப்பன மகளும் வணங்கினாள்.

''நாங்கள் சற்று ஓய்வெடுத்து உணவுண்ண வேண்டும். இர வெல்லாம் வழிநடந்தோம்'' என்றான் கோவலன்.

''தங்களை வரவேற்று ஆவன செய்வது எங்களுக்கு மகிழ்ச்சி யளிப்பது. வருக அன்னையே'' என்றான் பார்ப்பனன். ''தாங்கள் ஊன் உண்ண மாட்டீர்கள். ஆலியும் அருந்துவதில்லை குளிப்பது மில்லை. காய்கறிகளும் கிழங்குகளும் நாங்கள் இங்கு அருகநெறி யாளருக்கென்றே வைத்துள்ளோம்.''

''இங்கே அருக நெறியினர் அடிக்கடி வருவதுண்டா?''

''ஆம் அன்னையே. இங்கே தினமும் அவர்கள் வந்து பிச்சை ஏற்றுச் செல்வதுண்டு.''

''அவர்களின் அறச்சொல் கேட்டுமா உங்கள் கொள்கைகள் மாறவில்லை?'' என்றாள் கவுந்தி.

''அவர்கள் அறச்சொற்கள் சொல்வது இல்லை. உணவு அவர்களுக்குப் பிடித்திருந்தது என்றால் பற்களைக் காட்டுவார்கள். நீண்ட வால்களைச் சுழற்றி மரங்களில் ஏறித் தாவிச் செல்வார்கள். அன்னையே, தாங்கள் மரங்களின் மேலே அமர்வீர்களா இல்லை கீழேயா?''

''உன் நா நச்சரவம் போன்றது. ஆகூழ்நெறிசேர் அறமிலியுடன்

நான் உரையாடலாகாது'' என்றாள் கவுந்தி. பார்ப்பனன் சிரித்தான். அப்பெண்ணும் கூடவே சிரித்தாள்.

''இந்த வாழ்க்கையை நீ இழந்துகொண்டிருக்கிறாய். இம்மை யின்பங்கள் நிலையற்ற நீர்க்கோலக் கனவுகள்'' என்றாள் கவுந்தி.

''மறுமையென்பது நீர்கூட இல்லாக் கானல்'' என்றான் பார்ப்பனன். ''அன்னையே உங்கள் நெஞ்சில் கைவைத்துச் சொல் லுங்கள். நீங்கள் உலக இன்பங்களைக் கனவு கண்டதில்லையா என்ன? அக்கனவுக்குள் நாங்கள் வாழ்கிறோம்.''

கவுந்தி அசையாமல் நின்றாள். பிறகு ''மகனே, நீயும் கனவு காண்பதுண்டல்லவா ?'' என்றாள்.

''ஆம்.''

''அவற்றில் நீ ஒருகணம்கூட மறக்கவியலாத கனவின் உலகில் அல்லவா நான் வாழ்கிறேன்?''

பார்ப்பனன் சொல்லிழந்து தலைகுனிந்து நடந்தான். உள்ளே சோலைவரிப் பாடலின் ஒலிகள் முழவும் யாழும் இருபக்கமும் அழகாக இணைசெல்ல ஒலித்தன. கோவலனின் கால்களில் தாளம் அசைந்தது. விரல்களில் இசை துடித்தது.

பார்ப்பனன் ''வருக தவத்தாட்டியே. இது எங்கள் ஊர்க் குடில். இங்கே நாங்கள் விருந்தினரைத் தங்கவைப்பது வழக்கம்'' என்று ஒரு மண்குடில் திண்ணையில் அமரச் செய்துவிட்டு உள்ளே சென்று தங்கள் ஊர்த்தலைவனான முதுமறையவனை அழைத்து வந்தான். சிவந்த நிறமும் செந்தழல்போலத் தாடியும் வளைந்த உடலும்கொண்ட மறையவன் கவுந்தியை வணங்கி ''அன்னையே நீங்கள் இங்குத் தங்கி உணவுண்டு ஓய்வெடுத்துச் செல்லலாம்'' என்றான்.

''நான் ஊருக்கு வெளியே அந்த மாதவிக்கொடிப்பந்தல் கீழ் ஓய்வெடுக்கவே விழைகிறேன். இவர்கள் என் மக்கள். இவர்கள் இங்கே தங்கட்டும்'' என்றாள் கவுந்தி.

அவர்களுள் ஒரு பார்ப்பனி சிரித்தபடி வந்து கண்ணகியை அழைத்துச்சென்றாள். அவளுடைய இல்லத்தில் கண்ணகி நீராடி உணவுண்டு சிறிது ஓய்வு கொண்டாள். அவள் விழித்தபோது ஊர்ப் பெண்டிர் பலர் வந்து கூடிவிட்டிருந்தனர். அப்பார்ப்பனியின் பெயர் கார்க்கி என்று கண்ணகி அறிந்தாள். ''எங்கள் ஊருக்கு அயலார் வருவதேயில்லை. வருபவர்களே எங்கள் வெளியுலகாகிறார்கள்'' என்றாள் ஒரு பெண். கண்ணகி தன் பயணத்தை அவர்களுக்குச் சொன்னாள். அவர்கள் வியப்புடன் கேட்டமர்ந்திருந்தனர்.

கார்க்கியிடம் அவள் கணவன் யார் என்று கண்ணகி வினவிய போது அவள் சிரித்தபடி அவ்வூரில் கணவன் என எவரும் இல்லை என்றாள். விரும்பியவருடன் விரும்பியவரைக்கும் சேர்ந்து வாழலாம். குழந்தைகளை ஊர்மன்று பொதுவாகச் சேர்த்து வளர்க்கும்.

கண்ணகியின் கண்களைப் பார்த்துவிட்டு பெண்கள் ஒருவரை ஒருவர் நோக்கி நகைத்தனர். கார்க்கி ''கற்பு என்று ஐயம் கொள் கிறாய். இங்கு அப்படிப்பட்ட தளைகள் ஏதும் பெண்டிருக்கு இல்லை'' என்றாள்.

''தளையா?'' என்றாள் கண்ணகி.

''உன் இளமையை முழுக்க நீ ஆற்றியிருப்பதில் கழித்தாய் அல்லவா?'' என்றாள் கார்க்கி.

''எப்படி அறிவாய்?'' கண்ணகி அதிர்ச்சியுடன் கேட்டாள்.

''உன் முகம் சொல்கிறது. இந்த மூவேந்தர் நாட்டிலும் பெரும் பாலான குலப்பெண்டிர் முகங்கள் காட்டுவது இதைத்தான். கற்பென்பது அனைத்தையும் சுமந்து சுமந்து காலத்தைக் கணக் கிட்டுச் செலவழிக்கும் தீராத நாட்கள்தான் அவர்களுக்கு..''

''எங்கள் குலங்களில் கற்பிலாப் பெண்டிரைப் பரத்தையர் என்போம்'' என்றாள் கண்ணகி.

''அவர்களும் விடுதலைகொண்டவர்கள் அல்ல. நீங்கள் ஒருவருக்காக ஆற்றியிருக்கிறீர்கள். அவர்கள் பலருக்காக. காதலின் பொருட்டன்றி எதன்பொருட்டும் ஆற்றியிருக்காத பெண்ணே விடுதலையானவள். இங்கே எங்களுக்கு வெளியுலகில் ஆண் களுக்கு உள்ள எல்லா உரிமைகளும் உண்டு.''

கண்ணகி அமைதியுடன் தலையசைத்தாள். பின்பு ''நீங்கள் ஏன் இங்கே தனித்து வாழவேண்டும் ?'' என்றாள்.

''எங்களை மதுரை அரசு அஞ்சுகிறது'' என்றாள் கார்க்கி.

''தென்நிலமாளும் பாண்டியன் கோலா?'' என்று கண்ணகி சிரித்துக் கேட்டாள்.

''ஆம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எங்கள் மெய்ம்மை மரபின் பேராசிரியர்களுள் ஒருவரான கபிலர் இங்கு வந்தார். அவரது மெய்யறிவின் நெருப்பு விரைவிலேயே மதுரையைச் சுற்றிவளைத்துக் கொண்டது. மக்கள் கூட்டம் கூட்டமாக அவரைத் தேடி வந்து மெய்யறிவு கொண்டு மீண்டனர். அவருக்குப் பெரிய மாணாக்கர் படை உருவாயிற்று. இம்மக்கள்மீது பெரும்சுமையென

அழுத்திய ஆட்சியையும் அவ்வாட்சியை நிலைநாட்டும் மறை யோரின் சொற்களையும் அச்சொற்களுக்கு அடிப்படையான மறை நூல்களையும் அந்நூல்களை ஓதும் வேள்விகளையும் எங்கள் மெய்யறிவு அறைகூவியது. அவற்றுக்குப் விடை சொல்ல இயலாத மறையவர்கள் எங்களைத் தாக்கினர். எங்கள் ஆசிரியரைக் கொன்றனர். எங்களுடைய இடங்களை எரித்தழித்தனர். ஆயினும் வேரிலிருந்து முளைக்கும் காட்டுச்செடி போல எங்கள் மெய்யறிவு மீண்டும் மீண்டும் முளைத்தபடியே இருந்தது. அவர்கள் வெட்டியும் நெய்யிட்டு எரித்தும் அழிக்க அழிக்க மெய்யறிவோர் பெருகினர். ஒரு கட்டத்தில் மக்கள் எங்கள் பொருட்டு மறையோரைத் தாக் கினர். அவர்களைக் கொல்லத் தொடங்கினர். அதன் பிறகு பாண்டியன் தலையிட்டு இருசாராரையும் ஆறுதல்படுத்தினான். எங்களுக்கு இந்தப் புறஞ்சேரியை வகுத்தளித்தான். சில நில உரிமைகளையும் அளித்தான்...''

''நீங்கள் பாண்டியன் அரசை எதிர்ப்பவர்கள் என்றால் ஏன் அவன் உங்களைக் காக்கவேண்டும்?''

''எங்கள் உதவி இன்றி அவன் செயல்பட இயலாது. நாங்கள் வாழ்க்கையின் அனைத்துச் சிக்கல்களையும் மண்ணில் வைத்தே தீர்க்க எண்ணுகிறோம். ஆகவே நாங்களே பலவகைக் கருவிகளை, படைக்கலங்களை, நோய்தீர்க்கும் மருந்துகளை உருவாக்கினோம். நாங்கள் இன்றி அவனது வெற்றியும் அரசும் நிலைக்காது என அவன் அறிவான்...''

''பாண்டியன் தென்நிலமாள மீன்விழி அன்னையால் பணிக்கப்பட்டவன் என்று நூல்கள் சொல்கின்றன'' என்றாள் கண்ணகி.

''இல்லை. நான் அவ்வன்னை என்னையே தென்நிலமாளப் பணித்திருக்கிறாள் என்கிறேன். அப்படியென்றால் என்னைத் தண்டிக்க அன்னை வருவாளா?'' என்றாள் கார்க்கி. ''எந்த ஒரு அரசும் தங்கள் உரிமையை இறைவல்லமையால் அளிக்கப்பட் டதும் மனிதர்களால் மீறப்பட இயலாததுமான ஒன்றாகவே குறிப்பிடுமென உணர்க.''

''பாண்டியன் குலம் கடல்கொண்ட தென்னாட்டில் பிறந்தது என்று அறிஞரும் சொல்வதுண்டு.''

''ஆம். இங்கேயே மலைகளில் வாழ்ந்த தொல்குடிகள் இன்று மேலும் மேலும் வடக்காகச் சென்று மேலும் அடர்ந்த காடுகளில் குடியேறிவிட்டார்கள். நூல்களையும் கதைகளையும்

கொண்டு நோக்குகையில் தென்நிலத்திலிருந்து பல குடிகள் கரையேறி வந்துள்ளன என்று எங்கள் ஆய்வறிஞர் சொல்வதுண்டு. முதலில் வந்த குலம் மலைக்குறிச் சிலையைத் தங்கள் தெய்வ அடையாளமாகக் கொண்டு கரையேறி இங்கே பரவிய பெயரறியாப் பெருங்குலம். அவர்கள் வழிபட்ட தெய்வமாகிய சிவம் இங்கெல்லாம் குவைக்கல் வடிவில் மண்ணுக்குள் புதைந்து நிறைந்துள்ளது. அவர்களைப்பற்றி இன்று ஏதும் அறிய இயல்வதில்லை. பின்பு ஆறுமுக வேந்தனைத் தலைவனாகக் கொண்ட குலம் ஒன்று. அவர்கள் இங்கு வாழ்ந்த மலைக்குறவர்களை வென்று பின் அவர்களுடன் மணம் கொண்டு இணைந்தனர். அதன் பிறகு ஆனை முகத்தானை முதல்வனாகக் கொண்ட குலம். அதன் பின் கொற்றவையை வணங்கும் தொல் எயினர். இறுதியாக வந்தவளே பாண்டியன்.''

''பாண்டியன் யார்?'' என்றாள் கார்க்கி அழுத்தமான குரலில். ''கானல் பறக்கும் இவ்வன்பாலை மண்ணில் மீனைத் தன் குலத்துக்கு இலச்சினையாகக் கொண்ட ஓர் அரசகுலம் எப்படி உருவாயிற்று? மீன்விழியன்னை எப்படி அவர்கள் இறைவடிவமாக ஆயிற்று? அவர்கள் தென்நிலத்திலெங்கோ வாழ்ந்த பண்டைய பரதவர் குலம். கடல் கொண்ட நிலம் விட்டுக் கரை தேர்ந்து இங்கு வந்து மதுரையை உருவாக்கினர். இங்கு வாழ்ந்த மக்களைவிடப் படையும் கல்வியும் சிறந்தவர் பாண்டியர். அவர்கள் வென்ற மக்களைத் தங்களுடன் மணம் கொள்ளச் செய்யவில்லை. அவர்களுக்குரிய நூலை ஆக்கியளித்தவன் திருணதூமாக்கினி. அவன் சொன்னபடி அவர்கள் வென்ற மக்களை உரிமைமக்களும் இழிசினருமாக மாற்றினர். அவர்களை விலங்குகள்போலக் கட்டித் தங்களுக்காக உழைக்கச் செய்தனர். அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டவற்றையெல்லாம் தங்கள் உடைமையாக்கினர். ஆகவே மதுரை வளர்ந்து வளர்ந்து பெருநகராயிற்று. மேலும் மேலும் கரையேறி வந்த மக்களுக்கு பாண்டியன் மலைநிலங்களை அளித்து அவற்றை அவர்கள் வென்றதும் தன் சிற்றரசர்களாக ஆக்கிக் கொண்டான்... அவ்வாறு பெருகியது பாண்டிய நாடு.''

''இங்கு சிறுமலை என்ற குன்று உள்ளது'' என்றாள் ஒரு பெண். ''அதன்மீதேறி நின்றால் நாம் மதுரையைக் காணலாம். மாபெரும் விலங்கொன்று வாய்திறந்து நிற்பதுபோல அதன் பெரும் கோட்டைவாசல். சாலைகள் அனைத்தும் அதில் சென்று மறைகின்றன. அச்சாலைகள் வழியாக நெல்லும் ஆடைகளும் காய்கனிகளும் ஏற்றிய வண்டிகள் சென்றபடியே உள்ளன. மதுரை எனும்

விலங்கின் பசியை அவை இரவுபகலாகத் தணிக்கின்றன. உலகையே உண்டாலும் அந்நெருப்பு அணைவதில்லை. ஆகவே அது விளிம்புநாடுகளைக் கவ்வி உண்கிறது. சேரர் நிலங்களையும் சோழர் நிலங்களையும் உண்கிறது. ஓநாய்கள்போல அவை பூசலிடு கின்றன. உதிரம் வழியச் சிவந்து கிடக்கிறது தமிழ் நிலம். அதை மானமென்றும் வீரமென்றும் பரணிபாடுகின்றன நூல்கள்.''

''எங்கிருந்து வந்தது இந்நகரின் குன்றாப்பெருவளமெனச் எண்ணியிருக்கிறாயா?'' கார்க்கி கேட்டாள். ''மலைகளில் நீ கண்ட எளிய குறக்குல மக்களின் உதிரம் ஊறி நிறையும் வாவியே மதுரை. அவர்கள் வயிறு ஒட்டும்போதுதான் இங்கே மாடங்கள் எழ இயலும். எங்கள் மெய்யறிவே இந்த உண்மையை மக்களுக்குச் சொல்கிறது. பாண்டியன் எங்களைப் புறஞ்சேரியில் சிறையிட்டால் எங்கள் மெய்யறிவும் தளையிடப்படுமென எண்ணுகிறான். இது நெருப்பு. தடைகளையே உணவாக்கி எரிப்பது...''

''ஐவகை நிலமும் கண்டு நீ வந்திருக்கிறாய். உன் பிள்ளைவிழி களினால் கண்டவையே உன் சொற்களில் எழுகின்றன. ஆயின் உன் ஆழத்து அன்னைவிழியால் கண்டவற்றை நான் முகத்தில் காண் கிறேன். வன்பாலைநிலமாளும் வெறிக்கொற்றவைச் சிலைகளின் நோக்கு உன்னில் கூடியுள்ளது'' என்றாள் கார்க்கி.

''ஆம் ஆம்'' என்றனர் பிற பெண்டிர்.

''மாமதுரை நோக்கிச்செல்லும் சாலைகளில் நீ ஈரியும் இறைஞ்சியும் அணிந்த மக்கள்கூட்டம் சிற்றிகுவை நிறைத்து ஒன்றாகித் தலைப்பெருக்காவதைக் கண்டிருப்பாய். சிற்றூர்களில் காட்டுக்கிழங்கு கெல்லியுண்டு நொய்ந்தழியும் குறவர், சேற்றுவயல் களில் எருமைகளுடன் வாழும் புலையர், காண்பவரெல்லாம் வெறுக்கும் களமர், உவர்நீர் உண்ணும் இரவர் நாள்தொறும் பெருகும் மழைக்காலப் பேராறென ஆகியிருக்கிறது மதுரை நெடும் பாதை. எங்கு செல்கின்றனர் இம்மக்கள்? அவர்களைக் கொன் றுண்ணும் மதுரை நகர் நோக்கியா? ஆம், அரத்துள் துயிலும் அரிமாவை இதோ கானுயிர்கள் தேடிச்செல்கின்றன. அதற்கான தருணம் ஒன்று வரும். இதோ அது வந்துவிட்டது. மதுரை இனியும் மதுரையாக நீடிக்க இயலாது. வந்துவிட்டது அத்தருணம்...'' அவள் கண்கள் கண்ணகியை நோக்கின. ''ஆம், என்னுள் மீண்டும் மீண்டும் அவ்வுள்ளுணர்வே சுடர்கிறது. நீ அனைத்தையும் அறி வாய். நீ அறியாத ஒன்றும் இல்லை.''

கண்ணகி அச்சொற்களைக் கேட்டுத் தன்னுள் தான் நோக்கிக் கிடந்தாள்.

கண்ணகி மாலை மயங்கியதும் கோவலனைத் தேடிச்சென்றாள். ஊர் மன்றில் பெருங்கூட்டமாகப் பாணரும் விறலியரும் பார்ப்பனப் பெண்டிரும் ஆடவரும் ஆடிக் கொண்டிருந்தனர். வண்ண உடைகள் சுழித்தன. அணிகள் மாலைமஞ்சளின் சுடர் விட்டன. முழவும் கொம்பும் சங்கும் மணியும் ஒலிக்கத் தாளம் அலையலையாக எழுந்தது. அக்கூட்டத்தில் கோவலனைக் காண்பதே அவளுக்கு இயல்வதாக இல்லை.

அவளைக் கண்டுவிட்டு ஒரு முதுபாணன் சென்று கோவலனை அழைத்தான். களிவெறியில் கண்சிவக்க கோவலன் அவளை உற்றுப்பார்த்துத் தள்ளி விட்டான். பாணன் மீண்டும் மீண்டும் அழைத்தான். கோவலன் தள்ளாடியபடி அவளை நோக்கி வந்தான். பழுத்த விழிகளால் நோக்கி ''என்ன? எதற்காக இங்கே வந்தாய்?'' என்றான்.

''நாம் மதுரைக்குச் செல்லவேண்டுமே.''

''நீ மதுரைக்குச் செல். நான் எங்கும் வருவதாக இல்லை. என் வாழ்க்கை இனி இங்குதான். நான் முடிவு செய்துவிட்டேன்'' என்றான் கோவலன்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் கண்ணகி அதிர்ச்சியுடன் அவனைக் கூர்ந்து நோக்கியவளாக.

மலர்மீது தள்ளாடும் வண்டுபோல அலைபாயும் கண்களுடன் கோவலன் ''நீ விரும்பினால் புகாருக்கே செல்க. எனக்கு எந்தத் தடையும் இல்லை. நான் எஞ்சிய வாழ்க்கையை இங்குதான் கழிப்பதாக உள்ளேன். இன்பம் ஒன்றே மெய்ப்பொருள். அதை நான் முன்னரே அறிவேன். ஏற்கத்தான் இவ்வளவு பிந்தி விட்டேன்...'' என்றபின் மீண்டும் நடந்து அந்த ஆடற்குழுவுக்குள் நுழைந்தான்.

ᘓ

மறுநாள் காலையில் கோவலன் குளித்துப் புத்தாடை அணிந்து கண்ணகி தங்கிய குடிலை அடைந்தான். அவள் விழிகளை ஏறிட்டு நோக்கக் கூசி விலகி நின்றபடி மெல்லிய குரலில் ''நாம் இன்று மதுரைக்குக் கிளம்புவோம்'' என்றான்.

''இந்தக் காலையிலா?'' என்றாள் கண்ணகி.

''ஆம். பாலை முடிந்து முல்லைநிலம் தொடங்கிவிட்டது. இனிப் புல்வெளிகள் மட்டுமே. நாளை இரவுக்குள் நாம் மதுரைப் புறஞ்சேரியை அடைந்துவிட முடியும்.''

''உடனே கிளம்புகிறேன்.''

''நான் நேற்று உன்னிடம் சொன்ன சொற்களைக் குறித்து வெட்குகிறேன். நீ என்னை வெறுத்திருக்கக்கூடும்.''

''நான் ஒருபோதும் உங்களை வெறுத்தது இல்லை.''

அவளுடைய அமைதியான முகத்தை நோக்கியபோது கோவலன் நெஞ்சுக்குள் அனல்சிவந்து அழல் எழுந்தது. அவன் திரும்பிக்கொண்டான். மறுகணம் அவன் தன்னிரக்கம் கொண்டு விழி நனைந்தான். ''நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. என் சிறிய தந்தை ஒருமுறை ஓநாய்க் குருளை ஒன்றைக் கொண்டுவந்து வளர்த்தார். நாய்கள் நடுவே நாயாக அது வளர்ந்தது. ஆனால் நிலவைக் கண்டால் அது காட்டை உணரத் தொடங்கிவிடும். பிறகு அதைக் கட்டுப்படுத்த இயலாது. ஒரு நிலவுநாளில் அது காட்டுக்கே ஓடியும்விட்டது'' என்றான் கோவலன் ''இசை கேட்கையில் நான் என்னை வேறு ஒருவனாக உணர்கிறேன். மண்ணில் உள்ள எதனுடனும் தொடர்பற்றவனாக.''

கண்ணகி ஒரு சொல்கூடப் பேசாமல் எழுந்தமை கோவலனைச் சினமும் பின்பு துயரமும் கொள்ளச் செய்தது. தன் நெஞ்சைச் சுமந்து அவன் முன்நடந்தான்.

அவர்கள் மூவரும் சாருவாகப் பார்ப்பனரிடம் விடை கொண்டு நடந்தனர். சாலையின் இருபக்கமும் மெல்லப் பசுமை

கொண்டு புல்வெளியாவதை கண்ணகி கண்டாள். நெடுமூச்சுடன் திரும்பி அவள் பாலைவிரிவை நோக்கினாள்.

''பாலை என்பது நீருக்குக் காத்திருக்கும் நுண் பெரும் காடு. ஒரு கொடுந்தவம்'' என்றாள் நீலி.

ஃ

5
முல்லை

குலக்கதை சொன்னது

அக்கரைப் பசுமையின் ஓயாத அழைப்பே முல்லை. கண்தொடும் எல்லைவரை விரிந்த பசுமை. காற்றும் பசும்நிறம் கொள்ளும் வெளி. வானின் ஒளி புல்நுனிகளில் பெய்து பால்மடுக்களின் கருணையாக நுரைக்கும் நிலம்.

கண்ணகியும் கோவலனும் கவுந்தியின் துணையுடன் மேடேறிப் பசுமை விரிந்த குறுங்காடும் புல்வெளிகளும் இருபுறமும் பரவிய பெருவழியில் நடந்தனர். கண்ணகி பெருமூச்செறிந்தாள். நீலி அவள் காதருகே ''ஆம், முல்லை என்பது ஒரு நீண்ட பெருமூச்சே'' என்றாள்.

கோவலன் கூறினாள் ''அன்னையே, நிலங்களுள் எனக்கு இனிதாகத் தோன்றுவது இதுவே. இது மிகவும் குறுகியது. இதன் மறு எல்லையில் மதுரை வாசல் திறந்து என்னை அழைக்கிறது.''

நீலி புன்னகை புரிந்ததைக் கண்ணகி கண்டாள்.

''இது மதுரை மாநகருக்குப் பாலும் தயிரும் அளிப்பதற்கென்றே காடுகளை அழித்து பாண்டியன் உருவாக்கிய முல்லை நிலம்'' என்றாள் கவுந்தி. ''இங்குள்ள புல்லெல்லாம் பாலாக மாறி மதுரைக்குச் செல்வதை இப்பெருவழியில் நடந்தால் காணலாம்.''

அவர்களைத் தாண்டிப் பலவிதமான வண்டிகள் சென்றன. சுமைகள் ஏற்றிப் பாயிட்டுக் கட்டி மூடிய வண்டிகள், அணி திரைவையங்கள், கொல்லாப் பண்டிகள், சுமை திகழ சாகாடுகள் முழங்கால் வரை தூசு பற்றிய நடைப்பயணிகள், கோலூன்றி வழிக்களைப்புத் தெரியாமலிருக்கப் பாண்டியன் புகழ்பாடும் பாடல்களை மாறி மாறிப் பாடியபடிச் சென்றனர்.

''வடதிசைக் கங்கையும் இமையமும் கொண்டு
தென்திசை ஆளும் தென்னவன் வாழி !
மீன்விழி அன்னை பேரருள் கொண்டு
தென்குமரி ஆளும் மன்னவன் வாழி!
கடல்கொள் நாடும் குடதிசைக் கோடும்

குடைக்கீழ் ஆளும் கொற்றவன் வாழி !''

''அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவணிகர்கள்'' என்றாள் கவுந்தி. ''பெருநகரங்கள் மக்களை ஈர்த்தபடியே உள்ளன. அங்கு எப்படியோ வாழ்ந்துவிடுவதற்கு வழி இருக்கிறது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். இரவலர்கள் பாவலர்கள் என இறையடி தேரும் எளியவர்போல மக்கள் கூட்டம் கூட்டமாக நகர் நோக்கி வருகிறார்கள். ஆனால் நகர் நீங்குபவர்கள் இப்படிப் பகலொளியில் நடப்பதில்லை. துயரம் கனத்த தலைகளுடன் கண்ணீர் நனைக்கும் மார்புகளுடன் அவர்கள் இரவின் அமைதியில் தனிமையாக நடந்து செல்கிறார்கள். வருபவர்களுக்கும் நீங்குபவர்களுக்கும் நடுவே துலாக்கோலென அசைகிறது இந்நகர்.''

கண்ணகி கண்களில் ஒளியுடன் முல்லைநிலத்தை நோக்கியபடி வந்தாள். நீலி அவளிடம் ''இந்நிலத்தை நீ நோக்க விழைகிறாயா?'' என்றாள். ''ஆம்'' என்றாள் கண்ணகி.

''ஆமெனில் நீ கொள்ளவேண்டிய விழி இன்று பிறந்த கன்றுக்கு உரியது'' நீலி உரைத்தாள்.

பசுமையில் அலைகள் ஏறி இறங்கிய வெளியில் துள்ளித் துள்ளிக் கண்ணகி சென்றாள். இளம்புல்மீது காலைப்பனித்துளிகள் வெயிலேற்று உலரும் நறுமணத்தை முகர்ந்தபடி புல்லோடு சேர்த்துச் சேற்றை மிதிக்கும் குளம்புகள் கலக்கிய மண்மணத்தால் கள்வெறி கொண்டவளாக ஓடினாள். குஞ்சல வால் சுழல மந்தைக் குளம்புகளின் தாளம் படையணி முரசென ஒலிக்க சரிவிறங்கிச் சென்றன. அவற்றுக்குமேல் காலையொளியில் கங்குத்துளிகள் போலச் சுடர்விட்டபடி சிறு பூச்சிகள் சுழன்று பறந்து தொடர்ந்து சென்றன. மிதிபட்ட புதுச்சாணி ஆவிபறக்கக் குழைந்துகிடக்க அதன் மீது மைனாக்கள் வண்ணத்தலைச்சுட்டிகளை அசைத்தசைத்துப் பேசியபடி பறந்தமர்ந்து கொத்தின. கழுத்துமணிகளின் சேர்ந்திசை ஒலிக்க பறவைக்குரல்கள் அதில் ஊடுகலந்தன. காவல்நாய்கள் முழவோசைபோலக் குரைத்தபடி மந்தைகளைச் சுற்றிச் சுற்றி ஒழுங்குசெய்தன.

விண்ணில் பறந்த இரு வல்லூறுகளின் நிழல் வெயிலில் வெளிறிய வெளிப்பசுமைமீது அடர்பசும் கறைபோல விழுந்து ஊர்ந்தது. குற்றிலைக்குறுமரம் செறிந்த இறும்புகளைச் சலசலக்க வைத்தபடி வந்த ஈரக்காற்று புல்வெளி மென்மயிர் உடலை அலையலையாக நிறமாற்றம் கொள்ளச்செய்தபடி வந்து மலர்மணத்துடன் தழுவிச்சென்றது. புல்வெளிமீது நின்ற ஒற்றை மருதமரத்தின் கிளையில் தன் பொக்கணத்தைத் தொங்கவிட்டபடி இடையன்

படுத்து கொன்றைப் பழம் செதுக்கிய குழலிசைத்தான். அவனைச் சுற்றிச் சிறு பூச்சிகள் ஒளியுடன் பறந்தன. அவன்மீது பழுத்த இலைகள் சுழன்று சுழன்று விழுந்தன. குழலிசை மெல்லிய மேகத் தீற்றல்போலக் காற்றில் பிரிந்து வடிவிழந்தும் அழியாமல் ததும்பி நின்றது.

அப்பால் இடையர் குடில்களின் முற்றத்தில் சிறுகுழந்தைகள் அரைமணி குலுங்கக் கூவி ஆர்த்து விளையாட, கூடவே நாய்க்குட்டி களும் சேர்த்து வாலாட்டி மென்குரலில் குரைத்துக் கால்பின்ன ஓடி விளையாடின. பைஞ்சேறு மெழுகிய திண்ணைகளில் ஆய்ச்சியர் கால்நீட்டி அமர்ந்து பெருங்கலயங்களில் நாட்டிய மத்தின் சரடை இரு கரங்களாலும் இழுத்துக் கடைந்தபோது சிங்கக்குட்டி சீறுவது போல ஒலியெழுந்தது. விளையாட விரும்பாத சில குழந்தைகள் வெண்ணைக்காகக் கைநீட்டி குட்டிப்பண்டி மடிய அமர்ந்திருந்தன. ஆய்ச்சி உள்ளங்கையில் வைத்த வெண்ணையை அவை நக்கி நக்கி உண்டன. சாணி நிறைந்த எருக்குழிகளில் இருந்து வெயிலேற ஏறத் தழை வீச்சத்துடன் புகை எழுந்தது. அதற்குள் இடையர் தங்கள் விழவுநாளுக்காக புதைத்திட்ட பானைகள் உள்ளே உவகையுடன் நுரைத்து நுரைத்து வெறி தேக்கின.

இடையர் குடில்கள் நடுவே மாயோன் மேவிய சிற்றாலயம் ஒன்றிருந்தது. சாணி மெழுகிய முற்றமும் மண் சுவர்களும் கொண்ட புற்குடில் அது. உள்ளே நீலவண்ணமேனியும் கார்குழலில் பீலியு மாக இதழ்சேர்த்த வேய்ங்குழலுடன் இசையில் ஆழ்ந்து நின்றி ருந்தது சுண்ணச்சுவரில் வரையப்பட்ட மாயோன் ஓவியம். அப்பால் இறும்பு தொடங்கி அடர்ந்தபடியே சென்றது. செந்நாய்ப் பாதத்தடங்கள் தெரிந்த ஊடுவழியின் மறுஎல்லையில் ஒரு பெரும்பாறைமீது இருந்தது கல்லில் குடையப்பட்ட சிறு ஆலயம். கானிடைச்சியம்மை என்று இடையர்கள் வணங்கிய மூதன்னை. அங்கே வருடத்துக்கு ஒருமுறை பெருங்கொடைநாளில் அன்றி அவர்கள் செல்வதில்லையாதலால் அமைதியும் அச்சமும் நிரம்பித் தனித்துக் கிடந்தது அப்பகுதி. கருவறைக்குள் அன்னையின் வலச்சிறு விரல் மணி அறியா விலங்கொன்றின் கண்போலச் சுடர்ந்து கொண்டிருந்தது.

பூசுஞ்சாணி மணம் நிறைந்த புழுதிப்பாதையில் கால்களை வைத்துக் கண்ணகியும் கோவலனும் நடக்க கவுந்தி பின் தொடர்ந்தாள். பெண்கொலை செய்த நன்னனின் கதையைக் கவுந்தி மெல்லிய குரலில் சொல்லக் கண்ணகி சிவந்த விழிகளும் கவிழ்ந்த தலையுமாகக் கேட்டு நடந்தாள். பின்பு அவர்கள் கால் தளர்ந்து ஒரு புங்கமர நிழலில் அமர்ந்தனர். புல்வெளியிலிருந்து இளங்காற்று வந்து கண்ணகியின் குழல்களை அசையச்செய்தது. தாய்க்கோழி இறகு சரிப்பதுபோலக் கண்ணகி இமை சரித்து துயில்கொள்ளத் தொடங்கினாள். கோவலன் கவுந்தியிடம் மெல்லிய குரலில் ''அன்னையே நான் நீர் முகந்து வருகிறேன்'' என்று சொல்லி நடந்தான்.

புல்வெளி இறங்கிச்சென்று தெளிந்த நீலச்சுனையொன்றை அடைந்தது. கன்றுகள் நீருண்ணாமலிருக்க இட்ட மூங்கில்வேலி யின்மீது இளவெண்முகைகள் அரும்பிய மாதவிக்கொடிகள் பந்தலிட்டிருந்தன. நீர்முகவையில் கோவலன் நீரள்ளக் குனிந்த போது அங்கு ஏற்கனவே நின்ற ஒரு மறையவன் தன்னைக் கூர்ந்து நோக்குவதை உணர்ந்தான். அப்பார்வையைத் தவிர்த்தபடி அவன் நீரள்ளி எழுந்தபோது மறையவன் ''மாதவி...'' என்றான்.

''மாதவியா?'' என்று கோவலன் தன்னையறியாமல் கேட்டு விட்டான்.

''மாதவிக்கொடியைச் சொன்னேன்'' என்றான் மறையவன். ''ஆனால் புகாரில் தலைக்கோலி மகள் மாதவியை நான் அறிவேன். தன் காதல்துணைவன் கோவலன் விட்டுப்பிரிந்தமையால் வேரற்ற மாதவிக்கொடிபோல அவள் வாடிச்சுருண்டு மெல்லக் கருகுவதை நான் கண்டேன்'' என்றான்.

கோவலன் கண்கள் கலங்கிவிட்டன. உதடுகளை அழுத்திய படி அவன் அமைதியாகத் திரும்பினான்.

''தாங்கள் கோவலனை அறிவீர்களோ?'' என்றான் மறை யவன்.

''ஆம்'' கோவலன் கம்மிய குரலில் சொன்னான்.

''தங்களைப் பார்த்தாலும் கோவலன்போன்றே உள்ளது. நான் கோவலனை முன்பு கண்டிருக்கிறேன். அவன் அப்போது செவ்வேள் எனப் பேரழகு கொண்டவனாக இருந்தான்...''

''ஆம், நான்தான் கோவலன்'' கோவலன் குரலை முடிந்த வரை அமைதியாக்கிச் சொன்னான் ''புகாரில் என் இல்லத்து நிலையைச் சொல்க.''

''ஆம், நான் எண்ணியது சரி. ஆனால் எனக்கு ஐயமிருந்தது'' என்றான் மறையவன். ''நான் உங்களைத் தேடி பல திசைகளுக்கும் கிளம்பிய சிலரில் ஒருவன். நாடுவிட்டு நாடு சென்று தேட மறையவர்களும் காடுகளில் தேட மறவரும் அனுப்பப்பட்டனர். நான் மதுரையில் தேட வந்தவன்... நாம் சற்று அமரலாமா?'' என்றான் மறையவன்.

அமர்ந்ததும் கோவலன் ''என் அன்னை எப்படி இருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''பெருவணிகன் மாசாத்துவான் இல்லத்தில் இப்போது நண்பகலிலும் காரிருளே நிறைந்துள்ளது. மாநாய்கன் இல்லத்தின்மீது தெய்வங்களின் பழிச்சொல் விழுந்துவிட்டது போலுள்ளது. அன்னையர் இருவரும் நீவிர் புகார் நீங்கிய நாளுக்குப் பின்னர் மஞ்சம்விட்டு எழுந்தவரல்லர். அழுதழுது அவர்கள் தங்கள் உள்ளத்துச் சொற்களையும் கண்களின் வெய்யநீரையும் இறுதிவரை இழந்தனர். இன்று அவர்களிடம் எஞ்சியிருப்பது உங்கள் இளமைப் பருவத்து தோற்றங்களினாலான கனவுகள் மட்டுமே...''

கோவலன் கண்ணீர் உகுத்துத் தலைகவிழ்ந்து அமர்ந்திருந்தான்.

''புகாரில் உங்கள் உறவினரே நிறைந்திருக்கிறார்கள். மாளாப் பெருஞ்செல்வம் இன்னும் உங்கள் பெற்றோரிடம் உள்ளது. நீங்கள் ஏன் புகாரிலேயே வணிகம் செய்திருக்கக்கூடாது?'' கோசிகக் குலத்து மறையவன் கேட்டான்.

''இன்பத்துக்காகவும் அறத்துக்காகவும் ஈட்டப்படுவதே பொருள் என நூலோர் வகுத்துள்ளமை நீர் அறிந்ததே'' கோவலன் சொன்னான். ''என் பெற்றோர் தங்கள் இல்லறத்துக்காக ஒதுக்கிய பங்கை நான் பெற்றுச் செலவிட்டுவிட்டேன். அவர்களிடம் உள்ளது அவர்கள் மறுமையறத்துக்காக மிச்சம் வைத்துள்ள செல்வம். அதைப் பெற்றுச் செலவிட்டு அவர்களை இருளில் ஆழ்த்த எனக்கு உரிமையில்லை. எனக்கென நான் பெற்ற செல்வத்தில் எஞ்சியதை

விதையாக நட்டு மரமாக்கி வளர்ப்பதே நான் செய்யக்கூடுவது'' என்றான் கோவலன். ''மறையவனே, என் ஊழ்வினையை நான் சுமந்தேயாக வேண்டும். என் கற்பரசியோடு இப்பாலையில் கால் வேக நடந்து யாருமற்றவனாக மதுரைக்குச் செல்வது என் ஊழ் என்றால் அதை எவர் தடுக்க இயலும்?''

கோசிக மறையவன் மெல்லிய குரலில் ''ஆம். ஒருவரின் ஊழ் பிறரையும் பிடித்தாட்டுகிறது. நீங்கள் புகாரைப் பிரிந்த நாள்முதல் மாதவி விழிநீர் ஓயவில்லை...'' என்றான். ''அவள் தங்களுக்கு ஓர் ஓலை தந்தனுப்பியுள்ளாள். தாங்கள் விரும்பினால் அதை நான் அளிப்பேன்.''

நடுங்கும் கைகளைக் கோவலன் நீட்ட உலரவைக்கப்பட்ட தாழைமலர் மடலில் மையால் வரையப்பட்ட கடிதத்தைக் கோசிகன் நீட்டினான். அதைத் தன் கையில் வாங்கியகணம் கோவலன் நெஞ்சில் புதுப்புனல் காவிரி பொங்கிச் சுழித்தது. அவள் கூந்தலின் தாழம்பூமணம் அவன் எண்ணங்களையெல்லாம் பொன்னொளி கொண்டு சுடரச்செய்தது. அலையலையாகப் புரண்ட எண்ணங்களுடன் கையில் சுவடியுடன் அதைப் பார்க்காமல் அகம் நோக்கி விழித்த கண்களுடன் அவன் அமர்ந்திருந்தான். பின்பு கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைக்கவும் முயலாமல் அதன் மீதிருந்த அவள் முத்தணி இலச்சினையை விரல்களால் தடவினான். அகம் விம்ம உடைத்து அதைப் படித்தான்.

அவன் எதிர்பார்த்த வரிகளே அதில் இருந்தன. மாதவி கண்ணீருடன் தன் பிழை யாதெனக் கேட்டிருந்தாள். அப்படித்தான் பிழை செய்திருந்தாலும்கூட இரு பெரும் முதியவருக்கும் குல மகளுக்கும் தண்டனை விதிக்கக் கோவலன் துணியலாமா என்று வாதிட்டிருந்தாள். மீண்டும் மீண்டும் அச்சொற்களைப் படித்தான். முதலில் சிலமுறை அவனால் அவற்றின் பொருளை உள்வாங்க இயலவில்லை. பிறகு தன்னுள் ஓடிய எண்ணங்களையே அச்சுவடியில் படித்தான்.

''நான் என்ன சொல்வது?'' என்று மறையவன் கேட்டான்.

''எல்லாம் என் பிழை. மாதவிமீது எப்பிழையும் இல்லை. என் ஆணவமும் தன்னலமும் அறியாமையுமே அனைத்துக்கும் ஊற்று...'' என்றான் கோவலன். ''நான் இவ்வாறு சொன்னதாக அவளிடம் சொல்லுக மறையவனே. என் நெஞ்சில் இப்போது என் மனையாட்டி கண்ணகிக்கு நிகரான புரைதீர்ந்த கற்பரசியாகவே மாதவியைக் காண்கிறேன். இப்பிறப்பில் நான் அவள் கொழுநன். மறுமையில் என் தீவினைப் பயனாக நான் எளிய உயிராகவும்

அவள் தன் பெருங்கற்பினால் தெய்வமாகவும் ஆகும்போது அவள் கழலிணைகளைத் தேடிவந்து வணங்கிக் கண்ணீர் உகுத்து நான் அவளுக்கு ஆற்றிய பிழைகளைப் பொறுக்குமாறு கேட்டு என் கடன் தீர்ப்பேன்...''

''அவ்வாறே ஆகுக'' என்றான் கோசிகன்.

ஓ

கோவலன் மீண்டு வந்து கண்ணகியை எழுப்பி நீரை அளித்தான். அவள் அதைக் கையில் வாங்கியபின் அவன் முகத்தை உற்று நோக்கி ''புகாரிலிருந்து சேதி ஏதும் வந்ததா?'' என்றாள்

கோவலன் அகம் அதிர அவளை நோக்கினான். அவள் மெல்லிய புன்னகையுடன் ''மாதவியின் மடல்?'' என்றாள்.

கோவலன் ''எப்படி அறிந்தாய்?'' என்றான்.

''உங்கள் விழிகள் கலங்கி முகம் சிவந்துள்ளது. நீர்க் குடுவையில் செம்பஞ்சுக்குழம்பும் தாழம்பூவும் மணக்கின்றன.''

''நீ புகார்விட்டு வந்த கண்ணகியே அல்ல இப்போது.''

''ஆம். நீண்ட தூரம் வந்துவிட்டேன்'' என்றாள் கண்ணகி.

கோவலன் அகம் நடுக்குற்றது. அவ்வச்சத்தைத் தன்னிட மிருந்தே மறைப்பவனாக ''நம் அன்னையர் இன்னும் மஞ்சம் விட்டெழவில்லை. இல்லங்களில் இருளே சூழ்ந்து கிடக்கிறது. ஆறாக் கண்ணீருடன் நம்மைத் தேடுகிறார்கள்'' என்றான்.

''ஆம். அவர்களின் ஊழ்வினை அது'' எவ்வித உணர்ச்சி யுமிலா முகத்துடன் கண்ணகி சொல்வதைக் கேட்டு மேலும் அச்ச முற்றான் கோவலன்.

தன் குரலை மீண்டும் கண்டடைந்தவனாக ''செய்தி கொண்டு வந்த கோசிகமாணி என்னும் மறையவனிடம் அவர்களுக்கு நம் நலம் குறித்த சேதி சொல்லி அனுப்பினேன்...'' என்று தயங்கி ''மாதவியின் மடல் கண்டேன்'' என்றான். உடனே அவன் உள்ளம் கூர்மை அடைந்தது. கண்ணகியை அவளிருக்கும் இறுகிய கற் சிலைக்கு உள்ளிருந்து வெளிக்கொணர விழைந்தான். ''மாதவியின் முடங்கல் என்னை நெகிழச் செய்துவிட்டது. அவள் மாசில்லாக் கற்பினள் என்று அறிந்தேன். நான் அவளை உனக்கு நிகரானவளாக எண்ணுவதாக அவளுக்குச் செய்தியனுப்பினேன்'' என்றான்.

''ஆம். அது உண்மை. அவள் நானாக மாறவே விழைந்தாள்.

என்னையே எண்ணிக்கொண்டிருந்தாள். அச்சொல் அவளை ஆறுதல்படுத்தும்'' என்றாள் கண்ணகி அதே கல்முகத்துடன்.

கோவலன் ஏமாற்றத்துடன் அவளைவிட்டுத் தன் நோக்கைத் திருப்பிக்கொண்டான் ''அவளை நான் பிழையாக எண்ணி விட்டேன்'' என்றான்.

''இல்லை. காதலியின் கற்பைப்பற்றி உள்ளூர அறியாத காதலர் உண்டா என்ன? அவளை நீங்கள் எப்போதும் அறிவீர்கள். அவளே குலமரபு கிளத்தும் பெருங்கற்புள்ளவள். தெய்வம் தொழாது கொழுநனைத் தொழுதெழுந்தவள். ஆதிமந்தியின் வழிவந்தவள்...''

''நீ?'' என்றான் கோவலன் சினத்துடன் கண்களைச் சுருக்கிய படி

''நானறிந்த தெய்வங்களே வேறு'' என்று சொல்லும்போது கண்ணகியின் முகத்தில் தழலாட்டம் தெரிந்து மறைந்தது. கோவலன் மீண்டும் அந்த அச்சத்துக்கு ஆளானான்.

''ஆம், நான் அவளை வதைப்பதற்கும் அடிப்படுத்துவதற்கும் உரிய படைக்கருவியாகவே அவள் பிறப்பையும் அவள்மீதான ஐயத்தையும் கையாண்டேன். அக்கலங்களால் அவளை அடித்து ஒடுக்கி முழுமையாக வென்றேன். இம்முடங்கலில் உள்ள ஒவ்வொரு வரியும் எவ்வாறு இருக்குமென நான் அறிவேன். என் உளக் கூத்தில் அவள் தோன்றி அதை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தாள்...'' என்றான் கோவலன்.

''தோற்றவர் வெல்வது உறவின் இயல்பு'' என்றாள் கண்ணகி. ''அவள் வென்றுவிட்டாள். அவள் தேடியதை அவள் அடைந்துவிட்டாள்...''

''எதை?''

கண்ணகி புன்னகை பூத்தாள். ''அவள் கருவில் உருவாகிய மகவிற்கு உங்கள் சான்றுமொழி தேவை. அதை உங்கள் நாவால் நீங்கள் மன்ற மறையவனுக்குச் சொல்லிவிட்டீர்கள்.''

கோவலன் எழுந்து விட்டான். ''நீ எப்படி அறிவாய்?'' என்று கேட்டு மறுகணமே கண்ணகி எப்படியோ அனைத்தையும் அறிகிறாள் என்று உணர்ந்தான். ''ஆம், மணிமேகலையை நான் என் மடிமீது வைத்துப் பெயரிட்டேன்...''

''ஆம். மேகலை பூண்ட கணிகையர் ஆயிரம் கூடி வணங்க பொன்னும் பொருளும் மறையவர்க்கும் பாணர்க்கும் அளித்துப் பெயரிட்டனர். ஆனால் மாதவிமீது பழியுடன் நீங்கள் அவளை

நீங்கினால் அவள் மகளுக்கே அப்பழி சென்றுசேரும். இப்போது அது நீங்கியது. அவளுக்கு இனி நீங்கள் பொருட்டல்ல. அவள் தன் கொழுநனுக்காக நோன்பு நோற்பாள். உடலும் உள்ளும் மெலிந்து இறப்பாள். அவன் நினைவாகத் தன் மகவை உலகு முன் நிறுத்துவாள்...'' கண்ணகி எழுந்துகொண்டாள். ''எளிய பெண். துயரமும் இழிவும் அடைந்த பெண். அவள் நெஞ்சின் அனல் அவிய இவை போதாது. ஆயினும் அவள் இப்போது அமைதி கொள்ளக் கூடும். அவளுக்கு அனைத்து நலன்களும் கூடுக!''

கருவறைத் தெய்வமொன்றின் அருள்போலிருந்தன அச் சொற்கள். கோவலனுக்கு அப்புல்வெளியின் அறியாத மூலையொன்றைத் தேடிச்சென்று தன் நெஞ்சிலிருந்து அனைத்து சொற்களும் உருகிவழியும்படி அழவேண்டும் போலிருந்தது.

பசும்புல் பரவிய மருதப் பாதையினூடாகக் கண்ணகியும் கோவலனும் கவுந்தி பின்தொடர நடந்து அன்று மாலை ஆயர் கூடி வாழும் சிறுகுடியொன்றைச் சேர்ந்தனர். ஊருக்கு வெளியே மூங்கில் படல்களால் வளைக்கப்பட்ட பட்டியில் மாடுகள் காட்டுப் பொய்கைக்குச் சுனைநீர் ஊறிச்சேர்வதுபோல நான்கு திசைகளிலிருந்தும் வந்துகொண்டிருந்தன. அவற்றின் குளம்படியொலியும் செவியடிக்கும் ஒலியும் மூச்சுகளும் சேர்ந்து பெருகி முழக்கமாயின. பட்டிகளின் முன்னால் நாய்கள் ஓடிக் குரைத்து பசுக்களை ஒன்று சேர்த்தன. ஆநிலை நிறைந்ததும் நான்கு பக்கமும் பெரிய மரங்கள் மீது கட்டப்பட்ட காவல் இதண்களில் பெரிய தோல்முழவுகளும் எண்ணெய் ஊற்றி உருட்டிய பந்தங்களும் வில்லும் அம்புமாகக் காவல் ஆயர்கள் ஏறிக்கொண்டனர். பட்டிப்படல்கள் மூடியபின் நாய்கள் அவற்றைச் சுற்றும் முகர்ந்தபடி நடந்து காவல் காத்தன.

மையான் கட்டும் இடங்கணியும் ஊண்சமைக்கும் இடைக்கலமும் ஏந்தி நடந்த ஆயர் சிலர், ஆநிரை நடந்து வரைந்த இடவையில் மெய்யில் பொடிசேர கால்கள் சோர நடந்த மூவரையும் கண்டு அருகே வந்து அவர்கள் யாரெனக் கேட்டனர். ''இசைமைசூழ் பெருங்குடியினர். இவளோ காண்போர் கவரும் அழகுடையாள். இவ்வேளை புல்விரி மருதத்தில் நடப்பது உவப்பதல்ல. பண்டிகளில் ஊர்ந்து பெண்களைக் கவர்ந்து வடவணிகருக்கு விற்கும் படைசூழ் மறவர் அலைவதை அறியீரோ?'' என்றனர்.

சினம் கொண்ட கண்களை விழித்து ''இப்பாண்டிய நாட்டில் மன்னன் கோல் அழிந்ததோ?'' என்றாள் கவுந்தி. ''அன்னையே, அவ்வினாவைக்கேட்க நுதல்விழி எரிய பிடரி பறக்க கலைமான் ஊர்ந்து சிலைவல் கொற்றவை எழுதல்வேண்டும்'' என்றார் உமல் சுமந்த மூதாயர்.

ஆயர்கள் ஊர் திரும்புகையில் அவர்களுடன் சேர்ந்து மூவரும் நடந்தனர். தங்கள் வழிநடைச் சேதியைக் கோவலன் அவர்களுக்குச் சொன்னான். ஆயர்குல மூதாட்டி ஒருத்தி கண்ணகியைத் தோள்

தொட்டு அணைத்துத் தங்கள் ஊருக்குள் கொண்டுசென்றாள். முருக்குமரங்கள் நட்டு வேலியிட்டுச் சுற்றிக்கட்டிய ஆயர்குடிக்குள் பாலும் ஆதிரமும் மோரும் விற்று மீண்ட ஆய்ச்சியர் உலையேற்றி உணவு சமைத்துக் கொண்டிருந்தனர். வெயிலில் உருகிய நெய்யின் மடித்த மணம் கொண்ட பைஞ்சேறு மெழுகிய திண்ணைகளில் குழந்தைகளும் சிறுமியரும் தாயம் விளையாடிக் கொண்டிருந்தனர். விருந்தினரைக் கண்டதும் அவர்கள் எழுந்தோடி வந்து சூழ்ந்து கொண்டனர். ஊர்த்தலைவன் வந்து அவர்களை அழைத்துச் சென்றான். கவுந்தி ஊருக்குப் புறத்தே அருகருக்கு அமைத்த சிறுமன்றில் அமைந்தாள்.

கண்ணகியை அழைத்துச்சென்ற இடைச்சியின் வீட்டில் சாணி மெழுகிய சுவர்கள் கொண்ட அறைக்குள் ஆதிரவிளக்கு மணம் பரப்பி எரிந்தது. அறைமூலைகள் எங்கும் அடுக்கு உறிகளில் கலயங்கள் தொங்கிக் கிடந்தன. பகலெல்லாம் சீறி உருண்ட மத்து தன் சாட்டையுடன் ஒய்ந்து கிடந்தது. கண்ணகி அவர்கள் வீட்டுக் கொல்லைப்பக்கம் கிணற்றிலேயே குளித்து உடைமாற்றிக் கொண்டாள். பாற்கஞ்சியும் பருப்புக்கீரைத் துவையலும் அருந்தி ஓய்வெடுத்தாள். புகாரின் சேதி கேட்க ஊர்ப்பெண்டிர் அவளைச் சுற்றிக் கூடினர். அவள் அடைந்த துயரங்களைக் கேட்டு நிழல்கள் ஆடிய அச்சிற்றறைக்குள் அவர்கள் கண்ணீரும் நெடுமூச்சுமாக உடல் குறுக்கி அமர்ந்திருந்தனர்.

இரவில் ஊர் நடுவே முழவு அதிர்ந்ததும் அவர்கள் மாயோள் ஆலயத்து முகப்பில் சேர்ந்தனர். இளம் இடையன் ஒருவன் வேய்ங்குழலில் மனம் மயக்கும் இசையை வாசித்தான். அனைவரும் சூழ்ந்தமர்ந்து அதைக் கேட்டனர். ஏழு இளம் இடைச்சியர் எழுந்து சிறு மணிக்கோல்களை மெல்லத் தட்டியபடி வளையமிட்டனர். கோவலன் கண்ணகியிடம் குனிந்து குரவைக்கூத்து அது என்றான். அவ்வெழுவருக்கும் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்று ஏழு பண்நிலை நரம்புகள் பொருந்தும் என்றும் அவர்களின் அசைவினூடாகக் கண்ணால் காணப்படும் இசை யொன்றும் அங்கு நிகழும் என்றும் சொன்னான்.

குரல் நரம்பாக இருந்தவள் தனக்குரியவன் மாயவன் என்றாள். இளி என்று நின்றவள் பலராமன் என்றாள். துத்தம் சூடிய வள் தன்னை நப்பின்னை என்று காட்டினாள். பிற நால்வரும் ஆய மகளிர் தாங்கள் என்றனர். நாடக மாந்தர் அமைந்ததும் அவர்கள் மலர்க்கொடி காற்றைச் சூடுவதுபோல அசைந்து ஆடியபடி பிரிந்து இணைந்தனர். மாயவன் பின் நப்பின்னை சென்று நின்றாள்.

அவள் பின் தாரம் நின்றாள். பலராமன் பின்னால் உழையும் விளரியும் நின்றனர். கைக்கிளை பின்னைக்கு இடம் சேர்த்த தோழி யானாள். முத்தைக்கு வலப்பக்கத்தில் விளரி நின்றாள்.

கூடியமர்ந்த ஆய்ச்சியர் குரலெழுப்பிக் குரவையிட மணியும் முழவும் தாளமாக அமைய இடம்சேர்த்த தோழி மெல்ல வழிகாட்ட நாணத்தால் ஒசிந்த இடையும் குனிந்த தலையுமாக நடந்த நப்பின்னை பசும்அலங்கை மாலையை மாயவன் கழுத்திலணி வித்தாள். ஆயர்மகளிர் மகிழ்ச்சிக் குரலெழுப்பினர். மாயனும் பின்னையும் மார்புறத்தழுவி ஆட, ஆயர் மகளிரும் ஆநிரைகளும் ஆட, கருநீர்ஆறும் நறுமணச் சோலையும் கூடவே சேர்ந்து ஆட, ஒலியிலும் அசைவிலுமாக முல்லைத்தீம்பாணி பிறந்து முழுமை பெற்றது.

கோவலனின் உடலிலும் கண்களிலும் முல்லைத்தீம்பாணி யின் அலைகள் எழுவதைக் கண்ணகி ஓரக்கண்ணால் நோக்கினாள். அவன் மலர்ச்சோலையில் புகுந்து மாயவனாக ஆடிக்கொண்டி ருப்பதை உணர்ந்தாள். அதன் பிறகு அவள் கூத்தை நோக்கவில்லை. அவள் அகக்கண்களுக்கு முன் ஆழமே அதுவான நீர்வெளியே தெரிந்தது. அதன்மீது விரிந்த கருமையே தன் அகமானவனின் தொல்முகம். மால் என்று பெயர்கொண்டு கருமையும் மலையும் முகிலும் ஆனவன். 'எல்லாப் பெயர்களும் பெயரற்றவனின் பெயர்களே' என்று எங்கோ கேட்ட பழம்பாடல் வரிகளை அவள் சொல்லிக்கொண்டாள்.

ஓ

வால் சுழல மந்தைகள் மேயும் வெயில் விரிந்த புல்வெளி நடுவே ஒரு கடம்ப மரம் உள்ளது. அதன் கீழ் சிறிய கல்வடிவில் குடிகொள்பவளை இடைச்சியர் நப்பின்னை என்றழைத்தனர். தொலைவில் ஏதோ குழலிசை கேட்கையில் அவள்மீது கடம்ப மலர்கள் காற்றில் உதிரும் என்றனர். இடையர் குலத்தலைவன் மகளாகப் பிறந்தவள் தன் ஏழு வயதில் தனித்து ஆநிரை மேய்க்கச் சென்றபோது அக்கடம்ப மரத்தடியில் நிழலுக்காக வந்து நின்றாள். தொலைவில் மனம் மயக்கும் குழலிசையைக் கேட்டாள். கைக்குழந்தையின் குழற்சுருள்கள் போன்று காற்றில் அலையும் இசை. மென்புகைபோல வானில் கரையும் இசை. நறுமணம் போலத் திசைகளில் பரவும் இன்னிசை. அதன் பின் அவள் னெமும் அங்கே சென்று நின்றாள். அக்குழலிசையைத் தன் அகத்தால் அள்ளி அள்ளி நிறைத்துக்கொண்டாள். அவள் அகவிழிகளும் புறவிழிகளும் அவனுக்காகத் தேடின. அத்தேடல் முதிர்ந்த ஒரு நாளில் அவன் வந்தான்.

கார் போன்ற உடலில் கொன்றைப் பொன்மஞ்சள் ஆடை சுற்றி, சுருள்குழல்மீது நீலப்பீலி சூடி, முகிலில் இளவெயில் கசிவது போன்ற புன்னகையுடன் வந்து அவளிடம் பேசினான். அவன் பேசக்கூடுமென்று அவள் அகம் அறிந்திருந்த அனைத்தையும் அவன் பேசினான். அவள் அடையக்கூடுமென்று அவள் அகம் அறிந்திருந்த அனைத்தையும் செய்தான். அவர்கள் அப்புல்வெளிக்கு அப்பால், நீலவானம் சந்திக்கும் கோட்டுக்கு அப்பால், செம்பொன் கொந் தளிக்கும் பெருங்கடலுக்கும் அப்பால் உள்ள ஓர் உலகுக்குச் சென்றனர். அதற்குக் கோவுலகம் என்று பெயர். அங்கே அவர் களன்றி மாந்தர்களே இல்லை. பேரழகு நிறைந்த பசுக்கள் மட்டும் வாழும் உலகம் அது. அதிகாலை சுமனை என்னும் சாம்பல் நிறப் பசுக்களாக இருந்தது அங்கு. காலை செந்நிறமான கமலைப் பசுக் களாக விடிந்தது. பகல் வெண்ணிறமான சுரபி எனும் பசுக்கள். அவை வெண்ணிற அமுதம் சுரந்து அந்நிலத்தைப் புரந்தன. மஞ்சள்

நிறம் கொண்ட மாலை அழகிய நந்தைப் பசுக்களாகவும் இருண்டு அடங்கும் இரவு கருநிறமான பத்திரைப் பசுக்களாகவும் இருந்தது. தவத்திலேயே கருவுற்று எண்ணத்திலேயே பால் சொரியும் அன்னையராக இருந்தன அவை.

ஒருநாள் அவ்வுலகில் உலவுகையில் அவன் அவளை 'இருள் கவிகிறது. வீடு திரும்புவோம் வா' என்றழைத்தான். அவ்வுலகம் விட்டுவர அவள் மனம் ஒப்பவில்லை. இன்னும் இன்னும் என அவள் அகம் கன்றெனத் தாவியது. அவன் அவளை விட்டுவிட்டுச் சென்றதை அறிந்தபோது இருளில் தனியாக இருந்தாள். அங்கிருந்து அவள் மீண்டு வந்து அக்கடம்ப மரத்தடியில் நின்றாள். கடம்ப மலர்கள் உதிரும் ஒலியை இரவெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள்.

காலையில் அவளைக் கண்டவர்கள் அவள் தெய்வமானாள் என்றனர். கடம்ப மலர்மனம் கொண்ட ஒரு கல்லாக மாறி அங்கே கிடந்தாள் அவள். அவளைப் புணர்ந்து சென்ற காதலன் மீளவில்லை. அவனை எண்ணி அவள் காத்து நின்றாள். புல்வெளியில் இளவேனில் வந்து வந்து மீண்டது. தலைமுறைகள் பிறந்திறந்து மறைந்தன. அவள் அவன் குழலோசைக்காக நின்றாள்.

பின்பொரு நாள் அவன் அவளைத் தேடி வந்தான். சென்ற காலங்கள் அவன்மீது சுமையாக ஏறிப்படர்ந்திருந்தன. மூப்பின் தளர்வுடன் அம்மரத்தடியில் அவன் ஒதுங்கியபோது அவள் கடம்ப மலர் நிழலில் அன்று பூத்தவள்போல நின்றிருந்தாள். நான் நப்பின்னை என்றாள். நான் உன் காதலன் என்று சொல்ல அவனால் கூடவில்லை. காதல் கொண்டு காத்திருப்பவர்களுக்குக் காலமே இல்லை என்பதை அவன் உணர்ந்தான். எழுந்து தன் ஊழிச் சுமையுடன் நிழல்மீது ஊர்ந்து சென்றான்.

ஓ

விடியலில் கண்விழித்து நறுஞ்சுனை நீராடி ஆயர் மகளிர் கோர்த்து அளித்த முல்லை மலர்மாலையைத் தன் கருங்குழலில் சூடிக் கோவலன் கை பற்றிக் கண்ணகி கிளம்பினாள். கவுந்தியும் ஆயர் குலம் நலம் பெற வாழ்த்தி உடன் நடந்தாள். அவர்கள் புல்வெளி நடுவே செந்நிற மேலாடை விழுந்ததுபோலக் கிடந்த சாலையில் நடந்து சென்று ஒரு பசும் அலையேறி மேலே நின்று நோக்கியபோது நீர்மீது எழுந்து வரும் பெரும்கலம் போன்று மதுரை மூதூரின் பேரெயில் வாயிலைக் கண்டனர். காமுறு தெய்வத்தைக் கண்முன் கண்டவன்போலக் கோவலன் மகிழ்ந்து கண்ணீர் மல்கிக் கைகுவித்தான்.

''ஆம், அது மதுரை'' என்று கோவலன் நெடுமூச்செறிந்தான். ''என் ஊழ் என்னை கொண்டுசேர்க்கும் புள்ளி. அங்கு எனக்காகக் காத்திருப்பதென்ன?'' கண்ணகியின் முகம் நோக்கியவன் துணுக்குற்று ''கண்ணகி ஏன் நகைக்கிறாய்?'' என்றான்.

''அது நான் இதுவரை காணாப் பேரூர்'' என்றாள் கண்ணகி. அம்மழலைக்குரல் கேட்டுக் கோவலன் மேலும் நெடுமூச்சு விட்டான். ''ஆம், உனக்கு புதுமை வியப்பு... ஆனால்'' அவன் மேலும் பேசாமல் முன்னடந்தான். அவன் பின் இருவர் விழிகளும் இரு வாள்நுனிகள் சந்திப்பதுபோல உரசிக்கொள்ள நீலியும் கண்ணகியும் நடந்தனர்.

அருகே எழுந்துவரும்தோறும் பெருவாயில் அகன்று உயர்ந்து திசையை மூடியது. அதன் திறந்த வாசலுக்குள் சகடங்கள் நெருப்புத் தெறிக்க உரசும் வையங்களும் வண்டிகளும் அவற்றை இழுக்கும் தசை தெறிக்கும் காளைகளும் சுமைமீது அசையும் வணிகர்களும் சென்று மறைந்தனர். புற்றுக்குள் இருந்துவரும் ஈசல்கள்போல மனிதக்கூட்டம் வெளிவந்தது.

கந்தல் அணிந்து கைப்படை கொண்டு தன்னருகே நடக்கும் ஒருவனிடம் ''அது மதுரைப் பெருவாயில் அல்லவா?'' என்றான் கோவலன். ''ஆம். அவ்வாயில் தினமும் பல்லாயிரம் மனிதர்களை

உண்கிறது. பல்லாயிரம் மனிதர்களை உமிழ்கிறது'' என்றான் அவன். நெடுமூச்சுடன் ''உங்களுக்கு உங்கள் ஊழ் எதை வைத்திருக் கிறதென யாரறிவார்? கட்டியணைக்கும் கைகளா? பட்டுச் சால்வைக்குள் குறுவாளா?'' அவன் ஒரு பித்தனாக இருக்க வேண்டும். விழித்துப் பார்த்தான். பின் கண்களில் ஊறிய சிரிப்புடன் ''சென்று சேருங்கள்'' என்றான் தன் நரைத்தாடியில் வியர்வை மின்ன. பின்னும் ஏதோ பேசவந்தவன் தயங்கி நடை தொடர்ந்தான்.

இளவெயில் எழும் வேளையில் அவர்கள் மதுரைப் பெரு வழியில் மிகத்தொலைவு சென்றிருந்தனர். சகடங்கள் எழுப்பும் செம்புழுதிப் புகைக்கு அப்பால் அரவணி அய்யனின் மாபெரும் ஆலயத்தின் இட்டிகை விமானம் எழுந்து தெரிந்தது. அப்பால் ஆழியானின் ஆலயச் சுதைவெண்முகடு. அவற்றுக்கும் அப்பால் தெரிந்த வெண்மாட மருப்பு மன்னனின் அரண்மனை என்றனர் வழிநடையர். நாள்முரசு இரண்டாம் அமையத்தின் தொடக்கத்தை உறுமி அறிவித்தது. தென்னாடுடையோன் ஆலயத்தின் பெரும் வெண்கல மணி நாவதிர்ந்தது. அதன் முழக்கம் அலையுடை யோனின் ஆலயத்து மணியிசையுடன் இணைந்தது. அந்தணர் எழுப்பும் அவிப்புகை வான் தொடும் வெண்மாடம் என எழுந்தது. மன்னனின் நாளணிப்படை செம்பாலான மெய்யரணங்களும் பிறைநிலாப்போன்ற வாட்களும் வெயிலில் சுடர கோட்டைமீதேறி அணிவகுத்தனர். நாளணிக் கருவிகள் மங்கல ஒலியெழுப்பி அதிர காற்றுச் சுழற்றும் தாழைக் கூட்டம்போல அவர்கள் வாட்களை மேலேற்றி ''மீன்விழி அறமும் தென்னவன் மறமும் வாழிய நீடூழி'' என்று வாழ்த்திக் குரலெழுப்பினர். அக்குரலுடன் இணைந்து, துயிலெழுந்த மாபெரும் விலங்குபோல மதுரையும் அச்சொற்களை உறுமியது.

சாலையின் இருமருங்கும் அடிபருத்த வேங்கையும் கோங்கும் செறிந்த மிளைக்குள் யானைப்பந்திகள் இருப்பதை அவர்கள் கண்டனர். பழகிய யானைகள் கூட்டம் கூட்டமாக துதிக்கை மரக்கிளைகளைத் துழாவ வால் சுழற்றி நடந்து கிளைகளை ஒடித்து தொங்கும் வாய்க்குள் செருகிச் சுவைத்து அலைந்தன. புதிதாகப் பிடிக்கப்பட்ட யானைகள் வன்மரங்களில் தடித்த இடங் கணியால் பிணைக்கப்பட்டு கண்களில் ஈரநீர் கசிய துதிக்கை ஊன்றி மந்தகம் தாழ்த்தி நின்றிருந்தன. விரிந்த ஓலைப்பாய்களில் கொட்டிய சோற்றில் பனைவெல்லமும் பத்துவகை வேர்களும் சேர்த்து மரப் போணிகளில் அள்ளி அழுத்திக் கொட்டி யானைக்கவளம் செய்யும் பாகர்களைக் கண்டனர். எடுத்து வாயில் ஊட்டப்படும் கவளத்தை

உண்ணும் யானைகள் சிந்தும் பருக்கைகளை துதிக்கையால் பொறுக்கி சிறு உருளைகளாக்கி மீண்டும் உண்ணுவதைக் கண்டு கோவலன் புன்னகைத்தான். அப்பால் திறந்த செம்மண் வெளி நடுவே இருக்க சூழ்ந்த மரக்கொட்டில்களில் புரவிகள் நின்றன. சில புரவிகளை பேணுநர் வெளியில் நடைபழக்கினர். அவை பூக்குலை வால் சுழற்றி பிடரி மயிர் சிலுப்பி நீள் கழுத்து வெட்டித்திருப்பி காற்றில் சாட்டைகள்போலக் கால்கள் பறக்க புழுதிமீது பறந்து சென்று திரும்பி வந்தன. சில குதிரைகள் வாயில் நுரைவலை தொங்க வியர்வை மணிகள் உருளும் முதுகைச் சிலிர்த்தபடி நின்று கால் மாற்றி மூச்செறிந்து தரை முகர்ந்தன.

மள்ளர் குழு ஒன்று தலைச்சுமைகளாகக் காய்கறிகளும் வாழைக்குலைகளும் பழக்கூடைகளுமாக நகர் நோக்கிச் சென்றது. மூத்த மள்ளர் நால்வர் பாடும் பாண்டியன் குலவாழ்த்தை ஏற்றுப் பாடியபடி இளமள்ளர் கிணைப்பறை மீட்டி நடனமிட்டுச் சென்றனர். ''எங்கள் குலம் காக்கும் மன்னனைக் கண்டு அவன் தாள் பணிந்து இக்காணிக்கைகளை வைக்கச்செல்கிறோம்'' என்றார் ஒருவர். கைகளால் இலைத்தாளம் மீட்டிச்சென்ற ஒரு முதியவர் ''மன்னனைக் காணும் பேறு இம்முறையேனும் கிடைக்குமா என்றறிந்திலோம். இது எங்கள் ஏழாவது வருகை'' என்றார். ''ஏன்?'' என்றான் கோவலன். ''நீர் புதியவரோ?'' என்று புன்னகை செய்தார் முதியவர் ''மன்னர் நெடுங்காலமாக அறச்சாலைகளுக்கும் குடிச்சாலைகளுக்கும் வருவதில்லை. அமைச்சர்களை அனுப்புகிறார். அமைச்சர்களுக்கோ தேவியாரே ஆணையிடுவதாகச் சொன்னார்கள். உரிமைமகளிருடன் களிகொண்டாடவே மன்னருக்கு நேரமில்லை என்ற வசை இந்நாடெங்கும் உள்ளது.''

கோவலன் அச்செய்தியை முதல்முறையாகக் கேட்டதனால் சற்றே துணுக்குற்றான். ''உங்கள் குறைகளை அமைச்சரிடம் நீங்கள் கூற முடியாதோ?'' என்றான். ''அமைச்சர்கள் தேவிக்கு அடங்கியவர்கள். தேவியோ அணிநகைகளுக்கும் ஆடைகளுக்கும் மகிழ்பவர். எங்களிடம் இருப்பவை மண்ணில் முளைத்த எளிய விளைகள் மட்டுமே'' முதியவர் நெடுமூச்செறிந்தார். ''ஆடகப்பொன்னும் அரிய முத்துக்களும் கொடுத்துப் பெருவணிகரும் முதல்கிழார்களும் கோப்பெருந்தேவி நெஞ்சு கவர்ந்தனர். எங்கள் நிலங்களில் விளையும் அனைத்தையும் அவர்கள் இறைகொள்கின்றனர். மூதாதையர் வகுத்த திறைகோள் நெறிகளெல்லாம் இப்போது காற்றில் பறந்துவிட்டன. விளை விற்றால் கூறையும் கருவிகளும் கொள்ளமுடியாது என இன்று விளைநிலம் விற்று அவற்றைக்

கொள்கிறோம்.'' நீண்ட மூச்செறிந்து முதுமள்ளர் சொன்னார். ''எங்கள் குரலை இந்தப் பெருநகரின் மாடங்கள் கேட்டுத்தான் ஆக வேண்டும். அவர்கள் கேட்க மறுக்கும்தோறும் அக்குரல்களின் ஓசை வலுக்கிறது. மேலும் மேலும் வலுக்கிறது.''

அடர்ந்த மரக்கூட்டங்களுக்கு அப்பால் உருகி ஒழுகும் வெள்ளி போல வையை தோற்றம்தரக் கண்டு சொல் அவிந்து கோவலன் நின்றான். உயர்ந்த செய்கரைமீது நட்டு வளர்க்கப்பட்ட புன்னைமரங்கள் அடர்ந்து நீர் அருந்தும் வேங்கைகள்போல மஞ்சள் மலர்க்குவைகளுடன் வையைமீது கவிழ்ந்து கிடந்தன. குரவமும் மகிழமும் கோங்கும் வெண்கடம்பும் இதழியும் இகுளியும் மருதமும் வேர் புடைத்துக் கிளை பின்னி இலை செறிந்து அடர்ந்து பூத்துக் காற்றில் குலுங்கி மலர் சொரிந்து மண் மூடின. செம்முல்லையும் பிச்சியும் அவற்றில் படர்ந்தேறி இலைகளின் பசும் இருள் நடுவே விண்மீன்கள்போல விரிந்து நின்றன. அங்கே இளைப்பாறும் சிறுவணிகரும் வழிநடையரும் எழுப்பிய ஒலிகளும் அவர்கள் சமைக்கும் புகையும் வானில் எழுந்தன. காளைகள் நுகம் சாத்தி விடுபட்டு, வையை நீரில் முகம் பார்த்து, நீர் சுழிக்க மூச்சு எறிந்து அருந்தின. பயணியர் நீரள்ளி முகத்திலும் பிடரியிலும் வீசி விட்டுக் களைத்த கால்களை நீட்டி மரநிழல்களில அமர்ந்து உடலும் உளமும் இளைப்பாறினர். குதிரைகள் நீர் அருந்தியபின் அடிமரம் தேர்ந்து சாய்ந்து ஒரு கால் தூக்கி நின்று கண்மூடின.

வையைக்கரைச் சோலைக்குள் வந்து நின்ற கோவலன் கண் முன் ஒழுகிய நீர்த்தெளிவை நோக்கி நின்றான். காலை இளங் காற்றின் தழுவலில் மெல்லச் சிலிர்த்து மணல்மீது வெண்பளிங்கு போலப் பரவி அடித்தரை மணல்வரிகள் தெரியும்படி தெளிவு கொண்டு ஓடியது நீர். அதில் வெண்காசுகள்போலப் பரல்கூட் டங்கள் திளைத்தன. கொக்குகள் இளங்காற்றில் ஏறி மிதந்துவந்து சிறகுகளை அடித்து அடுக்கிப் பின் ஒடுக்கி அமர்ந்தன. மீன் கொத்திகள் நீலமலர்கள் காற்றில் செல்வதுபோல மரங்களிலிருந்து கிளம்பி நீர்மீது தங்களை எய்து இலக்கைக் குத்தி மீண்டன. நீர்வெளி நடுவே பல ஆற்றிடைக்குறைகள். வெண்அயிர் குவையைச்சுற்றி புன்னை மலர்க்குவியல்கள் வந்து படிந்திருக்க பொன்னணி அணிந்த வெண்முலைகள்போலப் பொலிவதாக எண்ணினான். மலர் சுமந்து நடை ஒல்கிச் செல்லும் இளங்கன்னி போல வையை சென்றாள். 'இது புனல் அல்ல, பூம்புனல்' என்று அவன் தன் நெஞ்சுள் வியந்தான்.

ஆற்றுக்கு நடுவே வேங்கையும் மூங்கிலும் கொண்டு கட்டப் பட்ட பாலம்மீது சுங்கம் அளித்த சகடங்கள் மட்டும் ஒவ்வொன்றாக ஏற்றப்பட்டன. அவை மெல்ல உருண்டு பாலத்தில் நடுவளைவு ஏறி மறுபக்கச் சரிவில் விரைந்து கோட்டை முகப்பு நோக்கிச் சென்றன. பாலத்தருகே மரத்தால் பணிந்து நீருள் செலுத்திக் கட்டப்பட்ட படகுத்துறையில் பயணிகள் காத்து நின்றனர். நீரில் கொழு ஊன்றித் தள்ளி வந்த நீண்ட ஓடங்கள் முதலைகள்போல நீர் நலுங்காமல் ஓசையின்றி வந்து கரை நெருங்கியதும் சரிந்து திரும்பி விலாப்பக்கம் காட்டி நின்றன. பரிமுகமும் கரிமுகமும் அரிமுகமும் கொண்ட ஓடங்கள் வரிசையாக வந்தன. அவற்றில் வணிகமக்கள் தங்கள் சுமைகளுடன் கூலி கொடுத்துக் கூவி ஆர்த்து ஏறி அமர்ந்தனர்.

அப்பால் ஒரு மூங்கில் புணையுடன் ஓடம் ஓட்டும் முதியவன் தனித்து நின்றிருந்தான். ''நாம் அவன் ஓட்டும் புணையில் ஏறு வோம்'' என்றாள் கவுந்தி. ''ஏமப்புணை ஏறி, காமக் கடும்புனல் நீந்துவதுபோல'' என்று புன்னகைத்தாள். கோவலன் நீர் தொடாமல் புணைமீது ஏறி ஆடியபடி அமர்ந்தபின் கண்ணகியின் கைப்பற்றி அவளை அருகே அமரச்செய்தான். புணை ஆற்று நீரில் அமிழ்ந்ததும் மூங்கில் இடைவெளியில் நீர் கசிந்தேறியது. அக்கணம் வரை தன்னுள் இருந்த உவகை குறைந்து ஒருவித அச்சம் குடியேறு வதைக் கோவலன் உணர்ந்தான். பெருமூச்சுடன் சாய்ந்து அமர்ந்து நீருக்கு அப்பால் நிறைந்து நின்ற பெரும் கோட்டைவாயிலைப் பார்த்தான்.

துழையை ஓங்கி நீருள் விட்டுத் தோள்தசைகள் புடைக்க உந்தி முன்னெழுந்து எடுத்து மீண்டும் சுழற்றி வீசி ஊன்றும் தாளத்துக் கேற்பப் புணையுந்தியின் குரல் எழுந்தது.

கருங்கழல் அணிந்தவளே- கன்னி
கருங்கூந்தல் அவிழ்ந்தவளே
கலைமான் அமர்ந்தவளே-கன்னி
கண்மூன்று எரிபவளே

கோவலன் திடுக்கிட்டவன்போல அவனை நோக்கினான். கொற்ற வையின் புகழ்பாடும் குரலை அந்தப் பெருநகர் வாயிலில் அவன் எதிர்பார்க்கவில்லை . அகக்கண்முன் எழுந்த நினைவுகளால் நடுங் கியவனாகத் திரும்பி அவன் கண்ணகியை நோக்கினான். அவள் இதழ்களில் ஒரு குறுநகையையே கண்டான்.

ஆயிரம் கைகள் கொண்டாள் - கன்னி
ஆயிரம் படைகள் கொண்டாள்
தாயின் அறம் மறந்தாள் -கன்னி

சேயின் குருதி கொண்டாள்...

கோவலன் அச்சத்துடன் ''நிறுத்து'' என்றான். ''என்ன பாடல் அது? கொடூரமான பாடலாக இருக்கிறதே...''

''இது கொற்றவை நகர் தீண்டும் பாடல். இதற்கு படையணிப் பாடல் என்று பெயர்'' என்றான் புணையுந்தி. ''நாங்கள் எப் போதும் இதையே பாடுகிறோம். எத்தனையோ தலைமுறையாக... என் தந்தையிடமிருந்து நான் கற்ற பாடல் இது. இதைப் பாடினால் தான் புணை ஆற்றுப்புதர்களிலும் பாறைகளிலும் சிக்காமல் மறுகரை சேரும் என்று எங்கள் நம்பிக்கை... இந்தப்பாடல் எங்கள் குலதெய்வத்தைப் பற்றியது. இதன் பொருள் ஏதும் நானறியேன்.''

''உங்கள் குலதெய்வம் எங்குள்ளது?'' என்றான் கோவலன்.

''நாங்கள் எங்கள் ஊரை விட்டுவந்து நெடுங்காலமாகிறது.'' கை நீட்டித் தென்திசையைச் சுட்டிப் புணையுந்தி சொன்னான். ''தெற்கே, நீள்தொலைவுக்கு அப்பால் உள்ளது எங்கள் ஊர். தென்கடலுக்கும் ஓங்கிய மலைத் [illegible]டுகளுக்கும் நடுவே. அங்கே காட்டுக்குள் எங்கள் அன்னை இருக்கிறாள். அவளை நாங்கள் இட்டகவேலி நீலகேசி அம்மன் என்கிறோம். அவளுக்கு உருவம் இல்லை. நீலமுடியே அவள் வடிவம். நீலநீள்முடியை மட்டும் கோயிலில் வைத்திருப்பதனால் எங்கள் கோயிலுக்கு முடிப்புரை என்று பெயர். அங்கே பன்னிரு வருடத்துக்கு ஒருமுறை எங்கள் குலங்கள் கூடிக் கன்னி அன்னைக்குக் கடாவும் வெள்ளாடும் கொன்று புது உதிரம் பலி கொடுத்து வணங்குவோம்.''

''அங்கேதானே பாண்டியன் குலக்கொடியாகிய கன்னி யன்னையின் பேராலயமும் உள்ளது?'' என்றான் கோவலன்.

''ஆம். எங்கள் அன்னையும் கன்னியே. அங்கே தென்கடலுக் குள் நீரின் நீல ஆழத்தில் ஒரு பேராலயம் உள்ளது. மண்ணில் எந்த ஆலயமும் அதன் ஒரு துளிகூட ஆகாது. அவ்வாலயத்தில் குடி கொள்ளும் பேரன்னையும் கன்னியே. அவள் கண்களின் ஒளியில் பிறந்த பல நூறு கன்னியன்னைகள் இம்மாநிலத்து மண் முழுக்கப் பரவியிருக்கின்றனர். தென்குமரியும் எங்கள் நீலமுடியாளும் அப்பேரன்னையின் மக்களே.''

''உன் பெயர் என்ன?'' என்றான் கோவலன்.

''என் பெயர் எண்கையன் நாங்கள் நாகர் குலம்'' என்றான் புணையுந்தி. பின் தன் முழவு போன்ற குரலில் உரக்கப் பாடத் தொடங்கினான்.

கண்முன் மிக நெருங்கிவந்த கோட்டை மதிலைக் கண்டபடி

கோவலன் அந்தப் படையணிப் பாடலைக் கேட்டு அமர்ந் திருந்தான்.

இடியிடி ஒலியெழ விண்ணகம் வெடிபட
மிடிபகை ஒழிந்திடக் கழலணி கிளந்திட
கன்னி நகர் புகுந்தாள். எங்கள்
அன்னை நகர் புகுந்தாள்
மணியணி முகடுகள் எரிபுகை சூழ்ந்திட
அணியணி மார்புகள் அஞ்சி நடுங்கிட
கன்னி நகர் புகுந்தாள். எங்கள்
அன்னை நகர் புகுந்தாள்.

பணை இறங்கிக் கோவலனும் கண்ணகியும் கவுந்தி துணைவர கோட்டைக்கும் ஆற்றுக்கும் நடுப்பட்ட புறஞ்சேரியில் நடந்தனர். நகர் நுழையா நெறி கொண்ட சாக்கையரும் சமணரும் வாழும் சிறுகுடில்கள் செறிந்த புறஞ்சேரியில் ஆற்றுநீர் அருகு சேர்ந்து சிறுதெய்வங்களின் பதிட்டைகள் அமைந்திருந்தன. செஞ் சாந்துக் கூட்டு பூசி தெச்சியும் அலரியும் பூ சூட்டிப் புது ஊனும் மஞ்சள் அரிசியும் படைத்து அவற்றுக்கு நகர்மக்கள் பூசனை செய்து கொண்டிருந்தனர். ஆற்றில் நீராடி எழுந்த சாக்கையர் சரணப் பேரொலி எழுப்பித் துவராடை ஒளிவிட நடந்து தங்கள் குடில் களுக்குச் சென்றனர். வடமொழியும், சாக்கைய மொழியும், தொல் தமிழும் கூறும் நன்னூல்கள் கற்க அவர்களைத் தேடி வந்த மாணவர் கள் கிளை விரித்த வேங்கை மரத்தடியில் அமர்ந்து மயிலகவல் எனவும் முழவோசை எனவும் குரலெழுப்பி நூல் நவின்றனர். ஓங்கிய மரங்களின் கிளைகளில் தொங்கிய உறிகளில் அமர்ந்த சமணச் சான்றோரைத் தேடி வந்த மக்கள் தங்களுடன் வந்த நோயாளிகளைக் காட்டி மருந்து கூறக் கோரி, அச்சான்றோர் சொல்லும் மருந்துகளை ஓலையில் குறித்து செய்முறை தேர்ந்து பின் நிலம்படத் தலை குனித்து வணங்கி அருகன் புகழ்பாடித் திரும்பினர்.

கவுந்தி ஒரு புன்னை மரத்தடிக்கு வந்து நின்றதும் ''இனிமேல் உங்களுடன் துணைவர என் அறம் ஆணையளிப்பதில்லை. நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்'' என்றாள்.

''அன்னையே உங்கள் பாதம் பற்றி இத்தனை தூரம் வந்தோம். உங்கள் அருள் எப்போதும் இருப்பதாக'' என்றான் கோவலன்.

அந்நேரம் புறச்சிறை வாழும் பூங்கண் இயக்கிக்குப் பாற்சோறு படைத்து வணங்கித் தன் தோழியரும் மக்களும் மருகியரும் சூழ மாதரி அந்தப் புன்னைமரத்தடிக்கு வந்தாள். மலைமுகட்டில் வெளில் முகில் போல வெண்கூந்தல் அணிந்திருந்தாள். அம்மலை மீது வழியும் அருவிபோல முறுவல் ஒளிர்ந்தாள். அம்மலைச்சரிவில் கொன்றை பூத்ததுபோல மஞ்சள் ஆடை சுற்றியிருந்தாள். வேங்கை

மரத்தடிக்கு வந்து கவுந்தியை நெற்றி புழுதிபடிய விழுந்து வணங்கி அருள் கேட்டாள். ''உன் குலம் தழைக்க அருகனருள் செய்க!'' என்றாள் கவுந்தி.

''அன்னையே, ஆய்ச்சியர் வணங்கும் புன்னைக்காட்டு நீலி அமர்ந்திருக்கும் இடம் இது. தங்கள் அருகே உள்ள அந்தக் கல்லில் தான் அவள் முலைசுரந்து பால்சொரிந்து எங்கள் முன் தோன்றினாள். நாங்கள் எங்கள் புதுக்கன்று உண்ட மிச்சில் அமுதை அவளுக்குத்தான் படைப்போம்'' என்றாள் மாதரி.

கவுந்தியின் முகம் சுடர் எழுந்த குத்துவிளக்குபோல ஒளி கொள்வதைக் கோவலன் கண்டான். அவள் எழுந்து ''அவ்வாறே ஆகுக!'' என்று அஞ்சல் முத்திரை காட்டி அங்கே நின்றாள். அன்னைக்கல்லுக்குப் புதுப்பாலை ஊற்றி மலர் அணிவித்து வணங்கினர் ஆய்ச்சியர்.

''மாதரி! கேள். இவள் பெரும்புகழ்ப் புகாரின் அருந்திரு வணிகன் செல்வி. இவளை உன் கையில் அடைக்கலமாகத் தந்தேன். இவளை உன் மகள் எனத் தாங்குதல் உன் கடன்'' என்றாள் கவுந்தி.

''அது என் நல்லூழ் அன்னையே'' என்றாள் மாதரி. கண்ணகியின் மெல்லிய குளிர்ந்த கைகளைப்பற்றியபடி ''இவள் என் குலக் கொடி. இவள் பாதம் என் இல் படுதலால் என் குலம் தழைக்கும் என்றறிவேன்'' என்றாள். அக்கணம் கவுந்தியின் கண்களை மாதரியின் முதுவிழிகள் கண்டுமீண்டன. அவள் சுருங்கிய முகத்தில் ஒரு மென்முறுவலும் விரிந்தது.

கோவலனும் கண்ணகியும் கவுந்தியின் பாதங்களில் விழுந்து வணங்கினர். ''அருகனருள் செய்க'' என்று அவள் வாழ்த்தினாள். பின்னர் மாதரி கைபற்றி நடந்த கண்ணகியைச் சுட்டி ''இவள் வண்ணச்சீரடியை நேற்றுவரை மண்மகள் அறிந்திலள். இன்று ஐவகை நிலமும் அளந்தறிந்து அவை இந்நகர் முன் வந்து நிற்கின்றன'' என்றாள் கவுந்தி. கண்ணகி புன்னகை செய்தாள்.

அக்கணம் நீலி தன் பேயுருவில் ஓங்கி நின்றாள். தன் முன் வன்பால் வெறியெலாம் கொண்டு மென்பால் உடலாகி நின்ற கண்ணகியை நோக்கிக் கைகூப்பித் தலை தாழ்த்தி நீலி சொன்னாள். ''என் பணி நிறைவுற்றது அன்னையே. என்னை ஆண்டருள்க!'' பின்பு அவள் மெல்லிய காற்றாக அந்தக் கல்மீது சென்றமர்ந்தாள். அவள்மீது புன்னைமரத்தின் மலர் ஒன்று உதிர்ந்தது.

கோவலனும் கண்ணகியும் ஆய்ச்சியர் சூழக் கோட்டை மதிலை ஒட்டிய சோலைமலர்ப்பாதையில் நடந்தனர். சுடர்ந்து சூழப்பறக்கும் தும்பிகளும் ஈக்களும் கூடவர புறஞ்சிறையில் மேய்ந்த பசுக்களும் கிடாரிக் கன்றுகளும் வால் சுழல மணியொலிக்க சிறிய கோட்டைவாயில் வழியாக உள்ளே சென்றன. பால் நினைந்து பசுக்கள் குரலெழுப்பின. தெறித்த மடுக்களில் வெண்துளிகள் அரும்பின. ஒரு தோளில் மறியும் மறுதோளில் துரட்டியும் ஏந்திய இடையர் வாயில் குதப்பிய வெற்றிலையும் முடியில் சூடிய மலர்களுமாகச் சிரித்துக் கூவியபடி இல் மீளும் ஒலி எழுந்தது அங்கே. செறிந்த தோள் வளையணிந்த ஆய்ச்சியர் கழுத்திலணிந்த மலர் மாலைகள் கசங்க அவர்களுடன் பேசிச்சிரித்து நடந்தனர்.

கோட்டைக்கும் பாதைக்கும் நடுவே இறலியும் கடம்பும் செறிந்த காவல்மிளையும் அதற்கு அப்பால் முதலைகள் வால் சுழற்றியடிக்கையில் நீர் தெறிக்கும் ஆழியும் இருந்தன. கோட்டைமீது கைவிடுபடைப் பொறிகள் தங்கள் இழுவிசை தெறிக்கக் காத்திருந்தன. நாண்மீது பொருந்திய நஞ்சுவாளிகளும் சுழற்கவணில் இறுகிய எறிகற்களும் தூண்டிற்பொறிகளும் தங்களில் தேக்கப்பட்ட ஆற்றலைச் சுமந்து கணம் கணமாகக் காலத்தைத் தாண்டின. கோட்டை வாயில்மீது பொறிக்கப்பட்டிருந்த குமிழ்வேல் நுனிகளில் சாயும் வெயில் சுடரேற்றி வைத்திருந்தது. அந்தி வெயில் சாயும்போது கோட்டைமீது படபடத்த மீன்கொடிகள் தழலென அசைந்தன.

ஓங்கிய கரியமதிலை ஏறிட்டு நோக்கிக் கோவலன் சொன்னான் ''எந்நேரமும் எதிரியையே எண்ணித் தவம் செய்கிறது இந்தக் கோட்டை'' பின் புன்னகையுடன் ''இம்மாநகருக்கு எதிரியென எவர் இருக்க இயலும்? இப்படைக்கலங்கள் பயனுற என்றாவது இது எதிரியைக் காணுமா?'' என்றாள். கண்ணகியை அவன் நோக்கியபோது அவள் கண்களின் ஒளியைக் கண்டு துணுக்குற்றான். அவள் அக்கோட்டையையே நோக்கிய வண்ணம் நடந்தாள். வேறு எதையும் அவள் நோக்கவில்லை என்று அவன் அறிந்தான்.

மதுரையின் துணைவாயில் முன் ஆயரும் ஆநிரையும் நெரிசலிட்ட அந்தியில் மாதரி துணைவர கண்ணகியும் கோவலனும் நுழைந்தனர். ஐவகை நிலங்களிலும் வாழும் மூதன்னையர் கண்கள் செம்மைநிறம் கொண்டு விழித்த வேளை அது. மாநகர்மீது மீன் கொடிகள் ஒரு கணம் துவண்டு அசைவிழந்து பின் எழுந்து துடி துடித்த வேளை. ஐந்திரப் பெருநூல் ஆயிரமாயிரம் ஆண்டுகள் முன்பே கணித்தமைத்த வேளை.

அப்பால் தென்திசை மேவிய நீர்வெளியின் ஆழத்தில் பேரன் னையின் நீலப்பெருமுகத்தில் ஒரு மாபெரும் புன்னகை விரிந் திருந்தது. அந்தியின் ஒளியைத் தன் உடலால் துழாவியபடி ஒரு மீன் அப்புன்னகைமீது செந்நிழல் பரப்பி, சிறகலைத்துப் பறந்து சென்றது.

ᘓ

பகுதி நான்கு

எரி

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்...

உண்ணும் அனைத்தையும் விண்ணுக்குக் கொண்டு செல்லும் ஓயாப்பெருநடனமே காப்பியம் என்க. மண்ணில் அதற்கு உணவாகாத எதுவும் இல்லை. தீண்டும் அனைத்திலும் தாவி ஏறி உண்டு தன்னைப் பெருக்கிக் கோடிகோடி இதழ்விரித்து எங்கும் நிறையும் முடிவற்ற நாக்கு அது. துடிதுடித்தும் தவிதவித்தும் உரையாடிக் கொண்டிருக்கிறது ஊழியூழிக் காலங்களாய். அது கூறுவது அழியாத ஒற்றைச் சொல்லையே என்றறிந்தனர் மண்ணை மீறி விண்ணில் உளம் எழுந்த அறவோர். திசையழிந்த வெளியெங்கும் நிரம்பிய ஒளியே மண்ணில் தீ என உறைகிறது என்று உணர்ந்தனர்.

தீ தொட்டபின் எதுவும் அழுக்கு அல்ல. எதுவும் இழுக்கும் அல்ல. ஊன்வாய் திறந்து மண்ணில் விழும் உடல் உண்டு உயிர்த்து கண்டு கற்று அடையும் அழுக்குகளையெல்லாம் தீயுண்ணக் கொடுத்தபின்னரே அதனுள் சிறையுண்ட சீவம் தன்னிலை இழந்து சிவமாகும் என்றனர். தீயுண்ணும் அனைத்தும் தீய்மை எனப் பட்டது. தீயுண்ணவே தூய்மை என்றாயிற்று. தீ எனும் ஒலியே தீங்குக்கும் தீஞ்சுவைக்கும் சொல்லாயிற்று. தீ உறையாத பரு ஏதும் இல்லையென்றனர் அறிவர். பச்சைப்பசுங்குருத்திலும் மென்மலர் இதழிலும் குளிர்ச்சுனை நீரிலும் தாய்முலைப்பாலிலும் தீ உறைகிறது என்றனர். ஒவ்வொன்றிலும் உறையும் தீயை அப்பொருளின் ஆணவம் அணைகட்டி அணைத்து நிறுத்துகிறது. அணை மீறுகையில் அது எரியும் எரியாகிறது என்றறிந்தனர். சொல்லில் உறையும் தீ தன் சிறை மீறுதலே காப்பியம் என்றனர் கற்றோர். காப்பியங்களுக்கு அவியாகி அவிதற்பொருட்டே மண்ணில் மாந்தர் பிறந்திறப்பதாகச் சொன்னது மன் மறைந்த பேரிலக்கண நூல் ஒன்று. கனன்றெரிந்து கரியாகி உப்பாகி மண்ணில் மறைவர் மாந்தக் கோடிகள். மாசற்று ஒளிபெற்று மீள்பவர் சிலரே. அவர்களை எரிமலரிதழ் நடுவே இலங்கும் இறைவடிவென்பர் கற்றோர். ஆம், அவ்வாறே ஆகுக!

ஜ

காப்பியம் கூறியது

பூம்புகார் நகரத்துப் பெருவணிகன் மகள் கண்ணகியும் அவள் கொழுநன் கோவலனும் சிலம்பு விற்றுப் பொருள் கொண்டு புதுவாழ்க்கை தொடங்க மாமதுரை மூதூருக்குச் சென்றதும் கோவலன் கொலையுண்டதும் கண்ணகி முலை எரி கொடுந்தழல் கொண்டு புரமெரித்து மலை சேர்ந்ததும் என மூத்தோர் கூற்றை நூலோர் உவப்ப நவில்க ஈங்கண் எனும் பாயிரம்.

ஓ

மதுரை நகர் மதுரையின் பெருவாயில் முன் இருந்தது மதுராபதி அன்னையின் ஆலயம். கருங்கல்லால் ஆன குட விமானமும் பன்றிப்புற வளைவடிவும் கொண்ட அச்சிற்றாலயத்தின் மழை அரித்த கருங்கற் சுவர்கள் தொல்பாறைகள்போலக் கறுத்துத் தனி யானை ஒன்று அசைவற்று நிற்பது போலிருந்தது. கருவறையின் தாமரைப் பீடத்தில் மதுராபதி அன்னையின் நான்கடி உயரச் சிலை நின்றது. சிற்பிகள் எவரும் இனம் பிரித்தறிய இயலாத பொருள் ஒன்றால் ஆனது அச்சிலை. இணைப்பற்ற அதன் ஒற்றை உலோக உடலில் இடப்பக்கம் நீலநிறமாகவும் வலப்பக்கம் பொன் னிறமாகவும் ஒளிவிட்டது. விரிந்த புரிசடையும் அதன்மீது எழுந்த கூன்பிறையும் குவளைக்கண்களும் குமிழுதடுகளில் குறுஞ்சிரிப்பும் வீரப்பற்கள் எழுந்த கன்னங்களும்கொண்டு நின்றாள் அன்னை. அவள் இடக்கையில் தாமரையும் வலக்கையில் கொலைவாளும் வலக்காலில் கழலும் இடக்காலில் சிலம்பும் அணிசெய்தன.

நாள்முதல்நாழிகையில் மதுரை கண்விழிக்கும் முன்னரே குடி நிறைப் பூசகர் ஏழு பொற்குடங்களில் வையை நீர் மொண்டு ஏழு பொற்றாலங்களில் எழுவகை மலருடன் வந்து ஆலயக் கருவறை திறந்து சிறுபொன்மணி ஒலித்து அன்னையைத் துயிலெழுப்புதல் மரபு. நீரும் மலரும் காட்டி அவளை வணங்கி அவள் ஆலயத்துப் பெருமணியை அவர்கள் அடித்ததும் கோட்டைமீது காத்திருக்கும் மாமணி அதிரும். அவ்வொலி கேட்டு மீன்விழி ஆலயத்திலும் மதுரை நகரின் பிற ஆலயங்களிலும் முதல்நாழிகை பூசெய்கைக்கு மணிகள் ஒலிக்கத் தொடங்கும். கோட்டைமீது கொம்புகளும் முரசங்களும் அதிர மதுரையின் நாள் தொடங்கும். மதுரையின் ஒவ் வொரு நாழிகையும் மதுராபதி அன்னையிடமிருந்தே தொடங்கின.

வையையில் நீராடி ஈரத்துடனும் உடற்களைப்புடனும் நகர்புகும் மாந்தர் மதுராபதி அன்னையை முதலில் வணங்கி ஆணை பெற்று நகருள் நுழைதலே முறை எனக் கொள்ளப்பட்டது. அன்னையின் உருமுன் கைகூப்பி நிற்கையில் அவர்கள் அப்பெரு

நகரின் இருபாற்பட்ட மெய்ம்மையை உணர்வர். காய்தலும் கனிதலும், கடிதலும் புரத்தலும், அறமும் மறமும், அழகும் கொடுமையும் ஒருங்கேயிணைந்த அதன் பெருமையைக் கைகூப்பி வணங்குவர்.

நகரின் நடுவே பீடுடன் ஓங்கிய பீடத்தில் அமர்ந்திருந்த முதற் பூதமும் அப்பால் அரசவீதி நடுவே நின்ற அரைசபூதமும் வலப்பக்கம் ஏனாதிப் பட்டம் பெற்ற பெருவணிகர் வாழும் வீதிகள் நடுவே எழுந்த வாணிகப்பூதமும் தெற்கே காவிதிப் பட்டம் பெற்ற பேருழவர் வீதிகள் கூடும் மன்று காக்கும் வேளாண்பூதமும் மதுராபதி அன்னையின் மைந்தர் என்று கொண்டனர் நகர் மக்கள். மதுராபதி அன்னையை வணங்கி மலர்கொண்டு மாநகருள் நுழைந்து முறையே நான்கு நகர்ப் பகுதிகளையும் கண்டு நான்கு பூதங்களையும் வணங்கி மலர்கொண்டு அமைவதே முறை எனக் கூறப்பட்டது.

நான்கு கைகளிலும் தாமரையும் படைக்கலங்களும் அருட் குறியும் முதல்நூலும் கொண்டு நகர்மன்றில் அமர்ந்தருளிய முதற் பூதத்திற்கு வெண்மலர்களும் சந்தனமும் பொரியும் படைத்து வணங்கினர். எட்டுக்கைகளில் அறுவகைப் படைக்கலங்களும் செங் கோலும் அருட்குறியும் கொண்டு வெண்புட்டகம் உடுத்தி அரண் மனை முகப்பில் நின்ற அரச பூதத்துக்கு செந்நிற மலர்களும் ஊன் சோறும் படைத்து வணங்கினர். நாஞ்சிலும் துலாமும் ஏந்திய கை களுடன் வணிகமன்றில் அமர்ந்த வாணிகப்பூதத்துக்கு மஞ்சள் நில மலர்களும் கொய்வாளும் கோடும் ஏந்தி வேளாண்வீதியில் நின்ற பூதத்துக்கு நீலமலர்களும் வகுக்கப்பட்டிருந்தன. நான்கு பூதங்களும் நான்கு திசைகள் நோக்கி நின்று நகரைக் காத்தன.

நாள் அணைந்து இருள் கவிந்து மாமதுரை நகரின் ஆலய வாயில்கள் ஒவ்வொன்றாக மூடும். மீன்விழிஅன்னை பேரால யத்துக் கருவறை வாயிலே இறுதியாக மூடும். அரண்மனை முரசும் புறவாயில் பெருமுரசும் ஒலித்து நண்சாமம் என்றறிவிக்கையில் மதுராபதி அன்னை ஆலயத்துப் பூசகர் முறைமாறி வந்து புதுமலர் சூட்டி அன்னையைத் தொழுவர். அன்னையின் ஆலயம் ஒரு போதும் மூடுவதில்லை. அன்னைமுன் ஒருபோதும் சுடர் அவிவ தில்லை. துயிலற்றவள் அவள் என்றன தொல்கதைகள்.

நகர் எழு காதை இது என்க.

ஃ

காப்பியம் கூறியது :

கலையின் முதற்கதிர் எப்போதும் மீன்விழி அன்னையின் ஓங்கிய புரிமுக விமானத்தின்மீது பொற்காப்பணிந்து குளிர்ந்திருக்கும் கலங்கள்மீதுதான் தொடும். துயிலெழும் மகவின் கண் பிரிதல்போல மதுரை மெல்ல மெல்ல எழும். மீன்விழியன்னையின் விண்ணகர்ப்பெருமணிகள் 'அன்னை! அன்னை!' என்று முழங்கி அதிர்கையில் வலப்புறம் ஆலவாயழகனின் ஆலய மணிகள் 'அத்தன்! அத்தன்!' என்று எதிரொலித்தன. இடப்புறம் ஆழி துயிலும் அண்ணலின் விண்ணகர மணியோசை 'மாயோன் மாயோன்' என்று முழங்க, கோழிக்கொடி அழகன் ஆலயத்தும் மேழிப்படை அண்ணல் விண்ணகரத்தும் மற்றும் மதுரை மூதூரின் தெருமுனைகள்தோறும் இருந்த நூறுநூறு சிற்றாலயங்களிலும் மணியோசைகள் எழுந்தன.

அரண்மனை முகப்பில் வேதாளிகை முழங்க புறநீர்மை பெரும்பண் எழுந்து அழலவனை வரவேற்றது. ஓங்கிய வெண்சுதை மாடங்களில் இருந்து புறாக்கள் சிறகடித்தெழுந்து வானில் பரவ, அந்தணர் சேரியில் எரிமுன் அமர்ந்து அவிசேர்த்து அவர் கூறும் அழியாக்கிளவியின் இசை எழுந்து புகையுடன் வானில் நிலைத்தது. சாக்கையர் பள்ளிகளில் சரணம் முழங்க அறவோர் விடுதிகளில் தொல்மொழிப் பெருங்குரல் எழுந்தது. ஆயர் குடிப்பெண்டிர் பாற்குடம் சுமந்து மெல்லிடை ஒசிந்து கூவிச்செல்லும் குரல் எழுகையில், குளித்து ஈரக்குழலில் முல்லைமலர்மாலை சூடிச் செஞ்சாந்துப் பொட்டிட்ட குடிப்பெண்டிர் மாந்தளிர் நிறச் செம்புகளுடன் முன்னரங்குக்கு விரைந்தனர். நகையாடிக் கணக்குச் சொல்லி ஆய் மகளிர் பாலூற்றி நடக்கையில் ஏழுநிலைமாடம் முன் இட்ட மாக்கோலங்கள்மீது வெண்பால் சிந்திவிரிந்தது.

செம்மணல் விரிந்த சிறுதெருக்களில் விண்ணளந்தோன் விண்ணகர் தொழப் போகும் மாந்தரின் ஈர உடைகள் சொட்டும் நீர்மணிகள் தடம் அமைத்தன. வெண்கல் அமைத்து விரிந்த அரச வீதியில் பட்டத்து யானை மருப்பசைத்து மணிகுலுக்கி நடந்தது.

அதன் முதல்நோக்குக்காகக் காத்திருக்கும் வணிகர்களின் மாட முகப்பில் சேவகன் மணியசைக்க சாளரம் திறந்து ஐவகை இலக் கணம் தகைந்த அதன் கரும்பெரும் முகம் நோக்கி முதுவணிகர் வணங்கினர். யானைத்திரள் கார்கால வானம் எனத் திரண்டு வையை நோக்கிச் சென்றது. கோட்டைக் கடவை வாயில்முன் கொம்புகள் ஊத, பெருங்கதவம் பிளிறித் திறந்தது. யானைகள் நீருள் சென்ற சுருங்கை வீதிக்குள் இறங்கி இருள் நிறைந்த கற் பாதையில் காலடி ஒலிக்க நடந்து மறுகரை சேரும் ஒலியில் முதலை கள் வால் சுழற்றி நீருள் குமிழியிட்டன. துறவோர் ஆடும் வேங்கை மரத்துறைகளில் துவராடைகள் காற்றில் தழல்போல ஆடிப் படபடத்துக் காய்ந்தன. இல்லோர் குளிக்கும் புன்னைமர வேர்ப்படி களில் நீர் சுழிக்கும் ஒலியினூடாக ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் ஒலித்தன. உடல் சேர்த்த எண்ணெயும் நறுஞ்சுண்ணமும் சந்தனக் குழம்பும் மணத்தன. காதலர் துணைவர குறுநகையும் நறுமொழி யும் கூட்டி அசைந்தாடிவந்த நங்கையர் முல்லையும் நாணலும் திரையிட்ட கரைப்பொழில்களுக்குள் தங்கள் பொன்னுடல் மிளிர நீராடினர். தாழை மலர்மீது உருளும் நீர்த்துளிகள்போல அவர்தம் இளந்தோளில் உருண்டன வையை முத்துக்கள். கண்நிழல்கள் நீரில் விழக் கயலோ என மயங்கின பரல்கள். தாமரைமீது நீலம் என மயங்கின வண்டுகள். மூழ்கும்போது அவர்தம் மென்சாயல் பரவி அலைக்கும் நறுநீரில் ஆடின இளங்காதலர் நெஞ்சங்கள். அவர்கள் சிரிப்பின் ஒலி வையையின் துள்ளல் ஒலியுடன் இயைந்தது.

மதகரித்திரள் வையையில் இறங்கும்போது நீர் விலகி நீர் அலைத்து ஆற்றின் மணற்கரைகள் விண்டுசரிய, மிதக்கும் புன்னை மலர்த்திரள்கள் எழுந்தமர்ந்து கரைவிளிம்பில் படிந்தன. புலரி யொளி தெறிக்கும் நீரொழுக்கில் புதிய பறவைகள் சிறகடித்துச் சுழன்றிறங்கி மேலெழ, மென்மணலின் ஏட்டில் அவற்றின் பாதங் கள் எழுதிய நுண்ணெழுத்துக்களை மிதிக்க அஞ்சி நடந்தனர் நீராட வந்த மதுரை மக்கள். மணல்மீது தருப்பைப் புல் பரப்பி அமர்ந்து நூல் நவின்ற ஆசிரியரும் மாணவரும் அறிந்தவற்றினூடாக அறிய ஒண்ணாதது நோக்கி எழுந்தனர். அம்மெய்ந்நூற் சாரமென நிரம்பிய பேரமைதியே காற்றாக ஒளியாக வையைப் புனல்வெளியிலும், சூழ நிற்கும் தாழைப் புதர்ச் சுவர்களிலும், மேலே கவிந்த நீலவிசும் பிலும் ததும்பி நின்றது. அதில் பறந்தன தென்குமரி நோக்கிச் செல்லும் தூவெண் திசைப்பறவைகள்.

நீராடிய பட்டத்து யானை கையில் பறித்த செந்தாமரை மலருடன் எழுந்து, மழை கழுவிய மாமலை உச்சிபோலக் கருமை

மிளிர நடந்து அன்னையின் விண்ணகரத்துக் கல்வாயிலைக் கடந்து செல்கையில் சங்கமும் குறுமுரசும் அதிர்ந்தன. அரை மண்டபத்தில் அன்னைமுன் வந்து நின்று மலர் வைத்து வணங்கி மீண்ட யானை அத்தனின் ஆலயத்திலும் ஆழியானின் விண்ணகரத்திலும் சென்று வணங்கி பெருவழியே நடந்து உட்கோட்டை வாசலின் ஊடாகக் கடந்து நகர் மையத்தில் மீன்கொடி பறக்க நின்ற அரண்மனை முற்றத்தில் சென்று நின்றது. செங்கல் பாளங்கள் வேய்ந்த விரிமுற்றத்தில் யவனர் அணிநடை பயிற்றும் சோனக வெண் புரவிகள் தாவிக் காற்றில் நீந்திச் சென்றன. வியர்வை உருள மூச்சில் ஆவி உமிழ்ந்து கால் மாற்றி நின்று வால் சுழற்றிக் கனைத்தன. தலைக் காப்பும் நெஞ்சரணமும் அணிந்த ஈட்டி ஏந்திய மெய்க்காவல் வீரர்கள் அணிவகுத்து நின்ற நெடுந்தாழ்வாரத்தில் மங்கல முரசுகள் காத்திருந்தன. மங்கல மலர்களும் கனிகளும் ஏந்தி அழகிய கணிகையர் காத்து நின்றனர். எட்டுப் பாகர்கள் சேர்ந்து முக படாமும் தலைமணியும் காதணியும் அணிவித்து அழகுசெய்தபின் காலைவெயில்பட்ட கருமுகில் என நின்றது யானை. செவியசைத்து உரல்கால் மாற்றித் துதிக்கை துழாவி மூச்சுவிட்டு எதிர்நோக்கியது.

அரண்மனைக் கோட்டத்துள் அரசநிமித்திகன் ஓங்கிய குரலெடுத்துச் சொல்லும் புகழ்விளி எழுந்ததும் முரசுகள் இயம்பின. நன்மணிகள் சேர்ந்து இசைத்தன. பட்டத்து யானை திரும்பிச் செவி பிடித்தது. ''மீன்விழியன்னையின் மைந்தன், தென்குமரி எழுந்து வடபொதிகை ஈறாகத் தென்நிலமாளும் மீனவன், பண்டைக் குடிப் பிறந்து என்றும் புவியாளும் பாண்டியன் நெடுஞ்செழியன் கோமான் வாழ்க'' என்று நிமித்திகன் குரல் ஒலித்தது. அரண்மனைக்கு உள்ளும் புறமும் பல்லாயிரம் குரல்கள் வாழ்த்தொலி எழுப்பி அதிர்ந்தன. வாள் வேல் வில் என முப்படை ஏந்தி வீரர் முன்னால் வந்தனர். நால்வகைப் படைத்தலைவர்கள் பின்னால் வந்தனர். துவளும் செம்பட்டில் மீன் நெளியும் கொடி ஏந்திய வீரன் பின்னால் வந்தான். திங்கள் ஒளிரும் வெண் கொற்றக்குடை ஏந்தி ஐந்து வீரர் நடக்க அதன் கீழ் வேம்புமாலை முத்தாரத்துடன் மயங்கும் மார்புடன், புரிகுழல் தோளில் சரிய, வெண்பட்டாடை நடையில் உலைய, ஒளிரும் மணிதிகழ் செங்கோல் ஏந்திய வலக்கையுடன் பாண்டியன் நடந்துவந்தான். அவன் தலையில் கன்னியன்னையின் பாதம் பொறித்த முத்துமணிமுடி சுடர்ந்தது. 'தென்னவன்! என்று முள தென்றமிழின் காவலன்!' என அருகே நடந்த பாவலர் குரலெழுப்பினர். அரசப்பெருமுரசம் 'ஆம்! ஆம்!ஆம்!' என்றது.

பட்டத்து யானையை வணங்கி அதன் காதைப்பற்றி மத்தகம்

மேலேறி அவன் அமர்ந்ததும் அரண்மனை மணிமாடத்தில் மணியோசை எழுந்தது. இருள் நகர்வதுபோல நடந்து யானை அரண்மனை வாயில் தாண்டிப் பெருமுற்றத்துத் திறப்பு நோக்கிச் சென்றது. அங்கே மன்னன் முகம் காண வந்து குழுமிய பாண்டியநாட்டுப் பெருங்குடிகளின் பேரொலி எழுந்தது. விளைகளும் மலர்களும் மணிகளும் துணிகளும் காணிக்கையாகச் சுமந்து, இளவெயிலில் ஒளிரும் புத்தாடைகளும் நகைகளும் நகைமுகங்களுமாக மூவகை மக்களும் திரண்டு நின்றனர். அவர்களுக்குப் பின்னால் நால்வகைப் படையும் நிரைநிரை வகுத்து நின்றன. ஒளிபட்ட நீர்வெளிபோல அவர்களின் படைக்கலங்கள் சுடர்ந்தன. வெளிமுரசம் முழங்கியதும் அப்பால் கோட்டை முகப்பில் கொம்பும் குழலுமாக வீரர் எழுந்தனர். அருவி விழும் மலையடுக்குபோல ஒலியெழுப்பியது கோட்டை. உள்வாயிலில் கார்மேல் எழுந்த கதிரவன்போலப் பாண்டியன் தோன்றியதும் வாழ்த்தொலிகள் கடலலை என எழுந்தன. கோட்டைமீது காவலர் எழுப்பிய வீரமுழக்கம் வையை தாண்டி மரம்செறிந்த சோலைகளில் பரவிப் பறவைகளைக் கலையச் செய்தது. ''என்றுமழியாதது தமிழ். தமிழ் மடியில் மதுரை ஒரு சேய்'' என்றார் அரசவை முதற்பாவலர் கடம்பனார். ''ஆம் ஆம் ஆம்'' என்றது முரசென அதிர்ந்த நீலவானம்.

அரசெழு காதை இது என்க.

ஃ

காப்பியம் கூறியது :

மன்னன் எழுந்தருளிய மன்றுவிட்டு நீங்கிய மக்கள் காணிக்கைப்பொருட்களை திறையெழுத்தனிடம் தந்து தங்கள் பெயரும் குடியும் சொல்லி மீண்டனர். அரண்மனைத் தெற்குத் திசையில் அடுமனைகளில் அப்போது நறும்புகை எழுந்து கொண்டிருந்தது. ஊண்மாடக் காவலர் தலைவன் முன்வந்து 'நறுஞ் சுவை உண்டி அருந்திச் செல்க' என்று அவர்களை அழைத்து அமரச் செய்தான். விரிந்த கல்முற்றத்தில் நிரை வகுத்த வாழைஇலைகளில் அவர்கள் அமர்ந்ததும் ஆவியெழும் புட்டமுதும் நறுந்தேன் சேர்த்த நெய்யமுதும் பரிமாறினர். பாண்டியன் குடி வாழத் துதித்த பின்னர் அவர்கள் உண்ணும்காலை கருங்குழல் தோளில் புரள விழுப்புண் பதிந்த கரிய விரிமார்பில் மணியாரம் புரளப் பாண்டியனே நடந்து வந்து அவர்களுக்கு முகமன் சொல்லி 'உண்ணீர் உண்ணீர்' என்று ஊண்நலம் உசாவினான்.

பின்னர் தங்கள் குடியும் சுற்றமும் சூழ மக்கள் நகர் காண இறங்கினர். அரண்மனையை ஒட்டிய நால்வீதியில் அரசகுடியும் ஆள்மறக்குடியும் வணிகர்குடியும் வரிசையர் குடியும் வாழ்ந்த வெண்மாடங்கள் நிரைவகுத்தன. வெண்மணல் விரிந்த ஆணச் சாலையில் செம்பட்டாடை பறக்கும் சிவிகைகள் போகிகளின் குரலுக்கேற்ப காற்றில் மிதந்தமிழ்ந்து சென்றன. வெண்சாமரம் என வால் சுழற்றும் கரும்புரவிகளில் யவனக் காவல் வீரர்கள் குளம் பொலி முழக்கிச் சென்றனர். மாடக்கொடிகளின் நிழல்கள் ஆடும் தரைமீது நடக்கையில் அவற்றை மிதிக்காது விலகிச்சென்றனர் நடைசென்றவர். யவனக்காவலர் ஒளிர்வேல் ஏந்திக் காவல் நின்ற பெருவணிகனின் மாளிகை முகப்பில் பளிங்கு மேடையில் வைக்கப்பட்ட செம்பொன் அடைப்பை காத்திருந்தது. அருகே அவனை முகம் காட்டவந்த ஏவலரும் வினைவலரும் கைகட்டி மெய்யொடுக்கி நின்றனர். பெருவணிகன் எழுந்தருளியதும் இல்லத்து நிமித்திகன் வலம்புரிச்சங்கம் எடுத்து வாய் சேர்த்து

முழங்கினான். காத்துநின்றவர் அவன் குடியும் புகழும் சொல்லி வாழ்த்தினர்.

வினைவல் மாக்கள் செல்லும் சிறுவழிகள் ஊடுடு சென்றன. அவற்றில் ஓசையின்றி நிழல்கள் என நடமாடிய அக்கரிய மக்கள் தங்கள் தலையேந்திய கூடைகளில் தலைநாள் எஞ்சிய மலர்களும் குப்பைகளும் சுமந்து சென்றனர். வெண்மணி மாடத்திலிருந்து இழியும் தூம்புகளில் செம்பஞ்சுக்குழம்பும் யவன நறுமணநீரும் கலந்த மணம் எழுந்தது. முதற்பொழுது நிறைவுற்ற ஓசையை ஒரு மாடத்துக் குறுமுரசம் முழங்கிச் சொன்னபோது யவனக் காவலர் வேல் கைமாற்றி இடம் பெயர்ந்து மருள்நிறை மறுகுகளில் தங்கள் இரும்புக் குறடுகள் மண்ணில் சீறியொலிக்க நடந்து சென்றனர். தங்கள் மொழியில் குழறியபடிக் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து புறஞ்சேரி யவனக்குடிமனை நோக்கி நடந்தனர். எட்டுப் புரவி முன்வர எட்டுப் புரவி பின்வர செம்பட்டு உலையும் சிவிகையில் சென்றவள் கூலவணிகன் பெருஞ்சாத்தனின் காமக்கிழத்தி என்று சொன்னார் ஒருவர். அவள் வடிவை அணிபடங்கின் வழியாகக் கூர்ந்து நோக்கச் சிலர் நின்றனர். திரைக்குள் இருந்து செம்பஞ் செழுதிய நீள்விரல் இரண்டு வந்து இழுத்துவிடக் கண்டு நெஞ்சு நிறைந்து நெடுமூச்செறிந்தனர்.

அரசவீதிகள் விரிந்தெழும் அல்லிவட்டம்போல இருந்தன எண்ணெண் கலையோர் வாழும் எண்வரி வீதிகள். செம்புத்தகடு வேய்ந்த கூரைகள் கொண்ட நாலடுக்கு மாடங்கள் இரவெலாம் எழுந்த சதங்கையொலியும் யாழொலியும் அவிந்து ஆழ்துயில் கொண்டு கிடந்தன. அவற்றில் மீன்கொடி பாறும் முதல்வீடே நாள்தோறும் மன்னனிடம் ஆயிரெத்தெட்டுக் கழஞ்சு பொன் பெறும் தலைக்கோலியின் இல்லம் என்றான் ஒருவன். வேத்தி யலும் பொதுவியலும் தேர்ந்து, எள்முனையளவும் நூல்நெறி வழு வாது நடிக்கும் நாடகக் கணிகையர். மன்னன் அவையில் ஆடியும் பாடியும் அரங்கமைவு பெற்ற பாவையர். அலைகடல் ஓடிப் பெரு வணிகரும், சிலைநாண் குலைத்து அருமறவரும் ஈட்டும் செல்வ மெல்லாம் வந்துசேரும் இடம் அது. கண்நுனிவேலால் கள்வர் தொழில் செய்யும் பரத்தையர் வீதி.

பாவை விளக்குகளின் கைகளில் படிந்த கரிநிழல் துடைத்தும், வெண்பளிங்குத் தூண்களில் தீற்றிய செஞ்சாந்தழித்தும், வெண்கலக் கம்பிகள் பதித்த யவனச் சாளரங்களில் மலர்மாலைகள் தூக்கியும் வெண் அயிர் முற்றத்தில் வண்ணக்கோலமிட்டும் சேடியர் நிறைந் திருந்த அம்முற்றங்களில் கொடிதுவள நின்றன மணிச்சிவிகைகள்.

யவனத்தேறலின் இன்கடும்மணம் மாறாத காற்றில் மஞ்சத்தி லிருந்து தவறிவிழுந்த பொற்பரல் சதங்கையொன்றின் ஒலி நகைத்துச் சிதறி வந்தது. நடைமாந்தர் அவ்வொலியைப் பாலையின் முதல்மழைத்துளி கொள்ளும் கற்றாழைபோல அகம் மலர்ந்து ஆகம் பொலிந்து நுகர்ந்தனர்.

அப்பால் விரியும் சிறு வீதிகள் அனைத்தும் சென்றுசேரும் இடமே இருகரைதொட்டு ஒழுகும் கார்கால வையைபோல மக்களும் சகடங்களும் ஒழுகும் அங்காடி வீதி. மூடுதிரையிட்ட வையங்களும் இரட்டையுருளிச் சகடங்கள்மீது ஒலித்துக் குலுங்கி நகரும் பாண்டிலும் தசைபுடைத்த மாடுகளால் இழுக்கப்பட்டு ஒன்றோடொன்று முட்டி நின்று ஒலியெழுப்பும் தெருவில் ஊடே புகுந்துசென்றனர் அங்கம் வங்கம் கலிங்கம் என ஆரியர் மண் அனைத்திலுமிருந்து பண்ணியம் கொளவந்த திசைவணிகர். யவனரும் சோனகரும் காப்பிரியரும் சீனரும் தங்கள் மொழிகளில் கெக்கலித்து மடிச்சீலை நாணயங்கள் குலுங்கக் கடைதோறும் நின்று விலை பேசினர். அவர்களுக்கு மொழி தெளிவிக்கும் இருமொழி யாளர் மேலாடையை இடைசுற்றி உடல் வளைத்து உடன்நடந்து கூவினர். அவர்களுக்குக் காவல்வந்த அவரின மறவர் ஒளிரும் வாட்களை உருவி நின்று விழியுருட்டி நெரியும் கூட்டத்தை வேவு பார்த்தனர்.

நிரைநிரையெனக் கிடந்த கடைகளில் அங்கே விற்கும் பொரு ளின் படமிட்ட கொடிகள் நீண்ட கழைகளில் நெளிந்தன. யவன வாளும் சீனவில்லும் காப்பிரிகளின் கவணும் செறியும் நொறியும் எனப் பலவடிவப் படைக்கலங்கள் விற்ற கடைகளில் கரியதோள் களில் தசைபுடைத்த செங்கண்மறவர் நின்று தேர்ந்து விலை சொல்லிக் கூவினர். ஆமைஓடு கடைந்த அரணமும், மீன்முள்ளில் செதுக்கிய குறுவாள்பிடிகளும், சுறாப்பல் பதித்த உடுமுனைகளும் இளையோரைக் கவர்ந்தன. அருகே சங்கு வெட்டிய வளைநிரையும் யானைக்கொம்பில் செதுக்கிய தோள்செறியும் விற்கும் சேரநாட்டு வணிகர்கள் மலைத்தமிழில் கூவியழைத்தனர். அகிலும் சந்தனமும் நறுஞ்கண்ணமும் பூங்குழம்பும் அலத்தகமும் செஞ்சாந்துப் பொடியும் விற்கும் கடைத்தெருவில் அவற்றின் கலவைமணம் எழுந்து மூச்சை நிறைத்தது. கலிங்கத்துப் பட்டும், சீனப்பட்டும் குவிந்த அறுவைவீதியில் இளையோர் துணைவர வளையோர் கூடி விருப்பம் ஒளிரும் விழிகளுடன் பொருள் தேர்ந்தனர். மென்பருத்தி இறைஞ்சிகளும், மரமுரித்து நெய்த முறுகிய இறைஞ்சிகளும், கயிறுதிரித்துப் பின்னிய மெய்க்காப்பாடைகளும் குவிந்து குவிந்து

கூவி விற்கப்பட்டன. வடநாட்டுச் சிறுவிழி வணிகர் விற்ற கருமயிர் ஆடைகளை இடையரும் குறவரும் மிகுதியாக வாங்கிச்சென்றனர்.

கூலவீதியில் நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி, எள், கொள், பயறு, உளுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை எனப் பதினாறு வகை மணிகளும் குவிக்கப் பட்டிருந்தன. நிறைகோல் துலாவுடன் பறை ஏந்திய வணிகர் வருக வருக எனக் கூவினர். திரங்கல் மூட்டைகள் கோட்டைபோல அடுக்கப்பட்ட கடைகள் முன் யவன வணிகர் செம்பொற்சுருள் போன்ற தாடியுடன் நின்று விலை வினவினர். கூலம் கொளவந்த வணிகர்களின் வண்டிகள் நெரிந்து ஒன்றோடொன்று முட்டி நின்று ஒலியெழுப்பின. மீன்கடைத் தெருவில் வையையில் அள்ளிவந்த வெண்பரல்களும் அயிரைகளும் நீள்கயல்களும் நண்டுகளும் ஆமை களும் குவிந்து கிடந்தன. பகன்றையின் அகல் இலைகளில் மீனள்ளிக் கட்டி விற்கும் பரவர்கள் மீன் வாங்க வந்த வினைவல் பெண்டிரை நோக்கிக் கூவிக் குரலெழுப்பினர். கூலவீதியின் மறு பக்கம் காயும் கனியும் விற்கும் கடைகளில் பதினெண்வகை வாழை யும் பன்னிருவகை மாவும் எண்வகைப் பலாவும் குவிந்துகிடந்தன.

காவல்படையினர் கண்ணெழாது காக்கும் பொலங்கடை வீதியும் பயங்கெழு வீதியும் இருபிரிவுகளாகச் சேர்ந்தே இருந்தன. படைக்கலம்கொண்டு எவரும் செலவளிக்கப்படவில்லை. பன்னிரு குற்றங்களும் இல்லாத தூய மணியும் கல்லும் விற்கும் இடம் என நூலோர் நுவன்ற அத்தெருவில் அமைதி நிறைந்திருந்தது. செம்புகை நிற யவனரும் கல்நிறக் காப்பிரிகளும் பொன்நிறச் சீனரும் மணல் நிறச் சோனகரும் கடைதோறும் அமர்ந்து மணி தேர்ந்தனர். நீல மணியைப் பாலில் போட்டுப் பால்நிறம் நீலமாதல் காட்டிக் குறை யிலி என்று நிறுவினர் சில வணிகர். சுடரொளி முன்பு செம்மணி ஒன்றைக் காட்டி நிறமிலியாதல் சுட்டி முதல்நிலைக்கல் அது என்று சான்று பகன்றனர் சிலர். இளந்தளிர் நிறமுள்ள மரகதம் ஒன்றை எடுத்து அதனூடு நோக்கிப் பயங்கெழுவீதி பசுமைகொள்வதைக் கண்டு நகைத்தார் ஒரு யவனர். நால்வகை மணிநிறமும் தன்நிற மெனக் கொண்ட தென்பாண்டி முத்துக்களைச் சந்தனச் சிறுபேழை யில் அடுக்கி கொள்வோருக்குக் காட்டி மீண்டும் மூடினர் வணிகர்.

பொலங்கடை வீதியில் சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூ நதம் என நால்வகைப் பொன்னிலும் அணிகள்செய்து அடுக்கி வைத்து காண்போரைக் கவர்ந்தனர். பொன்னில் செய்த நகைகளில் கொடிகளும் இலைகளும் தளிர்களும் மலர்களுமே உருக்கொண்டி ருப்பதைக் கண்டு போற்றப்படுவது பொன்னா அன்றிப் பூமரமா

என்று ஒரு முதியவர் சொல்லி நகைத்தார். பூமரம் இறுத்து நகையணிந்த மாதர் இன்று ஆழ்நிலம் அகழ்ந்து பொலங்கொண்டு அணிகின்றனர். ஆடவர் செல்லும் திசைகளே அகச்சிறை இருக்கும் அணங்குகள் உடலில் அணியாகின்றன என்றார் இன்னொரு முதியவர்.

நால்வகைப் பால்நிலை திரிந்து நாடுநர் கூடி வாழும் சிறு தெருக்கள் இலைநரம்புகள்போலப் பிரிந்துபிரிந்து சென்றன. அவற்றில் தேனடைபோல வீடுகளில் வினைவல் மக்களும் போர்த் தொழில் மறவரும் சிறுவணிகரும் உழவரும் ஆயரும் ஒன்றெனக் குடியிருந்தனர். அவர்கள் வணங்கிய பூதங்களும் இயக்கிகளும் நீலிகளும் குடிகொண்ட சிற்றாலயங்கள் தெருமுனைச் சந்திகளில் திறந்த சிறுவாயில்களுடன் நின்றன. தெருமுனம்புகளில் பசுங்கொடி படர்ந்த தூண்கள் கொண்ட ஊர்மன்றுகளின் கல்திண்ணைகளில் வேற்றூர் வறியோர் காலோய்ந்து அமர்ந்து பனைநீர் அருந்தியும் பழங்கள் உண்டும் இளைப்பாறினர். நண்பகல் உணவுக்கென மாதர் மூட்டிய அடுப்பின் புகை வேர்விட்டுக் கிளைபிரிந்து வானில் எழுந்து கலந்தது. செல்வர் கொடுத்த கூலமும் காய்களும் சேர்த்து வருவோர் பசி தீர்க்கும் அன்னவிடுதிகளில் செம்புக்கடாய்களில் சோறும் குழம்பும் கொதித்தன. மண்படிந்த கால்களுடன் அயர் எரிந்த விழிகளுடன் நானிலம் நடந்து வந்த கந்தலாடை அணிந்த பசிப்பிணியாளர் தங்கள் ஐம்பொறியும் சேர்த்து 'அன்னம் அன்னம்' எனத் தவமிருந்தனர்.

நகரை அணைத்துத் திசையை இருட்டி நின்றிருந்தது பெரு மதில். அதன்மீது கள்ளுண்டு கண் சிவந்த யவனர் குறடொலிக்க நடை பயின்றனர். அப்பால் விரிந்த நிலத்தில் மீன்கள் துள்ளும் ஒளியில் நீர் வளையங்களணிந்தபடி ஓடியது வையை என்னும் பொய்யாக்குலக்கொடி.

நகர்காண் காதை இது என்க.

ஞ

மன்றமுரசு ஆர்த்ததும் மன்னன் பணிசெய்யும் எண் பேராயமும் தத்தம் முறைப்படி அவைக்கண் அமளி சேர்ந்து அமர்ந் தனர். தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேழி, பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புன்னாடு எனப் பாண் டியன் ஆளும் பன்னிரு கொடுந்தமிழ் நாட்டுக் குடித்தலைவர் களுக்கும் முடிக்கொருவர் எனப் பன்னிருவர் அமர்ந்தனர். அறு சமயத்திற்கும் ஆறு கொள்கைக்கும் ஓரோர் அறிஞர் அமர்ந்தனர். சாக்கியரும் சமணரும் இருவர் வீதம் அமர்ந்தனர். உழவு, வணிகம், தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம் என அறு தொழிலுக் கும் ஒருவர் என அமைச்சர் அமர்ந்தனர்.

அவர்களை அமரச்செய்த அவைமுதல்வன் அவை நிறைந் தமைக்குச் சான்றாக மன்றமணியை ஒலித்ததும் மீன்விழியின் புகழ் கூட்டுக்குரலாக எழுந்து தலைமேல் ஒளிவானம்போல் வளைந் திருந்த பொன் மேவிய மரக்கூரைமீது எதிரொலி செய்தது. நிமித் திகன் உள்ளே சென்று தன் தனியறையில் மஞ்சத்தில் யவனர் நறுந் தேறல் மாந்திச் சேடியர் சூழ அமர்ந்திருந்த பாண்டியனிடம் அவை நிறைவுச் செய்தி சொல்லி வணங்கினான். சேடியர் மன்னன் மார் பில் நால்வகைப் பொன்னும் ஐவகை மலரும் எண்வகை வனப்பும் ஒன்பதுவகை மணியும் அணிவித்தனர். வேம்புமாலை அணிந்து தலையில் ஒளிரும் பொன்முடியுடன் பாண்டியன் நடந்தான். அவைக்குள் மணிச்செங்கோல் ஏந்திய ஏனாதி நுழைந்ததும் மங்கல நல்முரசம் ஆர்த்தது. மங்கலப் பேரொலிகள் எழுந்து அவை நிறைந்தது. பொன்வாவி அலையெழுந்ததுபோலப் பொற்காப் பணிந்த மார்புகளும் தோள்களும் அவையெங்கும் அசைந்தன. பாண்டியன் அரியணை அமர்ந்ததும் அவை அடங்கி நின்றது. அகச்சிறைக் கோட்டத்துள் ஆர்ப்பொலி எழுந்தது. மங்கலத்தாலம் ஏந்திய மகளிர் முன்வர சீனத்துச் செம்பட்டும் கலிங்கத்து மெல் லாடையும் அணிந்து பொன்னில் பதித்த புதுமணிகள் இமை யிமைச் சுடர தலையணியில் அரவுப்படம் இலங்கக் கோப்பெருந்

தேவி அவை நுழைந்தாள். அவையெங்கும் மீண்டும் வாழ்த்தொலிகள் எழுந்தடங்கின.

தென்குமரி புரக்கும் அன்னையின் பாதம் பணிந்து, மீன்விழியன்னை அருள் கேட்டு, பாண்டியன் புகழ் கூறி, நிமித்திகன் அவையைத் தொடங்கிவைத்தான். அதன்பின் அமைச்சர் பெருஞ் சாத்தனார் எழுந்து அன்று அவை நடுத் தேர்ந்து சொல்லளிக்கவிருக்கும் வழக்குகளைச் சொன்னார். தென்பாண்டி நாட்டின் எண்பது பேரூர்களிலிருந்து வந்த நாட்டார் தலைவர்கள் எழுந்து தலை பணிந்து முகமன் கூறித் தங்கள் வழக்குரைத்தனர். ஆக்குலம் புரக்கும் ஆயரும் உப்பெடுக்கும் உமணரும் நெல்வயல்களில் புகுந்து விளையழிக்கிறார்கள் என்றனர். வினையறிமன்னன் கோலே என்றும் விளைநிலங்களுக்குக் காவலாகும் என்றார் ஒரு முதியவர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் ''உங்கள் குடிநெறி என்ன சொல்கிறது?'' என்றான். ''எங்கள் குடிநெறி மறவர் குடிகளுக்கு நெல்லில் எட்டில் ஒன்று கொடுத்து விளைகாக்கும் மரபையே முன் வைக்கிறது'' என்றார் முதுவேளார். ''ஆயின் அதையே செய்க'' என்றான் பாண்டியன். அமைச்சர் எழுந்து சொன்னார் ''மன்னரே குடிநெறிகள் ஆண்ட காலம் இன்று இல்லை. இன்று நாடு விரிந்து நால்வகை நிலங்களும் நெருங்கிவிட்டன. குடிநெறிகள் குடிகளின் படைத்திறனாலும் குடிப்பூசலினாலும் நிலைநாட்டப்படுகின்றன. நாட்டு மக்களுக்குள் பூசல் என்பது மன்னனின் செங்கோலுக்கு இழுக்காகும்.''

''பாண்டியநாடு இன்று இரு கடலும் இரு மலையும் நிறைத்து விரிந்துள்ளதென நீவிர் அறிவீர். இப்பெருநிலம் எங்கும் மன்னனின் கோல் செல்லமுடியுமென எண்ணுகிறீரா?'' என்றான் பாண்டியன்.

''மன்னனின் கோல் செல்லா இடத்திலும் அறவோர் நூல் செல்லும்'' என்றார் அமைச்சர். ''அறவோர் நூல் செல்லா இடத்தும் மறையோர் சொல் செல்லும். மறையோர் சொல் செல்லாவிடத்தும் செல்லும் ஒன்று உள்ளது. அதையே அறம் என்பர் மூத்தோர். இம் மதுரையை அறம் ஆண்டதென்றால் இந்நாட்டின் கடல் சூழ்ந்த நிலங்களிலும் கார் சூழ்ந்த மலைகளிலும்கூட அவ்வறமே ஆளும்...''

பாண்டியன் மெல்லிய நகைப்புடன் தன் இருக்கையில் சாய்ந்தான். ''குடிநெறியன்றி வேறு நெறி எங்குமிருப்பதை நானறியேன் அமைச்சரே'' என்றான்.

''ஆம். மண்ணில் முதலில் தோன்றிய அறமென்பது குடிகாக்கும் அறமேயாகும். பாண்டியன் கோலுக்குப் பீடமாக

அமைந்ததும் அவன் பெருங்குடி நிலைநாட்டிய தொல்லறங்களே. மதில்நிரையமைத்து இந்நகரை எழுப்பிய பாண்டிய முன்தோன்றல்களின் காலத்தில் அரசும் அஞ்சும் பெருவலியுடன் இருந்தது குடிமூத்தோர் கூடிய பேரவை. இன்று அந்த அவை இல்லை. இன்று பாண்டியனின் கோல் அஞ்சும் சொல்லும் இல்லை, நூலும் இல்லை. மன்னா, உன் கோலின் எல்லை இன்று வானமேயாகும். இன்று உன்னை எது தடுக்க இயலும்? வடமாமலைவரை நாவலந் தீவை ஆளும் எல்லா மன்னரும் உன்னை அஞ்சுகின்றனர். அவியும் மலரும் முறைப்படிச் சேர்ப்பதனால் உனக்கு இறையருள் முழுமையாக உள்ளது. உன் கோல் வளைந்தால் உன்னைத் தண்டிப்பது யார்?''

பாண்டியன் சொல் அவிந்து செவி கூர்ந்தான்.

''அரைசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும் என்பர் அறவோர்'' அமைச்சர் சொன்னார். ''அறம் கண்ணுக்குத் தெரியாத பெரும் கோல். அடிக்கும் அணைக்கும் ஆளும் அழிக்கும் வல்லமை அது. பாண்டிய நாட்டை அறம் ஆளுமென்றால் அதன் புதல்வனாக நீ ஆள்வது எளிதினும் எளிது.''

''மறத்தின் துணையின்றி மண்ணில் கால்தொடும் அறம் ஏதும் இல்லை'' என்றாள் கோப்பெருந்தேவி. ''மறவர் இட்டதே மண்ணில் அறம் என்றுதான் நான் கற்றிருக்கிறேன்.''

''ஆம் ஆம் ஆம்'' என்று முழங்கியது அவைமறவர் குழாம். பெருவணிகர் தலைதாழ்த்தி அமர்ந்தனர்.

மென்நகை படர்ந்த முகத்துடன் பாண்டியன் சொன்னான் ''ஆம் அமைச்சரே, நான் சொல்லறியும் முன்னரே வில்லறிந்தவன். உங்கள் சொற்களையும் என் வில்லே ஆய்கிறது.''

அவை நகைத்தது.

''இனியுள இருபத்தேழு வழக்குகளில் பன்னிரு வழக்குகள் மறவரும் வணிகரும் கொண்ட உரிமைப்பூசல்கள். பிற பல்தொழில் மக்கள் மறவர்மீது தொடுக்கும் நெறிமீறல் குற்றங்கள்...'' என்றார் அமைச்சர்.

''இவ்வவையில் இன்று எஞ்சும் வழக்குகளையும் எம் மறவர் குடித் தலைவர்களே முடிவு செய்க'' என்றபடி பாண்டியன் திரும்பினான். நிமித்திகன் அவனருகே குனிந்ததும் ''பாணரும் விறலியரும் வருக'' என்று உத்தரவிட்டான்.

ஊர் மூத்தோர் வணங்கித் தங்களுக்குள் முகம் நோக்கி நடந்து வெளியேறினர். அவை எங்கும் அமைதி நிரம்பியது.

நிமித்திகன் குரலெழுப்ப பாணரும் கூத்தரும் குழாமும் அவர்தம் விறலியரும் அவை நடுவே ஆடரங்கில் ஏறினர். வெள்ளிச் சதங்கைகள் குலுங்கின. யாழ் ஒன்று தூணில் முட்டி, கருவண்டு பறத்தல்போல ஒலித்தது. ஐவகைக் கருவியினரும் அவர்தம் முறைப்படி அமர்ந்தனர். கிணையும் துடியும் பறையும் இயமும் எனத் தோற்கருவி மீட்டும் பாணர் பின் வளையத்தில் நின்றனர். குழலும் கொம்பும் எனத் துளைக்கருவி மீட்டும் பாணர் அதன் பின் நின்றனர். வீணையும் யாழும் என நரம்புக்கருவி மீட்டும் விறலியர் மூன்றாம் அணியில் நின்றனர். கஞ்சிரையும் இலைத்தாளமும் இருமருங்கும் நின்றன. பண்ணியமும் திண்ணியமும் இருபால் சேர்ந்தன. மிடற்றுகருவியெனச் சொல்லெழுப்பித் தாளமளிக்கும் புலவர் நால்வர் நடுவே நின்றனர். பேரியாழ் இரு மருங்கும் நிற்கச் செங்கோட்டு யாழ் மூன்று நடுவே அமைய, மகர யாழேந்திய பாணரும் சகோட யாழேந்திய விறலியரும் அரங்கில் நின்றனர்.

பெருங்களிக்கூத்தின் மூன்றாம் வகையான குரவைக்கென அவை நடுவே வந்த விறலியர் எழுவர் பூத்தாலமேந்தி நின்று அரங்கைச் சுற்றிவந்து தென்குமரி ஆளும் மீனவன் குடிச்சிறப்பைப் பாடி வணங்கினர். நால்வகைக் கருவியும் நூல்முறை வழுவாது ஒலித்த தாளத்தில் மலர்பூத்த மரக்கிளைகளெனக் கைகள் சுழற்றியும் கனிகொண்ட கொடிகளென இடையசைத்தும் மலருண்ணும் வண்டென விழிசலித்தும் அவையெங்கும் பூத்த கண்களை நிறைத்து நின்றாடினர். பின்னர் கூத்தர் எழுவர் கையிலேந்திய மலர்வில் நாணேற்றி அரங்குக்குள் வந்தனர். இளவேனிலுக்குரிய செவ்வழிப் பண் பேரியாழில் நிறைந்து ததும்பியது. தலையும் கையும் விழியும் நகையும் ஒன்றையொன்று தொடர ஆடி அவர் மலரம்புகளை அப்பெண்டிர்மேல் எய்தனர். பேதையும் பெதும்பையும் மங்கையும் மடந்தையும் அரிவையும் தெரிவையும் என அறுபருவப் பெண் டிரும் அம்மலர் கொண்டு முலை விம்மி இடை நெகிழ்ந்து எய்திய காமநோயை விறலியர் நடித்தனர். அரங்கில் இளவேனிலின் நறுமணம் நிறைந்ததென அவையோர் நெடுமூச்செறிந்தனர்.

அவை தளர்ந்து முழவெழுந்து அடுத்த ஆடலுக்காக விறலியர் விலகிப் பாணர் சுதி சேர்த்தபோது மெல்ல எழுந்து கோப்பெருந் தேவி நடந்து தன் அகச்சிறை ஏகினாள். அவளுடன் சேடியரும் சென்றனர். நறுந்தேன்மலரில் புகுந்த தும்பியென இருந்த பாண்டியன் ஏதுமறியவில்லை.

அரசவைக் காதை இது என்க.

அரண்மனை முகப்பின் ஓங்கிய அறங்கூறவையத்தில் போர்முரசு அமைந்த முரசுக்கட்டில்முன் போடப்பட்ட இருக்கைகளில் மறித்தலும் மறலுதலும் தொழிலாக்கிய மறக்குடித் தலைவர்கள் பன்னிருவர் வாள்களை மடியில் சாத்தி அமர்ந்திருந்தனர். அவர்களுக்குத் தலைமையாக மோகூர்க் கிழவன் பழையன் குட்டுவன் தன் கை நீங்காச் செவ்வேலுடன் இருந்தான். அவைமுன் இருந்த எட்டு மன்றிருக்கைகளில் தென்நிலம் வாழும் பரதர், நுளையர், உமணர், குறவர், மள்ளர், வேளார், ஆயர், வணிகர் என எண்பெருங்குடி மூத்தோர் அமர்ந்திருந்தனர். அவர்களுக்குப் பின் அவரவர் குடிமக்கள் கைகட்டி நின்றிருந்தனர். குடிகள் ஒன்பதும் வெற்றிலை கைமாற்றிப் பாண்டியனுக்கு வெற்றிமுகமன் கூவியபின் மன்று தொடங்கியது.

வழக்கோலைகளை அடுக்கிக் கையில் வைத்திருந்த நிமித்திகன் முதல் ஓலையை எடுத்து மீன்விழிக்குப் புகழ் சொல்லி வழக்கெடுத்து உரைத்தான். மள்ளர் வாழும் எட்டு மருத நிலத்து ஊர்களில் கோழியோன் கோயிலில் சேர்த்துவைத்த விதைநெல்லையெல்லாம் மறக்குடியினர் கொள்ளைகொண்டு சென்றதாகச் சொன்னான். எண் குடி மூத்தாரும் சொல்லுதற்கரிய கொடும்பிழை என்று சொல்லி நெஞ்சு கொதித்தனர். விதைநெல் என்பது மாந்தர்க் குரியதல்ல என்றார் முதுவேளார். உலகவியும் பஞ்சம் வரினும் ஊழிவரை விதைநெல் காப்பது வேளாரும் மள்ளரும் கொள்ள வேண்டிய நெறியென நூலோர் வகுத்திருந்ததைச் சுட்டினார். விதை நெல் கவர்வதும் அறவோரைக் கொல்வதும் ஆலயம் கவர்வதும் அரசனைப் பழிப்பதும் கொலைக்குரிய குற்றங்களாகும் என்பது மதுரை மரபு என்றனர்.

பழையன் குட்டுவன் வாய் நிறைத்த வெற்றிலையை அடைப்பைக்காரன் ஏந்திய தாலத்தில் உமிழ்ந்து தன் நரைமீசை கோதினான். தன் குடி மறவரை ஒருமுறை நோக்கியபின் ''மறவர் விதைநெல் கவர்வதற்குரிய கருத்து யாது ?'' என்றார்.

ஊர் மறவர் எழுந்து ''எங்கள் கருங்கழல் கொற்றவைக்குப் பலியும் உண்டாட்டும் கொடுக்குமுகத்தான் நெல் கவர்ந்தோம்'' என்றனர்.

மள்ளர் தலைவர் ''மறவருக்குரிய எட்டிலொரு பங்கு முன்னரே அளிக்கப்பட்டுவிட்டது'' என்றார்.

பழையன் குட்டுவன் ''மள்ளரே கேளுங்கள். விருந்தூட்டுதலும் உண்டாடுதலும் மறவர் மறுக்கஒண்ணா அறம். நெல் போதாது போனால் ஊர் நுழைந்து நெல் கவர மறவர்க்கு அவர்கள் குடிநெறி வழிகாட்டுகிறது'' என்றார். ''விதைநெல்லும் கோயில் நெல்லும் மறவர்க்கு ஒன்றுதான். வேறுபாடு காண அவர்கள் அறியார்.''

''மறவர் நெறி எங்ஙனம் மள்ளரைக் கட்டுப்படுத்தும்?'' என்றார் முதுமள்ளர் சினத்துடன்.

''மள்ளர் நெறியால் நீவிர் இங்கு மறவரைக் கட்டுப்படுத்த முயல்கிறீர்'' என்றார் பழையன் குட்டுவன்.

மறவர் குடிமூத்தோர் மீசை வருடி மென்னகை பூத்தனர். எண் குடிகளிலும் சினம் அரும்பியது.

முதுவேளார் சினத்துடன் எழுந்து ''இங்கு ஒவ்வொரு குடிக்கும் அவர்களுக்குரிய நெறிகள் உள்ளன. அந்நெறிகள் அவர்கள் குடிகளை மட்டுமே கட்டுப்படுத்தும். குடிகளுக்கெல்லாம் பொதுவானது பாண்டியனின் கோல்'' என்றார்.

''அந்தக் கோலை நிறுத்துவது எங்கள் வேல்'' என்றார் ஒரு முதுமறவர். ''எவர் நெறி பிறரைக் கட்டுப்படுத்தும் வல்லமை கொண்டதோ அதுவே அவரைக் கட்டுப்படுத்தும் உரிமையும் கொண்டது.''

''உங்கள் நெறியை நாங்கள் ஏற்கவியலாது'' என்று கூவினார் உமணர் தலைவர். ''எங்களூர்களில் மறவர் புகுந்து கொள்ளையிடுகிறார்கள். எங்கள் வண்டிகளை ஊர்தோறும் நிறுத்தித் திறை கொள்கிறார்கள். மன்னர்க்குரிய பங்கு அளந்தபின்னும் எங்கள் வண்டிகளுக்கு காவல் இல்லை.''

''எங்கள் படகுகள்மீதும் மறவர்குடிகள் திறையிடுகிறார்கள்'' என்றார் பரதர் தலைவர் .

''சரி, நீங்கள் என்ன செய்யவிருக்கிறீர்கள்?'' என்றார் பழையன் குட்டுவன். ''வில்லேந்தி அம்மறவர்களை எதிர் கொள்ளப்போகிறீர்களா என்ன? அதற்கும் எங்கள் மறக்குடிகளே

வரவேண்டும். அவர்களுக்கும் நீங்கள் திறை செலுத்தவேண்டும்... என்ன சொல்கிறீர்கள்?''

மன்றெங்கும் அமைதி பரவியது.

''மறவர்களை எங்கள் மன்று தண்டிக்க வேண்டுமெனில் அவர்கள் தங்கள் குடிநெறி வழுவியிருக்கவேண்டும். பிறர் நெறி ஏதும் மறவரைக் கட்டுப்படுத்தாது. மறவரைப் பிறர் தங்கள் வாளால் மட்டுமே வெல்ல முடியும். வாளிருப்போர் முயலலாம்'' என்று முடித்தார் பழையன்.

வேளார்குடி மூத்தார் எழுந்தார். ''இம்மன்றில் எங்களுக்கு இடமில்லை என்பதே உங்கள் சொற்களுக்குப் பொருள் பழையரே'' என்றார். ''உம் குடிப்பெண் பாண்டியன் பெருந்தேவி என்பதனால் இன்று உம் கொடி அரண்மனைமீது பறக்கிறது. ஆனால் ஒன்று தெரிந்துகொள்ளும். இப்பாண்டிய நாட்டுக் குடிகள் எவையும் மழையில் முளைத்தவை அல்ல. கல்தோன்றுமுன் தோன்றி மண்ணில் ஆழ வேரோடியவை. அறங்கள் மயங்கித்தெளிவதை ஆயிரம் முறை கண்டிருக்கிறோம். இன்னும் காணவும் இருக்கிறோம். மயங்கியவை யாவும் தெளியும் என்பதே மண்மீதுள்ள மாறா நெறி என அறிவோம்...''

''சொற்களை எண்ணிச் சொல்வது உமக்கு நன்று'' என்று கூவியபடி எழுந்தார் பழையன். ''ஆம். என் மகள்தான் இன்று பாண்டியன் பெருந்தேவி. இம்மதுரை மாநகரின் மணிமுடியை அவளே சூடியிருக்கிறாள். மீன்விழிக்குப் பின் இந்நகரின் உரிமை என் மகளுக்குத்தான். ஏன் பாண்டியன் வந்து என் வாயிலில் நின்று பெண் கேட்டான்? ஏன் என் மகளே தன் தேவியாக வேண்டுமென்றான்? ஏன் இந்நாட்டின் பிற எட்டுக் குடிகளிலும் பெண் கொள்ளவில்லை?''

சொல்லிழந்து அமைந்தனர் எண்வகை மன்றத்தார்.

''என் குடியில் இருக்கிறது கன்னியின் வலச்சிலம்பு. கருங்கண் கொற்றவையின் அருள். இந்தத் தமிழ்நிலம் எங்கும் பரவி ஆளும் உரிமையை எங்களுக்கு அளித்துள்ளது தென்கடல்களை ஆளும் பேரன்னையின் ஆணை. இதை இங்கு எவர் மறுக்க இயலும்?'' என எழுந்து நின்று வேல் தூக்கிக் கூவினார் பழையன். ''மறுப்பவர் எவரேனும் உளரா இங்கு?''

''அன்னையின் கண்முன் அனைவரும் நிகரே'' என்றார் முதுவணிகர். ''ஒவ்வொரு குடிக்கும் அன்னையின் அணி ஒன்று கிடைத்துள்ளது என்பதே நானறிந்த கதை.''

''கதைகள் ஆயிரம் உண்டு. இந்நிலத்தில் நிற்கும் அத்தனை அன்னையரும் கன்னியன்னையே என்பதுண்டு. இந்நிலமாளும் உரிமையை என் தொல்குடிக்கு அளிக்கும் அன்னையின் அரிபெய் சிலம்பு வேறு எவருக்கேனும் உளதா என்பதே என் வினா.''

மன்று அமைதி காத்தது.

''இல்லை. எத்தனை அணிசொற்களை அள்ளிச் சூட்டி னாலும் இம்மெய்ம்மீது நிற்காது உதிரும். இல்லை. தமிழ்நிலத்து ஒன்பது குடிகளில் முதற்குடி எங்கள் குடியே. இந்த மண்ணுக்கு முதல் உரிமை எங்களுக்கே. மறவர் நெறியே கன்னியின் நெறி என்ப தற்குச் சான்று அன்னையின் பொற்சிலம்பே.''

தங்கள் வாட்களை உயரத்தூக்கி ''ஆம் ஆம்'' என்று ஆர்த் தனர் மறவர்.

''மறவர்குடிக் கிழவரே, உம்மிடமிருப்பது வலச்சிலம்பு. இடச் சிலம்பு எங்கே? அதுவும் இத்தமிழ் நிலத்தில் எங்கோ இருக்கு மல்லவா?'' என்றார் குறவர் குடித்தலைவர்.

''இடச்சிலம்பு கடல்கொண்ட தென்னாட்டை ஆண்ட மறக் குடிகளுக்குரியது என்பது எங்கள் குடிநூல் கூற்று. அக்குடிகள் நெறி வழுவியதனால் அன்னை சினம் கொண்டு அம்மண்ணை அள்ளி உண்டாள். வலச்சிலம்பை எங்கள் குடிமூத்தார் ஒருவருக்களித்து மதுரை நகர் நிறுவி மண்ணாளும்படி வகுத்தாள். எங்கள் கொடி இம்மண்ணில் சரியுமெனில் மீண்டும் அன்னையின் ஆறாப் பெரும்பசி இம்மண்ணை விழுங்கும் என்பது எங்கள் குடி அறிவு. இன்று இம்மண்ணில் உள்ள அன்னையின் ஒரே அணி எங்கள் சிலம்பு மட்டுமே.''

''பழையரே, எங்களிடம் இன்று சொற்கள் இல்லை. ஆனால் வாளும் வேலும் உங்கள் எண்ணங்களில் நிழல் வீழ்த்தியுள்ளன என்றறிக. அன்னை உங்கள் ஆணவத்தை அடக்குவாள் என்றே நாங்கள் எண்ணுகிறோம். இந்த மண்ணிலேயே கன்னி அன்னை யின் மந்தணச் சொற்கள் பொறிக்கப்பட்ட இடச்சிலம்பும் இருக்கும். அச்சிலம்பை அன்னை நமக்குக் காட்டுவாள். அப்போது நீர் அறிவீர் இங்கு அத்தனை குடிக்கும் அன்னையின் அணி ஒன்று அளிக்கப் பட்டுள்ளது என. அன்னையின் புதல்வர்களுக்குள் பெருமை சிறுமை இல்லை என. இம்மண்ணை ஆள்வது குடிநீதியல்ல, அன்னையின் அழியாப் பேரறம் என...'' முதுவேளார் கண்ணீர் மல்கக் கூவினார்.

''உம் குடித்தெய்வம் முன்பு கூவியழுவதற்கான சொற்களை

இம்மன்றுமுன் வைப்பது ஏன் என நானறியேன்'' என்றார் பழையன். மறவர் கூவி நகைத்தனர்.

''அன்னையின் பேருடலிலும் இம்மண்ணிலும் எங்கள் உரிமை நிறுவப்படும்வரை இந்த மன்றுக்கு நாங்கள் வருவதில் பொருளில்லை'' என்றபடி பரதரும் குறவரும் மள்ளரும் எழுந்தனர். ''கேளுங்கள் மறவர் தலைவரே, அப்போது நாங்கள் எங்கள் குடி சூழக் கொடி எழத் திரண்டு வருவோம்... இப்பெருநகரை நாங்கள் கொள்வோம்... ஆம், அந்நாள் மிக விரைவில் வரும்... அன்னை அருள்க!''

''ஆம் அவ்வாறே ஆகுக'' என்றது எண்குடி மக்களின் எழுகுரல்.

பழையன் நகைத்தபடி தன் வேலை நிலம்மீது ஓங்கி ஊன்றினார். மன்ற முரசு ஒலித்தது. குரல்கள் எழுந்து சிதற அவை கலையத் தொடங்கியது.

மன்றுசூழ் காதை இது என்க.

ᘐ

அரண்மனையின் வடபுலத்தே உரிமைப்பள்ளியின் பின்புறத்து தனிவாயில் வழிச்செல்லும் பாதை சென்றுசேரும் துணைமனையாக இருந்தது அரசமகளிர் வாழும் அகச்சிறைவீடு. தென்புலத்தில் மூதாதையர் உறையும் அறப்புரையும் படிஞாயிறுத் திசையில் படைக்கலப்புரையும் இருப்பது சிற்ப நூலோர் வகுத்த முறை. அகச்சிறைவீட்டுக்கு ஆணிலி மாக்கள் படைக்கலமேந்திப் பகலிரவும் காவல் நின்றனர். அகவாய்க் கோட்டங்களில் நறுஞ் கண்ணம் அரைப்பவரும் அகிலும் சந்தனமும் திரைப்பவரும் எனத் தோழியர் ஆயிரம் தொழிலாற்றினர். அவர்தம் சிலம்பொலியும் நகைப்பொலியும் அறைகளில் நிறைந்திருந்தன. அங்கணப்பெரு விரிவில் அகம்படி மகளிர் நீர் சேந்தியும் மலர் தொடுத்தும் அணிகள் துலக்கியும் ஏவல் செய்தனர். தேன்மலர்மரத்தில் வண்டொலியென முழங்கியது அகவீடு.

பாண்டிய முடி சூடிய கோப்பெருந்தேவி வேல்நெடுங்கண்ணி என்றும் ஒழியாத் தலைநோய் கொண்டவளென்பது நாடறிந்தது என்பதனால் தென்நாட்டு முதுமருத்துவரெல்லாம் என்றும் அகவீட்டுக்கு உரியவரென இருந்தார்கள். தனிவீடொன்றில் காயும் இலையும் வேரும் விழுதும் சேர்த்து மருந்து சமைக்கும் மருத்துவர் குழுவே என்றும் தங்கியிருந்தது. அங்கே கற்குழவிகள் இடித்து இடித்து ஒலிக்கும் தாளம் இரவிலும் பகலிலும் எழுந்தது. தலை நோய் தாங்காது வெண்கலிங்கம் போர்த்திய மென்பஞ்சணைமீது புரண்டபடி கோப்பெருந்தேவி கூவினாள். மருந்தும் நறுமணமுமாக முதுசேடியர் உள்ளே ஓடினர். அறைக்கு வெளியே நின்று இளஞ் சேடியர் ஏவல் கேட்டறிந்தனர். அரசமருத்துவருக்குச் செய்தி சொல்ல ஒருத்தி ஓடினாள்.

அரசமருத்துவர் நல்லந்துவனார் தன் மாணாக்கர் இருவ ருடன் வந்து தலைச்சேடி முன் நின்றார். முதுவிழிகளில் சினம் சுடர ''உங்கள் நூலறிதல்களில் காலம் சிதலாகப் படர்ந்துளது போலும் நல்லந்துவனாரே. உம் மருத்துவத்தால் எள்முனையளவும் நோய்

ஆறவில்லையே'' என்றாள் தலைச்சேடி ''ஆம், நோய்முதல் நாட என்னால் இயலவில்லை. நானறிந்த நூல்கள் என்னை கைவிட்டன'' என்றார் நல்லந்துவனார் ''இவன் என் முன்னாள் மாணாக்கன் எயிற்றன். வடபுலம் சென்று அவர்தம் மருத்துவமும் கற்றுவந்தவன். இன்று இவன் தேவியாரை நோக்கி நோய்முதல் நாடுவான்.''

சுரிகுழற் கற்றைகள் தோளில் சரிந்திருக்க நெற்றியில் செஞ் சாந்துப் பொட்டிட்டு நீரொளியென விழி சுடர்ந்து நின்ற இளை ஞனை நோக்கிய சேடி உள்ளே சென்று தேவியை அறிவித்து மீண்டு அவர்களை ஆற்றுப்படுத்தினாள். வெண்கலிங்கப் பட்டு விரித்த மஞ் சத்தில் கண்மூடிக் கிடந்த கோப்பெருந்தேவியின் அருகே சென்று முகமன் கூறி வணங்கி அமர்ந்ததும் எயிற்றன் அவள் கைபற்றி நாடிகளை நோக்கினான். அவள் உண்ட மருந்துகளைப்பற்றி உசாவி னான். பின்பு அவளிடம் நோய்முதல் கருத்தை தனிமையில் கூற வேண்டும் என்றான். சேடியர் விலக கோப்பெருந்தேவி ஆணை யிட்டாள்.

மீண்டும் அவளை வணங்கி மருத்துவன் சொன்னான். ''தேவி, நான்கு முதற்பருக்களால் ஆனது உடல் என்பது நம் நூல்மரபு. நிலமே உடலின் உரு . நீர் அதில் உதிரம். வளி அதில் மூச்சு. அனல் அதில் காமமும் பசியும். உங்கள் உடலில் இந்நான்கும் குறைவின்றியுள்ளன. நம் மருத்துவம் இந்நான்கும் குறைவுபடின் சீர் செய்யும் முறையையே கற்றுள்ளது. நான் கற்ற வடமருத்துவம் ஐந்தாவது பருவொன்றையும் சேர்க்கிறது. வானம் நாடிகளில் தீண்டப்பட இயலாத பரு. உருவிலாப் பரு அது. நாற்பெரும் பருக்களில் நுண்வடிவில் கலந்துள்ள பருவென்பர் அதை. உங்கள் உடலில் குறைந்துள்ளது வானமே.''

அச்சொற்களை அகம்கொள்ள இயலாதவளாய் ஏறிட்டு நோக்கிய பாண்டிமாதேவியை நோக்கி எயிற்றன் சொன்னான். ''தேவி, நீங்கள் முடிவிலி வானம் மூடிய பெருநிலவிரிவில் பிறந்து வளர்ந்து வாழ்ந்தவர். இளமைமுதல் உங்கள் தலைமீதிருந்தது விண்ணகப் பெருங்குடை. இன்று உங்கள் தலைக்கு மேலிருப்பது பாண்டியனின் வெண்கொற்றக்குடை. ஆம், நாவலந்தீவில் இக்குடைக்கு இணையாக பிறிதொரு கொற்றக்குடை இல்லை யென்பதை நானறிவேன். ஆயினும் அரங்காடும் அண்ணலின் ஆகமேயான வானக்குடைக்கு அது ஈடல்ல. இக்குடை விட்டு அக்குடை தேரும்வரை உங்கள் நோய்க்கு மருந்தும் இல்லை.''

அச்சொற்களின் சுமை ஏற்க இயலாதவளாய் தன் மஞ்சத்தில் சாய்ந்த வேல்நெடுங்கண்ணி பின் நெடுமூச்செறிந்து ''நீவிர்

போகலாம். மருத்துவரே... உமது சொற்களை நான் எண்ணுவேன்'' என்றாள்.

அகவீடு நீங்குகையில் அச்சத்துடன் நல்லந்துவனார் சொன்னார் ''எண்ணாது சொல்லிவிட்டாயே குழந்தாய். வெண் குடைக்கீழ் நின்றவர் என்றாவது அதை விட்டதாக அறிந்துளாயா? அரசகுடியினரின் நோய்களுக்கு அரசநிலையே முதற்காரணம் என அறியாத மருத்துவன் எவன்? அதை எம்மருத்துவனும் அவர்களிடம் கூறத் துணியமாட்டான்... உனக்கு நீயே பெருந்தீங்கு இழைத்துக் கொண்டாயே...''

''பிணிமுதற்கருவைப் பிணியாளர்களிடம் கூறுவது மருத்துவன் கடன் அல்லவா?''

''ஆம். ஆனால் அரசகுடியினர் வெறும் பிணியாளர் அல்லர்.''

''அல்ல ஆசிரியரே... என் சொற்களைப் பொறுத்தருள்க. ஐம்பருக்களும் மாந்தர் உடலில் குடை நிழலும் குடிமுதலும் நோக்கிக் கூடி நிற்பதில்லை. அவற்றி[illegible]றிகளே வேறு. மருத்துவன் நாடக்கூடுவது அந்நெறிகள் மட்டுமே. நான் மருத்துவனாக மட்டுமே என்னைக் காண்கிறேன். மருத்துவனாக யானைக்கால்களின் கீழ் நெரிபடுவதெனினும் சரியே.''

நல்லந்துவனார் ''உன் சொற்கள் என் அகத்தில் அலை யெழுப்புகின்றன. ஆயின் என்னுள் அச்சமே மேலோங்குகிறது'' என்றார்.

அகச்சிறைக் காதை இது என்க.

ஃ

பாண்டியன்மாதேவி வேல்நெடுங்கண்ணி மீன்விழி அன்னையின் விண்ணகரத்தில் மாலைப்பூசனைகளை முடித்து அகம்படியோர் துணைவர அகவாய்க் கோட்டத்திற்கு இரவு எழும் நேரத்தில் மீண்டபோது அவள் தந்தை அவளுக்காகத் தனியாகக் காத்திருப்பதை அறிந்தாள். பழையன் குட்டுவனின் புரவித் துணைவர் அகவாய்முகப்பில் காவல் நின்றனர். கோப்பெருந்தேவி உள்ளேசென்றதும் பழையன் எழுந்து ''பாண்டிமாதேவிக்கு மறவர் குடித்தலைவனின் வணக்கம்'' என்று கூறித் தலை தாழ்த்தினார். ''அவ்வாறே ஆகுக'' என்றபடி அவள் அருகே சிறுமஞ்சத்தில் அமர்ந்தாள். முதுசேடியைத் தவிரப் பிறர் வெளியேறினர்.

''மீண்டும் பாண்டிமாதேவியை முகம்காட்ட முடிந்தமை உவகைக்குரியது'' என்றார் பழையன். அம்முகமன் என்றும்போல அன்றும் அவளுள் சீற்றத்தை எழுப்பியது. ஒருகணம் அவர் வலிய கரிய தோள்களையும் ஆலவேர் புடைப்பென நரம்பெழுந்த கைகளையும் கண்டு அவற்றில் தாவியேறி ஆடிய காலங்களின் நினைவால் அகத்தே கண்ணீர் மல்கினாள். மறுகணம் அவர் விழிகளில் தன்னை அறியமறுக்கும் திரை கண்டு கனன்று சிவந்து அகம் கொதித்தாள்.

''தங்கள் தலைநோவுக்குக் குறைவிருக்குமென எண்ணுகிறேன்'' என்றார் பழையன். ''மருத்துவர் மாறனார் முதுமையும் கேள்வியும் கொண்டவர்.''

''சிலநாள்முன் எயிற்றன் என்னும் இளம் மருத்துவன் வந்து நோக்கிச் சில சொன்னான்'' என்றாள் பாண்டிமாதேவி.

''ஆம். அறிந்தேன். அவனை யானை மிதித்துக் கொன்றதெனச் சொன்னார்கள். இரக்கத்துக்குரிய நிகழ்ச்சி'' என்றார் பழையன். பாண்டிமாதேவி தந்தையின் கண்களை ஒரு கணம் முட்டி, பின்பு விழி தழைத்தாள். நெடுமூச்சுடன் ''ஆம்'' என்றாள்.

''நான் சில புதிய நிகழ்வுகளைத் தங்கள் செவிகளுக்குக்

கொணரலாமென எண்ணினேன்'' என்றார் பழையன், மாறாத கிழக்குரலில். ''சென்ற சில நாட்களாக நாடெங்கும் எண்குடி யினரும் தங்கள் பழம்பகையெலாம் மறந்து ஒன்றுகூடுகிறார்கள். கொற்கையிலும் நெல்லையம்பதியிலும் அவர்களின் பெருமன்று மன்னர் அறியாது கூடியிருக்கிறது. மந்தணச் செய்திகளை ஏந்திய ஏவலர்கள் புரவிகளில் நாடெங்கும் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஓலைகளை நாற்பது முறை மீட்டெழுதி நாற்பது ஊருக்கு அனுப்பு கிறார்கள் ஒவ்வொருவரும். பாலையில் கோடைநெருப்புபோல் சினமொன்று பாண்டி நாடெங்கும் பரவுகிறது. என் ஒற்றர்கள் விரிவான செய்திகளை அளித்திருக்கிறார்கள்'' என்றார் பழையன்.

''அவர்கள் கோருவதென்ன?'' என்றாள் கோப்பெருந்தேவி.

''மறவர் மன்றுக்கு இணையான அரசுப்பொறுப்பு. சென்ற பல ஆண்டுகளாகவே அவர்கள் மறவர்நெறிக்குத் தங்கள் குடிநெறி ஆட்படலாகாதெனச் சொல்லி வந்திருக்கிறார்கள். மறவர் கை வேலும் வாளும் அக்குரல்களை வென்றுவந்தன. இப்போது அவ் வெல்லையை அவர்கள் மீறத்துணிகிறார்கள்.''

''பல ஊர்களில் மறவர் தங்கள் குடிவழக்கங்களையும் ஊர்மரபுகளையும் மீறுவதாக அறிகிறேன்'' என்றாள் கோப்பெருந் தேவி ''கோயில் செல்வங்களைக்கூட அவர்கள் கொள்ளையிடு கிறார்கள் என்றும் ஊரங்காடிகளில் புகுந்து மள்ளர் மக்களைப் பிடித்து வடநாட்டு வணிகருக்கு உரிமைமக்களாக விற்றுவிடுகிறார் கள் என்றும் கேட்டேன்...''

''அவற்றில் மெய் சிலவும் பொய் பலவும் கலந்துள்ளன'' என்றார் பழையன். ''மறவர் எல்லை மீறுவது பாண்டிநாட்டுக்கு புதுவதல்ல. ஆனால் பல செய்திகள் திட்டமிட்டு ஊர்கள்தோறும் பரப்பப்படுபவை. இன்று எது பொய் எது மெய் என பகுப்பதும் எளிதல்லாது ஆகியுள்ளது. மருவாரும் பொருவாரும் இல்லா இந்நாட்டில் போர் நிகழ்ந்து பல ஆண்டுகளாகின்றன. எரிபரந் தெடுத்தலும் ஊர்கொள்ளலும் உண்டாட்டும் இன்றி மறவர் எத்தனை காலம் வாழ இயலும்? அவர்கள் நெறி பிழைத்தா ரென்றால் மறவர் மன்று தண்டிக்கும். கருங்கழற் கொற்றவையின் அறம் அவர்கள்மீது உள்ளது. அதற்குமேல் இவ்வெண்குடி நெறி அமையவேண்டியதில்லை என்றே நான் கருதுகிறேன்.''

கோப்பெருந்தேவிக்கு அச்சொற்களும் அவற்றின் உள்ளே ஓடும் எண்ணங்களும் என்றும் சலிப்பையே ஊட்டுவன. ''உங்கள் அரசியலாட்டங்களில் நான் செய்வதென்ன உள்ளது? இன்று சாவக நாட்டுச் செம்பவளங்கள் கொண்டுவந்து காட்டுவதாகத் தலைப்

பொற்கொல்லர் சொல்லியிருந்தார்'' என்றாள்.

சினம் பொறிவிட்டு அணைந்த விழிகளுடன் பழையர் சொன்னார் ''பாலைத்தீ என்றேன். பாலைத்தீ அச்சத்திற்குரியது. உணவின்றி நொய்ந்தழியுமேயன்றி அணைக்க இயலாது. அதன் வெம்மையில் வெற்புகள் வெடித்து உடைந்து நின்றதைக் கண்டிருக்கிறேன்...'' என்றார். ''இப்போது அது ஆங்காங்கே சிலர் மூட்டும் சிறுநெருப்பாகத்தான் உள்ளது. அதை இன்றே அணைப்பது நமக்கு நல்லது...''

''நமக்கென்றால்?'' என்றாள் தேவி.

''நம் குடிக்கு. பாண்டியன் கோலுக்கு'' என்றார் பழையன். ''நம் குடிக்கதைகளின்படி இம்மதுரை மண் முன்பு நம் குடியினரால் ஆளப்பட்டது.''

''அப்போது இது மண்ணல்ல, காடு.''

பழையன் கண்களில் சினம் பொறிகொண்டு அணைந்தது. ''ஆம். ஆனாலும் இது நம் மண். காலம் அறியா நாள் ஒன்றில் படைகளும் குடிகளுமாகக் கடலேறி வந்த பரதவர் இம்மண்ணை நிறைத்தனர். மதில்நிரையமைத்து இப்பெருநகரை அமைத்தனர். தங்கள் மீன்கொடியை இங்கே பறக்கவிட்டனர். தலைமுறை தலைமுறையாக நாம் நம் மண்ணுக்காகப் பொருதோம். நம் குடி சிதறியழிந்தது. பாலைகளுக்கு நாம் துரத்தப்பட்டோம். நாடாள எடுத்த விற்களையும் வாட்களையும் கொண்டு உணவுக்கும் உடுக்கைக்கும் வழிநடையரைக் கொள்ளையிட்டோம். ஆறலைக்கள்வரென இழிபெயர் கொண்டோம். இன்று நம் கொடி மதுரையில் மீண்டும் பறக்க நல்லூழ் அமைந்துள்ளது. பெருந்தேவியாரின் மணிவயிற்று மைந்தன் இந்நாடாளும்போது அது முழுமைகொள்ளும்...''

''ஆம். ஆனால் மன்னன் செங்கோல் மக்களால் தாங்கப்பட வேண்டும். மன்னர் மக்களைக் காப்பதுபோல மக்கள் மன்னரையும் காக்கவேண்டும். அதற்கு எண்குடியினரின் ஒப்புதலையல்லவா நாம் நாடவேண்டும்?''

''அரசகட்டில் வாளையும் வேலையும் வில்லையும் அம்பையுமே தன் கால்களாகக் கொண்டுள்ளது'' என்றார் பழையன். ''அச்சமின்றி அரசு இல்லை என்பதே என் பழுத்த மீசை எனக்குக் கற்பித்த மெய்யறிவு. நமது வலிமையை எண்குடியாரும் உணரும்போது நம் சிறப்பும் அவர் நெஞ்சில் பதியும். நமது கோலின்கீழ் அவர்கள் பணிந்து வாழ்வர். இன்று உருவாகும் எதிர்ப்பை நான் முளையிலேயே கிள்ளவிருக்கிறேன்.''

"எவ்வண்ணம்?"

"எண்குடியினரின் குடிமன்றாளும் தலைவர்களைக் கொல்வதே ஒரே வழி. மக்களின் உள்ளக்கருத்தைத் தன் சொற்களால் சுட்டமுடியவனே தலைவனாகிறான். அத்தலைவன் சொற்கேட்டுப் பின் தொடர்வது மட்டுமே மக்களால் இயல்வது. இன்று எண்குடியினரிடம் கூடும் சினத்தின் பருவடிவாக இருக்கும் குடிமூத்தோர் எண்பதின்மர். அவர்களை ஆங்காங்கே மறவர் சிறுசிறு பூசல்களில் கொல்வர். தலைமை இன்றி மக்கள் தவிக்கும்போது நம் வலிமையை நாம் காட்டுவோம். வலிமையே வணங்கச்செய்வது..." என்றார் பழையன். "இது புதிய வழியுமல்ல. நீள்நெடுங்காலம் முன்பு மீன்கொடி ஏந்தித் தென்நாடு விட்டுவந்த பண்டையோர் நம் குடிகளை வென்றதும் இவ்வண்ணமே. அவர்களுக்கு அன்று நீள் கால வரலாறு கொண்ட நெறியும் தலைமையும் இருந்தது... நம் குடிக்கோ ஒருபெரும் தலைமை அன்று இருக்கவில்லை."

கோப்பெருந்தேவி "ஆம், என்றும் நிகழ்ந்துள்ளது இதுவே..." என்றாள். "நான் பொற்கொல்லரைக் காணும் நேரம் நெருங்கிவிட்டதென எண்ணுகிறேன்."

"நான் தங்களிடம் கூறவந்த செய்தி இன்னொன்று உள்ளது. நாம் நம் வாள்வலிமையைக் காட்டும்போது கூடவே நம் மரபின் சொல்வலிமையையும் நிறுவ வேண்டியுள்ளது. மறுக்கமுடியாதபடி நம் குடியின் பெருமையைக் காட்டும் குறி கருங்கழற் கொற்றவையின் வலக்காற்சிலம்பேயாகும்."

"ஆம்" என்றாள் பாண்டிமாதேவி.

"வரும் மடங்கல் திங்கள் முதற் கருநாளில் கருங்கழற் கொற்றவையின் கழலணிநாள் வருகிறது. அன்று உங்கள் அரிமணிச் சிலம்பைப் பெரும் ஊர்கோலமாக யானை மீதேற்றிக் கொண்டு சென்று அன்னை காலடியில் வைத்து ஏழு நாட்கள் பூசனை முறைகள் செய்து மீண்டுமணிவதாக ஒரு விழாக் கொண்டாட எண்ணுகிறேன். நாடெங்கும் உள்ள மறவர் குடிகள் தங்கள் குடிக்கன்னி ஒருத்தியின் வலச்சிலம்புடன் ஊர்கோலமாகக் கிளம்பி மதுரை வந்து அப்பூசனையில் கலந்து அன்னை அருள்பெற்றுச் செல்வார்கள். மதுரைமீதான நம் குடியின் உரிமையை அந்நாள் நிலைநாட்டும்..."

"அவ்வாறே ஆகுக" என்றாள் கோப்பெருந்தேவி. பின்பு சேடியிடம் "பொற்கொல்லர் வந்துவிட்டாரா?" என்றாள்.

"ஆம் தேவி. சாவகச் செம்பவளம் கொண்டுவந்திருக்கிறார்."

"எனக்கு விடைகொடுங்கள் தேவி" என்றார் பழையன்.
"நலம் சூழ்க" என்று வாழ்த்தி பாண்டிமாதேவி எழுந்தாள்.
வஞ்சினக் காதை இது என்க.

அரங்கொழிச்செய்யுள் ஆடி விறலியர் பின்செல்லப் பாணர் யாழ் மீட்டி வணங்கி அமைந்தனர். நிமித்திகன் முன்னகர்ந்து மீன்விழியையும் பாண்டியனையும் வாழ்த்தினான். அவை எழுந்து வாழ்த்தொலி எழுப்பியது. பாண்டியன் அவை முதல்வோருக்குத் தலைவணங்கி அரண்மனை உள்கோட்டத்துக்கு நடந்தான். அமைச்சர் பெருஞ்சாத்தனார் உடன் நடந்தார். பாண்டியன் இளவேனிலின் மென்காற்று தன் ஆடையும் குழலும் கலைக்க விட்டுச் சற்றே நின்றான். அரண்மனை முகப்பில் நின்ற கொன்றைமரத்திற்கு இளவேனில் அணிவித்த பொன்னாரத்தை மகிழ்வுடன் நோக்கினான்.

அமைச்சர் பெருஞ்சாத்தனார் மெல்லத் தொண்டை செருமி அசைந்தார். ''என்ன அமைச்சரே, செய்தி ஏதுமுளதோ'' என்றான் பாண்டியன்.

''ஒற்றர் கொணர்ந்த சேதியை நான் முன்னரே மன்னருக்கு அளித்திருந்தேன்'' என்று அமைச்சர் பெருஞ்சாத்தனார் சொன்னார். ''யாது செய்வது என்று ஏதும் சொல்லவில்லை.''

"ஆம், சேதியளித்தீர். தென்னாட்டில் எண்குடியாரும் சினம் கொண்டிருப்பதாக அறிந்தேன். அவர்கள் தங்கள் குடிமூப்பர்களை அனுப்பிக் கோப்பெருந்தேவியிடத்து உரையாடுக!'' மீண்டும் பாண்டியன் நடந்தான்.

அமைச்சர் பெருஞ்சாத்தனார் ''இந்நிலையினை மன்னர் உளம் கொள்ளவில்லை என அஞ்சுகிறேன். எண்குடியாரின் சினம் கோப்பெருந்தேவியின் ஆட்சி மீதுதான்...'' என்றார். ''மேலும் இப்போது தென்னாட்டு நிலை உரையாடித் தீர்க்கும்படியாக இல்லை. அந்நிலையை என்றோ தாண்டிவிட்டோம். எண்குடியாரின் குடித்தலைவர்கள் இந்தச் சின்னாட்களில் நாடெங்கும் பூசல்களில் ஒவ்வொருவராகக் கொல்லப்படுகிறார்கள். நம் அரச காவலைக் கோரி அவர்கள் நமக்குப் பலமுறை ஆளனுப்பியும் இங்கிருந்து எவரும் செல்லவில்லை. இன்று சினம் கொதித்து அவர்கள்

தங்கள் குடி இளைஞர்களுக்கு படைக்கலப் பயிற்சி கொடுக்கவும் முனைந்துள்ளனர்...''

''வணிகரும் வேளிரும் படைக்கலமேந்துவதா... நன்று நன்று'' என்று நகைத்தான் பாண்டியன்.

''மன்னரே, இது நகைப்புக்குரியதல்ல. நாடெங்கும் பரவும் இச்சினத்தீ மதுரையை எக்கணமும் வந்தடையக்கூடும். பழையூரிலும் நெல்லைப்பதியிலும் குடிகளின் பூசலில் ஊர்கள் எரிகின்றதாக ஒற்றர் சொல்கிறார்கள். பேராலயங்களுக்குள் திரண்டு மக்கள் மறவர்களுக்கு எதிராகப் போர்க்கோலம் பூண்டிருக்கிறார்கள்...''

''ஆம். அது மிகக் கடுமையான சூழலே'' என்றான் பாண்டியன். ''நாளை நம் அமைச்சு மன்றைக் கூட்டுக. பழையன் குட்டுவனுக்கும் பிறருக்கும் செய்தியறிவிக்கச் செய்க...''

''மன்னருக்கு இதற்குமேலும் சொல்ல என்னிடம் சொற்கள் இல்லை. இன்று மறக்குடியே பழையன் குட்டுவன் தலைமையில் திரண்டு நின்று நம் மக்களுடன் போர் புரிகிறது. நாம் நம் மக்களைக் காக்கவே கோலேந்தியுள்ளோம். இந்நாட்டின் எல்லாக் குடிகளும் நமக்கு இன்றியமையாதவர்களே. ஒருகுடி பிறகுடிமீது அமர நாம் விடலாகாது. குடிநெறிகளுக்கு மேல் அறத்தின் பெருநெறி நின்றாக வேண்டும்... அந்நெறியே கோலோச்ச வேண்டும். இல்லையேல் அழிவே எஞ்சும்...''

''உம் சொற்களை நான் எண்ணத் தலைப்பட்டுள்ளேன் அமைச்சரே... நாளை அவையில் எஞ்சியதைச் சொல்கிறேன்'' என்று பாண்டியன் நடக்கத் தலைப்பட்டான்.

''மன்னரே, இந்நிலையில் தேவையாவது பொதுநெறியை நிலைநாட்டும் ஒரு பெருமன்று கூட்டுதலேயாகும். மறவர்கள் தங்கள் நெறிக்குள் நிற்றல் உறுதி செய்யப்படவேண்டும். ஆகவே இப்போது பழையர் நிகழ்த்தவிருக்கும் பெருஞ்சிலம்பணி விழவு உகந்ததல்ல. அது மேலும் அமைதியின்மையை உருவாக்கும்...''

''ஓர் அரசவிழா எப்படி அமைதியின்மையை உருவாக்கும் அமைச்சரே? கோப்பெருந்தேவி அவ்விழவுக்கென சாவகப்பவளமும் காந்தாரப்பொன்னும் கலிங்கப்பட்டும் கொண்டு தன் அகப்புரைகளை நிரப்பியிருக்கிறாள். மேலும் மூன்று தமிழ் நிலங்களிலிருந்தும் புலவரும் பாணரும் விறலியரும் வரவிருக்கின்றனர். இருவகைக் கூத்தும் ஆடப்படுகின்றன. ஆட்டும் பாட்டும் எல்லா அமைதியின்மைகளையும் அழிக்குமென அறிவீர் அமைச்சரே. கள்ளும் காமமும் கொண்டு மக்கள் மகிழட்டும், சேர்ந்து

களியாடட்டும். பிறகெவரும் சினம் கொள்ளமாட்டார்கள், வாளெடுக்கவும் மாட்டார்கள்.'' பாண்டியன் புன்னகையுடன் திரும்பி அகத்தளம் நோக்கி நடந்தான்

அமைச்சர் பெருஞ்சாத்தனார் தன்னுள் எஞ்சும் சொற்களுடன் அங்கே நீள்நேரம் நின்றிருந்தார்.

கட்டுரைக் காதை இது என்க.

ஃ

கோப்பெருந்தேவி அமர்ந்த அகக்கோட்டத்து வாயிலை அடைந்த பழையன் குட்டுவன் பெருஞ்சினம் கொண்டு சிவந்த கண்களுடன் தன் முன் வந்து எதிரேற்ற முதுபணிப்பெண்ணிடம் பாண்டியன்மாதேவியைக் காண விருப்பமெனத் தெரிவித்தான். அவள் உள்ளே சென்று வரவறிவிக்கை செய்யும் முன் அவனே கையிலிருந்த நீண்ட கோலைப் பொறுமையின்றிச் சுழற்றியவனாக உள்ளே நுழைந்தான். தலைநோவுக்கெனப் பச்சிலைச்சுற்று அணிந்து பையுள்மஞ்சத்தில் கிடந்த பாண்டியன்தேவி எழுந்து ஆடைதிருத்தி அச்சத்துடன் அமர்ந்தாள். எதிரே வந்தமர்ந்த குட்டுவன் சேடியை விலகுமாறு கைகட்டிவிட்டுச் சினம் தெறித்த பெருங்குரலில் ''மந்தணச் சேதியர் கூறியது உண்மையா?'' என்றான்.

''ஆம் தந்தையே'' என்று தளர்ந்த மென்குரலில் பாண்டிமாதேவி உரைத்தாள். ''நேற்று மாலை நான் எண் அணிப்பேழையில் புது அணிகளை வைக்கும்போது என் தாய்ச்சிலம்பு வைத்திருந்த சிப்பிக் கடிப்பத்தைக் காணவில்லை என்றறிந்தேன். இக்கணம்வரை இவ்வகத்தளத்தின் அனைத்து இடங்களிலும் தேடிவிட்டேன்.''

''இது சூழ்ச்சி... நம் சிலம்பணிவிழவை நிறுத்த மாற்றார் செய்த நுண்ணிய சூழ்ச்சி.... இதை நான் முன்கருதியிருக்க வேண்டும்...'' பழையன் குட்டுவன் சினமாற்றாது எழுந்தும் நடந்தும் மூச்சு இறைத்தும் சுற்றிவந்தார். ''இனிச் சிலம்பணிவிழவுக்கு எட்டு நாட்களே உள்ளன. சிலம்பு மறைந்த செய்தியை எவரும் அறியலாகாது. சிலம்பைக் கவர்ந்தவனை இந்நாட்களில் நாம் தேடிக் கண்டடையவும் வேண்டும்... நம் குடிக்கு அன்னை கருங்கழலியே காப்பாவாள். அவள் அருளிருந்தால் நல்லவையே நடக்கும்...''

''ஆம் தந்தையே, நான் அன்னைக்கு என் உடலுதிரம் வீழ்த்தி வணங்குவதாக வேண்டுதல் செய்துள்ளேன்...'' என உரைத்தாள் பாண்டிமாதேவி.

''முதலில் யாரெலாம் இந்த அகச்சிறை வீட்டுக்குள் வந்தனர்

என்று ஆராய்தல் வேண்டும்...'' பழையன் பகர்ந்தார்.

''அகம்படியார் சேடியர் தோழியர் அனைவரையும் கேட்டு விட்டேன். உங்கள் வேலும் ஒருமுறை வினவுதல் நன்று.''

''தோழியர் இவ்வினை புரியும் உளத்திண்மை கொண்ட வராதல் அரிது'' பழையன் அமர்ந்தார். ''இவ்வகத்தளத்துக்கு வந்த பிறர் எவர்?''

''புதிதாக எவருமில்லையே'' பாண்டிமாதேவி உரைத்தாள்.

''பொற்கொல்லர்கள்? தச்சர்கள்?''

''சாவகப்பவளத்தோடு தலைப்பொற்கொல்லர் வந்தார்.''

பழையன் ஊக்கம் கொண்டு எழுந்தார் ''எண்ணியது போலவேதான் நடந்துள்ளது... அவனுடன் யார் வந்தனர்?''

''அவரது மாணாக்கர் எண்மர்'' என்ற பாண்டிமாதேவி ''அவர் இவ்வகத்தளத்துக்குத் திங்களில் மும்முறையேனும் வருபவர் அல்லவா? நம் கோலுக்குக் கீழ்ப்படிந்தவர். அவரை நான் தவறாக எண்ணவில்லை'' என்று ஐயம் கூறினாள்.

''அவன்தான் என என் நெஞ்சு சொல்கிறது. என் வேல் எத் தனையோ வஞ்சகர்களின் நெஞ்சைப் பிளந்தரிந்த கூர்மை கொண்டது. நஞ்சும் வஞ்சமும் உடன்பிறந்தாலும் தீங்கழிவதில்லை என்றறிந்தவன் நான்...''

''தீர எண்ணாமல் ஏதும் செய்யவேண்டாம் தந்தையே...''

''ஆம், தீர எண்ணாது இருந்துவிட்டேன். அப்பொற்கொல் லனும் வணிகர்குடியோனே. அவனும் இன்று எழுந்துள்ள எண் குடிப் பூசலில் சேர்ந்திருக்கக்கூடும். ஆம். அதுவே உண்மை...''

''தந்தையே, அவர் இவ்வகத்தளத்திற்குப் பல்லாண்டு காலமாக வருபவர். ஐயத்தினால் அவரைத் தண்டிக்கலாகாது...''

''அவனை இப்போது தண்டிப்பது ஒவ்வாது. அது அவனை இயக்கும் பின்புலத்தாருக்கு ஐயமூட்டும். அவனை வேவு பார்ப் போம். அவன் அச்சிலம்பை எங்கே எவரிடம் கொடுத்தான் என அறிவோம். அச்சிலம்பைக் கைப்பற்றியபின்பு அவனைக் கொல் வோம். அதுவே உகந்த வழி'' பழையன் சிரித்தபடி எழுந்தார். ''நம் அன்னை நம்மிடம் என்றும் இருப்பாள். நம் குடியின் கொடி இந்நகர் மீது பறக்க அவள் அருள் உதவும். இதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை.''

மதுரை அங்காடிவீதியின் நடுவே இருந்தது திங்கள் மூலை இயக்கியன்னையின் பழைய சிற்றாலயம். அங்கே வணிகர் குடிமூத்தார் பதின்மர் கூடியிருந்தனர். ஆலய முகப்பில் படைக்கலம் கரந்து வணிக இளைஞர் காவலிருந்தனர். உள்ளே இருள் பரவிய அங்கணத்தில் நின்றும் அமர்ந்தும் கிடந்தும் வணிகர் அமைதி யிழந்திருந்தனர்.

புறவாயிற் கடவையின் ஊடாகத் தலைப்பொற்கொல்லன் வந்ததும் அவ்வாயிற்கதவு மூடப்பட்டது. வணிகர் அவனைச் சூழ்ந்தனர். தலைப்பொற்கொல்லன் தன் முடக்கால்களை சுற்றித் தூக்கிவைத்து ஆடி வந்து அமர்ந்தான். அவன் மெய்ப்பை வியர்வை யில் நன்கு நனைந்து உடலில் ஒட்டியிருந்தது. கைக்கோலை மடியில் வைத்தபடி மூச்செறிந்து அமர்ந்தான்.

" தென்நிலங்களிலிருந்து என்ன செய்திகள் வந்துள்ளன?'' என்று பொற்கொல்லன் கேட்டான்.

"காட்டு நெருப்பிலிருந்து என்ன வரும்? புகை வரும். நாட்டைக் கொளுத்தும் கனல்துளிகளும் வரும்'' முதுவணிகர் நற் கண்ணன் சொன்னார். ''நிகழ்வதெல்லாம் பிறக்கம் தருவதாக உள்ளது. மதுரைக்கு என்ன நடக்கும், எப்போது நடக்கும் என்று யாரும் கூற இயலாது. நீண்ட நெடுங்காலமாகவே இன்று தழலாட் டமிடும் சினம் சருகுக்குள் பொறியாக இருந்துள்ளது. ஐந்நிலங் களிலும் மக்கள் இந்த அறமிலியின் கோலுக்கு எதிராக உளம் கொண்டிருந்தார்கள் போலும்.''

"அச்சினம் இங்கு வெண்சுதைமாடம் எழுப்பிக் கொடிபறக்க வீற்றிருக்கும் பெருவணிகர்மீதும் உண்டென அறிக'' முதுவணிகர் ஆதனார் சொன்னார் "பொலங்கொண்டு நலமளிக்கும் தொழில் என வணிகத்தை வகுத்தனர் நம் முன்னோர். நம்மிடமிருந்து குடிகளுக்கு நலமே விளையவேண்டும். நம்மை அவர்கள் பெரு விருப்புடன் எதிர்கொள்ள வேண்டும். நாம் ஈட்டும் செல்வத்தில் பாதியை முதுமையில் மறுமைக்கெனச் செலவு செய்யவும்

வேண்டும். இதெல்லாம் நூலோர் வகுத்த நெறி. ஆனால் இச்சில ஆண்டுகளாக நாம் வடவணிகர் துணைகொண்டு அவற்றை யெல்லாம் மறந்துவிட்டோம். பொய்ப்பொருள் விற்கவும் இல் லாதன கூறி ஏய்க்கவும் தொடங்கினோம். நம்மில் சிலர் மன்னன் அவை புகுந்து இச்சகம் பேசி வாழ்கிறோம். உரிமைமக்களை விற்கும் இழிதொழிலில்கூடச் சில குலவணிகர் ஈடுபட்டதாகச் சொன்னார்கள். அவற்றுக்கெல்லாம் நாம் ஈடு சொல்ல வேண்டி யிருக்கும்... ஆம், மதுரை எரியுமென்றால் எரிவது பெருவணிகர் மாடங்களும்தான்...''

"ஆம், அதையே இப்போது நாம் சிந்திக்கவேண்டும். எண்குடி மன்றில் நாமும் உண்டு என்றாலும் நம் மீதும் பிறகுடியாருக்குச் சினம் உள்ளது. நம்மைப் பல ஊர்களில் மன்றுக்கு அழைக்க வில்லை என்று செய்திகள் வந்துள்ளன...'' நற்கண்ணர் சொற் களைக் கூர்ந்தார். ''எழுகுடியாரும் திரண்டு வந்து இந்நகரை வெல் வது எக்கணமும் நிகழவிருக்கிறது. பல ஊர்களில் எழுகுடி மக்களும் படைக்கலம் பயின்று ஒன்றுகூடுவதாக அறிகிறோம். நாம் என்றும் மறவருக்குக் கூட்டாகவே நின்றுள்ளோம். அதுவே நமக்குக் காப்பாக இருந்துள்ளது. மறவர் வாளின்றி வணிகரின் துலாக்கோல் நிற்காதென மூதாதையர் கூற்று உள்ளது. ஆனால் இன்று நிலை வேறு. என்றுமே தங்கள் பிரிவு மறந்து ஒருங்கிணையாத வரலா றுள்ள ஏழுகுலத்தாரும் ஒன்றாகியுள்ளனர். அவர்தம் பேரலை முன் மறவர் வாள் ஏதும் செய்ய இயலாது. நமது நிலை இன்று எழு குடி மக்களுடன் இணைந்திருத்தலேயாகும்.''

"வணிகர் நெஞ்சும் துலாக்கோல் முள்ளும் ஒன்று என்று சொல்வதுண்டு. நிலையற்றிருப்பதும் நிறை கண்டவிடத்துச் சாய்வ துமே நம் முறையாகும்'' என்றார் ஆதனார். ''இன்று நாம் இரு சாராருக்கும் நண்பர்களாக இருப்போம். நம்மில் ஏழைகள் எண் குடி மன்றில் இருப்போம். மறவர் மன்றுக்கு நம் குடிச் செல்வர் கூறுடன் இருக்கட்டும். இதில் எவர் வென்றாலும் நம் குடி ஒன்றாகி அவருடன் சேரவேண்டும். நம் குடியில் வென்றவர் வீழ்ந்தவரைத் துணைக்கவும் வேண்டும். இதுவே நம் நெறியாகும்...''

"ஆம் ஆம் ஆம்'' என்றனர் பிறர்.

தலைப்பொற்கொல்லர் அச்சத்துடன் தலையைத் திருப்பிக் கொண்டிருந்தார். நெடுமூச்சுகள் விட்டு எழுந்து நின்றார். ''அரண் மனைச் சேதி ஏதும் உண்டா முதுவணிகர்களே? என்னை அழைத் தமைக்குக் காரணம் என்ன?''

"தலைச்சேடி சேதியனுப்பியிருக்கிறாள். நேற்றுப் பழையன்

குட்டுவன் தன் மகளைக் காண வந்திருக்கிறார். சிலம்பு குறித்துப் பேசும்போது ஐயம் உங்கள்மீது திரும்பியிருக்கிறது.''

தலைப்பொற்கொல்லர் சொல்லவிந்து மூச்சிழந்து அமர்ந்திருந்தார்.

"ஆம். ஆனால் அவர்கள் உங்களை வேவு பார்க்கவே திட்டமிட்டுள்ளார்கள். ஆகவேதான் உங்களை மந்தணச் சேதியர் வழியாக இங்கே கொண்டுவந்தோம். இக்கணம் முதல் நீங்கள் சொல்லும் செயலும் கருதி நடக்கவேண்டும். இனி உங்களை எம்மனோர் அணுக மாட்டார்கள். எச்செய்தியும் உங்களுக்கு அளிக்கப்படமாட்டாது. இன்றுடன் நம்மிடையே தொடர்பு முறிகிறது என்றறிக''

"ஆம், அதுவே உகந்தது'' என்றார் தலைப்பொற்கொல்லர் ''அங்ஙனமாயின் நான் எழுகிறேன். இனி நம் உறவிருக்காது.''

"அவ்வாறே ஆகுக'' என்று அவை சொன்னது.

தன் முதல் மாணாக்கனுடன் படியிறங்கி வணிகம் முழங்கிய கூலக்கடைத் தெருவிற்கு வந்த தலைப்பொற்கொல்லர் தன்னுள் எண்ணி எண்ணித் தலையை அசைத்தார். ''ஆம், ஆம், வணிகளின் தெய்வம் துலாக்கோலேயாகும்'' என்றார்.

மாணாக்கன் ஏனென வினவினான்.

"நானும் துலாக்கோல் நெறியையே சாரவிருக்கிறேன். எனக்கு எண்குடிமன்றின் பகையும் ஒவ்வாது. மறவர் குடிப்பகையும் மன்னர் பகையும் ஒவ்வாது. இருவரையும் சார்ந்து நிற்பதே என் வழி.''

"எங்ஙனம்?'' என்றான் மாணாக்கன்.

"அத்தலைச்சேடியைப் பழையனுக்கு காட்டிக் கொடுப்பேன். சிலம்பை அவள் எடுத்து ஆதனாரிடம் அளித்ததாக கரவுரைப்பேன்... இன்று நான் எண் குடிமன்றுக்கு அணுக்கமானவன். ஏது செய்தாயினும் மன்னருக்கும் மறவருக்கும் இதேபோல அணுக்கமாகிவிட வேண்டும்...'' என்றார் தலைப்பொற்கொல்லர்.

" தேவியார் வலச்சிலம்பைக் களவு செய்த பிழை நம்மிடம் உள்ளதே'' மாணாக்கன் கேட்டான்.

"பொன்னில் களவுரைக்காப் பொற்கொல்லன் எங்குளன்?'' என்றார் தலைப்பொற்கொல்லர்.

வணிகமன்று சூழ் காதை இது என்க.

ஃ

மதுரைக்கு வடபுலத்தே கோட்டைக்கும் சிற்றாற்றுக்கும் நடுவேயிருந்தது மூங்கிற் பத்தைகளால் வேலியிடப்பட்ட கோரைப் புல் வேய்ந்த கூரைகள் கொண்ட ஆயர் சேரி. ஆயர் தலைவன் கடம்பனின் மனையாட்டி மாதரி இல்லம் அதன் நடுவேயிருந்தது. புலரியில் கண்ணகி நூறு நூறு புறாக்கள் குறுகும் ஒலி கேட்டுப் பலகைமஞ்சம் விட்டெழுந்தபோது மூதாய்ச்சியர் மாயோன் புகழ் பாடி மோர்கடையும் ஒலியே அது என்றறிந்தாள். ஆடவரெல்லாம் ஆநிரைகளுடன் கிளம்பி அகழி தாண்டி வையை நறும்புனல் கடந்து முல்லைநிலம் தேடிச் சென்றிருந்தனர். மாதரியின் மகள் ஐயை இளைய ஆய்ச்சியர் ஒப்பச் சேர்ந்து கருக்கிருட்டுக் கலையும் முன்னரே கலம் நிறையப் பாலும் மோரும் நெய்யும் சுமந்து நகர் வீதிகளில் வணிகம் செய்யச் சென்றிருந்தாள். வீடுதோறும் சென்று மூதாய்ச்சியரிடம் நயந்தும் நகை விளையாடியும் வெண்ணெய் பெற்று உண்டு தெருவிலாடும் ஆய்ச்சிறாரின் சிரிப்பொலியும் ஆட்டக்குரல்களும் எங்கும் நிறைந்திருந்தன.

ஆய்ச்சியர் வழிகாட்டச் சிற்றாற்றில் நீராடி ஆயர்தெரு காக்கும் தென்கன்னியன்னையின் திருமுன் தொழுது மீண்ட கண்ணகியின் மழைக்கார் எனக் கறுத்திருண்டு சரிந்த நறுங் கூந்தலழகு கண்டு மூதாய்ச்சியரும் சிறுமியரும் வியந்து பின்னால் வந்தனர். கடும்புலைத்துக் கலம் சுமந்து கசடு சிக்கிய கூந்தலே ஆயர் தெருவில் அவர்களறிந்தது. மாதரி கண்ணகியை எதிர்கொண்ட ழைத்து மனை மீதமர்த்தி அவள் கருங்குழலில் நறுமணம் சேர்த்த இளநெய் பூசி அகிற்புகை காட்டி மூன்றாகப் பகுத்துப் பின்னலிட்டு அப்பின்னல் சுருட்டித் தாழம்பூ சேர்த்துக் கொண்டையாக்கி அதில் முல்லைச்சரம் சூட்டி அழகு பார்த்தாள். ஒரு மூதாய்ச்சி தன் மகளுக்கு இளவேனில் விழவாட வாங்கிய நறும்புத்தாடை கொண்டு வந்தாள். புனலாடிப் புத்தாடை அணிந்து பூச்சூடி வந்த கண்ணகி பகுங்காடு விட்டெழுந்த தொல்பாவையெனப் பொலிந்தாள்.

''அன்னையே உங்களிடம் ஒன்று கேட்பேன்'' என்று கண்ணகி சொன்னாள் ''நான் என் கொழுநர்க்கு என் கைகளால் உணவு சமைத்தளித்து நீண்ட நாட்களாகின்றன. புகாரில் என் இல்லத்தில் அவர் தங்கியதில்லை. என்னுடன் அவர் இருக்கும் இந்நாட்களில் எனக்கு இல்லமும் இல்லை.''

''இன்று உன் வானில் புது நாளவன் தோன்றுகிறான் எனக் கொள்க'' என்றாள் மாதரி. ''இதோ காயும் கனியும் அரிசியும் அமுதும் கொணர்கிறோம். உன் கைகளாலேயே கொழுநர்க்குச் சோறாக்குக. இன்றுமுதல் நீள்நெடுங்காலம் உன் வளைக்கை வழங்கும் அமுதுண்டு அகம் குளிர்ந்து அவன் வாழ்வானாக!" என்று மாதரி வாழ்த்தினாள்.

கோளிப்பாகலின் கொழுங்காயும் அணிவரி வெள்ளரி இளங் காய்களும் முத்துகள் சிவக்காத மாதுளையும் மாங்கனியும் வாழைத் தீங்கனியும் கொண்டுவந்தனர் ஆய்ச்சியர். செந்நெல் அரிசியும் பயறும் கொணர்ந்தனர். புதுமோரும் நெய்யும் வட்டிலில் வைத் தனர். ''உன் நெஞ்சுள் வாழும் காதலை இன்றுன் காதலன் சுவைப் பானாக'' என்று சிரித்து வாழ்த்தினர்.

ஆயர் குடிகளில் அடுமனை இல்லை என்று கண்ணகி அறிந்தாள். இல்புறத்து மூட்டிய கல்லடுப்பில் கன்றுகள் உண்ணாக் கூளமும் சாணியும் சேர்த்துணக்கி வைத்த வறட்டி எரித்துப் புகை யெழச் சமைப்பதே அவர்களுக்கு வழக்கம். கை சிவக்க முகம் வியர்க்கக் கண்ணகி காயரிந்தாள். அரிசி களைந்து உலையிலிட்டுச் சோறாக்கினாள். மாதுளைக் கொடுங்காய் முத்தெடுத்து உப்பும் மிளகும் சேர்த்து எரிகறியாக்கினாள். வெள்ளரியை மோரில் சேர்த்துப் புளிக்கறி சமைத்தாள். புகையடுப்பில் வைத்த மண்கலம் கரிபடிய அதைத் தொட்ட விரல்களால் அவள் முகமும் உடலும் எங்கும் கரி படிந்தது கண்டு ஆய்ச்சியர் நகைத்தனர்.

ஆயருடன் சென்று மதுரைப் புறவாயிற் கோட்டம் கண்டு மீண்ட கோவலன் வையையில் நீராடி மீன்விழி ஆலயம் வலம் செய்து தொழுது பசியுடன் மீண்டான். இன்முகம் காட்டி எதிர் கொண்ட கண்ணகி ''இன்று என் கைச்சுவை அருந்துக'' என்று நகையெழக் கூறி அவனை அகத்தே அழைத்தாள். பைஞ்சேறு பூசிய பசிய தரைமீது பூப்பின்னல் நிறைந்த பனையோலை வெண்பாயை விரித்து அதில் அவனை அமரச் செய்தாள். அகன்ற மண்கலத்தில் நீர் கொண்டுவந்து அவன் கைகழுவச் செய்தாள். கன்னி வாழைக் குருத்திலை பரப்பி உப்பு முதல் வைத்து இனிப்பு பின்வைத்து அவனுக்கு அமுது விளம்பினாள்.

குடிவணிகருக்கு வகுத்த முறைப்படி தென்புலத்தோருக்கும் நிலத்துக்கும் பறவைகளுக்கும் முறையே அன்னமிட்டு முதல் கையளவு நீரை இறைக்களித்துப் பருகிக் கோவலன் உணவுண்ண லானான். அவள் அவன் உண்பதை அருகிருந்து நோக்கி அவன் கை செல்லும் முன் அகம் சென்ற தடமறிந்து விளம்பினாள். மூங்கிற் படலுக்கு அப்பால் நின்று நோக்கிய ஆய்ச்சியர் கைகொண்டு வாய் பொத்தி நகைத்தனர். ஒரு மூதாய்ச்சி ''கதைகள் சொல்லும் ஆயர்குடி அண்ணல் அசோதைமகன் போலிருக்கிறான் இவன். இவளோ எம் குடி தழைக்கவந்த நப்பின்னையெனப் பொலி கிறாள்'' என்றாள். ''உன் கண்ணேறு கழிய நான் மாயனுக்கு மலர் மாலை வேண்டுகிறேன்'' என்று பொய்ச்சினம் கொண்டாள் மாதரி.

உண்டு கைகழுவி வியர்வை ஆறும்பொருட்டுத் தாழை மென்மடல் பின்னிச் செய்த பாயில் படுத்தான் கோவலன். அருகே வந்தமர்ந்த கண்ணகி இகனித் தளிரும் நறுஞ்சுண்ணமும் பழுத்த அடைக்காயும் மிளகுமணியும் சேர்த்துச் சுருட்டி அவனுக்களித்தாள். அவளுடைய மென்விரல் நுனி கவ்விய பசுமையைக் கண்ணெடுக் காது நோக்கி இருந்த கோவலன் நெடுமூச்சுடன் நிமிர்ந்து அவள் மழைக்கண்களை நோக்கினான். நறுமணம் எழுந்த அவள் நன்மை அறிந்து அவனுள் என்றுமிருந்த தாய் தேடும் மகவு தன்னை உணர்ந்தது போலும். கண்ணீர் வழிய விம்மும் மார்புடன் அவளை ''வருக'' என்றழைத்து அணைந்து அவள் மென் கழுத்தில் முகம் புதைத்தான். அவனுடைய சூடான விழிநீர் அவள் தோள்களில் சொட்டியது. கண்ணகியின் கரங்கள் குழற்கற்றைகளுடன் அவன் பிடரியைப் பற்றித் தன் இளமுலைகள் நடுவே அவன் முகத்தை அழுத்திக்கொண்டன. தானிழந்தவற்றையெல்லாம் அக்கணம் அடைந்தவன்போல அடைவதற்கு இனியேதும் இல்லையென்பது போல அவள் அமைதியுற்று சில கணங்கள் இருந்தாள்.

பின் தன்னிலை மீண்டதும் நெடுமூச்செறிந்து எழுந்தான். அவள் சிறுமுகத்தைத் தன் கரங்களில் ஏந்தி விரிந்த குவளைமலர்க் கண்களை நோக்கினான். குமிழுதடுகளோ அவளைக் குழந்தை யெனக் காட்டின. அவள் கண்களோ ஆழமளக்க ஒண்ணா நீலநீர் கழிகள்போல அச்சுறுத்தின. அவ்வச்சத்தை மறைக்கும் பொருட்டு ''நீ என்மீது சினம் கொண்டிருக்கிறாயல்லவா?'' என்று அவன் கேட்டான். ''நான் என்றும் எக்கணமும் எவர்மீதும் சினம் கொண்ட தில்லை'' என்றாள் கண்ணகி.

கோவலன் தலைகுனிந்து அவள் பாதங்களைத் தன் கைகளால் தொட்டான். ''மணம் செய்துவந்த நாளில் உன் பாதங்கள்

தாமரை மலரிதழ் போன்றிருந்தன. உன் இல்லத்தில் யவனப் பளிங்கால் தரையமைத்திருந்தனர். அதில் நீ நடக்கையில் உன் மென் பாதம் நோகுமென அஞ்சிப் பின்னால் வருவர் செவிலியர் என்ப துண்டு. உன்னை நான் புகார்முதல் மதுரைவரை ஐந்நிலங்களிலும் அழைத்துவந்தேன். முள்நிறைந்த குறிஞ்சியிலும் அனல் பறக்கும் பாலையிலும் மருத மழையிலும் நெய்தல் வெயிலிலும் முல்லைக் காற்றிலும் உன்னை அலையச்செய்தேன்.'' கண்கள் கலுழக் குரலி டறக் கோவலன் சொன்னான் ''நீ அறிவாயா? நேற்று நீ துயில் கையில் நான் உன் பாதங்களை நோக்கினேன். அவற்றைத் தொட எனக்கு அகம் கூடவில்லை. உன் மென்மலர்ப்பாதங்கள் பாலை நிலத்தில் அகழ்ந்த கிழங்குகள்போல ஆகியிருப்பதைக் கண்டு கண்ணீர் வடித்தேன்.''

அவள் அவன் குழல்களைக் கோதி அவன் கண்ணீர் துடைத் தாள். அப்போது அவன் கண்ணீர் மேலும் பெருகியது. ''என்னைப் போல் கீழ்மகன் எவருமில்லை என்றறிகிறேன். உனக்கு நானி ழைத்த பெருந்தீங்குக்கு என் எழுநிரை முன்னோரும் பழி ஏற்க வேண்டும். விண்ணக மருங்கில் கண்ணீரோடு அவர்கள் என்னை எண்ணிக் கலங்குவதைக் காண்கிறேன்... தீராப் பெருஞ்செல்வமும் திசையெட்டும் நற்பெயரும் எனக்கென அவர்கள் சேர்த்துவைத்துச் சென்றனர். அதற்கெல்லாம் மாற்றாக நான் அவர்களுக்கு அளித்தது இப்பழிச்சுமை ஒன்றையே.''

கோவலன் அவள் அப்போது ஏதாவது சொல்வாள் என்று எண்ணி அவள் முகத்தையே நோக்கினான். அவள் அவன் தவறு களைப் பொறுத்து காலந்தோறும் பெருங்குடிப் பத்தினியர் சொல் லும் இனியசொற்களைச் சொல்வாளென எண்ணினான். அச்சொற் கள் அவள் நெஞ்சைத் தொட்டு வராவிட்டாலும்கூட தன் நெஞ்சுக் கனலை அவை ஆற்றுமென எண்ணினான். ஆனால் அவள் கோயில் கருவறைத் தெய்வம்போலக் குளிர்ந்த அமைதி கொண்ட வளாக இருந்தாள்.

''இப்போது அறிகிறேன், இது என் தீயூழ்வினை. இதை நானே அடைவதே முறை. நான் உன்னை மதுரைக்கு அழைத்திருக் கலாகாது'' என்று கோவலன் அவள் கண்களை நோக்கியபடிச் சொன்னான்.

அவள் ''உங்கள் ஊழும் என் ஊழும் ஒன்றே'' என்று மட்டும் மென்குரலில் சொன்னாள். தனக்குப் பின்னால் பேருருக் கொண்டு நிற்கும் எவரிடமோ அவள் அதைச் சொன்னதுபோல அவன் உணர்ந்தான். அச்சம் கொண்டு அவன் உடல் அதிர்ந்தது. மறுகணம்

அவள் இன்சொல் சொல்லித் தன்சுமை இறக்காமை உணர்ந்து அவனுள்ளம் சற்று வெகுண்டது.

காலம் முதிர்வது எண்ணி அவன் எழுந்தான். அவள் மெல்லு டலையும் தோள்களையும் கண்டபோது மீண்டும் அவன் நெஞ்சு நெகிழ்ந்தது. நெஞ்சில் அலையெழுந்த காதலுடன் அவளை அள்ளி நகிலிணை நெகிழ ஆரத்தழுவி இறுக்கினான். அவளுடலுள் புகுந்து விடுபவன்போல, அவளுடன் ஒன்றாகிவிடுபவன்போல. ''இம் மண்ணிலும் இனி விண்ணிலும் நீயன்றி எனக்குத் துணை பிறி தில்லை. என் பிழைகளையெல்லாம் பொறுத்தாய். என் தாய்போல என்னை உன் மடியில் இருத்தி ஆறுதல் அளித்தாய். உனக்கு நான் ஏழு பிறப்பிலும் கடன்பட்டவன்...'' எனச் சொல்லிப் புலம் பினான்.

பின்பு எழுந்து தன் குழற்கற்றைகளைப் பட்டுநூலிற் சேர்த்துக் கட்டி உடை திருத்திச் சொன்னான் ''உன் வலப்பொற்சிலம்பை இங்கே விற்றுப் பொருள் பெற்று இங்கொரு புதுவணிகனாக உயர்வேன். இடச்சிலம்பில் கண்ணையன்னையின் மந்தணச் சொற்கள் உள்ளன. என்றும் நம் குடிப்பெருமைக்குச் சான்றாக அது நம்மிடம் இருக்கட்டும். இத்தனை நாள் உனக்கு நான் செய்த தீங்குக்கெலாம் மாறு செய்வேன். இனி உன் வாழ்வில் துயரே இல்லை. இனி உன் கண்ணில் ஒருபோதும் நீர் எழாது... இது உறுதி'' என்றான்.

கண்ணகி மென்முறுவல் காட்டினாள். அவன் மெய்ப்பை அணிந்து கைப்பை எடுத்துப் பொலவணிகர் தெருவுக்குக் கிளம்பி னான்.

விடைகொள் காதை இது என்க.

ஃ

கோவலன் ஆயர் தெரு விட்டிறங்கிச் செம்மண் சாலையில் கால்புதைய நடந்தபோது குறுகிய ஊடுபாதையிலிருந்து நிலவணி அண்ணல் ஆலயத்து இமில் பெருத்த ஏறு எதிரே வரக்கண்டான். பின் கால் தசைகள் மெல்ல திமிர்ந்து அசைய, கழுத்தின் கீழ் முருப்புத்தசை நெளிந்தாட, காதுகளை அசைத்தும் கால்களால் நிலத்தை மெல்ல உரசியும் அது வந்தது. கோவலன் அதற்கு வழிவிட எண்ணி அருகே இருந்த ஆனைமுகத்தான் ஆலயத்துப் படிக்கட்டில் ஏறிக்கொண்டான். அவனருகே வந்த ஏறு சற்றே தயங்கிப் பருத்த தலை தூக்கி அவனைப் பார்த்தது. மதம் பரவிய அதன் சிறு கண்கள் அவனைக் கூர்ந்துநோக்கக் கண்டு தானறியா ஒன்றை அவ்வேறு அறியுமென ஐயம் கொண்டான் கோவலன். அதன் விலாத்தசை ஒன்று துடிதுடித்தடங்கக் கண்டான். நீலம் பரவிய நீள் நாக்கை நீட்டி ஏறு தன் விலாவை நக்கித் தலை உலுக்கி ஈ ஓட்டி மேலும் காலெடுத்து முன்சென்றது. அதன் சிறுவால் சுழலக் கண்டு கோவலன் ஒரு கணம் தன் உளம் நிரப்பிய புரியாத அச்சத்துடன் அங்கேயே நின்றான்.

பின்பு தன் உளம் திரட்டி நடந்தான். மெய்ப்பைமீது கட்டிய கச்சில் இருந்த சிலம்பைத் தொட்டுப் பார்த்துத் தன்னுள் எழுந்த அச்சத்தை வெல்ல முயன்றான். தன் மூச்சு ஏன் அப்படிக் கனத்து நெஞ்சுள் நிறைந்துள்ளது என்று எண்ணி வியந்தான். ஆயர் தெரு விட்டு ஓங்கிய ஆலமரத்தடியில் குளிர்ந்த கருங்கல் இருக்கைகள்மீது நறுமலர் உதிர்ந்து கிடந்த ஊர்மன்றுக்கு வந்தான். எதிரே வந்த சிறு வணிகரிடம் ''இது ஊர்மன்றல்லவா?'' என்று வினவினான். ''ஆம். ஆனால் ஊர்மன்றுகளெல்லாம் இன்று தடுக்கப்பட்டுவிட்டனவே. நீர் அறிந்திலீரோ ?'' என்று வினவி அவன் முன் நடந்தான். மறு வீதியில் குறைவாகவே மனிதர்களைக் கண்டான் கோவலன். வீடு களின் முகவாயில்கள் பெரும்பாலும் மூடிக்கிடந்தன. புழுதியி லாடும் சிறார்கள் எவரையும் காணவில்லை. என்ன ஆயிற்று இப் பெருநகருக்கு என எண்ணி நடந்து பரத்தையர் வீதிக்கு வந்தான்.

அங்கும் இறுகிய ஒலியின்மையையே கண்டான். பரத்தையர் வீதியில் எப்போதும் கூடி நின்று செல்பவரையும் வருபவரையும் அழைத்து நகைமொழியாடும் ஆணிலிகளையும் ஏவற்பெண்டிரையும் காணவில்லை. இல்லங்களின் குறுவாயில்கள் மட்டுமே திறந்திருந்தன.

பரத்தையர் தெருவின் ஊடுபாதை வழியாகக் கடைவீதியை அடைந்தபோது கோவலனின் ஐயமும் தயக்கமும் மிகுந்தது. கூலக்கடைத் தெருவிலும் அறுவை வீதியிலும் எந்நேரமும் எழும் வணிகக் கூச்சலும் வாங்குநர் நெரிசலும் அறவே இன்று செம்மண் வெயிலில் வெறிக்க ஒழிந்து கிடந்தன வீதிகள். பனம்பாயாலும், நாராடையாலும் பொருட்களை மூடிவைத்து அருகிலேயே பாய் போட்டு அமர்ந்த வணிகர் வெற்றிலை குதப்பி மென்குரலில் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தனர். காற்றில்லாமல் துவண்ட வணிகக்கொடிகள் அவ்வப்போது எழுந்து மெல்ல அசைந்து மீண்டும் தொய்ந்தன. கூலக்குவியல்களின் ஊடாகக் காக்கைகளும் குருவிகளும் மட்டும் அமர்ந்து, வணிகர் சிலம்பாட்டு கையில் எழுந்து கூவிக்கலைந்து பறந்தமர்ந்து பூசலிட்டுக் கொண்டிருந்தன. பொலங்கடைவீதியில் வேலும் வில்லும் கைக்கொண்டு யவனக் காவலர் பதின்மர் இரும்புக் காப்பணிந்த உடலுடன் நின்றிருந்தனர்.

கோவலன் வறுத்த முதிரை மென்று அமர்ந்திருந்த கூல வணிகர்களிடம் நின்று ''இன்று மன்னர் விடுத்த விடுநாள் போலும். அங்காடிவீதிகளில் எங்கும் ஆள்நிரை இல்லையே?'' என்றான். பேச்சை நிறுத்திக் குறுகும் கண்களுடன் அவர்கள் அவனை நோக்கினர். ஒருவன் ''மெய்ப்பை அணிந்திருப்பதனால் நீர் பெருவணிகரென எண்ணுகிறேன். நீர் இவ்வூரினரல்லர் என்று கொள்ளலாமா?'' என்றான். ''ஆம், நான் புகார் நகரிலிருந்து நேற்று இந்நகருக்கு வந்த வணிகன். இன்று வணிகத்தின்பொருட்டுப் பீடிகை தேர வந்தேன்'' என்றான். ''நல்ல நேரத்தில் வந்துளீர். இப்போது இத்தென்னாடே எரிமுன் வைத்த கூளம்போலக் காத்திருகிறதென அறியீரோ?'' என்றான் முதியவணிகன் ஒருவன்.

கோவலன் அச்சத்துடன் அவர்கள் சொற்களைக் கேட்டறிந்தான். ''பாண்டிய நாடெங்கும் அறம் பிழைத்து மறம் ஓங்கிவிட்டது பெருவணிகரே. தென்நிலமெங்கும் மன்னரின் மறப்படை புகுந்து அங்குள எண்குடியாரையும் ஒடுக்குகிறது. ஊர்களும் மன்றுகளும் எரிகின்றன. குடிமூப்பர்கள் கொல்லப்படுகிறார்கள். ஐந்நிலத்து மக்களும் கூட்டம் கூட்டமாக அறம் கேட்க மன்னனைக்

காணும் பொருட்டு இந்நகருக்கு எட்டுச் சாலைகள் வழியாகவும் வந்துகொண்டிருக்கிறார்கள். மன்னரின் பெரும்படையினர் அவர்களை நகருக்கு வெளியே முல்லைநிலத்து வெறும்வெளியில் சிறை கட்டி நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கும் அச்சம் நிலவு கிறது. மறவரின் வாட்கள் ஒழிவின்றிச் சுழல்கின்றன. அகழி முதலை கள் மேலும் மேலும் உணவு கொண்டு கூத்திடுகின்றன.'' ஒரு வணிகன் சொன்னான்.

''ஆம், பெருவணிகரே. அச்சமே நாடுகளை உருவாக்குகிறது. நகரங்களின் கொடிகளைப் பறக்கவிடுகிறது. நெறிகளை நிறுவுகிறது. இன்று அச்சத்தை நட்டு நீரூற்றி வளர்க்கிறார்கள் மன்னரும் தேவியும் பழையன் குட்டுவனும். அறமும் நெறியும் பேசிய வாய்க ளெல்லாம் ஒவ்வொன்றாக மூடி வருகின்றன. சொல் அறுபடு மிடத்து எழும் குளிர்ந்த அமைதியே இந்நகரிலும் இந்நாட்டின் ஐவகை நிலங்களிலும் இன்று நிரம்பியுள்ளது...'' இன்னொரு வணிகன் கசப்புடன் சிரித்துக் கூறினான்.

கண்கள் எரிய உதடுகள் வெறுப்பில் வளைய மூன்றாம் வணிகன் சொன்னான் ''ஆம், இனி இங்கே எக்குரலும் எழாது. எக்கைகளும் உயராது. எல்லாம் அடங்கியாயிற்று. கொலைவாள் முன் எம் தெய்வங்கள் அனைத்தும் தலை தாழ்த்திவிட்டன. இனி ஒன்றும் எஞ்சாது...''

முதுவணிகர் ஒருவர் கூலக்குவியலுக்கு அப்பாலிருந்து எழுந் தார் ''என் நரை மீசை அறிந்த வாழ்வில் இது ஒன்றும் புதியதல்ல. இந்தச் சினத்தலும் முனிதலும் பின் அடிபெற்று அடங்குதலும் மீண்டும் மீண்டும் நிகழ்வதேயாகும். இல்லறப்பெண்டிர் கணவ னிடம் பூசலிட்டு அடங்குதல் போல... இன்னும் சிலநாட்களில் எண்வகை மக்களும் எல்லாவற்றையும் மறந்துவிடுவர். தங்கள் எண் வகைத் தொழிலுக்கும் மீள்வர். ஏனெனில் எதிர்ப்பிலும் சினத்திலும் எத்தனை நாள் வாழ இயலும் ? மாந்தர் வாழ விழைபவர். இன்பம் இன்பம் என ஏங்கும் அகநெஞ்சு கொண்டவர்கள். கொத்த வரும் பாம்பு ஒருபுறமும் முட்ட வரும் வேழம் மறுபுறமும் நிற்கை யிலும் கிளையிலிருந்து சொட்டும் தேனின் இறுதித் துளியையும் நக்க விழைந்த முடவனைப் போன்றவர்கள் நாமெல்லாம்.''

''இனி என்ன நிகழும்?'' என்று கோவலன் கேட்டான்.

''மன்னர் இம்மக்களைக் கண்டு சில நற்சொற்கள் சொல்லி அவர்கள் ஊர்களுக்குத் திருப்பி அனுப்புவார். தங்கள் இன்னல்கள் தீர்ந்தன என்ற எண்ணத்தில் மண்ணுக்கும் மலைக்கும் அவர்கள் மீள்வர். காலங்கள்தொறும் மீண்டும் மீண்டும் நிகழ்வது இது

ஒன்றே'' என்றார் முதுவணிகர்.

கோவலன் எண்ணம் அந்த வார்த்தைகளில் சாயவில்லை. ''வணிகர்களே, நான் பொலங்கடை வீதியில் ஒரு வணிகம் பொருட்டுச் செல்கிறேன். இன்று அங்கே வணிகம் நிகழு மல்லவா?'' என்றான்.

"யவன வணிகம் எப்போதுமே குறைவுபடுவதில்லை. அவர்கள் நச்சு நிறை அம்பேந்திய வீரர் துணையின்றி வருவதில்லை. நாடே எரியினும் அவர்கள் வணிகம் செய்தாகவேண்டும். சோழகக் காற்று வீசும்போது அவர்களின் கலங்கள் கொற்கை விட்டுக் கிளம் பியாக வேண்டுமல்லவா? உம் வணிகத்துக்குத் தடையிராது. செல்க'' என்றான் இளவணிகன்.

பொலங்கடை வீதியின் முகப்பில் நின்ற யவன வீரர்களிடம் கோவலன் தன்னை புகார்ப் பெருவணிகன் கோவலன் என்றும் சிலம்பு வணிகத்துக்கு வந்துளதாகவும் சொல்லிக்கொண்டான். அவனுடைய விரலணி முத்தின் அடையாளம் நோக்கி, படைக் கலமேதும் இல்லை என கச்சை துழாவி உறுதிசெய்த பின் அவன் உள்ளே செல்லப் பணித்தனர். பொலங்கடை வீதியில் முத்து கொள்ளும் யவனப்பெருவணிகர் மட்டுமே நின்றிருந்தனர். தொழும்பர் சூழநின்ற ஒங்கிய யவன வணிகன் ஒருவன் கோவலனை சுறாமீன் விழிகளால் நோக்கிப் பின்பு திரும்பிக் கொண்டான். பொன்கொள் பீடிகை ஒன்றில் நுழைந்து வணங்கித் தன் முத்துக்குறி காட்டியபின் கோவலன் சிலம்பை எடுத்துக் காட்டினான். ''புகாரின் பெருங்குடிவணிகர் வழக்கப்படி சிலம் புடைத்து இறுதிச் செல்வத்தை விற்க வந்துள்ளேன். இதனுள் உள்ளவை அரிமணிப் பரல்கள்'' என்றான். சிலம்புடைக்க வந்த பெருவணிகனை நோக்க அருகே நின்ற வணிகர் கூடினர். அவன் நாதை பெயர் கேட்டான் ஒரு முதுவணிகன். கோவலன் அதைச் சொல்ல விழைவில்லை என்று பதில் இறுத்தான். ''சிலம்பு உடைக்கும் வணிகன் இறந்து மீண்டும் பிறப்பவன் போன்றவன். தன் குடியும் மூதாதையர் புகழும் அவனுக்கு உரியனவவல்ல என்பதே நூல்நெறி'' என்றான்.

யவன வீரருக்கு அடையாளம் காட்டி முறைபெற்று உள்ளே வந்த தலைப்பொற்கொல்லனையும் அவன் பணியாளர் நூற்று வரையும் கண்டு பொலங்கடைவீதி புத்துயிர் கொண்டது. நீலநிற மெய்ப்பை அணிந்து கச்சை முறுக்கி, குண்டலங்கள் கன்னத்தில் ஒளி சிந்த, கையில் பொற்பூணிட்ட கோல் சுழற்றி, தோதகவிழி உருட்டி முடக்கால் தூக்கிவைத்துத் தலைப்பொற்கொல்லன் நடந்து

வந்தான். வணிகன் ஒருவன் கோவலனிடம் ''இம்மதுரைப் பெருநகரில் நகரத்தார் குடிக்கு ஒரு தொல்நெறி உள்ளது. வணிகம் பிழைத்து கடைச்செல்வம் விற்கவிருக்கும் வணிகன் மன்னனிடம் சென்று அதை அடைவு கொடுத்துப் பொருள்பெற்று மீண்டும் வணிகம் செய்து பொருளீட்டியபின் அதை மீட்டெடுக்கலாம். இச்சிலம்பு உம் குடிநங்கை காலில் அணிந்தது என எண்ணுகிறேன். அதை நீர் உடைத்து விற்கவேண்டியதில்லை. தலைப்பொற் கொல்லர் அதோ வருகிறார். அவரை அணுகி உம் கதையைச் சொல்லும். மன்னரிடம் சென்று சிலம்பை அடைவு கொடுத்துப் பொருள் பெறலாம்...'' என்றான்.

''அவ்வாறே ஆகுக'' என்று சொல்லிக் கோவலன் எழுந்து பாதையில் நடந்து பொற்கொல்லர் நிரையை மறித்து வணங் கினான். தன் அடையாளம் காட்டிப் புகார் விட்டுவந்த கதை சொல்லிச் சிலம்பைக் காட்டினான். ''இச்சிலம்பு அரிமணிபெய்து என் குலமகள் வீட்டார் அமைத்தது. புகார் வணிகரின் கடைச் செல்வம் சிலம்பே என்றறிக. இதை அடைவு பெற்றுப் பொருள் அளிக்க உம் மன்னர் முன்வருவரோ'' என்றான். ''ஆம். அவ் வழக்கம் இங்குளது. ஆனால் மன்னரின் களஞ்சிய மேலாள் இதை நோக்கி விலையிட்டபின்னரே அதை உறுதிசொல்ல இயலும்'' என்றான் தலைப்பொற்கொல்லன் அச்சிலம்பினைக் கோவலன் நீட்டத் தன் கையில் வாங்கி ஓவிய அணியும் கோல எழுத்தும் நோக்கியபின் திருப்புகையில் அதில் பொறிக்கப்பட்ட மந்தண எழுத்துருக்களைக் கண்டு கூர்ந்து நோக்கினான். அவன் முகம் மலர்வதைக் கண்டு கோவலன் அகம் மலர்ந்தான்.

''இச்சிலம்பு உம் குலமகள் கால்களை அணிசெய்தது என்றீர். கோப்பெருந்தேவியின் கால்களிலேயே இனி இது ஒலித்தல் வேண்டும். நீர் உடன்படுவீரெனில் நானே மன்னரைக் கண்டு இப் பெருஞ்செல்வத்தை அவரிடமே காட்டி அடைவு பெறும் ஆணை கொண்டு மீள்வேன். அருகேதான் பொற்கொல்லர் வீதியில் என் இல்லம் உள்ளது. ஆங்கே நீர் வந்தமர்ந்து இளைப்பாறுக. அரை நாழிகையில் நான் மீள்வேன்'' என்றான் தலைப்பொற்கொல்லன். ''அவ்வாறே ஆகுக. உமது செயலுக்குக் கடப்பாடுடையேன்'' என்று கோவலன் சொன்னான். பொற்கொல்லர் புடைசூழக் கோவலன் நடந்து பொலஞ்செய்கொல்லர் சூழ்ந்துவாழும் வீதியின் நடுவே பெரிய தூணொடு நின்ற தலைப்பொற்கொல்லன் இல்லத்துக்குச் சென்றான். அங்கே திண்ணைமருங்கில் பட்டுப்பாய் விரித்துக் கோவலனை அமரச்செய்து நறுவெற்றிலையும் கனிகளும் நீரும்

விளம்பி விடைபெற்றுத் தலைப்பொற்கொல்லன் அரண்மனைக்குக் கிளம்பினான்.

ஊழ் தொடர் காதை இது என்க.

ஃ

பொற்கொல்லர் வீதியின் நடுவே இருந்த தலைக் கொல்லன் இல்லத்தில் கோவலன் நீண்டநேரமாய்க் காத்திருந்தான். சற்று இளைப்பாறிய பின் எழுந்து கச்சை இறுக்கிக் கட்டித் திண்ணையில் வந்து செம்புழுதிமீது தளையும் சிலம்பும் இட்ட கால்கள் அழுந்தி அழுந்தி நடக்கும் தடங்களை நோக்கி நின்றான். பொருளறியாப் பதைப்பு ஒன்று தன் நெஞ்சுள் எழுந்து தொண்டையை அடைப்பதை உணர்ந்தான். நெடுமூச்சு விட்டு அதை வெளித்தள்ள முனைந்தும் கண்களைத் தெருமுனைவரை ஓட்டியும் நின்றான். பொற்கொல்லர் தெருவில் பொலம்கொள்பவரும் விற்பவரும் எனப் பொருளுள்ளோர் அலையாமல் கந்தலாடையும் காய்ந்த குழலும் பசித்த விழிகளும் கொண்ட பாலைமக்கள் அலைவதேன் என்று வியந்துகொண்டான். முனைத்தெருவில் இருந்து ஒரு பெண்ணும் மூன்று குழந்தைகளும் தளர்நடையிட்டு வரக்கண்டான். இல்லம்தோறும் நின்று அவர்கள் உணவிரப்பதை அறிந்தான். எட்டு இல்ல நடைகளில் அவர்கள் இரந்தும் கையிலிருந்த கடிஞையில் உணவு நிறையவில்லை என்பதைக் கண்டு துணுக்குற்றுக் கூர்ந்து நோக்கினான். அவர்கள் பொற்கொல்லன் வீட்டு முன் நின்று பசிக் குரல் எழுப்பினர். உள்ளிருந்து தலைப்பொற்கொல்லனின் இல்லாள் வந்து சிறுகைப்பிடியளவே புல்லரிசி போட்டுச் சென்றாள். இரக்கலம் நீட்டிய அவ்வன்னையின் கலத்தில் சிறிதே அரிசியிருப்பதைக் கண்டு கோவலன் அவள் கண்களை நோக்கினான். அவை நோக்கிழந்து இரு உலர்ந்த புண்கள் போலிருந்தன.

அவர்கள் விலகியதும் கோவலன் சற்றே சினத்துடன் திரும்பி ''பசிப்பிணி கொண்டு வாயில்தேடி வருபவரை அருள் அளிக்க வரும் மூதாதையர் என்று கொள்ளும் வணிகர்குடிக் கொள்கை என்னவாயிற்று?'' என்று கேட்டான். ''உங்கள் குலதெய்வமும் இருளடைந்து விட்டதா என்ன?'' என்ற வினாவைக் கேட்டு அதிர்ந்து செயலிழந்து நின்ற பொற்கொல்லன் மனைவி தன் நெஞ்சில் ஓங்கி அடித்துக் கதறியபடிச் சுவர் சாய்ந்து அமர்ந்து

விட்டாள். அவளது பெருங்குரல்கேட்டு நடுங்கிய கோவலன் ''அன்னையே, தீது சொல்லிவிட்டேனென்றால் உங்கள் கால்களைத் தொட்டுப் பொறுத்தருளக் கேட்கிறேன்'' என்றான்.

பொற்கொல்லன் மனையாட்டி தணிந்து கண்ணீர் துடைத்து சில மாதங்களாக உருவாகிவந்துள்ள புதுச்சூழலைச் சொன்னாள். மழைக்கால ஈசல்போல ஐவகை நிலங்களில் இருந்தும் எண்வகை மக்களும் வந்து நகரின் தெருக்களில் நிறைந்தபடியே உள்ளனர். முதலில் அவர்களை நகர மாந்தர் முறைப்படி ஊணும் நீருமளித்து வணங்கினர். மதுரையில் உணவுள்ளது என்றறிந்தபோது மேலும் மேலும் மக்கள் திரண்டனர். பசிப்பிணி கொண்ட பைதல் மக்கள் மதுரை நோக்கி வந்தபடியே இருக்கின்றனர். நகர் நிறைந்து, சூழ்ந்துள்ள முல்லை நிலவிரிவும் நிறைந்து அவர்கள் ஓலமிடுகிறார்கள். இரவெல்லாம் அருவி இமிழும் ஒலி போலவோ கடல் அலைப்பது போலவோ அவர்களின் ஓதை முழங்கிக் கொண்டிருப்பதனால் துயில்வதும் குறைந்துவிட்டது. வந்தவர்க்கு வழங்கி வழங்கி மதுரை மூதூர் மனையாட்டியர் கை சலித்துவிட்டனர். ''எங்கள் கரங்கள் அள்ளும் நீரும் நெல்லும் உப்பும் உணவும் எல்லாமே குறுகி விட்டன ஐய'' என்று அவள் அழுதாள். ''கொள்வதற்குக் குவிந்தும் கொடுப்பதற்கு மலர்ந்தும் இருந்தவை எம் விரல்கள். தலைமுறை தோறும் உழைத்துண்டு உறவுபுரந்து நாங்கள் பெற்ற பேரருள் அது. ஆம், நாங்கள் வண்மையிழந்தோம். எங்கள் குடித்தெய்வங்களும் கண்ணிழந்தன.''

கோவலன் நெடுமூச்சுவிட்டு நின்று பின் ''அறம் தழைத்த பாண்டிநாட்டுக்கு என்ன ஆயிற்று?'' என்றான். ''காவலன் காவான் எனில் நாடு வேலியில்லா விளை என ஆகும்'' என்றபடி அம்மனையாட்டி உள்ளறைக்குச் சென்றாள்.

கோவலன் தெருவில் இறங்கி நடந்தான். எங்கும் இரவலர்தம் அழுகுரல்களும் பசிக்குரல்களும் நிறைந்திருக்கக் கேட்டான். அழுக்கும் களைப்புமாக நடந்தவர்களின் கண்களைக் கண்டு சோர்ந்து தெருமுனை ஆனையன் கோட்டத்துப் படிக்கட்டில் நின்றான். அங்கே பொற்கொல்லன் இல்லத்தில் இரக்கவந்த பெண்ணைக் கண்டான். தன் கை விரலில் இருந்த பொற்கருளைக் கழற்றி அவளிடம் நீட்டி ''அன்னையே, நீ என் முன் கை நீட்டியபோது நான் சற்றே என்னை மறந்திருந்துவிட்டேன். என் பிழை பொறுத்து இதைக் கொள்க'' என்றான்.

ஏளனத்தால் வளைந்த இதழ்களுடன் ''இதை என் மகவினர் உண்ண முடியுமா பெருவணிகரே?'' என்றாள் அவள். கோவலன்

கை நடுங்கியது ''இது உம்மிடமே இருப்பதாக. நீர் கொடையில் சிறந்தவர் என்பதை நான் ஒப்புகிறேன். உமக்கு மறுமையில் அனைத்து நலன்களும் அடையப்பெறுவதாக'' என்று அவள் சிரித்தாள்.

''அன்னையே, உன் சுடு சொற்களுக்கு இயைய நான் தீச்செயலேதும் இழைத்திருந்தால் என்னைப் பொறுத்தருள்க. நானும் வாழ்க்கை தேடி இந்நகருக்கு வந்த வெளிநாட்டானே. என் பெயர் கோவலன். என் ஊர் புகார்'' என்று கோவலன் சொன்னான். ''பசிப்பிணியின் வலியை இந்நாட்களில் நீண்ட வழிநடையில் நானும் அறிந்துளேன்...''

அவள் முகம் இளகியது ''நாங்கள் பசிப்பிணியை மறந்து நீணாளாகிறது வணிகரே. இன்று சாவின் பிணியையே அறிந்து கொண்டிருக்கிறோம்...''

''இந்த நகையைக் கைக்கொண்டு என்மீது அருளல் வேண்டும்...'' என்றான் கோவலன்.

''இதை நான் என்ன செய்ய இயலும்? பொலங்கொள் வீதியில் எங்களை உள்ளே விடமாட்டார்கள். இதை நான் களவு செய்தேன் என்னும் ஐயம் எழும். இது என் கையிலிருப்பது தெரிந்தால் மறவர் என்னைக் கொன்று இதைக் கவரவும் கூடும்... என்னைப் பொறுத்தருள்க'' என்று அவள் கைகூப்பினாள்.

கோவலன் திரும்பி ஆனைமுகன் கோட்டத்திற்குள் நுழைந்தான். அங்கிருந்த உவச்சரை வணங்கித் தன் விரலணியை அளித்து அதைப் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு உணவளிக்கும்படி கோரினான். உவச்சர் உணவளிக்கத் தொடங்கியதுமே பெருங்குவியலாகப் பசித்த மக்கள் அங்கே கூடி நாய்கள்போல ஊளையிட்டும் பூசலிட்டும் அவ்வுணவை உண்டனர். கண்களில் வெய்யநீர் வார அதை நோக்கி நின்றான் கோவலன்.

உணவுண்டு மீண்ட அன்னை கை கூப்பி ''உமது குடி வாழ்க பெருவணிகரே. நானும் என் மகவினரும் சாவது இன்னும் சில நாளுக்கு தள்ளிச்சென்றுள்ளது'' என்றாள்.

''இவனா ? இவனா உணவிட்டவன் ?'' என்று கூவியபடி சில இரவலர் முன்னால் வந்தனர். சினத்துடன் சிரித்து ஒரு முதியவன் சொன்னான் ''வணிகரே உமது மறுமையை உறுதிசெய்துவிட்டீர்.'' இன்னொருவன் சீறும் பற்களுடன் ''இம்மையில் சிலர் பசித்தழிவதே வணிகரின் மறுமையை சிறப்புறச்செய்யும் பொருட்டல்லவா?'' என்றான். ''இம்மையில் அடையும் இழப்பெல்லாம்

மறுமையில் அவனுக்கு கொள்முதலாகும். அவன் ஆடைகளை எடுங்கள்...'' என்றபடி சிலர் அவனை நோக்கி வந்தனர். அவன் மேலாடையை ஒருவன் பற்றி இழுத்தான். இன்னொருவன் அவன் காதணிகளை இழுத்து அறுக்க முனைந்தான். கோவலன் அஞ்சி பின்னால் சென்று படிகளில் ஏறினான் . ''கொல்லுங்கள் அவனை. நம் பசியைக்கொண்டு வணிகம் செய்யும் அந்த இழிமகன் உதிரத்தைக் குடிப்போம்'' என்று ஒருவன் கூவினான். அவர்கள் விழிகளில் எழுந்த சினவெறி கண்டு கோவலன் அஞ்சி நடுங்கி கோட்டத்துள் ஓடினான். அவர்கள் அவனைத் தொடரக்கண்டு உவச்சர் மரக்கதவை மூடித் தாழிட்டார். அவர்கள் கதவை முட்டிக் கூவினர். கதவம் உடைபடுவதைக் கோவலன் கேட்டான். உவச்சர் கயிறை இழுத்து ஆலய மணியை அடிக்கத் தொடங்கினார்.

வெளியே அவ்வொலி கேட்டு யவனரும் மறவரும் குதிரைகளில் பாய்ந்துவந்தனர். வாள்களும் வேல்களும் சுழல இரவலர் மக்கள் கூவி அலறிக் கலைந்தோடினர். குளம்படி ஒலியும் அலறல்களும் கேட்டுக் கோவலன் தன் தலையைப் பற்றியபடி அமர்ந்திருந்தான். பின்பு உவச்சர் மெல்ல வாயிலைத் திறந்தார். கோவலன் வெளியே எட்டிப்பார்த்தான். புழுதியில் நான்கு இரவலர் உதிரம் வழிந்து பரவிய பாய்மீது இறந்து கிடந்தனர். அவர்களில் அவ்வன்னையின் பிணமும் ஒன்று எனக் கண்டான் கோவலன். அலறியபடி அவன் அந்த உடல்நோக்கி ஓடினான். அவன் குரல் கேட்டு உதிரம் வழிய அவள் குழந்தைகள் ஓடிவந்தன. அவள் உடல்மீது விழுந்து கூவி அழுதன.

சொல்லிழந்து சிலைத்து நின்ற கோவலனைத் தள்ளி விலக்கி அரசஏவலர் அச்சடலங்களை விலக்கம் செய்யத் தொடங்கினர். குழந்தைகளைத் தூக்கி வீசிச் சடலத்தை இழுத்து அத்திரிமீது போட்டு கயிற்றால் கட்டினர். அத்திரியின் குளம்புகள் செம்புழுதியில் பதிந்த தடம்மீது உதிரமணிகள் உதிர்ந்து செல்வதைக் கோவலன் கண்டான்.

பொலந்தெருக் காதை இது என்க.

ஓ

சூத்தரின் கால்களும் பாணரின் கைகளும் ஓய்ந்து முது பாணன் எழுந்து அரங்கொழிச்செய்யுள் பாடி வணங்கியதும் பாண்டியன் தன்னுணர்வு கொண்டு நெடுமூச்செறிந்து எழுந்தான். அக்கணம் வரை பேரழகுடன் பொலிந்த யாவும் மெல்லமெல்லக் கலைந்து உருமாறி அழகிழந்தன. அரண்மனை மூவரங்கு, அதைச் சுற்றிக் கூடியிருந்த அவைமாந்தர், சீனத்து ஓவிய எழினிகள் பறந்த சாளரங்கள், மேலே குவைமுகடுக்கு அருகே மான்கண் சாளரத் தினூடாக வந்த வானொளி அனைத்தும். ஆடிக்கொண்டிருந்த போது ஒவ்வொரு உறுப்பின் அசைவிலும் எழில் சிதறிய கூத்தரும் விறலியரும் எளிய மானுடப்பிறவிகளாக வியர்வையும் மூச்சும் எழக் களைத்து வணங்கி அவன் முன் குறுகிநின்றனர். மண்ணுக்கு அப்பால் விண்ணைத் தழுவிப் பரந்த பேருவைவெளியில் அவனைப் பந்தாடிய யாழும் முழவும் குழலும் கொம்பும் ஆமை யோடாகவும் வடுத்தோல் வட்டமாகவும் துளைமூங்கிலாகவும் கைவிடப்பட்டுக் கிடந்தன. அவன் கண்களை மூடிக்கொண்டு மீண்டும் காலத்தில் பின்னகர முயன்றான். கைதொட ஒண்ணாது கலையும் கார் எனச் சென்றன கடந்த காலக் கணங்கள். நெஞ்சு நிறைந்தெழுந்த ஏக்கத்துடன் அவன் கண் திறந்தபோது அவை முதலோன் பாணருக்கும் கூத்தருக்கும் பரிசில் வழங்கிக் கொண்டிருந்தான். அவன் கூவியமொழியில் சருகுகள் நீரில் ஓடுவதுபோலப் பொருளற்ற புகழ்மொழிகளாக அவன் பெயர் ஓடிச்சென்றது.

பாண்டியன் எழுந்து தன் மார்பின் மணியாரத்தைக் கழற்றி முதுபாணன் கழுத்தில் அணிவித்தான். பாணன் வணங்கியபோது அவை வாழ்த்தொலி கூவியது. முதுகூத்தனுக்கும் தலைக்கோலிக்கும் அவன் பரிசிலளித்தான். நிமித்திகன் அவை கலைவதை அறிவித்ததும் மன்றமுரசு ஒலியெழுப்பியது. மேலாடையை எடுத்தணிந்து மெல்ல நடையிட்டு அகமனை நோக்கிச் சென்றான். அமைச்சர் பெருஞ் சாத்தனார் உடன் நடந்தார். ''கோப்பெருந்தேவி சென்று

விட்டாளா?'' என்றான் பாண்டியன். "அவர்களுக்கு தலை நோவெனச் சொல்லப்பட்டது'' என்று பதிலிறுத்தார் அமைச்சர். ''ஆம், ஆடலும் பாடலும் கண்டால் அவளுக்கு என்றும் தலை நோவு எழுவதே வழக்கம்'' என நகைத்து நடந்தான் பாண்டியன். ''அமைச்சரே, தென்சேரநாட்டிலிருந்து ஆட்டர் குழுவொன்று வர விருப்பதாக நேற்று நிமித்திகன் சொன்னான். அவர்களை வர வேற்றுத் தங்க வையுங்கள். நாளை அவர்கள் ஆட்டம் காண முடிந்தால் நன்று.''

"மன்னருக்கு மேலும் அழுத்தமுள்ள சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்...'' அமைச்சர் பணிந்து கூறத்தலைப்பட்டார். ''சிலம்பணிவிழவினைக் குறித்துதானே? அதைப்பற்றி நான் பேசுவதொன்றும் இல்லை'' என்றபடி பாண்டியன் நடந்தான். அகத் தளத்துக்குப் போய் அவன் அமர்ந்ததும் சேடியர் மென்வெம்மை கொண்ட மலர் நீர் கொண்டுவந்து அவன் கைகளையும் கால் களையும் கழுவினர். கொம்புச் சீப்பு கொண்டு அவன் குழற்கற்றை களைச் சீவினர். ''சொல்லுக அமைச்சரே'' என்று பாண்டியன் கேட்க அமைச்சர் சேடியரை நோக்கினார். அந்நோக்கை உணர்ந்த அவர்கள் உள்ளே சென்றனர். பாண்டியன் நகைத்தபடி ''நன்று நன்று... பாண்டியனின் பேரமைச்சருக்குச் சேடியரையும் அச்சம்'' என்றான்.

"ஆம் மன்னரே... சேடியரையும் அகம்படியரையும் அஞ்சும் இது போன்ற ஒரு நிலை இப்பாண்டி நாட்டுக்கு என்றுமே வந்தது இல்லை...'' என்றார் அமைச்சர். "நம் நகருக்கு வெளியே பல்லாயிரம் எளியமக்கள் வெறும் வெளியில் தங்கியிருக்கிறார்கள். அவர்களின் ஓசை நகரை கடல் அலையோசை எனச் சூழந்துள்ளது. நள்ளிரவில் துயில் கலைகையில் தொன்று நடந்ததுபோல மீண்டும் கடல்தான் பொங்கிவருகின்றதோ என்னும் அச்சம் என்னை ஆள்கிறது'' என்றார்.

"ஆனால் நான் அறிந்தது பழையன் அவர்களை அமைதிப் படுத்திவிட்டார் என்றல்லவா? நேற்று என்முன் வந்த எண்குடித் தலைவர்களும் இனி ஏதும் பிணக்கில்லை என்றல்லவா சொன் னார்கள்?''

"ஆம், அமைதி உருவாக்கப்பட்டு விட்டது என்பது மெய்யே. மறவரின் வாளும் பழையர் கொடுத்த கள்ளும் அம்மக்களின் சினத்தை மறையச்செய்துவிட்டன. அவர்களில் குடிமூத்தா ரெல்லாம் இன்று கள்ளின் களி கொண்டு பரத்தையர் வீதிகளில் உலவுகிறார்கள். ஆனால் என் நெஞ்சில் அச்சம் இன்னும் சுமை

கொள்கிறது. அவர்கள் குலப்பெண்டிரின் கண்களைப் பார்க்கிறேன். அவர்களின் பார்வைகள் நம் கண்களைத் தொடுவதேயில்லை. அவர்கள் முகங்கள் அகத்தே நெருப்பெரியும் கலங்கள் போலச் சிவந்து பழுத்திருக்கின்றன.''

"பெண்டிரையும் அஞ்சத் தொடங்கிவிட்டீரா என்ன?''

"அஞ்சுவது அஞ்சுவதே அறிவெனப்படும். ஆண்கள் பாறைகள்போல. அவர்களில் வெம்மையும் தண்மையும் மாறிமாறி வரும். பெண்டிர் கடல்போல. வெம்மைகொண்டால் பின்பு ஆறுவது பேரலையாக எழுந்து மண்ணை உண்டபின்னரேயாகும்.. மன்னரே, நம் மண்ணுக்குள் ஆழத்தில் இமையாப் பெருவிழியுடன் கன்னியன்னை குடியிருக்கிறாள் என்பதை நாம் மறக்கலாகாது. மாமதுரை நகராளும் மீன்விழியும் மண்பறக்கும் வன்பாலையில் நிற்கும் கொற்றவையும் அக்கன்னியன்னையின் குழந்தைகளே என்பது நம் மரபென அறிந்திருப்பீர்கள். ஆம், நாம் பெண்டிரை அஞ்சவேண்டியதில்லை. முடிவிலாப் பொறையும் முழுமுதல் கற்பும் கொண்டவர்கள் அவர்கள். அன்னையாய் தங்கையாய் காதலியாய் மனையாட்டியாய் மகளாய் நம்மைச் சூழ்ந்து புரக்கும் பேரருளே பெண்மை. பெண்மையை நீரென்பர் நூலோர். கிணற்று நீராய் சுனையாய் நதியாய் மழையாய் நம்மை வாழவைக்கும் தெய்வம் அது . மன்னரே, ஆனால் நீலப்பெருஞ்சுவராக எழுந்து தென்திசை மூடிப் பொங்கிவந்து நம் முன்னோரின் பெருநகரங்களை அள்ளி உண்டதும் அதே நீர்தான்...''

பாண்டியன் சலிப்புடன் ''அமைச்சரே, உமது அச்சம் எனக்கு அலுப்புத் தருகிறது. மானுட வாழ்க்கை மிக மிக எளியது அமைச்சரே. எளிதாகும்தோறும் இனிதாவது அது. உங்கள் அச்சங்களால், நீங்கள் சுமந்தலையும் வரலாறுகளால், நீங்கள் விடமுடியாத நம்பிக்கைகளால் அதை நீங்கள் சிக்கலாக்குகிறீர்கள். ஓர் இன்னிசைக் கீற்றால், ஓர் அழகின் அசைவால் இனிதாக்கி விடக்கூடிய ஒன்றெனவே நான் வாழ்வை அறிந்திருக்கிறேன். ஒருவனுக்கு ஒரு நாளுக்கு ஒரு குயிலின் பாடல், ஒரு மயிலின் இறகசைவு போதும் என்பதே இறைவனின் ஆணை என்றறிந்தால் நீரும் அரசியலில் இத்துணை ஆடமாட்டீர்...'' நெடுமூச்சுடன் பாண்டியன் நடந்தான் ''உமது சொற்களை நான் பொருள் கொள்ளாமலில்லை அமைச்சரே. ஆனால் அச்சொற்களின் பொருளை என் உள்ளம் தாங்காது... நான் மலர்த்தும்பி... என்னைக் கல்லெடுக்கச் செய்ய முயலாதீர்.''

அவ்விடத்தில் சின்னேரம் நின்று நெடுமூச்செறிந்து அமைச்சர் மீண்டார்.

அகப்புரை புக்கு, நன்னீராடி, புத்தாடை அணிந்து, தோள்களில் நறுஞ்சந்தனமும் செஞ்சாந்தும் பூசி, மலர்மாலை அணிந்து, பாண்டியன் அகச்சிறை நோக்கி நடந்தான். அவன் ஆடைகளில் புகுந்து பொதிகைத்தென்றல் சுழன்றாடியது. அகச் சிறை வாயில் முன் அவனைத் தலைப்பொற்கொல்லன் எதிர் கொண்டான். அடியிழந்த புயல்மரமென அவன் மன்னனின் கால் களில் விழுந்தான். பொறுமை இழந்து மன்னன் அவனை எழச் சொன்னபோது எழுந்து கைகூப்பி நீண்ட நேரம் புகழ்மொழியும் முகமனும் சொன்னான். பாண்டியன் ''என்ன செய்தியெனப் பகரும் பொற்கொல்லரே'' என்றான் சினத்துடன்.

"கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும் மாய்மை கொண்டு மயக்கிக் களவுத்தொழில் ஆற்றும் பெருங்கள்வன் ஒருவனை இன்று நான் கண்டேன். பாண்டியன் மாதேவியின் முத்தரிப் பொற்சிலம்பை அவனிடம் கண்டேன்...'' என்றான் பொற் கொல்லன். "இப்போது அவன் எங்கே உள்ளான்?'' என்று மன்னன் கேட்டான். பொற்கொல்லன் பணிந்து "அவனைக் கரவுச் சொல் உரைத்து என் இல்லத்தில் இருத்தி இங்கே செய்தி சொல்ல ஓடிவந்தேன்'' எனப் பதில் இறுத்தான்.

"பழையனைக் கண்டு சிலம்பு கிடைத்ததைச் சொல்லும். செய்வன செய்து சிலம்பு கொண்டு பெயரும்'' என்று சொல்லி அகச்சிறை வாயில் கடந்து உள்ளே சென்ற பாண்டியன் அச் செய்தியைச் சொன்னால் கோப்பெருந்தேவி ஊடல் களைவாள் என்பதை எண்ணிப் புன்னகை புரிந்தான்.

கரவுரை காதை இது என்க.

ஞ

தலைப்பொற்கொல்லன் இல்லத்தில் கோவலன் தன் தனிமையின் இருண்ட சிறையில் கணங்களை எண்ணிக் காத்திருந்தான். இரவலர் குரல் சூழ்ந்த அந்த நண்பகலில் மிகவும் எடை கொண்ட ஏதோ ஒன்று தன்மீது விழுந்து அழுத்தக் காத்திருப்பதாக உணர்ந்தான். பொற்கொல்லர்களின் குரல் ஒலி தெருமுனையில் எழக் கேட்டதும் ஆறுதல் கொண்டு கச்சை முறுக்கி எழுந்து எதிர் நோக்கி நின்றான். இருபது வாள்மறவர் சூழ வந்த பொற்கொல்லன் கோவலனை வணங்கி ''தாங்கள் நெடுநேரம் காத்திருந்தீர்கள் என அறிவேன். மன்னித்தருள்க. அரண்மனைக்குச் சென்று மன்னரையும் அரசியாரையும் கண்டு மீண்டதனால் பிந்திவிட்டேன்'' என்றான்.

''நான் வணிகன். விற்கவந்தவன் காத்திருப்பதனால் தாழ்வில்லை'' என்று கோவலன் சொன்னான். ''இவர்கள் தங்கள் கையிலிருக்கும் செம்பொற்சிலம்பைக் கண்டு விலைமதிப்பிட மன்னரால் அனுப்பப்பட்டவர்கள்'' என்றான் பொற்கொல்லன். ''அதற்கென்ன'' என்று புன்னகை செய்த கோவலன் தன் கச்சையை அவிழ்த்துச் சிலம்பினை எடுத்து அவர்களிடம் காட்டினான்.

காவலர் தலைவன் மீன்விழிகள்போல மணிகள் மின்னிய அச் சிலம்பைத் தன் கைகளில் வாங்கிக் கண்ணெதிரே தூக்கி ஆழ்ந்து நோக்கினான். சற்றே விலகித் தெருவின் ஒளி அதில் படும்படி நின்று மீண்டும் கூர்ந்து நோக்கினான். பிற மறவர் அவனைச்சூழ்ந்து நின்று எட்டி எட்டி நோக்கினர். ''ஆம், இது நம் அரசியாரின் பொற் சிலம்பேதான். ஐயமே இல்லை'' என்றான் ஒரு மறவன்.

தலைவன் திரும்பி கோவலனைப் பார்த்தான். ''இவனைக் கண்டால் கள்வனைப்போலத் தெரியவில்லை. இவன் மெல்லிய விரல்களும் செந்நிறமேனியும் இனிய விழிகளும் காணில் யாரோ பெருங்குடி வணிகனைப் போன்றல்லவா உள்ளான்?'' என்றான். ''ஆய்ந்து முடிவுசெய்தல் நலம். மன்னர் ஆணை என இவனைக் கொன்றால் எனக்குப் பெரும்பழி வந்து சேரக்கூடும்...''

"குடித்தொழில் எனக் களவு செய்வோர் இன்று அருகிவிட்டனர். அவர்கள் எவரும் அரண்மனை புகுந்து அணிகலன் கவரும் திறனுடையோருமல்லர். இன்று ஆரியக் கள்வரும் நாகர் திருடருமே பெருங்களவுகள் செய்கின்றனர் என்றறியீரோ? கட்டுண்மாக்களுக்குச் செஞ்சொல், தெய்வம், மருந்து, சூழல், உத்தி, இடம், காலம், கருவி என எட்டுவகை வழிகள் உள்ளன என்று களவுநூல் வகுத்துள்ளது என்றறிக. நாம் பார்த்திருக்கவே நம் வீட்டுக்குள் நுழைந்து நம் முன்னோர் சேர்த்த அருஞ்செல்வத்தைக் கவர்ந்து செல்ல அவர்களால் இயலும். பெண்ணாகவும் பேயாகவும் நாயாகவும் பூனையாகவும் நம் இல் புகுந்து நாடிய பொருள் கவர்ந்து விலகும் திறன் அவர்களுக்கு உண்டு. அறிவுடையோரெல்லாம் அவர்கள் செயல்கள் அறிவர். திறனுடையோர் மட்டிலுமே அவர்களிடமிருந்து உயிருடன் தப்பிவர இயலும்'' என்ற பொற்கொல்லன் எண்ணியது போலவே அதன் பின் ஒவ்வொரு மறவராகத் தாங்கள் கண்ட கள்வர்களைப்பற்றிச் சொல்லத் தொடங்கினர்.

கள்வர்தம் திறன்களையும் அவற்றைத் தங்கள் வாள்வலியாலும் மனவலியாலும் வென்றுவந்தமை குறித்தும் கதைகள் கூறினர். ஒரு மறவன் ''இக்கள்வன் எங்ஙனமேனும் தப்பிவிட்டான் எனில் நாம் மன்னரின் கொலைவாளைச் சந்திக்கவேண்டியதுதான்'' என்றான். அச்சொற்கள் காவலர் தலைவன் கண்களில் எழுப்பிய அச்சத்தைப் பொற்கொல்லன் கண்டான். அவன் கரவுளம் சிரித்தது. ''ஆம், ஐயமுறவோ சிந்திக்கவோ இப்போது நேரமில்லை. இவன் தொழில்தேர் கள்வன் என மன்னரும் அறிவார். ஆகவேதான் கொன்று பொருள்கொணர ஆணையிட்டார்'' என்றான். உள்ளூறிய மென்னகையுடன் மேலும் சொன்னான், ''இவ்வகைக் கள்வருக்குக் காவலர் நடுவிலும் துணைவர் இருப்பர். இவர்கள் சிக்கினாலும் தக்க சொற்கள் சொல்லித் தப்பவைப்பர் என்று அன்றொரு நாள் அமைச்சர் கூறினார்.''

காவலர் தலைவன் தன் நெஞ்சிறுக்கிக் கண்கள் கூர ''ஆம். நமக்கிடப்பட்ட ஆணையை நிறைவேற்றுதலே நம் கடன். ஆய்தலும் அறிதலும் அமைச்சர் தொழில்'' என்றான்.

அவன் சொல்லிமுடிப்பதற்குள் வாள் ஏந்தி நின்ற கல்லாக் காவலன் ஒருவன் திரும்பிக் கோவலனை இரு எட்டுகளில் அணுகி பேரொலியுடன் வெட்டினான். சிறு வெள்ளிமின்னல் ஒன்று சுழன்றதையும் கோவலனின் வியப்பு உறைந்த கண்களையுமே அனைவரும் கண்டனர். சிறிய அடிநா ஒலியுடன் அவன் சரிந்து

கல்தரையில் விழுந்தபோது தசை மோதும் ஒலியும் அவன் கை கால்கள் இழுபட்டு அதிர்ந்து நிலத்தில் உரசும் ஒலியும் எழுந்ததை அவர்கள் விழித்த கண்களுடன் அசைவிழந்து நோக்கி நின்றனர். பிளந்த தலையிலிருந்து வெம்மைமிக்க உப்பு மணத்துடன் எழுந்த குருதியின் குமிழிகள் வெடித்தன. மெல்லப் பிதுங்கி வெண்மூளை வெளியே வழிந்தது. செம்புழுதியில் மூழ்கியதுபோலக் குருதியுடல் நிலத்தில் கிடந்து வழுக்கி வழுக்கி அசைந்தது. உயிர் பிரிய முயல உடல் அதை அள்ளிப்பற்றி நிறுத்த முயல அவ்விறுதிப் போரின் அதிர்வுகள் உதிரத்தைச் சுவர்களில் நுண்துளிகளாகத் தெறிக்கச் செய்தன. விரல்கள் ஒவ்வொன்றாக வெட்டி விரிபட்டு இவ்வுலகை விட்டன.

கொன்றவன் தன் செவ்வாளை மேலே தூக்கி ''நான் கொன்றேன்... மன்னர் ஆணையை நிறைவேற்றியவன் நான்! தென்னவர்கோன் பாண்டியன் குடி வாழ்க! வெற்றிவேல்! வீரவேல்!'' எனக் கூவினான். ஆனால் பிற 'மறவர் அவனுடன் சேர்ந்து படைக்குரல் எழுப்பவில்லை. திகைத்தும் குழம்பியும் அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி நின்றனர். காவலர் தலைவன் சிலம்பைத் தன் கச்சையில் சுற்றியபடி ''ஆம் , நம் கடன் முடிந்தது. மன்னருக்கு இச்செய்தியைச் சொல்வோம்'' என இறுக்கமான குரலில் சொன்னான். கொன்றவன் தன் வாளைத் தாழ்த்தி ''அவன் கொலைத்தொழிற் கள்வன் அயலான்'' என்று யாரிடமென்றிலாது சொன்னான். மறவர் ஒவ்வொருவராக வெளியே சென்றனர். ஒருவன் தன் கால்களைத் தெருவில் படர்ந்த மணலில் தேய்த்துக் குருதியைக் களைந்தான். அவனைக் கண்டு பிற மறவரும் அதையே செய்தனர். கொன்றவன் தன் கால்களைப் பார்த்தான். அவன் கைகளில்தான் குருதி தெறித்திருந்தது. கண்களைத் தூக்கித் தலைப் பொற்கொல்லனைப் பார்த்தான். பிணம் ஒன்று விழி திறந்து வாய்திறந்து நோக்குவதுபோலிருந்தது பொற்கொல்லனின் முகம்.

''செல்வோம்'' என்று காவலர் தலைவன் நெடுமூச்செறிந்து சொன்னான். பெருஞ்சுமை எனத் தங்கள் தலைகளை உணர்பவர் கள்போல அவர்கள் தெருவில் நடந்தனர். கொன்றவன் தன் வாளை நோக்கினான். வியந்தவன்போல ஒருகணம் நின்று விட்டான். பாம்பைப் பிடித்த குரங்குபோல உடல் உதற அதை வீசினான். ஓடிச்சென்று தன் கூட்டத்துடன் இணைந்தான்.

அவர்களுக்குப் பின்னால் ஒரு பெருங்குரல் எழுந்ததைக் கேட்டு அனைவரும் அதிர்ந்து நின்று திரும்பினர். முடமான உடலை அசைத்து எழுந்து நின்ற தென்நிலத்து முதிய இரவலன் ஒருவன்

அடிவயிறு கிழித்தெழுந்த குரலில் ''அம்மா! பேரன்னையே! அம்மா!'' என்று கூவினான். தன் வயிற்றில் ஓங்கி அறைந்தபடி ''பேரன்னையே! கன்னியே! நீ எழுக! இத்தென்னிலம் கடல் கொள்க! ஒழிக இப்பாண்டிய நாடு! ஒழிக! ஒழிக!'' என்று ஓல மிட்டு அழுதான்.

அவனருகே நின்ற ஒருத்தி ''அழிந்தது அறம். கண்மூடின தெய்வங்கள்! இதோ மன்னனே கள்வனாகிவிட்டான். அரச படைகள் வணிகனைக் கொன்று பொருள் கவர்ந்து செல்கின் றனர்!'' என்று மறவர்களைச் சுட்டிக் கூவினாள். சிற்சில கணங் களிலேயே தெருவெங்கும் இரவலர் கூட்டங்கள் சேர்ந்தன. ''அழிக தென்னாடு! ஒழிக பாண்டியனின் மறக்கோல்!'' என்று கூக் குரல்கள் எழுந்தன. மண்ணும் புழுதியும் அள்ளித்தூற்றி ''இம்மா மதுரையில் மண்மாரி பொழிக. தீயெழுந்து மூடுக! பேரன்னை வாய்திறந்து இவன் நிலத்தை உண்டு பசியாறுக!'' என்று கதறினர்.

வாளுடன் சீறித் திரும்பிய சில மறவரிடம் காவலர் தலைவன் சொன்னான் ''நம்மிடம் சிலம்பு உள்ளது. பூசலுக்கு நேரமில்லை. விரைந்து அகல்வோம், வருக.''

அவர்கள் புரவிகளில் ஏறி விரைந்து செல்ல, பின்னிருந்து கற்களும் தடிகளும் வசைச்சொற்களும் துரத்திவந்தன.

கொலைக்களக் காதை இது என்க.

ஆ

ஆயர்பாடியில் மாதரி இல்லத்தில் ஆதேர் தொறிச்சியர் மகளிர் இல்லம் திரும்பும் நண்பகலில் கண்ணகி கோவலனைக் காத்திருந்தாள். அன்று காலை முதல் அவள் ஆழ்ந்ததோர் அமைதியில் இருந்ததை ஆயர் மகளிர் கண்டிருந்தனர். மாதரி அவளிடம் வந்து ''என் மகளே, இன்று உன்னைக் காண்கையில் ஏனோ என்னுள்ளத்தை அச்சம் ஆட்டுவிக்கிறது. உன் கண்கள் உதிரம் படிந்த வேல்நுனிகள்போல் உள்ளன. உன் முகமோ ஆற்று நீரின் ஒளி அலையடிக்கும் கரைக்கோயில் அணங்குபோல் உள்ளது. எழுக. என் இளமகள் ஐயை உனக்காகக் காத்திருக்கிறாள். எங்களுடன் சுண்ணம் இடித்துக் கண்ணன் புகழ்பாட வருக!'' என்றழைத்தாள்.

கண்ணகி அவளை நோக்கித்திரும்பி ''அன்னையே, என்னை மலரும் ஆடையும் சாந்தும் சுண்ணமும் கொண்டு அணிசெய்க'' என்றாள். மாதரி ''ஆம், உன் கணவன் இப்போது திரும்புவான், நீ அணிநிறை மங்கையென அவனுக்காக ஆற்றியிருப்பதே முறை'' என மகிழ்ந்து சொல்லி, ''எழுக என் குழந்தாய்'' என்றாள். கண்ணகி வெந்த இரும்பில் செவ்வொளி பரவுதல்போலப் புன்னகை செய்தாள். ''அன்னையே, இன்று நான் செஞ்சாந்தும் செந்நிற மலர்களும் அணிவதையே விழைகிறேன்'' என்றாள். ''ஆம் அது உனக்கு மேலும் அழகுசெய்யும்'' என்றாள் மாதரி.

மாதரி எழுந்து ஓடி இளமகளிரை அழைத்துக் கண்ணகிக்கு அணிசெய்ய வரும்படிச் சொன்னாள். ஆய்ச்சியர் கூடி புல்பரவிய குன்றுச்சரிவுக்குச் சென்று செண்பக மரங்களை உலுக்கி உதிர்ந்த செந்நிற மலர்களைப் பொறுக்கினர். அவற்றை நீண்ட சரங்களாகத் தொடுத்துக்கொண்டு வந்தனர். மஞ்சளும் சிறுசுண்ணமும் சேர்த்து நறுமணச் செஞ்சாந்து அரைத்தனர். கண்ணகியைக் கமுகம் பாளையில் அமரச்செய்து மேனியில் செஞ்சாந்து பூசித் தலையில் நறுநெய் தடவிக் கொண்டையிட்டுச் செப்பூங்கோதை அணிவித்து அணிசெய்தனர். கண்ணகி இளஞ்செந்நிறச் சேலையைச் சுற்றி

யுடுத்து மாதரி இல்லத்துத் திண்ணையில் மணைமீது அமர்ந்து கொண்டாள்.

அத்தோற்றத்தில் அவளைக் கண்டதும் மாதரியின் நெஞ்சுள் மீண்டும் அச்சம் முளைத்தது. கண்ணகியின் நோக்கு தெய்வச்சிலை களின் நோக்குபோல வானை நோக்கி விரிந்து வெறித்திருக்க குமிணிதழ்களில் மெல்லிய முறுவல் முகிழ்த்திருக்கக் கண்டாள். மாதரி முகம் கண்ட ஆய்ச்சியர் அதிலிருந்து அச்சத்தைத் தாங்களும் பெற்றுக்கொண்டனர். சுனையில் இருந்து குளிர்போல அச்சம் அங்கே பரவியது. ஆய்ச்சியர் அனைவரும் சொல்லவிந்து விழித்த கண்களுடன் கண்ணகியை நோக்கி அவளைச் சூழ்ந்து நின்றனர்.

ஆயர்பாடிக்கு அப்பால் சிற்றாற்றின் கரைதொட்டு மதுரைக் குள் செல்லும் பெருஞ்சாலையில் மக்கள் திரள் ஓலமிடுவதை ஆய்ச்சியர் கேட்டனர். ஓலம் புயல் நெருங்குவதுபோல வலுத்து வலுத்து வந்தது. மாதரி ஆய்ச்சியரை அனுப்பிச் செய்தி அறிந்து வரச் சொன்னாள். சென்ற பெண் அச்சம் தேங்கிய நோக்குடன் வந்து ''ஏதென்று எவரும் அறிந்திலர். ஆனால் முல்லை நிலம் நிறைத்த புறமக்கள் அனைவரும் நகருக்குள் திரண்டு செல்கிறார்கள். மன்னரின் மெய்க்காவற்படைகள் அறியா இளைஞன் ஒருவனைக் கொன்று பொருள் கவர்ந்துவிட்டதாகச் செல்கிறார்கள்.'' சற்றே கழித்து வந்த இன்னொரு ஆயர்பெண் ''விஞ்சையன் ஒருவனைப் பழையனின் மறவர்கள் கொன்று விட்டதாகவும் மதுரைமீது தெய்வங்களின் அவச்சொல் வீழ்ந்துவிட்டதாகவும் சொல்கிறார்கள். விண்ணுறை தெய்வங்கள் மண்ணிறங்கி மதுரையைத் தாக்கப் போவதாக ஒரு முதியவன் கூவினான்'' என்றாள்.

''நம் ஆயர்களையெல்லாம் இல்லம் திரும்பச் சொல் வாயாக'' என்று மாதரி ஆணையிட்டாள். இரு ஆய்ச்சிறுவர் அதை ஏற்று முல்லைப் பெருநிலம் நோக்கி ஓடினர். அப்பால் சாலையில் ஓலங்கள் உருமாறிப் பாடல்களாகவும் குறுமுழவோசையாகவும் ஒலித்தன. மாதரி ஓடி ஆயர்குடியின் எல்லையில் வேம்புமரம் மீதேறி நோக்கினாள். சாலையெங்கும் புதுவெள்ளம்போல மனிதப் பெருக்கு செல்லக் கண்டாள். வியர்வை வழியும் கரிய உடல்கள், அழுக்கேறிய ஊரிகள், பறக்கும் ஆடைகள், வண்ணத்தலைப் பாகைகள்... அவர்கள் சினமோ வெறியோ கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அத்தனை முகங்களும் பேருவகையில் வலித்துக் கோணலாகி இருந்தன. வாய்கள் அதிர்ந்து திறந்து கூவிக் கொண்டிருந்தன. புயல்பட்ட புதர்க்கூட்டம்போல ஆயிரம் பல்லா யிரம் எனக் கைகள் எழுந்து காற்றை நிறைத்தாடின. முழவுகளும்

கிணைப்பறைகளும் சிறுதுடிகளும் ஏந்திய ஆடவர் அவற்றை இசைத்து ஆடித் துள்ளிச் சென்றனர். பெண்டிர் தலைவிரி கோலமாகச் சென்றனர்.

மாதரி அச்சத்துடன் இறங்கிப் பிற ஆய்ச்சியரிடம் ''என் இதுநாள் வாழ்க்கையில் இப்படி ஒரு கூட்டத்தைக் கண்டதில்லை. நகரைச் சூழ்ந்து வாழ்ந்த அத்தனை மக்களும் உள்ளே நுழைந்த வாறிருக்கின்றனர்.. இந்நகரம் இவர்களை எப்படித் தாங்கும்? எடை தாங்கா மரக்கலம்போல இது மண்ணிலமிழவும் கூடுமே'' என்றாள். ''என்ன கூவுகிறார்கள் அவர்கள்? என்ன ஒலி அது? வானிலிருந்து ஒரு பேரருவி இழிவதைப்போல பொருளற்ற பேரொலி... அது மனிதம் ஒற்றை நாவாக மாறி எழுப்பும் ஒலியா என்ன?''

ஆய்ச்சியர் தடுத்தும் நிற்காமல் மாதரி சாலையை நோக்கி ஓடினாள். சிற்றாற்றின்மீது கவிழ்ந்த மூங்கிற்பாலத்தில் ஏறி மறு பக்கம் சென்றாள். மண்ணுக்கடியிலிருந்து புழுப்பூச்சிகள் படை படையென எழுவதுபோல எங்கிருந்தனர் என்று வியப்பூட்டும்படி கொடுந்தோற்றம் கொண்ட மக்கள் திரள்திரளாகப் பொங்கிவந்த படியே இருக்கக் கண்டாள். அவர்கள் வெறியுடன் பாடும் பாட்டைச் சில கணங்கள் கழித்தே பொருள் கொண்டாள். அவள் உடல் அச்சத்தில் நடுங்க அருகே நின்ற ஆய்ச்சியைப் பற்றிக் கொண்டாள்.

போற்றலும் தூற்றலும் ஒன்றேயான புன்மொழியால் பெருங் கடல்களை ஆளும் கன்னியன்னையைப் பாடினர் அம்மக்கள். தொலைதூரத்துச் சிற்றூர்களிலும் தென்னிலப் பாலைகளிலும் வாழும் கடைசியரும் பிறரும் உயிர்ப்பலி கொடுத்து அன்னையை வணங்கும்போது பாடும் பாடல் அது என உப்புக் கொளப்போகும் உமணர் சொல்லி அவளறிந்திருக்கிறாள். செம்மொழி வாழ்ந்த மதுரையில் எவரும் அச்சொற்களைக் கேட்டதேயில்லை. அச் சொற்களில் ஒன்று மதுரை மாநகர்க் காற்றில் ஒலித்தது என்றால்கூட அதன் பெருங்கற்கோட்டைகள் சிதையும் என்றும் வையை வற்றி மணலாகும் என்றும் பதியெழுவறியா மதுரைப் பழங்குடி மக்களை முழுக்க வடதிசைக்கு ஓடச்செய்ய அவற்றில் ஒரு சொல்லே போதும் என்றும் தோன்றியதுண்டு. அவள் முன் அச்சொற்கள் பாறை அணையுடைத்து சேறும் நுரையுமாக மலையிறங்கும் காட்டாறு போல ஓடிக்கொண்டிருந்தன.

அக்கூட்டத்தைத் தாண்டி வந்த ஆயர்பெண் ஒருத்தி தன்னை நோக்கிக் கைவீசி ஏதோ கூவுவதை மாதரி கேட்டாள். ஒருகணம் அவளுடலில் நடுக்கம் எழுந்தது. பின்பு என்ன நடந்தது எனத் தன் அகம் அறிந்திருப்பதை அறிந்த வியப்பில் சிலைத்தாள். ஆயர்பெண்

அவளருகே ஓடி வந்து மூச்சு இளைக்கக் குரலெழாது தவித்துக் கைகளை ஆட்டினாள். ''கோவலன்... நம் கண்ணகியின் கொழுநன்... அவனை...'' என்று ஆய்ச்சி குழறியபோது மாதரி ''வருக'' என்று கூவிவிட்டு ஆயர்குடிக்குள் ஓடினாள்.

ஆய்ச்சியர் பதற்றத்துடன் எதிர்வர மாதரியும் ஆயர் பெண்ணும் கண்ணகியை நோக்கி ஓடினர். கண்ணகியைக் கண்டதும் ஆயர் மடமகள் கோயில் கருவறைமுன் நிற்பவள்போல விழித்த கண்களுடன் சொல்லிழந்து கைகூப்பிச் சிலையென நின்றாள். இளங்காற்றில் பந்தச் சுடர் அசைவதுபோலக் கண்ணகி மீது செவ்வாடை மெல்ல அசைந்தது. அக்கணத்தில் தன் குரல் பெற்ற ஆயர்பெண் ''அன்னையே, நான் என்ன சொல்வேன்! உன் மீது வான் இடிந்து விழுந்ததே!'' என்று பெருங்குரலெழுப்பிக் கண்ணகியின் காலில் விழுந்தாள். கல்விழி நோக்குடன் கண்ணகி அவளை ஏறிட்டாள் ''உன் மஞ்சளும் மங்கலமும் அழிந்ததே. உன் கூந்தல் மலர் போயிற்றே'' என்று ஆயர்பெண் கதறி அழுதாள்.

மாதரி அவளைத் தூக்கி எழுப்பி ''என்ன ஆயிற்று... நீ என்ன கண்டாய் சொல்'' என்றாள். அழுகையில் விம்மும் நெஞ்சைக் கைகளால் அள்ளியபடி ''இவள் கணவனை அரசமறவர் கொன்று சிலம்பு கொண்டு சென்றனர். குருதியில் ஊறிக்கிடந்த சடலத்தை நான் கண்டேன்...'' என்றாள்.

கண்ணகி எழுந்து காற்றில் பறக்கும் செவ்வாடை தீக்கொழுந் தென அலைய, சுடரும் கண்களுடன் ''ஏன் அவர்கள் என் கொழுநனைக் கொன்றனர்?'' என்றாள்.

''அவன் கையிலிருந்தது பாண்டியன் தேவியின் காற்சிலம் பென்று சொன்னார்கள். கள்வன் என எண்ணிக் கொன்றதாக அரசமுரசம் அறைவதைக் கேட்டேன்... இரவலர் கூட்டம் அவன் சடலத்தைச் சுற்றிச் சூழ்ந்துள்ளது. அவர்களைச் சுற்றிப் படைக் கலங்களேந்திய மறவர் படை உள்ளது.''

கண்ணகி தன் இடக்கையால் கொண்டையை மலருடன் பிய்த்துச் குழலை அவிழ்த்துத் தலையை உதறினாள். வலக்கையால் தன் அணிகளை எல்லாம் உடைத்து எறிந்தாள். பெரும்பாலை களைத் தழுவும் வெங்காற்று ஒன்று அங்கே வீசியதென ஆய்ச்சியர் உணர்ந்தனர். அவர்கள் கண்முன் நின்ற கண்ணகியின் உடலில் கண் தொட எட்டாப் பிறிதொரு உடல் வந்து சேர்ந்ததுபோல் அறிந்தனர். அவள் கண்கள் குருதிச்செம்மை கொள்வதை, முகமெங்கும் அனல் வெம்மை நிறைவதை, கால்களில் வேங்கையின் வெறிவிரைவு எழுவதைக் கண்டனர். தன் கச்சையில் இருந்த இடக்கால் சிலம்பை

எடுத்தவளாக ஒரு சொல்லும் பேசாது கண்ணகி சிற்றாற்றின் பாலத்தில் ஏறிப் பெருஞ்சாலை நோக்கிச் சென்றாள். ஆய்ச்சியர் அழுதும் அஞ்சியும் அவளைத் தொடர்ந்து ஓடினர்.

செய்தியறி காதை இது என்க.

ᘓ

திக்கட் பெருந்திரள் குமுறி அலையடித்து ஆர்த்த மாமதுரை வீதியில் கையில் சிலம்பும் கண்ணில் வெய்யநீருமாகக் கண்ணகி நுழைந்தபோது சுழற்காற்று புகுந்த காடுபோலப் பேரொலியுடன் வழி பிளந்து நீண்டது. அவளைக் கண்டவர் சொல் விழுக்க, அவளைச்சுற்றி உருவான அமைதி நீரில் கல் விழுந்த திரை வளையம் என அம்மையத்திலிருந்து விரிந்தது. எரிமீன் சென்ற வழி போல அவள் நடந்த தடம் ஆட்கூட்டத்தில் எஞ்சி நீண்டதை மாடங் களில் ஏறி நின்றவர் கண்டனர்.

ஊர்மன்றின் மேடையில் கண்ணகி ஏறி நின்றாள். தன் கையிலிருந்த இடச்சிலம்பைத் தூக்கி இடியொலித்த குரலில் கேட்டாள் ''வானகமே மண்ணகமே விரிசுடரே சொல்க! என் கொழுநன் குற்றமுடையவனா?''

''இல்லை! இல்லை!'' எனக் கடலோசை எழுப்பியது சூழ்ந்து விரிந்த மக்கள்திரள்.

''அன்னையரே! கன்னியரே! சொல்க, நான் பிழையுடை யவளா?''

''இல்லை! இல்லை!'' என்று ஆர்த்தன ஐந்நிலமும்.

அவிழ்ந்த கருங்குழல் பறக்கத் தீநிற ஆடை துடிதுடிக்க அவள் நடந்தபோது தங்களை அறியாமல் பெண்டிர் பின்தொடர்ந்தனர். தொடர்ந்த பெண்டிரின் குழலும் ஆடைகளும் அவிழ்ந்து பறந்தன. அவர்கள் கண்களிலும் சுடும் கண்ணீர் வழிந்தது. ஒன்று பிறிதெனப் பெருகும் பளிங்காடிப் பிம்பங்களாகக் கண்ணகி விரிந்தாள். கண்ணகியரின் பெரும் படை நகர் வீதிகளில் ஒழுகியது.

நகிலறைந்து கதறும் பெண்டிரின் ஓசை நகரெயில் மதில்களை மோதியது. யவன வீரர்கள் ஈட்டியுடன் காவல் காத்த பெருவாயில் கள் மெல்லத்திறந்தன. நுனைஒளிர் படைக்கலங்களை மார்போடு சாய்த்து நுண்விழி யவனர் கண்ணீருடன் தலைவணங்கிப் பின்ன கர்ந்தனர். கைவிடுபடையுடன் காத்திருந்த மறவர் தங்கள் தோள்கள்

கல்லாகிக் குளிர்ந்ததுபோல நின்றனர். கொடிநுடங்கிய முடிமாடங்களின் மூடிய கதவங்களுக்கு அப்பால் சிலம்பொலிக்கப் பெருங்குலப்பெண்டிர் ஓடி வந்தனர். உறைந்து நின்ற தங்கள் கொழுநரை அகற்றிச் சாளரங்களிலும் உப்பரிகைகளிலும் பிதுங்கிக் கைநீட்டிக் கூவியழுதனர். அப்போது அம்மாநகரத்தின் எண்திசை யிலும் எழுந்தது பெண்குரலே. எங்கும் ஆண்மக்கள் குரலே எழவில்லை என்றறிந்த முதுசான்றோர் நெஞ்சில் கைவைத்து ''ஆம்! பேரன்னை எழுந்தாள்!'' என்று விம்மினர்.

வேலும் வாளும் வேலியிட மறவர் சூழ்ந்த பொற்கொல்லர் வீதியில் அழுகண் அன்னையர் நுழைந்தபோது படைக்கலங்கள் எல்லாம் சிறார் ஆடும் களிக்கலங்கள் ஆயின. தவறிழைத்து நாணும் மைந்தர்கள்போல மறவர் ஒதுங்கித் தலை கவிழ்ந்து வழிவிட்டனர். தலைப்பொற்கொல்லன் வீட்டு முகப்பில் செம்புழுதியில் குருதிப் பிண்டமெனக் கிடந்த கோவலன் உடல் முன் கண்ணகி நின்றாள். குனிந்து அவனுடைய பிளந்த தலையை நோக்கினாள். புழுதிபடிந்த அவள் கால்களில் தலைவைத்துக் கொற்றவை முன் தாருகன் எனக் கிடந்தான் கோவலன்.

எரிதவழ் முகம்மீது படிந்த கருங்குழலை ஒதுக்கி, தலை தூக்கி, அரிமா என முழங்கிய குரலெழுப்பிக் கண்ணகி கேட்டாள் ''சான் றோர் என எவருமுளரோ இங்கு?'' அக்கணம்வரை தங்களைச் சான்றோர் என உணர்ந்த அனைவரும் உளம் சிறுத்துத் தலை கவிழ்ந்தனர். ''ஆடவரில் சான்றோர் என ஒருவர் உண்டோ?'' என்று கொற்றவையின் குரலெழுந்தது. அமைதியே பதிலுக்கு ஒலித்தது.

இரு கரங்களையும் விரித்து வெறி பொங்கும் பெருங்குரலில் அன்னை கேட்டாள் ''பத்தினி என எவரேனும் உளரோ இங்கு?'' அக்கணமே அங்கு நின்ற அத்தனை பெண்டிரும் எரிதழல் வடி வாயினர். ''பெண்டிரில் பத்தினி என உண்டோ ?'' என்றாள் அவள்.

தன் கணவனின் குருதியில் பாதம் நனைத்து நின்று கன்னி கேட்டாள் ''தெய்வம் என ஏதும் உண்டோ இங்கு?''

ஆழ்ந்த அமைதியில் இருந்து பதிலுக்கு எழுந்தது ஒரு வெறிக்குரல். முகிழா இளமுலைக் கன்னி ஒருத்தி அணங்கெழுந்து ஆடிவந்து கூவினாள். அவள் குரலில் ஒலித்தது தென்புலத் தெய்வங் களின் மொழி. விலங்குகளும் மானுடரும் ஒன்றாகப் பேசிய பெருமொழி. மொழிகளைச் சூலுற்ற முதல் மொழி.

பின் அப்பகுதியெங்கும் பெண்ணுடல்களில் சன்னதம்

கொண்டு வெளிக்கிளம்பி வந்தனர் மண்ணிலும் மொழியிலும் காலத்திலும் கனவிலும் புதைந்து கிடந்த ஆயிரமாயிரம் தொல் மகளிர். நீர் மகளிரும், கான் மகளிரும், வான் மகளிரும் பெருங் குரல் கொண்டெழுந்தனர். திசை எட்டும் நிறைந்தன அணங்குகள், பாவைகள், பேய்கள். கண்சுடர் எரிந்த பிடாரிகள். கொடுஞ் சிரிப்பெழுந்த குலதெய்வங்கள். அங்கே திணிந்து நெரித்த உடற் திரளுக்குள் அலையடித்த ஆழ்கடல் பிளந்து அவை வந்தபடியே இருந்தன.

அணங்கெழு காதை இது என்க.

ஃ

அகச்சிறை வாயிலுக்கு வந்த பழையன் காவல் நின்ற பெண்ணிடம் தன் வரவை அறிவித்து நிலைகொள்ளாமல் காத்து நின்றார். அவள் அழைப்புத் தந்ததும் காலடி ஓசை மரக்கூரைமீது எதிரொலி எழுப்ப நடந்து உள்ளே சென்றார். தீராத் தலைநோவுக்கு பற்றுப்போட்ட நெற்றியுடன் காஞ்சிரமரத்தில் செய்த பெருமஞ்சத் தில் கோப்பெருந்தேவி படுத்திருந்தாள். அவளருகே தலைச்சேடி சாமரம் அசைத்து நின்றிருந்தாள். பழையன் முகமன் சொல்லி அவளருகே அமர்ந்தார். ''தங்களுக்கு என்ன ஆயிற்று பாண்டிமா தேவி?'' என்றார்.

பாண்டிமாதேவி கண்கள் கலுழ நெடுமூச்செறித்தாள். மீண் டும் மீண்டும் பழையன் கேட்டபோது கண்களை சாளரம் நோக்கித் திருப்பியவளாக மெல்லத் தான் அன்று கண்ட கொடுங்கனவு களைக் குறித்துச் சொன்னாள். செங்கோலும் வெண்குடையும் சரிந்து வீழ்ந்ததையும் அரண்மனை வாயிலின் ஆராய்ச்சி மணி நாவிழந்து ஆடக் கண்டதையும் எரிமீன்கள் உதிர வானம் இருண்ட தையும் சொல்லி விம்மினாள். ''நிமித்திகரைக் கூட்டிப் பயன் வினவினேன். அஞ்சத்தக்கவை நிகழலாம் என்றனர்.''

''சில நாட்களாக இந்நகரெங்கும் சூழ்ந்துள்ள தொலைநில மக்களின் ஓசையைத் துயிலிலும் கேட்கிறீர்கள் தேவி. அஞ்சும் சேடியர் சொல்லும் பொருளில் சொற்களை எண்ணியும் இருக் கிறீர்கள். அதுவே கனவென விளைகிறது. அஞ்சுவதொன்றும் இல்லை. எண்குடித் தலைவர்களும் நம்மிடம் அடங்கிச் சொல் லளித்து விட்டனர். கடைநில மாக்களிடம் இப்போது எதிர்ப்பென ஏதுமே இல்லையென நம் ஒற்றர் சொல்கின்றனர். இன்னும் சில நாட்களில் அனைவரும் தங்கள் ஊர் திரும்பிவிடுவர். சிலம்பணி விழவும் நம் மறவர் அணிநடைச் செலவும் கண்டபின் அவர்களின் நா எழாது என்பது உறுதி. அன்று மன்னர் அம்மக்களைக் கண்டு குறைகேட்டு சில நற்சொற்களைச் சொல்லவும் வகுத்துள்ளேன்'' என்றார் பழையன்.

"ஆனால் நகரெங்கும் எழும் இந்தப் புதிய ஓசை இங்குள்ள அனைவரையும் அச்சுறுத்துகிறதே" என்றாள் கோப்பெருந்தேவி.

"அஞ்சற்க. படைக்கலமேந்தி ஆடவர் வரும் ஓசை அல்ல இது. பெண்கள் எழுப்பும் ஓசை. நகர் தீண்டி ஆலயங்கள் கண்டதும் அடங்கிவிடும் அணங்குகள் இவர்கள்..."

கோப்பெருந்தேவி நீள்மூச்சுடன் எழுந்தமர்ந்து "பொற் கொல்லன் கொண்டுவந்த வலச்சிலம்பை நீங்கள் கண்டீர்களா?" என்றாள். "அது நம் பொற்சிலம்பல்ல, புகார்வணிகன் ஒருவன் கொண்டுவந்தது என்று சொல்கின்றனரே..."

"சொல்வது யார்?" என்றார் பழையன்.

"என் சேடியர்" என்றாள் கோப்பெருந்தேவி.

"நான் கண்டேன், அது நம் சிலம்பேயாகும்" என்று நடலம் எழுந்த நடுக்குறு குரலில் சொன்னார் பழையன் "தேவி இவ்விரி நிலத்தில் பேரன்னையின் மந்தணச்சொற்கள் எழுதப்பட்ட பொற் சிலம்பு நம் குடித் தோரணிக்கு மட்டுமே உரியது. ஆகவேதான் நாம் மண்ணாளும் வேந்தாகிறோம். பிறிதொருவன், அதிலும் ஒரு வணிகன், எங்ஙனம் அத்தகைய சிலம்பு கொண்டுவர இயலும்? அங்ஙனம் கொண்டுவந்திருப்பானேயானால் அது சோழமாதேவி யின் சிலம்பாக இருக்கும். எந்நிலையிலும் அவன் கொல்லத்தக்க வனேயாம்."

கோப்பெருந்தேவி கண்களை மூடிக்கொண்டு "என் நெஞ்சின் அச்சத்தை என்னால் வெல்லவே இயலவில்லை" என்றாள். "உங்கள் சொற்கள் மட்டுமே எனக்குத் துணை இன்று."

"இது அரசவை கூடும் நேரம். நான் தாங்கள் அணியும் முடியும் புனையும் நேரத்தைக் கொள்ள எண்ணவில்லை. வரு கிறேன்" என்று பழையன் விடை கொண்டார். வாசல் தாண்டி வந்தபின் நின்று தன் ஒற்றனிடம் "இவ்வகச்சிறைத் தாதியரை முற்றாக மாற்றுக. தேவியிடம் சிலம்பினைப்பற்றிப் பேசிய சேடி எவளெனத் தெரிந்து அவள் தலை கொய்து வீசுக" என்று ஆணை யிட்டான்.

தீக்குறிகாண் காதை இது என்க.

ஆ

நற்குறி காட்டும் பொன்சூழ் ஆடி ஏந்திய மகளிர் முன் செல்ல நறுநீர்க் கலங்கள் ஏந்திய சேடியர் அவர்களைத் தொடரக் கோடியும் பட்டும் சுமந்த பெண்டிர் சூழப் பாண்டிமாதேவி அரசவைக்கு ஏகினாள். அடைப்பை ஏந்திய முதுசேடி அருகே நடந்தாள். கவரி வீசி இருவர் சூழ்ந்து வந்தனர். மங்கல இசையும் முழவொலியும் வாழ்த்தும் வரிசையும் முழங்க நடந்து யவனப் பளிங்குப் படிகளில் ஏறிப் பாண்டியப் பேராயம் வீற்றிருந்த விரிந்த கூடத்தில் நுழைந்தாள். அவை எழுந்து அவளுக்கு வாழ்த்துச் சொன்னது. அரியணையில் தன் கொழுநன் அருகே மணிமுடி ஒளிர, பட்டாடை உலைய, மார்பிலும் இடையிலும் தோள்களிலும் கைகளிலும் அணிகள் ஒளியிமைக்க, பாண்டிமாதேவி அமர்ந்தாள். நிமித்திகர் எழுந்து அவள் குடி வாழ்கவென வாழ்த்தி முகமன் கூவினர்.

பேராயம் எங்கணும் நிறைந்து பரவிய இறுகிய முகங்களைக் கோப்பெருந்தேவி கண்டாள். அவையில் வலப்பக்கம் சுண்ணமும் கரியும் நீலமும் சிவப்பும் பூசிய முகங்களுடன் கூத்தரும் விறலியரும் பாணரும் நட்டுவரும் எக்கவலையும் இன்றிச் சிரித்துத் தங்களுக்குள் பேசியும் கருவிகள் பூட்டி முறுக்கியும் நின்றிருந்தனர். பாண்டியன் தன் தேவியருகே குனிந்து ''இன்று சேரநாட்டுக் கூத்தர் வந்துள்ளனர் தேவி. ராமனின் கதையை ஆரியக்கூத்தாக ஆடவிருக்கின்றனர்'' என்றான்.

பேரமைச்சர் வணங்கி, அவர் முன்னரே சொல்லியிருந்ததைத் தொடர்ந்தார் ''ஒற்றர்கள் வந்தவண்ணமே இருக்கிறார்கள் மன்னரே. நகரே இப்போது நால்வகை ஒலிகளும் நரற்ற பொங்கிக் கொந்தளித்தபடி உள்ளது.''

"பெண்டிரின் கூட்டம் ஒன்று மன்று சூழ்ந்து அழுகிறது. அவ்வளவே'' என்றார் பழையன். ''மறவலி கொண்டு மண்ணாளும் மன்னனுக்கு இது தவிர்க்க இயலாத ஒன்றே. கள்வரையும் கயவரையும் கொல்லவே அறம் ஆணையிடுகிறது. அவர்தம் கொற்றவை

மனைமக்களின் பழியிலிருந்து மன்னருக்கு அறமே காப்பாகும்..''

" ஆம், அறமே முதன்மையானது. நான் சொல்லிவந்ததும் அதுவே'' என்றார் அமைச்சர். ''மன்னன் என்பவன் அறத்தின் மகவு. அவனைக் கருத்தரித்துப் பெற்று முலையூட்டி வளர்ப்பது அறமேயாகும். அவள் மடியில் அமர்ந்துதான் அவன் கோலோச்சுகிறான். மன்னனின் செங்கோல் என்பது மகவின் களிக்கோலுக்கு நிகர். அவனுடைய கோல் பிறரைக் கடிகையில் கடிவது அன்னையின் பெருவலிகொண்ட கோலேயாகும் என்று நூலோர் உரைத்துள்ளனர். அன்னை மடிமீதிருந்து இறங்கும்போது மன்னனுக்கு அறத்தின் காப்பு இல்லாமலாகிறது. அவன் எல்லைகளை மீறும்போது அன்னையே அவனுக்குக் கூற்றாகவும் கூடும்...''

''முறைமீறி வசைச்சொற்களை அவையில் சொல்கிறீர்'' என்று பழையர் சொன்னார்.

''இது வசை அன்று. அமைச்சன் என்பவன் மன்னருக்கும் மக்களுக்கும் நடுவே வாழ்பவன். ஐவகை நிலமும் நிறைந்து வாழும் எண்வகை மக்களில் ஒருவன் அவன். அவர்களின் குரலாக மன்னனிடம் பேசுவதே அவன் வேலை.''

''இன்று நீர் உம் குலத்தின் குரலாக ஒலிக்கிறீர்'' என்றார் பழையன்.

அமைச்சர் சினம் கொண்டு நிலையிழந்தார். ''வெளியே எட்டிப்பாரும் பழையரே, பொங்கிவருகிறது பெண்டிரின் பெரும் படை. குடியென்பது என்ன? ஆடவர் செய்யும் தொழிலுக்கு ஏற்ப மூத்தோர் பிரித்த முறை அது. இற்செறிந்து குலம் வளர்க்கும் பெண்டிருக்கு ஏது குடி? அவர்கள் குடிப்பிரிவில்லா முதற் பெருங்குடி என்றறிக. பழையரே, உங்கள் மறவர் படையினரின் வாளும் வேலும் எதுவும் அவர்களை எதிர்கொள்ள இயலாது. யானையும் குதிரையும் அவர்கள் முன் பணியும். கோட்டை வாயில்கள் அவர்களைக் கண்டால் திறக்கும். அவர்களைத் தடுக்கும் வல்லமை எங்கும் இல்லை...''

கண்ணீருடன் பாண்டியன் பக்கம் திரும்பி அமைச்சர் கூவினார் ''மன்னரே, நான் உங்கள் திறவாச்செவியில் சொற்களை அளித்தே என் வாழ்வை அழித்த மூடன். இவை நான் தங்களிடம் சொல்லும் இறுதிச் சொற்கள். மன்னரே, இந்த மண் நமக்குரிய தல்ல என்றறிக. இது முதற்பெருந்தெய்வமாய் நீலத்திரைகடல்களை ஆளும் பேரன்னையின் கொடை! தெய்வங்களைப் பெற்றெடுக்கும் தெய்வம் அவள். இதை அவள் தன் ஏழு பெண் மக்களுக்கே

அளித்தாள். இந்தத் தமிழ் நிலம் பெண்களின் உடைமை என்றே என்றும் நம் முன்னோர் கூறிவந்தனர். பெண்டிரின் புதல்வர்களாகவும் கணவர்களாகவும் தந்தையராகவும் நாம் இதை ஆண்டு வருகிறோம். இது கடன் கொண்ட மண் மன்னரே. காதலால் நம் குறை பொறுத்துக் குடி தாங்கி நம்முடன் இருக்கும் பேரன்னையின் வடிவங்கள் பெண்கள். பேரன்னையின் பொறை தன் இறுதியைக் காணும் கணம் ஒன்று வரும் என்கின்றன நூல்கள்...'' நெஞ்சில் கை அமைத்து விழிகள் சோர அமைச்சர் சொன்னார் ''இதோ அக் கணம் வந்துவிட்டதென நான் காண்கிறேன். உங்கள் அரியணை விட்டெழுந்து உப்பரிகையில் நின்று நகரை நோக்குங்கள். பேரன்னை அலையெழுந்து திரண்டுவரக் காண்பீர்கள்...''

தன் பொலஞ்செய் அமளியில் சொல்லிழந்து விழி திறந்து பாண்டியன் குளிர்சிலையாக அமர்ந்திருந்தான். அப்போது பெரு வாயில் விரியத் திறந்து அச்சமே விழிகளாக ஓடிவந்த வாயிற் காவலன் கால் குழைய நின்று பெருங்குரலெடுத்து ''பேராச்சி! அன்னை! அன்னை! நம் வாயில் முன்...'' என்று கூவினான். குழறும் சொற்களில் ''உடை நோக்கின் வணிகர் குடிப்பெண். ஆனால் அவளில் பெரும்பாலைகளை ஆளும் கொற்றவை சன்னதம் கொண்டெழுந்திருக்கிறாள். பிடர்த்தலை விரிய மேடையேறிய பிடாரியெனப் பெருஞ்சினம் எரிய வந்து நம் வாயிலில் நிற்கிறாள்!''

அவை அஞ்சி எழுந்தது. பழையன் சினம் மீதூற எழுந்து ''எங்கே நம் வாயிற்காவலர்? எங்கே யவன வீரர்?'' என்று கூவினார். அமைச்சர் ''அன்னை எழுந்துவருகையில் எவர் முன் நின்று தடுக்க இயலும்?'' என்றார்

''அவளை இந்த அவைக்குக் கொணர்க'' என்று பாண்டியன் ஆணையிட்டான். காவலன் திகைத்து நிற்க வாயிலில் குரல்கள் எழுந்தன. மெய்யில் செம்புழுதியும் கையில் பொற்சிலம்பும் கலைந்த கருங்குழலும் உலைந்த செவ்வாடையுமாகக் கண்ணகி அவை புகுந்தாள்.

உற்றவையும் கற்றவையும் எனத் தானறிந்த சொற்களெல்லாம் அழிபட திறந்த வாயும் விழித்த கண்களுமாக அவளை நோக்கி நின்றான் பாண்டியன். கண்ணீர் வாரக் கலுழும் அவள் கண்களையும் அழலென எரியும் அழகிய முகத்தையும் வலக்கை ஏந்திய பொற் சிலம்பையும் நோக்கினான். அவளை எங்கோ கண்டிருப்பதாக நெஞ்சு சொன்னதை வியந்தான். ''யார் நீ'' என்றான்.

''நான் புகார் நகர்ப் பெருவணிகன் மாநாய்கன் மகள் கண்ணகி. என் கொழுநன் கோவலன் உன் நகரில் கள்வன் எனக்

கொலையுண்டான். உன் வீரர் அவன் கையிலிருந்த என் பொற் சிலம்பும் கவர்ந்தனர்'' என்றாள் அவள்.

"கள்வனைக் கொல்லுதல் மன்னன் அறம். பிழையல்ல'' என்றான் நெடுஞ்செழியன். கண்ணகி சினமெழும் வயமாவெனக் குரல் எழுப்பிச் சீறினாள் " அறம் பிழைத்த மன்னா, என் கொழுநன் கள்வனல்லன். அவன் என் காலணிந்த பொற்சிலம்பையே இங்கு விற்க வந்தான்'' என்றாள்.

பழையன் எழுந்தார் "பெண்ணே, அவனிடமிருந்து நாங்கள் பெற்ற சிலம்பு மண்ணாளும் மன்னர்குடிப் பெண்டிர் கால்களுக்கு மட்டுமே உரியது. கருங்கழற் கொற்றவையின் கால்களில் இருக்கும் சிலம்பு நோக்கிப் பொலஞ்செய்கொல்லர் வடித்தது. பேராச்சியின் மந்தணச் சொற்கள் பொறித்தது அது.''

"பேராச்சி தென்தமிழ்க் குடிகளுக்கெல்லாம் அன்னை என்றறிக... என் காலணிந்த சிலம்பு எம் குடித்தெய்வம் கண்ணை யன்னையின் கால் அணி நோக்கிச் செய்தது. எங்கள் பெருங் குடிக்குப் பேராச்சியளித்த மந்தணச்சொற்கள் பொறித்தது...'' என்றாள் கண்ணகி. ''பாண்டியன் தேவி, உன் சிலம்பில் பெய்த அரி என்ன?''

"முத்து'' என்றாள் கோப்பெருந்தேவி நடுங்கும் குரலில்.

"என் சிலம்போ மணியரி பெய்து வடித்த அணி... யாவரும் நோக்குக'' என்று கண்ணகி தன் பொற்சிலம்பை வெண்கல் தரை மீது வீசினாள். தண் என ஒலித்து அது உடைந்து திறக்க மணியரி ஒன்று தெறித்துப் பாண்டியன் இதழ்மீது மோதியது. துடித்தெழுந்த அவன் சித்தம் முழுக்கப் பொருளிழந்து சிதறிய சொற்கள் கொந் தளித்து நுரைத்தடங்கிய பேரமைதியில் அவளைக் கண்டு கொண்டான். ''அன்னையே...'' என்று மொழியிலாப் பெருங்குர லால் அவளை அழைத்து இரு கைகளையும் விரித்து அரியணை விட்டெழுந்தான். அவ்விளியின் கேளாப் பேரோசையால் நெஞ்சு டைந்து அங்கேயே விழுந்து இறந்தான்.

கோப்பெருந்தேவி தன் கணவனை அள்ளிப்பற்றி அவனுடன் சரிந்து அமர்ந்து அவன் தலையைத் தன் மார்புடன் இறுக அணைத்துக்கொண்டாள். அவன் கைபற்றி மணிமுடி சூடிய நாள் முதல் அவன் உள்ளம் அவள் அறிந்து கொள்ளமுடியாத ஒன்றா கவே இருந்து வந்தது. மீண்டும் மீண்டும் தன் சித்தத்தால் அதன் திறவா வாயில்களில் முட்டி முட்டிக் குருதி வழியத் தவித்தாள். தன் தலையை ஆறாப்பெரும்புண் எனச் சுமந்தலைந்தாள். அன்று

வெம்மை மாறாத அவன் உடலைத் தன் நெஞ்சோடு சேர்த்தபோது ஒரே கணத்தில் அவன் உள்ளம் முழுக்க அவள் முன் திறந்து கிடந்தது. வாழ்ந்த காலம் முழுக்க அவன் அவளிடம் சொன்னவை எல்லாம் அப்போதுதான் அவள் செவிகளுக்குக் கேட்டன. அவனை அணைத்து இறுக்கிய தன் கையை வளைத்து விரலணியில் பதித்த வைரக்கல்லை தன் வாய்க்குள் விட்டு விழுங்கி அவன்மீது சரிந்தாள். தன்னை நோக்கி ஓடிவந்த தலைச்சேடியிடம் ''கணவனை இழந்தவள் இழப்பவை கணந்தோறும் வளர்கின்றன. அவள் அடைவது ஏதுமில்லை'' என்றாள். அவள் வாயிலிருந்து மெல்லிய உதிரச்சரடு வழிந்தது கண்டனர் அவையோர்.

எங்கும் பரவிய அமைதியை அறைந்து சிதறடித்தது வாயிலுக்கு அப்பால் பொங்கிய பேரோசை. சூருடைத் தெய்வங்கள் சன்னதம் கொண்டெழுந்த பல்லாயிரம் பெண்டிர் பெருங்கூட்டமாக கதவுகளை மோதித் திறந்து கடற்கோள் என அரண்மனையை நிரப்பினர்.

வழக்குரை காதை இது என்க.

ஃ

கலைந்த தேன்கூடுபோல இரைந்த மாமதுரை நகரூடே கண்ணீரும் கனலும் உமிழும் கண்களுடன் கண்ணகி நடந்தாள். அவளைச் சூழ்ந்து சன்னதம் கொண்ட பெண்தெய்வங்களின் பெருந் திரள் ஆடியும் அழுதும் கூந்தல் பறக்கத் துள்ளியும் விழுந்தும் ஆழிப் பேரலையென ஒலித்துத் தொடர்ந்தது. நகரமோ எண்ணிறந்த அணங்குகளும் பேய்களும் சன்னதம் கொண்டெழுந்தது போலிருந்தது.

செத்து மண்ணாகிப் புழுதியாகி உப்பாகி மொழியிலும் இல்லாமலாகிப்போன கோடிகோடிக் கீழாளரின் ஆவிகள் எழுந்ததுபோல, சாட்டை அடிபட்டுச் சதை பிய்ந்து தெறிக்க வயல் களிலும் உப்பளங்களிலும் மரக்கலங்களிலும் உழைத்து உழைத்து இறந்த தொழுப்பர் குலங்கள், கொன்று வீழ்த்தப்பட்ட இழிசினர் குடிகள், உயிருடன் புதையுண்டவர்கள்... மாமதுரைத் தெருக்களெங் கும் புதைகுழிகள் விட்டெழுந்துவந்த சடலங்கள் போல இரவலர் மாக்கள் நிறைந்து கூச்சலிட்டுக் களியாட்டமிட்டனர். மொழியின் ஆழத்துக் கசடு கலங்கிக் கெடுவீச்சத்துடன் கீழ்ச்சொற்கள் பொங்கி எழுந்து எங்கும் ஒலித்தன. அவர்கள் கற்களை அள்ளிவீசினர். தடிகளால் கண்ணில் பட்டவர்களை எல்லாம் அடித்தனர். தங்களுக் குள் வசைபாடி அடித்துக் கட்டிப்புரண்டனர். கொள்ளைச் செல்வங் களைப் பெற ஒருவரோடொருவர் முட்டி மோதிப் பூசலிட்டனர்.

கூட்டம் கூட்டமாகக் கூடல்நகரத்து வெண்சுதைப் பெருமாடங் களின் கதவுகளை உடைத்துத் திறந்து உள்ளே புகுந்தனர் கடைநில மக்கள். பளிங்கு அறைகளுக்குள் புழுதியும் குப்பையும் கொண்டு குவித்தனர். திரைகளைக் கிழித்தும் கலங்களை உடைத்தும் களிநட மிட்டனர். அவர்களுடன் அவ்வில்லங்களின் அகத்தளங்களுக்குள் தலைமுறைகளாக ஒடுங்கி வாழ்ந்த உரிமை மக்களும் ஏவல் மைந்தரும் தொழுத்தையரும் தொழும்பரும் சேர்ந்துகொண்டனர். பெருவணிகர்களை இழுத்துத் தெருவில் வீசி அவர்கள் ஆடை களைக் கிழித்து அவர்கள்மீது புழுதியள்ளி எறிந்து கூத்தாடினர்.

நகரமே கள்ளுண்டு அறிவழிந்து தன்னிலை இழந்தது போலிருந்தது. கள்ளில்லாமலேயே களி கொண்டிருந்தனர் அவர்கள்.

வெய்யநீர் விழிவார விரிகுழல் பறக்க கண்ணகி நகர்ச்சதுக்கத் தருகே சென்றாள். அவளைத் தொடர்ந்த மக்கள் கண்ணீருடன் கைகூப்பி ''அன்னையே! பேராச்சியே!'' என்று கூவி அரற்றினர். தன் நினைவிழந்து தன் உடல் மறந்து பெருங்காற்று கொண்டு செல்லும் சருகுபோலச் சென்றாள் அவள். அவள் கால்களில் கழலணிந்த கொற்றவையின் துடித்தாளம் குடியேறியிருந்தது. அவள் வாயிலிருந்து பண்டைப் பெருமொழியொன்றின் பொருள்கூடாச் சொற்கள் எழுந்தன.

எரியோன் கோயில் முகப்பில் செண்டையும் கிணையும் முழங்க எரிவேடமிட்டு பூசனைமுறை இயற்றும் முது பார்ப்பனன் நின்றிருந்தான். உடலெங்கும் நீலநிறம் பூசி சிவந்த விரிசடையைத் தோளில் படரவிட்டுக் கண்கள் சிவந்து விழிக்க வெண்பற்களைக் காட்டி அவன் வெறி கொண்டு நின்றான். தன் கையிலிருந்த தாலத்தி லிருந்து வெண்சாம்பலை அள்ளிக் கைகூப்பி அருகணைவோருக்கு அளித்து அவன் அருள்மொழி கூவினான். காற்றிலாடும் தழல் 'கதிரெனக் கண்ணகி அவனருகே வந்தபோது ஒருகணம் அவன் திகைத்து நின்றான் அவன் கண்கள் விரியத்திறந்தன. இதழ்களில் சொற்கள் நின்று துடித்தன. சட்டென்று அவன் தன் கையைத் தூக்கி பெருங்குரலெடுத்து ஆர்த்தான். கால்களில் ஏறிய கடுந்தாளத்துடன் உடல்தசைகள் அதிர சன்னதம் கொண்டு ஆடினான். ''அன்னையே! பேராச்சியே! இதோ உன் ஏவலன் வந்தேன். என்ன பணி எனக்கு? சொல்க சொல்க!'' என்று அவன் கூவினான். ''எரி பரவுக! அறம் பிழைத்த இந்தத் தீநகர் எரிந்தழிக! எரியூட்டுக!'' என்று கூட்டம் கூவி ஆர்ப்பரித்தது.

சுழற்காற்று தழுவிய செடிபோல வீசிய தரங்களுடன் துடிக் கும் உடலுடன் கண்ணகி நின்றாள். ''அன்னையே ஆணையிடு! ஆச்சியே'' என்று அவளைச் சூழ்ந்து குரல்கள் பொங்கிக் குமுறின. ஒரு கணம் அவள் கண்களில் அவள் மீண்டு வந்தாளெனத் தோன்றி யது. திகைப்புடன் தன்னைச் சூழ்ந்திருந்த கூட்டத்தைப் பார்த்தாள். ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அக்கணம் அவளைச் சூழ்ந்த கூட்டத் திலிருந்து நெடுவரைக் கடுந்தெய்வம் ஒன்றின் உச்சவெறி கொண்ட பெருங்குரல் எழுந்தது. அதை தொடர்ந்து கூட்டமே சன்னதம் கொண்டு கூவியது.

கண்ணகி இரைமீது பாயும் அரிமா எனக் குரலெழுப்பியபடி ஓடி அருகே திறந்திருந்த சிற்றாலயத்துக்குள் நுழைந்தாள். கற்

கூடத்தைத் தாண்டிக் குடைவுக் கருவறை முன் சென்றாள். இருண்ட சிற்றறையில் சுவர் புடைத்த கருஞ்சிலையாக, திசைபடர்ந்த எட்டுக்கைகளிலும் படைக்கலங்களுடன், தெறிக்கும் வெறிவிழி களுடன், திறவா நுதல்விழியுடன் கழற்கால்களின்கீழே நெஞ்சு பிளந்த மாமயிடன் விழித்துக்கிடக்க ஒற்றைமுலை மீது மண்டை மாலையணிந்து நின்றாள் கருங்கழற் கொற்றவை. அணையத் தயங்கும் சுடரெனக் கண்ணகி நின்று படபடத்தாள். சன்னதப் பெருங்கூவலுடன் கருவறைக்குள் நுழைந்து பலிமேடை மீதிருந்த கொடுவாளை எடுத்துத் தன் இடமுலையை அரிந்து வெளியே வீசி, குருதி பொங்கும் உடலுடன் அன்னையின் கரியகால்களில் சரிந்து விழுந்தாள்.

முலைக்குறை காதை இது என்க.

ஃ

IDதுரைப் பெருநகரின் சதுக்கமன்றின்மீது ஒளிமிக்க செவ்வுடலுடன் பாம்பு ஒன்று ஊர்ந்து ஏறுவதுபோலத் தழல் படர்ந்தது. மன்றவெளியெங்கும் தலைகளாக நிறைந்த இரவலர் திரளில் ஒருகணம் பரவிய அமைதியிலிருந்து ''எழுக எரி!'' என்று ஒரு முதியவன் கூவிய குரல் எழுந்தது. ''எழுக எரி! எழுக எரி!'' எனப் பல்லாயிரம் குரல்கள் கூவின. அக்குரல்களை உண்டு வளர்வதுபோல எரி ஐந்துமுகம் கொண்டது. மன்றின் மரக்கூரைமீது அது தன் அனற்கூரையைக் கவிழ்த்தது. படபடவென வெடித்தும் நீலமும் மஞ்சளுமாகச் சுடர்ந்தும் நாநீட்டிக் குதித்து வான் வான் எனத் தாவியும் கரும்புகைக் கூந்தலைக் காற்றில் சுழற்றிச் சன்னதம் கொண்டாடியும் அழல் ஆடி வளர்ந்தது. ''எரி எழுக! எரி எழுக!'' என நகரமே கூவியது. நாற்றிசையிலும் தீ படர்ந்தெழுந்தது. எரி எரியைக் கண்டு தழுவி ஒன்றாயிற்று. எரி தொட்டவை அனைத்தும் எரியாயின. தொலைவில் நின்று கண்ட மலைக்குறவர்களுக்கு தீ மூடிய அப்பெருநகரம் பொன்மாடங்கள் எழுந்த வான்நகரம் எனத் தோன்றியது.

கார்காலம் என வானமெங்கும் புகை மண்டியது. எரி காற்றி லெழுந்து மேலே சென்ற கரி மழையென நகர்த்தெருக்களில் பொழிய தெருக்களில் ஆடிய மக்களெல்லாம் கரிவடிவாயினர். சுதை மாடங்களும் விண்ணகர் விமானங்களும் கறுத்தன. நகரில் கருமையன்றி நிறமே எஞ்சவில்லை. மக்கள் கூவிய ஒலியும் கறுத் திருந்தது. அவர்களிடம் ததும்பிய தமிழும் கருமை கொண்டிருந்தது.

நகர் நடுவே எழுந்த பெருங்கல் மேடையில் விரிகதிர் முடியும், நான்கு கைகளிலும் தாமரையும் படைக்கலங்களும் அருள்குறியும் முதல்நூலும் கொண்டு அமர்ந்திருந்த முதற்பூதத்தின் உயர்ந்த சிலைமீது மக்கள் தொற்றி ஏறினர். பூதத்துக்குப் படைக்கப்பட்டிருந்த தேனும் பாலும் கலந்த நறுஞ்சோறும் பொரியும் வெண்மலர்களும் தட்டுகளுடன் தூக்கிவீசப்பட்டு புழுதியில் மிதிபட்டன. வெறியுடன் கூவி ஆர்த்துப் புன்சொற்கள் பெய்து மகிழ்ந்த மக்கள் சிலையை

உலுக்கினர். அருகே நின்ற வெண்குடைத்தேரின் கயிற்றை இருவர் எடுத்துச் சிலைமீது வீசினர். சிலைமீது நின்றவர்கள் அதைச் சிலையின் கைகளிலும் தலையிலும் சுற்றிக் கட்டினர். வடம்பிடித்து இழுத்த இளைஞர் இழிசொற்கள் கூவிச் சிரித்து ஒருவர்மீது ஒருவர் விழுந்து மீண்டும் இழுத்தனர். சிலை மெல்ல அசைவுற்றபோது வெற்றிக்களிக்குரல் விம்மி எழுந்தது. சிலை திடுக்கிட்டதுபோல மேலும் அசைந்தது. விழித்த கண்களுடன் ஏதோ சொல்லவந்த உதடுகளுடன் அது இடப்பக்கமாகச் சரிந்தது. அங்கே நின்றவர்கள் கூவியபடி விலகி ஓடினர். சிலை சரிந்து நின்று அசைவிழக்க அதன் மீது நின்றவர்கள் கீழே குதித்தனர். அவ்வுந்தலில் சிலையின் ஆழத்தில் ஒரு முறிவொலி எழுந்தது. சடசடவெனக் கல்பிளக்கும் ஒலியுடன் முதற்பெரும்பூதம் செம்புழுதி புகையெனப் பறக்க, மண்ணில் இடக்கைகள் படிந்து புதைய விழுந்து பதிந்தது. கூடி நின்ற மக்கள் கைகளைத் தூக்கி எம்பிக்குதித்து ஆர்த்து எழுப்பிய வெற்றிக் கூக்குரல் நகர் அதிரும்படி கேட்டது. மக்கள் அனைவரும் ஊன் துணுக்கைப் பொதியும் ஈக்கூட்டம்போல அச்சிலையை மொய்த்து ஏறிநின்று கூத்தாடினர்.

அவர்களுள் ஒருசாரார் பிரிந்து கையில் தடிகளும் வடமும் ஏந்தி அரண்மனை வீதி நோக்கி ஓடினர். அரண்மனை மாட முகடுகள்மீது நெருப்பு எரிந்து புகை வானில் கிளைவிரித்து நின்றது. மாடங்களின் நடுவே சதுக்கத்தின் பீடுடைப் பீடத்தில் அரைசப் பூதத்தின் பெருஞ்சிலை கையில் படைக்கலங்களும் செங்கோலும் ஏந்தி உயர்ந்து நின்றது. கூவி ஆர்த்தபடி மக்கள் அச்சிலை நோக்கி ஓடி அதன்மீது ஏறினர். சில கணங்களுக்குள் பீடம் பெயர்ந்து சிலை குப்புற மண்ணை அறைந்தது. நகருக்குக் கிழக்கே வாணிகப்பூதமும் மேற்கே வேளாண் பூதமும் ஆர்த்தெழும் மக்கட் திரளால் உடைத்து வீழ்த்தப்பட்டன. ''இனி மதுரைக்குக் காவல் தெய்வங்கள் இல்லை. இனி இந்நகர் எங்களுக்கு உரியது. எங்கள் குடித்தெய்வங்களே இனி இங்கு ஆளும்!'' என்று கூவினர் மக்கள்.

கதிர் சரிந்து மாலை வந்தது. நகரை வளைத்துண்ட தீ நாக்குகளின் செந்நிறமே கிழக்கிலும் படிஞாயிற்றுத் திசையிலும் விரிந்து படர்ந்தது. கரும்புகையால் நகரம் இருண்டு விரைவிலேயே இரவாகியது. மாட முகடுகள்மீதேறிக் கைவிரித்துக் கூத்தாடியது தழல். மண்ணிலெங்கும் அது வீழ்த்திய நிழல்கள் பேய்வடிவங்கள் என நின்றாடின. வணிகர் தெருக்களில் மரச்சுவர்களும் மஞ்சங்களும் அரக்கும் சந்தனமும் கருக எரிந்தன. அங்காடித் தெருக்களில் இருந்து கூலமும் துணிகளும் எரியும் கமறல் எழுந்தது. வேளாண்

மாந்தர் மறுகுகளில் இருந்து அவிழ்த்துவிடப்பட்ட கன்றுகாலிகள் கதறியபடி திசைதவறிச் சுற்றிவந்தன. எத்திசை நோக்கிலும் அங்கெல்லாம் தீயே காணக்கிடைத்தது.

தங்கள் உற்றாருடனும் உடைமைகளுடன் நகர் மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறினர். அத்திரியும் ஏறும் இழுத்த சாகாடுகளில் பெருங்குடிப் பெண்டிர் தங்கள் மகவுகளை நெஞ்சோடு சேர்த்து உடல் குறுக்கி அமர்ந்து கண்முன் செவ்விமான முகடுகளாக ஓங்கி எரியும் தங்கள் தொல்பதியை விழித்து நோக்கி நெடுமூச்செறிந்தனர். அச்சம் அவிந்தபின் திரண்ட மறவர் கூட்டங்கள் வாளும் வேலும் ஏந்தி அவர்களுக்குக் காவல் சென்றனர். புற்று விட்டெழும் எறும்பு வரிசைபோல மதுரையின் புறக்கோட்டைப் பெருவாயில் கடந்து அம்மக்கள் சென்றபடியே இருந்தனர்.

கோட்டைப் புறவாயில் அருகே மதுராபதி அன்னையின் கோயில் முன் நின்ற பூசகரும் முறையோரும் மறவர் தலைவனைக் கைகாட்டி அழைத்தனர். எரியுற்றுப் பொலிவிழந்த நகரில் இளி நாழிகைதொறும் மலரும் நீரும் காட்டி அன்னையைப் பூசை செய்தல் நிகழாது போகலாம் என்றார் பூசகர். அன்னை கண்ணுறங்கும் கணம் மதுரை அழியும் என்பது தொல்கூற்று. ''மதுராபதி அன்னை எங்கு உறைகிறாளோ அதுவே மதுரை ஆகும். கரி மூடிய இவ்வெறுநிலம் இனி மதுரையல்ல. புது நிலத்தில் அன்னையைப் பதிட்டை செய்வோம். அங்கு அவள் முளைத்தெழுந்து வேரும் விழுதும் கிளைகளும் இலைகளும் விரித்து பொலிக!'' என்றார். அச்சொற்களைக்கேட்ட மதுரை மக்கள் கண்ணீர் விட்டு ஏங்கி அழுதனர்.

பூசகர் அன்னையின் சிறு இருபால் பொற்சிலையைப் பீடம் விட்டுப் பெயர்த்து எடுத்தார். மலரும் நீரும் காட்டி அதை ஒரு பொற்றாலத்தில் பதிட்டை செய்தார். முக்குடித்தலைமை கொண்ட மூன்று மறவர் சேர்ந்து அதைத் தூக்கி மத்தகம் உயர்ந்த யானைமீது வைத்தனர். அப்போது குலமகளிர் குலவையிட்டனர். யானை கரியபெருங்கால்களைத் தூக்கிவைத்து நடந்து பெருவாயில் கடந்து வெளியே சென்றது. அக்கணமே அந்த இருண்ட புகைசூழ்ந்த நிலப்பகுதி மதுரையல்லாமல் ஆயிற்று.

எரிகொள் காதை இது என்க.

ஃ

காப்பியம் கூறியது

உரைசால் பத்தினி ஊர்முதன்மை கொள்ள அரைசியற் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகித் தொல்பதி மதுரை எரியுண்டு அழிந்தது சொல்லும் காப்பியம் நிறைவு.

ஃ

பகுதி ஐந்து

வான்

மாமகளும் நாமகளும் மாமயிடன் செற்றிகந்த
கோமகளும் தாம் படைத்த கொற்றத்தாள்...

இடைவெளிகளையெல்லாம் நிரப்புவதே வானம் என்றனர் நூலோர். கண்ணும் கருத்தும் தொட்டறியும் இவையனைத்தும் வானில் அமர்ந்தவை, வானத்தால் ஊடுருவப்பட்டவை, வானத்தால் சூழப்பட்டவை என்றறிக. நாற்புலப் பருக்களென ஈங்கு இலங்குவனவெல்லாம் வானத்திலிருந்து தங்கள் வடிவமரும் வெளியை எடுத்துக் கொண்டவையாதலால் வானத்தையறியாமல் அவற்றையறிதல் இயலாது. வானமோ முடிவிலியின் கண்சூழ் தோற்றமே. முடிவுற்றது எதுவும் முடிவிலியால்தான் அடையாளமுறுகிறது. முடிவுற்றதன் உள்ளே உறங்குகிறது முடிவிலி. முடிவிலியே முடிவுற்றவற்றின் சாரமுமாகும். முடிவற்றது மட்டுமே முழுமைகொண்டதாகும் என்பர் முதனூலோர்.

ஆகவேதான் சொற்கள் இருப்புகள் என்றால் சொற்பொருளே வானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அறிதல்களே சொற்கள் என்பதால் அறியவொண்ணாமையே பொருள் என்று உணரப்பட்டிருக்கிறது.

ஜ

ஆண்டெல்லாம் மழைக்கலங்கல்நீர் சேற்றுமணத்துடன் ஓடும் ஆன்பொருநை என்னும் பேரியாறு மேலைக்கடலில் கலக்கும் முனம்பில் இருந்தது வஞ்சிமாநகரம். ஆறு குவித்த வண்டல்மேடுகள்மீது தடித்த வேங்கைத்தடிகளை ஆழ ஊன்றி அதன்மீது மரத்தாலான உயர்ந்த கோட்டை எழுப்பப்பட்டிருந்தது. அரசகுலத்தோர் அரண்மனையும் பெருவணிகர் இல்லங்களும்கூடச் சேற்றுவண்டல் படுகையில் பெருமரக்கால்கள் ஊன்றி எழுப்பப் பட்டவை. மரத்தாலான சுவர்களுக்குச் செம்மண் பூச்சும் வெண் சுண்ணப்பூச்சும் அளிக்கப்பட்டிருந்தன. வணிகர் வீடுகள் பல அடுக்குகளுடன் உச்சிக்கூண்டுமீது குலக்கொடி பறக்க நின்றன. சிறு வீடுகள் அசையாப்படகுகள் என நீரில் நின்றன. மூங்கில் தெப்பத்தின்மீது மரச்சுவரும் புற்கூரையும் கொண்ட சிற்றில்கள் அலையிலாடின. ஓரறைப்படகுகளே வீடாக ஏவலரும் வினை வலரும் வாழ்ந்தனர்.

தெருக்களுக்குப் பகரம் நகருக்குள் நீர் நிரம்பிய கையாறுகள் ஓடின. மக்கள் கொதும்புத்தோணிகளில் ஏறித் துடுப்புந்தி நகருக் குள் உலவினர். பொதிகள் கொண்ட வணிகர்களின் பெருந் திமில்களும் படைக்கலமேந்திய அரசவீரர்கள் ஊர்ந்த சிறு விரை வஞ்சிகளும் பலவண்ணக் கொடிகள் கடற்பறவைச் சிறகுகளுடன் சேர்ந்து படபடக்க நகரெங்கும் நகர்ந்துகொண்டிருந்தன. நகரெங் கும் கடற்பறவைகள் விரிசிறகுகள் படபடக்கச் சேற்றிலும் நீரிலும் விழுந்து எழுந்தும் மாடக்கூரைகள்மீது அமர்ந்து கூவியும் விண்ணி லேறி மேற்கே சென்று கடல்வெளிமீது பறந்து மீண்டும் நிறைந்து வாழ்ந்தன.

நகர் நடுவே ஓங்கி நின்ற சேரமானின் எயில்மாடம் மீது விற் கொடி கடற்காற்றுக்குத் துடிதுடித்தது. அரண்மனையைச் சுற்றி உயர்ந்த உள்கோட்டை கூரிய மூங்கிலால் எழுப்பப்பட்டிருந்தது. அதன் மீதெழுந்த காவல்மாடங்களில் இரும்பரணமணிந்த யவனர் இரவும் பகலும் விழித்திருந்தனர். மன்னன் இல்லத்துக்கு மேற்கே

கடலருகே அலைவந்து அறைந்து வெண்நுரை உமிழ்ந்து மீளும் பெரும் பாறையொன்றின் மீதிருந்தது கொன்றைக்கிழவன் கோயில். பாறையிடுக்கில் வேரோடி உப்புநீரை உண்டு வளர்ந்த முது கொன்றை திருவஞ்சிக்குளக் கிழவனின் அருளுக்குச் சுட்டியாகக் கிளைவிரித்து நிற்க அதன் கீழ் மூதாதையர் நிறுவிய சிறு சிவக்குறி கரிய வழவழப்புடன் கொன்றைப்பொன்மலரும் சருகும் தன்மீது உதிர நின்றருளியது.

நீரால் சூழ்ந்திருந்தது வஞ்சி. நகருக்குத் தெற்கே வேம்பு நாட்டுப் பெருங்காயல் நீலச்சிற்றலை நெளிய விரிந்து சென்றது. தெற்கே கடம்பு நாட்டிலிருந்தும் அப்பால் குடநாட்டிலிருந்தும் உள்நில வணிகர்கள் தங்கள் விளைபொருட்களுடனும் வினை பொருட்களுடனும் வெண்பாய் விரித்த பெருவஞ்சிகளிலும் மூங்கில்தெப்பங்களிலும் திமில்களிலும் வஞ்சிநகர் நோக்கி வந்தபடி யிருந்தனர். அப்பால் நீள்தொலைவில் உழுபடை ஓயாததனால் நாஞ்சில்நாடு என்றும் வேளாண்மை செழித்ததனால் வேள்நாடு என்றும் பெயர்கொண்ட தென்முனைநாட்டிலிருந்து நெற்பொதிகள் காயல்களின் வழியாகவே கழியுந்தும் வினைஞரால் கொண்டுவந்து வஞ்சியின் பெரும் காப்புமனைகளில் நிறைக்கப்பட்டன.

மேற்குமலையடுக்குகளில் வெட்டப்பட்ட பெருமரங்களும் மூங்கில் கட்டுகளும் பேரியாற்றின் ஒடுங்காப்பெருக்கில் ஒழுக்கிக் கொண்டுவரப்பட்டு வஞ்சியின் கிழக்கு வாயிலில் இருந்த படித் துறையில் ஒதுக்கப்பட்டன. அம்மரங்களில் அமர்ந்து திசைகாட்டி வந்த மலைவணிகர் இறங்கி நீள்பயணம் முடிந்து சுக்குப் பெய்த சுடு நீரும் சுட்ட இன்கிழங்கும் தின்று தங்களுக்குள் உரக்க நகையாடினர். மரம் வாங்க வந்த வணிகர் அவர்களை அணுகி கைகள்மீது துணியிட்டு விரல் தீண்டி மந்தணவிலை சொல்லி வணிகமாடினர். பேரியாற்றிலேறி வந்த படகுகளில் மலைமக்கள் அகிலும் மிளகும் சுக்கும் தேனும் அதிங்கமும் கிழங்குகளும் காய்களும் கொண்டு வந்து, காத்திருந்த வஞ்சிநகர் வணிகர்க்கு விற்றனர்.

நகருக்கு வடக்கே பேரியாற்றுக்குள் கால் நனைப்பதுபோல இறங்கியிருந்தது துறைமுகம். கருங்கற்றூண்கள்போன்று வைரம் ஏறிய மரங்களை ஆற்றுக்குள் இறக்கி மேலே பாலமெழுப்பிக் கட்டப்பட்ட துறைமுகத்திலிருந்து அகன்ற பெரும்படகுகள் பொருட்சுமைகளுடன் விரற்கடை உயரத்துக்கு விளிம்புவிட்டு நீரில் அழுந்திக் கடலுக்குள் சென்று எறிதிரைகளில் ஏறி நின்ற யவன, சோனக நாட்டுப் பெருங்கலங்களை அடைந்தன. வந்திறங்கிய பொருட்கள் எடையெழ அவை கருவுற்ற திமிலங்கள்போல மீண்டு

வந்து மெல்லக் கரையை அணைந்து விலாபொருத்தி நின்றன. காட்டுமர வேர்கள்போல நரம்புகள் புடைத்த கரிய உடலுடன் வினைவலர் ஓலமிட்டபடி அப்பொருட்களைக் கயிற்றில் சுற்றிக் கட்டி வேங்கைமரத்தாலான பெருந்துலாவில் பிணைத்தனர். பாகர்கள் குரலெழுப்பி ஆணையிட துலாவின் மறுநுனியைத் துதிக்கை வளைத்துப் பற்றிய கரியமதயானைகள் கால்களை மெல்ல எடுத்துவத்து இழுத்தபோது அப்பெரும்பொதிகள் வானில் எழுந்து திரும்பிக் காற்றிலாடிக் கரைக்கு வந்தன. யானைகள் துதிக்கையால் அவற்றைப் பற்றி கரையில் கட்டப்பட்ட மரமேடைகளில் வைத்தன. அங்கே நின்ற சேரனின் சுங்கக் காவலர் அவற்றுக்குத் திறை கொண்டு முத்திரையிட்டனர். பொதிச்சாலைகளில் இருந்து பண்டங்கள் பிரிக்கப்பட்டு படகுகளில் ஏற்றப்பட்டு நகருக்குள் நுழைந்தன.

வஞ்சி நகருக்குள் கையாறுகளின் கரைகள்தோறும் வணிகக் கொடி நுடங்கிய அங்காடிப் பீடிகைகள் இருந்தன. படகுகள் கொண்டுவந்த பொருட்கள் கடைகளின் பின்வாசலினூடாக அங்காடிமேடைகளுக்கு மாறின. சிறுபடகுகளில் வந்த வஞ்சிநகர் மக்கள் கடைகளின் முன்னால் வந்து அவற்றை விலை பேசினர். தோணிகளால் நீர்மறைய நீரசைவில் நகரே அசைவதெனக் கண்ட அவ்வங்காடி நீரங்காடி எனப்பட்டது. பொருள் குவிந்த திண்டாணிகள்முன் விலைக்கூச்சலும் வணிகக்கூச்சலும் எழுந்தன. அங்கே கூலமும் கூறையும் நறவும் நகைகளும் விலைபோயின. மர வீடுகளுக்கு அடியிலேயே படகுகள் சென்று நிற்கும் சிறு துறைகளிருந்தன. படகுகளிலிருந்தே வீட்டுப்படிகளில் ஏறி உள்ளே செல்ல முடிந்தது. சிறார் துழாவும் குறுவஞ்சிகளும் பெண்டிர் ஊரும் பொன் வஞ்சிகளும் செம்பட்டுத்திரை புடைத்த பரத்தையர் தோணிகளும் கையாறுகளின் அலைகளிலேறி யானைமீது அம்பாரி போல அசைந்துசென்றன.

வளைந்தெழும் பேரலைகள் எப்போதும் பேரியாற்றின் முகப்பை அறைந்து ஆற்றிலும் கையாறுகளிலும் திரையெழுப்பிக் கொண்டிருந்தன. இரவில் நீர் ஏறி வீடுகளின் வாயில்களைத் தன் துமித்திரள் கைகளால் தட்டும். வீட்டுக்கூடங்களுக்குள் கடல்நீர் தெறித்திருப்பதை காலையில் துடைத்து ஆற்றுவர் ஏவலர். நகரெங்கும் கடலின் பேரோசையே எப்போதும் ஒலிக்கும். இரவில் அவ்வொலி சாளரப்பலகைகளை ஓங்கி மோதுவதாகத் தோன்றும். கோள் ஓயா அவ்வூருக்கு கொடுங்கோளூர் என்ற பெயர் இருந்தது.

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் காலத்தில்தான் அது

மாநகரமாயிற்று. மலையடுக்குகள் சரிந்து நிலம்தொடும் முல்லை நிலத்தில் முன்பு சேரர்களின் தலைநகர் கருவூர் இருந்தது. கடல் வணிகம் செழித்தபோது மக்கள் கடலோரமாகக் குடியேறிச் செறிவுற்றனர். யவனர் தங்கள் பொருட்களை கடலோரமாகக் குடியேறி விற்கத் தலைப்பட்டபோது காயல்திட்டுகளில் வீடுகளும் கரவறைகளும் கலவறைகளும் உருவாயின. மிதக்கும் நாவாய்வீடுகள் கடலோரமாக அசைந்தன. மலைவளங்கள் வந்திறங்கிக் கடலில் நின்ற கலங்களை அடைய, ஆற்றுமுகங்களெல்லாம் துறையூர்கள் பிறந்தன. பெருங்கலங்களையும் உள்ளிழுக்கும் பேரியாற்றின் கரையில் காயலும் கடலும் கைதொடும் முனையில் உருவான மண் வைப்புமீது எழுந்தது வஞ்சி. அழிமுக அலைகளில் ஆடும் வஞ்சிகள் நிறைந்தது என்பதனால் வஞ்சிமாநகர் என்று பெயர் கொண்டது. சேரமான் வில்லவன் மாக்கோதையால் அது தலைநகராக்கப்பட்டபோது மாக்கோதையூர் என்று பெயர் பெற்றது.

விடிகாலையில் வெண்பட்டுபோலப் பனிமூடிக் காயலும் பேரியாறும் வஞ்சிப்பெருநகரும் மறைந்திருந்தன. நகரின் ஓங்கிய மாடங்களின் விமான முகடுகள் மட்டும் சற்றே தெரிந்தன. வஞ்சிக் குளத்திறைவனின் ஆலயத்துப் புலரிப் பூசெய்தலுக்கு மங்கல மணியோசை எழுந்தது. பின் காவல் மாறுதற்கென யவனர் காவல் முழவொலி இயம்பியது. மரத்தளங்களில் இரும்புக்குறடு ஒலிக்க யவனர் இடம் மாறினர். சிறுதோணிகளில் காவல் மறவர் வந்திறங்கிக் காவல் நின்றவர்களை இறக்கித் தாங்கள் ஏறினர். பனித்திரைக்குள் நீர் ஒலிக்கப் படகுகள் சென்றன. துயிலறியாத் துறைமுகத்தில் அப்போதும் பெரும்படகுகள் சிறகு மடக்கி வந்தணைந்து கொண்டிருந்தன. சேரன் அரண்மனைக்குள் மருதப் பண்ணில் துயிலெழு மங்கலம் ஒலிக்கக் கேட்டதும் நகரின் மர வீடுகளில் ஏவலர் எழுந்தனர். மாடச்சாளரங்கள் ஒளியுடன் கண் விழித்தன. அவற்றின் செவ்வொளிச் சிதறல்கள் நீர்ப்பரப்புகளில் அலையடித்துப் பரவின. அரண்மனையெங்கும் பந்தங்களும் யவனர் தந்த பளிங்குவிளக்குகளும் சுடரெழ ஒளிர அது நீர்மேல் நிற்கும் யவன மரக்கலம்போலத் தெரிந்தது.

மென்காற்று காயலில் இருந்து கிளம்பிப் பனித்திரையை மெல்லச்சுருட்டிக் கடல்நோக்கிக் கொண்டுசென்றது. கீழ்த்திசையிலிருந்து செவ்வொளிப்படலம் நீர்மேல் பரவி விரிந்து சென்றது. ஆவியெழும் சுடுநீர்ப்பரப்பெனக் காயலும் பேரியாறும் தெரிந்தன. ஆற்று நீர் ஓடும் பொன்னிறத் தோல்சிலிர்ப்பில் இலைக்கிளைகளும் சருகுப்பத்தைகளும் சுழன்றுசென்றன. தொலைதூரத்து நீள்வஞ்சி

கள்மீது சுமுகம்பாளை சூடிய தலையுடன் வினைவலர் முளையுந்த மெல்ல நகர்ந்து வஞ்சித்துறை நோக்கி வந்தன. திருவஞ்சிக் குளத்திறைவனுக்குப் பூசனைசெய்யும் வேதியர் எழுப்பிய மங்கலப் பேரொலி எழுந்தபோது நீரிலும் நிலத்திலும் இருந்த அனைவரும் கைகூப்பினர்.

தன் மஞ்சம் விட்டெழுந்து துயிலெழு மங்கல இசை கேட்டு செண்பகத்தூள் நறுமணம் சேர்த்த இளவெந்நீரிலாடிப் பட்டாடையும் முத்தாரமும் தன் குல மூதாதையர் அணிந்த மங்கல அணியாகிய எழுமுடிமாலையும் குடிக்குறியான பனைப்பூமாலையும் அணிந்து சேரமான் செங்குட்டுவன் முகப்பறைக்கு வந்தான். விரித்த ஏழு படலிகைகளில் மலர்களும் பழங்களும் ஆடியும் அணிகளும் நெய் விளக்குமென ஐம்பெருமங்கலம் காட்டி அவனை எதிர்கொண்ட வேதியர் அருகுமணி தூவி அவன் குலம் பெருகவும் கோல் வெல்லவும் குடி செழிக்கவும் வாழ்த்தினர். பின்னர் தொழுத கைகளுடன் சேரன் நடக்க முன்னால் படைத் தலைவன் உருவிய வாளுடன் நடந்தான். படர்மக்கள் சூழ அமைச்சர் குழாமும் அடியவர் குழாமும் பின்தொடர்ந்தனர். தன் அரண்மனைப் படிகளில் இறங்கி அணி கொண்டு நின்ற பெருவஞ்சியில் இறங்கியபோது முதலில் அரண்மனைப் படிகளிலும் பின் அரண்மனைக் கோட்டைகள்மீதும் பின் நகரின் அனைத்து முரசமாடங்களிலும் பேரொலியுடன் முரசும் கொம்பும் ஆர்த்தன.

நகர் மாந்தர் புத்தாடை அணிந்து சந்தனமும் களபமும் நெற்றியில் காப்பிட்டுக் குழல்முடித்துப் பூச்சூடித் தங்கள் வீடுகளின் பூமுகங்களில் நின்று கைகூப்பினர். உப்பரிகைகளில் அணிநிறை மங்கையர் கூடி மலர்த்தாலங்கள் ஏந்தி நின்றனர். சேரனின் அணி வஞ்சி கையாறு வழியாகக் கொன்றைக்கிழவனின் ஆலயம் நோக்கிச் சென்றபோது வாழ்த்தொலியுடன் பெண்டிர் மலர்களை அவன்மீது தூவினர். காலையின் இளமழையுடன் அம்மலர்மழையும் இணைந்தது. கையாறுகளில் மலர்ந்த நீலமும் அல்லியும் தாமரையும் மணம் பரப்பி நிற்க அவற்றின்மீது அம்மலர்கள் பொழிந்தன. காயலின் பேராடிமீது தன் வஞ்சி சென்றபோது தலைகீழ்ப் பெருநகரம் ஒன்று ஆழத்திலிருந்து தன்மீது மலர் சொரிவதைச் சேரன் கண்டான். அவன் குலத்துக்கு முதல்வனான மாவலி ஆளும் ஆழத்துப் பேருலகம் அவனை வாழ்த்துவது போலிருந்தது அது.

சேரநாட்டுக் கிழக்கெல்லையின் செங்குன்றத்தை ஆளும் குறும்பர் குலத்தின் மன்றத் தலைவர்கள் எழுவர் காணிக்கைகளாகத் தேனும் தினையும் சந்தனமும் புலித்தோலும் அகிலும் திரங்கலும் படித்திரமும் கொண்டு மலையிறங்கிச் சேரமான் செங்குட்டுவன் அவைக்கு வந்தனர். முள்ளூவர், ஊராளி, தேன் குறுமர் எனும் மூன்று குறும்பர் குடிகளையும் சேர்ந்த இருவர் வீதம் அறுவரும் வழிகாட்டும் மூத்த முட்டனும் என அவர்கள் தங்கள் குலமுறைப்படி முச்சி முடிந்து முடிச்சாத்தணிந்து அணிவகுத்தனர். செங்குன்றச் சரிவிறங்கிச் செங்கரையில் வாழ்ந்த காரியப்பனை வணங்கிக் கல்லாறு தாண்டி நெடுங்குன்றம் சுற்றி உடும்பஞ் சோலைக் காரியைப் பலி கொடுத்து வணங்கி குமுடி ஏரி காக்கும் காளனைத் தொழுது அவர்கள் பேரியாற்றுப் பெரும்பெருக்கு வழியாகக் கைத்தோணிகளில் இறங்கி அலைவாய் நகர் நுழைந்து மன்னர் பெருந்தோணிகளில் ஏறி வஞ்சிப்பெருநகர் வாயிலுக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

அவர்களின் வருகையை வாயிலோன் அறிவித்தபோது சேரன் செங்குட்டுவன் எழுந்து வாயிலுக்கு வந்து முறைப்படி அவர்களை முகமன் சொல்லி வணங்கி அவர்கள் கூறிய வாழ்த்துகளை ஏற்றான். சேரனின் ஆணைப்படி அவர்கள் கொண்டுவந்த காணிக்கைகளை ஏற்ற கைக்கோளாளன் அவர்கள் உண்டு நீராடி இளைப்பாறச் செய்தபின் மன்னன் அவைக்குக் கொண்டுசென்றான். மாலையில் இளமழை பெய்துகொண்டிருந்தபோது குளிருக்கு இறைஞ்சி ஆடை போர்த்திய அமைச்சரும் குழாமும் அவைகூடி அமர்ந்து ஆமையோட்டுக் கிண்ணங்களில் ஊன்சேர்த்துச் சமைத்த பருப்புணவை அருந்தியவண்ணம் மன்னருடன் சிறுநகையாடிப் பேசிக்கொண்டிருந்தனர். அமைச்சர்தம் சொற்களையும் மன்னரின் ஆணைகளையும் ஏட்டில் பொறிக்கும் கண்ணெழுத்தாளர்களும் ஏவல் மாக்களும் அருகே வணங்கி நின்றனர்.

அவை நுழைந்த குறும்பர் குடித்தலைவர்களை மன்னன்

எழுந்து சென்று அழைத்துத் தன் இருபுறமும் அமரச்செய்து சேடியரை அழைத்துச் சூடான பாலும் பருப்புணவும் கொணர்ந்து உண்ணக்கொடுத்துக் குடிநலமும் தனிநலமும் கேட்டான். தங்கள் சிறுகுடியின் பெயரும் இடமும் மன்னனுக்குத் தெரிந்திருப்பதைக் கண்டு அவர்கள் மகிழ்ந்தனர். மூத்தகுடித் தலைவன் தன் கச்சையில் இருந்த வெள்ளிமுள் என நீண்ட புலிநகங்களை எடுத்துச் சேரனுக்கு அளித்தான். மகிழ்வுடன் அவற்றைப் பெற்ற மன்னன் அவர்களை மார்புடன் தழுவி நன்றி சொல்லித் தன் அரசவைக் கணக்கனை அழைத்து அதைத் தன் மணியாரத்தில் பொறிக்கும்படி ஆணையிட்டான்.

பின்பு அவர்கள் வருகையின் நோக்கை வினவிய சேரனிடம் குறும்பர் குடி மக்கள் தங்கள் மலைமீது புதிய ஒரு தெய்வத்தை நாட்டியிருப்பதாகவும் அதற்குச் சேரனும் தேவியும் வந்திருந்து முறை செய்யவேண்டுமென்றும் வேண்டினர். மலைமக்களுக்கு தொல் தெய்வங்களன்றி பிற தெய்வங்கள் உவப்பனவல்ல என்றறிந்திருந்த சேரன் வியப்புடன் ''மூத்தகுடியீர், அத்தெய்வம் எது?'' என்று கேட்டான். ''அவள் எங்கள் சிறுகுடி காக்கும் அன்னை. எங்கள் மலைமீது வாழ்ந்து மறைந்த தூயோள்'' என்றார் குறும்பர் குடி மூப்பர். ''அவள் கதையைச் சொல்க'' என்று சேரன் சொன்னான்.

''நெடுநாட்களுக்கு முன்னர் நான் சிறுவனாக இருந்தபோது இது நடந்தது என என் தந்தை சொல்லி அறிந்திருக்கிறேன்'' என்றான் குடிமூப்பன். மலைக்குடிகளைத் தாக்கிவந்த புலி ஒன்றை வேட்டையாடும் பொருட்டு குடிவீரர் எண்மருடன் எங்கள் தந்தை காட்டுக்குள் சென்றார். தோழர் எழுவரும் வழிதவறிவிட அவர் மட்டும் புலியைத் தொடர்ந்து காட்டின் உள்ளடுக்குகளுக்குள் அமிழ்ந்து சென்றார். காடே தொல்வீடான எங்கள் குறக்குடியினரும் செல்ல இயலாத அடர் காட்டுக்குள் அப்புலியைத் தொடர்ந்து அவர் சென்று சேர்ந்தார். விடாய் வாட்டவே நீர் ஒலி கேட்ட திசை நோக்கிச்சென்றார். மலைச்சிற்றருவியொன்று கல்லலைத்து ஒழுகிய குன்றினருகே ஓங்கிய தனிப்பாறைமீது எழுந்த மலைவேங்கையின் பூத்த கிளைநிழலில் பூம்பொடி பரவிய பாறையில் கண்மூடித் தவக்கோலத்தில் அமர்ந்திருந்த பெண்ணைக் கண்டு அஞ்சித் தன் நினைவிழந்து விழுந்தார். பின் எழுந்து திரும்பி ஓடிவந்து தன் குடியருகே விழுந்து மீண்டும் மயக்கமானார்.

மலைமருந்தும் மந்தணவினையும் ஆற்றி அவரைத் தேற்றி மீட்டனர். தான் கண்ட காட்சியை அவர் அவர்களிடம் சொன்னார். ஒரு முலை குறைந்த அவள் அணங்கோ தொல்பாவையோ என்று

அழுதனர் பெண்டிர். முதுநரிபோல மயிரிழந்து பழுத்த மூதாதை ஒருவன் அஞ்சற்க என்று ஆறுதல் சொல்லி, அவன் கண்ட காட்சி என்ன என்று மீண்டும் மீண்டும் அவனிடம் வினவி அறிந்தான். மயிரற்ற தலையும் மரமுரித்த துவராடைமாகக் கண் மூடியமர்ந் திருந்தாள் அப்பெண் என்றான் அவன். அங்ஙனமாயின் அவள் மண் துறந்து மலைக்குத் தவமியற்ற வந்த தூயோள் என்றார் குடிமூத் தான். அவளைக் காடு ஏற்றுக்கொண்டு விட்டதென்றால் காட் டாரும் ஏற்றுக்கொள்வதே முறையாகும்.

அவளைக் கண்டு பணிந்து அருள்பெறக் குடிப்பெண்டிரும் குழந்தைகளும் ஆண்களும் தேனும் தினையும் உலர்ந்த பழங்களும் மான்தோலும் கொண்டு மலையேறிச் சென்றனர். அவள் அப் போதும் தன் நாள்முறைப்படி மலைவேங்கையின் அடியில் பாறை மேடைமீது கண்களை விரியத் திறந்து நோக்கினள்போலவும் ஊழ்கத்தில் நோக்காதவள்போலவும் அமர்ந்திருந்தாள். சிறுமலை களும் பசுங்காடும் சாம்பல் முகில்களும் நீலவானும் அவளைச் சூழ்ந்து அவளுடன் தவமிருந்தன. அவர்கள் அவளை அணுகித் தாள் பணிந்து தாங்கள் கொண்டுவந்திருந்த காணிக்கைகளை அவள் முன் வைத்தனர்.

அவள் முதிராமுகை கொண்ட சிறுமியென அப்போதுதான் அவர்கள் அறிந்தனர். கடும் நோன்பு கொண்டு உலர்ந்து கறுத்துப் பாலைநில மரம்போல இருந்த அவளுடைய நீலமணிக் கண்களும் சிறுவெண் பற்கள் செறிந்த வாயும் மட்டும் பேரழகுடன் இருந்தன. அவள் அவர்களை நோக்கிப் புன்னகைசெய்தபோது விண்ணகத் தெய்வம் ஒன்று மண்ணுக்கு வந்ததுபோல அவர்கள் உணர்ந்தனர். அங்கே கிளர் உதிர்த்த கோங்க மரத்தடியில் மலைப்புல் கொண்டு கட்டப்பட்ட சிறுகுடிலில் அவளுக்குத் துணையாகத் தங்கியிருந்த முதியவள் வந்து அவர்களிடம் பேசினாள். தன் பெயர் தேவந்தி என்றும் பெருந்தோழியான தான் தலைவிக்குத் துணையாக நோன் பெடுத்திருப்பதாகவும் சொன்னாள். அவள் காரையிலையும் கைப்பங்காய்களுமன்றி எதுவும் உண்ணாத பெருநோன்பில் இருப் பதாகவும் ஆகவே அவர்கள் காணிக்கைகளை ஏற்க இயலா தென்றாள். மலைமக்கள் கோரியதற்கேற்ப இளஞ்செய்யோள் அக் காணிக்கைகளைத் தன் கையால் தொட்டு அவர்களுக்கே அளித்தாள். அவர்கள் அதைப் பெற்று கண்ணில் ஒற்றிக்கொண் டனர். குழந்தைகளை அவள் காலில் வைத்து அவள் கைகளால் தொடச்செய்து மீட்டெடுத்தனர்.

அவள் சாக்கிய நோன்பெடுத்த இரவர் செல்வி என்று நகர்

சென்று மீளும் மலைக்குடி வணிகன் கண்டு சொன்னாள். கீழே நீள்நிலமெங்கும் அவர்கள் நிறைந்திருப்பதை அவன் கண்டிருந்தான். அரசமர்செல்வனாகிய சாக்கிய முதல்வனின் அறச்சொற்களை அவர்கள் ஊரெங்கும் விளம்புகிறார்கள். எளிய மக்கள் அவர்கள் சொற்களைக் கேட்டு அழியா அறம் என்பதை அறிந்து ஒழுகிறார்கள். அணங்குகளும் வாழ அஞ்சும் அக்கொடுங் காட்டுக்குள் தனிமையில் வாழ்வதெனில் அவள் தெய்வங்கள் வணங்கும் அருந்தவத்தாளாகவே இருக்கவேண்டும் என்றார் குடிமூப்பர். அதைக் கேட்டு மூதன்னை ஒருத்தி மெல்லிய குரலில் மண்ணுக்குத் திரும்பா வஞ்சினம் கொண்டே அவள் மலையேறியிருக்க வேண்டும் என்று சொன்னாள். தன் இடமுலை குறைத்து இறுதி வஞ்சினம் உரைப்பது பெரும்பாலை நிலத்து மக்களிடையே இருந்துவரும் நெறியெனக் கேட்டிருந்தாள். தான் இனி எவர்க்கும் ஆளில்லை, இனியெப்போதும் மகவீன்று அமுதூட்டுவதில்லை என்ற துறவுநெறி பற்றியே அவள் முலையரிந்திருக்க வேண்டும் என்றாள் மூதாட்டி. மலைமக்கள் அவளிருந்த திசைநோக்கிக் கைகூப்பி வணங்கினர்.

பின் முழுநிலவு நாள் தோறும் அம்மலைக்குச் சென்று அவளைக் கண்டு அடிதொழுது மீளுதல் அவர்களுக்கு வழக்கமாயிற்று. பிறந்த குழந்தைகளையும் முதற்கைப்பிடி விதைகளையும் அவள் காலடியில் வைத்து வணங்கிக் கொண்டு வந்தனர். நோயுற்ற குழந்தைகளையும் வாடிய பயிர்களையும் அவள் காலடி மண்ணெடுத்து வந்து மும்முறை இடமுழிந்து போட்டால் நலம் சிறப்பதைக் கண்டனர். அவள் எப்போதும் வாய் திறந்து எச்சொற்களையும் சொல்வதில்லை. பெருந்தோழியிடம்கூட உரையாடுவதில்லை. அவள் நெஞ்சறிந்து பெருந்தோழி ஒழுகினாள். அவள் சொல்லாச் சொல்லறிந்து மக்களுக்குச் சொன்னாள். அன்னை கூறும் அறச்சொற்களைத் தெய்வங்கள் சொல்லும் அருட்சொற்களாகவே மலைமக்கள் எண்ணினர். அவள் சொற்கேட்டுச் சொல்லாழத்துத் திறமறிந்து தங்கள் குடிநெறியையும் அகநெறியையும் வகுத்துக்கொண்டனர்.

அந்த மலைக்குகையில் தன்னந்தனிமையில் அன்னை மெல்லமெல்ல முதிர்ந்து கனிந்தாள். அவள் தோல் சுருங்கி உடல் வற்றி ஓடாகியது. கண்கள் மட்டும் பாவைக்குடைவரைக்குள் ஏற்றிய சிற்றகல் ஒளிபோலச் சுடர் விட்டன. அம்மலையுச்சிவிட்டு அவள் எங்கும் இறங்கவில்லை. ஆனால் ஏழ்மலையடுக்குகளிலிருந்தும் சுடர் தேடிவரும் சிற்றுயிர்களெனத் திரள்திரளாக மலைக்குடி மக்கள்

அவளைத் தேடிவந்து அடிபணிந்து அறச்சொல் கேட்டு மீண்டனர். மலைக்குடிகளில் சாக்கிய நெறி பரவியது. செங்குன்ற மலையடுக்குகளில் அரங்கள்தோறும் அறியாப் பழங்குடிமாக்கள் செதுக்கிய தொல்லியல் பாவைச்சிலைகளுக்கு அருகே சாக்கிய முதல்வனின் சிலையுருக்கள் செதுக்கப்பட்டன. மெய்யறிவு தேடித் துவராடையும் கப்பரையும் ஏந்திய இரவர்கள் மலையேறிவந்து அக்குகைகளில் தங்கினர். அவை அறம் வளரும் சங்கங்களாக வளர்ந்தன. அவர்கள் வணங்கும் அறிவமர்செல்வியாக மலையுச்சி வேங்கை மரத்தடியில் அவள் அமர்ந்திருந்தாள். முழுநிலா நாட்களில் வெண்மலர் கொண்டு அவளை வணங்கச் செல்லும் வழக்கம் உருவாயிற்று.

பின்பொருநாள் அரசமர் முதல்வனுக்குரிய மேழமாத முழுநிலவு நாளில் அவள் தன் குகைவிட்டெழுந்து பொன்மலர் பூத்து மலர்ப்பொடி தூவித் துவண்டு நின்ற அம்மலைவேங்கை மரத்தடியில் குளிர்ந்த கற்பாறைமீது கண்மூடியமர்ந்தாள். வெண்மலர்கள் ஏந்தி அவளை வணங்கவந்த மலைமக்களும் அவள் திருவடியில் மரவுரியை வைத்து அணிந்து துறவுகொள்ள வந்த இரவர்களும் சூழ நின்று புத்த சரணப் பேரொலி எழுப்பினர். ஒளிர் நிலவைக் கார் மறைத்தபோது நிழல்களுடன் நிழலென அவளது முதிர்ந்து உலர்ந்த சிற்றுடல் மறைந்தது எனத் தோன்றியது. மெல்லிய குரலில் அவள் எவரையோ அழைப்பதுபோலக் கேட்டது. அல்லது வியப்பதுபோல. கார் கரைந்து நிலவொளிர்ந்தபோது அவள் முதுமுகம் புதிய புன்னகையொன்றால் ஒளி கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர்.

ஆனால் அவளது தோல் சுருங்கிய, மூடிய கண்ணிமைகளிலும் உள்ளொடுங்கிய உதடுகளிலும் வற்றிக் கூடுபாய்ந்த உடலிலும் சிலைத்தன்மை ஒன்று கூடிவிட்டிருப்பதையும் உணர்ந்தனர். பெருந்தோழி மெல்ல அருகே சென்று அவள் மண்படிந்த கால்களை மெல்லத் தொட்டாள். அச்சத்துடன் மேலும் சிலமுறை தொட்டாள். திரும்பிக் கைகளைக் கூப்பியபடி முகத்தில் வழிந்து மார்பில் சொட்டிய கண்ணீருடன் விம்மும் குரலில் அவள் முழுமை கொண்டுவிட்டாள் என்பதை அறிவித்தாள். மலைமகுடங்கள் எதிரொலி கேட்டதிர எங்கும் புத்த சரணப் பேரொலி எழுந்தது. ஒலி கேட்டு மலைக்குகைகளில் வாழ்ந்த சாக்கிய இரவர் தாங்களும் சரணம் விளித்தனர். ஒளிரும் வானில் கார் திரண்டு வெண்ணிற யானையென உருக்கொண்டு மெல்ல அசைந்து வந்தது. அதன்மீது கூடரொளி சிதற நிலவு ஏறியமர்ந்து கொண்டது. கீழே நின்றவர்கள் கைகூப்பினர். பெண்டிர் கண்ணீர் விட்டழுதனர். அவள்

நிறைகொண்ட நான்காம் நாள் பெருந்தோழியும் அறிவள் அடி சேர்ந்தாள்.

அதன்பின் நிலவுநாள்தோறும் அவள் ஒளியை அந்த மலை வேங்கை மரத்தடிப் பாறையில் இரவரும் மலைமக்களும் கண்டனர். அப்பாறையைச் சுற்றிப் பிக்குகள் அமர்ந்து ஊழ்கம் இயற்றல் வழக்கமாயிற்று. அப்பாறைமீது அவளுக்கும் பெருந்தோழிக்கும் இரு நடுகற்கள் நாட்டி வழிபடும் நெறி பிறந்தது. அடுத்த மேழமாத முழுநிலவு நாளில் அவள் சிலையொன்றை அம்மரத்தடியில் பதிட்டைசெய்து வணங்கவேண்டுமென்று மலைமக்களின் மன்று முடிவு செய்தது. அதற்குச் சேரமான் பெருமான் தன் அவையுடனும் உறவுடனும் வந்திருந்து வகைமுறை செய்யவேண்டுமென மலை மக்கள் விழைந்தனர். சேரனுக்குச் செய்தி சொல்லி அழைப்பளிக்கும் பொருட்டு ஏழு மலைக்குடிகளின் தலைவர்கள் கூடி மலையிறங்கிச் செல்ல ஆணையிட்டனர் .

அவர்கள் சொற்களைக் கேட்டு அகமகிழ்ந்த மன்னன் அமைச்சர் குழாத்துடனும் அரசப்படைகளுடனும் மலைக்கு வந்து தானும் பெருந்தவத்தாட்டியை அடிபணிந்து அருள்கொள்ள விழைவதாய்ச் சொன்னான். மலைக்குடி மூப்பர்கள் மகிழ்ந்து சேரன் குடியும் கொற்றமும் கொடியும் வாழ்த்தி வணங்கினர்.

ஃ

உரை வகுத்தது

சேரன் செங்குட்டுவன் தன் அகக்கோட்டத்தில் சந்தன நெடுமஞ்சத்தில் படுத்தவனாக பல்லியம் இமிழ இன்னியன் மீட்டிய மெல்யாழிசையைச் செவிமடுத்து எண்ணங்களிலாழ்ந்திருந்தபோது தண்டமிழாசான் சீத்தலைக் கோட்டத்துச் சாத்தன் வருகையளித் திருப்பதை அகம்படியன் வந்து வணங்கியறிவித்தான். அவரை வரச் செய்து அருகே அமரச்செய்து அன்று மலைக்குடிமக்கள் வந்து சொன்ன செய்திகளையெல்லாம் சொன்னான் சேரன். ''என் மலை ஏறிவந்து எம்மனோர் உள்ளங் கவர்ந்த இத்தவத்தாட்டி எவள்? இவள் ஈண்டு எழுந்தருள என்ன காரணம்? இவள் வரலாறு என்ன?'' என்று கேட்டான்.

அறிதவத்தானாகிய சாத்தன் புன்னகைசெய்து ''அதில் வியப் பதற்கேதுமில்லை. இன்று இந்த முத்தமிழ் நாட்டிலெங்கும் முலையரிந்த முதல்வியின் புகழே பேசப்படுகிறது. நான் தண் காவிரிப் பெருவளநாடும் எரிஎழும் தென்பாண்டி நாடும் கார்சூழ் சேரநாடும் நடந்து கண்டனவற்றை உங்களுக்கு உரைப்பேன்'' என்றார். ''அவ்வாறே ஆகுக!'' என்று செவிகூர்ந்தான் சேரன்.

''அம்மங்கல மடந்தையின் பெயர் கண்ணகி. சோழநாட்டில் பிறந்து பாண்டிய மண்ணில் வழக்குரைத்துச் சேரன்மலையில் புகழ் விட்டு வானெய்தியமையால் இம்மூன்று தொல்நிலத்துக்கும் உரிய வளானாள்'' என்று சாத்தன் கண்ணகியின் கதையைச் சொல்ல லானார்.

கேள் வேந்தே, இடைய மக்கள் வணங்கும் தொல்தெய்வ மொன்றுண்டு. அது மண்விரிவெங்கும் பரவி ஆழத்தில் உறையும் முதற்புல்லின் வேர் என்பார்கள். மண்மீது எழும் புல்நுனிகளை யெல்லாம் கொய்தாலும் மீண்டும் மீண்டும் புல்லாகத் தளிர்த்து அது மேலெழுந்தபடியே இருக்கும். கன்றுக்கும் மாந்தர்க்கும் உண வூட்டும் பேரருள் என அதை வணங்குகின்றனர். அதைப்போன்றது இந்தத் தென்நிலமக்களின் நெஞ்சங்களிலெல்லாம் உறையும் முதற்பெருந்தெய்வம். பேரன்னையென்று பெயர் கொண்டு தென்

திசை நிறைத்த நீலக்கடல்வெளியின் ஆழத்தில் உறையும் கன்னியன்னை அவள். அவளது பல்லாயிரம் முகங்களே மீண்டும் மீண்டும் இந்நிலத்தின்மீது தெய்வங்களென முளைவிட்டெழுகின்றன.

முன்பு மதுரையை எரித்தவள் கண்ணகி வடிவம் கொண்டு வந்த பேரன்னையென்றே நான் உணர்கிறேன். அறம் அவிந்து மறம் தழைக்கும்போதெல்லாம் பேரன்னை நுண்ணுருக்கொண்டு ஒரு பெண்ணுடலில் ஏறி வெளிவருகிறாள். அறம் சிறந்து குடி தழைக்க வந்த அன்னையரும் கன்னியருமெல்லாம் அம்மூதன்னையின் வடிவங்களே என வழிபடுதல் நம் தமிழ்க்குடி மரபென அறிக. இந்த மண்ணில் ஒவ்வொரு சிற்றூரிலும் அவ்வண்ணம் எழுந்த பெண்ணொருத்தியைக் கற்சிலையென நாட்டி மலரும் நீரும் அளித்து வணங்குவதைக் காணலாம். கோல் வளைந்த மதுரையை எரித்தழிக்கும்பொருட்டுத் தமிழ்மண்ணெங்கும் பரவி நிறைந்த பல்லாயிரம் பெண்தெய்வங்கள் சினங்கொண்டெழுந்து திரண்டதாகப் புலவர் பாடுவது மெய்யே. என் தந்தை அதைத் தன் விழிகளால் கண்டார். என் இளமையில் அதை எனக்கு கதைகளாகச் சொன்னார்.

கேள் வேந்தே, மதுரையில் கூலவணிகம் செய்துவந்த எந்தை நகர் எரிந்ததும் பூம்புகாருக்குச் சென்றார். நான் புகாரில் பிறந்தும் அறக்கல்வி பெற்று வணிகம் செய்யாதொழிந்தும்கூட மதுரை வணிகனாகவே அறியப்படலானேன். நாகைப்பட்டினத்து இந்திர விகாரையின் சாக்கிய அறச்சாலைகளில் கற்று நான் புலவனானேன். மதுரை எரிந்த கதைகள் கேட்டு நான் வளர்ந்தேன். கூலம் கொளும் சகடத்துக்குத் துணை செல்லுமளவுக்கு என் கால்கள் வளர்ந்ததும் எந்தையிடம் விடைபெற்று மதுரை நகர் நோக்கிச் சென்றேன். உமணரும் வணிகரும் செல்லும் வண்டிப்பாதையின் இருமருங்கும் சிற்றூர்கள் உண்டு. அவ்வூர் மக்கள் வணிகரிடம் பொருள்கொண்டு பண்ணியம் அளிக்கும் பொருட்டு பாதையோரம் வந்து நிற்கும் இடங்களிலெல்லாம் வடநாட்டுச் சாக்கிய நெறி சார்ந்த வணிகர் சாவடிகள் கட்டி அங்கே சாக்கியப் பெருந்தவத் தோளின் சிலை நிறுவி அறம் பரப்புகை செய்துவந்தனர். அச்சாவடிகளில் வணிகருக்கும் பயணிகளுக்கும் குளிர்நிழலும் விடாய்மோரும் புல்சோறும் கிடைக்கும். நான் நடந்த நாட்களில் அச்சாவடிகள் தொறும் முலையரிந்து புரமெரித்த முதல்வியின் கற்சிலைகளும் தவக்கோலத்தில் அமர்ந்திருப்பதைக் கண்டேன். அவளை அறத்திலமர்ந்த அருந்தவத்தாட்டியாக சாக்கியர் வணங்குவதறிந்தேன்.

திருமாபத்தினி வடிவில் ஒருமுலையன்னை மதுரைநகர்

புகுந்து எரிபரந்தெடுத்த கதையின் எண்ணற்ற உருமாறுகளை நான் பாண்டி நாட்டில் கேட்டேன். தன் கொழுநன் இறந்தது அறிந்த பத்தினி கண்ணீருமிழும் கனல்விழிகளுடன் பாண்டியன் அவைக்குச் சென்று அறமுரைத்து மீண்டு வெளியே வந்தபோது வானமெங்கும் செங்கழுகுகள் வட்டமிடக் கண்டனர் ஊரார். அவளைத் தொடர்ந்து அரசவைக்குச் சென்ற பெண்டிர் கூட்டத்தில் ஆங்காங்கே தொல் பாவைகளும் அணங்குகளும் மலைத்தெய்வங்களும் பாலைத் தெய்வங்களும் வெறிகொண்டு கூவியார்த்தெழுந்தன. பின்னர் நகரமெங்கும் அன்னையரும் கன்னியருமாக ஐந்நிலங்களிலிருந்தும் எழுந்துவந்த தெய்வங்களே நிறைந்திருந்தன. கண்களில் எரியெழக் கொற்றவைக் கோட்டத்துட் புக்க பத்தினி அங்கே எழுந்த செந்தழல் அலைகளில் ஏறிக் கொற்றவையாக ஒற்றைமுலையும் முக்கண்ணும் கொண்டு வானில் எழுந்தாள். அவள் மூன்றாம் கண்திறந்தபோது மதுரைமீது எரி படர்ந்தது. ஆநிரைகளையும் பத்தினிப்பெண்டிரை யும் குழந்தைகளையும் அறவோரையும் அழிக்காது மதுரையின் வளமெலாம் சுட்டெரித்துச் சாம்பலாக்கியது அது.

மதுரை மாநகர்விட்டுக் கிளம்பிய மாந்தர் மதுராபதி அன்னை யின் சிலையை ஆற்றோட்டத்துக்கு அருகே வடக்கில் பெருந்திணர் மீது கிளைவிரித்து நின்ற திமிசுமரத்தடியில் நிலைநாட்டினர். அதன் வலப்புறமாக காட்டுமரக் கிளைகளை நாட்டி ஆற்றுப்படுகையில் கொய்த கோரைப்புற்களை வேய்ந்து சிற்றில்களை எழுப்பினர். அதன் தெற்கே நின்ற ஆலமரத்தின் அடியில் சிறுநடுகல்லாக ஆலமர் செல்வனின் ஊழ்கநிலைச் சிலை நிறுவப்பட்டது. ஆற்றுக்கரைச் சதுப்புகளில் புல்லரிசி கொய்துவந்து நீருடன் சேர்த்து காய்ச்சிக் கூழாக்கி உண்டு வெறுந்தரையில் படுத்து கண்ணீருடன் உறங்கினர் மதுரைப்பெரும்பதி மாக்கள்.

மன்னன் இல்லா நாடெங்கும் மறம் ஓங்கத் தொடங்கியது பின்பு. வாளேந்திய வலியோர் எளியோரின் பொருள் கவர்ந்து சென்றனர். அனைத்துக் குமுகநெறிகளும் வழுவின. நாளெல்லாம் உழைத்தவர் உண்பதற்கின்றி ஓய்ந்துவிழ ஓங்கிய படைக்கலங் களுடன் மறவோர் அனைத்தையும் கொண்டனர். கள்வர் குழுக்கள் அலைந்த வழிகளில் பொருளோ உயிரோ கொண்டு நடமாடுதல் இயலாதது ஆயிற்று. மதுரையைக் கொள்ளையிட்ட மக்களிட மிருந்து அவர் கொண்ட அனைத்தையும் கள்வர் கவர்ந்து சென்றனர். பசித்தலைந்த மக்கள் ஊர்களைத் தாக்கினர். ஊர்மக்கள் படைக்கலங்களுடன் அவர்களை எதிர்கொண்டனர். பாண்டிய நாடெங்கும் படைக்கலங்கள் மோதும் ஒலியும் பசித்தவர் கதறும்

ஒலியுமே நிறைந்திருந்தது. கண்ணீருடன் மக்கள் ஆலமர் செல்வனை வணங்கித் தங்களை விடுதலை செய்யும்படி கோரினர்.

செய்தி கேட்டுக் கொற்கையை ஆண்ட இளஞ்செழியன் தன் மூவகைப்படைகளுடன் வடதிசை நோக்கி வந்தான். வரும் வழி யெங்கும் இருந்த கள்வர் குழுக்களை வேருடன் களைந்து சிற்றூர் தோறும் அறவோரை நிறுத்தித் தன் ஆட்சியை நிலைநாட்டி மேலே நகர்ந்தான். பதினேழாவது நாள் அவன் புதுமதுரையை அடைந்த போது நாடெங்கும் மீண்டும் மீன்கொடி பறந்தது. புதுமதுரையின் மூங்கில் வேலியிட்ட வாயிலில் மூங்கில் இதண்மீது காவல் நின்ற வீரர்கள் தெற்கே எழுந்த செம்புழுதியாக அவனை முதலில் கண்ட னர். வரவறை முரசு ஒலிக்கக் கேட்டு காட்டுமலர்களும் புல்லரிசியும் கலந்த தாலங்களுடன் பெண்டிர் குலவையிட்டபடி வாயிலில் வந்து குழுமினர். செந்நிற நிலவு அடிவானில் எழுந்ததுபோல நிலச் சரிவுக்கு அப்பால் ஓங்கிய கம்பத்தின்மீது மீன்கொடி நெளிந்து ஏறி வரக் கண்ட மக்கள் கதறி அழுதனர். பண்டு கடல் கொண்ட தென் நிலத்திலிருந்து தன் படைகளுடன் பழையன் பாண்டியன் வந்தது போலிருப்பதாகச் சொன்னார்கள் பாவலர்கள்.

மதுரை வாயிலில் அவனை ஏழுகுலக் குழுவினரும் சென்று வணங்கி வரவேற்றனர். மங்கல அரிமலர் சிதற முழவும் பறையும் முழங்க அவன் தலைநகர் நுழைந்து மதுராபதி அன்னையை வணங் கினான். ஆலமர்செல்வன் அடிபணிந்து அச்சிற்றூர் நடுவே அரச வீடாகக் கட்டப்பட்ட புற்குடில் புகுந்தான். ஏழுகுலச் சான்றோரும் கைப்பிடித்துக் கூட்டிச்செல்ல குடில் நடுவே இருந்த சிறுகுந்தாணி மீது அவன் அமர்ந்ததும் ''பணிக உலகு! இதோ தென்னவன் அரியணை அமர்ந்தான்!'' என்று நிமித்திகன் கூவியறிவிக்க மறையோர் மங்கல அரிமலர் தூவி அவனை வாழ்த்தினர். ஏழு மண் குடங்களில் கொண்டுவரப்பட்ட வையை நீரால் அவனை முழுக் காட்டி அவனை அரசனாக அறிவித்தனர் அறம் தேர் அந்தணர்.

தான் நாள்தோறும் பூசை செய்யும் மீன்விழியன்னையின் சிறு பொற்சிலையை அரைசவீடு அருகே இன்னொரு புல்மாடம் கட்டி அங்கே நிலைநாட்டினான் பாண்டியன். அன்னைக்கு மலரும் நீரும் காட்டிப் பூசை செய்து செங்கோல் ஏந்தி அரியணை அமர்ந்து தன் முதல் ஆணையை அறிவித்தான். மதுரை நகரின் அழிவுக்குக் காரண மான அனைவரையும் கொல்லுதல் முதல்படைத் தலைவன் மாறன் செழியனின் பணியாயிற்று. தன் மறவர் படையுடன் பழையன் குட்டுவன் மோகூர் சென்று பாடியமைத்திருப்பதாக அறிந்து மாறன் செழியனின் பெரும்படை அவனைத் தேடிச்சென்றது. மோகூர்ப்

பறத்தலையில் நடந்த பெரும்போரில் பழையனும் அவன் பெருங் குடியும் மறவர் படையும் முற்றாக அழிந்தன. முட்புதர்கள் காய்ந்து நின்ற பெரும்பாலையில் நடுகற்களாலான காடு ஒன்று பிறந்து வந்தது. மோகூர் எரியூட்டப்பட்டுச் சாம்பற்குவியலாக மாறியது.

அரண்மனைக் கரவறையில் இருந்து கவர்ந்த பொற்குவை களுடன் வடபுல வணிகர்போலக் கரவுடை அணிந்து தன் சுற்றம் தொடர வடதிசைப் பாதையில் சென்ற ஆயிரவர் குலத் தலைவன் பொற்கொல்லனைச் செழியனின் படையினர் சுற்றிவளைத்துப் பிடித்தனர். கைகள் கட்டிச் சகடங்களில் நிறுத்தப்பட்டு அவர்கள் மதுரைக்குக் கொண்டுவரப்பட்டனர். தொல்நகர் மக்கள் அவர் களைச் சூழ்ந்து நின்று மண் அள்ளி வீசி வசைச்சொல் கூறினர். அவர்களைக் கண்டதும் சான்றோரும் முதுபெண்டிரும் கண்களை மூடி அழுதனர். பாண்டியன் ஆணைப்படி நகருக்குத் தென்மேற்கு மூலையில் திமிசுமரத்தில் கடைந்து செய்யப்பட்ட முக்கண் கன்னியின் சிலையொன்று நிறுவப்பட்டது. கலையமர்ந்த ஒருமுலைக்கன்னி விரிகூந்தலுடன் எரியெழும் கண்களுடன் நின்றாள். அவள்முன் பதித்த பலிக்கல்லில் அன்னைக்குரிய மேழ மாதம் பரணிநாளில் கன்னி கண் திறக்கும் விடியாமத்தில் ஆயிரவர் குலப் பொற்கொல்லர் அனைவரும் தலையறுத்துப் பலி கொடுக்கப் பட்டனர். அவர்களின் செவ்வுதிரம் கொண்டு அன்னைக்கு யாவக முழுக்காட்டப்பட்டது.

அன்று மதுரை நகர் மக்கள் அனைவரும் தங்கள் இல்லங் களை மூடி அச்சத்துடன் இருளில் கண் கொட்டியமர்ந்து அன் னையை வணங்கினர். பலி முடிந்து கொற்றவை ஆலய மணி முழங் கியதும் வாயில்களைத் திறந்து குழந்தைகளும் முதியோரும் இளை யோரும் வளையோரும் கூடி வையைக்குச் சென்று நீராடினர். ஆற்றுக்கரையில் பறித்த காட்டுப்பூக்களுடன் இளவெயில் விரிந்த செம்புழுதிச்சாலையில் ஈர உடைகள் சொட்ட நடந்து அன்னையின் கோட்டத்துக்கு வந்தனர். தூய்மைப்படுத்தப்பட்ட பின்னரும் அன்னையின் கோட்டத்தில் குருதியின் வீச்சம் எஞ்சியிருந்தது. நீரும் பாலும் நெய்யும் கொண்டு முழுக்காட்டப்பட்ட பின்னும் அன்னை யின் முகத்தில் உதிரம் குளித்த பாவனையே காணப்பட்டது. மலர்களை அவள் கால்களில் குவித்து வணங்குகையில் ஒவ்வொரு நெஞ்சும் ''அன்னையே, எங்கள் ஊரில் இனி ஒருபோதும் உன் வருகை நிகழாதிருப்பதாக! உன் எரிவிழி எங்கள் திசை நோக்கி மூடியே இருப்பதாக! ஆம், அவ்வண்ணமே ஆகுக!'' என்று கனிந்து வேண்டுதல் செய்தது.

சாத்தன் தொடர்ந்தான். கேள் வேந்தே. மதுரை எரிந்து இருபது ஆண்டுகள் கழித்து அந்நகருக்கு நான் சென்றேன். புல் வேய்ந்த சிற்றில்கள் திரண்ட அவ்வூரே மதுரை என்று சொல்லிக் கேட்டபோது என் நெஞ்சில் ஓர் அலை வந்து மோதக் கண்டேன். நகர் நடுவே சிறு செங்கற்றளியாக மீன்விழியன்னையின் ஆலயம். கருவறைக்குள் கண்துலங்க நின்ற அன்னை முகத்தில் பொருள் நிறைந்த சிறுநகை ஒன்றைக் கண்டேன். முக்கண் முதல்வனும் உலகளந்த உத்தமனும் கோயில் கொண்ட ஆலயங்கள் மண்ணால் ஆன சிற்றில்களே. ஆலமர்செல்வனின் ஆலயம் மட்டும் அப்படியே மரத்தடியில் நடுகல்லாக இருந்தது. அந்நகரின் சிறுமண் தெருக் களில் நடந்தேன். ஒவ்வொரு தெருவுக்கும் முன்பிருந்த மாமதுரைத் தெருக்களின் பெயர்களே சூட்டப்பட்டிருந்தன. முதற்பூதம் வீற்றிருந்த ஊர்மன்றோ இன்னும் விழுதிழியா சிற்றாலமரத்தடி மேடை அரைசபூதம் நின்ற அரசெழுவீதியெனில் செங்கற்கள் பரப்பப்பட்ட குறுகிய தெரு. அதன் எல்லையில் இருந்த மூங்கில் கூரையிட்ட மரவீடே பாண்டியன் அரண்மனை என்றனர்.

அரசுகட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியனின் இளவல் இளஞ் செழியன் தன் மூத்தோன் மறைந்ததும் மதுரைக்கு வந்து நன்மாறன் என்ற பேரேந்திச் செங்கோல் கொண்டான். தென்னாடெங்கும் அலைந்த மறவர் குழுக்களை வென்று அறம் ஓங்கச் செய்தமையால் அவனை வெற்றிவேற்செழியன் என்று விளித்தனர் மக்கள். அவன் மைந்தன் நெடுஞ்செழியன் மக்கள் இதம் அறிந்து அறவோர் சொல் நாடி நூலோர் நெறியுணர்ந்து அந்நகரை அப்போது ஆள்வதாகச் சொன்னார்கள். அவன் ஆட்சியில் மெல்ல இதழ்விரிக்கும் ஆயிரம் மடல் கொண்ட தாமரைபோல அந்நகர் வளர்வதைக் கண்டேன்.

ஆயினும் நூலிலும் கதைகளிலும் அந்நகர்பற்றி அறிந்த எனக்கு நெஞ்சு கனன்றது. மார்பில் வழிந்த கண்ணீருடன் கை கூப்பியபடி அந்நகர்த் தெருக்களில் சுற்றிவந்தேன். வணிகத் தெருக்கள். அங்காடி முனைகள். வேளாண்தெருக்கள். புற்குடில்

களில் வாழ்ந்த அரச கணிகையர். வெறுந்தரையில் கூலக்குவைகள் நிரக்கக் கூவிவிற்கும் என் குல வணிகரைக் கண்டேன். அப்பால் பொலங்கடைவீதி என்று பெயருடன் ஒரு வீதியைக் கண்டேன். எட்டுப் பொற்கொல்லர் கூடியமர்ந்து குன்றிமணிப்பொன் உருக்கும் சிறுதெரு அது. அங்கு நின்று கண்ணீருடன் சிரித்தேன். அரசப் பெருமையும் செல்வச்செழுமையும் வண்மையும் கேண்மையுமெல் லாம் வெறுங்கனவெனச் சொல்வர் நூலோர். நாம் காணும் இத் தென்கடலுக்குள் எத்தனை மாநகர்கள் அழிந்தடங்கின. அன்னை யின் மடியில் அமர்ந்து சிறுசெப்பு வைத்து விளையாடும் மைந்தர் நம் முடிமன்னர். அதை அவர்கள் என்று மறக்கிறார்களோ அக் கணமே அன்னை முனிகிறாள். அவள் சினத்தின் சிறு திவலையே போதும் பெருநகர்களை வெறும் மண்ணாக மாற்ற என்றறிந்தேன்.

வேந்தே, புதுமதுரைத் தெருக்களெங்கும் கண்ணகியன் னைக்குச் சிலையமைத்து வழிபட்ட மக்களைக் கண்டேன். ஆனால் மதுரையில் அவள் சாக்கியத் தெய்வமல்லள். முக்கண்ணும் எரி குழலும் ஒற்றைமுலையும் ஓங்கிய கொலைவாளும் கொண்ட கொற்றவை. தெருமுனைகளிலெங்கும் அவளைச் சிலையாகவும் செங்குருதி பூசிய சிறுநடுகற்களாகவும் நிறுவியிருந்தனர். அவளுக்குக் கொற்றவைக்குரிய முற்றிருள் நாட்களில் உதிரப்பலி கொடுத்து வழிபட்டனர். அவளது அடங்காப் பெருஞ்சினம் தணிக்கச் செம்மலர்களையும் குருதிகலந்த பொரியையும் வேண்டிய ளித்தனர். பூசனையின்போது அவள் கன்னிப்பெண்டிரின் மெல் லுடல் ஊர்ந்து சன்னதம் கொண்டு வந்து முறைசொல்லி நெறி வகுத்தாள். அவளைப்பற்றிய கதைகளை அந்நகரெங்கும் மீண்டும் மீண்டும் கேட்டேன். பூம்புகாரில் இருந்து பசுங்கண் இயக்கி துணை யுடன் மதுரைநகர் வந்து அறம் மறந்த மன்னனைத் தன் நெற்றிக் கண் திறந்து சுட்டு மதுரை நகர் அழித்துப் பெரும்பாலைக்கு மீண்டனள் கொற்றவை என்றனர் மூதன்னையர். நகருக்குத் தென்மேற்கே ஆயிரவரைப் பலிகொண்ட ஐயையின் கோட்டம் ஓங்கிய முகடு கொண்ட மாடங்களுடன் உதிரம் உலராத பலிக்கல்லுடன் நின்றது.

பின்பு பழைய மதுரையைக் காணவிழைந்தேன். அங்கு செல்லவேண்டாமென என்னைத் தடுத்தனர் ஊர்மக்கள். கொடுந் தொழிற் கொற்றவையின் ஆறாச்சினம் இன்னும் அங்கே எரிவதாகச் சொல்லி அங்கிருந்து எழுந்த புகையையும் காட்டினர். மேய்ச்சல் தொழில் இடையர்கூட வையைப் புனல் கடந்து அப்பக்கம் செல்வ தில்லை. ஆனால் முட்புதர் செறிந்த அப்பகுதியில் ஒற்றையடிப் பாதை ஒன்று உள்ளே செல்வதை வியப்புடன் கண்டேன். வேனில்

வையை வெம்மணலில் ஓடிய சிறுபுனலொழுக்குமீது பாறைகளை இணைத்துப் போடப்பட்டிருந்த மரத்தடிப்பாலம் ஏறி மறுபக்கம் சென்ற அப்பாதை வழியாகச் சென்றேன். அப்பால் ஆலும் வேலும் நெருஞ்சியும் பற்றி வளர்ந்து இடிந்து பாழ்பட்டு நின்ற பெரும் கோட்டை முகப்பினைக் கண்டேன். முட்செடிகள் மூடிய அப்பெரு வாயிலின் வழியாக உள்ளே சென்றேன். புதர் மண்டி நீர்மறைத்த சிற்றாறொன்று உள்ளே ஓடியது.

சிற்றாற்றின் கரையில் சென்ற பாதையில் சில பாதங்களின் தடங்களைக் கண்டேன். ஆனால் மாந்தர் எவரையும் காண வில்லை. எங்கும் சிறு பூக்கள் மலர்ந்த புதர்கள் காற்றில் குலுங்கின. அவற்றில் எழுந்தும் அமர்ந்தும் சின்மொழி பேசியும் சிறு குருவிகள் விளையாடின. நீரொலியும் புள்ளொலியும் புதர்க்கிளைகளைக் கோதும் காற்றின் மூச்சொலியன்றி எங்கும் எவ்வொலியும் இருக்க வில்லை. சிதைந்த நகர் வழியாக நடந்தேன். வெண்சுதை மாடங்கள் கருகிய சுவர்களாக எழுந்து நிற்கக் கண்டேன். இடிந்த சுவர்கள் விழுந்து மறித்த வீதிகளில் அப்போதும் கரி நிறைந்து கிடந்தது. மண்ணில் மடியாது புதைந்த கருகிய பட்டுடைகள், உடைந்த ஏனங்கள், எரிந்த மரக்கருவிகள். ஊர்மன்றில் முதற்பெரும்பூதம் உடைந்து ஒருக்களித்துச் சரிந்து மண்ணில் பாதி புதைந்து கிடந்தது. அதன் கல்விழிகளில் அது சரிந்த அக்கணங்களின் பெருவியப்பு அப்படியே உறைந்து நின்றிருந்தது.

அப்பால் அரசவீதியில் கருகிய சுதைச்சுவர்களாக நின்ற அரண்மனையையும் கரும்புகை படிந்த மீன்விழியன்னையின் ஆலயத்தையும் கண்டேன். அழகன் கோட்டமும் மணிவண்ணன் விண்ணகரும் இடிந்து புதர்மண்டிச் சிறுவிலங்குகள் வாழும் மடையரங்களாக மாறிக்கிடந்தன. என் குடியினர் வாழ்ந்த வணிகவீதியில் நீணேரம் அலைந்தேன். என் இல்லத்தைக் காண இயலவில்லை. கூரையற்று நின்ற சுவர்களில் ஒன்றில்தான் என் தாய் என்னை ஈன்றிருப்பாள் என்று எண்ணி மனம் மயங்கி அங்கேயே நின்று வெதும்பினேன். கூலக்கடைத் தெருவில் நெருஞ்சி மண்டிய தரையில் கால்களால் தள்ளியபோது மட்கிய கூலங்கள் மாவாக எறும்புப்புற்றாக மாறி எழுந்ததைக் கண்டேன். குனிந்து ஒரு கைப்பிடி மண் அள்ளி முகர்ந்து நோக்கியபோது என் விழிநீர் அதில் விழுந்தது.

பின்பு நான் திரும்ப முயன்றேன். அப்போது சேங்கிலைத் தாளமும் குறுமுழவும் ஒலிக்கக் கேட்டேன். யாரிங்கு என்றறிய ஆவலுடன் நடந்து அத்திசை நோக்கிச் சென்றேன். புதுமதுரை

அமைப்பே பழமதுரையும் ஆம் என்பதனால் அது பொற்கொல்லர் வீதி என்றறிதல் எளிதாயிற்று. முஞ்சியும் புதரும் நிறைந்த அவ் வீதியில் கருங்கல்லால் ஆன பெருஞ்சிலையொன்று எழுந்து நிற்கக் கண்டேன். ஒற்றைமுலையும் நுதல்விழியும் கொண்ட அவ்வன்னை வடிவம் கையில் தனிச்சிலம்பும் கனல்தெறிக்கும் விழிகளும் கொண்டிருந்தது. தெச்சியும் செவ்வலரியும் மாலையாக்கிச் சூட்டி செஞ்சாந்தும் யாவகமும் பூசி, சுடர் அணையாக் கரிபோல நின்றாள் அவள். அருகே எயினர் குழாம் ஒன்று செவ்வாடை அணிந்து செஞ் சாந்து பூசி வணங்கி நின்றிருந்தது. இருவர் பறை முழக்க ஒருவன் சேங்கிலைத்தாளம் முழக்கினான். அவ்வொலியில் விழித்த கண்களுடன் அன்னை உயிர் கொண்டெழுவதெனத் தோற்ற மெழுந்தது.

அவர்கள் ஏழு கிடையாடுகளைக் கொண்டுவந்திருந்தனர். கொம்பு சுருண்ட தாடி நீண்ட விதை பருத்த ஆடுகள் தென்னை மலர்மணி போன்ற விழிகள் பொருளிலாது விழிக்க குறுவால் அசைத்து கனைத்து நின்றிருந்தன. சடைமுடியும் தாடியும் கொண்ட பூசகன், மலரும் நீரும் காட்டிப் பூசெய்கை முடித்ததும் கைகாட்ட முதல் கிடா பலிமேடைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அதன் கொம்பைப்பற்றிக் கழுத்தை நீட்டிய பூசகன் சிறிய வளைந்த கத்தியால் அதன் கழுத்தைச் சிறிதாக வெட்டினான். வேலைமுடிந்து கொல்லனின் உலைத்துருத்தி இறுதியாக அவிவதுபோல அவ் விலங்கின் மூச்செல்லாம் புழுதி பறக்க குருதித்துளி தெறிக்க சீறி வெளியேறிற்று. எதுவும் அறியாது அது நா நீட்டித் தழை ஒன்றை நக்க முயலுகையில்தான் மூச்சின்றித் திணறி வாய் திறந்து எழுந்தது. அதன் கழுத்தின் குருதிக் குழாயை பூசகன் வெட்டினான். செங்குருதி சீறியடித்தது. அதை பெரிய பனையோலைத் தொன்னையில் பிடித்து அவன் அன்னையின் கற்சிலைமீது ஊற்றினான். அன்னையின் எண்ணெய் மின்னிய கரிய உடல் மீது கொழுத்த செவ்வுதிரம் செம்பட்டாடைபோலப் பரவி வழியக் கண்டேன். ஏழு விலங்கு களின் குருதியாலும் அன்னையை முழுக்காட்டிய பின்பு அங்கே செங்குருதியாலான அன்னை சிலை ஒன்றே நின்றது. அப்போது அவள் விழித்த வெறிக் கண்களிலும் கோரைப்பற்கள் தெரிந்த இதழ் களிலும் நான் இதுநாள் வரை பொருள் தேடியலையும் அழியாப் பெருஞ்சொல் ஒன்று இலங்கியதறிந்தேன்.

கால்கள் நடைபின்ன அங்கிருந்து மீண்டேன். அன்னையின் சிலையைச் சுற்றிக் குறும்புதர்களிலெல்லாம் மூச்சொலிகளைக் கேட்டேன். பின் மின்னும் விழிகளைக் கண்டேன். நூறு நூறு நரிகள்

குருதிவாசனைக்கு வந்து வாய்நீர் சொட்டக் காத்து நிற்கின்றனவென அறிந்தேன். மதுரை நகர் மீண்டு எங்கள் வணிகர் குடிக்குரிய அறச் சாலைக்குச் சென்று படுத்துக்கொண்டேன். இரவெல்லாம் என் முன் விரிந்த இருளில் அன்னையின் பேசும் கண்களையே கண்டு கொண்டிருந்தேன்.

ஃ

இடங்கல் மாதம் திருவோணப் பெருவிழாவுக்குப் பதினெட்டு நாள் முன்னர் நிமித்திகர் குறித்த நிறைவேளையில் முறைப்பெருமுரசம் வீங்குற ஒலிக்க முழவுகள் ஆர்க்க வஞ்சிப் பெருநகரின் அரண்மனைக் கோட்டை வாயில்கள் விரிந்தன. அரண் மனைக்குள் மங்கலமணியோசை ஒலித்தது. ஐம்பெருங்குழு வினரும் அணிவகுத்து நின்று வணங்க சேரன் செங்குட்டுவன் தன் பெருந்தேவி வேண்மாளுடனும் இளவலுடனும் அகம்படியினரும் அகச்சிறையினரும் சூழ நாடு காணும் பொருட்டு எழுந்தருளினான். முத்தமிழாய்ந்த முதுபுலவன் சீத்தலைச்சாத்தனும் நிமித்திகரும் அமைச்சரும் கூத்தரும் பாணரும் விறலியரும் துணைசென்றனர். வேதியர் அருகுமணி தூவி வாழ்த்த, மலர் தூவி மங்கையர் வாழ்த்த தன் குலம் காக்கும் கொன்றைக்காட்டுக் கிழவனை வணங்கிச் சேரன் அணிபெரும்படகில் ஏறியமர்ந்தான். அவனை வழியனுப் பும் பொருட்டு நகரின் அனைத்துப் பெருமுரசங்களும் ஆர்ப் பரித்தன. நகர்மக்கள் அவனுக்கு வாழ்த்துச் சொல்லிக் குரலெடுத் தனர். அவனது அரிமுகப் பெருவள்ளம் முன்செல்ல அன்னமுகப் பெருவள்ளத்தில் பிற தேவியரும் சேடியரும் சென்றனர். யாளிமுகப் பெருவள்ளங்களில் வீரர்கள் அவ்விரு வள்ளங்களையும் சூழ்ந்துசென்றனர்.

வள்ளங்கள் நீரில் உலவும் அன்னப்பறவைகள்போல நீர்த் தடம் வரைந்து செம்பட்டுப்படாம் அலையடிக்க கொடிகள் துடிக்க வேம்புநாட்டுக் காயலில் சென்றன. பேரியாறு கொண்டுவந்த செம்பெருக்கில் புன்னைமலர்ப்படலம் விரிந்து சுழித்தது. மலைமண் மணம் எழுந்தது. பெண்டிர் கைநீட்டி நீரையள்ளி அதன் தண்மை உணர்ந்து கூவி நகைத்தனர். வள்ளத்தின் அமரத்தில் ஓங்கி நின்ற இருக்கையில் கலிங்கவெண்பட்டைப் போர்த்தி வெண்தாமரை மலராலான பூமுடி அணிந்து அமர்ந்திருந்த சேரன் செங்குட்டுவன் நீரில் இருமருங்கும் நீண்டுவந்த பசுங்கரைகளில் தன் நீர்நிறை நாட்டின் பெருவளம் கண்டு கண் மயங்கி உளம் விளங்கித்

தோன்றினான். அமைச்சர் பெருங்கேளனார் வாய்பொத்திக் குனிந்து ''இது காயலில் மீன் தேரும் கரைப்பரவர் வாழும் இடம். பரவரூர் என்றிருந்து மருவி பரவூர் ஆயிற்று'' என்றார். கரையோரத்தில் அந்நகரில் தெங்குக் கூட்டங்கள் திணிந்து புற்குவை என நின்றன. திருவோணநாள் வரவை எதிர்நோக்கித் தென்னைமரங்களெங்கும் மஞ்சள் நிற மங்கலக்கொடிகள் கட்டியிருந்தனர். பரவரூரில் கரையோரமாக நின்ற மக்கள்திரளிடமிருந்து வாழ்த்துப் பேரொலி எழுந்து காயல் குளிர்காற்றில் அலைத்து வந்தது. அங்கிருந்து கிளம்பிய பரவர் குலப் படகுகள் நேராக நீர் கிழித்து வந்தன.

சேரனை அணுகியதும் அமரத்தில் நின்ற குலமூப்பர்கள் தங்கள் தலைப்பாகைகளை எடுத்து இடையிலணிந்து கைகட்டி நின்றனர். படகுகள் அணுகி நீரிலாடி நின்றன. முறைப்படி வணக்கம் சொன்ன பரவர் குலத்தவர் உலர்மீனும் வெண்சங்கு குடைந்த உண் கலங்களும் சிப்பியில் செதுக்கிய கிண்ணங்களும் காணிக்கையாக அளித்தனர். திருவோணநாள் களியாட்டம்பற்றிச் சேரன் கேட்டறிந்தான். அம்மக்களுக்கு பரிசிலாகத் தன் விரிமார்பிலணிந்த முத்தாரத்தை எடுத்து அளித்தான். மகிழ்ச்சியொலியுடன் அதைப் பெற்ற அவர்கள் மும்முறை பணிந்து படகைப் பின்துழாவி விலகினர்.

சேரனின் அணிவள்ளங்கள் காயலில் இருந்து பேரியாற்றுக் குள் நுழைந்தன. பேரியாறு காயலில் கலக்கும் அலைவாய்முகம் என்ற ஊரையும் அங்கு எழுந்தருளிய அலைவாய் அழகனின் ஆலயப்படித்துறையையும் தாண்டிச் சென்றனர். பேரியாற்று நீர் சேற்றுக்கலங்கலாக வந்து புகைபோலக் காயலின் நீலநீருக்குள் புகுந்து பரவியது. ஆறு கொண்டுவந்த மலைக்குப்பைகள் காயலின் ஆழத்துக்கு முக்குளித்துத் தொலைதூரம் தள்ளி மெல்ல மேலெழுந்துவந்து சுழித்தன. படகோட்டிய நீர்வினைஞர் நீளமான மூங்கில் கழிகளை நீருள் செலுத்தி அடிச்சேற்றில் பதித்து உந்தி வள்ளங்களைக் கரையோரமாக ஒதுக்கினர். ஆற்றின் நடுவே நீர் காயல் நோக்கிப் பாய, ஓரத்தில் காயல்நீர் ஆற்றுக்குள் சென்றது. அப்பெருக்கில் ஏறி வள்ளங்கள் ஆற்றுக்குள் நுழைந்தன. ஆற்றுக் குள் சென்றதும் வள்ளங்களின் ஆட்டம் யானைமீது அம்பாரியில் அமர்ந்திருப்பதுபோல மாறி அனைவரையும் பின்னுக்குத் தள்ளியது.

சற்றுத்தொலைவு சென்ற பின்பு ஆட்டம் சற்றுச் சீர்பட்டது. பசும் நாரம் பரவிய நீர்வெளியின் இரு கரைகளிலும் அடர்காடுகள் பச்சைக்கோட்டைபோலச் சூழ்ந்து நின்றன. அங்கிருந்து கிளம்பிய

சிறு அன்றில் பறவைகள் நீர்மீது நிழல் பரப்பி மறுகரை நோக்கிச் செல்ல, வெண்கொக்குகள் பறந்து வந்து ஆற்றுநடுவே உந்திநின்ற சேற்றுத் திப்பைமீது ஒற்றைக்கால் மடக்கிப் பூக்காத ஆம்பலென நிற்கக் கண்டான் சேரன். சில கொக்குகள் திடுமென நீரில் அலை யெழ நீள்சிறகு விரித்து மீனுடன் வானிலெழுந்தன. ஆற்றுக்குள் மணல்வைப்புகள் மூழ்கிய படகுகளின் அடிப்பக்கம் போலத் தெரிந்து நீரோட்டத்தில் ஓடுவன என எண்ணச்செய்தன. சில மணல் வைப்புகள்மீது எழுந்த கோரைப்புற்பசுங்காட்டில் மீன்குத்திப் புட்கள் நீலச்சிறகு மடித்து அமர்ந்து ஆடின. சேற்றுவண்டல் படிந்த கரையோரங்களில் நீர் அருந்தும் மானின் கொம்புகள்போலக் கிளைகள் விரிய புன்னைகள் கவிழ்ந்து நிற்க அவற்றுக்குக் கீழே மட்கிய மரக்கிளைகள்போல முதலைகள் அசைவற்ற கண்களுடன் காலமிறந்து கிடந்தன. சேற்றுப்பரப்பெங்கும் நீர் அருந்திய விலங்குகளின் கால் தடங்கள் எழுதப்பட்டிருந்தன. இளங்காலைச் செவ்வெயில் ஆற்றோரத்து மென்னயிர்க் கதுப்பில் அலைவிரிந்து சிதறிய செவ்வொளி கண்களை நிறைத்தது.

அன்று நடுநாளில் வானம் கருமைகொண்டு இளமழை இறுத்தது. வள்ளங்களின் தெங்கின் ஓலை வேய்ந்த முகடுகளி லிருந்து நீர் சொட்டி ஆற்றுநீரில் விழும் ஒலி கேட்டது. வள்ளத் திலேயே உணவுண்டு சேரன் ஓய்வெடுத்தான். மாலையில் அரச படையினரின் வள்ளங்கள் மலையாற்றூரை அணுகியபோது மன்னனின் வரவறிவிக்கும் பெருமுரசங்கள் அங்கே முழங்கின. மருப்பணி இலங்கிய மதகரிகள் ஏழு செம்மண் அருப்பம் விரிந்த கரையருகே காத்து நின்றன. வெண்ணிற ஆடையை வரிந்துடுத்திய ஊர்ப்பெருமக்கள் மலரும் குடநீரும் அருகரிசிக் குவையும் உப்பும் ஏந்திக் காத்து நின்றனர். சேரன் இறங்கி மங்கலம் கொண்டு முறை செய்ததும் எழுந்த வாழ்த்தொலியை ஆற்று நீரில் அலைகள் அறைந்தன. ஆற்றங்கரையில் பெருங்கால்கள்மீது மூங்கிற்பாயும் பரம்பும் கொண்டு கட்டப்பட்ட பெருவழிச்சாலையில் சேரன் இரவு உணவருந்தி தருவைப்புல்மீது மான்தோல் பரப்பிய மஞ்சத்தில் வேம்புப் புகையிடப்பட்ட அறையில் உறங்கினான்.

காலையில் எழுந்து வஞ்சிநகர் வாழும் கொன்றைசூடியை வணங்கிப் புத்தாடை அணிந்து சேரன் சாலைமுற்றத்துக்கு வந்த போது செங்கல் பரப்பப்பட்ட அளிந்தமெங்கும் நகராளரும் பெரு வணிகரும் சூழ்ந்து செவ்வி நாடி நின்றனர். முரசமும் முழவும் சங்கும் கொம்பும் ஒலிக்க மன்னன் வந்து மன்றிருக்கையில் அமர்ந் தும் அனைவரும் மண்தொட வணங்கி வாழ்த்துரை கூவினர்.

சேரநாட்டுக்குமேல் எழுந்த நீலமலையடுக்கங்களில் வாழும் பதினெண் வகை மலைப்பழங்குடிமக்கள் கொணரும் மலை விளைபொருட்களெல்லாம் பேரியாற்றுப் பெருக்கினூடாக தோணிகளில் இறங்கிவந்து பொதுவணிகருக்கு விற்கப்படும் பேரங்காடி அமைந்ததனால் அவ்வூர் மலையாற்றூர் எனப்பட்டது. காணிக்கைகளுடன் வந்தவர்கள் அவற்றை எழுத்தினன் முன் வைத்துக் குறி சொல்லி வணங்கி மன்னனின் செவ்விக்கு ஆணை பெற்று நிரை வகுத்து நின்றனர். மன்னனை அணுகி அவன் முன் ஐம்பொறிகளடக்கி வணங்கினர்.

சேரனுக்குக் காட்சிப்பொருளாகக் கொணரப்பட்டவை மன்றுமுன் குவிக்கப்பட்டு அரைசபடையினரால் ஆய்ந்து வகுக்கப்பட்டன. குலைவாழைத்தண்டுபோலக் குளிர்ந்து நீண்ட யானை வெண்கோடுகள், அகிற்குப்பை, மான்மயிர் அடுக்கிய கவரிக் கற்றைகள் குவிக்கப்பட்டன. அதிங்கம், அலத்தகம் , அழற்காய் நிறைத்த மூங்கிற்பொதிகள். மலைத்தேன் நிரப்பிய சுரைக் குடுவைகள், அருமருந்தாகும் நெல்லியும் கடுக்கும் தான்றியும் என மூவகைக் காய்கள். பத்துவகை வேர்கள். உலர்த்தப்பட்ட நூற்றெட்டுவகை மருந்திலைகள். வளைந்த புலியுகிர்கள், செம்பருந்தின் சிறகுகள், மான் தோல்கள், புலித்தோல்கள், கிளைபிரிந்த மான் கொம்புகள், மோட்டெருமையின் பெருங்கொம்புகள், மொழியறிந்த கிள்ளைகள், சீறும் சிங்கக்குருளைகள், துதிக்கை நீளாத யானைக் குட்டிகள், மயிலிறகுப்பொதிகள், புளித்த பழச்சாறு நிரப்பிய மரக்குடைவைகள்.

அழலவன் எழுந்தபின்னர் சேரனும் சுற்றமும் மீண்டும் கிளம்பிப் பேரியாற்றுப் பெருக்கை எதிர்த்து வள்ளம் செலுத்தி மலைச்சாரலை நாடிச் சென்றனர். முஞ்சி அடர்ந்த இடுமணல் எக்கர் ஒன்று எதிர்ப்பட மன்னனும் சுற்றமும் வள்ளங்களை அருகணையச் செய்து அங்கே இறங்கி அமர்ந்தனர். அலவன் துளைத்த சிறுகுழிகளில் ஆற்றுநீர் ஏறிக் குமிழி எழ மூச்சுவிடும் பேருடல் எனக் கிடந்தது அம்மணல்திப்பை. அதில் இறங்கிப் புன்னை சரிந்த சோலைநடுவே கோரை வெட்டி வீரர் சமைத்த பசும் மஞ்சத்தில் சேரன் இளைப்பாறினான். அளறு மணக்கும் அச் சூழலைச் சந்தனம் மணக்கும் தன் அரண்மனையைவிட அவன் உள்ளம் விரும்பியது. தன்னருகே அமர்ந்த அரண்மனை இசைஞர் மெல்ல இசைத்த பண்ணைக் கையசைத்து நிறுத்தி மணலில் நீர் மீட்டிய இசையையே கேட்கலானான்.

அன்று மாலை சேரனும் படையினரும் பேரியாறு தேங்கிய

குட்டப்புழை ஏரியை அடைந்தனர். ஏரியிலிருந்து ஆறு கிளம்பும் வழியில் எதிர் நீரோட்டம் வலுத்திருந்தமையால் கழையுந்திகள் கரிய தோள்தசைகள் புடைக்க மூச்சுக்குரல் ஒலிக்கச் சேர்ந்து உந்தினர். மெல்ல ஓடங்கள் ஏரியின் வடக்குக் கரையோரமாக ஒதுங்கின. ஏரியின் நாற்புறமும் இடையிலா அடர் காடு செறிந்திருந்தது. காயலில் கவிழ்ந்து தாங்கள் அலைக்கும் நீலநிழல்மீது படர்ந்து நின்ற புன்னைகளில் இருந்து தொடங்கும் இலைப்பசுப்பு காற்று அலையெழுப்பும் பச்சைப்பெரும்வெளியாக மாறி வளைந்து மலைகளை அணுகி மேலேறியது. மரமுகடுகளின் குவியலென நின்ற மலையின் உச்சியில் நீர்வழியும் கரிய பாறைகள் இளவெயிலில் சுடர்ந்து வானிலிருந்து தங்கள் பேரமைதியினை மொண்டெடுத்தபடி நின்றன. அப்பால் நீலம் மூடிய பிற மலையுச்சிகள். மாலைப்பறவைகள் நீரில் தங்கள் நிழல்கள் சிறகடித்துத் தொடர்ந்துவர மரங்களை நோக்கிச்சென்று கலைந்து குரலெழுப்பி எழுந்து பறந்து சுழன்று மீண்டுவந்து அமர்ந்து மரங்களை நிரப்பிக் கொண்டிருந்தன. கார்முகில்கள் மூடிய வானிலிருந்து சொரிந்த மென்தூறலில் மாலைச்செவ்வொளி படர்ந்து காட்டுக்குமேல் விண்ணவன் வில் ஏழு வண்ணங்களும் பொலிய வளைந்து நின்றிருந்தது. படகிலிருந்த அனைவருமே சொல்லிழந்து விட்டனர். துடுப்புகள் நீரிலிறங்கும் ஒலியும் அலைகள் படகில் அறையும் ஒலியும் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தன.

நீர்வெளி நடுவே வெண்மணல் விளிம்புடன் இளம்புற்கள் மட்டும் பரவி நின்ற ஆற்றிடைக்குறையை வீரர் தலைவன் சுட்டிக் காட்டினான். ஓடங்கள் அத்திசை நோக்கிச்சென்றன. அணுகுகையில் அம்மணலழுவம் பெரிதாகியது. படகுகள் நின்றதும் கழையுந்திகள் நீண்ட கழிகளால் மணலில் ஊன்றி அதன் திணிவை அளந்து நிறைவு கொண்டதும் பாய்ந்து அதன் மீதிறங்கினர். மணற்கரைக்குள் ஆழத்தில் பாறை இருந்தது அறிந்து அதன்மீது தறிகளை அறைந்து இறக்கி அதில் படகுகளைக் கட்டினர். படகுகளில் இருந்து எழுநிற எழினியும் யானைத்தோலால் கூரை தைக்கப்பட்ட கூறைக்கூடும் வெளியே எடுக்கப்பட்டன. தறிகள் அறையப்பட்டு நாண்களில் இழுக்கப்பட்டுக் கூரை நிறுத்தப்பட்டது. எழினியும் படாமும் கட்டப்பட்டன. மன்னன் தங்கும் படைவீடு உருவாயிற்று. படகிலிருந்து தன் சந்தனமிதியடிக் கால்களைத் தன் நாட்டு மண்மீது வைத்துச் சேரன் இறங்கியதும் அகம்படியர் மங்கலப்பெருமுரசும் சங்கும் முழவும் ஒலித்து அவன் குடி வாழக் குரலெழுப்பினர். இளமழை ஆவிய சாரலில் நனைந்தபடி மணல்மேட்டில் அமர்ந்து ஏரியின்

நீலநீரலைகளையே நோக்கி அமர்ந்திருந்தான் சேரன். பெற்றவை யும் கற்றவையும் உற்றவையுமான எல்லாச் சொற்களும் அவனிட மிருந்து விலகிச்சென்றிருந்தன.

காடு இருண்டு நிழல்குவியல்களாகவும் காற்று சீறும் ஒலியா கவும் ஊடே கிழித்துவரும் யானைப்பிளிறல்களாகவும் புலிக்குரலா கவும் மாறியது. ஏரிப் பரப்பில் செவ்வொளி அலைகளுடன் சேர்ந்து குழம்பிக் கலங்கியது. மேற்குவானில் செம்மை இருண்டு இருண்டு அணைந்து கரியாகி மறைந்தது. வானின் கருமையில் மலைமகள் முகத்து மூக்குத்திபோல ஒரு பெரிய செவ்விண்மீன் மட்டும் நின்றது. குளிர் ஏறி ஏறி வந்தது. மணலில் தீமூட்டி அதில் காட்டுமிளாவின் ஊன்சுட்டு மிளகும் உப்பும் பூசி வாழை இலையில் வைத்து மன்னனுக்கு அளித்தனர் சேடியர். இன்கடும் தேறலைச் சற்றே சூடுபடுத்தி நீர் சேர்த்து யவனநாட்டு நீலப்பளிங்குக் குடுவையில் நீட்டினர். அவன் வானை நோக்கியபடியே அவற்றை உண்டான். அவன் வஞ்சியைவிட்டுக் கிளம்பியபோதே சொல்லின்மையில் ஆழ்வதை அவனை நன்கறிந்த வேண்மாள் கண்டிருந்தாள் என்பத னால் அவள் ஒன்றும் சொல்லவில்லை. இரு சேடியர் மகரயாழை எடுத்து மெல்ல இரவுக்கான பண்ணை மீட்டத் தொடங்கினர். சேரன் திடுக்கிட்டு எழுந்து கைகாட்டி அவ்வொலியை நிறுத்தினான். நெடுமூச்சுடன் நிமிர்ந்து வானை நோக்கினான். இருண்ட வானின் பின்னணியில் மலையுச்சிகள் மெல்லிய கோடுகளினால் ஆனவை போலத் தெரிந்தன.

அன்றிரவு மழை வலுத்துச் சீறிக் கூறைக்கூடுகள்மீது ஓங்கிய றைந்து பொழிந்தது. ஏரியும் வானும் இணைந்ததுபோல நீர் திசை களில் பரந்து பேரொலியுடன் அலையடித்தது. எழினிகள் எழுந்து புடைத்து விம்மிச் சட்டென்று அடங்கிப் படபடத்தன. இர வெல்லாம் துயிலில்லாமல் நீரின் ஒலியையே கேட்டபடி சேரன் கிடந்தான். பிறகு வானோசை குறைந்ததும் எழுந்து கச்சையை முறுக்கி மேலாடையை நன்கு போர்த்தி வாயிற்படாம் விலக்கி வெளியே வந்தான். மணலில் மழையின் தடம் வரிவரியாகப் படிந்திருந்ததைக் கண்துலங்கியபோது கண்டான். மென்துகில் ஒன்று சுருங்கி நொறிநொறியாகிப் பரவிக்கிடப்பதுபோல. குளிரக் கால் வைத்து நீர் அருகே வந்து நின்று கிழக்கே எழுந்து திசையாக ஆன மலையடுக்குகளை நோக்கி நின்றான். அவற்றின் உச்சியில் இருந்த மெல்லிய ஒளியையே அவன் விழிகள் உற்று நோக்கின இரவெல்லாம்.

காலையில் சேரனின் படைவீரர்கள் மணலில் விறகு குவித்துப் புகையிட்டனர். அறிகைமுரசு சீரான இடைவெளியுடன் விட்டுவிட்டு ஒலிக்கத் தொடங்கியது. அவ்வொலி மலையடுக்குகளில் பல இடங்களில் மோதி மோதி மீண்டது, பசிய மரக்குவைகள்மீது சிதறிப் பரந்து உலவியது. பின்பு காட்டுக்குள் இருந்து அறிமிழவின் ஒலி எழுந்தது. ஓங்கிய பாறை உச்சிமீது தனித்து நின்ற பெருவேங்கைக் கிளைமீது அமர்ந்த குடும்பி ஒருவன் கைகளை விரித்து மஞ்சள் ஆடையை வீசுவதை ஒரு வீரன் கண்டான். அவன் சொன்னதும் பிற வீரர்கள் கூடி நின்று கையசைத்தனர். மஞ்சள் ஆடைகளை வீசிக்காட்டினர். எங்கும் உவகை நிறைந்தது.

வெயில் நீர்ப்பரப்பில் சிதறிக் கண்கூசத் தொடங்கும் நேரத்தில் ஆற்றின் ஒழுக்குகள் வழியாகச் சிறிய படகுகள் பல விரைந்து வந்தன. முதல் படகின் அமரத்தில் நின்ற குடும்பர் குடிமூப்பன் கையில் மஞ்சள்நிற மலர்களை வைத்திருந்தான். இரு கைகளாலும் அதை வீசிக்காட்டினான். படகுகள் பெரிய மீன்கள்போல நீரலைகளில் ஏறித் துள்ளித் துள்ளி வந்தன. வரும்தோறும் குடும்பர் கூவிய வாழ்த்தொலிகள் உரத்தன. சேரன் மணல்முகப்பில் எழுந்தருளிய போது வாழ்த்தொலிகள் உச்சம் கொண்டன. படகுகள் நெருங்கியதும் குடும்பர்கள் நீரில் குதித்து இடைவரை நீரில் நடந்து மணலில் ஏறிச் சேரன் முன் பணிந்தனர். தொடர்ந்துவந்த தோணியில் சுரைக்குடுவைகளில் மலைத்தேனும் பழக்கள்ளும் நறுமணவேர்களும் இருந்தன. சேரன் முன் அவற்றைக் காணிக்கை செய்து அவர்கள் வணங்கினர். சேரன் எழுந்து அவர்களை நெஞ்சோடு தழுவிக்கொண்டான். தன் மார்பிலணிந்த முத்தாரத்தைக் குலமூப்பனுக்கு அணிவித்தான். குடும்பர் தங்கள் மூங்கில்கூர்த்த வேல்களை உயரத்தூக்கி ஆர்ப்பொலி எழுப்பினர்.

சேரனும் தேவியும் இளவலும் சுற்றமும் அமைச்சும் அகம்படியினரும் தனித்தனிச் சிறுதோணிகளில் ஏறிக்கொண்டனர். நீர்கொப்பளித்துக் குமிழியிட்டு வந்த பேரியாற்றின் பெருக்கை

எதிர்த்துச் சென்றன சிறுதோணிகள். தோணி முகப்பில் கட்டிய காட்டுக்கொடி முறுக்கிய கயிற்றைப் பற்றிய குடும்பர்குல வீரர்கள் கரையோர மரங்களில் குரங்குகள்போலத் தாவித்தாவிச் சென்று, கூவியபடி இழுத்துத் தோணிகளை மேலேற்றினர். கரையெங்கும் கூடிய குடும்பர்கள் முழவறைந்து கூவியபடி கூடவே ஓட தோணி களில் நின்ற குடும்பர்கள் துடுப்பால் தோணிகளின் திசை ஒழுங்கு செய்தனர். சிற்றருவி ஒன்று எதிர்ப்பட்டபோது தோணிகளை நிறுத்தி இழுத்து ஆற்றோர வேர்களில் கட்டிவிட்டு கரையேறிக் காட்டுப்பாறைகளில் கட்டப்பட்ட கொடியேணிகளில் கால்வைத்து ஏறி மேலே சென்று, கயிற்றால் தூக்கப்பட்ட தோணிகளில் மீண்டும் ஏறிப் பயணம் தொடர்ந்தனர். அன்று மாலை மஞ்சள் வெயில் பரவிய குமுடிப் பெரும்புனல் தேக்கத்தைச் சென்றடைந்தனர். மூங்கில்காடுகள் கரைவகுத்த பச்சைவான்விரிவெனக் கிடந்தது ஏரி.

நீரலைகள் நடுவே ஏரிக்குள் பெருமூங்கிற்கால்களை அடிச்சேற்றில் ஆழ ஊன்றி அவற்றின்மீது மஞ்சள் மூங்கில்பட்டை களால் கட்டப்பட்ட காட்டுக்குடிலுக்குத் தோணிகள் சென்று சேர்ந்தன. தோணிகள் மூங்கிலில் கட்டப்பட்டதும் சேரன் இறங்கி அந்த வேய்வீட்டுக்குள் நுழைந்தான். நாற்றிசையும் குறும்பர் குடி களில் இருந்து பெருமுழவுகள் சீரான தாளத்துடன் ஒலித்துச் சேரனுக்கு வாழ்த்துச்சொல்லின. வேய்வீட்டுக்குள் புலித்தோல் பரப்பப்பட்ட இருக்கையில் சேரன் அமர்ந்ததும் மூன்று குறும்பர் குடித் தலைவர்களும் தங்கள் குடிவழக்கப்படி அவனை வணங்கி வாழ்த்துச் சொன்னார்கள். அவனுக்கு இளமானின் ஊனும் மலைத் தினைமாவும் சேர்த்துச் சமைக்கப்பட்ட கோளப்பங்களையும் மலைப்பலாப்பழம் மாவுடன் புளித்த நுரையுடன் கொம்புத்தேன் சேர்த்து எடுத்த இன்கடுங்கள்ளையும் அளித்தனர். உணவுண்டு அம் மாடத்தில் இளைப்பாறிய சேரனும் சுற்றமும் மறுநாள் காலையில் மரம் குடைந்து குறும்பர் செய்த சிறுதோணிகளில் ஏறிப் பேரி யாற்றுப் பெருக்கில் சென்று மலைக்காற்று அலைபாய வைத்த மென்மழைச் சாரல்படாம்மீது செவ்வொளி நெளிந்த பொன்னிளம் மாலையில் குறுமலைச்சாரலில் அமைந்த உடும்பஞ்சோலையை அடைந்தனர்.

எட்டு மலையடுக்குகளால் சூழப்பட்ட சிறுசமவெளியில் பலாவும் வேங்கையும் ஆஞ்சிலும் ஓங்கி அடர்ந்த பசிய இருளுக்குள் குறிச்சியர் வாழ்ந்த ஏழு பாடிகள் அமைந்திருந்தன. சேரன் மலை யெழுந்தருளிய சேதி அறிந்து குறிச்சியர் குடிவாயில்கள் தோறும் புதுமலர்களும் தளிரிலைகளும் கட்டி அணிசெய்திருந்தனர். சந்தனக்

கட்டைகள் கொண்டுவந்து குடிமன்றில் தீமூட்டிப் புகையிட்டு நறுமணம் நிறைத்தனர். கழுகின் செவ்விளம்பாளை எடுத்துப் பின்னிய ஆடையை இடைகளில் அணிந்து அதன்மீது தெங்கின் குருத்துகளில் மலைமலர்கள் கோர்த்த பூவாடை கட்டி குனிமுத்தும் மஞ்சாடிச் செம்முத்தும் நாரில் கோர்த்த மாலைகள் அணிந்து குடுமியில் மலர்கள் சூடி குலமுறைப்படி இளையோர் முன்னும் மூத்தோர் பின்னும் நின்று அணிவகுத்துச் சேரனை வரவேற்றனர். மலைமுகடுகள் எதிரொலிக்கத் திமிலைகளும் இடைக்காய்களும் முழங்கிக்கொண்டிருந்தன. குறிச்சியர் எல்லைக்கு அப்பால் குறும்பர்கள் நின்றுவிட சேரனும் சுற்றமும் காரிப்புழை என்ற சிற்றாற்றைத் தாண்டிக் குறிச்சியர் எல்லைக்குள் சென்றனர்.

தங்கள் எல்லைக்குள் சேரன் கால் வைத்ததும் குறிச்சியர் களின் பிட்டன் தன் கைக்கோலைத் தூக்கி வாழ்த்தொலி எழுப் பினான். அவன் குலமக்கள் அனைவரும் கைகளை மேலே தூக்கிச் சேரன் குலம் வாழ வாழ்த்தினர். இடையில் முருக்கமரம் கடைந்து வண்ணம் தீட்டிய வட்டமான இடைக் கொய்தம் கட்டித் தலையில் ஓங்கிய கொதச்சமுடி அணிந்து காலில் காய்க்குடுவைக்குள் விதைப்பரல் போட்டுச் செய்த சிலம்பணிந்து தெய்யாடி கையிலேந் திய பள்ளிவாளுடன் உறைகொண்டு துள்ளி ஆடி முன்னால் வந்தான். மாமலையாளும் மலைக்காரி அன்னையின் அணையாப் பெருஞ்சுடலையில் அள்ளிய சாம்பலைச் சேரனின் நெற்றியில் அணிவித்து அருள் செய்தான். குறிச்சியர் குடில்கள் சூழ்ந்த சோலைக்குள் திசைநான்கும் பெருங்கைகள் விரித்து ஓங்கி நின்ற கடம்ப மரத்தடியில் கற்பீடம்மீது நடுகல்லாக நின்ற மலைக்காரி அன்னைக்கு அன்று திறையாடலும் பெருங்கலயமளிப்பும் நடக்கவிருந்தன. தேனும் தினையப்பமும் பலாச்களையும் உண்டு புற்பாயில் ஓய்வெடுத்தபின் தேவியுடன் சேரன் வந்து புலித்தோல் விரித்த முளையிருக்கையில் அமர்ந்ததும் கேளிப்பறை முழங்கியது. காடிருண்டு மலை மறையும்வரை ஒலித்த கேளிப்பறையுடன் பத்தாம் நிலவெழுந்த ஒளி காடுமீது பரவியதும் குடமணியும் குடுக்கும் சேர்ந்துகொண்டன. நிலவொளியில் இலைநுனி விளிம் புகள் வெளிதூழாவிச் சுடர காடு பலகோடிக் கண் பெற்றது. எல்லாக் கண்களிலும் காரியன்னையின் நோக்கு கூர்கொண்டது.

முதிய கோமரம் தன் உடலெங்கும் சாம்பல் பூசிக் கழுத்தில் செவ்வலரி மாலை சூடிக் காரியன்னைக்குச் செம்மலர்கள் கோர்த்துச் செய்த மலராடையை அணிவித்தான். செம்மலர்களும் செங்கழுகின் இறகும் சூட்டி அணிசெய்த பின்னர் அன்னைக்குக்

குழைத்த எண்ணைப்பிசின் கரியால் பெரிய விழிகளை வரைந்தான். பிட்டன் துணையுடன் குலமூத்தார் எழுவர் சென்று குடிநடுவே இருந்த பள்ளியறையில் பண்டைய மரச்செப்பில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த அன்னையின் செம்மணிக்கண்விழிகள் இரண்டையும் கொண்டுவந்தனர். முழவும் கொம்பும் ஆர்க்க குலவையொலிகள் சூழ அன்னைக்கு கண் பொருத்தப்பட்டது. பந்தங்களின் சுடராடும் அன்னையின் வெறியெழுந்த கண்கள் கூடியிருந்தவர்கள் ஒவ்வொருவரையும் உற்று நோக்கி விழித்தன. கோமரம் அன்னையின் இருபுறமும் நெய்ப்பந்தங்களை ஏற்றிய பின் திரும்பிப் பிட்டனையும் சேரனையும் வணங்க பெண்டிர் உரக்கச் சீர்க்குலவையிட்டனர். முதலில் குறிச்சியர் குலத்தின் ஒன்பது கன்னிகள் குளித்து ஈரம் வழியும் கரிய உடலில் தளிராடை அணிந்து தலைமீது வாழையிலை கொண்டு மூடிய சுரைக்கலயங்களை ஏந்தி நிரையாக வந்தனர். கலயங்கள் அன்னைமுன் படைக்கப்பட்டன. மூன்று கலயங்களில் நுரையெழுந்த முதுகள்ளும் மூன்று கலயங்களில் தினைமாவும் மூன்று கலயங்களில் உலரவைத்துத் தூளாக்கப்பட்ட உதிரத்துடன் தெச்சிமலர் சேர்த்துச் செய்த செந்தூரமும் இருந்தன.

கோமரம் செந்தூரத்தை அள்ளி அன்னையின்மீது பூசினான். இரு கைகளாலும் அதை அள்ளி அக்கன்னியர்மீது பூசியபோது அதன் கருமை செவ்வண்ணம் கொண்டது. முழவும் கொம்பும் குலவையும் இடைமுறியாது முழங்கிய ஒலியில் பெண்களின் கால்களில் ஆட்டமும் கண்களில் மயக்கமும் குடியேறின. அவர்கள் நோக்கு அன்னையின் வெறிக்கண்களிலேயே ஊன்றியிருந்தது. கோமரம் கன்னியர் ஒன்பதுபேரின் மலராடைகளையும் களைந்து வெறும் மேனியுடன் நிற்கச்செய்து அவர்கள் உடலெங்கும் செந்தூரத்தைப் பூசினான். கரிய மெல்லுடல்மீது பூத்த இளவியர்வையில் கரைந்து குருதிப்பெருக்கென அது வழிந்தது. அன்னைமுன் போடப்பட்ட ஒன்பது மரத்தட்டுகளில் கன்னியர் ஒன்பது பேரும் வலக்காலைத் தொங்கவிட்டு இடக்காலை மடித்துக் கால்வெண்மை வலத்தொடையில் அமையும்படி அமர்ந்தனர். அவர்களின் இளம் அல்குல்கள் நன்கு திறக்கும்படி அமைந்த கோலத்தில் விரிந்த கூந்தல் பின்பக்கம் சரிந்திழிய நிமிர்ந்த தலையும் விழித்த கண்களுமாக உடல் கொண்டுவந்த தொல்பாவைகளெனத் தோன்றினர். கோமரம் அன்னையின் செஞ்சாந்தை அள்ளி அவர்கள் அல்குல்மீது பூசி வணங்கி, அவர்களிடம் கமுகப்பூங்குலைகளையும் முந்நுதி கொண்ட சூலத்தையும் கொடுத்தான். இரு கரங்களிலும் பூச்சரமும் சூலமுமாக அவர்கள் எரிதழல் என முழவின் தாளத்துக்கு ஆடினர்.

கோமரம் கைகாட்டியதும் குறிச்சியர்குலப் பெண்டிர் நூற்றி யெட்டுக் குடங்களில் நுரைக்கும் கள்ளைக் கொண்டுவந்து பசுஞ் சாணி மெழுகிய மங்கல முற்றத்தில் பரப்பிவைத்தனர். ஒன்பது திண்ணகக் கடாக்கள் இழுத்துவரப்பட்டன. அன்னைமுன் நாட்டப் பட்ட பலிக்கல்லருகே வந்ததும் அவை மெல்லக் காலெடுத்து வைத்துக் கல்மீது கழுத்து நீட்டின. கோமரத்தின் நீண்டவாள் காற்றிலெழுந்து இறங்க தலை தெறித்த உடல் முன்னால் சரிந்து பலிபீடத்தில் வெங்குருதி கொப்பளித்துக் குமிழிகள் வெடிக்கக் குளம்புகளை உதைத்துச் சரிந்து துடித்தடங்கின. அவற்றின் உதிரத்தை மாவிலைக்கோடலால் தொட்டு அள்ளி அன்னைமீது தெறித்தான் கோமரம். கள்குடங்களிலிருந்து ஒவ்வொரு துளி அள்ளி அன்னைமீது தெளித்துப் படையலிட்டான். ஏழுவகைச் செம்மலர்களை அள்ளி அன்னைமீது முழுக்காட்டினான். பின்னர் அன்னையின் இருக்கைக்கல்லின் அருகேயிருந்து சிறிய பசுமரத் தண்டு ஒன்றை எடுத்தான். அதை அன்னைக்கு முன்னால் வைத்து மும்முறை மலரும்நீரும் காட்டிப் பூசைசெய்து எடுத்துச் சேரனிடம் தந்தான். சேரன் அதை வாங்கித் தன் தலையை மும்முறை வலம் சுற்றி திருப்பியளித்தான். பின் பிட்டன் அத்தண்டை தன் இடையை மும்முறை சுற்றித் திருப்பியளித்தான். மீண்டும் அக்கோல் அன்னைக்கு படைக்கப்பட்டது. பெருமுழவு பேரொலி எழுப்ப கொம்புகள் உச்சத்தில் அதிர கோமரம் அக்கோலை அரங்கிருந்த கள்ளியரின் அல்குல்கள்மீது மும்முறை தொட்டு எடுத்தான். அக்கோல் அன்னை முன் கங்கு சிவந்து புகைந்த தூபக்குழிக்குள் போடப்பட்டது. புகையெழுந்து சுடராகிச் சிவந்து எரிந்தது அது. குறிச்சியர் குலப்பெண்டிர் குலவையிட பிற கருவிகள் மெல்ல மெல்லத் தேய்ந்தழிந்தன. குரவை மட்டும் ஒலித்தடங்கியபோது பெண்டிர் ஒன்பதுபேரும் தங்கள் இருக்கைகளில் சரிந்து விழுந்து கிடந்தனர்.

'இய்யே' என்ற கூக்குரலுடன் கோமரம் சீறியெழுந்தான். கால்களை ஓங்கித்தூக்கி மண்ணிலறைந்து மரமணிச்சிலம்பு குலுங்கி அதிர்ந்தொலிக்க ஆடினான். அவன் அவிழ்ந்த கூந்தல் புயல்பட்ட தெங்கின் ஓலைகள்போலச் சுழன்று பறந்தது. செண்டைப்பறையும் செம்பறையும் அவன் ஆட்டத்துக்குத் தாளம் சேர்த்தன. களி வெறி யேறிக் காற்றில் எம்பி நிலத்தில் கால்பதித்து மீண்டும் எழுந்தான். வெண்கல மணியோசைபோன்ற இளம்பெண் குரலில் ''நான் கண்ணி. புகார்ப் பிறந்து புரமெரித்த கொற்றவை. தாருகன் தலை கொய்ந்த காளி! எனக்கு பலியிடுக! மலரும் மாவும் ஊனும் தேனும்

சேர்த்துப் பூசை செய்க! உங்கள் குலம் காக்க வந்தேன்! அறம் ஆளும் சேரமண் காக்க வந்தேன்'' என்று அருளுரை கூறினான். குறிச்சியர் பெண்கள் ''அன்னையே காரியே காத்தருள்க தாயே'' என்று கைகூப்பிக் குரலெழுப்பினர். பின் எரிந்த கண்களுடன் சீறிச் சினந்து சுழன்றபோது அவன் குரல் கானகப்புலியின் பகைகொண்ட உறுமல்போல் ஒலித்தது. ''பாலைகளை ஆளும் ஒற்றை முலைச்சி நான்! வெங்காற்றைக் கூந்தலாக அணிந்த பிடாரி! என் விடாய் தீர்க்க அரத்தம் கொடு! பச்சைப்பசும் குருதியால் என்னை முழுக்காட்டு! கானெருமைக் குருதியும் குறும்பாட்டுக் குருதியும் களம்நிறையும் மானுடக்குருதியும் அளித்தென்னைக் குளிரச்செய்!'' என்று ஆணை யிட்டான். பிட்டன் வெறியாடும் கோமரம் முன் வணங்கி ''ஆம் அவ்வாறே செய்கிறோம். அடங்கியருள்க அன்னையே. உன் மைந்தர் இன்னல் தீர்த்தருள்க'' என்று முறையிட்டான்.

பின் மெல்ல கோமரத்தின் ஆட்டத்தில் தாளமுறை மாறு பட்டது. கடலலை மீதுலையும் சிறுநெற்றுபோல அவன் துள்ளித் துள்ளிச் சுற்றிச் சுழன்றான். அவன் கண்கள் வெறித்து விழித்தன. உதடுகள் இழுபட்டு அங்கே அச்சமூட்டும் புன்னகையொன்று விரிந் தது. அவர்களறியாத் தொல்மொழி ஒன்றில் அவன் ஏதேதோ சொன் னான். அச்சொற்கள் தமிழ் போன்றிருந்தன. தமிழாக மலராமலும் இருந்தன. துயிலில் கேட்டு விழிக்கையில் மறந்த மொழி என அதை அனைவரும் உணர்ந்தனர். ஆடிச் சுழன்று காரியன்னைமுன் வந்து நின்ற கோமரம் கொடுங்கனவிலிருந்து விழித்தவன்போல அன் னையின் கண்களை நோக்கினான். இய்யே என்ற கூச்சலுடன் பாய்ந்து பலிக்கல்மீது உலராக் குருதியுடன் இருந்த பள்ளிவாளை எடுத்துத் தன் நெற்றியிலும் மார்பிலும் ஓங்கி ஓங்கி வெட்டினான். வெம்மை மணக்கும் செங்குருதி நிணத்துடன் சிதறித் தெறித்தது. ஆர்ப்பரித்தாடிச் சுழன்று விரைவழிந்த ஆரமெனத் தெறித்து அவன் விழுந்தான். கைகால்களை உதறியபடி மண்ணுடன் சேர்ந்து அரத்தம் குழைபடத் துடிதுடித்தான். குறிச்சியர் குல இளைஞர் சிலர் சென்று அவனைத் தூக்கினர்.

பூசனை முடிந்து சேரன் வணங்கி எழுந்தான். அவனும் தேவி யும் உறங்கப் புதிய குடில் கட்டப்பட்டிருந்தது. அவனைத் தொடர்கை யில் பிட்டன் கைகூப்பி மகிழ்வுடன் சொன்னான், சேரனின் வருகை யால் காரியன்னை களித்திருப்பதாக. ஊன், மலர், கள், கன்னி, கைச் சாத்து என ஐவகைப் படையல்களையும் அன்னை வாங்கியதனால் அவ்வாண்டு காடு தழைக்கும், நோய் நெருங்காது என.

குறிச்சியர்பாடிகளை விட்டுச் சேரன் செங்குட்டுவனும் பெருந்தேவி வேண்மாளும் சுற்றமும் படையினரும் காலையில் கிளம்பியபோது குலமூப்பன் வந்து மலைவேங்கையின் தோலைச் சேரனுக்குப் போர்த்தி வணங்கி வழியுரை வாழ்த்துச் சொல்லி விடை தந்தான். சேரன் நெல்லாற்றை மரப்பாலம் மீதேறித் தாண்டியதும் குறிச்சியர் குறுமுழவினை முழக்கிச் சேரனுக்கு விடைதந்தனர். ஆற்றுக்கு அப்பால் நின்ற எல்லையைத் தாண்டியதும் பணியர் குலத்தின் நான்கு பிரிவுகளைச் சேர்ந்த தலைவர்கள் கைகளில் வெண்ணிற மலர்களும் தெங்கின் குருத்தோலை பின்னிச் செய்த குடும்புவடிகளுமாக வந்து நின்று சேரன் குலத்துக்குத் தங்கள் வாழ்த்துகளைச் சொல்லி வரவேற்றனர். குலமூத்த கூட்டன் தன் முதிய கரங்களைத் தூக்கிச் சேரன் தலைமீது புல்லரிசி தூவி அருள் கொடுத்தபோது சுற்றிநின்ற பிற பணியமக்கள் குலவையிட்டு வாழ்த்தினர்.

பணியர் அகம்படி செய்யச் சேரனும் கூட்டரும் யானைமடை என்றழைக்கப்பட்ட சிறுவழியினூடாக மலையேறிச் சென்றனர். இருள் அடர்ந்த நீலக் காட்டுக்குள் இருந்து பல்லாயிரம் பறவைகள் சேர்ந்தொலித்த முழக்கம் எழுந்தது. வலப்பக்கம் பேரியாறு பாசி படர்ந்த பாறைகள் நடுவே வெண்நுரைப் பெருக்காக புன்னை வேங்கை மலர்களைச் சுழித்துப் பாறைவிளிம்புகளில் மலர்வரி விளிம்பு கட்டியபடி சென்றது. ஆற்று நீரின் ஒளி காட்டுமரங்களின் இலைகள்மீது தளதளத்து மண்ணில் இலைநிழல்களை நீர்நிழல் படலமென அசையச்செய்தது. நீர்ப்பறவைகள் சிறகடித்து படபடத்து எழுந்து தலைக்குமேல் ஓங்கிய மரக்கிளைகளில் ஒடுங்கியமர்ந்து கேவல் குரல் எழுப்பின. ஓயாத குரலுடன் கூடவே வந்த பேரி யாற்றுப் பெருக்கு மெல்ல வலுத்துப் பாறைகளில் யானைப் பிளிறல்கள் போல எதிரொலி எழுப்பிப் பெருகியபோது வெள்ளிச் சிதறல்களாக வெண்புகையாக அது அருவியென விழுவதை அவர்கள் கண்டனர். பல்லாயிரம் நீர்ப்பறவைகள் அங்கே பாறைகள்மீது

அமர்ந்து எழுந்து சிறகடித்து நீரில் உரசிப்பறந்து மீன் தேருவதைச் சேரன் நின்று நோக்கி மகிழ்ந்தான்.

அப்பகுதியில் பாறைகள் குத்தென எழுந்து தலைக்குமேலே மரங்களின் வேர்கள் பின்னியிருக்க ஓங்கியிருந்தன. வேர்களில் கொடிகளைப் பின்னிக்கட்டி எழுப்பிய நீளமான கொடியேணி பாறைகள்மீது தவழ்ந்தேறியது. பணியர் கைகொடுத்து உதவ அதன் வழியாக ஏறி மலைமீது எழுந்தனர். அங்கே காற்றின் விரைவும் குளிரும் மரங்களின் செறிவும் அமைதியும் கூடியிருப்பதைக் கண்டனர். தன் இடப்பக்கம் முடிமீது வெள்ளியருவிப்பட்டை வெயிலில் ஒளிரும் யானைக்கரும்பாறையொன்றைச் சூடி நின்ற குத்தென ஓங்கிய நெடுமலையை ஏறிட்டு நோக்கிய சேரன் அம்மலை யாது என்றான். பணியர் கூட்டன் வணங்கி அதுவே பணியர்களுக்குரிய நெடுங்குன்றம் என்றான். எட்டு பாறைப்படியேற்றுகளைத் தாண்டி அங்கே சென்றுதான் பணியர் குலத்தன்னை நல்லம்மையை வணங்கவேண்டும். சேரன் நின்று கைகூப்பி அன்னையை வணங்கினான். அவனைச் சூழ்ந்த பணியர்களும் கைகூப்பி அன்னையை வணங்கி வாழ்த்தொலி எழுப்பினர்.

மலைக்குகைகளில் புல் தடுப்பிட்டு இரவு தங்கி மீண்டும் மலையேறிச் சேரன் சென்றடைந்த நெடுங்குன்ற மலைச்சாரலில் மூங்கிலும் தெங்கோலையும் கொண்டு கட்டப்பட்ட பணியர்களின் குடும்புகெட்டுகள் வட்ட வடிவ ஊர்மன்றுக்குச் சுற்றும் அமைந்திருந்தன. இலைகளும் மலர்களுமாக அணிசெய்த குடில் முற்றங்களில் மரநாராலும் கமுகுப்பாளையாலும் ஆடையணிந்த பணியர்பெண்டிரும் இலையாடை அணிந்த குழந்தைகளும் கூடி நின்றனர். துடி கொட்டியும் சீனம் இசைத்தும் சேரனின் வருகைக்கு மகிழாவாடினர். அவர்கள் மன்றமர்ந்த கருங்காளி நல்லம்மைக்கு அன்று கூளிகெட்டும் பெருங்களியாட்டும் இருப்பதாக கூட்டன் சொன்னான். சேரனும் சுற்றமும் அம்மலைக்குடில்களில் தங்கிக் குளிர்நீர் சுனையில் நீராடிச் சுட்ட இன்கிழங்கைத் தேன் சேர்த்து உண்டு ஓய்வெடுத்தனர். பன்னிரண்டாம் ஒளிநிலவெழுந்தபோது பணியர் மன்றில் குடும்புகொட்டும் குடிக்கொட்டும் ஒலிக்கத் தொடங்கின.

மன்று கூடிய பணியர் நடுவே தளிராடை அணிந்து மலர்க் கோதை மார்பில் புரள பணியர் குலக்கன்னியர் கூட்டுச் சேர்ந்து கைகளை ஒருவரோடொருவர் இடை சேர்த்துப் பின்னி வட்டம் செய்து மெல்லச்சுழன்றுவந்து இன்குரல் குரவையிட்டு நல்லம்மை புகழ் பாடிக் குலவையிட்டுப் பணிச்சியாட்டம் ஆடினர். இடைக்

காயும் துடியும் கொட்டி இருவர் தாளம் கொடுக்க ஏழு முதியோர் மூங்கிலாலான சீனம் வாசித்து இசைசேர்த்தனர். கூட்டன் மூப்பன் எருக்குமலர் மாலையை மார்பில் அணிந்து சாம்பல் பூசிக் கள்ள ருந்திச் சிவந்த கண்களுடன் சடைப்பிடரியெனக் கொடிகள் பின்னி அடர்ந்து நின்ற கோங்குமரத்தடியில் உருளைக்கல் வடிவில் எழுந்தருளிய நல்லம்மைக் கருங்காளிக்குப் பூசனை செய்தான். கறுகம்பூ, விண்ணுகை, செறுளை, திருதாளி, முக்கூற்றி, நிலைப் பனை, பூவக்குறுந்தலை, உழிஞ்சை, கய்யுண்ணி, முயல்செவி என்னும் பத்து மங்கல மலர்களைப் பத்து மூங்கில் கூடைகளில் பரப்பிவைத்து அன்னைக்கு படைத்தான். தான்றி, நெல்லி, கடுக்காய் என்னும் மூன்று காய்களும் மா பலா வாழை என்னும் மூன்று பழங்களும் படைக்கப்பட்டன. இகனியின் தூவிலையும் பழுக்காயும் திரங்கமணிகளும் படையல் வைக்கப்பட்டன.

நிலவு வானில் எழுந்தபோது கொம்பூதிக் குலவையிட்டுப் பெருங்களியாட்டம் தொடங்கியது. மன்றருகே இருந்த காட்டுக்குள் இருந்து தெய்வ வேடமிட்ட களியாடிகள் ஒவ்வொருவராக வந்தனர். மலர் பின்னிய தெங்கின் குருத்தோலையால் இடை யாடையும் வெண்பூக்குலை கொண்ட கோரைப்புல்லால் விரி பிடரியும் முருக்கின் மரத்தில் செதுக்கிய கொந்தையும் அணிந்து சிரட்டை பதித்த முலைக்கனமும் கரி மூடிய முகத்தில் வெண் கோரைப்பற்களும் சிவந்துவிரிந்த கண்களுமாக மரச்சிலம்பொலிக்க ஆர்த்துக்கூவிப் பாய்ந்துவந்தன இரு கரிங்கூளிகள். அவை ஆடிச் சுழல தொடர்ந்து செந்நிற முகமும் பிடரியும் முடியும் கொண்ட நல்லப்பனும் கோலப்பனும் ஆடிவந்தனர். முகம் முழுக்க முத்துக் கள் அணிந்த மாரியும் பசுவின் கொம்பும் குளம்புகளும் உள்ள பிடாரியும் அலறி வந்து சுழன்றாடினர். நீண்டு மார்பிலும் தோளி லும் படர்ந்த கரியதாடி கொண்ட காளன்களும் யானைத் தந்தம் போன்ற பெரும் பற்கள் நடுவே தொங்கும் செந்நாக்கு மார்பின்மீது படிந்தாடிய மறுதாக்களும் வந்தனர்.

வலுத்து வலுத்துச் செவி நிறைத்து எண்ணம் நிறைத்த கொடுந் தாளத்தினூடாகத் தீக்கனவென எழுந்தெழுந்து வந்தன பலித் தெய்வங்கள். கரிய குள்ள உடலுடன் குட்டையான தலைமயிரும் சிப்பி கோர்த்துக் கட்டிய வெண்ணிறப் பற்களுமாகக் குளிகன். தோல்முலைகளை இரு கைகளிலும் எடுத்து வீசிச் சுழன்ற மாதியும், அரிமாப்பிடரியும் புலிநகங்களும் கொண்ட போதியும் வந்தனர். ஒரு கையில் முயலைக் குத்திச்செருகிய ஒங்கிய வேலும் மறு கையில் வாளும் புலித்தோல் ஆடையும் சடையும் சுடலைச்

சாம்பலுமாக வேட்டைக்கொருமகன் கோலம் கட்டி எழுந்து வந்தான். உடலெங்கும் வரிஎழுதிக் கைகளில் நகங்களும் தலையில் செவிகளும் கட்டி வாயில் கோரைப்பற்களும் இளிப்புமாக புலி வேடங்கள் ஆடிவந்தன. கண்டப்புலி, மாரப்புலி, காளப்புலி, மருதப் புலி, கண்ணப்புலி என ஐம்பெரும் புலிகளும் உகிர்விரித்துக் காற் சுவடு வைத்து ஆடினர்.

மணியோசையும் முழவோசையும் நடைமாற்றியபோது மைநீல மலைகளை ஆளும் ஏழு பிடாரிகள் ஆர்த்து அலறியபடி ஓடி வந்தனர். இருளில் இருந்து சிவந்த மலர்களால் ஆன ஆடையும் உயர்ந்த முடிக்கெட்டும் கோரைப்பற்களுமாக பீமி எழுந்துவந்தாள். கன்னங்கரிய உடலில் கரி பூசி வேடமிட்டுச் சிவந்த கண்களுடன் சேட்டை அவளைத் தொடர்ந்தாள். நெற்றியில் ஒற்றைப்பெருவிழி விழித்திருக்க சிலிர்த்த கோரைமுடியும் விரிந்த இடையாடையுமாக விண்ணி. ஓங்கிய நீள்முடியுடன் நான்குமுகம் நாற்புறமும் திரும்பி யிருக்கக் கௌமாரி. நீண்ட வாயில் கோரைப்பற்களுடன் பன்றிக் காரி. தோளில் செத்த செம்மறியாட்டை ஏந்தி மார்பில் தொங்கிய சிவந்த குடல்மாலைகளும் பிடரித்தலையுமாக உறுமியபடி வந்தாள் சாமுண்டி. உடலெங்கும் செவ்வரத்தம் வழியத் தொங்கும் நீள் நாவுடன் காட்டேரி. ஏழு பிடாரிகளும் கைகோர்த்து காற்சுவடு வைத்து ஆடியபடிச் சுற்றிவந்தனர். அவர்களின் கால் தாளத்துக்கு இடைக்காயும் செக்கட்டையும் ஒலிசேர்த்தன. நிலவின் ஒளிக்கதிர் கள் வழியாக இருண்டகாட்டின் அறியா ஆழங்களிலிருந்து மண்ணிலும் விண்ணிலும் வாழும் அத்தனை தெய்வங்களும் தங்கள் கொடும்பெருங்கோலங்களில் தோன்றியருளியதென உணர்ந்தான் சேரன்.

தாளங்கள் உச்சம் கண்ட கணமொன்றில், ஏழ்பெரும் பிடாரி கள் விலகி வழிவிட்டு கைகளைத் தூக்கி ஆர்ப்பரித்து வரவேற்கக் காட்டிருளைக் கிழித்துத் தோன்றியதென வந்தாள் நல்லம்மைக் கருங்காளி. ஒருகணம் அவளைக் கண்ட கண்கள் அச்சத்துடன் சரிந்து நிலம்நோக்கிப் பின் பணிந்து கைகூப்பி மீண்டும் நோக்கின. செங்கழுகின் இறகுகளால் பின்னியணிவிக்கப்பட்ட, தழல் எழுந்ததுபோல விரிந்த செம்பிடரிமீது வேய்மூங்கில் பின்னிச்செய்த மாபெரும் வட்டமுடி எழுந்துநின்றது. அதில் வரையப்பட்டிருந்த ஏழு கன்னிப்பிடாரிகளின் கண்களில் பதிக்கப்பட்டிருந்த செம்மணி களும் திறந்த வாய்களில் பதிந்த வெண்கற்களும் பந்த ஒளியில் சுடர்ந்தன. குருதிச்செந்நிறம் பூசிய முகத்தில் வரைந்தெடுத்த பெரும் கருவிழிகள் வெறித்தன. புலிநகங்களாலான பல்வரிசைகளுக்கு

இருபுறமும் காட்டுபன்றித் தேற்றையாலான கோரைப்பற்கள். தொங்கிய நாக்கு சுமுகின் இளம்பாளை. தோள்எடுப்பும் கைவளையும் யானைத்தந்தங்களும் இளமூங்கிலும் கடைந்துசெய்யப்பட்டவை. இடையில் செம்பட்டு உடுப்புமீது விரிந்த கரியபெரு மார்பில் சுரைக்குடுக்கை செதுக்கிப்பதித்த ஒற்றைப்பெருமுலை நின்றது. அம்முலைமீது தவழ்ந்தது பணியர் குடியில் இறந்த குழந்தைகளின் சிறுமண்டையோடுகள் கோர்த்த வெண்மாலை. ஒரு கையில் வாளும் மறு கையில் வெட்டியெடுத்த கன்றெருமைத் தலையுமாகக் கூவியார்ப்பரித்து வந்து நின்றாடினாள் கருங்காளி.

அன்னைமுன் ஓங்கிப் பரந்த கரிய உடலும் வளைந்து தோள் தொட்ட கொம்பும் பச்சை மின்னும் கண்களுமாக காரான் எருமையொன்று இட்டுவரப்பட்டது. கூட்டன் தன் குருதிவாளுடன் துடித்தாடிச் சுழன்றுவந்து அதன் வலக்கழுத்தின் உதிரக்குழாயை வெட்டினான். எருமை கீழே விழாமல் ஏழுபேர் பிடித்துக் கொண்டனர். சீறிக்கொப்பளித்த குருதியை கப்பரைகளில் மூவர் பிடித்தனர். அன்னைமுன் நின்று உறைந்தாடிய கூட்டன் மலரும் மாவும் நிணமும் சேர்த்த குருதிச்சோறு உருட்டி வாழையின் தூசனிலையில் ஏழு உருண்டைகளாக வைத்து அன்னைக்கு முத்தியச்சை செய்தான். செந்தூரமும் செங்குருதியும் கலந்து அவள் உடல்மீது அள்ளிவீசிச் சாந்துப் பூச்சு செய்தான். எருமையின் குருதி மூன்று கப்பரைகளில் நிறைந்து நுரைத்ததும் அதைச் சரியவிட்டனர். பணியர் குலமூப்பர்கள் ஆடிக்கூவி வந்து செங்குருதியை அள்ளி வெறியாடிச் சுழன்ற அன்னைமீதும் கூடி ஆடிய பிடாரிப் பற்றங்கள் மீதும் அள்ளி வீசினர். நிணவீச்சத்துடன் குருதி மழை அப்பகுதியை மூடியது. நாநீட்டிச் சுழன்ற தெய்வங்கள் காற்றில் தெறித்த குருதி கவர்ந்துண்டு களித்தன. வெறியாட்டம் மெல்லத் தாளம் மாறி விரைவிழந்து களியாட்டமாகியது. ஆடித்தொய்ந்து களைத்து ஒவ்வொரு தெய்வமாக மண்ணில் சரிந்துவிழுந்து மலையேறின. இறுதியில் விடாய் தணிந்து கருங்காளி நல்லம்மையும் மண்சேர்ந்து விண்மீண்டாள்.

தினைமாவில் தேனும் தெங்கின்பழத்துருவலும் சேர்த்து உருட்டி அதில் பலிஎருமையின் அரத்தம் துளி சேர்த்து அன்னையின் படையலுணவாக அனைவருக்கும் அளித்தனர். முதல் உருண்டையைச் சேரனுக்குக் கூட்டன் அளித்ததும் வெற்றிமுரசு முழங்கியது. பின்னர் குலமுறைப்படி படையல் உண்டனர். அன்னையை மீண்டும் கல்சேர்த்து முறைப்பூசனை செய்த பின் வணங்கிக் கொண்டிருந்தபோது சருகும் தூசியும் மரக்கிளை சுழலும் ஓலமுமாக ஒரு காற்று மறுக்கி மலையிறங்கி வந்து அவ்வழியாகப்

பெருகிச்சென்றது. கண்களை மண்படாது மூடி உடைகளை அள்ளிச்சேர்த்து கைகளால் மூக்கை மூடி மூச்சுக்குத் திணறி நின்ற அரைநாழிகைக்குப்பின் அவர்கள் மீண்டபோது பெருங்களியாட்டம் நடந்த மண்ணில் ஒரு கால்தடம்கூட எஞ்சியிருக்கவில்லை.

ஃ

யானையர் குடும்புகளைவிட்டுக் காலையில் கிளம்பிய சேரனும் சுற்றமும் அவர்கள் எல்லைக்குப்பின் குறும்பர் குலத்து வீரர்களால் மீண்டும் எதிரேற்கப்பட்டனர். அடர்காட்டு உயர் கோட்டின் சரிவில் மரங்களில் கட்டித் தொங்கவிடப்பட்ட கொடி வடங்களைப் பற்றியபடி ஏறினர். பெருந்தேவியும் சேடியரும் மூங்கில் மஞ்சல்களில் வடம்கட்டிக் குறும்பர்களால் மேலே தூக்கப் பட்டனர். மேலே செல்லச்செல்லக் குளிர் ஏறி மேனியில் சிலிர்ப்பு பரவியதை சேரன் அறிந்தான். காணிமலைமீது தங்கி இளைப்பாறு கையில் தன் காலடியில் கொண்டல் குவியல்கள் சிதறிப்பரவிக் கரைவதைக் கண்டான். காட்டில் மரநெரிவின் உள்ளிருந்து எழுந்த பறவைக்குரல்கள் வேறிட்டிருந்தன. மலைசரிந்து சென்ற தொலை வில் ஆழத்தில் பாறைகளை மோதி நுரைத்துச் சென்ற பேரியாறு வானிலிருந்து தவறிவிழுந்த சீனத்து வெண்பட்டு மேலாடையெனத் தோன்றியது. குறும்பர்கள் குறும்பாட்டு மயிரைப் பின்னிச் செய்த கரும்படப் போர்வைகளை அவர்களுக்கு அளித்தனர். போர்த்திய சில கணங்களுக்குள் குறும்பாடுகளின் அடிவயிற்று வெம்மை தங்கள் உடல்களைத் தழுவுவதை அவர்கள் கண்டனர்.

மேலும் மலையேறிக் கல்லாறு என்ற ஊரை அடைந்து அன்றிரவு அங்கே தங்கினர். தேன்குறுமர்களின் அவ்வூரின் நடுவே ஒன்பது அன்னையர் அமர்ந்த காவுத் தரை இருந்தது. அடர்ந்த மரக் கூட்டங்கள் நடுவே நிறுவப்பட்ட ஒன்பது கல்லிருக்கைகளில் நடுகற்கள்மீது வரையப்பட்ட கரிமுகங்களாக வாமை, சேட்டை முத்தி, பத்திரை, காளச்சி, முக்கண்ணி, மூலச்சி, கொற்றி, குறும்பைக் கன்னி என ஒன்பது அன்னையரும் பெரிய கண்கள் விழித்து ஒரு நாளும் பலிக்குருதி உலராத ஒன்பது பலிக்கற்களை நோக்கி ஈர நாக்கைத் தொங்கவிட்டு அமர்ந்திருந்தனர். கல்லாற்று அன்னை யரை கைதொழுது வணங்கி, தேன்குறுமர் ஒருக்கிய சிறுவிருந்தை அருந்திச் சேரனும் சுற்றமும் அங்கே தங்கினர். மறுநாள் காலையில் எழுந்து நீராடி உணவுண்டு நீள்நெடுவழிப் பயணத்தைத்

தொடங்கினர். மேலும் செல்லச்செல்லக் காடு ஒலிகளை இழந்து ஆழ்ந்த அமைதி கொள்வதைச் சேரன் கண்டான். காடுகளை ஆளும் முந்நூற்று முத்தியினர் என்னும் மலைத்தெய்வங்கள் உறங்கும் இடம் அது என்றான் மூத்த குறுமன். அங்கே புட்கள் அன்றி எவருமே ஒலி யெழுப்புவதில்லை. மலைத்தெய்வங்களின் உறக்குகாட்டைத் தாண்டி இரு சிற்றருவிக் கரைகளினூடாகச் சென்று ஊராளிக் குறுமர் வாழ்ந்த செங்கரையை அடைந்தபோது பதினான்காம் நிலவு வானில் தண்சுடரிட்டெழுந்து நின்றது.

ஊராளிக் குறுமர்களின் பாடிகள் சுழல்வட்டமாக அமைந் திருந்தன. பாதை கொங்குமலர்கள் குவிந்த அவர்களின் பாடிமுற் றங்கள் வழியாகச் சென்று குடிகாடு நடுவே நின்ற வேங்கைமரத்தின் அடியில் வட்டமாக மரப்பலகை பதித்துச் செய்த பலிமுற்றத்தில் முடிந்தது. பாடிமுகப்பில் ஊராளிக் குறுமர்களின் தலைக்குடியன் வந்து செங்கழுகின் இறகுகள் பொருத்திய செம்முடியைச் சேரனுக்கு அணிவித்து வாழ்த்தி வரவேற்றான். அப்போது குறுமர் பெண்டிர் தங்கள் பாடிமுற்றங்களில் நின்று தித்திகளை அடித்தும் சீனம் இசைத்தும் சேரனை வாழ்த்தினர். பலிமுற்றத்தில் மரப்பீடத்தில் சேரன் அமர்ந்ததும் குடிமூத்தார் வந்து அவனை வணங்கி அருகரிசி தூவி அவன் குலம் தழைக்க என அருள் சொல்லினர். அவன் காலடி யில் குடியில் பிறந்த, இடையில் ஏலசு கட்டும் வயதடையாத சிறு குழந்தைகளைக் கொண்டுவந்து போட்டு வணங்கினர். தன் இலச்சினை விரலணியால் சேரன் தேன் தொட்டு இளமென் நாவுகளில் வைத்து அருளளித்தான்.

வேங்கையடியில் கற்பீடங்களில் இரு அன்னையர் பதிட்டை செய்யப்பட்டிருந்தனர். இருவருமே ஒற்றை முலைச்சியர். ஓர் அன்னை கன்னங்கரிய நிறமுள்ளவளாய் விழித்த பெருவிழிகளுடன் திறந்த செவ்வாயுடன் வீற்றிருந்தாள். அவளுக்கு எலும்புகளும் மண்டையோடுகளும் கோர்த்த மாலை அணிவிக்கப்பட்டிருந்தது. செம்மலர்களால் அணி செய்யப்பட்ட அவள் முன் உதிரக்கருமை படர்ந்த பலிக்கல் காணப்பட்டது. அவளுக்கு வலப்பக்கம் இருந்த அன்னை வெண்ணிறமான உடலுடன் கண்களை மூடிக் கொலுக் கொண்டிருக்க அவளுக்கு வெண்மலர்கள் சூட்டப்பட்டிருந்தன. தெய்யாட்டுக்காரன் சேரனை வணங்கி அவர்கள் காரியும் கண்ணியும் என்று சொன்னான். காரி இரவுக்கும் இறப்புக்கும் நோய்க்கும் அழுகைக்கும் மண்ணுக்கும் காட்டுக்கும் தலைமை கொள்பவள். கண்ணி பகலுக்கும் பிறப்புக்கும் வாழ்வுக்கும் சிரிப் புக்கும் வானுக்கும் நீருக்கும் மேல் ஆட்சி செய்பவள்.

முற்றிருள்நாளில் காரிக்கும் முழுநிலவுநாளில் கண்ணிக்கும் பூ செய்வது வழக்கம் என்றான் தெய்யாட்டுக்காரன். கிழக்கே ஓங்கிய மலைநுனியைக் காட்டி அதுவே கண்ணியன்னை வாழும் செங் குன்றம் என்றான்.

சேரனின் அருகே அமர்ந்திருந்த சீத்தலைச் சாத்தன் ஆவலுடன் எழுந்து அந்த மலையை நோக்கினான். வெண்தலைப் பாகை கட்டிய கரிய முகம்போல மழை சூழ நின்றது செங்கோட்டு மலைமுடி. தன் இரு கைகளையும் மார்பில் சேர்த்துக் கூப்பிக் கண்ணீர் வாரச் சாத்தன் அதை வணங்கினான். முழுநிலவு அம் மலைமீது சென்றமர்கையில் காடு ஊழ்கத்தில் ஆழ்ந்து நிற்கையில் 'கண்ணியன்னையின் கால்மலர் பணிய வரும் விண்ணோர்களை விண்ணில் காணமுடியும் என்றான் தெய்யாடி. நாளை மேழ முழு நிலவுநாள். அந்நாளில்தான் மலைமுடியில் வாழ்ந்த ஒற்றைமுலைக் கன்னியாகிய கண்ணியன்னையை விண்ணவர் வந்து வணங்கி அவளே மலையில் வெயிலாகவும் மலர்களில் நிறமாகவும் நீரில் ஒளியாகவும் மலரும் பேரன்னை என்று மலைமக்களுக்குக் காட்டினர். அந்நாளை மலைமடிப்புகள் எங்கும் வாழும் அத்தனை குறும்பர் குலத்து மாந்தரும் வெண்நாளாகக் கொண்டாடுகின்றனர். தன் முன் வெண்மலர் சூடி ஊழ்கநிலையில் இருந்த கண்ணி யன்னையைச் சாத்தன் நீணேரம் வணங்கி நோக்கி நின்றான். அன்னையருக்குப் பலியும் பூசெய்கையும் முடிந்தபின் மன்னன் குடில் சேர்கையில் சாத்தனும் உடன் சென்றான்.

புலித்தோல் விரித்த மஞ்சத்தில் திண்ணகத்தின் மயிராடை யைப் போர்த்தியபடி அமர்ந்திருந்த சேரன்முன் தன் தலையைக் கைகளில் தாங்கி அமர்ந்திருந்தான் சீத்தலைச் சாத்தன். வஞ்சி மாநகர் விட்டு பேரியாற்று வழியாக நாடு காணலுக்கு இறங்கிய நாள்முதல் ஒருசொல்கூடப் பேசாது தன்னுள் தானே ஆழ்ந்து உறைந்திருந்த சாத்தனில் கூடிய அந்தப் பறதி சேரனை வியப்புறச் செய்தது. நெடுமூச்சுடன் சாத்தன் எழப்போனபோது சேரன் ''சேர மண்ணின் கிழக்கெல்லை செங்குன்றமே என்கின்றனர் நூலோர். இக்குன்று குறித்து நம் மூத்தோர் கூறுவது யாது?'' என்றான்.

மீண்டும் அமர்ந்த சாத்தன் ''தொல்கதைகளில் பேசப்படும் இக்குன்றின் ஒருபாதி பாண்டியனுக்கும் மறுபாதி சேரனுக்கும் உரியது. இக்குன்றிலேயே இவ்விரு முடிமன்னர்களின் தலைநகர் களுக்குச் செல்லும் நீரை வானம் பெய்கிறது. கிழக்குச்சரிவிலிருந்து சுருளியாற்று நீர் பெருகி வையையை நிரப்பி மதுரையை அடை கிறது. படிஞாயிற்றுப் புலத்து நீரே கல்லாறாக மாறிப் பேரியாற்றுப்

பெரும்பெருக்காகி வஞ்சியைச் சூழ்கிறது. இரு மன்னர்களுக்கும் பாலூட்டும் அன்னையின் கனிந்த முலை இக்குன்றம் என்பர். ஆகவே இம்மலைக்கு கன்னிமுலை என்றும் பெயர் சொல்வர். இம் மலை உச்சியில் பெருங்குகை ஒன்றுள்ளது. அதற்குள் நாமறியாத் தொல்காலத்தில் வாழ்ந்த மக்கள் வரைந்த தொல்பாவை ஓவியம் உள்ளது. அறியாத பண்டை மொழியில் எழுதப்பட்ட மந்தணச் சொற்கள் உள்ளன. அப்பாவையைக் கன்னிப்பாவை என்றும் தென்குமரி என்றும் வணங்குவர் மலைக்குடிகள். நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு ஒருமுறை பாண்டியனும் சேரனும் மலையேறிவந்து செங்குன்றத்துக் கன்னிக்குத் தங்கள் குலத்து மழவு ஒன்றைப் பலி தந்து வணங்கவேண்டும் என்ற நெறி இருந்தது. அந்நெறியைப் பல காலமாக இரு மன்னர்களும் மறந்துவிட்டனர்'' என்றார்.

''அக்கன்னி யார்?'' என்று சேரன் கேட்டான். மெல்ல நகைத்த சாத்தன் ''வேந்தே! இந்த நீர்சூழ் உலகின் அத்தனை அறிவோரும் ஒருங்கே கூடிப் பல்லாயிரம் வருடம் ஆய்ந்தாலும் அறிய வொண்ணாதது இவ்வினா என்றறிக. இந்த நாவலந்தீவெங்கும் மண்ணிலும் மலைகளிலும் எங்கும் கோடிகோடி அன்னையரும் கன்னியரும் பதிட்டை செய்யப்பட்டுப் பலிகொண்டு பூகொண்டு அருள்செய்து வருகின்றனர். அவர்கள் ஒரு விதையில் இருந்து முளைத்துப் பரந்த பெருங்காடு போன்றவர்கள். அக்கன்னி எவள் என்பதைச் சொல்லும் மொழியும் மரபும் ஏதும் நம்மிடம் இல்லை. நமது மலைகள்தோறும் உள்ள தொல்பாவைகளை யார் வரைந்தனர்? அங்குள்ள எழுத்துக்கள் எவர் எழுதியவை? நாம் மண்ணைத் தோண்டுகையில் எழுந்தெழுந்து வரும் தொல்பெருந் தாழிகளுக்குள் வெள்ளெலும்பாகத் துஞ்சும் மூதாதையர் எவர்? சன்னதம் கொண்டுவரும் வேலர்களின் வாயில் தெறித்து வரும் அந்த மொழி யாருடையது? யாரறிவார்? நாமறிந்தவை சிலவே. அவை சன்னதம் கொண்டவர்கள் வழியாக மீண்டும் மீண்டும் நம்மை வந்தடைகின்றன. பெயராக, திசையாக, குறியாக. அவள் தென்கடலாழத்தில் வாழும் பேரன்னை. கன்னி. காலமற்ற ஆழம் அவள். காலம் சுருண்டு அவள் காலடியில் ஒரு கரிய பாம்பெனத் துயில்கிறது. இறப்பவர்களெல்லாம் அவளிடமே சென்று சேர்கிறார்கள். அவள் வடிவாக நாமறிந்தது மலைப்பாறைமீது பதிந்த ஒற்றைக்கால் தடம். அதிலிருந்து பிறந்த நம் மொழியின் முதற்சொல். வெண்சங்குகளில் எழும் 'ஓ!' வெனும் கடலோசை. அவளை நாம் அவ்வொலியாக 'ஓம்' என்று வணங்குகிறோம். அத்தனை அன்னையரையும் கன்னியரையும் ஓமொலி வடிவினள் என்றே நாம் அறிகிறோம்.''

''நம் குடிநெறிகளை எல்லாம் தென்புலக் கன்னியே வகுத்தனள் என்பது மூத்தோர் கூற்று'' என்று சாத்தன் தொடர்ந்தான். ''நெறிகளை நிறுவவும் மீறப்படும்போது அழிக்கவும் பெண்டிரில் சன்னதம் கொண்டு கன்னி வருவாள் என்பது நம் குடியறிவு. இம்மலை மீதிருக்கும் கண்ணை அவ்வண்ணம் கன்னி வடிவாக எழுந்து ஒரு முலை குறைத்துத் திருநகர் எரித்தவள். அவளைத் திருமாபத்தினி என்றும் கலையமர் கொற்றவை என்றும் தென்நிலத்து மாந்தர் வழிபடுகிறார்கள். இச்செங்குன்ற மலைமீது அவள் இருந்தமையால் இங்குள்ளோர் அவளைக் கண்ணி என்று வெண்ணிற அன்னையாக வழிபடுகிறார்கள். காண்பதெல்லாம் அன்னையே என்றுணர்க. அன்னை நெறியையே உன் நெறியாகக் கொள்க. ஓம் அவ்வாறே ஆகுக!''

சாத்தன் சென்றபின் தன் எண்ணங்களில் ஆழ்ந்த சேரன் நீள் நேரம் மஞ்சத்தில் அமர்ந்திருந்தான். பின்னிரவில் எழுந்து மயிராடையைப் போர்த்தி வெளியே வந்து செங்கோட்டுக் கூர்முடியை நோக்கினான். நிலவு தன் தண்கதிர்க் கைகளால் தழுவிய மலைநுதி ஒளிர்ந்து வானைத் தொட எழுந்து நிற்பதைக் கண்டான்.

ᘓ

காடு நிழலாக மாறி வானம் வெளுத்து மேழ முழுநிலவு எழுந்ததும் ஊராளிக் குறும்பர் மன்றில் கேளிப்பெருமுழவு அதிர்ந்தது. ஓங்கிய வேங்கை மரத்தின்மீது ஏறியமர்ந்த கோல்காரன் உருட்டைக்கம்பால் தோற்பரப்பை அடித்தெழுப்பிய ஒலி மலைப் பாறைகளை அதிரச்செய்தது. மலைக்குகைகள் அவ்வொலியை உண்டு ஓமொலி எழுப்பின. மலைக்குகைகளிலும் காட்டுமாடங் களிலும் சிதறிவாழ்ந்த வேட்டுவர்களான முதுகுலத்து முள்ளுவக் குறும்பர்கள் தங்கள் குடிகளுக்கு மேலே எழுந்து கிணைப் பறைகளை அடித்து ஒலியெழுப்பினர். மலையெங்கும் பறைகளின் ஒலி நிறைந்தது. கமுகின் பாளையாலும் மரவுரிநாராலும் செய்த ஆடைகளில் வண்ண மலர்கள் பின்னி அணிந்து குழல்தூக்கிக் கட்டி அவற்றில் காட்டுமலர்கள் சூடிய முள்ளுவர்குலப் பெண்டிர் சூழ முள்ளுவர் ஊராளி மன்றுக்குத் தங்கள் முட்டன் தலைமையில் மலையிறங்கி வந்துசேர்ந்தனர். மலைச்சரிவிலிருந்து தங்கள் கூட்டன் தலைமையில் தேன்குறுமர் வந்தனர். அவர்களை ஊராளிக் குறுமர்குலப் பெண்கள் குடிவாயிலுக்குச் சென்று வரவேற்று மன்றமர்ந்த கண்ணியின் முன் கொண்டு சேர்த்தனர். சேரனும் சாத்தனும் வேண்மாளும் இளவரசர்களும் அமைச்சும் அகம்படியும் படையினரும் காட்டாற்றில் குளிர் நீராடி வெண்ணிற ஆடைகள் அணிந்து குடுமிகளில் வெண்மலர்கள் சூடி மன்றுகூடி நின்றனர்.

மூன்று குறும்பர்குடித் தலைவர்களும் கண்ணியன்னையை வணங்கி வாயுறை கூவியதும் தாலப்பொலிவிழா தொடங்கியது. குறுமர்குலக் கன்னியர் கையில் சுரைக்குடுக்கை வெட்டிய வட்டத் தாலங்களுடன் அணிவகுத்து நின்றனர். தாலத்தில் வறுத்த தினை மாவும் மூங்கிற்சிமிழில் மூடிய தேனும் வெண்மலர்களும் கரிய திரங்கலும் சுக்கும் அகிலும் சிறுமண் இடிஞ்சிலில் புன்னை எண்ணெயிட்ட பஞ்சுத்திரியும் இருந்தன. மூத்த அன்னை ஒருத்தி கண்ணியின் முன்னிருந்த கல்லகல் விளக்கின் சுடரில் இருந்து எண்ணைத்திரியொன்றைக் கொளுத்தி முதலில் நின்ற குறுமர்

குலத்து இளம்கன்னியின் கையிலிருந்த இடிஞ்சிலுக்குச் சுடரேற்றினாள். அவளிலிருந்து அடுத்தவள் சுடரேற்ற மெல்லமெல்லச் சுடர்நிரை கொடிமலர்கள்போல நீண்டுசென்றது. ஒளிரும் சுடர்மணியாலான ஆரமொன்றைச் செங்கரைக் குன்றம் அணிந்தது போலிருந்தது. மங்கலமணியும் சிறுமிழவும் ஒலிக்க சேரனும் சுற்றமும் தொடர அந்நிரை மலைப்பாதை வழியாகக் கண்ணி உறையும் செங்குன்றம் நோக்கிச் சென்றது.

மலைக்காட்டின் சரிவெங்கணும் தால விளக்குகளாலான ஆரங்கள் அசைந்து செல்வதைச் சேரன் கண்டான். செங்குன்றத்துக்குச் செல்லும் பாதையில் குறுகலான படிகளில் ஏறுகையில் கீழே காடெல்லாம் செவ்விண்மீன்கள் சிதறிப்பரந்து வயின்வயின் இமைப்பதைக் கண்டான். ஒரு கணம் 'இது என் மண்' என சேரன் உளம் விம்மிக் கண்ணீர் நனைவு கொண்டான். மலைமீது முரசு ஒலிக்க பல நூறு சாக்கைய இரவர்களின் சரணப் டே'ரொலி எழுந்து வான் தொட்டு மலையில் இறங்கியது. மலையின் இருபக்கமும் காட்டுக்குள் இருந்து கொன்றையும் வேங்கையும் பூத்துக் குலைத்து பூவுதிர்க்கும் நறுமணம் எழுந்து ஆடை மறுக்கிக்கலைத்த காற்றுமீது ஏறி வந்து தழுவிச்சென்றது.

மலைமீது ஓர் அரண்மனைச் சிறுமுற்றத்தளவுக்குப் பசும்புல் பரவிய சமதளம் இருந்தது. அலங்கைப்புதர் மண்டிய மலைவிளிம்பால் சூழப்பட்டிருந்தது அது. அதன் நடுவே நின்ற கரிய உருளைப் பாறைகள் இரண்டின் நடுவே வேங்கைப்பெருமரம் ஒன்று மலர்களால் கிளைதாழ்ந்து தேமல் பரவிய பெருமருப்புத் தாழ்த்திய முதுயானையென நின்றது. வேங்கைக்கிளையில் பூத்ததெனத் தெளிந்த கருவானில் ஒளிவிரித்து மிதந்து நின்றது முழுநிலவு. மரத்தடியில் நெய்விளக்குகள் செவ்விதழ் அசைந்த சுடரார்த்தின் கீழே அன்னையின் சிறு கருங்கற்சிலை பீடத்தில் கால் மடித்து அமர்ந்திருந்தது. அருகே தனிப் பீடத்தில் பெருந்தோழி.

புல்வெளியெங்கும் நிறைந்து இரவர் துவராடையும் மஞ்சளாடையும் அணிந்து மழித்த தலைகளின் பரப்பாக அமர்ந்திருந்தனர். சேரனும் சுற்றமும் வந்ததும் இரவர் ஒங்கிய குரலில் ''புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி!'' என்று சாக்கியப் பெரும்படிமனின் அறவிளியை எழுப்பினர். சாக்கியப் படிமை பூண்ட ஏழு முதுபடிவர் எழுந்துவந்து சேரனை வணங்கி அன்னையின் கால்களிலிருந்து எடுத்த வெண்மலரை அளித்து வரவேற்றனர். அவன் அமர்ந்ததும் இரவர் மீண்டும் ஊழ்கத்திலாழ்ந்தனர். அங்கே நிறைந்து கனத்திருந்த பேரமைதி மீண்டும் எழுந்தது.

தாலப்பொலி நிரைகள் மலையின் கீழடுக்குகளிலிருந்து ஏறிவந்தபடியே இருந்தன. அங்கிருந்து நோக்குகையில் கிழக்கே பாண்டியப் பெருவளநாட்டின் இருண்ட கொடுங்காடுகளில்கூடத் தாலப்பொலி நிரைகள் ஊர்ந்து வருவதைச் சேரன் கண்டான். தாலங்கள் அன்னையின் வலப்பக்கம் இறக்கப்பட்டு அன்னைக்குப் படைக்கப்பட்டன. தாலமேந்தி வந்த பெண்டிரும் குலமும் நிரையாகச் சென்று அன்னையின் கால்களில் பணிந்து இடப்புறம் மலையிறங்கினர். ஒளிரும் செவ்வாறு ஒன்று மலைமீதெழுந்து அன்னையைச் சுற்றிச் சுழன்று கீழிறங்குவதெனத் தோற்றம் தந்தது. தாலத்திலிருந்த மலரும் மாவும் அன்னைக்குப் படைக்கப்பட்டு வந்தவர்களுக்கு அன்னையின் அருளுணவாகத் திருப்பியளிக்கப் பட்டன. சேரன் தன் விழிகள் பழகியதும் பீடத்திலமர்ந்த அன்னை யின் சிலையையே நோக்கினான். நீண்டு உயர்ந்த சுடர்முடி வடித்த குழைக்காதுகளில் மங்கல மலர்க்குழைகள். வலக்கையில் தூக்கிய மலர்ந்த தாமரை. இடக்கை தொடைமீது சிலம்புடன் இருந்தது. வலக்கால் சிலம்புடன் தொங்கி நிற்க இடக்கால் தொடைதொட மடிந்து சிலம்பின்றி இருந்தது. ஒருமுலை குறைந்த திருமார்பில் மணியாரம் துவண்டுகிடந்தது. தாலப்பொலியில் வந்த வெண்மலர் களும் தினையும் தேனும் திருமாபத்தினிக்குப் படைக்கப்பட்டன. திரங்கலும் சுக்கும் அகிலும் சேர்த்த நறுமணக்கலவை முழுக் காட்டப்பட்டு ஓரத்தில் குவிக்கப்பட்டது.

நிலா கீழ்வான் சேர்ந்தபோது தாலப்பொலி நிரைகள் ஒய்ந்தன. முதுபடிவர் கைகூப்பிச் சரணவிளி எழுப்பியதும் ஊழ்கம் முடித்து இரவர் சரணம் ஒலித்தனர். வரிசையாக எழுந்துசென்று தங்கள் கைகளில் இருந்த வெண்தாமரை மொட்டுகளைத் திருமா பத்தினியின் கால்களில் வைத்து வணங்கி விலகினர். ஒவ்வொரு கூட்டமாக இரவர் மலையிறங்கி நடந்தனர். அவர்கள் கொளுத்திக் கொண்ட வழிப்பந்தங்கள் எரிமலர் எனச் செவ்விதழ் நெளித்து அசைய மலையிறங்கிச் சென்றனர். சேரன் மலைச்சரிவெங்கும் குடி திரும்பும் கூட்டங்களின் சுடர்கள் அலைவதைக் கண்டான்.

பின்பு மலைமீது சேரனின் சுற்றமும் குறும்பர் குடித்தலைவர் களும் ஏழு சாக்கியப் படிவர்களும் மட்டும் எஞ்சினர். எண்ணெய் மணமும் மிளகும் இஞ்சியும் அகிலும் கலந்த முழுக்காட்டு மணமும் மெல்லிய வெண்தாமரை மணமும் சுற்றிநின்ற அறச்சோலை யிலிருந்து காற்றில் வந்த அலங்கைத்துழாய் மணமும் சேரனை விண்ணுக்கு நெருக்கமாக உணரச் செய்தன. இளம்புல்மீது கோரைப்பாய் விரித்துச் சாத்தனும் வேண்மாளும் இருபுறமும்

இருக்கச் சேரன் அமர்ந்தான். முன்பக்கம் சாக்கியப் படிவர் அமர்ந்தனர். தேனும் தினையும் மிளகும் கலந்த படையல் உணவைச் சேரன் உண்டான். ''ஐயன்மீர், இந்தத் திருமாபத்தினியின் கதையையும் புகழையும் நான் அறிவேன். இவள் சாக்கைய நெறி சேர்ந்து தெய்வமானது எங்ஙனம் என்று சொல்வீராக'' என்றான்.

மூத்த படிவர் கைகூப்பி அன்னையை வணங்கினார். ''மன்னா! கேள். மண்ணில் பிறக்கும் எந்த மனிதனுக்கும் அறிவன் ஆகும் வல்லமை உள்ளது, எந்த விதையிலும் மரம் உறங்குவது போல எந்தப் பொருளிலும் எரி உறைவதுபோல என்றுணர்க. அறிவே அறிவதெல்லாம் என்றறிந்து அறிவே அவராய் அமர்ந்திருப்பவரே அறிவர். சாக்கிய முதற் படிவர் கௌதமர் அவர்களுள் ஒருவர். அவருக்கு முன்னும் பின்னும் எண்ணற்ற அறிவர்கள் உள்ளனர். சாக்கியப் புத்தர் தான் அறிவராகி அமர்ந்த பாதையைப் பிறர் அறியும்படிச் சொன்னார் என்பதனாலேயே அவர் அறியப் படலானார். அவரை அறிவர் சிலையாக்கி நாம் வழிபடுகிறோம்.''

படிவர் தொடர்ந்தார். ''இத்திருமாபத்தினி புகாரில் பிறந்ததும் தன் அழியாத் தவ வல்லமையால் அறத்தின் பொருட்டு மதுரையை எரித்ததும் நீ அறிவாய். மாந்தர்க்கு மெய்ம்மை மூன்று படிகளாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. தற்சார்ந்தும், தன் உதிரம் தன் குலம் சார்ந்தும் உருவாகும் பேரன்பென்பது மெய்ம்மையின் முதல் முகமே. தன் குழந்தைகளுக்காக உயிர்விடும் அன்னையும் தன் கொழுநனுக்காக வாழும் கற்பரசியும் தன் குல வெற்றிக்காகக் களத்தில் படும் வீரனும் மெய்யறத்தின் பெருமுகம் கண்டவர்களே. அடுத்தபடியில் தன் குமுகத்திற்காகவும் மாந்தக் குலத்திற்காகவும் அறச்சீற்றம் கொண்டெழுவோர் அறவாழியின் அழியா நெறியறிந்தவர்கள் என நாங்கள் வணங்குகிறோம். ஆனால் இவ்விரு படிகளிலும் ஏறி வெறுமையின் பீடத்திலமர்ந்து இப்புடவியெங்கும் புல்லிலும் புழுவிலும் கல்லிலும் காற்றிலும் நிறைந்திருக்கும் முற்றறத்தின் பெருங்கருணையைக் கண்டவர்களே அறிவர்கள் எனப்படுபவர். முத்திறத்தாரையும் சாக்கைய நெறி வணங்கும். முதல்படியினர் கையில் முகிழ்த்தாமரை இருக்கும். இரண்டாம் படியினர் கையில் ஒரிதழ் விரித்த தாமரை. மூன்றாம்படியினர் கையிலேயே முற்றிலும் விரிந்த மலர்.

கேள் சேரனே, இப்பத்தினி சோழனின் புகாரில் பேரறத்தின் முதற்பெற்றியை அறிந்தாள். பாண்டியனின் மாமதுரை நகரில் இரண்டாம் பெற்றியைத் தொட்டாள். உனது மண்ணில் இச் செங்குன்ற உச்சியில் அவள் அறமேயாகி அமர்ந்து அறிவமர்

செல்வியானாள். வெண்தாமரை மலரேந்திய மங்கலக் கோலத்தில் அவளை நிறுவி நாங்கள் வழிபடுகிறோம். இவளை மங்கலமடந்தை என்று தொழுகின்றனர் இம்மலைமக்கள். அறிவமர்செல்வியை சாக்கையமொழியில் பிஞ்ஞாதாரா என்கிறோம். வடமொழியில் 'பிரக்ஞாதாரா தேவி' என்று. அறிவிலமர்ந்த அக்கணமே அவள் மாந்தப்பிறவி அல்லவென்று ஆகிவிட்டாள். அறிவே அவளாக ஆகியமையால் அவளே அண்டங்களை ஆளும் பேரறம். அவள் ஆகமே அறவுடல் தோற்றம். அவள் புகழ் வாழ்க!

அறப்படிமர் கைகூப்பி 'அவ்வண்ணமே ஆகுக' என்று கூவி சரண விளியெழுப்பினர்.

ᘓ

ஏழு முழுநிலவில் இரவெலாம் ஊழ்கத்தில் அமர்ந்து அறிவனருள் தேடுதல் இரவர்களின் நெறியென்பதனால் இரவர் ஒவ்வொருவராகத் தங்கள் இடங்களுக்கு மீண்டனர். அறிவமர் செல்வியின் முன் ஊழ்கத்திலாழ்ந்த இரவர் எழுவர் மட்டுமே எஞ்சினர். படைத்தலைவனிடம் அன்று அம்மலையின் உச்சியின் அறிவமர்செல்வியின் அடிகளில் அமர விரும்புவதாகச் சேரன் சொல்லிவிட்டதனால் பெருந்தேவி வேண்மாளும் இளவல்களும் பிறரும் படிகளில் இறங்கி மலைச்சரிவில் அமைக்கப்பட்ட பாடிவீடு களில் அமைந்தனர். மலைமீது சாத்தனும் சேரனும் புல்வெளியில் துளசிச்செடிகளைப் பறித்து வந்து பரப்பிப் படுத்துக்கொண்டனர். சேரன் பெருமூச்சுகள் விட்டபடி மேலே தெளிந்த விரிவானை நிரப்பிய முழுநிலவையே நோக்கிக் கிடந்தான். மலைக்காட்டின் பனியில் செந்தாமரை நிறத்துடன் ஒளிமலர்ந்து தன்னுள் தான் ஆழ்ந்து நின்றிருந்தது அது.

''வானுலகும் வியனுலகும் அடங்க இப்புடவியை ஆளும் ஒருவரின் வெண்கொற்றக்குடை அது'' என்றான் சேரன். ''இவ் வுலகில் சென்றவரும் வாழ்பவரும் வருபவருமாகிய எவரது குடையும் அதற்கு எவ்வகையிலும் நிகரல்ல. ஒருபோதும் வெம்மை யறியாதது. மலருக்கும் நீருக்கும் சருகுக்கும் சேறுக்கும் மேல் நிகராக நின்றிருப்பது...''

புன்னகையுடன் சாத்தன் ஒருக்களித்தான். ''கேள் வேந்தே, இப்புடவியையும் இதன்மீது படர்ந்த பிற புடவிகள் அனைத்தையும் ஆள்வது ஒன்றே. எறும்புகளுக்கு அணிவகுக்கக் கற்றுத்தந்தது அது. வலசைப்பறவைகளுக்கு வழியாவது. விண்கோள்களுக்கு நெறி வகுப்பது. ஒளியையும் இருளையும் பிரிப்பது. அழியாதது. அதை நாம் அதன் மாறா நெறிகளாக மட்டுமே உணர முடியும். ஒவ்வொரு கணமும் அந்நெறிகளை நாம் அறிந்துகொண்டே இருக்கிறோம். அந்நெறியை உண்டு அந்நெறியை உயிர்த்து அதில் வாழ்கிறோம். மீனுக்குக் கடல்போல நம் உள்ளும் புறமும் ஆகி நிறைந்திருக்கும்

அதை தம்மம் என்கின்றனர் சாக்கையர். செஞ்செயல்மொழியில் தர்மம். தொல்மொழியில் அறம். புடவிகளில் நிகழும் அத்தனை அசைவுகளையும் தன்னுள் இணைத்துச் சுழலும் பெரும் ஆழியென அறத்தை உருவகித்துள்ளனர். அறவாழி வானிலுயரும் நாட்சுடர். கீழே கோடிக்கோடி மன்னர்கள் உருட்டும் அரசாழிகள் அனைத்தும் அதன் பனித்துளிப் படிமங்கள்.''

''இப்பத்தினியின் முன் என் தலை வணங்குகிறது சாத்தரே. என் மணிமுடி எனக்குச் சிறார் ஆடும் களிப்பாவையெனத் தோன்று கிறது. அனைத்தையும் உதறிவிட்டு அழியாத நெறி ஒன்றைப்பற்றி முன்செல்ல வேண்டும் என என் நெஞ்சு விம்முகிறது...''

சாத்தன் புன்னகையுடன் சொன்னான். ''மூவகை வழிகளால் ஆடவர் முழுமை எய்தலாமென நூலோர் கூறுவர். செருக்களத்தில் படலும் செம்பேரறிவைச் சென்று தொடலும் செல்வம் ஈதென் றறிந்து விடலும் அவ்வழிகள். அவ்வண்ணம் விட்டகன்றவரே அறிவ ராகி அமர்ந்திருக்கிறார்கள். விடுதல் குறித்து எண்ணாதவர் குறைவு. விட்டவரோ அதைவிடக் குறைவு. அறிவுக்கு இறைவனாகிய அறிவனின் அருள் தேவை அதற்கு. உன் குலத்து இளவலுக்கு மட்டுமே அறிவனின் ஆணை இருந்தது.''

சேரன் நெடுமூச்சுடன் ''ஆம்!'' என்றான். ''என் தந்தையின் உதிரத்தில் பிறந்தவரல்ல அவர் என்றபோதும் என் நெஞ்சின் பாதி அவருக்கு உள்ளது சாத்தரே. காட்டிலும் மலைகளிலும் நூல்களிலும் நெறிகளிலும் அவர் அலையும் தொலைவையெல்லாம் என் அகமும் அலைகிறது...'' அங்கிருந்து மிக அருகே வஞ்சியின் நெடும்பாதை கிழக்கு நோக்கிச் செல்லும் வழியில் குணவாய்நல்லூரில் அரசு துறந்து அமர்ந்த சேரர் குல இளங்கோவை அவர்கள் இருவரும் அக் கணம் எண்ணிக்கொண்டனர்.

பின்பனி அடர்ந்து அப்படுகையை மூடியது. நாற்புறமும் திறந்த வான்வெளியை வெண்திரை தழுவ, அதன் படலத்துக்கு அப் பால் செந்நிலா தானும் ஊழ்கத்திலாழ்ந்து நடந்தது. சாத்தன் துளசிப் படுக்கையில் தூங்கிவிட்டான் என்பதைச் சேரன் அறிந்தான். நிலவை நோக்கி இருந்த அவன் உள்ளத்தின்மீதும் வெண்பனி படிந்து குளிர்ந்து செறிந்து மூடியது. அப்பால் எங்கோ மணியோசை ஒன்று ஒலிக்கக் கேட்டான். திரை கிழிபட்டு விலக அவன் திடுக்கிட்டு எழுந் தான். அம்மலையுச்சியில் வெண்ணொளி பொங்கி நிறைந்து நிற்கக் கண்டான். அங்கே அவனன்றி எவருமே இருக்கவில்லை. கால் மண்ணில் பதிகிறதா என்றறியாமல் நடந்து கண்ணகியின் சிலை நோக்கிச் சென்றான். அச்சிலைமீது மட்டும் வெண்மழை

இறங்கியதுபோல மறைத்தது. கண்கூரக் கூர மறைப்பு மேலும் திணிவு கொண்டது. அருகே சென்று கைகளை மார்பில் சேர்த்துக் கூப்பியபடி கால்மடங்கி அமர்ந்து ஏறிட்டு நோக்கினான். இன்னொரு மணியோசை எழக் கேட்டான். ஒளிரும் வெண்மணிச் சுடர்களால் சூழப்பட்ட பேராலயத்துக் கருவறை ஒன்றுக்குள் நின்ற கண்ணகியின் கரிய சிலையைக் கண்டான். பொங்கிய நெஞ்சத்தின் பூசல் தாளாது உடல் நடுங்கத் தொண்டை அடைக்க ''அம்மா!'' என்றான். கரிய இதழ்கள் விரியக் கனிவுடன் அவனை நோக்கிக் கண்ணகி புன்னகை செய்தாள்.

ஃ

சேரர் பெருநகர் வஞ்சிக்குத் தெற்கே பம்பையாற்றுக்கும் அச்சனாற்றுக்கும் நடுவே இருந்தது பந்தர்களம் என்னும் குறுநிலம். சேரனுக்குத் திறை தந்து அதை ஆண்டுவந்த மன்னர்கள் பாண்டியர் குலத்துக்கு உதிரமுறை உறவுள்ளவர்கள் என்று பழமுறைகள் சொல்லின. மன்னனுக்கு மகன் பிறக்காமல் வஞ்சிக்கு இளங்கோ இல்லாமலாகும்போது மகவு எடுத்து இருத்தக் குலமுறை வகுத்துக்கூறிய உதிரப் பெருமை கொண்ட நான்கு மன்னர் குடிகளுள் ஒன்று அது. பந்தளத்து மன்னன் கோதை மார்பன் நெடுங்காட்டில் வேட்டையாடச் சென்றபோது பம்பை நதிக் கரையில் பாறையொன்றின்மீது கிடந்தழுத அழகிய குழந்தை யொன்றைக் கண்டு எடுத்து வளர்த்தான். ஏழுவகை முடியிலக் கணங்களும் கொண்ட அக்குழந்தை மன்னர் குலத்துப் பிறந்ததே என்றும், கிழக்குத் திசை நோக்கிச் சென்ற பயணியர் எவராலோ கைவிடப்பட்ட அதைக் காட்டில் அரவணிந்த அப்பனின் ஆணைப் படி ஐயையே வந்தமர்ந்து முலையூட்டி அரவணைத்துப் பந்தளத்து மன்னனின் புரவியொலி கேட்டதும் அவனுக்களித்து விலகினள் என்றும் பெருங்கணியர் சோழிகள் பரப்பிக் களம் கணித்துச் சொன் னார். பந்தள மன்னனின் மகனாக முத்தமிழும் முதுநூல்களும் கற்று அது வளர்ந்தது. ஐயைக்கும் அப்பனுக்கும் மகனானவன் என்ப தனால் ஐயப்பன் என்று அதற்கு பந்தள மன்னன் பெயரிட்டான்.

வஞ்சிப்பெருநகர் ஆண்ட சேரமான் பெருமான் இமைய வரம்பன் நெடுஞ்சேரலாதன் பந்தளத்துக்கு வந்தபோது ஐயப் பனைக் கண்டு அவன் அறிவையும் அழகையும் வியந்து தன்னுடன் அழைத்துத் தன் மகனாக்கி வஞ்சியிலேயே அமரச் செய்தான். செங்குட்டுவனுக்குத் தம்பியாக கேரளதேவிக்கு மகனாக நான்மறையும் அறுசமயமும் முழுமுந்நெறியும் கற்று அங்கிருந்தான் ஐயப்பன்.

ஒருமுறை இரு இளவல்களும் கிழக்குக்காட்டில் புலி வேட்டைக்குச் சென்றபோது அடர்பசுங்காட்டு நடுவே கரும்பாறை

மீது எழுந்து நின்ற எட்டடிப் பெருவேங்கையை நோக்கி செங்குட்டுவன் வில் வளைத்து ஆவம் தொடுக்க முற்பட்டபோது ஐயப்பன் தன் கரங்களால் வில்லைப் பற்றி அவனைத் தடுத்தான். அவ்வேங்கைக்குள் புகுந்து தன் முன் எழுந்தருளியது ஓங்கிய மலையடுக்கங்களில் பேரமைதியாகவும் கோள்கொண்டெழும் ஆழியில் பேரோசையாகவும் தீயில் வெம்மையாகவும் பனித் துளியில் குளுமையாகவும் தன்னைக் காட்டும் ஒன்றே என்றறிந்து மெய்சிலிர்த்து நின்றான் இளவல். தானணிந்த கோடுகளுக்குள் மெல்ல அசைந்தபடி முன்னகர்ந்து பருத்த தலைதூக்கி அச்சமற்ற சிப்பிக்கண்களால் நோக்கிச் செக்கச்சிவந்த வாய்க்குள் கோரைப் பற்கள் வெறிக்க உறுமிய அதன் முன் தன்னை மறந்து நின்றான். வேங்கை பாய்ந்து மறுபுறம்சென்றதும் அவன்மீது அழுக்காறு கொண்டிருந்த படைத்தலைவன் எள்ளலுடன் ஐயப்பன் தன் அச்சத்தையே அங்ஙனம் வெளிப்படுத்தினான் என்றான். அவன் உதிரத்தில் அரசர்குலம் இருக்குமென்றால் ஒருபோதும் அத்தகைய வழிகளை அவன் மேற்கொள்ளமாட்டான் என்றான் படைத்தலைவனுக்குத் துணையாக அமைச்சன் ஒருவன்.

சீறிச் சினந்து அவர்களை நோக்கித் தன் வாளை ஓங்கிய தமையனைத் தடுத்து, அஞ்சிப் பதறித் தொடரமுயன்ற படையினரை நிறுத்தி, வெறும் கையுடன் காட்டுக்குள் சென்றான் ஐயப்பன். புதர்களை விலக்கி வேங்கையின் உகிர்த்தடம் தேர்ந்து கொடுங் காட்டுக்குள் சென்று மலைக்குகைக்குள் ஊன் நாற்றமெழும் பூழி மண்ணில் தன் குட்டிகள் நடுவே கிடந்த வேங்கையைக் கண்டான். இரு கைகளையும் விரித்து அன்பு நிறைந்த கண்களுடன் ஒளிரும் நகையுடன் அதை நோக்கிச் சென்றான். வெருண்டு எழுந்த வேங்கை உறுமியபடி பின்வாங்கி உடல் குறுக்கிப் பதுங்கியது. இளஞ்சேரன் அருகே செல்ல எழுந்து கூர் மூக்கு நீட்டி மணம் கொண்ட குருளைகள் மகிழ்ந்து குற்றொலி எழுப்பிப் பாய்ந்து அவனை நோக்கி ஓடி வந்து அவன் கால்களைப் பற்றி ஏற முயன்றன. உடல் முறுக்குத் தளர்த்தி வேங்கை அவனைக் கூர்ந்து நோக்கியது. உறுமல் ஒலி யெழுப்பி அவன் யார் என்று கேட்டது. பின்பு மெல்ல முன்வந்து தன் குருளைகளுடன் தானும் சேர்ந்து அவனிடம் விளையாட முற்பட்டது.

வேங்கையின்மீது ஏறித் தன் கூட்டத்தாரிடம் மீண்ட ஐயப்பனின் புகழ் வஞ்சி நாடெங்கும் பரவியது. மண்ணில் உள்ள அனைத்து உயிர்களும் அவனையே தலைவனாக ஏற்கின்றன என்று ஊரெங்கும் சொல் நிறைந்தது. அவனைக் காணவும் அவன்

இன்சொல் கேட்கவும் குலங்கள் திருமுன் காட்சிகளுடன் வந்து சேர்ந்தன. வாளும் தோளும் வெல்ல முடியாத படைகளையெல்லாம் அவன் தன் சொல்லால் வெல்வான் என்று அவை நிமித்திகர் கண்டனர். சேரர் தென்எல்லையில் மலைக்காடுகளுள் பதுங்கி வணிகர்களையும் இடையர்களையும் கொன்று கொள்ளையிட்டு வந்த எருமைக்குலம் ஒன்றை வெல்ல அவனை அனுப்பினான் சேரமான். எருமி என்னும் குலமூதன்னையின் தலைமையில் போரிடும் அவர்கள், படைகள் வந்தால் ஆழ்கானகத்திற்குள் இறங்கி மறைவதும் படைகள் திரும்பியதும் புத்தெழுச்சியுடன் மீள்வதும் வழக்கம். துணையின்றி எருமைநாடு வந்த அய்யப்பன் தனியாகக் காட்டுக்குள் சென்று எருமியன்னையைக் கண்டான். அவன் இன்சொல் கேட்டுப் பணிந்த அன்னையை வென்று சேரன் குலக்கொடியை அவள் நாட்டு உச்சிப்பாறைமீது ஏற்றி மீண்டான்.

பின்பொரு நாள் கொல்லம் துறைநகரைச் சோனகத்து கப்பற் படையொன்று தாக்க வந்தது. சோனகக்கப்பல்களைக் கண்டு அஞ்சிச் சேரர் கலங்கள் வஞ்சிக்கு ஓடிவந்தன. சேரமான் ஆணை கொண்டு இளவல் தனியொருவனாகச் சிறுதிமில் ஏறி சோனகக் கப்பலுக்குச் சென்றான். அங்கே தண்டேந்திவந்த படைத்தலைவன் வாவரைக் கண்டான். தன் முன் வந்து நின்ற இளவலின் ஒளிமுகத்தையும் கனிந்த குறுநகையையும் கண்டு நெஞ்சழிந்தான் வாவர். அச்சமேயில்லா முதல் மானுடனை அவன் அப்போதுதான் கண்டான். அவனை அணுகி நெஞ்சோடு ஆரத்தழுவி நீ என் இறைவன் என்றான். சோனகப்படை பணிந்தது. இவனே எங்கள் இறைவன் என்றது. சேரன் மகிழ்ந்து நீ என் குலம் தழைக்க வந்த கோமான் என புதல்வனை அவை நடுவே வைத்தான். ஐயப்பனைத் தங்கள் அண்ணலாக வணங்கினர் சேரநாட்டு மக்கள். முக்கண் முதல்வனும் மழைநிற அண்ணலும் இணைந்து சேரவளநாடு செழிக்கும்பொருட்டு மண்ணுக்கு அனுப்பிய இமையோன் அவன் என்று கதைகள் உருவாயின.

இளவல்களுக்கு அகவை நிறைந்தபோது எண்பேராயமும் ஐம்பெருங்குழுவும் கூடி இளங்கோப் பட்டம் சூட்டும் நாள் தேர்ந்தனர். அதற்குள் நகரிலும் நாட்டிலும் இளையோனே இளங்கோ ஆதல் வேண்டும் என்று சொல் எழுந்தது. வேறு எவரையுமே சேரநாட்டு மணிமுடிக்கு ஏற்பதில்லை என்று குலத்தலைவர்களும் சான்றோர்களும் கூடிப்பேசி வஞ்சினம் எடுத்தனர். அச் செய்திகள் அரண்மனையை எட்டச் செங்குட்டுவனின் அன்னை கேரளதேவி துயருற்றாள். அத்துயரை ஐயப்பன்மீது அழுக்காறாக

வெளிக்காட்டினாள். அன்னையின் உளத் திரிபின் வேர் என்ன என்று அறியாது ஐயப்பன் உழன்றான்.

அன்னையும், அவள் வந்த வேள்நாட்டுக் குலமூத்தாரும் அரண்மனையின் மந்தண அறையில் கூடி வழி தேர்ந்தனர். செங்குட்டுவனை அழைத்து அன்னை அவன் தன் அரசுரிமைக்காக வாள் ஏந்தினால் வேள்நாட்டுப் படைகள் அவனுடன் இணையும் என்றாள். அவளை நோக்கி நகைத்துச் செங்குட்டுவன் அவள் அறியாமைக்காக வருந்தினான். இளையோனே எவ்வகையிலும் அரசுக்குத் தகுதியானவன் என்பது அனைவருமே அறிந்த ஒன்று. அவனுடைய கல்வியும் வீரமும் கனிவும் மாந்தர்தம் எல்லைகளை மீறியது. தென்நிலம் காக்கும் இறைவர் இருவருமே அவனை இம்மண்ணுக்கு அனுப்பினர் என்பது உண்மையே என்றான் செங்குட்டுவன். அவன் அரியணை ஏறுவான் என்றால் இச்சேரநாட்டுக்குப் பகைவர்களே இருத்தல் இயலாது. அவன் அரியணையருகே ஒருபோதும் செயலாற்ற நேராத ஒளிவாளுடன் காவல் நிற்பதே தன் கடன் என்று சொன்னான். அவன் சொற்களைக் கேட்டு அன்னை கண்ணீர் உகுத்தாள். வேள்நாட்டு மூத்தோர் வெறுப்புடன் முகம் திருப்பினர்.

பட்டம் சூட்டும் பொருட்டு அமைச்சு கூட்டி ஆவதென்ன என்று தேர்ந்தான் நெடுஞ்சேரலாதன். கேரளதேவியும் அவள் குடிமூத்தோரும் குலமுறை நெறிகளை ஒருபோதும் மீறலாகாது என்று கூறினர். அமைச்சர் குழுவும் அதையே சொன்னது. நெடுஞ்சேரலாதன் செங்குட்டுவனுக்கு இளவல் பட்டம் சூட்டுவதென முடிவெடுத்தான். ஆனால் அம்முடிவைச் சொல்ல எண்குல மன்று கூடியபோது எண்குலத்து மூப்பர்களும் சேர்ந்து எடுத்த முடிவை அவர்கள் சார்பில் முது நிமித்திகன் காரிக்கண்ணன் மன்னனிடம் சொன்னான். சேரநாட்டு மக்கள் ஒருபோதும் மாலும் முக்கண்ணனும் தேர்ந்தனுப்பிய இளவலையன்றிப் பிறரை மன்னராக ஏற்க மாட்டார்கள் என்றான் அவன். அவை அதை வலியுறுத்திக் குரலெழுப்ப அரியணைமீது தன் தந்தையும் தாயும் சொல்லிழந்து அமர்ந்திருப்பதைக் கண்டான் ஐயப்பன். அக்கணமே எழுந்து தன் அரச உடைகளைத் துறந்து அவை முன் நின்றான். அரசும் செல்வமும் அடைவதற்கென வந்தவன் தானல்ல என்றான். அழியாப் பேரறிவைத் தேடி அனைத்தையும் துறந்து செல்லவிருப்பதாகவும் இனி எப்போதும் வஞ்சி நாட்டிலும் பந்தள மண்ணிலும் கால் வைக்கப் போவதில்லை என்றும் வஞ்சினம் உரைத்தான். வியந்து ஓவியமென உறைந்த அவையிலிருந்து இறங்கி அரையாடையுடன் நடந்தான்.

அரசு துறந்த இளவல் நடந்து வடபுலம் ஏகித் தன் நண்பன் வாவரைத் தேடிச் சென்றான். யவனரும் சோனகரும் இணைந்து கடற்பாடி அமைத்த வடகொல்லம் துறைநகர் அருகே அமைந்த குணவாய் நல்லூரில் வாவர் அமைத்துத் தந்த அறச்சோலை சூழ்ந்த சிறுபள்ளியில் தங்கி மெய்ந்நூல்களைக் கற்று வாழ்ந்தான். சேர மணிமுடியைச் செங்குட்டுவன் ஏற்ற பின்னும் மக்கள்நாவில் அவனே இளங்கோ என்று அழைக்கப்பட்டான். வடவணிகர் மூலம் அருகமாவீரனின் அழியாப்பெருநெறியை அறிந்து அதை ஆழ உணர்ந்து அணியும் ஆடையும் துறந்து ஒடும் துவர்கூறையும் ஏற்று அவன் துறவியானான். அவனை இளங்கோ அடிகள் என்று வணங் கினர் சேர மக்கள்.

ᘓ

குணவாய்நல்லூரின் சமணப் பள்ளி புற்கூரையிட்ட சிறுகுடில்கள் நடுவே எழுந்த மூங்கில் வீடு. மலர்மரங்களும் மண மரங்களும் நிறைந்த சோலை சூழ்ந்த அதன் முகப்பில் அருகனின் ஊழ்கநிலைக் கற்சிலை ஒன்று நிறுவப்பட்டிருந்தது. அருகனின் தலை மீது கிளைவிரித்து கிளர் சொரிந்து மலர்க்கிளை நிறைய பலவித மான பறவைகளும் அவன் அமர்ந்த பீடெழு பீடமெங்கும் அண் ணாந்து அவனை நோக்கிய கன்றுகளும் விலங்குகளும் செறிந்திருந் தன. அருகனின் சிலையருகே வழிப்போக்கர்களுக்கு உணவும் புளி மோரும் அளிக்கும் நிழற்சாலை. அருகன் தாள் வணங்கிச் சரணம் முழங்கிச் சீத்தலைச் சாத்தன் உள்ளே நுழைந்தான். மலர்ச்செடிகள் இடைவிட்டு அமைத்த அணியதர் வழியாக நடந்து பள்ளிமுற்றத்தை அடைந்தான். அவனை எதிர்கொண்ட இளந்துறவி சோலைக்குள் இளங்கோ அடிகள் நூலாய்ந்து அமர்ந்திருப்பதாகச் சொன்னார். குளிர் நிழலும் ஒளிரும் சிற்றோடைகளும் நிறைந்த அச்சோலைக் குள் நடந்த சாத்தன் கடல்கொண்ட பெருவாயிற்புரத்தில் வாழ்ந்த குமுதக முனிவன் மொழிந்த தொல்முதனூலின் தண்டமிழ்ச் செய்யுள்களை மாணாக்கர் சொல்லும் ஒலி காதில் விழக் கேட்டான். கல்லால மரத்தடியில் அமைத்த பாறையிருக்கைகளில் மாணாக்கர் அமர்ந்து தொல்காப்பிய மொழி கேட்க நடுவே கால்மடித்து அமர்ந்து தமிழ் சொன்ன இளங்கோ அடிகளைக் கண்டு கை கூப்பி வணங்கி முன்னால் சென்றான். தான் மதுரைக் கூலவாணிகன் என்றும் தமிழ் கற்று சாக்கைய நெறி கொண்டு அறிவன் அருள் நாடி அலைவதாகவும் சொன்னான். நூல் கற்றோர் மூலம் தண்டமிழா சிரியன் சாத்தன் புகழை அறிந்திருந்த இளங்கோ அடிகள் எழுந்து கைகூப்பி முகமன் உரைத்தார்.

அன்று நீராடி உடை மாற்றிக் கனிந்த பழங்களும் தூநீரும் அருந்தி ஓய்வுகொண்டபின் சாத்தன் அடிகளைக் காண வந்தான். ஆண்டில் எட்டு மாதம் கூரைக்கீழ்த் தங்கா நோன்பு கொண்டிருந்த அடிகள் பள்ளிச்சோலையில் ஒரு இறலி மரத்தடியில் இலைப்

படுக்கையில் இருந்தார். சாத்தன் சேரனுடன் நாடும் காடும் கண்டு பேரியாற்றுப் பெரும்பெருக்கில் சென்று செங்குன்ற மலையேறிக் கண்ணகியைக் கண்ட கதையை அடிகளுக்கு விரித்துரைத்தான். அன்றிரவு அறிவனுக்குரிய மேழமாத முழுநிலவின் பின்பகுதியில் அன்னையாமத்தில் சேரன் செங்குட்டுவன் கண்ணகியைக் கண்டதைக் குறித்துரைத்து வஞ்சிமாநகரில் அன்னைக்கு பேராலயம் எழுப்பச் சேரன் செங்குட்டுவன் எண்ணியிருப்பதாகச் சொன்னான். அவ்வாலயம் அன்னையின் அத்தனை வடிவங்களையும் தன்னுள் நிறைத்து அழியா அருள் கொண்டதாகவும் அமைதல் வேண்டும் என்பதே சேரன் எண்ணம். அதற்கெனச் சோழவள நாட்டிலும் பாண்டிய மண்ணிலும் சென்று மெய்யறிவின் அனைத்துக் கிளையினரையும் அழைத்து அவை கூட்டி அன்னையின் திறம் நாட்ட வேண்டும் என்று அவன் ஆணையிட்டான். அவ்வாணையை ஏற்றே குணநாட்டுக்கு வரலுற்றேன் என்றான் சாத்தன்.

''இத்துறைநகருக்கு வரும் குறும்பர் கூறிய கதைகளையானும் கேட்டேன்'' என்றார் அடிகள். ''மதுரை நகர் எரித்து மலை சேர்ந்த கண்ணையை வானோர் வந்து வணங்குதல் கண்டோம் என்று அவர்கள் கூறினர். அறிவமர்செல்வியாக அவளைக் குணநாட்டுச் சாக்கைய அறிவரும் படிவரும் வணங்குவதாகவும் அறிந்தேன். அவள் கதையை நீர் அறிந்தவரை சொல்க.''

கண்ணையின் கதையை விரித்துரைத்தான் சாத்தன். மாமதுரைப் புரமெரித்தவள் கண்ணகி வடிவிலெழுந்த பெருஞ்சினக் கொற்றவையே என்று தென்நாடெங்கும் சொல் பரந்திருக்கிறதென்றான்.

''மதுரை எரிந்தபின் தங்கள் ஊர்களுக்கு மீண்ட மக்கள் தங்கள் ஊர்களிலெல்லாம் ஒருமுலைக்கன்னியின் சிலையை அமைத்துக் குலக்காவல் அன்னையாக வணங்கத் தலைப்பட்டனர். தென்நிலத்தில் நான் பயணம் செய்த நாட்களில் வெங்காற்று அலையும் பாலையிலும் செந்நெல் செழித்த மருதத்திலும் கோடுயர் குறிஞ்சியிலும் கான்செறி முல்லையிலும் கடலெழு நெய்தலிலும் கண்ணையின் பல்லாயிரம் சிலைகள் எழுந்தருளிப் பூசையும் பலியும் கொள்வதைக் கண்டேன். இருநீர் சூழ்ந்த இத்தமிழ் நிலமெங்கணும் அவள் தோற்றங்கள் எண்ணிலா வடிவுகொண்டு எழுந்தருளியிருக்கின்றன.

''கொற்கையில் விரிமணல் கரைமீது எழுந்த கண்ணையின் கோயிலில் ஏழு பரதவர் குலங்களும் கூடிவந்து புதுமீன்களும் பவளமணிகளும் படைத்து வணங்கினர். கடலில் மீனவன் செல்கையில்

கரையில் நோற்றிருக்கும் பெண்டிரின் கற்புக்கு அவளே காவல் என்றனர் முதுபரவர். நெல் செழித்த நெல்வேலியில் வயல்களின் கன்னிமூலையில் நடுகல் நாட்டி அவளை வணங்குதல் கண்டேன். விதைநெல் முளைப்பாரி எடுக்கும் கன்னியர் அவளுக்குத் தூநீரால் பூசை செய்து வலம்வைத்துச் சென்றால் விதை செழித்து வயல் நிறையும் என்று சொன்னார்கள். ஆயர் கன்றுசேர்க்கும் பசும்புல் வெளியில் கன்னிப்பசுக்களுக்குக் காவலாக அவள் கோயில் கொண்டிருப்பதைக் கண்டேன். தொல்பாவைகள் அமைந்த மலைக் குகைகளுக்கு வெளியே அவளை நாட்டித் தேனும் கள்ளும் படைத்து வணங்கினர் மலைக்குறவர். கரவுருக் கொண்டுவரும் இமை யோரும் இயக்கரும் கன்னிகளைக் கவராதிருக்க அவளே காவல் என்று வணங்கினர். எரிவெயில் எழுந்த பாலையில் அவள் முக் கண்ணும் ஒற்றைமுலையுமாகக் கூந்தல் பறக்கக் கொற்றவையாக அமர்ந்திருந்தாள். அவள் வாழ்க!''

அது கேட்டுத் தலைதாழ்த்தித் தன் எண்ணங்களில் மூழ்கி இருந்தார் அடிகள். பின்னர் ''சாத்தரே, இந்த குணவாயிற் கோட் டத்தில் அமர்ந்து தமிழும் செஞ்செயல்மொழியும் குணமொழியும் குடமொழியும் கற்று மெய்ந்நூல் ஆராய்ந்து இதுவரை வாழ்ந்தேன். நூலறியா நுண்மையிலேயே நூலோர் அறியும் மெய்ம்மை உறை கிறதென இன்று கற்றுக் கேட்டறிந்தேன். அறியாப்பெண் ணொருத்தியை அறிவமர்செல்வியாக ஆக்கிய பெருவல்லமை யாதெனத் தேடிச்செல்ல என் உளம் துணிகிறது. இக்கோட்டம் விட்டு நீங்கி அதைத் தேடிச்செல்ல எண்ணியுள்ளேன். தக்க தருணத்தில் வந்தென்னை ஆட்கொண்டீர்'' என்றார்.

''ஆம். ஊழ் உங்களைப் பிறிதெங்கோ கொண்டுசெல்ல எண்ணுகிறதென யானும் அறிகிறேன். கண்ணகி கோவலன் இரு வரின் உற்றார் கதையையும் அறிய யானும் சோழவளநாடு செல்ல விருக்கிறேன்.'' என்றார் சீத்தலைச் சாத்தன்

உரை வகுத்தது

பந்தளாயணி அன்னை வாழ்ந்த குணவாய்நல்லூரி லிருந்து கிளம்பிய இளங்கோ அடிகள் எட்டு மாணாக்கர் துணை யுடன் மலைக்குடிகளும் வாழாத அடர்காடு வழியாக அதர்வினவி நடந்து இரு திங்கள் கழித்து மங்கலமடந்தையின் மலைமுடியை அடைந்தார். மாணாக்கர் எண்மரும் களைத்து உடல் தளர்ந்து நோயுற்றிருந்தனர். எனினும் உள்ளம் தாங்கா வெள்ளம் முற் செலுத்த, சிறுபடிகள் வழியாக மலையேறிச் சென்றனர். அங்கே அறிவமர்செல்விக்கு நாள் முறைசெய்யும் மூன்று மூதிரவர் மட்டுமே இருந்தனர். முழுநிலவு நாட்களில் மலையேறி வந்து அன்னையை வணங்கும் மலைமக்கள் படைத்துச் செல்லும் அரிசியும் தெங்கின் பழங்களும் மட்டும் உண்டு அறிவன் தாளேத்தி மூன்றுவேளை அறக்குரல் எழுப்பி அங்கே வாழ்ந்தனர். மலையேறி வந்த துறவியரை அவர்கள் இன்முகம் காட்டி வணங்கி வரவேற்றனர்.

கருநீல இலைகள் அடர்ந்த அலங்கைக்காடு மலைமுடியைச் சூழ்ந்து கிடந்தது. அலங்கை இலைகள் வெயிலில் வாடும் கடும் நெடி இளங்கோவை மூச்சடைக்கச் செய்தது. இங்கு வேறு மலர்ச்செடிகள் வளர்க்கலாகாதா என்று இரவர்களை வினவினார். மலர்நாடித் தும்பிகளும் தும்பிகளைப் பிடிக்கத் தவளைகளும் தவளையுண்ணப் பாம்புகளும் வரும் என்றார் இரவர். தழையுண் ணும் விலங்குகளும் ஊரும் பாம்புகளும் மசகும் வண்டும் அலங் கையின் மணமேற்றால் அணுகாது என்பதனால் அதுவே அற வோர்க்கு அரணாக உள்ளது. வடநாடெங்கும் கொடுங்காட்டின் நடுவே வாழும் பிக்குகள் தங்கள் அறச்சாலையைச் சுற்றி அலங்கை வேலி அமைக்கும் வழக்கமே பின்பு சாக்கையர் அறனோம் படைகளில் அறச்சோலையாக ஆயிற்று. மலைமீது வாழும்போது ஏற்படும் நோய்களுக்கெல்லாம் அலங்கையும் மிளகுமே மருந் தாகும். மருந்தறிந்தோர் மொழியில் துளசி என்று சொல்லப்படும் அலங்கை விந்திய மலைக்குக் கீழுள எல்லா அறச்சாலைகளிலும் இருக்கும். எனவேதான் அது சாக்கைய அறவோருக்குரிய மங்கல

நற்செடியாகியது. சாக்கிய நெறி நிற்கும் இல்லறத்தார் வீடுகளி லெல்லாம் அலங்கை நட்டுப் பேணுதல் வழக்காயிற்று. அறிவர் களுக்கும் அறச்செல்விக்கும் அலங்கைமாலையே உகந்த அணி என்றார் மூதிரவர்.

மண்மேட்டில் ஓங்கி நின்ற வேங்கை மரத்தடியில் துதிக்கை சேர்த்த இரட்டையானைகள் என நின்ற நின்ற கரிய உருளைப் பாறைகள் நடுவே கிளை தாழ்த்தி மலர்குலைத்த வேங்கைப்பெரு மரத்தடியில் இருந்தருளிய திருமாக்கன்னியை இளங்கோ நோக்கி நின்றார். இருபுறமும் சிறுநெய்விளக்குகளில் எண்ணெய் கருகி வழிந்திருக்க விழித்த அகன்ற கண்களும் குமிழுதடுகளில் அறிநகையு மாக அமையப்பெருக்கைக் கடந்த எதையோ நோக்கிக் அவையத்தில் அமர்ந்திருந்தாள் கண்ணகி. தன் நெஞ்சு குறுமுழவென ஒலித்ததைக் கேட்டுப் பொருளற்ற எண்ணங்கள் சுழன்று பறக்கும் சித்தத்துடன் அவள் முன் நீணேரம் நின்றார். அலங்கைத்தழை கட்டிய மாலை யணிந்த ஒரு முலை மார்பை நோக்கிக் கண் தழைந்தபோது வேல் பாய்ந்ததுபோல உடல் அதிரத் திடுக்கிட்டு சூழலுணர்வு கொண் டார். நெடுமூச்சு விட்டுத் திரும்பி பிக்குகளுடன் நடந்தார்.

மலையிறங்கி கிழக்குச்சரிவில் நடந்து கரியபாறை வாய்திறந்த குகைவாயிலை அடைந்தனர். ''இந்தக் குகையில்தான் எங்கள் அறச்செல்வி எண்பது அகவைவரை வாழ்ந்தாள்'' என்றார் இரவர். ''மதுரையை எரித்தபின் ஐம்பது ஆண்டுக்காலம் புல்லரியும் பழங்களும் உண்டு மெய்யறத்தின் பெருந்தோற்றமாக இக்காட்டை யும் வானையும் கண்டு இங்கு அமர்ந்திருந்தாள் அவள்.'' அக்குகை அருகே இரவர் தங்க சிறிய மண்குடில்கள் கட்டப்பட்டிருந்தன. ''நீண்ட காலமாகவே இவ்வரத்திற்குள் தங்கள் மலையன்னை வாழ்வதாகக் குறும்பர் எண்ணி வழிபட்டு வந்தனர். குகைக்குள் செல்வதற்குச் சின்னஞ்சிறு புனவாயிலே உள்ளதென்பதனால் எளியோர் உள்ளே செல்ல இயலாது. முழுநிலவெழும் இடையுவா நாளில் முட்டனும் கோமரமும் சூழ குறும்பர் இங்கே வந்து குகை முன் புல்லரிப் பொங்கலிட்டு அன்னைக்குப் படைப்பார்கள். கோமரம் அதைச் சிறுவாழையிலைக் கீற்றில் எடுத்துக்கொண்டு குகைக்குள் சென்று அன்னைக்கு அளித்து மீள்வான்.'' இரவர் மெல்லக் குனிந்து குகைக்குள் நிறைந்த இருளை நோக்கி ''புத்தம் சரணம் கச்சாமி! தம்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி!'' என்று கூவினார். சற்று நேரம் கழித்து குகை அச்சரண விளியைத் தானும் எழுப்பியது.

அன்றிரவு இரவர் கொடுத்த உணவை உண்டு பொன்னிதழி

மரத்தடியில் சருகு பரப்பிப் படுத்த இளங்கோ சற்றுநேரக் களைப் புக்கும் துயிலுக்கும் பிறகு விழித்துக்கொண்டார். நிலவு கார்க் கற்றையைக் கிழித்து மேற்கு நோக்கிச் செல்வதையே சொல்லற்ற நெஞ்சுடன் நோக்கிக் கிடந்தார். அப்பால் காட்டுக்குள் தனிமை கொண்ட இகலன் குரல் எழுப்பி இரவைக் கடந்துசென்றது. மலைக்குக் கீழே காட்டுக்குள் காற்று கண்ணறியாது காதறியும் பேராறுபோலச் சென்றது. எழுந்து திரும்பியபோது அர வாயிலில் வெண்ணிறத் துகிலொன்று அசைவதுபோலத் தெரிந்தது. அணுகி நோக்குகையில் அது நிலவின் ஒளிக்கற்றை என்று உணர்ந்தார். அரத்திற்குள் வெகு தொலைவில் வெண்ணிற ஒளியாலான மென் படாம் நெளிந்து அலையடிப்பதைக் கண்டார். அதன் சிதறலே தரையில் கிடந்தது.

தயங்கிக் காலெடுத்து வைத்துக் குகைக்குள் நுழைந்தார். நீள் காலமாகக் காற்று பரப்பிய மென்புழுதி பட்டுத்துகிலெனக் காலில் அழுந்தி மிதிபட்டது. அரத்திற்குள் நுழைந்த சிறிது நேரத்தில் இருள் வந்து கண்களை மூடியது. கைகளை முன்னால் நீட்டித் தள்ளாடி நடந்து சிறிது தூரம் சென்றதும் கண்கள் ஒளிகொண்டன. குகைக் குள் நிறைந்திருந்த காற்று காட்டுச்சுனையில் ஊறும் குளிர்நீர் என உடலைச் சூழ்ந்தது. இருமுறை வளைந்த குகைக்குள் முழுநிலவு விழுந்து கிடந்த சிறுகுளம் ஒன்று இருக்கக் கண்டார். அதன் நீர்த் தகடு நிலவின் வெண்ணொளியை உண்டு பெருக்கி உமிழ்ந்து கொண்டிருந்தது. மேலே வட்டமாகத் திறந்த வானில் முகில் சூழ்ந்த நிலவின் வட்டம். குளத்தருகே வந்து அதன் ஒளியையே கண்களால் பருகி நின்றார்.

பக்கச்சுவரில் இருந்து ஒரு நோக்கு தன்மீது படிந்திருப்பதை உடற்புலனால் உணர்ந்து திரும்பினார். நீலக்கண்கள் ஒளிரும் ஓவியப்பாவை ஒன்றை அச்சுவர்மீது கண்டார். அவள் இதழ்களில் குறுநகை பூத்திருந்தது. குறையற்ற மலர்ச்செம்மேனி மரக்கிளை யொன்றைப் பற்றிச் சாய்ந்து நின்றது. யாரிவள் என்று அவரது நூல் ஆய்ந்த நெஞ்சு கூவியது. அவளது கைவிரல் அருளல்களில் உடலின் அணிகளில் எதிலும் அவர் அறிந்த எத்தெய்வத்தின் ஒப்பும் இல்லை என்றறிந்தார். அணிசெறிந்த அவள் உடலில் இடக்கால்சிறுவிரல் மணி மட்டும் எருமைக்கண்விழிபோல ஒளியவிழத் தெரிந்தது.

ஓவியப்பாவை முன் அமர்ந்து அந்த விரல்மணியைக் கூர்ந்து நோக்கினார் இளங்கோ. நோக்க நோக்க அது தெளிவிழந்து சென்றது. சலித்துக் கண் திருப்பிய கணம் தெளிந்து எழுந்து வந்தது. அது தன் கண்ணில் படும் கணம் சொற்பெரும்பெருக்காக ஓடும்

தன் அகத்தில் ஒரு சொல் அப்படியே அசைவிழந்து நிற்க அளவிட ஒண்ணா அமையம் தாண்டி மறுபக்கம் வந்து மீள்வதை உணர்ந்தார். மீண்டும் மீண்டும் அச்சிறுமணியையே நோக்கி நின்றார். நெடுமூச்செறிந்து தன் மேலாடை திருத்தி குகையிலிருந்து திரும்பினார். சித்தம் உறைந்து சொல்லிழத்தலே ஊழ்கம் என்கின்றன நூல்கள். சித்தமின்றிக் காலத்திலோடச் செய்யும் அம்மணி. சித்தமில்லாமல் அல்ல. சித்தம் அப்போது ஒற்றைச் சொல்லாக உள்ளது. அச்சொல்லை அக்கணம் அறிந்தார். ஆழி! அச்சத்துடன் அப்படியே நின்றபின் மீண்டும் குகைக்குள் செல்லத் திரும்பிய போது குகை அணைந்து இருண்டுவிட்டிருப்பதைக் கண்டார்.

அச்சொல் கடல், அலை, திரை, நீலம், ஆழி என எண்ணற்ற ஒலிகளை அணிந்து அவர் நாவில் எழுந்தபடியே இருந்தது. அதையே முதற்சொல்லாகக் கொண்டு அவர் அறிந்தவையெல்லாம் தொகுக்கப்பட்டன அவருள். மீண்டும் ஒருமுறை குகைக்குள் சென்று குளிர்ச்சுனையருகே நிற்கும் அந்த அணங்கின் கால் மணியைக் காண்டாலே போதும். எல்லா வினாக்களும் விடை பூத்து அகம் திணியும். அரவாயிலிலேயே நிலவின் ஒட்டத்தை நோக்கிய வண்ணம் காத்து நின்றார். பின்பு அவர் உள்ளம் உள்ளே மெல்லிய குரலில் சொன்னதை அவர் சித்தம் ஏற்றுக்கொண்டது. இனி ஒரு போதும் அவரால் அப்பாவையைக் காணுதல் இயலாது. மீண்டும் எங்கோ அவளைக் காணுதல் உறுதி என்றது அதே ஆழ்நெஞ்சு.

மலையேறிக் கண்ணகியின் கோயில் முன் வந்தார். அற்சிரக் குளிரில் அலங்கைப்புதர்களுள் காற்று நூறுநூறு அரவுகளெனச் சீறிச்சுழன்று செல்ல தழைமணம் சூழ்ந்த குளிர்ந்த முற்றத்தில் பறக்கும் மேலாடையுடன் தனித்து நின்றார். கண்ணகி விழிகளை விரித்து அவரையே நோக்கி நின்றாள். தன் தமையன் கண்ட அதே கண்கள் என்று இளங்கோ எண்ணிக்கொண்டார்.

இரவரிடம் விடைபெற்று கண்ணகி ஏறி வந்ததாகக் குறும்பர் சொல்லிய மலைப்பாதையிலேயே தன் மாணாக்கர் சூழ இறங்கிச்சென்றார் இளங்கோ அடிகள். அவள் கால்பட்ட வழியெங்கும் சிறுநடுகற்களை நாட்டி மலரும் செஞ்சாந்தும் பூசி அவள் உருவாக வணங்கிவந்தனர் சாக்கையர். செங்குன்றுக்கு அப்பால் கிழக்குநோக்கிச் சரிந்த சிற்றூடுவழி மலைக்காடுகளுக்குள் பூசணிக் கொடிபோல ஊடுருவி வளைந்தும் கரந்தும் சென்றது. சுருளியாற்றின் அருவிக்கு மேலே மரங்களுக்குள் கரந்தமைந்த மூன்று அரங்களுக்குள் திசைகளையே ஆடையாகக் கொண்ட ஏழு அருகனடியார் பேசாப்பெருநோன்பெடுத்து ஊழ்கம் பயின்று வாழ்ந்த மலைப்பள்ளியைக் கண்டனர். அங்கே சென்று அவர்களை வணங்கி இளைப்பாறி மலையிறங்கிச் சுருளியாற்றங்கரையின் வழியாக நடந்து நான்காம் நாள் நிலப்பரப்பைத் தொட்டனர்.

ஓங்கிய காடு வழியாகப் பறவைக்குரல்கள் செறிந்த பச்சை இருளுக்குள் நடந்து எண்ணாயிரவர் என்று பெயர் கொண்ட அருக நெறியினரும் மாணாக்கரும் தங்கி தவம் கற்று வாழ்ந்த பள்ளிச் சாலையை அடைந்தனர். சோலை சூழ்ந்த அப்பள்ளியைச் சுற்றிப் பள்ளிக்கு உணவும் மலரும் கொடுக்கும் ஊழியத்தார் வாழும் இல்லங்கள் இருந்தன. அஞ்சினான் புகலிடம் அமைந்த அவ்வூர் உத்தமர்சாலை என்றழைக்கப்பட்டது. அச்சாலைக்குள் சென்று அங்கே தலைமைநெறியினராக வீற்றிருந்த அருணந்தி அடிகளைக் கண்டு அடிவணங்கினர். அச்சாலையில் இரு நாள் தங்கி மலைப் பயணத்தின் இளைப்பகற்றி மீண்டும் கிளம்பினர். செல்லும் வழியில் ஒரு முலையில் பால் பெருக மறு முலையில் குருதிகொட்ட நிற்கும் வீரபாண்டிய நங்கையைக் கண்டு வணங்கினர்.

சாக்கையர் வாழ்ந்த அறனோம்படை அமைந்த தேனிருஞ் சோலை ஒருநாள் நடைத்தொலைவில் சுருளியாற்றங்கரையிலிருந்து அப்பால் மலைகளின் அடிவாரத்தில் அமைந்திருந்தது. பசுங்காடு சூழ்ந்த அறனோம்படையைச்சுற்றி மலைவணிகர் இல்லங்களும் கொற்றவை

ஒரு சந்தையும் இருந்தன. சந்தையில் மலை வழங்கிய மிளகும் அகிலும் கிழங்குகளும் தேன்குழாய்களும் குவிந்து கிடக்க பல வண்ணத் தலைப்பாகையணிந்த வணிகர் விலை கூவி ஆர்த்தனர். கீழ்நிலம் அளித்த ஆமமும் இறுங்கும் குவித்திட்டு விற்கப்பட்டன. சந்தையைச்சுற்றிச் சேறு விரிந்த சாலையில் மரங்களில் கட்டப் பட்டுக் கால் மடித்துக் கிடந்து அசைபோட்ட காளைகள் கொம்பு சுழற்றித் திரும்பி நோக்கி உலைத்துருத்தியென மூச்சிரைத்தன. அரக்கு பூசிய பனையோலைப் பாய்களால் வளைகூரையிட்ட வண்டிகளின் அடியில் ஏவலர் துயின்றனர். கூண்டுகள்மீது அவ்வணிகர் குழுவினரின் கொடிகள் காற்றிலாது துவண்டு கிடந்தன. அறிவனின் கற்சிலை அமர்ந்த அறனோம்படை வாயிலில் அலங்கைக்காடு செறிந்திருக்க நடுவே பூத்த வேங்கைமரம் கிளை தாழ்த்திக் காற்றில் உலைந்து நின்றது. அதன்கீழ் அறச்செல்வியின் கற்சிலை அமர்ந்திருந்தது. அருகே பெருந்தோழியின் சிறுசிலை. அதற்குச் செம்மலர்கள் கோர்த்த கோதை சூட்டிச் செஞ்சாந்துக் காப்பும் மஞ்சள்தாலியும் பூட்டி வணங்கி நின்றிருந்தனர் வணிகர் குல மங்கையர் சிலர்.

அறனோம்படையில் அறிவராக அமர்ந்த தம்மபாலரை வணங்கித் தங்கள் செலவைப்பற்றிச் சொல்லி அங்கே தங்கினர். அங்கே காரையிலையும் புல்லரிசியும் காய்களும் சேர்த்துச் சமைத்த விகால உணவை உண்டு இளைப்பாறிய பின் மறுநாள் காலை தம்ம பாலரைக் கண்டு அவ்வழியே சென்ற அறிவமர்செல்வியைப் பற்றிக் கேட்டார். அவளை அங்கே வாழ்ந்த இரவர் எவருமே கண்டதாகக் கதைகள் இல்லை என்றார் தம்மபாலர். நான்கு மாத மழைக் காலத்தையும் அவர்கள் தங்கள் சாலைகளிலேயே தங்கி ஒருவேளை உணவுண்டு எண்வேளை அறிவனை ஏத்தி நோன்பிருந்து கழிப்பது வழக்கம். மழைநீர் பெருகி எருமையையும் புரட்டி இழுத்துச் செல்லும் விசையுடன் ஆற்றை நோக்கிச் சீறிச்செல்லும் இடைவழி களில் எதிலும் மலைக்குடிகளும் நடமாடுவதில்லை. பாம்புகள் மரக் கிளைகளைப் பற்றி ஏறிச் சுருண்டு சினந்து நாநீட்டிக் காத்திருக்கும் காட்டில் மந்திகள்கூடக் குகைகளைத் தேர்ந்து மகவு மடிசேர்த்துக் குளிருக்கு முடி சிலிர்த்துக் குறுகியமர்ந்திருக்கும்.

அறுபது ஆண்டுகளுக்கு முன் நான்மாத நோன்பு தொடங்கிய நாளில் இரவர்களெல்லாம் சரணவிளியுடன் சாலை சேர்ந்த பின்பு இடியுடன் முதற்பெருமழை மண்ணிலிறங்கிய மாலையில் இருளில் அவள் தனியாக நடந்து அவ்வழிச் சென்றாள் போலும். ஓடைகள் உயிர்கொண்டு வையையில் செம்பெருக்கு எழுந்த பின் அவள்

எங்ஙனம் அவ்வழியே சென்றாள் என்று உய்த்தறிதல் இயல வில்லை. அவளுக்குக் காவலாக அவளைத் தொடர்ந்து ஆயிரம் மலைத்தெய்வங்கள் மலைப்பாறைகளையும் அடிமரங்களையும் அறைந்து ஓசையெழுப்பியும் கூவி ஆர்ப்பரித்தும் பேருருக் கொண்டு சென்றன என்கின்றனர் மலைமக்கள். அவள் சென்ற இட மெல்லாம் வெட்டுண்ட இடமுலையிலிருந்து சொட்டி உதிர்ந்த செங்குருதிமுத்துக்கள் முளைத்து எழுந்தன. அரத்தநிற மலர்கள் பூக்கும் காட்டுச்செடிகளாக அவை காட்டை நிறைத்தன. அத்துளிகள் நீரில் ஓடி ஆறுசேர அவற்றை உண்ட மீன்கள் முட்டையிட்டுச் செம்மணிக் கண்கள் கொண்ட மீன்களைப் பிறப்பித்தன. இன்றும் இச்சுருளிக் காடெங்கும் அவள் ரத்தமே நிலத்திலும் நீரிலும் நிறைந்து நிற்கிறது என்கின்றன மலைமக்களின் குலக்கதைகள் என்றார் ஒரு மூதிரவர்.

ஆனால் ஒருத்தி மட்டும் ஐயையைக் கண்டாள். வையையைச் சுருளி சேரும் முனையில் ஒரு கல்வேம்பு மரத்தடியில் மலைவேடர் குலத்தின் இடுகாடு இருந்தது. அங்கே நோயுற்று இறந்த தன் மகனின் நடுகல் அருகே அமர்ந்து கண் கலுழ்தலையே வாழ்வாகக் கொண்ட மூதாட்டி இருந்தாள். பட்ட மரக்கிளைபோலக் கைகளும் கால்களும் இல்லி தூர்ந்தப் பொல்லா வறுமுலை சுருங்கிய உடல் கொண்டவள். யாமமும் பகலும் வேறுபாடறியாத கண்ணினள். பிடரிமீது சரிந்த சுமந்த சடையினள். இடுகாட்டுக் கொற்றவைக்குப் படையலாக வரும் உணவையும் காட்டுக்கனிகளையும் உண்டு நடுகல்லாக நின்ற மைந்தனிடமும் தன்னைச் சூழ்ந்த மரங்களிடமும் அம்மரங்களில் அணைந்த பறவைகளிடமும் பேசுபவள்.

அன்று அவள் கொட்டி வான்மூடி மண் நிரப்பிய மழையில் நனைந்து உடல் நடுங்க வேம்புமரத்தின் பொந்தில் உடல் ஒடுக்கி அமர்ந்திருந்தாள். மழைக்குரலைக் கேட்டு அதற்குள் தன் மகன் குரலும் இருப்பதாக மயக்குற்றுக் குரலெழுப்பி அழைத்தாள். கூவிச் சோர்ந்து கண்ணயர்ந்து மாழ்கினாள். பின் கண் விழித்தபோது துயில் கலைகையில் மட்டுமே அவளறியும் தெளிவு கூடியது. எங்கிருக்கிறோம் என்று வியந்து எழுந்து மழையை உணர்ந்து அஞ்சிக் கைகளால் உடல் பொத்தி மரக்கூட்டுக்குள் அடைந்து கொண்டாள். போரில் இறந்த தன் மகனை எண்ணி அவன் உண்ட தன் வறுமுலைகளைப் பற்றியபடி கண்ணீர் விட்டாள். கண்மூடி அக் கணமே தன்னுயிரும் போகவேண்டும் என்றெண்ணி ஏங்கினாள். கண்களை நிறைத்த மின்னற் பேரொளியில் கூவியபடி அவள் விழித்தபோது அவள் முன் கொற்றவையே விரிகுழலும் ஒரு

முலையும் எரிவிழிகளுமாக நிற்பதைக் கண்டாள். அன்னையே என்றலறி அவள் காலடியில் விழுந்தாள்.

மறுநாள் மழை ஓய்ந்த மெல்லொளியில் அவ்வழிச் சென்றவர் சிரித்தும் களித்தும் ஆடிநின்ற மூதாட்டியைக் கண்டனர். தான் ஐயையைக் கண்டதாக அவள் சொன்னாள். தன் நோகும் நெற்றியைத் தொட்டு அருள்புரிந்த ஐயை மலையில் ஏறி மேற்கு நோக்கிச் சென்று மறைந்ததாக ஆணையிட்டாள். மலைமக்கள் கூடி அவள் சொன்ன சொற்களைத் தேர்ந்தனர். அவள் கொண்ட உவகையில் கள்ளமில்லை என்றறிந்தனர். ஆங்கே வேம்புமரத்தடியில் ஐயைக்கு ஆலயம் ஒன்றமைத்தனர். அது மதுரை எரித்துச் சேரநாடு சென்ற கண்ணகியே என்றார் தம்மபாலர்.

அறிவமர்செல்வி சென்றதைக் காணவில்லையாயினும் ஆறு மாதம் கழித்து அவ்வழியே சென்ற பெருந்தோழியை இரவர் கண்டனர். நீறுபூசிய இளமெய்யில் துவராடையணிந்து சுருண்ட சடையை பின்தோளில் சேர்த்துக்கட்டி கையில் குறிக்கோலும் தோளில் கூறைக்கிழியும் ஏந்தித் தேவந்தி அவ்வழியே சென்றது கண்ட மலைமக்கள் அவள் யார் என்றனர். தன்னைப் புகார் அகன்று மதுரை எரித்த அழலவன் மகளின் பெருந்தோழி என்றாள் தேவந்தி. அவள் அடைந்த கடுந்துயரின் கதையறிந்து புகார் நகர் நீங்கி மதுரை வந்ததாகவும் மாதரியின் இல்லம் புகுந்து கண்ணகியின் வாழ்வறிந்து ஏழு நாட்கள் அந்நகரில் அவள் சென்ற இடமெல்லாம் அலைந்து அழுது வருந்தியதாகவும் சொன்னாள். வையைக் கரை வழியாகக் கண்ணகி சென்ற பாதையில் தானும் நடந்து வருவதாகச் சொல்லி வழி கேட்டாள். அவளை மலைமக்கள் அறனோம்படைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்.

சுருளியாற்றின் காட்டு வழியே சென்று செங்குன்றம் சேர்வது தனியொரு நங்கைக்கு ஆவதல்ல என்று அறவோர் சொன்ன சொற்கள் எதையும் அவள் ஏற்கவில்லை. ஆற்றுக்கு வழி அதன் ஒவ்வொரு துளியிலும் எழுதப்பட்டுள்ளது என்று அவள் பதிலுரை செய்தாள். தொல்நூல் கற்றறிந்த அவளை அங்கே சின்னாள் தங்கிச் செல்லும்படிக் கோரியதையும் அவள் ஏற்கவில்லை. கண்ணகியை அடைவதுவரை துயில் கொள்வதில்லை என்ற பெருநோன்பை அவள் ஏற்றிருந்தாள். அறச்சோலையில் அடர்ந்த துளசிப்படப்பை நடுவே இலைவிரித்துத் தனியாகப் படுத்துக்கொண்டாள். அன்றிரவு விடியும்வரை அவள் பாடிய அறியாப் பழம்பாடல்களை இரவரும் மாணவரும் துயில் நீக்கியமர்ந்து கேட்டனர். சடைக்கூந்தல் விரித்திட்டுக் கண்ணீர் முலைகள்மீது சொட்டக் குரல் தேங்கி

நிறுத்தியும் மார்பிலறைந்து விம்மியழுதும் அவள் பாடிய அப்பாடல்களில் என்றோ மறைந்த பழங்காலம் ஒன்றின் அழியாப் பெருந் துயரம் எழுந்துவந்தது.

முட்டுவேன்கொல்! தாக்குவேன்கொல்!
ஓரேன்யானும் ஓர்பெற்றி மேலிட்டு
ஆஅல் எனக் கூவுவேன்கொல்!
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே!

அறச்செல்வியின் சிலையருகே அவளுக்கு அழியாத்துணையாகச் சடைமுடியும் கோலும் கொண்டு நின்ற பெருந்தோழியின் காலடி வணங்கி இளங்கோவும் மாணாக்கரும் அறனோம்படை நீங்கிச் சுருளியாற்றுப் படுகை வழியாக வையைப்பேரியாறு நோக்கிச் சென்றனர்.

ᘓ

அடிகளும் மாணாக்கரும் வையைக்கரையில் நான்கு நாள் நடந்து முல்லை நிலவெளியை வந்தடைந்தனர். நீர் குறைந்த வையைப் பாறைகள் வழியாக தொறுவர் இட்ட மூங்கிற்பாலம் மேல் நடந்து கடந்தனர். அலகையும் கள்ளியும் முட்செடிகளும் செறிந்த குறுங்காடுகள் படர்ந்த நிலத்தினூடாக ஆநிரை நடந்து உருவான காட்டுப்பாதை களமெழுதும் ஓவியன் வெளிவரைந்த செந்நிறக் கோடுபோலச் சென்றது. இருபுறமும் உருளைக்கற்கள் நிரவிய முரம்பு. கால்களில் படிந்து உடலில் ஏறி ஆடையெனப் பரவிய மண்பொடியுடன் வெயிலேற்றுப் பழுத்த தலையுடன் மதுரைப்பாதை தொட்டுச்செல்லும் புறநிலம் சேர்ந்தனர். பெரும் பாதையிலிருந்து கிளைத்த பாதை சென்ற திசையில் சிறார் குரல்கள் கேட்க அவர்கள் அவ்வழியே நடந்து சென்று காட்டுக்கற்களை அடுக்கிச் செய்த உயர்ந்த மதில் சூழ்ந்த ஊர் ஒன்றை அடைந்தனர். அதன் வாயிலில் விளிமுரசுடன் அமர்ந்திருந்த காவலர் இருவர் அவர்களைக் கண்டதும் வேல்களைத் தூக்கி நிற்கும்படி ஆணை விட்டனர். அவர்களை நெருங்கியதும் சாவகர் என்று கண்டு வணங்கி ஊருக்குள் அழைத்துச் சென்றனர்.

அருகரும் சாக்கையருமன்றி எவரையுமே தங்கள் ஊர்களுக் குள் விடுவதில்லை என்று உரைத்தான் இளையர்களுள் ஒருவன். கோட்டையை மூடிய கதவைத் திறந்து அவர்களை உள்ளே கொண்டுசென்றான். கற்களை அடுக்கி உயர்த்திக்கட்டிய புற முரம்பை நிரைவகுத்த ஊர்த்தெருக்களில் ஆடிய சிறார் அவர்கள் வருவதைக் கண்டு ஆட்டம் நிறுத்திப் பெரிய விழிகள் விரித்து நோக்கி நின்றனர். ஓசை அறுவது கண்ட அன்னையர் எழுந்து நோக்க அடி களைக் கண்டு குழம்பி உள்ளே குரல் கொடுத்தனர். முதியோர் சிலர் தள்ளாடும் நடையுடன் வெளியே எட்டி நோக்கி வியந்த வாய் திறந்து நின்றனர். ஊர்த்தலைவன் பழுத்த கண்களும் கொக்குச்சிறை போல் மீசையும் தலைமுடியுமாக வந்து வணங்கி முகமன் உரைத்தார்.

அடிகள் தன் மாணாக்கருடன் அருகே சென்று வணங்கி

அருகன் புகழ்சொல்லி அவர்கள் குடிவாழ வாழ்த்தினார். முதியவர் கைகூப்பி அடிகளை வரவேற்றுத் தங்கள் சிறுகுடில் முற்றத்தில் அமரும்படிச் சொன்னார். சாணி மெழுகிய மண்திண்ணை மீதமர்ந்து கால்களை நீவியபடி அவர்கள் யாரெனக் கேட்டார் அடிகள். ''நாங்கள் செறுமர்குலத்தார். எங்கள் இல்லத்தில் நீங்கள் உணவுண்ண நெறியுளதா?'' என்றான் முதியோன். ''அருகனருளே வெயிலாகப் பொழிகிறது. வெயிலோன் சமைத்த காய்கனிகளை அருகனடியோர் எங்கும் உண்ணலாம்'' என்றார் அடிகள். அவர்கள் பழங்களையும் கிழங்குகளையும் கொண்டு வந்து கொடுக்க உண்டு பசியாறினர். ''நீங்கள் செய்யும் தொழில் என்ன? இவ்வெங்காட்டில் வாழ்வது எங்ஙனம்?'' என்று கேட்டார்.

''நாங்கள் காட்டுக்குள் வேட்டையாடியும், படித்திரம் செய்த வேட்டையூனையும் கொடிக்கூடைகளையும் பறவைகளையும் சந்தையில் விற்றும் வாழ்கிறோம். இறுங்கும் வரகும் தினையும் முதிரையும் விளைவிப்போம். குறும்பாடும் கோலாடும் வளர்ப் போம். வேற்றூர் மக்கள் தொடர்பின்றி வாழ்கிறோம். அன்னையின் ஆட்சியில் எங்களுக்கு ஏதும் குறைவில்லை'' என்றார் முதியவர். ''ஒருமுலையன்னை இந்நகர் தீண்டியபோது நாங்களும் உடன் வந்ததாக எங்கள் குலக்கதைகள் சொல்கின்றன. எங்கள் குலமூத்த முதியவர் அப்போது வாழ்ந்துள்ளார்'' என்று முதுசெறுமன் செற் றனைக் கூட்டி வந்தனர். கண்நோக்கு இழந்து இளையோர் கைப்பற்றி நடந்துவந்த முதியவன் தன் வற்றி வளைந்த உடலைத் தரையில் இருத்தி உலர்ந்த கரங்களால் தலையைப் பலமுறை தடவிச் சென்ற கால நினைவுகள் வழியாகத் தொலைதூரம் சென்று திடுமென மீண்டான்.

நாங்கள் தென்நிலத்தில் நெல்வேலி நகருக்கு அண்மையில் வாழ்ந்தோம். கழனிகளில் உழுது எருமைகளுடன் வாழ்ந்தோம். பசிக்குப் புல்லரிசியுடன் ஆமையிறைச்சியைச் சேர்த்து சமைத்து உண்டோம். புல்லரிசிச் சோற்றைக் கலத்திலிட்டு மண்சேர்த்து மூடிப் புதைத்திடுவோம். நாள் பல கழித்து அதைத் தோண்டி எடுத்து நுரை பொங்கும் மரியல் தெளிவை எங்கள் குடிகாக்கும் தொல்நிலத்துக் கன்னியன்னைக்கு அளித்து நாங்களும் உண்டு கிணைப்பறை முழக்கிப் பழம்பாடல் பாடி இரவெலாம் ஆடிக்களிப்போம். எங்களை ஏழு ஊரர்கள் சேர்த்து உரிமை கொண்டிருந்தனர். காலை யில் முதற்கதிர் மலைநுனியைத் தொட்டதும் ஊரில் சேவற்கொடி யனின் சிற்றாலயத்தில் மணி முழங்கும். அதைக் கேட்டதும் எங்கள் செறுமக்குடியெங்கும் ஆண்களும் பெண்டிரும் எழுவோம். எஞ்சிய

உணவை அள்ளி உண்டு உழுபடையும் கழனிக்கோல்களுமாக நடப்போம். மாலை வெயில் மலைதொட்டு சேவல்கொடியன் கோட்டத்து மணி முழங்குவதுவரை வேலை செய்வோம். எங்களுக்கு ஊரன் நெற்குப்பையும் புல்லரிசியும் பருப்பும் தருவான். வயல்களில் உதிரும் மணியெலாம் எங்களுக்கு என்று நெறி.

தைமாதம் முதல்நாளும் பங்குனி பத்தாம் நாளும் எங்களுக்கு விழா. அன்று ஊரன் எங்களுக்கு கூறையும் கொடியும் கொடுக்க வேண்டும். தைமுதல்நாளில் காலையில் ஊர்மன்றில் களம் வரைந்து அதில் பொங்கலிடுவோம். ஆடுகளம் கூட்டி இரவெல்லாம் குரவைக்கூத்து ஆடுவோம். பங்குனி பத்தாம் நாளில் எங்கள் அன்னைக்குப் புல்லரிசியும் வெல்லமும் சேர்த்துப் பொங்கலிட்டுப் படைத்து வட்டமிட்டுச் சேர்ந்தமர்ந்து உண்போம். எங்கள் அன்னைக்கு வலது காலில் விரல்மணி மட்டுமே அணிகலனாக இருக்கும். அதுவே எங்கள் பெண்டிருக்கு மங்கல நல்லணியும்கூட பங்குனி நன்னாளில் மஞ்சள் கொடியால் விரல்வளை செய்து எங்கள் குலப்பெண்டிர் அணிவர். கிணையும் முழவும் முழக்கி நாங்கள் அன்னையை ஏத்துகையில் எங்கள் குலக்கன்னி ஒருத்தி மீதேறி அன்னை தோன்றுவாள். நாங்கள் தாயின் கருவறைக்குள் கேட்டுப் பின் மறந்த மந்தணப்பெருமொழியில் பேசுவாள். எங்கள் குலத்தின் தொல்கதைகளைச் சிலசமயம் சொல்வாள். தென்நிலவிரிவில் எங்களுக்குத் தொலைதிசை தொடும் வயல்களும் நடுவே கற்சுவர்கள் கொண்ட வீடுகளும் இருந்தன. வண்டி நிறைய நெல்கொண்டு சென்று வாயில் ஓங்கிய பெருநகர் ஒன்றுக்குத் திறையளந்து மீள்வோம் என்று அவள் வழியாக அறிந்தோம்.

பின்பொரு நாள் எங்கள் ஊரை மறவர் படை தாக்கியது. வேளிர் குடிகளுக்குத் தீயிட்டு உழவர்களை வெட்டி ஊர்மன்றில் குவித்தனர். களஞ்சியங்களைத் திறந்து நெல்லும் செல்வமும் கொள்ளையிட்ட பின் எங்கள் சிறுகுடிக்கு வந்தனர். காட்டுக்கு ஓடிய சிலரைத் தவிர எங்கள் குடியின் எல்லா இளையோரையும் பிடித்துக் காட்டுக் கொடிகளால் கைகள் பிணைத்துக் குதிரைகளில் சேர்த்துக் கட்டி இழுத்துச்சென்றனர். என் அன்னை அலறியபடி எங்களுக்குப் பின்னால் ஓடிவந்தாள். அவளை ஒருவன் வெட்டி வீழ்த்தினான். கைகள் கட்டிய நிலையில் நீரும் உணவும் இலாது கண்ணீரும் வியர்வையும் குருதியும் ஒன்றாகி வழிய வெண்டேர் விரிந்த எரிவெயிலில் நடந்தோம். ஐந்து நாட்கள் கழித்து வடவணிகர் உரிமை மாக்களை வாங்கும் பெருஞ்சந்தை ஒன்றுக்குக் கொண்டுசெல்லப்பட்டோம். மலைகளின் அடியில் இருந்த பெரிய அங்காடிவெளியில்

எங்களைப்போன்ற ஏராளமான முசுண்டரும் களமரும் கடைசியரும் செறுமரும் செறுமியரும் கைகள் கட்டப்பட்டு உடைகளின்றி நிரைநிரையாக நின்றனர். வடவணிகர் அவர்களை விலைகூவி வாங்கினர். அம்மக்கள் சோர்ந்து களைத்துப் புண்சேர்ந்த கால்களுடன் ஒருவர் வலிமையில் ஒருவர் சேர்ந்து நின்றிருந்தனர்.

அப்போது கன்னியொருத்திமீது ஏறி எங்கள் அன்னை எழுந்தாள். சந்தையை நடுங்கச்செய்த ஓலத்துடன் இரு கைகளையும் விரித்துக் கட்டுகளை உடைத்தெறிந்தாள். தன்னருகே நின்ற மறவன் வாளை வாங்கி எதிர்நின்றவர்களை வெட்டிவீழ்த்திச் சீறிய வெங்குருதியில் முக்குளித்து வெறியாடினாள். அவளை எதிர்கொள்ள வாளேந்திய மறவர் நூற்றுவராலும் இயலவில்லை. கொற்றவை எழுந்தாள் என்ற சேதி பரவியதும் மறவரும் வணிகரும் ஓடித் தப்பினர். சிறிதுநேரத்தில் அங்கிருந்த கடைமக்கள் அனைவரும் கட்டுகளை அவிழ்த்துக் கைகளில் படைக்கலங்களுடன் திரண்டோம். அன்னை தன் குருதி நிறைந்த வாய் விரித்து வெறிநகை எழுப்பி எங்களுக்கு ஆணையிட்டாள். ''மாமதுரை செல்லுங்கள் என் மக்களே. உங்களுக்கு முன் நான் அங்கு சென்றிருப்பேன்.'' நாங்கள் அன்னையை வாழ்த்திக் கூவியபடி மதுரை நோக்கி வந்தோம். அன்னை மலையேறியபின் உயிர் மீளாது உடல் வெம்மை ஏறி அக்கன்னி இறந்தாள். அவளை வைப்பாற்று மணற்படுகையில் புதைத்து நடுகல் நாட்டி வணங்கிவிட்டு வந்தோம்.

மதுரையை நோக்கி வருகையில் மழைக்காலப் புது நீரோடைகள்போல நாடெங்கிலும் இருந்து மக்கள் அந்நகர் நோக்கிச் செல்வதைக் கண்டோம். அத்தனை குலங்களிலும் அவர்கள் அன்னையர் தோன்றி மதுரைக்குச் செல்லும்படி ஆணையிட்டிருந்தனர் என்றறிந்தோம். அழுத கண்களும் அழுக்குடைகளுமாக அன்னையை நோக்கிக் கூவியபடி ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் திரண்டு சாலைகளை நிறைத்துச் செல்லக் கண்டேன். நகருக்கு வெளியே பெரும்படை எங்களை வழிமறித்தது. நகரின் கோட்டை வாயில்கள் மூடின. எங்களை துரத்தித் திருப்பி நகரைச் சூழ்ந்த முல்லைநிலத்துக்கு அனுப்பினர். இங்கே காட்டுமரம் வெட்டிக் குடில் கட்டித் தங்கினோம். அன்னையின் ஆணையெழுவதை எதிர்நோக்கி இருந்தோம். ஒருநாள் காலையில் அன்னை எங்கள் குலக்கன்னி மீதேறிவந்து ''மதுரைக்குள் செல்வோம் வருக!'' என்றாள். விரிகூந்தலுடன் வெறியாடி அவளே எங்கள் முன் நடந்தாள். அவள் வாயிலிருந்து பாலைப்புயலில் சருகுக் குப்பைகள் சுழன்றெழுவதுபோல வசைகள் பொங்கி வெளியே வந்தன.

அவளைத் தொடர்ந்து கையில் தடிகளும் கற்களும் ஏந்தி வெறியாட்டமிட்டுக் கூவி ஆர்த்துக் கிளம்பினோம். ஒவ்வொரு குலத்திலும் அன்னை எழுந்திருப்பதைக் கண்டோம். நூறு நூறா யிரம் அன்னையர் சன்னதம் கூவி அலறி ஆர்த்து மதுரையை நோக்கி ஓடினர். எங்கள் சினமெலாம் வசைச்சொற்களாக வாயிலிருந்து கொட்டியது. கண்ணில் கண்ட அனைத்தையும் அழித்தோம். தேவ கோட்டங்களை உடைத்து வீசினோம். சோலைகளைச் சிதைத் தோம். கோட்டை வாயில் விரியத் திறந்து கிடந்தது. உள்ளே எங்கும் கரும்புகை மூடியிருக்க மக்கள் அலறியழுத வண்ணம் எங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். மூன்று நாட்கள் அவ்வெறியாட்டம் நடந்தது. மாடவீடுகளை உடைத்துத் திறந்து மக்கள் கொள்ளையிட்டனர். பொன்னும் பட்டும் தெருவில் மிதிபட்ட நாட்கள் அவை. பேரன்னை ஊர்ந்துவந்த திருமாக்கன்னியை ஒரு கணம்தான் கண்டேன். மேற்கு வாயில் நோக்கி நான் ஓடுகையில் அங்கே பெரும்பூசல் எழுதல் கேட்டு ஒரு கற்கோட்டம் மீதேறி நோக் கினேன். எண்ணற்ற அன்னைத் தெய்வங்கள் தலைமுடி விரித்து வெறியாடிக் கைநீட்டிப் பெருங்குரலெழுப்பி ஆர்ப்பரிக்க நடுவே விரிகூந்தலும் குருதி வழியும் ஒரு முலையுமாகத் திருமாக்கன்னி நகர் நீங்குதல் கண்டேன். அக்காட்சியில் மயங்கி நான் விழுந்துவிட்டேன்.

வான் நெருப்பும் தரை நெருப்பும் எரித்த மதுரைமீது புகையும் முகிலும் கூடிக் கருமைகொண்டு மூன்றாம்நாள் மழையென விழுந் தது. எரிதழல்கள் ஒய்ந்து நகர் குளிர்ந்தது. நகரில் நிறைந்திருந்த கடைமக்கள் கள்வெறியும் களிவெறியும் அடங்கினர். மதுரை நீங்கிய மக்கள் ஒருமுலைக்கன்னி கால்பட்ட மண்ணை அள்ளிச் சீலைக்கிழிகளில் முடிந்து தங்களுடன் எடுத்துக்கொண்டனர். கொள்ளைச்செல்வங்களுடன் நான்கு வாயில்கள் வழியாகவும் நிரைநிரையாக நகர் நீங்கிய குடிகள் சொற்களையெல்லாம் இழந்து தலைகுனிந்து தளர்ந்த கால்களுடன் நடந்தனர். வழியில் ஆறலைக் கள்வரால் தாக்கப்படாமலிருக்கக் கைகளில் கோல்களும் படைக் கருவிகளும் கொண்டு நடந்த இளையர்கூட நெடுமூச்செறிந்து மென்குரலில்தான் பேசினர். மண்கிழியில் வாழ்ந்த அன்னைக்குத் தினமும் காட்டுமலர் கொண்டு பூசெய்து வணங்கி வழித்துணையாக வேண்டுமென வேண்டினர்.

மதுரையிலிருந்து கிளம்பிய எக்குலமும் தாங்கள் முன்பு வாழ்ந்த நிலத்துக்கு மீளவில்லை. தாங்கள் வந்த திசைக்கு நேர் எதிராகவே அனைவரும் நடந்தனர். நீருள வெறுநிலம் கண்ட இடங்களில் சீலைக்கிழியை வைத்து அன்னையை அங்கே நிறுவிச்

சுற்றும் குடில்கட்டி ஊர் எழுப்பி குடிகொண்டனர். மதுரையில் கவர்ந்த பொருளை அவ்வூர்களில் புதைத்துவைத்துச் சிறிதுசிறிதாக வடவணிகருக்கு விற்றுப் படைக்கலங்களும் பிறவும் வாங்கிக் கொண்டனர். காவல் செறிந்த பல நூறு புது ஊர்கள் மதுரைப் பாதை களில் முளைத்தெழுந்தன. வெற்றிவேல்செழியனின் பெரும்படை பின்பு அவ்வழியே வந்தபோது அவர்கள் படைக்கலங்கள் ஏந்தி போரிடக் கிளம்பினர். ஆனால் அறமறிந்த செழியனின் ஆணைப் படி அமைச்சுக் குழுக்கள் அவர்களைத் தேடிவந்தன. அவர்கள் ஊர்களைத் தன் கோற்கீழ் கொண்டுவந்தால் பாண்டியன் அவர் களைத் தனிக்குடிகளாகக் கொண்டு அவையிடம் அளிப்பான் என்று ஆணை கொடுத்தனர். அதை ஏற்றுப் புதிய குலங்கள் உருவாயின.

மதுரையில் கொண்ட செல்வத்துடன் அன்னையின் கால் மண்ணுடன் இக்காட்டுக்கு வந்த என் குடி இங்கே அரண் எழுப்பி ஊர் அமைத்துக் கொண்டது. எங்களுக்குப் பாண்டியனின் அறங் கூறு அவையில் இன்று இடமுள்ளது. மீன்விழி அன்னையின் வடம் தொட்டு இழுக்கும் உரிமையும் உள்ளது. எல்லாம் எங்கள் திருமாக் கன்னி அளித்த கொடை என்றான் முதுசெறுமன் செற்றன்.

அன்றிரவு அவ்வூரில் தங்கி காலையில் விடைகொண்டு கிளம்பும் முன் செறுமர் வணங்கிய கன்னியின் சிறுகாவைச் சென்று கண்டார் இளங்கோ அடிகள். மகிழமரத்தடியில் கரிய கற்சிலையாக ஒருமுலைகொண்டு நின்ற அன்னையின் வலதுகாலில் மட்டும் பொன்னாலான விரலணியில் செம்மணி சுடர்ந்தது.

ஓ

நூறு கரியகால்களை வையை மணலில் ஊன்றி, வளைந்த முதுகை எழுப்பி, ஒருகரையில் வாய் திறந்து மறுகரையில் வால் நீட்டி நின்றிருந்தது மரப்பாலம். அதன்மீது செல்நிரை வருநிரை என இரு வரிசைகளாகச் சகடங்கள் அசைந்து அசைந்து சென்றன. மக்கள்திரள் பலவண்ண எறும்புகள் என இரு கரைக்கும் ஏகியது. அப்பால் புதிய கோட்டைவாயிற் குடுமிக்கூடுமீது மீன் கொடி நெளிய வாய்திறந்து வருவன அனைத்தையும் விழுங்கி நின்றது. செவ்வெயில் விரிந்த காலையில் முல்லைப் பெருநிலம் கடந்து அங்கே வந்த இளங்கோவும் மாணாக்கரும் பாலத்திலேறி மறுபக்கம் சென்றனர். மதுரை அழிவதேயில்லை என்றான் ஒரு மாணாக்கன் வியப்புடன். ஆம், அது பாண்டிய மக்களின் நெஞ்சில் உறைகிறது. கல்லும் மண்ணும் அதன் வெளித்தோற்றமே என்றார் இளங்கோ. கடல்கொண்ட எண்ணிறந்த மதுரைகளைப்பற்றி நூல்கள் நுவல்வனவற்றை நினைவுகூர்ந்து ஓங்கிய மதில்மாடங்களில் நடந்த வேலேந்திய வீரர்களை நோக்கி நெடுமூச்செறிந்தார்.

பாலத்துக்கு அப்பால் குறுமரங்கள் செறிந்த மிளைச் செறிவுக்கு நடுவே இடைவழிகள் பிரிந்துசென்றன. அருகநெறியினரும் சாக்கையரும் தங்கிய அறச்சாலைகள் மரங்களுக்கு நடுவே புற்கூரைகளுடன் தெரிந்தன. அங்கே சென்று ஓய்வெடுத்து மாலை சாய்ந்ததும் நகருள் நுழைவதே சாலும் என்று இளங்கோ சொல்ல மாணாக்கர் ஒப்பினர். அவ்வழியே செல்கையில் எதிரே தாலங்களில் அரிசிப்பொரியும் வெண்மலர்களும் கொண்டுவரும் ஆய்மகளிர்நிரையைக் கண்டு விலகி நின்றனர். முன்னால் வந்த மூத்த ஆய்மகள் நின்று அடிகளை வணங்கினாள். அருகனைச் சொல்லி அவள் குலம் வாழ வாழ்த்தி இவ்வழியே எங்கு சென்றீர் என்று அடிகள் கேட்க அறிவமர்செல்விக்கு மலரும் பொரியும் தந்து நெய்விளக்கேற்றி வருவதாகச் சொன்னாள். தன் பெயர் ஐயை என்றும் ஆயர்குல மூதாட்டி மாதரியின் மகள் என்றும் உரைத்தாள். கண்ணகியின் கதையறியச் சேரநாட்டிலிருந்து வருவதாக அடிகள்

கூறவும் ஐயை வணங்கித் தன் இல்லத்துக்கு வந்து அருள் புரியுமாறு கோரினாள்.

ஐயையுடன் ஆயர்சேரிக்குச் சென்ற அடிகள் அவர்கள் அளித்த தினைப்பால்கஞ்சியையும் பழங்களையும் உண்டு இளைப் பாறினார். மாலையில் ஆயர் தங்கள் கன்றுகளுடனும் ஆய்ச்சியர் குடங்களுடனும் வீடு திரும்பினர். கன்றுகள் நெருங்கி நின்ற பட்டியைச் சுற்றி வேப்பந்தழை மூட்டி ஆரக்கப் புகையிட்டனர். விறகு அடுக்கி நெருப்பிட்டு அதில் காட்டுக் கிழங்குகள் சுட்டுக் கொதிக்கும் வரகுக் கஞ்சியுடன் உண்டபடி சூழ அமர்ந்திருக்கையில் ஐயை மதுரை நகர் எரிந்தது பற்றி அவள் அறிந்த கதைகளைச் சொன்னாள். எரிந்த நகரைக் காட்டுக்குள் கைவிட்டுவிட்டு அறுபது ஆண்டுகளுக்குள் மதுரை மீண்டும் தன்னை உருவாக்கிக் கொண்டது. தன் கண்ணெதிரே மீண்டும் நகர் எழுந்துவந்த வியப்பை மூதாய்ச்சியால் எத்தனை சொல்லியும் சொல்லி முடிக்க இயலவில்லை.

பழமதுரை நகரில் அவள் பிறந்தாள். ஏழு வயதில் சிற்றன்னை துணையுடன் நகரத்துத் தெருக்களெங்கும் தயிர்க்கலயத்துடன் செல்லத் தொடங்கினாள். கண்களைக் கட்டிவிட்டாலும் சுற்றித் திரிந்து மீளும்படி அவள் கால்களில் இருந்தது மதுரை. ''குழி யானையின் கால்களில் உறையும் வட்டப்பாதைபோல நானே அறியாமல் என் கால்கள் மதுரையை வரைந்தெடுக்க இயலும். கனவுகளில் என் கால்களிலிருந்து மதுரை உயிர்கொண்டு எழும். நான் அலையும் தெருக்களெல்லாம் எங்குள்ளன என்று வியப்புறு வேன். என் பிறப்புக்கு முன்னரே அத்தெருக்களை நான் அறிவேன் என்று உணர்வேன்.

பின்பொரு நாள் தாய் மாதரி புன்னைக்காட்டு நீலிக்குப் படையலிட்டு மீள்கையில் செவ்விதழ்த் தாமரைபோல் முகத்தில் கனிந்து விரிந்த கண்கள் கொண்ட இளையாளோடும் அவள் துணையானொடும் வந்தாள். புகார்நகர்ப் பெருவணிகர் மக்கள் அவர் என்று ஆய்ச்சியருக்குச் சொன்னாள். ''அன்னையின் மையிருங் கூந்தலை என் கைகளால் நெய்யிட்டுப் பின்னி முடிந்தேன்'' என்றாள் ஐயை தன் சுருங்கிய கைகளைத் தூக்கி கண் களில் எழுந்த புத்தொளியுடன். ''அன்று அன்னை கண்ட ஆய்ச் சியர் குரவையில் நானும் ஆடினேன். அப்போது எரிஆவமென வந்தது அச்செய்தி. புயற்காற்று எனத் திருமாபத்தினி எழுந்து நகர் நோக்கி ஓடுவதை நான் தொலைவிலிருந்து கண்டேன். என் அன்னையும் பிறரும் பின்னால் ஓடினர். தெருக்களில் திணிந்த

பெருங்கூட்டத்தில் அவள் மறைந்தாள்.''

''என் சிறுகால்கள் விசை கூட்ட நான் நகரெங்கும் ஓடினேன். கொலைக்களம் எங்குளதென அறியக் கூடவில்லை. ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு செய்தி கேட்டேன். பின்பு நான்மாடக் கூடலின் மையத்து ஆலமரத்தடியில் நிற்கையில் விரித்த குழலும் வெறித்த விழிகளும் கையில் சிலம்பும் கொண்ட கொற்றவை கண்ணகியின் உடலேறி அரண்மனை நோக்கிச் செல்வதைக் கண்டேன். எண்ணற்ற அணங்குகளும் பாவைகளும் தெய்வங்களும் அன்னையர் உடலில் ஏறி அவளுடன் ஆடியும் தாவியும் கூவியும் அலறியும் செல்வதைக் கண்டேன். என் அன்னையைத் தேடி நகர்த்தெருக்களில் அலைந்தேன். எங்கும் கந்தலாடை அணிந்த அறியா மக்கள் வெறி கொண்டாடுதலே தெரிந்தது. பின்பு விண்ணவன் படுத்த ஆயிரம் தலை அரவமெனக் கரும்புகை விண்ணிலெழுந்தது. மதுரை எரியத் தொடங்கியது.

''அன்னையும் ஆய்ச்சியரும் மீண்டும் எங்கள் பசுக்களை எண்ணி ஆயர்பாடிக்கு மீண்டோம். கன்றுகளுடன் அவிழ்த்துவிட்ட பசுக்கள் நெருப்புக்கு நேரெதிரே விரைந்தோடின. எங்கள் குலமூத்த அன்னை ஒருத்தி 'பசுக்கள் எங்கு செல்கின்றனவோ அங்கு செல்வோம். அவை நிற்குமிடமே இனி நாம் வாழவேண்டிய இடம். கன்றுகளின் கண்ணில் ஏறி ஆயர்கோன் கண்ணன் அருள்வான்' என்றாள். கன்றுகளைத் தொடர்ந்தோடி இங்கு வந்து சேர்ந்தோம். மருதமரக் கூட்டங்கள் சூழ்ந்த இச்சோலையில் நின்று நோக்குகையில் தொலைவில் மதுரைமீது கரியவானம் காலிறக்கி நிற்பதைக் கண்டோம். நிமித்திகர் நூல் தேர்ந்து மண்நோக்கி வழிகாட்ட யானை மீதேறிய மதுராபதி அன்னையுடன் மதுரை மக்கள் வந்துசேர்ந்ததும் நாங்கள் இருந்த இடமே. இங்கே இடம் தேர்ந்து மண்கூட்டிப் பீடம் அமைத்து நற்சொல் சொல்லிப் பூசை செய்து மதுராபதி அன்னையை நாட்டினர் அந்தணர். நானூறு நீள்கோல் அப்பால் ஆலமர் செல்வனின் பதிட்டை அமைத்தனர். புற்குடில் கட்டி இங்கே குடியேறினோம்.

''அழுத கண்ணீர் உலராது என் அன்னை எட்டு மாதம் உயிருடன் இருந்தாள். புகல் தேடிவந்த கண்ணையன்னைக்குத் தன் இல்லத்திலிருக்கையில் தீது வந்தது எண்ணிய அயர் அவள் நெஞ்சை உருக்கியது. வையைக்கு நீராடச் சென்ற அவள் அங்கிருந்தே சாக்கைய அறவோர் சிலரைக் கண்டு அவர்களுடன் சென்றாள். சாக்கைய நெறியின்படி துறப்போர் சொல்லாமல் செல்லுதல் மரபென்பதனால் அவள் சென்ற நான்காம் நாளே நாங்கள் அதை

அறிந்தோம். வடநாட்டில் சங்கமலை அறச்சாலையில் அவள் அறிவனடி சேர்ந்தாள் என்று மேலும் பத்து ஆண்டுகள் கழித்து இரவிணி ஒருத்தி சொல்லி அறிந்தோம். அவள் அறவுரையை ஏற்று எங்கள் குலமும் சாக்கைய நெறி சேர்ந்தது. திருமாபத்தினியைக் கோட்டைப்புறத்தில் அறிவமர்செல்வியாக நிறுவி வணங்கத் தலைப்பட்டோம். எங்கள் குலவழக்குப்படி அவள் வலச்சிறுவிரலில் வெண்ணிற மணியை அணிவித்து கன்றும் மகவும் காத்தருள் செய்க என்று வேண்டிக் கொள்கிறோம்.''

நெடுமூச்சுடன் முதியவள் சொன்னாள். ''இன்று என் முது வயதில் அம்மதுரை அழியவேயில்லை என்று என் கால்கள் என்னை மயக்குறச் செய்கின்றன. இந்நகரில் நடக்கையில் நான் அறிந்த அப்பழமதுரையே இது என அறிகிறேன். திசைகள் ஒலிகள் மணங்கள் எல்லாம் அப்படியே உள்ளன. ஊழிக்காலத்துக்கு அப்பாலும் இது மாறாது இவ்வண்ணமே இருக்குமென எண்ணி வியக்கிறேன். அறிவனருள் செய்க!''

இதுரை நகர் புக்க இளங்கோ அடிகள் சாமமும் மருதமும் ஒலித்த விடிகாலையில் எழுந்து வையையில் நீராடித் தன் மாணாக்கருடன் மதுரை நகர் புகுந்து சதுக்கப்பூதம் ஓங்கி நின்ற ஊர்மன்றும் அரசெழு வீதியும் கண்டு பாண்டியன் கோல்நின்ற அரண்மனை நோக்கிச்சென்றார். அவரது அறக்கோலம் கண்ட காவலர் வணங்கி வழிவிட்டனர். மீன்விழியன்னை ஆலயத்தில் வழிபட்டு மீண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் நிரைநிலை மாடத்து நெடுமுன்றிலில் பேரமைச்சர் பெருமக்கள் சூழ நின்றிருந்தபோது அடிகளின் வரவறிவிக்கப்பட்டது. தென்நிலமாளும் வேந்தன் கை கூப்பியபடி முன் வந்து அடிகள் அடிபணிந்து நன்மொழி சொல்லித் தன் அரசவைக்கு அவரை வரவேற்றான். அடிகள் அவன் குடியும் கொடியும் சிறக்க வாழ்த்தினார். கண்ணகியின் கதையறியச் சேரநாடு விட்டு வந்ததாகச் சொன்னபோது பாண்டியன் அவரை வாழ்த்தி அரண்மனையில் தங்கி அருளல் வேண்டுமென வேண்டினான். வேயாமாடத்து விரிநிலா முற்றத்தில் அடிகள் தன் மாணாக்கருடன் தங்கினார்.

அன்று நண்பகல் பாண்டியன் பணிந்தளித்த காயும் கனியும் உண்டபின் அடிகள் அரண்மனைப் புறச்சோலையில் பாணரும் பாவலரும் கூட பாண்டியன் அமர்ந்திருக்கையில் சென்று அவனு டன் உரையாடினார். தென்புலத்தேவி மதுரையை எரித்த கதையை அரசவைப் பாவலர் செறுகுளத்து நற்கண்ணனார் பாடலாக்கி யிருந்தார். அதைப் பாணர் பாட மூன்று விறலியர் ஆடினர். பாண்டியன் மெல்ல நகைத்து ''பேரழிவும்கூட கலையாகும்போது மகிழ்வூட்டுகிறது அல்லவா?'' என்றான். நற்கண்ணனார் ''ஆம், கலை புண்களை ஆற்றும் பொதிகைத்தென்றல்'' என்றார். ''தங்கள் கூற்று என்ன அடிகளாரே?'' என்றான் பாண்டியன். ''கலை நமக்கு எதையுமே அளிப்பதில்லை, இன்பமோ துன்பமோ'' என்றார் இளங்கோ. அவை செவி கூர்ந்தது.

''கலையே முக்கண் கொற்றவை ஊரும் விலங்கு'' என்றார்

இளங்கோ. ''கலையமர்செல்வியை வணங்குவோம். கலையில் ஏறி வரும் தெய்வமே அக்கலைக்குப் பொருள் கொடுக்கிறது. இறப்போ அழிவோ பிறப்போ சிறப்போ கலையில் நிகழ்கையில் அதற்குள் ஒளிந்திருக்கும் அழியா உண்மையையே நம் உள்ளம் அறிகிறது. அழியாதது ஒன்றே. அதையே அறம் என்றனர் நூலோர். இப்போது செறுகுளத்து நற்கண்ணனார் பாடியது மதுரையின் அழிவையல்ல. அறத்தின் அழியாப் பெருஞ்சிறப்பையே. நம் உள்ளம் வணங்குவது அறச்செல்வியின் அடிகள் முன் மட்டுமே.'' ''ஆம் ஆம்'' என்றது அவை.

''நன்றே சொன்னீர் அடிகளே'' என்றான் பாண்டியன். ''ஒரு தருணம் நான் நினைத்ததுண்டு. என் மூதாதை செங்கோல் வழுவியதும் நன்றே என. கானல் அலையும் பெருஞ்சுரங்களை ஆளும் கன்னி எம் நகர் நுழைய அதுவன்றோ வழிசெய்தது!'' ''உண்மை! உண்மை!'' என்றார் செறுகுளத்து நற்கண்ணனார்.

பாண்டியன் சொன்னான். மதுரை எரிந்தபோது அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்செழியனின் இளவலான எந்தை கொற்கையின் இளவரசாகத் தொலைவிலிருந்தார். கடல்வணிகம் பெருக்கும் பொருட்டு மரக்கலங்கள் கட்டுவதிலும் நாடுகள் தோறும் சென்று வணிகர்நிலை அறிவதிலும் ஊக்கம் கொண்டிருந்தார். மறவர் நெறிமீறுவதும் மதுரை நிலையழிவதும் செய்திகளாக அவரை வந்தடைந்தபோதும் தமையனின் கோல் செல்லும் நிலத்தில் தன் சொல் நுழையலாகாது என்று வாளாவிருந்தார். ஒரு முறை மீன்விழியன்னையின் மாசித்திருவிழவுக்கு வந்தபோது பழையன் மாறனிடம் ஊர்ச்சொல் குறித்துக் கேட்க தமையனின் அரியணையை இளையோன் பெறத் துடிப்பதாக அவர் குற்றம் சாட்டவே சினம்கொண்டு பாதியிலேயே கொற்கை மீண்டபின் அவர் மதுரைக்கு மீளவேயில்லை என்றான் நெடுஞ்செழியன்.

நான் தொலைதூரத்து சாவக நாட்டருகே மரக்கலத்தில் பிறந்தேன். கடற்காற்றில் வளர்ந்தேன். கடார வணிகருடன் கடலோடிக் கொண்டிருந்த நாட்களில் மதுரை எரிய முதற்தாதை அரசுக்கட்டிலில் மறைந்தது அறிந்தேன். எந்தை தண்டுகொண்டு சென்று புதுமதுரையை வென்று கோல்நாட்டிக் குடிகாத்தது கேட்டேன். கொற்கைக்குத் திரும்பி இளவரசுப்பட்டம் கொண்டேன். ஆனால் என் கால்கள் நிலத்தில் உறுதி கொள்ளவில்லை. அவை அலையடிக்கும் நீரையே நாடின. அடிகளே, எங்கள் குலத்துக்கு மீனவன் என்றொரு பெயர் உண்டு. நினைவுதொடா நெடுவமையத்துக்கு அப்பால் எங்கள் குடி கடல் ஓடி மீன்பிடித்த

பரதவர்களாக இருந்தனர் என்பர். கடலில் கால் தொடுகையில் அதை என் உடலெங்கும் உணரமுடிகிறது. என் கால்களில் எந்தையர் ஏறி ஓடிய பெருங்கடலின் எல்லா நுண்மைகளும் குடிகொள்கின்றன. இப்பெருநகர் மதுரையை பெரும்பாலைநிலம்மீது செல்லும் நாவாய் என்றே என் உள்ளம் எண்ணுகிறது.''

''ஆம். சித்தமறியாதவற்றையும் பித்தம் அறியும்'' என்றார் இளங்கோ. ''கடலுமிழ்ந்ததே நால்வகை நிலமும் என்க. குலங்களும் கோல்களும் கடல் பெற்ற குழவிகளேயாகும். மண்ணிலுறையும் எல்லாத் தெய்வங்களும் நீரிலுறையும் அன்னையின் அடிநிழல்வடிவுகளே என்று சொல்வர் தொல்நூலோர்.''

''நீங்கள் அதை உணர்ந்திருக்கிறீர்களா?'' என்றான் பாண்டியன்.

''இல்லை. அவை எனக்கும் செவிச்சொற்களேயாகும். தென்கடலின் ஆழத்தைத் தென்திசை முதல்வனாகிய ஆலமர்செல்வனன்றி யாரறிய இயலும்?'' என்றார் அடிகள்.

அன்று மாலை அடிகளும் மாணவர்களும் நெடுஞ்செழியனின் அவையும் அமைச்சும் துணைவர மாமதுரை நகரின் தென்மேற்கு மூலையில் பாண்டியன் வெற்றிவேற்செழியன் எழுப்பிய பெருஞ்சிலம்புக் கொற்றவை ஆலயத்துள் சென்றனர். நால்நிலை விமானமுகடெழுந்த கற்கோட்டத்துக் கருவறையில் மூன்று ஆள் உயரத்திற்கு ஒருமுலையும் மூவிழியும் கொண்டு, கொலைப் படைகளும் இடச்சிலம்பும் ஏந்தி காட்டுமாக்கிளைகள் எனப் பின்னிப் பரவிய எட்டுப் பெருங்கைகளுடன் வெறிநகை விரித்து நின்றாள் அன்னை. அவள் வலக்காலில் அரிமணிபெய்த ஆடகப் பொற் பெருஞ்சிலம்பு ஒளிவிட்டது. கோட்டெயிறு போந்த கரிய உதடுகளால் அன்னை இளங்கோவை நோக்கி ஏதோ உரைப்பவள் போலிருந்தாள்.

ஓ

உரை வகுத்தது

ஒரு திங்கள் மதுரையில் தங்கிப் புலவருடனும் பாணருடனும் கல்வியும் கலையும் ஆய்ந்தபின் இளங்கோ பெருஞ் சிலம்புக் கொற்றவைக்குச் சிலையெடுக்கப் பாண்டியன் வெற்றிவேற் செழியன் நன்மாறன் கல்லகழ்ந்த கழுகுமலைமேட்டுக்குக் கிளம் பினார். கால்கோள் நாட்டும் விழவில் அன்னையின் குறி வந்த நிகழ்வை மூதாட்டி ஒருத்தி இளங்கோவுக்கு விளக்கினாள். மதுரைநகர் மக்கள் எவருக்கும் முழுத்துயில் வருவதே அரிதாக இருந்தது. இல்லந்தோறும் எவரேனும் ஒருவர் அன்னையின் பெருந்தோற்றத்தைக் கனவில் கண்டு எழுந்து அலறுவது வழக்கமாக இருந்தது. அதை அமைச்சர் மன்னனுக்குச் சொல்ல அவன் நிமித்தி கரை அழைத்து கோள்குறி கேட்டான். நிமித்திகர் எழுவர் நூலும் கோளும் ஆய்ந்து அன்னையின் நுண்ணிருப்பு அந்நகரில் எங்கும் அப்போதுமிருப்பதாகச் சொன்னார்கள். அவளது அழியாப்பெருஞ் சினம் ஆறுவதே தேவை என்று வகுத்தனர்.

அவர்கள் கணித்துச் சொன்னதற்கேற்பவே கன்னிமூலையில் நிறுவப்பட்டிருந்த வீண்சிலையாலான அன்னையின் மரவுரு அகற்றப்பட்டு அங்கு விமானமுகடும் விரிசுற்றும் கொண்ட அன்னைக்கோட்டம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. தென்மேற்குத் திசையில் நகர் நிறுவுகையில் வைத்த ஆனைமுகன் அருகே கல்தச்சர் கூடி இடவரைமண்டலம் வரைந்து அதன் தென்மேற்கு மூலையில் மங்கலத்தறி நாட்டிச் சிறு பலிக்கல் வைத்துக் குறும்பாடு வெட்டிக் குருதியாட்டி அன்னைக்கோட்டத்துக்குக் கால்கோள் செய்தனர். மாமதுரை நகர் வாழ்ந்த எண்வகைக் குலங்களும் அமைச்சும் அரச சுற்றமும் வந்து வணங்கி நின்று அன்னை பெயர் கூவி வாழ்த்தினர். அப்போது அரண்மனை முதுமகள் ஒருத்தி மேலேறி அன்னை தோன்றினாள். செங்குருதி அள்ளிப்பருகி விரிகூந்தலும் வெறி நகைப்புமாக நின்றாடினாள். தன் சிலை எடுக்கும் கல் தென்நாட்டில் கழுகுமலை உச்சியில் தென்மேற்குத்திசை நோக்கி எழுந்திருப்பதாக அருளினாள். அங்ஙனமே ஆகட்டுமெனச் சொல்லி அவளை

வாழ்த்தினர் அரசும் அமைச்சும்.

அன்னைக்குக் கல்லெடுத்த கழுகுமலை மதுரைக்கு தெற்கே முடிவிலியென விரிந்திருந்த பெரும்பாலைக்கும் அடர்காடுகளுக்கும் அப்பால் பத்து நாள் பயணத்தொலைவில் இருந்தது அறிந்து இளங்கோ அடிகள் சாக்கையரும் சாவகருமாகத் திரண்ட துறவியர் கூட்டத்துடன் கழுகுமலை நோக்கிச் சென்றார். சாக்கையர் வாழ்ந்த திருமங்கலம் அறப்பள்ளி தாண்டிக் காலையிலும் மாலையிலும் நடந்தும் நண்பகலில் ஓய்வெடுத்தும் நூலாய்ந்தும் அறம் அறிந்தும் இடும்பைசேர் இருவையில் இருநாள் நடந்து கணுக்கால் நனையுமளவே நீரோடிய அருஞ்சுனையாற்றைக் கடந்தபோது மெல்ல மெல்ல நிலம் மாறுபாடு கொள்ளக் கண்டார். பசுமை தழைத்த மரங்கள் குன்றிச் சோர்ந்து நின்றன. பின்பு முள்மண்டிய வேலமரங்களும் கரிய அடி கொண்ட யாமரங்களும் அவற்றினூடாகக் குற்றிலை முட்புதர்கள் பரந்த இறும்பும் மட்டுமே கண்ணிற்பட்டன. புதர்செறிந்த செம்மண் குன்றுகள் மயிர் சிலிர்த்த யானைகள்போல அமைதியிலாழ்ந்து நின்றன. குன்றுகளைச்சுற்றி விரிந்த அலைகளற்ற வன்பாலைநிலத்திலும் பேரமைதியின் வடிவாக வெண்வெயிலே நிறைந்து நின்றது. அவ்வெயிலில் சிறகுகளை அளைந்தபடி எப்போதோ ஒரு காக்கை சென்றது. மிக அப்பால் ஒரு காக்கை மீண்டும் மீண்டும் ஒன்றையே வானை நோக்கிச் சொல்லிக் கொண்டிருந்தது. நெஞ்சில் அழுத்திய வெறுமையின் பேரமைதியைத் தாளாதவராக இளங்கோ மூச்சை ஊதி ஊதி விட்டுத் தலைகுனிந்து தன் கால்கள் தொட்ட செம்மண்ணை நோக்கி நடந்தார். ஆயினும் தலைக்குமேல் இன்மைவெளியென விரிந்த வானின் ஈர்ப்பு அண்ணாந்து நோக்கச் செய்தது. முகில்களே இல்லாத நீலவானில் பஞ்சுச் சிதறல்களெனச் சில வெண்தீற்றல்கள் வெயிலில் எரிந்தபடி கனவில் செல்பவைபோல வடதிசை ஏகின.

அழலவனின் பெருந்தோற்றத்தை என்றுமே கண்டிராத வரால சேரநாட்டு அடிகள் தென்பாண்டிப் பாலையில்தான் மாந்தருக்கு வானம் எத்தகைய கொடுமையை இழைக்க இயலுமென உணர்ந்துகொண்டார். முட்புதர்களில் கிழிபட்ட காற்று நச்சரவுக்கூட்டமெனச் சீறி வடதிசை நோக்கி ஓடுகையில் மண்ணைச் சுழற்றி அள்ளிச் சருகுகளில் பொழிந்து ஒலியெழுப்பியது. காட்டெலிகளும் கீரிகளும் பாம்புகளும் ஓடிய தடம் பதிந்த மென்புழுதிக்குள் கூரிய கருமுட்கள் புதைந்து வழிநடையினர் கால்களுக்காகக் காத்துக் கிடந்தன. குட்டைமரங்கள் மட்டுமே நின்ற அப்பாலை வெளியில் வெடித்த பாறைகளின் இடுக்குகளிலேயே வெயிலுக்கு

ஓய்வாக அமர நிழல் இருந்தது. அங்கே இரவின் பனிக்குளிர் அப்போதும் எஞ்சியிருந்தது. மென்புழுதியில் குழியானைகளும் செவ்வண்டுகள் சிலவும் மூழ்கித்திளைத்தன. துறவியர் துயில்கையில் தன் அருகே ஒரு சிறுகுழிக்குள் இருந்த பூழியை அள்ளி அள்ளி வெளியே கொட்டிய குழியானையின் ஓயா உழைப்பை நோக்கி இருந்த இளங்கோ அடிகள் புன்னகையுடன் நெடுமூச்செறிந்தார். அவர் முன் நின்ற சிறு முள்மரத்தில் அமர்ந்திருந்த ஓணான் தாடையை உப்பியபடி துயரார்ந்த விழிகளுடன் அவரை நோக்கி மெல்லத் தலையாட்டியது.

பாதம் பதியும் பாதையின் இருபக்கமும் செந்நிறச் சிதல் புற்றுகள் கோட்டைகள் என எழுந்து நின்றன. அவற்றுக்கு அருகே முள்மல்லிகை வெண்மலர்களைப் பூத்துச் சிரித்து நிற்கக் கண்டு சில மலர்களைப் பறித்துக் கையில் வைத்து முகர்ந்தார். நெஞ்சில் நினைவுகளை எழுப்பாத நறுமணத்துக்கு எப்பொருளும் இல்லையென எண்ணிக்கொண்டார். தடித்த பசிய வாட்களை நீட்டி அலகைப்படப்புகள் குன்றுச்சரிவில் நிறைந்து கீழ்நோக்கிச் சென்றன. அதனுள் உக்கில்பறவை உப் உப் என்றபடி செங் கண்களை உருட்டி நோக்கியபடி நடந்து மண் கிழித்து அலகால் கொத்தி பின் எழுந்து பறந்து மீண்டும் இலைகளுக்குள் அமிழ்ந்தது. அப்பால் மலைச்சரிவில் இளந்தளிர்க் கூந்தல் குடைபோல் நிற்க நிழல் பரப்பி நின்ற திந்திருணிமரத்தடியில் ஒரு தெய்வம் தட்டைக் கல்மீது ஒற்றைக்கல்லாக அமர்ந்திருந்தது. அதன்மீது காய்ந்த எருக்கம் பூக்களும் முன்னால் இருந்த பலிக்கல்மீது காய்ந்த உதிரக் கருமையும் உடைந்துகிடந்த இடைக்கலத் துண்டுகளும் அங்கே என்றோ நடந்த பூசனையைக் காட்டின. ஒரு துண்டை மெல்ல நகர்த்தியபோது முதுகின்மீது குஞ்சுகளை ஏற்றிய அலம் வால்கொடுக்கு தூக்கி கைகளை விரித்துத் திரும்பி நின்று நோக்கியது.

அங்கிருந்து சென்ற அந்தப் பாதை புதர்கள் வழி ஓடி ஒரு சிறு சரிவை அடைந்தது. கூரைகள் சரிந்து காற்று பொழிந்த மண்ணில் மூடிக்கிடந்த நாற்பது குடில்களினால் ஆன கைவிடப்பட்ட சிற்றூர் ஒன்று அங்கே இருந்தது. உடைந்த கலங்களும் சிதல்மண் பொதிந்த மரப்பணியங்களின் எச்சங்களும் நிறைந்த ஊர்முற்றத்தில் முட்செடிகள் மண்டிக்கிடந்தன. ஊடே இறந்த ஆநிரைகளின் வெள்ளெலும்புகள். மண்டை சரிந்து ஒருமுனைக்கொம்பு மண்ணில் மூழ்கி மறுமுனை எழுந்து நிற்க சிரித்த பெரும்பற்கள். சரிந்த வீடுகளின் மண் குமுறிய திண்ணைகளின்மீது சுருண்ட நாய்களின் எலும்புகள் மட்கும் தோல் மிச்சங்களுடன். காற்றில் கரைந்த

குட்டிச்சுவர்கள் சூழ்ந்த வீட்டுக்குள் தரையில் சிதல் மூடிய பாய்கள் மீது சிதல் பரவிய ஆடைகள் அணிந்த மனித எலும்புகள் துயர் சூழ்ந்த சிரிப்புடன். அசபால இரவர் ''கண்காணா இடங்களில் பறவைகள் இறந்து அழிவதுபோலக் குலங்களும் விழுந்து மட்கி மறைந்துகொண்டிருக்கின்றனபோலும்'' என்றார். ''பசியே ஒவ்வொரு உயிர்ப்பருவின் உள்ளும் இருந்து ஓடு ஓடு என்று சாட்டையைச்சுழற்றும் தேரோட்டி'' என்றார் பவணந்தி என்ற சாவகர். இளங்கோ சொற்களற்ற தனிமையில் தன்னையே தான் நோக்கியபடி நடந்துகொண்டிருந்தார்.

நீரிலாத வைப்பாற்று வெண்மணலில் ஆழ ஊற்றுத் தோண்டி நீரை அள்ளிச் சுரைக்குடுவைகளில் நிரப்பிக்கொண்டு மீண்டும் அற்சிரப் பாதையில் நடந்தனர் துறவியர். வெள்ளெலும்புகள் செம் மண்ணில் புதையுண்டு கிடந்த சுரம் உதிரம் துடிக்கும் ஒரு பெரும் வயிறு என்ற எண்ணம் இளங்கோவுக்கு எழுந்தது. மீண்டும் மீண்டும் கைவிடப்பட்ட ஊர்கள் வழியாகச் சென்ற பாதையில் வெயில் கூந்தல் அவிழ்த்துக் கைவிரித்துச் சிரித்து வெறியாடும் வெள் ளணங்குகள்போலக் கூத்தாடியது. கீழைச்சரிவில் மரங்களற்ற இரு சிறு செம்மண்திடர்களுக்குமேல் பீடத்திலேறியமர்ந்த செங்குழற் கொற்றவை என வீற்றிருந்தான் அழலவன். வெம்மை எழ எழ சூழக் கிடந்த சிறுபாறைகள் எரிந்தன. மண் வெம்மை உமிழ்ந்தது. இறும்புக்குள் நின்ற சிறு மரங்களும் காற்றும் வெம்மை கொண்டன. அவர்கள் ஒடுங்கிய பாறைச் சரிவின் இடுக்கிலிருந்து எழுந்த அரவு தீ நா நீட்டித் தலைதூக்கியபின் வளையத்தை விரித்து சோர்வாக வழிந்தோடியது. சற்றகலே கிளைகள் ஒடியும் அரவம் கேட்டு நோக்கியபோது மெலிந்து முதுகெலும்பும் கன்ன எலும்பும் மேலெழுந்த அல்லியன் அலைகைச்செறிவில் நின்று இலைகளைப் பிய்த்து வாய் வழியத் தின்றுகொண்டிருப்பதைக் கண்டனர். அவர் களை முகர்ந்ததும் அது திரும்பி மலையூற்றுபோல வழிந்த கண் களால் உற்று நோக்கியபின் கிழிந்த முரசு என விலா அதிர ஒருமுறை பிளிறிவிட்டு முன்னகர்ந்து சென்றது.

அன்று மாலை குடுவை நீரும் உணங்கரியும் தீர்ந்தது. இரவு எங்கும் தங்காமல் விண்மீனொளியையே துணைகொண்டு நடந் தனர். மறுநாளும் அதர்தேடி, சுரம் தாண்டிச் சென்று இரு சிறு குன்றுகளை ஏறிக்கடந்து அதற்கு மறுநாள் பசித்து விடாய்கொண்டு கால்கள் தளரத் தென்திசையில் சுண்ணமெரியும் சூளையென வெண்ணிறவெம்மை செறிவாக ஒளிவிட்ட வானை நோக்கிச்சென்ற பாதையில் நடந்தனர். அன்று மாலை எண்மரும் உடலெங்கும்

செம்புழுதிமூடி மண்பாவைகள் என நடந்து சென்றபோது அப் பாதையில் அவர்கள் கண்ட முதல் மனிதன் ஓர் கல்வேல மரத்தடியில் ஈரி அணிந்து கைத்தடியும் கிழியுமாகக் கண்மூடிப் படுத்திருந்தான். அவன் தாடியும் தலையும் சடை கொண்டு கால்கள் வேர்கள்போல மாறி ஒரு பாலைநில முள்மரமெனத் தோன்றி னான். அவனிடம் இங்கு நீரும் உணவும் எங்கு கிடைக்குமென அடிகள் கேட்டார்.

அவன் தன் மங்கிய கண்களைத் திறந்து நோக்கிச் சிலகணம் கழித்து அக்கேள்வியை உள்ளெடுத்துக் கொண்டவனாக ''இங் கிருந்து தெற்கே எட்டுக் கல் தொலைவில் கழுகுமலை என்னும் குன்று அருகே சாக்கைய அன்னையின் அறச்சாலை உள்ளது. அங்கே உணவும் நீரும் நோய்தீர மருந்தும் தந்து காப்பர். அத்திசை செல்க'' என்றான்.

பாறைக்குன்றுகளாக இருந்த கழுகுமலையின்மீது கல் மகுடம் என அறக்கோட்டம் தெரிந்தது. அங்குச் செல்லும் பாறைப் படிகள் அந்தணர் மார்பின் புரிநூல் எனத் தெரிந்தன. குன்றுக்குக் கீழே விரிந்த இலைப்பந்தலில் இரவலர் குழுமியிருந்தனர். வறண்ட தென்நில விரிவிலிருந்து வந்த கரிய மக்கள் இறைஞ்சியும் ஈரியும் உடுத்தி உலர்ந்த உதடுகளும் மண்படிந்த குழற்கற்றைகளுமாகப் பசி எரிந்த கண்களுடன் காத்து நின்றனர். அடிகளும் சுற்றமும் அருகணைந்தபோது இளம் இரவர் ஒருவர் முன்வந்து வணங்கி ''ஆன்றோர் வருக. இவ்வறச்சாலை பேறு பெற்றது'' என்று முகமன் சொன்னார். அவர்களை அழைத்துச்சென்று பந்தலுக்கு உள்ளே விரித்த பாய்களில் அமரச் செய்தார். கல்தொட்டி நீரை அள்ளிக் காலும் முகமும் கழுவி வந்ததும் அவர்களுக்கு பனையோலைத் தொன்னைகளில் உப்புடன் மோர் சேர்த்து புளித்த கூழைக் கொணர்ந்து அளித்தார். உணவு உயிராகும் விந்தையை அடிகள் அறிந்தார்.

''இந்த அறச்சாலையை நடத்துவது யார்?''என்றார் அடிகள். ''எங்கள் அறச்சாலையின் தலைவியை நாங்கள் பிணிதீர்த்தாள் என்றே வழங்குகிறோம். தன் கைகளின் ஒழியாப் பேரன்பால் அமு தூட்டும் அவளை இங்குள்ள மக்கள் சோற்றுடையன்னையாகவே வணங்குகின்றனர்'' என்றார் இரவர். ''அவள் யார் என்றோ எங்கிருந்து வந்தாள் என்றோ நாங்கள் அறிந்ததில்லை. இங்கு வந்த வணிகர் சிலர் மூலம் ஒரு செய்தி பரவி பலரும் அதை நம்பத்தலைப் பட்டுள்ளனர்.'' அச்செய்தி யாது எனக் கேட்ட அறவோரிடம் இரவர் ''தென் மதுரை எரித்த தென்னகமுதல்வியாகிய கண்ணகி

யின் மகள் இவள். இயற்பெயர் மணிமேகலை. திருக்கடையூர் ஆடற்செல்வி மாதவிக்கு கோவலனில் பிறந்த மகள். கோவலன் கொலையுண்ட பின்னர் தாயும் மகளும் சாக்கைய நெறிசேர்ந்து அறம் கொண்டனர் என்று சொல்லப்படுகிறது'' என்றார் இரவர்.

ஆ

கழுகுமலை அடியில் இரவு தங்கிய அடிகள் மறுநாள் காலை கண்விழித்துத் தன் காலை நெறிகள் முடித்து உணவருந்திக் காத்திருந்தார். இளவெயில் பரவிய பின் இளம் இரவர்கள் இருவர் வந்து வணங்கி அவரைச் சந்திக்க அன்னை உளம் கொண்டிருப் பதாகச் சொன்னார்கள். அவர்களுடன் கழுகுமலைமீது ஏறிச் சென்றார் அடிகள். காலை ஒளியில் வறண்ட நிலத்தில் குற்றிலை இறும்பு கடலலை உறைந்ததுபோல விரிந்து சென்று வட்டத் தொடு வான் கோட்டை அணைந்தது. ஓரடிப்படிகள் வழியாக இரவர் சரசரவென ஏறிச் சென்றார். செங்கல்லால் ஆன சிறிய முகப்பு மண்டபத்தில் நின்ற இரவர் அடிகளை வணங்கி முகமன் சொன்னார். உள்ளே ஒரு வேம்புமரம் பாறையிடுக்கில் வேரூன்றிப் பச்சை இலைச்சுமை விரித்துக் காலைக்காற்றில் குலுங்கி நின்றது. அதன் கீழே இருந்த கல் மண்டபத்தில் பிணிதீர்த்தாள் அன்னை அமர்ந்திருந்தாள். வடித்த நீண்ட காது தோள்மீது சரிய மழித்த தலைமீது துவராடை போர்த்தி அவ்வாடையை வளைத்து உடல் மூடிக் கைகளும் பாதமும் மட்டும் தெரிய அமர்ந்திருந்தாள். சிவந்த முகத்தில் வெயிலில் காய்ந்த தாமரை இதழ்போல முதுமையின் சுருக்கங்கள் பரவியிருந்தபோதும் விரிந்த நீலவிழிகள் யவனமதுச் சிமிழ்கள் என ஒளிவிட்டன. ''அடிகள் வருக!'' என்று கூறி எழுந்து அன்னை கைக்கூப்பினாள். ''தங்கள் அடிபணியும் பேறு பெற் றேன்...'' என அடிகள் முழந்தாளிட்டு அவளை வணங்கினார்.

அமளியில் அமர்ந்ததும் அடிகள் அவளை வணங்கித் தன்னை யாரென உரைத்தார். குடவாயிற்கோட்டம் நீங்கியதையும் அறிவமர் செல்வி அமர்ந்த மலைமீது சென்று மலையிறங்கி மதுரை வந்து தென்திசை சேர்ந்ததையும் விளக்கினார் ''பெரும்பாலையில் ஒரு சருகு பறந்து செல்வதைக் காண்கையில் என்ன நினைப்பீர் அடி களே?'' என்றாள் அன்னை அடிகள் வணங்கி ''அது போகும் திசையை வானம் அறியும் என'' என்றார். ''ஆம், திசையற்ற எவ்வசைவும் பூமிமீது இல்லையென்றறிக'' அன்னை புன்னகை செய்தாள்

அடிகள் ''அன்னையே உங்கள் இவ்வுடலில் உங்கள் பழம் பிறப்பை அறிய ஆவலுற்றேன்'' என்றார். அன்னையின் முகம் மெல்ல மலர்ந்தது ''ஆம், நீர் அறிந்தது மெய்யே. நான் புகார்நகர்க் கணிகை மாதவியின் மகள். பெருவணிகன் கோவலனின் உதிரம். மங்கலமடந்தையின் முறைமகள்.'' அடிகள் முகம் மலர்ந்து கைகூப்பி ''தாங்கள் பேறு பெற்ற பிறப்புடையவர்'' என்றார்.

மணிமேகலை முகத்தில் மெல்லிய துயரம் கடந்துசென்றது. ''ஆம்...'' என்றாள் நெடுமூச்சுடன் ''பொன்னென்றால் உலைபுக்கு உருகினால் மட்டுமே மதிப்பு...'' அவள் முகத்தில் சுனைநீரில் இள வெயிலென ஒரு புன்னகை அலையாயிற்று. ''நான் பிறந்தபோது என் குலப்பெண்டிர் பொன்னுருகி முத்தாயிற்று என்று கூவியபடி என் தாயின் அருகே வந்தனர். ஆனால் அவளோ கண்ணீருடன் முகம் திருப்பிக்கொண்டாள். கணிகையின் அழகு கண்ணீராக மாறும் என அவளறிந்ததுபோல் யாரறிவார். எந்தைக்குச் செய்தி போனபோது பாங்கரும் ஏவலரும் பரிசில் ஏந்திச் சூழ்ந்துவர அத்திரி ஊர்ந்து எங்கள் இல்லம் வந்தார். தெரு முகப்பிலேயே அவரை எங்கள் குலத்தின் மூத்த கணிகையர் எதிரேற்று மாலையணிவித்துப் பொன்னகையும் மணியாரமும் பரிசு கொண்டனர். எட்டு நாட்கள் கணிகையர் தெருவில் எவருமே உலை ஏற்றவில்லை. யவன மதுவும் சீன உணவும் எங்கும் குறைவறக் கிடைத்தன. அந்தணர்க்கும் பாணருக்கும் விறலியருக்கும் ஏழு நாட்கள் தன் கைசிவக்கத் தோள் சலிக்க அள்ளி அள்ளிப் பரிசளித்தார் எந்தை.

ஏழு நாள் வாலாமை தீர்ந்து மஞ்சள்தூநீர் நீராட்டு முடிந்தபின் எட்டாம் நாள் எனக்குப் பெயர் சூட்டினர். எந்தையின் மூதாதை ஒருவர் முன்னாளில் மரக்கலம் புயல்பட்டு உடைந்து கடலில் விழுந்து அலைகளில் அலைந்தபோது கடல் நடுவே தோன்றிய கன்னி ஒருத்தி அவரைக் கரைசேர்த்தாள். அவள் தன் பெயர் மணி மேகலை என்றாள். அத்தெய்வத்தின் பெயரை எனக்கு இடவேண்டு மென வேண்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னார். மேகலை அணிந்த ஆயிரம் கணிகையர் கூடி மங்கல மலரும் அரியும் பெய்து குரவையிட்டு வாழ்த்த எந்தை சொற்படிக் குலமூத்த பெருங்கணிகை எனக்கு மணிமேகலை என்று பெயரிட்டாள். நான் கணிகையர் கைகள்தோறும் உலவி வளர்ந்தேன்.

அந்நாள் ஒன்றில் காவிரிப்பூம்புனலாடச் சென்ற என் அன்னையும் தாதையும் உளம் பிரிந்தனர். அன்னை வாடிய மலர் மாலைபோல மஞ்சத்தில் சரிந்தவள் எழவேயில்லை. ஏழு நாள் சென்றபின் எந்தையும் அவர் குலமகளும் மதுரைப் பெரும்

பாதையில் செல்லக் கண்டதாகக் கணிகையர் தெருவுக்கு வந்த வட வணிகன் ஒருவன் சொல்லி அறிந்தோம். மாடல மறையவனிடம் அன்னை மடல் கொடுத்தனுப்பினாள். மறையோன் மீண்டு அவர்கள் மதுரை நகர் புகுந்த செய்தியைச் சொன்னார். அவர் கொண்டுவந்த ஓலையை அன்னை மன்று கூட்டி அனைவருக்கும் காட்டித் தன் கற்புக்கு பழுதில்லை என்றறிவித்தாள். ஆயினும் கணிகையர் தெருவில் என் பிறப்புக் குறித்த இளநகை சேர்ந்த சொற்கள் ஒலித்தபடியேதான் இருந்தன.

மதுரை எரிந்த செய்தி புகாரைப் புயற்காற்றுபோல வந்த டைந்தது. நகரெங்கும் மக்கள் கூவி ஆர்த்தபடி தெருக்களில் இறங்கி ஓடினர். ஆலயங்களில் புகுந்து தெய்வங்களை வணங்கினர். 'திருமா பத்தினி வாழ்க!' 'மங்கல மடந்தை வாழ்க!' என்ற ஒலிகளால் நகரமே முரசுத்தோல் என அதிர்ந்தது. களி கொண்ட மக்கள் திரள் திரளாக வணிகர் தெருவுக்குள் புகுந்து கண்ணகி வாழ்ந்த இல்லத்தைச் சூழ்ந்தனர். அவளது கால்கள் நடந்த மண்ணை அள்ளி முடிந்து கொண்டுசென்றனர். பெண்டிர் கண்ணீர் விட்டு அழுதனர். மன்னனும் சுற்றமும் அணிபடை புடைசூழ எழுந்தருளி மாநாய் கனையும் மாசாத்துவானையும் கண்டு வணங்கினர்.

செய்திவந்த அன்றே நகரிலிருந்து வினைவல் பெண்டிரும் ஏவல் மாக்களும் கூடிய திரளினர் கணிகையர் தெருவில் நுழைந்து கூவி ஆர்த்தபடி எங்கள் இல்லத்தைத் தேடிவந்தனர். மண்ணையும் கல்லையும் அள்ளி வீசித் தூற்றினர். கூட்டம் பெருகிவரக் கண்ட முதுகணிகையர் சிலர் என் அன்னையைப் பேசிப்பேசி ஏற்கச்செய்து அழைத்துச் சென்றனர். என்னை மார்போடணைத்தபடி அவிழ்ந்த கூந்தலைச் சுற்றி முடிந்து பழைய உடையை அணிந்து கண்ணீர் உதிர அன்னை அவர்களுடன் இருளில் நடந்து சென்றாள். நகரமெங்கும் மங்கல ஒலிகள் எழுகையில் கணிகையர் தெருவில் வசைகளும் ஊளைகளும் கேட்பதைக் கேட்டேன். அன்றிரவே எங்கள் இல்லம் மக்களால் தீயிடப்பட்டது. சினம் கொண்ட நகர் மக்கள் எங்களைத் தேடி அலைந்தனர்.

கோட்டையைக் கடந்து கரவுப்பாதை வழியாக அகழியைத் தாண்டிப் புறஞ்சேரியில் சாக்கையர் பள்ளி ஒன்றில் எங்களைக் கொண்டு சேர்த்தனர். அச்சத்தால் நடுங்கியபடி இருவரும் பள்ளி யின் குச்சரகுடிகையின் குளிர்ந்த கல்தரையில் இரவைத் தூங்காது கழித்தோம். மறுநாள் காலை முதுஇரவர் எங்களைப் பார்க்க விழைவதாகச் சொன்னார்கள். என்னையும் அழைத்துக்கொண்டு அவர் முன் சென்று நின்று அன்னை கதறி அழுதாள். முதுஇரவர்

கனிந்த குரலில், அஞ்சவேண்டாம் என்றார். வினைப்பயன் உறுத்துவந்து ஊட்டுமென்பதே நெறியாகையால் நிகழ்வன எதற்கும் அஞ்சுதலும் கலங்குதலும் பொருளற்ற செயலேயாகும். அறவாழி அறிவன் அடிகள் எண்ணி அனைத்தையும் அங்கே ஒப்படைத்துத் துன்பமும் இன்பமும் நிகரே என வாழ்தலே உகந்தது என்றார் அவர். என் இளமையில் நான் கேட்ட முதல் அறச்சொல் அது. பதம்கொண்ட வயலில் ஊன்றிய செழும்விதை என என்னுள் இறங்கியது அது.

என் அன்னை விழைந்தால் வடவணிகருடன் படகேற்றி வடநாடு செல்ல ஆவன செய்வதாக அடிகள் சொன்னார். அன்னை அதை விரும்பவில்லை. 'இந்நகரில் இவள் கணிகை மகள் மட்டு மல்ல அடிகளே. இவள் பெருங்குல வணிகன் மகள். திருமா பத்தினியின் குழவி. இவளுக்கு அக்குலப்பிறப்பே செல்வமாகும். வடநாட்டில் அச்செல்வத்தை அவள் இழப்பாள்' என்றாள் அன்னை. 'உன் குலத்தை நீ உதற விழைகிறாயா?' என்றார் அடிகள். 'ஆம், அடிகளே. என் இளவயது முதல் நான் கண்டுவந்த கனவு அதுவேயாகும். கோவலற்குத் தோழியானதும் அதன் பொருட்டே' என்றாள் அன்னை. அடிகள் புன்னகை புரிந்து 'நீ பிழை செய்தாய் மகளே. அறிவால் மட்டுமே பிறப்பைத் தாண்டுதல் இயலும். இப் பிறப்பு மட்டுமல்ல எழுபிறப்பும் மெய்யறிவின் புணையாலேயே நீந்தப்படும்...' என்றார். 'ஆம். அதை இப்போது உணர்கிறேன். அவ்வாறே ஆகுக' என்றாள் அன்னை.

அன்று முதல் நாங்கள் அறச்சாலையின் பின்பக்கம் ஈமப்புறங் காட்டில் குடில் கட்டி வாழலானோம். என் அன்னை அறப் பள்ளியில் சேர்ந்து முடி மழித்துத் துவரணிந்து இரவிணியானாள். அறச்சாலையில் பணி புரிந்தும் நூல் கற்றும் நான் வளர்ந்தேன். அழகுள்ள உடல் கொண்டு நான் வளர்ந்தபோது என் அன்னை மேலும் மேலும் கவலை கொண்டவளானாள். என்னையும் அற வழிக்கே ஆட்படுத்த எண்ணினாள். ஆனால் கன்னிப்பருவத்தில் மட்டுமே துவரணிய நெறியுள்ளது என்றனர் அறவோர். துவரணியா இரவிணியாக நான் வளர்ந்தேன்.

ஒருநாள் என் துயிலில் நான் அச்சமும் ஆர்வும் அளித்த கன வொன்றைக் கண்டேன். நீராடக் காவிரியில் இறங்குகிறேன். நீரில் மூழ்கி என் கால்களைப் பார்க்கையில் அவை வாளைமீன்போல மாறியிருக்கக் கண்டேன். இளந்தென்றலில் மிதந்துசெல்வதுபோல நீருக்குள் என்னால் செல்ல முடிந்தது. மின்னல்கள்போலவும் வாள்நுனிச் சுழல்கள்போலவும் மணியார நெளிவுபோலவும்

அலைகளில் நெளியும் ஒளியைக் கண்டபடி நீர்த்தாவரங்கள் அலைபாய்ந்த ஆழத்தில் சென்றபடியே இருந்தேன். மீன்கள் நீரை உண்டபடிச் செவிள்கள் பறக்க என்னருகே சென்றன. அவற்றின் இமையா விழிகளில் என்னை அவை அறியுமென்பதை உணர்ந்தேன். நீலத்திரை ஒன்று என்னை எதிர்கொண்டது. அதைத் தொட்டுக் குளிரை உணர்ந்து மெல்ல விலக்கியபோது கடலுக்குள் இருந்தேன். நீலநீரின் ஆழத்தில் நீல நிற இருள். எனக்குக் கீழே இருளின் ஆழத்தில் கண்கள் ஒளிரும் பெருமீன்கள் மிதந்து சென்றன. நீண்ட தூரம் சென்றபின் ஓங்கிய ஆலய விமானம் ஒன்றின் உச்சிக்குடத்தைக் கண்டேன்.

வான்பருந்து என அவ்விமான முகட்டில் சென்றமர்ந்து கீழே நோக்கினேன். இடிந்த குவி மாடங்களும் இடியாத கோயில்களுமாக மூழ்கிய பெருநகர் ஒன்றை அங்கே கண்டேன். அதன் கற்கள்மீது பச்சைப்பாசியின் பளிங்கு படிந்து அடர்ந்து மூடியிருந்தது. அந்நகரின் தெருக்கள் வழியாக மீன்களுடன் சேர்ந்து நீந்தினேன். இருண்ட மாடங்களுக்குள் சென்று ஒழிந்த அறைகள்தோறும் சுவர்களைத் தொட்டு அலைந்தேன். சரிந்த கோயில்களின் கல் தூண்களை வருடிச் சென்றேன். இருண்ட கருவறை ஒன்றுக்குள் இருந்து யாரோ என்னை நோக்குவதை உணர்ந்து. ஒருகணம் தயங்கி நின்றேன். உள்ளே இரு கண்களின் மெல்லிய ஒளியைக் கண்டேன். தலையை உள்ளே நீட்டியபோது சுவரில் பதிந்து நின்ற பெண் தெய்வச்சிலையொன்று தெரிந்தது. நான் எப்போதுமே கண்டிராத தெய்வம். அதன் கண்கள் மட்டும் உயிருள்ளவை. அவற்றின் விழிகள் என்னை நோக்கின. ஏதோ சொல்ல முயன்றன. அச்சொல்லை நான் புரிந்துகொண்டேன்.

அக்கணத்தில் நான் விழித்துக்கொண்டேன். அன்னையைக் கூவியபடி எழுந்து அமர்ந்தேன். இரவின் ஒலிகள் நிறைந்த இருளுக்குள் அப்பார்வை அப்போதும் எஞ்சியிருப்பதாகப் பட்டது. அஞ்சி உடல் நடுங்க விம்மி விம்மி அழுதேன். விளக்கைத் தூண்டி எழுந்து அருகே வந்த அன்னை என்னைத் தொட்டதுமே அவள் அஞ்சிவந்தது நடந்துவிட்டதை அறிந்தாள். அதன் பின் என்னை அவள் விட்டுப்பிரிந்ததே இல்லை. என் உடல் மாறுவதை உணர்ந்தேன். மாரனின் மாயை என்னை அண்டலாகாது என அன்னையும் அடிகளும் மீண்டும் மீண்டும் சொன்னார்கள். என் நெஞ்சை அறிவனடிகளில் வைத்துக் கண்களை நிலம்விட்டு மேலெடுக்காமலேயே நாட்களைக் கடத்தி வந்தேன்.

மேழமாத முழுநிலா நாளில் அறிவனுக்குரிய அறிநிலை விழா

வந்தது. மலர் கொய்யும்பொருட்டு தோழிகளுடன் நானும் நல்லறச் சோலைக்குச் சென்றேன். அந்நாளில்தான் புகாரில் மலராடை அணிதலும் பூம்புனலாட்டமும் நடக்கும். அணிகள் சூடி ஆடை பொலியக் கணிகையரெல்லாம் காவிரிக்கழிமுகத்தில் கூடி ஆடியும் நீந்தியும் மகிழ்வார்கள். சிற்றில் கட்டியும் நீராடியும் சிறுவர் களிப்பர். மலர்கொய்யச் செல்கையில் ஆகூழ் என்று அறிந்தும்கூட சிறுவர் களின் ஆடல் கண்டு என் நெஞ்சு சற்றே மகிழ்ந்தது. என்னைப் பாதையில் கண்ட புகார்நகர்ச் செல்வன் மகன் ஒருவன் காமம் கொண்டான். என்னைப் புகார்நகர்க் கணிகையாகவே அவன் எண்ணினான். மலர்மாலை தோளில் அணிந்து, களித்தேறல் மாந்தி நிலையழிந்து, தன் தேரில் ஏறி என்னைத் தூக்கிச்செல்ல வந்தான். நானும் தோழியும் ஓடி அறச்சோலைக்குள் சென்றோம். அக்களி மகன் எங்களை அங்கும் துரத்தி வந்தான். பூச்செடிப்புதருக்குள் ஒளிந்திருந்து அவனிடமிருந்து தப்பினேன்.

அன்றிரவு அன்னையிடம் நடந்ததையெல்லாம் சொல்லி அழு தேன். என் உள்ளம் அறிவனுக்குரியதாயினும் உடல் கணிகைக்கு உரியதே என்றாள் அவள். உடலை அஞ்சுக என்று சொல்லி என் தலையைத் தொட்டுக் கண்ணீர் விட்டாள். அன்றிரவு தனிமையில் இருக்கையில் என் உடலையெண்ணிக் கொண்டேன். வஞ்சம் கொண்ட எதிரியென அது காத்திருக்கிறது என்று தோன்றியதும் தளித்திருக்கவே அஞ்சினேன். ஓயாத செயல்களில் என்னை ஆழ்த்திக் கொண்டேன். செயல்களில் ஊடாக நெளிந்தோடும் வழி எண்ணங்களுக்குத் தெரியும் என்று அறிந்தேன்.

அன்றிரவு துயில்கையில் நான் மீண்டும் ஒரு கனவு கண்டேன். அக்கனவில் நான் அந்த ஆழ்நகரத்துக் கருவறைக்குள் சிலையாக நின்றிருந்தேன். என் முன் நீலம் நெளிய மீன்கள் பறக்க முடிவின்றி நிறைந்திருந்தது வெளி. என் உடல் பதிந்திருந்த சுவரில் இருந்து நான் மெல்லப் பிரிந்து விடுபடுவதை, என் கைகால்கள் உயிர்பெறுவதை உணர்ந்தேன். நீரில் எழுந்து நீந்திப் பறந்தேன். ஆற்றில் நுழைந்து நீரைப்பிளந்து மேலெழுந்தபோது நான் நெளியும் நச்சரவாக இருந் தேன். என் உடலில் கூடிய விரைவும் குழைவும் என்னை நிலத்தில் செல்லும் கூரிய ஆவமாக ஆக்கின. ஆளற்ற புகார் நகர்த் தெருக்கள் வழியாக நீரோடையென ஓடிப் பளிங்குப்படிகளில் ஏறித் தூணிடுக் குகளில் வழிந்து ஓர் இல்லத்திற்குள் நுழைந்தேன். மலரணி மஞ்சம் மேலேறி அங்கே துயின்ற ஒருவன் மீதேறி அவனைத் தழுவி இறுக்கிக்கொண்டேன். அவனது வலுவான தோள்களையும் கைகளையும் முன்னரே தெளிவாக அறிந்திருந்தேன். அம்முகத்தை

அருகே கண்டேன். அது அச்செல்வன் மகன்.

கண்விழித்து எழுந்து இருளை நோக்கியபடி உடல் நடுங்கக் கண்ணீர் வழிய நீணேரம் அமர்ந்திருந்தேன். பின் எழுந்து ஓடி அறப் பள்ளியைவிட்டு வெளிவந்து காவிரி கடல்கலக்கும் முனையில் சோழனின் கோட்டைச்சுவரெழுந்த முனம்புக்குச் சென்று புதுப் புனல் புரண்ட ஆழ்நீர்ச் சுழலில் குதித்தேன். குளிர்ந்த நீர் என்னைத் தழுவி இறுக்கி என் உடலுள் புகுந்து மூச்சை உறையச்செய்ததையே அறிந்தேன்.

ஆனால் நான் இறக்கவில்லை. என் நினைவு மீண்டபோது யவன வங்கம் ஒன்றில் நீர்மாடம்மீது இருந்தேன். படுமர மொன்றைப்பற்றி அலைகளில் நினைவிழந்து கிடந்த என்னை மீட்டு உயிரளித்தனர் அவர்கள். கடலில் அத்தனை தொலைவுக்கு உயிரு டன் மீண்டதால் என்மீது கடல்களை ஆளும் நீர்த்தெய்வமான ஐதிரைத் தேவியின் அருள் கூடியிருப்பதாக அவர்கள் எண்ணினர். அம்மரக்கலத்தில் வந்த மூத்த யவன அறிஞர் தென்மொழியும் செம் மொழியும் கற்றவராக இருந்தார். அவரிடம் நான் கற்ற அற நூல்களைப்பற்றி உரையாடினேன். கடலில் அவரிடம் மேலை அறவியல் கற்றுப் பயணம் செய்தேன்.

இப்புடவியே ஒற்றைப்பெருநிகழ்வு என்றார் அவர். நம் விழி களும் விழிகளை அளக்கும் சித்தமும் சித்தத்தை ஆளும் தன்னிலையுமே அதை நிகழ்வுகளின் வெளியாகவும் ஓட்டமாகவும் காண்கின்றன. காலமென்பது புடவியை அளக்கமுடியாத சித்தம் கொள்ளும் வியப்பு மட்டுமே என்றார். என் வாழ்க்கையை அக் கோணத்தில் நோக்கியபோது முதற்கணம் அச்சமும் பிறகு பேரமைதியும் கொண்டேன். நான் எதுவுமே செய்ய இயலா தென்பது குறித்தது அச்சம். நான் எதையுமே செய்யவேண்டுவ தில்லை என்பது குறித்தது அமைதி. என்னைக் கொண்டுசெல்லும் புடவிப்பேரலை அதன் இலக்கை அறியும் என்றார் அவர். அவர் பெயர் தைபீரியர். அவர் சொற்களிலேயே மேலைநாட்டு மெய்யறி வாளர்களான சோக்ரதர், பிலாத்தர், அரிசித்தர் ஆகியோரின் நற் சொற்களைக் கற்றேன். அறிவின் தெய்வமாகிய சோபியைக் கன்னியை வணங்குபவர் அவர். அவரை என் நல்லாசிரியராக இன்றும் வணங்குகிறேன்.

எங்கள் வங்கம் பெருங்கடல்களைச் சுற்றிச் சோனகநாடு சென்று அங்கிருந்து யவனநாடு செல்லும் இலக்கு கொண்டது. ஆனால் வழியிலேயே கடும்புயல் எங்களை சுழற்றிக் கொண்டு சென்றது. வானம் கடலாகிக் கவிழ்ந்ததுபோல் மழை கொட்டியது.

திசையற்ற வெளியில் காற்றின் கைகளில் எங்கள் கலங்களைக் கொடுத்து விட்டுக் கடலன்னையை எண்ணி வணங்கிக் காத்திருந்தோம். அத்தகைய பெரும்புயல் அப்பருவத்தில் பொதுவாக நிகழ்வதில்லை என்றனர். வணிகக்காற்று என்று யவனர் சொன்ன மேலைக்காற்று வணிகர் வங்கங்களைத் தாயின் கரங்கள்போலத் தழுவிக் கொண்டுசெல்வதே வழக்கம். அந்தமுறை அன்னை நெறி பிழைத்தமைக்குப் புறத்தவளான நான் நாவாயில் இருந்ததே முதல் வினை என்று மீயான்கள் கருதினர். என்னைக் கொன்று கடலில் வீசிவிட எண்ணினரென்றாலும் தங்கள் நல்லாசிரியனை மீற ஒண்ணாது வாளாவிருந்தனர். ''கடல்களை ஆளும் கன்னியாகிய ஹிரைக்கு ஓர் இலக்கு உள்ளது. அது என்ன என்று அறியும்வரை காத்திருப்போம்'' என்றார் அவர்.

புயல் ஓய்ந்தபோது அலை அடங்கிய கடலின் மேலை விளிம்பு பச்சை நிறத்துடன், வான்கன்னியின் கைநழுவிய போர்வையெனத் தெரிந்தது கண்டோம். அங்கிருந்து பெரிய காரண்டங்கள் நீலமும் வெண்மையும் கலந்த அகன்ற சிறகுகளை வீசிக் கூவி ஆர்த்தபடி எங்கள் வங்கப் பாய்மரங்கள் நோக்கி வந்தன. ஆசிரியர் கன்றுத்தோல் சுருளில் வரைந்த கடல்பாதை வரைவை எடுத்து விரித்து அதன்மீது வடமுள்ளை வைத்துத் திசை தேர்ந்தார். அது சுரிகுழற் காப்பிரிகள் வாழும் நாடு என்றறிந்ததும் அவரே அஞ்சி உடல்தளர்வதைக் கண்டேன். மரக்கலமெங்கும் பேரச்சம் பரவியது. கலத்தைத் திருப்ப ஆசிரியர் ஆணையிட்டார். வடங்கள் இழுக்கப்பட்டன. பாய்கள் நிமிர்ந்தன. வங்கம் திரும்பியது. ஒவ்வொரு மீயானும் தன் இறுதி மூச்சையும் செலுத்தித் துழையுந்தக் கண்டேன்.

கலங்களை அழிக்கும் காப்பிரிகள் பிறமக்களைக் கண்டதுமே கொல்லும் நெறிகொண்டவர் என்றார் ஆசிரியர். யவன மரக்கலங்கள் புகாரும் கொற்கையும்விட்டுக் கடல் நுழைந்தபின்னர் சோனகர்துறையில் கலம் அடுக்கச்செய்வது அதன் பின்னர் யவன நாடுவரை எங்கும் கரையடுக்காமல் ஆழ்கடலூடு செல்லும் பொருட்டேயாகும். அதற்கெனச் சோனகர் துறைகளில் பெருந் தொகை கலத்திறை செலுத்தவேண்டும். சோனக மன்னர்களுக்கு காட்சிப்பொருளும் பிறருக்குக் கைப்பொருளும் அளிக்கவேண்டும். சோனகர் துறையில் நீர்கூடப் பெரும் விலை உள்ளதாகையால் யவனரின் பொருளை உண்ணும் விலங்குகள் போல் அவை வாய் திறந்து காத்திருந்தன. ஆயினும் காப்பிரி நிலத்தை அணுகுதலைவிட அதுவே சிறந்தது என்றார் ஆசிரியர்.

எங்கள் வங்கம் அலைகளில் ஏறி விரைகையில் அலைகள்மீது

ஓங்கில் கூட்டங்கள்போலச் சிறுபடகுகளில் ஏறி காப்பிரிகள் எங்களைத் தொடரக் கண்டோம். அவர்கள் கைகளில் விற்களும் வேல்களும் இருந்தன. கற்சிலைபோல் உடலில் இடைமட்டுமே மறைக்கப்பட்டிருந்தது. அவர்களின் ஒளிரும் வெண்பற்களைக் கண்டோம். அம்புகள் பறந்து வந்து கடலில் விழுந்தன. கலத்தை உயிரின் இறுதித் துளி கொண்டு செலுத்தினர் கலமக்கள். காப் பிரிகள் சிறைப்பிடித்துக் கொண்டு வந்திருந்த கடற்பறவைகளின் கால்களில் துணி சுற்றி எண்ணையிட்டு நெருப்பு கொளுத்தி வானில் விட்டனர். கூவிக்கரைந்தபடி அப்பறவைகள் வானில் பறந்து எங்கள் வங்கம் நோக்கி வந்தன. பாய்களில் அமர்ந்தும் எரிந்து விழுந்தும் எங்கள் கலத்திற்கு அவை நெருப்பிட்டன. பாய்கள் எரிந்து தளர்ந்த போது எங்கள் நாவாய் விரைவிழந்தது.

பெருங்குரலெழுப்பியபடிக் காப்பிரிகள் எங்கள் கலத்தைச் சூழ்ந்துகொண்டனர். மீகாமரெல்லாம் தங்களுக்கு அரிய பொருட் களை மார்போடணைத்தபடி கலமுற்றத்தில் கண்ணீருடன் அமர்ந்து வானை நோக்கி மன்றாடினர். ஆசிரியர் தன் இருக்கையில் சிலை யென அமர்ந்திருந்தார். என்னிடம் ''செய்வன செய்தோம். இனிப் பெருநெறி இயல்க'' என்றார். நான் ஆவலுடன் கலமுகத்தில் ஏறி நின்று நீரில் பாய்ந்துவரும் காப்பிரிகளை நோக்கினேன்.

அவர்களுள் ஒருவன் என்னை நோக்கிக் கை நீட்டி ஏதோ கூவினான். உடனே மேலும் பலர் என்னை நோக்கினர். அம்புகள் என்னைத் துளைக்கப்போகின்றன என்றெண்ணி நான் அஞ்சி நின்றேன். ஆனால் ஒவ்வொருவராக என்முன் தலை வணங்கிப் படை தாழ்த்திப் பணிவதையே கண்டேன். சற்று நேரத்தில் அந்தத் தோணிகளில் எல்லாம் காப்பிரி மக்கள் முன்னால் உடல் சரித்து ஓசையின்றிப் பணிந்து கிடந்தனர். ஆசிரியர் எழுந்துவந்து அவர் களை நோக்கினார். அவர் முகம் நகையொளி கொண்டது. 'உன்னைத் தங்கள் இறைவியாக எண்ணுகின்றனர் இம்மக்கள்' என்றார். 'என்னையா? ஏன்?' என்றேன். 'தெரியவில்லை. ஆனால் அவர்கள் உடல்மொழி அதையே காட்டுகிறது. கைநீட்டி அவர் களிடம் படைக்கலங்களைக் கைவிடும்படிச் சொல்.' என்றார். நான் அங்கனமே சைகை காட்டினேன். அவர்கள் அக்கணமே அனைத்துப் படைக்கலங்களையும் வீசினர்.

அவர்களை இனி அஞ்சவேண்டியதில்லை என்று ஆசிரியர் சொன்னார். அவருக்கு அவர்கள் மொழியில் சில சொற்கள் தெரிந் திருந்தன. எங்கள் பெருவங்கம் கரையடுத்ததும் கூட்டம் கூட்டமாகக் காப்பிரி மக்கள் கரையில் கூடி வெண்மலர்களைக் கையில் ஏந்தி

ஆட்டி நகையாடி வரவேற்றனர். கரைக்குள் நீளும் கடலின் கை போல நீண்ட பெரிய ஆறு ஒன்றின் கழிமுகத்துக்குள் கலங்களைச் செலுத்திக் கரையடுக்கச் செய்தோம். கரையில் அன்னையரும் தன்னியருமாகப் பெண்டிர்குலங்கள் கூடி நின்று வாழ்த்தொலி எழுப்பின. தோணிகளில் இறங்கிக் கரைக்குச்சென்ற என் கால்கள் அம்மண்ணில் படுவதற்கு முன்னர் மூதன்னை ஒருத்தி என் கால்களைத் தன் கரங்களில் வாங்கிக்கொண்டாள். என்னை அன்னையரே தூக்கி சென்றனர். கொம்புகளும் முழவுகளும் ஒலிக்க ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கிளைஞரும் குடிகளும் குதித்து ஆடிச் சுழன்றனர். அவர்கள் ஊர்மன்றுக்குக் கொண்டு சென்றனர்.

ஊர் நடுவே கல்லாலான பெரும்பீடமொன்றிருந்தது. அக்குடிகளுக்கு அன்னையரே தலைமை ஏற்பர் என்று ஆசிரியர் சொன்னார். மூதன்னை அமரும் அவ்விருக்கையில் என்னை அமரச் செய்து எனக்குப் பாலும் பழங்களும் ஊனும் அளித்தனர். நான் பழங்களை மட்டும் அருந்தினேன். எனக்கு மென்மலர்களால் ஆடை அணிவித்தனர். என் உடன் வந்த கலக்காரர்களுக்கு நறுந்தேனும் தேறல் தெளிவும் அப்பங்களும் ஊனும் அளித்துக் கொண்டாடினர். பெரும் மரங்கள்மீது முரசுகளை ஏற்றி அறைந்து காடுகளுக்குள் வாழ்ந்த தங்கள் கிளைக்குடிகளுக்கெல்லாம் செய்தி சொன்னார்கள். மழை பெய்து குளம் நிறைதல்போலக் காடு பெருகி மக்கள் சேர்ந்து அவ்வூர் நிரம்பியது. வந்தவர்கள் அனைவரும் எனக்குக் காணிக்கைகளும் பிற பொருட்களும் கொண்டுவந்தனர்.

மூன்றாம் நாள் மலைக்குடிகள் அணியணியாகத் தொடர நான் அருகேயிருந்த மலையுச்சிக்கு அழைத்துச்செல்லப்பட்டேன். என் ஆசிரியரும் கலக்காரர்களும் கூடவே வந்தனர். குறுகிய படிகளிலும் வழுக்கும் பாறைகளிலும் ஏறி உச்சிக்குச் சென்றோம். அங்கு அவர்கள் இறைவியின் ஆலயம் இருப்பதாகச் சொன்னார்கள். அன்னைக்குக் காணிக்கையாக மலரும் கள்ளும் ஊனும் உணவும் கொண்டு சென்றனர். மலைமுகட்டில் இருந்த இருண்ட பெருங்குகை ஒன்றின் வாயிலில் விலகி நின்று முரசறைந்து வாழ்த்துக் கூவினர். உள்ளிருந்து அரிமாக்கள் பல சீறி வாய்திறந்து நிலத்தை அறைந்து பேரொலி எழுப்பியபடி வெளிவந்தன. அவர்கள் ஒலியெழுப்பியபடியே இருக்க நிரைநிரையாக அரிமாக்கள் வந்தன. குட்டிகளைக் கவ்விய அரியன்னைகள் இறுதியில் வெளியேறின.

பின்னர் அன்னையர் எழுவர் எரிகுள்ளிகளைக் கொளுத்திக் கொண்டு என்னையும் ஆசிரியரையும் கூட்டி உள்ளே சென்றனர். படிந்து மடிந்து சென்ற இருண்ட அரத்திற்குள் சுவர்களில் ஒளிமிக்க

கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. விலங்குகளும் பறவைகளும் வண்ணங்களால் உயிரோவியங்களாக எழுதப்பட்டிருப்பதைக் கண்டு நினைவழியாப் பெருங்கனவொன்றில் சென்று கொண்டிருப்பதாக உணர்ந்தேன். அவ்வரை நடுவே ஒரு பெரிய தெளிநீர்ச்சுனை இருந்தது. எரிசுள்ளிகளின் ஒளியை அதில் காட்டியபோது அது ஆடியென ஒளி கொண்டு எதிர்ச் சுவரைத் துலங்கச் செய்தது. அவ் வெண்கல் சுவரில் மூன்று ஆள் உயரமுள்ள மாபெரும் ஓவியமொன்று தெளிந்தெழுந்து வந்தது. அது என் உருவம் என்று கண்டேன். புன்னகை விரிந்த இதழ்களும் விரிந்த கரிய விழிகளும் கையில் வேலுமாக நான் அரிமாவின் மேலமர்ந்திருந்தேன். பிடரிச் செம்மயிர் பறக்க அரிமாக்கள் சூழ்ந்து நின்றன.

காப்பிரி நாட்டில் நான் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தேன். என்னை அக்குடிகள் அனைத்தும் தங்கள் இறைவியாக ஏற்றன. அவர்கள் மொழியை நன்கறிந்தேன். யவன வணிகர் பொருட்டு என் ஆசிரியர் கோரியதற்கேற்ப அங்கு சில நெறிகளை உருவாக்கினேன். கடல் தாண்டிவரும் கலங்கள் அங்கு அணைவதை அம்மக்கள் ஏற்றனர். வரும் கலங்கள் அவர்கள் மூதன்னைக்குத் திறை செலுத்தச் செய்தேன். கலங்கவர் தொழிலைவிட அது அதிக வருவாய் உடையதென அவர்கள் அறிந்தனர். சோனகர் கரைகளில் இறங்காது செல்வதனால் யவனர்க்கு தொலைவு குறைந்து திறையும் மிச்சமாயிற்று. ஊனுணவும் நீரும் நிறையக் கிடைத்தன. என் ஆசிரியர் கடனீடாக எனக்கும் ஒரு திறை கொடுக்க ஏற்றார். இன்று கொற்கையிலும் வஞ்சியிலும் நாகையிலும் அணையும் யவனக்கலங்கள் அனைத்தும் அங்குள்ள புத்த பீடிகைகளில் திறை செலுத்துகின்றன. ஆகவே அறிவனின் களஞ்சியம் குறைவதேயில்லை. அப்பெரும் பொருளால் தென்நாடு மூன்றிலும் நிலம் வறண்ட ஊர் தோறும் உணவிட்டுப் பசிப்பிணி போக்குகிறோம். அறிவனருள் செய்க'' என்றாள் அன்னை.

வணங்கி அமர்ந்திருந்த அடிகள் மெல்லக் கனவிலிருந்து மீண்டு ''அன்னையே நீங்கள் இந்நிலத்துக்கே மீள்வதற்கு முடிவெடுத்தது எங்ஙனம்?'' என்றார். அன்னை மென்முறுவல் செய்து, ''காப்பிரி நாட்டில் அன்னையரே ஆள்கின்றனர். குடிகளெல்லாம் அன்னையரின் குழந்தைகள். ஆகவே அங்கு பசிப்பிணி என்பதே இல்லை. எனக்கு அளிக்கப்படும் திறைச்செல்வத்தை என்ன செய்வதென்று எண்ணி வருந்தினேன். துயர் மீதுறும் பொழுதெல்லாம் நான் இறைவியின் குகைக்குள் சென்று அவ்வோவியம் அருகே அமர்ந்திருத்தல் வழக்கம். அவ்வோவியம் எவரால் எப்போது

வரையப்பட்டதென எவருமே அறியார். வானின் இறைவல்லமை களால் வரையப்பட்டது என எண்ணினர் அம்மக்கள். அதை நோக்கி அமர்ந்திருக்கையில் நான் யார் என்ற வினா மட்டுமே என் உளமாக இருக்கும். அழியாது காலத்தில் நிற்கும் என் முகம் எங்கிருந்து தொடங்கியது? எங்கு செல்கிறது? அவ்வினாக்களுக்கு மானுடர் எவரும் பதிலுரைக்க ஒண்ணாதென நான் உணர்ந்தேன்.

மீளாத் துயர் திணிந்த நெஞ்சுடன் ஒரு நாள் இறைவியின் குகைக்குள் சென்று தனித்து அமர்ந்திருந்தேன். அன்று இரவான பின்னும் நான் மீளவில்லை. நள்ளிரவில் எரிசுள்ளி அணைந்து அக்குகை இருண்டு மறையக் கண்டேன். நான் இருக்கும் உணர்வு மட்டுமே அங்கே எஞ்சியிருந்தது என்றறிந்தேன். அன்றிரவில் வெளியே நிலவு பிறந்திருக்கக்கூடும். எங்கிருந்தோ எழுந்த வெண் ணிற ஒளியில் குகை துலக்கம் கொண்டது. என் முன் என் பெரு முகம் எழுந்து விரிந்து நின்றது. அதன் கண்களை நோக்கி அமர்ந் திருந்தேன். சற்று நேரமே அதை நான் நோக்குகிறேன் என்ற உணர்வு எனக்கிருந்தது. பின் நான் என்னை உணரவில்லை. அக் கண்கள் உயிர்கொண்டு என்னை நோக்குவதை அறிந்த பின்னரே நான் என்றறிந்தேன். அவ்வுதடுகள் சொன்ன ஒரு சொல்லை என் ஐம்புலன்களாலும் கேட்டேன். அதன் பின் ஐயங்களோ வாழ்தலின் துயரோ என்னை வாட்டவில்லை.

அச்சொல் என்ன என்று அடிகள் கேட்கவில்லை. அன்னை சொல்லவும் இல்லை. அன்று மாலை அடிகள் தென்திசை நோக்கி மீண்டும் நடக்கத் தொடங்கினார்.

ஓ

அலைதிகழ் தென்முனம்பில் வெண்மணற்குன்றுகள் சூழ்ந்த கரைக்கு அப்பால், நீல நீர்வெளி நடுவே, அலைகள் வெண்நுரைச்சீலையை ஓங்கி ஓங்கியறையும் உயர்ந்த பாறைமீது, யானைமீது அம்பாரியெனக் கன்னியன்னையின் சிற்றாலயமிருந்தது. கடற்கரையிலிருந்து நெடுந்தொலைவுக்கு ஈச்சமும் தாழையும் ஆங்காங்கே சிறுபுதர்க் கோட்டைகள் எழுப்பிச் சூழ்ந்த வெண் மணற்பாலை விரிவில் கன்னியின் கூந்தல் கீற்றுகள் என நீலக் கருமணல் வீச்சுகள் வெயிலில் மின்னிக்கொண்டிருந்தன. அலவன் குழிகளும் முள்மீன் ஓடுகளும் சங்குகளும் பரவிய மென்மணலில் நிலைத்த காற்றின் அலைவடிவங்கள்மீது கடற்பறவைகள் கூடி அமர்ந்து இரை உண்ட பின் வெண்சிறகடித்து எழுந்து கூவி வானில் முக்குளித்தன. வாள் இலை நீட்டிக் காற்றில் சுழற்றிய தாழை மரங்களுக்கு அடியில் பறவைகளின் எச்சம் சாம்பற்குவியல்கள் போல நிறைந்திருந்தது. பறவைகளை நாடி இரவில் வரும் நரிகள் குழித்த பள்ளங்களைச் சுற்றி உண்ணப்பட்ட அருக்கங்களின் வெண்ணிற இறகுகள் முட்களில் ஒட்டிக் காற்றில் சிலுசிலுத்தன. ஈச்சை நிழல்களினூடாகச் சென்ற ஒற்றையடிப்பாதை அடர்காட்டுக் குள் நுழைந்து மருத்துமலையைச் சுற்றி நீண்டு சென்றது.

சிப்பிகள் ஒட்டி யானைமருப்பெனச் செந்தேமல் பரவிய பெரும்பாறைமீது, கடலுப்பு அரித்த கற்படிகள் சுழன்று ஏறிச் சென்று அடைந்த உச்சியில், ஒற்றைச்சிறு விமானம் கொண்ட கோயிலுக்குள், கன்னியின் கால் தடம் பதிந்த பீடப்பாறை காய்ந்த மலர்களும் அருகரிசியும் மூடிக் கிடந்தது. அருகே சிறு பீடம்மீது தென்திசை நோக்கித் திரும்பிய கோலத்தில் கன்னியின் சிறுகற்சிலை நின்றது. அலையென விரிந்த கார்குழலும் கையில் தவமணிமாலை யும் குமிண்சிரிப்புமாக அன்னை கனவு நிறைந்த விழிகளை விரித்து கடல் நோக்கி நின்றாள். அவள் இடமூக்கில் ஒற்றை வைரம் கடலின் கண் எனச் சுடர்ந்தது. அவள் கால்களைத் தொட எழுந்த அலைகள் சிதறி வெண்மலர்களாக விரிந்து இறங்கிக் கொண்டிருந்தன. அவள்

கன்தொடும் திசையை ஆக்கி நிறைந்த நீலம் கடலாகவும் வானாகவும் தோற்றம் எடுத்தது. அவை இணையும் கோடு கூர்மையின் ஒளி தெறிக்கும் மாபெரும் வாள்நுனி என வளைந்திருந்தது.

கன்னியின் கரையைப் பரதவர் அஞ்சினர். அவர்கள் வாழும் குடில்கள் நீள்தொலைவில் மணற்குன்றுகளுக்குப் பின்னால் இருந்தன. கன்னியின் கடல் ஓங்கிய கரும்பாறைகளாலும் அவற்றை ஓயாது அறையும் பேரலைகளாலும் காக்கப்பட்டிருந்தது. கட்டுமரமேறிக் கன்னிக்கரைக்குச் சென்ற எவருமே மீள்வதில்லை என்றனர் பரதவர். கள்ளர் அலையும் மருத்துமலையின் அடர்காட்டைத் தாண்டிக் கரைமக்கள் கன்னிக்கரையை அணுகுதலும் எளிதல்ல. ஆகவே அன்னை என்றும் கலையாப் பெருந்தனிமையிலேயே நின்றாள். முழுநிலவு நாட்களில் மட்டும் நெடுந்தொலையில் சேரன் ஆண்ட அழகபுரியின் அழகம்மை ஆலயத்திலிருந்து மறையோர் குழு ஒன்று கொம்பும் மணிகளும் முழக்கிப் படையலும் பட்டும் கொண்டு இருள்விடியலில் கிளம்பி, காடு தாண்டி, அன்னையின் கரையை மாலையில் அடையும். அன்னைக்குத் தூநீர் முழுக்காட்டி ஆடை மாற்றி மலரணிவித்துப் படையல் இட்டுப் பூசெய்வார்கள். அன்றிரவு அன்னையின் புகழ் பாடியபடிக் கடற்கரையில் தங்குவார்கள். அவர்களுக்கு உணவும் நீரும் அன்னைக்குப் படையற்பொருளுமாகக் குடிமூத்தார் கொண்ட பரதவர் குழு ஒன்று கரை மணல் வழியாக நடந்து வந்து சேரும்.

நள்ளிரவில் நிலவின் வெண்ணொளி கடல் நீரில் ததும்பி அன்னையின் ஆலயக் கருவறையை அலைவடிவாக்கும். அதில் அன்னையின் ஆடையும் குழலும் நெளிவதுபோலவும் அவள் முகத்தில் கனவுப்பெருநகை ஒன்று ஒளிவிடுவதுபோலவும் அவள் மூக்குத்திச் சுடர் ஆயிரம் பல்லாயிரம் கதிர்விரித்து விண்மீன் என எழுவதுபோலவும் தோன்றும். நிலவு நடுவான் சேரும் உச்சிப் பூசையில் முதுபரதவர் தாங்கள் கொண்டுவரும் வலம்புரி வெண்சங்கும் புது மீனும் அன்னைக்குப் படைத்து ஆமையோட்டு யாழ் மீட்டி, தங்கள் குடிமரபாக நாவிளம்பிச் சொல் முளைத்து அழியாதிருக்கும் அன்னையின் புகழ் திகழும் பழம்பாடல் பாடி வணங்குவர். அறியாச்சொற்களாலான அப்பழம்பாடலை அச்சமும் வியப்பும் திகழ மறையோர் மணற்கரையில் நின்று கேட்பார்கள். தங்கள் முன் விரிந்து அலையடிக்கும் அறியாக் கரியநீர்வெளி போன்றதே அப்பாடலும் என எண்ணிக் கொள்வர். செவ்விடியலில் அன்னையின் கோயிலைத் தூய்மை செய்தபின் பரதவர் யாழ்மீட்டிப் பாடியபடியே தாழைநிழல் வழியாக நடந்து தங்கள் துறைகளுக்கு

மீள்வர். மறையோர் அன்னையை முழுக்காட்டி மீண்டும் மலரும் ஆடையும் அணிவித்து வாழ்த்தி வணங்கியபின் ஊர் திரும்புவர்.

அன்னைக்குப் பின்னால் மானுட வாழ்க்கை அலையடித்தது. அவளுக்கு முன்னால் கடல். அலைகள் பளிங்குப்பெருவெளியாக ஒளி உமிழ்ந்து திமிறி நெளியும். நீலம் வெளுத்து அடங்கும். செம்மை கலங்கி நுரைக்கும். அடர்ந்து இருண்டு வெண்ணிறக் கொம்பு காட்டி இருளில் மோதிப்புரளும் மதகரிக்கூட்டங்கள் என ஒலிக்கும். அன்னை தன் கனவுக்கண்களில் மண்ணுலகோர் அறியாத மந் தணம் ஒன்றை ஒளிர்ந்தபடி நிற்பாள். அவளுக்குப் பின்னால் ஆழ்ந் துறங்கும் மானுடர் கனவுகளுக்குள் அவள் தன் மணிச்சிலம் பொலிக்க நடந்தாள். துயருற்றோர் நெஞ்சில் தன் மென்விரல்நுனி களால் தொட்டாள். பாவலர் நெஞ்சில் அவள் இன்நகையும் அருட் சொற்களும் ஒலித்தன. மொழிவிளையா மகவுகளுக்குள் புகுந்து கனிந்த மென்னகை விரித்தாள்.

மண்ணில் கொந்தளிக்கும் வாழ்க்கை அழியும். குன்றுகளாக நிலைத்த அலைமுகடுகள் சரியும். ஆழியோ அழியாதது. ஆழமோ என்றுமுள்ளது. ஆழத்திற்கு மனிதக்கண் கொடுத்த வடிவம் அன்னை.

ᘓ

இளங்கோ அடிகள் நெல்வேலி நாடும் உவரிப்பெருந் துறையும் தாண்டிக் கடலோரமாக நடந்து வேள்நாட்டு எல்லை யாகிய அரண்வாய்மொழியெனும் சிற்றூரை அடைந்தார். ஓங்கிய மலைகள் நடுவே மணிஆரம் எனக் கிடந்த செம்பாதையில் நடந்து மறுபக்கம் வந்தார். அக்கணம்வரை கண்களை நிறைத்த வெறுமை வெறும் கனவென எங்கோ மறைய, நோக்கெட்டாத் தொலைவு வரை விரிந்த பசுமையைக் கண்டார். பசுமையே வயல்களாகவும் வயல்களுக்கு அரணிட்ட தெங்குகளாகவும் அவற்றின் நடுவே புடலையும் பாகலும் செழித்த கூரைகளாகவும் திசைமுடிவு நோக்கி ஓடி வளைந்து பொங்கி வானைத் தொட உன்னிய நீலத்திரங் களாகவும் உலகத்தோற்றம் கொண்டு நின்றது. அரண்வாய்மொழி முதல் கோட்டாற்றுமுகம்வரை எங்கும் இரவலர்க்கு உணவிடும் அறச்சாலைகள் இருந்தன. சாலைக்கு இருபுறமும் இல்லறத்தார் நின்று வழிப்போக்கரை வணங்கித் தங்கள் இல்லங்களுக்கு வந்து உணவேற்றுச் செல்லும்படிக் கோரினர்.

அன்று மாலை அடிகள் பாண்டிய வணிகர் சேர வணிகருடன் பொருள் மாற்று கொள்ளும் பேரங்காடி அமைந்த கோட்டாற்று முகம் வந்து சேர்ந்தார். பஃறுளியாறும் வள்ளியாறும் சுற்றி ஒழுக நடுவே தெங்குச்சோலைகள் சூழ்ந்த குளிர்ந்த நிலமாக இருந்தது கோட்டாற்றுமுகம். பாண்டிய வணிகர் கொற்கையிலிருந்தும் உவரி யிலிருந்தும் பெருந்திமில்களில் கொண்டுவந்து மணல்குடி கழி முகத்தைச் சேர்த்த பொருட்கள் அங்கிருந்து சிறு வஞ்சிகள் வழியாகக் கொண்டுவரப்பட்டுக் கோட்டாற்றுமுகம் அங்காடியில் குவிக்கப்பட்டன. பாண்டி வணிகர் கொண்ட பொருட்கள் ஏற்றப் பட்ட வஞ்சிகளும் தோணிகளும் கருச்சுமந்த விலங்குகள் என அசைந்து நின்றன. நெல்லும் வணிகப்பொருட்களும் குவிந்து கிடந்த அங்காடி வீதிகளில் கடலோசை என வணிகக்கூச்சல் எழுந்தது. அங்காடி முகப்பில் மன்னன் திறைகொள்ளும் சுங்கச்சாவடி ஓங்கி நின்றது.

அங்காடிக்கு அப்பால் சென்று பஃறுளியாற்றுக் கரையில் நடந்து அடிகளும் பிறரும் நாகர்சோலையை அடைந்தனர். வேள் நாடு முன்னர் நாகர்குலத்தோர் வாழ்ந்த நிலமாக இருந்தது. கடலை அஞ்சிக் கரையேறிய மக்களே சேற்று நிலத்தைப் பயன்படுத்தி நெல்விளையச் செய்தனர். அது நாஞ்சில்நாடு என்றும் வேள்நாடு என்றும் பெயர் கொண்டது என அடிகள் கற்று அறிந்திருந்தார். நாகர்கள் தங்கள் இறைவடிவமான படவிரிஅரவையே வணங்கினர். பின்னர் அவர்கள் சமண நெறியைத் தழுவியபோது நாகர் சோலைகள் சமணப் பள்ளிகளாயின. படவிரி அரவை அறிவனின் தலைக்குமேல் குடைவிரிக்கும் இறைவடிவமாக வணங்கத் தலைப் பட்டனர். வேள்நாட்டு மன்னன் விண்ணவ நெறி கொண்ட வனாயினும் மக்களில் பெரும்பாலோர் சமண நெறி கொண்டிருந் தனர்.

ஆற்றுக்கரையின் தாழ்ந்த குளிர் நிலத்தில் ஆலும் வேம்பும் வேங்கையும் புன்னையும் செறிந்த நாகர்சோலை முகப்பில் படம் விரித்த கல்லரவுகள் இரண்டு கரிய உடல் சுருட்டி அமர்ந்து வர வேற்றன. அந்த நடுப்பகல் வேளையில் சோலையெங்கும் மக்கள் திரளிருந்தது.சமணப்படிவர் அரசமரத்தடியில் சருகு மெத்தை விரித்து அமர்ந்து நூலாய்ந்தனர். மாணாக்கர் சூழ்ந்து அமர்ந்து குரல் எழுப்பித் தொல்மொழியும் வடமொழியும் சாக்கையர் மொழியும் கற்றனர். கல்விக்காக வந்த சிறுவர் சமண நெறிப்படித் தலை மழித்து இறைஞ்சியாடை அணிந்து கூட்டம் கூட்டமாகச் சென்று தங்கள் ஆசிரியர் வாழும் தவச்சோலைக்கு முன் கூடிக் காத்திருந்தனர். சில சமண அடிகள் வாழை விரியிலைமீது கிடத்தப்பட்ட நோயாளிகளை ஆராய்ந்து மருத்துவம் சொன்னார்கள். மருத்துவம் கற்போர் கூடி நின்று நோய் கற்றனர். சிலர் இலைகளும் வேரும் தேர்ந்து இடித் தனர். சிலர் மருந்து காய்ச்சினர். நோய் கொண்டோரைக் கொண்டு வந்த மக்கள் ஆங்காங்கே அமர்ந்திருந்தனர். சிலர் உணவு சமைத் தனர்.எங்கும் மானுட வாழ்வின் இன்பமும் துன்பமும் நிறைந் திருக்கக் கண்டார் அடிகள்.

சோலைக்குள் அடர்ந்த கொடிகளினாலான இருளுக்குள் அரவுப்புற்றுகள் ஆலயவிமான முகடுகள் என எழுந்திருந்தன. அங்கே வணங்க வந்த நாகர்குடிப் பெண்டிர் சமண நெறிப்படி வெண்ணிற ஆடை இடையில் அணிந்து நுனியை மார்பின்மீது வளத் திருந்தனர். மலரிலா நீள்கூந்தலும் தழைத்த நீள்காதில் தக்கைகளும் அணிந்திருந்த அவர்கள் மொழி தமிழின் மென்மை சேர்ந்த தொல் வடிவமாக இருப்பதை அடிகள் கண்டார். கூப்பிய கைகளுடன்

பாதிமூடிய கண்களுடன் அப்பெண்டிர் அரவுப்புற்றைச் சுற்றிவந்து வணங்கினர். முன்குடுமி வைத்த பூசகர் புற்றில் அள்ளிய வெண் சேற்று மண்ணை அவர்களுக்கு அருளி அளிக்க அதைத் தொட்டு நெற்றியில் மங்கலக் குறியணிந்தனர் அப்பெண்டிர். மண்ணின் ஆழத்திலிருந்து எழுந்து நின்ற அப்புற்றுகளைச் சுற்றிவந்து வணங்கி மீண்டார் அடிகள்.

இளங்கோ அடிகள் அன்று அவ்வறச்சாலையில் தங்கி ஓய்வு கொண்டார். தெளிநீரும் பழங்களும் அருந்தி ஆலமரத்தடியில் துயின்றார். மறுநாள் காலை பஃறுளிப் பழையாற்றில் நீராடித் தூவெள்ளாடை அணிந்து அடிகள் அச்சோலையின் அற முதல் வரான நாகநந்தி அடிகளைக் காணச்சென்றார். நாகர் குலத்து தோன்றிய அடிகள் வெள்ளாடைப் படிவராக இருந்தார். எண்கிளை விரித்த மங்கலப் பேராலின் அடியில் தன் மாணாக்கர்களுடன் இளங்கோ அடிகளை எதிர்கொண்டு அமரச்செய்தார். வானாடைப் படிவர்கள் எவரும் அங்கில்லையா என்று இளங்கோ கேட்டார். அச்சோலை இல்லறத்தாருக்கு நெறியும் அறிவும் நலமும் அருளும் பொருட்டு நடத்தப்படுவது என்றார் நாகநந்தி அடிகள். மேற்கே அடர்காட்டில் ஒரு குன்றின்மீது சிதர்ஆல்சோலை என்னும் அறச் சோலை இருப்பதாகவும் அங்கே வானாடைப் படிவர் அறிவும் ஊழ்கமும் பயில்வதாகவும் அவர்களுடன் ஐநூறு மாணாக்கர் உள்ளனர் என்றும் சொன்னார் நாகர் நாட்டில் சமண நெறி வந்த போது முதலில் அறிவனின் அடிதழுவிய மன்னன் நாஞ்சில்குறவன் மகள் குறத்தியறையார் அளித்த பொருளால் கட்டப்பட்ட பள்ளியும் கோடையிலும் நீர் ஓயாத மூன்று ஊற்றுகளும் அங்குள்ளன. இவ்வறச்சோலை விட்டு நீங்கள் அங்கு சென்று சின்னாள் தங்கி அறிவனின் தூநெறி கற்று மீள்தல் சிறப்பு என்றார் நாகநந்தி அடிகள்.

தலை குனித்து மண்நோக்கி அமர்ந்திருந்த இளங்கோ சற்று கழித்து விழி தூக்கி ''என்மீது பொறுத்தருள்க அடிகளே, என் நெஞ்சு மலையேறும்படிச் சொல்லவில்லை....'' என்றார். ''நான் நடந்து வருகையில் மதுரை நெடுந்தெருவில் பித்தன் ஒருவன் எவரையோ நோக்கிச் சொன்னான், தெற்கே செல்வனவெல்லாம் அன்னைக்கு என. அச்சொல்லை எனக்கிடப்பட்ட ஓர் ஆணையாகவே கொள் கிறேன். தெற்கு செல்வனவெல்லாம் அன்னைக்கு. பிறப்பனவெல் லாமே தெற்கு செல்கின்றன. நான் தென்முனை அன்னையைக் காண விழைகிறேன்.''

நாகநந்தி அடிகள் வியந்த விழிகளுடன் நோக்கிச் சொன்னார், ''நம் அறநெறி அன்னையை வணங்குகிறது. ஆயின் அவளை

முழுமுற்றாகக் கொள்வதில்லை. அறிவனடி பணிந்து அறிவிலமர் தலையே சொல்கிறது...'' இளங்கோ ''ஆம், அறிவேன்'' என்றார். ''நான் என்னைச் சமணனாகவோ சாக்கியனாகவோ சைவனாகவோ விண்ணவத்தானாகவோ எண்ணவில்லை. நான் பசித்த வயிறுடன் அன்னைமடி தேடிச்செல்லும் ஒரு மகவு மட்டுமே'' என்றார்.

''மருத்து மலை தாண்டிக் கன்னிக்கரை சேர்தல் எளிதல்ல அடிகளே. அங்கு களர்காட்டுப் பெரும்பாலைநிலத்து ஆறலைக் கள்வர் வந்து கரந்து உறைகிறார்கள் என்பர். அந்தணர் அன்றிப் பிறரைக் கண்டதுமே கொல்லுதல் அவர்கள் இயல்பு.'' இளங்கோ ''செல்வது நம் கடன். சேர்ப்பது அன்னையின் விருப்பம்...'' என்றார். ''அவ்வாறே ஆகுக!'' என்றார் நாகநந்தி அடிகள்.

மறுநாள் புலரியில் தனித்துக் கிளம்பி பழையாற்று முகம் வழியாகச் சென்று மருத்துமலைக் காட்டுள் புகுந்து நடந்து இருள் பரந்த இரவில் கன்னியின் கடற்கரை சேர்ந்தார் அடிகள். தாழை மடல்கள் வெறியாடியின் கூந்தலென எழுந்து பறந்த கடற்காற்றில் மணல் மழை புதர்களில் பெய்து ஒலித்தது. பாறைகளில் மோதிச் சிதறும் அலைகளின் துமி காற்றில் பரவிச் சாரலாகி நின்றது. கடல் இருளுக்குள் ஒலிக்கும் கூரிருளாக விரிந்து கிடந்தது. கரைமணல் மேட்டில் நின்று ஒலிக்கும் அலைகடலையே நோக்கினார் அடிகள். அலைகள் பாறைகளை அறைந்தறைந்து வெண்பற்கள் இருளில் ஒளிர்ந்து அணைய வெறிநகை எழுப்பின. அலைகளின் கொந்தளிப்புக்கு நடுவே, தன்னிலை மறந்த வைரியர் ஆடும் துணங்கை வெறிக்கூத்து கண்டு அசைவற்று நிற்கும் கொற்றவைச்சிலைபோல நின்றது கன்னியின் கோயில்பாறை.

கரையில் ஒதுங்கிக் கிடந்த கட்டுமரப்பலகை ஒன்றை எடுத்து நீரில் போட்டார் அடிகள். அது அலைமீதெழுந்து பொங்கிப் பாறை ஒன்றில் அறைபட்டுச் செதில்களாகச் சிதறி மறைந்து பிறிதொரு அலையில் கரையில் வந்து பரவியது. நெடுமூச்சுடன் அம்மணற் பரப்பிலேயே அமர்ந்தார். கடற்காற்றில் உடல் குளிர்ந்து நடுக்குற்றது. ஆயினும் மணல்மீதிலேயே மல்லாந்து படுத்து விண்மீன் கோடிகள் பரவிய வானிருளை நோக்கிக் கிடந்தார். மேல்சரிவில் இளம்பிறை தோன்றி முகில்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. நெடுமூச்சுகள் விட்டபடி நிலையற்ற சொற்பெருக்காக இருந்த நெஞ்சை நோக்கியபடி அங்கே கிடந்தார் அடிகள். நீணேரம் கழித்து தன்னுணர்கையில் கண்ணீர் வழிந்து தன் காதுகளை நிறைத்திருப்பதைக் கண்டார். கண்ணீரை உணர்ந்ததுமே கண்ணீர்

கொட்டத் தொடங்கியது. எண்ணங்களும் சித்தமும் நீராக மாறி வெம்மையாகக் கன்னங்களைக் கழுவி மணல்மீது சொட்டிக் கொண்டிருந்தது. பின் எப்போதென அறியாமல் ஆழ்துயிலில் மூழ்கினார்.

தன் நெற்றிப்போட்டுமீது ஒரு மென்விரல் நுனி தொடுவதை உணர்ந்து அவர் சித்தம் விழிப்பு கொண்டது. நினைவு துயிலிலேயே இருந்தது. அவ்விரலின் குளுமையையும் உயிர்த் துடிப்பையும் அத்தொடுகையிலேயே உணர்ந்தார். கண்விழி கண் விழி என்று நினைவு கூவியது. அப்படியே இரு அப்படியே அக்கணத்திலேயே இரு என சித்தம் தவித்தது. பிறகு ஓர் அலை அவர் உடல் மீது நீரைத் தெளித்து அவரை எழுப்பியது. எழுந்து கரைமணல்மீது இருப்பதை உணர்ந்து தன் முன் வெளித்த கரியகடல்வெளியைக் கண்டார். கண் இருளுக்குப் பழகியதனால் கன்னியின் கருங்குழற் சுருள்கள்போல அலைகள் உருண்டு எழும் கரிய பளபளப்பைத் தெளிவாகக் கண்டார். ஈரம் மின்னிய கருமையுடன் பெரும் பாறைகள் அலைகளுக்கு மத்தகம் காட்டி நின்றன.

அடிகள் ஒரு கணம் கடலில் எழுந்து ஓங்கி நின்ற அன்னை யின் கோயிலைக் கண்டார். பின் சொல்லற்ற ஒரு கணத்தில் பாய்ந்தோடி நீரில் குதித்தார். உடலின் அனைத்துத் தசைகளிலும் சித்தத்தின் வெறி பரவி நிறைய ஏறு தழுவும் ஆயர்மகன் எனத் இமில் குலுக்கி பாய்ந்துவந்த பேரலைகள்மீது எழுந்து அணைத்துத் தாண்டி மறுபக்கம் சென்றார். கன்னியின் ஆலயப்படிகளில் ஈரக்கால் களுடன் ஏறி மேலே சென்று பாறையில் பதிந்த குமரிப்பாதத்தைக் கண்டு நின்றார். சொல்லற்ற அசைவின்மையாக இருந்தது சித்தம். நேர் எதிரே அன்னையின் கற்சிலை நிழல் வடிவமாக நின்றது. தன் இடையாடையைக் களைந்து வீசிய பின் அன்னையை முகம் நோக்கி அருகே அமர்ந்தார்.

அடிகளின் முதுகுக்குப் பின் கடல் கொந்தளித்துக் கொண்டி ருந்தது. கோடிகோடி அலைகளால் திசைகளை நிறைத்து வானைத் தன்மேல் ஏந்தி விரிந்து கிடந்தது. நீர்ப் பெருவெளியின் அமைதி யின்மையையே கேட்டபடிக் கற்சிலைபோல விழித்துத் திறந்த கண்களுடன் அமர்ந்திருந்தார் அடிகள். கடலின் இதழ்கள் சிவந்து திறக்க அதன் வயிற்றுக்குள் இருந்து செம்மணியென இளங் கதிரோன் உதிர ஈரம் உலராத மென்னிறகுகளுடன் எழுந்த போது அன்னையின் சிலை தெளிந்து வந்தது. விரிகுழலும் விழிமணி மாலையும் கொண்டு கன்னி நின்றாள். குமிழ் உதடுகளில் அழியாப் பெருஞ்சொல் அசைவற்ற இடிஞ்சில் சுடர் என நிற்க,

வெண்சிறகுகள் திசையெங்கும் பரவியசைய அழலோன் வெம்மை கொண்டெழுந்தபோது அன்னையின் விரிகுழல் அலைகள் திசையெங்கும் பரவி முகில்மாலைகளாவதைக் கண்டார் அடிகள். அன்னையின் இதழ்களின் அச்சொல் தன் நெஞ்சில் நிறைந்திருப்பதைக் கண்டார். பின் தன் சித்தமே அச்சொல்லாக இருப்பதை உணர்ந்தார். அது என்ன என்று அள்ள முயன்ற உணர்வு அதைத் தொட இயலாது நீள் தொலைவில் நின்று தவித்தது. அத்தவிப்பு எங்கோ மறைய அடிகள் தன்னை இழந்தார்.

பன்னிரு நாட்கள் ஊழ்கப்பெருநிலையில் அன்னையின் அடிகளில் இருந்தார் இளங்கோ. தன் நெற்றி நடுவே மலை மீதெழும் முழுநிலவெனத் தூய வெண்ணிற ஒளி ஒன்று எழுவதைக் கண்டார். அவ்வொளியின் இனிமையில் தன் உடலே ஒளியாவதை, தன் சொற்களெல்லாம் ஒளியாவதை, தன் சித்தமே ஒளியாக இருப்பதை உணர்ந்தார். பின் விழி திறந்தபோது எதிரே அன்னையின் மூக்குத்தியின் சுடரைக் கண்டார். அச்சுடரே அவள் முகமாக அன்னை ஒளிகொண்டு நின்றாள். வணங்கத் தன் கைகளைக் கூப்பியபோது கையில் விழுந்த ஒளிமூலம் தனக்குப் பின்னாலிருந்து பேரொளி எழுவதை அறிந்தார் இளங்கோ. மறு கணமே கடல் முற்றிலும் அடங்கி அமைதி கொண்டிருப்பதையும் உணர்ந்தார். திரும்பி நோக்க அஞ்சி தயங்கித் தவித்தது சித்தம். மறுகணம் திரும்பி நோக்கினார்.

மின்னல் விழுந்த குளம் என அடிகள் சுடர்ந்தார். அன்னையே என ஒலியற்ற பெரும் கதறலாகத் தன்னை உணர்ந்தார்.

ᘓ

வேனிழம், சேர மண்ணில் வேனில் விரியும் மாதம். பேரியாற்றுப் பெருக்கு வற்றி இருபக்கமும் செம்புருக்கி வீழ்த்திப் பரப்பியதுபோல சேறு தெளியும். ஆற்றுவைப்புச் சேற்றுப்பெரும் பரப்புகளின்மீது முதிய தோல் எனச் சேறு சுருங்கி உலர்ந்து வெடித்துப் பரவும். ஆண்டெல்லாம் கார் சூழ்ந்து மறைந்திருக்கும் கீழ்த்திசைத் திரங்கள் தெளிந்தெழுந்து தங்கள் உடல்புடைப்பும் கரவும் நெளிவும் துலங்க பச்சைப்பெருங்குவியல்களென மிக அருகே வந்து நிற்கும். கடல் இளம்பச்சை நிறத்தை இழந்து மலர் நீலம் கொள்ளும். பளிங்கு வெளியென அதன்மீது ஒளி சிதற ஆழங்கள் துலங்கி வரும். திமில் கொண்டுசெல்லும் பரதவர் ஆழத்தில் குன்றுகளையும் கடல் தாவரங்கள் செறிந்து அசையும் காடுகளையும் மீன்பறக்கும் ஆழத்து வான்வெளியையும் காண்பர். கடலில் இருந்து நீராவி எழுந்து காலைவெயிலுடன் சேர்ந்து வஞ்சிமீது பரவும். அக்குள்கள் வேர்த்து வழிய வஞ்சி மக்கள் மெய்ப்பைகள் துறப்பர். பருத்தி மேலாடைகளை அணிந்து உடலைத் துடைத்தபடியே இருப்பர். வெயில் ஏறுகையில் வீடுகளுக்குள் மூச்சுத் திணறச்செய்யும் ஆவி நிறையும். மாடமுகடுகளிலும் திறப் பிடங்களிலும் கட்டிய வேனிற்பந்தல்களில் பெண்டிரும் குழந்தை களும் வேனில் ஆற்றுவர். ஆண்கள் சிறுதோணிகளில் ஏறி ஆற்றிடைக்குறைச் சோலைகளில் பாங்கரோடமர்ந்து தேம்பிழி அரியலும் சுட்ட கரிமீனும் சேர்த்து உண்டு களியாடுவர்.

வேனிலில் வஞ்சியில் வணிகம் இல்லை. யவனப்பெருங் கலங்கள் முற்றிலும் நாடு திரும்பியிருக்கும். யானைகள் சென்றபின் கொட்டில் என ஒழிந்து கிடந்தது துறை. சேற்றுப்பரப்பில் வயிறழுந்திப் பெருந்திமில்கள் பச்சைநாரம் படிந்த உடலுடன் நின்றன. துறைமுற்றத்தில் எடை தூக்கும் யானைகள் தெங்குமரத்தில் கால் பிணைத்து நின்று துதிக்கையால் குவிக்கப்பட்ட ஆற்றுப் புல்லைச் சுருட்டி அள்ளி முன்னங்கால் தூக்கி அடித்து மண்போக்கி வாயில் செருகிக் கன்ன எலும்பு அசைய மென்றபடி மெல்லக்

காதுகளை வீசிக்கொண்டன. துறைதவிர்த்த முகரக்கூட்டங்கள் நகர் பரவிச் சிறகடித்தன. வஞ்சி நகரெங்கும் கொடிப்பந்தல்கள் எழுந்து நகரே குறுங்காடெனத் தெரிந்தது. அவற்றில் மலர்ந்த முல்லைமலர் மணம் இனிய நினைவுபோல அலைந்து திரிந்தது. வஞ்சிநகர் மக்களுக்கு வானமென்பதே கார்குவியலாகையால் நீலத்தெளி வானத்தை வேனில்வரிப் பாடல்கள் மூலம் கொண்டாடினர்.

சேரநாட்டின் கோயில்களில் பெருவிழாக்கள் அனைத்தும் வேனிலிலேயே. கொற்றவைக் கோயில்களில் துணங்கையும் தெய்யமும் ஆடும் வெறியாட்டு விழவுகள் நிகழ்ந்தன. ஈந்தின் குருத் தோலையால் கட்டிய மலர்வளைவுகளுக்கு அப்பால் ஆட்டக்களம் செம்மண் கொட்டி இறுக்கி உலர்த்தப்பட்டது. முற்றம் நடுவே மூங்கில் கொடிமரம் நாட்டப்பட்டு விழாக்கொடி ஏறியது. கோயி லுக்குள் தெச்சி மலர்களும் வெள்ளாட்டுக் குருதியும் கொண்டு வேனிற்பூசைகள் செய்யப்பட்ட அன்னையர் வெறிவிழிகள் திறந்து நா வடித்து அமர்ந்திருந்தனர். விண்ணவன் கோயில்களில் செவ்விள நீரும் முல்லைமலர்களும் படைத்து வேனிற்பூசைகள் செய்யப் பட்டன. ஆலய மணிகளும் மங்கலச் சங்கங்களும் ஒலிக்க ஒவ் வொரு நாழிகையும் விழவோடு வஞ்சியில் பிறப்பதை மக்கள் கண்டனர். தெருக்களில் நடந்த அனைவருமே ஏதோ ஓர் ஆலயத்து விழாவிலிருந்து வருபவராகவோ செல்பவராகவோ இருந்தனர்.

மலைக்குறவர் ஆற்றின் வழியாக வந்து வஞ்சிநகர்த் தெருக் களில் நடந்தனர். தேனும் அகிலும் விற்று நெல்லும் பொன்னும் கொண்டனர். வஞ்சிநகர் அங்காடிகளிலிருந்து கூறையும் படைக் கலங்களும் வாங்கித் திரும்பினர். நிமித்திகரும் இன்னியரும் பாணரும் பாடினியரும் பெருங்குடியினர் இல்லம் தேடிச் சென்றனர். புத்தாடையும் தலைக்கட்டும் அணிந்த பாணர் பட்டு உறையிட்ட மகர யாழ்களைக் கொண்டுசென்றனர். பட்டுப் புடைவை சுற்றி மூடிய கன்னியொருத்தி அவர்கள் தோள்களில் ஏறி குறுகியமர்ந்திருத்தல்போலத் தோன்றியது அது. அவர்கள் சென்றபோது சலங்கைகள் மெல்ல ஒலிக்கக் கேட்டுத் திரும்பிய ஊர் மக்கள் அச்சிறு ஒலியிலேயே ஆடிச்சுழன்று பொங்கும் பெருங் கூத்து களை நினைவுகூர்ந்து மயிர்சிலிர்த்தனர். மாடங்கள்தோறும் முழ வுடன் யாழ் இணைய இன்னிசை எழுந்து காற்றை இனிமை கொள்ளச்செய்தது. வறிய இசைச் சுவைஞர் செம்மண் தெருக்களில் ஒதுங்கி நின்று நெருங்கி ஓடும் நகரின் களியாட்டப் பெருக்கைக் கருத்திலிருந்து ஒழித்து இசையை மட்டும் தேர்ந்து பருக முயன் றனர். நகர் நடுவே அரண்மனை முகடில் வேனிற்கொடி பறந்தது.

வஞ்சிப்பெருநகரின் அருகே ஆற்றிடைக்குறைத் திடர்ச் சோலையில் எழுந்த மங்கல மடந்தையின் மாபெரும் ஆலயத்திற்குப் பதிட்டைப்பெருவிழா மேழத் திங்கள் முழுநிலவு நாளில் குறிக்கப் பட்டது. சேரன் அவையில் ஐந்திரப்பெருநூல் அறிந்த நிமித்திகர் ஐம்பதின்மர் கூடி அந்நாளையும் வேளையையும் வகுத்தனர். யானைகள் விளையாடும் அளிந்தவிரிவில் நகர்மாந்தர் கூடிப் பொறுமையிழந்த அமைதியுடன் காத்து நின்றனர். வேளை வகுக்கப்பட்டதும் அதைப் பெண்டிர் குலவையிட மங்கலமுரசுகள் மணியோசையுடன் சேர்ந்திசைக்க மஞ்சள் பட்டுத்துணியில் கண்ணச்செம்பசையால் முதற்கண்ணெழுத்தன் எழுதினான். அதை வாங்கிய முதற்கோல்காரன் அரண்மனைப் பெருமுகப்பிற்கு வந்து நின்று வணங்கினான். செய்திமுரசம் விம்மி விம்மி அமைதி கொண்டது. நகர்மாந்தர் நெஞ்சங்கள் காதுகளில் குடியேறின. கோல்காரனுக்குப்பின் நின்ற வீரனின் வேல் கதவில் முட்டிய மணியோசைகூட அனைவருக்கும் கேட்டது. கோல்காரன் சேரனின் குலமும் கொடியும் தாரும் நகரும் வாழ்த்தியபின் பட்டுச்சுருளை விரித்து மங்கலப்பெருவேளையை அறிவித்தான். மறுகணம் கூடி நின்ற பல்லாயிரம் நாவுகள் சுழன்றெழுந்து மங்கலமடந்தைக்கு வாழ்த்துக் கூறிக் கூவின. பெருமுரசம் அதிர்ந்த ஒலி அப்பேரொலிக்குள் புதைந்து மறைந்தது.

அப்போதே வஞ்சி நகர் விழாக்கொண்டது. மாடங்களின்மீது வண்ணக்கொடிகள் எழுந்தன. வாயில்களில் மலர்மாலைகள் தோன்றின. தெங்கின் குருத்தோலையும் ஈந்தின் இளந்தளிரும் கொண்டு வீடுகள் அணி செய்யயப்பட்டன. தோணிகளின் பனம் பாய்க் கூரைகள்மீது அல்லியும் நீலமும் தாமரையும் கொண்டு பூப் பந்தல் கட்டப்பட்டது. புத்தாடை உடுத்திய மக்கள் உரக்கப்பேசி நகைத்து நகரில் பரபரத்து அலைந்தனர். பொன் நகை அணிந்த பெண்டிர் உடை ஒளிர புன்னகை ஒளிர கண்கள் ஒளிர தெருக்களில் திரண்டனர். அங்காடிகளில் வணிகக்கூச்சல் பெருகியது. இரவில் பல்லாயிரம் சுடர்கள் எழ விண்மீன்கள் சொரிந்து மண்ணில் குவிந்ததுபோலிருந்தது வஞ்சிப்பெருநகர்.

மங்கல மடந்தை ஆலயம் சாக்கைய நூலோரும் சீனத்துச் சிற்பிகளும் சேரநாட்டுப் பெருந்தச்சர்களும் சேர்ந்தமைத்த பெருஞ் சிற்பம். நிமித்திகர் வகுத்த முறைப்படி பெருவாயில் கிழக்கு நோக்கி உயர்ந்து நிற்க உள்ளே கருவறை மேற்கே கடல் நோக்கித் திரும்பி நின்றது. நாற்றிசை வாயிலிலும் மரத்தாலான ஏழடுக்குக் கொண்ட நாலம்பலமுகடுகள் குவிந்தெழுந்து நின்றன. நான்கு கூரைமுனை

களிலும் படமெடுத்த அரவுகள் நா நீட்டி நின்ற நாலம்பலக்கூரைக்கு அடியில் வீண்சிலைச் சிற்பங்கள் செறிந்திருந்தன. அரசமரத்தடியில் அமர்ந்த அறிவனின் மையச்சிலையைச் சுற்றி வானெங்கும் தேவர்களும் மண்ணெங்கும் மானுடரும் விலங்குகளும் காட்டுக்குள் இலையடர்வென இடையின்றி நிறைந்திருக்கும் காட்சி. கிழக்கே மெய்யறிகைக் கோலத்தில் அமர்ந்திருந்த அறிவன் மேற்கே பெருநெறிக்கோலத்திலும் வடக்கே மண்தொடுகைக் கோலத்திலும் தெற்கே மெய்விளம்பல் கோலத்திலும் காட்சி தந்தான். நாலம்பல விளிம்புகளைத் தாங்கிய உத்தரங்களில் இயக்கியர் நால்வர் பெருமுலை ஒசித்து இடை வளைத்து மலர்க்கிளை பற்றி நின்றனர். கீழே காட்டுமரத் தடியெனப் பெருத்த தூண்களுடன் இரு பக்கமும் திறந்த பூமுகம். அங்கே கல்வேய்ந்த குளிர்ந்த திண்ணைகள். இரு பக்கமும் எப்போதும் அணையா ஆதிரச்சுடர்களுடன் வெண்கலப் பெருவிளக்குகள் பாதையில் நடமாடுபவர்களின் பாவைகளைத் தங்கள் உடல்தூணில் சுருட்டிக்கொண்டபடி நின்றன. சுண்ணச்சுதை பூசிய விரிந்த பூமுகச்சுவர்களில் ஏழு வண்ணங்களும் பொலிய ஓவியங்கள் படர்ந்துகிடந்தன. அறமறிந்த அறிவனின் பிறப்பும் துறவும் அறிதலும் ஆற்றலும் மறைதலும் நிறைதலும் கூறும் பேருருவப் படங்கள். விளக்கொளியில் அறிவனின் அருள்விழிகளின் பதிக்கப்பட்ட அரதனங்கள் சுடர்விட்டன. இயக்கியர் கண்களாகப் பதிக்கப்பட்ட நீலங்களும் இதழ்வடிவுகொண்ட பவளங்களும் மின்னிக் கொண்டிருந்தன.

பூமுக நடுவே யானைகள் நடக்கும் விரிவுடன் கல் வேய்ந்த நடைபாதைகள் உள்ளே சென்று வெண்மணல் பரவிய விரி முற்றத்தைத் தாண்டிச் சுற்றம்பலத்தை அடைந்தன. முற்றத்தில் வலப்புறத்தே மூன்றடுக்குக் கூரைகளுடன் ஓங்கி நின்றது ஆயிரம் வேங்கைமரத் தூண்களாலான கூத்தம்பலம். செம்பு வேய்ந்த சுற்றம்பலம் ஆலயத்தை வட்டமாக வளைத்து வந்தது. இரவர் அமரும் இருக்கைகளும் நூல்நவில்வோர் அமரும் கூடங்களும் அதிலிருந்தன. நடுவே வெண்கலத் தகடுகள் மூடிய வட்டக்கூம்புக் கூரையுடன் கருவறை மலைமுகட்டுக்குரிய மணிமுடியொன்றை நிலத்தே வைத்ததுபோல நின்றது. கிழக்கு நாலம்பல வாயில் நோக்கித் திறந்த கருவறைக்குள் தாமரைப் பீடத்தின்மீது அறிவனின் ஊழ்கநிலைப் பொன் திருமேனி அமர்ந்திருந்தது. குவையெடுத்துக் கட்டிய சடைமுடியும் மூடிய அருள்விழிகளும் சிற்றிதழ்களில் நின்ற குறுஞ்சிரிப்பும், தன்னுள் தான் ஆழும் கைவிரல் சுட்டிகளுமாகக் கால்மடித்து அமர்ந்திருந்த அருகனின் இருபக்கமும் பாவை

விளக்குகளில் நெய்ச்சுடர்கள் அரதனங்கள் என அசையாது நின்றன. அறிவன் முன் வைத்த கவிழ்தாமரைப் பலிபீடத்தில் வெண் மலர்களும் மஞ்சளரியும் படைக்கப்பட்டிருந்தன.

மேற்குநோக்கிய கருவறைக்குள் ஒங்கிய கருங்கற்பீடத்தில் கருஞ்சிலையாக நின்றாள் அறிவமர்செல்வி. நீண்டு உயர்ந்த கூந்தற்குவைமுடிமீது இளம்பிறை. வடித்த குழைக்காதுகளில் மங்கல மலர்க்குழைகள் தோள்தொட்டு நின்றன. வலக்கையில் தூக்கிய பாதிமலர்ந்த தாமரையும் இடக்கையில் சிலம்பும் கொண்டு அன்னை அமர்ந்திருந்தாள். வலக்கால் சிலம்புடன் தொங்கி நிற்க இடக்கால் தொடைதொட மடிந்து சிலம்பின்றி இருந்தது. ஒருமுலை குறைந்த திருமார்பில் பாறைமீது வழிந்தொழுகும் அருவியென மணியாரம் கிடந்தது. பணிமுடிந்த நிறைவறியாச் சிற்பிகள் சிலர் அப் போதும் ஆலயத்திற்குள் செதுக்கியும் மினுக்கியும் பணிசெய்து கொண்டிருந்தனர். அன்னையின் கருவறை முன்னால் ஆளுயரத் துக்கு எழுந்த மாபெரும் பலிபீடம் இருந்தது. அதன் இரு பக்கமும் கல்லாலான அடுக்குவிளக்குகள் நின்றன.

அறிவமர்செல்வியின் ஆலயத்துக்கு வெளியே இடப்பக்கம் பாசண்டசாத்தனின் ஆலயம் நின்றது. மூன்றடுக்கு நாலம்பலங் களும் உள்ளே சுற்றம்பலமும் நடுவே உயர்ந்த கருவறையும் கொண்ட ஆலயம். வலக்கையில் பாசமும் இடக்கையில் தண்டும் ஏந்திய சாத்தன் மார்பில் மணிகளால் ஆன ஆரமும் வீரக்கழலும் வளைகளும் அணிந்து வெறித்த கண்களுடன் இருண்டு ஒங்கிக் கருவறை முகடு தொட்டு நின்றான். மங்கலச்செல்வியின் ஆலயத் துக்கு வலப்பக்கம் சிறிய நாலம்பலங்களும் சுற்றம்பலமும் கருவறை யுமாகப் பெருந்தோழியின் கோயில் நின்றது. கருவறைக்குள் முடிந்த குழல்கட்டு வலப்புறத்தே சரிந்திருக்க ஒரு கையில் மலரும் மறுகையில் சாமரமும் கொண்டு நின்றாள் பெருந்தோழி.

கோயிலுக்கு மேற்கே சோலை சென்று இறங்கிய ஆழத்தில் மணற்கரைமீது தன் வெண்சிறகுகளை ஓங்கி ஓங்கி அறைந்து விளையாடிக் கொண்டிருந்தது கடல். கடல் இருண்டு மறைந்தபோது வானின் மீனொளியில் அன்னையின் ஆலயம் நிழற்கோட்டுரு வாகத் தெளிந்தது. நகர் களி தெவிட்டி உறக்கத்தில் ஆழ்ந்தது. அங்காடிகள் அடங்கின. பேரியாற்று நீர்ப்பரப்பில் பெருவஞ்சிகள் பாய் இறக்கித் துஞ்சின. திமில்களும் தோணிகளும் துயில் சுமந்து நீரில் அசைந்தன. களைத்துப்போய்ச் சிற்பிகளும் துயில் கொண் டனர். கோட்டைமீது காவல் முரசும் பந்தங்களும் விழித்திருந்தன. வானில் நிலவு தனித்து நின்றது. நீரலைகளில் ஆடிய ஆம்பல்கள்

மெல்ல முறுவலித்த நறுமணம் எழுந்து காற்றில் ஏறி நகர்மீது பரவித் துயில்களை ஊடுருவியது.

தன் கருவறை இருளில் கண்ணகி தலைவிரித்து அமர்ந் திருந்தாள். விழி விரித்துக் கடலை அள்ளப்போவதுபோல. கடல் சொல்லும் ஏதோ சொல்லைக் கேட்டு நிற்பவள்போல. ஏற்கனவே அறிந்த ஒன்றையே மீண்டும் கேட்பவள்போல, தனித்து புன்ன கைத்து...

ஃ

உரை வகுத்தது

உரைசால் பத்தினியை உலகோர் ஏத்தும் மங்கலப் பெருவிழவின் புலரி, வஞ்சி மாநகரில் பொன்னுருக்கும் செவ்வொளியுடன் பிறந்தது. நகர் இரவில் துயில் கொள்ளவேயில்லை. வீடுகள் எங்கும் நாற்றிசையிலிருந்தும் வந்து சேர்ந்த உறவினரும் சுற்றமும் நிறைந்திருந்தனர். குலமகளிர் அடுமனைகளில் இனிப்புகளும் அப்பங்களும் சமைத்தனர். வெல்லம் உருகும் மணமே நகரை மூடியிருந்தது. விளக்குகள் ஏற்றப்பட்ட வீட்டு முகப்புகளில் ஆடவர் மாவிலைத் தோரணங்களையும் மலர்மாலைகளையும் கட்டினர். முதியோர் கோயிற்சாவடிகளில் கூடியமர்ந்து பழங்கதைபேசி இகனியும் அடைக்காயும் மென்று துப்பி விழித்திருந்தனர். நகரின் எல்லாக் கோயில்களும் விளக்குச்சுடர்கள் முத்தென நின்ற கருவறைகளுடன் பந்தச்சுடர்கள் நிழல் அசைத்து தலைசுழற்றியாடிய சுற்றம் பலங்களுடன் இரவெலாம் திருநடை திறந்திருந்தன. புலரி முதற் கதிர் விண்ணவன் ஆலயத்துப் பொற்கலத்தை தொட்டதும் ஆலயப் பெருஞ்சங்கம் 'ஆம்! ஆம்! ஆம்!' என முழங்கியது. விமான முகட்டில் தொங்கிய பெருமணி நாவசைத்து 'விடியல்! விடியல்!' என்றது. மங்கலப்பெருமுரசம் 'எழும் எழும்' என அதிர்ந்தது. நகரின் அத்தனை கண்களும் திறந்தன. ஆலயங்கள் தோறும் புலரிப் பூசெய்கைக்கு அழைப்பொலி எழுந்தது.

வெளியே சூழ்ந்து நிறைந்திருந்த நீர்ப்பரப்பெங்கும் பல வண்ணப் புத்தாடை அணிந்த மக்கள் செறிந்த வள்ளங்களும் பெருந்திமில்களும் தோணிகளும் எல்லா திசைகளிலிருந்தும் பெருகி நகர் நோக்கி வந்தபடியே இருந்தன. துறைகள் எங்கும் வரத்தர்மக்கள் நிறைந்து கூவி ஒலித்தனர். தெருக்களெங்கும் கூடிய மர்ந்திருந்தனர். விடுதி மண்டபங்கள் தேன்கூடென மக்கள் செறிந்தன. பெருமுற்றங்களில் மழைநீரெனத் தலைகள் சுழித்தன. ஊன்சாலைகளின் பின்பக்கம் கோட்டையடுப்புகளில் மலை விறகுகள் சீறிக் கொழுந்துவிட்டு வெடிக்க தோணியென வாயகன்ற ஏனங்களில் சோறும் செப்புருளிகளில் கறிகளும் நிலவாய்களில்

அக்கார அடிசிலும் கொதித்தன. எங்கும் பரபரப்பான குரல்களும் சிரிப்பும் நிறைந்து குமிழியிட்டன.

விண்ணவன் ஆலய முற்றத்தில் நாடகமகளிர் நகையும் உடையும் ஒளிர, நகைத்தும் நடை ஒசிந்தும் வந்து குழுமினர். முற்றத்தைச் சூழ்ந்த ஆலயச் சுற்றம்பலத்துத் தூண்களின் பொன்னிறக் காப்புத்தகடுகளில் பலநிற ஒளிகள் அசைந்தன. யாழும் முழவும் பறையும் இயமும் கொம்பும் குழலும் இலையும் ஏந்திய பாணரும் வைரியரும் பலநிறத் தலைப்பாகை அணிந்து, பட்டுக்குச்சம் அசையும் கைக்கோல்கள் ஏந்தி வந்து கூடினர். சலங்கை ஒலிக்க அணிமணிகள் அசைய விறலியர் துணைசேர்ந்தனர். முத்தமிழ் நாட்டிலிருந்தும் வந்த மூத்தபெரும்புலவர்கள் பேரியாற்றில் நீராடி நறுஞ்சுண்ணமும் குங்குமமும் இட்டு கரை காக்கும் மலர்விழி இயக்கியைக் கைதொழுது வெள்ளுடை அணிந்து குடுமியில் நீலமும் கூவளமும் சூடித் தங்கள் பாடல்கள் பொறித்த சுவடிகளைச் செம்பட்டில் சுற்றி எடுத்துக்கொண்டு விண்ணவன் ஆலயத்துக்கு வந்தனர். சுற்றம்பல மேடைகளில் தங்கள் இடவரைமுறைப்படி மாணாக்கர் சூழ அமர்ந்தனர். தமிழ் கேட்க வந்த ஊர்ச்சுற்றம் சூழ்ந்து கைகட்டி வணங்கி நின்றது.

நகரின் மேற்கே ஆற்றுவைப்புமீது எழுந்த கொன்றைக்கிழவனின் ஆலயத்தில் பலநாள் முன்னரே கூடிய சிவநெறித் துறவியரும் அடியவரும் அற்றைநாள் காலை எழுந்து ஆறாடி நீறணிந்து சடைமுடிமீது கருங்கண்மணிமாலை சுற்றி புலித்தோலாடை அணிந்து சிவப்பெருவிளி முழக்கி நிரைநிரையாக வந்து ஆலயச்சுற்றம் பலத்தில் அமர்ந்தனர். சிவநெறியினர் சுற்றம் சூழவந்து கூடி அருள்மொழி கேட்டு வணங்கினர். அப்பால் பரவரூர் முனம்பில் எழுந்த சாக்கைய விகாரையில் தென்னாடு முழுவதிலுமிருந்து வந்து சேர்ந்திருந்த இரவர் குழாம் காலை எழுந்து நீராடி அறிவனை அடி தொழுது சரணப்பெருவிளி எழுப்பி வணங்கியபின் மழிதலையும் துவருடையும் பிச்சைக்கலமும் கொண்டு விகாரைப்பெருமுற்றத்தில் அமர்ந்தனர். காலைவெயிலில் அப்பகுதியே செஞ்சுடர் படர்ந்த காடு போன்றிருந்தது. காயலின் மறுபக்கத்தில் சமணர்சோலையில் வெண்கடற் கொக்குகள் கூடியமர்ந்ததுபோல சமணப்படிவர்கள் கூடிநின்றனர்.

நிமித்திகர் வகுத்த நிறைநேரத்தில் மங்கலப்பெருமுரசம் முழங்க வாழ்த்தொலி சூழச் சேரன் செங்குட்டுவன் தன் அரண்மனைப் பெருவாயிலின் ஓவிய அணிமண்டபத்தில் பனம் பூமணிகள் கோர்த்த மாலையும் மணிமுடியும் செங்கோலும்

கொண்டு அணிகள் சுடர ஆடை அலைப்புறத் தோன்றினான். அவன்மீது அரியும் மலரும் தூவி மறையவர் வாழ்த்தினர். சேடியர் குலவையிட்டனர். முகபடாமணிந்த பட்டத்துயானை புதுநீர்ப் பொன்னருவி இழியும் கரும்பாறையென அசைந்து அவனருகே சென்று நின்றது. அவன் அதன்மீது ஏறிக்கொண்டதும் மன்னன் எழுந்தருளலைப் பெருமுரசத்தொடர்கள் நகருக்கு அறிவித்தன. நகரெங்கும் மக்கள் கூவி வாழ்த்தியபடி தெருக்களில் குழுமினர். உயர்த்திய பொன்முளைகள்மீது ஏழ்வண்ண எழினிகள் ஏந்தி வீரர் முன் நடந்தனர். மலர்த்தாலங்களும் நெய்விளக்குகளும் கொண்டு மடந்தையர் பின் ஏகினர். ஐம்பெருங்குழுவும் நிரைவகுக்க உரலடி தூக்கி வைத்து இருபிறை ஏந்திய இரவுபோல யானை மன்னனுடன் நடந்தது. பின்னால் மஞ்சல் திரைவிலக்கிப் பெருந்தேவி வேண் மாளும் சேடியரும் சென்றனர். கரும்பாறைமீது பூத்துக்குலுங்கிய தளிவேங்கைபோல, உச்சிக் கரும்பாறைமீது எழுந்த அழலவன் போலச் சேரன் விளங்கினான். தெருவெங்கணும் அவன்மீது மலரும் அரியும் மழையெனக் சொரிந்து கொண்டிருந்தன.

முரசொலி எழுந்ததும் அத்தனை ஆலயங்களிலிருந்தும் அனைவரும் கண்ணகியின் கோயில் நோக்கி ஊர்வலமாகச் செல்லத் தலைப்பட்டனர். செம்புலப்பெயல்நீர் ஓடைகள் பெருகிக் கூடிக் கூடிக் காட்டாறாகிப் பேரியாறாகிக் கடல்தேர்வதுபோல அவை ஒன்றாகி ஆடையும் அணிகளும் குழல்மலர்களும் கொடி களும் ஒளிவிட முன்சென்றன. கீழ்த்திசை நோக்கிய உச்சிக் காவல் மாடத்தின்மீது நின்ற யவன வீரன் தன்னை மறந்து விழி விரிய அதை நோக்கி நின்றான். மெல்ல இதழ் குவியும் பலவண்ண மலர்போன்றி ருந்தது வஞ்சி. நான்கு பெருஞ்சமயங்களும் ஒன்றாவதைக் கண்டு ஓங்கிய குவிமாடம்மீது கடற்காற்றில் சிறகடித்த விற்கொடி ஒரு கணம் அசைவிழந்து வியந்தது.

கண்ணகி ஆலயப் பெருமுற்றத்தில் யானை சென்று நின்றதும் ஆலயப் பெருமுரசம் அறைந்து அறைந்து ஆர்த்தது. சூழ நின்ற பிற முரசங்களும் கொம்புகளும் சங்கங்களும் ஒலித்தன. ஆலயத்து அறமுறை நிகழ்த்தும் சாக்கைய அடிகள் எண்பதின்மர் கைகளில் வெண்மலர் தாலங்களும், நிறைகுடங்களும், மஞ்சளரி பெய்த தொன்னைகளும் கொண்டு எதிரேற்றனர். அவர்களுடன் மலர்ப் பீலி ஏந்திய மங்கலப்பெண்டிரும் யாழும் குழலும் முழவும் இசைத்தபடி பாணரும் ஆடல்மகளிரும் சூழ வந்தனர். அவர் களுக்குப் பின்னால் ஆலயம் காக்கும் காவற்குடிகளான ஆயிரத் தவர் ஒளிரும் வாள்களையும் வேல்களையும் ஏந்திக் கூறைமுறுக்கிச்

சுற்றிய மார்புடனும் கச்சை இறுக்கிய இடைகளுடனும் வந்தனர். யானைமீது வந்த சேரனுக்குப் பின்னால் சேரநாடே திரண்டுவந்தது போலப் பெருங்கூட்டம் கரைச்சுவருக்கு அப்பால் அலையெழும் கடல்வெளியென இரைந்தது.

சேரன் இறங்கியதும் அடிகள் முன் வந்து அவனை வணங்கி அன்னை அருள்சேர்த்த வெண்மலர் மாலையை அவனுக்கு அணி வித்து ஆலயத்துக்குள் வழிகாட்டிக் கொண்டுசென்றனர். அங்கே பச்சை ஈந்திலைகளாலும் மலர்களாலும் அணிசெய்யப்பட்ட குடிலில் அறிவமர்செல்வியை அழியாப்பீடத்தில் அமர்த்தும் பொருட்டு வடநாட்டிலிருந்தும் தென்னாட்டிலிருந்தும் எழுந் தருளிய சாக்கையப்படிவர் எழுவர் அமர்ந்திருந்தனர். சேரன் தன் தேவி துணைவரக் கை கூப்பி நடந்துசென்று அவர்கள் முன் முகமும் மார்பும் முழங்காலும் கால்களும் மண்ணில் படிய விழுந்து வணங் கினான். அரிமலர் தூவி அவர்கள் அவனைக் குலமும் கோலும் நாடும் குடியும் செழிக்குமாறு வாழ்த்தினர்.

படிவர் குழுவால் அழைத்துச் செல்லப்பட்ட சேரனும் தேவியும் அன்னையின் ஆலயத்துட் புகுந்தனர். ஆலயத்தின் ஏழு கொடித்தூண்களில் வெண்கூறைமீது அறவாழி பொறித்த கொடிகள் ஒரேசமயம் முரசொலியும் மங்கல இசையொலியும் துணைக்க எழுந்தன. முன் நிரையில் பிறந்த அமைதி பரவிப்பரவிக் கடல் உறைந்ததுபோல எங்கும் நிலவியது. ஆலயத்து முகமண்டபத்தில் விரித்த வாழையிலைகளில் வெண்மலர்கள் குவிந்து கிடந்தன. நூற்றியெட்டுப் பொற்கலங்களில் கடல்நீர் மலர் மூடி வைக்கப் பட்டிருந்தது. நூற்றியெட்டுப் பொற்றாலங்களில் மஞ்சள் புல்லரி கூட்டி வைத்திருந்தனர். கருவறைக்குள் தன் பீடத்தில் இருபக்கமும் கைகூப்பி அசைந்த அகல்சுடர்களின் ஒளியைக் கரிய கன்னங்களில் வாங்கியபடி அன்னை அமர்ந்திருந்தாள். அன்னைமுன் வலப்பக்க வரியாகச் சேரனும் தேவியும் இளவலும் அமைச்சர்குழாமும் படைத் தலைவர்களும் நின்றனர். இடப்பக்க நிரையாகச் சாக்கையப் படிவர்களும் அடியவர்களும் பெருவணிகர்களும் நின்றனர்.

அறிவிப்பு அளிக்கும் ஏழு கொம்புகள் கூவியடங்கியதும் கோயிலின் தென்முற்றத்தில் கூடிநின்ற குறும்பர் குலத்தலைவன் தன் கைக்கோலை ஆட்டினான். கலமுழவு ஒலிக்கக் குறும்பர்கள் நிரை வகுத்தனர். குறுமர்குலக் கன்னியர் ஐம்பதின்மர் தளிர்வேய்ந்த புத்தாடை அணிந்து குழலிலும் இடையிலும் மார்பிலும் கைக ளிலும் மலர்மாலைகள் சுற்றிக் காதுகளில் மலர்க்குழைகள் அணிந்து மரச்செதுக்கு வளையிட்ட கரிய கைகளில் சுரைக்குடுக்கை வெட்டிய

வட்டத் தாலங்களில் வறுத்த தினைமாவும் மூங்கிற்சிமிழில் மூடிய தேனும் வெண்மலர்களும் கரிய திரங்கலும் சுக்கும் அகிலும் சிறு மண் இடிஞ்சிலில் புன்னைஎண்ணெயிட்ட பஞ்சுத்திரியும் ஏந்தி அணிவகுத்தனர். குடிமூத்த அன்னை ஒருத்தி செங்குன்றத்தில் கொளுத்தி அணையாது அதுவரை கொண்டுவந்த கல்லகல் விளக்கின் சுடரில் இருந்து எண்ணெய்த்திரியொன்றைப் பொருத்தித் தீ எடுத்து முதலில் நின்ற இளம்கன்னியின் கையிலிருந்த இடிஞ் சிலை ஏற்றினாள். கொடியில் செம்மலர்கள் வரிசையாக மலர்வது போலச் சுடர்கள் விரிய, மங்கலமணியும் சிறுமிழவும் ஒலிக்க அந்நிரை ஆலயத்துக்குள் சென்றது. அவர்களைத் தொடர்ந்து மூதன் னையரும் குடிமூத்தாரும் சென்றனர்.

குறுமர் மகளிர் தாங்கள் கொண்டுவந்த தாலங்களை அன்னைமுன் நிரையாக வைத்து வணங்கிப் பின்னகர்ந்து அமைந் தனர். அவற்றில் இருந்து ஒரு சுடரைக் கையிலெடுத்தபடி மூதன்னை ஒருத்தி மெல்ல நடந்து கருவறைக்குள் ஏகினாள். அன்னையின் கால்களில் இருந்த கல்விளக்கில் நீட்டிநின்ற திரியை அச்சுடரால் பொருத்தினாள். படிவர் அனைவரும் கண்மூடி அமர்ந்து சரணப் பெருவிளி முழக்கினர். சேரனும் சுற்றமும் கைகூப்பி நின்றனர். சேரன் கைகாட்ட மங்கல முரசு ஒலித்தது. அதைக் கேட்டு வெளியே பெருமுரசம் முழங்கியது. அக்கணமே புதிய கடல் ஒன்று வெடித்தெழுந்து சூழ்ந்ததுபோலப் பேரொலி எழுந்தது. வஞ்சிநகர் எங்கும் நின்ற மக்கள் ''அன்னையே! அறச்செல்வியே! மங்கல மடந்தையே நீ வாழ்க! எங்கள் குடி செழிக்க அருள்க!'' என வாழ்த்திக் கூவினர்.

பின்னர் அடிகள் எழுவர் உள்ளே சென்று அன்னைக்குக் குட நீராட்டுச் செய்யத் தொடங்கினர். நூற்றெட்டுக் குடங்களின் கடல்நீரும் அவள் உருவம்மீது ஒழுக்கப்பட்டது. நூற்றெட்டுத் தாலங் களின் மஞ்சளரியால் அவள் முழுக்காட்டப்பட்டாள். பின் அவளை வெண்மலர்களால் மூடினர். படிவர் எழுந்து அன்னைக்கு மலர் அள்ளி அளித்து வணங்கினர். பின்னர் சேரனும் சுற்றமும் மலர் செய்தனர். குறுமரும் வணிகரும் பூசெய் முடித்ததும் சேரன் வணங் கியபடி வெளியே வந்தான். தங்கள் குடிமுறைப்படி அணிவகுத்து சேரநாட்டு மக்கள் கோயிலுக்குள் நுழைந்து அன்னைக்கு மலர் தந்தனர். அருவியொன்றில் ஆறு வந்து சேர்வது போல அச்சுழல் நோக்கி வஞ்சி மாந்தர் ஓய்விலாது பகலிலும் இரவிலும் நிரைநிரை யென வந்தவண்ணம் இருந்தனர். அன்னையை மூடிய மலர்களை அடிகள் அள்ளி அள்ளிக் குவித்தனர். அந்த இரவு முற்றி

ஒளிகொண்டு விடிந்த பின்னரும் மக்கள் வந்துகொண்டிருந்தனர்.

வஞ்சியின் அவ்விரவு திசையெங்கும் ஒலித்த பாடல்களாலும் மண்ணெங்கும் அதிர்ந்த ஆடலாலும் ஆனதாக இருந்தது. நகர் எங்கும் பந்தங்கள் சுடர்ந்த ஒளியில் மக்கள் கூடியமர்ந்து அக்கார அப்பம் உண்டு தேறல் அருந்தித் தாளமிட்டுப் பாணரும் விறலியரும் பாடிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தனர். கூத்தர் ஆடிய கூத்து களைக் கண்டு தாங்களும் ஆடிக் களித்தனர். விழித்தாலும் விழிப்பு வராத இனிய கனவெனத் தோன்றியது அவ்விரவு. கதைகளில் ஏறித் தெய்வங்கள் வாழும் பேருலகுக்குச் சென்றுவிட்டது போலிருந்தது. இனித் தலைமுறைகள்தோறும் கதைகளாகச் சொல்லிச் சொல்லி நினைவுறும் நாள் அது என அவர்கள் உணர்ந்தனர்.

நாள் விடிந்து வெயிலேறியபோது நகரெங்கும் தேனுண்ட வண்டுகள் என மக்கள் சிதறி விழுந்து துயின்றனர். காவல்மாடங் களில் படைக்கலங்கள் ஏந்திய யவனர் மட்டுமே விழித்திருந்தனர். பூசெய்கை முடிந்தபோது ஆலயப்பெருமுற்றம் மலர்க்குவைகளால் மூடப்பட்டிருந்தது. ஆலயத்தை அள்ளிக்கூட்ட முடியாது களைத்த ஆயிரத்தவர் அதன் பெருங்கதவங்களை மட்டும் மூடித் தங்கள் இல்லம் மீண்டனர். புதவங்கள் திறந்தே கிடந்தன. மலர்க் குவைகளை அள்ளிய கடற்காற்று சுவர் ஓரமாக அவற்றை ஏற்றிக் குவித்தது. தேன்மெழுகும் அரக்கும் கலந்த பூச்சு மூடிய கதவுகளை ஒங்கியறைந்து சீறியது. இடுக்குகளில் ஊதி ஒலியெழுப்பியது. கண்ணகியின் மேலிருந்த மலர்கள் பறந்து கருவறை மூலையில் கூடின. இருளுக்குள் கரிய சிலை வெளிவந்து அப்பால் அலைத்த கடற்பரப்பின் ஒளியில் மெல்ல மின்னியது.

ᘓ

இரவின் பிற்பகுதியில் வஞ்சிநகருக்கு கிழக்கே ஆற்றிடைக்குறையாக எழுந்த சேற்றுப்பரப்பில் நெல்வயல் நடுவே காலூன்றிக் கட்டிய குடில்களில் வாழ்ந்த கடையர் மக்கள் தங்கள் குடில் நடுவே அறுவடை முடிந்த வயலில் கூளமும் சருகும் குவித்து தீயிட்டு எரித்து கூடியமர்ந்து சுட்ட மீன் தொட்டுக் கள்ளருந்தி சிறுகைப்பறை கொட்டிப் பாடினர். தொலைவில் அந்தி அணையும் செம்மையை வானில் எழுப்பியபடி பந்தங்கள் எரிந்த வஞ்சி விழவாடிக் கொண்டிருந்தது. ரீங்கார ஒலியுடன் சிறகுகள் ஒளிரும் சிறுவண்டுகள் குவிந்திருப்பதுபோல அது ஒலித்தது.

அந்நகரை திரும்பி நோக்கி புலையர்குல முதியோன் ஒருவன் சொன்னான் ''இந்நகர் இருக்கும் மண்ணில் நம் முன்னோர் ஒரு காலத்தில் கடல்நாய்களை வேட்டையாடியும் ஈட்டிகொண்டு மீன் குத்தியும் வாழ்ந்தனர். அவர்களின் உடல்கள் இன்றும் அச்சதுப்புக்கு அடியில் உறையக்கூடும். அவர்கள் தங்கள் மண்விழிகளை விரித்து அண்ணாந்து நோக்குகையில் தெரிவது அறியாத மக்களின் இந்த ஒளியும் ஒலியும். அவர்கள் அஞ்சக்கூடும். அறியாது குழம்பி நெடு மூச்சிட்டு திரும்பிப் படுக்கக்கூடும். நாளை அச்சதுப்பில் நீங்கள் விரிசல்கள் தோன்றியிருப்பதைக் காணலாம். அவற்றினூடாக அவர்களின் நெடுமூச்சு கொப்புளங்களாக வெடிப்பதைக் காண லாம்...'' சூழ்ந்திருந்த அவனது குலத்து இளையோர் சுடுமூச் செறிந்து தலைகுனிந்திருந்தனர்.

பின்னிரவின் குளிரில் அவர்கள் ஆங்காங்கே அவ்வண்ணமே படுத்து கள்மயக்கில் துயில்கொள்கையில் கன்னங்கரிய வட்ட முகத்தில் வெண்விழியும் கூர் எயிறும் துலங்கிய கன்னி ஒருத்தி மட்டும் வஞ்சி மாநகரையே நோக்கி அமர்ந்திருந்தாள். தன்னுள் எண்ணத்தொலையாத வண்ணக்கனவுகள் கொந்தளித்துச் சுழல்வதை அச்சத்துடன் அறிந்தாள். அது கள்வெறியா துயில் மயக்கா என்று எண்ணிக் கொண்டாள். நீலம் அலைத்த பெருங் கடல் வெளியை நோக்கி உச்சிமலைமீது ஒருகால் ஊன்றி அவள்

நின்றிருந்தாள். பின்னர் முலைத்தொங்கி தொடைமீதுபடிந்தாட கைதட்டிப் பாடும் முழங்கும் குரல் மக்கள் பின்தொடர, முதுகலை மான் மீதேறி மலைச்சரிவில் சென்றாள். நாநீட்டி உறுமும் பெரும் பல்லி விலங்குகள். உகிர் விரித்த யானைப்புலிகள். எந்தக் காடு இது? ஓங்கி நிற்கும் இம்மலையடுக்கங்கள் யாவை? மதில் மீது கடல் அறையும் இப்பெருநகர் எது? பெருவாயில் மீது படகுகள் வைக்கப் பட்ட இந்நகர்? அலைத்தெழும் நீலம். நீரின் பேரோலம். பாறை களை அடித்துப் பிளக்கும் நீரின் வெறிக்கூத்து...

அவள் கால்விரல்கள் நாண் இறுகும் வில் என இழுபட்டன. கைகள் காற்றுபட்ட இலைநுனிகள்போலக் குளிர்ந்து படபடத்தன. பாறை விண்டு வெடித்துப் பிளந்து சரிந்தது. அழவிரியும் கரிய உதடுகள்போல. அந்த பெருஞ்சிலையின் கரிய கால்கள் ஆடின. பின் முன் சரிந்தன. விரித்த கருங்கண்களுடன் சிலை தன் பெருமுகம் காற்றில் புதைந்து புதைந்து கீழிறங்கி நீர்ச்சுழலை அறைந்து அலை விலக்கி விழுந்தது. கடைசியர் கன்னி அம்பு நின்ற வில் என முறுகிப் புறம் வளைந்து நரம்புகள் புடைத்து கைகள் காட்டுக்கொடிகள் எனத் திருகி அருவி விழும் நாணல் என அதிர்ந்துகொண்டிருந்தாள். அவள் வயிற்றுச்சதை அறைபடும் முரசின் தோற்பரப்பென அதிர்ந்து கொண்டிருந்தது. நீரின் நீலவாய் திறந்து அச்சிலையை விழுங்கிக் கொண்டது. நீலத்தில் ஓசையற்ற மென்மையுடன் மூழ்கி மூழ்கிச் சென்றது பெருஞ்சிலை. அடியற்ற ஆழம் நோக்கி உதிர்ந்து சுழன்றி றங்கும் கரிய இறகுபோலச் சென்றது. அங்கே முடிவிலியாக விரிந்த பெருமுகம் ஒன்றைக் கண்டாள். அதன் விரிந்த மடியில் சிறு மகவென அச்சிலை சென்றமர்ந்தது. அன்னையின் நீலப்பெரு முகத்தில் கனவும் வெறியும் கலந்த இனிய நகை ஒன்று சுடர்வதை கண்டாள்.

வீரிட்டலறியபடி கன்னி எழுந்தாள். கூந்தல் சிதறிக் காற்றில் பறக்க இருகைகளையும் விரித்து வெறிக்கூத்திட்டாள். பதறிக் குலைந்து கடையர் மக்கள் அவளைச் சூழ்ந்தனர். அவள் வாயி லிருந்து ஒருபோதும் கேட்டறியாத் தமிழைக் கேட்டனர். அவள் கண்களில் புடவிக்கே ஆணையிடும் மிடுக்கைக் கண்டனர். மண்மீது முகம் சேர்த்து விழுந்து, அன்னையே எங்கள் குடிகாத்தருள்க என்று கூவி வணங்கினர். குடிமூத்தார் இருவர் துடியும் பறையும் இசைத் தனர். அவர்கள் விரல்களிலிருந்து அவர்களே அறிந்திராத தொல் தாளம் எழுந்து காற்றை மோதியது. சில கணங்களில் அந்தத் தாளத் தில் அவர்களும் காற்றும் கடலும் ஒன்றாயினர். விண்ணும் மண்ணு மாக அத்தாளமே நின்றது. ''நான் கன்னி! நான் கன்னி! இங்கு என்

இருக்கை!''என்றாள் கன்னி. ''நான் எரிதழற் கொற்றவை! என்று மழியாப் பேரறம் காத்த கண்ணை!'' என்றாள். ''அன்னையே இது உன் மண். இங்கு எழுந்தருள்க!'' என்று கூவியபடி முட்டன்மூப்பன் ஓடிச்சென்று ஒரு கருங்கல்லை எடுத்துப் பிறிதொன்றுமீது வைத் தான். ஆடிச்சுழன்ற கன்னி அக்கல்மீது நெற்றிமோதச் சரிந்து விழுந்தாள். பெண்டிர் குலவையிட்டனர். ஆண்கள் அன்னை வெல்க என வாழ்த்தி தங்கள் படைக்கருவிகளை உரசி ஒலியெழுப் பினர்.

பின் கன்னி கண்திறந்து பேதைவிழிகளுடன் தன் உறவை நோக்கினாள். மூத்த கடைசியர் அவளை அள்ளி அருகே குடிலுக்குக் கொண்டுசென்றனர். ஒரு முதியவள் ஓடிவந்து அக்கன்னி பருவம் கொண்டிருப்பதாகச் சொன்னாள். வியப்பில் சொல்லிழந்தது கடையர்குடி. அக்கணம் சதுப்பின் கோரைமுஞ்சி நீட்சி நடுவே ஒரு குரலின் செருக்கடிப்பை முட்டன் கேட்டான். பந்தம் கொளுத்தி நோக்கியபோது அவர்கள் அதுவரை கண்டிராத புதுவிலங்கொன்று பச்சைக் கண் சுடர்களுடன் நின்றிருந்தது. அவர்கள் அதைச் சூழ்ந்து பிடித்தபோது ஓடாமல் எதிர்க்காமல் அவர்களை நன்கறிந்ததுபோல அது கூடவே வந்தது. சுருண்ட உடல்முடியும் புரிகொம்பும் குட்டை யான முகமும் கொண்ட ஆடுபோல் இருந்தது அது. அன்னைக்கு கடல் அனுப்பிய நடைபலி அது என்றான் முட்டன். அதை இழுத்து வந்து கண்ணையன்னையின் சிலைமுன் வைத்த பலிக்கல்லில் நீட்டி கழுத்தறுத்துப் பலியிட்டனர். கொப்பளித்த வெங்குருதி பலிக் கல்லை நீராட்டியது. அதன் வெம்மையை அவ்விடியல் குளிரில் உணர முடிந்தது. அதை அள்ளி அன்னைமீது முழுக்காட்டினான் முட்டன். கருக்குழி திறந்து வெளிவந்த புதுமகவென நின்றது அன்னையைக் குடியேற்றிய அந்நடுகல்.

உரை வகுத்தது

விழவெழுந்த வஞ்சி மாநகர் அரண்மனை முற்றத்தில் மெய்யியலும் மறையியலும் தேரும் அறிஞர் பேரவை கூடியது. முத் தமிழ்நாட்டிலிருந்தும் வடவர் நாடுகளிலிருந்தும் வந்த நூலோரும் மேலோரும் கூடி அவை மரபுப்படி அவரவர் நெறி காத்து அமர்ந் திருந்தனர். சாவகம் கடாரம் சீனம் ஆகிய நாடுகளில் இருந்து வந்த மஞ்சள் முகமுள்ள அறிஞர்களும் இரவர்களும் செவ்வாடையும் துவராடையும் அணிந்து அவைக்கண் வீற்றிருந்தனர். காந்தார, சோனக நாடுகளைச் சேர்ந்த ஓங்கிய செந்நிற நூலோர் தங்கள் மாணாக்கர்களுடன் அவை நிறைத்திருந்தனர். யவன நாடுகளைச் சேர்ந்த வெண்ணிற அறிஞர்கள் தங்கள் குடிமுறை உடைகளும் தலைக்கட்டுகளும் அணிந்து சலவைக்கல் சிற்பங்களென பறவைக் கண்கள் சுடர இருந்தனர். மண்ணின் மெய்யறிவு முழுக்க அங்கே கூடியது போலிருந்தது. அந்த அவையை மாந்தர் அறிந்தவற்றில் மேலானது என்றனர் பலநாடு கண்ட பெரியோர் சிலர். அந்த அவையில் நிறுவப்படுவது எதுவோ அதுவே மண்ணில் திரண்ட முழுமெய் என்றனர் அவை முதலோர்.

பனை மாலையையும் விற்கொடியையும் மேலைக் கடலை யும் கீழை மலைகளையும் பேரியாற்றையும் மும்முறை வாழ்த்தி முதுநிமித்திகன் அவை கூடுவதை அறிவித்தான். அவைப்பெருஞ் சங்கம் 'ஆம்! ஆம்! ஆம்!' எனக் கூவியது. அவையில் அமைதி நிறைந் தது. முதல் நூலோன் எழுந்து வணங்கிச் சொன்னான். கற்றோர் கூடிய அவை வாழ்க! இந்த அவையில் இன்று எழும் வினா இதுவே. இன்று எம் அறிவமர்செல்வியை ஆலயத்து அமர்த்தினோம். அறி வரே படிவரே நூலோரே மேலோரே, மண்ணில் பிறந்த மாந்தருள் ஒருவரை விண்ணவர் போற்றும் தெய்வமாக்குவது எது?

அரசமர் அறிவனின் அடிகளைப் புகழ் கூவி சாக்கைய இரவர் தன் மெய்யறிவைத் தொடுத்தார். மாறுவதொன்றே மெய்யென்றார் எங்கள் அறிவமர்முதல்வன். கடல் அலைகள் நம் கண்முன்னே தோன்றியழியும், மலைகளோ விண்ணகக் கண்கள் நோக்கும்

அலைகளென்றறிக. விண்ணகக் கண்களோ முடிவிலாப் பெரு வெளிக்கடலின் குமிழிகளேயாகும். முடிவிலியோ அறிவிகந்த ஆழத்தில் எழுந்த சிற்றலை.

நாம் அறிவதெல்லாம் அறியவொண்ணாமையின் தோற்றங் களையே. அறிவென அறிவதொன்றே அறிவாக நிற்கிறது. அவை யோரே அறிக, அறிவு அறியவொண்ணாமையின் வான் முன் எழுந்த குன்று. அறிவை வணங்குவோம். அறியவொண்ணா மையை அடிபணிவோம்.

அறிதலொன்றே நாம் அறியக்கூடிய பொருளாகி நிற்கிறது என்றறிக. அறிதலை நிகழ்த்துவது எதுவோ அதுவே அறியப்படு பொருளையும் நிகழ்த்துகிறது. எது அறியப்படுகிறதோ அதுவே அறிவையும் ஆக்குகிறது. எது அறிவோ அதுவே அறியப்படு பொருளையும் ஆக்குகிறது.

ஒன்றில் இருந்தபடிப் பிறிதை நோக்கும் அந்த நெறியே பேரற மென்றறிக. நீரில் நீர்மையாக, தழலில் தழன்மையாக, கல்லில் கன்மையாக, ஒளியில் ஒளிர்தலாக, ஒலியில் ஒலித்தலாக உறை கிறது அது. நாம் அதை அறிகையில் அது நம் அறிவு. அறிவின் அறித லாக நிற்பது அது. அதுவே அறம். அறத்தை அகமாக உணர்ந்தவன் எவனோ அவனே அறமாக அமர்கிறான். அறத்திலமர்ந்தவன் பிறிதற்றவன். தானேயானவன். அவன் முடிவிலாமையின் துளி. முடிவிலாமை பிரிவற்றதாகையால் அவனே முடிவிலாமை.

அறமே ஆகமாகக் கொண்டவன் அறமுதல்வன். அரசமர்ந்த அறிவன். அவனை வணங்குவோம். அவன் நெறி நின்று இங்கே அறிவமர்செல்வியை நிறுவினோம். அவள் வாழ்க. பேரறமே தானாகிச் சுடர்ந்த பெருமாட்டி அவள். அறத்தில் அமர்ந்து அறமாகி அவிந்தவள். அவள் புகழ் ஓங்குக. ஆம், அவ்வாறே ஆகுக!

மறைநெறி கற்ற அளவைவாதி உரைத்தான். வேதவியாசனும் கிருதகோடியும் சைமினியும் சொன்ன மெய்யறிவை இங்கே வைப்பேன். கடலில் நீந்தும் சின்னஞ்சிறு பரல்மீனைக் கண்டேன் ஒருநாள். சிற்றுடலில் நீருண்டு உமிழும் வாயும் செதிலும் நீந்தும் சிறகும் கொண்டிருந்தது அது. ஒருகடல் இருகடல் முக்கடல் என முட்டை விட்டெழுந்த கணம் முதல் கடலை உண்டுமிழ்ந்து அளந்து கொண்டிருந்தது அது. அவையோரே! அளந்து முடிக்க அதனால் இயல்கிறதா என்பதல்ல. அளக்க முடிகிறதென்பதே கடலின் நெறியாகும். செயலாற்றச் சிறகுகளும் அறிவடைய அளவை யுறுப்பும் கடலை ஆளும் ஆழத்தால் அதற்கு அளிக்கப்பட்டிருக் கிறது. அறிவாகி நின்ற வெளியே தன்னை அறியும் நெறியையும்

வகுத்துவிட்டிருக்கிறது.

காண்டல், கருதல், ஒப்பிடுதல், முற்கூற்றறிதல், உற்றுய்த் தறிதல், இன்மையுணர்தல் என அறுவகை அளவையால் அறியப் படுவது இப்புடவி. அறிதலின் விளைவாக அகத்தில் பிறப்பது. அளப்பதன்மூலம் ஆக்கப்படுவதென்பதே அதன் முறையாகும். அவையோரே, செதில்வாய் மூலம் கடலை அளக்கும் பரல் மீன் அளந்தறிவது எதன்பொருட்டு? சிறகுகள்மூலம் ஓயாது செயல் வினையாற்றவே. செயல்மூலமே இருப்பு நிகழ்கிறது. நம்மால் அறியப்படும் இவையனைத்தும் ஓய்விலாது நிகழ்பவையே. சிறகசைக்காத கணம்கூட மீனுக்கு நீர்வெளியால் அளிக்கப்பட வில்லை. அலைகளோ அந்நீர்வெளியின் ஓயாத சிறகுகளேயாகும்.

ஆற்றுவதெல்லாம் ஆற்றி ஆன்றோர் முறைப்படி அடங்கு வதே நெறியாகலால் அதை இயற்றியவரை மூத்தோர் என்றும் முழுமையோர் என்றும் வணங்குதல் மரபாயிற்று என்றார் அவர்.

அறிதலாகி நிற்பது எதுவோ அதுவே புடவி என்றார் பிரமவாதி. புடவிகளை மணிகளாகக் கோர்த்த மாலை இப்பெரு வெளி. அம்மாலையை அணிந்தவன் உலகளித்தோன். உலகளித் தோர்களைத் தன் ஆடிப்பாவைகளாக ஆடவைத்து பெருக்கிய வண்ணம் மையத்தில் உறையும் முழுமையே பிரம்மம். முழுமை யானதே உண்மை, பிறவெலாம் பொய்யே. பொய்யின் உயிரென மெய் உறைதலை அறிக. மெய்யை அறிந்தபின் பொய் இல்லை யென்றுணர்க! மெய்யை அறிந்து மெய்யுருவாகி வாழ்ந்தவரே மாந்தருள் தெய்வம் ஆவர் என்று சொல்லி அமைந்தார்.

நீரில் துடிக்கும் சிறுபுழுவிலும் புயல்பட்டெழுந்து சுழன் றாடும் ஆழிப்பெருவெளியிலும் அடியார் காண்பது ஓயாப்பெரு நடனம் ஒன்றையே என்றார் சைவர். முடிவிலாப் பெருவெளி ஆடல்வல்லானின் அரங்கு. அவன் ஆட்டத்தில் தெறிக்கும் புழுதித் துளிகளே இப்புடவிகள் அனைத்தும். வாழ்தலென்பது அவனடி சேரும் பயணமே ஆதலால் அவனருள் பெற்றவர் விண்ணவரே ஆவர் என்றார் அவர்.

புடவிகள் அலைகடல் துமிகள். அவ்வெண்பாற் கடல்வெளி யில் துயின்றான் எங்கள் விண்ணோன் என்றார் விண்ணெறியினர். அவன் அறிதுயில் முதற்புன்னகையில் பிறந்தது முதல் ஒளியின் கீற்று. அவன் விழிவிரியத் தோன்றியவை விண்ணகங்களை ஆளும் நாளவனும் கோள்களும். விண்ணவன் கழல் தொட்டு பிறவிப் பெரும்பிணி ஒழித்தவரை மண்ணில் மாக்கள் வணங்குதல் முறையே என்றார்.

சமணப்படிவர் அருகன் அடிதொழுது தங்கள் நெறியுரைத்
தனர். அவையீர் கேட்பீராக, ஆழ்கடலின் அடியில் பேரமுத்தம்
நதும்பும் இருளே நிறைந்துள்ளது. நாளோன் சுடரோ இரவோன்
ஒளியோ என்றும் எட்ட இயலாத உலகு அது. அங்கே வாழ்ந்த மீன்
ஒன்றைக் கடலாய்ந்து நூலிறக்கிய தென்திசைப் பரதவர் சிலர்
பிடித்துக் காட்டினர் எமக்கு. விடியாப் பேரிருளிலும் கண்ணிலாது
அது காண்கிறது, கருதுகிறது என்று கண்டோம். ஒளியிலா வெளி
யில் ஒளியாவது எது? கண்ணிலாதபோது கண்ணாவது எது?
அதுவே புடவிகளை ஆளும் பெருங்கருணை. அதை நெஞ்சில்
நிறைப்பதே ஊழ்கம் என்றறிக. ஊழ்கத்திலேறி உறுவினை
யறுத்தோர் அறிவமர்செல்வர் ஆவது இயல்பே. மங்கல மடந்
தையை மண்டலம் வழுத்துக. ஆம், அவ்வாறே ஆகுக!

சீனத்து அறிவாளர் சிறுமணி விழிகள் சுடர தங்கள் நாட்டு மெய்யறிவை உரைக்கலானார். சிங்கத்தின் குடலுக்குள் ஊனை எரிக்கும் நெருப்பு எரிகிறது. அந்நெருப்பில் திளைத்து வாழ்கிறது குடற்புழு. கல்லிலும் புல்லிலும் காற்றிலும் கரையிலும் அனைத் தையும் வகுத்து தான் வகுத்தமைக்குள் நின்று உலகு புரக்கிறது ஒரு பெருநெறி. அந்நெறியை உற்றறிந்து அதில் தன் அகத்தையும் புறத்தையும் பொருத்திக் கொள்ளுதலே மாந்தர் கொள்ளும் அறிதல்களில் முதன்மையானதென்றறிவோம். உலகியல் நெறியும் உள்ளத்து அறிவும் உய்த்து எங்கள் பேராசிரியர் கன்பூசியர் சொன்ன சொற்கள் இவை. அவர் புகழ் வாழ்க. ஒளி நுழையாது இலை செறிந்த காட்டிலும் கிளைவிரித்து விரியத் தன் இடமறியும் பெரு மரம்போல மண்மீது தன் இடத்தை நிறைப்பவர் தலைமுறைகள் வணங்கும் முதல் மனிதராதல் இயல்பே என்றார்.

யவன மெய்யறிஞர் தன் முதலறிவர் சாக்ரதரின் கொள் கையை எடுத்துரைத்தார். பருமையாகி நிற்கும் இவையெல்லாம் உள்ளுறையும் நுண்மைகளின் வெளிப்பாடே நுண்மை மீண்டும் மீண்டும் பருண்மையில் தன்னை நிகழ்த்தி நிறைவுறாது முன்னகர் கிறது. ஆடிநோக்கி ஒப்பனை செய்யும் அழகி தன் முகங்களின் வழியாக ஆகச்சிறந்த முகம் நோக்கிச் செல்கிறாள். அவள் அதை எட்டுவதேயில்லை. ஏனெனில் அம்முகம் அவளது அத்தனை முகங்களுக்கும் அப்பால் முடிவிலியில் நின்றுகொண்டிருக்கிறது. வானை ஆடியாக்கி முகம் பார்க்கிறது மனிதம். மண்ணில் போற்றப் படுவது விண்ணிலெழும் அந்த ஆடிப்பாவையே என்றார் யவனர்.

பல்நாட்டுப் பேரறிஞர் கூடிய அவ்வவையில் சொற்கள் அம்புகள் என எழுந்து பறந்தன. கருத்துக்கள் விற்களென வளைந்

திறுக உள்ளங்கள் நாண்களாகித் தெறித்தன. உணவுக்கும் ஓய்வுக்கும் இடைவெளிவிட்ட வேளைகளில்கூட அவைப்புறத்திலும் திண்ணைகளிலும் சொற்போர் நீண்டது. நாள் சிவந்து இரவெழுகையிலும் சொற்புட்கள் கூடுசேரவில்லை. பல்லாயிரம் பறவைகள் கூடணைந்து ஒலித்த காயல்கரை மரம் என உள்ளம் ஒலிக்கத் துயின்றனர் அவையோர். மீண்டும் காலையில் உழுது பரப்பிய நெகிழ்சேற்றுப்பரப்புமீது சொற்கள் வீசப்பட்டன. அக்கணமே முளைத்துக் காடாயின. இலைதழைத்து மண்மூடி பூத்து காய்த்து கனிந்து உலர்ந்து விதை பரப்பிப் பெருகின. வான் வான் என மேல் நோக்கிப் பொங்கின. வேர்களை ஆழத்திலிறக்கிப் பின்னி இறுக்கிக் கொண்டன. ஈரத்தை உண்டு குருதியாக்கிக் கொண்டன. மானுட அறிவென்பது கடலில் அலை என்றறிந்தனர் சான்றோர். கொந்தளித் தெழுந்து சீறிவந்து கரைப்பாறைகளை மோதி உடைத்து மீளும் முடிவிலாச் செயல் அது. ஆழமோ அறிநகையுடன் அமைந் திருக்கிறது.

சொல் பிறந்தழிந்து மீள்பிறப்படைந்து கொண்டிருந்த அந்த அவையில் கையில் செம்பட்டில் சுற்றிய சுவடிகளுடன் மழிதலையும் இரக்கலமும் துவருடையும் கொண்டவனாக எழுந்தான் இளைய சாக்கையன் ஒருவன். 'அவையீர், இங்கு எழுந்த வினாக்களுக் கெல்லாம் இறுதி விடை சொல்லும் நூல் ஒன்று என்னிடமுள்ளது. அதை நீவிர் கேட்டருளல் வேண்டும்' என்றான். அவன் சொற்களின் உறுதி அவையைக் காற்று ஓய்ந்த காடுபோல நிலைக்கச் செய்தது. 'இது எங்கள் முதுபடிவர் யாத்த காப்பியம். தென்மொழியின் முதற்காப்பியம் ஈதென என் ஆசிரியர் சொன்னார். நூலறிந்த மேலோர் கற்று உளம் துலங்கும்பொருட்டு இதைக் கொண்டு வந்தேன்' என்றான். 'யாது இந்நூல்? எவர் உன் படிவர்?' என்றார் நிமித்திகர். 'அதை அவைக்கண் விரித்துரைக்க விருப்பம்' என்றான் இளம் சாக்கையன். அவ்வாறே ஆகுக என்றது அவை.

சேர நன்னாடு எங்கள் சாக்கையப் பேரறிவனின் தூநெறி ஓங்கிய மண் என்பர் அறிஞர். அறிவனையும் அமைப்பையும் அறத்தையும் ஏத்தி ஒழுகி அறிவமர்ந்தோரை நாங்கள் அரசமர்செல்வர் என்கிறோம். சாக்கைய மொழியில் போதிசத்தர் என்றுரைப்பர். சுடர்மணிமுடியும் கைகளில் இதழ்விரி தாமரையுமாக அரசமரத் தடியில் அவர்களை அறிவமர்கோலத்தில் நிறுவி வழிபடுகிறோம். தென்பாண்டிநாட்டு எல்லையில் தொடங்கி சேரநாட்டு மண்ணை நிறைத்துள்ள மலைத்தொடரில் எங்கள் அரசமர்செல்வர்களின் ஆலயங்கள் பல உள்ளன என அறிவீராக. அவற்றை வணங்கி அறிவ னருள் பெற்று மெய்யுணர்ந்து ஒடுங்கும்பொருட்டு தென்னாட்டி லிருந்து துறவுபூண்டு கிளம்பிய என் பெயர் சங்ககீர்த்தி. என் மூதூர் வேள்நாட்டில் விண்ணவன் பள்ளிகொள்ளும் வட்டாற்றுமுகம். அறுசமயமும் மூன்று மெய்ந்நூலும் கற்ற பின்னும் மெய்தெளியாது விண்ணவன் ஆலயத்துச் சாலையை விட்டு வேளிமலைக்குச் சென்று அங்கே மலைமீது அமர்ந்த என் ஆசிரியர் போதகீர்த்தியைக் கண்டு வணங்கி மெய்யறம் அறிந்தேன். துவராடையும் இரத்தல் நெறியும் கொண்டேன். அவர் ஆணையை ஏற்று ஊர்தங்கா நெறி கொண்டு அலைந்தேன். அருவிகள் இழியும் குற்றாலச் சிற்றூர் தாண்டி மலை ஏறினேன். குளத்துப்புழை என்ற ஊரில் அமைந்த அறிவமர்செல்வனின் ஆலயத்தையும் அறச்சாலையும் கண்டு அங்கே சின்னாள் தங்கி அறம் கற்றேன். பின் அங்கிருந்து ஆரியன் காவுக்குச் சென்று அங்கிருந்த அறிவமர்செல்வனின் கோயிலை வணங்கினேன். அப்பயணத்தில் பின்னர் எருமேலியில் குடி கொண்ட அறிவனைத் தொழுது பந்தள நாட்டுக்குச் சென்று அங்கே அறச்சோலை ஒன்றில் தங்கியிருந்தேன்.

அங்கே மூதிரவர் ஒருவரைக் கண்டு உரையாடும் பேறு பெற்றேன். அவர் சொற்களினூடாகவே ஆனை ஏறாத, ஆடு ஏறாத மாமலை உச்சியில் தனித்து வாழும் அறிவமர்செல்வனைப்பற்றிய செய்தியை அறிந்தேன். அங்கு சென்றுசேருதல் இயலாதென்றனர்

இரவர்கள் அனைவரும். எனினும் என் உள்ளம் என் ஆசிரியர் அவரே என்று உரைத்தமையால் பிற குரல்களைக் கேட்க நான் விழையவில்லை. அப்பயணத்தில் உயிர் துறப்பேனென்றால் அதுவே என் விடுதலை என்றேன். அம்மலைக்குச் செல்லும் வழியைக் கேட்டேன். கொடுவிலங்குகள் சீறியலையும் காடென் பதால் அவற்றின் கண்களை உறுத்தும் துவராடை கூடா தென்றார்கள். கரிய உடையணிந்து குளிர்தாங்கக் குறும்பாட்டு முடி நெய்த கம்பளம் மூடிக் கிளம்பினேன். அறச்சாலையில் சாக்கைய நெறிப்படி ஒன்றில் எனக்கும் பிறிதில் படிவர்களுக்கும் உரிய பொருட்களைத் தனிதனியாகக் முடிந்து இருமுடி கட்டி அளித்தனர். சாமைவறையும் பசு நெய்யும் அரிசிப்பொடியும் வெல்லமும் குளிர்நெருப்பெரிக்கக் கருப்பூரமும் அரணிக்கட்டையும் பிறவும் கொண்டு சரணப்பெருவிளி எழுப்பியபடி மலை ஏறிச்சென்றேன்.

இரவர் சொன்ன வழியில் கற்சுரம் எழுந்த கரிமலையும் நீலக் காடு மூடிய நீலிமலையும் கடந்து அறிவமர் படிவர் வாழ்ந்த அலங்கைமலைக்குச் சென்றேன். அலங்கைப்புதர்கள் செறிந்த அதன் கீழடுக்குகளில் மூன்று மலைக்குகைகளில் ஊழ்கமே வாழ் வென ஏழு சாக்கையப் படிவர் இருந்தனர். என்னை நோக்கிய அவர்கள் கண்கள் என் உடலைக் காணவேயில்லை. என் வழியாக ஊடுருவிச்சென்ற வெறும்வெளியையே கண்டனர் போலும். அவர் கள் கண்முன் என் உடலினூடாகத் தென்றல் கடந்து செல்வதை உணர்ந்தேன். நான் கொண்டுசென்றிருந்த அரிசியையும் வெல்லத் தையும் உப்பையும் பிற படையற்பொருட்களையும் அவர்கள் கால் களில் வைத்து வணங்கினேன். அவர்களில் ஒருவர் சற்றே கண் மலர்ந்தபோது வணங்கி அறிவமர்செல்வரைப்பற்றி வினவினேன். அலங்கைமலையின் தலைமீதேற்றிய கொந்தை போல இருந்த சிறுகுன்றின் மேல்தடத்தில் ஓங்கிய வேங்கைமரத்தடியில் புற்குடில் கட்டித் தனித்துப் பசித்து விழித்து அவர் ஊழ்கநிலை கொண்டிருப் பதாகச் சொன்னார்கள். அவர் யார், எந்நெறி கொண்டவர் எதுவும் எவரும் அறியார். அம்மலையில் சாக்கையர் வாழ்வதனால் அவரை சாக்கையப் படிவராக எண்ணி அவர்கள் வழிபட்டனர். அவர் சொல்லவிந்து மெய்யெழுந்த பெருநிலை எய்தியவர் என்றனர். கூப்பிய கைகளுடன் படிகளை ஏறிச் சென்றேன். பதினெட்டுப் பெருங்கற்களை இட்டு படி கட்டியிருந்தனர். நான் மேலேறிச் சென்ற போது இளமழை பெய்து ஓய்ந்திருந்தது. தளிர்விட்ட வேங்கைச் செவ்விலைகள் நாய்நாக்குபோலத் தொங்கி ஆடிச் சொட்டிக் கொண்டிருந்தன. ஓடு நீராடி எழுந்த குறும்பாட்டின் சீவியது

போன்ற உடல்முடியென அலங்கைப்புதர்கள் காற்றில் நீலத் தழைப்பு சரியக் கிடந்தன.

வேங்கை மரத்தடியில் இருந்தவர் நான் எண்ணியதைவிட மிக மிக இளையவர். செம்புக்கலமென மழிக்கப்பட்ட தலையில் விழுந்து விரிந்த பொன்னிறத் தோள்களில் வழிந்த மழைநீர் ஒடுங்கிய இடையில் விழுந்து மடித்த கைகளைக் கழுவிச்சென்றது. தூநீர் முழுக்காட்டப்படும் அரசமர் பேரறிவனின் செம்பொற்சிலை யெனத் தெரிந்தார். விரிந்த நெற்றித்தடம், நீண்டகூர் மூக்கு, செறிந்த குமிழுதடுகள், சிற்பச்செதுக்கென அழகிய மோவாய். நான் கண்டவர்களில் அவரே அழகர். பொற்சிமிழ் மூடிபோல இமைகள் மூட தன்னுள் தான் அமிழ்ந்து தானே வெளியாகி அங்கே இருந் தார். அவரில் ஆழ்ந்து அவரன்றி வேறொன்றில் செல்லா நெஞ்சு டன் அவர்முன் நான் அமர்ந்தேன். அவர் எளிய மனிதர் அல்லர் அவையோரே! எங்கோ அரசகுடியிற் பிறந்தவர்; ஐயமேயில்லை.

அப்போது சேரன் தன் அரியணை விட்டெழுந்து ''இப்போது அவர் எங்குள்ளார்?'' என்று வினவியவனாக முன்னால் வந்தான். மேலாடை நிலம் சரியக் கண்களில் ஊற்றென நீர் எழ ''சொல்க இளம் இரவரே, அவர் எங்குளார்?'' என்றான். அவன் குரல் இடறு வதை அவையோர் கண்டனர்.

பேரமைச்சர் எழுந்து உறுதிமிக்க குரலெழுப்பி, ''மன்னரே, அவர் அறிவமர்செல்வர். ஊனுடலில் அவர் இருப்பதும் இல்லாத தும் ஒன்றே. அறிக!'' என்றார். ''ஆம்!'' என்றபடி சேரன் மீண்டும் அமர்ந்தான். நெடுமூச்செறிந்து ''ஆம்!'' என்றான். 'சொல்க' என்று பேரமைச்சர் கைகாட்டினார்.

இரவர் மீண்டும் சொன்னார். அன்று பகலும் இரவும் அவர் முன் அமர்ந்திருந்தேன். காலையில் வெய்யோனொளி தொட விரியும் தாமரையென என அவர் விழி மலர்ந்தார். என்னை நோக்கி மென்னகை புரிந்தார். என்னை அவர் அறிந்திருந்தார். அவர் எழுந் ததும் நான் அருகே சென்று அவர் கால்களைப் பணிந்தேன். ஒரு சொல்கூட சொல்லவில்லை, நான் எண்ணியனவெல்லாம் சொல்லப்பட்டுவிட்டிருந்தன. அவையோரே, அவருடன் எட்டுத் திங்கள் உடனிருந்தேன். ஒரு சொல்லும் சொல்லவில்லை. அவரை இடைவிடாது விழிப்பிலும் கனவிலும் நோக்கியபடி அங்கு இருந்தேன். சென்ற ஆண்டு கார்த்திகைத் திங்கள் ஐந்தாம் வளர் பிறை நாளில் என்னை அழைத்துக்கொண்டு அவர் மலையிறங் கினார். குகை ஒன்றுக்குள் இட்டுச்சென்றார். அங்கே பாறையிடுக் கிலிருந்து கமுகுப்பாளையில் சுருட்டி வைத்திருந்த சுவடிக்கட்டு

ஒன்றை எடுத்து என்னிடம் அளித்தார். ''அடுத்த மேழ மாத முழு நிலவு நாளில் சேரன் வஞ்சிக்குச் செல். இந்நூலை அங்கு அரங்கேற்று'' என்று சொன்னபின் திரும்பி நடந்தார்.

அன்று நள்ளிரவில் நிலவு நடுவான் சேரும் நேரத்தில் அவ் வேங்கை மரத்தடியில் அலங்கைப்புதர் நடுவே ஐயன் ஊழ்கத் திலமர்ந்தார். மூன்று நாட்களுக்கு ஒருமுறை விழித்து பழப் பிழிவுண்டு மீண்டும் தன்னுள் நுழைவார். செய்தி பரவி மலைகளி லிருந்து சாக்கையர் சரணப்பெருவிளி முழக்கி வந்தவண்ணம் இருந்தனர். பின்னர் மலைக்குடிகள் திரண்டு வரத்தொடங்கினர். ஐயன் முன் பழங்களும் தேனும் படைத்து வணங்கினர். அவரைச் சூழ்ந்த அலங்கைச் செடிகளிலிருந்து ஓரிரு இலைகள் கொய்து அவரது தாளில் வைத்து வணங்கி சூடிச்சென்றனர். நாற்பத்தொரு நாள் ஐயன் ஊழ்கத்திலிருந்தார். தைமாதம் முதல்நாள் முழுநில வெழுந்தபோது ஐயன் முகம் நிலவிறங்கிய காட்டுச்சுனைபோல ஒளிவிடக் கண்டோம். அவரது சிறிய இதழ்கள் செஞ்சிமிழ்விட்டு வெளிவரும் அரதனம் ஒளி பரப்பி உயிர்கொள்வதுபோலக் குறுநகையொன்றை ஏந்தின. சூழ்ந்த இரவரும் பிறரும் கைகூப்பி அறிவனின் அடி பரவிச் சரணப் பெருவிளியெழுப்பினர். அவ் வொலி அறியாது நிலைத்தபோது ஐயன் சிலைத்திருக்கக் கண் டோம். அப்போது எதிரே ஓங்கிநின்ற பொன்மேடு என்னும் குன்றில் செம்மலர் ஒன்று இதழ்விரிப்பதுபோலச் சுடரொன்று எழுந்து வானை நோக்கிச் செல்லக் கண்டோம். எங்கள் சரண விளியால் மலைகளைச் சூழ்ந்த இருள் அதிர்ந்தது.

ஐயன் சபரணம் அடைந்த அம்மலையை சபரணமலை யென்றே பெயரிட்டோம். அங்கேயே ஐயனை அடக்கி அதன்மீது சிற்றாலயம்கட்டி மூத்தபெரும்பலவின் அடிக்குடம் செதுக்கி ஐயனுக்குச் சிலையெடுத்தோம். அன்று தொடங்கி நாற்பதுநாள் ஏழுமலைகளிலிருந்தும் மலைக்குடிகள் கிளைஞர் சூழ பூசெய்பொருட்களும் விளக்கும் ஏந்தி மலையேறிவந்து ஐயன் அடிதொழுது அலங்கைத் துழாய் கொண்டு சென்றனர். தென் நாடெங்கும் சாக்கையர் பள்ளிகளில் செய்தி சென்று கரிய உடையும் இருமுடிக்கட்டும் கொண்ட இரவரும் பிறரும் காடும் மேடும் கடந்து ஐயனின் அடி தொழ வந்தனர். அடுத்த ஆண்டு நளி மாதத்தில் சாக்கைய நெறி பேணி நோன்பிருந்து சரணப்பெருவிளி எழுப்பி மக்கள் மலையேறி வந்தனர். அதுவே ஐயனுக்குகந்த வழிபாடென அறிவர் வகுத்தனர்.

மழை இழை முறியாது பெய்த நாட்களிலெல்லாம் என்

சிறுகுகைக்குள் இடிஞ்சில் ஒளியில் அமர்ந்து அச்சுவடிகளைப் படித்து நெஞ்சத்து விறகை நெருப்பாக்கிக் கொண்டேன். செங்கோட்டு உச்சியில் சுடரென எழுந்த மங்கலமடந்தையின் மாண்பினைச் சொல்லும் காப்பியம் இது. வஞ்சிமாநகரில் கன்னிக்குப் பொன்னாலயம் எழும் நன்னாளையே அடிகள் சொன்னார் என்று உணர்ந்தேன். உரையிடையிட்ட இப்பாட்டுடைச் செய்யுளின் புரைதீர்நெறிச் சொற்கள் கூறும் அழியாப் பெருநெறி முத்தமிழுலகத்தை இனி எந்நாளும் வழிநடத்தும் என்பது உறுதி. அடிகள் பெயர் அழியாது விளங்கும்படி இந்நூல் ஈண்டு அவையேறுதல் வேண்டும். ஆன்றோர் அருள்க!''

ஆம் அவ்வாறே ஆகுக! என்று ஒலித்தது அவை. அவ்வொலியை வஞ்சியின் பேரொலியும் ஏற்றொலிப்பதுபோல் தோன்றியது. குரல்களினாலான குரல் ஒன்று ஆம் ஆம் ஆம் என்று அதிரக்கேட்டான் சேரன் செங்குட்டுவன். அரியணைமீது நெகிழ்ந்த நிறைநெஞ்சுடன் தன்னிலையிழந்து அவன் அமர்ந்திருந்தான்.

ஃ

கொடுங்கோளூர்க் காளியூட்டுக்குப் பெருமலை ஏறிக் கடுஞ்சுரமிறங்கிச் செல்லும் பயணிகள் நீர் நுரைத்துப் பாயும் காட்டாற்றின் கரையில் காலோய்ந்து அமர்ந்து கிளைஞரும் சுற்றமும் கூடி இருமுடியில் ஒருமுடி அவிழ்த்து வெல்லமாவையும் தினையுருளையையும் எடுத்து நீர் சேர்த்துப் பகிர்ந்துண்டு தங்கள் நாட்டுச்செய்தியும் வீட்டுச்செய்தியும் சொல்லிக்கொண்டிருந்தனர். மெலிந்த கரிய உடலும் மார்பில் விழுந்த நீள்தாடியும் தோளில் சரிந்த சுரிகுழலும் அகன்ற கண்களும் கொண்ட இளைஞன் கூட்டத்தைத் தன் கண்களால் துழாவியபடி வந்தான். ஓடைக்கரைப் பாறைக்கு அப்பால் நீர் விளிம்பில் அமர்ந்து கால்களை அலைகள் மோதவிட்டு அமர்ந்திருந்த சடைமுடியும் செவ்விழியும் கொண்ட முதியவரை அணுகி வணங்கி நின்றான். நீணேரம் கழித்து கண் மலர்ந்த முதியோன் நீரில் நிழல் கண்டு அவனைத் திரும்பி நோக்கினார். ''தங்கள் அடிபணியும் பேறு அடியேனுக்கு உண்டா?'' என்றான் இளையோன். முதியோன் மறுசொல் சொல்லாமை உணர்ந்து மீண்டும், ''என் பெயர் காளன். தென்திசையில் வேள் நாட்டைச் சேர்ந்தவன். அன்னையின் அழியாப் பெருவலிமையை அறியும்பொருட்டு துறந்து அலைபவன்'' என்றான்.

''எதைத் துறந்தாய்?''என்றார் முதியவர். ''அச்சத்தையும் தயக்கத்தையும்'' என்றான் இளைஞன். முதியோன் எழுந்தார். நீண்டு மெலிந்த கரிய உடல் சற்று வளைந்திருந்தாலும் கால்களில் கலைமானின் விரைவிருந்தது. அவரைத் தொடர்ந்த காளன் காட்டுக்குள் சென்றான். ''பார்'' என்றார் முதியோன். அங்கே செத்து ஊனழுகிப் புழுத்துக்கிடந்தது நாய் ஒன்று. ''அதை உண்க'' என்றார் கிழவர். அக்கணமே இளையோன் முன்னகர்ந்து மண்டியிட்டமர்ந்து அவ்வூனைத் தன் வலக்கையால் அள்ளி வாயில் வைத்தான். ''நில்!'' என்றார் கிழவர் புன்னகையுடன். ''துப்பு அதை. அது நஞ்சாகி விட்டிருக்கும்'' அவன் உமிழ்ந்து எழுந்தான். வாய் கழுவச் சொல்லி அவனைத் தன்னருகே அமரச்செய்து கொண்டார். ''நான் யார் என

அறிவாயா?'' என்றார். ''ஆம். நீங்கள் காலசூரர். அன்னையின் வல்லமையை அறிந்தவர் . உங்கள் புகழை நான் பாண்டி நாட்டி லேயே அறிந்திருக்கிறேன். இங்கே உங்களைச் சுட்டிக்காட்டி சிலர் பேசக் கேட்டேன்'' என்றான் காளன். ''என்னுடன் வருக!'' என்றார் சூரர். காளன் முகம் மலர்ந்தது. இருவரும் கூட்டத்திலிருந்து பிரிந்து காட்டுக்குள் புதர்களினூடாக நடந்தனர். ''நீ துறந்து வந்த கதையைச் சொல்க!'' என்றார் சூரர். காளன் சொல்லத் தொடங்கினான்.

வேணாட்டில் நாகர் குலத்தில் பிறந்தேன். எந்தை கூல வணிகர். நானும் கூலவணிகத்திற்குரிய கணக்கும் எழுத்தும் கற்று வந்தேன். அந்நாட்களில் ஒருமுறை கணக்கில் தவறிழைத்தேன் என எந்தை என்னை முனிந்தார். அவரது சினத்தை அஞ்சி வீடு நீங்கிக் காட்டுக்குள் புகுந்தேன். நீர்பெருகிச் சுழித்த வள்ளியாற்றின் கரையின் வழியாக இனித் திரும்புதல் இல்லை என்ற எண்ணத் துடன் நடந்தேன். நீரின் பேரொலி என்னைச் சூழ்ந்தது. கரிய பாறைக் கூட்டங்களினூடே ஆறு உடைந்து நுரைசிதறி வெண்ணிறப் பெரும்சரிவாக என் முன் நிற்கக் கண்டேன். அருகே ஒரு சிற்றாலயம். அருவிக்கரைக் காளிகோயில் என்று அது அழைக்கப் படுவதைக் கேட்டிருந்தேன். கோயிலைச் சூழ்ந்த சதுப்பில் வாழைகள் அடர்ந்து இலைபரப்பிக் குலை தாழ்த்தி நின்றன. வயிறு நிறையப் பழம் பறித்து உண்ட பின் கோயிலுக்குள் நுழைந்து கற்றிண்ணையில் கால்நீட்டிப் படுத்துக்கொண்டேன். அனைத்திலி ருந்தும் விடுபட்டு வந்துவிட்டவன்போல் உணர்ந்தேன். நீள்தொலை வுக்கு அடர்காடே நிறைந்திருந்தமையால் என்னை அச்சுறுத்தும் ஒலிகளே கேட்டுக்கொண்டிருந்தன. நடந்த களைப்பில் நான் கண் துயின்றாலும் பலவித அகக்காட்சிகளை எழுப்பியபடி என் காது ஒலிகளை உள்வாங்கிக் கொண்டிருந்தது.

என் முகத்தருகே குனிந்து யாரோ பார்ப்பதை உணர்ந்தேன். கண்விழித்தபோது சுடரும் செம்மணி மூக்குத்தியில் மையம் கொண்டு வட்டமாகப் படர்ந்த கரிய பெருமுகம் ஒன்று என்னருகே அகன்றவிழிகள் திறந்து குனிந்திருப்பதை அறிந்தேன். அவள் உதிரச்செவ்விதழ்களில் பூத்த மென்முறுவலைக் கண்டேன். அவளுடைய கருங்குழல் அலைகள் என்மீது குளிர்கடல்நீர் எனப் பெய்து சூழ்ந்து மூட மூச்சுத்திணறி விழித்துக்கொண்டேன். இருளுக் குள் மெல்லிய காலடிகளுடன் சிலர் நடப்பதும் இரு அகல்சுடர்கள் மின்மினி என அலைவதும் தெரிந்தது. இராக்கோழிக் குறுகல் போல அவர்கள் உரையாடிக் கொண்டனர். என்னை நிரப்பிய அச்சத்தால் நான் ஒலியேதும் எழுப்பவில்லை. ஒவ்வொருவராக

அவர்கள் அன்னை திருநடைமுன் கூடினர். அவர்களில் முதியவள் அன்னையின் திருநடை திறந்து உள்ளே சென்று அவள் காலடியில் இருந்த கல் அகலை ஏற்றினான். அனல்முத்து வளர்ந்து இலை விரித்தபோது அன்னை கனவுக்காட்சியென இருளைக் கிழித்து எழுந்து வந்தாள்.

கரிய கற்சிலை கண்ணை ஊடுருவி கருத்தில் பாவையாகி உயிர்கொண்டெழுவதை உணர்ந்தேன். கல் உடலில் உயிர்மென்மையும் ஒளியும் கூடியது. கன்னக் கதுப்புகளும் கழுத்து வளைவும் மின்னின. கண்கள் இமைத்தன போலும்! இதழ்கள் நகையில் விரிந்தன போலும்! அங்கே உடையிலா முழுமையுடன் அமர்ந்திருந்தவளை நான் முன்னரே கண்டிருந்தேன். வெறியும் கனிவும் ஒன்றான விரிமலர் விழிகள். யானைக் குண்டலங்கள் ஆடிய நீள்செவி. மண்டைமணிமாலை. சூலமும் வாளும் அனலும் மலரும் ஏந்திய கரங்கள். அவள் புரிகொம்புக் கலைமான்மீது ஒருகால் தூக்கி மறுகால் மடித்து அமர்ந்திருந்தாள். முதியவன் தன் கையிலிருந்த செங்குழம்பால் அவள் நெற்றியில் வரைய அங்கே மறைந்திருந்த மூன்றாம் விழி திறந்தது. கொல்லன் உலைக்குழியென அனன்றது அது என்று கண்டேன். பின் அவன் அவள் இடைக்கீழ் இன்னொரு விழியைத் திறந்தான். செந்தாமரை மலரின் பூக்குழியெனக் குளிர்ந்தது போலும் அது! கூடி நின்றவர்களில் ஒருவன் சிறுமுழவொன்றை மெல்ல மீட்டத்தொடங்கினான். காட்டில் மரத்தின்மீது கிளை மோதும் ஒலியன்ன சீரான தாளம். கூடி நின்றவர் அனைவருமே அத்தாளத்தில் கட்டுண்டு மெல்ல ஆடத் தொடங்கினர்.

நானும் எழுந்து அந்தத் தாளத்தில் மூழ்கி ஆடிக்கொண்டிருந்ததை ஒருகணம் உணர்ந்து அஞ்சி நிறுத்திக் கொண்டேன். எனினும் மீண்டும் நழுவி அதன் ஓட்டத்தில் விழுந்தேன். எங்கெங்கோ சென்றுகொண்டிருந்தேன். இன்னொரு நான் அன்னையையே கண்டு அவள் இரு கண்களின் வெம்மையையும் தண்மையையும் மாறிமாறி உணர்ந்து வெய்யோனொளி உண்ணும் மரம் என நின்றிருந்தேன். அந்தக் கூட்டத்தில் ஒருவன் நடுவே நகர்ந்து ஒரு கையால் தன் தலையின் சடையைப் பற்றி பிறிதொரு கையில் ஏந்திய வாளைச் சுழற்றினான். என்ன நடக்கிறதென நான் உணர்வதற்குள் கையில் துண்டான தலையுடன் அவன் உடல் மூன்றடி எடுத்துவைத்து அன்னைமுன் விழுந்தது. அவன் தலை உடலிலிருந்து விடுபட்டதும் நான் உணர்ந்த கணநேர முழுமையை இக்கணம் வரை உணர்ந்ததில்லை. நான் என்னை உணர்ந்த நாளெல்லாம்

என்மீது அழுந்திய எல்லாம் அக்கணம் துண்டாகிப் பிரிந்து என்னை விடுதலை செய்துவிட்டதென அறிந்தேன். அப்படி என்னையும் முழுமைப்படுத்துவதே என் வாழ்வில் இலக்கு என்று தோன்றியது. கூவியபடி இரு கைகளையும் விரித்து ஓடி அவர்கள் நடுவே சென்று விழுந்தேன்.

ஆசிரியரே, நான்கு வருடங்கள் அவர்களுடன் அலைந்தேன். நான் தேடிய அம்முழுமை எளிய ஒன்றல்ல; பல்லாயிரத்தில் ஒருவருக்கே நிகழக்கூடியதென அறியவே அந்நான்கு வருடங்கள் எனக்கு உதவின. அருவிக்கரைக் கொற்றவை ஆலயத்திலிருந்து காளி கேசமலையில் கருங்காளியை நோக்கிச் சென்றோம். பின்னர் முப் பந்தலில் பேரவ்வையைக் கண்டோம். செல்லுமிடமெங்கும் அன்னை தன் ஆயிரம் பல்லாயிரம் தோற்றத்தில் அமர்ந்திருந்தாள். அவளன்றி மண்ணும் மானுடரும் விண்ணும் தெய்வங்களும் இல்லை என்றறிந்தேன். அவளை எண்ணி அவளடிகளை வணங்கி நிலங்களினூடாக அலைந்தேன். எண்ணற்ற தெய்வங்கள். எண் ணிலாத எண்ணங்கள். அன்னையை அளக்க முடியாதென அறிந்தேன். மதுரைப் பெருநகரில் மண்மறைந்த வஞ்சியைப் பற்றியும் அங்கே குடிகொள்ளும் பெருஞ்சினக் கொற்றவையைப் பற்றியும் அறிந்தேன். அவளைக் காணும்பொருட்டு மலைகளைத் தாண்டி இங்கு வந்தேன். தங்களைக் காணும் பேறு கொண்டேன் என்றான் காளன்.

கடற்கரையில் அமர்ந்து அலைகளை எண்ணி ஆழியை அறிய முயன்றாய். நன்று; அதுவே மாந்தருக்கு மண்ணை ஆளும் தெய்வங் கள் அளித்த வழி என்று நகைத்தார் சூரர். ஆனால் திசைகளும் நெறிகளும் இல்லா வானம் அளிக்கும் வழியொன்று உள்ளது. மண்ணிலிருந்து விண்ணுக்கு எழுந்தால் மட்டுமே செல்லக்கூடிய பாதை அது.

அதை எனக்கு உரைப்பீர் என்று காளன் பணிந்து தன் ஆசிரியரை வணங்கினான். ஆம், நானறிந்தவற்றை உனக்குச் சொல்லும் தருணமொன்று வரும் என்றார் சூரர்.

ஓ

'இன்று பொலிவழிந்து சிற்றூராகி நிற்கும் இக்கொடுங் கோளூர் ஊரே முன்பு சேரன் ஆண்ட வஞ்சிப் பெருநகர் என்று சாத்த முழுநூல்கள் உரைக்கின்றன'' என்றார் சூரர். ''இங்கமர்ந்த அன்னைக்கு மங்கலமடந்தை என்றும் அறிவமர்செல்வி என்றும் பெயர் இருந்தது. அன்று இங்கே இருந்த மரத்தாலான வானுயர்ந்த அரண்களும் மாடங்களும் அழிந்தன. அவற்றின் அடித்தளங்கள் சேற்றில் புதையுண்டு மீனவர் மிதவைத் திமில்களை மோதுகின்றன. விண்ணகப் பேரரவான வாசுகியின் புதல்வியான பேரியாறு படம் எடுத்துச் சீறி நா சுழற்றி வாய் திறந்து அந்நகரை விழுங்கிய பின் சுருண்டு அமைதிகொண்டு உறங்கியது என்கின்றன நூல்கள்.'' சூரர் தொடர்ந்தார். ''வில்திறல் வீரன் ராமன் கதை கூறும் தொல்நூலில் இந்நகர் வஞ்சி என்றும் முசிறி என்றும் சொல்லப்பட்டுள்ளது. சாத்த முதனூல்கள் இதை மாக்கோதையூர் என்றும் கோடரபுரி என்றும் கூறுகின்றன.''

''நகரங்கள் அழிவதையும் மீண்டும் பிறப்பதையும் நூல்கள் மீள மீளச் சொல்கின்றன''என்றான் காளன். ''நிதம்பசூதனி ஆலயத்துப் பெரும்பலிவிழவுக்காக சோழன் தலைநகர் தஞ்சைக்குச் சென்றிருந்தேன். அங்கே அம்பலத் திண்ணையொன்றில் துயில் கையில் ஒரு முதியவர் கடல்கொண்ட பெருநகர் புகாரைப்பற்றிச் சொன்னார். காவிரி கடல்சேரும் கழிமுனையில் இருந்த சோழன் தலைநகர் அது. கரிகால் பெருவளத்தானும் அவன் குலமும் கோல் நாட்டி அறம் விளைவித்த மண். இன்று ஆழ்கடலின் அடியில் எங்கோ உறைகிறது அது என்றார் அவர். அப்போது அருகே உறங்கிய முதியவர் ஒருவர் விழித்து மெல்ல நகைத்து புகார் நகர் தன் முதல்நகரான சம்பாபுரி சென்றவழியே தானுமிறங்கியது என்றார். நகரங்கள் தங்கள் கடன் முடிந்ததும் கடலிறங்கி ஆழத்தில் மூழ்கி வீடுபேறு கொள்கின்றன என்றுரைத்து நெடுமூச்சுவிட்டார்.''

''அவர் தொல்தமிழாய்ந்த சாக்கையர் போலும்'' என்றார் சூரர். ''சாக்கையரும் சமணரும் பயிலும் தொல்நூல்களில் இந்

நரங்களைப்பற்றிய செய்திகள் உள்ளன. இருபெரும் காப்பியங்கள் இருந்ததாக நம் நூல்கள் உரைக்கின்றன. சோழவளநாட்டில் பிறந்து பாண்டியநாட்டில் கடர்ந்து சேரநாட்டில் அவிந்த கண்ணகை யென்னும் பெருங்குடிநங்கை அறிவதறிந்து அறிவமர்செல்வியான கதையைக் கூறும் சிலப்பதிகாரம் என்னும் பாட்டுடைச் செய்யுள் ஒன்று. அவள் கொழுநன் கோவலனுக்கு பூம்புகார்க் கணிகை மாதவியில் பிறந்த மணிமேகலை பசிப்பிணி யழித்து பவப்பிணி வென்ற கதை சொல்லும் மணிமேகலை இன்னொன்று. இரு நூல் களையும் அம்மதத்தவர் ஆய்ந்து கற்பது இன்றும் வழக்கம். நம் சாத்த நூல்களிலும் செங்குழற் கொற்றவை சோழவளநாட்டில் கண்ணை யென்னும் கன்னியாகப் பிறந்து மதுரைப்புரமெரித்துக் குமரித்துறை மீண்ட கதை சொல்லும் பாடல்கள் பல உள்ளன.''

''சேரன் செங்குட்டுவன் இங்கே பிஞ்ஞா தேவிக்கு எடுத்ததே இங்குள்ள மகாமங்கலை ஆலயம் என்றுரைக்கின்றது சிலப்பதி காரம் என்னும் தொன்னூல். அது பிற்காலத்தில் சாக்கியரால் எழுதப்பட்ட ஒன்றாக இருக்கலாம். இங்குள்ள அன்னை யார் எவள் என்று அறிய நூல்கள் உதவாது என்பதே உண்மையாகும். காலத்தில் பின்நகரும்தோறும் புதிய புதிய அன்னை முகங்கள் தெளிந்து வந்தபடியே உள்ளன. மேற்குமலைகளின் மடிப்புகளில் மலைமக்கள் பலநூறு அன்னையரை வணக்குகிறார்கள். ஆனால் அவர்களே அறியாத அன்னை முகங்கள் ஓவியப்பாவைகளாக எழுதப்பட்டு மலைக்குகை இருள்களில் கண்விழித்துப் புன்ன கைத்துக் கனிந்திருக்கின்றன. அன்னையர் மறைய, அன்னையர் பிறக்க, தாய்மை மட்டும் அழியாமல் இம்மண்ணில் வாழ்கிற தென்று கொள்க.''

சூரர் தொடர்ந்தார். ''இந்தச் சேரமண் எங்கும் மங்கல தேவிகளின் பன்னூறு பேராலயங்கள் இருந்திருக்கின்றன. அவை யெல்லாம் மரத்தாலானவை. சேரநாட்டை வென்று ஆட்கொண்ட சோழர்கள் அவ்வாலயங்களைத் திருத்தி செங்கற்றளிகளாக்கினர். ஆலயச்சிலைகளைச் சோழநாட்டு ஆகம முறைப்படி கொற்ற வையும் காளியுமாக ஆக்கினர். சோழிய மறையோரைக் குடியேற்றி அன்னைக்கு மறைநெறிப் பூசனைகள் முறைப்படுத்தினர். சோழர் களுக்கு எதிராகத் தலைமுறைதோறும் போரிட்ட சேரர் வென்ற போது அவ்வாலயங்களை அழித்து அன்னையை மீட்டுத் தங்கள் நெறியை வகுத்துக்கொண்டனர். மீண்டெழுந்த சேரர்கள் பெரு மாள் குலம் என்று பெயர் பெற்றனர். சேரன் குலசேகரப்பெருமாள் கொடுங்கோளூர் மாக்கோதைபுரத்து மங்கலதேவி கோயிலை

மீண்டும் எழுப்பி குடமுழுக்காட்டியதை நம் முதனூல் காளிதந்திரம் குறிப்பிடுகிறது. அவன் ஆட்சியில் அன்னை சாத்தர்களின் அழியா இறைவியாக எழுந்தாள். சாத்த மரபு புதையுண்ட கோயில்களை யெல்லாம் அகழ்ந்தெடுத்தது. ஐம்படையல் அளித்து அன்னையை வழிபடும் நெறியை வகுத்தது. சேரர் குலம் சிதறியழிந்தபோது மீண்டும் அன்னை ஆலயங்கள் அழிந்து மறைந்தன.''

''கொடுங்கோளூர் நகரைத் தேடி எங்கள் ஒன்பதாம் தலை முறை முதலாசான் சாத்தன் சங்கரன் திருவடி இம்மண்ணுக்கு வந்ததை அவரது 'சேர விஜயம்' என்னும் பெருநூல் குறிப்பிடுகிறது. அன்று இம்மண்ணில் கோல்நட்டு நெறிகாக்கும் கொற்றவன் என எவரும் இல்லை. சேரர் குலத்துச் சிதறல்களும் சோழர் விட்டுச் சென்ற எச்சங்களுமாக எண்ணற்ற குடிகள் தங்களை அரசர்களாக அறிவித்துக்கொண்டு கைப்பிடியளவுக்கு மண்ணை கைக்கொண்டு அரசாண்டு வந்தன. முடிப்பகையும் குடிப்பகையும் கொண்டு ஓயாது போர்செய்து அழிந்தன. சேரர் குடித்தோன்றலான கேரள வர்மன் உதய மார்த்தாண்டன் என்பவன் கொடுங்கோளூரை உள்ள டக்கிய மண்ணை கொச்சிப்பாக்கம் என்னும் ஊரைத் தலைநகராக்கி ஆண்டான். கொடுங்கோளூர்க் கோயிலதிகாரியாகச் சோழர் வைத்த சாத்தன் கேரளன் கொடுங்கோளூருக்காக அவனுடன் ஓயாது போரிட்டான். அப்போரில் அன்னையின் ஆலயம் எரிந் தழிந்தது. மறையவர் சேரி கொளுத்தப்பட்டதனால் அவர்கள் கூட்டத்துடன் குடிபெயர்ந்து வடநிலம் சென்றனர். ஆகவே அன்னை யின் பூசனைகள் நின்றன. காலப்போக்கில் அவள் ஆலயத்தையே மாந்தர் மறந்தனர். சேரன் உதய மார்த்தாண்டன் தன் குலதெய்வ மான கொன்றைவனநாதர் உறையும் திருவஞ்சிக்குளத்தைக் கைப் பற்றினான். அங்கே தன் படைத்தலைவனை நிறுத்தி இம்மண்ணை ஆண்டான்.''

''பேராசான் சாத்தன் சங்கரன் திருவடி கொடுங்கோளூருக்கு வந்தபோது கடற்பறவைகள் தங்கும் அழிமுகச் சதுப்பாக விரிந்து கிடந்தது இம்மண். கோயில்காரரின் அரண்மனை சிதைந்து கிடந்தது. அன்னையின் ஆலயம் செங்கற்குவியலாக மாறிச் சிதைந்து பரந்திருக்க முஞ்சியும் மூங்கிலும் கோரையும் தாழையும் வளர்ந்து மூடிய அக்காட்டுக்குள் கடற்காகங்களின் எச்சம் நிறைந்து நாற்ற மெடுத்தது. ஆற்றுக்கு அப்பால் புலைவயல் என்று அழைக்கப்பட்ட சதுப்பில் புலையர் நிறுவி வழிபட்ட கொற்றவையின் சிலை வெறும்வெளியில் காற்றைக் கோதிய கடம்ப மரத்தடியில் நின்றதைக் கண்டார். புலையர் அன்னைக்கு பலியும் பூசனையும் தடையிலாது

செய்துவந்தனர். கைத்தோணிகளில் தேடிவந்த மக்கள் அன்னைக்கு மஞ்சளரியும் செம்மலரும் படைத்து கோழியும் ஆடும் பலியிட்டு வணங்கிச் சென்றனர். அங்கே புலைமுறைப்படி ஊனும் கள்ளும் ஊன்வறையும் மலரும் காமமும் என ஐம்படையல் அளித்து வழி பட்டனர். அதன் முதல்பூசகனாக தலைப்புலையன் கண்டன் கருமாடி இருந்தான்.''

''ஏழு நாட்கள் எங்கள் ஆசான் இம்மண்ணில் தனித்து அலைந்ததாகத் தெரிகிறது. அன்னையின் சிதைந்த ஆலயத்துக்குள் செல்ல வழியொன்றை அவர் தோண்டி உருவாக்கினார். உள்ளே கற்குவியல் குகைக்குள் அமர்ந்து தவமியற்றினார். ஏழாம்நாள் இரவு முழுநிலவில் தன் மூடிய கண்களை ஊடுருவிவரும் நோக்கு ஒன்றை உணர்ந்தார். தூங்கும் மகவைக் குனிந்து நோக்கி அன்னை புன்னகைப்பதுபோல. துயிலுக்குள் அதை அம்மகவு காணு மல்லவா? அவர் கண்விழித்தெழுந்தபோது அனைத்தும் தெளிவாகி யிருந்தது. தன் கைகளால் கல்லையும் மண்ணையும் தோண்டி அகற் றியபோது கருக்குழி விட்டு வெளிவரும் குழவி என மண்ணிலிருந்து அன்னையின் சிலை முகம் வந்தது. அச்சிலையுடன் நடந்து இன்றுள்ள அன்னை கோயில் இடத்துக்கு வந்தார் அடிகள். அங்கே சத்திசக்கரத்தை வரைந்து அம்மையத்தில் அன்னையை பதிட்டை செய்தார். அங்கேயே ஆழ்தவத்திலமர்ந்தார்.''

''அடிகளின் தவத்தைத் தன் கனவில் கண்டான் சேரன். அமைச்சும் சுற்றமும் சூழ கொடுங்கோளூர் வந்து அடிபணிந்தான். அங்கேயே அன்னைக்கு ஓர் ஆலயம் அமைக்கும்படிச் சொன்னார். சேரன் ஆணையிட புதிய ஆலயம் எழுந்தது. சாத்தனுக்கும் பெருந் தோழிக்கும் அருகே சிற்றாலயங்கள் கட்டப்பட்டன. அங்கே பூசையும் பலியும் விழவும் சாத்த நெறியுடன் அமையும்படி வகுத் தளித்தார் சங்கரர். திருவடித்தானம் என்று அவரை இங்கே தனியாக நிறுத்தி வழிபடுகின்றனர். ஐம்படையல் முறையைத் திருத்தி ஊன் காயும், இளநீரும், கைமுத்திரையும், செம்மலரும், நெய்யடிசிலும் கொண்டு வழிபடும் நெறி செய்தார். அதை ஆற்ற ஏழு மறையவர் குடிகளை நிறுவி அவர்களுக்கு அடிகள் என்று பெயர் கொடுத்தார். ஆலயத்தைக் காக்கும் ஆயிரத்தவர் படையை அமைத்தவரும் அவரே. அதன் முதல்வனாக கொச்சிப்பாக்கத் துறைவன் சேரமான் பெருமாளை நிறுத்தினார் திருவடித்தானம். சங்கரதிருவடித்தானம் நிறுவிய சொல்லே இன்றும் இம்மங்கலதேவி ஆலயத்தை ஆள்கிறது என்றறிக.''

ஆங்குனி மாத வேனிலில் நீர்மட்டம் இறங்கி, சேற்று விளிம்பு அகன்று வெயிலில் உலர்ந்து வெடித்த பெரியாற்றின்மீது மஞ்சள் கொடி படபடக்க மெல்ல நகர்ந்த ஏழு தோணிகளில் குறுமர் குலத்து முட்டனும் மூத்தாரும் கன்னியரும் அன்னையரும் நிறைந்திருந்தனர். கொடியின் துடிப்பில் கொடிதாங்கிய மூங்கில் சன்னதம் கொண்டதுபோல் நடுங்கிக்கொண்டிருந்தது. கொம்பும் குழலும் முழவும் பறையும் ஒலிக்க ''இய்யே இய்யே'' என்று முறை விளி எழுப்பியபடி அவர்கள் சென்றனர். குறுமர் செல்வதை ஆற்றுக்கரைகளில் நின்ற சிற்றூர் மக்கள் கண்டனர். வெண்சங்கு ஊதியும் மஞ்சள்கொடியசைத்தும் அவர்களை வாழ்த்தினர். குறுமர் கடந்துசென்ற ஊர்களிலெல்லாம் கன்னியன்னையின் ஆலயங்களில் விழவுக்கொடி ஏற்றப்பட்டது.

பெரியாற்று ஆற்றிடைக்குறையில் ஓங்கிய ஆலமரக் காட்டின் பச்சைஇருள் நடுவே எழுந்த மரமுகடுடன் தோன்றியது கொடுங்கோளூர் அன்னையின் ஆலயம். அதன் அருகே முதுகய விரிவை நோக்கிய மண்மேட்டில் கொடுங்கோளூர் கோயில்காரரின் அரண்மனை உயர்ந்த மதில் சூழ்ந்து நின்றது. அதற்கு அப்பால் கோட்டையின் மேற்குப் பரப்பின்மீது மேலைக்கடல் அறைந்து அறைந்து நுரைத்துமி சிதறி ஓலமிட்டது. கடலின் எதிரலைப்பில் குறுமர்களின் தோணிகள் துள்ளிப் பின்வாங்கும் சோனகப்புரவிகள் என எழுந்தமர்ந்தன. ஒருவரோடொருவர் பற்றிக்கொண்டு குறுமர் கூவி நகைத்தனர். அரண்மனையின் மரத்துறையில் குறுமர் தோணிகள் சென்றணைந்தன. அரண்மனைச் சுவர்மீதெழுந்த மாடத்தில் காவல்முரசம் அதிர்ந்தது. கொம்பு ஒன்று பிளிறியடங்கியது. குறுமர் தோணிகளை விட்டிறங்கித் துறைமேடை மீது நிரைவகுத்தனர். அன்னைக்குப் படையலிட அவர்கள் கொண்டு வந்த மூன்று முட்டன் குறும் பாடுகள் கயிற்றுச்சுருக்கில் சுற்றி செருக்கடித்து குறுவால் ஆட்டி கால்மாற்றி நின்றன.

வெள்ளிக்கோல் ஏந்திய கோல்காரன் ஐந்து வாள்வீரர் சூழ

கோட்டைக்குள் இருந்து வெளியே வந்தான். குறுமர்குடித் தலைவர்கள் அவனை வணங்கி திருமுன்காழ்ச்சியாகக் கொண்டு வந்திருந்த மலைத்தேனையும் புலித்தோலையும் அளித்தனர். அவன் ஓர் எழுத்துப்பிள்ளையிடம் அவற்றைப் பெற்று வரவுகொள்ள ஆணையிட்டான். முடிச்சாத்தும் மலரும் சூடி தோலும் மரவுரியும் உடுத்து, கழுத்தில் விதைமணிமாலைகள் அணிந்து, நீர்மலர்கள் கொய்து சூடிய நெடுந்தோள்களுடன் நின்ற அம்மக்களைக் காணக் கோட்டைவாயிலில் வீரர்கள் குழுமினர். கோல்காரன் மும்முறை தலைவணங்கி ''மலையிறங்கிய குறுமர் அன்னையின் விழவுக்கு ஆணையளிக்க மன்னரைக் காணும் நாள் நிறைவுறுவதாக'' என்று அத்தருணத்தில் என்றும் சொல்லப்படும் சொற்களைச் சொன்னான். ''ஓம் ஓம் ஓம்'' என்று குறுமர் குலத்தலைவன் முட்டன் பதிலுறுத்தான்.

பின்னர் குறுமர்களைக் கோல்காரன் இட்டுச் சென்றான். அரண்மனை உள்முற்றத்தில் அவர்களைக் காண ஏவலர்க் கூட்டங்கள் முட்டி மோதிக்கொண்டன. மூன்றடுக்கு அரண்மனையின் கரிய மர உடலில் சிறு சாளரங்கள் இமைதிறக்க அவற்றினூடாகப் பணிப்பெண்களும் அகப்பெண்டிரும் அவர்களை நோக்கினர். மூன்று புறமும் திறந்த பூமுகத்தில் ஒருபுறமாக அரண்மனைக் காவலர் தலைவனும் வீரர்களும் வாளேந்தி நின்றனர். மறுபக்கம் நிமித்திகரும் அவையறிஞர் சிலரும் வெண்பட்டு மேலாடையும் மார்பணியும் வளையல்களும் அணிந்து மலர்சூடிய குடுமிகளுடன் கைகட்டி நின்றனர். குறுமர் பூமுகத்துக்கு முன்னால் முற்றத்தில் பசுஞ்சாணியால் மெழுகப்பட்ட களத்தில் தங்கள் இசைக்கருவிகளுடன் வந்து நின்றனர். அவர்களின் வருகையை ஓர் ஏவலன் உள்ளே சென்று கோயில்தம்புரானுக்கு அறிவித்தான். பேரமைச்சர் அருகே வர அடைப்பையும் விசிறியும் கொண்டு ஏவலர் தொடர அவர் பூமுகத்துக்கு வந்தார். பொன்விளிம்பிட்ட வெண்பட்டாடையும் பொன் மேலாடையும் அணிந்து மார்பில் மணியாரமும் தோள்வளையும் அரதனக் குண்டலங்களும் ஒளிர தூக்கிக் கட்டிய முச்சிக்குவையில் முத்துச்சரம் சரிய வந்து அவர் பேரிருக்கையில் அமர்ந்ததும் மங்கலப்பெருமுரசம் ஒலியெழுப்பியது. மணியும் சங்கும் துணை சேர்த்தன.

''சோழர் குலக்கூற்றன் குலசேகரப்பெருமாள் குடித்தோன்றல், தொல்வஞ்சியெனும் கொடுங்கோளூர் மாக்கோதை புரம் ஆளும் மன்னர், பெருமாள் குல முத்து, உதயவர்மன் மாக்கோதை பெருமாள் கோல் வெல்க! இமையம் வென்ற விற்கொடி

வெல்க! அவன் பனைமாலை சிறக்க! ஆம் அவ்வாறே ஆகுக!'' என்று நிமித்திகர் சேர்குரல் எழுப்பி வாழ்த்தினர். பின்னர்க் கோல் காரன் செய்கை காட்டியதும் முட்டன் கைகட்டி வாய்பொத்தி முன்னை கர்ந்து மூன்று முறை பணிந்து ''கொடுங்கோளூர் அன்னைக்கு அணிமங்கலம் செய்ய மலையிறங்கிய குறுமர் மக்களுக்கு ஆணை தரவேண்டும்'' என்று சொன்னான். அத்தருணத்துக்கெனத் தலை முறை தலைமுறையாகச் சொல்லிவரும் அச்சொற்கள் அவர்களுக்கு ஒருவகைப் பாடலாகவே இருந்தமையால் அவற்றை அவள் தங்கள் குடிவழக்கப்படிப் பாடினான். கோயில்தம்புரான் முறைவகுக்கப் பட்ட கேள்விகளைக் கேட்டார். ''எம் அன்னை ஆளும் பசுங்காடும் மலையும் நீரும் நீர் நிறையும் வானமும் முறைகொண்டு நிறை நிற்கின்றனவா?'' முட்டன் வணங்கி ''ஆம் ஆம் ஆம்''என்றான். ''மலைத்தெய்வங்கள் பலிகொள்கின்றனவா?'' என்றார் கோயிலதி காரி. ''மண்சேர்ந்த மூத்தோர் நிறைநிலை கொள்கின்றனரா?'' ''ஆம் ஆம் ஆம்'' என்றார் முட்டன். பின்னர் நிமித்திகர் கொண்டு வந்த வெள்ளிப்பெருந்தாலத்தில் இருந்த பவளமணிமாலை ஒன்றை எடுத்துக் குறுமனின் அருகே தரையில் வைத்தார். அவர் அதை எடுத்து தன் கழுத்தில் அணிந்ததும் குறுமர் தங்கள் கருவிகளை இசைத்தனர். வெளியே பெருமுரசு ஒலியெழுப்பியது. ஆடிப்பாடிய படி குறுமர் திரும்பித் தங்கள் தோணிகளில் ஏறிக்கொண்டனர். அவர்கள் சென்றதும் அரண்மனை ஏவல்மகளிர் பசுஞ்சாணி கரைத்த நீரை அவர்கள் கால்பட்ட இடங்களிலெல்லாம் தெளித்துத் தூய்மை செய்தனர்.

குறுமர் தோணிகள் அன்னையின் ஆலயத்து மரத்துறையை அணைந்தபோது கோயில் மாடத்தில் மணி ஒலித்தது. ஆலயத்துப் பூசனைகள் செய்யும் நாலாம் மறை தேர்ந்த மூத்தடிகள் கருவறை யில் அன்னையின் அடிமுன் வைத்த நிறைபொற்குடத்தின்மீது செம்பட்டு மூடி மலர்கொண்டு கட்டி கையில் எடுத்துக்கொண்டு, எல்லாச் சுடர்களையும் மலரிதழ் ஒற்றி அணைத்தபின் வெளியே இறங்கினார். முதுமறையோரான ஊரடிகள் எழுவரும் கரு வறையை விரியத் திறந்துவிட்டு கைகளில் சுடர் அசைந்த சிற்றகல் களுடன் தொடர்ந்தனர். அவர்கள் மறுபக்கம் படிஞாயிறு வாயில் வழியாக வெளியேறி அங்கிருந்த சிறுதுறையில் அணைந்த பெருந் திமிலில் ஏறிக்கொண்டனர். முதுகயம் ஊர்ந்த இமில் மறுதிசை நோக்கி நகர கோயிலின் காவலரும் கழகப் பணிப்பெண்டிர் எழுவரும் மட்டும் எஞ்சினர். ஆலயமாடத்தின் பெருமணி மும் முறை ஒலித்ததும் கொடுங்கோளூர் நகர் வாழ்ந்த மறையோர்

இல்லங்களிலெல்லாம் முகவாயில்கள் மூடப்பட்டன. மறையோர் பூசனை செய்த எல்லா ஆலயங்களிலும் பெருவாயில்கள் மூடப் பட்டன. கொடுங்கோளூர் கோயில்துறையில் குறுமர்கள் இறங் கியதும் காவலர் தலைவன் வந்து வாள்தாழ்த்திக் குறுமர்களை வர வேற்றான். கழகப்பெண்டிர் தூக்கு விளக்கும் தாலமும் ஏந்தி முன்னால் நடக்க காவலர் வாள்தாழ்த்திப் பின்னால் செல்ல குறுமர் கோயிலுக்குள் நுழைந்தனர். முட்டன் தன் தோலாடையைக் கழற்றி விட்டு செம்பட்டை அணிந்துகொண்டான். பவளமணிமாலையை அன்றி பிற அணிகளை நீக்கினான். மூத்த குறும்பி தன் கையால் அரணி கடைந்து கொளுத்திய எண்ணெய்த்திரியை இடிஞ்சிலில் ஏந்திக்கொண்டு இருண்ட கருவறைக்குள் நுழைந்தான்.

குறுமர் மக்கள் மலையிலிருந்து கொண்டுவந்த அலங்கைத் துழாயும் அகிலும் சந்தனமும் மலைத்தேனும் தினையும் எடுத்து அன்னைமுன் படையல்மேடையில் வைத்தனர். பெண்டிர் குலவை யிட ஆண்கள் பறையும் முழவும் கொம்பும் குழலுமாக அணி பேரிசை எழுப்பினர். கருவறைக்குள் கவிந்த இருளில் கையில் சுடர் இருந்தமையால் முட்டன் எதையும் காணவில்லை. சுடரை நீட்டித் தூக்கு விளக்கை மெல்லப் பொருத்தினான். செவ்விதழ் மலர்ந்து சுடர் எழுந்தபோது கனவென அன்னையின் உருவம் தோன்றித் தெளிவுகொண்டது. பொன்னாலான வட்டவடிவச் சூழ்சுடரும், அரதனங்கள் பதிக்கப்பட்ட நீண்ட அணிமுடியும் முத்துத் தோள் வளைகளும் மணிமேகலையும் சுடரை உண்டு ஒளிகொண்டன. வீண்சிலையாலான கரிய முகத்தில் செம்மணிக்கண்கள் மெல்ல மெல்ல ஒளிகொண்டு கங்காகி எரிந்தன. எட்டு விரிகைகளில் வாளும் நச்சரவும் வேலும் சூலும் தாருகன் தலையும் மணியும் சிலம்பும் தட்டமும் கொண்டு கிளைவிரித்த காட்டுவேங்கை எனக் காளி அமர்ந்திருந்தாள்.

முற்பூண் ஒளிர்ந்த முதுகுறும்பி அளித்த மரத்தாலத்தை அன்னைமுன் வைத்து அதில் மஞ்சள்சேர்த்த புல்லரிசி பரப்பி அன்னையின் பாதமாகிய ஓ என்னும் எழுத்தை அதில் வரைந்தான் முட்டன். அதன் மீது இடிஞ்சில் வைத்து நெய்த்திரி ஏற்றினான். அன்னையைச் சூழ்ந்த விளக்குகள் அனைத்தையும் ஏற்றினான். செவ்வொளியில் பந்தச்சுடரென எழுந்த அன்னைக்கு மலரும் நீரும் காட்டிப் பூசெய்தபின் தூபமும் சுடரும் சுற்றினான். குறுமர் கூடி நின்று 'இய்யே இய்யே'' என்று குரலெழுப்பி அன்னையை வணங் கினர். பின்னர் முட்டன் ஒவ்வொரு சுடராக அணைத்து தாலத்துடன் இடிஞ்சிலை எடுத்துக்கொண்டு கருவறை விட்டிறங்கினான்.

கருவறையைத் திரும்பி நோக்காமல் குறுமர் அவனைத் தொடர்ந்
தனர். படிஞாயிறு வாயில் முன் கூரையற்ற சிறுபதிட்டையாகத்
தெற்குநோக்கித் திரும்பிய நடுகல் கோலத்தில் நின்ற குறும்பியன்
னையின் முன் அத்தாலத்தை இறக்கினான். அச்சுடரில் தீ பொருத்தி
பந்தங்களை ஏற்றி அன்னையைச் சுற்றி நட்டான். காலை ஒளியில்
சுடர்கள் கீழ்த்திசை நோக்கிக் கிழிந்து பறந்தன. அன்னையின் திரு
வுருவை மஞ்சள்பொடியால் முழுக்காட்டினான் முட்டன். பின்
அன்னை முன் கிடந்த பலிக்கல்லில் செம்பட்டை விரித்து மலர் தூவி
வணங்கினான்.

முட்டன் செய்கை காட்டியதும் குறும்பாடுகள் இட்டுவரப்
பட்டன. பலிக்கல்லை முகர்ந்து தும்மிச் செருக்கடித்து நின்றன
அவை. முட்டன் அன்னையின் புகழ்ப்பெயர்களைக் கூவியபடி நீரை
அள்ளி அவற்றின்மீது அடித்தான். அவை தலையசைத்துக் கண்மூடி
முன்னகர்ந்த கணத்தில் பள்ளிவாள் மணியொலியுடன் ஓங்கிச்
சட்டென்று அவற்றின் கழுத்தில் விழுந்தது. தலை தெறித்து
மண்ணில் விழக் குருதி ஊற்று அன்னையை நோக்கிச் சீறி எழக்
குறும்பாடு தள்ளாடும் கால்களுடன் அன்னையின் அடி நோக்கி
நடந்து சென்று கால்பின்னி விழுந்து சுழன்றுவந்தது. குரவை முழங்
கியது. கருவிகளும் பேரொலி எழுப்பின. மூன்று குறும்பாடுகளும்
அன்னை அடிசேர்ந்த பின் அவற்றின் குருதியைத் தொட்டு நெற்றி
யில் பொட்டிட்டுக் கொண்டனர். வழிந்த அரத்தத்தில் சீலைகளை
நனைத்து இலையில் சுற்றி வைத்துக்கொண்டனர்.

கமுகுப்பாளையில் சுற்றிய குறும்பாட்டின் உடல்களைச்
சுமந்து குறுமர் தோணிகளில் மீண்டும் ஏறிக்கொண்டனர். முழவு
களை ஒலித்தபடி அலைகளில் ஆடி ஆடி முன்சென்றனர். உடனே
காவலரும் ஏவலரும் இணைந்து காயல் நீர் அள்ளி கருவறைமுதல்
சுற்றம்பலம் ஈறாக எல்லா இடங்களையும் கழுவிக் கோயிலைத்
தூய்மை செய்தனர். குறுமர் கால் பட்ட மண்ணெல்லாம் நீரும்
அலங்கை இலையும் தூவி மீட்டனர். மேற்குக்கரை மேட்டுமீது
ஏறிய வீரன் ஒருவன் கொம்பூதி அறிவித்ததும் காயலுக்கு அப்பால்
நெடியதளி கோயில் முன் நின்றிருந்த அடிகள் எண்மரும் மீண்டும்
நற்கலமும் சுடர்விளக்குகளுமாக ஆலயத் துறைக்கு வந்தனர். அவர்
களை வீரரும் கழகப்பெண்டிரும் எதிர்கொண்டழைத்துச் சென்ற
னர். கருவறைக்குள் புகுந்த மூத்தடிகள் நற்கலத்தை அன்னைமுன்
வைத்து செம்பட்டை அவிழ்த்து தாலத்தில் திருத்துழாய் பரப்பிப்
படைத்தார். அன்னையின் தூக்குவிளக்கை மூத்த அடிகள் ஏற்றியதும்
ஆலயப்பெருஞ்சங்கம் மங்கல இசை எழுப்பியது. ஒவ்வொரு

விளக்காக ஏற்றி அன்னையை அடிகள் சுடரச்செய்தார்.

மூத்தடிகள் விளக்குடன் வெளியே வந்து நீட்டியதும் ஊரடிகள் அச்சுடரைப் பொருத்தி கோயிலின் எல்லா விளக்குகளையும் எரியச் செய்தனர். அடிகள் கையசைத்து வணங்கியதும் ஊரடிகள் எழு வரும் முரசும் முழவும் இலைத்தாளமும் ஒலிக்க நிரைவகுத்துச் சென்று கோயிலின் ஏழு முனைகளிலும் நின்ற பேராலமரத்தின் உச்சிக்கிளைகளில் கட்டப்பட்டிருந்த கயிற்றை இழுத்து அன்னைக் குரிய செம்பட்டுக் கொடியை ஏற்றினர். கொடி உச்சியை அடைந் ததும் கோயிலில் காவல்மேட்டில் ஏழு முறைவெடிகள் வெடிக்கப் பட்டன. அவ்வொலி கேட்டதும் பெரியாற்றுக்கரைகள் எங்கும் காளிக்காவுகளில் கொடிகள் ஏறி வெடியொலி எழுந்தது. வெடி யொலி ஒன்றில் இருந்து ஒன்றுக்கு தொற்றி விரிந்துசென்றபடியே இருந்தது. ஒலி கேட்ட கணம் முதல் கொடுங்கோளூர்க் காளிக் காவில் காளியூட்டுப் பெருவிழா தொடங்குகிறது என்பது மரபு. பேரியாறெங்கும் விழவுகொண்ட மக்கள் களிவஞ்சிகளில் ஏறி கொடுங்கோளூர்த்துறை நோக்கிச் செல்வதைக் கண்ட குறுமர் மலை நோக்கிச் சென்றனர். அவர்களின் தோணிகள் நீரில் வரைந்த தடம் அவர்களுக்குப் பின்னால் அழிந்தபடியே வந்தது.

ᘓ

கொடுங்கோளூர் மாமங்கலைப் பேராலயத்து ஆலமர உச்சிகளில் ஏறிய கொடிகள் மரக்கலப்பாய்கள் எனக் காற்றில் புடைத்து நீரில் வளைந்து செல்லும் சுறாமீன்கள்போல் அசைந்தது கண்டு அறுவடை முடிந்து தாள்குற்றிகள் நிரந்த புலைவயல் கன்னியன்னை கோயில் முன் குறும்பாடுகளும் கள்குடங்களும் மலர்களும் தினையரியும் குருமிளகும் காணிக்கையாகக் கொண்டுவந்து கூடிய கூட்டம் 'இய்யே இய்யே' என்று கூவி ஆர்த்தது. மலையன் கைகாட்ட புலைமுதுவர் எழுவர் பெரும்பறைகளை முழங்க அக்கணமே புலைக்காளி கோயிலில் விழவு எழுந்தது. கைத்தோணிகளில் காட்டுமலர் கட்டிய குடுமிகளும் மரவுரியாடைகளும் மரமணிமாலைகளும் கொண்ட கடையர் வாணியர் மறவர் மள்ளர் குலங்கள் வந்து சேர்ந்தபடியே இருந்தன. செவ்வாடையும் புலித்தோலும் அணிந்து சடைமகுடமும் சாம்பல்பூச்சும் கொண்டு பொலிந்த சாத்த நோன்பினரும் திரள் திரளாக வந்தனர்.

மீனமாதக் கொடுவேனிலில் பெரியாற்று நீர்ப்பரப்பின் ஆவியெழுந்து கரிய உடல்கள் மழை வழியும் யானைப்புறங்களென வியர்த்தன. காட்டாற்று வெள்ளத்தில் புன்னைக்கருங்காய்கள் மிதந்து சுழிப்பதுபோலப் புலைவயல்வெளியில் மனிதத் தலைகள் அலைந்தன. நடுவே தெங்கின் குருத்தோலை கிழித்துக் கட்டி மாந்தளிரும் செம்மலரும் கட்டித்தூக்கி அணிசெய்த பந்தல் நடுவே கருங்கல் பீடத்தில் நடுகல் வடிவாக நின்றாள் அன்னை. அவள் முன் நூற்றியெட்டு மண்குடங்களில் படைக்கப்பட்ட தெங்குக்கள் வெயிலில் புளித்து நுரைத்து வழிந்தது. நூற்றியெட்டுக் குவியல்களாக செந்தெச்சியும் செவ்வரளியும் செந்தாமரையும் செங்காந்தளும் குவிக்கப்பட்டிருந்தன. நூற்றியெட்டு முழுவாழை இலைகளில் தேனுடன் பிசைந்த தினைமாவு விளம்பப்பட்டிருந்தது. மிளகும் அலங்கை இலைகளும் கலந்த குவைகள் நூற்றெட்டு இருந்தன.

முதுபுலையன் தோளில் முறுக்கியணிந்த மேலாடையுடன் அன்னைமுன் நின்று இருகரங்களையும் நீட்டி ஐவிரல்களை

மலரிதழ்களென விரித்து கொள்க என்று செய்கை காட்டி வணங்கினான். அடியவர் கொணர்ந்த குறும்பாடுகள் ஒவ்வொன்றாக அன்னைமுன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன. முதுபுலையன் அன்னைமுன் இருந்த குடுவையிலிருந்து நீர் மொண்டு அவற்றின் நெற்றிமீது தெளித்து மும்முறை கைசெய்ததும் பலிவீரன் தன் கனத்த பள்ளிவாளைத் தூக்கி இறக்க ஆடுகள் வெட்டுண்டு முன்னகர்ந்து அன்னைமுன் சரிந்தன. எரிவெயிலில் குருதியின் வீச்சம் மூக்கை அரித்தது. ஊற்றெழுந்து சொரிந்த குருதியை ஒலியின்றி உண்டு அமைந்தது கருமண்.

அன்னைக்குப் படைத்த ஊனும் கள்ளும் உண்டு மக்கள் வெயிலில் அலைந்து பித்தேறினர். கடையர் மக்கள் வசைகளும் நகையாட்டும் கூவிச் சிரித்தனர். முழவும் முரசும் பறையும் எழுப்பிய தாளத்தில் நரம்புகள் அதிர நடனமிட்டனர். ஆணும் பெண்ணும் கூடிக்களித்து முயங்கி வீழ்ந்து துயின்று பின் எழுந்து மீண்டும் ஊனும் கள்ளும் உண்டு ஆடி மீண்டும் விழுந்து முயங்கித் தளர்ந்து துயின்று எழுந்தனர். விழித்த கருங்கண்களும் நா தொங்கத் திறந்த உதிரவாயுமாக அன்னை அவர்கள் நடுவே வீற்றிருந்தாள்.

பலிக்கல்போல வெய்யோன் சிவக்க சூழ்ந்த மண்போல முகில் சிவக்க பகல் எரிந்தடங்கியது. இருளில் பந்தங்கள் செந்நாக்குகள் சூடிச் சுழன்றாடின. செவ்வொளியில் உண்டும் குடித்தும் களிகொண்டும் காமம் நுகர்ந்தும் கூத்தாடியது கூட்டம். ஆயிரம் நாக்கொண்ட அரவர்கோனும் அறைந்திட முடியாத அன்னையின் அல்குலின் அணையாப் பெருங்காமத்தைப் பற்றிய குடிப்பாடல்களைப் பாடிக் களிநடமிட்டனர் புலையர். விண்ணகக் கோள்களும் மண்ணக உயிர்களும் பிறந்து பிறந்து இறந்து இறந்து சேரும் அணையா வேள்விக்குழி அது. எரிக அவள் காமம்! எரிக புடவிப் பெருங்கனல்! எரிக விண்ணொளிகள்! எரிக மண்ணின் விடாய்கள்! ஆர்த்தனர் முசுண்டர். அன்னையின் கண்படர்ந்த வெளியெங்கும் காமமே நின்றெரிந்தது அப்போது. மேலும் மேலும் படகுகள் துறை அணைய மேலும் மேலும் வந்தபடி இருந்தனர் மக்கள். ஆள் மாறி ஆள் மாறி முழவும் முரசும் ஓயாது ஒலிக்க காலக்கருமையின் ஒளிரும் நாவெனப் பள்ளிக் கொலைவாள் சலியாது எழுந்தமர்ந்து கொண்டிருந்தது.

ஆற்றுக்கு அப்பால் மாமங்கலை கோயிலின் ஓங்கிய முகட்டின்மீது பெருவிளக்கு செவ்விண்மீன் என எரிந்தது. அங்கே மறையோரும் குடிப்பிறந்தோரும் மறுநாள் பரணிப்பெருவிழவுப் பூசெய்கைக்கென ஒழுங்கு சேர்த்துக் கொண்டிருந்தனர். மறுநாள்

இள இருள் காலையில் கொடுங்கோளூர்க் கோயில்காரர் எழுந் தருளி முதல் பலி அளித்ததும் மங்கலப்பெருவிழவு தொடங்குவது காலம்தோறும் கண்ட முறை. விடிவிண்மீன் கிழக்கே துலங்கியதும் மாமங்கலை ஆலயத்து முதற்பெருமணி ஆம் ஆம் ஆம் என்று நாவறைந்தது. பிற ஏழுமணிகளும் அதை ஏற்று ஒலித்தன. மலைமீது காட்டுத்தீ எழுவதுபோல, பசு மரத்தில் செம்மலர்கள் விரிவதென ஒவ்வொன்றாகக் கோயில் விளக்குகள் சுடரிட்டன. மின்மினிக் குலம் பொதிந்த காட்டுப்புதரெனப் பொலிந்தது ஆலயம்.

புலைவயல் கன்னியின் முன் படுகளம் எனக் குவிந்து பரந்து கிடந்தன மனித உடல்கள். கள்ளும் குருதியும் ஊனும் மலரும் நாறும் காலைக்காற்றில் ஆலய மணியோசை அலைபாய்ந்தது. அன்னை முன் கிடந்த ஒரு கன்னி மட்டும் அசைவு கூடிக் கண் திறந்தாள். அன்னையின் கண்களை நோக்கிய அவள் கண்கள் விரிந்து உடலில் நடுக்கமொன்று கூடியது. எழுந்து அன்னையை நோக்கி அசை விழந்து நின்றாள். அவள் கரிய பெருவிழிகள் கடலை நோக்கும் நிலவுபோலப் பெருந்தனிமையில் ஒளிகூடி நின்றன. அவள் இமைகள் அசைந்தன. அவ்வசைவு அவள் விரல்களில் கால்களில் படர்ந்தது. அவள் உடல் புயல் தழுவிய புதர்மரமெனத் துடிப்பு கொண்டது. அவள் வாய் வழியாக அலைப்பெரும்கடலின் ஓலம் எழுந்தது. திடுக்கிட்டு எழுந்த மக்கள் அஞ்சி எழுப்பிய ஒலியில் அனைவரும் துயில் களைந்தனர். உடைகள் அவிழ்ந்து தெறிக்க குதிரைக்குட்டி போன்ற இறுகிய உடலுடன், முதுமுல்லைக் கொடிகள் என முறுகிய கைகளுடன், அலைநெளியும் கருங் குழலுடன், மறிமான் போலத் துள்ளி அன்னையின் பீடம் மீதேறி ஆர்ப்பரித்தாள் கன்னி.

அவள் வாயிலிருந்து ஒருபோதும் அவர்கள் கேட்டிராத தொல்மொழியின் சொற்கள் புறப்பட்டன. கைகளை நீட்டி அவள் ஆணையிட்டபோது அங்கே கலங்கிய கண்களுடன் கனவா நனவா என்றறியாது நின்ற பெண்கள் கூட்டத்தில் இருந்து சன்னதப் பெருங்குரல்கள் ஒவ்வொன்றாக எழுந்தன. அவ்வயல்வெளி யெங்கும் தங்கள் காலத்திரை கிழித்தெழுந்து உடலேறி ஊர்ந்த கன்னியரும் அன்னையரும் நிறைந்தனர். குளிர்காடுகளில் சிலை யுருக்களாகச் சமைந்தவர்கள், மலைக்குகைகளின் இருளுக்குள் பாவைகளாகக் கண்திறந்தவர்கள், பலிகொண்டு ஊர்மன்றில் அமர்ந்தவர்கள்...

அஞ்சி நடுங்கிப் பின்னகர்ந்த ஆண்கள் கைகளை மார்போடு சேர்த்து வணங்கிப் பணிந்து நிற்க வெறியாடிய தெய்வங்கள்

விரிவிழிகளும் சுழலும் கைளும் துள்ளும் கால்களுமாகக் கூவி அலறியபடி இளங்கன்னியின் தலைமையில் அணிவகுத்தனர்.

காலை மென்னொளியில் புலைவயலையும் மாமங்கலை கோயிலையும் பிரிக்கும் நீர்வெளி வற்றி சதுப்பு மேடு ஒன்று தெளிந் திருக்கக் கண்டு முதுபுலையன் கண்ணீருடன் ''அன்னையே!'' என்று கூவினான். கன்னி புலைக்காளிச்சிலை முன்னிருந்த உதிரம் உலராத பள்ளிவாளைத் தன் கையில் எடுத்துக்கொண்டு தலைவிரிக் கோலமாக அச்சதுப்பில் ஓடினாள். பேரோசையுடன் கடல் அலை வருவதுபோல கன்னியன்னையரின் பெரும்படை கார்குழல் அலையிளக சேற்றுப்பாதை வழியாக மாமங்கலை ஆலய மேட்டில் ஏறியது. காவல் சூழ்ந்து நின்ற ஆயிரத்தவர் தங்கள் கொல் படைகளை மண்ணில் வீசி கைகூப்பி நிலம் பணிந்து ''அன்னையே காத்தருள்க!''என்று கூவினர். கோயிலுக்குள் விழவுகூடி நின்ற ஊராளிகளும் குடிமூப்பர்களும் ஒலிகேட்டு ஓடிவந்து நோக்கி உடல் உக்க புல்லரித்து விழிநீர் வார ''அன்னையே மாமங்கலையே'' என்று கூவிப்பணிந்தனர். பிறைமண்டபத்தில் நின்ற பெருமறை யோர் அஞ்சிப் பெருங்குரலெழுப்ப கருவறையிலிருந்த மூத்தடிகள் பாய்ந்து வெளியே வந்தார். கன்னி வழிநடத்தி வந்த அன்னையர் படையைக் கண்டதும் அவ்வண்ணமே சிதறி ஓடி பின்வாயில் வழியாகத் தப்பினர்.

அன்னையைத் தொடர்ந்து புலைவயலில் கூடி நின்ற அனை வரும் கூவி ஆர்த்தபடி கோயிலை நோக்கி ஓடிவந்தனர்.

முதுபெரும்புலையன் சன்னதம் கொண்டு வேல் சுழற்றி ஆடி கொடும் வசைகளைக் கூவினான். வெறிகொண்ட கூட்டம் அவ்வசை களைத் தானும் கூவியது. வசை பெருகி வசைப்பொழிவாகியது. ஆயிரத்தவர் அச்சொற்களைக் கேட்டு கூசித் தலைகுனிந்து நிலத்தோடு சேர்ந்து அமர்ந்தனர். அன்னையின் அல்குலைப் பற்றியும், அவளுடைய அளவிலாக் காமத்தைப்பற்றியும் கொட்டிப் பாடிக் கூத்தாடினர் மக்கள். ''வயல்பிளந்த பிலம்போல மலை விரிந்த சுரம்போல அவள் கால்நடுக்கண்! கரும்பாறை அருவியென, கருமேகப்பொழிவென அவள் மத நீர். அல்குல் பசித்திருக்கிறாள் அன்னை! ஓயாப்பெரும்பசியே அன்னை! அல்குல் விடாய் கொண்டிருக்கிறாள் அன்னை! தணியாப்பெருவிடாயே அன்னை! அன்னையின் அல்குல் நிறைய கொண்டுவருக ஆயிரம் மலை முடிகள்! அன்னையின் அல்குல் நிறைய கொண்டுவருக பல்லாயிரம் சிவலிங்கங்கள். அன்னையின் அல்குல் நிறைய கொட்டுங்கள் நெய் மழையை. அன்னையின் அல்குல் தணிய நிரப்புங்கள் அலை

கடல்களை. மண்ணில் வாழும் எல்லாப் பெண்ணுயிர்களும் காமம் கொள்கின்றன இதோ! மண்ணில் வாழும் எல்லா ஆணுயிர்களும் காமம் கொள்கின்றன இதோ! மண்ணில் எல்லா ஆண்குறிகளும் பெண்குறிகளும் ஒன்றாகின்றன இதோ! மண்மீது அன்னையின் கண்பட்ட துளைகளெல்லாம் அவள் அல்குல்களாகின்றன. அவள் கண் நோக்கிய நீட்சிகளெல்லாம் அவள் தேடும் குறிகளாகின்றன. மண்ணிலும் விண்ணிலும் கோடிகோடிப் புணர்வுகள் நிகழ அன்னை தனித்திருக்கிறாள். அவள் வாழ்க! புடவிப் பெருநிகழ் வாகும் அவள் அணையாப் பெருங்காமம் வாழ்க!''

வெறிகொண்ட கன்னி பள்ளிவாள் சுழற்றிப் பெருங்குரல் எழுப்பி ஓடி கருவறை முன்வந்து கூந்தல் சுழற்றி நின்றாடினாள். அவளைச் சூழ்ந்து கன்னியரும் அன்னையரும் வெறியாட்ட மிட்டனர். பெருங்குரலுடன் கன்னி வாளால் தன் நெற்றியை ஓங்கி ஓங்கி வெட்டிக்கொண்டாள். குருதியும் நிணமும் சதைத்துணுக்கு களும் சூடாகச் சிதறித் தெறித்தன. அவள் முகமெங்கும் வழிந்த குருதி மார்பில் வழிந்து இடையை நனைத்து கல்முற்றத்தில் தெச்சிமொட்டு களெனச் சிதறியது. ஓவென்ற ஒலியுடன் அன்னை வாளுடன் கருவறை புகுந்து கற்சிலைமீது மோதிச் சுருண்டு விழுந்தாள். சூழ்ந்த நூறுநூறு வெறித்தெய்வங்கள் கூவிச்சிரித்து ஆர்த்தன.

ᘓ

அனைத்திலும் உறைந்து அனைத்தையும் ஆற்றும் ஆற்றலை வணங்குவோர் சாத்தர். அன்னையை அழியாப் பெருவல்லமையென அறிக. விண்ணகங்களின் கோள்களைச் சுழலவிடுபவள். சேற்றுப்புழுவில் நின்று துடிப்பவள். கனிகளில் சிவந்து இனிப்பவள். சூரியன்களில் எரிந்து வெடிப்பவள். அவளே சத்தி. அவள் புகழ் வாழ்க!

கனிகளில் இனிக்கிறது. வெய்யோனாக எரிக்கிறது. கொலைவாளில் சுடர்கிறது. சான்றோர் சொற்களில் ஒளியாகிறது. பிறக்கிறது, சிறக்கிறது, இறக்கிறது. காண்பதெல்லாம் சத்தியையே. கருதுவதும் அதையே. சத்தியை அறிவதும் சத்தியே. சத்தியில் எழும் அலைகளே அறிதலும் அறிவும் அறிபொருளும் என்றறிக. அவள் புகழ் வாழ்க!

அளவற்ற ஆக்கும் வல்லமையை அன்னை என்றன்றி எங்கனம் சொல்ல இயலும்? சத்தி ஊழிநெருப்புக்கும் கல்லினுள் தேரைக்கும் கடலாழத்துச் சிறுபுழுவுக்கும் அன்னமிடும் கனிவு என்றறிக. அன்னமேயானவள் அன்னை. அனைத்தையும் ஈன்ற முன்முதல் கருவறையே சத்தி. அனைத்தையும் உண்டழிக்கும் பெருஞ்சின நுதல்விழியே சத்தி. சத்தியை வணங்குவோம். அவள் புகழ் வாழ்க!

அறிதல் முறைகள் மூன்று. அருங்கொள்கைகள் ஆறு. ஆன்ற சமயங்களும் ஆறென்பார் அறிந்தோர். சைவம் விண்ணவம் கௌமாரம் சௌரம் காணபத்தியம் என்பனவற்றுடன் சாத்தமும் சமயம் என்பார். அறிக, சமயங்கள் மெய்யறிவை நோக்கி வைக்கப்பட்ட படிகள். சாத்தமோ படிகள் மீதமர்ந்த இறுதிப்படியாகும். அதன் மீது தான் அன்னையின் மலர்ப்பாதம் பதிந்துள்ளது. அவள் புகழ் வாழ்க!

தன் நிறைநிலையில் இன்மையுமாய் உண்மையுமாய் இருப்பவள் அவள். அவள் தன்னைத்தான் காண உருவாக்கிய ஆடியே காலம். காலத்தின் ஆடிப்பெருவெளியில் அவள் கண்ட ஆயிரம்

கோடித் தோற்றங்களில் ஒன்று அண்டங்களை ஈனும் அன்னை. அன்னையை ஆதிசத்தி என்று வணங்கினர் மூத்தோர். ஈன்றிட்ட அண்டம் கைகால்களை உதைத்துப் பாலுக்கழுதபோது அன்னை மூன்றுருக்கொண்டு அதற்குக் காட்சியளித்தாள். இச்சாசத்தி அதன் முன் பெருவிருப்புகளின் வடிவாக வந்து நின்றாள். அம்மகவின் இதழ்களில் சுவையாக, கண்களில் நிறங்களாக, காதில் இசையாக, நாசியில் பால்மணமாக, மேனி தழுவும் மென்மையாக ஆனாள். அறிந்தவற்றின் முன் திறக்கும் அறியாத ஆயிரம் வாயில்களாக ஆனாள் ஞானசத்தி. ஆற்றும் செயல்களின் வேர்களிலிருந்தும் இலைகளில் இருந்தும் மலர்களிலிருந்தும் முளைத்துப் பரவும் கடமைகளின் காடானாள் கிரியைசத்தி. அம்மூவரும் அறியாப் பைதல் முன் அமர்ந்து ஆடிய கழஞ்சுக்களியின் ஆயிரம் பல்லாயிரம் கோடி தெறிப்புகளினால் ஆனதே இப்புடவியெனும் பெருந் தோற்றம். அவள் புகழ் வாழ்க!

பெயரிலியைப் பெயர்களாலும் உருவிலியை உருவங்களாலும் முடிவிலியை எண்ணத்தாலும் ஏதிலியை அனைத்தாலும் வழிபடுதலே முறையெனக் கண்டனர் முன்னோர். தென்முனைக் கன்னியில் தொடங்கி வடமலை உச்சிகள் தோறும் முகங்கோடி கொண்டு விளங்குகிறாள் அன்னை. காலத்தின் ஆடிகளில் அன்னை பெருகிப் பெருகி விரியும் படிமக் கடல் அலைகளே அன்னை. இவ்வுலகெங்கும் யவனரும் சோனகரும் சீனரும் காப்பிரிகளும் அவளது வடிவங்களையே வணங்குகின்றனர் என்றறிக. அவள் புகழ் வாழ்க!

சொல்லுக்குள் வாழும் கலைமகள். செயலுக்குரிய மலைமகள். செல்வத்தின் இறைவியான அலைமகள். அனைத்தும் அவள் தோற்றங்களே. குமாரி, திரிமுகி, ரோகிணி, காளிகை, சண்டி, சாமுண்டி, சாம்பாரை, துர்க்கை, சுபத்திரை என்று வலநெறிச் சாத்தர் ஒன்பது கன்னியராக இவர்களை வணங்குவர். பிராமி, மகேசுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி, காளி என்று ஏழு அன்னையராக இவர்களை இடநெறிச் சாத்தர் வணங்குவர்.

மூவினையும் அழிக்கும் துர்க்கை. வேருக்கு வேரான நாராயணி. எங்கும் நிறைந்தமையால் ஈசானி. இன்பமே இயல்பான சிவை, மெய்வடிவான சதி, அழிவற்ற நித்தியை, முதல்மையமான பகவதி, தானேயான சத்தியை, அனைத்துமான சர்வாணி, அழகுருவான சர்வமங்கலை, பூசனைகளைப் பெறும் அம்பை, சுடர் நிற கௌரி, உலகு புரக்கும் வைணவி, அசைவற்றவளான பார்வதி, நடமிடும் கொற்றவை, தொன்மையான சனாதனி, முக்கண்

கொண்ட திரயம்பகை, அனைத்தையுமழிக்கும் சாமுண்டி, கொன்று தின்றாடும் காளி, சினமே உருவான பத்திரை, கனிவின் வடிவான அம்பிகை என அவள் சூடப்படாத கோடிகோடி பெயர்களால் ஆனவள். அவள் புகழ் வாழ்க!

அவளே அனைத்துமென அறிக. அன்ன வடிவாகுங்கால் அவளை வாமை என்றனர். சுடராகுங்கால் ரௌத்திரி என்றனர். நீர் வடிவுகொண்டவளை சேட்டை என்றனர். காற்றாகும்போது காளி. வானாகும்போது அம்பை. ஐந்தையும் அறியும் அகமாகும் மனோன் மணி. அகம் கடக்கும்போது மாமாயை. அவள் புகழ் வாழ்க!

அறிந்தறிந்து செல்லும் அகம் அறியும் ஆழ்நீலம் அவள். நீலமே முதல்நிறமாகும். அறியமுடியாமையின் நிறம் நீலம். நீலத்தின் எல்லையின்மை வானம். நீலத்தின் அலைகளே கடல். நீலம் ஒரு புன்னகை. கருமைக்குள் ஒளி பரவுவதன் வண்ணம் அது. கருமையோ வெளியை முழுக்க தன்னுள் அடக்கிக்கொண்ட பெருவெளி. கருமையில் இருந்தே ஒவ்வொன்றும் பரு திரட்டி வருகின்றன. புன்னகைக்கும் கருமையே நீலம். நீலவடிவானவளை வணங்குவோம். அவள் புகழ் வாழ்க!

என்றது திரயம்பகர் அருளிய சாத்தமெய்ந்நூல் 'கர்ண பூஷணி.' ஆம், அது நிறைவு!

ᘓ

உரை வகுத்தது

"நம் நூல்களில்கூட இந்நகரைப்பற்றிய கூற்றுக்கள் உள்ளன'' என்றார் மொழிபெயர்ப்பாளர். ''நமது தொல்கடல்நூல் ஆசான் தாலமி இந்நகரை முசிரிஸ் என்கிறார்.'' தொலைநோக்கியைக் கண்களிலிருந்து எடுத்த டச்சுக் கப்பல்தலைவன் வான்-கோய்ஸ் ''ஆனால் இது ஒரு சிற்றூரென்றே தெரிகிறது'' என்றான். ''ஆம். இன்று இது ஒரு சிற்றூர். இந்நகரைத் தலைநகராக்கி ஆண்ட சேரர்குலம் சிதைந்து அழிந்தது. கொச்சியை ஆளும் அரசர் தன்னை இறுதியாக ஆண்ட சேரமான்பெருமாளின் குலம் என்று சொல்கிறார். அவரது ஆணைப்படி இந்நகரை இன்று ஆள்பவர் கொடுங்கலூர் கோயித்தம்புரான் என்று அழைக்கப்படுகிறார்.'' மீண்டும் தொலைநோக்கியைக் கண்களில் வைத்த தலைவன் ''இந்நகர் இன்றும் ஒரு துறைமுகமாகச் செயலாற்ற வல்லது. இந்தக் கழிமுகம் வழியாகக் கப்பல்கள் உள்ளே செல்ல இயலும்'' என்றான்.

''ஆம். இந்நகரை வெல்லுதல் எளிதல்ல. பற்பல தலைமுறைக் காலமாக இங்கே காப்பரண்களை அமைத்துள்ளனர். உள்ளே செல்வதற்குப் பெரியாற்றுமுகம் அன்றி வேறு வழி இல்லை. ஆற்றின் இரு கரைகளிலும் அரண் கட்டிக் காவல் அமைத்துள்ளனர். அவர்கள் கண்நடுவே சென்றுதான் கொடுங்கலூர் துறையை அடைய இயலும். ஆகவேதான் இந்நாள்வரை போர்ச்சுகீசியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் எவரும் இந்நகரைத் தாக்கவில்லை.'' டச்சுக் கப்பல்தலைவன் வான்-கோய்ஸ் ஒரு சுருட்டை எடுத்து நுனி கடித்துத் துப்பி பற்ற வைத்தான். ''எந்தக் காப்பரணுக்கும் ஒரு குறுக்கு வழியும் இருக்கும். அது எதுவென அறிதலே வெற்றிக்கான திறவுகோல்.'' கப்பலின் வெளித்தளத்தில் பாய்கயிற்றில் சாய்ந்து நின்றபடி சுருட்டுகளை உறிஞ்சி எச்சத்தை மரக்கலவயிற்றில் அறைந்த அலைகளில் வீசியபடி நோக்கி நின்றான்.

''யார் அவர்கள்?'' என்று கைச்சுருட்டால் தொலைவில் பெரியாற்றுப் பரப்பில் வந்த ஏழு கைவள்ளங்களை சுட்டி தலைவன் கேட்டான். அவ்வள்ளங்களில் குருத்தோலை கீறி மாவிலை கட்டி

மலர்கள் சேர்த்து அணிசெய்திருந்தனர். கொம்பும் முழவும் ஒலிக்க ''இய்யே இய்யே'' என்று பேரொலி எழுப்பினர். ''அவர்கள் குறுமர் குடி. இந்நகரின் பேராலயத்துப் பெருவிழவுக்கு வருகின்றனர்'' என்றார் மொழிபெயர்ப்பாளர். ''எங்கிருந்து?'' என்றான் தலைவன். ''மலையிலிருந்து'' என்றார் மொழிபெயர்ப்பாளர். ''அவர்கள் இங்கே கொடியேற்றவேண்டும் என்பதே தொல்நெறி. கொடியேறிய நாள் முதல் மீனபரணிப்பெருவிழவு தொடங்கும். இந்நாட்டின் மலைகளில் இருந்தும் தொலையூர்களிலிருந்தும் மக்கள் வந்து குழுமுவர். சேரநாட்டின் மிகப்பெரும் விழா இதுவே யாகும்.''

தலைவன் தன் எண்ணங்களைக் குவித்தபடி ''எத்தனை பேர் வரக்கூடும்?'' என்றான். ''பல்லாயிரம். எண்ணத்தொலையாத கூட்டம். மாமங்கலை ஆலயத்தில் கீழ்ச்சாதியினரை உள்ளேவிடும் நாட்கள் இவை மட்டுமே...'' தலைவன் முகம் மலர்ந்து ''ஆம், இதுதான் அந்த வழி'' என்றான். ''காவலின் நெறிகளை நீர் அறிவீர் அல்லவா? பல்லாயிரம் அந்நியர் வந்து குழுமும் ஒரு நகரில் காப்புகளை நிறுத்துதல் இயல்வதேயல்ல. நம் மாலுமிகள் இக்கூட்டத்தில் கலந்துசெல்க. காப்பரண்களை அவர்கள் வென்றதும் நம் கலங்கள் நகர் நுழையட்டும்'' என்று ஆணையிட்டான். ''ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருப்பர்'' என்றார் மொழிபெயர்ப்பாளர். ''அவர்களுடையதல்ல இந்நகரம். அவர்களுக்கு நுழைவு மறுக்கப்பட்ட இந்நகரைக் காக்க அவர்கள் போரிடமாட்டார்கள்'' தலைவன் சொல்லிக் கண்களைச் சிமிட்டினான்.

சிறுபடகுகளில் ஏழு குலத்து மக்களும் கள்ளுண்டு கைப்பறை கொட்டிப் பாடிக் களியாடிச் செல்வதைக் கடலுக்குள் நின்ற கப்பலில் பாய்கயிறு மீதேறி நின்று நோக்கினான் தலைவன். வண்ணத்துணிப்பாய்கள் கடற்காற்றில் புடைக்க பறவைக்கூட்டம் போலத் தோணிகள் கொடுங்கலூரை மொய்த்தன. காற்றில் பூரப்பாட்டின் ஒலித்துணுக்குகள் சிதறி வந்தன.

கரையோரம் கப்பலைப் பாய்சுருட்டி நிறுத்தி சிறு தோணிகளில் தன் படையைச் சேர்ந்த தென்நாட்டு மரக்கலக்காரர்களை ஏற்றிக் கரையிறக்கினான். அன்னையை வணங்கச் செல்பவர்கள்போல அவர்கள் செவ்வாடை சுற்றியும் முச்சிக்குடுமியில் செம்மலர்கள் சூடிக் கையில் பலிக்கோழியும் குருத்தோலைப் பெட்டியில் படையல் நெல்லும் ஏந்திக் கைக்கோல் சுழற்றிக் கொட்டிப்பாடி நடனமிட்டுக் கூட்டத்தில் கலந்து சென்றனர்.

''தானான தனானா - தக

தானானா தனானா
கொடுங்கலூர் அம்மைக்கு பூறு சொறியுவான்
கொடுவாளல்லே எடுத்திடேணம்

''தானான தனானா - தக
தானானா தனானா
கொடுங்கலூர் அம்மைக்கு பூற்றிலு கேற்றுவான்
கொடிமரம் போலல்லே கோப்பு வேணும்

''தானான தனானா - தக
தானானா தனானா''

''என்ன பாடுகிறார்கள்?'' என்று தலைவன் மொழிபெயர்ப்பாளரிடம் கேட்டான். அவன் நகைத்தபடி விளக்கினான். ''வியப்பாக இருக்கிறது. மாலுமிப்பாடல்கள் எதுவும் இத்தனை கீழ்மையுடன் இருப்பதில்லை!'' சுருட்டை பற்றவைத்தபடி ''இவர்கள் ஒழுக்கமில்லா வாழ்வு வாழ்பவர்களா என்ன?'' என்றான். ''இல்லை'' என்றான் மொழிபெயர்ப்பாளன். ''இவர்கள் குலங்களில் ஒழுக்கக்கேடு என்பது கொலைத்தண்டனைக்குரிய குற்றம். இப்பாடலைப் பாடிச்செல்லும் பெண்கள் கணவன் அன்றிப் பிற ஆடவர் முன் நிற்கவோ ஒரு சொல்லேனும் பேசவோ மாட்டார்கள். இந்தப் பரணிப் பாட்டில் அவர்கள் தங்களை அன்னைக்குப் படையலிடுகிறார்கள். அன்னையை மகிழ்விக்கும் பொருட்டு இப்பாடலைப் பாடுகிறார்கள். உண்மையில் அவர்கள் இப்போது அவர்களிடம் இல்லை. அவர்கள் செய்வதென்ன சொல்வதென்ன என்று அவர்கள் அறியார்.''

வேல் சுழற்றி வாள் சுழற்றி கேடயங்களைத் தூக்கி வீசிப் பிடித்து வெற்றிவேல் வீரவேல் எனக்கூவி ஆர்ப்பரித்து களிகொண்டு சிரித்துக்கூவி நடனமிட்டு கடையர் வாணியர் மள்ளர் களமர் குலங்கள் மாமங்கலை கோயிலுக்குள் நுழைந்தன. ''கன்னி அல்குல் இந்த கோயில். காட்டுவெறிக் கூட்டமே சிவக்குறியாகும். கிழித்து நுழைக! அடங்கட்டும் அன்னை! உள்ளெங்கும் நுரைத்து நிறைக! அடங்கட்டும் அன்னை! இரண்டின்றி ஆகுக! அடங்கட்டும் அன்னை!'' கூக்குரல்கள் அதிர பெரியாற்றுக்கு அப்பால் நின்று நோக்கிய கண்களுக்கு வெறியெழுந்து ஊளையிடும் காட்டுவிலங்கெனத் தோன்றியது மாமங்கலை ஆலயம்.

''எப்போது தொடங்கியது இச்சடங்கு?'' என்றான் தலைவன்.

''அறியேன், அறிஞரும் அறியார். சாத்த நெறிப்படி அன்னையை மகிழ்விக்கும் ஐம்படையல் பூசனைகளில் ஒன்று புணர்ச்சி. அதிலிருந்து பிறந்தது இது என்பர் சிலர். நெடுங்காலம் முன்பு

கண்ணகியென்னும் பாலைத்தெய்வம் மாமதுரை நகர்புகுந்த அதே நாளில் இவ்விழா நடக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. இறுதி சேரமான் பெருமாள் ஆட்சியின்போது ஒருமுறை வெறிகொண்ட கடையர்கூட்டம் படைக்கலங்கள் ஏந்தி வசையும் கூத்துமாகத் திரண்டுவந்து கோயிலைக் கைப்பற்றியது என்றும் அந்நாளின் நினைவாக இன்று ஒருநாள் மட்டும் இச்சடங்கு கொண்டாடப் படுகிறது என்றும் வரலாறு உண்டு. ஆகவே இதை காவு தீண்டல் என்பார்கள். அனைத்துமே உண்மையாக இருக்கலாம். எதுவுமே உண்மையல்லாமலும் இருக்கலாம்.'' என்றார் மொழிபெயர்ப்பாளர்.

''ஆப்பிரிக்க நாட்டின் தென்முனை ஒன்றில் அங்குள்ள பழங்குடியினர் இவ்வண்ணம் பாடி ஆடிச் செல்வதைக் கண்டிருக்கிறேன்'' என்றான் தலைவன். ''அங்குள்ள துறைமுகத்தை நாங்கள் கைப்பற்றியபின் அப்பகுதி மக்களை அடிமைகொண்டு எங்கள் ஏவலர்களை உருவாக்கினோம். அதன்பொருட்டு சின்னாள் நான் அங்கு தங்க நேர்ந்தது. அவர்கள் வெயில் உச்சிக்குச் செல்லும் மாதத்தில் ஒருநாள் பெரும் ஊன்களிவிழா ஒன்றைக் கொண்டாடுவர். அன்று துறைமுகத்துக்கு விடுப்பு விடுவது வழக்கம். ஆணும் பெண்ணும் ஊனும் கள்ளும் உண்டு களிவெறியேறி எங்கும் எவ்வண்ணமும் புணர்ந்து ஆடி புணர்ச்சிப்பாடல்கள் பாடி மகிழ்ந்து ஊர்வலமாகச் சென்று மலைக்குகை ஒன்றில் நுழைந்து அங்குள தொல்தெய்வமொன்றுக்குப் பலி கொடுத்து வணங்குவர்.''

இரவில் இருளின் ஊடாக டச்சு மரக்கலங்கள் கொடுங்கலூர் அழிமுகம் அணைந்தன. காவல்மாடங்களில் ஒன்றில் வெடியொளியும் அலறல்களும் எழுந்தன. பிற காவல்மாடங்களிலும் வெடி ஒலிக்க மின்னல் எழுந்தது. தன் பீரங்கிகளால் சுட்டபடி டச்சுப் பெருங்கப்பல் பெரியாற்றுக்குள் நுழைந்தது. மறுதாக்குதல் எழவில்லை. காவல்மாடங்களில் தோன்றிய டச்சுப் படையினர் முத்திரை விளக்கை ஆட்டி வரவேற்றனர். பீரங்கிக் குண்டுகள் செங்கல் சுவர்களை அறைந்து சிதறடித்தன. கொடுங்கலூர் ஊரெங்கும் அச்சம் கலந்த அலறல்கள் நிறைந்தன. கலைந்த எறும்புக்கூடென மக்கள் சிதறிப்பரந்து முட்டிமோதிச் சுழன்றனர். நீரில் குதித்து மறுபக்கம் தெரிந்த பரவரூர் நோக்கி நீந்தினர் பலர். சேற்றுச்சதுப்பு வழியாக புலைவயலுக்கு ஓடினர் சிலர். டச்சுக் கப்பல் துறையணைந்தபோது ஊர்த் தெருக்கள் ஒழிந்து கிடந்தன. முதியோர் மட்டும் அஞ்சி விழித்த கண்களுடன் எஞ்சியிருக்க இல்லங்கள் திறந்து கிடந்தன.

நாற்புறமும் நீள்துப்பாக்கியால் மாறி மாறிச் சுட்டபடி டச்சுப் படை கொடுங்கலூர் தெருக்கள் வழியாகச் சென்றது. கூரைகளுக்கு நெருப்பிட்டது. ஊரே பெருந்தீப்பந்தம் என எரிய அதன் நடுவே கையில் டச்சுக்கொடியுடன் ஒருவன் முன்னடக்க பின்னால் தலை வனும் மொழிபெயர்ப்பாளனும் சென்றனர். கொடுங்கல்லூர் மன் னரின் அரண்மனை வாயிலில் கூர் தீட்டிய கழுகுத்தடி ஈட்டி களுடனும் சிறுவாட்களுடனும் செவ்வாடை அணிந்த சாவேறுப் படையினர் அவர்களை எதிர்கொண்டனர். டச்சு துப்பாக்கிகள் அவர்களை எளிதில் சுட்டு வீழ்த்தின. குண்டுபட்டு விழுந்தவர்களின் துடிப்பை வாளால் வெட்டியும் நீள்குந்தத்தால் குத்தியும் அடக்கி முன்நடந்தது படை. செல்லும் வழியெங்கும் நாயர் படையினர் வாளுடன் தோன்றி குண்டுபட்டு விழுந்தனர். அவர்கள் வாளுக்கு எட்டு டச்சு வீரர்கள் இறந்தனர்.

அரண்மனைப் பெருமுகப்பில் எதிர்கொண்ட நாற்பது காவல ரும் இறந்ததும் டச்சுவீரர்கள் கதவை உடைத்து உள்ளே சென்றனர். முதுபணிப்பெண்களன்றி அங்கே எவரும் இருக்கவில்லை. அறைகள் திறந்து கிடந்தன. களஞ்சியங்களும் கரவறைகளும் விரிந் திருந்தன. சிற்றறைகளுக்குள் ஒளிந்திருந்த நடக்கமுடியாத முது பாணர்கள் நால்வரைப் பிடித்து இழுத்துவந்து மாட்டுத்தோல் சாட்டையால் சுவர்களெங்கும் உதிரம் தெறிக்க அடித்தபோது மன்னரும் சுற்றமும் பெருந்திமில் ஏறி பரவூர் கடந்து கொச்சிக்குச் சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். மண்ணில் நாட்டிய ஒரே நீள்குந்தத்தில் நால்வரும் கழுவேற்றப்பட்டு துடித்துத் துடித்து சுழன்று இறுகினர். அங்கண வெளியில் கூடி கைகளை இறுக்கியபடி நின்ற அத்தனை பணிப்பெண்களையும் வெட்டிவீழ்த்த தலைவன் ஆணையிட்டான். பலியாகும் வெள்ளாடுகள் எனப் பொருளற்ற விழிப்பு உறைந்த கண்களுடன் ஒலியில்லா உதடுகளுடன் அவர்கள் வெட்டுப்பட்டு குருதி சீற ஒருவர்மீது ஒருவர் எனச் சரிந்து தலையில்லா உடற்கைகளால் ஒருவரை ஒருவர் தழுவி இறுக்கி அதிர்ந்து துடித்து இறந்தனர். அங்கணத் தூம்பு மடையில் செங்குருதி கொட்டியது. தலைவன் தன் மரக்கலத்திலிருந்து வெடிமருந்து கொண்டுவரச்சொல்லி அரண்மனைச் சுவர்கள்தோறும் வைத்து வெடிக்கச்செய்தான். இடியொலித்தொடருடன் அரண்மனை சிதறி விழுந்தது. மரக்கூரையும் சுவர்களும் நீலச்சுடர் எழ வெடித்து வெடித்து தலைவிரித்துத் தழலாட நின்றெரிந்தன.

கிளை பிரிந்து ஊரெங்கும் ஊடுருவிய டச்சுப்படை இல்லங் களுக்குள் புகுந்து சிற்றறைகளையும் கரவறைகளையும் தேடியது.

ஒளிக்கப்பட்ட பொன்னும் வெள்ளியும் சிலைகளும் நகைகளும் வெளிவர வெறிநகைப்புடன் அவற்றை அள்ளி வாள்முனையில் பூசவிட்டுப் பங்கிட்டனர். இருளில் எலிக்குஞ்சுகள் போல ஒருவரை ஒருவர் தழுவி அமர்ந்திருந்த இளம்பெண்களை அலற அலற இழுத்தெடுத்து பலர்கூடி வெறிகொண்டு புணர்ந்தனர். புணர்ந்து புணர்ந்து கொன்று தெருக்களில் வீசப்பட்ட பெண்ணுடல்கள் கிழிந்த உதடுகளும் சிதைந்த முலைகளும் குருதிவழியும் குறிகளுமாக செம்மண்ணில் எஞ்சிய உயிரசைவுடன் கிடந்து நெளிந்தன. சிலர் பெண்களைப் பிடித்து அவர்கள் நீள்காதுகளை அறுத்தெறிந்து முதுகில் தங்கள் பெயர்களை வாள்நுனியால் எழுதி உரிமைப்பெண்டிராக்கிக் கொண்டனர். கன்றுகளுடனும் பசுக்களுடனும் அப்பெண்களும் மரக்கலங்களுக்கு ஓட்டிச்செல்லப்பட்டனர்.

மீண்டும் ஒன்றுகூடிய டச்சுப்படை மாமங்கலை ஆலயத்தை நோக்கி நடந்தது. இருபுறமும் சேற்றுப்பரப்பில் அடர்ந்திருந்த கடற்காகங்களை நோக்கிச்சுட்டு சிறகுச்சுழலாக்கி பறக்கச்செய்து மன்னரைப் போற்றும் களநடைப் பாடல் பாடிச் சென்றது டச்சுப்படை ஆலயமுகப்பை அவர்கள் அடைந்ததும் ஆலமரத்து உச்சிக்கிளையில் இருந்த ஒருவன் கொம்பூதினான். கோயிலெங்கும் முரசுகள் ஒலித்தன. டச்சுப்படை போர்முனையில் வீரர் கொள்ளும் கள்வெறியை அடைந்தது. பெண்குறியைக் கிழித்து நுழையும் ஆண்குறியைப்பற்றிய வெறிப்பாடலுடன் நீள்குந்தங்களைத் தூக்கி துப்பாக்கிகளை நீட்டிப் பாய்ந்து முன்னேறிக் கோயிலுக்குள் நுழைந்தனர். செம்பட்டாடை அணிந்த ஆயிரத்தவர் கைகளில் வேலும் வாளும் ஏந்தி ''அம்பே மகாமங்கலே தேவீ நாராயணீ'' என்ற பெருங்கூச்சலுடன் அவர்களை நோக்கிப் பாய்ந்துவந்தனர். மனித உடல்களும் இரும்பு முனைகளும் கூடிக்கலந்து சுழித்தன. அலறல்களும் வெடியொலிகளும் குழம்பின. கால்களும் காலணிகளும் மிதித்த மண் குருதி கலந்து சேறாகி நுரைத்தது.

நூற்றெண்பது வீரர்களை இழந்து ஆயிரத்தவரை முற்றிலும் கொன்று அவர்கள் பிணங்கள்மீது நின்றது டச்சுப்படை. காயங்களுடன் வீரர்கள் ஆல்மரத்தடியில் படுத்தனர். விழுந்த ஆயிரத்தவர்களைத் தேடிக் கொன்று குண்டலங்களையும் கங்கணங்களையும் சதைவெட்டி எடுத்தனர் சிலர். ஆலயப் பெருங்கதவம் திறந்து கிடந்தது. அதன் முன் நின்ற தலைவன் நிமிர்ந்து அதன் விமான முகப்பை நோக்கினான். நான்கு நுனிகளிலும் நச்சரவம் படமெடுத்த நான்கடுக்கு மரக்கட்டுமானம். அதன் கட்டிட நுட்பம். உள்ளே நுழைந்து ஆமைமீது எழுந்த ஒற்றைமரம் செதுக்கிய கொடிமரம்

முன் நின்றான். அருகே மாபெரும் கல்விளக்கு. அவன் கண்ட முதல் ஆலயம் அது. குருதியும் செம்மண்ணும் சேர்ந்து உறைந்த தோல் காலணிகளுடன் முகத்தில் வழிந்த உதிரத்துடன் கலந்து வாயில் படிந்த தூசியை மாறிமாறித் துப்பியபடி அவன் உள்ளே நுழைந்தான். ''இத்தனை கடுங்காவல் இருக்க வேண்டுமெனில் இது பெருஞ் செல்வத்தின் நிலை. ஐயமேயில்லை!'' என்றான் அவன். ''இங்கே ஆலயங்களில் செல்வம் இருப்பதில்லை''என்றார் மொழிபெயர்ப் பாளர். தலைவன் திரும்பி அவன் மீது துப்பினான். அவன் தன் ஈட்டியை அசைத்ததும் வசைச்சொற்கள் பீரிட டச்சுப்படையினர் ஆலயத்துக்குள் நிறைந்தனர். கதவுகளைப் பிளந்தனர். பெட்டிகளைத் தூக்கி வீசி உடைத்தனர்.

''இங்கே எதுவுமே இல்லை தலைவரே'' என்றான் இரண் டாம் தலைவன். சினத்துடன் மொழிபெயர்ப்பாளனை நோக்கிய பின் தன் ஈட்டியால் அருகே நின்ற கற்சிலையை அறைந்தான் தலைவன். வசைகளை உமிழ்ந்தபடி கருவறைமுன் நின்றான். அது சாத்தியே இருந்தது. பந்தம் கொண்டுவர ஆணையிட்டு அவ்வொளி யுடன் ஈட்டியால் கதவுகளைத் தள்ளி உள்ளே நோக்கினான். ''ஆ!''என்ற பெருங்குரல் அவன் நாவிலிருந்து எழுந்தது. பந்தம் தரையில் விழத் திரும்பி பின்னால் தாவிக் கீழே இறங்கினான். அஞ்சுபவன் போலவும் குழம்புபவன் போலவும் கனவு கண்டெழுந் தவன் போலவும் அவர்களை நோக்கினான். கைநீட்டி ''தூய அன்னை!'' என்றான். மீண்டும் இருளை உற்று நோக்கியபின் திரும்பி ஓட்டமும் நடையுமாக முற்றத்தை நோக்கிச் சென்றான். கலைந்தும் தங்களுக்குள் பேசியும் அவனைத் தொடர்ந்தது டச்சுப் படை.

ஓடித் தன் பின்னே வந்த மொழிபெயர்ப்பாளனிடம் அவன் ஒரு சொல் பேசவில்லை. துறைக்குச் சென்று பாய்ந்து சிறு படகிலேறி கப்பலை அடைந்ததும் அவன் சற்று அமைதி கொண் டான். புகைச்சுவர்கள் விண்நோக்கி எழ எரிந்து கொண்டிருக்கும் நகரை நோக்கியவண்ணம் மெல்ல ஒரு சுருட்டு எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான். சுருட்டு பற்றவைப்பவன் நீங்கியதும் ''உங்கள் நாட்டிலும் இப்படி கையில் மகவேந்திய அன்னைத் தெய்வங்கள் உண்டா?''என்றான். ''உண்டு. ஆனால் இந்த தெய்வம் கன்னியன்னை. அவள் கையில் மகவில்லை'' என்றான் மொழி பெயர்ப்பாளன். சுருட்டை சினத்துடன் வீசியபடி ''நான் கண்டேன். என்னிடமா சொல்கிறாய்? நான் கண்டேன். அவள் கையில் ஒரு குழந்தை. அது...'' அவன் மீண்டும் சொல்லிழந்தான். ''ஆம்... நான்

நன்றாகவே கண்டேன். அது எங்கள் மீட்பர்!''

மொழிபெயர்ப்பாளன் மெல்ல தன்னிலை திரும்பினான் போலும். அவன் கண்களில் மட்டும் இளநகை இருந்தது. ''அன்னையின் முகத்தை நீங்கள் காணவில்லையா?'' என்றான். ''ஒருகணம் கண்டேன். நான் பார்த்திராத முகம். ஆனால் நான் நன்கறிந்த முகம்! எங்கே...''

மொழிபெயர்ப்பாளன், ''நீங்கள் ஆப்பிரிக்க மலைக்குகையில் கண்ட முகம் அது'' என்றான். ''ஆம்! எப்படி உனக்குத் தெரியும்?'' என்றான் வான்-கோய்ஸ். ''நூறு நூறு நூல்கள் சொல்லும் கரவுச்சேதி இதுவே. அன்னை உலகெலாம் உறைபவள்'' என்றார் மொழிபெயர்ப்பாளர்.

ஃ

'மீனபரணி அன்னையெழும் தூயநாள்'' என்றார் பேராசிரியர். ''அன்று இதே நாளில்தான் கண்ணகி மதுரையை எரித்தாள் என்கின்றன நிமித்திக நூல்கள். எத்தனை மன்னர்களை, எத்தனை அரசுகளை, எத்தனை அழிவுகளைக் கண்ட மாநகர் இது!'' என்று வியந்தார் ''ஒவ்வொன்றிலிருந்தும் இது புத்துயிர் கொண்டு மீண்டெழுந்திருக்கிறது. சேரன் உருவாக்கிய துறைநகர் நூற்றாண்டுகளுக்குப் பின் பாண்டியனால் வெல்லப்பட்டது. மங்கலதேவியின் பொற்சிலையை அவன் திருடிக் கொண்டுசென்றான். ஐந்நூறு ஆண்டுகளுக்குப்பின் சோழர்களின் படையெடுப்பு. முந்நூறு வருடம் அவர்கள் இம்மண்ணை ஆண்டனர். மங்கலதேவியைக் கொற்றவையாக ஆக்கினர். பின்னர் பெருமாள்களின் தலைநகராகியது. தேவி துர்க்கை வடிவம் கொண்டாள். கொச்சி அரசர்களின் குலதெய்வம் வாழும் செல்வ நகராக இது இருந்தது... சாத்தர்களும் சைவர்களும் பரதகண்டம் எங்கிலும் இருந்து தேடிவந்தனர்...''

நெடுமூச்சுடன் பேராசிரியர் தொடர்ந்தார், ''இன்று கடல் விலகிச் சென்றுவிட்டது. பெரியாற்றுப் பெருக்கும் வற்றிக் குறுகிவிட்டது...'' அவரும் எழுத்தாளனும் சிற்றுந்தில் கொடுங்கலூர்த் தெருக்கள் வழியாகச் சென்றுகொண்டிருந்தனர். ''1662ல் டச்சுப் படை நடத்திய வெறியாட்டத்திற்குப் பின் இந்நகர் மீளவேயில்லை.'' அவன் தன் அலையும் கண்களால் அச்சிறுநகரின் தெருக்களை நோக்கியபடி வந்தான். ஓங்கிய விளம்பரப் பலகைகள். திரைப்படச் சுவரொட்டிகள். கூவிப் புகை கக்கிச்செல்லும் பேருந்துகள். ஓடு வேய்ந்த உயரம் குறைந்த கடைகளுக்குள் பகலிலும் சிறு விளக்குகள் எரிந்தன. சிறு தூறலுக்குக் குடைபிடித்து குனிந்துசெல்லும் பெண்களும் ஆண்களும். ''இவ்வூர்களில் அனைவரும் தலைகுனிந்தே நடக்கிறார்கள். தாழ்ந்த குரலிலேயே உரையாடுகிறார்கள்...'' என்றான் அவன். பேராசிரியர் வியப்புடன் அவனை நோக்கியபின் பேசாது திரும்பிக்கொண்டார்.

அவர்கள் கோயில் முன் வந்திறங்கினர். ''இன்று அன்னை
யின் கோயிலும் திருவஞ்சிக்குளத்திறைவன் பேராலயமும் மட்டுமே
பழம்பெருமைக்குத் தடயங்களாக நிற்கின்றன...'' என்றபடி
வண்டியை அனுப்பினார் பேராசிரியர். அவன் வான்வரை ஓங்கிய
அரசமரங்களையும் கிளைபரப்பி விழுதுச்சடைகள் ஆட நின்ற ஆல
மரங்களையும் நோக்கினான் ''ஏன் இத்தனை அரசமரங்
கள்?''என்றான். ''பௌத்த ஆலயமாயிருந்து உருமாறிய இடங்களி
லெல்லாம் எப்போதும் அரசமரங்கள் இருக்கும்'' என்றார். அவன்
அண்ணாந்து மரங்களை நோக்கினான் ''ஒருகோடி இமைகள்''
என்று எண்ணியபடி நெடுமூச்செறிந்தான். ''மாறியது இந்த மண்
மட்டுமே... அங்கே முகில்கள் அலையும் உயரத்தில் அறிவமர்
செல்விக்குச் சேரன் ஆலயம் எடுத்த காலமே வாழ்கிறதென்று
படுகிறது'' என்றான். ''அண்ணாந்து கனவு கண்டால் வண்டிகள்
மோதக்கூடும்...வா''என்றார் பேராசிரியர் நகைத்தபடி. 'நான்
கால்வைத்து நடக்கும் இம்மண்ணில் இக்கணம் வரை நடந்தவர்
எவரெவர்? அவர்கள் வாழ்ந்தமைக்குச் சான்றாக எஞ்சுவது எது?'
என்று எண்ணிக்கொண்டான். 'எஞ்சுவது நானும் இவ்வெண்ணங்
களும் மட்டும்தானா' என்று எண்ணியதுமே அவனுக்கு உடல்
சிலிர்த்தது. 'மண்மறைந்த அத்தனை பேருக்கும் வணக்கம்' என்று
தன் நெஞ்சுக்குள் நெகிழ்ந்தான். ஆலயத்தின் வடமுகப்பின் ஆனைப்
பந்தலில் நின்றனர். ''தாலப்பொலி விழாவுக்கு அன்னையின் திடம்
பேற்றிய முதுயானையும் ஏழு துணையானைகளும் வந்து நிற்கும்
இடம் இது...''என்றார் பேராசிரியர்.

வடமுகப்பின் நாலம்பலம் மூன்று அடுக்குக் கூரைகளுடன்
ஓங்கி நின்றது. மேலுடைகளைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு
உள்ளே நுழைந்து சுற்றம்பலம் தாண்டிச்சென்றபோது அன்னையின்
கருவறை திறந்த காட்சி கண்முன் எழுந்தது. சுற்றுவிளக்குகளும்
அடுக்கு விளக்குகளும் தூக்கு விளக்குகளும் சுடர் மலர்ந்து நிற்க
நடுவே பொன்னொளி சுடர்வளையமும் பொன்முகமும் பொற்
காப்பும் மணித்தாலிகளும் தகதகக்க மாமங்கலை வீற்றிருந்தாள்.
பேராசிரியர் ''அம்மே மகாமாயே!''என்று கூவியபடி வணங்
கினார். எழுத்தாளனின் அலையும் கண்கள் அக்கோயிலின் மாறு
பட்ட அமைப்பையே வியப்புடன் நோக்கின. அன்னையின் வடக்கு
நோக்கிய கருவறைக்கு முன் வலப்பக்கம் கிழக்கு நோக்கித் திறந்த
வாயிலுடன் சிறுகற்கோயில் ஒன்று நின்றது. அதனுள் ஒற்றைமணி
விளக்கெரிய குளிர்ந்த லிங்கம் இருளுக்குள் அமர்ந்திருந்தது. அதன்
முன் நீண்ட அரைமண்டபம். அரைமண்டபத்துத் தெற்கெல்லையில்

கற்பேழைபோலச் சிறிய கருவறை ஒன்று நாற்புறமும் மூடப்பட்டு நின்றது. ''அதுதான் பழைய கருவறை. அதற்குள் சங்கர திருவடித் தானம் நிறுவிய சத்திசக்கரம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் வாயில் மேற்கு நோக்கியது. எப்போதோ அதை மூடி வடக்கு நோக்கிய இக்கருவறையை எழுப்பியிருக்கின்றனர்... இன்றும் இக்கோயிலில் மீனபரணி பலியும் பூசைகளும் மேற்குவாயில் முன்தான் செய்யப்படுகின்றன...''

கோயிலைச்சுற்றி கிழக்குவாயிலைத் தாண்டி வெளியே வந்தனர். வலப்பக்கம் பாசண்ட சாத்தனின் கோயிலும் இடப்பக்கம் பெருந்தோழியின் கோயிலும். மாலை ஒளியில் கூரைமுகடுகள் எழுந்து நிழலாக நின்றன. பெருத்தோழி கோயிலில் எவருமே இல்லை. ஒற்றைவிளக்கெரிய தெச்சிமலர்மாலை சூடிய கரிய சிலையாக அவள்மட்டும் தனித்துக் கண்விழித்து அமர்ந்திருந்தாள். பாசண்ட சாத்தன் இடையில் வெள்ளுடை சுற்றிக் கையில் பாசமும் ஊன்றிய தண்டுமாக விழித்த பெருங்கண்களுடன் கூரைமுட்ட உயர்ந்து நின்றான். அவன் காலடியில் இருந்த திருநீற்றுக்குவியலில் தொட்டு நெற்றியிலிட்டார் பேராசிரியர். அந்திநிழல் சிவந்து மங்க கோயிலைச் சுற்றிவந்தபோது கோயிலுக்குள் மணியொலி எழுந்தது. மேற்குவாயில் வழியாக மீண்டும் உள்ளே சென்றனர். அன்னையின் கருவறைமுன் சிறுகூட்டம் இருவரியாக நின்றது. உள்ளே மூத்தடிகள் சுடர்க்கொத்தால் ஆரத்தி காட்டினார். ''அம்மே! மகாமாயே! மகாமங்கலே! தேவீ!'' என்ற குரல்களுடன் கூடிநின்றவர்கள் கைகூப்பித் தொழுதனர்.

இருளில் திரும்பி நடக்கையில் அவன் தன் எண்ணங்களில் ஆழ்ந்திருந்தான். ''நீங்கள் வணங்கவேயில்லை'' என்றார் பேராசிரியர். ''வணங்கினேனே'' என்றான் அவன். ''கை வணங்கியது. உள்ளம் வணங்கவில்லை...'' என்ற பேராசிரியரிடம் கடுமையாகச் சொன்னான், ''ஆம், நீங்கள் வணங்குவதுபோல என்னால் வணங்க இயல்வதில்லை. என் உள்ளம் என்னைப்பற்றி எண்ணுவதோ வேண்டிக் கொள்வதோ இல்லை. அப்போது கல்பட்ட பறவைக் கூட்டம்போல என் எண்ணங்கள் எழுந்து சிறகடித்து வான் நிறைக்கின்றன. நான் கோயிலுக்கு வருவதே இப்படி நெஞ்சுக்குவை கல்பட்டுக் கலையும் தருணங்களுக்காகத்தான்.'' பேராசிரியர் சற்று கழித்து ''இப்போது என்ன எண்ணிக் கொண்டீர்கள்?'' என்றார். ''இறந்த என் அன்னையைப்பற்றி. பின் என் சிறிய மகளைப்பற்றி... பிறகு கடலலைகளைப் பற்றி...'' பேராசிரியர் வியப்புடன் ''கடல் அலைகளைப்பற்றியா?''என்றார். ''ஆம். நான் ஒரு உச்சிமலை

மீதிருந்து தொடுவான் வரை நெளியும் நீலக் கடல் அலைகளைப் பார்த்தேன்... கடல் இங்கு அருகே எங்கோ இருக்கிறது... நான் அதன் அலைகளைக் கேட்டேன்...''

அன்றிரவு விடுதியறையில் அவன் கூவியபடி எழுந்து கொண்டான். கூவியது குரலாகவில்லை என்று அறிந்தான். வெளியே மழைகொட்டிக் கொண்டிருந்தது. அவ்வொலியே அலைகடல் ஒலியாகக் கேட்டது போலும் என்று உணர்ந்தான். எழுந்து சாளரத்தைத் திறந்து வெளியே தெருவிளக்குகளின் ஒளியைப் பெற்று சிவந்த மணிச்சரடுகளாகச் சொரிந்துகொண்டிருந்த மழையையே நோக்கி நின்றான். தன் எண்ணங்களின் சிதறலை அவனால் பின்தொடர இயலவில்லை. மீண்டபின்பே எங்கே சென்றோம் என்னும் வியப்புடன் எங்கே நிற்கிறோம் என்று உணர்ந்தான். எண்ணிஎண்ணிச் சென்ற வழியில் ஏதோ ஒரு தருணத்தில் கடல் மிக அருகே இருப்பதாகத் தோன்றியது. மழையின் ஒலிக்கு அப்பால் கடலின் பேரொலி எழுந்து பெருகிப் பெருகி வருவதாக எண்ணினான். கரைகளை அறைந்து சிதறடித்துக் கரிய பெருஞ்சுவரென, நீலத்திசையென, தொங்கும் நீர்ப்பரப்பெனக் கடல் வந்தபடியே இருந்தது. அக்குளிரிலும் வியர்த்து தன் நிலை உணர்ந்து சென்று கட்டிலில் படுத்துக்கொண்டான்.

பின்னர் எழுந்து குளிர்ந்த சலவைக்கல் படிகளில் இறங்கி மழை தூறலிட்ட தெருவில் குளிர்ந்த சேற்றில் மிதித்து நடந்து கொடுங்கலூர் அன்னையின் கோயிலுக்குச் சென்றான். ஆனைப் பந்தலில் விளக்குகள் எரிந்தன. உள்ளே நெய்விளக்குகள் மட்டும் எரிய நிழல்கள்போல ஆலயப்பணியாளர் அலைந்தனர். அணியறு கோலம் காண வந்தவர் சிலர் மட்டும் குளிருக்கு உடலைக் குறுக்கி நின்றனர். மீண்டும் மழை சொரியத்தொடங்கியதும் அவர்கள் மண்டப விளிம்பை நோக்கி ஒதுங்கி நின்றனர். 'நிர்மால்யம்' என்ற குரலுடன் மணியொலியுடன் கருவறை வாயில் திறந்தது. தூக்கு விளக்குகள் மடியில் வைத்திருந்த இருசுடர்களின் ஒளியில் அன்னையின் அணியற்ற கருஞ்சிலை நின்றது. எட்டுக் கைகள் விரித்து கனிகொண்ட பூமரம்போல இருந்தாள் கன்னி. அவன் ஆவலுடன் அருகே சென்று கூர்ந்து நோக்கினான். தேய்ந்த சிலையில் எதுவுமே தெரியவில்லை. கண்கூரும் தோறும் காட்சி மங்குதல் போலிருந்தது. தூக்குவிளக்கொளி சற்றே அசைந்தபோது ஒரு கணத்தில் அவன் அன்னையின் வலப்பக்க இரண்டாம்கையில் இருந்த சிலம்பைக் கண்டான். எண்ணமேயில்லாமல் காலத்தின் அகழியொன்றைத் தாண்டி மீண்டான்.

அன்னைக்குப் பொற்றாலிகளும் ஆடைகளும் அணிகளும் மலர்மாலைகளும் அணிவிப்பதைப் பொருள் உணராக் கண்களுடன் நோக்கி நின்றான். தூக்கமின்மை அழுத்திய தலையுடன் ஆலயத்தை மீண்டும் மீண்டும் சுற்றிவந்தான். ஒருவரிடம் ''இங்கே கடல் எங்குள்ளது?''என்றான். ''கடலா?இங்கா?''என்றார் அவர். இன்னொருவர் ''கடல் இங்கிருந்து நான்கு கல் தொலைவில் உள்ளது''என்றார். அவன் அப்படியா என்று தனக்குள் சொல்லி தலையசைத்தபடி நடந்தான். மேற்குவாயில் முன் வடக்குநோக்கி நிற்கும் கோலத்தில் மஞ்சள்பொடி மூடிய கருங்கற்சிலை ஒன்று நின்றது. அதன் முன் கடும்நிறச்சேலை அணிந்த கரியநிறப் பெண்டிரும் ஆண்களும் கூடி நின்றனர். ஈரக்கூந்தல் தோள்களில் சரிய கரிய முகத்தில் பூசிய மஞ்சளும் நெற்றி நிறைத்த குங்குமமும் கழுத்தில் தடித்த மஞ்சள் கயிறும் அணிந்து கண்கள் மூடி அமர்ந்திருந்தாள். அவள் கன்னங்களில் தலையிலிருந்து வழிந்த நீரும் கண்ணீரும் கலந்துவழிந்தன. அவ்வப்போது முன்னும் பின்னும் ஆடி கரிய உதடுகளை இறுகக் கடித்து ''ம்ம் ம்ம்'' என்று உறுமிக்கொண்டாள்.

அவன் அவர்களை அணுகி அருகே நோக்கி நின்றான். சிலை முன் விரித்த கருங்குழலும் காலில் ஒற்றைச்சிலம்பும் அணிந்த முதியவர் தோளாடையை முறுக்கி அணிந்து நின்று அச்சிலை முன் வாழை இலைகளில் தெச்சிமலரும் மஞ்சளரிசியும் இளநீரும் படைத்தார். சிலையின் காலடியில் சிறுமணிகள் கொண்ட பள்ளிவாள் வைக்கப்பட்டிருந்தது. உருண்ட கும்பளங்காயை வாழையிலையில் வைத்து அதன்மீது செங்குங்குமத்தை அள்ளிக் குவித்தார். அருகே நின்ற மிழவுக்காரர் கையால் மெல்லத்தட்ட அது விம் விம் என ஒலிக்கத்தொடங்கியது. அவன் தோளை பேராசிரியர் தொட்டார். ''இங்கேதான் இருப்பீர்கள் என்று தெரியும்''என்றார். ''யார் அது?''என்றான் அவன். ''அவரை வெளிச்சப்பாடு என்கிறார்கள். அவர்மீதுதான் அன்னை வெளிச்சப்படுதல் வழக்கம். ஆலயத்துக்கு வெளியே பூசைகளை அவர்தான் செய்வார்'' என்றார் பேராசிரியர்.

அன்னையின் இருபுறமும் எண்ணெய்த்துணி சுற்றிய சிறு பந்தங்களை எரியவைத்து மஞ்சள் முழுக்காட்டி வணங்கியபின் வெளிச்சப்பாடு அவள்முன் இருந்து மஞ்சள் பொடி அள்ளிப் பள்ளிவாள்மீது போட்டார். பள்ளிவாளை எடுத்தபடி வந்து அன்னைமுன் கைதொழுது நின்றார். தொழுத கைகளுக்குள் நின்றது வாள். அவர் கைகளும் உடலும் நடுங்க வாள்மணிகள் குலுங்கின. மெல்ல அவர் கால்கள் துள்ளித்துள்ளி ஆடத்தொடங்கின. இய்யே என்ற விளியுடன் அவர் துள்ளி ஓடி அன்னையை

மும்முறை சுற்றிவந்தார். விரிந்த கருங்கூந்தல் சுழன்றுபறக்கத் துள்ளித் துள்ளி ஆடிச்சுழன்றார். வாள் நான்குதிசையிலும் சுழன்று பறந்தது. ஓங்கி அவர் கும்பளங்காயை வெட்டி இரு துண்டுகளாக் கினார். குங்குமம் கலந்து அது குருதிச்சேறுபோல வழிந்தது. செந்நிற வாளுடன் அவர் துள்ளி மறிந்தார். ஒருகணத்தில் படமெடுத்த பாம்பு கொத்துதல்போல அவர் நெற்றிமீது வாள் பதிந்து மீண்டது. செங் குருதித் துளிகள் சிதறின. பொருளறியாச் சொற்கள் அவர் வாயி லிருந்து எழுந்தன. மலையர் மொழியென்றும் மழலையர் பேச் சென்றும் மயக்கூட்டும் சொற்கள். மீளமீள நெற்றியை வெட்டிச் சிதறடித்தது வாள். பின் சரடு அறுந்த பாவைபோல அவர் பின்னால் சரிந்து விழுந்தார். அருகே நின்ற இருவர் அவரைத் தூக்கி மஞ்சள் தூளை அள்ளி அவர் குருதியுமிழும் புண்கள்மீது அப்பினர்.

அமர்ந்திருந்த பெண்ணை இரு முதிய பெண்டிர் தூக்கி எழுப் பினர். அவள் தலையை வலிகொண்டவள்போல அசைத்துக் கண்ணீருடன் முனகிக்கொண்டிருந்தாள். அவன் அருகே நின்ற கரிய மனிதரிடம் ''எந்த ஊர் நீங்கள்?'' என்றான். ''மயிலாடுதுறை அருகே துறைமங்கலம் தம்பி. இங்கே வந்தால் சரியாகும் என்று நாடிநிமித்திகர் சொன்னார்'' என்றார் அவர். ''என் மகள்தான். இது அவள் மகன்'' அவர் குரலில் துயரம் உறைந்த அமைதி இருப்பதை அவன் கண்டான். அவர்கள் பலிபூசைப் பொருட்களை எடுத்துக் கொண்டனர். ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு கிளம்பினர். ''வருகிறேன் தம்பி'' என்று முதியவர் சொல்லி விடைபெற்றார். மேற்குவாயிலை அவர்கள் நெருங்கும்போது வெறிகொண்ட பெண்குரல் ஒன்றின் வீறிடல் எழுந்தது. அந்தப்பெண் கைகளை விரித்தபடி, தலைமயிர் சிதற, தொண்டையின் உதிரக்குழாய்கள் தெறிக்க அலறியபடி ஓடிவருவதை அவன் கண்டான். அவளைப் பிடித்திருந்த முதுபெண்டிர் சிதறித் தரையில் கிடந்தனர். ஒரு முதியவள் ''மாணிக்கம், நீ வெளியே போ! அங்கே நிற்காதே போ வெளியே!'' என்று கூவினாள். அவள் அருகே நின்ற கரிய இளைஞன் வலப்பக்கமாக ஓடிக் கல்மண்டபத்தைச் சுற்றி மறைந் தான். மூவர் அவளை அள்ளிப்பற்றினர். அவள் காட்டு விலங்குபோலக் குரலெழுப்பியபடி கால்களை எவ்வித் திமிறினாள். அவள் உடைகள் நழுவின. பருத்த முலைகள் துள்ளித் தெறித்தன. குப்புற விழுந்து பெருந்தாலத்தில் குவிந்திருந்த கும்பளச் செந் நிணத்தை கைகளால் அள்ளி உண்டாள், வாரி அறைந்து வாரி யறைந்து தன் முகத்தில் பூசிக்கொண்டாள். செம்மை கலந்த மயிர்க் கற்றைகள் பிடரிபோல் சிலிர்க்க உறுமலுடன் அவள்

திரும்பியபோது ஊனுண்டு சீறும் சிம்மம் போலிருந்தாள்.

அன்றிரவு அவன் பேராசிரியர் துணைவர தொடர்வண்டி ஏறச்சென்றான். தொடர்வண்டி நிலையமெங்கும் கரிய உடையணிந்த சபரிமலைப் பயணிகளின் சரணப்பெருவிளி எழுந்து கொண்டிருந்தது. அவர் பேசுவதைக் கேட்க அவன் மிகவும் குனிய வேண்டியிருந்தது. ''தர்ம ஸ்வரூபனேய்!'' ''சரணமய்யப்பா!'' என்றன குரல்கள். பேராசிரியர் ''இப்போது இது மிகவும் பெருகி விட்டது, பயணமே சலிப்பூட்டுமளவுக்கு'' என்றார். தரையெங்கும் இருமுடிக்கட்டுகள். கால்படாது நடக்க தாவித் தாவிச் சென்றனர். ''சுவாமியுடெ துளசிக்காடேய்''என்றான் ஒருவன். ''சரண மய்யப்பா!''என்றன நூறு குரல்கள். தொடர்வண்டி நெற்றிவிளக்கு ஒளி உமிழ தடக் தடக் என்று ஒலியெழுப்பி வந்து அதிர்ந்து நின்றது. அவன் பேராசிரியரிடம் விடைபெற்று ஏறிக் கொண்டான். ''பார்ப்போம்'' என்று அவர் சொன்னார். அவன் புன்னகை செய்தான். நீணேரமாகக் கேட்க எண்ணிய வினாவைத் தயங்கித் தன்னுள்ளே நிறுத்திக்கொண்டான். அவள் கணவனை ஏன் ஓடும்படிச் சொன்னாள் அம்முதியவள்?

ᘓ

பேருந்து கன்னியாகுமரியை அணுகுவது ஒருகணத்தில் தெரியவருவதை அவன் விரும்பினான். காவல்நிலையம் அருகே மேடேறுகையில் மீன்வாடைசேர்ந்த குளிர்ந்த கடற்காற்று வந்து காதுகளைத் தழுவும். கண்முன்னே கடல் நீலத்திரை தொங்கி நெளிவதுபோலத் தெரியும். பின்னர் கடைநெரிசல்கள் பலவிதமான வண்டிகள் ஊடே பரபரப்புடன் பேசிச்செல்லும். விதவிதமான பயணிகள். அவன் எழுந்துகொண்டதும் அவன் மனைவி முன்னிருக்கையிலிருந்து எழுந்து அவனை நோக்கினாள். அவளருகே இருந்த அவன் மகள் அங்கேயே இறங்குவதா என்று கீச்சுக்குரலில் கூவினாள். புன்னகையுடன் இறங்கு என்று கைகாட்டிவிட்டு எடை மிக்க பையுடன் அவன் இறங்கிக் கொண்டான். அவன் மகன் அவன் கைகளைப் பற்றியபடி இறங்கி ஒரு கடைக்குள் தொங்கிய வண்ண அங்கியை நோக்கி அது என்ன என்று வினவினான். அவன் உள்ளம் கன்யாகுமரியில் கடல் அலைகளைப்போல நிலையற்றிருக்கும். அவனால் சொற்களையும் எண்ணங்களையும் இயல்பாக இணைக்க இயல்வதில்லை.

கூட்டம் நெரித்த சாலையில் நடந்தபோது அவன் மகள் இயல்பாக வந்து அவன் கைகளைப் பற்றிக்கொண்டாள். நீலப் பட்டுப் பாவாடை பறக்க கலைந்தெழும் குழல்கற்றையுடன் அவளைப் பார்க்கையில் சிறு குருவி போலிருந்தாள். கீச்சுக்குரலும் கூட அவன் புன்னகையுடன் அவள் கூந்தலைத் தன் கைகளால் அளைந்தான். அவள் சலிப்புடன் உதடு சுழித்து ''தலைமுடியை கலைக்காதே''என்று சொல்லித் திரும்பிக்கொண்டாள். காந்தி மண்டபத்து முற்றத்தில் இறங்கியதும் இரு குழந்தைகளும் கைநீட்டிக் கூவியபடி ஓடிப் படிக்கட்டுகளில் ஏறிக்குதித்தன. கூடவே பயணிகளாக வந்த வேறு குழந்தைகளும் இணைந்துகொண்டன. அவன் தன் மனைவியுடன் காந்திமண்டபத்துள் நுழைந்து குளிர்ந்த தரையில் வெறுங்கால்கள் உணர்ந்த மென்மையை எண்ணியபடி நடந்தான். ஏன் பேசாமல் வருகிறீர்கள் என்று அவள் கேட்டாள். ஒன்றுமில்லை,

பழைய சில நினைவுகள் என்று அவன் சொன்னான். மண்டபத்தைச் சுற்றிவந்து காந்தியின் சுவர்புடைத்த சிலை முன் நின்றனர். 'மூன்று கடல்களும் கூடும் இம்முனையில் நின்று எழுதுகிறேன். இங்கே கோயில் கொண்டுள்ள கன்னியைப்போலவே இக்கடலும் தூய கன்னி' அவன் காந்தியின் வரிகளை அத்தனை மன எழுச்சியுடன் ஒருபோதும் வாசித்தது இல்லை. அவனது நடுங்கும் கைகளை அவள் பற்றிக்கொண்டாள். என்ன என்ன என்று மீண்டும் கேட்டாள். காந்தி இதை எழுதுகையில் எப்படி உணர்ந்திருப்பார் என்பதை அறிய முடிகிறது என்றான்.

அவன் குழந்தைகள் ஓடிவந்தன. காந்தி தாத்தா காந்தி தாத்தா என்று பெண் கூவினாள். சத்தம் போடாதே என்று அவன் சொன்னான். ஏன்? சத்தம் போட்டால் காந்தித் தாத்தாவுக்கு பிடிக்காது. இங்கே காந்தித் தாத்தா வந்திருக்கிறாரா என்றான் மகன். இங்கே அனைவரும் வந்தாகவேண்டும் என்றான் அவன். வளைந்து நடந்து படிகளில் ஏறிக் கடலை நோக்கினர். கடல் மட்டும் கத்தலாமா என்றாள் குழந்தை. சரி நீயும் கத்து என்றான் அவன் புன்னகையுடன். அவள் அவனை நோக்காமல் கடலையே நோக்கி விளிம்பரண் கைப்பிடிகளைப் பற்றியபடி நின்றாள், உடைகள் பறக்க. வா இறங்கலாம் என்று அவன் அவளை இழுத்தான். சொற்களை இழந்து அமைதியுற்ற குழந்தையைத் தூக்கிக்கொண்டான். படிகளில் இறங்கிக் கடலை நோக்கிச்சென்றனர். அலைகளுக்கு அப்பால் பெரும்பாறைமீது நின்ற விவேகானந்தர் மண்டபத்தை சுட்டி அவன் மகன் கேட்டான், அவரும் இங்கு வந்திருக்கிறாரா என்று. ஆம், அவரும் வந்திருக்கிறார். கடலில் நீந்திச் சென்று அப்பாறையில் அமர்ந்து தவம்செய்தார். எதற்கு? கன்னியாகுமரி அன்னையைக் காண. பையன் உவகையுடன் நீந்துவதுபோல கைகளை அசைத்தபடி அலைகளில் நீந்துவதைப்பற்றி சொன்னான். தன் மகளின் கண்கள் கடலை மட்டுமே நோக்கியிருப்பதை அவன் கண்டான். அவள் அவன் முகவாயைப் பற்றித் திருப்பி கடலில் யாரும் நீந்தவே முடியாதல்லவா என்றாள். ஆம் என்றான் அவன். கடல் மிகமிகப் பெரியதுதானே எப்படி நீந்தமுடியும் என்று குழந்தை மேலும் சொன்னது. ஆம் மிக மிகப் பெரியது என்றான் அவன். அவன் மகன் கை நீட்டித் திருவள்ளுவரின் ஓங்கிய சிலையைச் சுட்டி அந்தத் தாத்தா நீந்துவார், அவர் எவ்வளவு பெரியவர் பார்த்தாயா என்றான். மகள் அழுகைக்குச்செல்லும் முகச்சுளிப்புடன் நீந்தவே முடியாதுதானே அப்பா என்றாள். கடல்தானே எல்லாவற்றையும் விடப் பெரியது? அவன் அவள் மெல்லிய கன்னத்தின் உப்புப்

படலம்மீது முத்தமிட்டு ஆம், எல்லாவற்றையும் விட கடலே பெரியது என்றான். அவள் அலைகளை நோக்கிக் கைநீட்டி ஏதோ சொல்ல முயன்றபின் கை அப்படியே நீண்டிருக்க அலைநெளிவின் காட்சியில் ஆழ்ந்தாள்.

ஆதிசங்கரர் ஆலயத்துக்கு அருகே குழந்தைகள் குதிரை மீதேறி விளையாடின. பொரிகடலை வணிகர்கள் கூவியபடி நிரை வகுத்து அமர்ந்திருந்தனர். இவரும் இங்கு வந்திருக்கிறாரா என்று அவன் மனைவி கேட்டாள். வந்திருக்கிறார் என்கிறார்கள்; எல்லா ருமே ஒருதருணத்தில் இங்கு வந்திருப்பார்கள் போலும் என்றான் அவன். பலிமண்டபம் தாண்டி வெண்ணுரைக் கூந்தல் சிதற நீலஅலைகள் தாவித்தாவித் தழுவும் ஈரக்கரும்பாறைகள் நிரந்த கடலருகே சென்று நின்றனர். அவன் மகன் அலைகளை நோக்கி ஓடினான். பொங்கிவந்த அலை ஒன்று அவனை அறைந்து வீழ்த்த அவன் அன்னை முன்னால் ஓடிப் பிடித்தாள். இருவரும் அடுத்த அலையில் நனைந்தனர். இருவரின் சிரிப்பும் வெண்பற்கள் ஒளிர மாலை ஒளியில் தெரிந்தன. அவன் மகள் அவன் கால்களை ஒட்டிய படி நின்று கடலையே நோக்கினாள். அலைகளின்மீது தாவியும் விலகி ஓடியும் உவகை மிகுந்து கூவும் பயணிகளை அவன் நோக்கி நின்றான். மெல்லமெல்லப் பெண்கள் தங்கள் கட்டுகளை அவிழ்ப்பதுபோலத் தெரிந்தது. கூவி நகைத்தும் உடைகள் நனைந்து விலகுவது அறியாமல் துள்ளிக் குதித்தும் பெண்கள் மகிழ்ந்தாடினர். அவர்கள் எப்போதும் அஞ்சும் ஆண்விழிகளை அப்போது அறியவேயில்லை.

ஈர உடையைப் பிழிந்தபடி அவன் மனைவி முதலில் விவே கானந்தர் பாறைக்குச் செல்வோம், நேரமாகிவிட்டது என்றாள். அவன் மகன் முழுக்காட்டு முடிந்த சிலைபோல ஒட்டிய உடையுடன் மணல் படர்ந்த கன்னங்களுடன் நின்று சிரித்தான். வழிகாட்டிகளால் இட்டுவரப்பட்ட வட இந்தியப் பயணியர் கூட்டம் அருகே படித் துறையில் கிண்டிகளும் தட்டுகளும் குடங்களும் செப்புகளுமாகத் தங்களுக்குள் கூவியபடி இறங்கியது. பெரிய தலைப்பாகை கட்டி வண்ண அங்கிக்குக் கீழே கச்சுவைத்து உடையணிந்த ஆண்கள். சுற்றிச் சுற்றிப் புடவை கட்டி முக்காடாக அதை வளைத்திட்டு முழங்கைவரை சங்குவளையல்கள் அணிந்து மூக்கிலும் காது களிலும் பெரிய வெள்ளிவளையங்கள் அணிந்த பெண்கள். செம் மண் நிற முகங்கள். படிகளில் இறங்கி உடைகளைக் களைந்து தட்டு களைப் பரப்பினர். அச்சிறு செப்புகளில் எங்கோ பாலை நிலத்தில் அல்லது மலைச்சரிவில் இறந்த எவரோ மூதாதையரின் எலும்புகள்.

அவற்றை வாங்கக் கைநீட்டிக் கைநீட்டி எம்பி வந்து விழுந்தன கன்னிக்கடல் அலைகள். அலைகளுக்கு அப்பால் அம்மூதாதை யரின் மூதாதையர் தங்கள் குழந்தைகளைக் காணும்பொருட்டு அன்பின் துடிப்புடன் வந்து காத்து நிற்கின்றனர் போலும்.

விவேகானந்தர் பாறை நோக்கி ஆடும்படகில் செல்கையில் அவன் மனைவி குழந்தையை இறுகப்பற்றிக்கொள் என்று சொன் னாள். மகன் நீரில் விழுந்தால் என்ன ஆகும் என்றான். அன்னை அவனை அதட்டியதைப் பொருட்படுத்தாமல் நான் விவேகானந் தரைப்போல நீந்தி வருவேன் என்றான். தன் தங்கையை நோக்கி நீதான் கடலில் முழுகுவாய்; உனக்குத்தான் கடலைக் கண்டால் பயம் என்று கைநீட்டிச் சிரித்தான். அலைகளை நோக்கி அமர்ந் திருந்த அவள் திரும்பி சொல்லின்றி மலர்ந்த கண்களால் அவனை நோக்கினாள். அவன் குனிந்து மகளைப் பார்த்தான். அலைகளில் விழுந்த ஒளி அவள் முகத்தில் பட அவள் கண்களின் நீலம் அவனை அகம் பொங்கச்செய்தது. பொருளிழந்த சொற்களாகத் தன் நெஞ்சு நிலையழிந்து பரவிக்கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.

பாறையில் செதுக்கிய படிகளில் ஏறிச்சென்று கடலை நான்கு திசையிலும் கண்டனர். நீலப்பாவாடை அலைய அவன் மகள் கடலையே நோக்கிக்கொண்டிருந்தாள். இவள் ஏன் ஒன்றுமே சொல்லாமலிருக்கிறாள் என்றாள் அவள் மனைவி. அவன் குழந்தையின் கனவு நிறைந்த முகத்தை மீண்டும் நோக்கிவிட்டு அவள் கடலைப் பார்க்கிறாள் என்று உரைத்தான். கல்மண்டபத்தால் சூழப்பட்ட கன்னிபாதத் தடத்தை அவன் எட்டிப்பார்த்தான். பையன் அது என்ன என்று கேட்க அது அன்னையின் காலடிச்சுவடு என் றான். அன்னை ஒருகால் ஊன்றி இப்பாறைமீது நின்று தவம் செய் தாள். ஏன் என்றான் மகன். அன்னைக்கு நிறையக் குழந்தைகள். மண்ணிலுள்ள அனைவருமே அவள் மக்கள். அத்தனைபேரும் நலமாக இருக்க வேண்டுமென்றுதான் அன்னை தவம் செய்தாள். ''கால் வலிக்காதா?'' என்றான் மகன். அவன் மகனைத் திரும்பி நோக்கினான். பதில் சொல்வதற்குள் அவன் மகள் ''வலிக்காது'' என்றாள்.

கன்னியின் ஆலயத்தை அவர்கள் அடைவதற்குள் கரை இருண்டுவிட்டது. மேலைத்திசையின் செவ்வொளி அலைகளில் உடைந்து உடைந்து சிதறிக்கொண்டிருந்தது. வெய்யோன் தன் இறுதிச்சிவப்புடன் கடலுக்கும் வானுக்கும் இடைப்பட்ட வெளியில் அமிழ கடற்கரையெங்கும் நிழல்களாகக் கூடிய மக்கள் கூடணையும் பறவைகள்போல ஒலியெழுப்பி அடர்ந்திருந்தனர். நீரில் எழுந்த

செங்கனல் பாதை ஒன்று அவர்களை நோக்கிவந்து வருக வருக என்றது. இப்போதே சென்றால் கூட்டம் குறைவாயிருக்கும் என்றாள் அவன் மனைவி. காலணிகளைக் கழற்றிவிட்டுக் கோயிலுக்குள் நுழைந்தனர். அந்தியிருள் கவிந்த கற்கூடங்களுக்குள் ஆங்காங்கே சிறுவிளக்குச்சுடர்கள் மட்டும் அசைந்தசைந்து நிழலாட்டங்களின் பின்புலம் விரிய நின்றன. எதிரே பெருஞ்சுவர்மீது ஒரு சிலைமுகத்தின் நிழல் பேருருவம் கொண்டு எழுந்திருக்கக் கண்டான். அவன் நடக்கும்போது அம்முகம் குனிந்து புன்னகையுடன் நோக்கியது. உள்சுற்று மண்டபங்களில் கடற்காற்று சீறிச் செல்லும் ஒலி கேட்டது.

காணவந்த அந்நியர் முன் நாணி வந்து நிற்கும் சிறுமியென, கருவறைக்குள் கன்னி வலக்கரத்தில் தவமணிமாலையும் பாவாடையை மெல்லப்பற்றிய இடக்கரமுமாக நின்றாள். வெட்கமும் மகிழ்வும் ஒளிரும் மலர்ந்த கண்கள். இருபுறமும் தூக்கு விளக்குகளும் குத்துவிளக்குகளும் சுடரேந்தி நின்றன.

அவன் அங்கு முதலில் தன் அன்னையின் கைப்பற்றி வந்த நாளை நினைவுகூர்ந்தான். நீலத்துணிக்குள் யானைக்கூட்டம் மோதிச்சண்டையிடுவதுபோல அலைகள் அச்சமூட்டின. அலறி அழுதபடி அன்னையின் கால்பற்றி நின்று நடுங்கினான். அவள் புடவைக்குள் முகம் புதைத்துக்கொண்டான். அவளுடைய காய்த்த கைகள் அவன் தலையை வருடுவதை அக்கடற்காற்றில் அப்போதும் அவன் உணர்ந்தான். அன்று கன்னிவாயிலில் நின்றபோது இற்செறித்து இருளறைக்குள் நிற்கும் தமக்கையொருத்தியைக் கண்டது போல் உணர்ந்தான். கனிந்த கண்களும் குறும்புநகையும் கொண்டவள். தாயும் தோழியும் ஒன்றாகக் கலந்தவள். அவன் மகன் அவன் கையைப்பற்றி ''அதோ அக்கா'' என்றான்.

இரவு உணவுண்டு நடந்து விடுதியறைக்கு மீண்டனர். இவள் ஏன் இப்படி இருக்கிறாள், இவள் பேசாமல் இருந்து நான் பார்த்ததே இல்லை என்றாள் அவன் மனைவி. மகளை நோக்கினான். அக்கண்களும் கன்னக் கதுப்பும் குறுமயிர்நிரையும் கழுத்தில் சிறுசெம்மணிமாலையும் என அவள் அவன் கைகளில் பிறந்து விழுந்து தவழ்ந்தெழுந்து வளர்ந்த குழந்தையென ஒருகணமும் அறியவே முடியாத எவளோ என மறுகணமும் தோன்றினாள்.

இரவில் கடலின் ஓசை சற்று மேலெழுந்தது போலிருந்தது. விடுதியறையில் உடைமாற்றிப் படுத்தபோது அவன் மனைவி சாளரவாயில்களை மூடினாள். கடற்காற்று குழந்தைகளுக்குத் தீங்கு செய்யும் என்றாள். அவன் நெடுமூச்சுடன் கண்களை மூடிக்

கொண்டான். குழந்தைகள் களைத்திருந்தன போலும், படுத்ததுமே கண்மயங்கின. இமைசரிந்து மென்மூச்சு வலுத்தபின் சட்டென்று விழித்த அவன் மகள் அவனை நோக்கி திரும்பி கையையும் காலையும் அவன்மீது போட்டு மெல்லிய கனவுக்குரலில் ''அந்த அக்கா ஏன் சிரித்தாள்?'' என்று கேட்டாள்.

அவன் ''தூங்கு'' என்று அவளைத் தட்டினான். விளக்குகளை அணைத்த பின் அவன் மனைவி தலைமயிரைச் சுழற்றி முடிந்து வந்து அருகே படுத்தாள். அவன் மீது மெல்ல கைவைத்தபடி இந்த நாள் முடிந்தது, இனி தூங்குங்கள் என்றாள். அவன் இன்னும் முடிய வில்லை, இரவு இருக்கிறதே என்றான். அவள் மெல்ல அவனைத் தட்டியபடி, நினைக்கத் தொடங்கினால் முடிக்கவே முடியாது; நினைப்பை அவ்வளவு தொலைவுக்கு துரத்தி அடைவதென்ன என்றாள். நினைவுகள் நிகழ்கின்றன என்றான் அவன். இன்று முழுக்க உங்கள் அன்னையை நினைத்துக் கொண்டிருந்தீர்களா என்ன என்றாள் அவள். இல்லை, அவ்வப்போது அவள் நினைவு வந்துசென்றது, நான் இவளைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந் தேன் என அவன் தன் மகளின் கொலுசணிந்த கால்களைத் தட்டி னான். இவளைப் பார்க்க என் அம்மா போலவே இல்லை. இவள் நிறமும் கண்களும் பேச்சும் எதுவுமே அவளல்ல. ஆயினும் இவளை அவளாகவே என் அகம் சில தருணங்களில் எண்ணிக் கொள்கிறது. அவன் அவளை நோக்கித் திரும்பி, இறந்தவர்களை தென்புலத்தோர் என்கிறோம். தென்கடலுக்குள் ஆழத்தில் அவர்கள் வாழ்கிறார்கள் என்று சொல்வதுண்டு. இத்தென்கடலுக்குள் என் அன்னையும் அவள் அன்னையரின் பெருநிரையும் உறைகின்றனர் என்று எண்ணிக் கொண்டேன் என்றான். தேவையில்லா நினைவுகளை மீட்டவேண்டியதில்லை, துயிலுங்கள் என்றாள் அவள். இருளில் அவனை மெல்ல முத்தமிட்டபின் பெருமூச்சுடன் தன்னைத் தளர்த்திக்கொண்டாள்.

அவன் கடலையே கேட்டுக்கொண்டிருந்தான். ஓசை வலுத்து வலுத்து வந்து தன் செவிகளில் அறைவதுபோல் உணர்ந்தான். அவளைத் தொட்டு மெல்ல அசைத்து ''என் அன்னை வாழ்நாள் முழுக்க மீளாத்தனிமையில் இருந்தாள், இந்தக் கன்னியைப்போல. இப்போது அவள் முகம் நினைவில் மீளும்போது அதை தெளி வாகவே காண்கிறேன்'' என்றான். அவள் இருளுக்குள் நெடு மூச்செறிந்ததைக் கேட்டான். ''இந்த நாட்டில் மட்டும் ஏன் அன்னையர் அத்தனை தனிமை கொள்கிறார்கள்? உறவும் சுற்றமு மாக அவர்களைச் சூழ்ந்து எப்போதும் ஆளிருக்கையிலும் முதிர

முதிர அத்தனிமை செறிந்தபடியே செல்வது ஏன்?'' அவள் ''எல்லாம் உங்கள் கற்பனைகள்'' என்றாள். ''இல்லை நான் அதைக் காண்கிறேன். நாள் கண்ட எல்லா அன்னையர் முகங்களும் இப்போது நினைவுக்கு வருகின்றன. அவர்கள் தங்கள் கனிவாலும் கருணையாலும் அணுகமுடியாத எல்லைக்குச் சென்றுவிடு கிறார்களா என்ன? தங்கள் தாய்மையாலேயே தனித்துவிடப் படுகிறார்களா என்ன?'' அவள் அவனை அணைத்து தன் மார்புகளுடன் இறுக்கிக்கொண்டாள். அவன் அவ்வணைப்புக் குள்ளும் ஊடுருவி ஒலித்த கடலையே கேட்டிருந்தான். ''இல்லை, நாம் அன்னையராகக் காணும் இவர்களெல்லாம் நாமணுக முடியாத எங்கோ உள்ள வேறு எவருடையவோ வடிவங்கள்தானா? ஆழியை அலைகள் என அறிபவர்கள்தானா நாம்?'' அவள் துயின்று விட்டிருந்தாள். மூச்சின் அசைவை அவன் உணர்ந்தான்.

பின்னிரவில் அவன் விழித்துக் கொண்டபோது அலை யோசையே இல்லை. எழுந்து தன் உடைகளை அணிந்து கதவு திறந்து வெளியே வந்து வெளிப்பக்கம் பூட்டிக்கொண்டு தெருவில் இறங்கி நடந்தான். தெருவில் புதியமென்மணல் பரவியிருந்தது. குப்பைகளெல்லாம் ஓரமாக ஒதுக்கப்பட்டிருந்தன. கடைகள் போர்த்தி இறுக்கிக்கொண்டு துயின்றன. கடல் நோக்கி நடந்து காந்தி மண்டபத்தை தாண்டி பலிமண்டபத்தை அடைந்தான். எதிரே இருளுக்குள் கடலே இல்லை என்று தோன்றியது. மண்டபத்தில் ஏறி நின்றபோது கண்கள் பழக எதிரே மெல்லிய சாம்பல்நிற வெளியாகப் பளபளத்த அலையிலாக் கடலைக் கண்டான். பாறைகள் ஈரம் பளபளக்க விறைத்து நின்றன. வளைந்திறங்கிய வெளிர்சாம்பல் வானில் ஓரிரு விண்மீன்கள் அதிர்ந்து கொண்டிருந்தன. காற்று மெல்லிய குளிரலையென முதுகுக்குப் பின்னிருந்து வீசியது. அலையற்ற கடலை நோக்கி நின்றபோது அது கனவா என்று தோன்றியது. புதுமைப்பித்தனின் கபாடபுரம் கதை நினைவில் எழுந்தது. கடல் தன் திரைவிலக்கி புதைந்திருக்கும் இறந்த காலங்களைக் காட்டப்போகிறதா என்ன? ஒரு கணம் பேரச்சம் நெஞ்சை இறுக்க மறுகணம் நகைப்பு எழுந்தது.

அலைகளைக் கேட்டபடி அங்கே அமர்ந்திருந்தான். நீர் வெளியின் கருமையைக் கண்டு கண்டு கண்கள் காட்சியிழந்தன. அவன் கண்மயங்கித் துயிலில் ஆழ்ந்தான். துயர் சுமந்த அவன் தலையை மெல்லத்தொட்டுச் சென்ற அன்னையின் கைகளை உணர்ந்து திரும்பிப் பார்த்தான். மழைநீர் மென்தோல்போலப் பரவிச் சிலிர்த்திருந்த சாணித்தரையில் பாதத் தடங்களைக்

கண்டான். அவை அவன் கண்களுக்கு முன்னாலேயே மறைந் தழிந்தன. கோடிகோடிக் கால் தடங்கள் பதிந்த மணல்வெளியில் அவளுடைய பாதத்தடத்தைக் கண்டான். அதை அவன் தொடுவதற் குள் காற்றுவீசி அத்தடங்களை மூடிக்கொண்டது. தோன்றித் தோன்றி மறையும் காலடித்தடங்களை தொடர்ந்து அவனும் அலைந்துகொண்டே இருந்தான். ஓங்கிய கரும்பாறைமீதெழுந்த காலடிகளைக் கண்டான். இரு கைகளாலும் விரித்தணைக்க இயலாத விரல்கள் கொண்ட மாபெரும் பாதம்.

அவன் விழித்துக் கொண்டபோது கடல் நீலநிறமாக இருந்தது. கடலுக்குள் இருந்து எழுந்த மெல்லிய ஒளியால் வானும் நீலம் கொண்டிருந்தது. நீலத்தைக் கண்நிறைய உளம் மலர நோக்கி நின்றான். நீலம் ஒரு புன்னகை, கருமைக்குள் ஒளி பரவுவதன் வண்ணம் அது என்று எண்ணிக்கொண்டான். அவன் அடைந்த அனைத்தையுமே அவ்வரியாகத் தொகுத்துக் கொள்பவன்போல, அதிலிருந்து மீள மீளப் பறந்தெழுபவன்போல அச்சொற்களைத் தன்னுள்ளே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டான். ஆம், நீலம் ஒரு புன்னகை.

ஃ

மாமகளும் நாமகளும் மாமயிடன் செற்றிகந்த
கோமகளும் தாம் படைத்த கொற்றத்தாள்...

தமிழினி

ISBN 81-87641-70-3
9788187641704